
Koviloor Digital Library

கம்பராமாயணம்

(இராமாவதாரம்)

மூலமும் உரையும்

அயோத்தியா காண்டம்



Acc 14559

உரை நூல் ஆசிரியர்

பள்ளத்தூர் பழ. பழனியப்பன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

கம்ப இராமாயணம்

[இராமாவதாரம்]

அயோத்தியா காண்டம்

மூலமும் உரையும்

KOVILOOR ANDAVAR LIBRARY. KOVILOOR
A. No. 14559

உரை ஆசிரியர்
பள்ளத்தூர் **பழ. பழனியப்பன்**
(முன்னாள் முதுநிலை மேலாளர், பரோடா வங்கி)

Acc No: 14559

சாந்த மங்கை பதிப்பகம்
16, சுந்தரர் தெரு, ராம் நகர்,
அம்பத்தூர், சென்னை-600053
☎: 26581517, Cell: 9840868543

Koviloor Digital Library

முதற் பதிப்பு: பிப்ரவரி, 2007

உரிமை: ஆசிரியருக்கு

KAMBA RAMAYANAM - AYOTHIYA KANDAM

PL.Palaniappan

First Edition: Februrary, 2007

No. of Pages: 776 + XXXII = 808

Size: Demy

Paper used: 70 G.S.M. Maplitho

விலை ரூ. 380/-

வெளியீடு:

சாந்த மங்கை பதிப்பகம்

16, சுந்தரர் தெரு, ராம் நகர்,
அம்பத்தூர்,சென்னை-600053
☎: 26581517, Cell: 9840868543

நூல்கள் கிடைக்குமிடம்:

THIRUMAGAL NILAYAM

New No: 16, Old No: 55
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 65413222

Koviloor Digital Library

1 3-2

காணிக்கை

என்னை ஈன்றெடுத்து,
ஏனக்கும் ஓர் வாழ்வளித்து
தன்னைப் பேணிடாமல்,
தளிர்களையே காத்து நின்ற
அன்னை **மீனாட்சித் தாய்க்கு**
ஆயிரம் வணக்கம் கூறி,
இன்னமும் அருள் கூர்ந்து என்னை
இயக்கிட இறைஞ்சுவனே!

Koviloor Digital Library



Koviloor Digital Library

பொருளடக்கம்

அணிந்துரை	VI
ஆய்வுரை	XIV
வாழ்த்துரை	XX
பதிப்புரை	XXIV
[illegible]	XXVI
1. மந்திரப் படலம்	[illegible]
2. மந்தரை சூழ்ச்சிப் படலம்	[illegible]
3. கைகேயி சூழ்வினைப் படலம்	113
4. நகர் நீங்கு படலம்	197
5. தைலம் ஆட்டு படலம்	343
6. கங்கைப் படலம்	[illegible]
7. குகப் படலம்	416
8. வனம் புகு படலம்	444
9. சித்திரகூடப் படலம்	473
10. பள்ளி படைப் படலம்	505
11. ஆறு செல் படலம்	590
12. கங்கை காண் படலம்	629
13. திருவடி சூட்டு படலம்	682
செய்யுள் முதற்குறிப்பு அகராதி	[illegible]

Koviloor Digital Library

அணிந்துரை

முனைவர் தெ. ஞானசுந்தரம்
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 30.

இராமகாதை இந்தியநாட்டின் தனிச்செல்வம். இராமன் திருக்கதையினை அறியாதார் இந்திய நாட்டில் எவரும் இல்லை. இராமன் இந்துசமயத்தவரால் கடவுளாக வழிபடப் பெறுகிறான். திருக்கோயில்களில் சீதை இலக்குவன் ஆகியவரோடு கூடிய இராமனுக்குத் திருமுற்றங்கள் உண்டாயின. இராமன் திருத்தொண்டில் முனைந்து நின்ற அனுமன் பெருஞ்சிறப்புக்கு உரியவனாகப் போற்றப் படுகிறான். நாமக்கல், சுசீந்தரம் போன்ற இடங்களில் அனுமனுக்குக் கோயில்கள் உள்ளன. இராமன், சீதை, இலக்குவன், பரதன், சத்துருக்கனன், தசரதன், கோசலை. சுமித்திரை போன்ற இராமாயனப் பெயர்களைத் தங்களுக்குப் பெயராகக் கொண்டவர்கள் இந்திய நாட்டில் எல்லாப் பகுதியிலும் காணப்படுகின்றார்கள். இந்தியர் குடியேறிய நாடுகளிலும் இராமகாதை பரவியது. அதன் கதை அந்த இடத்திற்கும் மக்களின் கற்பனைக்கும் ஏற்றவாறு சிறு சிறு மாற்றங்களோடு வழங்கி வருகிறது.

இராமன் திருக்கதையினை முதன்முதலில் காப்பியப்படுத்தியவர் வான்மீகிமுனிவர். அவர் ஆதிகவி என்னும் சிறப்புக்குரியவர். வான்மீகி ராமாயணம் இந்திய மொழிகலில் முதலில் தமிழில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. அதனைச் செய்த பெருமைக்கு உரியவர் கல்வியில் பெரியராகிய கம்பர் ஆவர். பிற இந்திய மொழிகளில் நெடுங் காலத்திற்குப் பின்னரே இராமாயணம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கம்பர் தேர்ந்த புலமையும் விரிந்து ஆழ்ந்த கல்வியும் நிறைந்தவர். அவர் தம் காலத்திற்கு முன்பு தோன்றிய தமிழ், வடமொழி நூல்களில்

Koviloor Digital Library

பெரும்பாலானவற்றைக் கற்றுத் துறைபோகியவர். அவர் கவிதைகள் கற்பாரைப் பெரிதும் கவரவல்லன. அவர் கவிதை சில இடங்களில் எளிமையாகவும் சில இடங்களில் அரிய கருத்துக்களை உள்ளடக்கிய தாகவும் அமைந்துள்ளது.

மொழி காலத்துக்குக்காலம் வளருகிறது. அவ்வளர்ச்சியில் சிற்சில சொற்களும் வழக்காறுகளும் மறைகின்றன; சிற்சில புதியனவாகப் புகுகின்றன. சிற்சில மாற்றம் பெறுகின்றன. இவ்வியல்பினை எல்லா மொழிகளிலும் காணலாம். பழைய ஆங்கிலத்தைப் படித்துணர் வதற்குத் தனி அகராதியே தேவைப்படுகிறது. தமிழில் சங்க காலத்தில் வழங்கிய தமிழின் அடிப்படை அமைப்பு இன்றும் மாறவில்லை என்றாலும் பல சொற்கள் பொருள் உணர்வதற்கு அரியனவாக அமைந்துள்ளன. உரையின் உதவியின்றிச் சங்க நூல்களைக் கற்றறிவது அரிய முயற்சியாகவே அமைந்துள்ளது. அதனால் உரை தேவைப்படுகிறது. எந்த இலக்கியமும் அது தோன்றிய காலத்தில் உரையின்றி உணரக்கூடியதாகவே அமைந்திருக்கும். ஆனால் காலம் செல்லச் செல்ல உரையில்லாமல் அறிந்துகொள்ள முடியாத நிலை உருவாகிறது. இந்த விதிக்குக் கம்பராமாயணமும் விலக்கானதன்று. அதனால்தான் கம்பராமாயணத்திற்கும் உரை தேவைப்படுகிறது.

கம்பராமாயணம் முழுவதற்கும் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் என்னும் பெருந்தகை அரிதின் முயன்று உரை வரைந்து தமிழ் மக்களுக்குப் பேருதவி புரிந்தார். அவருக்கு முன்னேயும் இராமாயணத்தின் சிற்சில பகுதி களுக்கு வேறு சிலர் உரை கண்டுள்ளனர். ஆனால் வை.மு.கோவின் உரை தன் செல்வாக்கால் அவ்வுரைகளையெல்லாம் ‘இரவி என்பான் தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல்’ ஒளி யிழக்கச் செய்துவிட்டது. அவ்வுரைக்குப் பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அறிஞர்கள் பலரைக் கொண்டு இராமாயணச் சுவடிகளை ஒப்புநோக்கி நல்ல பாடங்களைக் கண்டு மூலத்தைச் செப்பம் செய்து உரை வரைந்து வெளியிட்டுக் கம்பராமாயணத் திற்குப் பெருந்தொண்டு புரிந்தது உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், ஐயரவர்கள் எழுதிவைத்திருந்த சில குறிப்புகளின் துணையோடு இராமாயணம் முழுவதையும் உரையோடு வெளியிட்டது. மூலத்தை

[illegible] ஏடுகளை ஆராய்ந்து [illegible] வெளிவரும் [illegible] [illegible] கம்பன் கழகம் பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரை முதன்மையாகக் கொண்ட அறிஞர் குழு ஒன்றைக்கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் பிற்சேர்க்கையாக இடம் பெற்றுள்ள பாடவேறுபாடுகளில் மிகுதியாக உள்ள பாடம் எது என்பதனை விருப்பு வெறுப்பின்றித் தேர்வு செய்து, மூலத்தை அடிக்குறிப்புடன் வெளியிட்டது. இதனால் சில நல்ல பாடங்கள் கிடைத்தன.

அத்தனைத் தொகுத்து [illegible] பதிப்பையும் [illegible] அடிக்குறிப்பு [illegible] வெளியிட்டது. [illegible] கம்பன் கழகம் அறிஞர் [illegible] ஆசிரியர்களைக் கொண்டு [illegible] சிலர் உரை வரைய [illegible] அதனை மிகக் குறைந்த விலைக்கு வெளியிட்டுக் கம்பராமாயண [illegible] அரும்பணி புரிந்தது.

இந்நிலையில் அறிஞர் பழ.பழனியப்பன் தாமும் ஒருவராகவே இராமாயணத்திற்கு உரை வரையும் முயற்சியில் ஈடுபட்டுச் சில ஆண்டுகள் உழைத்து அரிய உரையினை வெளிக்கொண்டு வருகிறார். இவர் வங்கியில் மேலாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தமிழ்ப் பற்றினால் கம்பராமாயணத்தைப் பலகால் கற்றுத் தேர்ந்து உரை வரைந்துள்ளார். இவரது முயற்சி பெரும் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியது.

ஒவ்வொரு உரையிலும் நிறையும் உண்டு, குறையும் உண்டு. வை.மு.கோ. பதிப்பு, சாமிநாத ஐயர் நூல்நிலையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவை வெளியிட்ட பதிப்புகள் எல்லாம் சிறப்பாக அமைந்திருக்க போதிலும் அவற்றில் [illegible] இடங்களில் [illegible] உரை [illegible] அமைந்து [illegible] மேலும் [illegible] [illegible] [illegible]

எனினும் அது பலரும் அறியாத முறையில் அமைந்தமையால் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான அணுகுமுறை இல்லை. ஆனாலும் இவை எல்லாம் கம்பராமாயணத்தைப் படிப்பதற்கு உரிய நிலையில் மேற்கோள்களாக அமைந்தன. இதனை நன்றியோடு நாம் போற்றுதல் வேண்டும். இந்நிலையில் அறிஞர் பழ. பழனியப்பன் அவர்களின் கம்பராமாயண உரை வெளிவந்திருக்கிறது. இவ்வுரையின் நோக்கம் ஓரளவு தமிழ் அறிந்தவர்களும் கம்பனைக் கற்று மகிழ வேண்டும் என்பதுதான்.

இவ்வுரை பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை என்னும் மரபில் அமைந்த உரை அன்று. இவ்வுரையில் பெரும்பாலான பாடல்களுக்குப் பொருத்தமான தலைப்புத் தரப்பட்டுள்ளது. அது பாட்டின் கருத்தினைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அடுத்து, பாடல்கள் சந்தி பிரிக்கப்பட்டுப் பொருள் விளங்கும் வகையில் தரப் பட்டுள்ளன. அதன்பின் அருஞ்சொற்களுக்குப் பொருள்தரப்பட்டுள்ளது. இறுதியில் பாட்டின் கருத்து விளக்கப்படுகிறது. இப்பகுதியில் பாடலில் காணப்படும் சிறப்பு, அக்கருத்தினை விளக்கும் வகையில் அமைந்த பிற நூல்களின் பகுதிகள் முதலிய இடம் பெற்றுள்ளன. இப்பகுதியே இவ்வுரையின் உயிர்ப்பகுதி எனலாம்.

இதில் உரையாசிரியர் உரையினைப் படிப்பவரோடு நேரில் உரையாடுவதுபோல் நடை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. நூலாசிரியரின் விரிந்த புலமையினையும் கூர்த்த நுண்ணறிவினையும் இப்பகுதியில் காணலாம். சங்க இலக்கியம், திருக்குறள் தொடங்கி [illegible] அவதாரப் புருடன் வரை அனைத்து நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டியுள்ளார். [illegible] இறையனார் களவியல் [illegible] தாயுமானவர், திருவருட்பா, சேனாவரையம் முதலிய அரிய நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டியிருத்தல் நூலாசிரியரின் விரிந்த புலமைக்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. சான்றாக ஒரு பாடலைக் காணலாம்.

[illegible] பிரிந்து போயிற்று என்பது ஆற்றுப்படலத்தின் [illegible] விளக்கத்தில் 'இந்தப் பாடல் கம்பனுடைய [illegible] தெரிவிக்கும் ஒரு முக்கியமான [illegible] இந்து [illegible] பெருக்கையும் கதியையும் [illegible]

Koviloor Digital Library

இணைத்து அண்மைக்கால ஞானிகள்கூடப் பாடியிருக்கிறார்கள். 'பொங்கு பல சமயம் எனும் நதிகளெல்லாம் புகுந்து கலந்திட, நிறைவாய்ப் பொங்கி ஓங்கும் கங்குகரை காணாத கடலே'' என்று இராமலிங்கவள்ளலார் பரம்பொருளைப் பற்றிப் பாடுகிறார். ''வேறுபடு சமயம் எல்லாம் புகுந்து பார்க்கின், விளங்கு பரம்பொருளே! நின் விளையாட்டலல்லால், மாறுபடும் கருத்தில்லை. என்பார் தாயுமானவர். ஒரு வேறுபாடு புரிகிறதா? பல ஆறுகள்தானே ஒரு கடலில் சென்று சேர்கின்றன. பல சமயங்களால் பல பெயர்களால் வழங்கப்படும் பரம்பொருள். ஒன்றுதானே? ஆனால் கம்பன் இங்கு என்ன கூறுகிறான். ஓர் ஆறு பல கால்வாய்களாகப் பிரிந்து பரந்து செல்கிறது என்றும். ஒரு பரம்பொருள் பல சமயத்தாராலும் பல தெய்வங்களாக வழங்கப்படுகிறது என்றும் கூறுகிறாரே? அதுதான் கம்பனுடைய காவியத் தனிச்சிறப்பு'' என்று எழுதியுள்ளார்.

இதில் இப்பாட்டைப் பற்றி ஒரு மதிப்பீடு; பிறர் கருத்தோடு ஒப்பீடு. கம்பர் சொல்லும் முறையில் காணும் தனித்தன்மை எல்லாம் காணப் படுகின்றன. இவ்வாறே இப்படலத்தின் இருபதாம் பாட்டின் விளக்கத்தில் கம்பர் சரயுவாற்றின் வெள்ளப்பெருக்கினை விளக்கப் பயன்படுத்தியுள்ள உவமைகள் எல்லாவற்றையும் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. இது கற்பாருக்குக் கம்பரின் ஆற்றுவருணனையைத் தொகுத்துக் காண உதவியாய் அமைந்துள்ளது.

இவரது ஆழ்ந்து பொருள்காணும் திறத்திற்குப் 'பொருந்திய மகளிர்' என்னும் நாட்டுப்படலம் பதினைந்தாம் ஆம் பாடல் தொடருக்கு எழுதியுள்ள உரையினைக் குறிப்பிடலாம். 'பொருந்திய' என்பதற்குத் தொல்காப்பியர் கூறும் பத்துப்பொருத்தங்களைக் கூறுவதோடு சோதிடம் கூறும் பொருத்தங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கங்கே வான்மீகத்தோடும் பிற இராமயணங்களோடும் ஒப்பிட்டு உரை வரைந்துள்ளார். இராமனுக்கும் மற்றப் பிள்ளை களுக்கும் வசிட்டர் பெயர் சூட்டிய நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் பாடல்களுக்கு உரை வரைந்த பின் இறுதியில் [திருவவதாரப் படலம் 125ஆம் பாடல்] விளக்கத்தில். ''நான்கு குழந்தைகளுக்கும் வசிட்டர் பெயர் சூட்டியதாக வான்மீகம் கூறவில்லை. இது கம்பனின் கை

Koviloor Digital Library

வண்ணம். வசிட்டர் முக்காலமும் உணர்ந்தவர். ஆதலால் அவர்கள் பின்னர் ஆற்றப் போகும் செயல்களை முன்னரே உணர்ந்து அதற்கு ஏற்றாற்போல நாமகரணம் செய்திருக்கிறார் என்பதாம்'' என்று குறித்துள்ளார். விராதன் துதியினை விளக்குமிடத்து [2662] ''விராதன் துதி இவ்வளவு விரிவாக வான்மீகத்தில் பேசப்படவில்லை என்பது நோக்கத்தக்கது'' என்று குறித்துள்ளார். கரன் வதை முடித்த பின் திரும்பிய இராமனை இலக்குவனும் சீதையும் கண்ணீரால் அவன் திருவடிகளைக் கழுவினார்கள் என்கிறார் கம்பர் [3163]. வான் மீகத்தில் சீதை இராமனை இறுகத் தழுவிக்கொண்டாள் என்றும் பாராட்டினாள் என்றும் வருகிறது. இவ்வேறுபாட்டினை ஆசிரியர் குறிக்கத் தவறவில்லை. ''அப்பாட்டின் இறுதியில் ''இங்கே சீதை இராமனை வெகுவாகப் பாராட்டி சத்திரிய உபசாரங்கள் செய்தாள் என்று மிக விரிவாக வான்மீகி கூறியிருப்பது நோக்கத்தக்கது'' என்று குறித்துள்ளார். 'இல்லாத உலகத்து எங்கும்' என்னும் பாட்டில் [3872] இராமன் தன்னுடன் உரையாடிய அனுமனை இலக்குவனிடம் சொல்லின் செல்வன் என்று பாராட்டிப் பேசுகிறான். இப்பாட்டின் உரையின் இறுதியில் ''இந்த இடத்தில் அனுமனைப் பற்றி இராமன் இலக்குவனிடத்துப் புகழ்ந்து கூறியதை 10 ஸ்லோகங்களில் கூறி யிருக்கிறது வான்மீகம்'' என்று சுட்டுகிறார். சுக்கிரீவனை நம்புதல் கூடாது என்ற இலக்குவனுக்கு இராமன் ஒழுக்கம் போன்ற நடை முறையை நாம் மனவுணர்வில்லாத குரங்குகளிடம் எதிர்பார்த்தல் கூடாது என்று விடை தருகிறான். இவ்விடத்தில் [4082] ''இவ்வாறு இலக்குவன் மறுப்புக் கூறுதலும். இராமன் இதற்கு மறுமொழி கூறுதலும் வான்மீகத்திலோ. அத்யாத்ம ராமாயணத்திலோ காணப்பட வில்லை என்று குறித்துள்ளார். இவ்வாறு வாலி தன் தவற்றினை உணர்ந்து இராமனிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டும் 'தாய் என உயிர்க்கு நல்கி' என்னும் பாட்டின் விளக்கத்தின் இறுதியில் ''இவ்வாறு ஞானம் பெற்ற வாலிக்குத் திரும்பவும் உயிரையும் உடலையும் அளிப்பதாக இராமன் தெரிவித்தாகவும். வாலி அதை மறுத்து இராமபிரானின் முன்னர் இறந்து போவதையே தான் விரும்புவதாகவும் அதுவே பெருமை தரும் என்று கூறியதாகவும் துளசிதாசர் எழுதிய ''ராமசரிதம் தெரிவிக்கிறது'' என்று தெரிவித்துள்ளார்.

Koviloor Digital Library

அகத்தியப் படலத்தில் [2769-92] அகத்தியரைக் குறித்து வரும் புராணச் செய்திகளையெல்லாம் விளக்கமாகத் தந்துள்ளார். இஃது உரையாசிரியரின் விரிந்த புலமைக்கும் உழைப்புக்கும் சான்றாக அமைந்துள்ளது. அங்கங்கே இப்படித் தேவையான விளக்கங்களைத் தந்து உரையினை முழுமையுடையதாக ஆக்கியுள்ளார்.

இந்நூலில் உரையின் வாயிலாகச் சில இடங்களுக்குத் தெளிவு கிடைக்கிறது என்பதற்கு பதச்சோறாக ஒரு பாடலில் அமைந்துள்ள உரையினைச் சுட்டலாம். தூதுவர்கள் இராமன் வில் முறித்த செய்தியினைத் தெரிவித்தற்கு மிதிலையிலிருந்து அயோத்திக்குச் சென்றனர். அதனைக் கம்பர். "கடுகிய தூதரும் காலின்காலின் சென்று" [819] என்று குறித்துள்ளார். இதற்கு வை.மு.கோ. அவர்கள் காலால் நடந்து சென்றனர் என்று உரை வரைந்துள்ளார். இது பொருத்தமாக அமையவில்லை. அரச தூதர்கள் காலால் நடந்து சென்றார்கள் என்பது சிறப்பாக இல்லை. அவர்கள் விரைந்து சென்று செய்தியைத் தெரிவிக்கும் ஊக்கம் உடையவர்கள். அதனால் தேரில்தான் சென்றிருப்பார்கள். அதுவே பொருத்தமாக அமையும். அறிஞர் பழ. பழனியப்பன் அவர்கள் தூதர்கள் தங்கள் வாகனங்களில் காற்றைவிட வேகமாகச் சென்றனர் என்று எழுதியுள்ள உரை அவருக்கு ஒரு 'சபாஷ்' போட வைக்கிறது.

ஓரிரு இடங்களில் முன்னைய உரையினையே ஒட்டி விளக்கும் தூய்மையுள்ளது. 'செல்வழி உருட்டிய' [2248] என்னும் பாடலுக்கு முன்னையோர் எழுதிய போக்கிலேயே இவரும் உரை கண்டுள்ளார். 'இன்மை நண்ணினோர்' என்பதற்கு மாறாக 'இன்பம் நண்ணினோர்' என்றும் வேறொரு பாடத்தைக் கொண்டுள்ளார். அதனால் உரை மனங்கொள்ளத்தக்க வகையில் அமையவில்லை. அதற்குக் காரணம் 'உய்யாநிலைவருநீ உலகினில்' எனப்பதம் பிரிப்பதில் உள்ள இடர்ப்பாடாகும். உலகினில் என்பதில் இல் என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு அன்று. அப்படி எல்லாரும் கொண்டு தொல்லைப்பட்டிருக்கும் பொருள் காண்பதில் இடர் நேர்ப்பட்டுள்ளது. அதில் இல் என்பதும் வினைமுற்று. இல்லை அதனால் வறியவர்கள் மேலுலகத்தில் இருக்கிறார்கள் என்று கருதி அவர்களைத் தேடிப் போகும் செல்வர்கள் இல்லை? என்று பரதன்

Koviloor Digital Library

ஆற்றாது புலம்புவதாகப் பொருள் காண்பதே இயல்பாகவும் பொருத்த மாகவும் அமையும்.

இதுபோலவே இராமனும் இலக்குவனும் குரக்குச்சேனையினை இருபது நாள்கள் கண்டனர் என்றும் அப்படிக் கண்டும் அதன் நடுப் பகுதி வரை கூடக் காண முடியவில்லை என்றும் கம்பர் தெளிவாகத் தெரிவித்துள்ளார். 'பத்து இரட்டி நன்பகல் இரவு ஒருவலர் பார்ப்பார். எத்திறத்தினும் நடுவு கண்டிலர் முடிவு எவனோ?' என்பது கம்பர் பாடல்; இதன் விளக்கத்தில் 'பத்து இரட்டி' என்பதற்கு இருபது நாட்கள் என்பது நேர்பொருள் அல்ல, பல நாட்கள் என்பது மறை பொருள். படையின் அளவின்மையைச் சிறப்பித்துக் கூறினார் என்க'' என்று கூறியுள்ளார். பாடலில் தெளிவாக இருபது நாள்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் இதனையும் மீளச் சிந்தித்தல் வேண்டும். ஒருவரால் எல்லாச் சிக்கல் களுக்கும் தீர்வு காண இயலாது என்பதனை மனங்கொள்ள வேண்டும். இவை இன்னும் கம்பராமாயணத்தில் தெளிவு பெறுவதற்குரிய பகுதிகள் உள்ளன என்பதற்காக எடுத்துக்காட்டப்படுகின்றன. இவ் வாசிரியரின் முயற்சியால் எவ்வளவோ விளக்கங்களும் தெளிவுகளும் கிட்டியுள்ளன. சராசரி தமிழறிவு உள்ளவர்களும் எளிதில் கம்ப ராமாயணத்தைப் பொருளுணர்ந்து படித்துச் சுவைக்க ஒளிவிளக்காக இவ்வுரை அமைந்துள்ளது. அறிஞர் திரு. பழ. பழனியப்பன் முயற்சி யைப் பாராட்டி எஞ்சிய சுந்தர காண்டம் முதலான பகுதிகளுக்கும் இவரது உரை விரைவில் வருதல் வேண்டும் என்றும் அதற்குத் தமிழ் மக்கள் ஆதரவும், இறையருளும் துணைநிற்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன். உரையாசிரியருக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டு தல்கள். வாழ்க அவரது தமிழ்த்தொண்டு.

அன்புள்ள

சென்னை-600 1[illegible]

4-9-2007.

Koviloor Digital Library

ஆய்வுரை

கம்பனின் காப்பியம் கல்விப் பெருங்காப்பியம். எல்லா வகையானும் கம்ப இராமாயணம் ஒரு பெருநூல். தொடர் பழகுடைய, கதையோட்டமுடைய, கருத்தோட்டமுடைய, தமிழ்ப் பண்பாடு காட்டும் பரந்த நூல். அதன் காப்பிய மாந்தர்கள் செந்தமிழ் நிலம் சாரார் எனச் சொல்லி முழுப் பார்வை காணும் கண்ணோட்டம் பெறாச் சிலர் உண்டென்றாலும், கற்றுணர்ந்தோர் போற்றும் பெருங்காப்பியம் கம்ப இராமாயணம். அளவால், அச்சால் இந்த மிகுபெரும் படைப்பு 'கல்வியில் பெரியவன் கம்பன்' எனும் பெருமை சேர்த்தது. ''ஒரு மொழிக்கு நிலக் காப்பியங்களே தோன்ற முடியுமா? மொழியின் பரந்த வளர்ச்சிக்குத் தழுவலும் வேண்டும். ஆனால் அத்தழுவல் தழுவலாகத் தெரியாது. நிலத்தோடும் நிலமக்கள் மரபோடும் ஒட்ட வேண்டும். மொழிபெயர்ப்பு இதுவென எவ்விடத்தும் தோன்றாதிருக்க வேண்டும். 'மொழிபெயர்த்த அதற்பட யாத்தல்' என்பார் தொல்காப்பியர்'' என மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் கம்பனின் காப்பியப் பெருமைக்கும் தமிழ் உணர்விற்கும் விளக்கஞ் சொல்வர். மொழி வளர்ச்சிக்குக் கம்ப இராமாயணம் ஒரு வழிகாட்டி. இராமாயணப் பாத்திரங்களைத் தமிழ் மொழிமை குன்றாது செய்யுட் படுத்தியவன் கம்பன். சொல்லாற்றல் வேண்டுவோர்க்கு அருமருந்து, பெருவிருந்து கம்ப காதை. 'கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!' என முழங்குவார் கம்பன் அடிப்பொடியார்.

இராமகாதை பட்டி தொட்டியெல்லாம் ஊடுருவிய காதை. கம்பனின் நோக்கு தமிழ்நோக்கு. தன் தமிழ்நோக்குக்குக் கருவியாகச் சூழ்திறனோடு இராமகாதையைத் தழுவினான் கம்பன். அவன் மொழி பெயர்த்தானல்லன். தமிழ் வளர்த்தானாவான். தமிழ் மக்களின் அக வழக்கங்கள், புறப்பழக்கங்கள் இடம்பெற்று அவன் படைப்புக்கு முன்னர்த் தோன்றிய திருக்குறள், சீவக சிந்தாமணி, தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலான நூல்கள் இராமவதாரக் காப்பியத்தை இயக்கின. சொல்லாலும் பொருளாலும் கம்பன் 'தமிழ் இயக்குநர்'

Koviloor Digital Library

ஆனான். அவன் இயக்கிய 'இராமாவதாரம்', 'கம்ப இராமாயணம்' எனக் கம்பன் பெயரினை முன்னிறுத்தியது. கம்பனின் கவியொளி ஈடற்றது. அவன்தம் கவிஒளிக் கதிர்கள் பரவுமிடமெல்லாம் கவி பிறக்கும். 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பர். அவன் கவிதையின் சக்தி அவனைக் **'கவிச் சக்கரவர்த்தி'** ஆக்கிற்று. 'கம்ப நாடன்' எனப் போற்றிற்று.

தமிழில் பெருநூல்கள் பல கம்பனுக்கு முன்பே தோன்றினாலும், பாடல் எண்ணளவில் பத்தாயிரத்தை மிஞ்சும் பாடற் காப்பியம் நமக்குக் கிடைத்துள்ள கம்ப இராமாயணமே. கம்பனை அறியாத் தமிழர் இல்லை. அவனைத் தெரிவோர், அறிவோர், ஆராய்ந்தோர் பல வகை யாளராவார். கடல் போலும் அவன் கவிதைப் பெருக்கில் அலைகடல் இன்பம் பெறுவோர் ஒரு சாரார்; ஆழ்கடல் இன்பம் பெறுவோர் இன்னொரு சாரார். அலைகடற் காற்றை வேண்டுவோர் சிலர். ஆழ்கடல் முத்தையும் வேண்டுவோர் இன்னும் சிலர். கம்பனில் தோய்வோரின் காப்பியப் பார்வைகள் வேறுபடும். பாட பேதங்கள், மிகைப்பாடல்கள், உரை நூல்கள், உரை வேற்றுமைகள் எல்லாம் கற்றுணர்ந்தோரின் சிந்தனைக் களத்தில் 'கலிங்கத்துப் பரணி'யாகும். 'சொலல் வல்லோர்' பலரை உருவாக்கும் சொற்போர்க் கருத்துக்கள் பொதிந்த நூல் கம்ப காவியம். கவியரங்குகள், பட்டி மன்றங்கள், வழக்காடு மேடைகள் எனக் கம்பனை மையப்படுத்தி வளரும் சொற்களங்களே இதன் சான்று. கம்பனைக் கேட்போர், கற்போர், ஆராய்வோர் என அவன்பால் ஈடுபடுவோரை மூன்று நிலைப் பிரிவினராகக் கொள்ளலாம். கம்பனை ஒரு முறை கேட்போர் மேலும் கேட்க விரும்புவர். பலமுறை கேட்டோர் அவனைக் கற்க விரும்புவர். அவ்விருப்புக் கூடி வர உரைநூல் தேடுவர். கற்றோரோ மேலும் தமிழ் பருக வேண்டி ஆய்வு மேற்கொள்வர். ஈத்துவக்கும் இன்பம் இன்னும் பெரிதென உணர்ந்து கம்பனைப் பரப்பிக் கன்னித் தமிழ் வளர்ப்பர். இவையெல்லாம் கம்பனை முழுப்பார்வை காணும் நோக்குடை யோரின் வரிசைப்படிகள்.

இந்த வரிசைப் படிகளில் ஒவ்வொரு படியாக ஏறி வந்தவர் இந்த நூலின் உரைநூலாசிரியர் திரு. பழ. பழனியப்பன் அவர்கள். அவர்பால் 25 ஆண்டுகட்கும் மேல் நட்புடையோன் நான். அவரை வங்கி அலுவலராக, மேலாளராக, முதுநிலைத் தலைவராக அவர் துறை சார்ந்த காலத்திலும், பொதுவாழ்வில் அரிமா சங்கத் தலைவராக அவர் செய்த நலம் சார் ஒப்புரவிலும், தமிழ்ப் பொழிவுகள் எங்கு நடப்பினும்

Koviloor Digital Library

துணை சேரும் தமிழ் உள்ளார்ந்தும் அவரைக் கண்டவன் நான். இடைக் காலத்தில் அவருக்கிருந்த இடர்ப்பாட்டையும் நான் அறிந்திருந்தேன். பல ஆண்டுகளுக்கு முன் அவர் நாமக்கல் வங்கிக் கிளைக்கு மாறியபோது கம்பன் கழகம் ஒன்றை நிறுவக் கேட்டார். அந்த நூல் மிக மெல்லிய தாளில், எழுத்துக்களையும் அடக்கிய ஒரே நூலாக மிக நேர்த்தியாகக் கம்பன் கழகம் வெளியிட்ட பாராட்டுக்குரிய பதிப்பாகும். இப்பதிப்பு ஏனோ எளிதில் அதன்பின் கிடைக்கவில்லை. கழிவு போக உருபா தொண்ணூறு அடக்க விலையில் வாங்கிப் பாதுகாத்த அந்த நூலைத் தயங்கித்தான் திரு. பழனியப்பனிடம் கொடுத்தேன். பொதுவாக நூல் இரவல் பெறுவோர் காலமாகத் திருப்பித் தருவதில்லை. தந்தாலும் படித்திருக்க மாட்டார்கள் என்பது என்னைப் போல் பலருக்கும் அனுபவம் இருக்கும். மாறாக, பழனியப்பன் அதனைத் திருப்பிக் கொடுத்தபோது அந்த நூலின் பயன்பாடு எனக்கு வியப்பைத் தந்தது. பக்கங்கள் முழுவதிலும், பாடல்கள் பலவினும் வரைகோலால் (பென்சில்) பல குறிப்புகள் எழுதியிருந்தார். அவ் வரைகோல் குறிப்புக்கள் பின்னர் உரைநூலாய் உருப்பெறும் வளரும் கருத்தோற்றமென அன்று நான் அறியவில்லை. அவரின் அகவேட்கை, தொடர்ந்து கொழுந்துவிட்டு எரிந்து அணையா விளக்காகப் பன்னிரு ஆண்டுகள் கரு வளர்த்து உருவமைந்த ஓர் அரிய எளிய உரைநூலைப் பெற்றுத் தந்துள்ளது. பழனியப்பன் அவர்கள் முறையான தமிழ்க்கல்வி கல்லூரியில் பயின்று புலமை பெற்றவரல்லர்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்ற தமிழுணர்வுடன், கம்பனின் ஆசிப் பாடலான பூசைப் பாட்டில் நினைவு கூர்ந்தார். பாற்கடலில் நக்கியே முழுதும் குடிக்கும் ஆசை, பூசைக்குப் பேராசைதான். ஆனால் அரவம் கேட்டு ஓடித் தன்னை ஒளிக்கும் இயல்பான பூசையல்ல இப்பூசை. இப்பூசை, துன்பம் உற்றவரினும் துணிந்து செயலாற்றி இன்பம் பயக்கும் வினை செய்யும் பூசையென வேறுபட்டு நின்று திருவருள் துணையாய்ச் செயற்கரிய செய்த சாதனைப் பெரியவர் இந்நூலாசிரியர்.

இந்நூல் தமிழாய்ந்த புலமைசால் அறிஞர் பெருமக்களைக் குறிகொண்டு எழுதிய உரையல்ல. புலவரல்லாதோரும் கம்பச்சுவை பருக வேண்டின், ஒரு குடைக்கீழ், பொருளறிய வேண்டிய பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை அனைத்தையும் தந்துள்ள உரைநூல். ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் முன்னுரையாக, கதை

Koviloor Digital Library

யோட்டம், காரண காரியங்கள் என்னென்ன அவற்றுள் அடங்குமெனத் தொடர்பழகுடனே, படிப்போரின் பசியோட்டம் தூண்டுமாகத் தரப் பட்டுள்ளது. தமிழறிந்த எவரும் கம்பனைப் படிக்க முடியும், வேண்டும் என்னும் நோக்கே, உரைநோக்கு என நூலாசிரியர் தெளிவு காட்டி யுள்ளார். படிப்பவர் மனதில் படிக்குங்காலை என்னென்ன கேள்விகள் வரக்கூடுமென, அனுபவப்பூர்வமாகத் தனக்குள்ளே வினவி, விளக்கங்களைத் தந்துள்ளார் ஆசிரியர். அவ்வாறுள்ள விளக்கங்களில் அவர் காட்டும் மேற்கோள்கள், ஒத்த கருத்துக்கள் சங்க நூல்களி லிருந்து மட்டுமன்றித் தற்கால நூல்களிலும், தற்கால நூலாசிரியர் களிடமிருந்தும் பல இடங்களில் கையாண்டமை, தேடும் சிரமம் இல்லாத செய்தித் தொகுப்பாகப் பெறப்பட்டுள்ளது. கம்பனை மட்டு மன்றி திருக்குறள், புறநானூறு, கலித்தொகை முதல் நளவெண்பா, திருமுறைகள், கவிஞர் வாலியின் பாடல்கள் வரை சுவைத்துப் பார்க்கும் வாய்ப்பாகவும் படிப்போர், விருந்தாகவும் அமைந்துள்ளது.

கோசல நாட்டின் செழிப்பையும் சிறப்பையும் கூறும் நாட்டுப் படலத்தில் கோசல மாதரின் கற்பென்னும் திண்மைகள், வழுவாத நெறியால், மாரியும் வழுவாது பெய்து நாடு செழிப்புற்றது எனப்பாடும் 'கற்பின் நின்ற கால மாரியே' எனும் கம்ப வரிகளை விளக்கு முகத்தான், பெண்ணின் கற்புக்கும் மழைக்கும் உள்ள தொடர்பை ஆசிரியர் காட்டும் மேற்கோள்கள் பல. 'கொழுநன் தொழு தொழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' [55]யெனத் திருக்குறளிலும், 'மழை வேண்டில் தருகிற்கும் தன்மையனே' எனக் கலித்தொகையிலும், 'வானம் பொய்யாது; வளம் பிழைப்பு அறியாது; நீள்நில வேந்தன் கொற்றம் சிதையாது, பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு' எனச் சிலப் பதிகாரத்திலும் அவர் காட்டும் தொடர்புடைக் கருத்தோடும் மேற் கோள்கள் படிப்போர் மனத்தில் பரந்த தமிழ் இலக்கியப் பார்வையைப் பதிக்கின்றன.

அயோத்தியா காண்டம் மந்திரப் படலப் பாடலில் கம்பன் வள்ளுவனைக் கையாளும் திறனை வியந்த உரையாசிரியர் கம்பனின் ஒவ்வொரு அடியும் ஒரு குறட்பாவை உள்ளடக்கிய நயத்தை விளக்கு கிறார். ''ஊருணி நீர் நிறையவும், பயன் மரம் பழுத்தது ஆகவும் கார் மழை பொழியவும் கழனிபாய் நதி வார்புனல் பெருகவும், மறுக்கின்றார் யார்?'' என இராமன் உலகவாம் பேரறிவாளன், நயனுடையான், பெருந்தகையான், ஒப்புரவாளன் முடி சூடுவதால் மக்களும் உலகும் பயன் எய்துவரென மூன்று குறட்பாக்களை ஒரு

Koviloor Digital Library

பாடற் சாறாகக் கவி படைத்த கம்பனை நம்முன் நிறுத்துகிறார், நூலாசிரியர்.

பிறரை வைவதில் இருவகையுண்டு. பேரொலி செய்து வைதல் ஒருவகை. மனத்துள்ளேயே ஒலி சுருக்கி வைவது இன்னொரு முறை. கைகேயியாம் மாகயத்தியை இருவகைப் பறவைகள் வைதன. கோழி கூவியது பேரொலி எழுப்பி வைதலை ஒத்திருந்தது. பிற பறவைகளின் மெல்லொலி மனதுள்ளே வைதலை ஒத்திருந்தது எனக் கைகேயி சூழ்வினைப் பாடலை விளக்கும் உரையாசிரியர் தன் எளியமுறை விளக்கத்தால் நம் மனம் பதிகிறார்.

கம்பனின் வேறுபட்ட உவமை நயங்கள் உரையாசிரியரின் பார்வையில் படுகின்றன. உருமாறிய சூர்ப்பணகை வரும் மெல்லோசைச் சந்தப் பாடலில், ‘அஞ்சொல் இளமஞ்ஞை என’ என்னும் வரிகளில் மயில் இனிய சொல்லுக்கு உவமித்துள்ள வேறுபாட்டைக் காணலுற்ற ஆசிரியர், பொதுவான உவமை மயிலை மகளிரின் சாயலாக உவமிப்பார்கள். என விட்டு விடாமல், ‘மயில் கண்டன்ன மடநடை மகளிர்’ என்னும் திருமுருகாற்றுப்படையையும் மேற்கோளிட்டு அதில் மயில் மகளிர் நடைக்கும் கூட உவமையாகிறது என்னும் செய்தியைத் தருகிறார்.

கிட்கிந்தா காண்டம் வாலி வதைப் படலத்திலே ‘காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான் பாலின் ஆற்றிய பத்தி பயத்தலால், மாலினால் தரு வன்பெரும் பூதங்கள்’ என்னும் வரிகளில், ‘மாலினால் தரு’ எனும் கவி வரிக்கு இந்நூலாசிரியர் கூறும் விளக்கம் சைவ வைணவச் சமத்து வத்தைப் பிரதிபலிக்கிறது. பல உரையாசிரியர்களின் ‘திருமாலால் படைக்கப்பட்ட’ என்னும் உரையில் வேறுபட்டு ‘மால்’ எனும் சொல்லுக்கு ‘அன்பு’ எனும் அழகிய பொருளும் உண்டாதலால் சைவ சமய உரையாசிரியர்கள் கூறும் பொருளும் ஏற்புடைத்து என்கிறார் பழனியப்பன் அவர்கள்.

ஆசிரியர் உரை யாத்துள்ள 4845 பாடல்களை உள்ளடக்கிய 4 காண்டங்களிலும் எளிய, புதிய, தொகுத்த பல நயமான விளக்கங்கள் விரவிக் கிடப்பதைக் காணலாம். கம்ப காதைக்கு எளிதில் கிடைக்கும் மூலமும் உரைகளும் இல்லையென்றே சொல்லவேண்டும். ஒருமுறை போட்ட பதிப்புகள் மறுபதிப்புக்கு அதிகம் வரவில்லை. இது தமிழர்களின் தவக்குறைவே.

Koviloor Digital Library

இதைப் பெருமளவு நிறை செய்யும் நோக்கிலே, இந்நூலாசிரியரின் இப்பெரும்பணி பயன்படுமென்பது தெளிவு. சிறப்புடைய இவ்வுரை நூல் மேலும் சிறக்க எனக்குப் புலப்பட்ட இருகருத்துக்களை ஆசிரியர்க்கு அறிவுரையாக அல்ல, ஆலோசனையாக வைக்க விரும்புவன். பல இடங்களில் வடமொழிச் சொற்கள் பொதிந்துள்ளன. பதவுரையிலும், விளக்கவுரையிலும் இவற்றை வரும் பதிப்புக்களிலும், எஞ்சிய காண்டங்களிலும் திருத்தம் செய்தல் தமிழ் நலம் கூட்டும். கம்பனே, வடமொழிப் பெயர்களைக் கூடத் தமிழ் இலக்கண மொழிமை குன்றாமல் எழுதியோனல்லவா? அவன் வழியில் சிந்திப்பது இவ்வுரைக்கு மேலும் வலிமை சேர்க்கும் என்பது ஒரு கருத்து. ஆசிரியர் பாடல்களைச் சொற்பிரித்துப் போட்டிருப்பது எளிதில் படிக்கவும், புரியவும் கூடும் எனும் பன்னோக்காகும். அது தவறல்ல. ஆனால் இன்றைய மாணவர்களுக்கு அதிலும் இளஞ்சிறார்களுக்குக் கவிதைகள் மனனம் செய்யும் பயிற்சி குறைவே. ஓசையும் தொடையும் படச் சேர்ந்து படிக்கும் முறையில் பாடல்கள் மனம் பதியும் என்பது உண்மை. என் சொந்த அனுபவம்கூட. இதைச் சிந்தித்து உரிய வகையில் மூலம் வெளிப்படச் செய்வது இன்னொரு கருத்து.

இவ்வுரை நூல் நூலாசிரியரின் முதல் முயற்சி. மிகவும் போற்றுதற்குரிய பெரு முயற்சி. பன்னிரு ஆண்டுகளுக்கு மேல் குறிக்கோள் திண்மையுடன் செய்துள்ள சாதனை. மேலும் உள்ள சுந்தரகாண்டம், யுத்த காண்டம் இரண்டையும் தொடர்ந்து அவர் முடிக்கத் திருவருள் துணை செய்யும். இந்நூல் உருவாக, நூலாசிரியர்க்குத் துணை நிற்கும் கம்பன் கழகத்தாரும், திருமகள் பதிப்பகத்தாரும், பிறரும் தமிழ்த் தொண்டாற்றிய பாராட்டுக்குரியவர்கள்.

அன்பன்.

வ.சுப.மா.தொல்காப்பியன்

Koviloor Digital Library

வாழ்த்துரை

கலைமாமணி முனைவர் ஆறு. அழகப்பன்

மேனாள் தமிழ் துறைத்தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கல்வியில் பெரியவன் கம்பன்; தமிழிற்கு இருவர் 'கதி' [கம்பர், திருவள்ளுவர்] யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல என்ற வரிகளை கம்பராமாயணச் சிறப்புகளை எழுதுபவர்கள், மேடைகளில் உரையாற்றுகிறவர்கள் கூறாமல் இருப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட இலக்கியத்திற்காக கழகங்களும், அதிகமான பேச்சாளர்களும், தாசகர் களும் தோன்றினர் என்றால் அப்பெருமை கம்பராமாயணத்தையே சாரும்.

கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம் என்று உரத்த குரலில் தொடங்கி மாநாடுகளை நடத்தி இலக்கியச் சுவைஞர்களை அதிகமாக உண்டாக்கிய பெருமை கம்பராமாயணத்திற்கு உண்டு. பகுத்தறிவுக்கு ஒவ்வாத இலக்கியமென்று திட்டவும், எரிக்கவும் விரும்பிய எதிர்பாளர்களை கம்பராமாயண தாசர்களைவிட அதிகமாக படிக்க வைத்து பல பாடல்களைப் பரப்பவைத்த தனிப்பெரும் சிறப்பு கம்பராமாயணத்திற்கு உண்டு.

ஓர் இலக்கியம் தோன்றியவுடன் தொடர்ந்து அவ்விலக்கியம் மக்களைச் சென்றடைய அவ்விலக்கியத்தை மேடையில் உரையாற்றுதல் என்ற நிலையைத் தாண்டி நிரந்தரமாக பாடல்களுக்கு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, நயவுரை என்றெல்லாம் கற்றுத்துறைபோகிய அறிஞர்கள் உரைகள் எழுதத் தொடங்கினர். இக்கருத்திற்கு விரிவாக விளக்கம் தேவையில்லை என்பதை தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இரண்டு நூல்களுக்கும்

Koviloor Digital Library

அறிஞர்கள் பலர் எழுதிய உரைகள் எடுத்துக்காட்டுகள். ஈராயிரம் ஆண்டுகள் முதுமைபெற்ற இவ்விரண்டு நூல்களுக்கும் இன்னும் தொடர்ந்து உரைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. இச்சிறப்புகளை வேறு உலக இலக்கியங்கள் பெற்றிருக்கின்றன என்று கூறமுடியாது.

இவ்விரு நூல்களையும் போல கம்பன் காவியமும் மேடைகளில் கூறப்பட்ட உரைகளையும் எழுத்துவழி எழுதப்பட்ட பெருமை களையும் உடையதாக விளங்குகிறது. கம்பராமாயணத்திற்கு உரையெழுதிய உரைவிற்பன்னர்களில் திரு.வை.மு.கோ. உரை வடமொழி கலந்த எளிமைச் சிறப்புக்கொண்டதாக விளங்க இவ்வுரை பல உரையாசிரியர்களை தோற்றுவித்தது.

அண்ணாமலை பல்கலைக்கழக கம்பராமாயண செம்பதிப்பில் உரைகள் எழுதப்படும்பொழுது சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை தலைமையில் தமிழக அறிஞர் குழு உரை எழுதிய பாங்கினையும் சிறப்பினையும் உலகறியும். இக்காலக்கட்டங்களில் மக்கள் இலக்கியமாக கம்பராமாயணத்தை டி.கே.சி., ராஜாஜி ஆகியோர்கள் தம் உரைகளால் எடுத்துச் சென்றனர்.

கம்பராமாயண உரையாசிரியர் வரிசையில் பரோடா வங்கியில் பணியாற்றி ஓய்வுபெற்ற பழ. பழனியப்பன் அவர்கள் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம் ஆகிய காண்டங்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். உரையாசிரியர் பழ. பழனியப்பன் தம் முன்னுரையில் கம்பராமாயணத்தில் தமக்கு ஏற்பட்ட ஈடுபாட்டை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாமக்கல் கிளையில் பணியாற்றிய பொழுது அனுமன் வழிபாடு ஓர் உந்துதலாக அமைய அதுபோது வ.சுப.மா. தொல்காப்பியம் வழி மூல நூல் மட்டும் கிடைக்க ஈர்ப்பு ஏற்பட தமிழிற்கு இன்று அது வரவாகிவிட்டது.

உரையாசிரியர் தம்முன்னுரையில் கம்பராமாயணமும் மூலமும் என்ற பகுதியில் கம்பராமாயண உரைகள் இதுகாறும் வந்தவைகளை தெளிவாக பட்டியலிட்டுள்ளார். இவர் எழுதிய உரையின் நெறிகளை இவரே பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது கம்பன் பாடல்களுக்கு விளக்கவுரை. முதலில் பாடல்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் சந்தி பிரித்துத் தரப்பட்டிருக்கிறது,

Koviloor Digital Library

பின்னர் பாடலில் பயின்று வந்திருக்கின்ற அருஞ்சொற்களுக்கு எல்லோருக்கும் புரிவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன, பின்னர் பாடலுக்குரிய பொழிப்புரை தரப்பட்டிருக்கிறது, அதன் பின்னர் அப்பாடலில் உள்ள சொற்களின் சிறப்பு நயம் விளக்கப்பட்டிருக்கிறது, ஆங்காங்கே தொடர்புடைய மேற்கோள்களும் தரப் பெற்றிருக்கின்றன, என்னுடைய நோக்கமே. இது மிக எளிதாக எல்லோருக்கும் புரியவேண்டும் என்பதே, கம்பன் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் சொந்தமானவனல்லன், அவனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில். வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் புரியவைத்திருக்கிறேன், இன்றைய இளம் தலைமுறையினருக்கும். மாணவ. மாணவியர்க்கும் இது பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

இவ்வுண்மையை நாம் காண்டங்களை படிக்கத் தொடங்கும்போது விரும்பப்பட்ட பாடல்களை புரட்டும் போதும் காண்கிறோம். பெரிய புராணத்தில் இயற்பகை நாயனார் புராணம் விவாதத்திற்கு உள்ளது போல கம்பராமாயணத்தில் வாலி வதைப்படலம் விவாதத்திற்கு உரியது. இவ்வுரையாசிரியர் எழுதும் உரைகளைப் பார்க்கும் பொழுது இவர் உரைத்திறன் பளிச்சென வெளிப்படுகிறது. கம்பரையும், அவர் காவியத்தையும் முற்றிலும் உணரவேண்டுமா? யாருடைய உதவியுமில்லாமல் இவர் உரையை வைத்து கம்பராமாயணத்தை தனியாக ஒருவர் படித்து கம்பராமாயணச்சுவையை உணரலாம். நாமக்கல் கவிஞர் கம்பரைப் புகழும் போது ''எண்ணி எண்ணி, எப்படித்தான் எழுதினானோ, எண்ணாமல் எங்கிருந்து கொட்டினானோ'' என்று பாடுவர். அவ்வரிகளுக்கு ஏற்ப உரையாசிரியர் பழனியப்பன் தமிழைப் படித்து தமிழ் பேராசிரியராக பணியாற்றும் வாய்ப்பினை பெறாத இவர் இவ்வாற்றலை எவ்விதம் பெற்றாரோ என்று நினைக்கும் போது. மனித உறவுக்கு உரைகல்லாக அவதாரம் எடுத்த இராமர் தான் இவருக்குப் பின்புலமாக விளங்கி யிருக்கிறார் என்பது தெரிகிறது.

தமிழகம் திருவாசகத்திற்கு பண்டிதமணியையும், குறுந் தொகைக்கு இராகவையங்காரையும், நற்றிணைக்கு பின்னத்தூர் நாராயணசாமி ஐயரையும், புறநானூற்றுக்கு ஔவைதுரைச்சாமி பிள்ளையையும், சிலப்பதிகாரத்திற்கு ந.மு.வேங்கடசாமி

Koviloor Digital Library

நாட்டாரையும் பெற்றிருக்கிறது. இவ்வரிசையில் கம்ப ராமாயணத்துக்கு அனைவருக்கும் நீர் உதவுவது போல நீரான உரையை பழனியப்பன் தமிழகத்திற்கு தந்துள்ளார். படிப்பவர் தமிழ் அறிவோடு இராமாயணச் சிறப்பை இவர் உரையால் அடையலாம். இலக்கிய வரலாற்று ஓட்டத்தில் நின்று நிலைபேறு உடையவர்களாக இடம்பெறும் வாய்ப்பு எல்லோருக்கும் கிட்டாது. சிலர் தோன்றியதும் விரைவில் எட்டாது போய்விடுவர். ஆனால் அவ்வகையில் எட்டாத தூரத்தில் உரையாசிரியர் சென்று விடாமல் நின்று நிலைக்கும் பெருமையைப் பெற்றுவிட்டார்.

உரையைப்படிக்கும் போது உரையாசிரியர் பக்கத்தில் இருப்பது போலவே உணர்வு ஏற்படுகிறது. பணியாற்றிய வங்கியிலும் அப்பழுக்கற்ற பணியாளராக விளங்கிய பள்ளத்தூர் பழ. பழனியப்பன் கம்பராமாயண உரையால் அவர் ஊரையும் பெயரையும் தமிழ் உலகம் என்றும் உச்சரிக்கும் வகையில் அருந்தமிழ் பணியாற்றியுள்ளார். பிறவிப்பயன் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தம் உரைத்தொண்டால் மெய்ப்பித் திருக்கிறார்.

ஈரமான அவர் சிந்தனை மேலும் ஊற்றாக சுனையாக வளர்ந்திட தமிழன்னை அருள்பாலிப்பாள்.

அன்பன்

ஆறு. அழகப்பன்

Koviloor Digital Library

பதிப்புரை

திரு. பழ. பழனியப்பன் அவர்களை நீண்ட பல ஆண்டுகளாக நாங்கள் அறிவோம். அவர் இந்நகரில் வங்கியில் பணியாற்றிய போதே தமிழ் ஆர்வலர் என்பதைப் புரிந்து கொண்டோம். இந்தப்பகுதியில் எங்கே இலக்கிய, ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தாலும் அங்கே சென்று குறிப்பு எடுத்து வந்து சேமித்து வைத்துக் கொள்வது அவர் பழக்கம். பின்நாளில் அவர் அலுவலகத் தொடர்பாக வெளிமாநிலங்களிலும் வெளியூர்களிலும் பணி யாற்றியதால் அவருடன் எங்கள் தொடர்பு சற்று விலகியிருந்தது.

மீண்டும் இதே நகரின் வங்கிக் கிளைக்கு மேலாளராக மாற்றலாகி வந்ததிலிருந்து அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பும், உரையாடும் நேரமும் கிடைத்தது. அப்பொழுது அவர் கம்பராமாயணத்திற்கு ஒரு உரை எழுதவேண்டும் என்பது தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை எங்களிடம் கூறினார். ஆனால் மறுபடியும் அவருக்கு வெளியூர்களுக்கு மாற்றல்கள் வந்தன.

இறுதியாக நாமக்கல்லில் இருந்து ஓய்வுபெற்று வந்த போது 1998-ம் ஆண்டு தன் இலக்கில் தான் உறுதியாக இருப்பதாகவும் உரை எழுதத்தொடங்கப்போவதாகவும் அறிவித்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடலானார். இச்சமயத்தில் அன்றாடம் தான் எழுதிய உரைகளையும் எங்களிடம் தந்துவந்தார். 2001-ம் ஆண்டு, தான் முதல் நான்கு காண்டங்களுக்கும் உரை எழுதி முடித்து விட்டதாகவும் அதை நாங்கள் பதிப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 2001-ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டுவரை தன் நண்பர் ஒருவரின் அலுவலில் அவர் வேண்டுகோளுக் கிணங்க ஆலோசகராகப் பணியாற்றி வந்தார். மீண்டும் 2006ம் ஆண்டு முடிவில் மிகத் தீவிரமாக இதில் இறங்கி, எங்களுடன் கூடவே இருந்து, இப்பொழுது 2007ம் ஆண்டு அது சீரிய முறையில் வெளியிடுவதற்கு இறைவன் வாய்ப்பளித்திருக்கிறான்.

Koviloor Digital Library

திரு. பழனியப்பன் அவர்களின் அயராத உழைப்பாலும், விடாத முயற்சியாலும் தான் நாங்கள் இந்தப்பதிப்பை வெளிக்கொணர முடிந்தது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

எஞ்சிய சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் முதலிய பகுதிகளையும் விரைவிலேயே எழுதித் தந்தால், அவற்றையும் வெளியிட நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்பதையும் இதன் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறோம். அதற்கு இறைவன் திருவருளும், குருவருளும் அவர்க்கும் எங்களுக்கும் துணை புரிய வேண்டிக்கொண்டு தமிழ்மக்களுக்கு இந்த எளிய, சிறந்த உரையை வெளியிடுகிறோம். மிக்க மகிழ்ச்சி மிக்க நன்றி.

- சாந்தமங்கை பதிப்பகத்தார்

Koviloor Digital Library

முன்னுரை

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா,
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே.

உலகம் யாவையும் பரந்து புகழ்ந்து பேசப்பட்டு வரும் ஒரு நூல் இராமாயணம்; இதனை 'ஆதிகாவியம்' எனவும், இந்நூலை ஆக்கிய வான்மீகி முனிவர் 'ஆதிகவி' என்றும் அழைக்கப்படுகிறார்.

இதன்பின்னர் இந்த வரலாறு உலகில் - இந்தியாவில் - எல்லா இடங்களிலும் பக்தியினை வெளிப்படுத்துகின்ற நூல்களாகப் பெரும் அளவில் கையாளப்பட்டிருக்கின்றன.

வடமொழியைத்தவிர இருபதுக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலும் இந்தி, அஸ்ஸாம், வங்காளம் ஒரிஸ்ஸா, மராட்டி முதலிய மொழிகளிலும் இராமகாதை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உள்ள சங்ககாலப் பாடல்களான அகநானூறு, புறநானூறு போன்ற இலக்கியங்களில் ராமாயண நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இதனைத் தொடர்ந்து வந்த சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற ஐம்பெருங்காவியங்களிலும், 6-7ம் நூற்றாண்டில் இயங்கி வந்த பக்தி இலக்கியங்களான நாயன்மார்களின் திருமுறைகளிலும், ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங் களிலும், ஏனைய இறைவழிபாட்டு நூல்களிலும் இராமகாதை, பெருமளவில் பேசப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

கம்பனின் இராமாவதாரம் :

பின்னர் தோன்றிய கவிச்சக்ரவர்த்தி கம்பன் வான்மீகியின் ஆதிகாவிய மாகிய இராமாயணத்தைத் தமிழில் வழி நூலாக ஆக்கித் தந்திருக்கிறான். கம்பன் தன்னுடைய வழி நூலுக்கு 'இராமாவதாரம்'என்றே பெயர் சூட்டியிருக்கிறான். கம்பனது கவித்திறனையும், ஆழ்ந்த ராமபக்தியையும் உணர்ந்து, தமிழ் மக்கள் அதனைக் 'கம்ப இராமாயணம்' என்றே போற்றி

Koviloor Digital Library

புகழ்ந்து பாராட்டி வந்திருக்கின்றனர். இன்றும் 'இராமாவதாரம்' என்ற பெயரைக் காட்டிலும் 'கம்ப இராமாயணம்' வழக்கில் இருந்து வருகிறது.

கம்பன் தனது பெருநூலுக்கு வான்மீகியைக் கருவாகக் கொண்டு பாடினானே அன்றி வேறன்று. கம்பன் கூறும் கதையும், கதை நிகழ்ச்சியும், கதாபாத்திரங்களும், பிறவும் எல்லாம் அவனது உள்ளத்தின் அடித்தளத்தினின்றும் உதயமானவையே. தான் வாழ்ந்த காலத்திற்கேற்ப ஒரு புது சிருஷ்டியாகவே தனது பெருங்காப்பியத்தை கம்பன் ஆக்கித் தமிழ் உலகிற்குத் தந்துள்ளான். கம்ப இராமாயணம் வெறும் நீதி நூலன்று.

கம்பராமாயண மூலமும் உரையும் :

கி.பி. 1840ல் திரு. வெங்கடாசல முதலியார் அவர்களாலும், 100 ஆண்டுகளுக்குப் பின்னர் 1924ல் மதுரை கோபால கிருஷ்ணக் கோன் கம்பெனியாராலும், மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 1957-58ல் சென்னை மர்ரே அண்ட் கம்பெனி, ராஜம் அவர்களாலும், 1976ல் சென்னை கம்பன் கழகத்தாராலும் மூலம் மட்டும் வெளிவந்திருக்கின்றன. கற்றறிந்த சான்றோர்களுக்கு மட்டுமே மூலப் பாடல்கள் பயனளிக்கும். இந்த இரண்டு பதிப்புக்களிலும் இடைச் செருகல் என்று கருதப்பட்ட - வெள்ளியம்பலத்தம்பிரான் - வாணிதாதன் முதலானோர் இயற்றி அமைக்கப்பட்டன என்று கருதப்பட்ட, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் மிகைப்பாடல்கள் என்று தலைப் பிட்டு அந்தந்தப் படலங்களின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரு பதிப்புகளையும் முறையே கம்பனடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் தலைமையிலும், நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையிலும் அமைந்த இரு பதிப்பாசிரியர்கள் குழுக்கள் செப்ப னிட்டுத் திருத்தி வெளியிட்டிருக்கின்றன. விபரங்கள் அருகில் உள்ள அட்டவணையில் தரப்பட்டிருக்கின்றன.

பொதுவாகத் தமிழ் இலக்கியத்தில், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், திருக்குறள், திருமுருகாற்றுப்படை போன்ற பெருங் காப்பியங்களுக்கு உரைகள் வரையப்பட்டுள்ளன. அதுபோன்றே தமிழில் மற்றொரு இலக்கியமான கம்பராமாயணத்திற்கும் பல உரைகள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. நமக்குத் தெரிந் திருக்கும் கம்பராமாயண முழு உரை அதாவது 6 காண்டங்களுக்கு மான முழு உரை திரு. வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவர்களால் 1929-ம் ஆண்டுமுதல் பதிப்பிக்கப் பட்டு 7-8 பதிப்புக்கள் 1967 வரை வெளிவந்திருக்கின்றன. ஆயினும் இவற்றில் எவையும் இன்று கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ, அரசு நூலகங்களிலோ கிடைக்கப் பெறுவதில்லை. இதனைத் தொடர்ந்து 1956-57ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சென்னை திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகமும் தனித்தனியே உரை எழுதி வெளியிட்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டுக்கு ஒரு காண்டம் என்ற

Koviloor Digital Library

கணக்குப்படி 1972 வரை முறையே 16 தொகுதிகளாகவும், 8 தொகுதிகளாகவும் வெளியிட்டு இருக்கின்றனர். இரண்டு பதிப்புக்களுக்கும் அரசு மானியமும், சில அறக்கட்டளைகளும் உதவி செய்து இருக்கின்றன. என்றாலும் இவற்றில் எதுவும் இரண்டாவது பதிப்பாக வெளிவரவில்லை. முதற்பதிப்பு இப்பொழுது கிடைப்பது மிக அரிதாக இருக்கின்றது.

இதனை நன்கு உணர்ந்த கோவை கம்பன் அறநிலை, சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின் 1992 முதல் 1998 வரை 6 ஆண்டுகளில், எட்டுத் தொகுதிகளாக பேராசிரியர் திரு. அ.ச. ஞானசம்பந்தம் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டும், 15 உரை ஆசிரியர்களைக் கொண்டும் ஒரு உரை வெளியிட்டிருக்கிறது. இது மிகக் குறைந்த அளவில் பிரதிகள் வெளியிட்டதனாலும், அன்பளிப்புப் பிரதிகளாக அதிகம் கொடுபட்டு விட்டதாலும் இந்தப் பிரதிகளும் இப்பொழுது எங்கும் கிடைப்பதில்லை. இவற்றைத்தவிர வர்த்தமானன் பதிப்பகமும், திருமகள் நிலையமும், ஏறத்தாழ ஒரே நேரத்தில் 1997-1999ல் உரைகள் வெளியிட்டிருக்கின்றனர். திருமகள் நிலையத்தார் திரு. நாராயண வேலுப்பிள்ளை முதலிய 3 ஆசிரியர்களைக் கொண்டு வெளியிட்டுள்ள விளக்கவுரை பெரும் பாலோருக்குப் பயன்படும் முறையில் வெளியிடப் பட்டிருக்கிறது.

எனக்குள் எழுந்த ஆர்வம்:

இந்த நிலையில்தான் எனக்குள் ஒரு அடங்காத ஆசை - கம்பனை முழுதும் படிக்கவேண்டும் என்ற ஆசை - எழுந்தது. இது தெய்வ சங்கல்பம் என்றே எண்ணுகிறேன். நான் பணியாற்றும் வங்கியின் நாமக்கல் கிளைக்கு 1995ல் மாற்றப்பட்டேன். நாமக்கல் என்ற உடனேயே எல்லோருக்கும் 18 அடி ஆஞ்சநேயர் திருவுருவ ஆலயம் தான் நினைவுக்கு வரும். நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்றுவரும் போது என்னுள் இந்த மிகப்பெரிய ஆசை வித்தூன்றிச் செழித்து வளர்ந்தது. நண்பர் வ.சுப.மா. தொல்காப்பியன் அவர்கள் சென்னை கம்பன் கழகம் (1976) பதிப்பு - கம்பராமாயணம் மூலம் மட்டும் தந்து உதவி, ஊக்கம் அளித்தார்கள். நான் நாமக்கல்லில் இருந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு மூன்றுமுறை திருப்பித் திருப்பி மூலத்தை மட்டுமே, நேரம் கிடைக்கும்போதெல்லாம் படித்து வரலானேன். சில பாடல்கள் புதியதாகவே இருந்துவந்தன. அதற்கு ஒரு குரு - ஆசிரியன் தேவைப்பட்டான். அது அங்கே கிடைப்பது அரிதாக இருந்தது. எனவே இதற்குரிய உரைகளைத் தேடும் பணியில் ஈடுபட்டேன். கம்பன், கம்பராமாயணம் தொடர்புள்ள நூல்கள் எங்கெங்கே கிடைக்கின்றனவோ அவற்றையெல்லாம் வாங்க ஆரம்பித்தேன். முதலில் வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரி அவர்கள் உரையைப் பார்க்கலானேன். அவர்களது தமிழ் மிக உயரிய, வடமொழி கலந்த தமிழாக இருந்தது. அது

Koviloor Digital Library

எனக்குச் சரியாக அமையவில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது எனக்குக் கோவைக்கு மாற்றலாகியது. கோவை அரசு நூலகம் மிக அருமையாகப் பணியாற்றுகிறது. பணியாளர்கள் மிக அன்புடன் வருபவர்களுக்கு உதவி செய்கிறார்கள். அங்கே எனக்கு, சென்னை பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட திரு. கோ. வில்வபதி அவர்களின் பாலகாண்ட உரை மட்டிலும் கிடைத்தது. இப்போதைக்கு இதுவே போதும் என்று அதைப் படித்துக் குறிப்பு எடுக்கலானேன். இரண்டு முறை படித்திருப்பேன் - ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. அதற்குள் எனக்கு மீண்டும் சென்னைக்கு மாற்றலாகி விட்டது. சென்னையில் ஒரு நூல் நிலையத்திலும் கம்பனது உரையே கிடைக்கவில்லை. ஒரு இரண்டு மாதம் இந்தத் துறையில் கருத்தைச் செலுத்தாது இருக்க நேரிட்டது.

1998ம் ஆண்டு ஜூன் 24ம் நாள் சென்னையை அடுத்த திருமுல்லை வாயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவியின் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ளநூல்நிலையத்தைப் பார்த்தேன். என்னஆச்சர்யம்! அங்கு இதுவரை வெளிவந்துள்ள கம்பராமாயண உரைகள் அனைத்தும் - வை.மு.கோ. உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக உரை, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலைய உரை - எல்லாம் இருக்கக் கண்டேன். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு எப்படிச் செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். பிறகு வைஷ்ணவி ஆலய நிர்வாகத்தாரை அணுகினேன். எனக்கு 6 மாதத்திற்கு நூல் நிலையப் புத்தகங்களைஎடுத்துப் படிப்பதற்கு அனுமதிப்பதோடு அங்கேயே தங்கும் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அங்கே அந்த வசதி இருப்பதால் உடனேயே எனக்கு அனுமதி அளித்தது மட்டுமின்றி உணவுக்கும் ஏற்பாடு செய்து தந்தார்கள். அவர்களுடைய அன்பும், கருணையும், தாராள மனப்பான்மையும் என்றும் என்னால் மறக்க ஒண்ணாதது. பிறகு விரைவாகப் படிக்க ஆரம்பித்தேன். குறிப்புக்கள் எடுக்க முனைந்தேன்.

கம்பனைப் படிக்க படிக்க - உரைகளுடன் பொருள் உணர்ந்து படிக்க - சான்றோர்களின் பலவகையான கருத்துக்களையும் படிக்கப்படிக்க எனக்குள் ஒரு தன்னம்பிக்கையும், மன தைரியமும் வளர்ந்து விட்டன. ஒவ்வொரு உரையையும் பலமுறை படித்தேன். தொட்டுவிடத் தொட்டு விடத் தொடருகின்ற காதல் எனக்குக் கம்பனிடம் உண்டாகியது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போலப் படிக்கப் படிக்கப் பொருள்கள் தெரிய வரலாயின. புணரும் தோறும் போகம், பின்னும் புதிதாய் வளர்கின்றது என்று திருக்கோவையார் சொல்லியது போல, மனம் கம்பனில் முழுக்கத் தோய்ந்தது.

இது கம்பன் பாடல்களுக்கு விளக்கவுரை. முதலில் பாடல்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் சந்தி பிரித்துத் தரப்பட்டிருக்கிறது,

Koviloor Digital Library

பின்னர் பாடலில் பயின்று வந்திருக்கின்ற அருஞ்சொற்களுக்கு எல்லோருக்கும் புரிவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன, பின்னர் பாடலுக்குரிய பொழிப்புரை தரப்பட்டிருக்கிறது, அதன் பின்னர் அப்பாடலில் உள்ள சொற்களின் சிறப்பு நயம் விளக்கப்பட்டிருக்கிறது, ஆங்காங்கே தொடர்புடைய மேற்கோள்களும் தரப் பெற்றிருக்கின்றன, என்னுடைய நோக்கமே. இது மிக எளிதாக எல்லோருக்கும் புரியவேண்டும் என்பதே, கம்பன் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் சொந்தமானவனல்லன், அவனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில். வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் புரியவைத்திருக்கிறேன், இன்றைய இளம் தலைமுறை யினருக்கும். மாணவ. மாணவியர்க்கும் இது பெரிதும் உதவும் என நம்புகிறேன்,

உற்றுழி உதவியோர்:

இக்காப்பியத்தைக் கம்பன் எழுதுவதற்குக் காரணமாயிருந்த சடையப்ப வள்ளலைப் போல, இந்த உரையை நான் எழுதுவதற்கு முழுமுதற் காரணமாக இருந்து, உள்ளத்தாலும், பொருளாலும் பேருதவி புரிந்தவரும் ஒரு இராமர்தான். வெற்றி பொருந்திய இராமர் - ஜெயராமர் (Jai Expo) இவர் எடுத்த காரியங்கள் அனைத்தும் தடையின்றி நிறைவேறும். தொடுத்த செயல்கள் அனைத்தும் துலங்கும். இராமாயணம் படிப் போரையும், கேட்போரையும் அவர்களது இருபத்தி ஒரு தலைமுறையினர் வாழ்த்துவர் என்று சான்றோர் கூறுவர். அத்தகைய பெரும் பயனை எனக்கு அளித்த அரிமா. திரு.**B.ஜெயராமன்** அவர்களுக்கும், அவர் தம் குடும்பத் தாருக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன். அவர்கள் அலுவலகத் தில் உள்ள நண்பர்களுக்கும் நன்றி. அச்சுப் படிகளைக் கூர்ந்து நோக்கித் திருத்தி உதவிய பேராசிரியர் **திரு.ந.சுப்புரெட்டியார்** அவர்களுக்கு எவ்வளவு முறை நன்றி சொல்வது என்று புலப்படாமல் தவிக்கிறேன்.

என்னுடைய கையெழுத்தையும் படித்துப் புரிந்துகொண்டு கணினியில் தட்டச்சு செய்து தந்த செல்வி பவானிக்கும், திருமதி. சித்ரா பத்மனாபனுக்கும், இதனைப் புத்தக வடிவில் ஆக்கித்தந்த சிவா கிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும், என் உள்ளத்தில் கருவாகி உருவாகிய காட்சியை நான் விளக்கியபோது, அதனைத் தன் உள்ளத்தில் வாங்கிக் கொண்டு, அதற்கு ஓவிய வடிவு கொடுத்த அட்டைப்பட ஓவியர் திரு.ஷ்யாம் அவர் களுக்கும், இதனை ஆர்வமுடன் பதிப்பித்து வெளியிட்ட சாந்தமங்கை பதிப்பகத்தார்க்கும் என் நன்றி.

நான் நான்கு ஆண்டுகளுக்கு முன் முதன்முதலில் இந்த உரை எழுத வேண்டும் என்ற ஆர்வத்தைக் கூறியபோது, ''நன்றாகப் போடலாம்'', எழுதிக் கொண்டு வாருங்கள் என்று கூறி என்னை ஊக்குவித்து, இந்நூல் இன்று வெளிவரும் வரை தொடர்ந்து எனக்கு உதவி செய்து, என்னையும்

Koviloor Digital Library

ஒரு நூலாசிரியன் ஆக்கிய பெருமை திருமகள் நிலையத்தாரையே சேரும். அவர்களுக்கு என் சிரந்தாழ்ந்த நன்றி உரியதாகும்.

புத்தகப் பிரதிகளைக் கூர்ந்து படித்து அணிந்துரை வழங்கிய முனைவர் பேராசிரியர் திரு.தெ.ஞானசுந்தரம் அவர்களுக்கும், திரு. சிலம்பொலி செல்லப்பன் அவர்களுக்கும், நுட்பமாகப் படித்து நிறை குறைகளை எடுத்து ஆய்வுரை மூலம் கூறி எனக்கு ஊக்கமளித்த நண்பர் திரு.வ.சுப.மா.தொல்காப்பியன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் முனைவர் திரு.ஆறு.அழகப்பன் அவர்களுக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன்.

இத்தகைய ஒரு பெருங்காப்பியத்திற்குத், தனிஒருவனாகவே, ஏனைய உரை நூல்களில் ஆழங்கால்பட்டு, இவ்வுரையினை எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருவருளால் எழுத முயன்றிருக்கிறேன். இதில் குற்றம், குறைகள் இருக்கக் கூடும். இது என் முதல் முயற்சி. குற்றங்களை அன்பு கூர்ந்து சுட்டிக்காட்டி ஊக்குவித்தால், மிக்க நன்றி உடையவனாய் இருப்பேன்.

குற்றம் களைந்து, குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனன்றோ!

3, வாசுகி தெரு, கிருஷ்ணா புரம்,
அம்பத்தூர், சென்னை-600 053.
செல்: 9840868543

அன்பன்
பள்ளத்தூர் பழ.பழநியப்பன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

அயோத்தியா காண்டம்

தசரதனது தலைநகரான அயோத்தியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறும் காண்டம் என விரியும். காண்டம் என்பது ஒரு நூலின் பெரும்பிரிவு என்று பொருள்படும். இக்காண்டம், இராமாயணத்தின் பின்விளைவுகளுக் கெல்லாம் வித்தாக அமைந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு விளங்குவது. எழுதாக்கிளவியான வேதங்களில் கூறியுள்ளவைகளுக்கு விளக்கங்கள் தான் இராமாயணமும் மகாபாரதமும் என்று சான்றோர் கூறுவர். இராமாயணம் காலத்தால் மகாபாரதத்திற்கு முந்தியது. இதில் சங்க நூல் கருத்துக்களும், ஆழ்வார்களின் / நாயன்மார்களின் திவ்விய பிரபந்தங்கள், தேவாரம், திருவாசகம், திருக்கோவையார் ஆகிய பக்தி நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூடாமணி, பெருங்கதை போன்ற காப்பியங்கள் ஆகியவற்றில் காணப்படும் சொற்றொடர்கள், பொருள்கள், கருத்துக்கள் முதலியன மிகச் சுவையாகக் கையாளப் பட்டிருக்கின்றன. இது மந்திரப்படலம் முதல் கிளைகண்டு நீங்கு படலம் வரை பன்னிரண்டு படலங்கள் கொண்டது. மொத்தப் பாடல்கள் 1210. இந்தக் காண்டத்தில் பங்குபெறும் பாத்திரங்கள் மிகக்குறைவே. தசரதன், கைகேயி, கூனி, பரதன், குகன் என்ற ஐந்து பெரும் பாத்திரங்கள் மட்டுமே பேசப்படுகின்றனர்.

வான்மீகத்துள் இக்காண்டத்துள் கூறப்பட்டுள்ள 'கன்யா கல்கம்' என்ற செய்தியைக் கம்பன் முற்றிலும் ஒதுக்கியிருக்கிறான். தசரதன் மக்கள் நால்வர் எனினும் அவன் இராமனிடத்தேதான் பெரும்பாசம் கொண்டிருந் தான் என்பதும், இராமனுக்கு முடிசூட்டுவதற்கு முன்னால் பரதனை மட்டும்அவன்பாட்டன்வீட்டிற்கு அனுப்பிவிடுகிறான்என்பதும்போன்ற சில மாறுபட்ட கருத்துக்கள் இக்காண்டத்துள்தான் பேசப்படுகின்றன.

1. மந்திரப்படலம் (96 பாடல்கள்)

மந்திரம் என்பது ஆலோசனை எனப் பொருள்படும். தசரதன் தன் தவப்புதல்வனாகிய இராமனுக்கு முடிசூட்டக் கருதி, வசிட்டன், சுமந்திரன் ஆகியவரோடு ஆலோசனை செய்ததை விரிவாகக் கூறும் படலம். இது 96 பாடல்களைக் கொண்டது. இப்படலத்துள் தசரதன் ஆலோசனை மண்டபத்தை அடைதல், சபையில் இருந்தவரைப் போக்கி, மந்திரக்கிழவரை வரவழைத்தல், வசிட்ட முனிவன், மந்திரக்கிழவர்

Koviloor Digital Library

அமர்தல், தசரதன் தன் உள்ளக் கருத்தை வெளியிடுதல், அவர்களின் மனநிலை, வசிட்டனும் மற்றவர்களும் உடன்படுதல், சுமந்திரன் எல்லோர் கருத்தையும் எடுத்து உரைத்தல், இராமனை அழைத்துவரச் சுமந்திரன் செல்லுதல், சுமந்திரனுடன் இராமன் தேரில் புறப்பட்டு வருதல், இராமன் தேரில் வரும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள், தம்பி இலக்குவனும் உடன்வருதல், இராமன் தந்தையையும் முனிவனையும் வணங்க, தந்தை ஆரத் தழுவுதல், தசரதன் தன் கருத்தை இராமனுக்குத் தெரிவித்தல், இராமன் தந்தை ஏவியதே கடமை என அவன் கட்டளைக்கு இசைதல், தசரதனும், இராமனும் தத்தம் அரண்மனை சேர்தல், பின்னர் அரசர்களுக்கு ஓலை போக்கி, அவர்கள் கருத்தை அறிந்து இசைவும் பெறுதல், மன்னர்களை அரசன் மீண்டும் வினவி உறுதிப்படுத்திக் கொள்ளுதல், நாள் குறித்தற்காகத் தசரதன் மற்றொரு மண்டபம் போதல், நான்கு மங்கையர் கோசலைக்குச் செய்தி சொல்லப் போதல், அவர்கள் கூறுயதும் கோசலையின் மனநிலை, கோசலை வெகுமதியளித்தல், சுமித்திரையுடன் திருமால் கோவிலுக்குச் செல்லுதல், தவசியர்க்கும் ஏனையோர்க்கும் தானம் செய்தல் முதலிய செய்திகளும் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

கடவுள் வாழ்த்து

வான்நின்று இழிந்து வரம்பு இகந்த, மாபூதத்தின் வைப்பு எங்கும்
ஊனும் உயிரும் உணர்வும் போல், உள்ளும் புறனும் உளன்என்ப;
கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக், கோல்துறந்து
கானும் கடலும் கடந்து, இமையோர் இடுக்கண் தீர்த்த கழல் வேந்தை (1402)

(இழைத்தல்-செய்தல்; கோல்-செங்கோல் அரசாட்சி; இடுக் கண்-துன்பம்; இழிந்து-இறங்கி வந்து; ஊன்-உடம்பு; என்ப-என்பர் மேலோர்; வைப்பு-கலப்பு; கூன்-மந்தரை; சிறிய கோத்தாய்- இளைய பட்டத்தரசியான தாய் கைகேயி; இமையோர்-தேவர்கள்)

கூனியாகிய மந்தரையும், இளைய பட்டத்தரசியும் தாயுமான கைகேயியும் தனக்குக் கொடுமைகள் செய்ய, தனது செங்கோல் செலுத்தும் அரசாட்சியைத் தானே துறந்து, காடும், கடலும் கடந்து இலங்கை சென்று அரக்கர்களைக் கொன்று, தேவர்களின் துன்பத்தைப் போக்கிய வீரக்கழல் அணிந்த வேந்தனாகிய இராமபிரானை, ஐம்பூதங்களில் முதலில் தோன்றியதான வானிலிருந்து-வைகுந்தத்திலிருந்து இறங்கி வந்து, அளவு கடந்த பெருமை பெற்று விளங்கும் ஐம்பூதங்களாகிய வான், மண், நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றால் ஆகிய இந்த உலகம் எங்கும் உடம்பாகவும், உடம்புக்குள்ளே நிலைக்கும் உயிராகவும், உயிருக்குள்ளே நிலைக்கும் உணர்வாகவும், உள்ளீடாக மறைந்தும், புறத்தே வெளித்தோன்றியும் எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் என்று சான்றோர் கூறுவர்.

Koviloor Digital Library

வான் முதலில் தோன்ற, அதிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து மண்ணும் முறையே தோன்றின என்பது நூற்கொள்கை. இவ்வுலகப் பொருள்கள் எல்லாம் ஐம்பூதங்களின் கலப்பினால் ஆனது என்பதாம். 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்பது தொல்காப்பியம். உலகமெங்கும் நிறைந்திருக்கின்ற பரம்பொருளே, இராமனாக அவதாரம் எடுத்து, கானும், கடலும் கடந்து, இமையோர் இடுக்கண் தீர்த்தான் என்பது கருத்து. இராம அவதாரத்தின் ரகசியமும், இராமாயணத்தின் கதைச் சுருக்கமுமே இப்பாடலில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. உடலில் உயிரும் உணர்வும் பரந்து இருத்தல், ஐம்பூதங்களிலும் பரம்பொருள் கலந்திருக்கின்றன என்பதைக் குறிப்பதாகும். 'வானாகி, மண்ணாகி வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உண்மையுமாய், இன்மையுமாய்க், கோனாகி, யான், எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி நின்றாயை, என் சொல்லி வாழ்த்துவனே?' என்பது திருவாசகம். 'திடவிசும்பு எரிவளி நீர் நிலம் இவைமிசை படல்பொருள் முழுவதுமாய் அவையவைதொறும் உடல் மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்', என்பது திருவாய்மொழி.

1. தசரதன் மந்திராலோசனை மண்டபம் அடைதல்

மண்உறும் முரசினம் மழையின் ஆர்ப்பு உறப்
பண்உறு படர் சினப் பரும யானையான்
கண்உறு கவரியின் கற்றை சுற்றுற
எண்உறு சூழ்ச்சியின் இருக்கை எய்தினான். (1403)

(பண்உறு-அலங்கரிக்கப்பட்ட; படர்சினம்-மிக்க கோபம்; பருமம்-தவிசு-கழுத்துமெத்தை/கலணை; மண்-மார்ச்சனை; மழை-மேகம்; உறு-பொருந்த; கற்றை-தொகுதி/சாமரை; எண்-மதிப்பற்ற/எண்ணுதல்; சூழ்ச்சி-ஆராய்தல்; இருக்கை-மந்திராலோசனை மண்டபம்; கண்உறு-காண்பதற்குத் தகுதி வாய்ந்த)

அலங்கரிக்கப் பட்டதும், பெருகிய கோபத்தை உடையதும், அரசர் இருத்தற்கான கழுத்துமெத்தையாகிய தவிசை உடையதுமான யானைப் படைகளை உடைய தசரதச் சக்கரவர்த்தி, மார்ச்சனை பூசப்பட்ட பேரிகைகள் இடி முழக்கத்தைப் போல முழங்கவும், காண்பதற்கு உகந்த அழகுமிக்க கவரிமானின் வால் மயிற்றால் அமைக்கப்பெற்ற வெண் சாமரைத் தொகுதிகள் இருபக்கமும் சூழ்ந்து வரவும், மதிப்பு மிக்க ஆராய்ச்சி செய்யும் மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தான்.

இங்கே ஒரு நயம். ஆலோசனை செய்யச் செல்ல வேண்டிய மன்னனை ஏன் யானைக்கு உவமிக்கிறான் கம்பன்? யானை படர் சினம் உடையது என்றாலும் பண் உறுதலும் உடையது என்றால், யானை மிக்கக் கோபம் உடையது என்றாலும், யாழினின்று எழுகின்ற ஓசை கேட்டுப் படர் சினம்

Koviloor Digital Library

தணிந்து, பாகர் சொல் வழி கேட்டு நிற்கும் இயல்பானது என்பதைக் கூறித் தசரதனும், தானே தன் மூத்த மகனுக்கு முடிசூட்டும் தகுதியும் ஆணையும், ஆற்றலும் உடையவன் என்றாலும், அமைச்சர்களோடு ஆராய்ந்து முடிவெடுத்து, அவர்கள் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டு நடப்பவன் தசரதன் என்பதை உணர்த்தவே இங்கே, மண்உறு படர்சினப்பரும யானையான் என்று அடைமொழி கொடுத்தான் என்பது சாலப்பொருந்தும்.

இங்கே இன்னும் ஒரு விளக்கம். பால காண்டத்தின் முடிவில், பரசுராமனை வென்று அயோத்தி வந்து எல்லோரும் இனிது இருந்தனர். பரதனைப் பாட்டன் வீட்டிற்கு அனுப்பினான் தசரதன் என்று கூறி முடித்தபின், இங்கே மந்திரிகளைக் கூட்டி மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தான் என்று கூறுகிறானே? ஏதோ ஒன்று விட்டுப்போனது போல் தெரிகின்றதே? ஏன் இராமனுக்கு முடிசூட்ட விரும்பினான் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லையே? சில சுவடிகளில் இதற்கு முன் இரண்டு பாடல்கள் கிடைக்கின்றன. ஆனால் அவை எல்லாப் பதிப்புக்களிலும் மிகைப்பாடல்களாகவே குறிக்கப்பெற்றிருக்கின்றன. அவ்விரண்டு பாடல்களும் தசரதனது உள்ளக் கருத்துக்குக் காரணமாக அமைவதனால் அவ்விரண்டு பாடல்களையும் இங்கே தருவது சரியெனப்படுகிறது. பாடல்கள் இவை.

'மன்னனே! அவனியை மகனுக்கு ஈந்து நீ
பன்னரும் தவம் புரி பருவம் இது' எனக்
கன்ன மூலத்தினில் கழற வந்தென
மின்னெனக் கருமை போய் வெளுத்தது ஓர் மயிர்;

தீங்கிழை இராவணன் செய்த தீமைதான்
ஆங்கொரு நரையதாய் அணுகிற்றாம் எனப்
பாங்கில் வந்திடும் நரை படிமக் கண்ணாடி
ஆங்கதிற் கண்டனன் அவனி காவலன்.'

இவை வான்மீகத்தில் கூறப்படவில்லை; கம்பனாலும் பாடப்பட வில்லை. இரகுவம்ச சுலோகத்தினின்றும் எடுத்துப் பின்னால் செருகப் பட்டவை என்றும் கூறுவர். என்றாலும் கதைத் தொடர்புக்குப் பயன்படும் என்று இங்கு தரப்பட்டது. வான்மீகத்தில், தசரதன் இந்த முடிவிற்கு வந்ததற்குக் காரணம் தான் கண்ட தீக்கனாக்களும், உற்பாதங்களுமே என்று கூறப்பட்டிருக்கிறது. கம்பன் இது பற்றி ஒன்றும் கூறியதாகத் தெரியவில்லை. தசரதன் தான் வயது முதிர்ந்த நிலை அடைந்து விட்டதை உணர்ந்ததும், தன் மூத்த மைந்தனுக்கு முடி சூட்ட விழைந்ததும், தான் தவம் செய்யப் போகத் தீர்மானித்ததும் ஆகிய முக்கியச் செய்திகள் இவ்விரண்டு பாடல்களிலும் தெரிவிக்கப்பட்டிருப்பதை மறுக்க இயலாது. 'காதோரம் நரை முடியொன்று கண்ணில் பட்டது; அது முதுமை தன் முதல் விதையை நட்டது' 'முடி நரைத்த பின் முடியைச் சுமப்பது

Koviloor Digital Library

முடியாத காரியம் என்று முடிவு செய்தான்' தசரதன். மனிதனுக்குத் தனது வருகையைத் தெரிவிக்க மரணம் அனுப்பும் முதல் கடிதம்தான் ''முதுமை'' என்பார் கவிஞர் வாலி.

2. தசரதன் தனித்து இருத்தல்

புக்கபின், 'நிருபரும் பொருஇல் சுற்றமும்
பக்கமும் பெயர்க' எனப் பரிவின் நீக்கினான்;
ஒக்கநின்று, உலகு தனித்து, யோகின் எய்திய
சக்கரத்தவன் எனத் தமியன் ஆயினான். (1404)

(பொருஇல்-ஒப்பற்ற; பக்கம்-பணியாளர்கள்/நண்பர்கள்; பரிவின்-அன்பினால்; யோகு-அறிதுயில்/யோகநித்திரை; தமியன்-தனித்தவன்; நிருபர்-அரசர்; பக்கம்-பக்ஷம் என்பதன் திரிபு / அன்பு)

தசரதன் மந்திராலோசனை மண்டபத்தில் புகுந்ததன்பின், 'அரசர்களும், ஒப்பற்ற சுற்றத்தாரும், அருகிலுள்ள பணியாளர்களும், அன்புடைய நண்பர்களும் இவ்விடம் விட்டு அகலுக' என்று அன்பினால் சொல்லி வெளியேற்றினான். இப்போது எல்லா உயிர்களிடத்தும் ஒத்த அன்புடையவனாய் இருந்து இவ்வுலகைக் காப்பாற்றுகின்ற, யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கிற, சக்கரத்தைக் கையில் ஏந்தியவனான திருமால் போன்று, தன்னந்தனியனாய் அமர்ந்திருந்தான்.

ஆலோசனைக்கு இயைபு இல்லாதவர் யாரும் ஆலோசனை மண்டபத்து, ஆலோசனை செய்யும் சமயத்தில் இருத்தல் கூடாது என்பது அரசியல் நூற்கொள்கை. கட்டளையால் கடிந்து நீக்காது, அன்பினால் நீக்கினான் என்றது கருதத்தக்கது.

3. மந்திரக் கிழவரை வரவழைத்தல்

சந்திரற்கு உவமைசெய் தரள வெண்குடை
அந்தரத்து அளவும் நின்று அளிக்கும் ஆணையான்,
இந்திரற்கு இமையவர் குருவை ஏய்ந்த, தன்
மந்திரக் கிழவரை 'வருக' என்று ஏவினான். (1405)

(தரளம்-முத்து; அந்தரம்-ஆகாயம்; அளிக்கும்-காத்தருளும்; இமையவர் குரு-வியாழபகவான்/பிருஹஸ்பதி; ஏய்ந்த-ஒத்த; மந்திரக்கிழவர்-அமைச்சர், புரோகிதர் முதலியோர்; ஏவினான்-கட்டளை யிட்டான்)

சந்திரனுக்கு உருவத்தாலும், ஒளியாலும், அழகாலும், தண்மையாலும் உவமை கூறத்தக்க முத்துக்கள் பதித்த வெண்கொற்றக் குடை விண்ணுலகளவும் சென்று காத்தருளுகின்ற ஆணைச் சக்கரத்தையும் உடைய தசரதன், இந்திரனுக்கும், தேவர்களுக்கும் குலகுருவான வியாழ பகவானை-பிருஹஸ்பதியை ஒத்த, தனது மந்திராலோசனைக் குழுவினரை 'வருக' என்று கட்டளையிட்டான்.

Koviloor Digital Library

தசரதன் ஆட்சி விண்ணுலகு வரை பரவியிருந்தது என்பது முன்பு சம்பராசுரனைத் தொலைத்து அமராவதியை இந்திரனுக்குத் திருப்பிக் கொடுத்த நிகழ்ச்சியை உட்கொண்டதாகும். தசரதனை இந்திரனுக்கு ஒப்பாகக் கவிஞன் பலவிடத்தும் கூறியிருப்பது கருதத்தக்கது. வியாழ பகவான் நீதி நூல் செய்த நெறியுடையவன், ஒழுக்கத்தில் சிறந்தவன் எனவே தசரதன் அமைச்சர்களுக்கு உவமையாகிறான்.

4. வசிட்டன் வந்து சேர்தல்

பூவரு பொலன்கழல் பொருஇல் மன்னவன்
காவலின் ஆணைசெய் கடவுளாம் எனத்
தேவரும் முனிவரும் உணரும் தேவர்கள்
மூவரின் நால்வராம் முனிவந்து எய்தினான். (1406)

(தேவர்கள் மூவர்-அயன், அரி, அரன்; முனி-வசிட்டன்; பூ-பூமி / பொலிவு; பொருஇல்-ஒப்பற்ற; காவல்-ஆட்சி)

பொலிவு பொருந்திய அழகுமிக்க பொன்னாலாகிய வீரக்கழல் அணிந்த ஒப்பற்ற அரசனாகிய தசரதனின் ஆட்சியில் அவனுக்குக் கட்டளையிடும் கடவுள் தன்மை பெற்றவர் என்று பிறரால் கருதப்படுபவனும், தேவர்களும், முனிவர்களும் உணர்தற்கரிய நான்முகன், திருமால், சிவபெருமான் என்ற மூன்று கடவுளர்களுக்கும் இணையாகச் சேர்த்துக் கூறப்படும் நான்காவது கடவுளானவனுமான வசிட்ட முனிவன் மந்திராலோசனை மண்டபத்தை வந்து அடைந்தான்.

தசரதன் ஆட்சியில் வசிட்டனைத் தவிர வேறுயாரும் அவனுக்குக் கட்டளை இடும் ஆற்றல் படைத்தவர் அல்லர் என்பது கருத்து. வசிட்டர் புரோகிதர், குலகுரு, அமைச்சர், பிரமரிஷி எனவே அவரது வருகை முதலில் கூறப்பட்டது. கடவுளரோடு இணைத்துக் கூறப்படும் தகுதிகள் படைத்தவர் வசிட்டர் என்று வசிட்டரின் ஏற்றம் புலப்படுத்தப்பட்டது.

5. அமைச்சர்களின் பண்பு நலன்கள் [5 பாடல்கள்]

குலம்முதல் தொன்மையும், கலையின் குப்பையும்
பலமுதல் கேள்வியும், பயனும் எய்தினார்
நலம் முதல் நலியினும் நடுவுநோக் குவார்
சலம் முதல் அறுத்து, அருந்தருமம் தாங்கினார். (1407)

(குலம்-குடிப்பிறப்பு; தொன்மை-பழமை; குப்பை-குவியல்; முதல்-அடியோடு; நலியினும்-அழிவதாயினும்; சலம்-கோபம்/வஞ்சகம்; அறுத்தல்-வேருடன் களைதல்; நலம்-நன்மைகள்; தாங்குதல்- மேற்கொண்டு ஒழுகுதல்/போற்றிக் காத்தல்; முதல்-முதன்மை/சிறப்பு/வேர்)

பழமையான முதன்மையான குடியில் பிறந்தவர்கள்; எல்லாக் கலைகளின் குவியல்களையும் கற்றவர்கள்; பல சிறப்பு மிக்க கேள்வி

Koviloor Digital Library

ஞானம் பெற்றவர்கள்; கல்வி கேள்வியினால் உண்டாய பயனைப் பெற்றவர்கள், தனக்கு வரும் நன்மைகள் அழிவதாயினும், நடுவு நிலையையே கொள்கையாகக் கொண்டவர்கள், கோபம் வஞ்சகம் முதலிய குற்றங்களை வேரோடு களைந்து, அரிய தருமத்தின் வழி மேற் கொண்டு ஒழுகுபவர்கள். அதனைப் பிறர் அழிக்காதவாறு காப்பாற்று பவர்களும் ஆகிய அமைச்சர்கள்.

தொடர்ச்சியாக ஆறுபாடல்களில் அமைச்சர்களின் குணநலன்களைக் கூறி, இறுதியில் 'மறிதிரைக் கடலென வந்து சுற்றினர்' என்று முடிவுபெறும். தசரதனுடைய அமைச்சர்கள் அறுபதினாயிரவர் என்பர். இது ஒரு பேரெண்ணைக் குறிக்கும் அளவு கோல் தான். நல்ல குடியில் பிறந்தார்க்கே, நல்ல பண்புகள் இயல்பாக அமையும் என்பது வள்ளுவன் வாக்கும் கூட; குப்பை என்ற சொல் அவர்கள் கற்ற கலைகள் அளவில என்பதைக் குறித்து நின்றது. செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் என்று கேள்வி ஞானத்தைக் குறித்து வள்ளுவர் கூறியதும் நினைவு கூரத்தகும். 'நலம் முதல் நலியினும் நடுவு நோக்குவார்' என்பது 'அடுக்கிய கோடி பெறினும் குடிப் பிறந்தார்' குன்றுவ செய்தல் இலர்' என்னும் குறளோடு (954) ஒப்பு நோக்கத்தக்கது. தொல்குடிப்பிறப்பு, கல்வி, கேள்விகளால் ஆனசிறப்பு, நடுவு நிலைமை, சினமின்மை ஆகியவை அமைச்சர்களுக்கு வேண்டிய முக்கியப் பண்பு நலன்கள் என்பதாம்.

6. உற்றது கொண்டு, மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்;
மற்று அது வினையின் வந்தது ஆயினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியர்; பிறப்பின் மேன்மைப் பெரியவர்; அரிய நூலும்
கற்றவர்; மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார். (1408)

(உற்றது-வந்து நேர்ந்த இடையூறு; கோளார்-கொள்கையுடையவர்கள் / அறிவுவன்மை உடையவர்கள்; பெற்றி-தன்மை; மாற்றல்-நீக்குதல்)

மன்னனுக்கோ தம் மன்னனின் ஆட்சிக்கோ வந்து நேர்ந்த இடையூற்றினை உணர்ந்து கொண்டு, அதன் பின்னரும் அதுபோல், நிகழும் இடையூறு ஏதேனும் வருமோ என்று முன்னரே ஊகித்தறிந்து கொள்ளும் அறிவு வன்மையும் கொள்கையும் உடையவர்கள்; அப்படியே அது முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனாக அமைந்தது ஆயினும் அதைத்தன் அறிவாற்றலால் நீக்கும் வல்லமைத் தன்மையைப் பெற்றவர்கள்; தம் குடிப்பிறப்பின் மேன்மையைக் காப்பாற்றும் பெருமை உடையவர்கள்; பிறர் அறிய முடியாத நூல்களையும் நுட்பமாகக் கசடறக் கற்றுத் தேர்ந்தவர்கள்; அவர்களின் மான உணர்ச்சி பற்றிப் பார்த்தால், கவரிமான் போன்ற குணத்தை உடையவர்கள்.

''மந்திரிக்கழகு வரும்பொருள் உரைத்தல்'' என்பது நறுந்தொகை; ''மாற்றல் ஆற்றும் பெற்றியர்'' என்பது, 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்தாழாது உஞற்றுபவர்' என்னும் குறளும், 'உற்ற நோய்நீக்கி,

Koviloor Digital Library

உறாமை முற்காக்கும் பெற்றியார்' என்ற குறளும் (442) இங்கு நோக்கத் தக்கன. மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம்வரின் என்ற குறளின் (969) கருத்து மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார் என்பதில் பெறப்பட்டது. மானமாவது எஞ்ஞான்றும் தன் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி, உயிர் வாழாமையுமாம். 'வான்மயிர் துடக்கில், தான் உயிர் வாழாப் பெருந்தகைக் கவரி' என்பது பெருங்கதை. அமைச்சர்களின் முன்னறியும் திறன்; தளராது முயலும் திட்பம், குடிப்பிறப்பு, கல்விச் சிறப்பு, மானமுடைமை முதலியன கூறப்பட்டன. 'மதி நுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன் நிற்பவை' என்பது குறள் (636).

7. காலமும், இடனும், ஏற்றகருவியும் தெரிந்து, கற்ற
நூல்உற நோக்கித் தெய்வம் நுனித்து, அறம்குறித்து, மேலோர்
சீலமும், புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெரிந்து கொண்டு,
பால்வரும் உறுதி யாவும் தலைவற்குப் பயக்கும் நீரார். (1409)

(நோக்கி-ஆராய்ந்து; நுனித்து-கூர்மையாக நோக்கி / தியானித்தல்; சீலம்-ஒழுக்கம்; அறம்-அறநூல் / அரச நீதி நூல்கள்; கருவி-சேனையும் பொருளும்; உறுதி-நற்பயன்கள்; பயத்தல்-நல்குதல் / தருதல் / அமையுமாறு செய்தல்; நீர்மை-தன்மை)

ஒரு செயலைச் செய்வதற்குரிய காலம், அதற்கு ஏற்ற இடம், அதற்கு உண்டான உபகரணங்கள் ஆகியவற்றை நன்கு தெரிந்து கொண்டவர்கள்; தாம் கற்றறிந்த அரச நீதி கூறும் அறநூல்களில் கூறியுள்ளவற்றை நன்கு உணர்ந்து கொண்டவர்கள்; தெய்வத்தைத் தியானித்து அனுகூலம் பெறுபவர்கள்; தருமத்தை விடாது கொள்கையாகப் போற்றுபவர்கள்; சான்றோர்களின் ஒழுக்கத்தையும், தான் இயற்றப் போகும் செயலால் உண்டாகும் புகழினையும் நன்கு தெரிந்திருப்பவர்கள்; அச்செய்கையினால் விளையும் பயன், புகழ் முதலிய நன்மைகள் யாவற்றையும் தன் தலைவனுக்கே-மன்னனுக்கே அர்ப்பணிக்கும் தியாகச் சிறப்புத் தன்மையுடையவர்கள்.

'கருவியும், காலமும், செய்கையும், செய்யும் கருவினையும் மாண்டது அமைச்சு' என்பதும் 'அருவினை என்ப உளவோ, கருவியால் காலம் அறிந்து செயின்' என்பதும் குறள் பாக்கள் (631 / 483) கருவிகள் என்பவை மூவகை ஆற்றல்களான அறிவு, ஆண்மை, பெருமையும், நால்வகை உபாயங்களானசாம, பேத, தான, தண்டம் என்பவையுமாம். உழைப்பைத் தமதாக்கி உறுதியை அரசனுக்கு ஆக்குகின்ற தியாகச் சிறப்புத் தன்மை குறிக்கப்பெற்றது.

8. தம் உயிர்க்கு உறுதி எண்ணார்; தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கி, நீதி விடாது நின்று உரைக்கும் வீரர்;
செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தார்; தெரியும் காலம்
மும்மையும் உணர வல்லார்; ஒருமையே மொழியும் நீரார். (1410)

Koviloor Digital Library

(திறம்பல்-மாறுபடுதல்; தேற்றம்-தெளிவு; ஒருமை-வாய்மை / மெய்ம்மை / ஒரேதன்மை; செம்மை-நேர்மை; உறுதி-நன்மை)

தம்முடைய உயிர்க்கு உறுதியும், நன்மையும் தேட எண்ணாதவர்கள்; தம் கருத்தைக் கேட்ட மன்னன் கோபித்து எழுந்த போதும், அதனுடைய வெப்பத்தைத் தாங்கிக் கொண்டு, தான் கூற வந்த நீதியை விடாது தொடர்ந்து நின்று உரைக்கும் வீரத் தன்மையுடையவர்கள்; நேர்மையான வழிகளில் மாறுபடாது-நெறி வழுவாது செல்லும் தெளிவு மிக்கவர்கள்; இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலங்களிலும் நிகழும் நிகழ்ச்சிகளை உணர வல்லவர்கள்; வாய்மையே பேசும் இயல்புடையவர்கள்.

மன்னன் கோபத்திற்கும் அஞ்சாது எதிர்த்து நின்று இடித்து அறம் கூறும் ஆற்றல் உடையவராதலின் வீரர் எனப்பட்டனர். ஒருமை என்பது மெய்ம்மையையே குறிக்கும் என்றாலும் ஒரே தன்மை என்றும் பொருள்படும். அமைச்சர் பலராயினும் மன்னனுக்கு நீதி உரைக்கும்போது தமக்குள் வேறுபாடின்றி ஒரு தன்மையாகவே உரைப்பவர் என்பதுவும், முன்னுக்குப்பின் முரணாகப் பேசாமல் தொடர்ந்து ஒரே கருத்தை வலியுறுத்துவதில் உறுதியாக நிற்பவர் என்பதுவுமாம். 'ஒரு தலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு' என்பது குறள் 434. 'இறுதிபயப்பினும், எஞ்சாது இறைவற்கு உறுதி பயப்பதாம் தூது ' என்னும் குறள் 690 அமைச்சர்க்கும் பொருந்துவதாகும்.

9. நல்லவும், தீயவும் நாடி நாயகற்கு
எல்லையில் மருத்துவன் இயல்பின் எண்ணுவார்;
ஒல்லை வந்து உறுவன உற்றபெற்றியில்
தொல்லை நல்வினை என உதவும் சூழ்ச்சியார். (1411)

(நாடி-ஆராய்ந்து பார்த்து; எல்லையில்-முடிவில்; பெற்றி-நிலை; ஒல்லை-விரைந்து; சூழ்ச்சி-ஆராய்ச்சி / ஆலோசனைத்திறம் / சிந்தனைத் திறம்; தொல்லை-பழமை)

மன்னனுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் நன்கு சிந்தித்துப் பார்த்து, முடிவில் ஒரு மருத்துவன் எப்படி நோயாளியின் விருப்பு வெறுப்புக்களைக் கருதாது அவன் உடல்நலம் ஒன்றையே கருத்தாகக் கொண்டு மருத்துவம் செய்கிறானோ அதுபோல எண்ணம் கொண்டவர்கள். மன்னனுக்கு விரைவில் வந்து சேரக்கூடிய தீமைகள் அனைத்தும் முற்பிறவியில் அவன் செய்த நல்வினைப்பயன் தானே வந்து உதவி நீக்குவதுபோல, சிந்தனைத்திறம் கொண்டு தீமைகளைப் போக்கும் இயல்பினராவார்.

'வாளால் அறுத்துச்சுடினும், மாளாத காதல் நோயாளன்போல' என்பது நாலடியார். நல்வினை உடையார்க்கு இடையூறு நேரினும், அவர் நல்வினைப்பயனால் அவ்விடையூறு நீங்கும் என்பது அறநூல் முடிவு.

Koviloor Digital Library

'மலைபோல் வருவது பனிபோல் நீங்கும்' என்பதும், 'தருமம் தலைகாக்கும்' என்பதும் பழமொழிகள். நல்வினை தானே சென்று இடையூறு களைவதைப்போல, அமைச்சர்களும் அரசன் கட்டளையை எதிர்நோக்காது தாமே சென்று உதவுவார் என்பது கருத்து.

10. அமைச்சர்கள் அனைவரும் வந்துசேர்தல்

அறுபதினாயிரர் எனினும், ஆண் தகைக்கு
உறுதியில் ஒன்று இவர்க்கு உணர்வு என்று உன்னலாம்
பெறல்அரும் சூழ்ச்சியர்; திருவின் பெட்பினர்;
மறிதிரைக் கடல்என வந்து சுற்றினார். (1412)

(திரு-செல்வம்; பெட்பு-விருப்பம் / நிறைவு; திரை-அலைகள்; சூழ்ச்சி-மந்திராலோசனை; மறி-மடங்கிவிழும்)

அமைச்சர்கள் எண்ணிக்கையில் அறுபதினாயிரம் பேர் என்றாலும் ஆண்களிற் சிறந்தவனாகிய தசரதனுக்கு நன்மை பயப்பதில் ஒரே எண்ணம் கொண்டவர்கள் என்று நினைக்கத்தக்க, பெறற்கரிய ஆலோசனை வயப்பட்டவர்கள். செல்வப்பெருக்குடையவர்கள் இவர்கள் மடங்கி விழும் அலைகளையுடைய கடல்போல நெருங்கி வந்து சூழ்ந்து கொண்டனர்.

அறுபதினாயிரம் என்பது ஒரு பேரெண்ணைக் குறிக்கும் குறி. மிகப்பலர் என்பதைக் குறிக்கும். கம்பன் தசரதனுக்கு 60000 மனைவியர் என்றும், 60000 மந்திரிகள் என்றும், அவன் அரசாட்சி செய்தது 60000 ஆண்டுகள் என்றும், சிவதனுசைத் தூக்கி வந்தவர்கள் 60000 வீரர்கள் என்றும் அங்கங்கே கூறிச் செல்லுகிறான். இதேபோல, பெருங்கதையிலும், 16000 அமைச்சர்கள் என்றும், 16000 தாயர், என்றும் கூறுவதும் நோக்கத்தக்கது. திருவின்பெட்பினர் என்பதற்கு இலக்குமி விரும்பி இருத்தற்கு இடமானவர் என்பது பொருள்.

11. அமைச்சர்கள் இருக்கைகளில் அமர்தல்

முறைமையின் எய்தினர், முந்தி அந்தம்இல்
அறிவனை வணங்கி, தம் அரசைக் கைதொழுது,
இறையிடை வரன்முறை ஏறி, ஏற்ற சொல்
துறை அறி பெருமையான் அருளும் சூடினார். (1413)

(முந்தி-முன்னர்; அந்தம்இல்-முடிவில்லாத; இறை-ஆசனம் / தவிசு; வரன்முறை-வரிசைப்படி; வணங்குதல்-நிலத்தில் வீழ்ந்து பணிதல்; கைதொழுதல்-நின்றவாறே தலை சாய்த்து கை கூப்புதல்; அருள்- அருள் நோக்கு; அந்தமில் அறிவன்-பிரம ஞானி / பேரறிவாளன்)

அமைச்சர்கள் அனைவரும் வரிசையாக வந்து மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தார்கள். முன்னதாக, முடிவில்லாத

Koviloor Digital Library

அறிஞனாகிய-பேரறிவாளனும் பிரம ஞானியுமாகிய வசிட்ட முனிவனை நிலத்தில் விழுந்து பணிந்து, பின்னர், தமது அரசனாகிய தசரதனைக் கை கூப்பித் தொழுது தத்தமக்கு உரிய இருக்கைகளில் முறையாக அமர்ந்து, காலம் இடம் கண்டறிந்து கேட்டார்ப்பிணிக்கும் சொல் வல்லானும் எல்லாத்துறைகளிலும் முற்றும் கற்றவனாகிய பெருமை உடையவனுமான தசரதனின் அருட்பார்வையும் பெற்றார்கள்.

12. தசரதன் தன் கருத்தை அவையினருக்குக் கூறுதல் [20 பாடல்கள்]

அன்னவன் அருள் அமைந்து இருந்த ஆண்டையின்
மன்னவன் அவர்முகம் மரபின் நோக்கினான்;
''உன்னியது அரும்பெறல் உறுதிஒன்று உளது;
என்உணர்வு அனையநீர் இனிது கேட்க' எனா. (1414)

(மரபின்-முறைப்படி; உன்னியது-நினைத்தது)

அவ்வாறு தசரத மன்னனின் அருட்பார்வையைப் பெற்று அவரவர்தம் இருக்கைகளில் அமைச்சர்கள் அமர்ந்தபொழுது, மன்னவன் அவர்கள் முகங்களை வரிசையாக உன்னிப்பாய்ப் பார்க்கலானான். பார்த்து, 'என் மனத்தில் எண்ணிய ஒரு நன்மை பயக்கும் அரிய செய்தி ஒன்று உள்ளது, அதனை என்னோடு ஒத்த கருத்துடைய அமைச்சர்களாகிய நீங்களும் நன்கு கேட்பீர்களாக' என்று கூறத்தொடங்கினான்.

இதுமுதல் இருபது பாடல்கள், கருத்து முடிவுறாமல் தொடர்ந்து இறுதியில் 31ம் செய்யுளில் இனைய கூறினான் என்பதனோடு முடியும். இது தொடர்செய்யுள். குளகம். 'குளகம் பல பாட்டு ஒருவினைகொள்ளும்' என்பது தண்டியலங்காரம். அரும்பெறல் உறுதி என்பது யாவராலும் பெறுதற்கரியதான ஒரு பெரு நன்மை. அதுதான் உறுதிப்பொருள்களுள் நான்காவதான வீடுபேறடைவதற்குத் துணையாகும் துறவு. என் உணர்வனைய நீர் என்பது என்னோடு ஒத்த கருத்துடைய அமைச்சர்கள் என்றும், என்னுடைய கருத்தையே எதிரொலிக்கும் மனப்பக்குவம் உடையவர்கள் என்றும் பொருள்படும். மன்னவன் கருத்தும், அமைச்சர்கள் கருத்தும் எப்போதும் ஒன்றிப் போவன என்பது விளக்கம்.

13. வெய்யவன் குலம் முதல் வேந்தர் மேலவர்
செய்கையின் ஒருமுறை திறம்பல் இன்றியே
வையம் என் புயத்திடை, நுங்கள் மாட்சியால்
ஐயிரண்டாயிரத்து ஆறு தாங்கினேன்; (1415)

(வெய்யவன்-சூரியன்; திறம்பல்-வழுவுதல் / மாறுபடல்; மாட்சி-பெருமை / மாண்பு; ஐயிரண்டாயிரத்து ஆறு-அறுபதினாயிரம்; முதல்-தலைமையுற்ற / முதன்மையான / முன்பு அரசாண்டிருந்த; தாங்குதல்-சுமத்தல் / ஆட்சி செய்தல்; செய்கை-ஒழுக்கம்)

Koviloor Digital Library

'அமைச்சர்களே! உங்களது துணையின் பெருமையாலும் பேருதவியாலும், சூரிய குலத்தோன்றல்களான என் முந்தையோர்களும், முதன்மையானவர்களுமான அரசர்களின் ஒழுக்க நெறியினின்றும் சிறிதும் மாறுபடாமல், இவ்வுலக பாரத்தை என் தோள்களிலே அறுபதினாயிரம் ஆண்டுகள் சுமந்து அரசாட்சி செய்து வந்திருக்கிறேன்.

அரசாட்சி பெரும்பாரமானது. எனவே, தோள்களில் தாங்குவதாக கூறுவது கவிமரபு.

14. கன்னியர்க்கு அமைவரும் கற்பின், மாநிலம்
தன்னை இத்தகை தரத் தருமம் கைதர
மன்னுயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்;
என்னுயிர்க்கு உறுவதும் செய்ய எண்ணினேன்; (1416)

(அமைவரும்-பொருந்தும்; தகை-சிறப்பு; கைதரல்-கைகொடுத்து உதவுதல்; மன்-நிலைபெற்ற; உறுவது-பொருந்தும் நன்மைகள்; வைகுதல்-கழித்தல் / தாங்குதல் / வாழ்தல்; உயிர்-ஆன்மா)

பெண்டிர்க்குப் பொருந்திய கற்பினை அவர்கள் எப்படிப் போற்றிக் காப்பாற்றிக் கொள்வார்களோ, அவ்வாறு இப்பெரிய பூமி முழுவதிலும் உள்ள நிலைபெற்ற உயிர்களுக்கெல்லாம் மிகுந்த சிறப்பு ஏற்படும்படி அறக்கடவுள் கைகொடுத்து உதவ, அவர்களுக்கு நன்மைபயப்பதாகிய செயல்களையே இதுகாறும் செய்து வாழ்ந்து வந்தேன். இப்பொழுது என்னுடைய ஆன்மாவுக்கும்கூட நன்மைதரும் உறுதிப்பொருள் ஒன்றினைச் செய்ய எண்ணியுள்ளேன்.

பெண்களின்கற்பின்மாட்சி புலப்படுத்தப்பட்டது. 'மாதவர்நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனினும், இன்றாம்' என்பது மணிமேகலை. கன்னியர் கற்பைக் காப்பது என்பது, கொண்டானுக்கு உரியராய், மற்றோரை விழையாமை என்பதாம்.. என்னுயிர்க்கு உறுவதும் என்பது, உயிர்க்கு உறுதி பயப்பதான தவம் மேற்கொள்ளுதலை.

15. விரும்பிய மூப்பெனும் வீடு கண்ட யான்
இரும் பியல் அனந்தனும், இசைந்த யானையும்
பெரும் பெயர்க் கிரிகளும், பெயரத் தாங்கியே
அரும்பொறை, இனிச்சிறிது ஆற்ற, ஆற்றலேன் (1417)

(வீடு-விடுதலை; இரும்-பெரிய; பியல்-பிடரி; அனந்தன்-ஆதிசேடன்; யானை-ஐராவதம் முதலிய எட்டுத் திசையானைகள்; கிரிகள்-ஏமகூடம் முதலிய எட்டு மலைகள்; பொறை-சுமை / அரசுச்சுமை; ஆற்ற-தாங்க; மூப்பு-முதுமை; பெயர்-புகழ்; பெயர-நீங்க)

நான் நீண்ட நாட்களாக விருப்பத்தோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த முதுமை என்னும் விடுதலை என்பதைக் கண்ட நான், இதுகாறும்பெரியபிடரியை உடைய ஆதிசேடனும், எட்டுத்திக்குகளிலும்

Koviloor Digital Library

அமைந்துள்ள அஷ்டதிக் கஜங்களும், பெரும் புகழ் வாய்ந்த அஷ்டகுல பர்வதங்களும்-எட்டு மலைகளும், இந்நிலவுலகத்தைச் சுமப்பதை விட்டு நீங்கிவிட, அந்தப் பெரும் சுமையைத் தாங்கி வந்தேன், இனிச் சிறிது காலம் கூடத் தாங்கும் வல்லமை இல்லாதவன் ஆகிவிட்டேன்.

நாட்டை அரசாட்சி செய்வது என்பது ஒரு பெரிய பாரம் என்பதைச் சிலப்பதிகாரம் நன்கு விளக்குகிறது. கேளுங்கள் 'மழை வளம் கரப்பின் வான் பேரச்சம்; பிழை உயிர் எய்தில் பெரும் பேரச்சம்; குடி புரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி, மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்பம் அல்லது தொழுதகவு இல் மூப்புகாரணம்; அரசியல் விடுதலை காரியம்; ஆதிசேடனும், எட்டுத்திசை யானைகளும், எட்டு மலைகளும் பூமியைத் தாங்குவதாகக் கூறுவது புராண வரலாறு. இவைகள் யாவும் சேர்ந்து தாங்கிய இப்பூமியைத் தசரதன் தான் ஒருவனாகவே இம்முதுமைப் பருவத்தில் தாங்கி வந்தான் ஆதலால் இப்போது வந்த மூப்பு பெரும் விடுதலை யாயிற்று என்பதாம். எட்டு யானைகள் ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், கப்பிர தீபம் என்பன. எட்டு மலைகள்-இமயம், மந்தரம், கைலாயம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்த மாதனம் என்பன.

16. 'நம்குலக் குரவர்கள் நவையின் நீங்கினார்
தம்குலப் புதல்வரே தரணிதாங்கப் போய்
வெங்குலப் புலன்கெட வீடு நண்ணினார்,
எங்குஉலப்பு உறுவர்?என்று எண்ணி, நோக்குகேன்' (1418)

(குரவர்கள்-மூதாதையர்கள்; நவை-குற்றம்; வெம்-கொடிய; புலன்-ஐம்புலன்; உலப்பு-முடிவு / எண்ணில் அடங்குதல் / முடிவுறுதல்; நோக்குகேன்-எண்ணிப் பார்க்கின்றேன் / நாடுகின்றேன்)

என்னுடைய குலத்தில் உதித்தவர்களான என் முன்னோர்கள், காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களினின்றும் நீங்கியவர்கள்; அவர்கள் மூப்பு அடைந்த போது, தங்கள் குலத்தோன்றல்களாகிய தமது சிறந்த புதல்வர்களையே இப்பூமி பாரத்தைத் தாங்கி அரசாட்சி செய்யுமாறு அளித்துவிட்டுத் தாங்கள் வனம் புகுந்து, கொடிய ஐம்புல ஆசைகளை வென்று, தவம் செய்து, வீடுபேற்றை அடைந்தனர்; அவர்கள் எத்தனைபேர் இருப்பார்கள் என்று எண்ணிப்பார்க்கிறேன். அவர்கள் எண்ணற்றவர்கள் கணக்கில் அடங்காத அள விறந்தவர்கள் ஆவர். எனவே அவர்கள் செய்ததையே நானும் செய்யலாமா என்று கருதிப் பார்க்கிறேன்.

அரசாள்வதைத் தரணி தாங்குவதாகக் கூறுவது மரபு; ஐம்புலன் என்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. தான் மட்டும் இன்று விரும்பவில்லை. தன் முன்னோர்களும் இதையேதான் விரும்பிச் செய்திருக்கிறார்கள் என ஒரு விளக்கமும் கற்பிக்கிறான் தசரதன்.

Koviloor Digital Library

17. வெள்ள நீர் உலகினில், விண்ணில், நாகரில்,
தள்ளஅரும் வகையெலாம் தவிர்த்து நின்றயான்
கள்ளரில் கரந்து உறை காமம் ஆதியாம்
உள்ளுறை பகைஞர்க்கு ஒதுங்கி வாழ்வெனோ?' (1419)

(நாகர்-பாதாளம்; தள்ளரும்-வெல்லற்கரிய; தவிர்த்து-வென்று / வெற்றிபெற்று / அடிமைப்படுத்தல்; ஆதி-முதலிய; கள்வரில்-கள்வர்களைப் போல; கரந்து-மறைந்து / ஒளிந்து; ஒதுங்கி-பின்னடைந்து / தோற்று அடங்கி)

கடல் நீரால் சூழப்பட்ட இவ்வுலகத்திலும், விண்ணுலகத்திலும், நாகர்கள் வாழுகின்ற பாதாள லோகத்திலும், உள்ள வெல்லுதற்கரிய பகை அரசர்களையெல்லாம் வெற்றி பெற்று அடிமைப் படுத்திய நான், என் உள்ளுக்குள்ளேயே மறைந்து .ஒளிந்து வாழும் காமம் முதலிய குற்றங்களாகிய பகைவர்களுக்கு அஞ்சித் தோற்று அடங்கிப் போவேனோ? போக மாட்டேன். அவைகளையும் அடக்கி ஆள்வேன்; தவம் மேற்கொள்வேன்.

மூவுலகத்திலும் புறப் பகையெலாம் அடக்கி வெற்றி கொண்ட நான் உட்பகைகளுக்கு அஞ்சி ஒதுங்கி வாழ மாட்டேன் என்பதாம். இதில் இன்னும் ஒரு கருத்து. நிலவுலகு எட்டுத் திசைகளால் காக்கப்படுவது; விண்ணுலகம் ஒன்று, பாதாளலோகம் ஒன்று ஆகப் பத்துத் திசைகளிலும் தன்இரதத்தைச்செலுத்தி வெற்றிகண்டவன்தான், தசரதன்என்பதை முதல் இரண்டு அடிகளிலும் கவிஞன் கூறுவது நோக்கத்தக்கது. காமம், வெகுளி, மயக்கம் என்று மூன்று குற்றங்களாகத் தமிழில் கூறுவதை வடநூலார் 'அரீஷட் வர்க்கம்' என்று ஆறு குற்றங்களாகக் கூறுவர் அவை. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பனவாம். (காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம்).

18. 'பஞ்சி மென்தளிர் அடிப்பாவை கோல் கொள
வெஞ்சினத்து அவுணர்தேர் பத்தும் வென்றுளேற்கு
எஞ்சல்இல் மனம் எனும் இழுதை ஏறிய
அஞ்சுதேர் வெல்லும் ஈது அருமை ஆவதோ?' (1420)

(பாவை-கைகேயி; கோல்-குதிரையோட்டும் கோல்; எஞ்சல் இல்-குறையாத; இழுதை-பேய்; அஞ்சு-ஐம்புலன்; பஞ்சி-செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப் பெற்ற; அவுணர்-அசுரர்கள்)

செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப் பெற்ற மெல்லிய தளிர் போன்ற பாதங்களை உடைய கைகேயி, தன் கைகளில் குதிரையோட்டும் கோலாகிய சாட்டையைக் கொண்டு தேர் ஓட்ட, கொடிய சினம் கொண்ட சம்பராசுரன் ஆகிய அசுரர்கள் பத்துப் பேரும் ஓட்டிவந்த பத்துத் தேர்களையும் வென்ற எனக்கு, குறைதல் இல்லாத மனம் என்னும் பேயாகிய தேரில் ஏறிக்கொண்டுள்ள ஐம்புலன்களால் உண்டாகின்ற

Koviloor Digital Library

ஆசையென்னும் தேரை அடக்கி வெற்றி வெறுவது என்னும் இச்செயல் செய்தற்கரியதாகுமோ? ஆகாது. என்னால் செய்ய முடியும்.

சம்பரன் பத்து வடிவம் கொண்டு, பத்துத் தேரில் வந்தான் என்றும் கூறுவர். பத்துத் தேரையே வென்றவனுக்கு இந்த ஐந்து தேர்களை வெல்வது கடினமாகுமா? என்பது ஓர் நயம். எத்துணை உண்டாலும் நிறைவு பெறாதது பேய்; அது போல எவ்வளவு இன்பம் துய்த்தாலும் நிறைவு பெறாதது மனித மனம். எனவே மனம் எனும் இழுதை என்றான். அஞ்சு தேர் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அவற்றால் உண்டாகும் ஆசை யென்பதையுமாம். மனத்தைப் பேய் எனத் தேவாரமும் கூறும். ''இழுதை நெஞ்சம் இது என் படுகின்றதே'' என்பது தேவாரம்.

19. 'ஒட்டிய பகைஞர் வந்து உருத்த போரிடைப்
பட்டவர் அல்லரேல், பரமஞானம் போய்த்
தெட்டவர் அல்லரேல், செல்வம் ஈண்டு என
விட்டவர் அல்லரேல், யாவர் வீடு உளார்?' (1421)

(ஒட்டி-வஞ்சினம் கூறி / தாக்கி; உருத்த-கோபித்த / வெகுண்டு செய்த; பட்டவர்-இறந்தவர்கள்; தெட்டவர்-தெளிந்தவர்கள்; விட்டவர்-துறந்தவர்கள்; வீடு-வீட்டுலகம்; பரமஞானம்-எல்லாம் இறைவனாய்க் காணும் மேலான ஞானம்; போய்-மிகுந்து)

வஞ்சினம் கூறித் தாக்கி வந்த பகையரசர்கள் சினந்து செய்த போரில் உயிர் துறந்தோரும், எல்லாம் இறைவனாய்க்காணும் மேலான ஞானம் படைத்த தெளிவுள்ளவர்களும், செல்வம் என்பது இவ்வுலகத்ததே அதுவேறு எங்கும் செல்லாது என்று மண், பெண், பொன் ஆசையைத் துறந்தவர்களும் அல்லாமல் மற்று யார் வீடு பேறு அடைந்திருக்கிறார்கள்?

மன்னர்கள் போரில் விழுப்புண் பட்டு இறந்துபட்டால் அது வீரசுவர்க்கம் எனப்படுகிறது. போரிடை இறத்தல், மெஞ்ஞானம் உடையவராதல், இவையிரண்டு வழியும் தசரதனுக்கு வாய்க்க வில்லை காரணம் அவனுக்குப் பகைவர்களே இல்லை. எனவே போரில் இறந்து வீரசுவர்க்கம் அடைதல் இயலாதது. இதுகாறும் பரம ஞானம் பெற்ற மெஞ்ஞானியும் அல்லன், இல்லறத்தில் இருந்து உழல்பவன். எனவே இவ்வழியிலும் துறக்கம் கிடைப்பதரிது. எனவே எல்லா ஆசைகளையும் விட்டொழித்துத் தவம் செய்து வீடுபேற்றை அடையும் வழியினைத் தசரதன் அமைச்சர்களிடம் எடுத்துரைக்கின்றான் என்பதாம். 'மூப்பினும் பிணியினும் இறவாது, அமர்க்களத்து வீழ்ந்தோரே துறக்கம் பெறுவர்' என்பது தொல்காப்பியம்.

20. 'இறப்பு எனும் மெய்ம்மையே இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின் மேல்கேடு மற்றுண்டோ?
துறப்புஎனும் தெப்பமே துணை செய்யாவிடின்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்கல் ஆகுமோ?' (1422)

Koviloor Digital Library

(துறப்பு-துறவு; இறப்பு-மரணம்; பிழைக்கல்-தப்புதல் / உய்தல்; தெப்பம்-மிதவை)

இப்பிறவியில் எத்தகையோர்க்கும் மரணம் என்று ஒன்று உண்டு அது நிச்சயம், தவறாதது என்ற உண்மையை மறந்து விட்டால், அதனினும் வேறு ஒரு தீங்கு உளதோ? துறவு என்னும் தெப்பமே, உதவி செய்யா விட்டால் பிறவி என்னும் பெருங்கடலைக் கடப்பதோ, அதனின்றும் பிழைப்பதோ முடியுமோ? முடியாது என்பதாம்.

மரணம் என்பது நாள்தோறும் எல்லோருக்கும் நிகழ்வதே; ஆனாலும் நாம் அதை எப்பொழுதும் மறந்து விடுகிறோம். நினைவிற் கொள்வதில்லை. அதை நினைவிற் கொண்டு துறவறத்தை மேற்கொண்டால், பிறவி என்னும் பெருங்கடலை நீந்திக் கரை சேரலாம். மரணம் என்பது உறுதி. அது எல்லோராலும் நினைவிற் கொள்ளப்பட வேண்டும். பிறப்பு என்பது ஒரு பெருங்கடல்; அதனைக் கடப்பதற்கோ, அதனின்றும் தப்பிப்பதற்கோ, தெப்பம் என்ற துணை நிச்சயம் வேண்டும் என்ற கருத்துச்செறிவுள்ள ஒரு பாடல் இது. பிறவியைப் பெருங்கடல் என்பார் வள்ளுவரும். 'பிறவிப் பெருங்கடல் நீந்துவார், நீந்தார் இறைவனடி சேராதார்' என்பது குறள் (10). அலை என்பது கடலில் தொடச்சியாய் வந்து போவது போலப் பிறவியும் தொடர்ச்சியாக வந்து போகும். எனவே பிறவியைப் பெருங்கடலுக்கு உவமிப்பது கவிமரபு. 'உறங்குவது போலும் சாக்காடு' உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்பார் திருவள்ளுவர். துறவை மேற்கொண்டவர் இறவாமையும் பிறவாமையும் அடைவர் என்பது கருத்து. 'இருப்பது பொய்; இறப்பது மெய்' என்பார் பட்டினத்தார். யாக்கை நிலையாமையை எப்பொழுதும் மனத்தில் கொண்டால் அது துறவினை மேற்கொள்ளச் செய்யும். அதன் பயனாய் பிறவிப் பெருங்கடலை நீந்தல் முடியும் என்பது கருத்து.

21. 'அருஞ்சிறப்பு அமைவரும் துறவும், அவ்வழித்
தெரிஞ்சு உறவு என மிகும் தெளிவும், ஆய்வரும்
பெரும்சிறகு உளஎனில், பிறவி என்னும் இவ்
இரும்சிறை கடத்தலின் இனியது யாவதே?' (1423)

(அமைவரும்-பொருந்துதற்குக் காரணமான; தெரிஞ்சு-தெரிந்து / ஆராய்ந்து; சிறை-சிறைச்சாலை; தெளிவு-மெய்யுணர்வு)

அரிய சிறப்புப் பொருந்திய துறவும், அதன் மூலமாக அறிந்து கொள்ளக் கூடிய மெய்யுணர்வும் ஆகிய இந்த இரண்டு பெரிய சிறகுகள் இருக்கின்றன என்றால், பிறவி என்னும் இந்தப் பெரிய சிறைச்சாலையைக் கடந்து போவது என்பதைவிட இனிய செயல் வேறு என்ன இருக்கிறது?

முன் பாடலில் பிறவியைக் கடல் என்று உருவகப் படுத்தி அதைக் கடப்பதற்குத் தெப்பமாகிய துறவு ஒன்று தான் துணை செய்ய வேண்டும் என்று கூறிய கவிஞன், இந்தப் பாடலில் பிறவியைப் பெரும் சிறைச்

Koviloor Digital Library

சாலையாக உருவகப்படுத்தி அதை விட்டு நீங்கிப் போக வேண்டுமானால், ஆன்மா என்ற பறவைக்குத் துறவும் அதனால் கிடைக்கப்பெறும் மெய்யுணர்வும் ஆகிய இரண்டு சிறகுகள் இருந்தால் போதும். பிறவிச் சிறைச் சாலையை இனிதாகக் கடந்து விடலாம் எனக் கூறுகிறான். துறவும் மெய்யுணர்வும், அடுத்தடுத்து ஏற்படுபவை. துறந்தார்க்கு மெய்யுணர்வு ஏற்படுதல் எளிது. இதனால்தானோ என்னவோ, வள்ளுவன் துறவு என்னும் அதிகாரத்தை முதலிலும் மெய்யுணர்வு என்னும் அதிகாரத்தை அதன்பின்னும் வைத்துப் பாடியுள்ளான். உயிராகிய பறவை, உடம்பாகிய சிறையினின்றும் பறந்து சென்று உய்ய வேண்டுமாயின் துறவு, மெய்யுணர்வு ஆகிய இரண்டு சிறகுகள் இருந்தால் போதும். அதனைக் கொண்டு பறந்து சிறை கடந்து சென்று விட முடியும். இதனைக் காட்டிலும் உயிர்க்கு இனிய செயல் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதாம். 'உடல் இது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருள் போற்றி' என்பது திருவாசகம்.

22. 'இனியது போலும் இவ்வரசை எண்ணுமோ
துனிவரும் நலன் எனத் தொடர்ந்து? தோற்கலா
நனிவரு பெரும்பகை நவையின் நீங்கி, அத்
தனி அரசாட்சியில் தாழும் உள்ளமே?' (1424)

(நனி-மிகுதி; நவை-குற்றம்; தனி-ஒப்பற்ற; தாழும்-படியும் / ஈடுபடும்; துனி-துன்னி / நெருங்கி; நலன்-இன்பம்)

உயிரைத் தொடர்ந்து வரும் செயலில் தோற்றுப் போகாது எப்போதும் பெரிய வெற்றியையே கண்டு கொண்டிருக்கும் இந்தப் பெரிய துன்பத்தை இடைவிடாது தருகின்ற ஐம்புலன்கள் என்னும் பெயரை உடைய, பகைகளினால் உண்டாகின்ற குற்றங்களிலிருந்து நீங்கி, வீடுபேறு / துறக்கம் என்னும் அந்த ஒப்பற்ற அரசினை ஆளுகின்ற செயலில் என் உள்ளம் படிந்து போயிற்று. எனவே இவ்வுலக அரசாட்சி இனியது போன்று மாயத் தோற்றம் அளிக்கும் இதனை என் மனம் ஒரு பொருளாக மதிக்குமோ? மதிக்காது. இவ்வுலக அரசாட்சி இனிமை பயப்பது போலத் தோன்றி இன்னாமையே செய்யும், துன்பம் அன்றித் தொழத்தக்கது அல்ல என்பதனால் இனியது போலும் இவ்வரசு என்றான். முக்தியை / வீடுபேற்றை / துறக்கத்தை வீட்டு அரசு என்பது கவிமரபு.

23. 'உம்மை யான் உடைமையின் உலகம் யாவையும்
செம்மையின் ஓம்பி நல்அறமும் செய்தனென்;
இம்மையின் உதவி நல்இசை நடாய நீர்
அம்மையும் உதவுதற்கு அமைய வேண்டுமால்.' (1425)

(ஓம்பி-பாதுகாத்து; இம்மை-இப்பிறவி; இசை-புகழ்; நடாய-பரப்பிய; அம்மை-மறுமை இன்பம்; அமைதல்-மனம் பொருந்துதல்; செம்மை-நேர்மை / நடுவு நிலைமை; நல்லறம்-தானம், ஈகை, வேள்வி முதலியன)

Koviloor Digital Library

'உங்களை நான் மந்திரக்கிழவர்களாகப் பெற்றமையினால் இவ்வுலகம் முழுவதையும் நேர்மையாக அரசாட்சி செய்து மக்களைப் பாதுகாத்து, தானம், ஈகை, வேள்வி முதலிய நல்ல அறச்செயல்களைச் செய்து வந்தேன். இப்பிறவியில் இவ்வாறு எனக்கு உதவி என்னுடைய புகழ் இவ்வுலகமெங்கும் பரவும்படி உதவிய நீங்கள், மறுபிறவியிலும் அவ்வாறே உதவி செய்வதற்கு மனம் கொள்ளுதல் வேண்டும்'.

24. 'இழைத்த தீ வினையையும் கடக்க எண்ணுதல்
தழைத்த பேரருளுடைத் தவத்தின் ஆகுமேல்,
குழைத்தது ஓர் அமுது உடைக்கோரம் நீக்கி, வேறு
தழைத்த தீ விடத்தினை அருந்தல் ஆகுமோ?' (1426)

(இழைத்த-செய்த; கோரம்-வட்டில்; வேறு-மாறுபட்டது; தீ-கொடிய; தழைத்த-மிக்க; குழைத்த-கடைந்த / கூட்டிக் கலந்து சேர்த்த; தழைத்த-சொல்லப்படுகின்ற)

ஒருவன் தான் செய்த தீ வினைகளிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று எண்ணினால், மிக்க தவம் செய்து அதனால் உண்டாகின்ற பேரருளால் முடியும் என்றால், எல்லா மூலிகைப் பொருள்களையும் கூட்டிக் கலந்து கடைந்த அமுதத்தை உடைய வட்டிலை நீக்கிவிட்டு, அதற்கு மாறுபட்டது என்று சொல்லக் கூடிய கொடிய நஞ்சினைப் பருகுதல் தகுமோ? தகாது.

தீவினை தன் பயனை ஊட்டாது அழியாது. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும். எனினும் 'தவத்தின் முன் நில்லாதாம் பாவம்' என்பது நாலடியார். எனவே ஊழ்வினையின் பயனை அருந்தவத்தின் பேரருளினால் கடக்கலாம் என்று கூறப்படும் போது, அமுதமாகிய அதனை அருந்தாது விடுத்து விடமாகிய அரசாட்சியைக் கைக்கொண்டிருத்தல் தகுந்த செயலாகுமோ? ஆகாது. 'அருளுதல் சான்ற அருந்தவம் செய்ம்மின்' என்பது வளையாபதி. 'ஞாலம் காவல் நஞ்செனநீக்கி' என்பது பெருங்கதை; அமுத வட்டிலை நீக்கிவிட்டுக் கொடிய நஞ்சினை நுகர்தல் தகாதது போலத் தவத்தினைவிடுத்து அரசவாழ்வில் மூழ்கி இருத்தல் தகாது என்பது கருத்து.

25. 'கச்சை அம் கடகரிக் கழுத்தின் கண்உறப்
பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்நிழல்
நிச்சயம் அன்று எனின், நெடிது நாள் உண்ட
எச்சிலை நுகர்வது இன்பம் ஆகுமோ?' (1427)

(கடகரி-மதயானை; பிச்சம்-பீலிக்குஞ்சம்; கவிகை-வெண் கொற்றக் குடை; கச்சை-யானைக் கழுத்தில் இடும் கயிறு; இன்னிழல்-இனிய அரசச் செல்வம்; பெய்யும்-தருகின்ற; நிச்சயம்-என்றும் நிலைக்கக் கூடியது)

கழுத்தில் இடுகின்ற கயிற்றையுடையதும், அழகிய மதம் கொண்டதுமான யானையின் மீது மயிற் பீலிக்குஞ்சங்களும், வெண் கொற்றக் குடையும் நிழல் மிழற்ற அந்த இனிய நிழலான அரசச் செல்வம்

Koviloor Digital Library

என்றும் நிலையானது அன்று என்றால், அறுபதினாயிரம் ஆண்டுகாலமாக அனுபவித்து வந்த அந்த, இன்பமாகிய எச்சிலை மேலும் மேலும் நானே அனுபவித்துக் கொண்டு இருப்பது என்பது இன்பம் தருவதாகுமோ? ஆகாது.

மிகுந்த இனிமைபயப்பனவும் நீண்ட நாள் அனுபவித்தால் வெறுப்பைத் தோற்றுவிக்கும். பழகப் பழகப் பாலும் புளிக்கத் தானே செய்யும்? 'நீர்நீடு ஆடிடில்கண்ணும்சிவக்கும்; ஆர்ந்தோர்வாயில்தேனும் புளிக்கும்' என்பது குறுந்தொகை. நிலையாத அரச இன்பத்தை விடுத்து, நிலைத்த இன்பம் நல்கும் துறவினை நாடுவது இன்பம் தரும் என்பது கருத்து.

26. 'மைந்தரை இன்மையின் வரம்புஇல் காலமும்
நொந்தனென்; இராமன் என்நோவை நீக்குவான்
வந்தனன்; இனிஅவன் வருந்த, யான் பிழைத்து
உய்ந்தனென் போவது ஓர் உறுதி எண்ணினேன்.' (1428)

(மைந்தர்-மக்கள்; வரம்பில்-அளவு கடந்த; நொந்தனென்-துன்புற்றேன்; நீக்குவான்-நீக்கும் பொருட்டு; பிழைத்து-தப்பி; நோய்-துன்பம்)

'மக்கட்பேறு இன்மையால் எல்லையற்ற அறுபதினாயிரம் ஆண்டு காலமும் வருந்தியிருந்தேன். இராமன் என் துன்பத்தைப் போக்கும் பொருட்டு தானே வந்து எனக்கு மகவாகத் தோன்றினன். இனி இவ்வரச பாரத்தைஅவன்சுமந்து வருந்த, நான்இதிலிருந்துதப்பித்து, என்வாழ்க்கை ஈடேறும் படியான ஓர் நலம் பயக்கும் செயலான தவம் மேற்கொள்ளுதலைக் கருதினேன்'.

இராமன் மகவிலாத் துன்பத்தை நீக்குவதோடு, அரச பாரத்தையும் தாங்கி என் அரசியல் துன்பத்தை நீக்கும் பொருட்டும் வந்து பிறந்திருக்கிறான் என்பதாம். இராமன் என்ற சொல்லுக்கே பிறரை மகிழ்விப்பவன் என்பது பொருள். எனவே நோவை நீக்குவோன் என்றார். அவன் வருந்துதல் அரச பாரத்தைத் தாங்குதல். யான் பிழைத்து உய்ந்தது என்பது அரச பாரத்தை நீக்கித் தவம் மேற்கொள்ளுதல். இதில் பின் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளையும் குறிப்பால் உணர்த்துகிறான். அவன் வருந்த என்பதில் இராமன் வனம் புகுந்து சீதையை இழந்து வருந்தப் போகிறான் என்பதும், யான் போவது ஓர் உறுதி என்பதனால் அத்துன்பத்தினால் யான் வீடுபேறடையப் போகிறேன் என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

27. 'இறந்திலன் செருக்களத்து இராமன்தாதை தான்
அறம்தலை நிரம்ப மூப்பு அடைந்த பின்னரும்
துறந்திலன் என்பது ஓர்சொல் உண்டான பின்
பிறந்திலன் என்பதில் பிறிது உண்டாகுமோ?' (1429)

Koviloor Digital Library

'இராமனின் தந்தையாகிய தசரதன் போர்க்களத்தில் போரிட்டு வீரசுவர்க்கம் அடைந்திலன், அல்லது தன்னுடைய மூப்புக் காலம் அடைந்த பின்னரும் இல்லற வாழ்க்கையைத் துறந்து அறம்தலை நிறுத்தித் துறவறமும் மேற்கொண்டானில்லை' என்று இந்தப் பழிச்சொல் தோன்றிய பின்பு, நான் பிறந்தும் பிறவாதவன் ஆவேன் என்பதைத் தவிர வேறு ஏதேனும் சொல்லக் கூடுமோ?

தன்னைத் தசரதன் என்று கூறிக் கொள்ளாது, இராமன் தாதை என்று கூறிக் கொண்டதில் ஒரு கருத்து உளது, இராமன் என்ற மகவைப் பெற்று வளர்ந்த பின்பும் அவனிடம் அரசாட்சியைக் கொடுக்காது, மூப்பு எய்திய பின்பும் தானே அரசச் செல்வத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறானே என்ற பழிச்சொல் தனக்கு வருமே என்பதால்தான் இராமன் தாதை என்கிறான். பகைவர் தம் படைகளால் விழுப்புண்பட்டுச் செருக்களத்தில் இறப்பதே வேந்தர்க்குச் சிறப்பு, எனவே அதை முதலில் கூறினார். இல்லறம், துறவறம் இரண்டையும் புரிந்தோரே நிறைந்த அறத்தினர் ஆவர். தசரதன் நீண்ட காலம் இல்லறம் தான் துய்த்தானே தவிர துறவறத்தைப் பற்றிச் சிந்திக்காதவனாய் இருந்தான். எனவே அறம்தலை நிரம்பாதவன்-நிரம்பா அறத்தினன் என்பதாம். பிறவியின் பயனாகக் கருதிய ஒரு செயலைச் செய்யாதவர்கள் பிறவாதவர்களாகவே கருதப்படுவர். செருக்களத்து இறவாமல், மூத்து விளிதல் அரசர்க்கு இழி தகவுடைத்து. 'மூத்து விளிதல் இக்குடிப் பிறந்தோர்க்கு நாப்புடை பெயராது நாணுத் தகவுடைத்து' என்பது மணிமேகலை.

28. 'பெருமகன் என்வயின் பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமகன், நிறை குணத்து அவனிமாது எனும்
ஒருமகள் மணமும் கண்டு உவப்ப உன்னினேன்' (1430)

(என்வயின்-என்னிடத்தில்; அவனிமாது-பூமிதேவி; உன்னுதல்-எண்ணுதல்)

ஆண்களிற் சிறந்தவனாகிய இராமன் என்னிடத்தில் பிறந்து, சீதை என்கின்ற திருமகள் போன்றவளின் திருமண நிகழ்ச்சியினை என் கண்களால் கண்டு களித்த நான், இப்போது அத்திருமகன், நிறைந்த நற்குணங்களையுடைய நிலமகள் என்னும் ஒப்பற்றவளையும் மணந்து-முடி சூட்டிக் கொள்ளும் நிகழ்ச்சியையும் கண்டு களிக்க எண்ணுகிறேன்.'

முடிசூட்டுதலையும் மணம் என்றே தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன. சீவகசிந்தாமணியிலும் சீவகன் முடிசூட்டிக் கொண்டதைத் திருத்தக்கதேவர் இவ்வாறு கூறுகிறார். 'களிக்கயல்' மழைக்கண், பொருஇல் பூமகள் புணர்ந்தனன்' என்பது சீவகசிந்தாமணி. திருமாலுக்குச் சீதேவியும், பூதேவியும் இருமனைவியர் என்பதையும் சீதேவியின் மணவினை கண்டு களித்த நான். பூதேவியின் திருமணத்தையும் கண்டு

Koviloor Digital Library

களிக்க விழைகிறேன் என்று தசரதன் கூறுவதாம். இதுகாறும் மன்னன் தான் துறக்க விரும்பியதற்கான காரணங்களைக் கூறிவந்தனன். இப்பொழுது முதல் இராமனுக்கு முடி சூட்ட வேண்டும் என்ற தன் ஆசையினைக் கூறத்தொடங்குகிறான்.

29. 'நிவப்புஉறு நிலன் எனும் நிரம்பும் நங்கையும்
சிவப்புஉறு மலர் மிசைச் சிறந்த செல்வியும்
உவப்புஉறு கணவனை உயிரின் எய்திய
தவப்பயன் தாழ்ப்பது தருமம் அன்று அரோ?' (1431)

(நிவப்பு-உயர்வு; தாழ்ப்பது-தாமதிப்பது)

'உயர்வு பொருந்திய எல்லாக் குணங்களும் நிரம்பிய நிலம் என்னும் நங்கையும், சிவந்த செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் சிறந்த குணங்களுடைய செல்வத்திற்கு அரசியாகிய திருமகளும், தங்களுக்குள் மகிழ்ந்து, தம் கணவனாகவும் உயிராகவும் கருதி அடைந்தவனை, என் மகனாகப் பெற்றதால் உண்டான தவப்பயனை நிறைவேற்றாது இனியும் தாமதிப்பது அறமாகாது'.

நிலமகளுக்கு உயர்வு என்பது வளமை; திருமகளுக்கு உயர்வு என்பது செல்வச் செழிப்பு; இருவரும் கணவனை உயிரென எய்தினர். தான் செய்த தவத்தின் பயனால் அவதரித்த இராமபிரான் முடி சூடிக்கொள்ளுதல் இனியும் தாமதப்படக்கூடாது என்று விரைவுக்குறிப்பை உணர்த்துகிறான். தசரதன் இராமனுக்கு முடிசூட்டுதலில் விரைவினைக் காட்டுதற்குக் காரணம் தான் முதுமை எய்தியதோடன்று. அவன் கண்ட தீக்கனாக்களும், தீய உற்பாதங்களும் என்றும், தனக்கு மரணம் வருதலோ அல்லது முடிசூடுவதில் தடைவருதலோ எந்நேரமும் நிகழலாம் என்பதனையும் கருதியே எனவும் வான்மீகம் கூறும்.

30. 'ஆதலால் இராமனுக்கு அரசைநல்கி, இப்
பேதமைத்தாய் வரும் பிறப்பை நீக்குறு
மாதவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்
யாதுநும் கருத்து?' என இனைய கூறினான். (1432)

(நீக்குவான்-நீக்கும்பொருட்டு; பேதமை-அறியாமை)

'எனவே, இராமனுக்கு இந்த அரசியல் பாரத்தைத் தந்து விட்டு, இந்த அறியாமையால் வருகிற பிறவிநோயை நீக்கும் பொருட்டு, பெருந்தவம் செய்யத் தொடங்குவதற்காகக் கானகம் செல்ல விழைகிறேன். தங்கள் கருத்து யாது?' என்று அவர்களை வினவி பின்வருமாறு கூறினான்.

வள்ளுவரும் பிறப்பினைப் பேதைமையால் வருவது என்றே கூறுகிறார். 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள்காண்பது அறிவு' என்பது குறள் 358. இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டத் தசரதன் எண்ணியதாகவே வான்மீகமும் துளசிதாச

Koviloor Digital Library

இராமாயணமும் கூறுகின்றன. கம்பன் அவற்றிலிருந்து வேறுபட்டு தசரதன் அரசுரிமை அளித்து முடிசூட்டவே விழைந்தான் என்று கூறுவது நோக்கத்தக்கது.

31. அமைச்சர்கள் மனநிலை

திரண்ட தோளினன் இப்படிச் செப்பலும், சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர், ஆங்கே
வெருண்டு, மன்னவன் பிரிவுஎனும் விம்முறும் நிலையால்,
இரண்டுகன்றினுக்குஇரங்கும்ஓர்ஆஎனஇருந்தார். (1433)

(சிந்தை-உள்ளம்; விம்முறும்-துன்பமுறும் / வருத்தத்திற்குரிய; வெருண்டு-அஞ்சி / மனம் நடுங்கி; ஆ-பசு; செப்பவும்-கூறவும்)

பருத்த தோள்களையுடைய தசரதன் இவ்வாறு கூறியவுடன், அமைச்சர்கள் இராமன் அரசாட்சி அடையப்போகிறான் என்பதால் உள்ளத்தில் உவகை மேலோங்கிப் பொங்கினர்; அதே சமயத்தில் மன்னவன் தசரதனைப் பிரிய வேண்டுமே என்ற வருத்தமுறும் நிலையால் மனம் கலங்கியிருந்தனர். இது எப்படி இருந்தது என்றால் இரண்டு கன்றுகளையுடைய ஒரு பசு, இரண்டு கன்றினுக்கும் ஒரு தன்மைத்தான அன்பைத்தானே செலுத்த வேண்டும்? ஆனால், அது அதனால் முடியுமோ? இளைய கன்றுக்குச் சிறிது இரக்கமும் பாசமும் மிகுதியாகத் தானேகாட்டத் தோன்றும். அதே நிலையை அமைச்சர்களும் இராமன்பால் மிகுந்த அன்பும், தசரதன்பால் எப்பொழுதும் காட்டிவந்த அன்பினில் சிறிதும் குறையாமலும் திகழ்ந்தனர் என்பதாம்.

அவர்கள்பால் இருவகை உணர்ச்சிகள் ஏற்பட்டன. இராமன் முடிசூட்டிக்கொள்ளப்போகிறான் என்பதால் உவகை; தசரதன் தவமியற்றக் கானகம் செல்லப் போகிறான் என்பதால் இரக்கம் / வருத்தம். இரண்டாவது கன்றினை ஈன்ற பசு, புதிய கன்றினுக்குப் பால் கொடுப்பதில் மிக்க இரக்கம் கொள்ளும்தானே? என்றாலும் மூத்த கன்றுக்கு வேண்டிய பாலைக் கொடுக்க முடியவில்லையே என்ற இரக்கமும் இருக்கும் தானே? இது இயற்கை தானே? முன்னையது இன்ப இரக்கம்; பின்னயது துன்ப இரக்கம். இத்தகைய தெளியமாட்டாத நிலையை அமைச்சர்கள் அடைந்தனர் என்பதாம். இதில் மற்றொரு கருத்து. முதற்கன்று சுமக்க முடியாத பாரத்தைச் சுமக்கப் போகிறது என்பதால் ஒரு இரக்கம். இரண்டாவது கன்று தம்மைப் பிரிந்து தவம் மேற்கொள்ள காடு செல்லப் போகிறதே என்ற வருத்தம். இவ்விரண்டு வருத்தமும் கொண்டனர் அமைச்சர்கள் என்பதாம்.

32. மன்னர் கருத்திற்கு அமைச்சர் இசைதல்

அன்னர் ஆயினும், அரசனுக்கு அது அலது உறுதி
பின்னர் இல் எனக்கருதியும், பெருநிலவரைப்பில்

Koviloor Digital Library

மன்னும் மன்னுயிர்க்கு, இராமனின் மன்னவர் இல்லை
என்ன உன்னியும், விதியது வலியினும், இசைந்தார். (1434)

(வரைப்பு-நிலஉலகு; மன்னும்-நிலைபெற்ற; இசைந்தார்- உடன் பட்டார்கள்; பின்னர்-மறுமைக்கு; உறுதி-நன்மை)

அமைச்சர்கள் தெளியமாட்டாத அத்தகைய நிலையில் இருந்தாலும், தசரதனுக்குத் துறவு பூண்டு தவம் இயற்றுதலைக்காட்டிலும் மறுமைக்கான சிறந்த நன்மை வேறு ஒன்று இருக்கமுடியாது என்பது கருதியும், இந்தப் பெரிய நிலவுலகத்தில் தங்கி நிலைபெற்றுள்ள உயிர்கள் யாவற்றுக்கும் இராமனை அல்லது வேறு மன்னவர் இல்லை என்பது கருதியும், இவையெல்லாவற்றையும் விட இராம அவதாரத்தின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்ற விதியின் வலிமையைக் கருதியும், தசரதனது ஏற்பாட்டிற்கு உடன்பட்டனர்.

அமைச்சர்கள் வருந்தினர் என்றாலும், மன்னனது கருத்திற்கு முடிவில் இசைந்தனர். இதற்கு மூன்று காரணங்கள் கூறுகின்றான் கவிஞன். ஒன்று தசரதனுக்குத் தவம் செய்தலும் துறவறம் பூணுதலும் தவிர வீடுபேறடைய வேறு வழி இல்லை. எனவே, அவன் இராமனுக்கு முடிசூட்டி, அரசியல் துறந்து தவம் மேற்கொள்ள வேண்டுவதே; இரண்டு இராமனைத் தவிர இவ்வுலக உயிரினங்களைக் காப்பாற்றும் மன்னவர் வேறு எவரும் இருக்கமுடியாது எனவே இராமன் முடிசூட்டிக்கொள்ள வேண்டுவதே; மூன்றாவது இவையெல்லாவற்றையும்விட இராமவதார நோக்கம் நிறைவேற வேண்டும் என்பது விதி. எனவே, அது வலிமைபெற்று இவர்களை இசைவதற்குத் தூண்டிற்று என்பதாம். ''ஊழின்பெருவலி யாவுள? மற்றொன்று சூழினும் தான் முந்துறும் என்பது குறள்.

33. வசிட்டன் கூறத்தொடங்குதல்

இருந்த மந்திரக் கிழவரது எண்ணமும் மகன்பால்
பரிந்த சிந்தை அம்மன்னவன் கருதிய பயனும்,
பொருந்தும் மன்னுயிர்க்கு உறுதியும், பொதுஉற நோக்கித்
தெரிந்து, நான் மறைத் திசைமுகன் திருமகன் செப்பும். (1435)

(பரிந்த-இரக்கம் கொண்ட; பொதுஉற-விருப்பு வெறுப்பின்றி / நடுவுநிலையில் நின்று; திசைமுகன்-நான்முகன் / பிரமன்; நோக்குதல்-மனத்தால் ஆராய்தல் / நோக்கல் நோக்கம்; தெரிந்து-தெளிந்து)

வாய் பேசாது தெளியமாட்டாதவராகத் தடுமாறிக் கொண்டிருந்த அமைச்சர்களின் கருத்தையும், மகனாகிய இராமனிடத்தில் பேரன்பும் இரக்கமும் கொண்ட அத்தசரதன் எண்ணிய பயனுள்ள செயலையும் இவ்வுலகில் நிலைபெற்ற உயிர்களுக்கு அதன் விளைவால் உண்டாகப் போகும் நன்மைகளையும், தன் மனத்தில் விருப்பு வெறுப்பின்றி நடுவு

Koviloor Digital Library

நிலையில் நின்று சீர்தூக்கிப்பார்த்து, நன்கு தெளிந்து, நான்கு வேதங்களுக்கும் தலைவனாகிய பிரமனின் மானசபுத்திரனாகிய வசிட்ட முனிவன் பின்வருவனவற்றைக் கூறலானான்.

அமைச்சர்கள் தெளிவடையாது பேசாமல் இருந்தனர். என்பதைக் குறிக்கவே இருந்த மந்திரக் கிழவர் என்றான். மன்னவன் கருதிய பயன் என்பது தான் தவம் செய்யச் செல்வதால் ஏற்படக்கூடிய வீடுபேறுரும் பயன்கள். ''தவம் செய்வார் தம் கருமம் செய்வார்'' என்பது குறள் 266. வசிட்டர் வாக்கு, மன்னவனுக்கும், அமைச்சர்களுக்கும், பொதுவாக மக்களுக்கும் வேதவாக்கு. எனவே தான், இங்கே வசிட்டனை நான்மறைத் திசைமுகன் திருமகன் என்றான். பொதுவுற நோக்கி என்ற சொல்லாட்சியும் கருதத்தக்கது. மற்ற அமைச்சர்களைப்போல் இரண்டு கன்றுகளுக்கு இரங்கிய ஓர் ஆ போலல்லாமல், நடுவுநிலையில் நின்று ஆராய்ந்து தெளிந்து என்பதாம்.

34. வசிட்டன் கூறுதல் [7 பாடல்கள்]

'நிருப! நின்குல மன்னவர் நேமி பண்டு உருட்டிப்
பெருமை எய்தினர் யாவரே இராமனைப் பெற்றார்?
கருமமே இது; கற்று உணர்ந்தோய்க்கு, இனிக்கடவ
தருமமும் இது; தக்கதே உரைத்தனை தகவோய்!' (1436)

(நிருபர்-அரசர்; தகவு-நடுவுநிலைமை; நேமி-ஆணைச்சக்கரம்; கடவ-செய்யத்தக்கது; கருமம்-காரியம்)

'மன்னவனே! நடுவுநிலைமை உடையவனே! உன் குலத்து உதித்த மன்னர்களில் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி முன்னாளில் பெருமை பெற்றவர் பலர் இருந்திருந்தாலும், நற்குண நற்செய்கைகளையுடைய இராமனைப் போன்ற ஒரு மைந்தனை யார் பெற்றெடுத்தார்கள்? ஒருவருமில்லை. எனவே, நீ செய்யத்தக்க காரியம் அவனுக்கு முடிசூட்டுவதே ஆகும். எல்லா நூல்களையும் ஐயம்திரிபறக் கற்றுணர்ந்த உனக்கு இனிச்செய்யத் தக்க அறச்செயல், நீ துறவறம் மேற்கொள்வது தான். எனவே, நீ தகுதியானவற்றையே கருதியிருக்கிறாய்'.

இதுமுதல் 7 பாடல்கள் வசிட்டன் தசரதனுக்குக் கூறும் மாற்றம். சூரிய குலத்து மன்னவர்களில் பலர் ஆணைச்சக்கரத்தைச் செலுத்தி வீரம், கொடை முதலியவற்றால் சிறந்து விளங்கினரேனும் இராமனை மைந்தனாகப் பெறும் பேறு தசரதன் ஒருவனுக்கே வாய்க்கப் பெற்றது. அதனால் ஏனையோரினும் அவன் சிறந்தவன் எனச் சிறப்பித்தார். புதல்வனுக்கு முடிசூட்டுதல் தருமம் எனவும், மன்னவன் துறவு பூணுதல் கருமம் எனவும் கூறியது ஓர் நயம். கருமம் என்பது தன்னலம் குறித்து ஆற்றும் கடமை, தருமம் என்பது யாவர்க்கும் பயன் தரும் செயல். கற்றுணர்ந்தோர்க்கு இனிக்கடவது துறவே என்பது, 'கற்றதனாலாய

Koviloor Digital Library

பயன்னென்கொல் வாலறிவன் நற்றாள் தொழார்எனின்' என்னும் குறட்பாவின் விளக்கம்.

35. 'புண்ணியம் தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ணலே! இனி, அருந்தவம் இயற்றவும் அடுக்கும்;
வண்ண மேகலை நிலமகள் மற்று உனைப் பிரிந்து
கண் இழந்திலள் எனச் செயும் நீ தந்த கழலோன்' (1437)

(அண்ணல்-பெருமை உடையவன்; அடுக்கும்-தகும் / பொருந்தும்; தந்த-ஈன்றெடுத்த; புண்ணியம்-நற்பயன்கள்; கண்-கண் / பெருமை / பற்றுக்கோடு)

'நற்பயன்களாகிய புண்ணியத்தைத் தொடர்ச்சியாக எல்லாப் பிறவிகளிலும் தரும் அறவேள்விகள் எல்லாவற்றையும் புரிந்த பெருமையை உடையவனே! இனிமேல் அரியதவம் இயற்றுவது பொருத்தமே. தகுதியுடையதே; அழகிய மேகலாபரணத்தை அணிந்த நிலமகள் உன்னைவிட்டுப் பிரிந்ததனால் தன் கண்ணை இழந்து விடவில்லை என்று எல்லோரும் சொல்லும்படி, நீ பெற்றெடுத்த வீரக்கழலணிந்த இராமன் சிறப்பாக அரசாட்சி செய்வான்'.

ஒரு பிறவியில் செய்த நற்காரியங்கள் பிறவிகள்தோறும் தொடர்ந்து பயனளிக்கும் என்பதால் புண்ணியம் தொடர் வேள்விகள். மற்றொன்று புண்ணியம் அல்லாத பிறருக்குத் தீங்கு தரும்படியும் அசுரர்கள் வேள்வி செய்வர் என்பதைக் குறிப்பிடவும் புண்ணியம் தொடர் வேள்வி என்றான். பாவம் தேய்தலும், அறியாமை நீங்குதலும், நிலையாமை உணர்தலும், வீடுபேற்றினை விருப்புற்றுத் துறத்தலும் பெரும் புண்ணியம் உடையார்க்கன்றி எல்லோரும் எளிதில் செய்யும் செயலன்று என்பது கருத்து. வேள்விகள் பல புரிந்தவரே, தவம் செய்யும் தகுதிபடைத்தவர் என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டது நின்னைப்போலவே நின் மகனும் நன்கு அரசாட்சி செய்வான் என்பது 'மகனறிவு தந்தையறிவு' என்னும் பழமொழியை நினைப்பிக்கும். நிலமகள் அரசனுக்கு கண் என்பது, 'மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெல்லாம் கண்ணும் ஆவியுமாம் பெருங்காவலன்' என்பது பெரியபுராணம். இராமன் நின்னைப்போல் அரசாட்சி செய்வான் என்றும், நின்னை விடச் சிறப்பாக அரசாட்சி செய்வான் என்று கொள்ளுதலும் பொருந்தும்.

36. புறத்து நாம் ஒரு பொருள் இனிப் புகல்கின்றது எவனோ
அறத்தின் மூர்த்தி வந்து அவதரித்தான் என்பது அல்லால்?
பிறத்து, யாவையும் காத்து, அவைபின் உறத் துடைக்கும்
திறத்து மூவரும் திருந்திட திருத்தும் அத் திறலோன். (1438)

(பிறத்து-தோற்றுவித்து / பிறக்கச்செய்து / படைத்து; துடைத்தல்-அழித்தல்; திறத்து-திறமை உடைய; திருத்தும்-செம்மையாகச் செய்து முடிப்பான்; புறத்து-புறம்பாக / வேறாக / மாற்றாக)

Koviloor Digital Library

தருமமே ஓர் வடிவுபெற்று இங்கு இராமனாக அவதரித்து உள்ளது என்று சொல்லுவதைத்தவிர அதற்கு வேறாக மற்றொரு பொருளைஎப்படி என்னால் கூற முடியும்? எல்லாவுயிரையும் பிறப்பித்து, அவற்றை நின்று காத்து, இறுதியில் அவற்றை முழுக்க அழித்து விடும் திறமைபெற்ற பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய மும்மூர்த்திகளும் செய்கின்ற திருந்திய செயல்களை, அந்தத் திறமைபடைத்த இராமபிரான் ஒருவனாகத் தனியாகவே செம்மையாகச் செய்து முடிப்பான். இதற்கு மாறாக அவன் திறமைக்குப் புறம்பாக நாம் ஒரு பொருளைக் கூறுவதால் என்ன பயன் விளையும்? ஒன்றும் விளையாது.

அவதாரம் என்பது மேலிருந்து கீழ் இறங்கி வருதலைக் குறிக்கும். 'மூவர் காரியமும் திருத்தும் முதல்வனை' என்பார் பெரியாழ்வார். இம்மூவரினும் மேம்பட்ட திறமை படைத்த பரம்பொருளே உனக்கு மகனாக வந்து அவதரித்திருக்கிறான் என்பது கருத்து.

37\. 'பொன் உயிர்த்த பூமடந்தையும், புவியெனும் திருவும்
இன்னுயிர்த்துணை இவன் என நினைக்கின்ற இராமன்
தன்உயிர்க்கு என்கை புல்லிது; இங்கு இவற்பயந்து எடுத்த
உன் உயிர்க்கு என நல்லன், மன்னுயிர்க்கு எலாம் உரவோய்!'(1439)

(உரவு-அறிவுத் திடம் / வலிமை; உயிர்த்த-தோற்றுவிக்கின்ற; என்கை-என்று சொல்லுதல்; புல்லிது-தகுதியற்றது / புன்மையானது / சிறப்பினதன்று / அற்பமானது; பொன்-அழகு / செல்வம்; நல்லன்-நன்மை செய்பவன்)

வலிமையும், அறிவுத்திடமும் உடையவனே! செல்வத்தை தோற்றுவிப்பவளும், செந்தாமரைப் பூவில் வாழும் பெண்ணுமாகிய திருமகளும், நிலமகள் என்று கூறப்படும் பெருமகளும், இவர்கள் இருவரும் 'இராமனே எங்கள் இனிய உயிருக்குத்துணைவனாவான் என்று நினைக்கப்படுகின்றவன். அவனை என் உயிர்க்கு நன்மை செய்பவன் என்று கூறுதல் சிறப்பின்பாற்பட்டதன்று; அற்பமானது. இந்த இராமனைப் பெற்று வளர்த்த உனது உயிர்க்கு அவன் எப்படி எவ்வளவு நன்மைகள் செய்வானோ, அதேபோல் இவ்வுலகத்தில் நிலைபெற்று வாழ்கின்ற உயிரினங்கள் அனைத்திற்கும் இனியவனாக இருந்து நன்மையே புரிவான்.

தந்தைக்கு மகன் நல்லவனாக இருக்கின்றான் என்று கூறுவதில் ஒரு சிறப்பும் இல்லை. எனவே, புல்லிது; இராமன் தன் தந்தைக்கு நல்லவனாக இருப்பது போலவே உலகத்து உயிர்களுக்கெல்லாம் இனியவனாக இருக்கின்றான் என்பது அவனுடைய பெயர்க்குரிய காரணத்தைக் கூறுவதாகும். இராமன் என்பது எல்லோர்க்கும் மகிழ்ச்சி தருபவன் என்ற பொருளது. 'தம்மில், தம்மக்கள் அறிவுடைமை, மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது' என்பது குறள்-68. இராமன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்பதாம்.

Koviloor Digital Library

38. 'வாரம் என் இனிப் பகர்வது? வைகலும் அனையான்
பேரினால் வரும் இடையூறு பெயர்கின்ற பயத்தால்
வீர! நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும், 'யாம் செய்த நல்லறப் பயன்' என இருப்பார். (1440)

(வைகலும்-நாள்தோறும்; பயம்-தன்மை / பயனுடைமை; பெயர்கின்ற-நீங்குகின்ற; வாரம்-அன்பு)

வீரனே! நாள்தோறும் இராமபிரானுடைய பெயரைச் சொல்லுவதனால், வாழ்க்கை நடைமுறையில் வரும் எல்லாத் துன்பங்களும் நீங்கிச் சென்றுவிடுகின்ற தன்மையினால், உன்குலத்து உதித்த உனது மூத்த மைந்தனை, வேதம் ஓதும் அந்தணர் முதல் எல்லோரும், தாங்கள் செய்த தருமத்தின் விளைவாகத்தான் இராமபிரான் நம்மிடையே வந்து அவதரித்திருக்கிறான்' என்று எண்ணுகிறார்கள். அவ்வாறு வேதியர்களே எண்ணுகிறார்கள் என்றால் சாதாரணக் குடிமக்களின் அன்பினைப் பற்றி நான் சொல்ல என்ன இருக்கிறது?

இராம நாமம் தாரக மந்திரம். அந்தணர் முதல் அவன் பெயரை மந்திரமாகவும், அவனைப் புண்ணியப் பயனாகவும் கருதுகின்றார்கள் என்றால், மக்களின் அன்பை இனிச் சொல்வது எதற்கு? என்பதாம். ' பச்சைமாமலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண், அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே' என்னும் இச்சுவை தவிர, யான்போய், இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்; அரங்கமாநகருளானே! என்பார் தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

39. மண்ணினும் நல்லள், மலர்மகள், கலைமகள், கலைஊர்
பெண்ணினும் நல்லள்; பெரும்புகழ்ச்சனகி; பேருலகின்
கண்ணினும் நல்லன்; கற்றவர், கற்றிலாதவரும்
உண்ணும் நீரினும், உயிரினும், அவனையே உவப்பார்.' (1441)

(மண்-நிலமடந்தை; மலர்மகள்-திருமகள்; கலை-கலைமான்; ஊர்-ஊர்தியாகக் கொண்டு செலுத்துகின்ற; மலைமகள்-பார்வதி / சதிதேவி / துர்க்கை)

'பெரும்புகழையுடைய சீதாதேவி, பொறுமையில் நிலமகளைக் காட்டிலும் நல்லவள்; செல்வத்தில் செந்தாமரை மலரில் வாழும் திருமகளைக் காட்டிலும் நல்லவள்; கல்வியில் கலைமகளைக் காட்டிலும் நல்லவள்; ஆற்றலிலும் கற்பிலும் கலைமானை ஊர்தியாகக் கொண்டு செலுத்தும் பார்வதி தேவியாகிய மலைமகள், துர்க்கை முதலானவர்களைவிட நல்லவள். அவள் கணவனாகிய இராமபிரானோ இவ்வுலகிற்குக் கண்போன்றவன். கற்றவர், கல்லாதவர் எல்லோரும் அவனைத் தாங்கள் உண்ணும் உணவினும், பருகும் நீரினும், அவ்வுணவாலும் நீராலும் நிலைபெறும் உயிரைக்காட்டிலும் மேம்பட்டவனாகக் கருதி மகிழ்வார்கள்'

Koviloor Digital Library

காவியத்தலைவனின் புகழ் கூறுவதற்கு முன் அதனோடு இணைத்து காவியத் தலைவியின் புகழ் கூறுவதும் காவிய மரபு. எனவேதான் முதல் இரண்டு அடிகளில் சீதாதேவியின் பெருமையைக் கூறிப் பின், அவள் கணவனான இராமபிரானது பெருமைகளைக் கூறுகிறான் கவிஞன். 'நல்லோள் கணவன்' என்பது பதிற்றுப்பத்து. முன்பு இராமபிரானை மும்மூர்த்திகளுக்கும் மேலான பரம்பொருள் என்று கூறியது போலவே, இங்கும் அம்மும்மூர்த்திகளின் தேவியராகிய திருமகள், கலைமகள், மலைமகள் மூவரின் ஆற்றலிலும் சீதாதேவி மேம்பட்டவள் என்று கூறுவது ஒரு நயம். உணவையும், நீரையும் உயிராகக் கருதுவதைவிட, அவ்விரண்டையும் உண்டாக்கித் தருகின்ற அரசனே உலகுக்கு உயிர் என்பது கருத்து. 'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பது புறநானூறு. 'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்' என்பார் நம்மாழ்வார். 'என்னில்யாரும் எனக்கு இனியாரில்லை; என்னினும் இனியான் ஒருவன் உளன்' என்பார் அப்பர்.

40. 'மனிதர், வானவர், மற்றுளோர் அற்றம் காத்து அளிப்பார்
இனி இம்மன்னுயிர்க்கு இராமனிற் சிறந்தவர் இல்லை;
அனையது ஆதலின் அரச! நிற்கு உறுபொருள் அறியில்,
புனித மாதவம் அல்லது ஒன்று இல்', எனப் புகன்றான். (1442)

(அற்றம்-துன்பம்; அளித்தல்-அருள்செய்தல்; மற்றுளார்-நாகர்; அறியின்-நினைக்குமிடத்து)

மன்னவனே! நிலவுலகத்து மனிதர்கள், விண்ணுலகத்துத் தேவர்கள், பாதாளத்து நாகர்கள் மற்றும் நிலைபேறுள்ள எல்லா உயிரினங்களுக்கும் துன்பம்நேராதுகாத்துஅருள்புரிவதில்இனிஇராமனுக்குச்சிறந்தவர்வேறு எவரும் இல்லை. அவனுடைய தன்மை அப்படிப்பட்டது. எனவே, தங்களுக்கு இப்பொழுது செய்யக்கூடிய செயல் என்ன என்று நினைத்துப் பார்க்குமிடத்து, தூய தெய்வத்தன்மை பொருந்திய பெருந்தவம் இயற்றுதலே அன்றி வேறு ஒன்றும் அல்ல' என்று வசிட்டன் கூறி முடித்தான்.

உற்ற நோய் தோன்றலும், உயிர்க்குறுகண் செய்யாமையும், வேண்டிய வேண்டியாங்கு எய்தலாலும் தவம் புனித மாதவம் எனப்பட்டது. வசிட்டன் இராமபிரானுக்கு முடிசூட்டற்குரிய தகுதிகள், அவன் பரம்பொருளின் அவதாரம், அவன் முடிசூட்டிக்கொள்வதால் மூவுலகு மட்டுமின்றி ஏனைய உயிர்களும் நன்மை பெறும் என்று கூறி, மன்னன் கருதியபடி தான் தவமேற்கொண்டு, இராமனுக்கு முடிசூட்டுவதே சரியானதாகும் என்று கூறிமுடிக்கிறான்.

Koviloor Digital Library

41. தசரதன் மகிழ்ச்சி

மற்று, அவன் சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில்
இற்ற அன்றினும், எறி மழுவாளன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான். (1443)

(பிஞ்ஞகன்-உருத்திரன் / சிவபெருமான்; இற்ற-ஒடிந்த; எறி-வீசுகின்ற; மழுவாளன்-மழுவினை உடைய பரசுராமன்; இழுக்கம்-தோல்வி / தாழ்வு / இழிவு; (பிஞ்ஞகம் என்னும் மயிற்பீலியாலாகிய தலைக்கோலத்தை உடைய உருத்திரன்) பிஞ்ஞகம்-சடை)

இவ்வாறு வசிட்ட முனிவன் சொன்ன அளவில், தான் பல ஆண்டுகள் தவம் செய்து இராமனைப் பெற்றெடுத்த அன்றைக் காட்டிலும், தலைக்கோலத்தை உடைய சிவபெருமானின் திரியம்பகம் என்னும் வில்லை மிதிலையில் இறுத்து சீதையை மணந்த அந்த நாளைக்காட்டிலும், வீசுகின்ற மழு என்னும் கோடாரியால் இருபத்தொரு குல அரசர்களைக் கொன்று குவித்த பரசுராமன் தோல்வியடைந்த அன்றைக் காட்டிலும், மிக்கதோர் மகிழ்ச்சியை தசரதன் அடைந்தான்.

மைந்தனைப் பெற்றெடுத்த அன்று எல்லோரும் மகிழ்வர். இது இயற்கை. ஆனால் தசரதன் அறுபதினாயிரம் ஆண்டு மாண்புற வாழ்ந்தும் மகப்பேறு வாய்க்கப்பெறாது, வாராதுபோல் வந்த மாமணி அல்லவா இராமன்? எனவே இவன் மகிழ்ச்சி சிறப்புக்குரியது. ஆனால், அந்த மகிழ்ச்சியைவிட அவன் சிவபெருமானது வில்லை ஒடித்தானே?அன்று ஏற்பட்ட மகிழ்ச்சி அதனினும் பெரிது. பின்னர், பரசுராமனைத் தோல்வியுறச் செய்தான் என்று தன் கண்களாலேயே பார்த்தானே அந்த மகிழ்ச்சி முன்னிரண்டு மகிழ்ச்சிகளைக் காட்டிலும் பெரிது. இப்பொழுது வசிட்டர் வாயால் சான்றோன் எனக் கேட்டானே, இம்மகிழ்ச்சிக்கு அளவே இல்லை என்பதாம்.

'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும்தன்மகனைச்சான்றோன்எனக்கேட்ட தாய்' என்ற குறளின் (69) விரிவுரைதான் இப்பாடல். சொற்களும்கூட அப்படியே கையாளப்பட்டிருப்பது காணத்தக்கது. ஈன்றது-மகனைப் பெற்றது. பொழுது-அன்று; பெரிதுவக்கும்-பெரியதோர் உவகையன்; தன்மகனை-மகனை; கேட்ட-கேட்டலும். முன்பு மூன்றுமுறை உவகை எய்தினான் எப்படி? 'கரை செல்லரியதோர் களிப்பின் வைகினான்' என்றான். ''மலையென வளர்ந்தன வயிரத் தோள்களே''; '' களிப்பெனும் கரையிலாக் கடலுள் ஆழ்ந்தனன் என்றான். இப்போது அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான் என முடிக்கிறான். இராமன் பிறந்த நாளில் தானும் தன் குடும்பமும் மகிழ்ந்தன; இராமன் வில் முறித்த நாளில் சனகன், மிதிலை நகர மக்களும் இன்பமுற்றனர்; பரசுராமனைச் தோல்வியுறச் செய்த நாளில் உலகில் உள்ள எல்லா அரசர் குலங்களும் மகிழ்ச்சியுற்றன. எனவே, ஒன்றைவிட மற்றொன்று மிக்க

Koviloor Digital Library

மகிழ்ச்சிக்குரியதாயிற்று. இப்போது வசிட்டர் வாயால் இராமன் சான்றோன் எனக் கேட்டதும் உயிர்க்குலம் அனைத்தும் இன்புறும் என்றதால் முன் மூன்று மகிழ்ச்சிகளிலும் மிக்க மகிழ்ச்சியடைந்தான் என்பதாம்.

42. தசரதன் வசிட்டரைப் பாராட்டுதல்

அனையதாகிய உவகையன், கண்கள் நீர் அரும்ப,
முனிவன் மாமலர்ப்பாதங்கள் முறைமையின் இறைஞ்சி
'இனிய சொல்லினை எம்பெருமான்! அருள்விழியின்
தனியன் நானிலம் தாங்கியது; அவற்கு இது தகாதோ?' (1444)

(அவற்கு-அவனுக்கு / இராமபிரானுக்கு; தகாதோ-பொருந்தாதோ)
குளகப்பாடல்.

அத்தகைய மகிழ்ச்சியடைந்த தசரதன், கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க, வசிட்ட முனிவனின் சிறந்த தாமரை மலர்போன்ற திருவடிகளை முறைப்படி சாஷ்டாங்கமாக வணங்கி, 'எம்பெருமானே! செவிக்கும் சிந்தைக்கும் இனிமை பயக்கும் சொற்களையே கூறியருளினீர்; நான் தன்னந்தனியனாக இந்த நான்கு நிலங்களின்-பூமியின் பாரத்தைத் தாங்கி அரசாட்சி செய்தது நின்றன் அருட்பார்வையினால் அல்லவா? அதே அருட்பார்வை இராமனுக்கு உரியதாகாதோ!'

நானிலம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களையுடைய பூமி;

43. 'எந்தை! நீ உவந்து இதம் சொல, எம்குலத்து அரசர்
அந்தமில் அரும்பெரும் புகழ் அவனியில் நிறுவி
முந்து வேள்வியும் முடித்து தம் இருவினை முடித்தார்;
வந்தது அவ்வருள் எனக்கும்' என்று உரை செய்து மகிழ்ந்தான். (1445)

(இதம்-நன்மை / இனியவை; அந்தம்இல்-எல்லையில்லாத; முந்து-முதன்மையான; முடித்தார்-போக்கிக் கொண்டனர்)

என் தந்தை போன்றவனே! நீ மகிழ்ச்சியோடு நன்மைதரும் இனிய சொற்களைச் சொல்லி வழிகாட்டியதால்தான் என் குலத்து முன்னோர்கள் எல்லையற்ற, அடைதற்கரிய பெரும்புகழை இவ்வுலகில் நிலைநிறுத்தினர்; முதன்மையான பல வேள்விகளையும் இயற்றித் தங்களது நல், தீவினைகளைப் போக்கிக் கொண்டனர். அதே உன்னுடைய அருட்பார்வை எனக்கும் கிடைத்தது' என்று கூறி மிக்க மகிழ்வெய்தினான்.

தசரதன் முன்னோர்களுக்கும் வசிட்டனே குலகுரு என்பது பெறப்பட்டது. குருவையும் தந்தையாகக் கூறுவது மரபு.

Koviloor Digital Library

44. சுமந்திரன் கூறத் தொடங்குதல்

பழுதுஇல் மாதவன் பின் ஒன்றும் பணித்திலன் இருந்தான்
முழுதும் எண்ணுறும் மந்திரக் கிழவர், தம் முகந்தால்
எழுதி நீட்டிய இங்கிதம், இறைமகற்கு ஏறத்
தொழுத கையினன், சுமந்திரன், முன் நின்று சொல்லும் (1446)

(பழுதுஇல்-குற்றமற்ற; பணித்தல்-பேசுதல்; எண்ணுறும்-ஆராய்கின்ற; இங்கிதம்-குறிப்பு; இறைமகன்-அரசன் / தசரதன்; ஏற- உள்ளத்தில் படும்படி)

குற்றமற்ற பெருந்தவத்தை உடையவனான வசிட்ட முனிவன் அதற்குப் பின் ஒன்றும் சொல்லாதவனாக இருந்தான். அரசியலுக்குரிய அணுகுமுறைகள் அனைத்தையும் நன்கு ஆராயும் இயல்புடைய அமைச்சர்கள், தம் முகம் என்னும் ஓலையில் எழுதிக் காட்டிய குறிப்பை உணர்ந்து கொண்ட சுமந்திரன் என்ற அமைச்சர்களுள் முதல்வனானவன், அரசனாகிய தசரதனுக்கு நன்கு உள்ளத்தில் பதியும்படி, தொழுத கைகளோடு, அவன் முன்நின்று பின்வருவனவற்றைக் கூறலானான்.

பழுதுஇல்மாதவன் என்றது, விசுவாமித்திரரைப் போல் இடையில் காமம் முதலியவற்றால் தவம் இடையறவு ஏற்படாமல் தொடர்ந்த தவத்தை உடையவன் என்பதைக் குறித்ததாகும். சுமந்திரன் தசரதனின் அமைச்சர்களில் முதல்வன். தேரோட்டும் சாரதி. சேனாதிபதி. அரசனுக்கு உற்ற துணைவன். சுமந்திரன் என்பதற்கு நல்ல ஆலோசனை செய்பவன் என்பது பொருள். குறிப்பு உணர்த்தற்கு முகமே கருவியாகும். 'கண்ணிற் சொல்லிச் செவியின் நோக்கும் இறைமாட்சி' என்பது நீதிநெறி விளக்கம்.

45. "உறத்தகும் அரசு இராமற்கு என்று உவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீ எனும் சொல் சுடும்; நின்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பதும் வழக்கு அன்று;
அறத்தின் ஊங்கு இனிக்கொடிது எனல் ஆவது ஒன்று யாதோ?" (1447)

(வழக்கு-நெறிமுறை; ஊங்கு-காட்டிலும் / மேம்பட்டது; தருமம்-நியதி)

இராமனுக்கு முடிசூட்டி அவன் அரசாட்சி செய்வான் என்று மகிழ்கின்ற எங்கள் மனத்தை, நீ எங்களைப் பிரிந்து, தவம் இயற்றச்சென்று விடுவாய் என்று சொல்லும் சொல் சுட்டு வருத்துகின்றது. என்றாலும், மூத்தவனுக்கு முடிசூட்டி, தான் துறவு பூண்டு தவம் இயற்றச் செல்லுதல் என்ற உன்னுடைய சூரியகுல முன்னோர்கள் செய்துவருகின்ற நியதியை மறப்பதும் முறையாகாது. எனவே அறத்தினைக் காட்டிலும் கொடிய செயல் என்பது வேறு ஏதேனும் உளதோ? ஒன்றும் இல்லை.

"இராமன் அரசாட்சி செய்யப் போகின்றான் என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி. ஆனால் அதேசமயம் நீ எங்களைவிட்டுப் பிரிந்து கானகம் சென்று

Koviloor Digital Library

தவத்தில் ஈடுபடப் போகிறாய் என்பதில் வருத்தம். என்றாலும் பரம்பரையாகச்செய்து வரும் பழக்கமான மூத்தவனுக்கு முடிசூட்டி, தான் தவம் செய்தல் சூரியகுல மரபாதலின் அதனை மறத்தல் தகாது. எனவே, அறம் என்பதே கொடியதாம்'' எனச் சுமந்திரன் கூறுகிறான். அன்புடையாரைப் பிரிதல் என்பது தீச்சுடுதலை ஒக்கும். 'பசைந்தாரில் தீர்தலில், தீப்புகுதல் நன்று' என்பது நான்மணிக்கடிகை. பசை-அன்பு; தீர்தல்-நீங்குதல்.

46. 'புரைசை மாக்கரி நிருபர்க்கும், புரத்து உறைவோர்க்கும்
உரைசெய் மந்திரக் கிழவர்க்கும், முனிவர்க்கும், உள்ளம்
முரைசம் ஆர்ப்ப, நின்முதல் மணிப்புதல்வனை முறையால்
அரைசன் ஆக்கிப் பின் அப்புறத்து அடுத்தது புரிவாய்!' (1448)

(புரைசை-யானைக்குக் கழுத்தில் இடும் கயிறு; கரி-யானை; நிருபர்-அரசர்; புரம்-நகரம்; உரைசெய்தல்-வரும் பொருள் உரைத்தல்)

'கழுத்திலிடப்படும் கயிற்றையுடைய பெரிய யானைப் படையை உடைய மன்னர்களுக்கும், அயோத்தி நகரத்தில் வாழும் மக்களுக்கும், வரும் பொருள் உரைக்கும் அமைச்சர்களுக்கும், வசிட்டன் முதலிய முனிவர்களுக்கும் அவர்கள் உள்ளம் முரசு அடிப்பது போல மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளும்படி உன்னுடைய மூத்த புதல்வனும், நீல மணி போன்ற நிறமுடையவனுமாகிய இராமனுக்கு வேத முறைப்படி முடிசூட்டி அரசன் ஆக்கியதன் பின், இல்லறத்திற்கு அப்புறத்ததாகிய துறவறத்தை மேற்கொள்ளும் செயலைச் செய்வாயாக' என்று சுமந்திரன் கூறினான்.

அரசியலில் சிற்றரசர்களுக்கும், ஊர்ப் பொதுமக்களுக்கும், மந்திரிகளுக்கும், முனிவர்களுக்கும் அவரவர்களுக்கு உரிய பணிகள் உண்டு என்பதைக் குறிக்கவே அனைவரும் மகிழ என்றான். எங்களைப் பிரிந்து தவம் இயற்றச் செல்வாயாக என்று நேராகக் கூற முடியாமல், 'அப்புறத்து அடுத்தது புரிவாய்' என்கிறான்.

47. இராமனை அழைத்துவருமாறு சுமந்திரனிடம் கூறுதல்

என்றவாசகம் சுமந்திரன் இயம்பலும், இறைவன்
'நன்றுசொல்லினை; நம்பியை நளிமுடி சூட்டி,
நின்று நின்றது செய்வது; விரைவினில் நீயே
சென்று, கொண்டுஅணை திருமகள் கொழுநனை' என்றான். (1449)

(நளி-பெரிய / பெருமை; நம்பி-ஆடவரிற் சிறந்தோன்; நின்றது-எஞ்சி நின்றது / தவம் செய்யச் செல்வது)

என்று அந்த வார்த்தைகளைச் சுமந்திரன் கூறியதும், அரசனான தசரதன் 'நல்லதையே கூறினாய். ஆடவரிற் சிறந்தவனாகிய இராமனுக்குப் பெருமை பொருந்திய முடியினைச் சூட்டிவிட்டுப் பின்னர் தான் எஞ்சி

Koviloor Digital Library

நிற்பதாகிய தவம் செய்தலைச் செய்ய வேண்டும். எனவே நீயே விரைவினிற் போய், திருமகள் போன்ற சீதாதேவியின் கணவனான இராமனை அழைத்துக் கொண்டு வருவாயாக' என்று கூறினான்.

இயம்புதல் என்பது மென்மையாகத் தெரிவித்தலைக் குறிக்கும். முடி சூட்டும் நல்வினை நிகழும் போது வருத்தத்திற்குரிய காடேகுதலைச் சொல்ல வேண்டாம் என்று எண்ணிய கவிஞன், நின்றது என்ற பொதுச் சொல்லால் கூறியதிறம் வியத்தற்குரியது. முன்பு திருவின் கேள்வன் என்றான். இங்கே திருமகள் கொழுநன் என்றான். பின்னர் திருவின் நாயகன் என்பான். இராமன் என்று பெயரிட்டோ, தன் மகன் என்றோ புதல்வன் என்றோ கூறாமல் திருமகள் கொழுநன் என்று குறிப்பிட்டது கருதத்தக்கது. என்றாலும் நின்றது என்றலால் முடிசூட்டு விழா தடைப்பட்டு நிற்கப்போகிறது என்பதை உள்மனம் வார்த்தையாய்க் கொட்டி விட்டதோ? ''கடவும், கயவும், நளியும் பெருமை'' என்பது தொல்காப்பியம்.

48. சுமந்திரன் இராமன் அரண்மனையை அடைதல்:

அலங்கல் மன்னனை அடிதொழுது, அவன்மனம் அனையான்
விலங்கல் மாளிகை வீதியில் விரைவொடு சென்றான்;
தலங்கள் யாவையும் பெற்றனன் தான்எனத் தளிர்ப்பான்
பொலன்கொள் தேரொடும் இராகவன் திருமனை புக்கான். (1450)

(அலங்கல்-மாலை; விலங்கல்-மலை; தலங்கள்-நாடுகள்; தளிர்த்தல்-பூரிப்படைதல்; பொலன்-பொன்; இராகவன்-இரகு மரபில் தோன்றியவன்)

மலர் மாலை அணிந்த மன்னனாகிய தசரதனது திருவடிகளைத் தொழுது, அவன் குறிப்பறிந்து ஒழுகும் தன்மையுடையவனான சுமந்திரன், மலைபோலும் மாளிகைகள் நெருங்கியிருந்த அரச வீதியில் விரைவாகச் சென்று, இந்நாடுகள் பூராவும் தானே அரசாட்சி செய்யும் பேறு பெற்றதைப் போல் மனம்மிக மகிழ்ந்து பூரித்து, பொன்னாலியன்ற தேரில் ஏறி, இராகவன் உறையும் அழகிய அரண்மனைக்குள் புகுந்தான்.

மலைபோல மாளிகை என்பதை 'மலையென, மழையென மாடம் ஓங்கி' என்று கூறும் மலைபடுகடாம். அமைச்சர்கள் அரசனோடு ஒத்த கருத்து உடையவர் என்பதை அவன் மனம் அனையான் என்ற சொற்களால் குறித்தார். தனக்கே முடிசூட்டி அரசாட்சி கிடைத்ததைப் போலப் பூரித்தான் என்று கூறியது ஒரு நயம்.

49. சுமந்திரன், இராமனும் சீதையும் ஒருங்கிருக்கக் காணுதல்:

பெண்ணின் இன்னமுது அன்னவள் தன்னொடும், பிரியா
வண்ண வெம்சிலைக் குரிசிலும் மருங்கு இனிது இருப்ப,

Koviloor Digital Library

அண்ணல் ஆண்டு இருந்தான்; அழகு அருநறவு என்னக்
கண்ணும் உள்ளமும் வண்டு எனக் களிப்புறக்கண்டான். (1451)

(வண்ண-அழகிய; வெம்-கொடிய; சிலை-வில்; குரிசில்-இலக்குவன்; நறவு-தேன்; களி-கள் குடித்த மகிழ்ச்சி களிப்பு)

பெண்களுக்குள் இனிய அமுதம் போன்றவளான சீதா தேவியுடனும், என்றும் தன்னை விட்டுப் பிரியாது அழகிய கொடிய வில்லைக் கையில் ஏந்தி நிற்கும் ஆடவரிற் சிறந்தோனாகிய இலக்குவனும், தனது இரு பக்கங்களிலும் இனிதாக இருக்க, பெருமைக்குரிய இராமபிரான் அங்கே வீற்றிருந்தான். அந்த அழகிய காட்சி தேன் குடிப்பது போன்றிருந்தது. தன் கண்களும் உள்ளமும் வண்டாக மாறித் தேனைக் குடிப்பது போலக் களிப்படைந்தான் சுமந்திரன்.

இலக்குவனும்சீதாதேவியும் இருமருங்கும் இருப்ப இடையில் இருந்த இராமனின் அழகு மிக்குத் தோன்றியது என்பதாம்.

50. இராமன் தேரில் ஏறுதல்;

கண்டு, கைதொழுது, 'ஐய! இக்கடலிடைக் கிழவோன்
உண்டு ஓர்காரியம் வருக' என உரைத்தனன்' எனலும்
புண்டரீகக் கண் புரவலன் பொருக்கென எழுந்து, ஓர்
கொண்டல்போல் அவன்கொடி நெடுந்தேர் மிசைக்கொண்டான். (1452)

(இடை-சூழ்ந்த; கிழவோன்-உரிமையுடையவன்; புண்டரீகம்-தாமரை மலர்; கொண்டல்-மேகம்; புரவலன்-காப்பாற்றவல்ல அரசன்; பொருக்கென-விரைவாக)

அங்கே சுமந்திரன் இராமனைக் கண்டு கைதொழுது, ''தலைவனே! இந்தக் கடல் சூழ்ந்த உலகத்திற்கு உரிமையுடையவனான தசரதன், ஒரு நற்காரியம் நிகழ இருக்கிறது இராமனை அழைத்து வருக!' என்று ஆணையிட்டார்'' என்று கூறினான். உடனே செந்தாமரை மலர் போன்ற கண்களையுடைய அரசனான இராமன், விரைவாக எழுந்து, ஒப்பற்ற ஓர் கார்மேகம் போல, சுமந்திரன் கொண்டு வந்திருந்த கொடி கட்டப்பட்ட பெரிய தேரில் ஏறிக்கொண்டான்.

தந்தை என்னாது கடலிடைக் கிழவோன் என்றது அரசனின் ஆணை, தந்தையின் அழைப்பு அல்ல என்பதைக் குறிப்பால் உணர்த்துவதாகும். மேகம் நடந்து சென்று தேரேறுவதைப் போல இருந்தது இராமன் தேர் ஏறிய தோற்றம் என்பதாம். 'பழமுதிர்சோலை மலை கிழவோனே' என்பது திருமுருகாற்றுப்படை.

51. இராமன் தேரில் செல்லுதல்:

முறையின் மொய்ம் முகில்என முரசு ஆர்த்திட, மடவார்
இறைகழன்ற சங்கு ஆர்த்திட, இமையவர் 'எங்கள்

Koviloor Digital Library

குறைமுடிந்தது' என்று ஆர்த்திடக் குஞ்சியைச் சூழ்ந்த
நறை அலங்கல் வண்டு ஆர்த்திடத் தேர்மிசை நடந்தான். (1453)

(மொய்-நெருங்கிய; முகில்-மேகம்; ஆர்த்திட-முழங்க / ஒலியெழுப்ப / ஆரவாரிக்க; மடவார்-பெண்டிர்; இறை-முன்கை; சங்கு-வளையல்கள்; இமையவர்-தேவர்கள்; குஞ்சி-ஆண்களின் தலைமயிர்; நறை-தேன்; அலங்கல்-மலர் மாலை; மிசை-மேல்; குறை-காரியம் / வருத்தம்)

நெருங்கிய மேகம் போல முறையாக முரசங்கள் ஒலித்திடவும், மடப்பம் பொருந்திய பெண்டிர்களின் முன் கையிலிருந்த சங்கு வளையல்கள் கழன்றதனால் எழுந்த ஓசை கேட்கவும், தேவர்கள், தாங்கள் கருதி வந்த காரியம் நிறைவேறப் போகிறது' என்று மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்யவும், இராமன் அணிந்திருக்கின்ற தேன் பொருந்திய தலை மாலையில் சூழ்ந்திருக்கின்ற வண்டுகள் ரீங்காரம் இடவும், இராமன் தேரின் மீது சென்றான்.

மன்னர்கள் ஊர்வலம் செல்ல எழும்போது முரசுகள் ஒலித்தல் முறை; முரசின் முழக்கத்திற்கு முகிலின் இடிமுழக்கம் உவமை. பெண்டிர் தம் கருத்து முற்றுப் பெறவில்லையே என்று ஏங்கியதால் உடல் மெலிந்து கைகள் சோர்ந்து, கைவளைகள் நெகிழ்ந்தன. தேவர்கள் தங்கள் காரியம் முடிந்தது போலவே ஆரவாரித்தனர்; வண்டுகள் தேன் குடித்த மதக்களிப்பால் ஆரவாரித்தன. இதனால் ஒரு பெருங்கருத்தைக் கூறுகிறான் கம்பன். மகளிர் தாம் அவனைத் தழுவ முடியவில்லையே என்ற தன் ஆசை நிறைவேறாமையால் முணு முணுப்பு, எனவே வளையலின் ஒலி; தேவர்கள் தங்கள் காரியம் முடிந்து விடும் என்ற நம்பிக்கையினால், துணிவினால் ஆரவாரித்தனர். ஆனால் வண்டுகளுக்கோ, அவனை நன்கு தழுவி அதனால் உண்டாகிய இன்பத்தால் ஆன மகிழ்ச்சிக் களிப்பு.

இறைவனைப் பற்றியே எண்ண முடியாதவர்கள் இடி முழக்கம் போல ஆரவாரம் செய்வர். இறைவனைப் பற்றி எண்ணி, மனத்தில் இருத்தி அடைய முடியாதவர்கள் தோல்வியால் முணுமுணுப்பர்; இறைவனை எப்படியும் அடைய முடியும் என்ற துணிவு கொண்டவர்கள் அதற்கான வழி முறைகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியில் திளைப்பர். ஆனால் இறைவனைக் கண்டு அவன் தாள் பணிந்து ஒன்றானவர் மகிழ்ச்சிக் குரல் வெளிக்கேட்காது. வண்டுகளின் ரீங்காரம் போல் இறைவன் செவிகளில் மட்டுமே கேட்டுக் கொண்டிருக்கும் என்ற ஒரு அரிய கருத்து உணர்த்தப்பட்டது.

52. பெண்கள் அடைந்த நிலை:

பணை நிரந்தன; பாட்டுஒலி நிரந்தன; அனங்கன்
கணை நிரந்தன; நாண்ஒலி கறங்கின; நிறைப்பேர்
அணை நிரந்தன அறிவெனும் பெரும்புனல்; அனையார்
பிணை நிரந்து எனப்பரந்தனர், நாணமும் பிரிந்தார். (1454)

Koviloor Digital Library

(பணை-முரசம் / வாத்திய ஒலி; நிரந்தன-கடந்தன / பரவின; அனங்கன்-அங்கமில்லாதவன் / மன்மதன்; பிணை-மான் கூட்டம்; நிறை-மன அடக்கம்; அறிவு-உணர்ச்சி; கறங்குதல்-ஒலித்தல்)

இராமபிரான் வீதியுள் நுழையும் பொழுது, முரசங்கள், பல வகை வாத்தியங்கள் முழங்கின; வாய்ப் பாட்டொலியும் நிறைந்தது; உருவமில்லாத மன்மதன் தன் மலரம்புகளைப் பெண்கள் மேல் தூண்டினான்; அதனால் அவனுடைய வில்லிலிருந்து நாண், ஒலி செய்தது. பெண்டிர் தங்கள் மன அடக்கம் என்னும் நிறைவை, அறிவு என்னும் வெள்ளம் தடுத்து நிறுத்தமுடியாது கரைகடந்தது. அத்தகைய மகளிர் நாணத்தையும் துறந்து, மான் கூட்டங்கள் போல மிதிலை நகர வீதிகளில் வந்து கூட்டம் கூட்டமாய் நின்றிருந்தனர்.

உணர்ச்சி வெள்ளம்; நிறை அணை; மன்மதனின் நாணிலிருந்து எழுந்த மலரம்புகள், மகளிர் உள்ளங்களில் தைத்து, இராமபிரான்பால் காதல் உணர்ச்சியைத் தூண்டி விட்டன. அதனால் அவர்கள் தம் நிறையழிந்து, நாணம் துறந்து, வீதிகளில் கூட்டமாக நின்றனர் என்பதாம். பணை கருவிகளால் பிறக்கும் ஒலி; பாட்டு கண்டத்தால் பிறக்கும் ஒலி.

53. தாமரை பூத்த தடாகங்கள்;

நீள் எழுத்தொடர் வாயினும் குழையொடும் நெகிழ்ந்த;
ஆளகத்தினொடு அரமியத் தலத்தினும் அலர்ந்த;
வாள் அரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்கச்
சாளரத்தினும் பூத்தன தாமரை மலர்கள். (1455)

(நீள்-நீண்ட; எழு-தூண்கள்; குழை-காதணி; நெகிழ்ந்த-மலர்ந்தன; ஆளகம்-அளகம் / கூந்தல்; அரமியத்தலம்-நிலா முற்றம் / உப்பரிகை; சாளரம்-சன்னல் / பலகணி / காலதர்; அரத்தம்-குருதி / இரத்தம்; மயங்க-கலக்க; வாய்-வாயில்)

இராமன் உலாவரும் போது, வீதியின் கண் வந்து நின்று கண்டு களித்த மகளிர் தவிர, வேறு சில மகளிர், மாளிகைகளின் வாயில்களில் நீண்ட தொடர்ச்சியாக அமைக்கப்பட்ட தூண்களைப் பிடித்துக் கொண்டும் நின்றனர்; மற்றும் சிலர் அவிழ்ந்த கூந்தலோடு நிலா முற்றமாகிய உப்பரிகைகளில் நின்று கொண்டிருந்தனர். இவர்களுடைய முகங்களைத் தாமரை மலர் பூத்திருப்பதற்கு நிகராகக் கூறுகிறான் கவிஞன். மற்றும் சிலபெண்கள் ஒளி பொருந்திய வாள் போன்றும், இரத்தம் தோய்ந்த வேல் போலும் கரிய புருவமாகிய வண்டுகளொடும், கெண்டை மீன்கள் தத்தம்மில் கலந்து நின்றாற்போல அம்மாளிகைகளின் சன்னல்களில் இருந்தும் இராமன் உலா வந்தமையைக் கண்டனர்.

பெண்டிர், மாளிகைகளின் வாயிலிலும், முற்றத்திலும், சன்னல்களிலும் மகிழ்ச்சியுடன் பார்த்தனர் என்பதாம். அவ்வாறு பார்த்த பெண்டிரின் முகங்களைத் தாமரை மலராக உருவகித்தான். பெண்களின்

Koviloor Digital Library

கண்கள் வாள் போன்று நீட்சியும், வேல் போன்று கூர்மையும், வண்டு போன்று மதர்ப்பும், கெண்டை மீனை ஒத்த பிறழ்ச்சியும் உடையன என்று உருவகித்தான். (புருவம்-வாள்; செவ்வரி படர்ந்த கண்-குருதி படிந்த வேல்; கருவிழி-வண்டு; பிறழ்ந்து புடைபெயரும் கண்கள்-கெண்டை மீன்கள்) 'மாலை தாழும் மாடவாய் நிலத்தகத்து மங்கைமார் வேலவாள் நெடுங்கணே விலங்க நின்று இலங்கலால், சால வாயில் தாம் எலாம் ஓர் தாமரைத் தடத்திடை, நீலமாமலர்க் குழாம் நிரந்து அலர்ந்த நீரவே' என்பது சூளாமணி.

54. கற்பும், நாணமும் தொடர்ந்து செல்லுதல்;

மண்தலம் தரு மதிகெழு மழைமுகில் அனைய
அண்டர் நாயகன், வரைபுரை அகலத்துள் அலங்கல்
தொண்டை வாய்ச்சியர் நிறையொடும் நாணொடும் தொடர்ந்த
கெண்டையும்உள கிளைபயில் வண்டொடும் கிடந்த. (1456)

(அண்டர் நாயகன்-தேவர் தலைவன்; வரை-மலை; புரை-போன்ற; அகலம்-மார்பு; அலங்கல்-மலர் மாலை; தொண்டை-கொவ்வைக்கனி; கிளை-கைகக்கிளை என்னும் இசை; கெண்டை-கண்கள்; மண்டலம்-வட்டம்; மண்தலம்-நிலவுலகம்)

இந்நிலவுலகம் தந்த சந்திரனைத் தன் பால் கொண்ட கார்மேகம் போன்ற மேனியையுடைய, எல்லாத் தேவர்களுக்கும் தலைவனான இராமபிரானின் மலை போன்ற மார்பினில் கிடக்கும் மாலையில், கொவ்வைக்கனி போலும் சிவந்த வாயினைப் பெற்ற மகளிர் தமது மன அடக்கம், கற்பு, நாணம் முதலியவற்றைத் தொடர்ந்து இப்பொழுது தங்கள் கண்களாகிய கெண்டை மீன்களும், அம்மாலையில் முன்னரே படிந்து, கைக்கிளை என்னும் பண்ணை இசைத்துக் கொண்டிருக்கும் வண்டுகளோடு சேர்ந்து கொள்வதாயின.

இராமபிரானைக் காணவந்த மகளிரின் மன உறுதியும், நாணமும் முன்னரே அவனைத் தொடர்ந்து போய்விட்டது. இப்போது அவர்களுடைய கண்களும் அவன் தனது மார்பில் அணிந்திருக்கும் மலர் மாலையில் படிந்திருக்கும் வண்டுகளோடு ரீங்காரம் இட்டுக் கொண்டு சென்றுவிட்டது. சந்திரனும் மேகமும் வானத்தில் இருக்குமே தவிர மண்ணுலகில் வாராதன. எனவே இராமபிரானின் முகமும், மேனியும் மண்ணிற்கு வந்த சந்திரனும் மேகமும் என்றான். 'வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்து' என்பது பெரியபுராணம்.

55. மகளிர்க்கு ஏற்பட்ட மெய்ப்பாடுகள்:

சரிந்த பூஉள மழையொடு கலைஉறத் தாழவே;
பரிந்த பூஉள பனிக்கடை முத்தினம் படைப்ப;
எரிந்த பூஉள இளமுலை இழைஇடை நுழைய;
விரிந்த பூஉள மின்உடை வான் நின்றும் வீழ்வ. (1457)

Koviloor Digital Library

(மழை-மேகம்; பனி-குளிர்ந்த; முத்து-கண்ணீர்த்துளி; படைப்ப-தோற்றுவிக்க; இழை-அணிகலன்கள்; பரிதல்-நீக்குதல் / அறுதல் / நழுவுதல்; மின்உடை-மின்னுகின்ற ஆடை; கலை-பூரண சந்திரன்)

தெருவில் தேரில் செல்லும் இராமபிரானை மகளிர் தம் மாளிகைகளில் உள்ள மாடங்களில் ஏறிநின்று பார்க்கின்றனர். எனவே அவர்கள் குனிந்து பார்க்க வேண்டியதாயிற்று. அப்பொழுது அவர்களது மேகம் போன்ற கூந்தல் சரிந்தும், பிறைச்சந்திரனைப் போன்ற முகம் தாழ்ந்தும் காணப்படுகின்றன. அந்தக் கூந்தலிலிருந்து நீக்கிய குவளைப் பூப்போன்ற கண்களினின்றும் முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகள் சொரியலாயின. அவ்வாறு வந்த கண்ணீரின் வெப்பம், அவர்கள் மார்பில் அணிந்திருந்த மாலையிலுள்ள பூக்களை எரிக்கலாயின.

கூந்தல் சரிதல்; கண்ணீர் துளித்தல், இளமுலை பூரித்தல், ஆடை நெகிழ்தல் முதலியன காதல் மிகக் கொண்டோர்க்கு ஏற்படும் இயல்பான மெய்ப்பாடுகள். இதில் கூந்தல் சரிதலை 'கூழை விரித்தல்' என்னும் மெய்ப்பாடாகப் பேசுகின்றன தமிழ் இலக்கியங்கள். மகளிர் தலையிலிருந்து பூக்கள் சரிகின்றன; அவர்களின் மலர்போன்ற கண்கள் நீர்த் துளிகளைத் தோற்றுவிக்கின்றன; அவை மார்பில் அணிந்திருக்கின்ற மலர் மாலைகளை வெதுப்புகின்றன. இளமையான தனங்களிடையே உள்ள அணிகலன்களில் நுழைந்து அதனைச் சார்ந்துள்ள இடையிலிருந்த ஆடைகள் நெகிழ்ந்து கீழே விழுகின்றன, என்று ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்திக் கூறிய நயம் உணரத்தக்கது.

இதற்கு இன்னொரு பொருள் கூறுவாரும் உள்ர். இராமபிரான் தேரோட்டிச் சென்ற தெருக்களில் மகளிர் விரக தாபத்தால் சரிந்த மலர்களும், அவர்கள் உடல் வெப்பத்தால் கரிந்த மலர்களும், தேவர்கள் மகிழ்ச்சியால் சொரிந்த மலர்களும் நிறைந்து இருந்தன என்பதும் பொருந்தும்.

56. வள்உறை கழித்து ஒளிர்வன வாள் நிமிர்மதியம்
தள்ளுறச் சுமந்து எழுதரும் தமனியக் கொம்பில்
புள்ளி நுண் பனிபொடிப்பன பொன் இடைப்பொதிந்த
எள்உடைப் பொரி விரவின உளசில இளநீர். (1458)

(வள்-வளவிய / வன்மையான; உறை-இமைகள்; நிமிர்-ஓங்கிய; மதியம்-சந்திரன்; தமனியம்-பொன்; பனி-வியர்வைத் துளிகள்; பொடிப்பன-தோன்றுவன; பொன்-பசலை; சில-இரண்டு)

இராமபிரானைக் கண்டவுடன் இமைகளாகிய வளம் மிக்க உறைகளை நீக்கி, ஒளி வீசுகின்ற கண்களாகிய வாள்களுடன் பிரகாசிக்கின்ற முகமாகிய சந்திரனைத் தள்ளாடும்படி சுமந்து எழுகின்ற பெண்டிர் களாகிய பொற்கொம்புகளில், இரண்டு தனங்களாகிய இள நீர்கள் நுண்ணிய குளிர்ந்த வியர்வைத்துளிகள் புள்ளிகளைப் போலத் தோன்று வனவாயும் இடையிடையே பசலையாகிய பொற்பொடி கலந்தனவாயும்

Koviloor Digital Library

ஆன தேமல்களாகிய எள்ளின் பொரிகள் பரந்து தோன்றுவனவாயும் உள்ளன.

மங்கையர் பொற்கொடிகள்; அவர்கள் இமைகள் வாளின் உறைகள்; கண்கள் வாள்கள்; முகம் முழு நிலவு; வியர்வைத்துளி-பனித்துளி; தேமல்-பொன்; பசலை-எள்பொரி; தனங்கள்-இளநீர்; இது உருவகப் பாடல். சில என்பது இரண்டு என்ற பொருளில் திருமுருகாற்றுப்படையில் கையாளப் பெற்று இருப்பதால் இங்கும் இரண்டு என்றே பொருள் கொள்ளப்பட்டது. ''சில்காழ் அல்குல்'' என்பதற்கு இரண்டு மணி வடங்கள் பூட்டப்பெற்ற நிதம்பம் என்பார் நச்சினார்க்கினியார்.

57. இராமபிரான் தசரதன் அருகில் வருதல்:

ஆயது அவ்வழி நிகழ்தர, ஆடவர் எல்லாம்
தாயை முன்னிய கன்றுஎன நின்று உயிர்தளிர்ப்பத்
தூயதம்பியும், தானும், அச்சுமந்திரன் தேர்மேல்
போய், அகம் குளிர்ப் புரவலன் இருந்துழிப் புக்கான். (1459)

(முன்னிய-முன்வரக்கண்ட; தளிர்ப்ப-மகிழ; வழி-இடம்)

இவ்வாறு மகளிரெல்லாம் மகிழ்ச்சியுற்றிருக்க, அங்கிருந்த மைந்தர்கள் எல்லோரும், தாய்ப்பசுவை முன்வரக்கண்ட கன்று போல நின்று உள்ளமும் உயிரும் மகிழ்ச்சியடைய, தூயவனாகிய தம்பி இலக்குவனுடன், தானும் அந்தச் சுமந்திரன் செலுத்திக் கொண்டு வந்த தேரில் ஏறிப்போய், மனம் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் புரவலனாகிய தசரத மன்னன்இருந்த மந்திராலோசனைமண்டபத்தைச்சென்றடைந்தான் இராமன்.

மகளிர் நிலையினை, மேற்கண்ட ஐந்து பாடல்களில் விரிவாகச் சொன்ன கவிஞன், ஆடவர் மகிழ்ச்சியை ஒரே பாடலில் ஒரே அடியில் கூறிய திறம் நோக்கத்தக்கது. ஏனெனில் பெண்டிர் நிலை தடுமாறிப் பல்வேறு மெய்ப்பாடுகள் உற்றனர். ஆயின் ஆடவர் எல்லாம் ஒரே தன்மையாய்த் தாயை முன்னிய கன்று என நின்று உயிர் தளிர்த்தனர். தூயதம்பியும் உடன் வந்தான் என்று கம்பன் கூறுகிறான். வான்மீகம், இராமன் தனித்து வந்ததாகவே கூறுகிறது. பால் சுரந்து காக்கும் தாய்ப்பசுவைக் கண்டு மனம் மகிழும் கன்றுகளைப் போல, எல்லா நலன்களையும் தந்து காக்கவல்ல இராமபிரானைக் கண்டதும் ஆடவர் தம் உயிர் தளிர்த்தார்கள் என்பதாம். அன்புடையார்க்கு எடுத்துக்காட்டாக பசுவையும் கன்றையும் கூறுவது கவிமரபு.

58. தசரதன் இராமபிரானைக் கட்டித் தழுவுதல்:

மாதவன்தனை வரன் முறை வணங்கி, வாள் உழவன்
பாதபங்கயம் பணிந்தனன்; பணிதலும், அனையான்

Koviloor Digital Library

காதல்பொங்கிடக் கண்பனி உகுத்திடக் கனிவாய்ச்
சீதைகொண்கனைத் திருஉறை மார்பகம் சேர்த்தான். (1460)

(பங்கயம்-பங்கஜம் / தாமரை; காதல்-அன்பு; உகுத்திட-சிந்திட; கனி-கொவ்வைக்கனி; கொண்கன்-கொழுநன் / கணவன்; பனி-கண்ணீர் / உவகைச் கலுழ்ச்சி; திரு-இராஜ்யலக்ஷ்மி / அரசச் செல்வம்; திரு அழகுமாம்)

மந்திராலோசனை மண்டபத்துள் புகுந்த இராமபிரான் தொன்று தொட்டுவரும் முறைப்படி முதலில் சிறந்த தவத்தினனான வசிட்டனை வணங்கினான். பின்னர் தன் வாட்படையினால் பகைவர்களை உழுது கொல்லும் தசரதச் சக்கரவர்த்தியின் தாமரை மலர் போன்ற பாதங்களில் விழுந்து வணங்கினான். அவன் வணங்கி எழுந்த அளவில் தசரதன் அன்பு மேலிட்டுப் பொங்கவும், கண்கள் ஆனந்தக் கண்ணீரை உகுக்கவும், கொவ்வைப்பழம் போன்ற சிவந்த உதடுகளை உடைய சீதா தேவியின் கணவனான இராமபிரானது திருமகள் உறைகின்ற அழகிய மார்பினில் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

வாள் உழவன் என்பது வாளாகிய கலப்பை கொண்டு, பகைவர் மார்பாகிய நிலத்தை உழுபவன் எனப்பொருள் படும். வள்ளுவன் வீரர்களை 'வில்லேர் உழவர்' என்றும் அறிஞர் பெருமக்களை 'சொல்லேர் உழவர்' என்றும் குறிப்பிடுவது போலக் கம்பனும் மன்னனை 'வாளேர் உழவன்' என்று கூறுகிறான். 'வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்கச் சொல்லேர் உழவர் பகை' என்பது குறள் 872. திருஉறை மார்பகம் என்று பின்னால் சொல்வதற்காகத் தான் முன்னர் தன் மகன் என்னாது சீதை கொண்கன் என்றான்.

59. இராமன் தகுதியை அளத்தல்:

நலம்கொள் மைந்தனைத் தழுவினன் என்பது என்? நளி நீர்
நிலங்கள் தாங்குறும் நிலையினை நிலையிட நினைந்தான்;
விலங்கல் அன்ன திண் தோளையும், மெய்த்திரு இருக்கும்
அலங்கல் மார்பையும், தனது தோள், மார்பு கொண்டு அளந்தான். (1461)

(நலம்-நன்மைகள்; நளி-பெரிய; நீர்-கடல்; நிலையிட-அளவிட; விலங்கல்-மலை; மெய்-உண்மையான; அலங்கல்-மாலை; திரு-விஜயலட்சுமி)

எல்லா நற்குணங்களையும் கொண்ட இராமபிரானாகிய தன் மைந்தனைத் தழுவிக் கொண்டான் என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்? பெரிய கடல்கள் சூழ்ந்துள்ள இந்நிலவுலகத்தின் ஆட்சிப்பாரத்தைத் தாங்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டா என்று அளந்து பார்க்க நினைத்தான் தசரதன். அதனால் இராமபிரானுடைய மலை போன்று உறுதிவாய்ந்த தோள்களையும், உண்மையான திருமகள்

Koviloor Digital Library

உறையும் மலர் மாலை அணிந்த மார்பினையும் தன்னுடைய தோள், மார்பு ஆகியவற்றை அளவுகோலாகக் கொண்டு அளந்து பார்த்தான் என்பதே பொருந்தும்.

தசரதன் இராமனைத் தழுவியது அன்பினால் மட்டுமல்ல. தான் இதுகாறும் தாங்கி வந்த உலகத்தைத் தாங்குவதற்குரிய ஆற்றலும் வல்லமையும் தன் மகன் பெற்றிருக்கிறானா என்று தெரிந்து கொள்ளவே தன்னுடைய தோளையும், மார்பையும் அளவு கோலாகக் கொண்டு அவனுடைய தோளாற்றலையும் உளவாற்றலையும் அளந்து பார்த்தான் என்பதாம். மன்னன் மார்பில் திருமகள் உறைவதாகச் சொல்லுவது ஒரு மரபும் கூட. இராமன் திருமாலின் அவதாரம். எனவே அவன் மார்பில் திருமகள் உறைவதை மெய்த்திரு என்ற சொல்லால் குறிப்பித்தார்.

60. தசரதன் இராமபிரானை வேண்டுதல்:

ஆண்டு, தன்மருங்கு இரீஇ, உவந்து, அன்புற நோக்கிப்
‘பூண்ட போர்மழு உடையவன் நெடும்புகழ் குறுக
நீண்டதோள் ஐய! நிற்பயந்து எடுத்த யான், நின்னை
வேண்டி எய்திட விழைவது ஒன்று உளது’ என விளம்பும். (1462)

(ஆண்டு-அவ்விடத்தில்; மருங்கு-பக்கம்; இரீஇ-இருக்கச் செய்து; பயந்து-பெற்று / ஈன்று; குறுக-தேயுமாறு; விளம்புதல்-விரித்துரைத்தல்)

அவ்விடத்தில், தன் அருகில் தன் மைந்தனை அமரச் செய்து, மகிழ்ச்சியுடன், அன்பு மீதூர அவனை நன்கு பார்த்து, ‘‘போர்க் கோலம் பூண்டு, மழுவாயுதத்தைக் கையிலேந்திக் கொண்டு வந்தவனாகிய பரசுராமனை வென்று, அவனது பெரும் புகழ் தேயும்படி செய்த நீண்ட பருத்த தோள்களையுடைய ஐயனே! உன்னைப் பெற்று வளர்த்த நான் உன்னிடமிருந்து வேண்டிப் பெற்றுக் கொள்ளக்கூடிய விரைவான செய்தி ஒன்று உள்ளது’’ என்று கூறி, அதை விவரிக்கத் தொடங்கினான்.

61. ஐய! சாலவும் அலசினென்; அரும்பெரும் மூப்பும்
மெய்யது ஆயது; பியல்இடம் பெரும்பரம் விசித்த
தொய்யல் மாநிலச் சுமை உறுசிறை துறந்து, இனியான்
உய்யலாவது ஓர் நெறி புக உதவிட வேண்டும். (1463)

(சாலவும்-மிகவும்; அலசினென்-அலுத்துவிட்டேன் / தளர்ந்தேன்; மெய்-உடம்பு; விசித்த-கட்டப்பெற்ற / பூட்டப்பெற்ற; தொய்யல்-துன்பம் / சோர்வு; ஓர்-ஒப்பற்ற; பியல்-பிடரி / கழுத்தில்; உய்யல்-பிழைத்தல்; சுமை-பொறுப்பு)

‘மைந்தனே! மிகவும் தளர்ந்து போய் விட்டேன். தாங்குதற்கு அரியதும், மிகுந்ததுமான மூப்பும் என் உடம்பில் அமைந்து விட்டது. எவரும் தாங்குதற்கரிய சுமையைக் கழுத்தில் சுமக்கப்பெற்று மிக்க துன்பம் தருகின்ற இந்த பெரிய நிலவுலகத்தின் அரசுப் பொறுப்பாகிய

Koviloor Digital Library

சிறையிலிருந்து விடுபட்டு, இனியாவது, நான் பிழைத்தற்குரிய ஒப்பற்ற முக்தி நெறியில் சென்று சேர்ந்திட மைந்தனாகிய நீ எனக்கு உதவி செய்ய வேண்டும்'

அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டு வந்திருக்கிறான் என்பதனால் அவன் வயோதிகம்-மூப்பு-சாதாரண மூப்பு அல்ல. அதனால்தான் அரும்பெரும் மூப்பு என்று அடைமொழி கூறுகிறான். அரசாட்சி பாரம் தாங்குவது சிறையில் அடைபட்டிருப்பது போல் துன்பம் தருவதே. 'மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பம் அல்லது தொழுதகவு இல்' என்பது சிலப்பதிகாரம். சுமையைத் தலையில் தாங்குவது இயற்கை. இங்கே கழுத்தில் தாங்கியதாகக் கூறுகிறான் கவிஞன். ஏனெனில் 'வையம் காக்கும் படு நுகம்' என்று சீவகசிந்தாமணியில் திருத்தக்கதேவர் முன்னரே கூறிச் சென்றிருப்பதால் நுகத்தடியைத் தாங்குவது கழுத்தே; ஆதலின் 'பியல் இடம்' என்றான். அவன் புக விரும்பியது துறவுநெறி. இராமன் செய்யவேண்டிய உதவி, மறுக்காமல் முடிசூட்டிக் கொள்ள வேண்டுவது என்பதாம்.

62. 'உரிமை மைந்தரைப் பெறுகின்றது உறுதுயர் நீங்கி
இருமையும் பெறற்கு என்பது பெரியவர் இயற்கை;
தருமம் அன்ன நின் தந்த யான், தளர்வது தகவோ?
கருமம் என்வயின் செய்யில் என் கட்டுரை கோடி.' (1464)

(இருமை-இம்மை மறுமையாகிய இரண்டும்; இயற்கை-இயல்பு / கொள்கை; தந்த-பெற்றெடுத்த; கருமம்-காரியம் / செயல்; கட்டுரை-உறுதிமொழி; கோடி-கொள்க / ஏற்றுக்கொள்க; உறு-மிக்க)

'எல்லா உயிர்களுக்கும் உரிமை உடையவரான மைந்தர்களைப் பெற்றுக் கொள்வது, தனக்கு ஏற்படுகின்ற மிக்கத் துன்பங்களிலிருந்து விடுதலைபெற்று, இம்மை, மறுமைப்பயன்களை அடைவதற்குத்தான் என்று சான்றோர்கள் கூறுவது உண்டு. எனவே, தர்மதேவதையாகிய உன்னையே மைந்தனாக ஈன்றெடுத்த நான் இவ்வாறு மனத்தளர்ச்சி கொள்ளுதல் தக்கதாகுமோ? எனக்காக நீ நற்காரியங்கள் இயற்றுவாய் என்றால், நான் கூறுகின்ற பயனுள்ள உறுதிமொழிகளை ஏற்றுக்கொள்வாயாக!'

உரிமை மைந்தர் என்பது, தந்தை பெற்றெடுத்த மைந்தர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உரிமை உண்டு என்று அறநூல்கள் புத்திரர்களின் வகைகளையும் அவர்கள் உரிமைகளையும் பேசுகின்றது.

இருமை என்பது இம்மை மறுமை ஆகிய பிறப்புக்களில் வரும் இன்பமும் துன்பமுமாம். இம்மையில் உண்டாகும் இன்பமாவது மக்கள் மெய் தீண்டல், மழலை மொழி கேட்டல், சான்றோர்கள் அவனைச் சான்றோன் எனக் கேட்டல் முதலியவற்றால் வருவது. மறுமையில் உண்டாகும் இன்பமாவது நீர்க்கடன், நெருப்புக்கடன் முதலியவைகளைத் தவறாது செய்து தந்தையைப் 'புத்' என்னும் நரகத்தில் செலுத்தாதவாறு

Koviloor Digital Library

நல்வழிச் செலுத்துதலுமாம். துன்பங்களாவன இம்மையில் பசி, தாகம், நோய், மூப்பு முதலியவற்றால் வருபவையும், மறுமையில் நரகத்துன்பத்தில் உழல்வதும் ஆகும். 'இம்மை உலகத்து இசையொடும் விளங்கி, மறுமை உலகமும் மறுவின்றி எய்துப, சிறுவர் பயந்த செம்மலோர் எனப் பல்லோர் கூறிய பழமொழி' என்பது அகநானூறு.

63. 'மைந்த! நம்குல மரபினில் மணிமுடி வேந்தர்
தம்தம் மக்களே கடைமுறை நெடுநிலம் தாங்க
ஐந்தொடு ஆகிய முப்பகை மருங்குஅற அகற்றி
உய்ந்து போயினர், ஊழி நின்று எண்ணினும் உலவார். (1465)

(குலம்-சிறந்த; ஐந்தொடு-ஐம்பொறிகளோடு; முப்பகை-காம, வெகுளி, மயக்கம் என்பன; மருங்கு-வேர்; உலவுதல்-முடிவுபெறுதல்; கடைமுறை-காமம் சான்ற கடைக்கோட் காலம் / முதுமைக்காலம்; நெடு-பரந்த; உய்ந்து போதல்-வீடுபேறடைதல்; ஊழி-கற்பம்; மரபு-வம்சம் / பாரம்பரியம்; ஆகிய-தொடர்பு கொண்டுள்ள)

மைந்தனே! நமது சிறந்த சூரியகுலத்தில் மணிமுடி தரித்த அரசர்கள் எல்லாரும் தமது முதுமைப் பருவத்தில், பரந்த இந்நிலவுலகின் அரசாட்சியைத் தங்கள் மைந்தர்களே தாங்கிக் காக்குமாறும், ஐம்பொறிகளோடு தொடர்புடைய மூன்று உட்பகைகளாகிய காமம், வெகுளி, மயக்கம் முதலியவற்றை வேரோடு அறுத்து நீக்கி வீடுபேறடைந்திருக்கிறார்கள். அத்தகையவர்கள் எத்தனைபேர் என்று எண்ண ஆரம்பித்தால் ஊழிக்காலம் கூடப்போதாது. அவ்வளவு பேர்களாவர் எண்ணற்றவராவர். எவ்வளவு காலம் நின்று எண்ணினாலும் எண்ணி முடியமாட்டாத கணக்கற்றவர்கள் ஆவர்.

64. 'முன்னை ஊழ்வினைப் பயத்திலும், முற்றிய வேள்விப்
பின்னை எய்திய நலத்தினும், அரிதின் நிற் பெற்றேன்;
இன்னம் யான் இந்த அரசியல் இடும்பையன் என்றால்
நின்னை ஈன்றுள பயத்தினில் நிரம்புவது யாதோ?' (1466)

(நலம்-நன்மை; அரிதின்-அருமையாக / மிகச்சிரமப்பட்டு; இடும்பை-துன்பம்; நிரம்புவது-நிறைவு எய்துவது)

'முற்பிறப்புகளில் யான் செய்த நல்வினைப் பயனாலும், இப்பிறப்பில் நான் முற்றுப்பெறச் செய்த அசுவமேத, புத்திர காமேஷ்டி ஆகிய வேள்விகளின் பயனாலும், நின்னை மிக நீண்ட ஆண்டுகட்குப் பிறகு மகனாக அடையும் பேறுபெற்றேன். அவ்வாறு இருக்க, இம்முதுமைக் காலத்தும் நான் இந்த அரசாட்சி என்கின்ற துன்பத்தில் கிடந்து உழல்கின்றேன் என்றால் உன்னை நான் இவ்வளவு சிரமப்பட்டுப் பெற்றெடுத்ததின் பயன் எவ்வாறு நிறைவுற்றதாகக் கருதமுடியும்?' புத்திர காமேஷ்டி யாகம்-மகவருள் வேள்வி; அசுவமேத யாகம்-பரிவேள்வி.

Koviloor Digital Library

65. ''ஒருத்தலைப் பரத்து ஒருத்தலைப் பங்குவின் ஊர்தி
எருத்தின், ஈங்கு நின்று இயல் வரக் குழைந்து இடர் உழக்கும்
வருத்தம் நீங்கி, அவ்வரம்பு அறு திருவினை மருவும்
அருத்தி உண்டு எனக்கு; ஐய! ஈது அருளிட வேண்டும்''. (1467)

(பரம்-பாரம்; பங்கு-முடத்தன்மை; ஊர்தி-வண்டி; எருத்து-காளைமாடு; உழக்கும்-அனுபவிக்கும்; திரு-வீடுபேற்றுச்செல்வம் / முக்திச்செல்வம் (மோக்ஷசாம்ராஜ்யம்); மருவுதல்-அடைதல்; அருத்தி-ஆசை; இயல்வரல்-இயங்குதல்; குழைந்து-மெலிந்து; ஒருதலை-ஒருபுறம்)

'ஒருபக்கத்தில் தாங்கமுடியாத சுமையும், இன்னொரு பக்கத்தில் முடத்தன்மையும் கொண்ட எருது வண்டியை இழுத்துக்கொண்டு செல்வதுபோல, நான் இது காறும் இவ்வரசாட்சியாகிய தாங்கமுடியாத சுமையையும், முதுமைத் தன்மை என்ற தன்மையையும் கொண்டு மெலிந்து துன்பம் அனுபவித்து இயங்கி வந்தேன். அந்த வருத்தமெல்லாவற்றையும் அகற்றி, இப்போது, அந்தமில் இன்பமாகிய வீடுபேற்றை அடையும் ஒரு ஆசை எனக்கு வந்திருக்கிறது. மைந்தனே! அதை நிறைவேற்றி வைத்து எனக்கு அருள் புரிய வேண்டும்'.

நொண்டித்தன்மையால் பாரந்தாங்க முடியாது வண்டியை இழுத்துச் செல்லும் எருதினைப்போல, இதுகாறும் முதுமைத் தன்மையால் நானிலபாரம் தாங்க முடியாது மிக வருத்தமுற்றேன் என்பதாம். அரசத்திருவுக்கு கால வரம்பு உண்டு ஆயின் வீடுபேற்றுக்கு காலவரம்பு இல்லை. எனவேதான் வரம்பறு திரு என்றான். 'அந்தமில் இன்பத்து அழிவில்வீடு' என்பது சிலப்பதிகாரம். 'சென்றடையாத திரு' என்பது தேவாரம்.

66. பகீரதன் பற்றிக் கூறுதல்

'ஆளும் நன்னெறிக்கு அமைவரும் அமைதி இன்று ஆக
நாளும் நம்குல நாயகன் நறை விரி கமலத்
தாளின் நல்கிய கங்கையைத் தந்து, தந்தையரை
மீள்வுஇல் இன்னுலகு ஏற்றினான், ஒருமகன் மேல் நாள்' (1468)

(ஒரு-ஒப்பற்ற; மகன்-பகீரதன்; மேல்நாள்-பண்டு / முற்காலத்தில்; குலநாயகன்-நாராயணன்; நறை-தேன்; நல்கிய-தோற்றுவித்த; தந்தையர்-சகரர்)

'முன்னொரு காலத்தில் நம் குலத்தில் தோன்றிய ஒப்பற்ற மைந்தனான பகீரதன் என்பவன், தன் தந்தையர்கள், ஆட்சி செய்கின்ற நல்ல நெறிக்குப் பொருந்துகின்ற தகுதி இல்லாமற்போக எக்காலமும் நமது குலமுதல்வனான திருமாலின் தேன் சொரிகின்ற செந்தாமரை மலர் போன்ற சேவடிகளிலிருந்து தோன்றிய ஆகாய கங்கையைப் பூமிக்குக்

Koviloor Digital Library

கொணர்ந்து, தம் தந்தையராகிய சகரர்களை மீண்டுவர இயலாத வீட்டுலகுக்கு ஏற்றி அனுப்பினான்'

மக்கட்பேற்றின் பயனை விளக்க பகீரதன் வரலாற்றை ஓர் எடுத்துக்காட்டாகக் கூறினான். பகீரதன் பூமிக்குக் கங்கையைக் கொண்டு வந்த வரலாறும், திருமாலின் திருவடிகளில் கங்கை தோன்றிய வரலாறும் பாலகாண்டத்தில் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

பொதுவாகத் தாமரை மலர் விரிந்தும் கூம்பியும் இருக்கும் இயல்புடையன. திருமாலின் திருவடித் தாமரையே கூம்பாது எப்போதும் அன்பர்க்கு அருள் சுரக்கும் என்று கூறக்கருதி, நாளும் விரி கமலத்தாள் என்றான். மீள்வுஇல் இன்னுலகு என்பது மீட்டும் இங்கு வாராத முக்தியுலகு / பரமபதம் என்பதாம். இதனை 'வாராஉலகம்' என்று கூறும் புறநானூறு. கீழ் உலகமாகிய நரகத்தில் இருந்த சகரர்களை மேல் உலகமாகிய வீட்டுலகத்திற்கு அடைவித்தமையால் 'ஏற்றினான்' என்றார்.

67. 'மன்னர் ஆனவர் அல்லர்; மேல்வானவர்க்கு அரசாம்
பொன்னின் வார்கழல் புரந்தரன் போலியர் அல்லர்;
பின்னும், மாதவம் தொடங்கி நோன்பு இழைத்தவரல்லர்;
சொல் மறாமகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார்' (1469)

(அரும்-பொறுத்தற்கரிய; வார்-நீண்ட; இழைத்த-செய்த; நோன்பு-விரதங்கள்; மறா-தட்டாத; புரந்தரன்-இந்திரன்)

'பொறுத்தற்கரிய துன்பத்தை நீக்கினவர்கள் இவ்வுலகத்தில் யார்? மண்ணுலகத்தை ஆளும் மன்னவர்களும் அல்லர்; மேலே விண்ணுலகத்தின் அரசன் என்று கூறப்படும் பொன்னாலாகிய நீண்ட வீரக்கழலை அணிந்த இந்திரன் போன்றவர்களும் அல்லர்; மேலும் பெருந்தவம் தொடங்கிப் பலவகை விரதங்களை மேற்கொண்ட முனிவர்களும் அல்லர்; பின்னர் யாரென்றால் தந்தை சொல்லைத் தட்டாத மகப்பேறு உடையவர்களே ஆவர்'.

மன்னவரும், விண்ணவரும், மாதவரும் துயர் துறந்தார் அல்லர், நல் மகவைப் பெற்றவரே துயர் துறந்தார் என்பதாம். 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்பது கொன்றை வேந்தன் (ஔவை பாடியது) துன்பமில்லாத மனத்தை உடையவர்கள் என்று பொதுவாகச் சொல்லப்படுபவர்கள் மன்னர்களும், தேவர்களும், முனிவர்களுமே. தசரதன் தன் மகன் தன் சொல்லைத் தட்டாது ஏற்றுக்கொண்டு இம்முத்திறத்தாரினும் தான் மேம்பட்டவன் என்பதைக் காட்ட வேண்டும் என்ற கருத்தால் இவ்வாறு கூறினான் என்க. 'எழுபிறப்பும் தீயவைதீண்டா, பழி பிறங்காப் பண்புடை மக்கட்பெறின்' என்பது குறள் 62.

68. அனையது ஆதலின், அரும்துயர்ப்பெரும் பரம் அரசன்
வினையின் என்வயின் வைத்தனன் எனக் கொளல் வேண்டா;
புனையும் மாமுடி புனைந்து, இந்த நல்லறம் புரக்க
நினையல் வேண்டும்; யான் நின்வயின் பெறுவது ஈது' என்றான் (1470)

Koviloor Digital Library

(வினை-சூழ்ச்சி / வஞ்சகம் / தந்திரம்; புனைதல்-அழகுசெய்தல்; புனைந்து-சூடிக்கொண்டு; புரக்க-காப்பாற்ற; நினையல்-மனம்கொள்ளுதல்; வைத்தல்-சுமத்துதல்)

'புதல்வர்களின் தன்மை அவ்வாறானது. எனவே, தாங்குதற்கரிய துயரத்தைத் தரும் பெரிய அரசச் சுமையை மன்னன் தந்திரத்தால் என்மீது சுமத்தி விட்டான் என்று நீ கருதுதல் கூடாது. அலங்கரிக்கப்பட்ட சிறந்த முடியினை நீ சூட்டிக்கொண்டு, இந்த நல்ல தரும காரியமான உலக மக்களைப் பாதுகாக்கும் அரசாட்சியை நீ ஏற்றுக் கொள்ளவேண்டும். இதுவே நான் உன்னிடம் பெற வேண்டுவதாகும்' என்று தசரதன் கூறி முடித்தான்.

அரசாட்சியை ஏற்றுக்கொண்டு முடிசூட்டிக் கொள்வதைப் பெரும் பாரமாக எண்ணாது, நல்லதோர் அறமாகக் கருதி ஏற்றுக்கொள்க என்பது உட்கருத்து.

69. இராமன் உடன்படுதல்

தாதை அப்பரிசு உரை செயத் தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்; கடன்இது என்று உணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவியது அதுசெயலன்றோ
நீதிஎற்கு எனநினைந்தும், அப்பணிதலை நின்றான். (1471)

(பரிசு-தன்மை; காதல்-விருப்பம்; இகழ்தல்-வெறுத்தல்; எற்கு-எனக்கு; தலைநிற்றல்-உடன்படுதல் / இசைதல் /ஏற்றுக் கொள்ளுதல்; நீதி-முறை / நியாயம்)

தந்தை அவ்வாறு சொல்லவும், தாமரை போன்ற கண்களையுடைய இராமபிரான், அரசச்செல்வம் தனக்குக் கிடைத்தது என்று விருப்புக் கொள்ளவுமில்லை; அரசபாரம் தன்மீது சுமத்தப்பட்டுவிட்டதே என்று வெறுப்புக் கொள்ளவுமில்லை; அரசாட்சியை ஏற்றுக்கொள்வது தந்தை மகற்காற்றும் கடமை என்று உணர்ந்தும், மன்னவன் எதை ஆராய்ந்து கூறிக் கட்டளையிட்டானோ அதைச் செயலாக்குவதுதானே மைந்தனாகிய தனக்குரிய முறை என்பதை நினைத்தும், தந்தை இட்ட கட்டளைக்கு உடன்பட்டு அந்தப் பணியை ஏற்றுக் கொள்ள முன்வந்தான்.

இராமன் விருப்பு வெறுப்பற்றவன்; வேண்டுதல் வேண்டாமை இலான்; நடுவுநிலமையாளன் என்பது உரைக்கப்பட்டது. 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்பது பழமொழி. இவ்விடத்தில் தனது குருவான கௌசிகன் தாடகையைக் கொல்லுமாறு கூறியபோதும் இராமன் இவ்வாறே குருவின் கட்டளையை ஏற்றுத் தாடகையைக் கொன்றமையும் எண்ணிப்பார்க்கத் தக்கது. இதனால் இராமபிரான் ஆட்சியின் மீது விருப்போ, வெறுப்போ அற்றவன் என்பதும், தந்தையின் சொற்களை மந்திரவாசகமாகக் கொள்பவன் என்பதும் கூறப்பட்டது.

Koviloor Digital Library

70. தசரதன் தன் அரண்மனைக்குச் செல்லுதல்

குருசில் சிந்தையை மனக் கொண்ட கொற்ற வெண்குடையான்
'தருதி இவ்வரம்' எனச்சொல்லி, உயிர் உறத் தழுவிச்,
சுருதி அன்ன தன் மந்திரச் சுற்றமும் சுற்றப்
பொருஇல் மேருவும் பொரு அரும் கோயில் போய்ப் புக்கான். (1472)

(குரிசில்-ஆண்களிற் சிறந்தவன் / உபகாரி / புருஷ சிரேஷ்டன் / இராமபிரான்; சிந்தை-உள்ள நிலை; மனம்கொள்ளுதல்-குறிப்பால் உணர்தல்; உற-கலக்க; சுருதி-வேதம்; பொருஇல்-ஒப்பற்ற)

ஆடவர்களிற் சிறந்தவனாகிய இராமபிரானின் உள்ளக் கருத்தைக் குறிப்பால் உணர்ந்துகொண்ட வெற்றியையே தரும் வெண்கொற்றக் குடையை உடைய தசரதன் 'இவ்வரத்தை நீ தந்தருளவேண்டும்' என்று வற்புறுத்திக் கூறி, தன் உயிர்அனைய இராமபிரானைத் தன் உயிர் கலக்க இறுகத் தழுவிக் கொண்டான். பின்னர், வேதமே அனைய தனது அமைச்சர்களுடனும், மற்றும் சுற்றத்தார்களுடனும், ஒப்பற்ற மேருமலையும் ஒப்பாகாத தனது அரண்மனையைச் சென்று சேர்ந்தான்.

தழுவுவது உடம்புதான் என்றாலும், உள்ளமும் உயிரும் கலக்கும் உண்மையை வற்புறுத்த வேண்டி 'உயிர்உறத் தழுவி' என்றான்; நன்மை தீமைகளை ஆராய்ந்து அரசனுக்குச் சொல்லி நீதிவழி நிறுத்துதல் பற்றி அமைச்சர்களுக்குச் சுருதி-வேதம்-உவமை; 'நால் வேதநெறி திரியினும் தாம் திரியாச் சுற்றம்' என்பது புறநானூறு.

71. இராமன் தன் மாளிகைக்குச் செல்லுதல்

நிவந்த அந்தணர், நெடுந்தகை மன்னவர், நகரத்து
உவந்த மைந்தர்கள், மடந்தையர்,உழையர், பின்தொடரச்
சுமந்திரன் தடம்தேர்மிசைச் சுந்தரத்திரள்தோள்
அமைந்த மைந்தனும், தன்நெடுங்கோயில் சென்று அடைந்தான். (1473)

(நிவந்த-உயர்ந்த இயல்புள்ள; நெடுந்தகை-பெருந்தன்மை; உழையர்-பக்கத்தவர்; தடம்-பெரிய; சுந்தர-அழகிய)

குலம், அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றால் உயர்ந்த அந்தணர்களும், பெருந்தன்மை வாய்ந்த மன்னர்களும், தன்னைக் காண மகிழ்ச்சியுடன் வந்திருந்த அயோத்தி நகரத்து மைந்தர்களும் மகளிர்களும், தன்பக்கங்களில் தன்னைச் சூழ்ந்து தொடர்ந்து வர, சுமந்திரன் கொணர்ந்த அவனது பெரிய தேரில் ஏறி அழகிய திரண்ட தோள்களை உடைய மைந்தனாகிய இராமபிரானும், தன்னுடைய பெரிய மாளிகையைச் சென்று அடைந்தான்.

நால்வருணத்தோரில் முதலில் வைத்துக் கூறப்படும் தகுதிவாய்ந்த உயர்ந்தவர் அந்தணர் என்றும் பொருள் கூறுவதுண்டு; சுந்தரத் திரள்தோள்

Koviloor Digital Library

என்பதில், தாடகை வதம், சிவதனுசு முறித்தல், பரசுராமன் செருக்கழித்தல், கட்டழகு ஆகிய செய்திகள் உள்ளடங்கியிருக்கிறது.

72. தசரதன் ஓலை அனுப்புதல்

வென்றிவேந்தரை 'வருக'என்று, உவணம் வீற்றிருந்த
பொன் திணிந்த தோட்டு அரும்பெறல் இலச்சினை போக்கி
'நன்று, சித்திர நளிமுடி கவித்தற்கு, நல்லோய்!
சென்று, வேண்டுவ வரன் முறை அமைக்க' எனச் செப்ப, (1474)

(திணிந்த-திண்ணிய; தோடு-ஓலை / இதழில்; உவணம்-கருடன்; இலச்சினை-முத்திரை; போக்கி-அனுப்பிவிட்டு; சித்திரம்-அழகிய வேலைப்பாடு; நளி-பெருமை; வீற்றிருந்த-தங்கிய / பொறிக்கப்பட்ட; செப்ப-சொல்ல) குளகப்பாடல்.

வெற்றி பொருந்திய சிற்றரசர்களையெல்லாம் 'வருக' என்று, கருடன் உருவம் பொறிக்கப்பெற்ற பொன்னால் ஆகிய திண்ணிய ஓலையில் பிறரால் பெறுதற்கரிய முத்திரையை இட்டு அனுப்பினான்.. பின்னர் தம் குலகுருவான வசிட்டனை நோக்கி, 'நல்ல குலகுருவே! இராமபிரானுக்கு வேலைப்பாடமைந்த அழகிய பெருமை பொருந்திய முடியினைச் சூட்டுவதற்கான செயல்களை தொல்மரபுப்படி அமைப்பீராக!' என்று சொல்ல.

தங்கள் குல தெய்வமாகிய திருமாலின் கொடியும், வாகனமுமாகிய கருடனையே தங்கள் அரசாங்கத்தின் முத்திரையாகக் கொண்டனர் என்பதாம். ஓலை பொன்னால் இயன்றது. அரசர் பிறருக்கு அனுப்பும் ஓலையைச் சுருள்செய்து, அதன்பொருத்து வாயில் அரசமுத்திரையிட்டு அனுப்புவது மரபு. அந்த முத்திரைக்குரிய கருவியை அதற்குரியவரன்றிப் பிறர் கையாளுதல் அரிது. எனவே, அரும்பெறல் இலச்சினை என்றான். ஓலைபோக்கும் முறைபற்றிப் பெருங்கதை விளக்கமாகக் கூறுகிறது. கேளுங்கள். 'உட்குறும் உண்மை உச்சியிற் சுமந்த, சக்கர வட்டமொடு சங்குபல பொறித்த, தோட்டுவினை வட்டித்துக் கூட்டு அரக்கு உருக்கி, ஏட்டு வினைக்கணக்கன்ஈடு அறிந்து ஒற்றிய முடக்குஅமை ஓலை'என்பது பெருங்கதை.

73. கூடியிருந்த அரசர்களுக்கும் தெரிவித்தல்

உரிய மாதவன் 'ஒள்ளிது' என்று உவந்தனன், விரைந்து ஓர்
பொருஇல் தேர்மிசை அந்தணர் குழாத் தொடும் போக,
'நிருபர்! கேண்மின்கள்! இராமற்கு நெறிமுறைமையினால்
திருவும், பூமியும், சீதையிற் சிறந்தன' என்றான். (1475)

(ஒள்ளிது-நல்லது; நிருபர்-அரசர்; திரு-அரசச்செல்வம்)

Koviloor Digital Library

முடிசூட்டுவதற்கு உரிமையுடையவனான பெருந்தவசியான வசிட்டன்'நல்லது' என்று தசரதனுக்கு இசைவு தெரிவித்து, மகிழ்ச்சியுடன் விரைந்து சென்று, ஒப்பற்ற ஒரு தேரின்மீது சுற்றியிருந்த அந்தணர்களும் உடன் செல்லச் சென்றான். பின்னர், தசரதன் அங்கே திறை செலுத்தவும் அவனைப் பார்க்கவும் அன்று வந்து கூடியிருந்த அரசர்களை நோக்கி, 'அரசர்களே! கேளுங்கள். இராமனுக்கு, -மூத்தவனுக்கே அரசாட்சி என்ற நெறிமுறைப்படி, அரசச் செல்வமும், பூமிதேவியும் சீதாதேவியைப்போலவே சிறந்து விளங்குகின்றன' என்று கூறினான்.

ஒள்ளிது என்பது நல்லது என்ற பொருளில் இன்னும் கன்னடத்தில் வழங்குவது காணலாம். மன்னரை மட்டும் தனியே அழைத்துப்பேசியதாக வான்மீகம் கூறவில்லை.

74. அரசர்கள் மகிழ்ச்சி

இறைவன் சொல்எனும் இன் நறவு அருந்தினர் யாரும்
முறையின் நின்றிலர், முந்துறு களியிடை மூழ்கி,
நிறையும் நெஞ்சிடை உவகைபோய் மயிர்வழி நிமிர,
உறையும் விண்ணகம் உடலொடும் எய்தினர் ஒத்தார். (1476)

(இறைவன்-அரசன்; நறவு-தேன்; முந்துறு-முற்பட்டுத்தோன்றுகின்ற; மயிர் நிமிர்தல்-புளகமடைதல் / மயிர்க்கூச் செறிதல்; உறைதல்-தங்குதல்; விண்ணகம்-சுவர்க்கம்)

அரசர்க்கரசனான தசரதச் சக்கரவர்த்தி கூறிய வார்த்தைகள் என்னும் இனிமையான மதுவைப் பருகியவர்களான அரசர்கள் எல்லோரும், சக்கரவர்த்தியின் முன் சாதாரண அரசர்கள் எவ்வாறு நிற்கவேண்டுமோ அவ்வாறு முறைப்படி நிற்காமல் தங்கள் விருப்பப்படி நின்றிருந்தனர்; மகிழ்ச்சி என்னும் வெள்ளத்தில் மூழ்கி, உள்ளம் முழுவதும் மகிழ்ச்சி நிறைந்து, எல்லை கடந்துபோய் மயிர்க்கால்களின் வழியே புளகமாக வெளிப்பட்டு விளங்க, நல்லுயிர்கள் சென்று தங்கும் சுவர்க்கத்திற்கு, இப்பூத உடலோடும் சென்று சேர்ந்தவர்கள் போல விளங்கினார்கள்.

நறவு அருந்தியவர் இயல்பே, முறையின் நில்லாமை தானே? பொதுவாக அரசர்க்கரசன் முன்பு வாய் புதைத்து, தாள் மடக்கி நிற்பது மரபு. அவ்வாறு நில்லாது, தம் நிலை மறந்து, தம் மனம் போனபடி இருந்தனர் என்பதாம். பூத உடலோடு சுவர்க்கமடைதல் மிக அரிது. திரிசங்குவின் கதை நாம் அறிந்ததுதானே!

75. அரசர்கள் தசரதனிடம் கூறுதல்

ஒத்த சிந்தையர், உவகையர், ஒருவரின் ஒருவர்
தத்தமக்கு உற்ற அரசு எனத் தழைக்கின்ற மனத்தார்,
மொத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
அத்த! நன்று!', என அன்பினோடு அறிவிப்பது ஆனார். (1477)

Koviloor Digital Library

(தழைக்கின்ற-பூரிக்கின்ற; முறைமுறை-வரிசையாக / பலமுறை; அத்த-தந்தை போன்றவனே!; சிந்தை-கருத்து)

அரசர்கள் பலராயினும், அவர்களனைவரும் இதில் ஒத்த கருத்துடையவர்களாய் மகிழ்ச்சியடைந்தனர். ஒவ்வொருவரும் தனக்கே அரசாட்சி கிடைத்துவிட்டதைப் போலப் பூரிப்படைந்தனர். முத்துக்களால் இயன்ற வெண்கொற்றக் குடையை உடைய மன்னனைப் பலமுறை வரிசையாகத் தொழுதார்கள். 'தந்தை போன்றவரே! தாங்கள் நல்லதே செய்தீர்கள்!', என்று பேரன்பினோடு தங்கள் கருத்துக்களையும் கூறத்தொடங்கினார்கள்.

சுமந்திரனும் முன்பு இதேபோல நாடெல்லாம் பெற்றவன் போல மகிழ்ந்தான் எனக் கூறியதையும் நோக்குக. இராமன் பெற்ற அரசைத் தாம் பெற்றதுபோலக் கருதியது போலவே, இராமனின் தந்தையையும் தந்தையாக எண்ணி 'அத்த!' என்றனர்.

76. 'மூஎழு முறைமை எம்குலங்கள் முற்றுஉறப்
பூஎழு மழுவினால் பொருது போக்கிய
சேவகன் சேவகம் செகுத்த சேவகற்கு
ஆவது இவ்வுலகம்; ஈது அறன்; ' என்றார் அரோ! (1478)

(மூஎழு முறைமை-இருபத்தொரு தலைமுறை; பூஎழு-கூர்மை பொருந்திய; பொருது-போர் செய்து; போக்கிய-மாய்த்த; சேவகன்-வீரன்; சேவகம்-வீரம்; செகுத்தல்-போக்குதல்)

'இருபத்தொரு தலைமுறை எங்கள் அரசர் குலங்களையே தன் கூர்மையான மழுப்படையினால் போர் செய்து வேரற முற்றும் அழித்த வீரனான பரசுராமனின் வீரத்தைப் போக்கிய மாபெரும் வீரனாகிய இராமபிரானுக்கு இவ்வுலகம் அனைத்தும் உரிமையானதாகும். எனவே அவனுக்கு முடி சூட்டுதல் என்பது அறத்தின்பாற்பட்ட செயலே ஆகும்' என்று அரசர்கள் கூறினார்கள்.

என்றைக்கு இராமபிரான் பரசுராமனை வென்றானோ, அன்றைக்கே இவ்வுலகம் முழுவதும் அவனுக்கு உரிமையுடையதாய் ஆயிற்று. இன்று முடிசூட்டுதல் தர்மமே என்றனர் என்பதாம்.

77. தசரதன் மீண்டும் கூறுதல்

வேறுஇலா மன்னரும் விரும்பி இன்னது
கூறினார்; அதுமனம் கொண்ட கொற்றவன்
ஊறின உவகையை ஒளிக்கும் சிந்தையான்
மாறும் ஓர் அளவைசால் வாய்மை கூறினான். (1479)

(சால்-பொருத்தமான; ஊறுதல்-சுரத்தல்; வாய்மை-வாய்ச்சொல்; வேறுஇலா-கருத்து வேறுபாடு இல்லாத; மாறும்-மீண்டும்; அளவைசால்-அளந்தறியும் / பிரமாணமான)

Koviloor Digital Library

அரசர்கள் தங்களுக்குள் கருத்துவேறுபாடில்லாது ஒத்த கருத்தான 'இராமன் முடிசூடுதல் அறமானதே' என்ற கருத்தை மிகவும் விரும்பி அரசனிடம் கூறினார்கள். அதனைக் கேட்டு உணர்ந்த மன்னன் தனக்குள் ஊறிய மகிழ்ச்சியை வெளிக்காட்டாதவாறு மறைக்கும் கருத்தினனானான். மீண்டும் அம்மன்னர்களுடைய கருத்தை அளந்தறிவதற்குப் பொருத்தமான ஒரு வாய்ச்சொல்லை பின்வருமாறு கூறலானான்.

தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தந்தை ஈன்ற பொழுதினும் பெரிதுவப்பது இயல்புதானே? சக்கரவர்த்தியாகவே அதை மறைக்க வேண்டியதாயிற்று. அம்மகிழ்ச்சிக்கு மாறுபட்டதாய்த் தோற்றுவதும், அரசர் கூற்றின் உண்மையை அளந்தறியத் தக்கதுமான ஒரு பிரமாணமான வார்த்தையை அவர்களிடம் கூறினான் என்பதாம்.

78. தசரதன் வினா

'மகன் வயின் அன்பினால் மயங்கி, யான்இது
புகல, நீர் புகன்ற இப்பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ? உள்ளம் நோக்கியோ?
தகவு என நினைந்ததோ? தன்மை என்? என்றான். (1480)

(புகல-கூற; பொம்மல்-மகிழ்ச்சி / பொலிவு; உகவை-உவகை / மகிழ்ச்சி; உள்ளம்-உட்கருத்து)

தசரதன் மன்னர்களை நோக்கி, 'நான் என் மகனாகிய இராமனிடத்துக் கொண்ட பேரன்பின் காரணமாக மதிமயங்கி அவனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று கூற, அதற்கு இசைந்து நீங்களும் மகிழ்ச்சியான பொலிவு மிகுந்த சொற்களைக் கூறினீர்கள். அந்தச் சொற்களை உண்மையிலேயே நீங்கள் இந்தக் கருத்தைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து கூறினீர்களா? அல்லது என்னுடைய உள்ளக்கருத்துக்கு மாற்றாகக் கூறக்கூடாதே என்பதால் இசைந்து கூறினீர்களா? அல்லது உண்மையிலேயே இராமன் முடிசூடுவதற்கு தகுதியுடையவன் என உணர்ந்து கூறினீர்களா? உங்களுடைய சொற்களின் தன்மை இம்மூன்றினுள் எத்தகையது?' என்று கேட்டான்.

பேரன்பு காரணமாகத் தீயதும் நல்லதாகத் தோன்றும். எனவே, மயங்கிப் புகன்றேன் என்றார். மயக்கம் என்பது உண்மை யல்லாததை உண்மையாகக் காணும் திரிபுணர்ச்சி. 'நீங்கள் ஒத்த கருத்துத் தெரிவித்ததற்கு இராமனிடம் உள்ள அன்பு காரணமாக உண்டான மகிழ்ச்சியால் இருக்கலாம்; அல்லது என்னைத் திருப்திப் படுத்தவேண்டுமே என்று எனக்குக் கூறிய வார்த்தையாய் இருக்கலாம்; அல்லது உண்மை உணர்ந்து கூறியதாகவும் இருக்கலாம். இவற்றுள் உங்கள் சொல் எத்தகையது என்பதைக் கூறுங்கள்' என்றான் என்பதாம். உகவை என்ற சொல்லை மகிழ்ச்சி என்ற பொருளில் நம்மாழ்வாரும்

Koviloor Digital Library

பயன்படுத்தி இருக்கிறார். 'உகவையால் நெஞ்சம் உள்ளுருகி' என்பது திருவாய்மொழி.

79. மன்னர்கள் விடையிறுத்தல்

இவ்வகை உரைசெய, இருந்த வேந்தர்கள்
'செவ்விய நின் திரு மகற்குத் தேயத்தோர்
அவ்வவர்க்கு அவ்வவர் ஆற்ற ஆற்றுறும்
எவ்வம்இல் அன்பினை இனிதுகேள்,' எனா. (1481)

(செவ்விய-செம்மை வாய்ந்த; தேயத்தோர்-நாட்டுமக்கள்; எவ்வம் இல்-குற்றமற்ற; ஆற்ற-மிகுதியாக; ஆற்றுறும்-செய்யும்) குளகப்பாடல்.

தசரதன் இவ்வாறு கேட்கவும், அங்கே கூடியிருந்த அரசர்கள், 'உன்னுடைய செம்மைக் குணங்கள் வாய்ந்த அழகிய மகனாகிய இராமனிடத்து நாட்டு மக்கள் அவரவர்களுக்குரிய தகுதிப்படி காட்டும், குற்றமற்ற அன்பின் தன்மையை இப்பொழுது நாங்கள் சொல்ல, மகிழ்ச்சியுடன் கேட்பாயாக' என்றனர்.

அனைவரும் இராமபிரானிடம் கொண்ட அன்பு களங்கமற்றது, தூயது என்று குறிக்க, 'எவ்வமில்லன்பு' என்றார்.

80. ''தானமும், தருமமும், தகவும், தன்மைசேர்
ஞானமும், நல்லவர்ப் பேணும் நன்மையும்,
மானவ! வையம் நின்மகற்கு வைகலும்
ஈனம்இல் செல்வம் வந்து இயைக'' என்னவே. (1482)

(மானவ-மனுகுலத்து உதித்தவனே!; வைகலும்-நாள்தோறும்; ஈனம்இல்-குறைவற்ற / தாழ்வில்லாத; தன்மை-மேன்மை; பேணுதல்-போற்றுதல்; செல்வம்-அரசச் செல்வம்)

'மனுகுலத்து உதித்த பெருமை பொருந்தியவனே! உன் மைந்தனாகிய இராமபிரானுக்கு நாள்தோறும் தாழ்வில்லாத செல்வம் வந்து பொருந்த வேண்டும் என்றுதான், வையத்திலுள்ளோர், தானம், தருமம், தவம், நல்லியல்பு பொருந்திய மெய்யுணர்வு, நல்ல சான்றோர்களைப் போற்றிப் பாதுகாக்கும் நற்காரியங்கள் எல்லாம் ஆற்றி வருகின்றனர். எனவே, அவன் முடிசூடத் தகுதியுடையவனே' என்றனர்.

தாம் செய்யும் தானம், தருமம், தவம், இவற்றின் பலன்களைத் தம்மால் விரும்பப்பட்டோர்க்கு உரித்தாக்குவது உண்டு. தானமாவது அறநெறியால் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடு நீர்வார்த்துக் கொடுத்தல்; தருமமாவது ஈகை; வறியராய் ஏற்றார்க்கு மறாது கொடுத்தல், யாவர்க்கும் தருவது. நல்லவர் என்றது சான்றோர்களாகிய துறவிகளை; அவர்களுக்கு உண்டி, உறையுள் முதலியன உதவிப் பேணுதல் என்பதாம்.

Koviloor Digital Library

81. ஊருணி நிறையவும், உதவும் மாடு உயர்
பார்நுகர் பயன்மரம் பழுத்தது ஆகவும்
கார் மழை பொழியவும் கழனி பாய் நதி
வார் புனல் பெருகவும், மறுக்கின்றார்கள் யார்? (1483)

(ஊருணி-குளம்; மாடு-பக்கத்தில்; பார்-மக்கள்; கார்-மேகம்; வார்-நீண்டு; புனல்-நீர்)

ஊர்மக்கள் பருகுதற்குரிய குளத்தில்-நீர் நிலைகளில் தண்ணீர் நிறைந்து பெருகவும், எல்லோருக்கும் உதவி புரிகின்ற வகையில் அதன் அருகில் உயர்ந்து விளங்குகின்ற நல்ல முதிய மரங்கள் நல்ல கனிகளைப் பழுத்துத் தாங்கவும், மேகங்கள் உரிய காலத்தில் பெருமழையைப் பொழியவும், வயல்களில் பாய்கின்ற நதியின் நெடிய நீர்வளம் பெருக்கெடுத்தோடவும், வேண்டாம் என்று மறுத்துச் சொல்வார்கள் யாரேனும் இருப்பார்களோ?

இப்பாடலில் கம்பன் மன்னர்கள் கருத்தை மறைமுகமாகக் கூறுகிறான். ஊருணி நீரால் நிறைதலையும், மரங்கள் நன்கு பழுத்துப் பயன் தருவதையும், மேகங்கள் பெருமழை பொழிவதையும், நதிகளில் நீர் பெருக்கெடுத்தோடி கழனிகளில் விளைச்சல் அதிகமாவதையும் யாரும் வேண்டாம் என்று சொல்வார்களோ? என்று மன்னர்கள் சொல்லியதாகச் சொல்லி நிறுத்திவிடுகிறான் கம்பன். இதன் பொருள் என்ன? இவைகளை ஒருவரும் வேண்டாம் என்று சொல்லாததுபோல, இராமன் முடிசூட்டிக்கொள்வதையும் ஒருவரும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். எல்லோருக்கும் இதில் உடன்பாடே; இராமனும் இதற்குத் தகுதி வாய்ந்தவனே என்பது சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது.

கம்பன் வள்ளுவனைக் கையாளும் திறன் இதில் நன்கு உணரப்படும். ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு குறட்பாவின் கருத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம் நயனுடையான் கண்படின்'; 'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகையாளன் கண்படின்' என்பவை குறட்பாக்கள் 215, 216, 217. இதனால் மன்னர்கள் கூறுவது இராமன் உலகவாம் பேரறிவாளன், நயனுடையான், பெருந்தகையான் ஒப்புரவாளன் என்பனவாம். ஊராரால் உண்ணப்படுவது என்ற காரணம் பற்றிக் குளம், ஊருணி எனப்பட்டது. ஊருணி நிறைதலாலும், பழுமரம் பழுத்தலாலும், கார்மழை பொழிதலாலும், நதிப்புனல் பெருகுவதாலும் மக்களும் உலகமும் மகிழ்ச்சியும் பயனும் எய்துதல் போல, இராமன் முடிசூடிக் கொள்வதாலும், மக்களும், உலகமும் பயனும் மகிழ்ச்சியும் எய்துவர் என்பதாம்.

82. 'பனை அவாம் நெடுங்கரப் பரும யானையாய்!
நினைஅவாம் தன்மையை நினைந்த மன்னுயிர்க்கு
எனையவாறு அன்பினன் இராமன், ஈண்டு அவற்கு
அனையவாறு அன்பின அவையும்,' என்றனர். (1484)

Koviloor Digital Library

(அவாம்-ஒத்த / போன்ற; அவாம்-விரும்புகின்ற; எனையவாறு-எவ்வாறு; பருமம்-யானைமேல் தவிசு / இருக்கை / அம்பாரி)

'பனைமரம் போன்ற நீண்ட துதிக்கைகளையும், அம்பாரியையும் உடைய பட்டத்து யானையையும், மிகுந்த யானைப் படைகளையும் உடைய மன்னனே! உன்னை விரும்பும் தன்மையை உடைய இவ்வுலகத்து நிலைபெற்ற உயிர்களெல்லாம் எவ்வாறு உன்னிடம் அன்புடையவர்களாய் இருக்கிறார்களோ, அவர்கள் அத்தகைய அதே அன்பை உடையவர்களாக இப்போது இங்கு இராமபிரானிடமும் இருக்கிறார்கள்' என்றனர்.

தசரதன் மக்களிடமும், மக்கள் தசரதனிடமும் ஒருவருக்கொருவர் எத்தகைய அன்பு வைத்திருக்கின்றனரோ, அதில் சிறிதும் குறையாத அன்பை இவ்விளவயதிலேயே இராமன், மக்களிடமும், மக்கள் இராமனிடமும் வைத்திருக்கின்றனர் என்று மன்னர்கள் கூறினர். 'அன்பு ஈனும் ஆர்வமுடைமை அது ஈனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு ' என்பது குறள் 74.

83. தசரதன் மகிழ்ச்சி

மொழிந்தது கேட்டலும். மொய்த்து நெஞ்சினைப்
பொழிந்த பேர் உவகையான், பொங்கு காதலான்
கழிந்தது ஓர் இடரினான், களிக்கும் சிந்தையான்,
வழிந்த கண் நீரினான், மன்னன் கூறுவான். (1485)

(மொய்த்து-முழுதும் நிரம்பியிருந்த)

இவ்வாறு மன்னர்கள் கூறியதைக் கேட்டவுடன் தசரதன் நெஞ்செல்லாம் பேருவகை நிறைந்து வழிந்தவனானான்; அன்பு மேலெழுந்து பொங்கியவனானான்; ஒரு பெருந்துயரம் நீங்கிய வனானான்; அதனால் உண்டாகிய களிப்பு மிகுந்த உள்ளத்தினன் ஆனான்; களிப்பு மிகுதியால் கண்களிலிருந்து நீர் வழிந்தவனானான். அவன் இம்மகிழ்ச்சியில் கீழ்க்கண்டவற்றைக் கூறத்தொடங்கினான்.

தனக்குப் பின் வையம் மறுகுமோ என்று முன்பு இடர்ப்பட்டான் அல்லவா? அவ்விடர், இப்பொழுது மன்னர்கள் கூறிய வாசகத்தைக் கேட்டதும் கழிந்தது என்பதாம். இருள் நீங்கினால் ஒளி பிறத்தல் இயல்பே போல், இடர் நீங்கியதால் களிப்பு மிகப்பெற்றான். களிப்பு மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது என்பதாம். தசரதன் தனக்குள் மகிழ்ச்சி கொண்டாலும், அதை அவன் உள்ளம் கண்ணீரால் வெளிப்படுத்திக் காட்டியது. உள்ளும் புறமும் மகிழ்ந்தான். இதை வலியுறுத்தவே 'நெஞ்சினைப் பொழிந்த பேருவகையான்' என்றபின், மீண்டும் 'களிக்கும் சிந்தையான்' என்றான்.

Koviloor Digital Library

84. தசரதன் மன்னர்களிடம் கூறுதல்

செம்மையில், தருமத்தில், செயலில், தீங்கின்பால்
வெம்மையில், ஒழுக்கத்தில், மெய்ம்மை மேவினீர்!
எம் மகன் என்பது என்? நெறியின், ஈங்கு இவன்
நும்மகன், கையடை நோக்கும் ஊங்கு' என்றான். (1486)

(செம்மை-நேர்மை / நடுவுநிலைமை; வெம்மை-வெருட்சி / சினம் / வெறுப்பு; மேவுதல்-பொருந்துதல்; கையடை-அடைக்கலம்; கையில் அடைவித்தல் என்ற காரணப்பெயர்; நோக்கும்-பேணுங்கள் / காப்பாற்றுங்கள்)

தசரதன் அரசர்களை நோக்கி, 'நடுவு நிலைமையிலும், நேர்மையிலும், அரச தருமத்திலும், நற்செயல்களிலும் தீயவற்றின்மீது கொண்ட வெறுப்பிலும், ஒழுக்கத்திலும் உண்மையாக இருந்து செயல்படும் மன்னர்களே! எங்களுடைய மகன் என்று சொல்லுவது எதற்காக? இனிமேல், முறைப்படி, இவன் உங்கள் மகன் ஆவான்; உங்களுக்கு அடைக்கலமாக்கினேன்; அவனைப் பேணிப் பாதுகாப்பது உங்கள் கடமை' என்றான்.

அங்கு இருந்த அரசர்கள் யாவரும் ஆண்டு முதிர்வும், அரசியல் அனுபவமும் பெற்றவர்கள் ஆதலின் செம்மையில், தருமத்தில், செயலில், தீங்கின்பால் வெம்மையில், ஒழுக்கத்தில், மெய்ம்மை மேவினீர் என்று அழைத்தான். எம் மகன் என்றது தன்னையும் தன் தேவியரையும் உளப்படுத்தியது. தசரதன் துறவு பூண்டு தவம் செய்யப் போக இருக்கிறான் ஆதலால் அவர்களிடம் அடைக்கலம் தந்து அவனைப் பேணிப் பாதுகாக்கச் சொன்னான் என்பதாம். முதல்முறை இராமனைப் பிரிய நேரிட்டபோது, விசுவாமித்திரனிடம் கையடையாக அளித்தான். இப்போது பிரிய நேர்கையில் மற்ற அரசர்களிடம் கையடையாக அளிக்கிறான் என்பது நோக்கத்தக்கது.

85. தசரதன் இராமனுக்கு முடிசூட்ட நாள் பார்க்கச் செல்லுதல்

அரசரை விடுத்தபின், ஆணை மன்னவன்,
புரை தபு நாளொடு பொழுதும் நோக்குவான்,
உரைதெரி கணிதரை ஒருங்குகொண்டு, ஒரு
வரைபொரு மண்டபம் மருங்கு போயினான். (1487)

(புரைதபு-குற்றமற்ற; நாள்-நட்சத்திரம்; பொழுது-ஒரை / முகூர்த்தம்; நோக்குவான்-பார்க்கும் பொருட்டு; கணிதர்-ஜோதிடர்; ஒருங்கு-உடன்; வரை-மலை; உரைதெரி-சொல்லுதல் வல்ல; உரை-சோதிட நூல்; பொரு-ஒத்த / போன்ற)

அவ்வாறு கூறி அரசர்களை அனுப்பிவைத்த பின்பு, ஆணைச்சக்கரத்தை உலகெங்கும் செலுத்தும் தசரதன் குற்றமற்ற

Koviloor Digital Library

நட்சத்திரத்துடன்கூடிய நல்லோரை(சுபமுகூர்த்தம்) பார்க்கும் பொருட்டு, சோதிட நூல் ஆராய்ச்சி வல்லவரான சோதிடரை உடன் அழைத்துக் கொண்டு, ஒப்பற்ற மலை போன்ற அருகிலிருந்த ஒரு மண்டபத்தை அடைந்தான்.

சோதிடம் பார்க்க அமைதியான சூழ்நிலை வேண்டும். ஆதலின் ஒரு தனி மண்டபத்தை அடைந்தான் என்பதாம்.

86. பணிப்பெண்கள் மகிழ்ச்சி

ஆண்டு, அவன் நிலை ஆக, அறிந்தவர்,
பூண்ட காதலர், பூட்டு அவிழ் கொங்கையர்,
நீண்ட கூந்தலர், நீள் கலை தாங்கலர்,
ஈண்ட ஓடினர், இட்டு இடை இற்றிலர். (1488)

(பூட்டு-கச்சின் கொக்கி /பூட்டுவாய் / முடிப்பு; கலை-ஆடை; ஈண்ட-நெருங்க /விரைவாக; இட்டுஇடை-நுண்ணியஇடை; இறுதல்-முறிதல்; இட்டு-சிறுமை; நிலை-நீண்டபொழுது)

அவ்வாறு தசரதன் நாள் குறிக்கச் சென்றவன் நீண்டபொழுது அங்கே கழித்தான் ஆக, அதனை அறிந்த, இராமன்பால் மிகுந்த அன்பு கொண்ட பணிப்பெண்கள் சிலர் மகிழ்ச்சியால் உடல் பூரித்தனர், அதனால் அவர்கள் கச்சையின் பூட்டுவாய் அவிழ்ந்து கொங்கைகள் வெளிப்பட்டுத் தோன்றின; நீண்ட கூந்தல் அவிழ்ந்து தொங்கியது; நெடிய ஆடைகள் அவிழ்ந்து விழுந்தன. அதைத் தாங்கிக் கொள்ளவும் இயலாதவராய், விரைந்து ஓடினார்கள். என்றாலும், அவர்களின் நுண்ணிய சிறிய இடை இற்று முரிந்து விழாமல் இருந்தது அதிசயமே.

இட்டு என்பது சிறுமையைக் குறிக்கும். 'ஆகாறு அளவு இட்டிது ஆயினும்' என்பது குறள் 478.

87. நான்கு பணிப்பெண்கள் கோசலையை அடைதல்

ஆடுகின்றனர், பண் அடைவு இன்றியே
பாடுகின்றனர், பார்த்த வர்க்கே கரம்
சூடுகின்றனர், சொல்லுவது ஓர்கிலார்
மாடு சென்றனர், மங்கையர் நால்வரே. (1489)

(அடைவு-இயைபு / பொருத்தம்; ஓர்தல்-அறிதல்; மாடு-பக்கம்; சூடுதல்-கூப்புதல் / தொழுதல்)

அப்பெண்களுள் நான்கு மங்கையர்கள், செய்தியறிந்த மகிழ்ச்சியால் கூத்தாடிக்கொண்டும், பண்களுக்குப் பொருந்தாது தம் வாயில் வந்தபடி பாடிக்கொண்டும், எதிரே வந்தவர்களையெல்லாம் கைகூப்பி வணங்கிக் கொண்டும், அவர்களிடத்து என்ன சொல்லுவது என்று சிந்திக்கத் தெரியாதவர்களாகவும், கோசலையின் பக்கத்தில் வந்து சேர்ந்தனர்.

Koviloor Digital Library

சீதைக்குச் செய்தி தெரிவிக்கச் சென்ற நீலமாலையின் நிலையும், இராமனைக் காணப்போகும் பரதன் நிலையும், சீதையைக் கண்ட செய்தி தெரிவிக்க வந்த அனுமன் நிலையும் இவ்வாறே கவிஞரால் கூறப்பட்டிருப்பது ஒப்பு நோக்கத்தகும்.

88. கோசலை அவர்களை வினவுதல்

கண்ட மாதரைக் காதலின் நோக்கினாள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை;
'உண்டு பேர் உவகைப் பொருள்; அன்னது
தொண்டை வாயினீர்! சொல்லுமின் ஈண்டு!' என்றாள். (1490)

(கொண்டல்-நீல மேகம்; தொண்டை-கொவ்வைக்கனி; ஈண்டு-இப்பொழுதே)

கார்வண்ணனாகிய இராமபிரானை ஈன்றெடுத்த கோசலை, தன்னைக் காணவந்த நான்கு பணிப்பெண்களையும் மிக்கப்பரிவுடன் நோக்கி, 'கொவ்வைக்கனி போலும் இதழை உடைய மங்கையர்களே! உங்களைப் பார்த்தால் ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய செய்தி ஒன்று உள்ளது என்பது தெரிகிறது. அதனை இப்போதே கூறுங்கள்' என்றாள்.

அரசி கோசலையும் காட்சிக்கு எளியவள்; கடுஞ்சொல்லள் அல்லள் என்பது புலப்படுத்தப்பட்டது. கோசலை தென் கோசல தேசத்து அரசன் மகள். குறிப்பறியும் இயல்பினாள் என்பதும் பெறப்பட்டது.

89. முடிசூட்டும் செய்தியைத் தெரிவித்தல்

'மன் நெடுங்கழல் வந்து வணங்கிடப்
பன்னெடும் பகல் பார் அளிப்பாய்' என,
நின்நெடும் புதல்வன்தனை, நேமியான்
தொல்நெடுமுடி சூட்டுகின்றான்' என்றார். (1491)

(நேமி-ஆணைச்சக்கரம்; பகல்-காலம் /ஆண்டுகள்; அளித்தல்-காத்தல் / ஆளுதல்; தொல்-வழிவழிவந்த / பாரம்பரியம்; மன்-மன்னர்கள்)

'சிற்றரசர்கள் அனைவரும் வந்து உன்னுடைய நீண்ட வீரக்கழல் அணிந்த பாதங்களை வணங்குமாறு பல்லாண்டு காலம் இவ்வுலகினைக் காத்து அரசாள்வாயாக' என்று, உன்னுடைய மூத்தவனும், பெருமைக்குரியவனுமாகிய இராமனுக்கு ஆணைச்சக்கரத்தைச் செலுத்திவரும் மன்னன் தசரதன், வழிவழியாகப் பரம்பரையாக ஆகிவந்த மகுடத்தை அரசப்பட்டத்தைச் சூட்டப் போகின்றான்' என்றார்கள். பகல் என்பது ஆண்டினைக் குறிக்கும். ஒரு பகல் என்பது தேவர்களுக்கு ஓர் ஆண்டினைக் குறிக்கும்.

Koviloor Digital Library

90. கோசலை மகிழ்ச்சியும், துன்பமும் ஒருசேர உணர்தல்

'சிறக்கும் செல்வம் மகற்கு' எனச், சிந்தையில்
பிறக்கும் பேருவகைக் கடல், பெட்புஅற
வறக்கும் மா வடவைக் கனல் ஆனதால்
துறக்கும் மன்னவன் என்னும் துணுக்கமே. (1492)

(செல்வம்-அரசாட்சி / அரசச்செல்வம்; பிறக்கும்-தோன்றும்; வறக்கும்-வற்றச்செய்யும்; துணுக்கம்-நடுக்கம் / அச்சம்; பெட்பு-தன்மை / பெருமை; வடவை-பெண்குதிரை)

பணிப்பெண்கள் கூறிய செய்தியால், தன் மகன் இராமனுக்கு அரசச் செல்வம் வந்துஎய்தி அதனால் அவன் சிறப்படைவான் என உள்ளத்தில் தோன்றும் உவகைக் கடலின் பெருமை அற்றுப்போகும்படி, தன் கணவனான தசரதன் தன்னையும் நாட்டையும் துறந்து போவான் என்ற செய்தி நடுக்கத்தையும் அச்சத்தையும் தந்து, வடவைக்கனல் போல வறண்டு போயிற்று.

மகன் அரசாள்வான் என்ற மகிழ்ச்சியும், மன்னன் துறவு மேற்கொள்வானே என்ற அச்சமும் ஒருசேரப் பெற்றாள் கோசலை. அரசாளுகின்ற மகிழ்ச்சியைக் கடல் என்று வருணித்த கவிஞன், துறப்பான் என்ற துயரத்தைக் கனல் என்று கூறியிருப்பது உணர்ந்து இன்புறுதற்குரியது. கடல் தண்மை வாய்ந்தது உள்ளங்குளிர்ச்சி செய்யும்; கனல் உள்ளம் கொதிக்கச் செய்யும் அல்லவா? ஊழி முடிவில் கடல் நீரை வற்றச் செய்து உலகை அழிப்பது வடவைத்தீ. அது பெண் குதிரையின் வடிவினதாக இருக்கும்.

இன்னும் ஒன்று இந்தக் கனல் அந்த கடலுக்குள் அடங்கியிருப்பது போலவே, இந்தத் துறக்கம் என்னும் கனலால் உண்டாகிய அச்சம், செல்வம் சிறக்கும் என்ற உவகைக் கடலுக்குள் அடங்கியே இருக்கும் என்பதைக் குறிப்பால் உணர்த்தியதுமாகும். மகன் முடிசூடுவான் என்ற மகிழ்ச்சியை மன்னன்துறப்பான்என்றஅச்சம்அடக்கி விட்டது என்பதாம். இதே பொருள் தோன்ற முன்பு சுமந்திரன் கூறியதும் நினைவிற்கொள்ளத்தகும். 'உறத்தகும் அரசு இராமற்கு என்று உவக்கின்ற மனத்தைத் துறத்தி நீ எனும் சொல் சுடும்' என்றான் சுமந்திரன். பெற்ற பிள்ளைக்கே நன்மை வரும் என்றாலும் அது கணவனின் துயரத்தை அல்லது இழப்பை உள்ளடக்கி உள்ளது என்றால்கற்புடைய பெண்டிர்க்குத் துயரமே மேலெழும் என்று கம்பன் காட்டுகிறான்.

91. கோசலை சுமித்திரையுடன் திருமால் கோவில் செல்லுதல்

அன்னள் ஆயும், அரும்பெறல் ஆரமும்
நல்நிதிக்குவையும், நனிநல்கித், தன்
துன்னு காதல் சுமித்திரையோடும் போய்,
மின்னும் நேமியன் மேவு இடம் மேவினாள். (1493)

Koviloor Digital Library

(ஆரம்-முத்துமாலை; துன்னு-நெருங்கிய; நேமி-சக்கரப்படை; மேவு-வீற்றிருக்கின்ற; சுமித்திரை- நல்ல பண்புநலன்களை உடையவள் என்ற பொருள் உடைய சொல்)

அவ்வாறு உவகையும் துயரமும் ஒருங்கே அடைந்த கோசலை, துயரை வெளிக்காட்டிக் கொள்ளாது, தனக்கு நற்செய்தி சொல்லிய நான்கு பெண்களுக்கும் பெறுதற்கரிய முத்து மாலைகளும், நல்ல செல்வக் குவியல்களையும் மிகுதியாக வழங்கி அவர்களை அனுப்பி வைத்தாள். பின்னர், தனது பேரன்பிற்கு உரியவளும் தன்னிடம் நெருங்கிய அன்புடையவளுமான சுமித்திரையை உடன் அழைத்துக் கொண்டு, ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சுதர்சனம் என்னும் சக்கராயுதத்தை உடைய தமது குலதெய்வமான திருமால் வீற்றிருக்கும் இடமாகிய கோவிலைச் சென்று அடைந்தாள்.

துன்னு காதல் சுமித்திரை என்றதனால் கைகேயியின் நிலை வேறு என்பது குறிப்பால் புலப்படுத்தப்பட்டது. துன்னுகாதல் என்பது மனம் கலந்து பழகும் அன்புணர்ச்சியைச் சுட்டும்.

92. இருவரும் திருமாலை வணங்குதல்

மேவி, மென்மலராள், நிலமாது எனும்
தேவிமாரோடும், தேவர்கள் யாவர்க்கும்
ஆவியும் அறிவும் முதல்ஆயவன்
வாவி மாமலர்ப்பாதம் வணங்கினாள். (1494)

(நிலமாது-பூதேவி; ஆவி-உயிர்; வாவி-தடாகம்; முதல்-காரணம் / மூலம் / ஆதி)

அவ்வாறு இருவரும் மெல்லிய செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகள், பூதேவி என்று கூறப்படும் நிலமகள் ஆகிய இரண்டு தேவியர்ளோடும், தேவர்களுக்கும், மற்ற ஏனையோருக்கும், உயிராகவும், உணர்வாகவும், ஆதிமூல காரணமாகவும் இருக்கின்ற திருமால் எழுந்தருளியிருக்கும் கோவிலை அடைந்து, குளத்தில் அன்று மலர்ந்த சிறந்த தாமரை மலர் போன்ற திருமாலின் பாதங்களை வணங்கினாள்.

எல்லா உயிர்க்கும் உயிரும், அறிவும், மூல்காரணமுமாய் இருப்பவன் இறைவனே என்பது கருத்து. பறித்து வாடிய பூவிற்கு மாறாக அன்றலர்ந்த புதிய மலர் என்று கூறுவதற்காக வாவி மாமலர் என்றார். பூவினுள் சிறந்தது பொங்கு தாமரை. எனவே, மாமலராம். மா என்பதற்கு வண்டு என்று பொருள் கொண்டு வண்டுகள் உலவுகின்ற தாமரை மலர் என்றும் பொருள் கூறுவர்.

Koviloor Digital Library

93. கோசலை இறைவனிடம் வேண்டுதல்

'என்வயிற்று அருமைந்தற்கு இனி அருள்
உன் வயிற்றது' என்றாள், 'உலகுயாவையும்
மன்வயிற்றின் அடக்கிய மாயனைத்
தன் வயிற்றின் அடக்கும் தவத்தினாள். (1495)

(மன்-நிலைபேறுடைய / பெருமையுடைய; அடக்கிய- ஒடுங்கச் செய்த; மாயன்-திருமால் / கருநிறமுடையவன் / மாய விளை யாட்டுடையவன் / பிரகிருதி)

உலகங்கள் எல்லாவற்றையும், பிரளய காலத்தில் நிலைபெற்ற தன் வயிற்றகத்தே ஒடுக்கிக் கொண்டு குழந்தையாகி ஆலிலைமேல் அறிதுயில் கொண்டிருந்த கருமைநிறமுடைய, மாயத்திறத்தில் வல்லமை பெற்ற திருமாலைத்தன்வயிற்றில் கர்ப்பமாக அடக்கி வைத்திருந்து தோற்றுவித்த மாபெரும் தவம் உடையவளாகிய கோசலை, திருமாலை வணங்கி, 'என் வயிற்றில் உன் அருளால் ஈன்றெடுத்த பெருமை வாய்ந்த அரிய இராமபிரானுக்குத் துணையாய் நின்று இனிமேல் அருள்செய்ய வேண்டிய பொறுப்பும் உன்னைச் சார்ந்ததே ஆகும் என்று வேண்டித் தொழுதாள்.

இத்தகைய அருள் கோசலைக்கு அவள் முன்செய்த தவப்பயனால் விளைந்ததே என்பது வலியுறுத்தப்பட்டது. கூடாதனவற்றைக் கூட்டுவிப்பது மாயம் எனப்படும். இதை அகடிதகடநாசாமர்த்தியம் என்பர் வடநூலார்.

94. கோசலை கோதானம் செய்தல்

என்று இறைஞ்சி, அவ்இந்திரை கேள்வனுக்கு
ஒன்றும் நான்மறை ஓதிய பூசனை
நன்று இழைத்து, அவண் நல்ல தவர்க்கு எல்லாம்
கன்றுடைப் பசுவின் கடல் நல்கினாள். (1496)

(இந்திரை-திருமகள்; கேள்வன்-கணவன்; ஒன்றும்-பொருத்தமானது; இழைத்து-செய்து; கடல்-கூட்டம் / மிகுதி; பூசனை-வழிபாடு)

இவ்வாறு இறைவனை வழிபட்டு, அந்தத் திருமகளின் கணவனாகிய திருமாலுக்குப் பொருந்தும்படியாக நான்கு வேதங்களிலும் கூறப்பட்டிருக்கின்ற முறைப்படி வழிபாடு நன்றாகச் செய்து, பின்னர், அங்கு நல்ல தவம் செய்த தவசியர்களுக்கெல்லாம் கன்றையுடைய பசுவின் கூட்டங்களை மிகுதியாக வாரி வழங்கினாள்.

நல்ல தவர்க்கு என்றதால் தானம் பெறுதற்குத் தகுதியுடையவரென்பது சுட்டப்பட்டது. 'அடங்கலர்க்கு ஈந்த தானம் தீங்கு விளைக்கும்' என்பது சீவகசிந்தாமணி. மங்கலகாரியங்களுக்கு முன்னே உரியவாறு தானங்கள் செய்வது வழக்கம். கன்றில்லாத பசுவையும், பால்மறுத்த பசுவையும்

Koviloor Digital Library

தானம் செய்தல் கூடாது. இளம் கன்றுடையதாய், நல்ல கறவையும், நல் இலக்கணங்களும் உள்ள பசுவையே தானம் செய்தல் வேண்டுமென்பது நியதி.

95. கோசலை சொர்ணதானம் முதலியன செய்தல்

பொன்னும் மாமணியும், புனை சாந்தமும்
கன்னிமாரோடு காசினி ஈட்டமும்
இன்ன யாவையும் ஈந்தனள், அந்தணர்க்கு
அன்னமும் தளிர் ஆடையும் நல்கினாள். (1497)

(மா-சிறந்த; புனை-பூசுதற்குரிய; காசினி-பூமி; ஈட்டம்-கூட்டம் / தொகுதி; பொன்-சொர்ணம் / தங்கம்)

மேலும், சொர்ணமும், சிறந்த நவரத்தினங்களும், பூசுதற்குரிய சந்தனமும், கன்னிப்பெண்களும், பூமியின் தொகுதியும், இதுபோன்ற மற்ற எல்லாமும் கொடையாக அளித்தாள். அந்தணர்களுக்கு உணவும், வாழைக்குருத்துப் போன்ற மெல்லிய சிறந்த ஆடைகளும் ஈந்தாள். முனிவர்க்கும், வேதியர்க்கும், ஏனையோர்க்கும் வேண்டியவர்க்கு வேண்டியன அளித்தாள் என்பது கருத்து.

நவரத்தினங்கள், வைரம், வைடூரியம், மரகதம், மாணிக்கம், முத்து, பவளம், நீலம், புட்பராகம், கோமேதகம் என்பனவாம். காசினி ஈட்டம் என்பது நிலத்தின் பரப்பைக் குறித்தது, காணி, வேலி என்பதைப் போல. தளிர் என்ற சொல்லாட்சி நோக்கத்தக்கது. தளிர்மேனி என்று கூறும் போது மாந்தளிர் போன்ற மேனி என்றும், தளிர் ஆடை என்னும்போது வாழைக்குருத்துப்போன்ற ஆடை என்றும் பொருள்கூறுவர். தளிர் என்பது இளமையையும், புதுமையையும், மென்மையையும் குறிக்கும் சொல்.

96. கோசலை நோன்பு இருத்தல்

நல்கி, நாயகன் நாள்மலர்ப் பாதத்தைப்
புல்லிப், போற்றி, வணங்கி, புரையிலா
மல்லல் மாளிகைக் கோயில் வலம் கொளாத்
தொல்லை நோன்புகள் யாவும் தொடங்கினாள். (1498)

(நாள்-புதிது / அன்றலர்ந்த; புல்லி-தொட்டு / தழுவி / கையால் பற்றி; புரை-குற்றம்; மல்லல்-வளமை; தொல்-பழமையான; போற்றி-துதித்து; நோன்பு-விரதம்)

இவ்வாறு எல்லாவகைத் தானங்களையும் கோயிலில் செய்து, அன்றலர்ந்த தாமரை மலர்போலும் திருவடிகளைக் கைகளினால் பற்றி, தோத்திரப் பாடல்களைப் பாடி, வணங்கித் தொழுது, குற்றமற்றதும் தனக்குமேலே உயர்ச்சி இல்லாததுமான வளப்பமுடைய அரண்மனை மாளிகையில் அமைந்துள்ள கோயிலை வலம் வந்து, பரம்பரையாகப்

Koviloor Digital Library

பெண்கள் செய்துவரும் நோன்புகள் எல்லாவற்றையும் இயற்றத் தொடங்கினாள்.

தானங்கள் செய்தது கோவிலில். கோவில் அமைந்திருப்பது மாளிகைக்குள் ஒரு பகுதியில். நோன்பு இயற்றியது அரண்மனையில் என்பதாம்.

மந்திரப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

2. மந்தரை சூழ்ச்சிப் படலம் [84 பாடல்கள்]

மந்தரை என்பவள் கைகேயியின் தோழி. மந்தரா என்பது வடசொல். மனத்தைக் கலக்குபவள் என்பது பொருள். இங்கு தன் தலைவியாகிய கைகேயியின் மனத்தைப் படிப்படியாகக் கலக்குகிறாள். சூழ்ச்சி என்பது வஞ்சனை, சதி, சூது என்று அதன் தன்மையைக் கொண்டு பொருள்படும். சூழ்தல், ஆராய்தல், ஆலோசனை என்ற பொருள்களிலும் வழங்கப்பெறும். இங்கே, இராமன் முடிசூட்டிக் கொள்ளப் போகின்றான் என்பதையறிந்த மந்தரை, தன் சூழ்ச்சியினால், தன் தலைவியான கைகேயியின் மனத்தைக் கலக்கி, மாற்றி, இராமன் முடிசூடவிடாமல் செய்ததனால் இது மந்தரைசூழ்ச்சிப் படலம் எனப் பெயர்பெறும். மந்தரை சற்றுக் கூனலாக இருந்த காரணத்தால் கூனி எனவும் வழங்கப் பெறுவாள். இவளுடைய சூழ்ச்சியை விரிவாகக் கூறும் பகுதி என விரியும் இது 84 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் மந்தரைப் படலம் எனவும், சூழ்ச்சிப் படலம் எனவும், வசிட்டன் உபதேசப் படலம், நலம் தெரி படலம் எனவும் குறிக்கப் பட்டிருக்கின்றன.

இப்படலத்துள், சோதிடர் நாளையே முடிசூட்டுவதற்கு ஏற்ற நாள் என்று கூறுதலும், தசரதன் வசிட்டனை வரவழைத்து இராமனுக்கு உறுதிப் பொருள்கள்கூறி வேண்டுவனசெய்யுமாறு கூறுதலும், வசிட்டன்இராமன் மனை புகுந்து அவன் முடிசூடுவது நாளை என்று கூறி உறுதிப் பொருள்கள் கூறுதலும், பின்னர் இருவரும் கோயிலுக்குச் செல்லுதலும், வசிட்டன் இராமனுக்கு உரிய சடங்குகளை ஆற்றித் தசரதனுக்குத் தெரிவித்தலும், தசரதன் நகரை அலங்கரிக்க ஆணையிட வள்ளுவர் பறையறிந்து அறிவித்தலும், நகர மாந்தர் மகிழ்ந்து அலங்கரித்தலைக் கண்ட மந்தரை கோபத்துடன் விரைந்து கைகேயியின் மாளிகையை அடைதலும், தூங்கிக் கொண்டிருந்த கைகேயியை எழுப்பிச் செய்தி தெரிவித்தலும், கைகேயி மகிழ்ந்து மணி மாலை பரிசளித்தலும், அதனை மந்தரை வீசியெறிதலும், கைகேயி முதலில் சினம் கொண்டு கடிந்து பேசுதலும், மந்தரை சூழ்ச்சியால் மனம் மாறிக் கைகேயி அவளிடமே பரதன் முடிசூட உபாயம் கேட்டலும், மந்தரை சூழ்ச்சி உரைத்தலும், கைகேயி அவளைப் பாராட்டிப் பரிசு கொடுத்தனுப்புதலும் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

1. தசரதன் சோதிடரை நல்ல நாள் பற்றிக் கேட்டல்

கடிகமழ் தாரினான் கணித மாக்களை
முடிவுற நோக்கி, ஓர்முகமன் கூறிப் பின்
'வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை கடிகை நாள் மொழிமின்!' என்றனன். (1499)

(கடி-மணம்; தார்-மாலை; முடிவுற-நன்கு / முற்றும்; ஓர்-ஒப்பற்ற; வடி-கூரிய; கடந்த-வென்ற; கடிகை-நாழிகை; நாள்-நட்சத்திரம்; முகமன்-உபசாரவார்த்தை; மைந்தர்-வீரன்; மாக்கள்-மக்கள்; கணித மாக்கள்-சோதிட வல்லுநர்)

நறுமணம் கமழ்கின்ற மலர் மாலையணிந்த தசரதன், கணித நூல் வல்லுநர்களை நன்றாக முற்றும் பார்த்து, ஒப்பற்ற உபசார வார்த்தைகளைக் கூறிப் பின்னர், 'கூரிய மழுவாயுதத்தை ஏந்திய பரசுராமனை வென்ற வீரனான இராமபிரானுக்கு முடிசூட்டும் நல்ல நாளும் நல்ல நாழிகையுமாகிய நல்ல முகூர்த்தம் அமைந்த சிறந்ததொரு நாளை ஆராய்ந்து கூறுங்கள்' என்றான்.

மாக்கள் என்பது ஐயறிவுடையோர்க்கே பொருந்தும் எனினும், அச்சொல் மக்கள் என்ற பொருளிலும் வருவதுண்டு. கடந்த என்ற சொல் வென்ற என்ற பொருளில் வந்தாலும், வஞ்சியாது நேர் நின்று வெல்லுதல் என்ற சிறப்புப் பொருளை உள்ளடக்கியதாகும்.

2. தசரதன் வசிட்டனை அழைத்தல்–நாள் குறித்தல்

'பொருந்தும் நாள் நாளை நின்புதல்வற்கு' என்றனர்
திருந்தினார்; அன்னசொல் கேட்ட செய்கழல்
பெரும் திண்மால் யானையான் 'பிழைப்புஇல் செய்தவம்
வருந்தினான் வருக' என, வசிட்டன் எய்தினான். (1500)

(திருந்தனார்-திருந்திய புலமை பெற்ற சோதிடர்; செய்-செய்யப்பட்ட; மால்-மதம்; வருந்தினான்-முயன்றவன்)

சோதிட நூலில் திருந்திய புலமை பெற்ற சோதிடர்கள் 'நின் புதல்வன் முடிசூடுதற்குரிய ஏற்ற நாள் நாளையே' ஆகும் என்று கூறினர்; அத்தகைய சொல்லினைக் கேட்ட, புனைந்து அலங்கரித்துச் செய்யப்பட்ட வீரக்கழல்கள் அணிந்தவனும், பெரிய, திண்மை வாய்ந்த, மதம் கொண்ட யானைப் படைகளையுடையவனும், யானையைப் போன்றவனுமான தசரதன், 'குற்றமற்ற தவங்கள் இயற்றி உடல் வருந்திய வசிட்ட முனிவனை அழைத்து வருக' என்று கட்டளை இட, வசிட்ட முனிவன் அங்கு வந்து சேர்ந்தான்.

இங்கே சில கருத்துக்கள். கம்பன் கவிச்சக்கரவர்த்தி அல்லவா? இப்பாடல் அதை நிரூபிக்கின்ற ஒன்று. தசரதன், 'இராமனுக்கு முடி

Koviloor Digital Library

புனைய ஏற்ற நல்ல நாள் எது' என்று கேட்டான்; அவர்கள் முடிபுனைதற்கு ஏற்ற நாள் என்றும் கூறாமல், நல்ல நாள் என்றும் கூறாமல்; 'நின் புதல்வற்குப் பொருந்தும் நாள் நாளை' என்றனர். எதற்குப் பொருந்தும் நாள் என்றோ, அந்நாள் எல்லோருக்கும் நல்ல நாள் என்றோ கூறாமல் விடுக்கிறான் கவிஞன். காரணம் அந்த நாளில் முடியும் சூடப்படவில்லை; நல்ல நாளாகவும் எல்லோர்க்கும் இருக்கவில்லை என்பதைக் குறிப்பால் உணர்த்தவே கவிஞன் இந்தச் சொற்களை மிகச் சாதுர்யமாகக் கையாண்டிருக்கிறான் என்பதை உணரவேண்டும். செய்தவம் வருந்துதல் என்பதும் ஓர் ஒப்பற்ற சொல்லாட்சி. தவம் இயற்றுபவர்கள் வருந்துவர், என்பது 'ஆற்றின் வருந்தா வருத்தம்' என்ற குறளினால் (468) பெறப்படும். தவம் என்பது மனம், பொறி வழி போகாது நிற்றல் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்குதல், கோடைக் காலத்தில் வெயிலில் நிலை நிற்றல், மழைக் காலத்திலும் பனியிலும் நீர் நிலைகளில் நிற்றல், முதலிய செயல்களைச் செய்வதால், தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தல், முதலியன தவம் வருந்தினான் என்ற சொற்களுக்குள் அடங்கும். வசிட்டன் என்ற சொல்லுக்கு ஞானம் தன்னிடத்துக் குடிகொண்டவன் என்பது பொருள்.

3. தசரதன் வசிட்டனிடம் இராமனுக்கு அறவுரை கூறவேண்டுதல்

'நல்லியல் மங்கல நாளும் நாளை, அவ்
வில்லியல் தோளவற்கு ஈண்டு வேண்டுவ
ஒல்லையின் இயற்றி, நல்உறுதி வாய்மையும்
சொல்லுதி பெரிது!' எனத் தொழுது சொல்லினான். (1501)

(இயல்-தன்மைகள் வாய்ந்த / பழகுகின்ற தன்மை; ஈண்டு-இப்பொழுது; ஒல்லையின்-விரைவில்; உறுதி-நன்மைகள்; பெரிது-மிகுதி / விரைவாக; வேண்டுவ-பூசை முதலிய சடங்குகள்; வாய்மை-வார்த்தை / உபதேசங்கள் / அறவுரை)

தசரதன் வசிட்டனை நோக்கி 'நல்ல தன்மையுள்ள மங்கல நாள் நாளைக்குப் பொருந்துவதாக இருக்கிறது. எனவே, வில் தொழிலையே தன் இயல்பான தன்மையாகக் கொண்டுள்ள தோள்களையுடைய இராமனுக்கு இப்பொழுது செய்ய வேண்டுவனவாகிய விரதம், பூசை முதலிய சடங்குகளை விரைவாகச் செய்து, பின்னும் அவனுக்கு நல்ல உறுதி பயக்கக்கூடிய நன்மையான அறவுரைகளையும் உபதேசங்களையும் விரிவாகச் சொல்லுவீராக!' என்று வணங்கிக் கூறினான்.

வில் இயல் தோள் என்பது தாடகையை வென்ற வில்லாற்றல், சிவதனுசை முறித்த வில்லாற்றல், திருமால் வில்லை வாங்கி வளைத்துப் பரசுராமனின் செருக்கு அகற்றிய வில்லாற்றல் முதலிய நிகழ்ச்சிகளை உள்ளடக்கிக் கூறிய சொற்றொடர் ஆகும். நாளைக்கே மகுடம் சூட்ட நல்ல

Koviloor Digital Library

நாள் எனவே இன்றைக்கே இது செய்து முடிக்கப்பட வேண்டும் என்ற விரைவு கருதி ஒல்லையின் இயற்ற வேண்டினான் என்பதாம். அரசியல் அறங்கள் முடி புனைவதற்கு முன்னால்-முந்நாள் கூறவேண்டுவது முறை, வான்மீகத்தில் தசரதனே இவ்வறங்களை இராமனுக்குக் கூறியதாகக் கூறப்பட்டிருக்கிறது. அரசியல் அறநெறி முறைகளைத் தந்தையாகிய அரசனைக் காட்டிலும் ஆசானாகிய முனிவன் சொல்லுவதே தகும் எனக் கம்பன் கருதி வசிட்டர் வாயால் கூறவைத்தான் போலும்.

4. வசிட்டரை இராமன் வரவேற்றல்

முனிவனும் உவகையும் தானும் முந்துவான்
மனுகுல நாயகன் வாயில் முன்னினான்;
அனையவன் வரவுகேட்டு, அலங்கல் வீரனும்
இனிது எதிர்கொண்டு தன்இருக்கை எய்தினான். (1502)

(அலங்கல்-மாலை; முன்னுதல்-அடைதல்)

வசிட்ட முனிவனும் தான் மிகவும் மகிழ்ச்சியுற்று, தான் முன்னே போகிறோமா, தன் மகிழ்ச்சி முன்னே போகிறதா என்பதை அறிய மாட்டாதவனாய் அவ்வளவு மகிழ்ச்சியுடன், சூரியகுல மனுவின் வழித் தோன்றலாகிய இராமபிரான் வதியும் மாளிகையை அடைந்தான். வசிட்டர் வருவதைக் கேள்வியுற்ற அசைகின்ற மலர்மாலையணிந்த மார்பையுடைய வீரனான இராமபிரானும், தானும் மகிழ்ச்சியோடு முனிவரை எதிர்சென்று வரவேற்றுத் தன் இருப்பிடத்தை அடைந்தான்.

மரியாதைக்குரிய பெரியோர்கள் நம் இல்லம் நாடி வந்தால், நாம் நம் இருக்கையை விட்டு எழுந்து எதிர் சென்று வரவேற்று உபசரித்தல் முறையாகும்.

5. வசிட்டன் இராமனிடம் கூறுதல்

ஒல்கல்இல்தவத்து உத்தமன், ஓதும் நூல்
மல்கு கேள்வி அவ்வள்ளலை நோக்கினான்;
'புல்கு காதல் புரவலன், போர் வலாய்!
நல்கும் நானிலம் நாளை நினக்கு' என்றான். (1503)

(ஒல்கல்-தளர்தல் / வளைதல்; மல்கு-நிறைந்த; புல்கும்-பொருந்திய / நெருங்கிய; உத்தமன்-தலைமையானவன் / புண்ணியன்; நானிலம்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு பகுப்பாகிய நிலம் / பூமி)

தளர்ச்சியற்ற இடைவிடாத தவத்தையுடைய தலைமை யானவனும் புண்ணியனுமான வசிட்ட முனிவன், கற்பதற்குரிய நூல்களைக் கற்றவனும், பின்னும் கேள்வியறிவு நிரம்பியவனுமான வள்ளல் தன்மையுடைய இராமபிரானைநோக்கி, 'போரில்வல்லவனே! உன்னிடம்

Koviloor Digital Library

பேரன்பு கொண்ட சக்கரவர்த்தி நாளை உனக்கு இந்நிலவுலகை ஆளும் அரசாட்சியைத் தரப்போகிறான்' என்றார்.

6. வசிட்டனின் அரசியல் அறவுரை [15 பாடல்கள்]

என்று, பின்னும் இராமனை நோக்கி, 'நான்
ஒன்று கூறுவது உண்டு உறுதிப் பொருள்;
நன்று கேட்டுக் கடைப்பிடி நன்கு' எனத்
துன்றுதார் அவர் சொல்லுதல் மேயினான். (1504)

(துன்று-நெருங்கிய / அடர்ந்த; தார்-மலர் மாலை; சொல்லுதல்-கற்பித்தல்; உறுதி-நன்மை)

என்று கூறிய வசிட்டன், இராமபிரானை நோக்கி, 'நான் உனக்கு நன்மை தரத்தக்கச் செய்தி ஒன்று கூற இருக்கிறேன். அதனைக் கருத்துடன் கேட்டுச் செம்மையாக இறுதிவரை தவறாது கடைப்பிடிப்பாயாக!' என்று நெருங்கி அடர்ந்த மலர் மாலையணிந்த இராமபிரானுக்குக் கூறத்தொடங்கினான்.

நன்று கேட்டல்-ஐயம் திரிபறக் கேட்டல்; நன்கு கடைப்பிடித்தல்-கேட்ட நெறியில் வழுவாமல் ஒழுகுதல்.

7. 'கரிய மாலினும், கண்ணுதலானினும்
உரிய தாமரைமேல் உறைவானினும்
விரியும் பூதம் ஓர்ஐந்தினும், மெய்யினும்
பெரியர் அந்தணர், பேணுதி உள்ளத்தால்' (1505)

(மெய்-சத்தியம்; பேணுதி-போற்றுக; அந்தணர்-வேதம் வல்ல வேதியர் / துறந்தவர்கள்)

'கரிய மேனியையுடைய திருமாலைக் காட்டிலும், நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானைக் காட்டிலும், தனக்கே உரிய செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனைக் காட்டிலும், உலகெலாம் பரந்து நிற்கின்ற ஐந்து பூதங்களைக் காட்டிலும், சத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் வேதம் வல்ல வேதியர்கள். எனவே முதலில் அவர்களைப் போற்றத் தெரிந்து கொள்வாயாக?'

உலகம் தோன்றுதற்குக் காரணமான மும்மூர்த்திகளைக் காட்டிலும், உலகம் இயங்குவதற்குக் காரணமான ஐம்பெரும் பூதங்களைக் காட்டிலும், உலகம் நிலைத்திருப்பதற்கு ஆதாரமாய் இருக்கின்ற சத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் வேதியர்கள். எனவே அவர்களைப் போற்றிப் பாதுகாப்பது அரசர்களின் முதற்கடமை என்பதாம். கீதையில் கண்ணபிரான், 'உலகம் முழுதும் தெய்வத்தின் வயத்தது; தெய்வங்கள் மந்திரத்தின் வயத்தன; மந்திரங்கள் அந்தணர் வயத்தன; எனவே அவ்வந்தணர் எமக்குக் கடவுளாவார்' என்று கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது. ஆகாயத்தினின்றும் முறையே தோன்றி ஒவ்வொன்றும் தனித்தனியே மிக விரிதலின் விரியும் பூதம் ஓர் ஐந்து என்றார்.

Koviloor Digital Library

8. 'அந்தணாளர் முனியவும், ஆங்கு அவர்
சிந்தையால் அருள் செய்யவும், தேவரில்
நொந்து ளாரையும், நோய் தவிர்ந் தாரையும்
மைந்த! எண்ண வரம்பும் உண்டாம் கொலோ?' (1506)

(முனிதல்-வெகுண்டு கூறுதல்; நொந்துளோர்-வருந்தினவர்கள்; நோய்-வருத்தம்)

மைந்தனே! வேதியர்கள் தாங்கள் வெகுண்டு கூறியதால் தேவர்களில் நொந்து போனவர்களையும், வேதியர்கள் அருளிக் கூறியதனால் தேவர்களில் வருத்தம் நீங்கி இன்புற்றவர்களையும் எண்ணிப் பார்க்கத் தொடங்கினால் அதற்கு ஓர் எல்லை உண்டோ? அவை கணக்கிலடங்காது.

வேதியர் வெகுண்டு கூறினும், அருளிக் கூறினும் அவ்வப்பயன்களைத் தந்தே தீரும். அதற்கு முத்தேவர்கள் கூட விதிவிலக்கல்ல. எடுத்துக்காட்டு துருவாச முனிவன் சாபத்தால் இந்திரன் பதவி இழந்தமை; கோதமன் கோபத்தால் இந்திரன் மெய்யெலாம் கண்ணாகி நொந்தான்; புலைத் தன்மை எய்திய திரிசங்கு கோசிகன் அருள் செய்யத் துறக்கம் பெற்றான். 'ஐந்தவித்தான் ஆற்றல், அகல் விசும்புளோர் கோமான் இந்திரனே சாலும் கரி' என்பது குறள் (25). அகத்தியர் சபித்ததால் இந்திர பதவி பெற்ற நகுடன் பாம்பாயினான். கோசிகன் என்னும் அரசன் தான் பிரம முனிவனாகி விசுவாமித்திரனாய்ப் புகழ் பெற்றான். அது வசிட்டனின் அருளால் ஆயினது தானே?

9. 'அனையர் ஆதலின் ஐய! இவ்வெய்ய தீ
வினையின் நீங்கிய மேலவர் தாள்இணை
புனையும் சென்னியையாய்ப் புகழ்ந்து ஏத்துதி!
இனிய கூறி நின்று ஏயின செய்தி யால்' (1507)

(அனையர்-அத்தன்மையர்; வெய்ய-கொடிய; புனையும்-சூடும்; சென்னி-தலை; ஏத்துதல்-துதித்தல்; ஏயின-ஏவிய / கட்டளையிட்ட; தீவினை-பாவங்கள்; இணை-இரண்டு)

'மைந்தனே! எனவே அத்தன்மையயுடைய வேதியர்கள் கொடியபாவங்களினின்றும் நீங்கிய மேன்மையுடையவர்கள் ஆவார்கள்; எனவே அவர்கள் இருதிருவடிகளையும் உன்னுடைய தலையில் பொருத்திப் புகழ்ந்து துதிப்பாயாக! அவர்களிடம் இனிய உபசார மொழிகளைக் கூறி, அவர்கள் ஏவுகின்ற கட்டளைப்படி மறாது மனமுவந்து உரியன செய்வாயாக! என்றார்.

'இறைஞ்சுக பெரும! நின் சென்னி சிறந்த நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே' என்பது புறநானூறு.

10. 'ஆவதற்கும் அழிவ தற்கும் அவர்
ஏவநிற்கும் விதியும் என்றால், இனி

Koviloor Digital Library

ஆவது எப்பொருள் இம்மையும் அம்மையும்
தேவரைப் பரவும் துணை சீர்த்ததே?' (1508)

(ஆவது-ஆக்கம் பெறுவது / மேம்படுவது; பரவும்-வணங்குவது; இம்மை-மண்ணுலகம்; அம்மை-விண்ணுலகம்; சீர்த்தது-சிறப்புடையது; அழிதல்-தாழ்ந்து கெடுதல்; விதி-ஊழ்வினை)

ஒருவன் ஆக்கம் பெற்று மேம்படுதற்கும், ஒருவன் தாழ்ந்து கெடுதலுக்கும் அவ்வேதியர்கள் கட்டளையிட அதைத் தலைமேற்கொண்டு ஆக்குவிக்க ஊழ்வினை தயாராக நிற்கும் என்றால், இனி வேறுயாரேனும், வேறு எந்தப்பொருளாவது, இவ்வுலகத்திலும், விண்ணுலகத்திலும், இம்மையிலும், மறுமையிலும் அத்தகைய வேதியர்களைப் போற்றித் துதிப்பதைத் தவிர வேறு சிறப்புடையது என்ன இருக்கிறது? ஒன்றும் இல்லை.

'அஞ்சுதரு தீவினையினால் அமுது நஞ்சாம்; நஞ்சும் அமுதமாம்; உரிய நல்வினையின் மாதோ' என்பது வில்லிபாரதம். தீப்பயன் தரவேண்டியதைப் போகூழ் என்றும், நற்பயன் தரவேண்டியதை ஆகூழ் என்றும் கூறுவர். போகூழ் ஆகூழாய் மாறுவதும், ஆகூழ் போகூழாய் மாறுவதும் வேதியரின் ஏவலில் உள்ளது என்பதாம். அருளிக் கூறினால் ஆகூழ்; வெகுண்டு கூறினால் போகூழ்; 'ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும், எண்ணில் தவத்தால் வரும்' என்பது குறள் *(264)*. வேதியரைப் போற்றிப் புகழுதலைப் போல வேறு செயலுமில்லை, பொருளுமில்லை. விதியின் வலிமையை மாற்றும் ஆற்றல் வேதியர்க்கே உரியது. எனவே அவரைப் போற்றி வழிபட்டுப் பயன் பெறுவதன்றி இரண்டுலகத்திலும் செய்தற்குரியது வேறு ஒன்றுமில்லை. தெய்வங்களுக்கும் கட்டுப்படாது தன் வழியிலேயே செயல்படும் விதிகூட அவர்களுக்கு ஏவல் செய்யும் என்பதாம்.

11. உருளும் நேமியும், ஒண்கவர் எஃகமும்
மருள்இல் வாணியும், வல்லவர் மூவர்க்கும்
தெருளும் நல்லறமும், மனச் செம்மையும்
அருளும், நீத்தபின் ஆவது உண்டாகுமோ? (1509)

(நேமி-சக்கரப்படை; ஒண்-ஒளியுடன்; எஃகம்-சூலப்படை; வாணி-வேதவாக்கு; கவர்த்தல்-பலதலையாகப் பிரிதல்; கவர் எஃகம்-முத்தலைச் சூலம்; தெருளும்-தெளிந்து தேர்ந்த; செம்மை-நடுவு நிலைமை; உருளும்-செல்லத்தக்க)

சக்கரப்படையைச் செலுத்தி உலகத்தைக் காத்தல் தொழில்புரியும் திருமாலும், ஒளி வீசுகின்ற மூன்றாகப் பிரிந்திருக்கின்ற சூலாயுதத்தைக் கொண்டு உலகை அழித்தல் தொழில் புரியும் சிவபெருமானும், மருட்சியில்லாத வேதத்தைக் கொண்டு இவ்வுலகத்தைப் படைக்கும் தொழில் புரியும் பிரமன் ஆகிய மூன்று பேரும், தெளிந்து தேர்ந்த நல்ல

Koviloor Digital Library

தர்மத்தையும், நடுவு நிலைமையான உள்ளம் உடைமையையும், தொடர்பு கருதாது இயல்பாக எல்லா உயிர்களின் மேலும் செலுத்தும் கருணை ஆகிய குணங்களையும் நீத்துவிட்டால் அவர்களுக்கு ஏதேனும் ஆக்கம் உண்டாகுமோ? உண்டாகாதல்லவா! அது போல மன்னர்க்கும் நல்லறமும், மனச்செம்மையும், அருளும் மிக இன்றியமையாதன என்பதாம்.

செம்மை என்பது பகை நட்பு நொதுமல் என்ற மூவிடத்தும் ஒருபால் கோடாது நடுவு நின்று முடிவு கூறுதலையும், இன்பதுன்பங்களில் ஒத்த நிலையாதலையும் குறித்தது. 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்பது புறநானூறு. 'வேலன்று வென்றி தருவது, மன்னவன் கோல் அதூஉம் கோடாது எனின்' என்பது குறள் *(546)*.

12. 'சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதிமைந்த! நினக்கு இலை; ஆயினும்
ஏதம் என்பன யாவையும் எய்துதற்கு
ஓதும் மூலம் அவைஎன ஓர்தியே' (1510)

(முந்துற-முதலாக; ஏதம்-குற்றம்; மூலம்-காரணம்; ஓர்தி-ஆராய்ந்து உணர்வாயாக)

'நீதி நெறி வழியில் நிற்கும் மைந்தனே! சூது முதலாகச் சொல்லப்பட்ட பெருந்துயர் விளைவிக்கின்ற தீயசெயல்கள் உன்னிடத்தில் இப்போது இல்லை என்றாலும் கூட, குற்றம் என்று சொல்லப்படுபவை எல்லாவற்றையும் அடைவதற்குச் சொல்லப்படுகிற காரணங்கள் அவைகள் தான் என்பதை உணர்ந்து கொள்வாயாக'.

உலகில் நடைபெறும் குற்றங்கள் அனைத்திற்கும் சூது முதலாகச் சொல்லப்பட்ட தீயசெயல்களே மூலமுதற்காரணம் ஆகும். இப்போது அவை உன்னிடத்தில் இல்லை என்றாலும், இனி எப்போதும் அவை உன்னிடம் நெருங்காவண்ணம் பார்த்துக் கொள்க' என்று அறிவுறுத்தினான் என்பது.

சூதுமுதலாய குற்றங்கள் யாவை? இருமனப் பெண்டிரும், கள்ளும், கவறும், தீ நீக்கப்பட்டார் தொடர்பு' எனபது குறள் *(920)*. இங்கே கவறு என்பது சூதினைக் குறிக்கும். சூதும், கள்ளும் பரத்தையுமே சொல்லப்பட்ட மாத்துயர் என்பதாம். இவற்றின் காரணமாக களவு, கடுஞ்சொல், மிகுதண்டம், சூது, பொருளீட்டம், கள், காமம் இவை யேழும்' மாத்துயர் தருவனஎன்பர். இதனைவடநூலார்வியசனம் என்றும் விதனங்கள்என்றும் கூறுவர். இவை அரசர்க்குத் தகாத குற்றங்கள். சூதாடுதல், வேட்டையாடுதல், பகலில் தூங்குதல், வம்பளத்தல், பெண் பித்தனாதல், குடித்தல், பாட்டு, கூத்து இசைப் பிரியனாதல், ஊர் சுற்றல் என்பன காமத்தினால் உண்டான பத்துத் துக்கங்கள் என்றும் கூறுவர். 'சிறுமை பல செய்து, சீரழிக்கும் சூதின், வறுமை தருவது ஒன்றுஇல்' என்பது குறள் *(934)*.

Koviloor Digital Library

13. 'யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்
போரொடுங்கும் புகழ் ஒடுங்காது; தன்
தார் ஒடுங்கல் செல்லாது; அது தந்தபின்
வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ?' (1511)

(ஒடுங்குதல்-சுருங்குதல் / இல்லாது போய் விடுதல்; தார்-சேனை / தூசிப்படை / முன்னணிப்படை)

ஒரு அரசன் வேறு எவரோடும் பகைமை உணர்வு கொள்பவன் அல்லன் என்ற நிலை ஏற்படுமாயின் அவனது நாட்டில் போரே நிகழாது; எனவே அவன் புகழ் சுருங்காது, பெருகும்; அவனுடைய படைகள் அழியாமல் விரிவு பெறும்; அவ்வாறு நிகழ்ந்து விட்டால் அவனை வேரோடும் கெடுத்தல் என்பது பகைவர்கள் எண்ணினாலும் நிகழும் காரியமோ? நிகழாது.

'இகல் என்னும் எவ்வநோய் நீக்கில், தவவில்லாத் தாஇல் விளக்கம் தரும்' என்பது குறள் (853). 'பகை என்னும் பண்பில் அதனை ஒருவன் நகையேயும் வேண்டற் பாற்றன்று' என்பதும் மற்றொரு குறள் (871). 'ஊரொடு பகைக்கின் வேரொடும் கெடும்' என்பது ஔவையின் கொன்றை வேந்தன்; போரில் வென்று வெற்றிபெற்று வாகை சூடுவதே புகழுக்குக் காரணம் என்பது இச்செய்யுளில் மறுக்கப்பட்டிருக்கிறது. எவரிடமும் பகைகொள்ளவில்லை என்றால் போர் நிகழாது. போர் நிகழவில்லையென்றால் சேனைப்படைகள் அழியாது. படைகள் அழியாதலால் தான் வேரொடும் கெடுதல் நிகழாது. ஆனால் புகழ் ஓங்கும் என்று ஒன்றன் பின் ஒன்றாய்க் கூறியது ஒரு நயம்.

14. 'கோளும் ஐம்பொறியும் குறையப் பொருள்
நாளும் கண்டு, நடுக்குறு நோன்மையின்
ஆளும் அவ்வரசே அரசு; அன்னது
வாளின் மேல் வரும்மாதவம் மைந்தனே!' (1512)

(கோளும்-கொளும் / கொள்ளுகின்ற; நோன்மை-வல்லமை; கண்டு-செய்து / பெருக்கி; பொறி-இந்திரியங்கள்)

மைந்தனே! மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளால் கொள்ளப்பட்டு நுகர்கின்ற ஐம்புலன்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றைக் கொள்வதிலுள்ள ஆசைகளைக் குறைத்து, மக்களுக்காக நாள்தோறும் பொருள் வளத்தினைப் பெருக்கி, பகைவர்கள் நடுங்குகின்ற வல்லமையுடன் கூடிய அரசாட்சி செய்பவனே நல்ல அரசனாவான். ஆனால் அது எளிதன்று. அது வாளின் முனையில் நின்று சிறந்த தவம் செய்வதை ஒக்கும்.

தன் ஆசைகளைக் குறைத்து, மக்களுக்காக நன்னெறியில் செல்வம் ஈட்டி, பகைவர்கள் நடுங்கும்படி வல்லமையுடன் செய்வது தான் சிறப்பான அரசியலாகும்; ஆனால் அது எளிதன்று. கத்தி முனையில்

Koviloor Digital Library

நடப்பது போன்றதாகும் என்பதாம். 'மன்பதை காக்கும் நற்குடிப்பிறத்தல் துன்பம் அல்லது தொழு தகவு இல்' என்பது சிலப்பதிகாரம். பொறி நுகர்ச்சியைக் குறைத்தல், பொருளை நாள்தோறும் பெருக்குதல், (மெய்ப்பொருளை நாளும் காணுதல்) பாவத்திற்கு நடுக்குறுதல், தமக்குற்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதல் என்பவை தவம் செய்வோர்க்கே உரியன. இவையாவும் அரசனும் செய்தலால் அரசனும் மாதவம் செய்பவன் எனப்பட்டான். நெருப்பில் நின்றும், நீரின் நின்றும், மலையின் நின்றும், மழையினும் வெயிலினும் இயற்றும் தவத்தைக் காட்டிலும், வாளின் நுனியின் நின்று இயற்றும் தவம் மாதவம் எனப்பட்டது. அரசு என்பது இன்பம் நுகர்வது மட்டுமன்று என்பதை வலியுறுத்தியதாம்.

15. உமைக்கு நாதற்கும், ஓங்குபுள் ஊர்திக்கும்,
இமைப்புஇல் நாட்டம் ஓர்எட்டு உடையானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கினர் ஆயினும்
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே. (1513)

(புள்-கருடன்; ஊர்தி-வாகனம்; நாட்டம்-கண்கள்; சமைத்த-பொருந்திய, ஆற்றல்-செய்தல் / வலிமை)

உமையம்மையின் கொழுநனான சிவபெருமானுக்கும், உயர்ந்து பறக்கின்ற பறவையாகிய கருடனைத் தன் வாகனமாகக் கொண்ட திருமாலுக்கும், இமைக்காத எட்டுக் கண்களையுடைய நான்முகனாகிய பிரமனுக்கும் பொருந்திய தோளாற்றலை ஒரு மன்னன் பெற்றிருப்பினும், அமைச்சர்கள் கூறுகின்ற நெறிப்படி செயலாற்றுபவர்களே ஆற்றல் மிக்க அரசர்கள் எனக் கூறப்படுவர்.

இங்கே இராமபிரான் சிவதனுசையும், திருமாலின் வில்லையும் முறையே இற்றதனாலும், வளைத்ததனாலும் ஆகிய தோளாற்றலை வசிட்டன் குறிப்பாகக் கூறாமல், முத்தேவர்களுடைய வலிமை பெற்றிருந்தாலும் என்று பொதுவாகக் கூறுவது நோக்கத் தக்கது. 'இடிப்பாரைஇல்லாஏமராமன்னன்கெடுப்பார்இலானும்கெடும்என்பது குறள் (448). 'அறன் அறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும் திறனறிந்தான் தேர்ச்சித் துணை' என்பதும், 'செவி கைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக் கீழ்த் தங்கும் உலகு' என்பதும் குறட்பாக்கள் (635,389). மும்மூர்த்திகளுக்கும் உரிய ஆற்றலை ஒருங்கே பெற்றிருப்பினும் தன்மனம் போல, செருக்குக் கொண்டு ஆட்சி நடத்துதல் ஆகாது. அறிவிற் சிறந்த அமைச்சர்கள் ஆலோசனையைக் கேட்டே அரசு புரிதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. அமைச்சர் என்பவர் அருகிருந்து ஆவன சொல்பவர் எனவே தான் வள்ளுவன் இவர்கள் 'உழையிருந்தான்' என்பார் குறள் (638).

Koviloor Digital Library

16. என்பு தோல்உடையார்க்கும், இலார்க்கும், தம்
வன்பகைப்புலன் மாசுஅற மாய்ப்பது என்?
முன்பு பின்பு இன்றி, மூவுலகத்திலும்
அன்பின் அல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ? (1514)

(என்பு-எலும்பு; மாய்ப்பது-ஒழிப்பது / அடக்கிவிடுதல்; ஆக்கம்-நன்மை)

எலும்பு, தோல் முதலிய ஏழுவகைத் தாதுக்களால் ஆகிய உடம்பை உடைய மானிடர்களும், முனிவர்களும் அவையில்லாது ஒளி உடம்பை உடைய தேவர்களும், தமது வலிய அகப்பகையாகிய ஐம்புலன்களையும் ஆசையையும் குற்றமில்லாதபடி அடக்கிவிடுவதால் மட்டும் என்ன பயன்? முற்காலம், பிற்காலம் இன்றி எக்காலத்தும், மண், விண், பாதாளம் ஆகிய மூன்று உலகங்களிலும் அன்பினைக் காட்டிலும் நன்மை செய்கின்ற ஒரு பொருள் வேறு ஏதேனும் இருக்கிறதோ? இல்லை.

மனிதராயினும், தேவராயினும், புலனடக்கத்தால் மட்டும் நன்மை விளைந்து விடுவதில்லை. அன்புதான் முழுமுதற்காரணம் என்று வலியுறுத்தப்படுகிறது. இதனைப்பெறுவதற்குக் கால, இட வேறுபாடுகள் இல்லை எனவேதான் எக்காலத்தும் எவ்வுலகத்தும் என்றார். 'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு' என்பது குறள் 80.

17. வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்
உய்யத்தாங்கும் உடலன்ன மன்னனுக்கு
ஐயம்இன்றி, அறம்கடவாது, அருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ? (1515)

(மன்-நிலைபெற்ற; உய்ய-வாழுமாறு; கடவாது-தவறாது)

உலகில் வாழுகின்ற நிலைபெற்ற உயிர்களெல்லாம் தன்னுயிரே போலவும், அவ்வுயிரைத் தாங்குகின்ற உடலே மன்னன் போலவும் இருக்கின்ற அரசர்கள், அறநிலை தவறாது அருளாட்சி புரிவரேல், அவர்கள் வேள்வி என்பது ஒன்று செய்யவும் வேண்டுமோ? வேண்டுவதில்லை.

அரசியல் நெறி தவறாது அருளுடன் ஆட்சி புரிந்தால் வேள்வி செய்வது வேண்டாததொன்று. அதன் பயன் முழுவதும் அன்பிலும் அருளிலும் பெற்றதாய் விடும் என்பதாம். 'மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்' என்பது மணிமேகலை; 'தன்னுயிர் போலத் தழீஇ உலகத்து மன்னுயிர்கட்கும் மன்னன்' என்பது கலித்தொகை. உயிர் இல்லாதபோது உடம்பு பயனற்றதாதல்போலக் குடிமக்கள் இல்லாதபோது கொற்றவன் இல்லை என்பதாம். முன்பு அன்பின் சிறப்பும், இப்போது அருளின் பெருமையும் கூறப்பட்டது. தன்னுடைய குடிமக்களையெல்லாம் தன் உயிர்போலக்கருதி, அவர்களிடம் அன்பும் அருளும் கொண்டு, தருமம்

Koviloor Digital Library

கெடாதபடி மெய்வழியில் நின்று செங்கோல் செலுத்த வேண்டும் என்பது கருத்து.

18. இனிய சொல்லினன்; ஈகையன்; எண்ணினன்
வினையன்; தூயன்; விழுமியன்; வென்றியன்;
நினையும் நீதிநெறி கடவான், எனில்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாம் கொலோ? (1516)

(எண்ணினன்-ஆராய்ச்சி உடையவன்; விழுமம்-உயர்வு / சிறப்பு; நினையும்-மதிக்கத்தக்க)

ஒருமன்னன் இனிய நற்சொற்களை உடையவனாகவும், வறியார்க்கும், இரப்போர்க்கும் இல்லையெனாது நல்குபவனாகவும், ஒரு காரியத்தை ஆற்றுவதற்குமுன் அதனை நுட்பமாக ஆராய்ந்து செயல்படுபவனாகவும், முயற்சியும் வினைத் திட்பமும் வினைசெயல்வகை அறிந்தவனாகவும், உள்ளும் புறமும் தூய்மை நிறைந்தவனாகவும், உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட சிறப்புடையவனாகவும், எப்பொழுதும் வெற்றியையே பெறுபவனாகவும் தோல்வியைத் தழுவாதவனாகவும், எல்லோராலும் மதிக்கத்தக்க அரசியல் நீதிநெறியின் நின்றும் பிறழாதவனாகவும் இருந்துவிட்டால், அத்தகைய மன்னனுக்கு, ஒரு தீங்கோ, கேடோ அதனால் அழிவோ உண்டாகுமோ? உண்டாகாது.

ஒரு அரசனுக்கு இருக்க வேண்டிய நற்பண்புகள் அனைத்தையும் தொகுத்துக் கூறுகிறான் கவிஞன். 'இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால் தான் கண்டனைத்து இவ்வுலகு' குறள் 387. ' தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச்செய்வார்க்கு அரும்பொருள் யாதொன்றும் இல்' குறள் 462. 'எண்ணித்துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' குறள் 467. 'எனைத்திட்பம் எய்தியக்கண்ணும் வினைத்திட்பம் வேண்டாரை வேண்டாது உலகு' குறள் 670. 'முடிவும், இடையூறும் முற்றியாங்கு எய்தும் படுபயனும் பார்த்துச்செயல்' குறள் 676. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து' குறள் 596. 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு இறையென்று வைக்கப்படும்' குறள் 388. இந்த எல்லாக் குறட்பாக்களின் மொத்தக் கருத்தையும் கம்பன் நான்கே அடிகளில் பொதிந்து தந்திருப்பது வியப்பிற்குரியது.

எண்ணுதல் என்பது காலம், இடம் வலியறிதல் என்பதாம். வினைஎன்பது போர்த்தொழிலில் ஊக்கம், மேற்சேறல், அரண்முற்றல், கோடல், பொருதல், வேறல் என்பனவாம்.

19. 'சீலம் அல்லன நீக்கி, செம்பொன் துலைத்
தாலம் அன்ன தனிநிலை தாங்கிய
ஞாலமன்னற்கு, நல்லவர் நோக்கிய
காலம் அல்லது, கண்ணும் உண்டாகுமோ?' (1517)

Koviloor Digital Library

(துலை-துலாக்கோல்/ தராசு; தாலம்-நாக்கு; நோக்கிய-கருதிய; தனிநிலை-நடுவுநிலைமை; நோக்குதல் -கருதுதல் / நோக்கல்-நோக்கம்; சீலம்-நல்லொழுக்கம்; நீக்கி-கடிந்து)

நல்லொழுக்கத்திற்குப் புறம்பான குணங்களை அகற்றி, சிவந்த பொன்னை நிறுக்கும் துலாக்கோலின் நாக்கினைப்போல நடுவுநிலைமை தவறாது செயல்படுகின்ற உலகையாளும் மன்னனுக்கு, நல்லவர்களான அமைச்சர்கள் ஆராய்ந்து நோக்கிக் கருதிக் கூறிய காலம் அல்லாது, வேறொரு காலத்தையும் மன்னர்கள் நோக்குவதுண்டோ?

அமைச்சர்கள் ஆராய்ந்து சொல்லுகின்ற காலத்தையே அரசன் நல்லதாகக் கொள்ளவேண்டும். அதனினும் சிறந்த காலம் வேறொன்றில்லை. சீலமல்லாத குற்றங்களாவன காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்ற ஆறுமாம். 'ஓர்வுற்று, ஒருதிறம் ஒல்காத நேர்கோல் அறம்புரி நெஞ்சத்தவன்' என்பது கலித்தொகை. 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி' என்பது குறள்-*118*. 'ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற்செயின்' என்பது குறள் *484*. எதிரதாக வரக்கடவனவற்றை முன்நோக்குடன் நோக்கி அறியப்படும் காலத்தைக் 'கண்' என்றார்.

20. ஓர்வின் நல்வினை ஊற்றத்தினார் உரை
பேர்வுஇல் தொல்விதி பெற்றுளது என்று அரோ
தீர்வு இல் அன்பு செலுத்தலில், செவ்வியோர்
ஆர்வம் மன்னவற்கு ஆயுதம் ஆயதே. (1518)

(ஓர்வின்-ஆராய்ந்து கண்டால்; ஊற்றம்-அழுத்தமான பற்று; உரை-ஆணை; பேர்வுஇல்-மாறுபடாத; தீர்வுஇல்-நீங்காத / என்றும் மாறாத; செவ்வியோர்-பெரியோர்; விதி-ஊழ்; ஆர்வம்-விருப்பம்)

தனது நூலறிவறிவினாலும் அனுபவ அறிவினாலும் நன்கு ஆராய்ந்து நல்ல வினைகளைச் செய்யும் அமைச்சர்கூட, புரோகிதர், முனிவர்களாகிய ஆற்றலுடையோர்களின் சொற்கள் / கட்டளைகள் படியே மாறுபடாத பழைய ஊழ்வினைகூட நடக்கின்றது. எனவே தான், தன்னிடத்தில் நீங்காது என்றும் மாறாத அன்பு செலுத்தும் சான்றோர்கள் தன்பால் காட்டும் விருப்பமே ஒரு மன்னனுக்குத் தன் அக, புறப் பகைகளை வெல்லும் கருவியாகும். எனவே, கற்றறிந்த பெரியோர்களிடம் அன்பைச் செலுத்து. அவர்கள் உன்மீது திருப்பிச் செலுத்தும் ஆர்வம் கலந்த அருளானது உனக்கு ஒரு பெரும் கருவியாகும்.

'பேர்வுஇல்தொல்விதி' என்பது 'ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்ற குறள்பாவின் *(380)* சுருக்கம். 'செவ்வியோர் ஆர்வம் மன்னற்கு ஆயுதம்' என்பது 'அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை, திறனறிந்து தேர்ந்து கொளல்' என்ற குறட்பாவின் *(441)* குறுகிய வடிவம். மன்னன் சான்றோர்களிடத்து, அவர்

Koviloor Digital Library

உரைகேட்டு அன்பு செலுத்தினால், அவர்கள் அவன்பால் மேலும் ஈடுபாடு கொள்வர். அவ்வீடுபாடு மன்னர்களுக்கு ஆயுதமாகத் துணைசெய்ய வல்லது என்பது கருத்து. 'ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர் மாற்றாரை மாற்றும் படை' என்பது குறள் 985.

21. தூமகேது புவிக்கு எனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வரும்
காமம் இல்லையெனில், கடும்கேடு எனும்
நாமம் இல்லை; நரகமும் இல்லையே. (1519)

(தூம கேது-புகைக்கொடி / வால்நட்சத்திரம்; வாமம்-அழகு; நாமம்-பெயர்; வரும்-வளரும்; காமம்-ஆசை / சிற்றின்பம்; கேது-கொடி)

பூமியில் தீங்கினை விளைவிக்கத் தோன்றுகின்ற வால்நட்சத்திரம் போல, அழகிய மேகலாபரணம் அணிந்த மகளிரால் வளரும் காமம் என்னும் சிற்றின்பப் பேராசை இல்லையென்றால், இம்மையில் கொடிய தீங்கு என்னும் பெயரே இல்லை; அதனால் மறுமையில் நரகம் என்னும் துன்பமே இல்லையாகும்.

வால் நட்சத்திரத்தின் தோற்றம் உலகிற்குக் கேடு விளைவிக்கும் என்பர் பெரியோர்; மங்கையர்பால் தோன்றி வளரும் சிற்றின்பப் பேராசை மன்னர்க்கும் மக்களுக்கும் பெருங்கேட்டினை விளைவிக்கும். ஆசைகளில் எல்லாம் மிகக் கொடிய ஆசை பெண்ணாசை, எனவே அதன் விளைவும் கடுங்கேடாகவே முடியும். அதனால் தான் வள்ளுவன் 'காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன்நாமம் கெடக் கெடும் நோய்' (குறள் 360) எனக் காமத்திற்கு முதலிடம் தந்திருக்கிறான். இதே கருத்தைப் பின்னர் கிட்கிந்தா காண்டத்தில் அரசியற் படலத்தில் அறிவுறுத்தப் போவதையும் காணலாம். மன்னர்கள் களைய வேண்டிய மூவாசைகளில் முதலாசை பெண்ணாசை என்பது வலியுறுத்தப்பட்டது. இம்மையில் உயிர்கள் இயற்றுகின்ற தீவினைகளுக்கு ஏற்ப, மறுமையில் துன்பம் துய்க்கும் இடம் நரகம் எனப்பட்டது. சீவகசிந்தாமணியில் சச்சந்தனுக்கும், சிலப்பதிகாரத்தில் கோவலனுக்கும் கடுங்கேடு விளைந்தது காமத்தினால் தான் என்பது நோக்கத்தக்கது. என்றாலும் அளவு மிக்கக் காமத்தைக் குறிப்பதாகவே எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

22. இருவரும் திருமால் கோவிலை அடைதல்:

ஏனை நீதி இனையன, வையகப்
போனகற்கு விளம்பிப் புலன் கொளீஇ
ஆனவன் னொடும், ஆயிரம் மௌலியான்
தானம் நண்ணினன், தத்துவம் நண்ணினான். (1520)

(தத்துவம்-மெய்யுணர்வு; இனையன-இத்தன்மையான; ஏனை-மற்றைய; போனம்-போகனம் / உணவு; போனகன்-உண்டவன் / இங்கே

Koviloor Digital Library

உலகம் உண்டவன்; புலன்-அறிவு; கொளீஇ-கொள்ளச்செய்து; தானம்-ஸ்தானம் / இடம் / கோயில்; விளம்பி-எடுத்துச்சொல்லி; மௌலி-திருமுடிகள்; நண்ணுதல்-அடைதல்)

இவற்றையும் இவைபோன்ற மற்ற நீதிகளையும், மெய்யுணர்வு கொண்ட முனிவனான வசிட்டன், உலகத்தைத் தன் வயிற்றுள் அடக்கிய திருமாலின் அவதாரமான இராமபிரானுக்கு எடுத்து உரைத்து அறிவு கற்பித்து பின்னர் அவனுடன், ஆயிரம் திருமுடிகளை உடைய ஆதிசேடன் மீது அறிதுயில் கொண்டிருக்கும் திருமால் கோவிலை அடைந்தான்.

மன்னர்கள் களைய வேண்டிய மூவாசைகளில் முதலாசை பெண்ணாசை என்பது வலியுறுத்தப்பட்டது. தான் ஏற்றிருக்கும் பாத்திரத்துக்கு ஏற்ப இராமன் திருமாலின் அவதாரமே என்று அறிந்தும் வசிட்டன் அறிவுறுத்தினான் என்பதைக் குறிக்கவே தத்துவம் நண்ணினான்என்று அவரைக் குறிக்கிறான்கவிஞன். மெய்யுணர்வு என்பது பிறப்பு, இறப்பு, இருவினைகள், வீடுபேறு முதலியவை பற்றியும் அவற்றிற்கான காரணங்கள் பற்றியும் ஐயம் திரிபு அற உண்மையால் உணர்ந்த நிலை என்பதாம். 'ஆயிரம் மௌலியான்' என்பது 'சகஸ்ர சீர்ஷ புருஷ' என்ற வேதத்தின் தமிழாக்கம்.

23. இராமனை நீராடச் செய்து, தருப்பைப் புல்லில் அமர்த்தல்

நண்ணி, நாகணை வள்ளலை நான்மறைப்
புண்ணியப் புனலாட்டிப் புலமை யோர்
எண்ணும் நல்வினை முற்றுவித்து, ஏற்றினான்
வெண்ணிறத்த தருப்பை விரித்து அரோ! (1521)

(நாகணை-ஆதிசேடனாகிய பாம்பணை: வினை-சடங்குகள்)

ஆதிசேடனாகிய பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலின் கோவிலை அடைந்து, நான்கு வேதங்களாலும் அபிமந்திரிக்கப்பட்ட புண்ணிய தீர்த்தத்தினால் இராமபிரானுக்கு திருமஞ்சனம் செய்வித்து, சான்றோர்கள் மதிக்கும் நல்ல சடங்குகளை முடியச் செய்து, வெண்ணிறமான தூய தருப்பைப் புல்லைப் பரப்பி அதன் மீது இராமபிரானை அமரச் செய்தான்.

முடிசூட்டிக் கொள்ளும் முன்பு சில சடங்குகள் செய்ய வேண்டும் என்பதும், நோன்பு இருக்க வேண்டும் என்பதும், நோன்பு தருப்பையில் அமர்ந்து செய்யப்பட வேண்டும் என்பதும் நெறி. நோன்பு-உபவாசம் / விரதம்.

24. நகரத்தை அழகு செய்யுமாறு தசரதன் பணித்தல்:

ஏற்றிட, ஆண்தகை இனிது இருந்துழி,
நூல்தட மார்பனும் நொய்தின் எய்தப் போய்,

Koviloor Digital Library

ஆற்றல்சால் அவனுக்கு அறிவித்தான்; அவன்
'சாற்றுக, நகர் அணிசமைக்க!' என்றனன். (1522)

(உழி-போழ்து; நொய்தின்-விரைவில்; அணி சமைத்தல்-அழகு செய்தல்)

அவ்வாறு இராமபிரானைத் தருப்பைப்புல் ஆசனத்தில் அமர்த்தி விட்ட பின்னர், ஆண்களிற் சிறந்தோனாகிய இராமபிரான் தியானத்தில் இருந்த பொழுது, பூணூலணிந்த அகன்ற மார்பையுடைய வசிட்ட முனிவன், மன்னனை விரைவாகச் சென்று சேர்ந்து, தான் விரதத்திற்காக இராமபிரானைத் தர்ப்பாசனத்தில் அமர்த்திய செய்தியைச் சொன்னதும், மன்னன், வள்ளுவரை அழைத்து' இராமபிரானுக்கு நாளை முடிசூட்டு விழா என்றும், அதற்காக எல்லோரும் நகரை அழகு படுத்துங்கள் என்றும் பறையறைவிக்கும் படிக் கட்டளையிட்டான்.

இனிதிருத்தல் என்பது பத்மாசனத்தில் இனிதாகத் தியானம் செய்து கொண்டிருத்தல்; 'நூல் என்பது பூணூலைக் குறிக்கும், பூணூல் என்பது ஒன்பது கொண்ட மூன்று புரிநுண் ஞாண்' என்பது திருமுருகாற்றுப்படை.

25. வள்ளுவர் முரசறைதல்

ஏவின வள்ளுவர், 'இராமன் நாளையே
பூமகள் கொழுநனாய்ப் புனையும் மௌலி; இக்
கோநகர் அணிக!' எனக்கொட்டும் பேரிஅத்
தேவரும் களிகொளத் திரிந்து சாற்றினார். (1523)

(கொழுநன்-தலைவன்; கோ-சிறந்த / முதன்மையான; பேரி-முரசம்; திரிந்து-சுற்றி; வள்ளுவர்-பறை அறைவோர்)

அவ்வாறு தசரதனால் கட்டளையிடப்பட்ட முரசறைவோர்களான வள்ளுவர்கள், 'இராமபிரான் நாளைக்கே இந்நில மடந்தையின் தலைவனாக முடிசூடிக் கொள்ளப் போகிறார். எனவே இந்த சிறந்த முதன்மையான, தலைநகரமாகிய அயோத்தியை அழகு செய்யுங்கள்' என்று ஊரெல்லாம் சுற்றித் திரிந்து முரசு முழக்கி அறிவித்தனர். அதனையறிந்த தேவர்களும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

மன்னனை 'மண் மகளிர் மணாளன்' என்று கூறுவது மரபு. நிலவுலகில் கொட்டிய ஒலி, வானுலகிலும் எட்டியது என்பது முரசங்களின் சிறப்பு உணர்த்த; தேவர்கள் மகிழ்ந்தது அரக்கர் குலம் அழியப் போகிறது என்பது கருதி, மூவகை முரசங்களில் இங்கே முழக்கப்பட்டது மங்கல முரசு. விரைந்து தெரிவிப்பதற்காக நகரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பலர் சென்று முரசறைந்தனர் என்பதாம்.

26. நகரத்தார் மகிழ்ச்சி

'கவிஅமை கீர்த்தி அக்காளை நாளையே
புவிஅமை மணிமுடி புனையும்' என்ற சொல்

Koviloor Digital Library

செவிஅமை நுகர்ச்சியது எனினும், தேவர்தம்
அவிஅமுது ஆனது அந்நகர் உளார்க்குஎலாம். (1524)

(கவி-பாடல்; கீர்த்தி-புகழ்; அவி-உணவு)

பாடல்களால் ஏற்றிப் புகழப்படும் ஆற்றல் வாய்ந்த காளை போன்ற அவ்விராமன், நாளைக்கே புவியெல்லாம் தன் ஆட்சியின் கீழ் அடையப் போவதாகிய, இரத்தின கிரீடம் அணிந்து முடிசூட்டிக் கொள்ளப்போகிறான் என்ற சொல், செவியினால் கேட்டு அனுபவிக்க வேண்டியதுதான் என்றாலும், அவ்வயோத்தி நகர மக்களுக்கு அச்சொல் கிடைத்தற்கரிதானதும், வாயால் சுவைத்து நுகர்தற்கு உரியதுமான தேவர்கள் உண்ணும் அவியுணவையும், பாற்கடலில் கிடைத்த தேவ அமிர்தத்தையும் உண்டது போன்ற மகிழ்ச்சியை உண்டாக்கியது.

புலவர்கள் பாடும் புகழுடையான் இராமன் என்பதாம். எனவே கவிஅமை கீர்த்தி அக்காளை என்றார். செவியுணவினும் வாயுணவு மிக்க இனிப்பது என்பதும் கூறப்பட்டது. அந்தணர்கள் வேள்வித் தீயில் தேவர்க்கு அளிப்பது அவி. பாற்கடலில் தோன்றிய அமிர்தம் பிணி, மூப்பு, சாக்காடு இவைகளை அற்றதாகச் செய்யும். அதுபோல இராம நாமமும் செய்யும் என்பது புலப்பட அவர்கள் இன்பத்தை தேவ அமிர்தம் உண்ட இன்பத்திற்கு ஒப்பாகக் கூறினார்.

27. ஆர்த்தனர், களித்தனர், ஆடிப்பாடினர்
வேர்த்தனர், தடித்தனர், சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர், மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்,
தூர்த்தனர் நீள்நிதி சொல்லினார்க்கு எலாம். (1525)

(தடித்தல்-பூரித்தல் / பருத்தல்; தூர்த்தல்-நிரப்புதல்; போர்த்தல்-மூடுதல்; நீள்-மிகுதியான)

இராமன் முடிசூடுவான் என்ற செய்தியைக் கேட்டு தேவாமிர்தம் உண்டது போல் மக்கள் ஆரவாரித்தனர்; மகிழ்ச்சி மிகுந்து ஆடினர், பாடினர்; உடம்பு வியர்த்தது, பூரித்தது, மயிர்க் கூச்செறிந்தது. முடிசூட்டக் கருதிய மன்னனைப் புகழ்ந்து வாழ்த்துரைத்தார்கள்; இந்நற் செய்தியைச் சொல்லிய எல்லோர்க்கும் மிகுதியான நிதிக் குவியல்களை வாரி வழங்கி அவர்கள் ஆசைக்கடலை நிரப்பினர்.

ஆடிப்பாடிய களைப்பால் உடல் வியர்த்தது; மகிழ்ச்சியால் உடல் பூரித்தது; நெகிழ்ச்சியால் புளகாங்கிதம் அடைந்து மயிர்க் கூச்செறிந்து உடம்பைப் போர்த்தியது; உடனே இதற்குக் காரணமான தசரதச் சக்கரவர்த்தியை வாயாரப் புகழ்ந்தனர்; இந்த மங்களகரமான செய்திகளைச் சொன்னவர்க்கெல்லாம் நிதிக்குவை அளித்தனர் என்று நகரமக்கள் ஒவ்வொருவரிடமும் ஏற்பட்ட மகிழ்ச்சி மிகுதியை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறான் கவிஞன்.

Koviloor Digital Library

28. மக்கள் நகரை அழகு செய்தல் [9 பாடல்கள்]

திணிசுடர் இரவியைத் திருத்துமாறும், அப்
பணியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை
மணியினை வேகடம் வகுக்குமாறும் போல்
அணிநகர் அணிந்தனர் அருத்தி மாக்களே. (1526)

(அருத்தி-ஆசை / ஆர்வம்; திணி-நிறைந்த; இரவி-ஞாயிறு / சூரியன்; பணி-பாம்பணை / படம்; வேகடம் வகுத்தல்-சாணை பிடித்தல் / ஒளியேற்றுதல் / மாசுபோக்குதல்; சுடர்-கிரணங்கள்; அணி-அழகு)

இராமன்பால் பேரார்வம் கொண்ட அந்நகர மக்கள், நிறைந்த கதிர்களைஉடைய சூரியனைச்செப்பமிடுவது போலவும், படம் கொண்ட பாம்பினை அணையாகக் கொண்டு அறிதுயில் கொள்ளும் திருமாலின் அகன்ற மார்பின்இடையில்அமைந்திருக்கும் கௌத்துப மணியை மேலும் சாணை பிடித்து மாசுபோக்கிப் பட்டைதீட்டி ஒளியேற்றுவது போலவும், இயற்கையிலேயே அழகுடைய அவ்வயோத்தி நகரை மேலும் செயற்கையாக அழகு செய்தனர்.

அயோத்தி நகரம் இயற்கையிலேயே அழகு நிறைந்தது; ஒளி மிகுந்தது; எவற்றைப் போல? இயற்கையாகவே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சூரியனைப் போலவும், இயற்கையாகவே மாசற்ற ஒளி நிறைந்த கௌத்துப மணி போலவும் அமைந்தது அயோத்தி மாநகரம். இவற்றிற்கு மேலும் அழகூட்ட முடியுமோ? என்றாலும், அயோத்தி நகர மக்கள், இராமன் மீது கொண்ட பேரன்பினால் இயற்கையிலேயே அழகுடைய அயோத்தி நகரத்திற்கு மேலும் செயற்கை அழகு செய்தனர் என்றார். இவையிரண்டும் ஒளியிலும் அழகிலும் தமக்கு இணையிலாதன. இவற்றைத் திருத்தி அழகு செய்ய வேண்டுவதில்லை. அதுபோல அயோத்தி நகரும் மேலும் அழகு செய்யத் தேவையற்றது; இயற்கையிலேயே அழகானது என்பதாம்.

29. வெள்ளிய, கரியன, செய்ய, வேறுஉள
கொள்ளை வான்கொடி நிரைக் குழாங்கள் தோன்றுவ;
கள்ளவிழ் கோதையான் செல்வம் காணிய
புள்ளெலாம், திருநகர் புகுந்த போன்றவே. (1527)

(செய்ய-சிவந்த; கொள்ளை-மிகுதி; வான்-சிறந்த; நிரை-வரிசை; குழாம்-கூட்டம்; காணிய-காணும் பொருட்டு; திரு-செல்வம்; கள்-தேன்)

வெண்மை, கருப்பு, சிவப்பு ஆகிய நிறங்களும், இவையல்லாத பிற நிறங்களும் உடைய மிகுதியான சிறந்த கொடிகளின் வரிசைக் கூட்டங்கள் வானத்தில் தெரிவது, தேன் சிந்துகின்ற மலர் மாலை அணிந்தவனான இராமபிரான் அரசச் செல்வம் எய்தும் விழாவினைக் காணும் பொருட்டுப் பல நிறங்களுள்ள பறவைகள் எல்லாம், இந்த அழகிய, திருமகள்

Koviloor Digital Library

உறைகின்ற, காண்பவர் விரும்பும் அயோத்தி மாநகரத்தில் புகுந்து பறப்பதைப் போன்றிருந்தது.

தம் இனத்திற்கு உதவி செய்தாரது மல்லற் காலத்தும், அல்லற் காலத்தும் பறவைகள் வந்து கூடித் தமது நன்றியைத் தெரிவிக்கும் இயல்புடையன. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு அகநானூற்றில் கிடைக்கிறது. ஆய் எயினன் என்னும் மன்னன் பறவைகளைப் போற்றிப் பாதுகாக்கும் பண்பினன். அவன் ஒருமுறை போரில் இறந்து வீழ்ந்தான். அது நண்பகல் நேரம். அவன் உடலை வெயில் தாக்காதவாறு பறவைகள் ஒன்றுகூடித்தம்சிறகுவிரித்துநிழல்பரப்பின. 'ஆய்எயினன், மயங்குஅமர் வீழ்ந்தென, ஒண்கதிர் தெறாமை, சிறகரில் கோலி, நிழல் செய் துழறல்' என்பது பாடல். சிபிச்சக்கரவர்த்தி புறாவிற்குச் செய்த உதவியும், இராமனுக்கு கருடன் செய்த உதவியும் மறக்க ஒண்ணுமோ?

30. மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்;
ஆங்கு அவர்கழுத்து எனக்கமுகம் ஆர்ந்தன;
தங்கு ஒளி முறுவலில் தாமம் நான்றன;
கொங்கையை நிகர்த்தன கனக கும்பமே. (1528)

(குறங்கு-தொடை / துடை; முறுவல்-பற்கள் / புன்சிரிப்பு; தாமம்-முத்து மாலைகள்; கனக கும்பம்-பொற் குடங்கள்; நாலுதல்-தொங்குதல்)

அந்நகர மக்கள் தங்கள் இல்லங்களை நன்கு அலங்கரித்துப் பந்தலிட்டனர். பந்தலில் வாழை, பாக்கு மரங்களை வைத்துக் கட்டினர்; அங்கங்கே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் முத்து மாலைகளைத் தொங்கவிட்டனர். பூரணப்பொன் கலசங்களை நீர் நிறை குடங்களாய் அங்கங்கே வைத்திருந்தனர். இதற்குக் கம்பன் கையாளும் உவமைகள் அவனுக்கே உரியன. வாழை மரங்கள் மகளிரின் தொடைகள் போலத் திரட்சியாகவும், பாக்கு மரங்கள் அவர்களின் கழுத்தைப் போல மென்மையாகவும், முத்து மாலைகள் அவர்கள் பற்களில் தவழும் புன் சிரிப்புப் போல ஒளி நிறைந்ததாகவும், பூரண கலசங்கள் அவர்களுடைய கொங்கைகள் போல வடிவமைப்பு உடையனவாகவும் இருந்தன என்று மரபு வழி உவமானத்தை உபமேயமாக்கிச் சொல்லும் கம்பனின் மிக அழகிய பாடல்களில் இதுவும் ஒன்று. உவமேயப் பொருட்களை உவமானமாக்கிக் கூறினான் என்பதும் பொருந்தும்.

31. முதிர்ஒளி உயிர்த்தன முடுகிக் காலையில்
கதிரவன் வேறு ஒருகவின் கெண்டான் என;
மதிதொட நிவந்தன மகர தோரணம்;
புதியன வலந்தன புதவ ராசியே. (1529)

(நிவந்தன-உயர்ந்தன; வலத்தல்-கட்டுதல்; முடுகி-விரைந்து; முதிர்-மிக்க; உயிர்த்தல்-வீசுதல்; புதவம்-வாயில் / கதவு; ராசி-வரிசை / கூட்டம்; கவின்-அழகிய வடிவம்)

Koviloor Digital Library

நகரத்தின் நாற் புறமும் உள்ள கோட்டை வாயில்களில், மகர மீன் வடிவாகச் செய்யப்பட்ட தோரணங்கள் நிலவைத் தொடும் அளவு உயர்ந்தும், புதியனவாகவும் கட்டப்பெற்றிருந்தன. அவை காலையில் உதிக்கும் இளஞ்சூரியன் விரைந்து வந்து, வேறு ஒரு அழகான வடிவம் கொண்டதைப் போல மிக்க ஒளியை வீசின.

வாயில் தோரணங்களின் ஒளி சூரியன் ஒளிக்கு ஒப்பு; மகர தோரணம் கட்டப்பெற்ற கோபுர வாயில்கள் புதிய ஒளி உடையதாகக் காணப்பட்டமையால் சூரியனை ஒப்பிட்டார்.

32. துனியறு செம்மணித் தூணம், நீறுதோய்
வனிதை ஓர் கூறினன் வடிவு காட்டின;
புனைதுகில் உறைதொறும் பொதிந்து தோன்றின
பனிபொதி கதிரெனப் பவளத் தூண்களே. (1530)

(புனை-அலங்கரிக்கப்பெற்ற / அழகுசெய்யப்பட்ட; பொதிந்து-மூடப்பட்டு; துனிஅறு-குற்றமற்ற; தூணம்-தூண்கள்; தோய் -பூசிய; கூறு-பாகம்; கதிர்-சூரியன்; பொலிந்து-அழகுபெற்று; துகில்-வெண்மையான ஆடை)

அயோத்தி மாநகரத்தின் கோவில் வாயில்களில் அமைந்திருக்கும் தூண்கள் சிவந்த இரத்தினங்களாலும், சிவந்த பவளத்தாலும் ஆனவை. அவைகள்அலங்கரிக்கப்பட்டு, குற்றமற்ற வெண்மையான உறைபோட்டு மூடிவைக்கப் பெற்றிருக்கின்றன. அவை எப்படித் தோன்றுகின்றன? சிவந்த இரத்தினத் தூண்கள், வெண்ணீறு பூசப்பெற்றவனும், மங்கையைத்தன் இடப்பாகத்தில் பங்கு கொண்டுள்ளவனுமான சிவபெருமானின் உருவத்தை ஒத்திருந்தன. சிவந்த பவளத்தால் ஆன தூண்கள், இளங்காலைப் பொழுதில் பனியால் மறைக்கப்பட்டிருக்கும் சூரியனை ஒத்திருந்தன.

'சிவபெருமானைச் செம்மேனி அம்மான்' என்பார் திருநாவுக்கரசர். 'மற்றவர் அறியா மாணிக்க மலையை' என்பது திருவிசைப்பா; நூறாயிரம் கோடி சூரியர்கள் ஒன்று சேர்ந்தாற் போன்ற ஒளிவடிவினன் சிவபெருமான். 'உலகெலாம் தொழவந்து எழுகதிர்ப் பரிதி ஒன்று நூறாயிரம் கோடி அலகெலாம் பொதிந்த திரு உடம்பு' என்பதும் திருவிசைப்பா. இறைவனுடைய திருமேனி வெண்ணீறோடு பொலிவது போலச் செம்மணித் தூணும் புனைதுகில் உறையோடு அழகு பெற்று விளங்கியது என்பதாம். திருநீறு வெண்மையான உறை; உள்ளே பொதிந்த செம்மேனி, செம்மணித் தூண்; பனி வெள்ளை உறை; உள்ளே பொதிந்த செஞ்சூரியன் பவளம்.

33. முத்தினின் முழுநிலவு எறிப்ப, மொய்ம்மணி
பத்தியின் இளவெயில் பரப்ப, நீலத்தின்
தொத்தினம் இருள்வரத் தூண்ட, சோதிட
வித்தகர் விரித்த நாள்ஒத்த, வீதியே! (1531)

Koviloor Digital Library

(எறித்தல்-வீசப்படுதல்; மொய்-நெருங்கிய; பத்தி-வரிசை; தொத்து-கொத்து)

அயோத்தி நகரத்தின் தெருக்கள் எல்லாம், முத்து மாலைகள் தம் ஒளியால் முழுமதி நிறைந்த நன்னாளின் ஒளியை எங்கும் வீசவும், நெருங்கிய மாணிக்கக் கற்களின் வரிசை இளமையான வெயில் ஒளியை வீசவும், நீல மணிகளின் கொத்து இருள் போன்ற தன்மையைச் செய்யவும், சோதிட நூல் வல்லார் திதி முதலிய ஐந்து அங்கங்களுடையதாய் விரித்துச் சொல்கின்ற ஒரு நாளைப் போல இருந்தது.

ஒரு நாள் என்பது முறையே பகல், நிலவு, இருள் என்ற மூன்று பகுதிகளாலும் ஆக்கப்பட்டது என்பது சோதிட நூல் வல்லார் துணிபு. அயோத்தி நகரத்திலும் இம்மூன்று தன்மைகளும் தொடர்ந்து விளங்குவதால், இத்தெருக்கள் ஒரு நாள் போன்றது என்றார். மணியால் இளவெயிலும், முத்தால் நிலவொளியும், நீலமணிகளால் இருளும் ஏற்படும் தன்மை தோன்றியதால் அவ்வீதிகள் ஒரு நாளைப் போன்றது என்றார். நாள் என்பது ஞாயிற்றின் வெயில் ஒளி, திங்களின் நிலவு ஒளி, இருளின் கருமை இவை ஒன்று சேர்ந்ததாகும். 'நீல மாலைத் தஞ்சுடை இருள் தழைப்ப,. தரளம் அங்கே தண் மதியின் நிலாக்காட்ட, பவளம் தன்னால் செஞ்சுடர் வெயில் விரிக்கும் அழகார் காழி' என்பது திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி.

34. ஆடல்மான் தேர்க்குழாம், அவனி காணிய
வீடுஎனும் உலகின்வீழ் விமானம் போன்றன;
ஓடைமாக் கடகளிறு, உதய மால்வரை
தேடஅரும் கதிரொடும் திரிவ போன்றவே. (1532)

(மான்-குதிரைகள்; அவனி-மண்ணுலகு / அயோத்தி; வீடு-முக்தி / சுவர்க்கம்; ஓடை-நெற்றிப்பட்டம்; ஆடல்-தாள ஒற்றுக்கு ஏற்ப ஐங்கதியிலும் நடத்தல்; ஆடல்-அடல் / வன்மை; வீழ்-விரும்பி; கடம்-மதம்)

நடனமாடுதலையுடைய குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களின் கூட்டம், இம்மண்ணுலகமாகிய அயோத்தி நகரத்தில் நிகழும் நிகழ்ச்சியைக் காணும் பொருட்டு, சுவர்க்கலோகத்தினின்றும், தாமே விரும்பிக் கீழ் இறங்கி வந்த தேவரதங்களைப் போன்றிருந்தன. நெற்றிப்பட்டம் அணிந்த கொடிய மதம்கொண்ட யானைகள், உதியகிரி போல உவமை கூறுதற்கரிய சூரியனோடும் திரிந்து கொண்டிருப்பதைப் போன்று இருந்தன.

அயோத்தி நகரத் தெருக்களில் தேர்களும், யானைகளும் உலாவந்த காட்சியை விவரிக்கின்றார். குதிரைகள் பொதுவாகத் தாள ஒற்றுக்கு ஏற்ப ஐங்கதியிலும் நடக்கும் என்பர். அது நடனம் ஆடிக்கொண்டு செல்லுவதைப் போன்றிருக்கும். எனவே ஆடல் மான் என்றார். ஐந்து கதிகள் என்று கூறப்படுபவை மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானர கதி, இடபகதி என்பனவாம். ஆடல் என்பது அடல் என்பதன் நீட்டல்

Koviloor Digital Library

விகாரம் எனக் கொண்டு வலிமை பொருந்திய குதிரைகள் எனவும் எளிதான பொருள் கொள்ளலாம். தேர்கள் பொன் மயமானவை எனவே தேவ விமானங்களுக்கு உவமை. யானைகளின் நெற்றிப் பட்டம் சூரியன், யானைகள் உதயகிரிகள். சூரியன் ஒளியாலும், மலை உருவத்தாலும் உவமைகள்.

35. வளம்கெழு திருநகர் வைகும் வைகலும்
பளிங்குஉடை நெடும்சுவர் படுத்த பத்தியில்
கிளர்ந்து எரிசுடர்மணி இருளைக் கீறலால்
தளர்ந்தில பிரிந்தில சக்கர வாகமே. (1533)

வளப்பம் பொருந்திய அழகிய அயோத்தி மாநகரத்தில் பளிங்கினாலான நீண்ட சுவர்கள் எங்கும் இரத்தினக் கற்கள் வரிசையாகப் பதிக்கப்பெற்றிருக்கும். அதனின்றும் எழுகின்ற ஒளிச்சுடர் இருளைக் கீறி அகற்றுதலால் அங்கு இரவு என்பதே ஏற்படுவதில்லை. எப்பொழுதும் பகல் போலவே காணப்படும். எனவே இருளில் இரை தேடப் போகும் சக்கரவாளப் பறவைகள் கூட, இரவையும் பகல் என்று எண்ணி, உணவு தேடப் போகின்றதால் உண்டாகிற தளர்ச்சி இல்லாதிருந்தன. எனவே அவை ஆணும் பெண்ணும் ஒன்றை விட்டு ஒன்று நீங்காது இரவும் பகலும் எப்போதும் நாள்தோறும் மகிழ்ச்சியுடன் ஒன்றாகவே தங்கியிருந்தன. சக்கரவாகப் பறவை சூரியன் ஒளியை உணவாக அருந்தும் இயல்பினது; சகோரம் என்ற பறவை நிலவின் ஒளியை உணவாக உண்ணும் இயல்பினது என்பர். பறவைகளுக்குக் கூடப் பசித்துயரையும் பிரிவுத் துயரையும் நீக்குகின்ற நகரம் என அயோத்தி நகரம் சிறப்பிக்கப்பட்டது.

36. பூமழை, புனல்மழை, புதுமென் சுண்ணத்தின்
தூமழை, தரளத்தின் தோம்இல் வெண்மழை,
தாம்இழை நெரிதலில் தகர்ந்த பொன்மழை,
மாமழை நிகர்த்தன, மாடவீதியே. (1534)

(தோம்இல்-குற்றமற்ற; இழை-ஆபரணங்கள்; தகர்ந்த-சிதைந்து சிதறிய; மாடம்-மாளிகைகள்; சுண்ணம்-சூரணம் / பொடி; தரளம்-முத்து)

அயோத்தி நகரத்தின் மாளிகைகள் நிறைந்து விளங்கும் தெருக்களில், மக்கள் மகிழ்ச்சியால் அலங்கரிக்கும் போது தூவுகின்ற மலர் மழையும், தெருக்களில் எழும் புழுதி அடங்கும்படி அவர்கள் தெளிக்கின்ற நீர் மழையும், அப்போதுதான் இடித்துச் செய்யப்பட்ட மெல்லிய புதிய நறும் பொடிகளின் தூய மழையும், குற்றமற்ற முத்துக்களின் வெண்ணிற மழையும், மக்கள் தாம் ஒருவர்க்கொருவர் நெருங்கி இருந்து அலங்கரித்தலால், அவர்கள் உரசிக் கொள்ளும் போது, அவர்கள் அணிந்திருக்கின்ற ஆபரணங்களினின்றும் உதிர்ந்து விழுகின்ற துகள்களாகிய பொன்மழையும் பொழிகின்ற தோற்றம், யுக முடிவுக்காலத்தில் ஏழு மேகங்களும் ஒன்று சேர்ந்து பொழிகின்ற ஊழி மழையை ஒத்திருந்தது.

Koviloor Digital Library

ஏழு மேகங்களும் பொழியும் ஊழிக்கால மழை என்பது சங்காரித்தம், ஆவர்த்தம், துரோணம், சம்வர்த்தம், புட்கலாவர்த்தம், நீலவர்ணம், சாளமுகி என்பதைக் குறிக்கும். இவை முறையே, மலர், நீர், சுண்ணம், முத்து, பொன், நெருப்பு, கல் ஆகியவற்றைக் பொழியும் என்பது நூற்கொள்கை.

37. யானைகள் செல்லும் காட்சி

காரொடு தொடர் மதக்களிறு சென்றன
வாரொடு தொடர் கழல் மைந்தராம் என;
தாரொடு நடந்தன பிடிகள், தாழ் கலைத்
தேரொடு நடக்கும் அத்தெரிவை மாரினே. (1535)

(கார்-மேகம்; தொடர்-ஒத்த / போன்ற; கலை-மேகலை; தார்-கிண்கிணி மாலை; தேர்-தேர்த்தட்டுப் போன்ற அல்குல்; தெரிவைமார்-பெண்கள்; களிறு-ஆண்யானை; பிடி-பெண் யானை; வார்-தோல் கயிறு)

மேகத்தைப் போன்ற கரிய, மதம் கொண்ட ஆண்யானைகள், தோல் கயிற்றால் கட்டப் பெற்ற வீரக்கழலை அணிந்த அந்நகர மைந்தர்களைப் போலக் கம்பீரமாகச் சென்றன; பெண்யானைகள், தாழ்ந்து தொங்குகின்ற மேகலை என்ற ஆபரணத்தையும், தேர்த்தட்டுப் போன்ற அகன்ற அல்குலையுமுடைய பெண்களைப் போலக் கழுத்தில் அணிந்த கிண்கிணி மாலைகளுடன் நடந்து சென்றன.

களிறு கம்பீரமான ஆண்களுக்கும், பிடிகள் மென்மையான மகளிர்க்கும் உவமை. இதையே மாற்றி மைந்தரும் மகளிரும் போலக் களிறும் பிடிகளும் சென்றன என்றும், களிறும் பிடிகளும், மைந்தரும் மகளிரும் போலச்சென்றனர் என்றும் இருவகையாகப் பொருள்கொள்ளுமாறு கூறிய கவிஞன் கவித் திறம் வியந்து போற்றுதற்குரியது.

38. தேவியர்க்கு அயோத்தி, அமராவதி போன்றிருத்தல்

ஏய்ந்து எழு செல்வமும், அழகும், இன்பமும்,
தேய்ந்தில; அனையது தெரிகி லாமையால்
ஆய்ந்தனர் பெருகவும் அமரர், இம்பரில்
போந்தவர், 'போந்திலம்' என்னும் புந்தியால்: (1536)

(ஏய்ந்து-இயைந்து / பொருந்தி; தேய்ந்தில-குறைவற்றதன்று; புந்தி-புத்தி / எண்ணம்)

மேலும் மேலும் பெருகுகின்ற செல்வ வளத்தாலும், அழகினாலும், அந்நகர மக்கள் பெறுகின்ற இன்ப வாழ்க்கை எள்ளளவும் தேவருலகத் தலை நகரான அமராவதிக்குக் குறைந்ததல்ல. இதனைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமையால், இராமனது முடிசூட்டு விழாவினைக் காண மண்ணுலகத்திற்கு வந்த தேவர்களெல்லாம், 'இன்னும் நாம் அயோத்தி

Koviloor Digital Library

சென்று சேரவே இல்லையே, இன்னும் அமராவதியில் இருப்பது போன்றே இருக்கிறதே. என்ன விந்தை இது என்று மனத்தில் சிறிது சிந்தனை செய்யத் தொடங்கினர்.

இங்கு வந்த தேவர்களுக்குத் தம் தலைநகராகிய அமராவதிக்கும், இந்த அயோத்தி நகரத்திற்கும், செல்வச் செழிப்பால், அழகால், இன்பத்தால், வேறுபாடு ஒன்றும் தெரிய முடியவில்லை. எனவே அவர்கள் அயோத்தியை அமராவதி என்றே கருதியிருந்தனர் என்பதாம். அயோத்தி நகரத்தின் செல்வச் செழிப்பு, இயற்கை எழில், மக்களின் மகிழ்ச்சி முதலியன சிறப்பிக்கப்பட்டன. இதே போன்று முன்பு, தசரதனைக் கண்டு இந்திரனே என்று தேவர்கள் மயங்கியதும், அயோத்தி நகர மகளிரைக் கண்டு தேவ மாதர்கள் ஐயம் கொண்டதும் இங்கு நினைவு கூரத்தகும்.

39. கூனி தோன்றுதல்

அந்நகர் அணிவுறும் அமலை, வானவர்
பொன்னகர் இயல்புஎனப் பொலியும் ஏல்வையில்,
இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள். (1537)

(அமலை-ஆரவாரம்; ஏல்வை-சமயம் / பொழுது / காலம்; துன்னரும்-நெருங்குதற்கு அரிய; கொடு-கொடிய)

இவ்வாறு அவ்வயோத்தி நகர மக்கள், தம் நகரத்தை அழகு படுத்திக் கொண்டிருக்கும் ஆரவாரத்தில் அந்நகர் தேவர்களின் பொன் நகராகிய அமராவதி போன்று அழகு விளங்கிக் கொண்டிருக்கிறது. இச்சமயத்தில், உலக மக்களுக்கெல்லாம் துன்பம் இழைத்து வரும் இராவணன் என்ற அரக்கன் செய்த தீய செயல்கள் எல்லாம் ஒரு வடிவுபெற்று வந்தது போன்று, எவரும் நெருங்குதற்கரிய கொடிய மனத்தையுடைய கூனி என்ற மந்தரை வெளிப்பட்டு வந்தாள்.

இராவணன் என்பதற்கு அழுபவன், கூச்சலிடுபவன் என்பது பொருள்; இப்பெயர் இராவணனுக்கு இறைவனால் அளிக்கப்பட்டது. இராவணன் திக்விஜயத்தின் போது கயிலாய மலையைத் தூக்கும் போது, தன் கால் பெருவிரல் அடியில் அகப்பட்டுக்கொண்டபோது, சாம வேதத்தை உரக்கக் கூச்சலிட்டுப் பாடி அழுதான். எனவே இப்பெயர் நிலைத்தது என்பது புராண வரலாறு. ஒருவன் உறும் துன்பத்திற்கும் அழிவிற்கும் அவன் செய்த தீமையே காரணம் என்பதை இராவணன் இழைத்த தீமை என்ற சொற்களால் பெறவைத்தார். இராவணன் அழிவிற்கு வித்திட்டவள் கூனி என்பது பெறப்பட்டது. தோன்றினாள் என்பதற்குத் தெருவில் வெளிப்பட்டுத் தோன்றினாள் என்பது வெளிப்படைப் பொருள். எங்கேயோ அந்தப்புரத்தில் தோழியரோடு தோழியாக மறைந்து இருக்க வேண்டியவள் இப்போது வெளிப்பட வந்தாள் என்பது மற்றொரு பொருள்.

Koviloor Digital Library

40. கூனியின் கோபம்

தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்,
ஊன்றிய வெகுளியாள்; உளைக்கும் உள்ளத்தாள்;
கான்றுஎரி நயனத்தாள்; கதிக்கும் சொல்லினாள்;
மூன்று உலகினுக்கும் ஓர்இடுக்கண் மூட்டுவாள். (1538)

(ஊன்றிய-அழுந்திய / நிலைபெற்ற; உளைக்கும்-கலங்கும் / குழம்புகின்ற; கால்தல்-கக்குதல் / வெளியிடுதல்; நயனம்-கண்கள்; கதிக்கும்-சினம் கொப்பளிக்கும்; இடுக்கண்- தீர்க்க முடியாத துன்பம்) (குளகப் பாடல்)

இவ்வாறு தெருவில் வெளிப்பட்டுத் தோன்றிய கூனி, இராமன் நாளை முடிசூட்டிக் கொள்ளப் போகிறான் என்பதை ஊகித்து உணர்ந்து, நெஞ்சம் துடிதுடித்தாள்; நிலைத்த கோபம் கொண்டாள்; கலங்கிய குழம்புகின்ற மனத்தை உடையவளானாள்; நெருப்புக் கக்கும் கண்களையும், சினம் கொப்பளிக்கும் சொற்களையும் உடையவளானாள். இவள் மேல், நடு, கீழ் ஆகிய மூன்று உலகங்களில் இருப்பவர்களுக்கும் ஒரு தீர்க்க முடியாத துன்ப நெருப்பை மூட்டும் தகுதி பெற்றவளாவாள்.

வான்மீகத்தில் கூனி உப்பரிகையின் மீதேறி நகர் அலங்கரிக்கப் படுவதையும், மக்கள் மகிழ்ச்சியுடன் பேராரவாரம் புரிவதையும் கண்டு, அருகிலிருந்த இராமனது செவிலித் தாயரிடம் காரணம் கேட்டதாகவும், அவர்கள் இராமனுக்கு நாளை முடிசூட்டு விழா என்று கூறியதாகவும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கம்பன், தெருவில் வந்த கூனி, நகர் அலங்கரிக்கப்படுவதையும் மக்களின் மகிழ்ச்சியையும் அவர்கள் பேசிக் கொண்டிருந்ததையும் கேட்டு, தானே ஊகித்துக் கொண்டாள் என்கிறான். நெஞ்சு துடித்தலும், உள்ளம் கலங்குதலும், கண்கள் சிவத்தலும், கொடிய சொற்கள் வெப்பமாக வெளிப்படுதலும் கோபத்தின் மெய்ப்பாடுகள்.

41. கூனி கைகேயியின் இடம் செல்லுதல்

தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயில்மேல்
மண்டினாள், வெகுளியின் மடித்த வாயினாள்,
பண்டைநாள் இராகவன் பாணிவில் உமிழ்
உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள். (1539)

(பாணி-கை; உமிழ்-வெளிப்படுத்திய; உண்டது-கூன் சிதைந்தது; தொண்டை-கொவ்வைக்கனி; மண்டுதல்-விரைந்து சென்றடைதல்; தோகை-மயில்; உள்ளுதல்-நினைவு கூர்தல்; பண்டை-இளமை)

இராமன் தன் இளமைப் பருவக் காலத்தில் தன்மேல் அவன் கைவில் வெளிப்படுத்திய மண்உருண்டை பட்டுத் தான் அவமானமுற்றதை இப்போதும் தன் மனதில் அழுந்தப் பதிய வைத்திருந்த கூனி, மிகுந்த

Koviloor Digital Library

கோபத்துடனும் மடித்த உதடுகளுடனும் கொவ்வைக் கனி போன்ற சிவந்த அதரங்களை உடைய மயில் போன்ற சாயலை உடைய கைகேயியின் அரண்மனையை விரைந்து சென்று அடைந்தாள்.

தோகை என்பது மயில் போன்ற சாயலை உடைய கைகேயியைக் குறித்தாலும், அவள் மயில்முறைக் குலத்தின் வழி வந்தவள் என்பதையும் உட்கொண்ட சொற்றொடர் ஆகும்; இளமைக் காலத்தில் இராமன் தன் கை வில்லில் மண் உருண்டை கொண்டு வில் பயிற்சி பெறுவது வழக்கம். அப்போது ஒருநாள் கூனி, தன் தோழியரோடு நீர் மொண்டுகொண்டு வந்தாள். அதனைக் கண்ணுற்ற இராமன் விளையாட்டாக அவள் மேல் மண்ணுருண்டையை எய்தான். அது தப்பாது அவள் முதுகில் பட்டுக் கைநழுவி, பானை கீழே விழுந்து உடைந்தது. கூனியின் கூடவந்த தோழியர் இதனைக் கண்டு பரிதாபப்படாமல் பரிகசித்தனர். எனவே அவள் அவமானம் அடைந்தாள். எய்த சிறுவன் சக்கரவர்த்தியின் உயிர் மகன் இராமன். எனவே அப்பொழுது அவனை அங்கே ஒன்றும் செய்ய முடியவில்லை. என்றாலும் இந்த அவமானத்திற்குப் பழிக்குப் பழி வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் அவள் உள்ளத்தில் இருந்து கொண்டே இருந்தது. 'முதுகில் மறைந்த கூனல் மந்தரையின் மனத்தில் முளைத்தது' என்பார் கவிஞர் வாலி.

இதனைத் தான் முதல் பாடலில் ஊன்றிய வெகுளியாள் என்றும் உளைக்கும் உள்ளத்தாள் என்றும் கூறுகிறான். ஆனால் இக்கதை வான்மீகத்தில் கூறப்படவில்லை; கம்பனும் இதுபற்றி விரிவாகக் கூறவில்லை. ஆனால் ஆழ்வார்கள் இதனை விரிவாகக் கூறியிருக்கிறார்கள். 'கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்' என்பது திருவாய்மொழி. இராமனின் விளையாட்டுச் செயல் பின்னர் பெரும்வினையாயிற்று. 'கூனகம் புகத் தெறித்த கொற்ற வில்லி' என்பதும், 'கொண்டை கொண்ட கோதை மீது தேனுலாவு கூனிகூடன் உண்டை கொண்டு அரங்க ஒட்டி உள்மகிழ்ந்த நாதனார்' என்பதும் திருசந்தவிருத்தம் / திவ்யப்பிரபந்தம்.

42. கூனி கைகேயியை அடைதல்

நாற்கடல் படும் மணி நளினம் பூத்தது ஓர்
பாற்கடல் படு திரைப் பவள வல்லியே
போல், கடைக்கண் அளிபொழியப் பொங்கு அணை
மேல் கிடந்தாள்தனை, விரைவின் எய்தினாள். (1540)

(நளினம்-தாமரை; திரை-அலை; வல்லி-கொடி; அளி-கருணை; பொங்கி-உயர்ந்த; அணை-படுக்கை)

உலகைச் சுற்றியுள்ள நான்கு திசைகளிலும் உள்ள கடல்களில் கிடக்கின்ற இரத்தினங்கள் போலவும், பாற்கடலில் தோன்றும் அலைகளைப் போன்ற தாமரை மலரை ஒத்த பவளக் கொடி போலவும்,

Koviloor Digital Library

தன் கடைக்கண்கள் கருணையினைப் பொழியும்படி, உயர்ந்த படுக்கையின்மேல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த கையேயியை, கூனி விரைவாகச் சென்றடைந்தாள்.

கடல்களில் இரத்தினம் பூக்கும் என்பது, கடலுக்கு இரத்தினாகரம் என்றும் ஒரு பெயர் உண்டு என்பதனால் புலனாகும். கைகேயி தூங்கும் போதும் அவள் கடைக்கண்களில் அருள் பொழிந்து வழியும். அத்தகைய இயற்கையிலேயே அருள் உள்ளம் கொண்டவள் என்று இங்கு குறிப்பிடுவது. கூனியின் உபதேசத்தால் அவள் தூமொழி எப்படித் திரிந்தது என்பதைப் பின்னால் சொல்லப் போவதற்கு இது ஒரு முன்னோட்டம். உயர்ந்த படுக்கை என்பது ஐந்து மூன்று அடுக்கிய அமளி என்பர். 'பாற்கடல் முளைத்தது ஓர் பவளப்பூங்கொடிபோல், அடர்ந்து இலங்க ஒளிப்பொன் செப் கோதை' என்பது சீவகசிந்தாமணி. பஞ்சசயனம்-பாற்கடல் படுதிரை; பவள வல்லி-அவள்மேனி; நளினம்-அவள் கைகால் முகம் ஆகிய உறுப்புகள்; நாற்கடல் படுமணி-அவள் அணிந்திருந்த ஆபரணங்கள்.

43. கூனி கைகேயியை எழுப்புதல்

எய்தி, அக்கேகயன் மடந்தை ஏடுஅவிழ்
நொய்து அலர் தாமரை நோற்ற நோன்பினால்
செய்த பேர் உவமைசால் செம்பொன் சீறடி
கைகளில் தீண்டினாள், காலக்கோள் அனாள். (1541)

(காலம்-நெடுங்காலம்; ஏடு-இதழ்கள்; அவிழ்தல்-மலர்தல்; நொய்து-மெல்லிய; நோன்பு-தவம்; கோள்-கேது / பாம்பு / கிரகம்; தீண்டுதல்-தொடுதல்)

கேகய அரசன் மகளான கைகேயி படுத்திருந்த இடத்தை அடைந்து, இதழ்கள் விரியப்பெற்ற மெல்லிய தாமரை மலர்- அவளுடைய சிவந்த, பொன்னாலான அணிகளை அணிந்துள்ள சிறிய பாதங்களுக்குத் தன்னை உவமையாகச்சொல்ல வேண்டும் என்பதற்காக, நீண்ட நாட்கள் நீரில் தவம் செய்து தன்னை வருத்திக் கொண்ட-அத்தகைய தாமரை மலர் போன்ற சிறிய பாதங்களை, உலகிற்குக் கேடுசெய்யும் இராகு கேது போன்ற கிரகங்களான பாம்புகளைப் போன்றவளான கூனி, தனது கைகளால் தொட்டுத் தீண்டினாள்.

இவளுடைய சிறிய அடிகளுக்குப் புலவர்கள் எல்லாம் தம்மை எடுத்துக் காட்டாகக் கூறவேண்டும் என்று தாமரை மலர் தவம் இருந்ததாம். அதன் பயனாகத்தான் இப்போது அவளுடைய சீறடிகளுக்குத் தாமரைமலர் உவமை கூறப்படும் பே,றுபெற்றிருக்கிறது என்பதாம். காலக்கோள் என்று கேடுகாலத்திற்குக் காரணமாகிய கிரகங்களான ராகு கேது என்ற பாம்புகளை உட்படுத்திக் கூறியவர், அதற்கேற்பத் தொட்டாள் எனக் கூறாது தீண்டினாள் என்ற சொல்லைக் கையாண்டிருப்பது எண்ணி எண்ணி இன்புறத் தக்கது. பாம்பு காலில் தீண்டினாலும் அதன் நஞ்சு

Koviloor Digital Library

தலைக்கேறுதல் இயல்பாதல்போல இவள் காலில் தொட்டது, கைகேயின் மனத்தைத் திரித்தது. பாம்பைவிடக் கொடியவள் கூனி. பாம்பு தீண்டினாரை மட்டுமே கொல்லும். ஆனால் இப்பாம்பு தீண்டினவரின் இனத்தாராகிய தசரதனையே கொன்றது. உறங்குவாரை எழுப்பும்போது அவர் அடி தொட்டு எழுப்புதலே முறை. 'அடிசிறுத்திருத்தல் பெண்டிர்க்கு அழகு. அகல்அல்குல் தோள், கண்என மூவழிப் பெருகி, நுதல், அடி, நுசுப்பு என மூவழிச் சிறுகி' என்பது கலித்தொகை.

44. கூனி கூறத்தொடங்குதல்

தீண்டலும், உணர்ந்த அத்தெய்வக் கற்பினாள்
நீண்ட கண் அனந்தரும் நீங்குகிற் றிலள்;
மூண்டு எழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லல் மேயினாள். (1542)

(அனந்தர்-தூக்கமயக்கம்; கட்டுரை-கற்பனைச் சொற்கள்; மேவுதல்-தொடங்குதல்)

அவ்வாறு கூனி, கைகேயியின் சீறடிகளைத் தொட்டுத் தடவித் தீண்டியவுடன், துயில் உணர்ந்த அந்த அருந்ததி போன்ற தெய்வீகக் கற்புநிலை கொண்ட கைகேயி, தன் நீண்ட கண்களினின்றும் தூக்கக் கலக்கம் முற்றிலும் நீங்காதவளாகி இருக்கும்போதே, தன்மனத்துள் பெருகிவரும் பெரிய பழிச்செயலை விரைவில் செய்து முடித்துவிட வேண்டும் என்ற தீவினை தன் உள்ளத்தைத் தூண்டிச் செலுத்த, கூனி பின்வருவனவற்றைக் கூறத்தொடங்கினாள்.

தெய்வக் கற்பினாள் என்ற சொல், பின்தன் கணவனுக்குச் செய்யப்போகும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கிக் கூறப்பட்டதாம். துயில் உணர்ந்து எழுந்து தன்னுணர்வு பெறுவதற்கு முன்பே கூனி கட்டுரைக்கத் தொடங்கினாள் என்பது அவள் உள்ளத்தின் வேகம் குறித்தது. பெரும்பழி என்பது தனக்கு வரப்போவதை மட்டும் குறிக்கவில்லை. இராமனுக்கு, சீதைக்கு, தசரதனுக்கு என எல்லோர்க்கும் வரப்போகும் பெரும் பழியைக் குறித்ததாகும்.

பழிக்குப்பழி செய்வது என்பது தனக்கு நேர்ந்த அவமானத்தின் அளவுதான் பழிசெய்தவர்க்கும் ஏற்படவேண்டும் என்பது பொருளல்ல; பழிசெய்தவர்களின் தன்மைக்கும், தகுதிக்கும் ஏற்பப் பெரிதாகச் செய்ய நினைத்தாள் என்பதைத் தான் மூண்டெழு பெரும்பழி என்றார். இங்கே பெரும்பழி என்பது இராமன் முடிசூடுதலைத் தவிர்த்தலும், அவனைக் கானகத்திற்கு அனுப்பித் துயர்உற வைத்தலுமாம்.

Koviloor Digital Library

45. கூனி கைகேயியிடம் கோபம் கொண்டு கூறுதல்

'அணங்குவாள் விடஅரா அணுகும் எல்லையும்
குணம் கெடாது, ஒளிவிரி, குளிர்வெண் திங்கள் போல்,
பிணங்கு வான்பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவாய் அல்லை; நீ உறங்குவாய்?'என்றாள். (1543)

(அணங்கு-வருத்துகின்ற; வாள்-கொடிய; விடஅரா-இராகு / நச்சுப்பாம்பு; பிணங்கு-மாறுபட்ட; வான்-மிகப்பெரிய; பிணிக்க-வருத்த; நண்ணுதல்-நெருங்குதல்; உணங்குதல்-வாடி வருந்துதல்; வெண்-வெண்மை / அறியாமையுமாம்)

'வருத்தித் துன்பம் தருகின்ற கொடிய நஞ்சினையுடைய பாம்பாகிய இராகு, தன்னை வந்து பற்றிக் கொள்ளும் போதுகூட, தன் இயல்பான குணத்தினின்றும் நீங்காது, ஒளியினைப் பரப்பும் குளிர்ச்சிபொருந்திய வெண்மையான சந்திரனைப்போல, உன்னுடைய நல்ல இயல்புகளுக்கு மாறான பெரிய துன்பம் ஒன்று உன்னை வருத்த வந்து கொண்டிருக்கும்போதும், நீ வாடி வருந்தாமல், உறங்கிக் கொண்டிருக்கிறாயே' என்றாள் கூனி.

'ஒரு புடை பாம்பு கொளினும், ஒரு புடை அங்கண் மாஞாலம் விளக்கு உறூஉம் திங்கள் போல்' என்பது நாலடியார். வெண் திங்கள் வேண்டுமானால் அவ்வாறு கவலையற்று இருக்கலாம் காரணம் அது வெள்ளிய-அறியாமையுடைய திங்கள்; ஆனால் நீ அவ்வாறு இருப்பது தக்தன்று என்பதாம். இராகு திங்களை விழுங்கும் என்பது ஒரு புராணக் குறிப்பு. 'துக்கம் வருவது தெரிந்தால் தூக்கம் வருமா?' என்பார் கவிஞர் வாலி.

46. கைகேயி தனக்கு 'ஒரு தீங்கும் வாராது' எனல்

வெவ்விடம் அனையவள் விளம்ப, வேற்கணாள்
'தெவ்அடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர்;
அவ்வவர் துறைதொறும் அறம் திறம்பலர்;
எவ்விடர் எனக்கு வந்து அடுப்பது ஈண்டு?' எனா, (1544)

(வெவ்-கொடிய; தெவ்-பகைவர்; அடு-கொல்லுகின்ற; திறம்பல்-மாறுபடுதல்; அடுப்பது-பொருந்துவது; சிலை-வில்) குளகப்பாடல்.

கொடிய நஞ்சுபோன்ற உள்ளமுடைய கூனி இவ்வாறு எடுத்துச் சொல்ல, வேல் போன்ற கூரிய கண்களை உடைய கைகேயி, 'பகைவர்களைக் கொல்லுகின்ற வில்லினைக் கையில் ஏந்திய என்னுடைய நான்கு பிள்ளைகளும் உடல் நலத்தோடும் இணக்கமாகவும் இருக்கின்றனர், அவரவர்களுக்கான தொழில்களில் தருமம் தவறாது நடக்கின்றனர்; அப்படி இருக்கும்போது எனக்கு எந்தவிதத்தில் துன்பம் வந்துசேரும்?' என்று கேட்டாள்.

Koviloor Digital Library

இங்கே வேல்கணாள் என்று கைகேயியைக் கம்பன் குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. உறக்கத்திலிருந்து விழித்தெழுந்த கைகேயி இன்னும் உறக்க மயக்கத்திலிருந்து கொண்டே கூனி சொல்லுவனவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தாள். எனவே, இதைக் கேட்டவுடன் அவள் கூனியை கூர்ந்து நோக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்தக் கூரிய பார்வைக்கு ஒப்பு மையாகத்தான் கூரிய வேற்படைபோன்ற கண்கள் என்கிறான் கவிஞன். என் சிறுவர் என்று நால்வரையும் பொதுவாகக் கூறும் கைகேயியின் வேறுபாடிலாத உளப்பாங்கு நினைத்தற்குரியது. தனக்குத் துன்பம் வரவேண்டுமாயின் அதுதன் பகைவர்களாலோ, அல்லது தன் மைந்தர்கள் அறத்திற்குப் புறம்பான வழிகளில் ஈடுபடுதலாலோ வரலாம். ஆனால் இவ்விருவகையாலும் துன்பம் வருவதற்கு ஏது இல்லை காரணம் என் சிறுவர்கள் செவ்வியர், அறம் திறம்பலர், தெவ்வடு சிலைக்கை வீரர் என்றாள் என்பதாம்.

47. 'பராவ அரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவு அரும் துயரை விட்டு உறுதி காண்பரால்;
விராவு அரும் புவிக்கு எலாம் வேதமே அன
இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ?' என்றாள். (1545)

(பராவுதல்-பிறரால் புகழப்படுதல்; உராவு-வலிமை; விராவு-கலந்து; பயந்த-பெற்ற)

'பொதுவாகப் பிறரால் புகழ்ந்து பேசப்படுகின்ற புதல்வர்களைப் பெற்றவர்கள் எல்லோரும் இம்மை மறுமையில் எய்துகின்ற வலிமையான துயரங்களை நீக்கி, துறக்கமாகிய வீடுபேற்றினை அடைவார்கள். ஆனால் பலவகைப்பட்ட மக்களும் கலந்து வாழ்கின்ற இவ்வுலகங்களுக்கெல்லாம், வேதம்போன்ற என்மகனாகிய இராமனைப் பெற்றெடுத்த எனக்கு எத்தகைய துன்பம் வந்து சேரும்? அப்படி ஒரு துன்பம் இருக்கிறதா?' எனக் கூனியைக் கைகேயி கேட்டாள்.

புகழ்பெற்ற புதல்வர்களைப் பெற்றவர் அனைவரும் இம்மையில் அப்புகழால் மகிழ்ச்சியும் மறுமையில் 'புத்' என்னும் நரகம் செல்லாமல் துறக்கம் பெறுவதும் உறுதி என்பது நூற்கொள்கை. ஆனால் நான்பெற்ற பிள்ளை இராமனோ தனது ஒழுக்கத்தால் சிறந்தவனாவான். எவ்வாறு வேதம் எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகிறதோ, அவ்வாறே இராமனும் இவ்வுலக இயல் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுபவன் ஆவான். இவ்வுலகங்களுக்கெல்லாம், மக்கள் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதை, விதிப்பன விதித்து, விலக்குவன விலக்கிக் காட்டுவது வேதம். எனவே, வேதமே அன்ன இராமன் என்றாள். துயரம் என்பது இம்மையிலும், நரகம் என்பது மறுமையிலும் ஆவதுபோல, இன்பம், புகழ் என்பன இம்மையிலும், வீடுபேறு, துறக்கம் என்பன மறுமையிலும் அடைவர் என்பதாம். ''இம்மை உலகத்து இசையோடு விளங்கி, மறுமை

Koviloor Digital Library

உலகமும் மறுவின்றி எய்துப சிறுவர்ப் பயந்த செம்மலோர்'' என்பது அகநானூறு. பரதனைப் பெற்ற கைகேயி, இராமனைத் தான் பெற்றதாகக் கூறுவது பரதனிடத்து அவளுக்கு உள்ள அன்பைக் காட்டிலும், இராமனிடம் கொண்ட அன்பு பெரிதென்பதை உணர்த்தற்காகும். இதேபோலச் சீவக சிந்தாமணியிலும் 'விசையை, தான் பெறாத மகன் நந்தட்டனைத்தான்பெற்ற மகனாகக்கூறுவாள்' 'என்னுயிர்ச்சிறுவனாவன் நந்தனே' என்பது பாடல்வரி.

48. கூனியின் சூழ்ச்சி தொடங்குதல்

ஆழ்ந்த பேர் அன்பினாள் அனைய கூறலும்,
சூழ்ந்த தீவினை நிகர் கூனி சொல்லுவாள்,
'வீழ்ந்தது நின்நலம்; திருவும் வீழ்ந்தது;
வாழ்ந்தனள் கோசலை மதியினால்' என்றாள். (1546)

(மதி-அறிவு)

இவ்வாறு இராமன்பால் மிக்க பேரன்பு கொண்ட கைகேயி கூறியதும், அவளைச் சூழ்ந்து பற்றிக் கொண்ட தீவினையொத்த கூனி, இவ்வாறு கூறலானாள். 'உனக்கு வந்துசேர வேண்டிய நன்மைகள் எல்லாம் அழிந்து போயின; உன்னுடைய செல்வங்களனைத்தும் ஒழிந்து போயின; ஆனால் உன் மாற்றாளாகிய கோசலை மட்டும் தன் அறிவுத் திறத்தால் எல்லா நன்மைகளையும் எல்லாச் செல்வங்களையும் குறைவறப் பெற்று நிறைவாக வாழுகிறாள்' என்றாள்.

இராமபிரான் பால் கைகேயி எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறாள் என்பதை இங்கே குறிப்பது பின்னால் அவள் எவ்வாறு மனம் திரிந்து இராமனைப் பழிவாங்கப் போகிறாள் என்பதைக் குறிக்கும் முன்னோட்டம்தான். தீவினைகள் எல்லாம் ஒருங்கே சூழப்பெற்ற ஒரு உருவம்தான் கூனி என்று கூனியின் மேல் நமக்கு வெறுப்பு ஏற்படக் காரணமாகிறான் கவிஞன். எந்த ஒரு பெண்ணும் தன் மாற்றாள் இனிது வாழ்கிறாள்-நம்மைவிட நன்கு வாழ்கிறாள் என்பதைக் காணவோ-பிறர் சொல்லக் கேட்கவோ பொறுத்துக் கொள்ளமாட்டாள் என்பது உளநூலார் கருத்து. அதனை இங்கே கம்பன் கூனியின் வாயிலாக நமக்குக் காட்டுகிறான். தனக்கு வரப் போகும் துன்பத்தை முதலில் கூறி, மாற்றாள் பெறப்போகும் இன்பங்களைப் பின்னர் கூறுவதும் கேட்பவர் உள்ளத்தில் பொறாமையைத் தூண்டுவதற்கான உளநூல் முறை. கோசலை அறிவுத்திறம் உடையவள் என்றதனால் நீ அறிவுத்திறமையற்றவள் என்று குறிப்பால் உணர்த்துகிறாள் என்பதாம். அவள் நன்மையும் செல்வமும் பெற்றாள். நீ இரண்டையுமே இழக்கிறாய் என்றாள். இவையனைத்தும் கைகேயியின் மனம் திரியவேண்டும்-மாறவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் கூறப்பட்ட வேறுபட்ட மொழிகள்.

Koviloor Digital Library

49. ''இதனினும் நல்வாழ்வு கோசலைக்கு ஏது?'' எனக் கைகேயி கேட்டல்.

அன்னவள் அவ்வுரை உரைப்ப, ஆயிழை
'மன்னவர் மன்னன் என் கணவன்; மைந்தனேல்
பன்அரும் பெரும்புகழ்ப் பரதன்; பார்தனில்
என் இதன்மேல் அவட்கு எய்தும் வாழ்வு?' என்றாள். (1547)

(ஆய்-ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட; இழை-ஆபரணங்கள்; பன்அரும்-சொல்லுதற்கரிய; பரம்-பாரம்; பரதன்-அரச பாரத்தைச் சுமப்பவன்)

இவ்வாறு கூனி கூறியதும், ஆராய்ந்து எடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்த கைகேயி, 'மன்னர்களுக்கெல்லாம் மன்னனான தசரதச் சக்கரவர்த்தி என் கணவன்; சொல்லுதற்கரிய பெரும்புகழைப் பெற்றிருப்பவன் பரதன் என் மகன். என்னைக் காட்டிலும் இப்பூமியில் கோசலைக்கு ஒரு நல்ல வாழ்வு எவ்வாறு கிடைக்கும்?' என்றாள்.

கோசலையின் கணவன் அரசர்க்கரசனான சக்கரவர்த்தி தசரதன். மகனோ பெரும்புகழுக்குரிய பரதன். இதனைக் காட்டிலும் இப்பூமியில் கோசலைக்கு வேறு ஓர் நல்வாழ்வு கிடைக்கப் பெறுமோ? இப்பொழுதே அவள் மிக நல்ல வாழ்க்கையைத் தானே வாழ்ந்து கொண்டிருக்கின்றாள்' என்பதாம். அவ்விருவர் வாழ்வும் ஒப்புடையவேயன்றி உயர்வு தாழ்வு என்பது இல்லை என்பது கருத்து. இதில், கைகேயி இராமனையே தன் மகனாகவும், பரதனைக் கோசலையின் மகனாகவுமே எண்ணியிருக்கும் உளப்பாங்கு தெரியவரும்.

50. இராமன் நாளை முடிசூட்டிக் கொள்வதைத் தெரிவித்தல்

'ஆடவர் நகைஉற, ஆண்மை மாசுஉறத்
தாடகை எனும் பெயர்த்தையலாள் படக்,
கோடிய வரிசிலை இராமன், கோமுடி
சூடுவன் நாளை; வாழ்வு இது' எனச் சொல்லினாள். (1548)

(நகை-இகழ்ச்சி; உற-பொருந்த; பட-இறந்துபோக; கோடிய-வளைந்த / திறம்பிய; வரி-கட்டமைந்த; சிலை-வில்; ஆண்மை-ஆடவரின் தன்மை; தையல்-பெண்; மாசு-இழுக்கு)

என் இதன்மேல் அவட்கு எய்தும் வாழ்வு? என்று கேட்ட கைகேயியை நோக்கி கூனி, 'ஆண்கள் வர்க்கம் எல்லாம் எள்ளி நகையாடும்படியும், ஆண்மைத்தன்மைக்கே இழுக்கு உண்டாகும்படியும், தாடகை என்னும் பெயருடைய ஒரு பெண்ணை, அவள் இறந்துபோகும்படி, செய்த வளைந்த கட்டமைந்த வில்லினைக் கையில் ஏந்திய இராமன், நாளைக்கு அரச மகுடத்தைச் சூடிக் கொள்ளப் போகிறான். இதுதான் அவளுக்கு வந்த பெருவாழ்வு' என்று பதில் கூறினாள்.

Koviloor Digital Library

தாடகை என்பவள் ஓர் பேர் அரக்கி என்பது முன்னர் சொல்லப்பட்டது. அவள் அரக்கியாயிருந்தாலும் பெண் என்ற ஒரே காரணத்தினால் இராமன் அவளைக் கொல்ல விரும்பவில்லை. என்றாலும் அவனுடைய ஆசிரியன் விசுவாமித்திரர் கூறிய பின்னர்தான் அவள் பெண் அல்லள் அரக்கியே எனவே அவளைக் கொல்லல் தகும் என்று கருதி அவளைக் கொன்றான். இவ்வளவையும் முன்னர்க்கூறிய கவிஞன் இங்கே தாடகை என்னும் பெயர்த் தையலாள் என்று அவளை ஒரு பெண்ணாகவே, கூனியின் வாயிலாகக் கூறுகிறான். காரணம் இனம் இனத்தோடு சேரும். கூனி கொடு மனத்தவள். அவளுக்குத் தாடகை தன்னைப் போல ஒரு பெண்ணாகத்தானே தோற்றமளித்திருக்கவேண்டும்?

மற்றும் ஒன்று, இங்கே கூனி இராமன் மேல் ஏதேனும் ஒரு பழியைப் போட வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்து இருக்கிறாள். எனவே, இவ்வாறு கூறினாள் என்க. கோடிய வரிசிலை இராமன் என்பதற்கு வளைந்த கட்டமைந்த வில்லை ஏந்திய இராமன் என்றோம். அறத்தினின்றும் வழுவிய வில்லைக் கையிலேந்திய இராமன் என்ற பொருள் தரக் கூனி கூறினாள் என்பதும் பொருந்தும். தொடக்கத்திலேயே பெண் கொலை புரிந்த இராமன், மணிமுடி சூடியபின் உனக்கும் கேடு சூழ மாட்டான் என்பது என்ன நிச்சயம் என்பது உட்கருத்து. இராமபிரானது ஆண்மைக்கு ஒரு பழி கற்பித்துக் கூறவேண்டுமென்பது அவள் நோக்கம். போரில் பெண்களைக் கொல்லுதல் சுத்த வீரர்க்கு அழகன்று. யார் யாரைக் கொல்லக் கூடாது கேளுங்கள். 'படைஇழந்தோனையும், ஒத்தபடை எடாதோனையும், மடிந்த உள்ளத்தோனையும், மகப் பெறாதோனையும், மயிர்குலைந் தோனையும், அடிபிறக்கிட்டோனையும், பெண் பெயரோனையும், இன்னோரன்னாரையும் கொல்லாது விடுதல்' என்பது தொல்காப்பியம். பெண் பெயருடையவர்களையே கொல்லுதல் அறமன்று என்றால் பெண்ணையே கொல்லுதலும், எதிர்த்தலும் பேரறம் அன்று.

51. கைகேயி மகிழ்ச்சி

மாற்றம் அஃது உரைசெய, மங்கை உள்ளமும்
ஆற்றல் சால் கோசலை அறிவும் ஒத்தவால்;
வேற்றுமை உற்றிலள், வீரன் தாதை புக்கு
ஏற்று அவன் இதயத்து இருக்கவே கொலாம்! (1549)

(சால்-மிக்க; மாற்றம்-விடை / பதில்)

கூனி இவ்வாறு பதில் கூற, மங்கையாகிய கைகேயின் மனமும், கற்பு என்னும் ஆற்றல் பெற்ற கோசலையின் அறிவும் ஒத்துப்போயின. அவர்களுக்குள் எத்தகைய மனவேறுபாடும் கொள்ளவில்லை. காரணம், வீரனாகிய இராமனுககுக் தந்தையும், தங்கள் இருவருக்கும் கணவனாகிய

Koviloor Digital Library

தசரதன் அவள் இதயத்தில் புகுந்து, அதனையே தனது இருப்பிடமாக்கி இணங்கி வீற்றிருத்தல்தான் போலும் என்று கவிஞன் கூறுகிறான்.

இங்கே மங்கை என்று கைகேயியைக் கம்பன் குறிப்பிடுவது கோசலையினும் கைகேயி இளமையானவள் என்பதாலும், தசரத மன்னன் மனத்திற்கு மிக்க மகிழ்ச்சி தருபவள் என்பதாலும் என்க. கைகேயியின் மனமும் ஆற்றல் மிகுந்த கோசலையின் அறிவும் ஒத்துப் போயின, வேறுபடவில்லை என்பதில் ஒரு நுணுக்கம். கைகேயியின் மனம் பின்னர் வேறுபடப் போகிறது. மனம் மாறும் இயல்புடையது. ஆனால் கோசலையின் அறிவுகூர்ந்த அன்புணர்ச்சி என்றும் மாறாது ஒரே தன்மையானது என்பதைக் குறிக்கவுமே இச்சொற்களைக் கவிஞன் கையாண்டிருக்கிறான். 'இனம் போன்று இனமல்லார் கேண்மை, மகளிர் மனம் போல வேறுபடும்' என்பது குறள் 822. 'மலர்த்தலும் கூம்பலும் இல்லது அறிவு' என்பது குறள் 425. மனம் வேறுபடும் அறிவு வேறுபடாது என்பதாம். ஆற்றல் என்பது மூவகையானது. அவை அறிவு, ஆண்மை, பெருமை என்பன. கைகேயி அச்செய்தி கேட்டு மகிழ்வுற்றனளேயன்றி இப்போது மனம் திரிந்தாளில்லை என்பதாம்.

52. கைகேயி கூனிக்கு மாலை பரிசளித்தல்

ஆய பேரன்பு எனும் அளக்கர் ஆர்த்துஎழத்
தேய்வு இலா முகமதி விளங்கித் தேசுஉறத்
தூயவள் உவகை போய் மிகச், சுடர்க்கு எலாம்
நாயகம் அனையது ஓர்மாலை நல்கினாள். (1550)

(அளக்கர்-கடல்; தேசு-ஒளி; நாயகம்-தலைமை)

மனத் தூய்மையுள்ளவளான கைகேயி, இராமனிடம் தான் கொண்ட பேரன்பு என்னும் கடல் பொங்கியெழவும், தேய்தலும் களங்கமும் இல்லாத வெண்மதி போன்ற அவள் முகம், மேலும் ஒளி வீசிப் பொலிவு பெற்றுத் திகழவும், மகிழ்ச்சி மிக்கவளாய். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று சுடர்களுக்கும் தலைமையானது போன்று ஒளிவீசுகின்ற ஒரு மணிமாலையைக் கூனிக்குப் பரிசாக அளித்தாள்.

உவகைச் செய்தி கூறியவர்க்குச் சிறந்த பரிசளிப்பது இயல்பு; உவகையின் உயர்ச்சிகேற்பப் பரிசும் உயர்ந்ததாதல் இயல்பு. இங்கு கம்பன் கைகேயியைத் தூயவள் என்று கூறுவது கருத்திற்கொள்ளத் தக்கது. பின்னர் இத்தூய்மை எவ்வாறு திரியப்போகிறது என்பதற்கு இது ஒரு முன்னோட்டம்.

53. கூனி கோபத்தால் மாலையை வீசி எறிதல்

தெழித்தனள்; உரப்பினள்; சிறுகண்தீ உக
விழித்தனள்; வைதனள்; வெய்துயிர்த்தனள்;

Koviloor Digital Library

அழித்தனள்; அழுதனள்; அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தை, அக்கொடிய கூனியே. (1551)

(தெழித்தல்-இரைதல் / அதட்டுதல்; உரப்புதல்-அச்சுறுத்துதல்; வைதல்-ஏசுதல்; உயிர்த்தல்-பெருமூச்சுவிடுதல்; விழித்தல்-உறுத்துப் பார்த்தல்)

அம்மாலையை வாங்கிய கொடிய மனம் கொண்ட கூனி இரைந்தாள்; அதட்டினாள்; கைகேயியை அச்சுறுத்தினாள்; தன்னுடைய சிறிய கண்களில் நெருப்புப் பொறி சிந்தும்படி விழித்து உற்றுப் பார்த்தாள்; கைகேயியை ஏசினாள்; வெப்பப் பெருமூச்சுவிட்டாள்; தன்னை அலங்கோலப்படுத்திக் கொண்டாள்; வாய்விட்டு அழுது புலம்பினாள்; கைகேயி தந்த பொன்னால் இழைத்துச் செய்யப்பட்ட அழகிய மணிமாலையை வீசியெறிந்தாள். அந்த வேகத்தால் நிலம் கூடக் குழியாயிற்று.

அவள் மாலையை வீசி எறிந்த வேகத்தில் நிலம் கூடப் பள்ளமாய்ப்போனது என்பதனால் அவள் கோபத்தின் மிகுதி புலப்படுத்தப்பட்டது. அவள் கொடுத்த பரிசை வீசியெறிந்ததால் அவளை அவமானப்படுத்தியதாயிற்று. அவள் அத்தகைய உரிமை பெற்றவள் என்பது புலனாகிறது. அவள் உள்ளம், உடல், குணம், செயல் எல்லாவற்றிலும் சிறுமையும் கொடுமையும் உடையவள் என்பதைக் கொடிய கூனி என்பதால் பெறவைத்தார்.

54. கூனி தன் கருத்தைப் படிப்படியாக விளக்குதல் [10 பாடல்கள்]

வேதனைக் கூனி, பின்வெகுண்டு நோக்கி, அப்
பேதையைப், 'பித்தி' நிற்பிறந்த சேயொடும்
நீ துயர்ப்படுக! நான்நெடிது உன் மாற்றவள்
தாதியர்க்கு ஆள் செயத்தரிக்கிலேன்' என்றாள். (1552)

(பித்தி-பைத்தியக்காரி; தாதியர்-பணிப்பெண்டிர்; மாற்றவள்-சக்களத்தி; தரித்தல்-தாங்குதல் / பொறுத்தல்)

இராமனது வில் உண்டையால் பட்ட அவமானமும், இப்பொழுது கைகையிதன்கருத்துக்கு இயையாததனால் ஏற்பட்ட வேதனையும் மிகுந்த கூனி, பின்னர் சினம் கொண்டு கைகேயியை நோக்கி 'நீ அறிவில்லாதவள்; பைத்தியக்காரி; நீ பெற்றெடுத்த உன் பரதனோடு நீ வேண்டுமானால் உன் ஆயுட்காலம் முழுவதும் பெருந்துயர் அடைக; ஆனால் நான் உன் மாற்றாளாகிய கோசலையின் பணிப்பெண்டிர்க்கு ஏவல் செய்து வாழ்வதைப் பொறுத்துக் கொள்ள மாட்டேன்.' என்றாள்.

Koviloor Digital Library

பேதை என்பது இங்கு பருவத்தை உணர்த்தியதல்ல; வஞ்சனையறியாத அறிவிலி என்பதை உணர்த்தியது. இன்னும் சிறிது காலம் சென்றால் நீயே கோசலையின் தாதியர்க்கு ஏவல் செய்ய நேரிடலாம் என்பது குறிப்பு.

55. ''சிவந்தவாய்ச் சீதையும், கரியசெம்மலும்
நிவந்த ஆசனத்து இனிது இருப்ப, நின் மகன்
அவந்தனாய் வெறு நிலத்து இருக்கல் ஆனபோது
உவந்தவாறு என் இதற்கு? உறுதி யாது?'' என்றாள். (1553)

(நிவந்த-உயர்ந்த; அவந்தன்-தலை குனிந்து வணங்குவோன் / கீழ்ப்பட்டவன் / பிறரால் வணங்கப்படாதவன் / வீணானவன் / ஒன்றுக்கும் பயனின்றிப் போனவன்; இனிது-மகிழ்ச்சியோடு; உறுதி-பயன்)

'சிவந்த வாயினை உடைய சீதையும், அவள் கணவனான கரியநிறமுடைய இராமனும், உயர்ந்த சிங்காசனத்தில் மகிழ்ச்சியோடு வீற்றிருக்க, நினது மகன் பரதன்,. பயனற்றவனாய் (அவர்கட்குத் தலைவணங்கி) வெறுந்தரையில் நின்றிருப்பான் என்றால், இம்முடிசூட்டுவிழாச் செய்தியைக் கேட்டும் நீ மகிழ்ச்சியோடு இருக்கிறாயே, இது எவ்வாறு பொருந்தும்? இம் முடிசூட்டு விழாவினால் நீ அடையப்போகிற பயன்யாது?' என்றாள்.

மகளிர் வாய் சிவந்திருத்தலே ஒரு அழகுதான். ஆனால் கூனி அதை இங்கே இகழ்ச்சிக்குறிப்பில் தெரிவிக்கிறாள். முன்பு தாடகை அரக்கி என்றாலும் தையலாள் என்று பெண்ணாகக் குறிப்பிட்டாள். எனவே, அவள் உள்ளமும் / கருத்தும் கோடியவள் என்பது தெளிவாகும். இராமனைக் கரியசெம்மல் என்று கூறுவதும் அக்கருத்தினதே. சீதை என்று அவள் பெயரைச் சொன்னவளுக்கு, இராமன் என்று இவன் பெயரைச் சொல்லக்கூட அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. அவ்வளவு தீராச்சினம். இராமனும் பரதனும் ஒத்த உரிமையுடையவர்கள். இம்முடிசூட்டுவிழாவினால் அவர்கள் உரிமைகளில் உயர்வுதாழ்வு வேறுபாடு வந்து விடும். எனவே, இது மகிழ்ச்சிக்குரிய செய்தியல்ல என்று குத்திக்காட்டுகிறாள். இது நான்குவகை உபாயங்களுள் பேத உபாயம். முதற்பாடலில் கைகேயி பெறப்போகும் தாழ்வு நிலையைக் கூறினாள். இப்பாடலில் அவள் மகன் பரதன் அடையப்போகும் தாழ்வுநிலையை உணர்த்துகிறாள்.

56. மறந்திலள் கோசலை உறுதி, மைந்தனும்
சிறந்த நல் திருவினில் திருவும் எய்தினான்
இறந்திலன், இருந்தனன், என்செய்து ஆற்றுவான்?
பிறந்திலன் பரதன் நீபெற்றதால்', என்றாள். (1554)

(ஆற்றுதல்-பொறுத்தல்; திரு-அரசச்செல்வம்)

'உன் மாற்றாளாகிய கோசலை, தான் சக்கரவர்த்தியின் உரிமையுடைய மனைவி என்பதை மறக்கவில்லை. தன் மைந்தனான இராமனுக்குச்சிறந்த

Koviloor Digital Library

நன்மை பொருந்திய செல்வங்களுக்கும் சிறந்த செல்வமாகிய அரசச் செல்வத்தை வாங்கிக் கொடுத்துவிட்டாள்; ஆனால் நீ உன் மகனுக்கு அவ்வாறு செய்யவில்லை; எனவே, அவன் இறக்கமுடியாமால், நடைப்பிணம்போல், உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறான். இந்தத் துயரை அவன் எவ்வாறு தாங்கிக் கொள்ளப்போகிறான். உரிமையுடைய வாழ்வை அவன் அடையாததனால் அவன் உன் வயிற்றில் பிறந்திருந்தாலும் இவ்வுலகில் பிறவாதவனாகவே இருக்கிறான்' என்றாள்.

இவை அனைத்தும் கூனியின் கற்பனை. இராமனுக்கு முடிசூட்டவேண்டும் என்ற முடிவு, கோசலைக்கே தெரியாமல், தசரதன் தானே அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து எடுத்த முடிவு. அது கோசலையாள் தூண்டுதலால் ஆனதுஅல்ல. மாற்றாள் மிகத்திறமை வாய்ந்தவள். நீ திறமையற்றவள் என்று ஒரு பெண்ணிடம் கூறினால் பொறாமையால் அவள் மனம் தூண்டப்படுதல் இயல்பு. இதனைத்தான் கைகேயியிடம் கூனி எதிர்பார்க்கிறாள். அவன் இருந்தும் இறந்தவனே. பிறந்தும் பிறவாதவனே என்பது ஓர் நயம். பரதன் உனக்கு மகனாகப் பிறந்ததனால் இருக்கின்ற செல்வத்தையும் இழந்து, துன்பத்தில் உழலப்போகிறான் என்று எச்சரிக்கிறாள் கூனி.

57. 'சரதம் இப்புவிஎலாம் தம்பியோடும் இவ்
வரதனே காக்குமேல், வரம்புஇல் காலமும்
பரதனும் இளவலும் பதியின் நீங்கிப் போய்
விரதமாதவம் செயவிடுதல் நன்று' என்றாள். (1555)

(சரதம்-மெய்ம்மை / உண்மை; பதி-ஊர் / அயோத்தி; வரதன்-இராமன்; விரதம்-பட்டினி / நோன்பு)

'உண்மையாகவே இவ்வுலகம் முழுவதையும், இராமனே தன்தம்பி இலக்குவனோடு இணைந்து அளவற்ற காலம் அரசாட்சி செய்யப்போகிறான் என்றால், பரதனும் அவன் தம்பியாகிய சத்துருக்கனனும் இவ்வயோத்தி மாநகரின் நின்று நீங்கிப்போய் விரதங்கள் மேற்கொண்டு சிறந்த தவம் செய்ய வனத்திற்குப் போக அனுமதிப்பது நன்மை பயப்பதாகும்' என்றாள்.

இப்புவிஎலாம் என்ற சொற்றொடர்க்கு இவ்வுலகம் முழுவதையும் என்று கூறியதனால் பரதனுக்கு அதில் எந்த அரசியல் அதிகாரமும் இல்லை என்றும், இவ்வளவு காலத்திற்கோ அல்லது இவ்வளவு பரப்பினையோ அவன் ஆளுவான் என்று குறிப்பிடாமல் புவியெலாம், வரம்பில் காலமும் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. ஆளப்போவது என்னவோ இராமன் மட்டிலுமே. என்றாலும் தம்பியோடும் என்று இலக்குவனையும் சேர்த்துக் கூறுவதும், பதியில் நின்று நீங்கப் போவது என்னவோ பரதன் மட்டிலும்தான் என்றாலும் இளவலும் என்று சத்துருக்கனனையும் இணைத்துக் கூறியதும், இவர்கள் இருவரும் இருவரையும் என்றும்

Koviloor Digital Library

பிரியாது இணைந்தே இருப்பர் என்பதனால்தான். ஒருவர் அரசாட்சி செய்தார் என்றால் மற்றொருவர் அவருக்குக் கீழே அந்நாட்டிலேயே இல்லாமல் வனவாசம் போய் தவம் செய்தல் நன்று என்று குறிப்பால் உணர்த்துகிறாள். பின்னால் இராமனைக் காட்டிற்கு அனுப்பும்போது எந்தத் தடையும் வந்துவிடக்கூடாது என்பதற்காக இப்போதே முன்னெச்சரிக்கையாக இந்தச் சொற்களைக் கூனி கைகேயியின் உள்ளத்தில் விதைக்கிறாள் என்பது பொருந்தும். விரதம் என்பது மனம் ஐம்பொறி வழிசெல்லாது இருக்க உண்டி சுருக்குதல் முதலியன. இவை தவத்திற்கு அங்கமானவை.

58. 'பண் உறு கடகரிப்பரதன், பார்மகள்
கண்உற கவினராய் இனிது காத்த அம்
மண் உறு முரசுடை மன்னர் மாலையில்
எண் உறப் பிறந்திலன், இறத்தல் நன்று' என்றாள். (1556)

(பண்-அலங்கரிக்கப்பெற்ற; கவின்-அழகு; மண்-மார்ச்சனை / ஒளிச்செறிவு; மாலை-வரிசை)

அலங்கரிக்கப்பட்ட மதம் மிக்க யானைப்படையை உடைய, யானையைப் போன்ற பரதன், நிலமகள் தன் கண் என்று கூறுமாறு அழகுடையவராய், உலகை இனிமையாகக் காக்கின்ற, மார்ச்சனை பொருந்திய முரசங்களையுடைய மன்னர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படத் தகுதியுள்ளவனாகப் பிறக்கவில்லை போலும். எனவே, அவன் உயிர் வாழ்தலிலும் இறத்தலே மேல்' என்று தன் கற்பனையின் உச்சத்தில் கூறினாள் கூனி.

முன்பு இராமனை "இருகை வேழத்து இராகவன்" என்றும், தசரதனை "பனையவாம் நெடுங்கரப்பரும யானையாய்" என்றும் கூறிய கம்பன் இப்போது பரதனைப் "பண்ணுறு கடகரிப் பரதன்" என்கிறான். மன்னர்களை யானைக்கு உவமிப்பது கம்பனுக்கு கைவந்த கலை. நிலமகள் மகிழ்ச்சியுறுமாறு அரசாட்சி நடத்திய பரம்பரையின் வரிசை என்பது குலமுறை கிளத்துப்படத்தில் கூறியவாறு என்க. அரசர் குலத்திலே பிறந்து, நல்லிலக்கணங்களும் பொருந்தப் பெற்றவராயினும், முறைப்படி முடிசூடி அரசு செய்வோரது பெயர்களே என்றும் எண்ணப்படும். அவ்வாறென்றால் அவ்வரிசையில் இராமன் கருதப்படுவான். நின் மகன் பரதன் எண்ணப்படமாட்டான் என்பது கருத்து.

மக்களை இனிது காத்தல் என்பது எவ்வாறு? பதிற்றுப்பத்துப்பாடல் ஒன்று கூறுகிறது. கேளுங்கள். "பிறர்பிறர் நலியாது, வேற்றுப்பொருள் வெஃகாது; மையில் அறிவினர் செவ்விதின் நடந்து; தம்அமர் துணைப்பிரியாது; பகுத்துண்டு; மாக்கள் மூத்தயாக்கையோடு, பிணியின்றிக்கழியக் காத்தல்" என்பது பாடல்.

Koviloor Digital Library

59. 'பாக்கியம் புரிந்திலாப் பரதன் தன்னைப், பண்டு
ஆக்கிய பொலன் கழல் அரசன், ஆணையால்
தேக்குஉயர் கல்அதர் கடிது சேண்இடைப்
போக்கிய பொருள் எனக்கு இன்று போந்ததால்' (1557)

(பாக்கியம்-புண்ணியம் / நல்வினை; பண்டு-முன்னர்; அதர்-வழி; போந்தது-விளங்கிற்று; பொலன்-பொன்; கடிது-விரைந்து; பொருள்-உட்கருத்து / காரணம்; கல்-மலை)

'அரசாள்வதற்குரிய நல்வினை செய்யாத பரதனை, முன்னர், பொன்னாலாகிய வீரக்கழலணிந்த தசரதன் தன் கட்டளையினால், தேக்குமரங்கள் உயர்ந்து வளர்ந்ததும், மலைகள் நிறைந்துதுமான காட்டுவழியில் மிகநீண்ட தூரத்தில் உள்ள கேகய நாட்டிற்கு விரைவாக அனுப்பி வைத்ததன் உட்கருத்து எனக்கு இப்போதுதான் விளங்கிற்று' என்றாள்.

மக்கள் நால்வரின் மணம் முடிந்து வந்ததும், கேகய மன்னன் பரதனைக் காணவிரும்புவதாகப் பரதனின் மாமன் யுதாசித்து வேண்டிக் கொள்ளவே பரதன் தசரதனால் கேகய நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டான். தசரதன் தானாகவே பரதனைக் கேகய நாட்டிற்கு அனுப்பவில்லை. என்றாலும் கூனி அச்செயலுக்கு அவளுடைய கற்பனையைக் கலந்து, பரதன் ஒருவேளை இராமனின் முடிசூட்டுதலுக்குத் தடையாகவோ, இடையூறாகவோ இருப்பானோ என்ற அச்சத்தினால்தான் தசரதன் பரதனை அவ்வளவு நெடுந்தூரம், அந்தக் காலத்தில், விரைவாக, அனுப்பி வைத்தான் போலும் என்று கைகேயியின் மனத்தை மாசுபடுத்த விரும்பி அவ்வாறு புனைந்துரைத்தாள் கூனி என்பதாம்.

60. மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
'அந்தரம் தீர்ந்து உலகுஅளிக்கும் நீர்மையால்
தந்தையும் கொடியன், நல்தாயும் தீயளால்
எந்தையே! பரதனே! என் செய்வாய்?' என்றாள். (1558)

(வகைந்து-வகுத்து / வகைப்படுத்தி; அந்தரம்-நடுவு நிலைமை; தீர்தல்-நீங்குதல்; அளித்தல்-கொடுத்தல் / பாதுகாத்தல்; நீர்மை-தன்மை)

கூனி இதன் பின்னரும் கைகேயியிடம் கூறிப் பயனில்லை என்று அறிந்து இன்னும் சற்று முறைப்படுத்திக் கூறுவது போல் பரதன்தன் எதிரில் இருப்பதைப் போல பாவித்துக் கொண்டு, 'என் செல்வமே பரதா! நடுவு நிலைமையினின்றும் நீங்கி இவ்வுலகின் அரசாட்சி முழுவதையும் இராமனுக்கே கொடுத்த தன்மையினால் உன் தந்தையாகிய தசரதன் மிகக் கொடியவனானான்; உனக்கு முறைப்படி சேரவேண்டிய அரசாட்சியை உனக்கு வாங்கித் தராமலும், மாற்றாளின் மகன் அரசாட்சி ஏற்பதை நினைந்து மகிழ்ச்சியுறுபவளுமான உன் தாயான கைகேயியும் மிகத் தீயவள் தாயும் தந்தையும் உன் நலத்தில் அக்கறை கொள்ளாத போது நீ

Koviloor Digital Library

என்னதான் செய்வாய், என் மகனே! என்று பரதன் மீது மிகப் பரிவுள்ளவள் போல கைகேயி மனத்தை மாசுபடுத்த விரும்பி நாடக மாடினாள் கூனி. கைகேயியின் மனத்தில் நன்றாகப் பதியும்படி கூறுதலையே வகைந்து கூறினாள் என்றான்.

61. அரசர்இல் பிறந்து, பின் அரசர்இல் வளர்ந்து,
அரசர்இல் புகுந்து, பேர்அரசி ஆனநீ,
கரைசெயற்கு அரும் துயர்க்கடல் வீழ்கின்றாய்!
உரைசெயக் கேட்கிலை; உணர்தியோ?' என்றாள். (1559)

'நீ பிறந்தது அரசர் குலம்; நீ வளர்ந்தது அரச அரண்மனையில்; நீ மணமாகிப் புகுந்ததும் பேரரசர் குலம்; நீ பேரரசி; பட்டத்தரசி; இவ்வளவு சிறப்புக்களைப் பெற்ற நீ கரைகாண முடியாத துன்பக்கடலில் முழுகிக் கொண்டிருக்கிறாய் என்பதைநீயாகவும் உணரமாட்டேன்என்கிறாய்; நான் சொல்லியும் கேட்க மாட்டேன் என்கிறாய்? என்ன செய்வது?' என்று இரங்கிக் கூறுகிறாள்.

இன்று பட்டத்தரசியாக விளங்கும் நீ உன் மகனுக்கு அரசனாக முடி சூட்டாவிட்டால், நீ படப்போகும் துன்பம் கடலினும் பெரியதாகும் என்பதை நீ ஏன் உணர மாட்டேன் என்கிறாய்? என்று வலியுறுத்துகிறாள். 'தனக்காகவும் தெரியாது, பிறர் சொன்னாலும் கேட்பதில்லை' என்ற முதுமொழி இங்கு நினைவு கூரத்தக்கது.

62. கல்வியும், இளமையும், கணக்குஇல் ஆற்றலும்,
வில்வினை உரிமையும், அழகும், வீரமும்,
எல்லைஇல் குணங்களும், பரதற்கு எய்திய,
புல்இடை உகுத்த நல்அமுதம் போலுமால். (1560)

(எய்திய-பொருந்தியுள்ள; கணக்கில்-அளவில்லாத; எல்லை இல்-அளவிடற்கரிய; புல்-புன்மை / இழிவு / தூய்மையற்ற; இடை-இடம்; உகுத்த-சிந்திய; அழகு-கண்டோர் விழையும் உருவ நலம்)

'பரதனிடம் அமைந்துள்ள நல்ல கல்வி, இளமைப் பருவம், எண்ணற்ற ஆற்றல்கள், வில் பயிற்சியில் தேர்ச்சி, கண்டோர் மயங்கும் அழகு, வீரம் ஆகிய எல்லையற்ற நற்குணங்கள் எல்லாம், அவன் அரசனாக முடியாததால், தூய்மையற்ற சாக்கடையில் சிந்திய நல்ல தேவாமிர்தத்தைப் போல் பயனற்றதாகிக் குறைந்து அழியப் போகிறது' என்றாள்.

இராமனுக்கு உள்ள எல்லா நற்குணங்களும் பரதனிடமும் அமைந்துள்ளன, அவனை அரசனாக்கி அப்பண்புகள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்படி செய்யாமல், அவனுடைய குணநலன்கள் எல்லாவற்றையும் சாக்கடையில் கொட்டிய அமிழ்தத்தைப் போன்று

Koviloor Digital Library

பயனற்றதாகச்செய்கிறாயே? என்று கூனி கைகேயியைப் பார்த்து இரங்கிக் கூறுகிறாள். புல்லிடை உகுத்த நல் அமுதம் என்ற சொற்றொடர், வள்ளுவனின் 'அங்கணத்துள்உக்க அமிழ்தற்றால்' (720) என்ற குறளை நினைவுபடுத்தும். அங்கணம் என்பது கழிவு நீர் தேங்கும் இடம்.

63. கைகேயி சினந்து பதில் கூறுதல் [5 பாடல்கள்]

வாய்கயப்புஉற மந்தரை வழங்கிய வெம்சொல்
காய்கனல்தலை நெய்சொரிந்து எனக் கதம் கனற்றக்
கேகயர்க்கு இறை திருமகள், கிளர் இளவரிகள்
தோய் கயல் கண்கள் சிவப்புஉற நோக்கினள்; சொல்லும். (1561)

(கயப்பு-கசப்பு; வெம்-கொடிய; காய்-எரிகின்ற; கதம்-கோபம்; கனற்றல்-மிகுதிப் படுத்தல்; இறை-மன்னன்; கிளர்-விளங்குகின்ற; இள-மெல்லிய)

மந்தரை தனது வாயே கசந்து போகும்படி வரம்பின்றி வாரி இறைத்த கடுஞ்சொற்கள், எரிகின்ற நெருப்பில் நெய்யை வார்த்தது போலக் கைகேயியின் சினத்தை மேலும் மிக்குவித்தது. எனவே, கேகய தேசத்து அரசனான கேகய மன்னனின் அழகிய மகளான கைகேயி, விளங்குகின்ற மெல்லிய செவ்வரிகள் படர்ந்ததும், கெண்டை மீன்கள் போன்றதுமான தன் கண்கள் சினத்தால் சிவப்பேற, உற்றுப்பார்த்து, கீழ்வருவனவற்றைக் கூறினாள்.

கசப்பானவார்த்தைகளைப்பேசினால்பேசியவர்வாய்கசக்கும்என்பது உளவியலார் நெறி. வேப்பங்காய் கசப்பு. அது யார் தின்றாலும் கசப்பானதாகத்தானேஇருக்கும்? 'கைக்குமேதேவரேதின்னினும்வேம்பு' என்பது நாலடியார். அது போல இராமன், தசரதன் முதலானவர்கள் மீது பழிச்சொற்களைச் சொன்ன கூனிக்கும்கூட வாய் கசந்ததென்பதாம். எரிகின்ற நெருப்பில் நெய்வார்ப்பது என்பது பழமொழி. கைகேயி அவளைக் கடிந்தும்கூட அவள் மேலும் மேலும் இழிவான வார்த்தைகளைப்பேசிக்கொண்டேசென்றதனால் 'வழங்கிய வெம்சொல்' என்றான் கவிஞன்; வழங்குதல் என்பது பொதுவாக அளவுக்கு மீறிக் கொடுப்பதை உணர்த்தும் ஒரு அருமையான சொல். அதுதான் வாரி வழங்குதல் என்பதாம். நெய் விடவிட நெருப்பு வளர்ந்து எரிதல் போல மந்தரை பேசப்பேசக் கைகேயியிக்குச் சினம் வளர்ந்தது என்பதாம்.

64. 'வெயில்முறைக் குலக்கதிரவன் முதலிய மேலோர்
உயிர்முதல்பொருள் திறம்பினும் உரைதிறம் பாதோர்;
மயில்முறைக்குலத்து உரிமையை, மனுமுதல் மரபைச்
செயிர்உறப் புலைச்சிந்தையால், என்சொனாய்? தீயோய்!' (1562)

Koviloor Digital Library

(திறம்புதல்-மாறுபடுதல்; செயிர்-குற்றம்; புலை-புன்மையான / இழிந்த)

'சூரிய குலத்தில் தோன்றிய முன்னோர்கள், உயிர் முதல் எந்தப் பொருள்கள் அழிந்தாலும், தாம் சொன்ன சொல் தவற மாட்டார்கள். அதே போல மயிலின் குலத்தில், மூத்த பார்ப்புக்கே உரிமை என்பது போல, மனுவின் குலத்திலேயும் மூத்த மகனுக்கே அரசுரிமை என்பதையறியாது நான் பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும் இழுக்கு உண்டாகும்படி, உனது கீழ்மையான உள்ளத்தால் அற்பமான வார்த்தைகளைச் சொல்லி விட்டாயே! கொடியவளே!' என்றாள்.

குலத்தின் முதல்வன் சூரியன்; அவன் மகனாய் இருந்து முதலில் அயோத்தியில் அரசாண்டவன் மனு. ஆதலால் சூரிய குலம், மனுக்குலம் என்று இரண்டையும் குறிப்பிட்டான். அதுபோல மயிற்குலம் என்பது கேகய அரச வம்சத்தைக் குறிக்கும். கேகயம்-மயில்; உயிர் முதல் பொருள் திறம்பினும் உரைதிறம் பாதோர் என்பது, சிபிச்சக்கரவர்த்தி புறவு ஒன்றின் பொருட்டால் உயிர் துறந்த நிகழ்ச்சியினால் அறியலாம். மயில் குலத்தில் பிறக்கும் அத்தனை குஞ்சுகளிலும், எந்தக் குஞ்சிற்குப் பொன்னிறமான தோகை இருக்கிறதோ அதனையே மூத்த குஞ்சு என்று கொள்வதுண்டு. மூத்த குஞ்சுக்குத் தான் தோகை பொன்னிறமாயிருக்கும். மற்ற குஞ்சுகளுக்கு அவ்வாறு இருக்காது. மூத்த குஞ்சிற்குத் தான் தலையில் கொண்டை இருக்கும் மற்றவைகளுக்கு இருக்காது என்றும் கூறுவர். ஒரு கூட்டமாய் உள்ள மயில்கள் மகிழ்ச்சியால் ஆடத் தொடங்கும் போது, முதலில் சிறை விரித்தாடும் உரிமை மூத்த மயிலுக்கே உண்டு என்றும் கூறுவர். மயில் முட்டை இட்டுப் பல குஞ்சு பொரிக்கும் போது, முதலில் பிறந்த குஞ்சுக்கே பொன்னிறப் பீலி முளைக்க, ஏனையவற்றிற்கு இல்லையாதல் போல, முதல் மகனுக்கே அரசுரிமை வழங்கும் வழக்கம் இக்குலத்துக்கு உண்டு என்பதை, மயில் முறைக் குலத்து உரிமை என்றாள்; அதுபோல தசரதனின் மூத்த மகனான இராமன் அரசாட்சி ஏற்பதே நன்று என்று கைகேயி கூறுகிறாள். இக்குலத்து முன்னோர் சொன்ன சொல் தவறாதவர் போலவே, தசரதனும் தன் மூத்த மகனான இராமனுக்கு அரசுரிமை என்று தான் சொன்ன சொல் தவறமாட்டான் என்பது கருத்து.

65. 'எனக்கு நல்லையும் அல்லைநீ; என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை; அத்தருமமே நோக்கின்
நினக்கு நல்லையும் அல்லை; வந்து ஊழ்வினைதூண்ட
மனக்குநல்லன சொல்லினை, மதியிலா மனத்தோய்!' (1563)

(மதி-புத்தி; தருமம்-முறை / அரசதருமம்)

'புத்தியில்லாத மனத்தை உடையவளே! நீ சொல்லுகின்ற சொற்களால் எனக்கும் நன்மை விளையப்போவதில்லை; என்மகன் பரதனுக்கும் நன்மை விளையப்போவதில்லை; அரச தருமப்படி பார்த்தால்

Koviloor Digital Library

இச்சொற்கள் உனக்கே நன்மை பயக்கப்போவதில்லை; மாறாகத் தீமையே பயக்கும்; நீ உன் மனத்தில் தோன்றியவற்றை எல்லாம் சொல்லுகிறாய், அறிவினை உபயோகப்படுத்த வில்லை; அத்துடன் இது நீயாகச் சொல்லவில்லை. உன்னுடைய ஊழ்வினை இப்படி அறிவுக்கு மாறாக மனத்தில் தோன்றியவற்றை யெல்லாம் பேசுமாறு உன்னைத் தூண்டியிருக்கிறது' என்றாள்.

இங்கே ஒன்று கவனிக்க வேண்டும். முன்பு இராமனை என் மகன் என்றாள் 'இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ?' என்றாள். இந்தப் பாடலில் என்மகன் பரதன் தனக்கு என்கிறாள். சொல் மாற்றம் புரிகிறதா? இது மனமாற்றத்தின் முதல்படி. மனம், மதி, ஊழ்வினை இவை ஒன்றோடொன்று பொருதுகின்றன மந்தரையின் மனத்தில். அதை நன்கு உணர்ந்து கொண்டாள் கைகேயி என்பதாம்.

66. பிறந்துஇறந்து போய்ப்பெறுவதும் இழப்பதும் புகழே,
நிறம் திறம்பினும், நியாயமே திறம்பினும், நெறியின்
திறம் திறம்பினும், செய்தவம் திறம்பினும், செயிர்தீர்
மறம் திறம்பினும், வரன்முறை திறம்புதல் வழக்கோ? (1564)

(நிறம்-ஒளி; திறம்-பெருமை; செயிர்தீர்-குற்றமற்ற; மறம்-வீரநெறி; வழக்கு-முறை; வரன்முறை-குலத்துக்குரிய ஒழுக்கம் / ஒழுங்கு)

'மனிதன் பிறப்பால் இம்மையில் பெறவேண்டுவது புகழ்; அவன் இறந்து போனாலும் புகழை இழக்கக் கூடாது. மறுமையிலும் பெறவேண்டுவது புகழ். எனவே தான் பிறரால் மதிக்கப்படுவதினின்றும் மாறுபட்டாலும், நடுவுநிலைமையினின்றும் மாறுபட்டாலும், நெறி முறைகளின் பெருமைகளினின்று மாறுபட்டாலும், செய்கின்ற தவங்கள் பயன்தராமல் மாறுபட்டாலும், குற்றமற்ற வீரத்தன்மை மாறுபட்டாலும், தம் குலத்துக்குரிய ஒழுங்கு முறையினின்றும் மாறுபடுவது முறையாகுமா?' என்றாள்.

ஒளி, நடுவுநிலைமை, அறநெறி, தவம், வீரம் இவைகளினின்று மாறுபடக் கூடாது. எனவே மூத்தவனுக்கே அரசு என்ற நெறி முறையினின்றும் தசரதன் மாறுபடமாட்டான் என்று கைகேயி உறுதியாகக் கூறுகிறாள். 'வசையொழிப வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய வாழ்வாரே வாழாதவர்' என்பதும், 'வசையென்ப வையத்தார்க்கெல்லாம், இசையென்றும் எச்சம் பெறாஅ விடின்' என்பதும் இவ்வரிகளை ஒட்டிய குறட்பாக்கள் (240,238). நிறம் என்பது பிறரினும் சிறக்கத் தோன்றுதல் என்னும் பொருள் தந்து நின்றது (தான் உளகாலத்து எல்லாரானும் நன்கு மதிக்கப்படுதல்) மறம் திறம்புதல் என்பது தன்னை ஒத்தோரிடத்துப் போர் புரிவதையும் தன்னைவிட முதியோரிடத்தும், இளையோரிடத்தும், படையில்லா தோனிடத்தும், பெண் பெயர் கொண்டோனிடத்தும், புறங்கொடுத்தோரிடத்தும் பொருதாமையைக் குறிக்கும்.

Koviloor Digital Library

67. 'போதிஎன் எதிர் நின்று! நின்புன்பொறி நாவைச்
சேதியாது இதுபொறுத்தனென்; புறம் சிலர் அறியின்
நீதிஅல்லவும், நெறிமுறை அல்லவும் நினைந்தாய்
ஆதி; ஆதலின், அறிவிலி! அடங்குதி! என்றாள். (1565)

(போதி-போய் வருவாயாக; புன்-கீழ்மை / அற்பம்; சேதித்தல்-அறுத்தல்; ஆதி-ஆகுவாய்; புறம்-வெளியே)

'அறிவில்லாதவளே! என் எதிரில் நின்றும் அகன்று விடுவாயாக! இத்தகைய இழிசொற்களைப் பேசுவதற்குக் கருவியாக இருந்த உன் நாவை அறுத்தெறிந்திருக்க வேண்டும். என் மிகப்பழைய தோழியாதலால் அது செய்யாது விடுத்துப் பொறுத்துக் கொண்டேன்; இதை வெளியில் உள்ளவர் யாரேனும் கேட்டிருந்தால், நீதியில்லாதனவற்றையும், ஒழுங்கு முறையில்லாதனவற்றையும், நினைத்துப் பேசுகின்ற சதி செய்த குற்றத்திற்கு உள்ள தண்டனை பெறுவாய்; எனவே உன் நாக்கை இத்துடன் அடக்கிக் கொள்வாயாக' என்று எச்சரித்தாள்.

இராமனுக்கல்லாமல் பரதனுக்கு முடிபுனைதல் நீதியும் அன்று, நியாயமும் அன்று, நெறிப்பட வந்த வழக்கமும் அன்று என்பதாம். 'உன் நாவை அறுக்காததே நான் செய்த பிழை' என்பார் கவிஞர் வாலி.

68. மந்தரை மீண்டும் வலியுறுத்துதல் [9 பாடல்கள்]

அஞ்சி மந்தரை அகன்றிலள்; அம்மொழி கேட்டும்;
நஞ்சு தீர்க்கினும் தீர்கிலாது அது நலிந்தென்னத்
'தஞ்சமே! உனக்கு உறுபொருள் உணர்த்துகை தவிரேன்;
வஞ்சிபோலி!' என்று அடிமிசை வீழ்ந்து உரைவழங்கும். (1566)

(நலிந்து-துன்புற்று; தஞ்சம்-புகலிடம் / பற்றுக்கோடு; போலி-போன்றவளே! உறுதி-நற்பொருள்; வழங்குதல்-விரித்துச் சொல்லுதல்)

கைகேயியின் இந்தக் கடுமையான சொற்களைக் கேட்டும் கூட மந்தரை அவளைவிட்டு அகலவில்லை. எதுபோல? ஒருவரைத் தீண்டிய விடம், மணி, மந்திரம், மருந்து முதலியவற்றைக் கொண்டு தீர்க்க எவ்வளவு முயன்றாலும் அது தீராது மேலும் வருத்திக் கொண்டே இருப்பது போலக் கூனியாகிய நஞ்சு, கைகேயியின் எத்தகைய மந்திரச் சொற்களுக்கும் பணியாது மீண்டும் கூறத் தொடங்கினாள். 'இந்த அயோத்தி நகரில் எனக்கு உன்னை விட்டால் வேறு புகலிடம் ஏது? வஞ்சிக் கொடி போன்று அழகானவளே! நீ என்னை எவ்வளவு திட்டினாலும், உனக்கு நன்மை பயக்கும் சொற்களை நீ உணரும் வரையில் சொல்லிக் கொண்டுதானிருப்பேன். நான் போக மாட்டேன்' என்று கூறி அவளது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி மேலும் விரிவாக உரைக்க முற்பட்டாள்.

Koviloor Digital Library

முன்பு 'நீ என் வெகுகாலத்தோழி என்பதனால் உன் நாவை அறுக்காது பொறுத்துக் கொண்டிருக்கின்றேன்' என்று கைகேயி கூறியதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இப்பொழுது அவள் 'தஞ்சமே' எனக் கைகேயியை அழைக்கிறாள். எப்படியும் தன் மனக்கருத்தை அவள் உள்ளத்தில் ஏற்றி விடவேண்டும் என்ற பிடிவாதத்தால், கைகேயியின் அழகைப் புகழ்கிற நோக்கோடு, 'வஞ்சி போலி' என்கிறாள். அரசர்களுக்குச் சூழ்ச்சித் துணையாயிருக்கும் அமைச்சர்கள், தன் உயிர்க்குக் கேடு வரும் எனினும் அதைக் கருதாது, அரசனுடைய கோபத்தையும் பொறுத்துக்கொண்டு, அவர்க்கு ஆலோசனைகள் கூறுவது போல, இங்கும் கைகேயியாகிய அரசிக்கு, மந்தரையாகிய அமைச்சன் தன் உயிர்க்கு இறுதிவரும் என்று உணர்ந்தும், தன் கடமையினின்று தவறாது அவளுக்கு உறுபொருள் உணர்த்துகிறாள் என்பதாம். பாதங்களில் வீழ்ந்து வணங்குவது, ஏதோ ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ள விரும்புபவர்கள் செய்யும் போலி ஆசாரம் எனக்கொள்ளத்தகும். மந்தரை கைகேயிக்கு வெகுநாள் தோழி என்பதைக் குறிக்கும் 'வெள்ளாட்டி' என்ற சொல் சில சுவடிகளில் காணப்படுகின்றன.

69. மூத்தவர்க்கு உரித்து அரசு எனும் முறைமையின், உலகம்
காத்த மன்னனில் இளையன் அன்றோ கடல் வண்ணன்?
ஏத்தும் நீள்முடி புனைவதற்கு இசைந்தனன் என்றால்
மீத்தரும் செல்வம் பரதனை விலக்கும்ஆறு எவனோ? (1567)

(ஏத்தும்-போற்றுதற்குரிய; மீத்தரும்-மேன்மை பொருந்திய; ஆறு-காரணம் / வகை; எவனோ-எதனாலோ? / யாதோ?; நீள் முடி-உயர்ந்த மகுடம்)

ஒரு குலத்தில் மூத்த வயதுடையவர்க்கே அரசுரிமை என்னும் முறைப்படி பார்த்தால், இதுகாறும் இவ்வுலகைக் காத்து வந்த தசரத மன்னனைக்காட்டிலும், கடல்போன்ற நீலநிறமுடையவனாகிய இராமன் இளையவன் தானே? அப்படி இருக்கும் போது, எல்லோராலும் போற்றப்படுகின்ற உயர்ந்த அரச மகுடத்தை அவனுக்கு அணிவிப்பதற்குத் தசரதன் உடன்பட்டான் என்றால், மேன்மை பொருந்திய அந்த அரசச் செல்வம் அடைவதற்குப் பரதனை மட்டும் விலக்கியதற்கு என்ன காரணம்? இதனை நீ சிந்தித்துப்பார்' என்றாள் கூனி.

மந்தரை சொலல் வல்லள் என்பது நன்கு புரிகிறது, கைகேயி முன்பு கூறினாள் மயிற் குலமுறை என்று. மூத்த பிள்ளைக்குத்தான் அரசுரிமை அந்த வரன்முறையினின்றும் தசரதன் தவறமாட்டான் என்றாளே? அதில் மூத்த பிள்ளை என்பதை மூத்த வயதுடையவன் என்ற பொருளில் கூறிக் கைகேயியைக் குழப்ப முயல்கின்றாள் கூனி. மூத்தவன் என்றால், இப்பொழுது இருக்கும் தசரதன், இராமன், பரதன் ஆகிய மூவரில் தசரதன் தானே, தான் உள்ள அளவும் அரசாட்சி செய்ய வேண்டும். தான் இருக்கும் போதே அவன் இராமனுக்கு முடிசூட்ட இசைந்தனன் என்றால், இராமன்

Koviloor Digital Library

இருக்கும் போதே ஏன் பரதனுக்கு முடிசூட்டக் கூடாது என்பது மந்தரையின் வாதம்.

70. அறம் நிரம்பிய அருள்உடை அருந்தவர்க்கேனும்
பெறலரும் திருப் பெற்றபின் சிந்தனைபிறிது ஆம்
மறம் நினைந்து உமை வலிகிலர் ஆயினும், மனத்தால்
இறல் உறும்படி இயற்றுவர் இடையறா இன்னல். (1568)

(சிந்தனை-மன நிலை; பிறிது-வேறுபடுதல்; வலிதல்-துன்புறுத்துதல்; இறல்-அழிதல்; மறம்-தீமை)

'தருமம் நிரம்பப் பெற்ற, கருணையுள்ளம் கொண்ட, அரிய தவத்தை மேற்கொண்ட துறவிகள், முனிவர்களானாலும், பெறுவதற்கரிய பொருட் செல்வத்தைப் பெற்று விட்டார்கள் என்றால் அவர்களது மனநிலை வேறுபட்டு விடும் என்பது உறுதி; அவ்வாறிருக்க கோசலையும், இராமனும் உனக்குத் தீங்கு செய்ய வேண்டும் என்று எண்ணி உங்களை வருத்தாது போனாலும், உங்கள் உள்ளத்தாலேயே நீங்கள் நொந்து அழிந்து போகும்படி தொடர்ந்து இடைவிடாமல் துன்பங்களைத் தந்து கொண்டே இருப்பார்கள்' என்கிறாள் மந்தரை.

இல்லறத்திற்கு அன்பு சிறந்தது போலத் துறவறத்திற்கு அருள் சிறந்தது. துறவறத்திலுள்ள முனிவர்களின் மனநிலையே திருப்பெற்ற பின் வேறுபடும் என்றால், இல்லறத்தில் ஈடுபட்டிருக்கின்ற இராம, கோசலையின் மனம் திரிவதற்குக் கேட்கவா வேண்டும்? என்கிறாள் கூனி. இறல் என்பது தாமே அழிந்து போவதைக் குறிக்கும் சொல். பிறர் சொல்லாதவாறு, அவர்களின் செயல்களால் தாமே நொந்து போய், துன்பப்பட்டு, இறுதியில் தாமே அழிந்து போதலைக் குறிப்பதாம். முன்பாட்டில் பரதன் அரசுரிமை பெறத்தக்கவன் என்று கூறிய மந்தரை, இப்பொழுது, இராமன் அரசுக்கட்டில் ஏறினால் என்னென்ன துன்பங்கள் இவளுக்கு நிகழும் என்பதை அடுக்கடுக்காகக் குறிப்பால் உணர்த்துகிறாள். பெரும் செல்வம் பெற்றால் எத்தகையவரும் மனந்திரிந்து விடுவர். அருள் குணமுடையோரையும் கல்நெஞ்சராக்கும் தன்மை உடையது செல்வம். 'செல்வம் வந்துற்ற காலை, தெய்வமும் சிறிது பேணார் சொல்வன அறிந்து சொல்லார்; சுற்றமும் துணையும் நோக்கார்; மண்ணின்மேல் வாழும் மாந்தர்' என்பது வில்லிபாரதம். 'பெருத்திரும் செல்வமாம் பிணி வந்துற்றிடின், உருத்தெரியாமலே ஒளி மழுங்கிடும்' என்பது தனிப்பாடல் ஒன்று. 'செல்வம் வந்துற்ற ஞான்றே, வாயுளார் மூகர் ஆவர்; செவியுளாரும் பயில்தரு செவிடர் ஆவர் 'கண்ணுளாரும் குருடராய் முடிவரன்றே' என்பது குசேலோபாக்கியானம்.

71. புரியும் தன்மகன் அரசுஎனில், பூதலம் எல்லாம்
விரியும் சிந்தனைக் கோசலைக்கு உடைமையாம் என்றால்,
பரியும் நின்குலப் புதல்வற்கும், உனக்கும், இப்பார்மேல்
உரியதுஎன் அவள்உதவிய ஒருபொருள் அல்லால்?' (1569)

Koviloor Digital Library

(சிந்தனை-முன்யோசனை; பரியும்-இரங்கத்தக்க; குல-சிறந்த)

தன் மகனான இராமன் முடிசூட்டிக்கொண்டு அரசு புரிவான் என்றால், இந்நிலவுலக மெல்லாம் முன்யோசனையுள்ள கோசலையின் உரிமைக்கு உடையதாகும். அவ்வாறானால் இரங்கத்தக்க உன்னுடைய சிறந்த புதல்வனான பரதனுக்கும், உனக்கும் அவளாகப் பார்த்து, உங்கள் மீது இரக்கப்பட்டு, ஏதேனும் ஒரு சிறு பொருளைக் கொடுத்தாலன்றி இவ்வுலகத்தில் உங்களுக்கென்றே சொந்தமானது என்று சொல்லிக் கொள்ள என்ன இருக்கும்? என்கிறாள் கூனி.

ஒரு பெண்ணின் மனம் திரிதற்கு உரிய வகையை நாடி, அதற்கு ஏற்றவாறு உரைக்கின்றாள் கூனி. விரிவான முன்யோசனை இருந்தமையால், தசரதனிடம் சொல்லித் தன்மகன் இராமனுக்கு அரசு புரியும் செல்வத்தைக் கோசலை வாங்கிக் கொடுத்துவிட்டாள்; உனக்கு முன்யோசனையுமில்லை; தசரதனைக் கேட்கப் போவதுமில்லை; பரதன் நாடளப் போவதுமில்லை; என்று குறிப்பால் இடித்துணர்த்துகிறாள். எனவே கோசலையை விரியும் சிந்தனைச் கோசலை என்று அவளை ஏத்துகிறாள். மாற்றாளை ஏற்றினால் மங்கையர் மனநிலை திரியத்தானே செய்யும்? ஒரு பொருள் என்பது சிறுமையை இகழ்ச்சியால் உணர்த்திற்று.

72. ‘தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்து உனைஇரந்தவர்க்கு, இருநிதி, அவளை
வேண்டி ஈதியோ? வெள்குதியோ? விம்மல் நோயால்
மாண்டு போதியோ? மறுத்தியோ? எங்ஙனம் வாழ்தி?’ (1570)

பிறரைநோக்கி யாசிக்கத்தூண்டும் பசித்துன்பமும், உயிர்வாழ்வதற்கே எந்தப் பொருளும் கையில் இல்லாத வறுமைத் துன்பமும், இடைவிடாது தம்மைத் தொடர்ந்து வர, அதனால் உண்டாகிற மனக் கலக்கத்தால் இங்கு வந்து உன்னிடம் யாசிப்பவர்களுக்கு நீ என்ன செய்வாய்? பெரும் பொருளைக் கோசலையிடம் இருந்து கேட்டுப் பெற்று இவர்களின் துயரைத் துடைப்பாயா? அவளிடம் போய்க் கேட்க வேண்டிய நிலை வந்துவிட்டதே என்று நாணம் கொள்வாயா? அதனால் ஏற்படுகின்ற துன்பத்தால் மனம் நொந்து தேம்பி அழுது உயிரை விட்டுவிடுவாயா? அல்லது உன்னிடம் இரந்தவர்களிடம் ‘ஒன்றும் இல்லை நீபோ’ என்று சொல்லி மறுத்து விடுவாயா? ‘இனிமேல் எவ்வாறு வாழப்போகிறாய்?’ என்று வருங்கால இன்னல்களைப் பற்றிக் கூறி எச்சரிக்கிறாள் மந்தரை.

இன்னல் என்பது பசித்துன்பத்தைக் குறிக்கும், பசித்துன்பம் ஒன்றுதான் பிறரிடம் சென்று கைநீட்டத் தூண்டும். எனவே அது தூண்டும் இன்னல், வறுமை என்பது நுகர்பொருள் இன்மை. வீட்டில் சமைப்பதற்கே ஒன்றும் இல்லாத நிலைமை. இவையிரண்டும் தொடர்ந்தே தான் வரும். ஒன்றை விட்டு மற்றொன்று பிரியாது. பசித் துன்பமும், வறுமையும் இரட்டைப் பிறவிகள். அவ்வாறு வந்து இரந்தவர்களுக்கு முன் கைகேயி என்னென்ன

Koviloor Digital Library

நிலையில் இருந்து சிந்திப்பாள் என்பதை முன் கூட்டியே சொல்லிவிடுகிறாள் மந்தரை. உன்னிடம் ஒன்றும் இருக்கப் போவதில்லை. காரணம் அரசாட்சி அவர்களுடையது. பிறருக்குக் கொடுக்க வேண்டுமானால் கூட அவர்கள் கையைத்தான் நீ எதிர்பார்க்க வேண்டும். அவ்வாறு செய்வாயா? அப்படிச் செய்ய உன் மனம் இடம் கொடுக்குமா? அப்படிச் செய்யவில்லை என்றால் உயிரை விட்டுவிடுவாயா? இல்லை, இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்று சொல்லித் திருப்பி அனுப்பி விடுவாயா? என்னதான் செய்யப் போகிறாய்? எப்படித்தான் வாழப் போகிறாய் என்று மடக்குகிறாள் மந்தரை. 'சாதலின் இன்னாதது இல்லை, இனிது அதூஉம் ஈதல் இயையாக்கடை' என்பது குறள் (230). இதில் கைகேயிக்கு வரப்போகும் கீழ்மை நிலையை மிகைப்படப் பேசுகிறாள் மந்தரை. கைகேயியின் மனத்தைக் கலங்கச் செய்கின்ற அற்புதமான சொற்றொடர்கள் அடுக்கப்பட்டிருக்கின்றன.

73. 'சிந்தை, செய்கையில் திகைத்தனை; இனிச் சிலநாளில்
தம்தம் இன்மையும் எளிமையும் நிற்கொண்டு தவிர்க்க,
உந்தை, உன்னை, உன்கிளைஞர், மற்றுஉன் குலத்துள்ளோர்
வந்து காண்பதுஉன் மாற்றவள் செல்வமோ? மதியாய்!' (1571)

(சிந்தை-நினைவு; இன்மை-வறுமை; எளிமை-தாழ்வு; தவிர்க்க-நீக்கிக்கொள்ள; கிளைஞர்-உறவினர்; மாற்றவள்-சக்களத்தி; மதித்தல்-நினைத்தல்)

'நீ நினைவும் செய்கையும் திகைத்துப் போயிருக்கிறாய்; இன்னும் சில நாட்களில்-இராமன் அரசுக் கட்டில் ஏறிய பிறகு-உன்னுடைய தந்தை, உன்தாய், உன்னுடைய சுற்றத்தினர், மற்றும் உன் ஊரில் உள்ள உன் குலத்தில் பிறந்தவர்கள் இவர்களில் யாரேனும் தமக்கு வறுமை வந்துற்றபோது, அதனால் தாழ்ச்சியடைந்து, நம் ஊர்ப் பெண் தான் பேரரசியாக அயோத்தியில் இருக்கிறாளே அவளிடம் சென்று நம் வறுமையைப் போக்கிக் கொள்ளலாம் என்று கருதி, இங்கு வந்து பார்த்தால்-உன்னை வேண்டிக் கேட்டுக் கொண்டால்-உன்னால் உன்னுடைய பொருட்கள் எதையாவது அவர்களுக்குக் கொடுக்க முடியுமா? நீ உன் சக்களத்தியான கோசலையின் கையைத் தானே எதிர்பார்க்க வேண்டும்? அந்த அவல நிலையைத் தானே அவர்களும் பார்க்க நேரிடும்? நன்றாக ஆலோசித்துப்பார்' என்றாள்.

தன் வீட்டுத் தாழ்வைப் பொறுத்தாலும், தாய் வீட்டாரின் தாழ்வைப் பொறுத்துக் கொள்ளாது மகளிர் மனம். தாய் வீட்டாரிடத்துத் தனிப் பரிவுடைமை பெண்டிர் இயல்பு. இவ்வாறு கூறி அவளை மேலும் திகைப்படையச் செய்து அவள் மனத்தைத் திசைதிருப்புவதற்கு மீண்டும் முயலுகிறாள் மந்தரை.

Koviloor Digital Library

74. 'காதல்உன் பெருங்கணவனை அஞ்சி, அக்கனிவாய்ச்
சீதைதந்தை, உன்தாதையைத் தெறுகிலன்; இராமன்
மாதுலன் அவன்; உந்தைக்குவாழ்வு இனி உண்டோ?
பேதை, உன் துணை யாருளர் பழிபடப் பிறந்தார்?' (1572)

(கனி-கொவ்வைக்கனி; தெறுதல்-அழித்தல்; மாதுலன்-மாமன்; பேதை-அறிவிலி; உன்துணை-உன்னைப்போல)

உனது பேரன்பிற்குரிய உன் கணவன் தசரதனுக்குப் பயந்து, இதுவரை, அந்தக் கொவ்வைக்கனி போன்ற வாயினையுடைய சீதாதேவியின் தந்தையாகிய சனக மன்னன், உன்னுடைய தந்தையாகிய கேகய அரசன் மீது போர்தொடுத்து அழிக்காமல் இருக்கிறான். இராமன் அரசுக் கட்டிலில் ஏறிவிட்டால் அவனது மாமனாகிய சனக மன்னன் சொன்னபடிதான் நடப்பான். எனவே உன் தந்தை மீது சனகன் போர்தொடுக்கக் கூடும். அப்போது உன் தந்தை இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெரும் அரச போக வாழ்வை இழக்க வேண்டிவரும். அறிவற்றவளே! நீ துன்பப் படுவதுமட்டுமல்லாமல், உன்னைச் சார்ந்தார்க்கும் துன்பத்தைக் கொடுத்து பழிபெற்றுக் கொள்வதற்கென்றே பிறந்தவர்கள் உன்னைத் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்கள்' என்றாள்.

சீதை தந்தை என்று முன்னர்க் கூறிப் பின்னர் மறுபடியும் இராமன் மாதுலன் அவன் என்று கூறியது, இராமன் அரசுக் கட்டில் ஏறிவிட்டால் அவன் மாமனாகிய சனக மன்னன் சொற்படிதான் கேட்டு நடப்பான் என்பதை உட்கொண்டு கூறியதாகும். சனகனுக்கும் கேகயனுக்கும் முன்பே இயற்கையிலேயே பகை இருக்கிறது என்பது இதனால் விளங்குகின்றது. அதை இப்பொழுது தூண்டிவிடுகிறாள். மதியாய், பேதை என்று கூனியே வசைமொழிகளால் அடுக்குவதால், கூனி கைகேயியின் மனத்தை எவ்வளவு மாற்றியிருக்கிறாள் என்பதைத் தெளியலாம்.

75. மற்றும் நுந்தைக்கு வான்பகை பெரிதுஉள; மாற்றார்
செற்றபோது இவர்சென்று உதவார்எனில், செருவில்
கொற்றம் என்பது ஒன்று எவ்வழி உண்டு? அது கூறாய்;
சுற்றமும் கெடச் சுடுதுயர்க்கடல் விழத் துணிந்தாய். (1573)

(வான்-சிறந்த; செறுதல்-வெகுண்டுதாக்குதல்; கொற்றம்-வெற்றி; மற்று-பிறிது / வேறு; செரு-போர்)

'சனகனைத் தவிர, உன் தந்தைக்கு வேறு மற்ற சிறந்த பகைவர்களும் உள்ளனர்; அவர்கள் உன் தந்தை மீது போர் தொடுத்து வரும் போது, இக்கோசல நாட்டு மன்னர்கள் சென்று உன் தந்தைக்கு உதவாவிட்டால், போரில் உன் தந்தைக்கு வெற்றி என்ற ஒரு சிறப்பு எவ்வாறு உண்டாகும்? நீயே கூறுவாயாக! நீ கெடுவதோடு மட்டும் அல்ல, உன் சுற்றத்தாரும்

Koviloor Digital Library

கெட்டழிந்து போகும்படி, பெரும் துயர்க் கடலில் முழுகத் துணிந்து விட்டாய் போலும்!' என்றாள்.

பரதன் அரசனாக முடிசூட்டிக் கொண்டால், உன் தந்தைக்கு உதவ வருவான். இராமன் மன்னனானால் உன் தந்தைக்கு அவன் உதவுவான் என்பது என்னநிச்சயம்? அறியாதுதுன்பத்தில் வீழ்வது மக்களுக்கு இயல்பு. ஆனால் நீ அறிந்தே கடுந்துயர்க்கடல் விழத்துணிந்தாய் என்கிறாள். தன் சுற்றத்தையும் கெடுத்துத் தானும் கெட அறிவுடையோர் எவரும் விரும்பார். நீ அக்கேட்டுக்குத் துணிந்ததனால் அறிவிலி ஆகிறாய். எனவே உன் பெற்றோரைக் கருதியாவது, நீ பரதனைக் கட்டாயமாக அரசனாக்க முயற்சி செய்ய வேண்டும் என்று தூண்டுகிறாள்.

76. 'கெடுத்து ஒழிந்தனை உனக்கு அரும்புதல்வனை; கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒருமகற்கு எனவே
கொடுத்த பேரரசு அவன் குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்ததம்பிக்கும் ஆம்; பிறர்க்கு ஆகுமோ?' என்றாள். (1574)

(கிளர்-மிக்க; பாரகம்-பூமி; குல-சிறந்த; கோ மைந்தர்-அரச குமாரர்கள்)

உன்னுடைய அருமையான புதல்வனாகிய பரதனுக்கு அரசு கிடைக்காத வண்ணம் நீதான் அவனைக் கெடுத்து அவன் எதிர்காலத்தை ஒழித்து விட்டாய்; பொங்குகின்ற நீரை உடைய கடலை ஆடையாக உடுத்திக் கொண்டுள்ள இப்பூவுலகம் முழுவதையும் தன்னாட்சிக்குக் கீழே உடையவனாகிய தசரதன், தனது ஒப்பற்ற மகனாகிய இராமனுக்கு என்றே கொடுத்துவிட்ட இந்தப் பெரிய அரச பாரம், இனி அவனுக்குப்பின் அவனுடைய வம்சத்தில் உதிக்கின்ற சிறந்த அரச குமரர்களுக்கும் அவனுடன் இணைபிரியாது உடன் இருந்து அவனுக்குத் தொண்டு புரிந்துவரும் அவன் தம்பி இலக்குவனுக்கும் தான் போய்ச் சேரும். எக்காலத்தும் உன் புதல்வன் பரதனுக்கோ, அவனைச் சார்ந்த மற்றவர்க்கோ போய்ச் சேராது.

நீ இப்பொழுது பரதனை மன்னனாக்க முயற்சிக்காவிட்டால், பின் எப்போதும் பரதன் மன்னனாக ஆவதற்கு வாய்ப்பே இல்லை என்று இறுதியாக எச்சரிக்கிறாள். இவை யெல்லாவற்றையும் கூறி முடித்த கூனி, 'உன்னை ஈன்றவள் உனக்கு அடைக்கலம் என்றுரைத்த முன்னை வாசகத்தாலும், என் யாக்கை போய் முடிந்த பின்னே, யாவரும் பழி படப்பேசுவர் என்றும், நின்னை வேண்டியும் ஈது உரைத்தேன்' என்று கூறி முடித்து நிற்கிறாள்.

77. கவிக்கூற்று

தீயமந்தரை இவ்வுரை செப்பலும், தேவி
தூய சிந்தையும் திரிந்தது; சூழ்ச்சியின் இமையோர்

Koviloor Digital Library

மாயையும், அவர்பெற்ற நல்வரம் உண்மையாலும்,
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும். (1575)

(தீய-கொடிய; சூழ்ச்சி-ஆராய்ச்சி / வஞ்சனையான உபாயம்; இமையோர்-தேவர்கள்; அந்தணர்-முனிவர்கள்; திரிந்தது-வேறுபட்டது / மாறியது; ஆய-ஆக்கமுடையோராகிய)

கொடிய மந்தரை இவ்வளவு நீண்ட படிப்படியான காரணங்களடங்கிய உரையினைக் கூறியதும், சூழ்ச்சித் திறம் படைத்த தேவர்களின் மாயையாலும், அவர்கள் அரக்கர்களை அழிப்பதற்காகத் திருமாலை வேண்டிப் பெற்ற வரம் ஒன்று இருப்பதாலும், நல்ல ஆக்கமுடைய வேதியர் முனிவர்கள் இயற்றிய அருமையான தவத்தின் பயனாலும், கைகேயியின் தூய்மையான நல்ல மனம் கூட மாறுபட ஆரம்பித்தது.

இது கவிக்கூற்று, தூய சிந்தை கைகேயியின் மனம் மாறுபடக் கூனியின் கொடிய உரைகள் மட்டுமன்று. வேறு மூன்று காரணங்களும் உண்டு. ஒன்று தேவர்களின் மாயை. அவர்கள் மாயையால் தான் மந்தரை பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டாள் என்பது ஒரு குறிப்பு. இரண்டு அவர்கள் முன்பே திருமாலிடம் வேண்டிப் பெற்ற வரம். மூன்று தண்டக வனத்து முனிவர்கள் இயற்றிய கடுந்தவப்பயன். தேவர்கள் மாயையினால் கைகேயியின் மனத்தை மாற்றினார்கள் என்பதும் ஒன்று.

78. இதுவும் கவிக்கூற்று

அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க, நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்;
இரக்கம் இன்மையன்றோ, இன்று இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றனவே? (1576)

(அல்லவர்-மற்றவர் (தேவர்களும், முனிவர்களும்); துரக்க-துரத்த / தூண்டுதலால் / ஏவுதலால்; மட-இளைய; துறந்தனள்-நீங்கினாள்; பரக்கும்-பரவிய; தொல்-பழைய)

இராவணன் முதலிய அரக்கர்கள் செய்த தீவினையும், அரக்கர்கள் அல்லாத நல்லவர்களான முனிவர்கள், வேதியர், அந்தணர் முதலியோர் இயற்றிய தரும நல்வினைகளின் தூண்டுதலினால் தான், இயற்கையிலேயே நல்ல அருட்குணம் அமைந்த, தூய சொற்கள் பேசுகின்ற, இளமையான மான்போன்ற கைகேயி, அவ்வருட் குணத்தைத் துறந்தவளானாள்; இந்த இவளது இரக்கம் இல்லாத தன்மை தானே, இன்று இவ்வுலகங்கள் எல்லாம் இராமபிரானது பரவிய, பழமையான பெருமை சான்ற புகழ் என்னும் அமுதத்தைப் பருகிக்களித்துக் கொண்டிருக்கின்றன?

இது கவிக்கூற்று. கைகேயி தன் இரக்கம் என்ற அருள் தன்மையைத் துறக்காவிட்டால் மனம் திரிந்திராவிட்டால், இன்று இராமபிரானின் புகழினை நாம் பருகிக் கொண்டிருக்க முடியுமா? அரக்கர்கள் செய்த

Koviloor Digital Library

தீவினைப் பயன், நல்லவர்கள் செய்த நல்வினைப் பயன் இவை இரண்டுமே கைகேயி நல்லருள் துறத்தற்குக் காரணமாயின. எனவே கையேயிபால் தவறில்லை என்பதை நிறுவுகிறான் கவிஞன். இதே இரக்கமின்மையாகிய தீயகுணம், ஒரு நன்மையையும் தந்தது என்று கைகேயியைப் புகழ்வதையும் புரிந்துகொள்ள வேண்டும். கைகேயியை மடமான் என்றது, இளமையாகத் துள்ளிக் குதிக்கும் மான் தனக்குப் பின்னால் விளையப் போகும் தீங்கினை உணராது. அதுபோலக் கைகேயியும் இவளுடைய இந்தச்செய்கையால், பின்னால் தன்கணவனை இழக்கப் போவதையும், பரதனால் வெறுக்கப் படுவதையும் அறியாதவளாய் இருந்தாள் என்பதைக் குறித்தது. முன்னர் தூய சிந்தை என்றதும், இங்கே தூயமொழி என்றதும் அவள் குற்றமற்றவள் என்பதை நிலைநிறுத்த உதவும் சொற்றொடர்கள். அவளுடைய இரக்கமின்மை என்ற தீயகுணம், பின்னர் பெருநன்மைக்கும் காரணமாயிற்று என்று கவிஞன் கூறுவதும் சிந்தனைக்குரியது.

79. 'கைகேயி, பரதன் முடிசூட என்னவழி?' என்று வினவுதல்

அனைய தன்மையள் ஆகிய கேகயன் அன்னம்
வினை நிரம்பிய கூனியை விரும்பினள் நோக்கி,
'எனை உவந்தனை; இனியை என் மகனுக்கும்; அனையான்
புனையும் நீள்முடி பெறும்படி புகலுதி!' என்றாள். (1577)

(வினை-வஞ்சகம்; படி-வழி)

அத்தகைய இரக்கமற்ற தன்மையை அடைந்த கேகய மன்னனின் மகளாகிய, அன்னம் போன்ற கைகேயி, உடம்பு முழுவதும் வஞ்சனையே நிரம்பிய கூனியை மிக்க விருப்பத்துடன் அன்புடன் பார்த்து, 'என் மீது நீ அளவு கடந்த பிரியம் கொண்டுள்ளாய், அதைக் காட்டிலும் என் மகன் பரதன் மீது மிகுந்த பாசம் கொண்டு இனியவளாய் இருக்கின்றாய்; என்மகன் பரதன், அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த மணி மகுடத்தைப் பெறும் வழி என்ன வென்பதைச் சொல்லுவாயாக!' என்று கூனியிடமே கேட்டாள்.

எவ்வளவு வியப்பு! முன்பு கூனியைக் காண்பதற்கே வெறுத்து சினந்து சிவப்புற நோக்கிய கைகேயி, இப்பொழுது கூனியை மிக விரும்பிப் பாசத்துடன் பார்க்கிறாள். முன்பு எனக்கு நல்லையும் அல்லை, என் மகன் பரதன்தனக்கு நல்லையும் அல்லை என்று கூறியவள் இப்பொழுது எனக்கு மிக உவப்பானவள் நீ, என்னைக் காட்டிலும் என் மகன் மீது மிகுந்த பாசம் கொண்டு அவனுக்கு இனியன நினைக்கிறாய் என்கிறாள். முன்பு வரன்முறை திறம்புதல் வழக்கோ? மூத்தவன் இருக்க இளையவனான பரதனுக்கு முடி சூட்ட இயலுமோ என்று கேட்டவள், இப்பொழுது இளையவனான பரதனுக்கு முடிசூட்டுவதற்குரிய வழியாது என்ற சொல் என்று அவளிடமே கேட்கிறாள். முன்பு இராமன் தான் தன் மகன் என்று கூறியவள் இப்பொழுது பரதன் தான் என் மகன் என்று கூறுகிறாள். என்ன

Koviloor Digital Library

ஆயிற்று? மனம் எவ்வாறு திரிந்தது. கூனியின் சொல்லாற்றல். கூனியின் விடாமுயற்சி இவை இரண்டும் தான் காரணம். எடுத்த காரியத்தை முடிப்பதில் தேர்ந்தவள் கூனி. தன் நோக்கம் நிறைவேறக் கைகேயியையும் பரதனையும் கருவியாகப் பயன் படுத்திக்கொண்டாள். கைகேயியைத் தன் முழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டாள் கூனி.

80. கூனி வழி சொல்லுதல்

மாழை உண்கணி உரைசெயக் கேட்டமந்தரை, 'என்
தோழி வல்லள்; என்துணைவல்லள்; என்று அடிதொழுதாள்;
தாழும் மன்நிலை; என்உரை தலைநிற்பின், உலகம்
ஏழும் ஏழும்உன் ஒருமகற்கு ஆக்குவென்' என்றாள். (1578)

(மாழை-மாவடு; உண்கண்-மையெழுதப் பெற்ற கண்கள்; மன்-மனம்; தாழும்-தோல்வியுறும் / முடிவுபெறாததாதல்; வல்லள்- அறிவாற்ற லுடையவள்; தலை நிற்றல்-முன் நின்று செய்தல்)

தோழி இங்கு தலைவியைக் குறிக்கும். தாதிக்குத் தலைவி தாதியாகிப் போனாள். மாவடு பிளந்தாற் போன்றதும், மைதீட்டப் பெற்றதுமான, ஒளி பொருந்திய கண்களையுடைய கைகேயி இவ்வாறு தன்னைக் கேட்டதும், மந்தரை, 'என்னுடைய தலைவி மிகவும் அறிவாற்றல் உடையவள்; எனக்குத் துணையானவள் வல்லவளும் கூட; என்று கூறிக் கைகேயியின் திருவடிகளைத் தொழுது வணங்கினாள். பின்னர், 'நான் கூறியபடி கேட்டால்-அதன்படி செய்தால், தசரதனின் மன நிலைமாறுபடும்; இந்த ஏழும் ஏழும் பதினான்கு உலகங்களையும் உன்னுடைய ஒப்பற்ற மகனான பரதனே அரசாட்சி செய்யும் வண்ணம் ஆக்கிக் காட்டுவேன்' என்றாள்.

'மாவடு வகிரன்ன கண்ணி' என்பது திருவாசகம்; இராமனுக்கு முடிசூட்டுதல் என்ற தசரதனது விருப்பம் நிறைவேறாமல் போகும். அதனால் மன்னன் மனநிலை தாழ்ந்து போகும் என்பதாம். இவ்வளவு பாடல்களிலும் அறிவிலி, பேதை, மதியாய் என்று ஏசிய கூனி இப்பொழுது வல்லள் என்று பாராட்டுகிறாள். தன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு அவள் சொல்லின் தொனி மாறுகிறது. இப்பொழுது இவள் கை ஓங்கி 'நான் சொல்லுகிறபடி நீ கேட்க வேண்டும்' என்று கைகேயியைத் தன் முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஆட்டுவிக்க ஆரம்பிக்கிறாள். மனம் மாறாத பொழுது, கெஞ்சினாள். இப்பொழுது கைகேயி தன் வசமானதும் விஞ்சுகிறாள். இது சூழ்ச்சிக்காரர்களின் இயல்பு.

81. 'நாடி ஒன்றுஉனக்கு உரைசெய்வென், நளிர்மணி நகையாய்!
தோடுஇவர்ந்த தார்ச் சம்பரன் தொலைவுற்ற வேலை,
ஆடல்வென்றியான் அருளிய வரம்அவை இரண்டும்
கோடி' என்றனள், உள்ளமும் கோடிய கொடியாள். (1579)

Koviloor Digital Library

(நளிர்-குளிர்ந்த; மணி-முத்து; நகை-பற்கள்; நாடுதல்-ஆராய்ந்து பார்த்தல்; தோடு-இதழ் / மலர்கள்; இவர்ந்த-பொருந்திய / நெருங்கிய; தார்-மாலை; ஆடல்-போர்; கோடி-கொள்க; கோடுதல்-கோணியிருத்தல்; தொலைவுறுதல்-அழிவுறுதல்)

உடலைப் போலவே உள்ளமும் கூனிக் கோணிப்போன கொடியவளான மந்தரை, கைகேயியை நோக்கி, 'குளிர்ச்சி பொருந்திய முத்துக்களைப் போன்ற பற்களை உடையவளே! நன்கு ஆராய்ந்து ஒரு வழி உனக்குக் கூறுகிறேன் கேள். இதழ்கள் விரிந்த மலர் மாலையை அணிந்த சம்பரன் என்னும் அசுரன் அழியும்போது போரில் வெற்றியையே உடைய தசரதன், மனம் உவந்து உனக்கு அளித்த இரண்டு வரங்களை இப்பொழுது கேட்டுப் பெற்றுக் கொள்வாயாக!' என்று கூறினாள்.

நளிர் மணி நகையாய் என்றதனால், கைகேயி இப்பொழுது மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறாள் என்பது பெறப்படும். சம்பரனுடன் போர் செய்த போது, தசரதன் வெற்றிக்குக் கைகேயியும் தேர்ச்சாரதியாக இருந்து உதவினாள் என்றும், அப்பொழுது தசரதன் அவளுக்கு இரண்டு வரங்கள் தருவதாகக் கூறியதும், அதனை அப்பொழுது வேண்டாம் என்று மறுத்த கைகேயி பின்னர் தேவைப்படும்பொழுது பெற்றுக்கொள்கிறேன் என்று கூறியதும் முன்னர்க் கண்டோம். அதனை நினைவுறுத்தி மந்தரை அவன் உனக்கு மனமுவந்து அளித்ததனால் அதை இப்பொழுது மறுக்க முடியாது. எனவே இப்பொழுது வேண்டிக்கேட்டுப் பெற்றுக்கொள்க என்று உபாயம் கூறுகிறாள் என்பதாம். உள்ளமும் என்ற சொல், உடல், சொல், செயல் ஆகிய அனைத்திலும் கோடியவள் என்பதைக் குறிக்கும். எனவே மீண்டும் ஒரு முறை கொடியாள் என்கிறான் கவிஞன். 'கோடிய மனத்தினால், வாக்கினால், செயலால், கொடிய ஐம்புலன்களால், அடியேன் தேடிய பாவமும் நரகமும் கொள்ளா, செய்தவம் புரியினும் தீரா' என்பார் பட்டினத்தார்.

82. இருவரத்தினில் ஒன்றினால் அரசுகொண்டு, இராமன்
பெருவனத்திடை ஏழ்இரு பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி ஒன்றினால்; செழுநிலம் எல்லாம்
ஒருவழிப்படும் உன்மகற்கு; உபாயம் ஈது' என்றாள். (1580)

(பருவங்கள்-ஆண்டுகள்; பெயர்ந்து-நீங்கி)

'அந்த இரண்டு வரங்களுள் ஒன்றினால் உன் மகன் பரதனுக்கு நாட்டின் அரசாட்சி உரிமையைப் பெற்றுக்கொண்டுவிடு; பின்னர், மற்றொரு வரத்தினால், இராமனைப் பெரும் காட்டிற்குப் பதினான்கு ஆண்டுகள் நகரைவிட்டு நீங்கிப்போய் அங்கே திரியும்படி செய்வாயாக; அப்படிச் செய்தால்தான், இந்த வளமுடைய உலகம் எல்லாம் உன் மகன் பரதன் ஆளுகைக்குள் ஒருங்கே வந்து சேரும், இதுதான் நான் உனக்குக் கூறும் வழி' என்றாள்.

Koviloor Digital Library

மந்தரைக்குப் பரதனுக்கு அரசுரிமை வாங்கிக் கொடுப்பதைக் காட்டிலும், இராமனை நாட்டைவிட்டுத் துரத்த வேண்டும் என்பதும், அவன் காட்டிற்குச் சென்று விடவேண்டும், நாட்டிலேயே இருக்கக் கூடாது என்பதும், அவன் மிக நீண்ட நாட்கள் நகருக்குள்ளேயே வரக்கூடாது என்பதும், அவன் காட்டில் அலைந்து திரிய வேண்டும் என்பதுமே அவளுக்கு முக்கியக் குறிக்கோளாய் இருந்தது என்பது அவளது கூற்றிலிருந்து புலப்படும். இராமன் நாட்டிற்குள் இருந்தால், மக்கள் அவனிடம் கொண்டிருக்கும் பேரன்பினால், பரதனுக்குக் கிடைக்க வேண்டிய மரியாதைகள் கிடைக்காமல் போகும் என்பதையும், பதினான்கு ஆண்டுகளில் மக்கள் இராமனை மறந்து, பரதனிடம் பழகி விடுவர்என்பதையும்பிறகுஆட்சிநிலைபெற்றுவிடும்என்பதையும்நன்கு ஆராய்ந்தே இவ்வழியைக் கூறியிருக்கிறாள் என்பதாம். மந்தரைக்கு இராமன்பால் உள்ள கோபமும் சீற்றமும் இச்செய்யுளில் நன்கு கூறப்பட்டிருக்கிறது. மூத்த மகனாகிய இராமன் காடு சென்றுவிட்டால் பரதனுக்கு அரசுரிமை தருவதில் எந்த இடையூறும் இருக்காது. முறையும் வழுவாது என்பதும் கூனியின் கோணல் புத்தியில் பட்டிருக்கும் எனவும் கொள்ளலாம். பாரதத்தில் குந்தியும் கர்ணனிடத்தில் இதேபோல் இரண்டு வரங்களையே பெற்றாள் என்பதும் கருதத்தகும்.

83. கைகேயியின் மகிழ்ச்சி

உரைத்த கூனியை உவந்தனள், உயிர் உறத்தழுவி,
நிரைத்த மாமணிஆரமும் நிதியமும் நீட்டி
இரைத்த வேலைசூழ் உலகம்என்ஒரு மகற்கு ஈந்தாய்!
தரைக்கு நாயகன் தாய்இனி நீ; எனத் தணியா. (1581)

(நிரைத்த-வரிசைபடக்கோத்த; நிதியம்-செல்வம்; இரைத்த-ஒலிக்கின்ற; தரை-பூமி; நீட்டி-கொடுத்து; தணியா-தணிந்து / மனம் மகிழ்ந்து / தாழ்ந்து)

அவ்வாறு உரைத்த மந்தரையைக் கைகேயி உயிர் இறுகத்தழுவி மகிழ்ந்தாள்; சிறந்த இரத்தினங்கள் வரிசையாகப் பதிக்கப் பெற்ற முத்துமாலைகளையும், பெருஞ்செல்வத்தையும் அவளுக்குத் தந்தாள்; 'ஒலிக்கின்ற கடல்கள் சூழ்ந்த இந்த உலகம் முழுவதையும் என் ஒரே ஒப்பற்ற மகன் பரதன் அரசாட்சி செய்யும் வண்ணம் வழி கூறி இவ்வுலகினை அவனுக்கு வாங்கித் தந்தாய் எனவே இப்பூமிக்கு நாயகனான பரதனுக்கு இன்றிலிருந்து நீ தான் தாய்" என்று தன்னைத் தாழ்த்தி அவளை உயர்த்திக் கூறினாள்.

உயிர் உறத்தழுவுதல் என்பது உயிரும் உயிரும் பொருந்துவது போல இறுகத்தழுவுதலாம். பரதன்என்ற மகனுக்குத்தான்தான்தாய்; இப்பூமியை ஆளப்போகின்ற பேரரசனுக்கு இனி நீதான் தாய் என்றாள். தணியா என்ற சொல் தாழ்ந்து என்ற பொருளில் வந்தது. தன்னைத் தாழ்த்திக் கொண்டு,

Koviloor Digital Library

மந்தரையை பரதனுக்குத் தாய் என்று அவளை உயர்த்திக் கூறினாள் என்க. பேரரசனுக்குத் தாயாகி என்னைக் காட்டிலும் மேன்மை அடைகிறாய் என்றாள் என்பதாம்.

84. கைகேயியின் உறுதிமொழி

'நன்றுசொல்லினை! நம்பியை நளிமுடி சூட்டல்
துன்று கானத்தில் இராமனைத் துரத்தல், இவ்விரண்டும்
அன்றுஅது ஆம்எனில், அரசன் முன்ஆருயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென் யான்; போதி நீ' என்றாள். (1582)

(நளி-பெருமைமிக்க; துன்று-அடர்ந்த; பொன்றுதல்-இறந்துபோதல்; போதி-போவாயாக; அன்றுதல்-மாறுபடுதல்)

கைகேயி கூனியை நோக்கி, 'நன்றாகச் சொன்னாய்; நல்லதையே சொன்னாய்; ஆண்களிற் சிறந்தவனாகிய பரதனுக்குப் பெருமை மிகுந்த முடியினைச் சூட்டுதல், இராமனை அடர்ந்த மரங்கள் செறிந்த கானகத்துக்குள் துரத்துதல், இந்த இரண்டு செய்கைகளும் நடக்காது போனால், என் மன்னவன் எதிரிலேயே என்னுடைய அருமையான உயிரைப் போக்கிக் கொண்டு இறந்து போய்விடுவேன். இது உறுதி. எனவே நீ தாமதிக்காமல், ஐயம் கொள்ளாமல் சென்று வருவாயாக!' என்றாள்.

ஆருயிர் துறத்தல், பொன்றி நீங்குதல், இரண்டும் ஒரே பொருளைத் தருவன என்றாலும் இங்கு உறுதி பற்றி இவ்வாறு கையாளப்பட்டிருக்கிறது. இராமன் நாட்டை விட்டு நீங்கவில்லையாயின் நான் என் உயிரை விட்டு உலகைவிட்டே நீங்குவேன் என்று கூறியது ஒருநயம்.

மந்தரை சூழ்ச்சிப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

3. கைகேயி சூழ்வினைப் படலம்

[115 பாடல்கள்]

கைகேயி இராமன் முடிசூடுதலைத் தவிர்க்க, மந்தரையின் ஆலோசனையின் பேரில் செய்த தீயசெயல்களை விவரித்துக் கூறும் பகுதி என விரியும். சூழ்வினை என்பது ஆலோசித்துச் செய்யப்பட்ட செயல்கள் என்று பொருள்படும். மந்தரையின் சூழ்ச்சி சொல்லளவில் நின்றது. அதைச் செயல்படுத்தியவள் கைகேயி எனவே கைகேயி சூழ்வினைப் படலம் என்றாயிற்று. இது 115 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் கைகேசிப் படலம் எனவும், முடி தவிர்த்த படலம் எனவும், கைகேயி சூழ்வினையால் முடி தவிர்த்த படலம் எனவும், சூழ்வினைப் படலம், விடைபெறு படலம், மன்பதை மகிழ்ச்சிப் படலம் என சில பகுதிகளாகப் பிரித்தும் இப்படலத்தின் பெயர் பேசப்படுகிறது.

இப்படலத்துள், கூனி அரண்மனையை விட்டுப்போன பின்னர் கைகேயி தன்னை அலங்கோலம் செய்து கொள்ளுதலும், தசரதன் கைகேயியின் மாளிகைக்கு நள்ளிரவில் வருதலும், அவளைக் கைலாகு கொடுத்துத் தூக்க, அவள் அவனை வெறுத்து ஒதுக்கிப் பூமியில் விழுதலும், தயரதன் அங்கே நிகழ்ந்ததைக் கூறவேண்டுதலும், கைகேயி முன்னர் தந்த இருவரங்களையும் தருக எனக் கேட்டலும், தசரதன் மறுக்காது இராமன் மேல் ஆணையாய்த் தருவேன் என்று உறுதியளித்தலும், கைகேயி, மந்தரை கூறிய இருவரங்களைக் கேட்டலும் தயரதன் துன்புறுதலும், கைகேயி நடுங்காமல் நிற்றலும், கைகேயியின் மன மாறுபாட்டிற்குத் தசரதன் காரணம் வினவுதலும் அவள் கடுஞ்சொற்களால் தசரதன் பெருந்துயர் கொள்ளுதலும், தசரதன் அவள் பாதங்களில் விழுந்து இரந்து வேண்டுதலும், கைகேயி அதனை உறுதியாக மறுத்தலும், பரதன் வேண்டுமானால் அரசாளட்டும் ஆனால் இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற வரத்தை மட்டும் மறந்து விடு என்று கூறுதலும், தந்த வரத்தைத் தாரேன் என மறுத்தல் தகுதியோ எனக் கைகேயி வினவுதலும், மன்னன் மண்ணில் விழுந்து புலம்புதலும், வரம் தராவிட்டால் உயிர் விட்டுவிடுவேன் என்று கைகேயி மிரட்டுதலும், மன்னன் இருவரங்களையும் தந்து மூர்ச்சையடைதலும், கைகேயி துயிலச் செல்லுதலும், பொழுது விடியும் போது மக்களும் மற்றவர்களும் நகரை

Koviloor Digital Library

அலங்கரித்து முடிபுனை விழாவிற்குத் தயார் நிலையில் இருத்தலும், அரசர்கள் அந்தணர்கள் முதலியோர் நிறைதலும், வசிட்டன் முடிசூட்டுவதற்கு வேண்டியன செய்தலும், வசிட்டன் கட்டளைப்படி சுமந்திரன் மன்னனை அழைத்து வர அரண்மனைக்குச் செல்லுதலும், கைகேயி எதிர்ப்பட்டு இராமனை அழைத்துவரச் சொல்லுதலும், சுமந்திரன்மகிழ்ந்து, நாராயணன்கோயிலில்தியானத்தில்இருந்த இராமன் அரண்மனை செல்லுதலும், இராமன் தேரில் அரண்மனைக்கு வருவதை நகர மக்கள் கண்டு களித்தலும், மன்னன் மாளிகைக்கு இராமன் செல்லுதலும் அங்கு அவரைக் காணாது கைகேயியின் அரண்மனைக்குச் செல்லுதலும், கைகேயி எதிர் வந்து, வணங்கி நின்ற இராமனை நோக்கி மன்னன் உன்னிடம் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று உள்ளது என்று கூறி நீ பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யவும், பரதன் இப்பார் ஆளவும் மன்னன் ஏவினன் என்று கூறுதலும், இராமன் மனம் உவந்து கானகம் செல்லக் கைகேயியிடம் விடை கொள்ளுதலும், கோசலையின் இருப்பிடத்திற்குச் செல்லுதலும் ஆகிய செய்திகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. கைகேயிதனது அலங்காரத்தைஅழித்துக்கொள்ளுதல் [4 பாடல்கள்]

கூனி போனபின், குலமலர்க் குப்பைநின்று இழிந்தாள்;
சோனை வார்குழல் கற்றையில் சொருகிய மாலை
வான வார்மழை நுழைதரு மதிபிதிர்ப்பாள் போல்
தேன் அவாவுறு வண்டினம் அலமரச் சிதைத்தாள். (1583)

(குலம்-சிறந்த; குப்பை-குவியல்கள்; இழிதல்-இறங்குதல்; வார்-நீண்ட; சோனை-விடாத மழை / கருமேகம்; மழை-மேகம்; பிதிர்ப்பது-உதிர்ப்பது; அலமரல்-நிலைகலங்குதல்; சிதைத்தல்-அறுத்தெறிதல்)

மந்தரைஅவ்விடத்தைவிட்டுஅகன்றபின்பு, சிறந்தமலர்க்குவியல்கள் நிறைந்திருந்த படுக்கையினின்றும் கீழே இறங்கி வந்தாள் கைகேயி; இடைவிடாத பெருமழை பொழிகின்ற கார்மேகம் போன்ற நீண்ட கூந்தல் தொகுதியில் சூடியிருந்த மாலைகளை, ஆகாயத்தில் உள்ள நெடிய மேகத்தினுள் நுழைகின்ற சந்திரனைச் சிதைப்பவள் போல, தேன்களை நாடிச் செல்லும் வண்டுக் கூட்டம் நிலை குலைந்து ஓடுமாறு சிதைத்து அழித்தாள்.

மலர்க் குப்பை என்றது மலர்கள் நிறைந்திருந்த படுக்கையைக் குறித்தது. மேகம் கூந்தலுக்கும் சந்திரன் மாலைக்கும் உவமை. தமக்கு உண்டான வருத்தத்தை வெளிப்படுத்துதலுக்குத் தம்முடைய அலங்காரத்தை அழித்துக் கொள்ளுதல் மகளிர் இயல்பு. அவாவுறும் வண்டினம் அலமர என்பது வண்டினத்திற்கும், இராமனது முடிசூட்டு விழாவினைக் காணவந்திருக்கும் மக்களுக்கும் ஒன்றே போலப்

Koviloor Digital Library

பொருந்துவது கருதத்தக்கது. கூந்தலில் சொருகியிருந்த பூமாலையைக் கைகேயி எடுத்து எறிந்தது மேகத்தில் நுழைகின்ற சந்திரனைச் சிதைப்பது போல இருந்தது என்பதாம். கூந்தலிலிருந்து மாலையை எடுத்து எறிந்தது அவளுக்கு உண்டாக இருக்கும் அமங்கலத்தைக் குறிப்பாய்க் காட்டுகிறது என்று கொள்ளவேண்டும்.

2. மங்கலப் பொட்டினையும் அழித்துக் கொள்ளுதல்

விளையும் தன்புகழ் வல்லியை வேர் அறுத்தென்னக்
கிளைகொள் மேகலை சிந்தினள்; கிண்கிணியோடும்
வளை துறந்தனள்; மதியினில் மறுத்துடைப்பாள் போல்
அளகவாள் நுதல் அரும்பெறல் திலதமும் அழித்தாள். (1584)

(விளையும்-வளருகின்ற; வல்லி-கொடி; கிளை-வடம்; கிண்கிணி-காலணி; மறு-களங்கம்; வாள்-ஒளி பொருந்திய; நுதல்-நெற்றி; அளகம்-நெற்றிக்கு மேல் உள்ள கூந்தல் பகுதி; மேகலை-மேகலா பரணம்; பெறலரும்-பெறுதற்கரிய; கிண்கிண் என ஒலித்தலால் கிண்கிணி என்பது காரணப்பெயர்)

வளர்ந்து வருகின்ற தனது புகழாகிய கொடியை வேரொடு அறுப்பது போலத் தான் இடையில் அணிந்திருந்த ஏழு வடங்களால் ஆகிய மேகலா பரணத்தை அறுத்து எறிந்தாள்; காலில் அணிந்திருக்கின்ற பாதச் சலங்கைகளோடு, கைகளில் அணிந்திருக்கும் வளையல்களையும் கழற்றி எறிந்தாள்; சந்திரனில் அமைந்திருக்கும் களங்கத்தைத் துடைப்பவள் போல், தனது ஒளி பொருந்திய முன்நெற்றியில் படிந்திருந்த கூந்தலையும், பெறற்கரிய நெற்றிப் பொட்டினையும் அழித்தாள்.

மேகலை வெண்முத்துக்களால் ஆனது. புகழை வெண்ணிறமுடையது என்று கூறுவது கவிமரபு. எனவே புகழ் வல்லி என்றார். அவள் நெற்றியில் இருந்த திலகம் சந்திரனில் உள்ள களங்கம் போன்று இருந்தது எனவும், எனவே சந்திரனில் உள்ள களங்கத்தைத் துடைப்பது போலத்தன் நெற்றியிலுள்ள திலகத்தை அழித்துக் கொண்டாள் என்பதாம். இப்போது புகழோடு இருக்கும் கைகேயி, பழி எய்தி அழிய இருக்கிறாள் என்பதைக் குறிப்பால் உணர்த்துவது போல, விளையும் தன் புகழ் வல்லியை வேர் அறுத்தென்ன என்றார். மேகலைக்குப் புகழும், திலகம் மறுவுக்கும் ஒப்பு.

3. தாஇல் மாமணிக் கலன் மற்றும் தனித்தனி சிதறி
நாவி நன்குழல் நானிலம் தைவரப் பரப்பிக்
காவிஉண் கண்கள் அஞ்சனம் கான்றிடக் கலுழாப்
பூ உதிர்ந்தது ஒருகொம்பு எனப் புவிமிசைப் புரண்டாள். (1585)

(தாஇல்-குற்றமற்ற; நாவி-கத்தூரிப் புனுகு; நானிலம்-பூமி; தைவரல்-தடவுதல் / புரளுமாறு / படியும்படி; காவி-நீலோற்பல மலர்; உண்-மைபூசப் பெற்ற; அஞ்சனம்-மை; கான்றிட-கக்குமாறு /

Koviloor Digital Library

வெளியிடுமாறு; கலுழ்தல்-கண்ணீர் சிந்துதல் / அழுதல்; மிசை-மேல்; புவி-தரை)

குற்றமற்ற சிறந்த இரத்தினங்களாலான அணிகலன்களையும், மற்றும் தான் அணிந்திருந்த வேறுவேறு வகையான அணிகலன்களையும் கீழே சிதற விட்டாள்; கத்தூரிப் புனுகு தடவி நறுமணம் வீசுகின்ற நல்ல கூந்தல் இந்தப் பூமியில் புரளுமாறு பரப்பிக் கொண்டு கிடந்தாள்; நீலோற்பல மலர் போன்ற மைதீட்டப் பெற்ற கண்கள், அந்த மை கரையுமாறு கண்ணீர் பெருக்கி அழலானாள்; மொத்தத்தில் பூவெல்லாம் உதிர்ந்து நிற்கும் வெறும் கொம்பு போலத் தரையில் விழுந்து புரண்டு கொண்டிருந்தாள்.

கைகேயியின் இப்போதையத் தோற்றம், பின்னர் அவளுக்கு நிரந்தரமாக வரவிருக்கும் கைம்மை நிலையை இப்பொழுதே அவள் மேற்கொண்டதைக் குறிப்பால் உணர்த்திற்று என்பதாம். வளையல்களை நீக்குதல், நெற்றியிலுள்ள திலகத்தை அழித்தல், கூந்தலிலுள்ள மலர்களைப் பிய்த்து எறிதல், கூந்தலை அவிழ்த்து விடுதல், மையும் கரையும்படி அழுது புலம்புதல், வெறுந்தரையில் தலை முடியைப் பரப்பிப் படுத்திருத்தல் ஆகியன மங்கலப் பெண்கள் செய்யக் கூடாதன என்க.

4. நவ்வி வீழ்ந்தென்ன, நாடக மயில் துயின்றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாம் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்கும் என்று, அயோத்தி வந்துஅடைந்த அம்மடந்தை
தவ்வையாம் எனக்கிடந்தனள் கேகயன் தனையை. (1586)

(நவ்வி-பெண்மான்; கடி கமழ்-மணம் வீசுகின்ற; கமலம்-தாமரை மலர்; அவ்வை-திருமகள் / சீதை / தாய்; தவ்வை-மூதேவி; கேகயன் தனயை-கேகயன் மகள் / மயில் போன்ற சாயலுடையவள்; கவ்வை-துயரம்; கூர்தர-மிக)

கேகய மன்னன் மகளாகிய கைகேயி, ஒரு பெண் மான் தரையில் வீழ்ந்து கிடப்பது போலவும், ஆடுகின்ற இயல்புடைய மயில், ஆட்டத்தை ஒழித்துத் தூங்குவது போலவும், துயரம் மிகக் கொண்டவளாகி, சானகியாகிய சீதாதேவி, நறுமணம் கமழ்கின்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் தாயாகிய திருமகள் அயோத்தி நகரத்தை விட்டு இன்னும் சிறிது நேரத்தில் நீங்கி விடுவாள், அவளுடைய இடத்தை நாம் கைப்பற்றிக் கொள்ளுவோம் என்று கருதி, அவளுடைய தமக்கையான மூதேவி, அங்கு வந்து தரையில் கிடந்ததைப் போலக் கைகேயி தரையில் விழுந்து கிடந்தாள்.

கேகயன் தனையை என்ற சொல்லில் இருபொருள் விளங்க வைத்தார். ஒன்று கேகய அரசனின் மகள் என்பதாகும். மற்றொன்று மயிலின் சாயலையுடைய கைகேயி என்பதாகும். அவள் மான் போன்ற மருண்ட விழிகளும், மயில் போன்ற நற்சாயலும் உடையவள் என்பதும்,

Koviloor Digital Library

மான்போன்று துள்ளிக் குதித்தலையும், மயில் போன்று தோகை விரித்து ஆடுதலையும் ஒழித்து மான் விழுந்து கிடப்பதைப் போலவும், மயில் உறங்கிக் கொண்டிருப்பதைப் போலவும் தரையில் கிடந்தாள் என்பதாம். கவ்வை கூர்தர என்பது கைகேயி தான்துயர் மிகுந்தாள் என்றும், அயோத்தி மக்கள் மிகுந்த துயர்கொள்ள என்றும் இருபொருள் தந்தமை காண்க.

5. தசரதன் கைகேயியின் மாளிகைக்கு வருதல்

நாழிகை கங்குலின் நள் அடைந்த பின்றை
யாழிசை அஞ்சிய அம்சொல் ஏழை கோயில்
''வாழிய!'' என்று அயில் மன்னர்துன்ன, வந்தான்
ஆழிநெடுங்கை மடங்கல் ஆளி அன்னான். (1587)

(கங்குல்-இரவுப் பொழுது; நள் நாழிகை-நடுச்சாமம் / நடுயாமம்; ஆழி-ஆணைச் சக்கரம்; மடங்கல்-பிடரியையுடைய சிங்கம்; ஆளி-ஏறு / ஆண்சிங்கம்; அயில்-வேல்; துன்ன-பின்தொடர; ஏழை-பெண் / கைகேயி / அறிவிலி; கோயில்-மாளிகை; நாழிகை-ஒரு நாளில் அறுபதில் ஒரு கூறு / நேரம்; பின்றை-பின்னர்; நெடுங்கை-தாள் தோய் தடக்கை; மடங்கல்-பிடரி மயிர் மடங்கியிருத்தலால் சிங்கத்திற்குச் காரணப் பெயர்)

ஆணைச் சக்கரத்தை ஏந்திய, தாள் வரை தோயும் தடக்கை கொண்டவனும், பிடரி மயிருடைய ஆண் சிங்கம் போன்றவனுமாகிய தசரதன், நடு இரவிற்குப் பிறகு, வேலேந்திய சிற்றரசர்கள் எல்லோரும் ''வாழ்க! வாழ்க! என்று வாழ்த்திக் கொண்டு பக்கத்தில் சூழ்ந்து வர, வீணையையும் தன் இனிய சொற்களால் தோற்கடிக்கச் செய்யும் பெண்ணாகிய கைகேயியின் மாளிகையை அடைந்தான்.

சொல்லிற்கு அழகு கேட்பதற்கு இனிமையும் மென்மையும் உடையதாதல். எனவே யாழிசை அஞ்சிய அஞ்சொல்; ஏழை என்பது பிறர் கூறுவதை ஆராயாது அப்படியே எடுத்துக் கொண்டு நடக்கும் அறிவற்றவள் என்ற பொருளிலும் பயின்று வந்தது. முடிசூட்டு விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டி இருந்ததால் தசரதன் காலந்தாழ்த்து, நடுஇரவிற்குப் பின் வந்தான் என்க.

6. தசரதன் கைகேயியை அடைதல்

வாயிலில் மன்னர் வணங்கி நிற்ப, வந்து ஆங்கு
ஏயின செய்யும் மடந்தை மாரோடு ஏகிப்
பாயல்துறந்த படைத் தடங்கண் மென்தோள்
ஆயிழை தன்னை அடைந்த ஆழி மன்னன். (1588)

(பாயல்-பஞ்சணை / படுக்கை; படை-வாள்படை; ஆழி-ஆணைச் சக்கரம்; தோள்-கைகள் (குளகப் பாடல்).

Koviloor Digital Library

தன்னுடன் கூட வந்த அரசர்கள் மாளிகையின் வாயிலிலேயே அரசனைத் தொழுது நிற்கவும், அங்கே தன்னை வரவேற்க வந்த குற்றேவல் செய்யும் பணிப்பெண்டிரோடு, கைகேயி இருந்த இடம் சென்று, அங்கே, பஞ்சணைப் படுக்கையை நீத்த, வேற்படை போன்ற கண்களையும், மெல்லிய கைகளையும் உடைய கைகேயியை, ஆணைச் சக்கரத்தை ஏந்திய மன்னன் தசரதன் அடைந்தான்.

அந்தப்புரத்துக்குள் வேற்று ஆடவர் செல்வது தகாது என்பதனால் அரசர்கள் நுழைவாயிலிலேயே நின்றனர் என்பதாம். தோள் என்பது பெண்களுக்குச் சொல்லும் போது கைகளைக் குறிக்கும். இங்கே ஆயிழை என்ற சொல் பெண் என்ற பொருளிலேயே வந்தது. கைகேயி அணிகலன்களைத் துறந்திருக்கின்றாள். அடைதல் என்பது அவளை உள்வழிச் சார்தல் என்பதாகும். இயல்பாகப் படுக்கும் பஞ்சணையில் துயிலாது ஊடல் அறையில் படுத்திருந்தாள் என்று முதல் நூல் கூறும். ஊடல் அறை-கோபக்கிரகம்.

7. தசரதன் கைகேயியைக் கைகளால் தூக்குதல்

அடைந்து, அவள்நோக்கி, ''அரந்தை என்கொல் வந்து

தொடர்ந்தது?'' எனத் துயர்கொண்டு சோரும் நெஞ்சன்,

மடந்தையை, மானை எடுக்கும் ஆனையே போல்,

தடங்கைகள் கொண்டு, தழீஇ, எடுக்கல் உற்றான். (1589)

(அரந்தை-துன்பம்; அடைதல்-அருகில் நெருங்குதல்; சோர்தல்-துன்பத்தால் மெலிதல்)

மகிழ்ச்சியோடு வந்த தசரதன், கைகேயி இருந்த நிலையை நன்கு கண்ணினும் கருத்தினும் உற்று நோக்கி, அவளுக்கு என்ன துன்பம் வந்து பற்றிக் கொண்டது என்று எண்ணி, மனத்துயர் மிகக் கொண்டு, உள்ளம் சோர்ந்து, அக்கைகேயியை, ஒரு பெண் மானைத்தன் துதிக்கையால் தழுவித்தூக்கும் ஒரு ஆண்யானைபோலத் தனது பெரிய நீண்ட கைகளைக் கொண்டு, அவளைத் தழுவித் தூக்கி நிறுத்தித் தேற்ற முயன்றான்.

அரந்தை என்கொல் வந்து தொடர்ந்தது என்பது, இப்போது முதல், படிப்படியாகத் துன்பம் தொடர்ந்து வரப்போகிறது என்பதைக் குறிப்பால் உணர்த்துவதுமாகும். முன்பு நவ்வி வீழ்ந்தென்ன என்று கைகேயியை மானுக்கு உவமை கூறியவன், இங்கும் மறக்காது அவளை மானுக்கே உவமிக்கிறான். தசரதனைப் பல இடங்களிலும் யானைக்கு உவமித்திருப்பது தெரிந்ததே. தட என்பது பெரிது என்றும் வளைந்த என்றும் இருபொருள்களையும் தந்து நின்றது. தழுவத் தூக்கும் போது கைகள் வளையுமல்லவா? ''தடவென் கிளவி கோட்டமும் செய்யும்'' என்பது தொல்காப்பியம்; கோட்டம்-வளைவு.

Koviloor Digital Library

8. கைகேயி பெரு மூச்செறிதல்

நின்று தொடர்ந்த நெடுங்கை தம்மை நீக்கி,
மின்துவள்கின்றது போல, மண்ணில் வீழ்ந்தாள்;
ஒன்றும் இயம்பலள்; நீடு உயிர்க்கல் உற்றாள்;
மன்றல் அருந்தொடை மன்னன் ஆவி அன்னாள். (1590)

(மன்றல்-மணம் பொருந்திய; தொடை-மலர்மாலை; ஆவி-உயிர்; நீடு உயிர்க்கல்-நெடு மூச்சுவிடுதல்)

மணம் பொருந்திய அருமையான மலர்மாலையணிந்த தசரதனின் உயிர் போன்றவளான கைகேயி, தன் நிலையில் சிறிதும் மாறாது நின்று, தன்னைத் தூக்க வந்த மன்னனின் நெடிய கைகளைத் தள்ளிவிட்டு, ஒரு மின்னற் கொடி துவண்டு விழுவதைப் போல மீண்டும் தரையில் விழுந்தாள்; ஒன்றும் பேசாதவளாகி, நெடு மூச்சு விட்டாள்.

பட்டத்தரசியர் மூவருள்ளும் தசரதன் கைகேயிபால் மிகுந்த அன்பு கொண்டவன் ஆதலின் ஆவியன்னாள் என்றார். ஆதரிக்கின்ற கைகளைத் தள்ளி விடுதல், தரையில் விழுந்து அரற்றுதல், ஒன்றும் பேசாதிருத்தல், நீண்ட வெப்பப் பெருமூச்சு விடுதல் இவையெல்லாம் கோபங்கொண்ட மகளிரின் மெய்ப்பாடுகள்.

9. தசரதன் கைகேயியை வினவுதல்

அன்னது கண்ட அலங்கல் மன்னன், அஞ்சி,
''என்னை நிகழ்ந்தது? இஞ்ஞாலம் ஏழில் வாழ்வார்
உன்னை இகழ்ந்தவர் மாள்வர்! உற்றது எல்லாம்
சொன்னபின், என்செயல் காண்டி! சொல்லிடு!'' என்றான். (1591)

(அலங்கல்-மாலை; ஞாலம்-உலகம்; காண்டி-காண்பாயாக)

அவ்வாறு அலங்கோலமாகத் தரையில் புரண்டு கொண்டிருந்த கைகேயியைக் கண்ணுற்ற மாலையணிந்த மன்னன் தசரதன், தனக்குள் மிக்க அச்சம் கொண்டு, ''இங்கு என்ன நிகழ்ந்தது? இந்த ஏழு உலகங்களில் வாழ்பவர் யாரேனும் உன் மனம் வருந்துமாறு உன்னை இகழ்ச்சி செய்தார்களா? அப்படியாயின் கூறு. உடனே அவர்களை அழித்துவிடுகிறேன். நடந்தன எல்லாவற்றையும் நீ கூறிய பிறகு என் செயலைப் பார், விரைவாகக் காலந்தாழ்த்தாது சொல்'' என்றான்.

மன்னன் அஞ்சியது, இதுகாறும் இத்தகைய ஒரு நிலையைக் கைகேயியிடம் கண்டிலன் எனவே துணுக்குற்று அஞ்சினான். இந்நிலைக்குத் தான்தான் காரணம் என்பதை யறியாத மன்னன், இந்த ஏழு உலகத்திலும் உள்ளவர் யாரேனும் இருப்பின் அவர் அழிவர் என்று தன்னையும் உளப்படுத்திக் கூறியதாகத் தோற்றுமாறு கவிஞன் கூறுகிற தன்மை வியத்தற்குரியது.

Koviloor Digital Library

10. கைகேயி வரத்தைப் பற்றிக் கூறுதல்

வண்டுஉளர் தாரவன் வாய்மை கேட்ட மங்கை
கொண்ட நெடுங்கணின் ஆலிகொங்கை கோப்ப
''உண்டுகொலாம் அருள் என்கண்? உன்கண் ஒக்கில்
பண்டைய, இன்று பரிந்து அளித்தி'' என்றாள். (1592)

(உளர்தல்-கிண்டுதல் / ஒலிக்கின்ற; வாய்மை-வார்த்தை; ஆலி-கண்ணீர்த்துளி / முத்துக்கள்; என்கண்-என்னிடத்து / என்பால்; பரிந்து-அன்புடன்)

வண்டுகள் ஒலிக்கின்ற மாலையணிந்த தசரதனது வார்த்தைகளைக் கேட்ட கைகேயி, தனது மேகம் போன்ற நெடிய கண்களிலிருந்து வரும் நீர்த்துளி, முத்து மாலையைப் போலத்தனது கொங்கைகளில் கோத்து நிற்க, ''என்மேல் தங்களுக்கு உண்மையிலேயே கருணை உண்டோ? உண்டாயின், முன்பு தாங்கள் எனக்கு அளித்த இருவரங்களையும், இன்று அன்போடு எனக்கு அளித்திடுங்கள்'' என்றாள்.

மங்கை என்பது இங்கு பருவம் குறித்ததன்று. பெண் என்ற அளவிலே நின்றது. பண்டைய என்பது முன்பு சம்பராசுரனுடன் போர் புரிந்த போது தான் செய்த உதவிக்குக் கைமாறாகத் தரவேண்டிய இரண்டு வரங்களைக் குறித்தது. பரிந்து என்ற சொல்லுக்கு வருந்தி என்ற ஒரு பொருளும் உண்டு. தான் கேட்கப் போகும் இருவரங்களினால் தசரதன் பின்னர் வருத்தப்படக்கூடும் என்பதை உணர்ந்தவள் கைகேயி. எனவே வருத்தப்பட்டேனும் எனக்கு அவற்றைத் தந்திடுக என்ற பொருளில் பரிந்துஅளித்தி என்றாள்என்பதுமாம். பண்டைய என்பதற்கு, இப்பொழுது புதிதாக ஒன்றும் கேட்கவில்லை-முன்பு நீ தர வேண்டியவற்றையே கேட்கிறேன். ஆதலின் அன்புடன் அளிக்கத் தக்கதே என்றலும் ஒன்று. கொள்ளுங்கால் உள்ள மனநிலைக்கும், கொண்டது கொடுக்குங்கால் உள்ள மனநிலைக்கும் வேறுபாடு நிகழ்தல் இயல்பு.

11. ''இராமன்மேல் ஆணையால் வரம்தருவேன்'' எனல்

கள்அவிழ் கோதை கருத்து உணராத மன்னன்,
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கான்;
''உள்ளம் உவந்து அது செய்வென்; ஒன்று லோவேன்;
வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை!'' என்றான். (1593)

(கள்-தேன்; அவிழ்தல்-மலர்தல் / வழிதல்; கோதை-மாலை; வெள்ள-மிகுதியான; சுடர்-ஒளி; லோபம்-உலோபம் / ஈயாமை / கடும்பற்றுள்ளம்; ஒன்றும்-சிறிதும்; கருத்து-உட்கிடக்கை; நக்கான்-சிரித்தான்)

தேன் வழிந்து சிந்துகின்ற மலர்ந்த மலர்களைச் சூடியிருக்கின்ற கூந்தலையுடைய கைகேயியின் உட்கருத்தை உணராத மன்னன் தசரதன்,

Koviloor Digital Library

மிக்க ஒளி மிகுந்த மின்னல் மின்னுவதைப் போன்று சிரித்தான். ''உன் மனம் விரும்பியதை உடனே செய்வேன்; அதில் சிறிதும் கருமித்தனம் காட்டமாட்டேன்; உன் மைந்தனாகிய வள்ளன்மை மிக்க இராமன் மேல் சத்தியம்'' என்றான்.

கள் அவிழ் கோதை என்ற சொல்லாட்சி மிகுந்த கருத்தாழம் கொண்டது. அரும்பின் நிலையிலேயே மறைத்து வைத்திருந்த தேனைப் பின் மலர்ந்து வெளிப்படுத்தும் மாலை என்பது பொருள். வரம் என்ற தேனை உள்ளே ஒளித்து வைத்திருந்து முன்பு மெதுவாகக் கூறிப் பின்னர் அது தந்த பிறகு தன் உள்ளக்கருத்தை விரித்து உரைக்க முயற்சிப்பதை இந்தச் சொற்றொடரின் மூலம் அறியலாம். மன்னன் சிரித்தது அவளுடைய பேதைமையை எண்ணி; இரண்டு வரங்களைப் பெறுவதற்கு இவள் ஏன் இவ்வளவு அலங்கோலமாகக் காட்சிதர வேண்டும் என்ற ஒன்றும் அறியாத வெள்ளைச் சிரிப்பு. அதனால் தான் வெண்மையான, உடனே மறைந்து போகின்ற மின்னல் உவமை. அவள் கேட்கப்போவது என்ன என்பது தெரியாததால், எதுவாயிருந்தாலும் என் மனம் உவந்து செய்வேன் என்றும், உன் மனம் எதை விழைந்தாலும் அதைச் செய்வேன் என்றும், அப்படிச் செய்வதையும் முற்றமுடியச் செய்வேன், பாதியில் நிறுத்த மாட்டேன் என்றும் சத்தியம் செய்கிறான். தன் மைந்தன் இராமனிடம் தன்னைக் காட்டிலும் பேரன்பு மிக்கவள் கைகேயி என்பதை அறிந்தே வள்ளல் உன் மைந்தன் இராமன் மேல் ஆணை என்கிறான். உறுதி கூறவிரும்புகிறவர்கள், தமக்குச் சிறந்தார்மேல், தாம் மிக்க அன்பு கொண்டவர் மேல் ஆணையிட்டுக் கூறுதல் மரபு.

12. இரண்டு வரங்களையும் தரும்படி கேட்டல்

ஆன்றவன் அவ்வுரைகூற, ஐயம் இல்லாள்,
''தோன்றிய பேரவலம் துடைத்தல் உண்டேல்,
சான்று இமையோர் குலம்ஆக, மன்ன! நீ அன்று
ஏன்ற வரங்கள் இரண்டும் ஈதி!'' என்றாள். (1594)

(பேர் அவலம்-பெரியதுன்பம்; ஏன்ற-ஏற்றுக்கொண்ட; ஈதி-கொடுப்பாயாக; சான்று-சாட்சி)

குணங்களால் உயர்ந்த தசரதன் அவ்வாறு கூறவும், கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் தீர்ந்தவளாகிய கைகேயி, ''அரசனே! என்னிடம் தோன்றிய பெரிய கவலையை உண்மையிலேயே போக்க வேண்டும் என்று கருதினால், அன்று தேவர்கள் கூட்டம் சாட்சியாக, நீயே மனமுவந்து ஏற்றுக் கொண்ட இரண்டு வரங்களையும் இப்போது தருவாயாக!'' என்றாள்.

சம்பராசுரன் போர் நிகழ்ந்த இடம் தேவருலகம். எனவே அதைக் காணக்கூடி இருந்த தேவர்கள் அனைவரும் அவன் கூற்றுக்குச் சாட்சி என்பதை மீண்டும் உறுதிப் படுத்திக் கொண்டு சொல்கிறாள். கணவனை

Koviloor Digital Library

இங்கு மன்ன என்று அழைக்கிறாள். கணவனாகச் செய்யும் பேரன்பைக் காட்டிலும், மன்னவனாக இருந்து ஏற்றுக்கொண்ட வாய்மையிலிருந்து வழுவக் கூடாது என்பதைக் குறிப்பதற்காக. கணவன் மனைவி என்றால் கொள்வதும் கொடுப்பதும் இருவர்க்கும் பொது உரிமை ஆகிவிடும். அரசன் என்றால் அறநெறி நின்று மக்களுக்கு நன்மை பயப்பனவற்றையே செய்தல் வேண்டும். எனவே கொடுத்த வரத்தினின்றும் பின் வாங்கக் கூடாது என்பதைப் புலப்படுத்தவே மன்ன என்று கணவனை அழைக்கிறாள் என்பதாம்.

13. ''இப்பொழுதே தருவேன்'' எனல்

''வரம்கொள இத்துணை மன்னும் அல்லல் எய்தி
இரங்கிட வேண்டுவதில்லை; ஈவன்; என்பால்
பரம்கெட இப்பொழுதே, பகர்ந்திடு!'' என்றான்;
உரம்கொள் மனத்தவள் வஞ்சம் ஓர்கிலாதான். (1595)

(மன்னும்-மிகுதியான; பரம்-பாரம் / சுமை; உரம்-வலிமை / நெஞ்சுறுதி / இரக்கமின்மை; ஓர்தல்-ஆராய்தல் / அறிதல்; அல்லல்-துன்பம்; வஞ்சம்-கபட எண்ணம்)

இரக்கமில்லாத கல்நெஞ்சம் உடைய கைகேயியின் கபட எண்ணத்தை நன்கு ஆராய்ந்து உணர்ந்து கொள்ளாத தசரதன், கைகேயியை நோக்கி, ''நானே மனம் உவந்து அளித்த வரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நீ இவ்வளவு மிகுதியான துன்பம் அடைந்து வருத்தப்பட வேண்டியதே இல்லை; நான் கொடுத்து விடுவேன். அதைக் கொடுக்காவிட்டால் என்னுடைய சுமை குறையாது. எனவே இப்பொழுதே தந்து விடுகிறேன்; என்ன வேண்டும் கேள்'' என்றான்.

அவன் ஒரு நல்ல செய்தியைச் சொல்ல ஆவலுடனும் மகிழ்ச்சியுடனும் வந்திருக்கின்றான். எனவே உடனே விரைவாகக் காலந்தாழ்த்தாது சொல், நான் உடனே தந்து விடுகிறேன் என்கிறான். இயல்பிலேயே மென்மையான குணங்கள் வாய்க்கப் பெற்றவள் கைகேயி. இப்பொழுது மந்தரையின் சூழ்ச்சியால் மனம் மாறிப் போனாள் எனவே உரம்கொள் மனத்தவள் என்றார். தந்தே தீர வேண்டிய வரங்களைத் தாராதிருப்பது தனக்கு ஒரு பெரும் சுமையாக இருப்பதாகவும், அதை விரைவாகக் கேட்டு என் சுமையைக் குறைப்பாயாக என்றும் கூறுகிறான். கைகேயியின் மீது கொண்ட அதீத அன்பால் அவள் சொற்களில் உள்ள தீங்கினை ஆராய்ந்து அறிய இயலாதவனாய்த் தசரதன் இருப்பதனால் ஓர்கிலான் என்றார்.

14. தான் விரும்பிய இருவரங்களையும் கைகேயி கேட்டல்

''ஏயவரங்கள் இரண்டின் ஒன்றினால் என்
சேய்அரசு ஆள்வது; சீதை கேள்வன், ஒன்றால்
போய் வனம் ஆள்வது'' எனப் புகன்று நின்றாள்,
தீயவை யாவையினும் சிறந்த தீயாள். (1596)

Koviloor Digital Library

(ஏய-சொன்ன / உடன்பட்டுள்ள; கேள்வன்-கணவன்; சிறந்த-கொடிய)

கொடுமையானவை என்று சொல்லப்படுகிற எல்லாவற்றையும்விட மிக்க மேம்பட்ட கொடியவளான கைகேயி, தசரதனை நோக்கி, ''தாங்கள் உடன்பட்டுத் தந்த இரண்டு வரங்களுள் ஒன்றினால் என் மகன் பரதன் இவ்வுலகையாள வேண்டும்; மற்றொன்றினால் சீதையின் கணவனாகிய இராமன்இந்நகரைவிட்டு நீங்கிப் போய் காட்டில் வாழ வேண்டும்'' என்று கூறிவிட்டு அஞ்சாது, மனம் கலங்காது, உறுதியாக அவன் எதிரே நின்றாள்.

தீயவை என்பன நெருப்பு, யமன், நஞ்சு, பாம்பு முதலியன. இங்கே சிறந்த என்ற சொல்லாட்சி நோக்கத்தக்கது. சிறந்த தீயாள் என்பது நஞ்சுடைய பாம்பை நல்ல பாம்பு என்றும், கொளுத்தும் வெய்யிலை நல்ல வெயில் என்றும் கூறுவது போல கைகேயியைச் சிறந்த தீயாள் என்றார். முதலில் என் மகன் என்றது, இதுகாறும் அவள் இராமனையே என் மகன் என்று கூறிவந்திருக்கிறாள். இந்த இடத்தில் இவள் பரதனைக் குறிக்கிறாள் என்பதைப் பின்னர் கூறும் சீதை கேள்வன் என்ற சொற்களினால் உணர வைக்கிறான் கவிஞன். இப்பொழுது இராமன் என்று நேரே அவன் பெயரைக் கூற அவள்வாய் முயற்சிக்கவில்லை. வனம் ஆள்வது காட்டையே இருப்பிடமாகக் கொண்டு வாழ்தல் என்ற பொருளில் வந்தது. பதினான்கு ஆண்டுகள் அவன் காட்டில் வாழ வேண்டும் என்ற கூனி கூற்றை இவள் கூறவில்லை என்பது நோக்கத்தக்கது. சக்கரவர்த்தியின் முன்னால் இத்தகைய கொடுமையான சொற்களைச் சொல்லிவிட்ட பின்னரும் அவன் எதிரில் நிற்கும் ஆற்றலும் வலிமையும் இவளுக்குத்தான் உண்டு என்பதைக் குறிக்கவே புகன்று நின்றாள் என்றார்.

15. தசரதன் அடைந்த துயரம்

நாகம் எனும் கொடியாள், தன் நாவின் ஈந்த
சோகவிடம் தொடரத் துணுக்கம் எய்தா,
ஆகம் அடங்கலும் வெந்து அழிந்து, அராவின்
வேகம் அடங்கிய வேழம் என்ன வீழ்ந்தான். (1597)

(நாகம்-நல்ல பாம்பு; துணுக்கம்-நடுக்கம்; எய்தா-எய்தி / அடைந்து; ஆகம்-உடம்பு; அடங்கலும்-முழுவதும்; அரா-பாம்பு; வேழம்-யானை; சோகம்-துன்பம்; தொடர-பற்ற)

நல்ல பாம்பு என்று சொல்லத்தக்க கொடியவளான கைகேயி, தன் நாவினால் தந்த சோகம் என்னும் நஞ்சு, தன்னைத் தொடர்ந்துவர, நடுக்கம் அடைந்து, தசரதன் உடம்பு முழுவதும் வெதும்பிச் சோர்ந்து அழிந்து, நச்சுப் பாம்பு தீண்டியதால், ஊக்கமும் ஆற்றலும் வேகமும் அடங்கிச் சோர்ந்த யானை போலத் தரையில் விழுந்தான்.

Koviloor Digital Library

பாம்பிற்குப் பல்லில் விடம். இக்கொடியவளுக்கு நாவில் விடம். பாம்பின் விடம் அது கடித்த வழியே உடம்பில் பரவும். இந்த விடம் கேட்டவுடனேயே தொடர்வது. ஒரு சிறிய உருவம் கொண்ட பாம்பினால் ஒரு பெரிய உருவம் கொண்ட யானை வேகம் அடங்கி விழுவது போல, ஒரு சிறிய பெண்ணான கைகேயியினால் ஒரு பேரரசன் தசரதச்சக்கரவர்த்தி தன் ஆற்றலெல்லாம் அழிந்து தரையில் வீழ்ந்தான் என்பதாம். இதனால் கைகேயியின் சொற்களில் இருந்த கொடுமை கூறப்பட்டது.

16. பூதலம் உற்று அதனில் புரண்ட மன்னன்
மாதுயரத்தினை யாவர் சொல்ல வல்லார்?
வேதனை முற்றிட வெந்துவெந்து, கொல்லன்
ஊது உலையில் கனல் என்ன, வெய்து உயிர்த்தான். (1598)

(பூதலம்-தரை; வெய்து-வெம்மையாக; உயிர்த்தல்-பெருமூச்சு விடுதல்; வேதனை-துன்பம்)

அவ்வாறு தரையில் விழுந்து புரண்டுகொண்டிருந்த சக்கரவர்த்தியின் பெரும் மனத்துன்பத்தை அளவிட்டுக் கூற வல்லவர் யார்? ஒருவராலும் முடியாது; அவன் மன வேதனை மிக்கு வெதும்பி, கொல்லனது உலைக் களத்தில் காற்று ஊதப்படுகின்ற துருத்தியினால் நெருப்பு மிகுந்தும், பின்னர் மடங்கியும் எழுந்து அடங்குமாப் போல, வெப்பப் பெருமூச்சு விட்டுத் தவித்தான்.

தசரதனின் சொல்ல முடியாத்துயரத்தை, மாதுயரம் என்றும், வேதனை முற்றிட என்றும், வெந்து வெந்து என்று அடுக்கியும், கனல் என்றும் எல்லாவகை அடைமொழிகளையும் கொடுத்துக் கூறிய கவிஞன், மேலும் அதை அளவிட்டுச் சொல்ல ஒருவராலும் முடியாது என்று கூறுவதும், அத்துயரத்தின் மிகுதியைக் கற்போருக்கு நன்கு புலப்படுத்தும். கைகேயியின் சொல்லைக் கேட்ட போது அடைந்த துயரத்தைக் காட்டிலும், அதை நினைக்கும் தோறும் துன்பம் மிகுந்தது என்பது கருத்து. தசரதனது நெட்டுயிர்ப்பின் வெம்மைக்கு, கொல்லனது உலைக்களத்தின் நெருப்பு உவமை.

17. உலர்ந்தது நா; உயிர்ஓடல் உற்றது; உள்ளம்
புலர்ந்தது; கண்கள் பொடித்த பொங்கு சோரி;
சலம் தலைமிக்கது; ''தக்கது என்கொல்?'' என்று என்று
அலந்து, அலையுற்ற அரும்புலன்கள் ஐந்தும். (1599)

(உலர்ந்தது-வறண்டது; உற்றது-தொடங்கியது; புலர்ந்தது-வாடியது; சோரி-இரத்தம்; பொடித்த-வடித்தன / தோற்றுவித்தன; அலந்து-வருந்தி; சலம்-கோபம்; அலையுற்ற-கலங்கின; புலன்கள்-பொறிகள்)

''இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று எண்ணி எண்ணி வருந்தி, நாக்கு வறண்டு போனது; உயிர் பிரியத் தொடங்கியது; மனம் வாடிப் போனது; கண்கள் பொங்குகின்ற இரத்தத்தைத்

Koviloor Digital Library

தோற்றுவிக்கலாயின; கோபம் தலைக்கேறியது; ஐம்பொறிகளும் என்ன செய்வதென்றறியாது கலக்க முற்றன.

தசரதனின் மரண அவஸ்தையைத் தெரிவிக்கிறது இப்பாடல். ''புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி, அறிவு அழிந்திட்டு'' என்பது திருஞானசம்பந்தர் தேவாரம். மரண காலத்தில் புலன்கள் தடுமாறும் என்பது கருத்து. அத்தகைய நிலையைத் தசரதன் இப்போது அடைந்தான் என்பதாம்.

18. மேவி நிலத்தில் இருக்கும்; நிற்கும்; வீழும்;
ஓவியம் ஒப்ப உயிர்ப்பு அடங்கி ஓயும்;
பாவியை உற்று, எதிர் பற்றி, எற்ற எண்ணும்;
ஆவி பதைப்ப அலக்கண் எய்துகின்றான். (1600)

(ஆவி-உயிர்; பதைப்ப-துடிக்க; அலக்கண்-துன்பம்; மேவி-பொருந்தி; இருத்தல்-உட்காருதல்; எற்றல்-மோதுதல்)

தன்உயிர்துடிக்கத்துன்பமடைபவனானதசரதன், நிலத்தில்சிறிது நேரம் அமர்ந்திருப்பான், பின்னர் எழுந்து நிற்பான்; நிற்க முடியாமல் விழுவான்; மூச்சு நின்று விட்டதைப் பார்க்கும்போது உயிரற்ற ஓவியம் போல இருப்பான்; தனது உயிர்க்குயிரான இராமனைக் காட்டுக்கு அனுப்பும்படி சொன்ன பாவியாகிய கைகேயியை அடைந்து, அவள் எதிரில் சென்று அவளைப் பற்றித் தரையில் மோத எண்ணுவான். அவ்வளவு கோபம் கொண்டவனானான்தசரதன். உடல், அசைவின்மையின் ஓவியம் உவமை ஆயிற்று.

19. பெண் என உற்ற பெரும் பழிக்கு நாணும்;
உள்நிறை வெப்பொடு உயிர்த்து உயிர்த்து உலாவும்;
கண்ணினில் நோக்கும்; அயர்க்கும்; வன்கைவேல் வெம்
புண் நுழைகிற்க உழைக்கும் ஆனை போல்வான்; (1601)

(உழைக்கும்-வருந்தும்; அயர்த்தல்-சோர்ந்து போதல்)

வலிய கைகளினால் எறிந்த வேல், கொடிய புண்ணில் நுழைகின்ற போது வருந்துகின்ற யானையைப் போன்ற தசரதன், தான் முன்பு நினைத்த எதிர் பற்றி எற்றும் எண்ணத்தை நினைந்து பெண் கொலைப்பழிக்கு ஆளாக வேண்டுமே என்று அதனைச் செய்வதற்கு அஞ்சுவான். அதனால் வருகின்ற பழிக்கு நாணுவான். தன் உள்ளத்தில் நிறைந்திருக்கின்ற கோபத்தோடு பெருமூச்சுக்கள் பலமுறை விட்டு இங்குமங்கும் உலாவுவான். கைகேயியை மீண்டும் ஒருமுறை தன் கண்களால் நோக்குவான். ஒன்றும் செய்ய முடியாததால் பின் சோர்ந்து கீழே விழுந்து விடுவான்.

நாணுதல் என்பது சான்றோர் தமக்கு ஏலாதன செய்வதற்குப் பின் வாங்குதல்; தனக்குப் பொருந்தாத இழிந்த செயலில் மனம் ஒருங்குதல்;

Koviloor Digital Library

வெம்புண் என்றது முதல் வரம்; கைவேல் நுழைதல் இரண்டாவது வரம். ''வெந்தஹோர் புண்ணின்கண், வேல்கொண்டு நுழைப்பான் போல்'' என்பது கலித்தொகை.

20. தசரதன் நிலைகண்ட மற்றவர் செயல்கள்

கம்ப நெடுங்களி யானை அன்ன மன்னன்
வெம்பி விழுந்து அழும் விம்மல் கண்டு, வெய்துற்று
உம்பர் நடுங்கினர், ஊழி பேர்வது ஒத்தது;
அம்புஅன கண்ணவள் உள்ளம் அன்னதேயால்; (1602)

(கம்பம்-அசைவு /கட்டுத்தறி / ஆடுதல்; வெய்துறல்-மனம் வெந்து நடுங்குதல்; விம்முதல்-தேம்புதல்)

கட்டுத்தறியில் கட்டப்பட்டிருக்கும் மிக்க மதத்தையுடைய யானையைப் போன்ற மன்னவனான தசரதன், வெதும்பி விழுந்து அழுது தேம்பி நிற்பதைக் கண்டு தேவர்களும் மனம் வெந்து நடுங்கி நின்றனர்; பிரளய காலமே வந்து, உலகமே நிலைபெயர்வதைப் போல இருந்தது; அப்படி இருந்தும் அம்புபோன்ற கண்களையுடைய கைகேயி மட்டும், தான் முன்பு இருந்த நிலையிலிருந்து சற்றும் பின் வாங்காது உறுதியாய் இருந்தாள்.

இங்கேதசரதனது நிலைக்குக்கட்டுத்தறியில்கட்டப்பெற்றயானையை உவமை கூறியது சாலப் பொருத்தமுடையதாகும். வரங்கள் என்னும் கட்டுத்தறியில் அகப்பட்டவனான தசரதன் என்பது உட்பொருள். அதேபோலக் கைகேயியின் கண்களுக்கு அம்பினை உவமை கூறியிருப்பதும் மிகப்பொருத்தமுடையதாகும். அம்புக்குப் புண் செய்யத்தான் தெரியும். அப்புண்ணை ஆற்றத் தெரியாது. அதுபோலக் கைகேயியிக்கும் தசரதன் மனத்தைப் புண்செய்யத்தான் தெரிந்ததே தவிர, அதிலிருந்து அவன்மீளும்வழியைச்சொல்லத்தெரியவில்லைஎன்பதாம்.

21. அஞ்சலள்; ஐயனது அல்லல் கண்டும் உள்ளம்
நஞ்சிலள்; நாண்இலள் என்ன நாணமா மால்
வஞ்சனை பண்டு மடந்தை வேடம் என்றே
தஞ்சுஎன மாதரை உள்ளலார்கள் தக்கோர். (1603)

(ஐயன்-தலைவன் / கணவன்; அல்லல்-துன்பம்; நஞ்சு-நைஞ்சு / நைந்து; தஞ்சு-பற்றுக்கோடு / ஆதரவு; தக்கோர்-பெரியோர்; உள்ளலார்-எண்ணமாட்டார்)

தனது கணவனான தசரதனுக்கு ஏற்பட்ட துயரம் கண்டும் கூட அவள் அச்சம் கொள்ளவில்லை; இரக்கமும் கொள்ளவில்லை. இப்படிச் செய்கிறோமே, உலகோர் தூற்றுவார்களே என்று வெட்கப்படவும் இல்லை. இப்படிப்பட்ட குணங்களைக் கொண்ட அவளைப் பற்றிச் சொல்ல, நமக்கே வெட்கமாக இருக்கிறது. அதனால்தான் சான்றோர்கள்

Koviloor Digital Library

பண்டைக்காலந்தொட்டே பெண்கள் வஞ்சனையின் மொத்த வடிவம் என்று கருதி அவர்களை என்றுமே பற்றுக்கோடாகவோ, துணையாகவோ, ஆதரவாகவோ எண்ணியதில்லை.

கணவனது துயர நிலையைக் கண்டு அச்சம் கொள்வதும், இரக்கப் படுவதும் பொதுவாகப் பெண்களின் இயல்பு. ஆனால் கைகேயி தான் எடுத்த முடிவில் இருந்து மாறாது உறுதியாய் இருப்பதை மனத்தில் கொண்டு, இப்போது தசரதன் படும் அல்லல் கண்டு அஞ்சவும் இல்லை; இரங்கவும் இல்லை. நாணம் கொள்ளவும் இல்லை. இதைக் குறிப்பாகக் கொண்டு, கவிஞன் ஒரு பொதுக் கருத்தைக் கூறுகிறான். பொதுவாகப் பெண்களே வஞ்சனையின் மொத்த உருவம். அவர்களை ஆதரவாகப் பெரியோர்கள் கருதமாட்டார்கள் என்கிறான். எனவே தசரதன் கைகேயியிடம் இவ்வளவு அதீத அன்பும் நம்பிக்கையும் கொண்டது தவறு என்றும், அதன்பயனை இப்போது அனுபவிக்கிறான் என்பதையும் குறிப்பால் காட்டுகிறான் கவிஞன். ''பண்டு அறியேன் கூற்று என்பதனை; இனி யறிந்தேன் பெண்தகையால் பேரமர்க்கட்டு'' என்பது குறள் 1083. அங்கே பெண் வடிவம் கூற்றாகக் கூறப்பட்டது.

22. தசரதன் கைகேயியை மீண்டும் வினவுதல்

இந்நிலை நின்றவன் தன்னை, எய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவன், ''நீ திசைத்தது உண்டோ?
பொய்ந் நிலையோர்கள் புணர்த்த வஞ்சம் உண்டோ?
அந்நிலை சொல் எனது ஆணை உண்மை'', என்றான். (1604)

(எய்த-உற்று; திசைத்து-திகைத்து / பிரம்மித்து / சித்த மயக்கம்; புணர்த்த-கட்டிக்கூறிய)

இவ்வாறு தன் நிலையில் உறுதியாக நின்று அஞ்சாதும், நாணாதும், இரங்காதும் நின்ற கைகேயியை நன்றாக உற்றுப் பார்த்து, நெய் பூசப்பெற்ற வேற்படையை உடைய தசரதன், ''உனது இந்தத் தடுமாற்றம் ஏன்? இந்நிலைக்கு வேறுயாரேனும் பொய்யுரைப்பவர்கள் வஞ்சனையாக இட்டுக் கட்டிக் கூறி உன் மனத்தைத் திரித்துவிட்டார்களா? அல்லது இது நீயே எடுத்த முடிவா? உன்னுடைய உண்மையான நிலையை என்மேல் ஆணையாகச் சொல்'' என்றான்.

இவ்வளவு நாளும் இராமன்மீது பேரன்பு கொண்டிருந்த கைகேயி, இன்று இராமனைக் காட்டிற்குத் துரத்த வேண்டும் என்று சொல்கின்றாள் என்றால் இது அவளாகவே எடுத்த முடிவாக இருக்கமுடியாது. வேறு யாரோ வேண்டாதவர்கள் செய்த சூழ்ச்சியினால் ஏற்பட்ட திட்டமாகத்தான் இருக்க வேண்டும் என்று உணர்ந்த தசரதன் இவ்வாறு கேட்டான் என்பதாம். மேலும் தான் முன்பு இராமன் மீது ஆணை என்று கூறியவன் இப்பொழுது கைகேயிக்கு இராமன்மீது அன்பு குறைந்திருக்கிறது என்பதை உணர்ந்து, அவன்மீது ஆணை என்று

Koviloor Digital Library

கேட்காமல், தன்மீது ஆணையாக உண்மையைச் சொல்லச் சொல்லிக் கைகேயியைக் கேட்கிறான். என்மேல் ஆணையாக உனது மாறுபட்ட நிலையின் காரணத்தை மறைக்காது, உண்மையாகச் சொல். நீ திகைத்துப்போனாயோ அல்லது தீயவர்கள் யாரேனும் உன்மனத்தைக் கெடுத்துவிட்டனரோ, உண்மையைச் சொல் என்று கேட்டான். உறுதி கூறும்போது நம்மிடம் மிக்க அன்புடையார் மீது ஆணையிட்டுக் கூறுதல் வழக்கு.

23. கைகேயியின் விடை

''திசைத்ததும் இல்லை; எனக்குவந்து தீயோர்
இசைத்ததும் இல்லை; முன் ஈந்த இவ்வரங்கள்
குசைப்பரியோய்! தரின், இன்று கொள்வேன்; அன்றேல்
வசைத்திறம் நின்வயின் வைத்து, மாள்வேன்'', என்றாள். (1605)

(இசைத்தது-சொன்னது; குசை-கடிவாளம்; வசைத்திறம்-பழி; வயின்-இடம் / மேல்)

கைகேயி தசரதனை நோக்கி, ''கடிவாளமுடைய குதிரைப் படைகளை உடைய மன்னனே! நான் மனம் தடுமாறவும் இல்லை. எனக்கு வேறுயாரும் வந்து தீய வஞ்சனைச் சொற்களைச் சொல்லித் தரவும் இல்லை; தாங்கள் முன்பு எனக்குக் கொடுத்த இரண்டு வரங்களையும் இப்பொழுது தாருங்கள் என்று நானே தெளிவோடு கேட்கிறேன். இப்பொழுது அவற்றைக் கொடுத்தால் நான் பெற்றுக் கொள்வேன்; இல்லையென்றால் நான் உடனே மடிந்து போவேன்; அதற்கான பழி நின்னை வந்து சேரும்'' என்றாள்.

குசைப்பரியோய் என்று இங்கு கைகேயி தசரதனை அழைக்க ஒரு காரணம் இருக்கிறது. கைகேயி சம்பராசுரயுத்தத்தில் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரைச் செலுத்தியதால்தான் தசரதனுக்கு வெற்றியும், பேரும்புகழும் கிடைத்தன. அப்போதுதான் அவன் இரு வரங்கள் தருவதாகச் சொன்னான்; எனவே அதை நினைவூட்டும் பொருட்டே இப்பொழுது கைகேயி குசைப்பரியோய் என்று தசரதனை அழைத்தாள். வசைத்திறன் என்று பன்மையில் கூறியது, முன்பு தருவதாகச் சொன்ன இரு வரங்களையும் இப்பொழுது தருவதற்குத் தயங்குவதால் வரும் வசையும், மனைவியின் மரணத்திற்குக் கணவனே காரணமானான் என்ற ஊரார் வசையும், பொய் கூறி வாய்மை தவறினான் என்ற வசையும் என்று பழி பல திறப்பட்டதாகலின் வசைத்திறம் எனப் பன்மையில் கூறினாள் என்பதாம். என்மீது ஆணை உண்மையாகச் சொல் என்று தசரதன் கூறியும், கைகேயி பொய்மையேபேசினாள் என்பதால் அவள் தனது கோட்பாட்டில் எத்தனை உறுதியாக இருக்கிறாள் என்பது புலப்படும்.

Koviloor Digital Library

24. தசரதன் வருந்துதல்

இந்த நெடுஞ்சொல் அவ்வேழை கூறும் முன்னே
வெந்த கொடும் புணில் வேல் நுழைந்தது ஒப்பச்
சிந்தை திரிந்து, திகைத்து, அயர்ந்து, வீழ்ந்தான்,
மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன். (1606)

(நெடுஞ்சொல்-வஞ்சினச்சொல் / நெடுமொழி; அயர்ந்து-சோர்ந்து; ஏழை-பேதை / அறிவலி)

தனது மைந்தனாகிய இராமனைத் தவிர வேறு உயிர் என்று தனித்து ஏதும் இல்லாத மன்னன் தசரதன், அறிவற்ற கைகேயியின் இந்தக் கொடுமையான வஞ்சினத்தைக் கூறி முடிக்கும் முன்பே, ஏற்கனவே தன் உள்ளத்தில் புரையோடிக் கொண்டிருக்கும் வெந்த புண்ணில், வேல் என்னும் கூரிய கருவியைப் பாய்ச்சினாற் போலத் தன் உள்ளம் நிலைதடுமாறி, பிரமித்து, சோர்வுற்றுத் தரையில் வீழ்ந்தான்.

ஏழை என்ற சொல், தன் சொற்களால் தன் கணவன் மகிழ்வெய்த மாட்டான், மாறாக மிக்கத் துன்பமடைவான் என்று தெரிந்திருந்தும், தான் பேசத் தகாத சொற்கள் இவை என்பதையும் நன்கு உணராது பேசியதால் அவளைப் பேதை, அறிவிலி என்ற குறிப்புத் தோன்ற ஏழை என்றார். வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்தது ஒப்ப என்ற உவமை கம்பரால் பலவிடத்தும் கையாளப்பட்டிருக்கிறது. தமிழ் இலக்கியங்களிலும் வெந்த புண்ணில் வேல் நுழைவது என்பதும், வெந்த புண்ணில் கனல் நுழைவது என்பதும் பேசப்படுகின்றன. ''வெந்தோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்போல்'' என்பது கலித்தொகை; ''தழல் உறுபுண்மேல் கருவி பாய்ந்து என்ன'' என்பது பெருங்கதை. இராமன்தான் தசரதன்உயிர்என்பதும்பலவிடத்தும்கவிஞனால்கூறப்படுகிற ஒருகூற்று. கைகேயி கேட்ட வரம் வெந்த கொடும்புண்; அவ்வரங்கள் தராவிட்டால் இறப்பேன் என்பது வேல் நுழைதல்; முன்பு கூறியதுபோல் சலபோச முனிவனின் சாபம் வெந்த புண்; கைகேயி கேட்டவரம் வேல் நுழைதல் என்றலுமாம்.

25. ''ஆ! கொடியாய்!'' எனும்; ஆவி காலும்; ''அந்தோ!
ஓ! கொடிதே அறம்!'' என்னும்; ''உண்மை ஒன்றும்
சாக!'' எனா எழும்; மெய் தளாடிவீழும்;
மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான். (1607)

(மாகம்-ஆகாயம் / விண்ணுலகு; நாகம்-பாதாள உலகம்; கால்தல்-சோர்தல்; உண்மை-சத்தியம்; சாக-அழிக)

விண்ணுலகம், மண்ணுலகம், பாதள உலகம் ஆகிய மூன்று உலகங்களையும் வெற்றி கொண்ட வாட்படையை உடைய தசரதன், கைகேயியை நோக்கி, ''கொடியவளே'' என்பான்; தனது உயிர் சோர்ந்து

Koviloor Digital Library

போவான்; ''தருமம் மிகக் கொடுமையானது'' என்பான்; ''வாய்மை அழிந்து போகட்டும்'' என்று சொல்லிக் கொண்டே மனவுறுதியால் எழுந்து நிற்க முயல்வான்; உடல் சோர்ந்து தள்ளாடிக் கீழே விழுவான்.

தசரதனது உள்ள நிலையோடு உடல் நிலையையும் சித்திரமாக்கிக் காட்டுகிறான் கவிஞன். மூன்று உலகத்தையும் வென்றவன், ஒரு பெண்ணிடம் இரந்து நிற்க வேண்டியிருக்கிறதே என்ற குறிப்பை இறுதி அடி உணர்த்துகிறது. இராமனைக் காட்டிற்கு அனுப்ப வேண்டும் என்ற கொடிய மனம் கொண்டவளாதலால் அவளைக் கொடியாய் என்றான்; அவளைக் கொல்லாது விடுவதற்கு அறம் தானே காரணம். எனவே அறமும் கொடியதே என்றான்; இராமனைக் காட்டிற்கு அனுப்பித்தான் ஆகவேண்டும். தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றியே ஆகவேண்டும். எனவே வாய்மை கொடியது. அதுவும் அழிந்து போகட்டும் என்றான். அறமும், வாய்மையும் நன்மைக்குத் துணை புரியாமல், தீமைக்குத் துணை நிற்றலின் அவற்றை இகழ்கிறான். அவன் அறத்தையும் வாய்மையையும் வெறுப்பவன் என்பது பொருளல்ல. இவ்வாறு இடம் நோக்கிப் பேசுவது ''விபரீத லட்சணை'' எனப்படும்.

26. ''நாரியர் இல்லை இஞ்ஞாலம் ஏழும் என்னக்
கூரியவாள் கொடு கொன்று நீக்கி, யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வென்'' என்று பொங்கும்,
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான். (1608)

(வீரியர்-வீரர்கள்; நின்ற-நிலைபெற்ற; நாரியர்-பெண்கள்; பூரியர்-கீழ்மக்கள்; எண்-எண்ணிக்கை; பொங்குதல்-சினம் மிகுதல்; விழுங்கி-வென்று தன்னுள் அடக்கி)

பெருவீரம் கொண்ட வீரர்கள் எல்லோரது வீரத்தையும் வென்று தன்னுள் அடக்கி நிலைபெற்று நின்ற வேற்படையை உடைய தசரதன் ''இந்த ஏழு உலகங்கள் முழுவதும் பெண்கள் குலமே இல்லை என்று கூறுமாப்போல, கூர்மையான வாட்படையைக் கொண்டு, அவர்களைக் கொன்று அழித்து, அப்பழியை ஏற்று நானும் கீழ் மக்கள் என்று சொல்லப்படுபவர்களின் எண்ணிக்கையில் சேர்ந்து விடுகிறேன்'' என்று சினம் கொண்டு பொங்கிக் கூறுவான்.

வீரியரைக் கொன்ற வீரன், நாரியரைக் கொன்று, பூரியனாக விழைவது அறிவின்மையால் அன்று. அப்போது உண்டான மனக்கொதிப்பு அவ்வாறு எண்ணவைத்தது. பெண் இனத்தில் ஒருத்தி செய்த கொடுமை, எல்லாப் பெண்டிரையும், பெண் இனத்தையே கொடியராக்கியது. பரசுராமனின் சபதம் நினைவுக்கு வருகிறதா? ஒரு அரசன் தன் தந்தையின் உயிர் நீங்குவதற்குக் காரணமாக இருந்தான் என்பதற்காக அரச குலத்தையே 21 தலைமுறை கருவறுத்தவனாயிற்றே!.

Koviloor Digital Library

27. கையொடு கையைப் புடைக்கும்; வாய் கடிக்கும்;
''மெய்யுரை குற்றம்'' எனப் புழுங்கி விம்மும்;
நெய்எரி உற்றென, நெஞ்சு அழிந்து சோரும்;
வையகம் முற்றும் நடந்த வாய்மை மன்னன். (1609)

(வையகம்-உலகம்; புடைத்தல்-தட்டுதல்; விம்முதல்-தேம்புதல் / பொருமுதல்; எரி-நெருப்பு; அழிந்து-உருகி; நடந்த-பெயர் பரந்த / பிரசித்த பெற்ற)

இவ்வுலகம் முழுவதும் வாய்மைக்குப் பெயர் பெற்ற மன்னனாகிய தசரதன், செய்வதறியாது சினத்தால் தன் கைகளோடு கைகளை அடித்துக் கொள்வான்; உதட்டைக் கடித்துக் கொள்வான்; ''உண்மை பேசுவதே பெருங்குற்றம் போலும்'' என்று மனம் புழுங்கித் தேம்புவான்; நெருப்பில் ஊற்றப்பட்ட நெய்யைப் போலத் தன் உள்ளம் உருகிச் சோர்ந்து போவான்;

கைபுடைத்தலும், வாய் கடித்தலும் சினத்தின் மெய்ப்பாடுகள்; புழுங்குதலும், விம்முதலும், உருகுதலும் அவலத்தின் மெய்ப்பாடுகள். நெருப்பைச் சேர்ந்த நெய் உருகி வழிதல் போல உள்ளம் உருகியது. அது உருக்குலைதல் போல் நெஞ்சு அழிந்தது என்பதாம். வாய்மையிற் சிறந்தவன் தசரதன் என்பது உலகறிந்தது என்பது நான்காம் அடியின் கருத்து. எனினும் அவனே உண்மை உரைத்தல் குற்றம் போலும் என்று எண்ணச் செய்தது அவனுக்கு இராமன்மேல் உள்ள பேரன்பு என்பது வெளிப்படை.

28. ''ஒறுப்பினும் அந்தரம்; உண்மை ஒன்றும் ஓவா
மறுப்பினும் அந்தரம்'' என்று வாய்மை மன்னன்,
''பொறுப்பினும் அந்நிலை போகிலாளை, வாளால்
இறுப்பினும் ஆவது இரப்பது'' என்று எழுந்தான். (1610)

(ஒறுத்தல்-தண்டித்தல்; அந்தரம்-துன்பம் / தீமை; ஓவா-நீங்கி / காக்காமல்; போகுதல்-மாறுபடுதல்; இறுத்தல்-கொல்லுதல்; ஆவது-சிறப்புடையது / செய்யத்தக்கது; இரப்பது-யாசிப்பது)

சத்திய சீலனான தசரதன், ''இவளைத் தண்டித்தாலும் துன்பம் உண்டாகும்; உண்மையிலிருந்து நீங்கி அவள் கேட்ட வரத்தைத் தர மறுத்தாலும் தீமை உண்டாகும்; பொறுத்துக் கொள்ளலாம் என்றாலும் அவள் தன் நிலையிலிருந்து சிறிதும் மாறுபடாதவளாக இருக்கிறாள். எனவே இவளை வாளால் கொல்லுதலைக் காட்டிலும், இப்போது செய்யத் தகுந்த சிறப்பான செயல் இவளிடமிருந்து யாசித்துப் பெறுவது தான்'' என்று கருதி எழுந்தான்.

அவளைத் தண்டிப்பதால் பெண் கொலைப் பழியும், மறுப்பதால் வாய்மை தவறிய பழியும் வந்து சேரும் என்பதாம். எனவே இவ்விருவழியையும் விட்டு, சமாதானமாக யாசித்துப் பார்ப்போம் எனத் துணிகிறான் என்பதாம்.

Koviloor Digital Library

29. தசரதன் கைகேயியின் கால்களில் விழுதல்

கோல்மேற் கொண்டும் குற்றம் அகற்றக் குறிகொண்டார்
போல், மேல் உற்றது உண்டுஎனின், நன்றாம் பொறை என்னாக்
கால்மேல் வீழ்ந்தான், கந்துகொல் யானைக் கழல் மன்னர்
மேல்மேல் வந்து முந்தி வணங்க மிடை தாளான். (1611)

(கந்து-கட்டுத்தறி; கொல்-முறிக்கின்ற; முந்தி-முற்பட்டு; மிடைதல்-நெருங்குதல்)

கட்டுத்தறியை முறிக்கின்ற யானைப் படைகளையும், வீரக் கழல்களையணிந்தவருமான அரசர்கள் ஒருவர் மேல் ஒருவர் நெருங்கி முந்திக் கொண்டு வந்து வணங்குகின்ற பாதங்களையுமுடைய தசரதச் சக்கரவர்த்தி, தான் செலுத்தும் செங்கோல் ஆட்சியில் நாட்டில் நிலவும் குற்றங்கள் அகல, அதையே குறிக்கோளாகக் கொண்ட உத்தம மன்னர்களைப் போல, தன்னுடைய செய்கையால்-அது தன் தகுதிக்குச் சற்றே தாழ்ந்ததானாலும், அதனால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை விளையுமென்றால், சிறிது பொறுமை மேற்கொண்டு அக்காரியத்தைச் செய்தல் நல்லது என்று கருதி, கைகேயியின் கால்களில் விழுந்தான்.

இதுபோலத் தன் பெருமையைக் கருதாது, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்குமெனின் தன் நிலையில் இருந்து சிறிது தாழ்ந்து போய்க் காரியம் ஆற்றுதல் தவறாகாது என்பது பொற்கைப் பாண்டியனின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சியால் அறியலாம். அவன் யாத்திரை சென்றிருந்த அந்தணன் வீட்டை ஒரு காவல்காரன் போல் காத்து நின்றான். இவன் தன் மனைவியின் கால்களிலேயே விழுந்து யாசித்தான். குறிக்கோள் மட்டும் ஒன்றே. இவர்கள் செய்கைகளின் உட்கருத்து நாட்டிற்கு நன்மை விளைய வேண்டும் என்பதே. வலிமை கொண்ட மன்னவர்களெல்லாம் இவன் அரிய பாதங்களை வணங்கி நிற்க, இவன் மென்மையான மங்கையின் பாதங்களைவணங்கி நின்றான்என்று கூறுவது ஒரு நயம். பொறைஎன்பது, ஒருவன் தமக்கு மிகை செய்த வழித் தாமும் அதனை அவன்கண் செய்யாது பொறுத்தலையுடையராதல்.

30. தசரதன் அவளை யாசித்து வேண்டுதல்

"கொள்ளான் நின்சேய் இவ்வரசு; அன்னான் கொண்டாலும்
நள்ளாது இந்த நானிலம்; ஞாலம் தனில் என்றும்
உள்ளார் எல்லாம் ஓத உவக்கும் புகழ் கொள்ளாய்
எள்ளா நிற்கும் வன்பழி கொண்டு என்பயன்?" என்றான். (1612)

Koviloor Digital Library

(நள்ளுதல்-விரும்பி உடன்படுதல்; ஓத-பாராட்டிக்கூற; எள்ளா-எள்ளி / இகழ்ந்து; நானிலம்-உலகம்)

''நீ நினைக்கின்றபடி உன் மகன் பரதன் இவ்வரசாட்சியை ஏற்றுக் கொள்ளமாட்டான்; உன் கட்டாயத்தினால் ஒரு வேளை அவன் ஏற்றுக் கொண்டாலும், அதற்கு இவ்வுலகம் அதனை விரும்பி உடன்படாது. இவ்வுலகத்தில் உள்ளவர் எல்லோரும் என்றும் போற்றிப் புகழ்கின்ற மகிழ்ச்சியை அடைய விரும்பாது; அவர்கள் எள்ளி நகையாடுகின்ற இகழ்ச்சியையும் அதனால் வருகின்ற பெரும் பழியையும் ஏற்றுக் கொள்வதனால் நீ என்ன நன்மை அடைப் போகிறாய்?'' என்று தசரதன் கைகேயியை நோக்கிக் கேட்டான்.

தசரதன் பரதனின் நற்குணங்களை அறிந்தவன். மூத்தவர்க்கே அரசுரிமை உரித்து என்பதைப் பரதன் நன்கு அறிந்தவன் என்பதைத் தசரதன் நன்கு உணர்ந்தவன். எனவேதான் கொள்ளான் என்று முதலிலேயே மறுத்து விடுகிறான். பின்னர் நம் சேய் என்று கூறாது முன்னர் கைகேயி என்சேய் என்று பிரித்துக்கூறியது போலவே தசரதன் இப்பொழுது நின்சேய் என்று பிரித்துக் கூறுகிறான். முறைப்படி மூத்தவர்க்கு உரித்து அரசு என்பதால் அடையப் போகும் நன்மை புகழ்; அதற்கு மாறுபட்டு நடப்பதால் அடையப்போகும் தீமை வன்பழி. ஏன் புகழை விரும்பாது வன்பழியை விரும்புகிறாய் எனக் கேட்கிறான்.

31. ''வானோர் கொள்ளார்; மண்ணவர் உய்யார்; இனி மற்றுஎன்
ஏனோர் செய்கை? யாரோடு நீ இவ்வரசு ஆள்வாய்?
யானே சொல்லக் கொள்ள இசைந்தான்; முறையாலே
தானே நல்கும் உன் மகனுக்கும் தரை'' என்றான். (1613)

(ஏனோர்-கீழ் உலகத்து நாகர்கள்; தரை-நாடு; உய்யார்-உயிர் வாழார்)

''இராமன் காட்டிற்குச் செல்லுதலையும், பரதன் அரசாட்சி ஏற்பதையும் தேவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்; மண்ணுலகத்தில் உள்ளவர்களும் அதனை ஏற்றுக் கொள்ளாததோடு மட்டுமல்ல உயிரும் தரியார்; மற்று இருக்கின்ற பாதள லோகத்து நாகர்களைப் பற்றிக் கூறுவது ஏன்? அவர்களும் அவ்வாறே செய்வர். எனவே மூவுலகத்தவரும் இதனை விரும்பி ஏற்றுக் கொள்ளாத போது, சூனியமான, ஆளப்படுவோர் எவரும் இல்லாத இவ்வுலகை யாருடன் இருந்து நீ அரசாட்சி செய்யப் போகிறாய்? இராமன் ஒன்றும் தானே விரும்பிக் கேட்டு இவ்வரசாட்சியைப் பெறவில்லை; நான் விரும்பி அழைத்துச் சொன்னதாலும், மூத்தவன் என்கின்ற முறையாலும், தந்தை சொல்லைத் தட்டக்கூடாது என்ற கடமையாலும் முறையாக இதற்கு இசைந்தான். எனவே நீயும் அவனிடம் முறையாகக் கேட்பாயானால் நான் என் இளையவனான இராமனுக்கு அரசாட்சி தந்ததைப் போல், அவனும் அவனுக்கு இளையவனான பரதனுக்கு இவ்வுலக அரசாட்சியைத் தந்துவிடுவான்.

Koviloor Digital Library

அவ்வாறிருக்கஏன்இராமன் காடு போக வேண்டும் என்று வற்புறுத்துகிறாய்?'' என்றான் தசரதன்.

32. ''கண்ணே வேண்டும் எனினும் ஈயக்கடவேன்; என்
உள்நேர் ஆவி வேண்டினும் இன்றே உனது அன்றோ?
பெண்ணே! வண்மைக் கேகயன் மானே! பெறுவாயேல்
மண்ணே கொள் நீ! மற்றையது ஒன்றும் மற'' என்றான். (1614)

''கைகேயிப் பெண்ணே! வள்ளன்மை மிக்க கேகய அரசனின் திருமகளே! என்னுடைய கண்ணை வேண்டுமானாலும் கேள் அதனைக் கொடுப்பதற்குச் சித்தமாயிருக்கிறேன். அது எனது கடமை; என்னுடைய உள்ளத்தில் பொருந்தியிருக்கின்ற உயிரை வேண்டுமென்றாலும் இப்பொழுதே எடுத்துக்கொள். ஏனெனில் அது உன் கையில் தான் இருக்கிறது; என்னிடமிருந்து வரம் பெறவேண்டும் என்று எண்ணுவாயானால் நீ முதலில் கேட்ட வரமாகிய இவ்வுலக அரசாட்சியை நீயே ஏற்றுக்கொள். ஆனால் இரண்டாவதாகக் கேட்டாயே; அந்த வரத்தை மட்டும் மறந்து விடு. அதைக் கேட்டு வற்புறுத்தாதே'' என்றான் தசரதன்.

மனித உறுப்புகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது கண்; அதனினும் அரிது உயிர்; இவ்விரண்டையும் வேண்டுமானாலும் பெற்றுக் கொள். ஆனால் என் கண், என் உயிரான இராமனை மட்டும் காட்டிற்குச் செலுத்தும் வரத்தை மட்டும் கேட்காதே; மறந்துவிடு என்பது கருத்து. தசரதனுக்கு இராமன் கண்ணினும் உயிரினும் சிறந்தவன் என்பதாம். வண்மைக் கேகயன் மகள் என்று கூறியது வள்ளன்மையால் கொடுப்பதே சிறந்தது; கொடுப்பதைத் தடுப்பது தகாது என்பதை உணர்த்த, அரசாட்சி என்று கூறாது மண்ணே கொள் என்றதனால் தசரதன் இப்போதிருக்கிற தொய்வு நிலையும், அவனுக்கு அரசியலில் ஏற்பட்ட வெறுப்பும் புலனாகும்.

இராமனைக் காட்டிற்குச் செலுத்துதல் என்பதை நினைத்துப் பார்க்கவும் கூசும் தசரதன் அதனைச் சொல்வதற்கு அஞ்சி, ''மற்றையது'' என்றான் என்க. பரதன் மண்ணே கொள்க என்று கூறாமல் மண்ணே கொள் நீ என்று கைகேயியைக் குறிப்பிட்டதனால் அவனது உள்ளத் தாழ்ச்சி நிலை நன்கு புலனாகும்.

33. ''வாய்தந்தேன் என்றேன்; இனி, யானோ அது மாற்றேன்;
நோய்தந்து என்னை நோவன செய்து நுவலாதே;
தாய்தந்து என்னத் தன்னை இரந்தால் தழல் வெம்கண்
பேய்தந்து ஈயும்; இது நீ தந்தால் பிழையாமோ?''. (1615)

(நோய்-வருத்தம்; நோவன-துன்புறுத்துவன; நுவல்தல்-பேசுதல்; தழல்-நெருப்பு; வெம்-கொடிய; வாய்-வாய்மை / வார்த்தை; தந்து ஈயும்-தரும்)

Koviloor Digital Library

''வரம் தருவேன்'' என்று என் வாயினால் உரைத்துவிட்டேன்; யான் இனி அதனின்றும் சிறிதும் மாற மாட்டேன்; நான் மறுத்து விடுவனோ என்று எனக்கு வருத்தத்தை தந்து என்னைத் துன்புறுத்துகின்ற சொற்களைச் சொல்லி என்னை வருத்தாதே; நெருப்புப் போன்ற கொடிய கண்களையுடைய பேய்கூட, அதனை விரும்பி யாசித்தால், தாய் தருவது போல, நாம் கேட்பவற்றைத் தந்து மகிழும். எனவே, நீ நான் கேட்கும் இம் ''மற்றைய தொன்றையும் மற'' என்ற வரத்தைத் தந்து விட்டால் அது தவறாகுமா? ஆகாது என்பதாம்.

இரக்கமில்லாத கொடிய பேயே, இரந்து கேட்டால், தாய் போல அன்பு கொண்டு நாம் கேட்டதைக் கொடுக்கும் என்பர். ஆனால் தாயாகிய நீ, நான் யாசித்துக் கேட்டும் நீ கொடுக்காமலிருக்கிறாயே? இது தவறில்லையா என்பதாம். நீ தாயாயிருந்தும் பேயினும் கொடியவளாக இருக்கின்றாய் என்கிறான்.

34. கைகேயி பதில் கூறுதல்

இன்னே இன்னே பன்னி, இரந்தான் இகல் வேந்தன்;
தன்நேர் இல்லாத் தீயவள், உள்ளம் தடுமாறாள்;
''முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய் முனிவாயேல்
என்னே மன்னா? யார் உளர் வாய்மைக்கு இனி?'' என்றாள். (1616)

(இகல்-வலிமை / வெற்றி / போர்; பன்னி-பல முறை சொல்லி; நேர்-ஒப்பு / உவமை)

போர் செய்வதில் வல்லமையும் வெற்றியும் உடைய தசரதன், இவ்வாறு இத்தன்மையனவான வார்த்தைகளைப் பல முறை சொல்லிச் சொல்லி யாசித்தான்; ஆனால் தனக்குக் கொடுமையில் ஒப்பில்லாதவளான தீயவளாகிய கைகேயி தான் கொண்ட கொள்கையிலிருந்து சிறிதும் மாறுபடாமல் உறுதியாய் இருந்தாள். ''அரசே! எனக்கு நீர் தான் முன்னர் இவ்விருவரங்களையும் தந்தீர்; இப்போது அது தருவதற்குத் தயங்கி, என்னைக் கோபிப்பீரானால் என்னாவது? இனி இவ்வுலகில் சத்தியத்தைக் காப்பதற்கு வேறு யார் இருக்கின்றார்கள்?'' என்றாள் கைகேயி.

கட்டளை இட்டுக் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டிய வெற்றி வேந்தன், இவளிடம் மீண்டும் மீண்டும் இரந்து யாசித்தான் என்பது புலப்பட, ''இன்னே இன்னே பன்னி இரந்தான் இகல் வேந்தன்'' என்றார். தன் நேரில்லாத் தீயாள் என்றது முன்பு, தீயவை யாவையினும் சிறந்த தீயவள் என்று கூறியதற்கு ஒப்பு; வாய்மை காக்க வேண்டிய மன்னனே சத்தியம் தவறினால், இனி வாய்மை பேசுவோரே எவரும் இருக்க மாட்டார்கள் என்பது அவள் உள்ளக் கருத்து.

Koviloor Digital Library

35. தசரதன் கூறுதல்

அச்சொல் கேளா, ஆவி புழுங்கா, அயர்கின்றான்;
பொய்ச்சொல் பேணா வாய்மொழி மன்னன் பொறை கூர,
''நச்சுத்தீயே; பெண்உரு அன்றாம்'' என நாணா,
முச்சுஅற்றார் போல் பின்னும் இரந்தே மொழிகின்றான். (1617)

(பேணா-விரும்பாத / போற்றாத; ஆவி-உயிர்; அயர்தல்-சோர்தல்; கூர-மேற்பட / மிக; முச்சு-மூச்சு; கேளா-கேட்டு; புழுங்கா-புழுங்கி; நாணா-நாணி)

பொய்ச் சொற்களையே பேச விரும்பாத, எப்போதும் உண்மையே பேசுகின்ற சத்திய சீலனான தசரதன், மிக்க பொறுமையுடன், அவள் கூறிய சொற்களைக் காதுகொடுத்துக் கேட்டுத் தன் உயிர் புழுங்கும்படி சோர்ந்து நின்றான். என்றாலும் அவனால் ஏதும் செய்ய இயலவில்லை; ''இவள் நஞ்சு, நெருப்பு ஆகிய இரண்டின் ஒட்டு மொத்த உருவத்தாள்'' என்று கருதி, அவளுடைய இந்த இழிந்த செயலுக்காக வெட்கி, மூச்சு நின்று போனவர் போல சிறிது நேரம் மூர்ச்சையுற்றுக் கிடந்து, பின்னும் அவளிடம் யாசித்தே சில வார்த்தைகளைக் கூறலானான்.

தசரதனுடைய உள்ள நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது இப்பாடல். கையறு நிலை-ஒன்றும் செய்ய முடியாத போது வணங்கி இரந்தே தான் பெற்றாக வேண்டிய நிலை. எனவே அவளை நச்சுத்தீ என்று சினந்து தன் உள்ளத்தை ஆற்றிக் கொள்கிறான் என்பதாம்.

36. ''நின்மகன் ஆள்வான்; நீ இனிது ஆள்வாய்; நிலம் எல்லாம்
உன்வயம் ஆமே; ஆளுதி; தந்தேன்; உரைகுன்றேன்;
''என்மகன், என்கண், என்உயிர், எல்லா உயிர்கட்கும்
நன்மகன், இந்தநாடு இறவாமை நய!'' என்றான். (1618)

(குன்றுதல்-தவறுதல்; இறவாமை-கடந்து போகாத நிலைமை / வெளியேறாமை / நீங்காதிருப்பது; நய-விரும்பு)

''உன்னுடைய மகன் பரதன் இந்த நாட்டை ஆளட்டும்; அவனுடன் சேர்ந்து நீயும் இனிதாக இந்த நாட்டை ஆட்சி செய்வாயாக; உலகம் எல்லாவற்றையும் உன் வசமாக்கி விட்டேன். நன்றாக ஆண்டு கொள். நான் கூறியபடி அரசுரிமையைத் தந்துவிட்டேன். என் வார்த்தைகளிலிருந்து நான் சிறிதும் தவற மாட்டேன். ஆனால் என்னுடைய மகன், எனக்குக் கண் போன்றவன், என் உயிர் போன்றவன், இவ்வுலக மக்களுக்கெல்லாம் நல்ல மகனைப் போன்றவனாகிய இராமன் மட்டும், இந்த நாட்டை விட்டு வெளியேறி நீங்கிப் போகாத நிலையை நீ விரும்பு'' என்றான் தசரதன்.

இங்கே பரதனை நின் மகன் என்றும், இராமனை என் மகன் என்றும் தசரதன் கூறியது கூர்ந்து நோக்கத்தக்கதாகும். அவ்வாறே இராமன் நாடு கடவாமையை நல்கு என்று கூறாமல், நய என்று பணிந்து நயந்து

Koviloor Digital Library

வேண்டுவதையும் கருத வேண்டும். பரதன்தானே நாட்டை ஆள வேண்டும். நீ ஆளுதி என்கின்றானே? எப்படி? பரதன் இவ்வாட்சியை-முறைதவறி வந்த அரசுப் பொறுப்பை ஏற்க மாட்டான் என்பது தசரதனுக்கு நன்கு தெரியும். எனவே தான் அவன் மறுத்தால் நீயே ஆள்வாயாக; அதுவும் இனிதே ஆள்வாயாக! என்றான். இறுதி இரண்டு அடிகளிலும் தசரதன் இராமன்பால் கொண்ட அன்பு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

37. ''மெய்யே என்தன் வேர்அற நூறும் வினை நோக்கி,
நையா நின்றேன்; நாவும் உலர்ந்தேன்; நளினம்போல்
கையான், இன்று என் கண்எதிர் நின்றும் கழிவானேல்
உய்யேன்; நங்காய்! உன் அபயம் என்உயிர்'' என்றான். (1619)

(நையா-நைந்து / வருந்தி; நளினம்-தாமரை; கழிதல்-பிரிதல் / நீங்குதல்; உய்தல்-பிழைத்தல்; அபயம்-அடைக்கலம்; நங்கை-பெண்டிரில் சிறந்தவள்; வேர்-மூலம்; நூறுதல்-அழித்தல்)

''நான் மேற்கொண்ட வாய்மையே எனது மூல வேரே இற்று அழியும் படியாவதற்குக் காரணமான எனது ஊழ்வினையை நோக்கி நான் வருந்துகின்றேன்; என் நாவெல்லாம் வறண்டு போயிற்று. தாமரை மலர் போன்ற கைகளையுடைய இராமன், என் கண் எதிரிலேயே, இந்நாட்டை விட்டு வெளியேறிச் செல்வான் என்றால் நான் உயிர் பிழைத்திருக்க மாட்டேன்; கைகேயி! என் உயிர் உன்னிடம் அடைக்கலம் என்றான்.

நங்காய் என்பது பெண்டிருள் சிறந்தோரை அழைக்கும் விளி. தசரதன் முன் பாட்டில் நச்சுத் தீ என்று கூறி இப்பாட்டில் பெண்களில் சிறந்தவளே என்பது, அவளிடம் பணிந்து வேண்டுகிறான் என்பதைக் குறிக்கும். முன்னும் பரசுராமனிடம் இவனும் என் உயிரும் உன்னிடம் அடைக்கலம் என்று கூறியது இங்கு நினைவிற்கொள்ளத் தகும். கைகளை மட்டும் சொல்லியதால் அதன் இனமான மற்ற உறுப்புக்களும் அடங்கும். கண்ணும், திருவடியும், கையும், திருவாயும், செய்ய கரியவன்'' என்பது சிலப்பதிகாரம்.

38. கைகேயியின் மறுமொழி

இரந்தான் சொல்லும் இன்னுரை கொள்ளாள்; முனிவு எஞ்சாள்;
மரம்தான் என்னும் நெஞ்சினள்; நாணாள்; வசை பாராள்;
''சரம் தாழ்வில்லாய்! தந்த வரத்தை தவிர்க என்றல்
உரம்தான் அல்லால், நல்அறம் ஆமோ? உரை!'' என்றாள். (1620)

(முனிவு-கோபம்; எஞ்சுதல்-குறைதல்; வசை-பழி; சரம்-அம்பு; தாழ்-பொருந்தும் / தங்கும்; உரம்-வலிமை / அறிவு;

Koviloor Digital Library

இரந்து பணிந்து கேட்கும் தசரதனது இனிய உரைகளைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை கைகேயி; அவனுடைய கோபத்திற்கு அஞ்சவில்லை; மரம் தானோ என்று சொல்லும் படியான வலிமையான நெஞ்சத்தை உடையவளானாள்; தன் செய்கைக்காக வெட்கப்படவில்லை. அதனால் வரும் பழிக்கு அஞ்சவில்லை. அவள் தசரதனை நோக்கி, ''அம்புகள் தங்கும் வில்லையுடைய அரசே! தாங்கள் முன்பே நல்கிய வரங்களை இப்போது மறந்துவிடு, விட்டுவிடு என்று சொல்வது தங்களுடைய வலிமையைக் குறிக்குமே அல்லாது அறத்தின் பாற்பட்டதன்று; தருமமாகாது; நீங்களே நியாயத்தைச் சொல்லுங்கள்'' என்றாள்.

உருகாதவள் நெஞ்சிற்கு மரம் உவமை. நீ விடுக்கின்ற அம்பு எவ்வாறு இலக்குத் தப்பாது தாக்குகிறதோ அதைப்போல நின் வாயிலிருந்து வந்த சொற்களும் அதன் பயனைத் தந்தே தீரவேண்டும் என்ற உட்கருத்தைச் சொல்லத் தான் ''சரம் தாழ் வில்லாய் என்கிறாள் என்பதாம். முன்பு தந்த வரத்தைத் தவிர்க'' என்று சொல்லுதல் வலிமையும் ஆகாது, தருமமும் ஆகாது, அறிவிற்கும் ஒவ்வாது என்பதாம். உரம் அறிவு. நீ இரப்பது போல மென்மையாகக் கூறினாலும் அது நீ என்னை வலியுறுத்தும் ஆணையாகவே தோற்றுகிறது. இது தருமமாகாது என்பதாம். ''மரங்கள் போல் வலிய நெஞ்சனேன்'' என்பது திவ்வியப்பிரபந்தம். வள்ளுவர் மரத்தை மக்கட் பண்பில்லாதவர்க்கு ஒப்பிடுவார். எனவே கைகேயி மக்கட்பண்பு இல்லாதவள் என்பது உட்கருத்து.

39. தசரதன் உற்ற துன்ப நிலை

கொடியாள் இன்ன கூறினள்; கூறக் குலவேந்தன்
''முடிசூடாமல் வெம்பரல், மொய் கானிடை மெய்யே
நெடியான் நீங்க, நீங்கும் என் ஆவிஇனி'' என்னா
இடியேறு உண்ட மால்வரைபோல், மண்ணிடை வீழ்ந்தான். (1621)

(குல-சிறந்த; மொய்-நெருங்கியுள்ள; உண்ட-தாக்கப்பெற்ற; வெம்பரல்-வெப்பமிக்க பருக்கைக் கற்கள்)

கொடியவளான கைகேயி இத்தகைய சொற்களைக் கூறியதைக் கேட்ட சிறந்த மன்னர் மன்னனாகிய தசரதன், இராமன் முடிசூட்டிக் கொள்ளாமல், வெப்பம் மிக்க பருக்கைக் கற்கள் நிறைந்த கானகத்திற்கு உண்மையாகவே சென்று விட்டானானால், என் உயிர் இப்போதே என் உடலை விட்டு நீங்கிவிடும். நான் இனி உயிர் தரியேன் என்று கூறிப் பேர் இடியால் தாக்கப்பட்ட பெரிய மலைச்சிகரம் விழுந்தது போல், மண்ணில் விழுந்தான்.

நீங்க நீங்கும் என்றது, அவன் இந்நகரை விட்டு நீங்குதலும், என் உயிர் என்உடலைவிட்டு நீங்குதலும் ஏககாலத்தில் நிகழும் என்பதைக் குறித்தது. கைகேயியின் சொற்கள் மன்னனுக்குப் பேரிடி போல் ஆயிற்று என்பதாம்.

Koviloor Digital Library

40. வீழ்ந்தான்; வீழா, வெம்துயரத்தின் கடல் வெள்ளத்து
ஆழ்ந்தான்; ஆழா, அக்கடலுக்கு ஓர் கரைகாணான்;
சூழ்ந்தாள் துன்பம் சொல் கொடியாள், சொல்கொடு நெஞ்சம்
போழ்ந்தாள், உள்ளப் புன்மையை நோக்கிப் புலர்கின்றான். (1622)

(வீழா-வீழ்ந்து; சூழா-சூழ்ந்து; போழ்தல்-பிளத்தல்; புன்மை-சிறுமை; புலர்தல்-வாடுதல்; வெள்ளம்-நீர்; சூழ்தல்-செய்தல்; நோக்குதல்-கருதுதல்)

இடியேறுண்ட மலை போல் மண்ணில் விழுந்த தசரதன் கொடிய துயரம் என்னும் கடல் நீரில் அழுந்தினான். அழுந்தியவன் ஒரு கரைகாண இயலாது தவித்தான்; தனக்கு எதிராக வஞ்சனை செய்து துன்பம் தந்தவளும், கொடிய சொற்களைச் சொன்னவளும், அச்சொற்களைக் கொண்டுதன் உள்ளத்தையே பிளந்து போட்டவளுமான கைகேயியின் உள்ளத்தின் சிறுமையை எண்ணி எண்ணி உள்ளம் வாடுகின்றான்.

இதுவரை இனியவளாகப் பழகிவந்த இவளிடத்தில், இத்துணைக் கொடுமையும், அற்பத்தனமும் உள்ளதே என்று கருதித் துயருற்று வருந்தலானான் என்பதாம்.

41. ''ஒன்றா நின்ற ஆருயிரோடும் உயிர் கேள்வர்
பொன்றா முன்னம் பொன்றினர்; என்னும் புகழ் அல்லால்
இன்று ஓர்காறும் எல்வளையார்; தம் இறையோரைக்
கொன்றார் இல்லை; கொல்லுதியோ நீ கொடியோளே!'' (1623)

(எல்-ஒளிபொருந்திய; ஒன்றா-ஒன்று பட்டுக்கலந்த; கேள்வர்-கணவர்; பொன்றுதல்-இறத்தல்; காறும்-வரையில்; இறையோர்-கணவர்)

''ஒளி பொருந்திய கை வளையல்களை அணிந்த பெண்டிர், ஈருயிரும் ஒன்றாகக் கலந்த அருமையான உயிர் போன்ற கணவர்கள் இறக்கும் முன்னதாகத் தாமும் இறந்தனர் என்னும் புகழை அல்லாமல் இதுகாறும், தம்முடைய கணவனைக் கொன்றவர்கள் என்று யாரும் இல்லை. நீ இப்பொழுது உலகியலுக்கு மாறாக என்னைக் கொல்லப்போகிறாயோ கொடியவளே!'' என்றான்.

பொன்றா முன்னம் பொன்றுதல் என்பது உடன் உயிர் துறத்தலை. தன் கணவன் இறந்தவுடன் உயிர் துறந்த பத்தினிப் பெண்டிர் கணக்கற்றவர். அத்தகைய பத்தினிப் பெண்டிரைப் பற்றிப் பல நூல்கள் சிறப்பாகக் கூறுகின்றன. தன் உயிர் கொண்டு அவன் உயிர் தேடினள் போல் பெருங்கோப் பெண்டும் ஒருங்கு உடன் மாய்ந்தனள்'' என்பது சிலப்பதிகாரம். ''காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி, ஊது உலைக்குருகின் உயிர்த்து, அகத்து அடங்காது இன்னுயிர் ஈவர்; ஈயார் ஆயின, நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்'' என்பது மணிமேகலை. ''போரில் விடன் ஏந்தும் வேலோர்க்கும், வெள்வளையினாட்கும் உடனே

Koviloor Digital Library

உலர்ந்தது உயிர்'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை. கேள்வரொடு பொன்றினார் புகழ் எய்தினர்; இறையவரைக் கொன்றார் பழி எய்துவர் என்பதாம்.

42. ஏவம் பாராய்; இனமுறை நோக்காய்; அறம் எண்ணாய்;
ஆ! என்பாயோ அல்லை; மனத்தால் அருள் கொன்றாய்;
நா அம்பால் என் ஆருயிர் உண்டாய்; இனி, ஞாலம்
பாவம்பாராது இன்னுயிர் கொள்ளப் படுகின்றாய். (1624)

(ஏவம்-குற்றம் / துன்பம் / எவ்வம்; இனம்-பெண்டிர் இனம்; ஆ-ஐயோ! / இரக்கக்குறிப்பு; நா-சொல்; நோக்குதல்-கருதுதல்)

தசரதன் கைகேயியை நோக்கி; நீ இச்சொல்லால் உனக்கு வருகின்ற குற்றத்தையோ, எனக்கு வருகின்ற துன்பத்தையோ எண்ணிப் பார்க்கவில்லை; பெண்டிர் இனத்தில் காரியமாற்றும் முறையையோ, நம் நற்குடிப் பிறப்பின் நடை முறையையோ நோக்கவில்லை; தருமத்தைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை. ஐயோ என்று இரக்க உணர்ச்சி கூடக் கொண்டாயில்லை; மனத்திலிருந்த அருள் என்னும் பண்பினை அறவே அழித்து விட்டாய்; சொல்லாகிய அம்பினால் எனது அருமையான உயிரைக் கவர்ந்து விட்டாய். ''இனியும் இந்த உலக மக்கள் இதைப் பார்த்துக் கொண்டு பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். பெண் கொலை பாவம் என்று கூடக் கருதாது இப்பொழுது அவர்கள் உன் ஆருயிரைக் கொள்ள, நீ இறக்கப் போகிறாய்'' என்றான்.

தனக்கு வரும் குற்றத்தையோ, எனக்கு வரும் துன்பத்தையோ, பெண்டிர் இன நடைமுறையையோ, நம் குலவழக்கத்தையோ, கணவனைக் கொல்லுதல் அறமன்று என்றோ, ஐயோ என்று இரக்கப்பட்டோ, அருளுணர்வு கொண்டோ, இவற்றில் எவற்றையுமே எண்ணிப்பார்க்க வில்லை. எனவே உலகத்தவரும் பெண் கொலை பெரும்பாவம் என்று கருதாமல், உன்னைக் கொல்லுவார்கள் என்றான் என்பது கருத்து. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்; நீ என்னைக் கொன்றால், உலகத்தவர் உன்னைக் கொல்லுவர் என்பதாம். இதுவரையிலும் சாம, பேத, தான உபாயங்களைக் கையாண்ட தசரதன் இப்போது தண்ட உபாயத்தை மேற்கொள்கிறான்.

43. ஏண்பால் ஓவா நாண் மடம் அச்சம் இவையே, தம்
பூண்பாலாகக் காண்பவர் நல்லார்; புகழ் பேணி
நாண்பால் ஓரா நங்கையர் தம்பால் நணுகாரே;
ஆண் பாலாரே, பெண்பாலாரோடு அடைவு, அம்மா! (1625)

(ஏண்-வலிமை / பெருமை; ஓவா-நீங்காத; பூண்-அணிகலன்கள்; காண்பவர்-கருதுபவர்; பேணி-விரும்பி / பாதுகாத்து; ஓரா-ஆராய்ந்து அறியாத; பால்-பகுதி / பான்மை; நல்லார்-மகளிர்; அடைவு-சேர்க்கை)

Koviloor Digital Library

பெருமையும் வலிமையும் நீங்காது, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நற்பண்புகளையே தமது அணிகலன்களாகக் கொண்டவர்கள் நல்ல மகளிர்; புகழ் ஒன்றையே விரும்பி, நாணத்தை அறியாது நடப்பவர்கள் பெண்டிர் இனத்தில் சேரத்தகாதவர்கள்; அவர்கள் ஆண் வர்க்கத்தில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். வடிவத்தை மட்டும் கொண்டு அவர்களைப் பெண் இனத்தில் சேர்ப்பது இயலாது.

அச்சம் நாணம் மடம் என்பவற்றின் இனமாகிய பயிர்ப்பையும் உபலட்சணத்தால் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அச்சம் என்பது என்றும் காணாததைக் கண்டவிடத்து அஞ்சுதல்; நாணம் என்பது தகாதவற்றின் கண் உள்ளம் ஒடுங்குதல்; மடம் என்பது அனைத்தும் அறிந்தும் அறியாதது போலிருத்தல்; பயிர்ப்பு என்பது அருவருப்பு; தன் கணவன் அல்லாதவரின் கை முதலியன தன்மேற்படின், அருவருத்தல்; இவை நிறை குணங்கள் எனப்படும். இவையே பெண்களுக்குப் பாதுகாப்பும், வலிமையும், பெருமையும் தருவன. இவற்றுள் நாணமே மிகச்சிறந்ததும் உயர்ந்ததுவுமாம். ''பெண்பாலவர்கட்குப் பிரியாத நாண்'' என்பது சீவகசிந்தாமணி. ''உயிரினும் சிறந்தன்று நாணே'' என்பது தொல்காப்பியம்; நாணமுடைய பெண்டிர்க்கும் நாணம் இல்லாத பெண்டிர்க்கும் உள்ள வேறுபாடு, பெண்டிர்க்கும் ஆடவர்க்கும் உள்ள வேறுபாடு போன்றது என்பதாம். இதனால் கைகேயியின் நாணமிலாத் தன்மையைப் புலப்படுத்தியவாறு. இந்த நான்கு குணங்களையுமே தன் அமைச்சர்களாகப் பெற்றிருந்தாள் தமயந்தி என்று நளவெண்பா கூறும்.

44. ''மண் ஆள்கின்றார் ஆகி, வலத்தால், மதியால் வைத்து
எண்ணா நின்றார் யாரையும் எல்லா இகலாலும்
விண்ணோர் காறும் வென்ற எனக்கு, என்மனை வாழும்
பெண்ணாய் வந்தது அந்தரம், என்னப் பெறுவேனோ?'' (1626)

(எண்ணா-எண்ணி; இகல்-வல்லமை; காறும்-வரையில்; அந்தரம்-மரணம் / முடிவு / கேடு)

''வலிமையாலும் மதிநுட்பத்தாலும் இவ்வுலகை ஆளுகின்ற அரசர்கள் முதல், விண்ணுலகத்தை ஆள்கின்ற தேவர்கள் வரை மதித்து எண்ணத்தக்க எல்லோரையும் எல்லா வல்லமையிலும் வெற்றிபெற்ற எனக்கு, என் இல்லத்தில் என் உடனேயே வாழும் அவ்வலியும் மதியும் இல்லாதவளாகிய பெண்ணாகிய என் மனைவியினால் எனக்கு ஒரு முடிவுக்கால மரணம் வந்துவிட்டது என்று உலகத்தார் கூறும் ஒரு நிலையை அடைந்து விடுவேனோ?''.

வாள்வலி, தோள்வலி, வில்வலி, மல்வலி, மதிவலி என வலிமைகள் பலவகைப்படும் ஆதலால் எல்லா இகலாலும் என்றான். உலகத்தையெல்லாம் வென்றவன் மனைவாழ் பெண்ணிடம் தோற்றான் என்று கூறியது ஒரு நயம்; மனை வாழ் பெண் மனைவி.

Koviloor Digital Library

45. என்று என்று உன்னும்; பன்னி இரக்கும்; இடர் தோயும்
ஒன்று ஒன்று ஒவ்வா இன்னல் உழக்கும்; ''உயிர் உண்டோ!
இன்று இன்று!'' என்னும் வண்ணம் மயங்கும்; இடியும் பொன்
குன்று ஒன்று ஒன்றோடு ஒன்றியது என்னக் குவிதோளான். (1627)

(உன்னுதல்-நினைத்தல்; பன்னுதல்-பலமுறை சொல்லுதல்; இரத்தல்-யாசித்தல்; உழத்தல்-வருந்துதல்; இடிதல்-உடைதல்; ஒன்றியது-பொருந்தியது / இணைந்தது / கூடியது; குவி -திரண்ட; மயங்குதல்-மூர்ச்சையுறுதல்; ஒவ்வா-பொருந்தாத)

பொன்மயமான ஒரு குன்று மற்றொரு குன்றோடு இணைந்தது போலத் திரண்ட இரு தோள்களையுடைய தசரதச்சக்கரவர்த்தி இவ்வாறு எண்ணிப் பலமுறை சொல்லிச் சொல்லி யாசிப்பான். துன்பக் கடலில் அழுந்திப் போவான்; ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பலவகைத் துயரில் வருந்துவான். ''இவனுக்கு உயிர் இருக்கிறதோ? இல்லையே இல்லையே'' என்று காண்பவர் கூறும் வண்ணம் மூர்ச்சை அடைவான்; மனம் அழிந்து போவான்.

பொன் குன்றம் அவனது தோளின் நிறம், அழுத்தம், திரட்சி, பருமை ஆகியவற்றுக்கு உவமை.

46. கைகேயி தன் நிலையில் உறுதியோடு இருத்தல்

ஆழிப்பொன்தேர் மன்னவன் இவ்வாறு அயர்வு எய்திப்
பூழிப்பொன்தோள் முற்றும் அடங்கப் புரள் போழ்தில்
''ஊழில் பொய்த்தால் என் உரை, இன்றே உயிர் மாய்வென்
பாழிப் பொன்தார் மன்னவ!'' என்றாள் பசையற்றாள். (1628)

(ஆழி-சக்கரம் / உருளை; அயர்வு-சோர்வு / தளர்ச்சி; பூழி-புழுதி; அடங்க-நிறைய / போர்க்க; பசை-அன்பு / ஈரம் / இரக்கம்; பாழி-வலிமை / பெருமை; பொன்-அழகிய; தார்-வெற்றி மாலை; ஊழி-முறை; பொய்த்தல்-தவறுதல்)

சக்கரத்தை உடைய தேர்ப்படையினை உடைய தசரதச்சக்கரவர்த்தி இவ்வாறு சோர்வுற்று, தன் அழகிய தோள் முழுவதும் புழுதியில் பட்டுத்தோயுமாறு புரண்டு கொண்டிருக்கின்ற போது, உள்ளத்தில் சிறிதும் இரக்கமோ ஈரப்பசையோ இல்லாத கைகேயி, ''வலிமையும் அழகும் உடைய வெற்றி மாலையையணிந்த மன்னவனே! வாய்மை காத்தல் என்னும் உன்னுடைய முறைமைப் பண்பிலிருந்து நீ தவறிவிட்டால், நான் என் உயிரை மாய்த்துக் கொள்வேன்'' என்று கூறினாள்.

''மன்னவ'' என்று அவள் தன் கணவனை அழைப்பதனால் மன்னவனுக்குரிய சொற்காத்தலும் அறம் காத்தலுமாகிய பண்புகளை உட்கொண்டு பேசுகிறாள் என்பது பொருள்.

Koviloor Digital Library

47. ''அரிந்தான் முன்ஓர் மன்னவன் அன்றே அருமேனி?
வரிந்து ஆள்வில்லாய்! வாய்மை வளர்ப்பான்; வரம்நல்கிப்
பரிந்தால் என்னாம்?'' என்றனள்; பாயும் கனலே போல்
எரிந்து ஆறாதே இன்னுயிர் உண்ணும் எரி அன்னாள். (1629)

(எரி-நெருப்பு; எரிந்து-சுழன்று; ஆறாது-தணியாது; வரிந்து-இறுகக்கட்டிய; வளர்ப்பான்-காப்பாற்றும் பொருட்டு; பரிதல்-வருந்துதல்; பாய்தல்-விரைந்து பரவுகின்ற; வளர்த்தல்-அழியாது காத்தலுமாம்)

விரிந்து பரந்து எரிகின்ற நெருப்பைப் போல் எரிந்து தணியாது இருந்த இடத்தில் இருந்தே இனிய உயிரையும் எரிக்கும் ஒரு புதிய நெருப்புப் போன்ற கைகேயி, தசரதனை நோக்கி ''இறுக்கக் கட்டப்பட்ட வில்லை உடைய மன்னவனே! உங்கள் குலத்தில் முன்னர் தோன்றிய சிபிச் சக்கரவர்த்தி என்பவன், தன்னுடைய வாய்மையைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய பெறற்கரிய உடலினையே அரிந்து தந்தான் அல்லவா? நீ முன்பு எனக்கு இருவரங்களைத் தருவதாக உறுதி கூறிய பின்பு, இப்போது அவற்றைத் தருவதற்கு வருந்தினால் அதனால் என்ன பயன் உண்டாகும்?'' என்றாள்.

சிபிச்சக்கரவர்த்தி புறவொன்றின் பொருட்டாகத் தன் உயிரைக் கொடுத்தான் என்பது எல்லோரும் அறிந்ததே. முன்னரும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. எனவே இங்கு விரித்துரைக்கவில்லை. ''கூர் உகிர்ப் பருந்தின் ஏறு குறித்து ஓரிஇத் தன் கைபுக்க, குறு நடைப் புறவின் தபுதி அஞ்சிச் சீரைபுக்க வரையா ஈகை உரவோன்'' என்பது புறநானூறு; ''எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப் புள் உறு புன்கண் தீர்த்தோன்'' என்பது சிலப்பதிகாரம். அவன் வழியில் தோன்றிய நீ உயிரை ஈந்தேனும் வாய்மையைத் காக்க வேண்டாமா? என்பது கருத்து. பொதுவாக நெருப்பு என்பது முதலில் நன்கு எரியும், பின்பு தணிந்துவிடும், உடம்பையும் உண்ணும் இயல்புடையது. ஆனால் கைகேயியாகிய இந்த நெருப்போ, ஆறாததாக இருக்கிறது. அத்துடன் உடம்பை உண்ணாமல் அருவமாகிய உயிரை உண்ணும் இயல்புடையதாயிருக்கிறது என்ற கருத்துப்பட புதிய தீ என்னும் பொருளில் ''பாயும் கனலே போல் எரிந்து ஆறாதே, இன் உயிர் உண்ணும் எரி'' என்றான். (உடம்பு பருப்பொருள் / உருவம்; உயிர் நுண்பொருள் / அருவம்)

48. தசரதன் வரம் தருதல்

''வீந்தாளே இவ்வெய்யவள்'' என்னா, மிடல் வேந்தன்
''ஈந்தேன், ஈந்தேன் இவ்வரம், என்சேய் வனம் ஆள
மாய்ந்தே நான் போய் வானுலகு ஆள்வென்; வசைவெள்ளம்
நீந்தாய், நீந்தாய், நின்மகனோடும் நெடிது'' என்றான். (1630)

Koviloor Digital Library

(வீந்தாள்-வீழ்ந்தாள் / இறந்தாள்; வெய்யவள்-கொடியவள்; மிடல்-வலிமை; வசை-பழி)

வலிமை மிக்க தசரதன், ''இவள் கேட்ட வரத்தினை நாம் கொடுக்கா விட்டால் இவள் இறந்தே போய் விடுவாள் என்று கருதி, விரைவாக, நீ கேட்ட வரத்தினைத் தந்து விட்டேன், தந்துவிட்டேன் என்னுடைய மகனாகிய இராமன் வனம் சென்று ஆள்வான், நான் இறந்து போய் விண்ணுலகு ஆள்வேன்; நீ, உன் மகன் பரதனோடு சேர்ந்து, இதனால் உண்டாகின்ற பழி என்னும் வெள்ளத்தில் நீந்தி, கரைசேர முடியாமல் நீண்ட காலம் நீந்திக் கொண்டே அதில் அழுந்திக் கிடப்பாயாக!'' என்று கூறினான்.

அவள் இரண்டு முறை வரம் தராவிட்டால் உயிரை விட்டு விடுவேன் என்று எச்சரித்துவிட்டாள். எனவே இனியும் அதனைக் கொடுக்காமல் காலம் தாழ்த்தினால் அவள் இறந்தே போய்விடுவாள். பின்னர் அந்தப் பழியும் தம்மேல் வந்து சாரும் என்று கருதிய தசரதன் விரைவாகத் தந்தேன் தந்தேன் என்று சொன்னான் என்க; முதல் வரத்தை முன்னரே கொடுத்துவிட்டதால், இப்பொழுது இவ்வரம் என்றது இரண்டாவது வரம் மட்டுமே என்பதாம். பழியை வெள்ளம் என்று கூறியது அது பல வழிகளைக் கொண்டது என்பதனாலாம். ஒன்று மூத்தவன் அரசுக்குரியவன் என்ற முறைமை தவறிய பழி; இரண்டு இராமனைக் காட்டிற்கு அனுப்பிய பழி; மூன்று தன் கணவனையே வானுலகிற்கு அனுப்பிய பழி'' எனவே வசை வெள்ளம் என்றான்.

49. கைகேயி தூங்கச் செல்லுதல்

கூறா முன்னம், கூறு படுக்கும் கொலை வாளின்
ஏறுஆம் என்னும் வன்துயர் ஆகத்திடை மூழ்கத்
தேறானாகிச் செய்கை மறந்தான்; செயல் முற்றி
ஊறா நின்ற சிந்தையினாளும் துயில்வு உற்றாள். (1631)

(படுத்தல்-செய்தல் / பிளத்தல்; ஆகம்-மனம் / அகம்; தேறுதல்-தெளிவடைதல்; ஊறா நின்ற-ஊறுகின்ற / சுரக்கின்ற; ஏறு-பாய்ச்சல் / தாக்குதல்)

இவ்வாறு ''வரம் ஈந்தேன்'' என்று சொல்லி முடிக்கும் முன்பே, தசரதன் உடம்பைக் கூறு செய்து பிளக்கின்ற கொலைத் தொழிலையுடைய வாளின் தாக்குதல் என்று சொல்லப்படுவது போல பெருந்துயர் தன் மனத்திடைத் தாக்க அந்தத் துன்பக்கடலுள் அழுந்தி உணர்வற்றவனாக என்ன செய்வது என்று அறியாது செயலற்று மூர்ச்சித்துக் கிடந்தான்; ஆனால் கைகேயி தான் எண்ணி வந்த காரியமாகிய இருவரங்களைப் பெற்றே தீர்வது என்ற

Koviloor Digital Library

செய்கை நிறைவேறியவுடன் மகிழ்ச்சி சுரக்கப்பட்ட மனத்தை உடையவளாய்த் தூங்கச் சென்றாள்.

அவன் கூறிமுடித்தற்கும், செயலற்று மூர்ச்சித்து விழுவதற்கும் இடையீடு சிறிதும் இல்லை என்பதைக் குறிப்பது கூறா முன்னம் என்ற சொற்றொடர். வாள் ஏறு என்ற சொற்றொடர் இடியேறு என்பது போல வாளின் தாக்குதலைக் குறித்தது; துன்பச் சிந்தையுடையவன் செயலற்று மூர்ச்சித்தான்; இன்பச் சிந்தையுடையவள் மகிழ்ச்சி மிகுதியால் தூங்கினாள் என்று இரண்டு சிந்தையார்க்கும் ஒரே நிலையும், தோற்றத்தில் ஒற்றுமையும் காணப்படுகிறது என்று கூறியது ஒரு நயம்.

50. இரவு கழிதல்

சேண் உலாவிய நாள்எலாம் உயிர்ஒன்று
போல்வன செய்து, பின்
ஏண் உலாவிய தோளினான் இடர்எய்த,
ஒன்றும் இரங்கிலா
வாள்நிலா நகை மாதராள் செயல்கண்டு,
மைந்தர் முன் நிற்கவும்
நாணினாள் என ஏகினாள்
நளிர் கங்குல் ஆகிய நங்கையே. (1632)

(சேண்-சேய்மை / நீட்சி; உலாவுதல்-பொருந்துதல்; ஏண்-வலிமை; ஒன்றும்-சிறிதும்; வாள்-ஒளிபொருந்திய; நகை-பற்கள்; நளிர்-குளிர்ந்த; கங்குல்-இரவு)

தான்திருமணம் செய்து கொண்டது முதல் நேற்று வரையான மிக நீண்ட காலம், ஈருடல் ஒருயிர் என்று, அவன் இன்புற்ற போது தானும் இன்புற்று, அவன் துன்பமடைந்த போது தானும் கலங்கி நின்று பழகியவளான கைகேயி, இன்று அவ்வலிமை மிக்க தோள்களையுடைய தசரதன் பெருந்துயரம் அடைந்து விடவும், அதற்காகச் சிறிதும் கவலைப்பட்டு இரக்கம் கொள்ளாது, ஒளி பொருந்திய பற்களைக் கொண்ட கைகேயியின் இந்த ஈரமிலாச் செய்கையைக் கண்டு வெட்கப்பட்டு, குளிர்ந்த இரவு என்னும் குமரிப் பெண், ஆடவர்களுக்கு எதிரில் நிற்க மாட்டாமல் அகன்று போனாள். இரவு கழிந்தது என்பதாம்.

அவள் ஒருத்தியின் செய்கையால் ஏற்படுகின்ற பழி, அப்பெண் இனத்துக்கே ஏற்படும் பெரும்பழி ஆகும் என்று கருதி இரவாகிய பெண் வெட்கமுற்று மறைந்தாள் என்பதாம். வடமொழியில் இரவைக் குறிக்கும் ''ராத்ரி'' என்னும் சொல், பெண்பாலாகும். எனவே இங்கும் இரவாகிய பெண் என்றார். அவள் அவன் துயர் கண்டு இரங்காது இருப்பது மட்டுமல்லாமல் தன் வெற்றி கண்டு நகைக்கிறாள் என்ற கருத்தையும்

Koviloor Digital Library

உள்ளடக்கிய சொற்களான "ஒன்றும் இரங்கிலா வான்நிலா நகை மாதராள் என்றது எண்ணி இன்புறுதற்குரியதாகும்.

வைகறைக் காட்சிகள் [16 பாடல்கள்]

51. கோழி கூவுதல்

எண்தரும் கடை சென்ற யாமம் இயம்புகின்றன, ஏழையால்
வண்டுதங்கிய தொங்கல் மார்பன் மயங்கி விம்மிய ஆறுஎலாம்
கண்டு, நெஞ்சு கலங்கி, அம்சிறையான காமர் துணைக்கரம்
கொண்டு, தம் வயிறு எற்றி எற்றி விளிப்ப போன்றன கோழியே. (1633)

(எண்-மதித்தல்; கடை-வைகறை; இயம்புதல்-கூவுதல் / தெரிவிப்பது; ஏழை-பெண் / கைகேயி / அறிவிலி / பேதை; தொங்கல்-மாலை; காமர்-அழகிய; சிறை-சிறகுகள்; துணை-இரண்டு; அம்-அழகிய; எற்றி-அடித்துக் கொண்டு; விளித்தல்-அழைத்தல் / அழுதல்; யாமம்-சிறுபொழுது)

மதிக்கத் தக்க தன்மை பொருந்திய., இரவின் கடைசிப் பகுதியான வைகறைச் சிறுபோதில், கூவியழைக்கும் கோழிகள், அறிவற்ற பேதைப் பெண்ணான கைகேயினால் வண்டுகள் உறைகின்ற மலர் மாலையணிந்த மார்பை உடைய தசரதன், மதி கலங்கி, தேம்பி ஆற்றாது அழுத முறைகளையெல்லாம் தானே நேரிற் கண்டு, தன் நெஞ்சம் கலங்கித் தனது அழகுச் சிறகுகளை அழகிய இரண்டு கைகளாகக் கொண்டு தம் வயிற்றில் பலமுறை அடித்துக் கொண்டு அழுது எழுப்புவது போன்று இருந்தன.

பொழுது புலர்வதன் முன் அமைகின்ற சிறுபொழுது கடையாமம். ஒரு நாளில் எட்டாக எண்ணப்படும் யாமங்களில் கடைசி யாமம் வைகறை. இச்சிறுபொழுது பல நற்செயல்களுக்குச் சிறப்பாக மதிக்கப்படுகின்ற நேரம். இந்நேரத்தில் கோழிகள் கூவுவது இயல்பு. கோழி கூவும் போது சிறகை விரித்து அசைத்து அடித்துக் கொண்டு கூவுதலும் இயல்பு. கம்பன் அச்சிறகுகளைக் கைகளாகவும், சிறகு அடித்துக் கொள்வதைக் கைகேயியின் கொடிய செயல்களையும் தசரதனது ஆற்றொணாத் துன்பத்தையும் கண்டு பொறுக்கமாட்டாமல் அவ்வாறு தன் வயிற்றில் பலமுறை அடித்துக் கொண்டது போன்று இருந்தது என்றும் தன் கற்பனைத் திறத்தைக் காட்டுகிறான். பொதுவாகப் பெண்கள் ஆழ்ந்த துக்கத்தில் இருக்கும் பொழுதும் மிகுந்த கோபத்தில் இருக்கும்பொழுதும், மற்றவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கும்போதும் தம் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுவது வழக்கம். கண்கூடு. இயம்புகின்றன என்று தன் வாயால் கூவுதலையும், எற்றி எற்றி என்பதனால் கைகளின் செயல்களையும், குறிப்பிட்டார் என்க. இதே கருத்தைக் கூறும் பாடல் ஒன்று நளவெண்பாவில் கிடைக்கிறது. பாடல் இது. "தையல் துயர்க்குத் தரியாது, தம் சிறகாம் கையால் வயிறு

Koviloor Digital Library

அலைத்துக் கூரிருள்வாய் வெய்யோனை வாவு பரித்தேர் ஏறிவா என்று அழைப்பன போல் கூவினவே கோழிக்குலம்''.

52. பறவைகள் ஒலித்தல்

தோய் கயத்தும், மரத்தும், மென் சிறை
துள்ளி மீதுஎழும் புள்எலாம்
தேய்கை ஒத்த மருங்குல் மாதர்
சிலம்பின் நின்று சிலம்புவ;
கேகயத்து அரசன் பயந்த விடத்தை,
இன்னது ஓர் கேடு சூழ
மாகயத்தியை, உள்கொதித்து,
மனத்து வைவன போன்றவே. (1634)

(தோய்தல்-நீராடுதல்; துள்ளி-அசைத்து; மீது-மேல்; புள்-பறவைகள்; மருங்குல்-இடை; சிலம்புதல்-ஒலிசெய்தல்; விடம்-நஞ்சு; மாகயத்தி-மிகக் கீழ்மைக் குணம் உடையவள்; கொதித்து-புழுங்கி; பயந்த-பெற்றெடுத்த; வைதல்-ஏசுதல்)

நீராடுதற்குரியனவும், நீர்ப்பறவைகள் தங்கி வாழ்வதுவுமான குளங்களிலும், மரங்களிலும், தங்களது மெல்லிய சிறகுகளை அசைத்து மகிழ்ச்சியால் துள்ளி மேலே எழும்புகின்ற பறவைகள் எல்லாம், நாளுக்கு நாள் தேயும் தன்மை உடைய இடையை உடைய பெண்டிர்களின் காற்சிலம்புகள் ஒலி செய்வன போன்று ஒலித்தன. அவ்வொலிகள், கேகய நாட்டு மன்னன் பெற்றெடுத்த கைகேயி என்ற இந்த நஞ்சு போன்றவளும், தசரதனுக்கு இத்தகைய ஒரு பெருங்கேட்டினை சூழ்ச்சியினால் செய்தவளுமான மிக்க கீழ்மைக் குணங்கள் கொண்டவளுமான இவளின் செயல்களைக் கண்டு மனம் கொதித்து, மனத்திற்குள்ளேயே ஏசியது போன்று இருந்தது.

பொழுது புலரும்போது கோழி கூவுவது போலப் பறவைகளும் விழித்து எழுந்து சிறகடித்து மேலெழும்பி ஒலி செய்வது இயல்பு. ஆனால் இவ்வொலிகள் கோழி கூவுவதுபோல அவ்வளவு பேரொலி செய்யாது மெல்லொலி செய்தலின் பறவைகள் மனத்திற்குள்ளேயே வைதன என்றான். இன்னும் ஒன்று. கைகேயி சக்கரவர்த்தியின் மனைவி. தசரதன் அவள்மேல் அளவற்ற காதல் கொண்டிருக்கின்றான். எனவே, அவளை வெளிப்படையாக ஏசினால் தங்களுக்கு ஏதேனும் தீங்கு வருமோ என்று அஞ்சியே அவைகள் மனத்துள் வைதன என்று கூறியது மிகச் சிறந்த நயம். மாகயத்தி என்ற சொற்றொடர் தமிழிலக்கியத்தில் கம்பனால் புதிதாகப் புகுத்தப்பட்டது. கயவன்-கயத்தி. கீழ்மைக் குணங்கள் கொண்டவள்; ஏற்புடைய குணங்கள் ஒன்றும் இல்லாதவள் என்பது பொருள் இவளுக்கு மா என்ற அடைமொழி கொடுத்து அவளது கீழ்மைக் குணங்களை மிகைப்படுத்தினார். தீயவையாவினும் சிறந்த தீயாள் என்பது போல.

Koviloor Digital Library

சிலம்பு ஒலி பறவை ஒலிக்கு உவமை. அன்னத்தின் ஒலியைப் பொதுவாகச் சிலம்பொலிக்கு உவமை கூறுவது கவிஞர் மரபு. கேகயம் என்பது மயில். மயிலுக்குப் பகை பாம்பு; பாம்பு கக்கும் விஷம் மிகக் கொடியது. இந்தக் கேகய அரசன் பெற்றெடுத்த மகளும் அத்தகைய கொடியவளே என்பதைச் சுருக்கி கேகய அரசன் பயந்த விடத்தை என்றார். கணவனது உயிரைக் கவரப் போகிறாள் எனவே இங்கே விடம் என்று முன்னரேயே கைகேயியைக் கவிஞன் குறிப்பிடுகின்றான் எனலுமாம்.

53. யானைகள் துயில் எழுதல்

சேமம் என்பன பற்றி, அன்பு திருந்த இன்துயில் செய்தபின்
வாம மேகலை மங்கையோடு வனத்துள், யாரும் மறக்கிலா
''நாம நம்பி நடக்கும்'' என்று நடுங்குகின்ற மனத்தவாய்
''யாமும் இம்மண் இறத்தும்'' என்பனபோல் எழுந்தன-யானையே.
(1635)

(சேமம்-பாதுகாப்பு / காவல்வீடு / கட்டுமிடம்; வாமம்-அழகு; மங்கை-சீதை; நாமம்-பெயர்; இறத்தல்-நீங்குதல் / கடத்தல்; நம்பி-ஆடவரில் சிறந்தவன் / புருஷோத்தமன்; அன்பு-விருப்பம்; திருந்த-நன்றான; மேகலை-எண்கோவை மணி)

யானைகள் தமக்குப் பாதுகாப்பான தாம் தங்கும் இடமாகிய காவல் வீடானகூடத்தில், மிகுந்த விருப்பத்துடன், நன்றாக இனிது தூங்கிக்காலை புலர்ந்ததும் எழுகின்றன. அவை எழுந்து நின்ற தோற்றம் எவ்வாறு இருந்தது? அழகிய மேகலாபரணங்களை அணிந்த சீதாதேவியோடு, எவரும் மறக்க முடியாத தாரக மந்திரமான பெயரினையுடைய ஆடவரிற் சிறந்தவனாகிய இராமபிரான், வனத்திற்குள் செல்லப் போகிறான் என்பதை அறிந்து நடுங்குகின்ற மனத்தை உடையனவாக, நாமும் இந்நிலத்தை விட்டு நீங்கிச் செல்வோம் என்று கருதி ஒரு முடிவுடன் தயார் நிலையில் எழுந்து நின்றது போல் தோற்றியதாம்.

மிருகங்கள் தாம் வழக்கமாக உறையும் இடங்களைத் தமக்குப் பாதுகாப்பான இடங்கள் என்று கருதி அவற்றை மிக விரும்பி அங்கேயே தங்கி இருக்கும். எனவே, கனவும் கலக்கமும் இல்லாது நீண்டநேரம் உறங்கும். இதைத்தான் கம்பன் சேமம் என்பன பற்றி, அன்பு திருந்த இன் துயில் செய்தபின் என்கிறான். யாரும் மறக்கிலா நாமம் என்பது தாரகமந்திரம். இதனை யாராலும் மறக்க முடியாது. எல்லோரும் அவன் பெயரையே உச்சரிப்பர் என்பது கருத்து.

54. நட்சத்திரங்கள் மறைதல்

சிரித்த பங்கயம் ஒத்த செங்கண்
இராமனைத், திருமாலை, அக்
கரிக் கரம்பொரு கைத்தலத்து,
உயர்காப்பு நாண் அணிதற்குமுன்,

Koviloor Digital Library

வரித்த தண்கதிர் முத்தது ஆகி,
இம்மண் அனைத்தும் நிழற்ற, மேல்
விரித்த பந்தர் பிரித்ததாம் என
மீன் ஒளித்தன வானமே. (1636)

(சிரித்த-மலர்ந்த; பங்கயம்-தாமரை; கரி-யானை; கைத்தலம்-கை / துதிக்கை; வரித்த-கோலம் செய்த / அழகுபுனைந்த; மீன்-நட்சத்திரங்கள்; ஒளித்தன-மறைந்தன; உயர்-மேலான; காப்புநாண்-ரட்சாபந்தனம்)

மலர்ந்த செந்தாமரையைப் போன்ற சிவந்த கண்களை உடைய திருமாலாகிய இராமபிரானுக்கு, யானையின் துதிக்கை போன்ற திரட்சி பொருந்திய கைகளில், மேலான காப்பு நாண் அணிவதற்கு முன்பு, அழகு செய்யப்பட்ட குளிர்ந்த ஒளியை உடைய முத்துக்களாலானதும், இந்நிலவுலகம் அனைத்தும் நிழல் பரப்பும் தன்மையதுமான ஆகாயத்தின் மேலே விரிக்கப்பட்டிருக்கின்ற முத்துப் பந்தலைப் பிரித்துப் போட்டதைப்போல, வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் எல்லாம் தம்மை ஒளித்துக் கொண்டு மறைந்து போயின.

இரவிலே ஒளிபரப்பிய ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்கள் மேலே வேயப் பெற்ற முத்துப் பந்தலைப் போலக் காட்சியளித்தன. பகலில் சூரியன் வெளிப்படும் பொழுது அவை மறைந்து போவது அந்த முத்துப் பந்தலைப் பிரித்துவிட்டாற் போன்ற தோற்றமளித்தது என்பதாம். அவதாரப்பெயரையும், மூலமூர்த்தியின்பெயரையும் ஒருங்கேஇணைத்து இராமனைத் திருமாலை என்றார். மங்கல காரியங்கள் நடைபெறுவதற்கு முன்பு, அதற்குரிய தலைவன், தனது வலது கையிலே காப்பு நாண்-இரட்சாபந்தனம்-அணிந்து, விரதம் மேற்கொள்ளுதல் மரபு. சிரித்த பங்கயம் என்ற சொல்லாட்சி இன்பம் பயப்பது. மகிழ்ச்சி மனத்தில் மட்டுமின்றிக் கண்ணிலும் தோன்றும் என்பது கருத்து. வானம்-பந்தல்; விண்மீன்கள்-முத்துச்சரங்கள்.

55. பெண்கள் துயில் எழுதல்

நாம வில் கை இராமனைத் தொழும் நாள் அடைந்தது; உமக்கெலாம்
காம விற்கு உடை கங்குல் மாலை கழிந்தது; என்பது கற்பியாத்
தாம ஒலித்தன பேரி; அவ்வொலி, சாரல் மாரி தழங்கலா
மாமயில் குலம் என்ன, முன்னம் மலர்ந்து எழுந்தனர் மாதரே. (1637)

(நாமம்-அச்சம்; அடைந்தது-தோன்றிவிட்டது / வந்துவிட்டது; கங்குல்-இராப்பொழுது; கற்பியா-கற்பித்து / தெரிவித்து / கூறிக் கொண்டு; பேரி-முரசு; மா-சிறந்த; மலர்தல்-கண்விழித்தல்; மாலை-போது / பொழுது; மாரி-இடி / மேகம்; தழங்கல்-ஒலி; சாரல்-மலைப்பக்கம்)

Koviloor Digital Library

''பகைவர்க்கு அச்சத்தைத் தருகின்ற விற்படையைக் கையில் ஏந்தியுள்ள இராமபிரானை அரசனாகக் கண்டு கைதொழுது வணங்கும் நாள் தோன்றிவிட்டது. மன்மதனது கரும்பு வில்லைக் கையில் கொண்டு உங்களுக்கெல்லாம் துன்பத்தைத் தருகின்ற இரவுப் பொழுது கழிந்துவிட்டது'' என்பதைத் தெரிவிப்பது போல அரண்மனைகளில் முரசங்கள் ஒலித்தன; அவ்வொலி, மலைப்பக்கங்களில் இடியோசை கேட்டு சிறந்த மயிற்குலங்கள் எழுவன போல், தம் கணவர்கள் துயிலெழுவதற்குமுன்பே அயோத்தி நகர மகளிர் எல்லாம் மகிழ்ச்சியுடன் துயில் எழுந்தனர்.

இடியொலி கேட்டால் மயில்கள் மகிழும். இங்கே அயோத்தி நகர மகளிர் மகிழ்ந்து எழுந்தனர்; அவர்கள் பின் தூங்கி முன் எழும் பெற்றியர் என்பது உணர்த்தப்பட்டது. முரசொலி மேகமுழக்கம். மகளிர்-மயில்கள்; மயில் பெண்களின் சாயலுக்கு உவமை.

56. தென்றல் வீசுதல்

இனமலர்க்குலம் வாய்விரித்து,
இளவாச மாருதம்வீச, முன்
புனைதுகில் கலைசோர, நெஞ்சு
புழுங்கினார் சில பூவைமார்;
மனம் அனுக்கம் விடத் தனித்தனி,
வள்ளலைப் புணர் கள்ள வன்
கனவினுக்கு இடையூறு அடுக்க,
மயங்கினார் சில கன்னிமார். (1638)

(விரித்து-மலரச்செய்து / நெகிழச்செய்து; மாருதம்-தென்றல் காற்று; கலை-ஆடை / மேகலை; அனுக்கம்-வருத்தம் / தளர்ச்சி; புணர்தல்-தழுவுதல்; கள்ள-வஞ்சகம் வாய்ந்த / பொய்யான; வன்-வலிமையான; அடுக்க-செய்ய / நேர; மயங்குதல்-விழித்துத் திகைத்தல்; குலம்-கூட்டம்; இனம்-வகை; பூவை-நாகண வாய்ப் புள்; கன்னி-மணமாகாத மங்கை; துகில்-ஆடை; சோர-குலைய)

தாமரைபோன்றபலவகையானமலர்க்கூட்டங்கள்தங்கள்வாய்திறந்து மலர்வதனால், மென்மையான வாசனையுடைய தென்றல் காற்று வீசியது; அதனால், சில மங்கையர்கள் தாம் உடுத்திருந்த ஆடையும், அணிந்திருந்த மேகலையும் குலையும் வண்ணம், மனம் வெதும்பினார்கள். மணமாகாத சில கன்னிப் பெண்கள், தாங்கள் தனித்தனியே இராமனைத் தழுவும் படியான பொய்யான ஆனால் இனிமையான கனவுகள் கண்டு கொண்டிருந்தார்கள், அக்கனவினுக்கு இடையூறாக இந்தத் தென்றற் காற்று வந்து தங்களைத் தாக்க, தங்கள் மனவருத்தம் நீங்கும்படி மனம் திகைத்து மயங்கிப் போனார்கள்.

Koviloor Digital Library

முன்னர்க் கூறியவர்கள் மணமான பெண்கள். அவர்கள் இரவு தம் கணவருடன் ஊடல் புரிந்தனர். ஊடல் நீட்டித்தது. அதற்குள் தென்றற் காற்று வீசி விடியலை உணர்த்திற்று. எனவே தங்கள் கணவர்களைக் கூடமுடியாமற் போனதே என்று நெஞ்சு புழுங்கினார்கள். மற்றொரு சாரார் மணமாகாத கன்னிப் பெண்கள். இவர்கள் இரவு துயிலச் செல்லும் போது இராமன் நினைவாகவே சென்றதனால் ஒவ்வொருவரும் இராமனைத் தழுவுவதாகப் பொய்யான ஆனால் இனிமையான கனவு கண்டு கொண்டிருந்தார்கள். அதற்குள் இந்தத் தென்றற் காற்று வீசி விடியலைத் தெரிவித்ததனால் கனவு கலைந்து உண்மையறிந்து இப்பொழுது என்ன செய்வது என்பது அறியாமல் திகைத்து மயங்கி நின்றார்கள் என்பதாம். 'கன்னியர்கள் இராமனைத் தழுவுவதாகக் கண்ட கனவு ஒருகாலும் நிகழாது. ஆதலின் அது பொய்க்கனவு என்பதைக் குறிக்க கள்ளக் கனவு என்றார்; அது மிகக் கொடிய கனவு என்பதனால் வன் கனவு என்றும் கூறினார் என்க. தென்றல் காற்று மணமுற்ற மங்கையரைப் புழுங்கச் செய்தது; அதே தென்றற் காற்று மணமாகாத கன்னிப் பெண்களைக் கலங்கச் செய்தது என்றது ஓர் நயம். காலையில் மலர்கள் மலர்வதையும் தென்றல் வீசுவதையும் பற்றித் தொண்டரடிப்பொடியாழ்வார் கூறுவதைக் கேளுங்கள். ''மது விரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்'', ''கொழுங் கொடி முல்லையின் கொழு மலர் அணவிக் கூர்ந்தது குணதிசை மாருதம்''.

57. குமுத மலர் குவிதல்

சாய்அடங்க நலம் கலந்து தயங்கு
　　　தன்குல நன்மையும்
போய் அடங்க, நெடும்கொடும் பழி
　　　கொண்டு அரும்புகழ் சிந்தும்அத்
தீ அடங்கிய சிந்தையாள்
　　　செயல்கண்டு, சீரிய நங்கைமார்
வாய் அடங்கின என்னவந்து,
　　　குவிந்த வண் குமுதங்களே. (1639)

(சாய்தல்-சுருங்குதல்; கலந்து-தொடர்புற்று; சிந்தும்-மாய்க்கும்; வண்-வளமை வாய்ந்த; அடங்குதல்-நீங்கி ஒழிதல் / கெடுதல்; தீ-தீமை; சாய்-பெருமையுமாம்; நன்மை-பெருமை / சிறப்பு; குமுதம்-செவ்வாம்பல் மலர்)

தன்னுடைய நற்குணப் பெருமைகள் சுருங்கிப் போகுமாறும், தன்னுடன் தொடர்புற்று விளங்குகின்ற தான் பிறந்த குலத்தின் பெருமைகளும் நீங்கிப் போகுமாறும், நெடிய, கொடிய பழியினை ஏற்றுக் கொண்டு, பெறுதற்கரிய புகழைச் சிதற விட்ட அந்தத் தீய எண்ணங்கள் பொருந்திய மனத்தினை உடைய கைகேயியின் இத்தகைய செயலைக் கண்டு, ஒழுக்கமும் கற்பும் மிக்க அயோத்தி நகர உயர்குலப் பெண்டிர்கள்

Koviloor Digital Library

எல்லாம், எதையும் பேச முடியாதவாறு நாணி, கூனிக் குறுகி வாய் அடங்கிப்போய்இருந்ததைப்போல, நல்லவளப்பமுடையசெவ்வாம்பல் மலர்கள் எல்லாம் இதழ்கள் குவிந்து மூடி இருந்தன.

செவ்வாம்பல் மலர் மாலையில் மலர்ந்து காலையில் குவியும் இயல்புடையது. இது காலையில் குவிந்திருத்தலைக் கவிஞன் அயோத்தி நகரப் பெண்டிர்கள் வாய்மூடி இருத்தற்கு ஒப்பிடுகிறான். அவர்கள் ஏன் வாய் மூடிக் குவிந்து இருக்கிறார்கள்? கைகேயியின் செயல் தான் காரணம். அவள் தன் பெருமை குறைவதையும் பொருட்படுத்தாமல், தான் தோன்றிய குலப்பெருமை சிதைவதையும் பொருட்படுத்தாமல், அழியாத நிலைத்த பழியை ஏற்றுக் கொண்டு, இதுகாறும் கட்டிக் காத்து வந்த புகழ் சிதைந்து போகும்படி செய்த செயல் தான் காரணம். மகளிர் வாய்க்குக் குமுத மலர் ஒப்பு.

58. பெண்கள் காவைப் பாட்டுப் பாடுதல்

மொய்அராகம் நிரம்ப, ஆசை முருங்குதீயின் முழங்க, மேல்
வைஅராவிய மாரன் வாளியும், வால்நிலா, நெடுவாடையும்
மெய்அராவிட, ஆவிசோர, வெதும்பும் மாதர்தம் மென்செவிப்
பைஅரா நுழைகின்றன போன்றன, பண் கனிந்து எழுபாடலே. (1640)

(மொய்-வலிய / அடர்ந்த; அராகம்-வேட்கை / பற்றுள்ளம்; முருங்குதல்-கனலுதல்; முழங்குதல்-வளர்ந்து ஆரவாரித்தல்; வை-கூர்மை; மாரன்-மன்மதன்; வாளி-அம்பு; வால்-வெண்மையான; வாடை-காற்று; அராவுதல்-கூர்மையாக்கப்படுதல் / தாக்கி வருத்துதல்; ஆவி-உயிர்; சோர்தல்-வருந்துதல்; பை-படம்; அரா-பாம்பு; நெடு-தொடர்ந்து வீசும்; பாடல்-பள்ளியெழுச்சிப் பாடல் / காலைப் பாட்டு; கனிந்து-முதிர்ந்து)

அடர்ந்த வேட்கை நிரம்பப் பெற்று, அதனால் எழுகின்ற ஆசைத் தீ உள்ளே மனத்தில் கொழுந்து விட்டு எரிய, வெளியே கூர்மையாக அராவப்பட்ட மன்மதனது அம்புகளும், வானத்திலுள்ள வெண்மையான நிலவொளியும், தொடர்ந்து வீசுகின்ற வாடைக் காற்றும், கணவனைப் பிரிந்த பெண்டிர்களது உடலெல்லாம் தாக்கி வருத்தவும், அதனால் உயிர் துன்புற்று வெதும்பவும், இத்தகைய நிலையிலுள்ள அவர்களது மெல்லிய செவிகளில், காலையில் இசைகலந்து பாடும் பள்ளியெழுச்சிப் பாடல்கள், படங்களுடைய பாம்பு அவர்கள் காதுகளில் பைய நுழைவதைப் போன்று புகுந்து துன்புறுத்தின.

அராகம் என்பது பொருள்களின்மேல் முதலில் தோன்றும் பற்றுள்ளம்; ஆசை என்பது அப்பொருள்களைப் பெறவேண்டும் என்று மேல்மேல் நிகழ்வது. உள்ளே வேட்கை நிறைகிறது. வெளியே மாரன் வாளியும், வால் நிலாவும், வாடைக் காற்றும், பள்ளியெழுச்சி இன்னிசைப் பாடலும் துன்புறுத்துகின்றன என்பதாம். இங்கே வாடை என்பது வடக்குத்

Koviloor Digital Library

திசையிலிருந்து வீசும் காற்றைக் குறிப்பதல்ல காற்று என்ற பொதுப் பொருளைக் குறிப்பதாம். காமுகர்க்கு இசைப் பாட்டு மேலும் காமத்தை வளர்த்து வருத்தும். அது அவர்களுக்கு நாராசமாய் இருந்தது என்பது கருத்து.

59. ஆடவர்கள் துயில் எழுதல்

''ஆழியான் முடிசூடும் நாள்,
இடையான பாவிஇது ஓர்இரா
ஊழி ஆயினஆறு'' எனா,
உயர்போதின் மேல்உறை பேதையும்,
ஏழுலோகமும் எண்தவம் செய்த
கண்ணும், எங்கள் மனங்களும்
வாழும்நாள் இது'' எனா, எழுந்தனர்
மஞ்சுதோய் புயமஞ்சரே. (1641)

(ஆழி-சக்கரம்; போது-தாமரை மலர்; பேதை-பெண் / சீதை; எண்-மதித்தல்; மஞ்சுதோய்-அழகு பொருந்திய; மஞ்சர்-மைந்தர் / ஆடவர்கள்; மஞ்சு-மேகமுமாம்)

நாளை காலை இராமன் முடிசூட்டிக் கொள்ளும் நாள். இன்று இரவு அழகு பொருந்திய மேகம் போல் வாரி வ்ழங்கும் நீண்ட கைகளையுடைய அயோத்தி நகரத்து ஆடவர்களும்-படுக்கைக்குப் போகிறார்கள். துயில் கொள்ளாது விடியலுக்குக் காத்திருக்கிறார்கள். சக்கரப் படையையுடைய திருமாலின் அம்சமான இராமபிரான் முடிசூட்டிக் கொள்ளும் நாளான இன்று, இடையூறாகப் பாவியான இந்த ஒரு இராப்பொழுது, பல ஊழிக் காலம் நீட்டிப்பது போல இருக்கிறதே என்று சினந்து கூறினர்; உயர்ந்த தாமரை மலரில் உறையும் திருமகளான சீதாதேவியும், ஏழு உலகங்களும் மதிக்கத்தக்க தவம் செய்த எங்கள் கண்களும், மனங்களும், இப்புவியில் தோன்றியதற்கு உரிய பயனை அடையும் நாள் இது தான் என்று எண்ணிக் கொண்டே படுக்கையினின்றும் எழுந்தனர்.

இராமபிரானது முடிசூட்டு விழாவைக் காண வேண்டும் என்று ஏங்கிக் காத்திருந்த அந்நகர மைந்தர்களுக்கு அன்றைய இரவு பல ஊழிக்காலம் நகர்வதைப் போன்றிருந்ததால் அவ்விரவைப் பாவி என்று இகழ்ந்தனர். அந்த நாள் தான் தாங்கள் பிறந்ததன் பயனைப் பெறப் போகும் நாள் என்று விடியும் நாளைப் புகழ்ந்தனர் என்பதாம். தங்கள் கண்களும் மனங்களும் இராமபிரானை நேரே கண்டு களிக்கும் வாய்ப்பு தாங்கள் செய்த எண்ணுதற்கரிய தவத்தின் பயனாய்க் கிடைத்தது என்பதாம். உருவமற்ற அருவமான இரவைப் பாவி என்றது, வள்ளுவர் ''அழுக்காறு என ஒரு பாவி'' (குறள் 168) என்பதைக் குறிப்பிடுதல் போல.

Koviloor Digital Library

60. பெண்டிர் துயில் எழுதல்

ஐயுறும் சுடர் மேனியான் எழில்காண
மூளும் அவாவினால்,
கொய்உறும் குலமாமலர்க் குவை நின்று
எழுந்தனர், கூர்மைகூர்
நெய்உறும் சுடர்வேல் நெடுங்கண் முகிழ்த்து
நெஞ்சில் நினைப்பொடும்
பொய்உறங்கும் மடந்தைமார் குழல்வண்டு
பொம்மென விம்மவே. (1642)

(சுடர்-ஒளி; முகிழ்த்து-மூடிக்கொண்டு / குவிந்து; ஐயுறுதல்-வியப்பு மிகுதல்; மூளும்-மேல் எழுகின்ற; அவா-ஆசை; ஐ-வியப்பு; உறு-மிகுதி; உறங்குதல்-நினைவு மறத்தல்)

கூர்மை மிக்கதும், நெய் பூசப் பட்டு ஒளி பொருந்தியதும், வேல் போன்றதுமான நீண்ட கண்களை மூடிக் கொண்டு, ஆனால் நெஞ்சில் இராமபிரானது பேரழகையும், அவன் முடிசூடிக் கொள்ளப் போகும் நிகழ்ச்சியையும் நினைவில் கொண்டு, பொய் உறக்கம்-கள்ளத் துயில்-கொள்ளும் அயோத்தி நகரத்துக் கன்னிப் பெண்கள், தங்கள் கூந்தல்களின் இயற்கை மணத்தையும், அதில் சூடியுள்ள மலர்களின் செயற்கை மணத்தையும் தேனையும் நுகர்ந்து தூங்கிய வண்டுகள் பொழுது விடிந்தது அறிந்து பொம்மென்ற ஒலியோடு எழுந்தன. அந்த மெல்லிய ரீங்கார ஒலியைக் கேட்டு, கண்டவர்கள் வியப்புறும் ஒளி பொருந்திய மேனியை உடைய இராமபிரானின் அழகினைக் காண, மேன்மேலும் எழுகின்ற ஆசையினால், காம்புகள் கொய்யப் பெற்ற, அன்றலர்ந்த, சிறந்த மலர்களின் தொகுதி பரப்பப்பட்டிருந்த படுக்கையினின்றும் அக்கன்னிப் பெண்கள் எழுந்தனர்.

மலர்க்குவை என்றது படுக்கையில் பரப்பியிருந்த மலர்களின் மிகுதியைக் குறிக்கும்; குலமா மலர்க்குவை என்றது சிறந்த மணமுள்ள மலர்க் குவியல்களைக் குறிக்கும்; கொய்உறும் குலமா மலர்க் குவை என்பது காம்பு கொய்யப்பட்ட மலர்களைக் குறிக்கும். காம்பு கொய்யாத மலர்கள் பஞ்சணையில் உறுத்தும்; துன்பத்தைத் தரும். நினைவு மறத்தலே உறக்கம். ஆனால் இவர்கள் நெஞ்சில் நினைப்போடு இருப்பதால் பொய்யுறக்கம் என்று கூறியது ஓர் நயம். அலங்காரமான பொருள்களைக் காணுதலில் ஆடவர்களைக் காட்டிலும் மகளிர்க்கு விருப்பம் அதிகம். எனவே அவனை முடிசூடிய கோலத்தில் காண வேண்டும் என்னும் பேரவாவினை நெஞ்சிற்குள்ளேயே பூட்டி வைத்துக் கொண்டு கள்ளத்துயில் கொள்கின்றனர் என்றார். எழில் என்பது மேலும் மேலும் வளர்ந்து சிறக்கும் அழகைக் குறிக்கும். பொம் என்பது அனுகரண ஒலி.

Koviloor Digital Library

61. ஊடியவர் கூட இயலாது எழுதல்

ஆடகம்தரு பூண் முயங்கிட
அஞ்சிஅஞ்சி அனந்தரால்
ஏடுஅகம் பொதிதார் பொருந்திட,
யாம பேரி இசைத்தலால்,
சேடுஅகம் புனைகோதை மங்கையர்
சிந்தையில் செறி திண்மையால்,
ஊடல்கண்டவர் கூடல் கண்டிலர்,
நையும் மைந்தர்கள் உய்யவே. (1643)

(சேடு-அழகு; கோதை-மாலை; செறி-பொருந்திய; திண்மை-திட்பம் / உறுதி; ஆடகம்-பொன்; பூண்-அணிகலன்கள்; முயங்குதல்-தழுவுதல்; அனந்தர்-சிறிய தூக்க மயக்கம்; ஏடு-அக இதழ்கள்; பொதி-நிறைந்த; தார்-மலர் மாலை; கண்டவர்-செய்தவர்; மைந்து-வலிமை; நையும்-வருந்தும்; உய்தல்-தப்புதல்)

அழகைத் தன்னுள்ளே அடக்கி அலங்கரிக்கப்பட்ட மலர் மாலை அணிந்த மகளிர்தம் மனத்திட்பத்தினாலும் உறுதியினாலும் ஊடல் செய்து காலத்தை நீட்டிக்கவே, பொன்னாலாகிய ஆபரணங்கள் அணிந்து அவர்களைக் கூட விழைந்த ஆடவர்கள், அவ்வாறு கூடும் போது இவ்வாபரணங்கள் மனைவியரின் உடலை வருத்துமே என்று பயந்து பயந்து, தூக்கக் கலக்கத்தில் அவற்றை நீக்கி, அக இதழ்கள் பொருந்திய கழுத்தில் அணியும் மலர் மாலை அணிந்து கொள்ள, அப்பொழுது கடையாமத்தின் முரசம், விடிவதை உணர்த்த, மைந்தர்கள் கூடித் தழுவமுடியவில்லையே என்ற மனக்குறையுடன் எழுந்தனர்.

முடிசூட்டு விழாவிற்குக் காலையில் செல்ல வேண்டுமே என்பதற்காகப் பொன்னாலாகிய ஆபரணங்களை அணிந்திருக்கின்றனர் ஆண்கள். இவற்றுடன் மனைவியரைக் கூடித் தழுவினால் இவை அவர்கள்மேனியை வருத்துமே என்று கருதி அஞ்சி ஊடலை நீட்டித்தனர். அவர்கள் ஈடுபட்ட பல்வேறு உபாயங்களுள் ஒன்று பொன்னாபரணங்களை நீக்கிப் புற இதழ்கள் களையப்பட்ட, அக இதழ்களை மட்டும் உடைய மலர் மாலையை மார்பில் அணிந்து கொண்டதாகும். இதற்குள் கடையாம முரசம் ஒலித்ததால், கூட இயலாது மனத்தாங்கலுடன் எழுந்தனர் என்பதாம். ஆடகம் என்பது பொன்னின் நான்கு வகைகளுள் ஒன்று. மற்ற மூன்று கிளிச்சிறை, சாம்பூநதம், சாதரூபம் என்பன. காமத்திற்கு இன்பம் விளைக்க ஊடியவர்கள், அவ்வூடலுக்கு இன்பம் விளையக் கூடல் செய்திலர் என்பதாம். கோதை தலையில் சூடும் மாலை; தார் மார்பில் அணிவது; பெண்கள் ஊடலை நீட்டித்ததாலும், ஆண்கள் ஆபரணங்களோடு தழுவுதற்கு அஞ்சியதாலும் இராப்போது கழிந்து விட்டது என்க. கால நீட்டிப்பை உணர்த்தவே அஞ்சி அஞ்சி என்று இருமுறை கூறினார் எனலுமாம்.

Koviloor Digital Library

62. காலையில் எழுந்த மற்ற ஒலிகள்

தழை ஒலித்தன; வண்டு ஒலித்தன;
தார் ஒலித்தன; பேரியாம்
முழவு ஒலித்தன; தேர் ஒலித்தன;
முத்து ஒலித்து எழும் அல்குலார்
இழை ஒலித்தன; புள் ஒலித்தன;
யாழ் ஒலித்தன; எங்கணும்
மழை ஒலித்தன போல் கலித்த
மனத்தின் முந்துஉறு வாசியே. (1644)

(தழை-பீலிக்குஞ்சங்கள்; ஒலித்தல்-அசைதலுமாம்; பேரி-முரசு; முழவு-வாத்தியம்; இழை-அணிகலன்கள்; வாசி-குதிரைகள்; மழை-மேகம் / இடி; கலித்தல்-கனைத்தல்)

நகரத்தில் எல்லா இடங்களிலும் மயிற்பீலிக்குஞ்சங்கள் அசைந்தாடின; வண்டுகள் ரீங்காரம் செய்தன; மேகங்கள் முழங்கின; பேரி எனப்படும் வாத்தியம் இசைக்கப் பட்டது; தேர்கள் ஓடுவதால் உண்டாகும் ஒலி நிறைந்தது; இடையில் அணிந்திருக்கும் முத்துக்களிலிருந்து எழும் ஒலியுடன், அவர்களின் பாதங்களில் அணிந்திருக்கும் சிலம்பு, சதங்கை போன்ற ஆபரணங்களும் ஒலி செய்தன; பறவைகள் மகிழ்ச்சியாகப் பாடித்திரிந்தன; வீணை இன்னிசை எழுப்பிற்று; மனோ வேகத்தை விட வேகமாகச் செல்லும் குதிரைகள் மேகத்தின் இடிமுழக்கம் போல கர்ச்சித்துக் கொண்டு ஓடின.

இந்தப் பாடலில் ஒலித்தன என்ற சொல் பல்வேறு இடங்களில் பல்வேறு பொருள்களைத் தந்து நின்றமை உணரத் தக்கது. மக்களின் மகிழ்ச்சி நிலை கூறப்பட்டது.

63. விளக்குகள் தம் ஒளி மங்கிப் போதல்

வையம்ஏழும் ஓர்ஏழும்
ஆருயிரோடு கூடவழங்கும் அம்
மெய்யன், வீரருள் வீரன், மாமகன்
மேல் விளைந்ததோர் காதலால்
நையநைய நல்ஜம்புலன்கள்
அவிந்துஅடங்கி நடுங்குவான்
தெய்வமேனி படைத்த சேயொளி
போல் மழுங்கின தீபமே. (1645)

(மெய்யன்-மெய்ம்மையாளன்; நைய-வருந்த; அவிந்து-அழிந்து; மாமகன்-மூத்த மகன்)

Koviloor Digital Library

தன் ஆட்சிக்கு உட்பட்ட ஈரேழு பதினான்கு உலகங்களையும், தனது பெறற்கரிய அருமையான உயிரையும் கூடத் தானமாக வழங்குகின்ற சத்திய சீலனானவனும், வீரர்களுக்கெல்லாம் வீரனானவனும், தனது மூத்த மகன் இராமனிடத்தில் விளைந்த ஒப்பற்ற பேரன்புடையவனும், தன் மகனது பிரிவுத் துயரை எண்ணி மிக வருந்தி, தன் ஐந்து பொறிகளும் அழிந்து அடங்கிப் போய் நடுங்குகின்றவனுமான தசரதனின் தெய்வத்தன்மை பொருந்திய திருமேனியில் தோன்றுகின்ற செம்மையான பேரொளி குன்றிக் குறைந்துகொண்டே வருவது போல, நகரத்திலுள்ள விளக்குகள் எல்லாமும், பொழுது புலர ஆரம்பித்ததால் ஒளி மங்கிப் போகலாயின.

மேனியின் செவ்வொளி மகனைப் பிரிய வேண்டுமே என்ற வருத்தத்தால் மழுங்கியது. அதற்குச் சூரியன் உதித்தலால் ஒளி மழுங்கும் விளக்குகள் உவமை. அவன் அளவற்ற துயர் எய்தியமையால் ஐம்புலன்களும் ஆற்றல் கெட்டன; உடம்பும் ஒளி மழுங்குதலாயிற்று. ''புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி, அறிவு அழிந்திட்டு'' என்பது திருஞானசம்பந்தர் தேவாரம். உயிர் பிரியும் காலம் வரும்போது புலன்கள் கலங்கி ஒடுங்குதலும் உடம்பின் ஒளி குன்றுதலும் இயல்பு.

64. பலவகை வாத்தியங்கள் ஒலித்தல்

வங்கியம் பலதேன் விளம்பின; வாணிமுந்தின பாணியின்
பங்கிஅம்பரம் எங்கும் விம்மின; பம்பை பம்பின; பல்வகைப்
பொங்குஇயம் பலவும் கறங்கின; நூபுரங்கள் புலம்ப, வெண்
சங்கு இயம்பின; கொம்பு அலம்பின, சாம கீதம் நிரந்தவே. (1646)

(வங்கியம்-புல்லாங்குழல் / மூங்கில் / துளைக் கருவி; விளம்புதல்-ஊதுதல்; வாணி-சொல்; பாணி-இசைப்பாடல்கள்; பங்கி-வகை; இயம்-வாத்தியங்கள்; கறங்குதல்-ஒலித்தல்; நூபுரம்-காற்சிலம்புகள்; புலம்புதல்-ஒலித்தல்; அலம்புதல்-ஊதுதல்; நிரந்த-நிறைந்தன; அம்பரம்-ஆகாயம்; விளம்புதல், விம்முதல், பம்புதல், கறங்குதல், புலம்புதல், இயம்புதல், அலம்புதல் முதலியன ஒலித்தல் என்ற பொருள் தரும் பல சொற்கள். சங்கு-வளையலுமாம்)

மூங்கிலாலான துளைக் கருவிகளான புல்லாங்குழல்கள் தேன் போன்ற இசையைத் தந்தன; சொற்கள் முற்பட்ட இன்னிசைப் பாடல்களின் வகைகள் எட்டுத் திக்கிலும் பரவி ஆகாயத்தையும் நிறைத்தன; பம்பை என்னும் வாத்தியம் இசைக்கப்பட்டது. பலவகையான பொலிவு பெற்ற வாத்தியங்கள்பலவும் ஒலித்தன; மகளிரின் காற்சிலம்புகள் ஒரு பக்கம் ஒலி எழுப்பின; அதற்கேற்ப வெண்மையான சங்குகளாலாகிய வளையல்களும் சேர்ந்து ஒலித்தன; ஊது கொம்புகள் ஊதப்பட்டன; சாம வேதம் இன்னிசையாக இசைக்கப்பட்டது நகரெங்கும் பரவி நின்றது.

தட்டுவன, கொட்டுவன, ஊதுவன, எழுப்புவன என்று வாத்தியங்கள் பல வகைப்படும்.

Koviloor Digital Library

65. சூரியன் தோன்றுதல்

தூபம்முற்றிய கார்இருள் பகைதுள்ளி ஓடிட, உள்எழும்
தீபம்முற்றவும் நீத்து அகன்றஎனச் சேயது ஆருயிர் தேய, வெம்
பாபம் முற்றிய பேதை செய்தபகைத் திறத்தினில், வெய்யவன்
கோபம் முற்றி மிகச்சிவந்தனன் ஒத்தனன், குணக் குன்றிலே.(1647)

(தூபம்-புகை; முற்றிய-சூழ்ந்து கொண்ட; முற்றவும்-முழுவதும்; பாபம்-பாவம் / தீ வினை; முற்றுதல்-நிரம்புதல்; திறம்-தன்மை; முற்றி-முதிர்ந்து; குணகுன்று-உதயகிரி / குணக்கு (கிழக்கு); வெய்யவன்-சூரியன்; முற்றிய என்ற ஒரே சொல் சூழ்ந்துகொண்ட; முழுவதும் , நிரம்பிய, முதிர்ந்த என்ற பல பொருள்களைத் தந்து நின்றது)

சூரியன் தோன்றியதால் ஒளிக்குப் பகையாகிய இருள்-புகை சூழ்ந்து கொண்ட இருள் துள்ளி ஓடியது; வீடுகளுக்குள்ளே ஏற்றி வைத்திருக்கின்ற விளக்குகள் முழுவதும் ஒளி மழுங்கியதால் அகற்றப் பெற்றன. சூரியன் தனது புதல்வனாகிய தசரதனது அருமையான உயிர் மெலிந்து வாடும்படி, கொடிய பாவம் நிரம்பிய அறிவற்றவளான கைகேயி செய்த பகைத் தன்மையினால், சூரியன் தான் மிக்க கோபம் கொண்டு மிக்குச் சிவந்து தோன்றியது போன்று கிழக்குத் திசையிலுள்ள உதயகிரியில் உதயமானான்.

சூரிய ஒளி பரவுவதால், ஒளிக்குப் பகையாக இருள் துள்ளிக் குதித்து ஓடியது என்றும், வீட்டில் உள்ள விளக்குகள் அகற்றப் பெற்றன என்றும் இரண்டினையும் வேறுபடுத்திக் கூறிய நயம் சுவைக்கத்தக்கது. சூரியன் கிழக்கில் காலையில் உதிக்கும் போது பொதுவாகவே செந்நிறமாகத்தான் தோன்றுவான். ஆனால் கவிஞன் இவன் செந்நிறமாகத் தோன்றுவதற்குக் காரணம், அறிவற்றவளாகிய கைகேயி செய்த பாவச் செயலினால், தனது குலத்தில் உதித்தவனான தன் மகன் தசரதன் உயிர் வருந்துவதைக் காண இயலாது, கைகேயியின் மேல் ஏற்பட்ட கோபத்தினால் சூரியன் மிக்கச் சிவந்த நிறம் பெற்றுத் திகழ்ந்தான் என்று இயற்கை நிகழ்ச்சிக்கு ஒரு காரணம் கற்பிக்கிறான். இருள் ஒளிக்குப் பகை எனவே அது துள்ளி ஓடியது என்றதும்; விளக்கு ஒளிக்கு நட்புறவானதால் அது அகன்றதாகவும் கூறிய நயம் மிகவும் இரசிக்கத்தக்கது. இயல்பாகவே கொடியவனான சூரியன், இப்போது கோபம் மிகுதியால் முற்றி மிகச் சிவந்தான் என்றான்.

66. தாமரை மலர்தல்

மூவராய், முதலாகி, மூலமது ஆகி, ஞாலமும் ஆகும் அத்
தேவதேவர் பிடித்த போர்வில் ஒடித்த சேவகர், சேண் நிலம்
காவல் மாமுடி சூடுபேரெழில் காணலாம் எனும் ஆசைகூர்
பாவைமார் முகம்என்ன, முன்னம் மலர்ந்த பங்கய ராசியே. (1648)

Koviloor Digital Library

(மூவர்-அரன், அரி, அயன்; முதல்-சிவன்; மூலம்-முதற்காரணம் / ஆதாரம்; தேவதேவன்-சிவபெருமான்; சேவகர்-வீரன்; சேண்-பரந்த / நெடும்பரப்பு; மா-சிறந்த; முன்னம்-முற்பட / முந்தி; பங்கயம்-தாமரை மலர்; ராசி-கூட்டம்; கூர்-மிக்க)

சிவன், திருமால், பிரமன் என்ற மும்மூர்த்திகளுக்குள்ளும் முதல்வனாகி, அதற்கெல்லாம் மூலஆதாரமாக விளங்குபவனும், இந்த உலகமே தானாக ஆகி நிற்கும் அந்தத் தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய சிவபெருமான் தன்கையில் ஏந்திய திரியம்பகம் என்னும் வில்லை இறுத்த வீரன் இராமபிரான், இந்த நெடும் பரப்புடைய கோசல நாட்டை அரசு புரிந்து காவல் செய்வதன் பொருட்டு, சிறந்த மகுடம் புனைந்து கொள்ளுகின்ற-முடிசூட்டிக் கொள்ளுகின்ற-பேரழகு வாய்ந்த நிகழ்ச்சியைக் காணலாம் என்னும் ஆசை மிக்கு, அயோத்தி நகர மகளிரின் மலர்ந்த முகம் போல, தாமரை மலர்க் கூட்டங்கள் அவர்களுக்கு முற்பட்டு மலரலாயின.

முதல்-ஈசன்; மூலம்-மகேசன்; பொதுவாகப் பெண்களின் முகத்திற்குத் தாமரையை உவமை கூறுவது வழக்கம். கம்பன் மாற்றிப்பாடுகிறான். இது போலப் பல இடங்களிலும் அவன் பாடியிருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது. அழகைக் கண்டு இரசிப்பதில் ஆடவரினும் பெண்டிரே முற்படுவர். அவர்கள் மலர்ந்த முகத்தோடு வெளியே வருவதற்கு முன்பே, தாமரைகள் மலர்ந்து காட்சி அளித்தன என்கிறார். தசரதன் எவ்வாறு சூரிய குலத்தோன்றலோ, அதுபோல இராமபிரான் கமல நாயகன். எனவே தாமரை மலர்க் கூட்டங்கள் அவன் முடிசூடும் அழகு காண முந்தி வந்தன என்பதாம். ''முதலாவார் மூவரே, அம்மூவருள்ளும் முதலாவான் முந்நீர் வண்ணன்'' என்பது பொய்கையாழ்வாரின் திருவந்தாதி.

67. கவிக் கூற்று

இன்ன வேலையின், ஏழுவேலையும்
 ஒத்தபோல இரைத்து எழுந்து,
அன்னமாநகர் ''மைந்தன் மாமுடிசூடும்
 வைகல் இதாம்'' எனாத்
துன்னுகாதல் துரப்ப வந்தவை
 சொல்லலாம் வகை, எம்மனோர்க்கு
உன்னல் ஆவனஅல்ல; என்னினும்
 உற்றபெற்றி உணர்த்துவாம். (1649)

(இன்ன-இப்படிப்பட்ட; வேலை-வேளை; வேலை-கடல்; இரைத்து-ஆரவாரித்து; துன்னு-நெருங்கிய; துரத்தல்-தூண்டுதல்; உன்னல்-நினைத்தல்; வைகல்-நாள்; உற்றபெற்றி-இயன்றவாறு / முடிந்த அளவு)

Koviloor Digital Library

இப்படிப்பட்ட வேளையில், அந்த அயோத்தி மாநகரில் வசிப்பவர்கள் அனைவரும், ஏழு கடல்களும் ஒரு சேர இணைந்து ஆரவாரித்துக் கொண்டு பொங்கி எழுந்து வந்ததையும் ''வலிமையுடையவனான எல்லார்க்கும் நல்மகனான இராமபிரான் சிறந்த முடிசூட்டிக் கொள்ளும் நாள் இன்று தான்'' என்று கூறிக் கொண்டு, நெருங்கிய பேரன்பு தூண்டுதலால் வந்தவர்கள் செய்த செயல்களையும் சொல்லுகின்ற தன்மை என்னைப் போன்றவர்களுக்கு நினைத்தற்குரியன கூட அல்ல; எனினும், நடந்தவற்றை எம்மால் இயன்றவாறு எடுத்துரைப்போம்.

அம்முடிசூட்டுவிழாவில் அம்மக்கள் செய்தவைகளை நேரில் கண்டவர்களுக்கு இன்றி அதனை நினைத்து வகைப்படுத்திச் சொல்லுதல் என்பது பிறருக்கு இயல்வதன்று என்பது கருத்து. இராமபிரானை, மக்களனைவரும் தத்தம் மகனாகவே கருதினர் ஆதலின், மைந்தன் எனப் பொதுவாகக் கூறினான் என்க.

68. மகளிர் செயல்கள்

குஞ்சரம் அனையார் சிந்தைகொள் இளையார்;
பஞ்சினை அணிவார்; பால்வளை தெரிவார்;
அஞ்சனம் என வாள் அம்புகள் இடையே
நஞ்சினை இடுவார்; நாள்மலர் புனைவார். (1650)

(குஞ்சரம்-யானை; இளையார்-இள மகளிர்; பஞ்சு-செம்பஞ்சுக் குழம்பு; பால்-வெண்மையான; வளை-சங்கு வளையல்கள்; தெரிதல்-ஆராய்தல்; அஞ்சனம்-மை; நாள்-புதிது / அன்றலர்ந்த; வாள்-கூரிய)

யானையைப் போன்ற பெருமிதமும் கம்பீரமும் உடைய ஆடவர்களின் மனங்களைக் கொள்ளை கொள்வதற்காக இளமகளிர் தம் கால்களில் செம்பஞ்சுக் குழம்பினைப் பூசிக் கொள்வார்கள்; தம் கைகளில் பால் போன்று வெண்மையான சங்குகளாலியன்ற வளையல்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ளுவார்கள்; வாள்போன்றும் அம்பு போன்றும் கூரிய கண்களில், கருமையான மை என்று சொல்லிக் கொண்டு நஞ்சினைத் தீட்டிக் கொள்ளுவார்கள். இத்துடன் கூட அன்றலர்ந்த புதிய மலர்களைத் தம் கூந்தலில் சூடிக் கொள்ளுவார்கள்.

மகளிர் தம்மை அலங்கரித்துக் கொள்ளும் வகைகளில் நான்கை மட்டும் பாதாதி கேசமாகக் கூறினார். அம்புகளுக்கு நஞ்சு ஊட்டுதல் வழக்கம். அது போல இவர்கள் தம் கண்களாகிய அம்புகளுக்கு, அஞ்சனமாகிய நஞ்சினைத் தீட்டிக் கொண்டார்கள் என்பதாம்.

69. ஆடவர் மகிழ்ச்சி

பொங்கிய உவகை வெள்ளம் பொழிதரக் கமலம்பூத்த
சங்கைஇல் முகத்தார், நம்பிதம்பியர் அனையர் ஆனார்;

Koviloor Digital Library

செங்கயல் நறவம் மாந்திக் களிப்பன சிவணும் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குவவுத்தோள் குமரர் எல்லாம். (1651)

(நறவம்-தேன்; மாந்தி-பருகி; சுவடு-அடையாளம்; குமரர்-காளையர்; சங்கைஇல்-களங்கமற்ற / குற்றமற்ற; நம்பி-இராமன்; வெள்ளம்-இன்பக் கண்ணீர் / ஆனந்த பாஷ்பம்; சிவணும்-ஒக்கும்; குவவு-திரண்ட)

சிவந்த கெண்டை மீன்கள் தேனைப் பருகிக் களித்திருப்பன போன்ற கண்களையுடைய இளம்மகளிர்களின் கொங்கைகளில் பூசப்பட்டிருந்த குங்குமச் சுவடு கூட அழியாத படியான திரண்ட தோள்களை உடைய இளைய ஆடவர்கள் எல்லோரும், உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கி கண்கள் ஆனந்தக் கண்ணீர் பொழிய, தாமரை மலர் போன்று மலர்ந்த, களங்கமற்ற முகத்தை உடையவர்களாய், ஆடவர்களில் சிறந்தோனாகிய இராமபிரானின் இளவல்களைப் போல மகிழ்ச்சி உடையவராய் விளங்கினார்கள்.

உவகை வெள்ளம் என்பது இன்பக் கண்ணீர்ப் பெருக்கு ஆனந்த பாஷ்பம்; அயோத்தி நகர இளைய ஆடவர் ஒவ்வொருவரும் தத்தமது தமையனே முடிசூடிக்கொள்ளப் போவது போல மகிழ்ச்சி அடைந்தனர் என்பதாம். மதுவைப் பருகிக் களித்திருக்கும் செங்கயல் மீன்கள், செவ்வரி படர்ந்து களித்திருக்கும் மகளிர் கண்களுக்கு உவமை.

70. நகரத்தார் மகிழ்ச்சி

மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்;
வேதியர் வசிட்டன் ஒத்தார்; வேறுள மகளிரெல்லாம்
சீதையை ஒத்தார்; அன்னாள் திருவினை ஒத்தாள்; அவ்வூர்
சாதுகை மாந்தர் எல்லாம் தசரதன் தன்னை ஒத்தார். (1652)

(சாதுகை மாந்தர்-சாந்தமான ஒழுக்கமுள்ள முதிய ஆடவர்கள்; சாதுகை-சாத்வீகம் / சாந்தம்)

அயோத்தி நகரத்திலுள்ள கற்புடைப் பெண்டிர் அனைவரும் கோசலை எந்த மனநிலையில் இருக்கிறாளோ அதே மனநிலையில் இருந்தார்கள்; அவளை விட வயதில் சிறியவர்களான மற்றும் இருக்கின்ற பெண்கள் அனைவரும் சீதை எந்த மனநிலையில் இருக்கிறாளோ அதே மன நிலையில் இருந்தனர். ஆனால் சீதையோ இராஜ்யலட்சுமியைப் போல மகிழ்ச்சி கொண்டிருந்தாள். வேதம் ஓதும் அந்தணர்கள் குலகுரு வசிட்டரைப் போன்று மகிழ்ந்திருந்தார்கள். வயது முதிர்ந்த சாந்தமான பெரியவர்கள் எல்லாம் தசரதன் கொண்டிருந்த மனநிலையைக் கொண்டிருந்தார்கள்.

வயதான பெண்டிரெல்லாம் தத்தமது மகனுக்கே முடிசூட்டுவிழா நடைபெறுவது போல மகிழ்ந்தனர். எனவே கோசலைக்கு உவமை கூறினார்; மற்றுமுள்ள இளம் பெண்கள் எல்லாம் தத்தமது கணவருக்கே

Koviloor Digital Library

முடிசூட்டு விழா நடைபெறுவது போல மகிழ்ந்தனர் எனவே சீதைக்கு உவமை; வயதான ஒழுக்க நெறியில் நிற்கும் சாந்தமான பெரியவர்கள் எல்லாம் தத்தமது மகனுக்கே முடிசூட்டுவிழா நடைபெறுகிறது என்று எண்ணி மகிழ்ந்தார்கள். எனவே தசரதனுக்கு உவமை. இந்த இரண்டு பாடல்களாலும், அந்நகரத்திலுள்ள இளையவர், முதியவர், ஆடவர், பெண்டிர் ஆகிய அனைவரும் இராமபிரான் முடிசூடுதலைத் தமக்குற்ற பெரும் பேறாகக் கருதி மகிழ்ந்தனர் என்க.

71. அரசர் கூட்டம் வருதல்

இமிழ்திரைப் பரவை ஞாலம் எங்கணும் வறுமைகூர,
உமிழ்வது ஒத்து உதவுகாதல் உந்திட வந்தது அன்றே,
குமிழ் முலைச் சீதைகொண்கன் கோமுடி புனைதல் காண்பான்,
அமிழ்து உணக் குழுமுகின்ற அமரரின் அரச வெள்ளம். (1653)

(வெள்ளம்-கூட்டம்; காண்பான்-காணும்பொருட்டு; உதவுதல்-பெருகுதல்; இமிழ்தல்-ஒலித்தல்; பரவை-கடல்; கூர-அடைய / மிகுதல்; உமிழ்தல்-வெளிப்படுத்தல்; பரவியிருப்பதால் பரவை, கடலுக்குக் காரணப்பெயர்; கொண்கன்-கணவன்)

அரசர்களின் கூட்டம், குவிந்த கொங்கைகளை உடைய சீதாதேவியின் கணவனான இராமபிரான் சிறந்த முடிசூட்டுக் கொள்ளப் போவதைக் காணும் பொருட்டு, உள் நிரம்பி வெளிப்படுவது போன்று மிகுகின்ற விருப்பம் தம்மைத் தூண்ட, ஒலிக்கின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பெற்ற இந்நிலவுலகெங்கும் தாம் இல்லாமையால் வெறிச் சென்று இருக்கும்படி வெறுமை மிக, பாற்கடலில் தோன்றிய தேவாமிர்தத்தைப் பருகக் கூடின தேவர்களைப் போல, அயோத்தி நகரில் வந்து கூடினர்.

பள்ளம் நோக்கி விரைந்து பாயும் வெள்ளம் போல், அரசர்களும் அயோத்தி நகர் நோக்கி விரைந்து வந்து கூடினர் என்பது கருத்து. அரசர்கள் எல்லோரும் தம்பரிவாரங்களுடன் தத்தமது தலை நகர் விட்டு இங்கு வந்து கூடியதால் அந்த ஊர்களில் வெறுமை நிலவிற்று என்பதாம். அமரர்கள் தேவாமிர்தம் பருகக் கூடினர். அரசர்கள் முடிபுனைதல் காணக் கூடினர். அயோத்தி-பாற்கடல்; அரசர்கள்-அமரர்கள்; விழாக் காணுதல் அமிழ்தம் உண்டல்.

72. நகர மக்கள் தெருவில் நெருக்குதல்

பாகுஇயல், பவளச்செவ்வாய், பணைமுலை, பரவை அல்குல்
தோகையர் குழாமும், ம்மைந்தர் சும்மையும் துவன்றி எங்கும்
''ஏகுமின் ஏகும்'' என்று என்று, இடையிடை நிற்றல் அல்லால்
போகில மீளகில்லா, பொன்னகர் வீதி எல்லாம். (1654)

Koviloor Digital Library

(பொன்-அழகிய; பாகு-சர்க்கரைப் பாகு; பணை-பருத்த; பரவை-பரந்த; அல்குல்-அரையிடம்; சும்மை-கூட்டம்; துவன்றி-நெருங்கி; தோகை-மயில்)

அழகிய அயோத்தி நகரத் தெருக்களில் எல்லாம், சர்க்கரைப் பாகு போன்ற இனிய இயல்பும் பவளம் போன்ற சிவந்த உதடுகளும், பருத்த கொங்கைகளும், பரந்த அல்குலும் மயில் போன்ற சாயலும் உடைய மகளிர் கூட்டமும், ஆடவர்கள் கூட்டமும், நெருங்கி இருந்தன. ''செல்லுங்கள், செல்லுங்கள்'' என்று ஒவ்வொருவரும் பலமுறை சொல்லுகிறார்களே தவிர, ஒருவரும் தான் இருந்த இடத்தை விட்டு நகர்ந்து முன்னே செல்லவும் முடியவில்லை, திரும்பி வரவும் இயலவில்லை.

73. ''வேந்தரே பெரிது'' என்பாரும், வீரரே பெரிது'' என்பாரும்
''மாந்தரே பெரிது'' என்பாரும், மகளிரே பெரிது'' என்பாரும்
''போந்ததே பெரிது'' என்பாரும், புகுவதே பெரிது'' என்பாரும்
தேர்ந்ததே தேரின் அல்லால், யாவரே தெரியக் கண்டார்? (1655)

(போந்தது-வந்தது; புகுவது-வருவது; தேர்ந்தது-கண்டது)

அவ்வாறு தெருவில் கூடிய கூட்டத்தில் அரசர்கள் கூட்டமே எண்ணிக்கையில் மிகுதியானவர் என்பர் சிலர்; சிலர், வீரர் கூட்டமே மிகுதி என்பர்; வேறு சிலர் ஆடவர் கூட்டமே பெரிது என்பர்; மற்றும் சிலர் மகளிர் கூட்டமே எண்ணிக்கையில் மிகுதியானவர் என்பர்; சிலர் இங்கு வந்து சேர்ந்த கூட்டமே பெரிது என்பர்; மற்றும் சிலர் வந்து வாயிலில் நுழைந்து கொண்டிருக்கும் கூட்டம் இதைவிட மிகப் பெரிது என்பர்; இவ்வாறு அவரவர்கள் தாங்கள் கண்டவற்றையே மிகுதியாகக் கூறினார்களே அன்றி, ஒருவரும் முழுக் கூட்டத்தையும் கண்டு, அதன் எண்ணிக்கையை அளவிட்டுக் கூற முடியாதவராயினர். முழுதும் கண்டவர் யாரும் இல்லை.

அரசர், வீரர், ஆடவர், மகளிர், வந்தவர், வருபவர், இவர்கள் எல்லோரையும் ஒருங்கே பார்த்து, கூட்டத்தின் எண்ணிக்கையில் யார் மிகுதி என்பதைத் தேர்ந்து சொல்லுவார் யாரும் இல்லை என்பது கருத்து. இதே கருத்தினை முன்பு, தோள் கண்டார் தோளே கண்டார் என்ற பாடலில் ''யாரே வடிவினை முடியக் கண்டார்?'' என்று கூறியதும் நினைவு கூரத்தக்கது. இதே போல் பின்னர் கிஷ்கிந்தா காண்டத்தில் தானைகாண் படலத்தில் ''கடல்கண்டோம் என்பர் யாவரே முடியக் கண்டார்?'' என்று கூறுவதும் நோக்கத்தக்கது. இதனால் ஒவ்வொரு குழுவும் அளவிட முடியாதவாறு மிகுதியாய் இருந்தது என்பது பெறப்பட்டது.

74. மகளிர் ஒன்று சேர்தல்

குவளையின் எழிலும், வேலின் கொடுமையும் குழைத்துக் கூட்டித்
திவளும் அஞ்சனம் ஒன்று ஏய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவள ஒண்மதியுள் வைத்த தன்மைசால் தடங்கண் நல்லார்
துவளும் நுண்இடையார் ஆடும் தோகைஅம் குழாத்தில் தொக்கார். (1656)

Koviloor Digital Library

(திவளும்-விளங்குகின்ற; அஞ்சனம்-மை; ஏய்ந்த-பொருந்திய; தீட்டி-எழுதி; தவளம்-வெண்மை; ஒண்-ஒளி பொருந்திய; துவளும்-அசையும்; தொக்கல்-கூடுதல்; குவளை-நீலோற்பல மலர்; குழைத்து-கலந்து)

நீலோற்பல மலரின் அழகும், வேற்படையின் கொடுமையும், இவ்விரண்டையும் கலந்து சேர்த்து, விளங்கும் மை என்று பெயர் பொருந்திய நஞ்சினை, நன்கு தெரியுமாறு அவற்றில் தீட்டி, வெண்மையான ஒளி பொருந்திய சந்திரனிடத்தில் அதனை வைத்தாற் போன்ற தன்மை கொண்ட பெரிய கண்களையுடைய நல்லவர்களாகிய பெண்களும், அசைந்தாடும் நுண்ணிய மெல்லிய இடையையுடையவர்களும், தோகை விரித்தாடுகின்ற மயில் போலும் சாயலையுடையவர்களுமாகிய பெண்களும் அந்தக் கூட்டத்தில் வந்து ஒன்று சேர்ந்து குழுமினர்.

கம்பனின் அதீதக் கற்பனையைக் காட்டும் பாடல் இது. இதே போல் ஒரு பாடல் தண்டியலங்காரமும் கூறுகிறது. பாடல் இது. ''சீத மதியின் ஒளியும், செழுங்கமலப் போதின் புதுமலர்ச்சியும் கொண்டு, வேதாதன், கை மலராலன்றிக் கருத்தால் வகுத்து அமைத்தான், மொய்ம் மலர்ப் பூங்கோதை முகம்'' என்பது தண்டியலங்காரம்.

75. முடிசூட்டு விழாவிற்கு வராதவர் யார்?

நலம்கிளர் பூமி என்னும் நங்கையை, நறும்துழாயின்
அலங்கலான் புணரும் செல்வம் காணவந்து அடைந்திலாதார்
இலங்கையில் நிருதரே, இவ்வேழ் உலகத்து வாழும்
விலங்கலும், ஆசை நின்ற விடா மத விலங்கலேயால். (1657)

(கிளர்-விளங்குகின்ற; துழாய்-துளசி மாலை; அலங்கல்-மாலை; புணரும்-கூடும்; நிருதர்-அரக்கர்கள்; விலங்கல்-மலைகள்; ஆசை-திசை; விலங்கல்-திசை யானைகள்; செல்வம்-விழா / விமரிசை / வைபவம்)

நலம் மிகுந்து விளங்குகின்ற பூமி என்னும் நற்குணம் மிக்க மங்கையை, நறுமணம் மிகுந்த துளசி மாலையை மார்பில் அணிந்தவனான திருமாலின் அம்சமான இராமபிரான், பூதேவியாகிய அரசச் செல்வத்தைக் கூடும் பேற்றினைக் காண வாராதவர்கள் இலங்கையில் உள்ள அரக்கர்களும், இந்த ஏழு உலகங்களில் அசையாது நின்றிருக்கும் மலைக் கூட்டங்களும், எட்டுத்திசையிலும் உலகைக் காவல் காத்து நிற்கும் மதம் கொண்ட திசை யானைகளுமேயாம். உலகிலுள்ள மற்ற எல்லோரும் எல்லாமும் வந்து குழுமின என்பதாம்.

அரக்கர்கள் மனிதர்களுக்குப் பகையானவர்கள் என்பதாலும், மலைகள் இருந்த இடத்தை விட்டு அசைய இயலாதன என்பதாலும், அட்டதிக்கு யானைகள் தாங்கள் பூமியைத் தாங்கும் தொழிலைவிட்டு வரமுடியாது என்பதாலும் இவைகள் மட்டும் வரவில்லை, மற்ற எல்லோரும் வந்து

Koviloor Digital Library

கூடியிருந்தனர் என்பது கருத்து. இராமனுடைய தம்பியராகிய பரதனும், சத்துருக்கனும், கேகய மன்னனும் இவ்விழாவிற்கு வரவில்லை என்பதும் நினைக்கத்தக்கது.

76. அரசர்கள் மண்டபத்துள் புகுதல்

சந்திரர் கோடி என்னத் தரளவெண் கவிகை ஓங்க,
அந்தரத்து அன்னம் எல்லாம் ஆர்ந்து என்னக் கவரி துன்ன,
"இந்திரற்கு உவமை சாலும் இருநிலக் கிழவரெல்லாம்
வந்தனர்; மௌலி சூட்டும் மண்டபம் மரபில் புக்கார். (1658)

(சால-பொருந்தத்தக்க; நிலக்கிழவர்-மன்னர்கள்; தரளம்-முத்து; கவிகை-குடை; அந்தரம்-ஆகாயம்; கவரி-வெண்சாமரை; துன்ன-நெருங்க; மரபில்-முறையாக; ஆர்தல்-நிறைதல்; கிழவர்-உரிமையுடையவர்; கோடி-அளவிறந்தோர் / மிகப்பல; மௌலி-முடி / கிரீடம்)

தேவேந்திரனுக்கு செல்வம் மிகுதியாலும், போக நுகர்ச்சியாலும் உவமை கூறத்தக்கப் பெருநிலங்களை ஆளுகின்ற அரசர்கள் எல்லாம், தங்கள் பரிவாரங்களுடன் வந்த காட்சி, கோடிக்கணக்கான சந்திரன்கள் வெண்மையான முத்துக்கள் பதிக்கபெற்ற வெண்கொற்றக் குடைகள் உயர்ந்து விளங்கவும், உலகத்திலுள்ள அன்னப்பறவைகள் எல்லாம் விண்ணில் வந்து நிறைந்திருக்கின்றன என்று எண்ணும்படி வெண் சாமரைகள் நெருங்கி வரவும் வந்து, இராமபிரானுக்கு முடிசூட்டும் மண்டபத்தில் தாம் வந்த முறைப்படி புகுந்தனர்.

கோடி என்பது மிகப்பல என்ற பொருளில் வந்தது; வெண் சாமரைகள் அசைவாலும், நிறத்தாலும் அன்னப்பறவைகளுக்கு உவமை; இங்கு ஒரு கருத்து. சொல்லப்படும் பொருளினும் உவமை எட்டு மடங்கு உயர்ந்திருத்தல் வேண்டும் என்பது மரபு.

77. அந்தணர் வந்து சேருதல்

முன் பயந்து எடுத்த காதல்புதல்வனை முறையினோடும்
இல்பயன் சிறப்பிப்பாரின் ஈண்டிய உவகை தூண்ட
அற்புதன் திருவைச் சேரும் அருமணம் காணப்புக்கார்
நற்பயன் தவத்தின் உய்க்கும் நான்மறைக் கிழவரெல்லாம். (1659)

(உய்த்தல் -தருதல் / உண்டாக்குதல்; பயத்தல்-பெற்று வளர்த்தல்; இல்-இல்லறம்; ஈண்டுதல்-நெருங்குதல்; திரு-இராஜ்யலக்ஷ்மி / அரசச் செல்வம்; அற்புதன்-அழகுடையவன் / மாய விளையாட்டு உடையவன்)

தாம் இயற்றிய அருமையான தவத்தின் ஆற்றலால் நல்ல பயன்களையே விளைவிப்பவரும், நான்கு வேதங்களுக்கும் உரிமையுடையவர்களுமாகிய அந்தண வேதியர்கள், தாம் முன்பு முதன் முதலில் பெற்றெடுத்து வளர்த்த அன்புக்குரிய மூத்த புதல்வனுக்கு,

Koviloor Digital Library

முறைப்படி இல்லறப் பயன் உய்யுமாறு மேம்படுத்த வேண்டிய கடமை உணர்ச்சியும் மகிழ்ச்சியும் உந்தித்தள்ள, மாய விளையாட்டுக்களில் வல்லவனான திருமாலின் அம்சமான இராமபிரான் அரசச் செல்வத்தைக் கூடும் அருமையான மணவிழாவை-முடிசூட்டு விழாவைக் காண மண்டபத்திற்குள் புகுந்தனர்.

வந்த அந்தணர் ஒவ்வொருவரும் தாம் பெற்றெடுத்த மூத்த புதல்வனுக்குத் திருமணம் செய்வித்து மகிழ்ச்சியடைவது போல் மகிழ்ந்து இராமபிரானது முடிசூட்டு விழாவைக் காணவந்தனர் என்பதாம். ''ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும், எண்ணில் தவத்தான் வரும்'' என்பது குறள் 264. இவ்விரண்டினுள், இவ்வந்தணர்கள் உவந்தாரை ஆக்குவது ஒன்றை மட்டுமே செய்யும் அந்தணர் என்பதைக் குறிக்க நற்பயன் தவத்தின் உய்க்கும் நான்மறைக் கிழவர் என்றார்.

78. பல்வகை நிகழ்ச்சிகள்

விண்ணவர் விசும்பு தூர்த்தார்; விரிதிரை உடுத்த கோல
மண்ணவர் திசைகள் தூர்த்தார்; மங்கலம் இசைக்கும் சங்கம்,
கண்அகன் முரசின் ஒதை, கண்டவர்செவிகள் தூர்த்த;
எண்ணரும் கனகமாரி எழுதிரைக்கடல்கள் தூர்த்த. (1660)

(விசும்பு-விண் / ஆகாயம்; தூர்த்தல்-நிரப்புதல்; கோலம்-அழகு; அகன்-அகன்ற; ஓதை-ஓசை; கனகம்-பொன்; இசைக்கும்-ஒலிக்கின்ற; எண்ணரும்-அளவிடற்கரிய)

இராமபிரான் முடிசூட்டு விழாவினைக் காணவந்த தேவர்கள், விண்ணுலகத்தை நிரப்பினர்; விரிந்த அலைகளை ஆடையாக உடுத்த அழகிய நிலவுலகத்தில் வாழ்வோர் எட்டுத்திக்குகளையும் நிரப்பினர்; மங்களகரமாக ஒலிக்கின்ற சங்கு, அகன்ற கண் என்றபகுதியை உடைய முரசு ஆகியவற்றின் ஒசைகள், விழாக்காண வந்திருந்த எல்லோருடைய செவிகளையும் நிரப்பின. மகிழ்ச்சியால் செல்வர்கள் அளவிடற்கரிய பொற்காசுகளை மழை போல வீசி எறிந்ததனால் அலைகளையுடைய ஏழுகடல்களும் நிரம்பப்பெற்றன.

முரசின் அடிபடும் இடம் கண் எனப்படும்; அது சற்று அகல மாயிருக்கும். எனவே கண்அகன் முரசு; சங்கும் முரசும் மங்கலம் குறிப்பன;

79. பல்வகை ஒளிகள்

விளக்கு ஒளி மறைத்த மன்னர் மின் ஒளி; மகுடகோடி
துளக்கு ஒளி விசும்பின் ஊரும் சுடரையும் மறைத்த; சூழ்ந்த
அளக்கர் வாய் முத்த மூரல் முறுவலார் அணியின் சோதி
வளைக்கலாம் என்று அவ்வானோர் கண்ணையும் மறைத்த தன்றே! (1661)

Koviloor Digital Library

(மகுடம்-மணிமுடி; துளக்குதல்-அசைத்தல்; ஊரும்-செல்லுகின்ற; சுடர்-ஞாயிறு / சூரியன்; அளக்கர்-கடல்; மூரல்-பற்கள்; அணி-ஆபரணங்கள்; கண்மறைத்தல்-கண் கூசுமாறு செய்தல்).

அங்கு வந்திருந்த மன்னர்களின் மேனி ஒளி இங்கு ஏற்றப்பட்டிருந்த விளக்குகளின் ஒளிகளை எல்லாம் மறையச் செய்தன; அவர்கள் அணிந்திருந்த மிகப்பலவான மகுடங்கள் அசைவதனால் எழுகின்ற ஒளி, ஆகாயத்தில் செல்லுகின்ற சூரியனின் ஒளியையும் மறையும் படிசெய்தன; இவ்வுலகைச் சூழ்ந்த கடல்களில் உண்டாகும் முத்தும், அவற்றினால் உண்டாகும் புன்னகையும் உடைய மகளிர் அணிகின்ற அணிகலங்களின் ஒளி, மண்ணுலகை வளைத்தது போல் விண்ணுலகையும் நம்மால் வளைக்க முடியும் என்று கருதி, தேவர்கள் கண்களையும் மறைத்தன.

80. வசிட்டர் வருதல்

ஆயதுஓர் அமைதியின் கண், ஐயனை மகுடம் சூட்டற்கு
ஏயும் மங்கலங்களான யாவையும் இயையக் கொண்டு,
துயநால் மறைகள் வேத பாரகர் சொல்லத், தொல்லை
வாயில்கள் நெருக்கம் நீங்க, மாதவக் சிழவன் வந்தான். (1662)

(ஐயன்-தலைவன் / இராமன்; ஏயும்-வேண்டிய; இயைய-பொருந்த; பாரகர்-வல்லவர் / கரை கண்டவர்; தொல்லை-பழமையான; அமைதி-சமயம் /தருணம்)

அத்தகைய சமயத்தில், இராமபிரானுக்கு முடிசூட்டுவதற்கு வேண்டிய மங்களகரமான பொருள்களான தீர்த்தப்புனல் நிறைகுடங்கள், தருப்பை, சமித்து முதலியவற்றை, ஏற்றவாறு எடுத்துக்கொண்டு, தூய்மையான நான்கு வேதங்களையும், வேதத்தில் கரைகண்டவர்கள் ஓதிக்கொண்டு முன்னே வர, பழமையான தோரண வாயில்களில் நெருக்கமாக நின்றிருக்கும் நகர மக்கள் ஒதுங்கி வழிவிட, பெருந்தவசியான வசிட்டன் வந்து சேர்ந்தான்.

81. வசிட்டன் செயல்கள்

கங்கையே முதலஆய கன்னி ஈறான, தீர்த்த
மங்கலப்புனலும், நாலுவாரியின் நீரும், பூரித்து
அங்கியின் வினையிற்கு ஏற்ற யாவையும் அமைத்து, வீரச்
சிங்க ஆதனமும் வைத்துச் செய்வன பிறவும் செய்தான். (1663)

(கன்னி-குமரி; தீர்த்தம்-தூய்மை; வாரி-கடல்; பூரித்தல்-நிறைத்து வைத்தல்; அங்கி-அக்னி / நெருப்பு; அங்கிவினை-ஹோமம் / ஓமம் / வேள்வி)

வசிட்டன், வடக்கில் கங்கையாறு முதலாக., தெற்கில் குமரி ஆறு ஈறாக உள்ள எல்லா ஆற்றின் புண்ணிய தீர்த்தங்களையும், நான்கு திக்குகளில்

Koviloor Digital Library

உள்ள நான்கு கடல்களின் நீரையும், குடங்களில் நிரப்பி, அக்னியால் இயற்றப்படும் வேள்விக்கு வேண்டிய எல்லாவற்றையும் ஏற்றவாறு அமைத்து, இராமபிரான் அமர்வதற்கு உரிய வீரம் பொருந்திய சிங்க ஆசனத்தையும், வைக்க வேண்டிய இடத்தில் வைத்து, வேள்விக்கும், நீராட்டிற்கும், முடிசூட்டுதலுக்கும் தேவையான பிற எல்லாவற்றையும் முறையாகச் சித்தம் செய்தான்.

புண்ணிய தீர்த்தங்கள் ஏழு என்பர் அவை. கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி என்பன. அத்துடன் குமரியையும் இணைத்துக் கொண்டார். ஓமத்திற்கு வேண்டுவன தருப்பை, சமித்து, அட்சதை, விறகு, அத்தி மரத்தாலாய மனை, அகப்பை என்பன. சிங்கம் சுமந்தது போன்று அமைந்த பீடம் சிங்காசனம் எனப்படும். சிம்ஹாஸனம் என்பது வடமொழி. செய்வன பிற என்பது புரோகிதர் முதலியவர்களை வரித்தல், பாலிகை தெளித்தல் (அங்குரார்ப்பணம்) சுமங்கலி அமைத்தல் என்பனவாம்.

82. முனிவன் மன்னனை அழைத்துவரும்படி சுமந்திரனிடம் கூறுதல்

கணிதநூல் உணர்ந்த மாந்தர், ''காலம் வந்து அடுத்தது'' என்னப்
பிணியற நோற்று நின்ற பெரியவன், ''விரைவின் ஏகி
மணிமுடி வேந்தன் தன்னை வல்லையில் கொணர்தி'' என்னப்
பணிதலை நின்றகாதல் சுமந்திரன், பரிவின் சென்றான். (1664)

(காதல்-விருப்பம்; பரிவு-அன்பு; வல்லை-விரைவில்)

சோதிட நூலில் வல்லவரான சோதிடர்கள், முகூர்த்த நேரம் நெருங்கி விட்டது என்று கூறப் பிறவிப் பிணிகளிலிருந்து நீங்கும்படி தவத்தை மேற்கொண்டு, அதன் வழி வழுவாது நிலைபெற்று நிற்கின்ற பெரியவனான வசிட்டன், ''விரைவாகச் சென்று, மணிமுடியணிந்த தசரதச் சக்கரவர்த்தியை விரைவாகத் தாமதிக்காமல் இங்கே அழைத்து வருக'''என்று சுமந்தரனிடம் கூற, அதனைச் சிரமேற்கொண்டு, தசரதன் பால் பெருவிருப்பம் கொண்ட சுமந்திரன், அன்புடன் சென்றான்.

இங்கே சில சொற்றொடர்களைக் கூர்ந்து நோக்கவேண்டும். இப்பொழுது வசிட்டன் செய்யப்போவது முடிபுனைதல். சோதிடர் நேரம் குறித்திருப்பதும் முடிபுனைதற்குத் தானே? முடிபுனைதற்கு நேரம் வந்து விட்டது, என்று தானே அவர்கள் கூறவேண்டும்? ஆனால் கவிஞன் அவர்கள் வாயால் என்ன கூறவைத்திருக்கிறான் பாருங்கள். ''காலம் வந்து அடுத்தது'' என்றான். இது மகுடமுடி புனைவதற்கா? சடாமுடி புனைவதற்கா? என்பதை நம்மையே ஊகிக்க வைத்துவிடுகிறான். மற்றொன்று, முனிவன் முக்காலும் உணர்ந்தவன். இந்த நேரத்தை விட்டால் என்ன ஆகும் என்பது அவனுக்குத் தெரியும். போவதும்

Koviloor Digital Library

கொணர்வதும் விரைவில் நிகழவேண்டும். எனவே ''விரைவின் ஏகி வல்லையில் கொணர்தி'' என்று சுமந்திரனை விரைவாகச் செயல்பட வைக்கின்றான் போலும். நோற்றலினும், அந்நெறி வழுவாது நிற்றல் அருமையுடைத்து என்பது கருத்து. எனவேதான் நோற்று நின்ற அவன் பிரம்மரிஷி எனப்பட்டான். திருமுடிசூடும் நேரம் சூரிய உதயத்தில் புஷ்ய நட்சத்திரம் என்று முதல் நூல் கூறும்.

83. கைகேயி இராமனை அழைத்துவரச் சொல்லுதல்

விண்தொட நிவந்த கோயில்
வேந்தர்தம் வேந்தன் தன்னைக்
கண்டிலன்; வினவக்கேட்டான்;
கைகயன் கோயில் நண்ணித்
தொண்டைவாய் மடந்தைமாரில்
சொல்ல, மற்றுஅவரும் சொல்லப்
பெண்டிரில் கூற்றம் அன்னாள்,
''பிள்ளையைக் கொணர்க!'' என்றாள். (1665)

(நிவந்த-உயர்ந்த; நண்ணி-அடைந்து; தொண்டை-கொவ்வைக்கனி; கூற்றம்-இயமன்; கோயில்-அரண்மனை)

ஆகாயத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்து நின்ற அரண்மனையில் சக்கரவர்த்தியான தசரதனைக் காணமுடியவில்லை; அங்குள்ளவர்களைக் கேட்க, அவர்கள் சொல்லியபடி கைகேயியின் அரண்மனையை அடைந்து, அங்குள்ள கொவ்வைக் கனிபோன்ற வாயினை உடைய பணிப்பெண்களிடம் தனது வருகையைத் தெரிவிக்க, அவர்கள் கைகேயியிக்கு அதனைத் தெரிவித்தார்கள். அப்பொழுது பெண்கள் கூட்டத்திலேயே இயமனைப் போன்றவளான கைகேயி, சுமந்திரனை நோக்கி ''மைந்தனாகிய இராமனை இங்கே அழைத்து வருக'' என்று கூறினாள்.

இராமனை வனத்திற்கும், தசரதனை வானத்திற்கும் அனுப்புகின்ற செயலைச் செய்யப் போகின்றாள் என்பதனால் இப்பொழுதே கைகேயியைக் கூற்றம் என்கிறான் கவிஞன். இங்கே கம்பன் வான்மீகியிடம் இருந்து பெரிதும் மாறுபடுகிறான்.

84. சுமந்திரன் இராமனிடம் கூறத் தொடங்குதல்

என்றனள் என்னக் கேட்டான்; எழுந்தபேர் உவகை பொங்கப்
பொன்திணி மாடவீதி பொருக்கென நீங்கிப் புக்கான்;
தன் திருஉள்ளத்துள்ளே தன்னையே நினையும் மற்றக்
குன்றுஇவர் தோளினானைத் தொழுது, வாய்புதைத்துக் கூறும் (1666)

Koviloor Digital Library

(பொருக்கென-விரைந்து; இவர்தல்-ஒத்திருத்தல்/ உயர்ந்திருத்தல்; நினைத்தல்-தியானித்தல்; புதைத்து-பொத்தி /மறைத்து)

''இராமனைக் கொணர்க'' என்று கைகேயி கூறியதைக் கேட்ட சுமந்திரன், மிக்க மகிழ்ச்சி அடைந்து, பொன்திணிக்கப் பெற்றுச் செய்யப்பெற்ற மாளிகைகளை உடைய வீதிகளை விரைவாகக் கடந்து நீங்கிப்போய் இராமனது அரண்மனையில் புகுந்தான். அங்கே இராமன் தர்ப்பைப் புல்லில் விரதமிருந்து தனது அழகிய உள்ளத்தில் தன்னுடைய மூர்த்தி வடிவான திருமாலையே எண்ணித் தியானம் செய்து கொண்டிருந்தான். அத்தகைய மலைபோலும் உயர்ந்த தோள்களை உடைய இராமனை முறைப்படி தொழுது, தன்வாயைக் கைகளால் மறைத்துக் கொண்டு பின் வருவனவற்றைக் கூறலானான்.

''என்றனள் என்னக் கேட்டான்'' என்பதைக் கொண்டு, கைகேயி சுமந்திரனிடம் நேராக ''இராமனைக் கொணர்க'' என்று கூறவில்லை என்றும், தன் பணிப் பெண்களிடம் தான் கூறினாள் எனவும், எனவே பணிப்பெண்கள் தான் சுமந்திரனிடம் ''இராமனைக் கொணருமாறு கைகேயி கூறினாள்'' என்று கூறியதாகவும் உரை கூறுவர். இது பொருந்தாதது காண்க. தந்தை தசரதனுடன் சேர்த்து இராமனை ஆசிர்வதித்து அனுப்புவதற்குக் கைகேயி விழைகிறாள். என்று சுமந்திரன் கருதியதால்தான் அவன் பேருவகை அடைந்தான் எனக் கொள்ளவேண்டும். ''பொருக்கென'' என்று இங்கும் விரைவினைக் கூறுகிறான் கவிஞன். அவதார மூர்த்தியும் மூல மூர்த்தியும் ஒன்றே என்ற கருத்தில் தான் ''தன் திரு உள்ளத்துள்ளே தன்னையே நினையும்'' என்கிறான். உயர்ந்தவர்களிடம் பேசும்போது, கைகட்டி வாய் பொத்திப் பேசுவது வழக்கம்.

85. சுமந்திரன் கூற்று

''கொற்றவர், முனிவர், மற்றும்
குவலயத்து உள்ளார்; உன்னைப்
பெற்றவன் தன்னைப் போலப்பெரும்
பரிவு இயற்றி நின்றார்;
சிற்றவை தானும் ''ஆங்கே கொணர்க''
எனச் செப்பினாள்; அப்
பொன்தட மகுடம் சூடப்போதுதி
விரைவின்'' என்றான். (1667)

(குவலயம்-உலகம்; பரிவு-அன்பு; சிற்றவை-சிறிய அன்னை; போதுதி-வருக; அவ்வை-தாய்)

''மன்னர்கள், முனிவர்கள் மற்றும் இவ்வுலகத்துள்ள மக்கள் அனைவரும், உன்னை ஈன்றெடுத்த தந்தையான தசரதனைப் போலப் பேரன்பு கொண்டு அங்கே காத்து நிற்கின்றார்கள்; உன்னுடைய

Koviloor Digital Library

சிற்றன்னையாகிய கைகேயியும் உன்னை அங்கே அழைத்து வருமாறு கூறினாள். எனவே அந்தப் பொன்னாலாகிய அழகிய பெரிய மகுடத்தைச் சூட்டிக்கொள்ள விரைந்து வருவாயாக'' என்று சுமந்திரன் கூறினான்.

86. இராமன் புறப்படுதல்

ஐயனும் அச்சொல்கேளா, ஆயிரம் மௌலியானைக்
கைதொழுது, அரச வெள்ளம் கடலெனத் தொடர்ந்து சுற்றத்
தெய்வ கீதங்கள் பாடத் தேவரும் மகிழ்ந்து வாழ்த்தத்
தையலார் இரைத்து நோக்கத் தார்அணி தேரில் சென்றான். (1668)

(ஐயன்-தலைவன் / இராமன்; கேளா-கேட்டு; மௌலி-முடி; தையலார்-பெண்டிர்; இரைத்து-ஆரவாரித்து; தார்-மாலைகள்; அணி-அழகு செய்யப்பட்ட)

இராமபிரானும், சுமந்திரன் கூறியவற்றைக் கேட்டு, ஆயிரம் மகுடங்களையுடைய திருமாலைக் கைதொழுது வணங்கி, அரசர் கூட்டம் தன்னைச் சூழ்ந்து கடல் போல வரவும், இசைவாணர்கள் தெய்வ கீதங்களைப் பாடிக்கொண்டு வரவும், தேவர்களும் மகிழ்ச்சியினால் ஆசிர்வதித்து வாழத்துப் பாடவும், பெண்டிர் பெருங்களிப்பினால் ஆரவாரித்து அவனைத் தெருவில் வந்து காணவும், மாலைகளால் அழகு செய்யப் பெற்ற தேரில் ஏறி அமர்ந்து சென்றான்.

ஆயிரம் மௌலியான் என்பது ''சகஸ்ர சீர்ஷ-புருஷ'' என்னும் புருஷ சூக்தத்தின் தமிழாக்கம்.

87. இராமனைக் கண்ட மக்கள் மகிழ்ச்சி [17 பாடல்கள்]

திருமணி மகுடம் சூடச்சேவகன்
　　செல்கின்றான் என்று,
ஒருவரின் ஒருவர் முந்தக்
　　காதலோடு உவகை உந்த,
இருகையும் இரைத்து மொய்த்தார்;
　　இன்னுயிர் யார்க்கும் ஒன்றாய்ப்
பொருஅரு தேரில் செல்லப்
　　புறத்திடைக் கண்டார் போல்வார். (1669)

(திரு-அழகிய; சேவகன்-வீரன்; உந்த-தூண்ட; கை-பக்கம்)

அழகிய இரத்தினங்கள் பதித்த மகுடத்தைச் சூட்டிக் கொள்ளுவதற்காக வீரனாகிய இராமன் செல்லுகின்றான் என்று அறிந்து, ஒருவரையொருவர் முந்தி நெருக்கிக் கொண்டு, அன்புடனும் மகிழ்ச்சியுடனும் தெருவின் இருபக்கங்களிலும் ஆரவாரம் செய்து கொண்டு நெருங்கிச் சென்றார்கள். எவர்க்கும் இனிதாகிய அவரவர் உயிர்கள் இராமன் என்ற ஒரு வடிவு கொண்டு ஒப்பற்ற தேரின் மீது வெளியே வீதியில் போகக் கண்டவரைப்

Koviloor Digital Library

போல் தன் நிலை மறந்தனர். இராமனைக் கண்ட ஒவ்வொருவரும் தம் உயிரையே காண்பது போல் மகிழ்ந்தனர்.

88. துண்எனும் சொல்லாள் சொல்லச்
சுடர்முடிதுறந்து, தூய
மண்எனும் திருவை நீங்கி,
வழிக்கொளா முன்னம், வள்ளல்
பண்எனும் சொல்லினார் தம்,
தோள்எனும் பணைத்த வேயும்
கண்எனும் காலவேலும், மிடை
நெடுங்கானம் புக்கான். (1670)

(துண்-அஞ்சித் திடுக்கிடுதல் / நடுங்கத்தக்க; சுடர்-ஒளி; வழிக் கொள்ளுதல்-பயணமாதல்; பணைத்த-பருத்த; வேய்-மூங்கில்கள்; காலன்-எமன்; மிடைதல்-நெருங்கியிருத்தல் / அடர்ந்திருத்தல்; திரு-பெண் / தேவி; பண்-இசை)

நடுங்கத்தக்க சொற்களை உடைய கைகேயி ஏவ, ஒளி பொருந்திய மணி மகுடத்தைச் துறந்து, தூய்மையான நிலம் என்ற பூதேவியையும் நீங்கி, பயணப்படுவதற்கு முன்னரே, வள்ளலாகிய இராமபிரான், இசைபோன்று இனிய சொற்களையுடையவரும், தோள்கள் என்னும் பருத்த மூங்கிலை உடையவரும், கண் என்னும் இயமன் போன்ற வேற்படையை உடையவருமாகிய பெண்கள் நெருங்கியிருக்கின்ற நீண்ட வனத்தில் புகலானான்.

பூமியைத் தேவியாகக் கூறுவது மரபு; எனவே மண் எனும் திரு என்றார். வேய் என்னும் புல்லாகிய மூங்கிலும், வேல் என்னும் வேல மரமும் முள் நிறைந்தவை. எனவே அத்தகைய கொடிய காட்டுக்குள் போவதற்கு முன்பே மகளிரின் தோள், கண் காட்டிற்குள் புகுந்து பழகிக் கொண்டான் என்பதாம். அவை போலவே இவையும் குத்தித் துன்பம் தரும் என்பது கருத்து; மேலே நிகழவிருப்பதை, முன்னரே நிகழ்ந்ததாகக் கற்பனை செய்து கூறுவதும், அதனை உவமையாக்கிக் கூறுவதும் கம்பனுக்குக் கை வந்த கலை. வேயும் வேலும் மிக்குள்ள இடம் காடு. எனவே தான் இங்கே தெரு வழிச்சென்றவனைக் கூடக் காடுவழி புகுந்தான் என்கிறான் கவிஞன்.

89. சுண்ணமும், மலரும், சாந்தும்,
கனகமும் தூவவந்து,
வண்ண மேகலையும், நாணும்,
வளைகளும் தூவுவாரும்;
புண்உற அனங்கன் வாளி புழைத்த
தம் புணர்மென் கொங்கை
கண்உறப் பொழிந்த
காமவெம்புனல் கழுவுவாரும். (1671)

Koviloor Digital Library

(வண்ண-அழகிய; உற-உண்டாகுமாறு; அனங்கன்-மன்மதன் / உருவமில்லாதவன்; புழைத்த-துளைத்த; புணர்-நெருங்கிய; உற-மிகுதியாக; சுண்ணம்-வாசனைப் பொடி; கனகம்-பொற்பொடி) (குளகப்பாடல்)

அந்த மகளிர், வாசனைப் பொடி, பூ, சந்தனம், பொற்பொடி இவைகளை இராமன் மீது தூவி இராமனை வரவேற்க வந்தவர்கள், இராமனது பேரழகில் ஈடுபட்டு மதிமயங்கி, வந்த வேலையை விடுத்து அவன் மேல் காதல் கொண்டதனால், அவர்களுடைய அழகிய மேகலாபரணம், அவர்களுக்குச் சிறந்த அணிகலனாகக் கருதப்படும் நாணம், கைகளில் அணிந்திருந்த வளையல்கள் ஆகியவற்றைத் தூவி விட்டுச் சென்றனர். உருவமில்லாதவனான மன்மதன் செலுத்திய அம்பினால் தம் நெருங்கிய மென்மையான கொங்கைகள் புண் ஆகிப் போயின. அவற்றைத் தம் காமநோயால் கண்களில் இருந்து பொழிந்த வெப்பமான நீரைக் கொண்டு கழுவினார்கள்.

புண்ணில் வெந்நீர் விட்டுக் கழுவுதலை இங்கு ஒரு அருமையான செயலால் உவமித்திருப்பதைப் பாருங்கள். காமன் செலுத்திய அம்பினால் தமது மெல்லிய நெருங்கிய கொங்கைகளில் புண் ஏற்பட்டது. அதைக் கழுவுவதற்குக் காமநோயின் வேதனைக்கு ஆற்றாது கண்களிலிருந்து பொழிந்த வெப்ப நீர் உபயோகப்படுத்தப் பட்டது என்பது ஒரு அருமையான நயமிக்க கற்பனை. நாணமே மகளிர்க்குச் சிறந்த பூண் எனப்படுதலின் அதனையும் பூண்களுடன் சேர்த்துச் சிந்தினர் என்றார்.

90. ''அங்கணன் அவனி காத்தற்கு ஆம்இவன்'' என்னலாமோ?
''நம்கண் அன்புஇலன்'' என்று, உள்ளம் தள்ளுற நடுங்கி நைவார்;
''செங்கணும், கரியகோல மேனியும், தேரும் ஆகி
எங்கணும் தோன்றுகின்றான், எனைவரோ இராமன்?'' என்பார். (1672)

(அம்-அழகிய; தள்ளுற-தடுமாற; நைதல்-வருந்துதல்; எனைவர்-எத்தனை பேர்?)

''அழகிய கண்களை உடைய இவ்விராமன், இவ்வாறு நம்மீது அன்பு இல்லாதவனாக இருக்கிறானே இவன் எப்படி இந்த உலகத்தை அரசாட்சி செய்வதற்குப் பொருந்துவான்? என்று சில மகளிர், உள்ளம் தடுமாறி, உடல் நடுங்கி வருந்துவார்கள். இன்னும் சிலர், சிவந்த கண்ணும், கருமையான அழகிய வடிவும், உயர்ந்த தேரும் கொண்டு பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறானே இந்த இராமன், இவன் எத்தனை பேர்களாக இங்கு வந்திருக்கிறான்?'' என்று திகைப்பார்கள்.

பெண்கள் சிலர் தங்கள் மீது இராமன் அன்பு காட்டவில்லையே? பின்னர் எவ்வாறு நடுவுநிலையோடு நின்று அரசாட்சி செய்வான் என்று ஐயமுறுகின்றனர். இன்னும் சிலர் காம மயக்கத்தால் உருவெளித்

Koviloor Digital Library

தோற்றத்தில் இராமனை எல்லா இடங்களிலும் கண்டு திகைத்து இங்கு வந்திருப்பது ஒரே ஒரு இராமன் தானே? இல்லை எத்தனை இராமர்கள் வந்திருக்கின்றனர் என்று வியப்படைவர். இராமன் எத்தனை இராமனடி என்பர். அழுகின்ற தம் துன்பத்தைப் போக்காததால் அன்பிலாத இவ்விராமன் உயிர்களைக் காத்தற்கு ஏற்றவன் அல்லன் என்பது அவர்கள் கருத்து.

91. இனையராய் மகளிரெல்லாம்
இரைத்தனர், நிரைத்து மொய்த்தார்;
முனைவரும், நகர மூதூர்முதியரும்,
இளைஞர் தாமும்
அனையவன் மேனி கண்டார்,
அன்பினுக்கு எல்லை காணார்
நினைவன, மனத்தால், வாயால்
நிகழ்ந்தது நிகழ்த்த லுற்றாம். (1673)

(இரைத்து-ஆரவாரித்துக் கொண்டு; நிரைத்து-வரிசை வரிசையாக; முனைவர்-முனிவர்; வாயால் நிகழ்ந்தது-சொல்லியது)

இவ்வாறாகப் பெண்டிரெல்லாம் ஆரவாரம் செய்து கொண்டு வரிசை வரிசையாக இராமபிரானை மொய்த்து நெருங்கலானார்கள்; முற்றும் துறந்த முனிவர்களும்; தொன்மையான அயோத்தி நகரத்தில் வாழும் முதியவர்களும், வயதில் சிறிய இளைஞர்களும், இராமபிரானது மேனியழகைக் கண்டு, அவன் மீது தீராக் காதல்-அளப்பரிய காதல்-வரம்பு காண முடியாத பேரன்பு கொண்டனர். அவர்கள் மனத்தில் நினைத்தவற்றையும், வாயால் கூறியவற்றையும் இப்பொழுது சொல்லத் தொடங்குகிறோம் என்று அடுத்துவரும் பதினோரு கவிகளில் கவிஞன் கூறுகிறான்.

முனைவர் என்பது கடவுளையே குறிக்கும்; அக்கடவுளைத் தம் உள்ளத்து நீங்காது வைத்திருப்பவரும் அவனைப் போல் ஆக்கவும் அழிக்கவும் வல்ல முனிவர்களையும் முனைவர் என்றான் கவிஞன். இராமபிரான் மேல் முதியவர், இளைவயர், ஆண்கள், பெண்கள் என்று எல்லோரும் ஒரு சேர அன்பு பாராட்டினார்கள் என்பது பெறப்படுகிறது. ஒரே அடியில், இராமபிரான் மேனியழகைக் கண்டனர். அவன் மீது கொண்ட அன்புக்கு எல்லை காணார் என்று கூறியது ஒரு நயம். இங்கு நினைவினர் என்ற சொல்லாட்சியும் இரசிக்கத் தக்கது. காரணம் முன்பாடல்களில் இராமனைக் கண்டதும் மகளிர் நினைவிழந்து மதி மயங்கினர் என்று கூறியவர், இங்கே இளைவர்களும் முதியவர்களும் நினைவிழக்கவில்லை, மதிமயங்கவில்லை, நினைவுடனேயே இருந்தனர் என்று கூறுவதும் ஓர் நயம்.

Koviloor Digital Library

92. ''உய்ந்தது இவ்வுலகம் என்பார்;
''ஊழி காண்கிற்பாய்'' என்பார்;
''மைந்த! நீ கோடி எங்கள்
வாழ்க்கை நாள்யாவும்'' என்பார்;
''ஐந்து அவித்து அரிதில் செய்த தவம்
உனக்கு ஆக!'' என்பார்;
''பைந்துழாய்த் தெரியலாய்க்கே
நல்வினை பயக்க'' என்பார். (1674)

(உய்ந்தது-கடைத்தேறி விட்டது; மைந்து-வலிமை; மைந்த-வலிமை நிறைந்தவனே! கோடி-கொள்க; அவித்து-அடக்கி; ஐந்து-ஐம்பொறிகள்; பைந்துழாய்-பசுமையான துளசி; தெரியல்-மாலை; ஊழி காண்டல்-ஊழி இறுதி வரையில் வாழ்தல்)

இராமன் முடிசூட்டிக் கொள்ளப் போவதால் இவ்வுலகம் துன்பத்தினின்றும் நீங்கிக் கடைத்தேறிவிட்டது'' என்பார் சிலர்; இன்னும் சிலர் ''ஊழிமுடிவுக் காலம் வரை வாழந்து அதைக் காண்பாய்'' என்பர்; வேறு சிலர், ''மைந்தனே? எங்களுடைய வாழும் நாள் எல்லாம்-ஆயுள்-எல்லாவற்றையும், நீயே எடுத்துக் கொண்டு நெடிது நீண்ட காலம் வாழ்க'' என்பார்கள். முனிவர்கள் ''ஐம்பொறிகளையும் அடக்கி, மிக அரிதாக இயற்றிய எங்கள் தவப்பயன் முழுவதும் உனக்கு உண்டாகுக'' என்பார்கள். சிலர் ''பசுமையான துளசி மாலையையணிந்த உனக்கே நாங்கள் செய்த நல்வினையின் பயன் முழுவதும் ஆக'' என்பார்கள்.

முனிவர்கள் தம் தவப்பயனையும், இளைஞர்கள்தம் வாழ் நாளையும், ஏனைய முதியோர் இம்முடிசூட்டுதலால் இவ்வுலகம் அடையப் போகும் நற்பயன்களையும் எடுத்துரைத்து அவனை வாழ்த்தினர் என்பதாம். ஐந்தவித்து அரிதிற் செய்தல் என்பது, மழையிலும், பனியிலும், கோடையிலும், குளிரிலும், நெருப்பிலும் நின்று தவம் இயற்றுதலைக் குறிக்கும். எங்கள் வாழ்நாளையும் கொண்டு நீ வாழ்க என்று வாழ்த்துவது பெரியோர் மரபு. ''யான் வாழ் நாளும் பண்ணன் வாழிய'' என்பது புறநானூறு.

93. ''உயர்அருள் ஒண்கண் ஒக்கும்
தாமரை நிறத்தை ஒக்கும்
புயல்பொழி மேகம்என்ன
புண்ணியம் செய்த?'' என்பார்;
''செயல் அரும்தவங்கள் செய்து
இச்செம்மலைத்தந்த செல்வத்
தயரதற்கு என்னகைம்மாறு
உடையம் யாம் தக்கது?'' என்பார். (1675)

Koviloor Digital Library

(ஒண்-ஒளி வாய்ந்த; புயல்-நீர்)

''உயர்ந்த அருளைப் பொழியும் ஒளிபொருந்திய இவனுடைய கண்களைஒக்கும்தாமரை மலர்கள்; இவனது மேனி நிறத்தை ஒத்திருக்கும் நீர் பொழியும் மேகம்; இவையிரண்டும் இவனுடைய கண்களுக்கும் மேனிக்கும் உவமை கூற, எத்தகைய புண்ணியத்தைச் செய்தனவோ?'' என்று சிலர் கூறுவர். இன்னும் சிலர், பிறர் செய்தற்கரியதான அருமையான தவங்களைச் செய்து இத்தகைய ஆடவருள் சிறந்தவனாகிய இராமபிரானை நமக்கு மன்னனாகத் தந்த, செல்வ வளம் பொருந்திய தசரதச் சக்கரவர்த்திக்கு நாம் எத்தகைய கைம்மாறு செய்யத்தக்கவர்களாக இருக்கிறோம்? என்று ஏங்குவர்.

அருள் என்பது தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை, அருள் வள்ளலாகிய இராமனது கண்ணுக்கும், அவனது திருமேனிக்கும் உவமையாவதற்கு அந்தத் தாமரை மலரும், கார்மேகமும் எத்தகைய புண்ணியங்கள் செய்திருக்கின்றவோ? நமக்குத் தெரியவில்லை. அதை நாம் அறிந்தால் நாமும் அத்தகைய புண்ணியங்களைச் செய்து அந்தப் பேற்றை அடையலாம் என்று சிலர் இரங்குவர். இதனைத் தான் தாமரைக் கண்ணன் என்றும், மேகவண்ணன் என்றும் நாம் வழக்கில் குறிப்பிடுகின்றோம். ''மேகங்களே உரையீர்! திருமால் திருமேனி ஒக்கும் யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு பெற்றீர்?'' என்பார் நம்மாழ்வார். இராமனைப் பெற்றெடுக்கத் தசரதன் செய்த தவங்களின் அருமையைச் சொல்லிமாளாது. அதற்குக் கைம்மாறாக ஈடாக அவனுக்குக் கொடுக்க நம்மிடம் என்ன தகுதி இருக்கிறது என்று தன் நிலை இரக்கங்கொள்வர் சிலர். ''பிழை உயிர் எய்தாது மழைவளம் தரும் மாரிமாட்டு இவ்வுலகம் கைம்மாறு செய்ய இயலாதவாறு போல இராமனைத் தந்த தசரதனுக்கு கைம்மாறு செய்ய இயலாது என்பது கருத்து. உவமைப் பொருள்களாகிய தாமரையும், மேகமும் உவமேயங்களாகக் கூறப்பட்டிருப்பதைக் கம்பன் காப்பியத்தில் வெகுவாகக் காணலாம்.

94. ''வாரணம் அரற்ற வந்து, கராஉயிர் மாற்றும் நேமி
நாரணன் ஒக்கும், இந்த நம்பிதன் கருணை'' என்பார்;
ஆரணம் அறிதல்தேற்றா ஐயனைஅணுகி நோக்கிக்
காரணம் இன்றியேயும், கண்கள் நீர்கலுழ நிற்பார். (1676)

(வாரணம்-யானை; கரா-முதலை; மாற்றுதல்-பிரித்தல்; நேமி-சக்கரப்படை; ஆரணம்-வேதங்கள்; கலுழ்தல்-சொரிதல்)

கஜேந்திரன் என்னும் யானை பயந்து ''ஆதி மூலமே'' என்று அலற, அதனைக் கேட்டவுடன் ஓடிவந்து, அதனைப் பற்றியிருக்கும் முதலையின் உயிரைப் போக்கிய சக்கராயுதத்தை உடைய திருமாலின் கருணையை ஒத்தது இந்த ஆடவரிற் சிறந்தவனான இராமபிரானின் கருணை என்று

Koviloor Digital Library

சிலர் கூறுவர். வேதங்களாலும் அறிந்து கொள்ள முடியாத இந்தத் தலைவனை அருகே சென்று பார்த்துக் காரணம் ஏதும் இல்லாமலேயே, தம் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய நிற்பவர்கள் பலர்.

கஜேந்திரன் அலறியதும் திருமால் ஓடிவந்து முதலையைக் கொன்று யானையைக் காப்பாற்றியது போல, தேவர்கள் முறையிட்டதும், திருமால் இராமபிரானாக அவதாரம் எடுத்து வந்து அரக்கர்களைக் கொன்று தேவர்களைக் காப்பாற்ற இப்பொழுது இவன் எழுந்தருளியிருக்கிறான் என்பது உட்கருத்து. உயிர்க்கு அழிவு கிடையாது என்பதை உணர்த்தவே உயிர்கொன்று என்று கூறாமல் உயிர் மாற்றும் என்று கூறினார் என்பதாம்.

95. ''நீலமாமுகில் அனான் தன்
நிறையினோடு அறிவும் நிற்க,
சீலம் ஆர்க்கு உண்டு? கெட்டேன்;
தேவரின் அடங்குவானோ?
காலமாக் கணிக்கும் நுண்மைக்
கணக்கையும் கடந்து நின்ற
மூலமாய், முடிவிலாத மூர்த்தி
இம்முன்பன்'' என்பார். (1677)

(முகில்-மேகம்; கணிக்கும்-எண்ணுகின்ற; மூர்த்தி-பரம்பொருள்; மா-சிறந்த; முன்பு-வலிமை; சீலம்-நீர்மைக்குணம்)

''சிறந்த நீல மேகம் போன்ற மேனியை உடைய இராமபிரானது நிறைவும், பேரறிவும் ஒரு புறம் இருக்கட்டும். அவனுடைய நீர்மைத் தன்மை-எளி வந்த தன்மை-சௌலப்பியம்-யாருக்குவரும்; பிறர்க்கில்லாத நிறையும், அறிவும், சீலமும் உடைமையால் இவன் மனிதரில் ஒருவனாக அடங்கான் என்றாலும் கால அளவைகளுக்கு உட்பட்ட தேவர்களிலாவது அடங்குவானோ? இந்த வலிமை மிகுந்த இராமபிரான், காலம் என்று எண்ணுகின்ற நுட்பமான அளவையும் கடந்து நின்ற மூலப்பொருளாய் அழிவே இல்லாதிருக்கின்ற பரம்பொருளே ஆவான்'' என்று சொல்லுவார்கள்.

நிறை, அறிவு, சீலம் என்பன ஆடவர்க்குரிய குணங்கள் நான்கினுள் அடங்குவன. நிறை என்பது தன் நெஞ்சைத் தடுத்து நிறுத்தும் திறன். காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்; அறிவு-பேரறிவு; சீலம் என்பது மிக உயர்ந்த ஒருவன் மிக இழிந்தவரையும் ஒப்பாக எண்ணிப் பழகுதலாகிய எளிய பண்பு. சௌலப்பியம் என்பர் வடநூலார். உயர்ந்தார், தாழ்ந்தார் என்னும் வேறுபாடின்றி, நீரோடு நீர் கலந்தாற் போல இரண்டறக் கலந்து பழகுதல். அருவமாகிய. காலத்தை, ஞாயிறு, திங்கள் முதலியவற்றின் அளவைகளால் அறியும் நுட்பம் மிக்கது காலக்கணக்கு. எல்லாவற்றிற்கும் முதல் என்பதை மூலம் என்றும், அழிவில்லாதவனை

Koviloor Digital Library

மூர்த்தி என்றும் கொண்டு உணரவைத்தான். காலம், தேசம் என்ற இரண்டு அளவைகளுள் தேசம் திட்பமானது, காலம் நுட்பமானது.

96. ''ஆர்கலி அகழ்ந்தோர், கங்கை
அவனியில் கொணர்ந்தோர், முந்தைப்
போர்கெழு புலவர்க்கு ஆகி
அசுரரைப்பொருது வென்றோர்,
பேர்கெழு சிறப்பின் வந்த
பெரும்புகழ் நிற்பது, ஐயன்
தார்கெழு திரள் தோள் தந்த
புகழினைத் தழுவி!'' என்பார். (1678)

(ஆர்கலி-கடல்; அகழ்தல்-தோண்டுதல்; அவனி-பூமி; புலவர்-தேவர்கள்; பொருது-போர்செய்து; பேர்-பெருமை; நிறைந்த ஒலியை உடைமையால் கடலுக்கு ஆர்கலி காரணப்பெயர்; முந்தை-முற்காலத்தில்; சுரா-அமுதம்; சுரர்-அமுதத்தை உண்டவர்கள் / தேவர்; அசுரர்-அரக்கர் / தேவர்களுக்குப் பகைவர்)

''முற்காலத்தில் பேரோசையையுடைய கடலைத் தோண்டிய சகரர்கள், ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்த பகீரதன், போரில் கலந்த தேவர்களுக்குத் துணையாகி அரக்கர்களைப் போர் செய்து வென்ற ககுத்தன். முசுகுந்தன் முதலியவர் பெற்ற பெருமை பொருந்திய சிறப்புக்கள் / புகழ் எல்லாம், இன்றும் நின்று நிலைப்பதற்குக் காரணம் தலைவனாகிய இராமபிரானின் மாலையணிந்த திரண்ட தோள்கள் தந்த புகழினைத் தழுவியதே ஆகும்'' என்று சிலர் கூறுவர்.

சூரிய குலத்தில் இராமனுக்கு முன் தோன்றியவர்கள் அனைவரது புகழும் சிறந்தனவே. என்றாலும் இவையெல்லாம் இராமன் புகழுக்குப் பின்னே எண்ணத் தக்கனவேயாகும். இராமனது புகழ் தாடகைவதம்; முனிவரது வேள்வி காத்தல்; அகலிகைக்கு சாபவிமோசனம் தந்தது; சிவதனுசை முறித்தது; பரசுராமனின் கர்வத்தை அடக்கியது முதலியன ஆகும். இவன் முன்னோர்கள் எய்திய புகழாகிய கொடிகள், இவ்விராமபிரானின் புகழாகிய கொழுகொம்பைத் தழுவியே நிலைத்து நிற்கின்றன என்பது கருத்து.

97. சந்தம் இவை, தாஇல்மணி ஆரம் இவையாவும்
சிந்துரமும், இங்குஇவை செறிந்த மதவேழப்
பந்திகள், வயப்பரி, பசும்பொனின் வெறுக்கை,
மைந்த! வறியோர் கொள வழங்கு!'' என நிரைப்பார். (1679)

(தாஇல்-குற்றமற்ற; செறிந்த-நெருங்கியிருக்கின்ற; பந்தி-வரிசை; வயம்-வெற்றி; வெறுக்கை-செல்வம்; நிரைத்தல்-வரிசையாக வைத்தல்; வழங்குதல்-வரையறையின்றிக் கொடுத்தல்)

சில மக்கள், சந்தனக் கலவைகள், குற்றமற்ற மாணிக்க மாலைகள், சிந்துரம் அணிந்த மதம் கொண்ட யானைகளின் வரிசைகள், வெற்றியை

Koviloor Digital Library

உடைய குதிரைகள், பசிய பொன்னாகிய செல்வங்கள், இவற்றை இராமன் எதிரே வரிசையாக வைத்து, ''மைந்தனே! இவற்றை உன் கைகளால், வறியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு வரையறையின்றி வழங்கு'' என்று கூறி நிற்பார்கள்.

''வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை'' என்னும் முறை நோக்கி வறியோர் கொள வழங்கு என்றனர். இராமன் முடிசூட்டிக் கொள்ளும் போது அவனுக்கு நன்மை விளைய வேண்டும் என்று கருதி நகர மக்கள் அனைவரும் அவரவர்க்கு இயன்றவற்றை எல்லாம் அவ்விராமன் கைகளாலே தானம் செய்விக்க வேண்டும் என்ற விருப்பத்துடன், பலவற்றையும் கொணர்ந்தனர் என்பதாம்.

98. மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்தில்,
தன்பொருஇல் கன்று தனிதாவி வரல்கண்டு, ஆங்கு
அன்புருகு சிந்தையோடும், ஆ உருகுமா போல்
என்புருகி, நெஞ்சுருகி, நஞ்சுஉருகி நிற்பார். (1680)

(பொருஇல்-ஒப்பற்ற; பொருவு-ஒத்த; நஞ்சு-நைஞ்சு / நைந்து; ஆங்கு-அப்பொழுது; உருக-நெகிழ; ஆ-பசு)

மின்னலை ஒத்த ஒளியும் விரைவும் கொண்ட தேரின் மீது இராமபிரான் எழுந்தருளி வரும் போது, தன்னுடைய ஒப்பற்ற கன்று தனியாகத் தாவிக் கொண்டு வருவதைப் பார்த்து, ஒரு தாய்ப்பசு அன்பு நெகிழ்கின்ற மனத்தோடு உருகி நிற்பதைப் போல், அந்நகர மக்கள் தம் எலும்பெல்லாம் உருகி, மனமும் உருகி, நைந்து, நீராய் உருகி நிற்பார்கள் அவ்வாறு உருகாமல் நிற்பவர் எவரும் இலர்.

இராமபிரானைக் காண்போர்யாரும், தம்மையறியாமலேயே அவனிடத்து ஓர் அன்பு தோன்ற உள்ளும் புறமும் உருகி நிற்பர் என்பதாம். தாய்ப்பசு தன் இளங்கன்றினிடத்துச் செலுத்தும் அன்பு வாத்சல்யம் எனப்படும். சிறந்த அன்புக்கு இதனையே உவமை கூறுவது கவிமரபு.

99. சத்திரம் நிழற்ற நிமிர்தானை யோடு நானா
அத்திரம் நிழற்ற அருளோடு அவனி ஆள்வார்,
புத்திரர் இனிப்பெறுதல் புல்லிது; என நல்லோர்
சித்திரம் எனத் தனிதிகைத்து உருகி நிற்பார். (1681)

(சத்திரம்-குடை / வெண்கொற்றக் குடை; நிமிர்-பெருகிய; நானா-பலவகையான; அத்திரம்-அஸ்திரம் / படைக்கலன்கள்; நிழற்றுதல்-ஒளி வீசுதல் / நிழல் செய்தல்; புல்லிது-தாழ்வானது / சிறுமையானது; நல்லோர்-பெண்டிர்; சித்திரம்-ஓவியம்)

வெண்கொற்றக்குடை நிழல் பரப்பவும், உயர்ந்த சேனைப் படைகளும், பல வகையான படைக்கலன்களும் உடைய இப்பூமியை அருளோடு ஆளும் அரசர்கள், ''இராமன் பிறந்த பின்பு, இனிவேறு மைந்தர்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது சிறுமையானது'' என்று

Koviloor Digital Library

கருதி, எழுதிய ஓவியம் போலத் தனித்தனியாக, அவனது பேரழகைக் கண்டு திகைத்துப் போய் உருகி நிற்பார்கள்.

எல்லாக்குண நலன்களும் வாய்ந்த இராமனைப் போலப் பிள்ளைகளைப் பெறுதல் இயலாது என்றும், அப்படியே பெற்றாலும் அவர்கள் ஞாயிற்றின் முன் மின்மினி போல் சிறப்பிழந்து நிற்பர் என்று கருதியும், புத்திரர் இனிப் பெறுதல் புல்லிது என்பர். இராமனைப் போன்ற நல்லோர் இதற்கு முன்பும் பிறந்ததில்லை, இனியும் பிறக்கப் போவதுமில்லை என்பது கருத்து. படைக்கலன்கள் எய்வன, எறிவன, குத்துவன, வெட்டுவன என்றும் பல வகைப்படும் எனவே நானா அத்திரம் என்றார்.

100. ''கார் மினோடு உலாயது எனநூல் கஞலும் மார்பன்,
தேர்மிசை நம்வாயில் கடிது ஏகுதல் செய்வானோ?
கூர்கனக ராசியோடு கோடி மணியாலும்
தூர்மின் நெடு வீதியினை!'' என்று சொரிவாரும். (1682)

(கார்-மேகம்; கஞலும்-விளங்கும்; கடிது-விரைவாக; கூர்-மிக்க; ராசி-குவியல்; கோடி-மிகப்பல; நெடு-நீண்ட; தூர்மின்-நிரப்புங்கள் / அடையுங்கள்)

''கார் காலத்து மேகம், மின்னலொடு உலாவியது போல, மார்பில் முப்புரிநூல் விளங்கும் இராமபிரான் தேரின் மீது செல்லுகையில், நமது வீட்டை விரைவில் கடந்து சென்று விடுவானோ? அவன் அவ்வாறு விரைந்து சென்று விடக் கூடாது; அதைத்தடுத்துத் தேரை மெதுவாகச் செல்லும்படி செய்து, அவன் வடிவழகை முற்ற முடியப் பார்த்துவிட வேண்டும். எனவே இந்த நீண்ட வீதியில், மிக்க பொன்களின் குவியலையும், மிகப்பல நவரத்தினங்களையும் பொழிந்து நிரப்பி விடுங்கள்'' என்று சொல்லித் தாங்களும் அவ்வாறே செய்யலானார்கள்.

மேகம் இராமன் மேனிக்கும், மின்னல் அவனது முப்புரி நூலுக்கும் உவமை. தலைவன் செல்லும் வழியில் மகிழ்ச்சியால் பொன்னும் மணியும் தூவுதல் மரபு. இதனால் அவர்கள் செல்வச் செழிப்பும், அவர்கள் இராமன் பால் கொண்ட தீராத காதலும், பேரன்பும் புலப்படும். மற்றவர்களை அவ்வாறு நிரப்பும்படி கேட்டுக் கொண்டதோடன்றித் தாமும் நிரப்பினர் என்பதாம்.

101. ''தாய் கையில் வளர்ந்திலன்; வளர்த்தது தவத்தால்
கேகயன் மடந்தை; கிளர்ஞாலம் இவன்ஆள
ஈகையில் உவந்த அவ்இயற்கை இது; என்றால்
தோகை இவள் பேருவகை சொல்லல் அரிது'' என்பார். (1683)

(கிளர்-விளக்கமுடைய; தோகை-மயில்)

''இராமன், தன்னைப் பெற்றெடுத்த தாயான கோசலையினிடம் வளர்ந்தவனல்லன்; அவனை, முன் செய்த தவத்தின் பயனால் கேகய

Koviloor Digital Library

அரசனது மகளாகிய கைகேயியே வளர்த்து வந்தாள்; விளங்குகின்ற இவ்வுலகத்தை அரசாட்சி செய்தலாகிய அரசுரிமையை அவனுக்கு அளிப்பதில் அவள் பெரு மகிழ்ச்சி கொள்வது இயற்கையே. என்றால் மயில் போன்ற சாயலையுடைய கைகேயியின் பெரு மகிழ்ச்சியைச் சொல்வதென்பது இயலாதது'' என்று சிலர் கூறுவர்.

102. ''பாவமும் அருந்துயரும் வேர்பறியும்!'' என்பார்;
''பூவலயம் இன்று தனியன்று, பொது!'' என்பார்;
''தேவர்பகை உள்ளன இவ்வள்ளல் தெறும்!'' என்பார்;
''ஏவல்செயும் மன்னர்தவம் யாவது கொல்?'' என்பார். (1684)

(பறியும்-கெட்டுவிடும்; வலயம்-வட்டம் / மண்டலம்; தெறுதல்-அழித்தல்)

''இராமன் முடிசூடிக் கொண்டால், அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே, நாம் செய்த பாவங்களும், தீர்தற்கரிய துயரங்களும் வேரோடு அழிந்து போகும்'' என்று சிலர் கூறுவர். சிலர் இந்த வட்டமான பூ மண்டலமும் இன்று முதல் இராமனுக்கு மட்டும் தனியுடைமை யன்று, அதில் நமக்கும் பங்கு உளதாகிய பொதுவுடமையாகும் என்பர்; இன்னும் சிலர் தேவர்களுக்கு இருக்கின்ற பகைவர்களாகிய அரக்கர்களை இவ்வள்ளல் தன்மை வாய்ந்தவன் அழித்து விடுவான் என்பார்கள்; வேறு சிலர் இவனிடம் ஏவல் தொழில் செய்கின்ற அரசர்களெல்லாம் எத்தகைய தவம் செய்தனரோ? என்று ஏங்குவர்.

இராமன் ஆட்சியில் எல்லோரும் இந்நாட்டு மன்னர் போல் நன்மை எய்துவர் என்பதாம். அவன் ஆளும் போது தாமே ஆள்வதாகக் கருதினர் என்றலுமாம்.

103. ஆண்டு, இனையராய் இனைய கூற, அடல்வீரன்
தூண்டு புரவிப்பொருஇல் சுந்தர மணித்தேர்
நீண்ட கொடிமாட நிரைவீதி நிறையப் போய்
பூண்ட புகழ் மன்னன் உறைகோயில் புகலோடும். (1685)

(அடல்-வெற்றி / வலிமை; புரவி-குதிரை; பொருஇல்-ஒப்பற்ற; சுந்தரம்-அழகு; நிரை-வரிசை; கோயில்-அரண்மனை; தூண்டு-விரைந்து செலுத்தும்)

இவ்வாறு அங்கு அயோத்தி நகர மக்கள் மேற்கூறியவாறு கூறிக் கொண்டு நிற்க, வெற்றியும் வலிமையும் வாய்ந்த வீரனான இராமன், சுமந்திரனால் விரைவாகச் செலுத்தப்படுகின்ற, ஒப்பற்ற அழகிய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தேரில், நீண்ட கொடிகளையுடைய மாளிகைகள் வரிசையாக அமைக்கப்பெற்ற வீதிகள் முழுமையடையும் படி சென்று, புகழையே தன் அணிகலனாக அணிந்திருக்கின்ற தசரதச் சக்கரவர்த்தி தங்கியிருக்கும் அரண்மனையை அடைந்தான்.

Koviloor Digital Library

மன்னர் புடைசூழத் தேரில் இராமன் சென்ற போது, நெடுவீதி நிறைவு எய்தியதாகக் காணப்பட்டது.

104. அரண்மனையில் தசரதன் இல்லை என அறிதல்

ஆங்கு வந்தடைந்த அண்ணல், ஆசையின் கவரி வீசப்
பூங்குழல் மகளிர் ஆடும் புதுக்களி ஆட்டம் நோக்கி,
வீங்கு இரும் காதல் காட்டி, விரிமுகக்கமல பீடத்து
ஓங்கிய மகுடம் சூடி, உவகை வீற்றிருப்பக் காணான். (1686)

(ஆசை-திசை / இருபுறம்; குழல்-கூந்தல்; வீங்கு-மிகப் பெரிய; விரிமுகம்-சிங்கம்; விரிந்த முகம் உடைமையால் விரிமுகம், சிங்கத்திற்குக் காரணப் பெயர்; பீடம்-ஆசனம்; வீற்றிருத்தல்-மற்றொருவருக்கு இல்லாத சிறப்போடு விளங்கித் தோன்றுதல்).

அந்த அரண்மணைக்கு வந்துசேர்ந்த இராமபிரான், தன் இருபக்கத்திலும் வெண் சமாரைகள் வீசவும்; மலரணிந்த கூந்தலையுடைய பெண்டிர் ஆடுகின்ற புதுமையான களிப்புத் தரும் நடனத்தைக்கண்டு, அதன்பால் தனக்குள்ள மிகப்பெரிய விருப்பத்தினைக் காட்டிக் கொண்டு, விரிந்த முகமுடைய சிங்கம் சுமந்திருக்கின்ற தாமரைத் தவிசில்-பதுமாசனத்தில்-தாமரை மலர்போன்ற அமைப்புடைய ஆசனத்தில் தனது உயர்ந்து விளங்கும் மகுடத்தைச் சூட்டிக் கொண்டு, பெருமகிழ்ச்சியுடன் தசரதன் வீற்றிருப்பதைக் காண முடியவில்லை.

அங்குவந்த இராமபிரான் தசரதனை அங்கு காண முடிய வில்லை அவன் அங்கு இல்லை என்பது கருத்து. ஆசை என்பது திசையைக் குறிக்கும், இங்கு அவன் இருபுறத்தையும் குறித்தது. தசரதன் அரண்மனையில் இருந்திருந்தால் அங்கே மகளிர் களிப்புமிகுந்த புதுப்புது வகையான நாட்டியங்களை ஆடியிருப்பர்; அதனைக்கண்ணுற்றுத் தனக்கு அக்கலையில் உள்ள பெருநாட்டத்தை தன்தலை அசைப்பால் தசரதன் காண்பித்திருப்பான்; சிங்கம் அமர்ந்த பத்மாசனத்தில் அவன் உயர்ந்த கிரீடம் அணிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் வீற்றிருப்பான்; ஆனால் இப்போது அவன் அங்கு இல்லாததால் இவை ஒன்றும் நடைபெற வில்லை அல்லது இவையெல்லாம் அங்கு நடைபெறாததால் அவன் அங்குஇல்லை என்பதை இராமன் உணர்ந்தான் என்பது கருத்து, பஞ்சானனம் என்ற வடசொல்லுக்கு விரிமுகம் என்பது கம்பனின் தமிழாக்கம்; மகளிர் நாட்டியம் ஆடுதல் அத்தாணி மண்டபத்தில் தினந்தோறும் நிகழ்வது மரபு. சபா மண்டபம் இப்போது பொலிவற்றிருந்தது என்பதாம்.

105. இராமன் கைகேயியின் அரண்மனையை அடைதல்

வேத்தவை முனிவரோடு விருப்பொடு களிக்கும், மெய்ம்மை
ஏத்தவை இசைக்கும், செம்பொன் மண்டபம் இனிதின் எய்தான்

Koviloor Digital Library

ஒத்தவை உலகத்து எங்கும் உள்ளவை உயர்ந்தார் உள்ளம்
பூத்தவை வடிவைஒப்பான், சிற்றவை கோயில் புக்கான். (1687)

(வேத்து-வேந்து / அரசு; வேத்தவை-அரசவை; பூத்தவை-தோன்றியவை;மெய்ம்மை ஏத்து-உண்மைப் புகழ்ச்சி; ஓத்து-ஞானநூல் / வேதத்தொகுதி).

ஞானநூல்களாகிய வேதங்களையும், உலகத்திலுள்ள மற்ற எல்லாதர்ம சாஸ்திரங்களையும் நன்கு கற்றுணர்ந்தவர்களான ஞானியர்களின் சிந்தையில் தோன்றுகின்ற வடிவத்தை அப்போதைக்கப்போது ஏற்பவனாகிய இராமபிரான், அரசவையில் அரசர்கள் முனிவர்களோடு, தாமே விருப்பப்பட்டு மகிழ்ந்து, தன்னுடைய உண்மையான புகழ்ச்சிகளை யெல்லாம் கூறிப் பாடுகின்ற, செம்மையான பொன்னாலாகிய மண்டபத்துள் இனிமையாகச் செல்லாமல், தனது சிற்றன்னையாகிய கைகேயியின் அரண்மனையை அடைந்தான்.

கற்றுணர்ந்தவர்களும், வேதியர்களும் எந்த வடிவத்தை விரும்பித் தியானிக்கிறார்களோ, அந்த வடிவத்தையே தனக்கு உருவமாகக் கொள்ளுபவன் இராமன் என்பது கருத்து. ''தமர் உகந்தது எவ்வுருவம், அவ்வுருவந்தானே'' என்பது பொய்கையாழ்வாரின் திவ்வியபிரபந்தம். ''யாதொரு தெய்வம் கொண்டீர், அத்தெய்வமாகி மாதொரு பாகனார் தாம் வருவார்'' என்பது சிவஞான சித்தி இறைவன் ஐந்து வடிவங்களைக் கொள்ளுகிறான் என்பது நூல் கொள்கை அவையாவன. பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்பனவாம். இந்த ஐந்து வடிவங்கயையும் ஒரு தலையாகக் கருதி இருப்பவன் என்பதுமாம். இராமபிரான், அரசரும் முனிவரும்கூடியிருந்து தன்னை ஏற்றிப் புகழ்பாடும் சபா மண்டபத்தினுள் நுழையாது, அதனைத் தாண்டி கைகேயியின் அரண்மனைக்குச் சென்றான் என்பதாம் ஞான நூல்களான வேதங்கள் தவிர, மற்றவை ஆறு அங்கங்கள். அவை, மீமாம்சை, புராணங்கள், தருமசாஸ்திரங்கள் முதலியனவாம்.

106. மக்கள் கூற்று

புக்கவன் தன்னை நோக்கிப் புரவலர், முனைவர் யாரும்
தக்கதே நினைந்தான்; தாதை தாமரைச் சரணம் சூடித்
திக்கினை நிமிர்த்த கோல் அச்செல்வனே, செம்பொன் சோதி
மிக்கு உயர்மகுடம் சூட்டச், சூடுதல் விழுமிது என்றார். (1688)

(புரவலர்-மன்னர்; செல்வன்-தசரதன்; விழுமிது-சிறந்தது; சரணம் சூடுதல்-திருவடிகளில் முடி படும்படி வணங்குதல்; நிமிர்தல்-குற்றம் கடிதல்)

கைகேயியின் அரண்மனையை அடைந்த இராமபிரானைப் பார்த்து, அங்கிருந்த மன்னர்களும், முனிவர்களும், மற்ற எல்லோரும் இராமபிரான் செய்யத்தகுதியானவற்றையே நினைந்து செய்கிறான். முதலில் தன்தந்தை

Koviloor Digital Library

தசரதனின் தாமரை மலர்போன்ற திருவடிகளைத் தன் தலையில் சூடிப் பின்னர், பத்துத் திசைகளையும் வென்று உயர்ந்த செங்கோலை உடைய அச்செல்வம் பொருந்திய தசரதனே அவன் கரங்களாலேயே செம்மையான பொன்னாலாகிய ஒளி படைத்த மிகவும் உயர்ந்த மணிமுடியைச் சூட்ட, தான் சூடிக் கொள்வது சிறப்பானது'' என்றனர்.

''திக்கினை நிமிர்த்த கோல் அச்செல்வன்'' என்பது தசரதனின் பெயர்க் காரணத்தை விளக்குவதாகும். அவனைப் போலவே இவனும் அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசு புரிவான் என்பதும், திக்குகள் எல்லாவற்றையும் வென்று ஆள்வான் என்பதும் உட்கருத்து. அவர்கள் எல்லோரும், முடிசூடுதற்கு முன்பு இராமன் தன் தந்தையை வணங்கி ஆசி பெறப்போகிறான் என்று கருதி அவனைப் பாராட்டினர் என்பதாம்.

107. இராமன் முன் கைகேயி வருதல்

ஆயன நிகழும் வேலை, அண்ணலும் அயர்ந்து தேறாத்
தூயவன் இருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி,
''நாயகன் உரையான் வாயால்; நான் இதுபகர்வென்'' என்னாத்
தாய் என நினைவான் முன்னே, கூற்று எனத் தமியள் வந்தாள். (1689)

(அயர்ந்து-மனம் சோர்ந்து; தேற-தேறி / தெளிந்து; சூழல்-இருக்கும் இடம்; துருவுதல்-தேடிக் கண்டு பிடித்தல்; நினைதல்-எண்ணுதல்; கூற்று-இயமன்-தமியன்-தனியாக; வேலை-வேளை / சமயம்; கூற்றுவன்-இயமன்-உயிரையும் உடம்பையும் கூறுபடுத்திப் பிரிப்பவன் என்ற காரணத்தால் கூற்றுவன் இயமனுக்குக் காரணப் பெயர்)

இவ்வாறு அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கும் போது, இராமபிரான் தன்தந்தையை அரண்மனையில் காணாததால் சோர்வுற்றுப் பின்தெளிந்து, தூய்மையனான தசரதன் இருக்கின்ற இடத்தைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு வருவதைக் கண்ணுற்ற கைகேயி தசரதன் தான் கேட்ட இருவரங்களையும் பற்றித்தன்வாயினால் இராமபிரானிடம் கூறமாட்டான் எனவே நானே சென்று சொல்லுவேன் என்று மனத்துள் கருதி, தன்னைப் பெற்றெடுத்த தாய் என்று கருதிக் கொண்டிருக்கும் இராமபிரானுக்கு முன்னால், அரசர் தன் கூடவராதபடி, இயமனைப் போல அவள் தன்னந் தனியளாக வந்தாள்.

வாய்மையில் தவறாதவன் தசரதன் எனவே தூயவன் என்றார். ''அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்'' என்பது குறள்298. ''உரையாள் வாயால்'' என்பது, இதுவரை தசரதன் இனியவைகளையே கூறிப் பழகியவன், அவன் இந்த இன்னாத செய்தியைத் தன்வாயால் சொல்ல மாட்டான் என்பதைக் கைகேயி நன்கு உணர்ந்திருந்தாள் என்பதைக் குறிக்கும். தாய், கூற்று என்று ஒரே அடியில் உயிர் தரும் தாயையும், உயிர் கொள்ளும் கூற்றினையும் கூறிய நயம் சுவைக்கத் தக்கது. உயிரைப் போன்ற இராமனை உடல் போன்ற தசரதனிடத்து இருந்து கூறுபடுத்திப்

Koviloor Digital Library

பிரிப்பதாலும், தசரதன் உயிர் போவதற்குக் காரணமாய் இருக்கின்றாள் என்பதாலும் கைகேயியை இங்கே கூற்று என்கிறான் கவிஞன்.

108. இராமன் கைகேயியை வணங்கி நிற்றல்

வந்தவள் தன்னைச் சென்னி மண்உற வணங்கி, வாய்த்த
சிந்துரப்பவளச் செவ்வாய் செங்கையில் புதைத்து, மற்றைச்
சுந்தரத்தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்;
அந்திவந்து அடைந்த தாயைக் கண்ட ஆன்கன்றின் அன்னான். (1690)

(அந்தி-மாலைப் பொழுது; ஆன்-பசு; சென்னி-தலை / நெற்றி; புதைத்து-மூடிக்கொண்டு; துவளுதல்-நிமிர்ந்து நில்லாது / வளைந்து / தளர்வு தோன்ற நிற்றல்; தானை-ஆடை; சிந்துரம்-சிவப்பு)

மாலைப் பொழுதில் வந்து சேர்ந்த தாய்ப்பசுவைக் கண்ட இளம்பசுவின் கன்று போன்ற அன்புள்ளம் கொண்ட இராமபிரான், தன் எதிரில் வந்து நின்ற கைகேயியைத் தன் நெற்றி நிலத்தில் படும்படி சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, தனக்கெனச் சிறப்பாக வாய்த்த சிவந்த பவளம் போன்ற வாயினைத் தன் சிவந்த ஒரு கையினால் மூடிக்கொண்டு, மற்றொரு அழகிய பெரிய கையினால் தன் ஆடைகள் காற்றில் அலையாதபடி மடக்கிப் பிடித்துக் கொண்டு, வணக்கத்துடன் வளைந்து நின்றான்.

வாய் மூடியிருத்தல், ஆடைமடக்கியிருத்தல், நிமிர்ந்து நில்லாமல் வளைந்து நிற்றல் இவைகள் அடக்கத்திற்கு அறிகுறி. காலை போய் மாலை வரும் பசுவைப் பகல் முழுதும் பிரிந்திருந்த கன்று, தாயைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளுதல் இயல்பு. அடக்கம் என்பது உயர்ந்தோர் முன் பணிந்த மொழி, தணிந்த நடை, ஆடை மடக்கிக் கொள்ளுதல், வாய் புதைத்தல், தலை தாழ்ந்து நிற்றல் ஆகியவையாம்.

109. கைகேயி கூறுதல்

நின்றவன் தன்னை நோக்கி,
 இரும்பினால் இயன்ற நெஞ்சின்,
கொன்று உழல்கூற்றம் என்னும்
 பெயரின்றிக் கொடுமை பூண்டாள்,
''இன்று எனக்கு உணர்த்தலாவது
 ஏயதே என்னின் ஆகும்;
ஒன்று உனக்கு உந்தை, மைந்த!
 உரைத்ததோர் உரை உண்டு'' என்றாள். (1691)

(உழல்-திரிதல்; ஓர்-ஒப்பற்ற; இன்று-இப்போது; ஏயது-பொருந்தியது / ஏற்றது)

Koviloor Digital Library

அவ்வாறு கை கட்டி, வாய் பொத்தி நின்ற இராமனைப் பார்த்து இரும்பினால் செய்த உள்ளம் கொண்டவளும், உயிர்களைக் கொன்று திரியும் இயமன் என்னும் பெயரை மட்டும் விலக்கி விட்டு, அவனுடைய கொடுந்தொழிலாகிய உயிர் கவர்தலை மட்டும் தன்னகத்தே கொண்டவளுமான கைகேயி, ''மகனே! இப்போது உனக்கு உன் தந்தை கூறவேண்டிய உரை ஒன்று உண்டு. அதை நான் கூறுவது பொருத்தமென்று நீ கருதினால் நான் கூறுகிறேன்''என்றாள்.

கடுமையான சொற்களைப் பேசப் போகிறாள். எனவே கடுமையான உள்ளம் வேண்டும். அதனைத் தான் இரும்பினால் இயன்ற நெஞ்சம் என்கிறான் கம்பன். ''இரும்புதரு மனத்தேனை'' என்று தன்னைத் தானே கூறிக் கொள்வார் மாணிக்கவாசகர். தான் கூற வந்த சொற்கள் கொடுமையானவை. எனவே அதை விரைந்து கூறாது. காலந்தாழ்த்த வேண்டிப் பலசொற்களைக் கூறிப் பேச முற்படுகிறாள். அவனுடைய உடன்பாடு கிடைத்தால் அச்சொற்களின் கடுமை சற்று குறையலாம் என்பது அவள் எண்ணம். எனவே தான் உன் தந்தை என் மூலம் உனக்குத் தெரிவிக்கச் சொன்ன சொல் ஒன்று உள்ளது. அதனை நான் சொல்லலாம் என்றால் சொல்லுகிறேன்'' எனறு நயமாகப் பேசுகிறாள்.

110. இராமன் கூறுதல்

எந்தையே ஏவ, நீரே உரைசெய இயைவது உண்டேல்;
உய்ந்தனன் அடியேன்; என்னில் பிறந்தவர் உளரோ? வாழி!
வந்தது என்தவத்தின் ஆய வருபயன் மற்றொன்று உண்டோ?
தந்தையும் தாயும் நீரே; தலை நின்றேன் பணிமின்! என்றான். (1692)

(ஏவ-கட்டளையிட; இயைவது-வாய்த்தது; உய்த்தல்-ஈடேறுதல் / கடைத்தேறுதல்; நிற்றல்-தலைமேற்கொண்டு செய்தல்; பணி-கட்டளை)

''என்னுடைய தந்தையாரே ஒரு கட்டளை இட, அதை என் தாயாகிய தாங்களே என்னிடம் கூறுவது பொருத்தமானது என்றால், நான் ஈடேறினேன்; என்னைக் காட்டிலும் மேம்படப் பிறந்தவர்கள் இவ்வுலகினில் யாரும் உள்ளனரோ? இல்லை; என்னுடைய தவத்தின் பயன் இப்போது கிடைக்கப்பெற்றேன். இனிமேல் வருகின்ற பயன் என்ன இருக்கிறது? ஏதும் இல்லை. எனக்கு நன்மையானவற்றைச் செய்யும் தந்தையும், இனிமையானவற்றைச் செய்யும் தாயும் தாங்களே. எனவே தாங்கள் கூறுவதைச் சிரம் மேற்கொண்டு செய்வேன்; கட்டளை இடுங்கள்'' என்றான்.

பெற்றோர் ஏவிய பணி புரிதலே பிறவிப் பயன் என்பது புலப்படுத்தப்பட்டது. தந்தையின் சொல்லைத் தந்தையின் நிலையிலிருந்து தான் சொல்லுவதனால், தாயாகிய கைகேயி தந்தையும் ஆகின்றாள். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை; தாயிற் சிறந்த

Koviloor Digital Library

கோயிலுமில்லை. எனவே அவன் பேறு பெற்றுக் கடைத் தேறினான் என்பதாம். முதல் நூலாகிய வான்மீகத்தில் இராமன் தசரதனைக் காண்பதாகக் கூறப்படுகிறது. கம்பன் இங்கே மாறுபடுகிறான்.

111. கைகேயி இட்ட கட்டளை

''ஆழிசூழ் உலகமெல்லாம்
பரதனே ஆள, நீ போய்த்
தாழ்இரும் சடைகள் தாங்கித்
தாங்க அரும்தவம் மேற்கொண்டு,
பூழிவெங்கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ் இரண்டு ஆண்டின் வா என்று
இயம்பினன் அரசன்'' என்றாள். (1693)

(ஆழி-கடல்; தாழ்-நீண்ட; இரும்-பெரிய; பூழி-புழுதி; வெம்-விரும்பத்தக்க; நண்ணி-அடைந்து; துறைகள்-தீர்த்தங்கள்; தாழ்தல்-புறத்தே நீண்டு தொங்குதல்; ஆடுதல்-மூழ்குதல்)

''கடலால் சூழப்பெற்ற இவ்வுலகம் முழுவதையும் பரதனே ஆட்சி செய்ய, நீ இந்நாட்டினின்று நீங்கிப் போய், தொங்குகின்ற நீண்ட பெரிய சடைமுடியினைத் தரித்துக் கொண்டு, பிறர் செய்தற்கரிய தவத்தினை மேற்கொண்டு, புழுதிகள் நிறைந்த தவசியரால் விரும்பத்தக்க கானகத்தை அடைந்து, அங்குள்ள புண்ணிய நீர் நிலைகளில் நீராடி, பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்னர் இங்கு திரும்பி வரவேண்டும் என்று அரசன் கூறினான்'' என்று கைகேயி இராமனுக்குத் தெரிவித்தாள்.

பரதனே ஆள என்பது, பரதனைத் தவிர வேறுயாரும் ஆளக் கூடாது என்பதையும், பிறருக்குப் பொது இன்றி அவன் மட்டுமே சிறப்பாக ஆளவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது. நீண்ட சடை தாங்குதல் தவக் கோலத்திற்குச் சிறப்பு. வெம்மை என்பது கொடிய என்ற பொருள் தராது, விருப்பம் என்றும் பொருள்தரும். ''வெம்மை வேண்டல்'' என்பது தொல்காப்பியம். பதினான்கு ஆண்டுகள் என்று கூறாது ஏழிரண்டாண்டுகள் என்றது காலம் குறைந்து தோன்றும் என்று அவள் எண்ணியதால் என்க. முப்பது காவதத்தை ''ஆறைங்காதம்'' என்று சிலப்பதிகாரம் கூறும். இது தான் கேட்ட வரம் என்று கூறாது மன்னன் கட்டளை என்கிறாள். அதிலும் தந்தை என்னாது அரசன் என்றதனால் அது அரசு ஆணை என்று அவன் கருதவேண்டும் என்ற காரணத்தால். கானகம் அடைதலால் தவம் மேற்கொள்ளுதல், புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல், தவசியர்களுடன் கலந்து பழகுதல் ஆகிய நற்பயன்கள் விளையும் என்பதனால் தான் அரசன் இவ்வாறு கட்டளை இட்டான் என்பது தோன்றக் கூறுவது அவளது வஞ்சகத் தன்மையைக் காட்டும். முன்பாட்டில் உந்தை

Koviloor Digital Library

என்றவள் இப்பொழுது அரசன் என்பது நோக்கத்தக்கது. தந்தை சொல்லை மகன் கேட்காமல் போகலாம், ஆனால் அரசன் ஆணையை மதிக்காமல் இருக்க முடியாது என்பது தோன்றவே அரசன் இயம்பினன் என்றாள். தானே கூறவில்லை அரசன் தான் கூறினான் என்று தன்னைப் பழியினின்றும் விடுவித்துக் கொள்ளும் வஞ்சக எண்ணத்தால் தான் ''இயம்பினன் அரசன்'' என்கிறாள்.

112. கவிக் கூற்று

இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு எளிதோ? யாரும்
செப்ப அரும்குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு; பின்பு அவ்வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்ற தம்மா! (1694)

(செவ்வி-அழகு)

எவராலும் சொல்லுதற்கரிய நற்குணங்களைப் பெற்றிருக்கின்ற இராமபிரானது அழகு பொருந்திய முகத்தின் அழகினை இப்போது ஆராய்ந்து பார்த்தால், என்போன்றவர்கட்கு அதை வருணித்துச் சொல்வது எளியதாகுமோ? ஆகாது. மிக அரிதாம். கைகேயியின் சொற்களைக் கேட்பதற்கு முன்பு செந்தாமரை மலரைப் போன்றிருந்த அவன் முகம், அவள் கூறியதை நன்கு கேட்டு உணர்ந்த பிறகு அன்றலர்ந்த செந்தாமரை மலரினையும் வென்று விட்டதாயிற்று.

குணத்தின் சிறப்பிற்கு ஏற்றவாறே முகஅழகும் அமைவது இயல்பு. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். பொதுவாக ஒரு மலர் மலர்ந்தவுடன் பேரழகாகத் தோன்றும். நேரம் செல்லச் செல்ல அம்மலரின் அழகு குறைந்து கொண்டே வந்து இறுதியில் வாடி, வதங்கிச் சுருங்கிவிடும். ஆனால் இராமனுடைய முகமாகிய மலர் அன்று பூத்த புதியமலரின் அழகையும் வென்றுவிட்டது என்பதாம். பொதுவாக ஒருவரை நாட்டை விட்டுக் காட்டுக்குப் போகச் சொன்னால் துன்புறுவதுதான் இயல்பு. ஆனால் இராமபிரான் இதற்கு மாறாக, முன்பைவிட மகிழ்ச்சி மிகுதியால் முகமலர்ச்சி கொண்டான் என்பது கருத்து. இன்பத்தை விடத் துன்பம் கூடுதல் பொலிவைத் தந்தது என்றால் இன்பம் / துன்பம் இரண்டினையும் எடுத்துக்கொள்ளுகிற இராமனின் மனநிலை எத்தகையதாக இருக்க வேண்டும்?

113. தெருள்உடை மனத்து மன்னன் ஏவலில் திறம்பல் அஞ்சி
இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக்கு இயைந்து நின்றான்,
உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்தகார் ஏறு
அருளுடை ஒருவன் நீக்க அப்பரம் அகன்றது ஒத்தான். (1695)

(தெருள்-தெளிவு; திறம்பல்-மாறுபடுதல்; இயைந்து-உடன்பட்டு; உருள்-சக்கரம்; சகடம்-வண்டி; உய்த்த-செலுத்தப்பெற்ற; கார்ஏறு-கரிய எருது; பரம்-பாரம்)

Koviloor Digital Library

தெளிவான மனத்தை உடைய தசரதன் கட்டளைக்கு மாறுபட்டு நடத்தலை அஞ்சி, அறியாமையாகிய இருளில் உழன்று கொண்டிருக்கும் இவ்வுலகத்தின் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும் துன்பத்தினை இராமன் முன்பு ஒத்துக்கொண்டான். ஆனால் இப்பொழுது கைகேயியின் சொற்களைக் கேட்டவுடன், சக்கரத்தை உடைய வண்டியில் பூட்டி, அதைச் செலுத்துவதற்கு உரிமையானவன் கரிய எருதினைப் பொருத்திச் செலுத்த, ஆனால் இடையில் தோன்றிய ஒரு அருளாளன் அந்தச் சுமையினின்றும் அந்த எருதினை விலக்கிவிட, அந்தச் சுமை அகன்றதை நினைத்து மகிழும் எருதைப் போல மகிழ்ச்சியுடன் நின்றிருந்தான் இராமன்.

அறியாமையுடைய உலகம். எனவே ஏதேனும் தவறு நிகழ்ந்தாலும் உலகம் அரசனையே ஏசும். எனவே தான் இருளுடை உலகம் தாங்கும் இன்னல் என்றார். அரசாட்சி பெரும் சுமை என்பது எல்லா இடங்களிலும் எல்லா இலக்கியங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. ''மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும், இயற்கையல்லன செயற்கையில் தோன்றினும், காவலர்ப் பழிக்கும் இக்கண் அகல் ஞாலம்'' என்பது புறநானூறு. ''மழை வளம் கரப்பின் வான் பேரச்சம்; பிழை யுயிர் எய்திற் பெரும் பேரச்சம்; மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பம் அல்லது தொழு தகவுஇல்'' என்பது சிலப்பதிகாரம். அரசாட்சி அரசபாரம் எனப்படும். அதனை வண்டியாகவும், ஆளும் அரசனை வண்டியில் பூட்டப்பட்ட எருதாகவும் கூறுவது கவி மரபு. அரசபாரம் தாங்குவது எளிதன்று. கார் ஏறு என்பது மயிலைக் காளையைக் குறிக்கும். இது எருதுகளுள் சிறந்தது என்பர். அரசுச் சுமையை நீங்கிய இராமன், வண்டிச் சுமையை நீங்கிய எருது போல வருத்தம் நீங்கி மகிழ்ச்சியுடன் இருந்தனன் என்பதாம். *(சகடம்-அரசாட்சி; கார் ஏறு-இராமன்; உடையவன் தசரதன்; அருளுடை ஒருவன்-கைகேயி)*

114. இராமன் விடை பெறுதல்

''மன்னவன் பணியன்று ஆகில்
நும்பணி மறுப்பெனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றதன்றோ?
என்இனி உறுதி அப்பால்?
இப்பணி தலைமேல் கொண்டேன்;
மின்ஒளிர் கானம் இன்றே
போகின்றேன்; விடையும் கொண்டேன்''. (1696)

(பணி-கட்டளை; பின்னவன்-பரதன்; இன்றே-இப்பொழுதே) குளகப்பாடல்.

''அரசனின் கட்டளை அல்ல என்றாலும், தாங்கள் இடும் கட்டளையை மறுப்பேனா? என்னுடைய தம்பி பரதன் பெறும் அரசச் செல்வம் நான் பெற்றதைப் போன்றதே அல்லவா? இதைவிட எனக்கு நன்மை பயப்பது

Koviloor Digital Library

வேறு என்ன இருக்கிறது? எதுவும் இல்லை; அதனால் தாங்கள் இட்ட கட்டளையை இப்பொழுது தலைமேற்கொண்டு நிறைவேற்றுகின்றேன்; மின்னல் போல் வெயில் ஒளி வீசும் கானகத்திற்கு இப்பொழுதே செல்லுகின்றேன். தங்களிடம் விடையும் பெற்றுக் கொள்கின்றேன்''.

அடுத்த செய்யுளில் முடியும். அவள் விடை தரும் வரையிலும் காத்திராமல் விரைந்தான் என்பதால் விடையும் கொண்டேன் என்று இறந்த காலத்தில் கூறப்பட்டது. தான் கானகம் செல்வதால் பல முனிவர்களையும் ஞானியர்களையும் கண்டு பழகும் வாய்ப்பு இருப்பதால் இதைவிட வேறு ஒரு நன்மை இல்லை என்பதாம்.

115. இராமன் கோசலை அரண்மனைக்குச் செல்லுதல்

என்றுகொண்டு, இனைய கூறி, அடிஇணை இறைஞ்சி மீட்டும்,
தன்துணைத் தாதைபாதம் அத்திசை நோக்கித் தாழ்ந்து,
பொன்திணி போதினாளும், பூமியும், புலம்பி நையக்
குன்றினும் உயர்ந்த தோளான், கோசலை கோயில் புக்கான். (1697)

(துணை-இரண்டு / ஒப்பு; பொன்-அழகு; திணி-நிறைந்த; போது-தாமரை மலர்; நைய-வருந்த; கோயில்-மாளிகை; தாழ்ந்து-வணங்கி; புலம்பி-தனிமையுற்று)

இவ்வாறு சொல்லிக் கொண்டு, மலை போலும் உயர்ந்த பூரித்த தோள்களை உடைய இராமன், கைகேயியின் இருதிருவடிகளையும் மீண்டும் ஒருமுறை வணங்கி, தனது தந்தையான தசரதனின் இருதிருவடிகளையும் அவன் இருந்த திசை நோக்கிப் போற்றித் துதித்து, அழகு நிறைந்த செந்தாமரை மலரில் உறையும் இராச்சியலட்சுமியும், பூமி தேவியும் தனிமையுற்று வருந்த, தனது தாயாகிய கோசலையின் அரண்மனைக்குச் சென்றான்.

நினைவிழந்த தசரதனைக் காணமுடியாததால் அவன் இருந்த திசைநோக்கி வணங்கினான் என்பதாம். ''புலம்பே தனிமை'' என்பது தொல்காப்பியம். மரியாதைக்குரிய பெரியோரை, முதலில் பார்க்கும் போதும், மீண்டும் அவரைப் பிரியும் போதும் வணங்குதல் முறை.

கைகேயி சூழ்வினைப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

4. நகர் நீங்கு படலம் [237 பாடல்கள்]

இராமன் கைகேயி சொல்லியபடி கானகம் புகுவதற்காக அயோத்தி நகரத்தினின்றும் நீங்கிய போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் படலம் என விரியும். இது 237 பாடல்களைக் கொண்டது. இராமன் அயோத்தி நகரினின்றும் நீங்குகின்ற படலம் என்பதைக் காட்டிலும், அயோத்தி நகரமே-அந்நகர மக்கள் அனைவருமே-அந்நகரினின்றும் நீங்கிய படலம் என்று நயமாகச் சொல்லுவது இன்னும் சாலப் பொருத்தமாகும்.

இப்படலத்துள், கோசலை அரண்மனைக்கு இராமன் சென்று உரையாடுதலும், அவள் துயர் நிலையும், அவளை இராமன் தேற்றுதலும், அவள்தானும் உடன் வருவேன் என்று கூற இராமன் அதனைத் தடுத்தலும், தந்தை சொற்படி நடத்தலே கடமை என்பதும், வனம் புகுவதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுதலும், மன்னனை வேண்டுவதற்காகக் கோசலை தசரதனைக் காணப் போதலும், அவளைத் தொழுது இராமன் சுமித்திரை மாளிகைக்குச் செல்லுதலும், கைகேயி மாளிகைக்குச் சென்ற கோசலை தசரதன் நிலை கண்டு துணுக்குறுதலும், புலம்பி, மயங்கி வீழ்தலும், அவள் அரற்றல் குரல் வெளிக்கேட்டு, அவையோர் வசிட்டரை உள்ளே அனுப்பிவைத்தலும், வசிட்டன் வந்து தசரதனின் நிலை கண்டு, கைகேயியைக் காரணம் வினவுதலும், அதைக் கேட்ட வசிட்டன் மன்னனைத் தேற்றுதலும், முனிவன் கைகேயிக்கு அறவுரை கூறுதலும், அதனைக் கைகேயி மறுத்தலும், முனிவன் கைகேயியைக் கடிந்து நிந்தித்துக்கூறுதலும், தசரதன்கைகேயிதன்தாரமல்லள், பரதன்உரிமைக்கு ஆகான் என்று கூறிச் சோர்ந்து போதலும், கோசலை மன்னனைத் தேற்றித் துயர் உறுவதும், மன்னன் தெளிவுற்று இராமன் வருவானா எனக் கேட்டுத் தான் பெற்ற சாப வரலாற்றைக் கூறுதலும், அங்கிருந்து நீங்கிய வசிட்டன் அரச சபையினர்க்குச் செய்தி சொல்லுதலும், அதனைக் கேட்ட மக்கள் புலம்பித் துயருறுதலும், செய்தியறிந்து இலக்குவன் சீறிக் கைகேயி, தசரதன், பரதன் முதலியவர்களை இகழ்ந்து போர்க்கோலம் பூண்டு வில்லின் நாண் ஏற்றுதலும், வில் நாண் ஒலி கேட்டுச் சுமித்திரையின் மாளிகையில் இருந்து இராமன் வருதலும், வந்து பல்லாற்றானும் அவன் சினந்தணித்தலும், இருவரும் மீண்டும் சுமித்திரையின் மாளிகைக்குச்

Koviloor Digital Library

செல்லுதலும், சுமித்திரை வருந்த இராமன் தேற்றுதலும், அங்கே கைகேயியின் ஏவல் மகளிர் மரவுரி கொண்டுவந்து தர இலக்குவன் அதனைப் பெற்றுக் கொண்டு வனம்புக அனுமதி கோறலும், அனுமதி தந்து, சுமித்திரை அறிவுரை கூறுதலும், இருவரும் சீரை உடுத்தி விடைபெறும் போது, இராமன் இலக்குவனைத் தாய் தந்தையருக்குத் துணையாக இங்கேயே இருக்கும்படி வேண்டுதலும், இலக்குவன் மறுத்தலும், இராமன் செயலற்று நிற்றலும், அங்கு வந்த வசிட்ட முனிவனை இருவரும் வணங்குதலும், அவர் துயரெய்தி அவன் வனம் புகாமல் தடுக்க முயலுதலும், இராமன் நன்றன்று என்று கூறித் தடுத்தலும், இராமன் தன் மனையை நோக்கிச் செல்லும் போது, அதனைக் கண்ட அயோத்தி மக்கள்படும் பெரும் துயரமும், அவனை அந்நிலையில் கண்ட சீதை துணுக்குறுதலும், மாமியர் சீதையை ஆற்றுதலும் இராமன் சீதை உரையாடலும், நீ வருந்தலை நீங்குவன் யான் என இராமன் கூறுதலும், நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு எனச் சீதை கூறி மரவுரி தரித்துத் தயார் நிலையில் வருதலும், இராமன் பின்விளைவு பற்றிக் கூறி எனக்கு இடர்தருவாய் என்று கூறுதலும், பின்வேறு வழியின்றி மூவரும் புறப்படுதலும், நகர மக்கள் அவர்களைப் பின் தொடர்தலும், பின்னும் ஒரு முறை தந்தையின் மாளிகை சென்று தாயரை நோக்கி மன்னனை ஆற்றுமாறு கூறித் தாயரின் வாழ்த்துப் பெற்று, முனிவரையும் வணங்கி மூவரும் தேரேறிச் செல்லுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாக விரித்துரைக்கப் பட்டிருக்கின்றன.

1. இராமன் கோசலையைக் காணுதல்

குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்றவெண்குடையும் இன்றி,
இழைக்கின்ற விதி முன்செல்லத் தருமம் பின் இரங்கி ஏக,
"மழைக்குன்றம் அனையான், மௌலி கவித்தனன் வரும்" என்று என்று,
தழைக்கின்ற உள்ளத்து அன்னாள் முன், ஒரு தமியன் சென்றான். (1698)

(மழை-மேகம்; மௌலி கவித்தல்-முடிசூடுதல்; தழைத்தல்-மகிழ்தல் / பூரித்தல்; குழைத்தல்-வீசுதல் / இரட்டுதல்; கவரி-சாமரை; கொற்றம்-வெற்றி; இழைக்கின்ற-செய்கின்ற; இரங்கி-மனம்வருந்தி; தமியன்-தனியனாய்)

மேகங்கள் தவழுகின்ற மலை போலும் உயர்ந்த தோள்களையுடைய இராமன், முடிசூட்டிக் கொண்டு வருவான் என்று பல முறை நினைத்து நினைத்து உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்துப் போன அவன் தாயாகிய கோசலையின் முன்னால், இராமன் தன் இருபக்கங்களிலும் எப்பொழுதும் வீசுகின்ற வெண்சாமரை வீசப்படாமலும், வெற்றி பொருந்திய வெண் கொற்றக்குடை முன், நிழல் நிழற்றாமலும், நல்ல, தீய வினைகளைச் செய்வதற்குக் காரணமாகிய விதி வெண்சாமரை போல் அவன் முன்னால் செல்லவும், தரும தேவதையான அறக்கடவுள் வெண் கொற்றக் குடை

Koviloor Digital Library

போலப் பின்னால் வருந்திக் கொண்டு தொடர்ந்து வரவும், தான் மட்டும் தன்னந்தனியனாய்ச் சென்றான்.

மகனை மன்னனாகக் காண விழைந்த கோசலை அவன் வெண்சாமரை வீசுவோரும், வெண்கொற்றக் குடை தாங்குவோரும் இன்றித் தனியனாய் வந்ததால் ஏமாற்றத்தால் ஏங்கினாள். விதி அவனை இழுத்துக் கொண்டு முன்சென்றது என்று கூறியது ஒரு நயம். கோசலையைக் காண இராமபிரான் சென்ற போது இலக்குவனும் உடன் சென்றான் என்று வான்மீகம் கூறும்.

2. கோசலை வினவுதல்

''புனைந்திலன் மௌலி! குஞ்சி மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன்! என்கொல்?'' என்னும் ஐயத்தாள், நளினபாதம்
வனைந்த பொன்கழல்கால் வீரன் வணங்கலும், குழைந்து வாழ்த்தி,
''நினைந்தது என்? இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு?''என்றாள். (1699)

(மௌலி-முடி; குஞ்சி-தலைமுடி / குடுமி; நளினம்-தாமரை மலர்; குழைந்து-மனம் உருகி)

இராமன் தன்னை வந்து நெருங்குவதைக் கண்ட கோசலை அவனைப் பார்த்து, என்ன இது; இன்னும் முடிசூட்டிக் கொள்ளவில்லை; தூய்மையான தீர்த்தங்களினால் தன் தலை முடியையும் நீராட்டிக் கொள்ளவில்லை; என்ன ஆயிற்று? என்று தன் மனத்துள் சந்தேகம் கொண்டாள்; தனது தாமரை மலர் போன்ற பாதங்களை, பொன்னாலாகிய வீரக்கழல்களை அணிந்த வீரனான இராமபிரான் தொழுது வணங்கவும், அவனை மனம் கசிந்து ஆசீர்வதித்து, ''முடி புனைவதற்கு முன்பே நீ இங்கு வர ஏன் எண்ணினாய்? சக்கரவர்த்தி எண்ணிய செயல் என்ன ஆயிற்று? நீ தொன்மையான முடிபுனைவதற்கு ஏதேனும் இடையூறு உள்ளதோ?'' என்று கேட்டாள்.

புனித நீர் என்றது கங்கையே முதலாய கன்னி ஈறான தீர்த்தங்களையும், நான்கு வாரியின் நீரையும் என்பதாம். முடி சூட்டும் முன் புண்ணிய தீர்த்தங்களில் நீராட்டுதல் மரபு. இராமன் முடிசூட்டிக் கொண்டு அரசக் கோலத்தில் வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த கோசலை, இராமன் இவ்வாறு தனியனாக முடிசூடாது வந்தது கண்டு திகைப்பும் ஐயமும் கொண்டாள். எனவே அதற்குரிய காரணங்கள் என்ன என்று கேட்டாள்.

3. இராமன் ''பரதன் முடிசூடுகின்றான்'' எனல்

மங்கை அம்மொழி கூறலும், மானவன்
செங்கை கூப்பி, ''நின் காதல் திருமகன்
பங்கம் இல்குணத்து எம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றான் என்றான். (1700)

Koviloor Digital Library

(மானவன்-பெருமைடையவன் / மனுகுலத்துப் பிறந்தவன்; பங்கம்இல்-குற்றமற்ற; துங்க-பெருமையுடைய / உயர்வு / தூய்மையான; பரதன்-நாட்டைப் பரிப்பவன்; பரித்தல்-பாதுகாத்தல் / தாங்குதல்)

கோசலை அவ்வாறு கேட்டலும், பெருமையுடையவனும், மனுகுலத்தில் பிறந்தவனுமான இராமன், தனது சிவந்த கைகளைக் கூப்பித் தொழுது ''உன்னுடைய அன்பிற்குரிய அழகிய மகனானவனும், குற்றமில்லாத நற்குணங்களையுடையவனும், என்னுடைய தம்பியுமான பரதன் தான், உயர்வு மிகுந்த சிறந்த மணி முடியைச் சூடிக்கொள்கிறான்'' என்றான்.

மங்கை என்பது இங்கே பருவத்தைக் குறிக்காது பெண் என்ற பொருளில் வந்தது. இங்கே தான் முடிசூடிக் கொள்ளவில்லை என்பதை இராமன் தெரிவிக்காதது நோக்குதற்குரியது. தன்னுடைய நிலையை இராமபிரான் கோசலையிடம் விரைவாகத் தெரிவித்தால் அவள் மனம் நொந்து பெரிதும் வருந்துவாள் என்று கருதித் தானாக ஒன்றும் கூறாது, அவள் கேட்டதன் பின், படிப்படியாக ஒவ்வொரு செய்தியாகச் சொல்லும் திறன் வியப்புக்குரியது.

4. கோசலை ''பரதன் தகுதியுடையவனே'' எனல்

''முறைமை அன்று என்பது ஒன்று உண்டு; மும்மையின்
நிறைகுணத்தவன், நின்னினும் நல்லனால்;
குறைவுஇலன்''; எனக்கூறினள், நால்வர்க்கும்
மறுஇல் அன்பினில் வேற்றுமை மாற்றினாள். (1701)

(மும்மை-மும்மடங்கு; மறுஇல்-குற்றமற்ற)

அதனைக் கேட்டு, இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கனன் என்ற நான்கு புதல்வர்களிடத்தும் குற்றம் இல்லாத அன்பும், வேற்றுமை காணாத ஒரே தன்மைத்தான பாசமும் காட்டுகின்றவளான கோசலை, ''மூத்தவன் இருக்க இளையவன் முடிசூடுதல் முறைமை அன்று என்னும் ஒரு விதிமுறைக் குறைதான் இதில் இருக்கிறதே தவிர, பரதன் நின்னைக் காட்டிலும் மும்மடங்கு நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவன்; மிக நல்லவன்; முடிசூட்டிக் கொள்ளுவதற்கு எந்த விதக் குறையும் இல்லாது, எல்லாத் தகுதிகளும் பெற்றவன்'' என்று உடன்பட்டுக் கூறினாள்.

நால்வர்பாலும் ஒத்த அன்புடையவள்; நடுவு நிலைமை தவறாதவள் கோசலை என்பது பெறப்பட்டது. இராமன் முடிசூடாததனாலும், பரதன் முடிசூடிக்கொள்வதனாலும் கோசலை வருத்தமோ, மகிழ்ச்சியோ அடைந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. முறைமையைப் பற்றித்தான் பேசுகிறாள்.

Koviloor Digital Library

5. கோசலை ''பரதனோடு இணைந்து வாழ்க'' எனல்

என்று, பின்னரும், ''மன்னவன் ஏவியது
அன்று எனாமை மகனே! உனக்கு அறன்;
நன்று நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து
ஒன்றி வாழுதி ஊழிபல'' என்றாள். (1702)

(ஏவியது-கட்டளையிட்டது; நானிலம்-நாடு; ஒன்றி-ஒற்றுமையுற்று)

இவ்வாறு கூறிய பின்னரும் இராமனைப் பார்த்து, ''மகனே! மன்னன் கட்டளை எதுவாயினும் முறையன்று என்று மறுத்து விடாதே; அது உனக்கு தருமம் ஆகாது; உன் தம்பிக்கு இப்பூமியை ஆளும் உரிமையை நீ கொடுத்துவிட்டு, அவனுடன் மாறுபடாமல் ஒற்றுமையாக இருந்து பல ஊழிக்காலங்கள் வாழ்வீர்களாக'' என்றாள்.

இங்கு இரண்டு கருத்துக்கள் நோக்கத்தக்கன. ஒன்று, பரதனே முடிசூடுகின்றான் என்று இராமன் கூறியதைக் கொண்டு, அது மன்னவன் தசரதன் கட்டளையாகத் தான் இருக்க வேண்டும் என்று அவள் ஊகித்தது. அது கைகேயிசொல்லியது என்பது அவளுக்குத் தெரியாது; இரண்டாவது தந்தையின் கட்டளையை ஒரு மைந்தன் மறுப்பதற்குக் காரணங்களும் வாய்ப்புக்களும் உண்டு. ஆனால் மன்னவன் ஆணையை யாரும் மறுக்க இயலாது. அது தருமமும் ஆகாது எனவே தான் தந்தை ஏவியது என்று கூறாமல், மன்னவன் ஏவியது என்றாள் கோசலை. ''நன்று நீ கொடுத்து'' என்பது மற்றொன்று. உனக்கு முறையாக கிடைக்க வேண்டிய அரசச் செல்வத்தை நீ மூத்த மகன் என்ற காரணத்தால் உன் தந்தை உனக்குக் உவகையுடன் கொடுத்ததை உனக்கு அடுத்தபடி மூத்தவனான உன் தம்பிக்குக் கொடுத்து விட்டு இருவரும் ஒற்றுமையுடன் வாழுங்கள் என்றது, அவளுக்கு மன்னவனின் மற்றொரு கட்டளை இதுவரை தெரிவிக்கப்படாததனால் என்பதாம். ஒன்றுதல் என்பது உள்ளத்தால் ஒன்றியிருப்பதை உணர்த்தும்.

6. இராமன் அடுத்த கட்டளையும் உண்டு என்று கூறுதல்

தாய் உரைத்த சொல்கேட்டுத் தழைக்கின்ற
தூயசிந்தை அத்தோம் இல் குணத்தினான்
''நாயகன் எனை நல்நெறி உய்ப்பதற்கு
ஏயது உண்டு ஓர்பணி'' என்று இயம்பினான். (1703)

(தழைத்தல்-மகிழ்தல்; தோம்இல்-குற்றமற்ற; உய்த்தல்-செலுத்துதல்; நாயகன்-மன்னவன்)

தன் தாயாகிய கோசலை அவ்வாறு சொல்லுவதைக் கேட்டு இராமன் மிக்க மகிழ்ச்சியுற்றான். தூய்மையான எண்ணங்களும், குற்றமற்ற குணநலன்களும் கொண்ட அவ்விராமன் தாயினைப் பார்த்து,

Koviloor Digital Library

''சக்கரவர்த்தி என்னை நன்னெறியில் செலுத்தும் பொருட்டு இட்ட கட்டளை மற்றொன்று உண்டு'' என்று கூறினான்.

தாயின் சொற்கேட்டு மகிழ்கிறான் இராமன். காரணம் எங்கே பரதன் நாடாள வேண்டும் என்று சொன்னவுடன் அக்கருத்துக்குத் தன் தாய் மாறுபடுவாளோ என்று எண்ணியிருந்தான். தாய் மாறுபடாது உடன்பட்டதால் மகிழ்ந்தான் என்பதாம். ''தூய சிந்தை'' என்பது மற்றொன்று. தூய்மை என்பது அவாவின்மை'' என்பது குறள் 364. இராமன் ஆசையற்றவன் என்பதை நிறுவுதற்காகவே கம்பன் இந்தச் சொல்லை இங்கு பெய்திருக்கிறான். பிறர் செய்த குற்றங்களையும் குணமாகக் கொண்டு போற்றுகின்ற குணமுடையவன் என்பதனால் தான் ''தோம் இல் குணத்தினான்'' என்றார். தன்னைக் காட்டிற்குப் போ என்று கூறிய போதும் அதனை அப்படியே கூறாது, என்னை நன்னெறிக்குச் செலுத்தும் பொருட்டு ஒரு கட்டளை இட்டிருக்கிறான் என்று கூறுவது அவனது தோம் இல்குணத்தையும், அந்தப் பணியின் அருமை கேட்டுத் தாய் உள்ளம் கலங்கும் என்பதையும் எண்ணி மிகத் திறமையாகக் கூறியதும் உணர்ந்து போற்றுதற்குரியது. என்ன பணி என்பதைப் பின்னர் தான் சொல்லுகிறான்.

7. தந்தையின் மற்றொரு கட்டளையைச் சொல்லுதல்

''ஈண்டு உரைத்த பணி என்னை?'' என்றவட்கு
''ஆண்டு ஓர்ஏழினோடு ஏழு அகன் கான்இடை
மாண்ட மாதவரோடு உடன்வைகிப் பின்
மீண்டு நீ வரல் வேண்டும் என்றான்'', என்றான். (1704)

(மாண்ட-மாட்சிமையுடைய)

''மன்னன் இட்ட மற்றொரு கட்டளை யாது?'' என்று கேட்ட கோசலைக்கு, இராமபிரான், ''பதினான்கு ஆண்டுகள் இடமகன்ற கானகத்திற்குச் சென்று அங்கு வாழும் மாட்சிமை பொருந்திய பெருந் தவமுனிவர்களோடு உடன் தங்கியிருந்து, பின் மீண்டும் நீ நகருக்குத் திரும்பி வருதல் வேண்டும் என்பது அந்த மற்றொரு கட்டளை'' என்றான்.

பரதன் முடி சூடுதலையும், தான் கானகம் செல்லுதலையும் கோசலை கேளாமல், இராமபிரான் தானே கூறியதாக வான்மீகம் கூறும். பதினான்கு ஆண்டுகள் என்று கூறினாலும், காட்டிற்குப் போகச் சொன்னான் என்று கூறினாலும் தன் தாய் உள்ளம் நொந்து போய்விடும் என்று கருதி, இராமன் ''ஆண்டு ஓர் ஏழினோடு ஏழ்'' என்று அன்னைக்குக் குறைந்த காலமாகத் தோன்ற வேண்டுமென்பதற்காக அவ்வாறு கூறினான். காட்டில் வாழ்வதும், மாதவரோடு கலந்து பழக நல்வாய்ப்பு உண்டாவதும் அவனை நன்னெறிக்குச் செலுத்தும் வழியாகும் என்று அவள் கருத வேண்டும் என்ற காரணத்தாலும் அதை விவரித்து விளக்கினான். ''காட்டிற்கே சென்று விடவேண்டும். பதினான்கு ஆண்டுகள் கழித்து மீண்டும் நீ திரும்பி வரவேண்டும் என்றும் சொன்னான்'' என்றான்.

Koviloor Digital Library

8. கோசலையின் நிலை [6 பாடல்கள்]

ஆங்கு அவ்வாசகம் எனும் அனல்குழை
தூங்குதன் செவியில் தொடரா முன்னம்
ஏங்கினாள், இளைத்தாள், திகைத்தாள் மனம்
வீங்கினாள், விம்மினாள், விழுந்தாள் அரோ! (1705)

(குழை-குண்டலம் / காதணி; தூங்கு-தொங்குகின்ற; ஏங்குதல்-இரக்கமுறுதல்; விம்முதல்-தேம்பி அழுதல்; இளைத்தல்-துன்பம் பொறுக்க மாட்டாமல் மெலிதல்; திகைத்தல்-செய்வதறியாது மயங்குதல்; வாசகம்-வார்த்தை)

அப்பொழுது, அவன் கூறிய வார்த்தைகள் என்னும் சுடு நெருப்பு, குண்டலங்கள் தொங்குகின்ற காதுகளில் சென்று சேர்வதற்கு முன்னரேயே, கோசலை இரங்கினாள், உடல் இளைத்துப் போனாள்; செய்வதறியாது மனம் மயங்கினாள்; முகம் வீங்கினாள்; தேம்பி அழுதாள்; அதனால் மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள்.

நெருப்பு சேர்ந்தாரைத்தான் சுடும். ஆனால் இந்த வாசகமாகிய நெருப்பு சேரா முன்னமே, கேட்ட அளவிலேயே சுட்டது. காதில் இறுக அணிவது தோடு; தொங்க அணிவது குழை, இதைத் தொங்கட்டான் என்றும் கூறுவர். தொடரா முன்னம் என்பது விரைவு குறித்தது.

9. "வஞ்சமோ மகனே! உனை மாநிலம்
தஞ்சமாக நீ தாங்கு என்ற வாசகம்?
நஞ்சமோ? இனிநான் உயிர் வாழ்வெனோ?
அஞ்சும் அஞ்சும்! என் ஆருயிர் அஞ்சுமால்". (1706)

(தஞ்சம்-பற்றுக்கோடு / ஆதரவு; அஞ்சும்-ஐந்தும் / ஐந்து பூதங்களும்; மாநிலம் தாங்குதல்-அரசாளுதல்)

கோசலை, இராமனைப் பார்த்து, "அரசன் உன்னைப் பார்த்து இப்பூமி முழுவதும் பற்றுக்கோடாகக் கொண்டு நீ காப்பாற்றி அரசாள்வாயாக என்று முன்னர்க் கூறியது வஞ்சனையான சொற்களோ? அல்லது எனது உயிரைப் போக்குவதற்குரிய நஞ்சான சொற்களோ? இதைக் கேட்ட பின்னரும் நான் உயிர்தரித்து இருப்பேனோ? பஞ்ச பூதங்களாலாகிய இவ்வுடலும் மிக அஞ்சுகிறது. உடல் மட்டுமல்ல என் அருமையான உயிரும் அஞ்சுகிறது" என்றாள்.

வஞ்சம்-உள்ளொன்று வைத்துப்புறம் ஒன்று கூறும் கள்ளமான வார்த்தை.

10. கையைக் கையின் நெரிக்கும்; தன் காதலன்
வைகும் ஆல்இலை அன்ன வயிற்றினைப்
பெய்வளைத் தளிரால் பிசையும்; புகை
வெய்து உயிர்க்கும்; விழுங்கும்; புழுங்குமால். (1707)

Koviloor Digital Library

(காதலன்-புதல்வன்; உயிர்த்தல்-பெருமூச்சு விடுதல்)

கோசலை கீழே விழுந்தவள் மீண்டும் எழுந்து, தன் ஒரு கையை மற்றொரு கையால் நெரிப்பாள்; தனது அன்பிற்குரிய புதல்வன் கருப்பெற்றிருந்த ஆல்இலை போன்ற தன் வயிற்றினைத் தனது வளையல்கள் அணிந்த தளிர் போன்ற கைகளால் பிசைந்து கொள்வாள். புகைபோல வெப்பமானபெருமூச்சுவிடுவாள்; வறட்சியால் உமிழ்நீரைக் கூட்டி விழுங்குவாள்; மனம் வெந்து புழுங்குவாள்.

துன்பத்தில் கைகளை நெரித்துக் கொள்வது பெண்டிர் இயல்பு; வயிறு ஆலிலை போன்றிருத்தல் பெண்டிர்க்கு அழகு. தான் பெற்றெடுத்த காதல் புதல்வன் தன்னை விட்டுப் பிரிந்து விடுவானோ, என்ற பயம் வயிற்றைக் கலக்குவதால், ஆற்றாமையால் அவனை ஈன்றெடுத்த வயிற்றைப் பிசைவாள்; பெண்களின் துயரத் துடிப்பின் மெய்ப்பாடுகள் விரித்துக் கூறப்பட்டன.

11. ''நன்று மன்னன் கருணை!'' எனா நகும்;
நின்ற மைந்தனை நோக்கி, ''நெடுஞ் சுரத்து
என்று போவது?'' என எழும்; இன்னுயிர்
பொன்றும் போது உற்றது, உற்றது போலுமே. (1708)

(கருணை-அருள் / இரக்கம்; சுரம்-காடு / பலைவனம்; உற்றது-அடைந்தது)

கோசலை அங்கு நின்றிருந்த தன் மைந்தனைப் பார்த்து ''அரசரின் அருள் உள்ளம் நன்றாக இருக்கிறது'' என்று விரக்தியுடன் ஏளனமாய்ச் சிரித்துப் பின், ''நீண்ட பெரிய கானகத்துக்கு என்றைக்குச் செல்ல வேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தாள்; இனிமையான உயிர்போகும் போது என்னென்ன மரண வேதனைகள் நிகழுமோ அவையெல்லாவற்றையும் இப்பொழுது அடைந்தவள் போலக் காணப்பட்டாள்.

அவள் அவ்வாறு எழுந்ததற்குக் காரணம் தானும் அவன் உடன்போகும் எண்ணத்தாலாகும். அது பின் வரும் செய்யுளில் கூறப்படுகிறது.

12. ''அன்பு இழைத்த மனத்து அரசற்கு நீ
என் பிழைத்தனை?'' என்று நின்று ஏங்குமால்;
முன்பு இழைத்த வறுமையின் முற்றினோர்
பொன் பிழைக்கப் பொதிந்தனர் போலவே. (1709)

(இழைத்தல்-செய்தல் / பதித்தல்; பிழைத்தல்-நழுவி விழுதல் / தவறு செய்தல்; பொதித்தல்-பத்திரப் படுத்துதல்; முற்றினோர்-முதிர்ந்தவர்கள்)

''உன்பால் பேரன்பு கொண்டிருந்த மன்னனுக்கு நீ என்ன தவறிழைத்தாய்?'' என்று நின்று கொண்டு இரங்குவாள். யாரைப் போல் இரங்கினாள்? முன்பு செய்த தீவினைப் பயனால் இப்பொழுது

Koviloor Digital Library

வறுமையின் உச்சக் கட்டத்தில் இருப்பவர்களுக்கு, ஏதோ ஓர்முறையில் இப்பொழுது மிகுந்த செல்வம் கிடைக்கப் பெற்றதும் அதைப் பாதுகாக்கத் தெரியாமல் கவனக் குறைவால் கை நழுவிப் போகுமாறு இழந்து நின்ற வறுமையால் முதிர்ந்தவர்களைப் போல் இரங்கி நின்றாள்.

வாராது வந்த மாமணி இராமன். நீண்ட நெடுங்காலமாகப் பிள்ளைப்பேறு இன்றி இரங்கத்தக்க சூழலில் வாழ்ந்து வந்தவள் கோசலை. பின்னர் வேள்வியின் பயனால் இராமன் தோன்றினான். அவனை நன்கு பாதுகாத்து வைத்துக் கொள்ள அவளுக்குத் தெரியவில்லை. முற்பிறவியில் புண்ணியம் செய்யாமையால் இப்பிறவியில் வறுமை வருவதுண்டு. பொன் நன்கு பொதிந்துவைத்துப் பாதுகாக்கப் படவேண்டுவது ஒன்று. ''ஒருத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன் போல் பொதிந்து'' என்பது குறள் 155.

13. ''அறம் எனக்கு இலையோ?'' எனும்; ஆவி நைந்து
இற அடுத்தது என் தெய்வதங்காள்! எனும்;
பிற உரைப்பது என்? கன்று பிரிந்துழிக்
கறவை ஒப்பக் கரைந்து கலங்கினாள். (1710)

(தெய்வதம்-தெய்வம்; நைதல்-தேய்ந்து போதல்; கறவை-பசு; கறக்கப்படுவதால் கறவை என்பது பசுவிற்குக் காரணப் பெயர்; இற-அழிய)

''தெய்வங்களே! யான் செய்த நல்வினை எனக்குப் பயன் அளிப்பதில்லையோ?'' என்பாள்; ''என்னுடைய உயிர் தேய்ந்து அழியும்படி எனக்கு ஏன் துன்பம் வந்துள்ளது? என்பாள். வேறு எவற்றைக் கூறினாலும் பயன் தராது. மொத்தத்தில் தனது அன்பிற்குரிய கன்றினைப் பிரிந்த ஒரு பசு போல உருகிக் கலங்கினாள்.

ஒருவர் செய்யும் நல்வினைகளுக்கும் தீவினைகளுக்கும் இறைவன் எப்போதும் சான்றாக இருக்கிறான் என்பது நூற்கொள்கை. எனவே தான் நாம் அவ்வப்பயன்களை அனுபவிக்கும் போது தெய்வத்தை நினைவு கூர்கிறோம். இங்கு கைகேயி எப்போதும் தரும காரியங்களையே செய்து பழக்கப்பட்டவள். அவள் இப்போது தெய்வங்களை அழைத்துத் தான் செய்த நல்வினையின் பயன்கள் ஏன் தனக்குத் துணை நிற்கவில்லை என்று கேட்கிறாள். உலகத்து உயிர்களில் பசுவே தன் கன்றின்பால் அன்பு காட்டுதலில் தலையாயது. எனவே தான் கன்றினைப் பிரிந்த பசுவின் நிலையையே மகனைப் பிரிந்த பெற்றோர்களுக்கு உவமை கூறுவது வழக்கம். அந்நிலைக்கு அவ்வுவமை தவிர வேறு எதுவும் பொருந்தாது என்பதாம்.

14. இராமன் கோசலைக்கு ஆறுதல் கூறுதல்

இத்திறத்தின் இடர் உறுவாள் தனைக்
கைத்தலத்தின் எடுத்து, ''அருங் கற்பினோய்!

Koviloor Digital Library

பொய்த்திறத்தினன் ஆக்குதியோ? புகல்;
மெய்த்திறத்து நம்வேந்தனை நீ!'' என்றான். (1711)

(கைத்தலம்-கைகள்)

இவ்வாறு துன்பப்படும் கோசலையை இராமபிரான் தன் இருகைகளிலும் ஆதரவோடு எடுத்துத் தாங்கி, ''பெறற்கரிய கற்பினையுடைய அன்னையே! சத்தியசீலனானநமது மன்னனைவாய்மை தவறியவனாக ஆக்கி விடுவாயோ? சொல்லுவாயாக!'' என்றான்.

உயிரினும் சிறந்த அருமையுடையது கற்பு. எனவே அரும் கற்பினோய் என்றான். தன்னைக் கானகம் செல்லவிடாமல் தடுக்கும் முயற்சிகள், தன் தந்தையைப் பொய்யனாக்குவதே ஆகும் என்பது கருத்து. சொன்னதைச் சொன்னவாறே நிறைவேற்றுவது சத்தியம்-வாய்மை. ''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்பது குறள் 56.

15. பொற்பு உறுத்தன, மெய்ம்மை பொதிந்தன
சொல் பொறுத்தற்கு உரியன, சொல்லினான்;
கற்பு உறுத்திய கற்புடையாள் தனை
வற்புறுத்தி மனம் கொளத் தேற்றுவான். (1712)

(உறுத்திய-நிலை நிறுத்திக் காட்டிய; தேற்றுதல்-தெளிவித்தல்; பொற்பு-அழகு; உறுத்தன-மிகுந்தன; பொதிந்தன-நிறைந்தன; கொள-ஏற்குமாறு)

கற்பு என்ற அருங்குணத்திற்குச் சான்றாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்கும் கற்புடையவளான கோசலையை வற்புறுத்தி, அவள் மனம் ஏற்றுக்கொள்ளும் வண்ணம், இராமபிரான் அழகு மிக்கனவும், உண்மை நிறைந்தனவும், தாய்க்கு மகன் சொல்லுவதற்குத் தகுந்தனவும் ஆகிய சொற்களைச் சொன்னான்.

சொல்லிற்கு அழகாவது கேட்டற்கு இனிமையும், பொருளில் ஆழம் உடைமையும் ஆகும். ''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்'' என்பது குறள் 643. கற்பின் இலக்கணத்தை உலகத்தார் அறியும்படி இலக்கியமாக இருந்து உறுதிப்படுத்திய கற்பினை உடையவள் கோசலை என்பது சாலவும் பொருந்தும்.

16. ''சிறந்த தம்பி திருஉற, எந்தையை
மறந்தும் பொய்யிலன் ஆக்கி, வனத்திடை
உறைந்து தீரும் உறுதி பெற்றேன்; இதின்
பிறந்து யான் பெறும் பேறு என்பது யாவதோ?'' (1713)

(திரு-அரசச் செல்வம்; தீர்தல்-நீங்குதல்)

''நீ கூறியபடி என்னிலும் சிறந்த குணங்கள் கொண்ட என் தம்பி பரதன் அரசச் செல்வத்தை அடையவும், என் தந்தையைத் தவறிக்கூட

Koviloor Digital Library

சத்தியத்தினின்றும் வழுவாதவனாகவும் செய்வதற்கு, நான் கானகத்திடையே வாழ்ந்து, குறிப்பிட்ட காலம் முடிந்ததும் அதனை நீங்கி இங்கு வந்து சேர்வது என்பதில் உறுதியாய் இருக்கிறேன். நான் பிறந்ததன் பயன் இதைக் காட்டிலும் வேறு என்ன இருக்கிறது?''

தான் கானகம் செல்லாவிட்டால் தம்பி அரசச் செல்வத்தை அடைவதும், தந்தை பொய்யிலன் ஆதலும் நிகழாது. எனவே தான் வனம் புகுதல் என்ற உறுதியுடன் இருந்தான் இராமன். தம்பிக்கும் தந்தைக்கும் உதவி, தானும் தவம் செய்து உய்வதைக் காட்டிலும் வேறு என்ன பேறு அவனுக்குக் கிடைக்கும்? இதைவிடச் சிறந்த வேறு பாக்கியம் ஒன்றும் இல்லை என்பதாம். அவனுடைய திருஅவதாரத்தின் ரகசியமே இவன் வனம் புகுதலில் தான் இருக்கிறது. அதைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

17. ''விண்ணும், மண்ணும், இவ்வேலையும், மற்றும் வேறு
எண்ணும் பூதம்எலாம் அழிந்து ஏகினும்
அண்ணல் ஏவல் மறுக்க அடியனேற்கு
ஒண்ணுமோ? இதற்கு உள்அழியேல்!'' என்றான். (1714)

(வேலை-கடல் / நீர்; ஒண்ணுமோ-பொருந்துமோ / தகுமோ; உள்-மனம்; அழிதல்-வருந்துதல் / கலங்குதல்)

ஆகாயமும், பூமியும், இந்த நீரும் மற்றும் வேறாக எண்ணப்படுகின்ற தீ, காற்று ஆகிய ஐம்பெரும் பூதங்கள் எல்லாமும் அழிந்து போனாலும், பெருமைக்குரியவனான மன்னனின் கட்டளையை மறுத்துக்கூற எனக்குத் தகுமோ? தகாது. எனவே நான் கானகம் செல்வதைப் பற்றி நினைந்து நீ மனம் கலங்காதே'' என்றான்.

பூதம் எலாம் இறந்து ஏகுதல் என்பது, மண் நீரினும், நீர் நெருப்பினும், நெருப்புக் காற்றினும், காற்று ஆகாயத்தினும், ஆகாயம் மாயையிலும் ஒன்றில் ஒன்று ஒடுங்கிச் சூனியமாதல். அது பிரளய காலத்தில் நிகழ்வது. அத்தகைய நிலை வந்திடினும், மன்னன் கட்டளையாகிய காடு புகுவதை மறுக்க மாட்டேன் என்பதாம்.

18. கோசலை தானும் வனத்திற்கு வருவேன் எனல்

''ஆகின் ஐய! அரசன் தன் ஆணையால்
ஏகல் என்பது யானும் உரைக்கலேன்;
சாகலா உயிர் தாங்க வல்லேனையும்
போகின், நின்னொடும் கொண்டனை போகு'' என்றாள். (1715)

''மைந்தனே! எனவே அரசன் தன் ஆணைப்படி, நீ காட்டிற்குப் போகக் கூடாது என்று நானும் கூறவில்லை. அவன் சொற்படியே நீ கானகம் செல்; ஆனால் இவற்றை யெல்லாம் கேட்டும், கண்டும் இன்னும் போகாமல் இருக்கிறதே இந்த வன்மையான உயிர், இதைத் தாங்கும் ஆற்றல் எனக்கு

Koviloor Digital Library

இல்லை. எனவே நீ போகும் போது, உன்னோடு என்னையும் அழைத்துக் கொண்டு செல்லுவாயாக!'' என்றாள்.

சாகலா உயிர் என்பது வாழ் நாள் முடிந்தால் தான் உயிர் போகும் அன்றிப் போகாது என்பதாம். நீ காடு செல்வாய் என்ற உடனேயே என் உயிர் பிரிந்திருக்க வேண்டும். ஆயின் அது நடக்கவில்லை. என்னைப் பிரிந்து நீ சென்ற பின்னர், இவ்வுயிரைத் தாங்கிக் கொண்டு இருத்தல் என்னால் ஆகாதது என்பதாம். இவ்வாறு கோசலை கூறியதால், பரதன் நாடாளுவதையும், இராமன் காடேகுவதையும் கோசலை ஏற்றுக் கொண்டாள் என்பது தெளிவாகிறது. ''தந்தை ஆணையை மட்டும் மதிக்க வேண்டுமென்பதில்லை. தாயாகிய நான், உன்னை வனம் போக வேண்டாம் என்கிறேன். என் கட்டளையை மட்டும் நீ மீறி நடக்கலாமா?'' என்று கோசலை கூறுவதாக வான்மீகம் கூறுகிறது. ஆனால் கம்பன் மாறுபடுகிறான்.

19. இராமன் மறுமொழி [7 பாடல்கள்]

''என்னை நீங்கி, இடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத்தாது, உடன்
துன்னு கானம் தொடரத் துணிவதோ?
அன்னையே? அறம் பார்க்கிலையாம்'' என்றான். (1716)

(வைகும்-தங்கும் / மூழ்கும்; துன்னு-நெருங்கிய / அடர்ந்த; வற்புறுத்துதல்-தேற்றுதல்)

இராமபிரான் கோசலையை நோக்கி, ''அன்னையே! என்னை நீங்குவதனால் மன்னர் மன்னன் துன்பக் கடலில் மூழ்கிப் போவான்; அவனது துயரத்தைத் துடைக்காமல், என்னுடன் அடர்ந்த மரங்களுடைய கானகத்திற்கு வருவேன் என்று கூறலாமா? உன்னுடைய கடமையினை எண்ணிப் பார்க்கவில்லை போலும்!'' என்றான்.

கணவன் நோயில் நொந்து, சாவில் சாவதே கற்புடைய பெண்டிரின் கடமை-நற்பண்பு. ''மகனின் துன்பத்தை எண்ணிக் கவலை கொண்ட நீ, உன் கணவனது துன்பத்தை எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டாயே! இது தருமமா?'' என்று கேட்டான் என்பதாம்.

20. ''வரிவில் எம்பி இம்மண் அரசாய், அவற்கு
உரிமை மாநிலம் உற்றபின், கொற்றவன்
திருவின் நீங்கித் தவம் செய்யும் நாள், உடன்
அருமை நோன்புகள் ஆற்றுதியாம்'' அன்றே! (1717)

(வரி-கட்டமைந்த; திரு-அரசச் செல்வம்; நோன்பு-விரதம்)

''கட்டமைந்த வில்லை உடைய என் தம்பியாகிய பரதன், இவ்வுலகத்திற்கு அரசனாகி, அவனுக்கு இம்மாநிலம் உரிமையாகி நிலைபெற்ற பிறகு, மாமன்னன் தசரதன் இவ்வரசச் செல்வத்தைத் துறந்து,

Koviloor Digital Library

வனப்பிரஸ்தனாகிக் காட்டிற்குச் சென்று தவம் மேற்கொள்ள இருக்கிறான். அந்த நாட்களில், அவன் உடன் இருந்து, செய்தற்கரிய விரதங்களைச் செய்வது தான் உனது கடமையாகும்'' என்றான்.

மன்னனாகப் பரதன் மணி முடி சூடினாலும், மக்கள் அவனை மன்னனாக ஏற்றுக் கொண்டு அவன் வழிப்பட்டு நடக்கவும், அவன் அரசாட்சி நிலை பெறவும் நாட்கள் பலவாகும் எனவே ''அவற்கு உரிமை மாநிலம் உற்ற பின்'' என்றான். தவம் என்பது வனப்பிரஸ்த நிலையாம். இந்நிலையில் மனைவி பணி செய்யக் கணவன் தவம் செய்தல் மரபு.

21. ''சித்தம் நீ திகைக்கின்றது என்? தேவரும்
ஒத்த மாதவம் செய்து உயர்ந்தாரன்றோ?
எத்தனைக்கு உள ஆண்டுகள்? ஈண்டு அவை
பத்தும் நாலும் பகல் அலவோ?'' என்றான். (1718)

(பகல்-நாட்கள்)

''இந்திரன் முதலிய தேவர்களும் தாங்கள் செய்வதற்கேற்ற தவங்களைச் செய்து தானே இத்தகைய உயர்ந்த பெரிய பதவிகளில் இருக்கிறார்கள்? தவத்தால் உயர்வெய்துவது தெளிவு. அப்படி இருக்க நானும் தவம் இயற்றினால் தானே பெரும் பதவி பெற இயலும்? என்றாலும் நான் தவம் இயற்ற வேண்டிய ஆண்டுகள் எத்தனை? பதினான்கு தானே? அவையும் பதினான்கு நாட்களாக விரைவில் கழியுமன்றோ? இதற்காக நீ ஏன் மனம் நோகிறாய்?'' என்றான்.

தான் எவ்வளவு எடுத்துக் கூறியும் கோசலை மனம் தெளியாதவளாய் இருந்ததனால், இராமன் ''சித்தம் நீ திகைக்கின்றது ஏன்? என்றான். தேவர்களுக்கு ஒரு நாள் என்பது மானிடர்க்கு ஒரு ஆண்டு ஆகும் என்பது வழக்கு. அதன்படி பதினான்கு ஆண்டுகளைப் பதினான்கு நாட்களாகவே இராமன் கருதிக் கூறினான் என்பதாம். குறுகிய காலத்தில் பெரும் பயன் அடையப் போகும் என் நிலை கண்டு மகிழ்ச்சியுறாமல் ஏன் சிந்தை கலங்குகிறாய் என்று கேட்டான் என்பதாம்.

22. ''முன்னர்க் கோசிகன் என்னும் முனிவரன்
தன்னருள் தலை தாங்கிய விஞ்சையும்
பின்னர் எய்திய பேறும், பிழைத்தவோ?
இன்னம் நன்று; அவர்க்கு ஏயின செய்தலே'' (1719)

(கோசிகன்-விசுவாமித்திரன்; விஞ்சை-வித்தை; பிழைத்தல்-தவறுடையதாதல்; ஏயின-பொருந்திய; தாங்கிய-பெற்ற; நன்று-நன்மையே)

''முன்பு விசுவாமித்திரன் என்னும் முனிவனது கருணையினால் நாங்கள் கற்ற வித்தைகளும், பின்னர் அதன் பயனால் நாங்கள் பெற்ற பேறும் குற்ற

Koviloor Digital Library

முடையதாகுமோ? இன்னும் அவர் போன்ற முனிவர்களுக்கு அவர்கள் விரும்பிய செயல்களைச் செய்து வாழ்தல் நன்மையே பயக்கும்'' என்றான்.

தான் எய்திய பேறு என்பது தசரதன் விசுவாமித்திரனிடம் தன்னைக் கையடையாகக் கொடுத்த போது அவர் கற்பித்த வித்தைகள் பலை, அதிபலை என்னும் இருமந்திரங்களும், அத்திர சத்திரங்களும். அதன் பின்னர்அகத்திய முனிவனைக்கண்டு அவனால்ஆசிர்வாதம் பெறப்பட்டு, சிவபிரானின் வில், அம்புப் புட்டில், வாள், முப்புரம் எரித்த கணை ஆகியவற்றைப் பெற்றதும், சீதாதேவியைத் திருமணம் செய்து கொண்டதும். எனவே ''இருமுனிவர்கட்குப் பணி செய்தே பெறற்கரிய பேறு பெற்றேன் என்றால், இன்னும் கானகத்திலுள்ள முனிவர்கள் பலருக்கும் பதினான்கு ஆண்டுகள் தங்கியிருந்து அவர்களுக்குப் பொருந்திய பணியினைச்செய்தால் நான்பெறப் போகும்பேற்றுக்கும் ஒரு அளவு உண்டோ?'' என்று கேட்டு அவளைத் தேற்றினான் என்பதாம். இராமன் காட்டில் உறையும் முனிவர்களுக்குப் பணிசெய்வதையும், அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, அரக்கர்களை அழிப்பதையும், தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவன் என்பது பெறப்படும். முனிவர்களுக்குத் தொண்டு செய்து வனத்தில் வாழ்வதால் நன்மையே விளையும் என்று எடுத்துக் கூறிக் கோசலையைத் தேற்றினான் என்பதாம்.

23. ''மாதவர்க்கு வழிபாடு இழைத்து, அரும்
போதம் முற்றிப் பொருஅரு விஞ்சைகள்
ஏதம் அற்றன தாங்கி, இமையவர்
காதல்பெற்று, இந்நகர் வரக்காண்டியால்''. (1720)

(அரும்போதம்-மெய்ஞ்ஞானம் / பரமஞானம்; பொருஅரு-ஒப்பற்ற; காதல்-அன்பு; விஞ்சை-வித்தை / மந்திரம்; ஏதம்-குற்றம்)

''சிறந்த தவம் செய்த முனிவர்களுக்கு வழிபாடு செய்து, அவர்கள் அருளால் வீடுபேறடைதற்கு உரிய பரமஞானம் முற்றவும் பெற்று, ஒப்பில்லாதனவும், குற்றமற்றனவுமான மந்திரங்கள் பலவற்றையும் பெற்றுக் கொண்டு, தேவர்களின் பேரன்பினையும் பெற்று, மீண்டும் நான் பெரும் புகழுடன்இவ்வயோத்தி மாநகர்க்கு வரப்போவதை நீ காணத்தான் போகிறாய்! காண்பாயாக!'' என்றான்.

முனிவர்களுக்குத் தொண்டாற்றிப் பணிவிடை செய்வதால் மறுமைக்குரிய பரம ஞானம் கிட்டும் இம்மைக்குரிய ஒப்பற்ற மந்திரதந்திரங்கள் கைவரப் பெறும்: தேவர்களுக்கு நம்முன்னோர்கள் போல் உதவுவதனால் தேவர்களின் அன்பு கிடைக்கும்; இவையெல்லாம் பெறற்கரிய பேறுகள். இவற்றையெல்லாம் பெற்றுப் பெருமையுடன் நான் மீண்டும் அயோத்தி நகருக்கு வருவதைக் காண்பாயாக'' என்கிறான்.

24. ''மகர வேலை மண்தொட்ட, வண்டு ஆடுதார்ச்
சகரர், தாதை பணிதலை நின்று, தம்

Koviloor Digital Library

புகர்இல் யாக்கையின் இன்னுயிர் போக்கிய
நிகர்இல் மாப்புகழ் நின்றது அன்றோ?'' எனா. (1721)

(மகரம்-சுரா மீன்கள்; வேலை-கடல்; தொட்ட-தோண்டிய; ஆடுதல்-மொய்த்தல் / சுழல்தல்; புகல்இல்-குற்றமற்ற; யாக்கை-உடம்பு; நின்றது-நிலைபெற்றது) குளகப்பாடல்.

''சுறா மீன்களை உடைய கடலால் சூழப்பெற்ற இந்நிலத்தைத் தோண்டியதால் ஏற்பட்டது கடல். அதனைத் தோண்டியவர்கள் சகர புத்திரர்கள். அவர்கள் வண்டு சூழ்ந்து ரீங்காரமிடும் மாலையை அணிந்தவர்கள். அவர்கள் அறுபதினாயிரவரும் தங்கள் தந்தை இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு, தங்களது குற்றமற்ற உடம்பின் நின்று இனிய உயிரைப் போக்கிக் கொண்டார்கள். அதனால் ஒப்பற்ற சிறந்த புகழைப் பெற்றார்கள். அவர்களது பெயராலேயே கடலுக்கு இன்னும் சாகரம் என்ற பெயர் நிலைத்த நின்று அவர் புகழைப் பரப்புகிறது அல்லவா?'' என்றான் இராமன்.

தன்உயிரைக் கொடுத்தேனும் தந்தையின் வாய்மையினைக் காப்பாற்ற வேண்டும் என்பதைத் தன் தாய்க்கு எடுத்துச் சொல்லுவதற்காகத் தனது முன்னோர்களான சகரர்கள் எவ்வாறு தம் தந்தையின் ஏவலைத் தலைமேற்கொண்டு கபிலர் சாபத்தால் சாம்பாராகி மடிந்தார்கள் என்பதை எடுத்துக்காட்டாகக் காட்டுகிறான். சகரர் வரலாறு பால காண்டத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளதால் இங்கு விரிவாகப் பேசப் படவில்லை.

25. ''மான்மறிக்கரத்தான் மழு ஏந்துவான்
தான் மறுத்திலன் தாதைசொல்; தாயையே
ஊன் அறக் குறைத்தான்; உரவோன் அருள்
யான் மறுப்பது எண்ணுவதோ?'' என்றான். (1722)

(மறி-கன்று; மழு-கோடரி; ஊன்-உடம்பு; அற-அற்று ஒழியுமாறு; குறைத்தல்-வெட்டுதல்; உரவோன்-அறிவுமிக்கோன்; தாதை-தந்தை)

''மான்குட்டியைத் தன் இடக் கையில் ஏந்திய சிவபெருமானுடைய கோடாரியைத் தன் கையில் தாங்கிய பரசுராமன், தன் தந்தை ஜமதக்னியின் கட்டளையை மறுக்காமல், தாய் இரேணுகா தேவியின் உடம்பை இரு கூறாகத் துண்டித்தான். அவ்வாறு இருக்க அறிவுமிக்கவனான என் தந்தையின் நன்மை தரத்தக்க கட்டளையை மறுக்க வேண்டும் எனத் தாங்கள் நினைப்பது எவ்வாறு சரியாகும்?'' என்றான்.

மறி என்பது, ஆடு, குதிரை, மான் முதலியவற்றின் இளமைப் பெயர். பரசுராமன் வரலாறும் பாலகாண்டத்துள் மிகவிரிவாகப் பேசப்பட்டுள்ளது. பரசுராமனின் சகோதரர் நால்வர் ருமன்வரன், சுஷேணன், வசு, விசுவாசு என்பவராவர். இராணுகாதேவி கண்டு மயங்கிய கந்தவருவன் பெயர் சித்தரவதனன் என்பதாம். ''பரசுராமனுக்கு அவன் தந்தையிட்ட பணி அறத்தின்பால் அமையாதது என்றாலும் அவன் தலை

Koviloor Digital Library

மேற்கொண்டு அதை நிறைவேற்றினான். ஆனால் எனக்கு அறிவுமிக்க என் தந்தை இட்ட பணி அருளின்பால் அமைந்ததாகும். நலன்பல விளைப்பதாகும்'' என்று தன் கருத்தை நிலை நாட்டுகின்றான். தந்தையின் சொல்லால் பசுவை வதை செய்த கண்டு மகரிஷியின் வரலாறும் இவ்விடத்தில் முதல் நூலாகிய வான்மீகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

26. கோசலை எண்ணுதல்

இத்திறத்த எனைப் பலவாசகம்
உய்த்து உரைத்த மகன் உரை உட்கொளா
''எத்திறத்தும் இறக்கும் இந்நாடு'' எனா,
மெய்த்திறத்து விளங்குஇழை உன்னுவாள். (1723)

(எனை-எத்துணை; வாசகம்-வார்த்தைகள்; உய்த்து-ஆராய்ந்து; உட்கொளா-உட்கொண்டு / மனத்திற்கொண்டு; இறத்தல்-நீங்குதல் / கடத்தல்; மெய்த்திறம்-உண்மைத் தன்மை; இழை-அணிகலன்கள்; உன்னுதல்-கருதுதல்)

இவ்வாறு பலவகையான வார்த்தைகளை ஆராய்ந்து வற்புறுத்திச் சொல்லிக் கொண்டு இருந்த தன் மகன் இராமனின் வார்த்தைகளைத் தன் மனத்துள் கொண்டு, ''எவ்வகையினும் இவன் இந்நாட்டைவிட்டு நீங்கிக் கானகம் சென்று விடுவான்'', என்று எண்ணி, உண்மைத் தன்மையோடு விளங்கும் அணிகலன்களை அணிந்த கோசலை, இவனைத் தடுப்பதற்கு வேறு வழி என்ன என்று கருதுபவளானாள்.

அவனுடைய உறுதியை எண்ணி, வேறு உபாயங்களைச் சிந்திக்கலானாள் என்பது கருத்து. என்ன உபாயம் என்பது அடுத்த பாடலில் கூறப்படுகிறது. கோசலையும் மெய்திறம்பாத தன்மையுடையவள் என்பதனால் மெய்த்திறத்து விளங்கு இழை எனப்பட்டாள்.

27. கோசலை தசரதனிடம் செல்லுதல்

''அவனி காவல் பரதனது ஆகுக;
இவன் இஞ்ஞாலம் இறந்து இருங்கானிடைத்
தவன் நிலாவகை காப்பென், தகைவு இலாப்
புவனி நாதன் தொழுது'' என்று போயினாள். (1724)

(அவனி-உலகம்; ஞாலம்-நாடு; இறந்து-கடந்து சென்று; நிலாவகை-நில்லாதபடி; தகைவுஇலா-தடுக்க இயலாத; புவனி நாதன்-புவனம் காப்போன் / சக்கரவர்த்தி)

''இவ்வுலகத்தை அரசாட்சி செய்து காக்கும் பணி பரதனது ஆகட்டும்; ஆனால், இவ்விராமன் இவ்வயோத்தியை விட்டு நீங்கிப்பெரிய கானகத்திடையே சென்று தவம் மேற்கொண்டு நிற்காதபடி, அவனைத்தடுக்க இயலாது செயலற்றவனாய் இருக்கும், இப்பூமிக்குத்

Koviloor Digital Library

தலைவனாகிய தசரதச்சக்கரவர்த்தியிடம் சென்று தொழுது வேண்டிக் கேட்டு, இவனைக் காப்பாற்றுவேன்'' என்று கருதி கைகேயியின் அரண்மனைக்குச் சென்றாள்.

இராமன் தந்தை பணி மறாதவன். எனவே தந்தையைக் கொண்டே இவனைக் காடு புகாதபடி செய்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு சென்றாள் என்பதாம்.

28. இராமன் சுமித்திரையின் அரண்மனைக்குச் செல்லுதல்

போகின்றாளைத் தொழுது புரவலன்
''ஆக'' மற்று இவள் தன்னையும் ஆற்றி, இச்
சோகம் தீர்ப்பவள் என்று சுமித்திரை
மேகம் தோய் தனிக் கோயிலை மேயினான். (1725)

(புரவலன்-அரசன் / இராமன்; தனி-ஒப்பற்ற; புரத்தல்-காத்தல்-காக்கும் தன்மை உடையவர் அரசர் ஆதலின் அரசர்க்குப் புரவலர் காரணப் பெயர். சோகம்-பிரிவு வருத்தம்; மேயினான்-அடைந்தான்; தோய்தல்-தங்குதல் / தவழுதல்)

அவ்வாறு எண்ணிக்கொண்டு செல்லுகின்ற கோசலையை, இராமன் தொழுது வணங்கி, ''அவள் அவ்வாறே செய்யட்டும்; இவளுடைய வருத்தத்தையும், தானே கொள்ளப் போகின்ற பிரிவுத் துயரையும் ஆற்றித் தேற்றும் வல்லமை பெற்றவள் சுமித்திரையே'' என்று எண்ணி சுமித்திரை வாழுகின்ற, மேகங்கள் தவழுகின்ற ஒப்பற்ற அரண்மனையை அடைந்தான்.

சுமித்திரையிடம் தான் கூறப்போகும் செய்தியைத் , தானும் தாங்கிக் கொண்டு, தாங்க முடியாது அழுது அரற்றும் தன் தாய் கோசலையின் துயரத்தையும் போக்கும் வல்லமை பெற்றவள் சுமித்திரைதான் என்று கருதிச் சுமித்திரையின் மாளிகையை அடைந்தான் என்பதாம்.

29. தசரதனைக் கண்ட கோசலையின் நிலை

நடந்த கோசலை, கேகய நாட்டு இறை
மடந்தை கோயிலை எய்தினள்; மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள்; கெட்டுஉயிர்
உடைந்த போழ்தின் உடல் விழுந்து என்னவே. (1726)

(பார்-தரை; உடைந்த-பிரிந்த / நீங்கிய; இறை-அரசன்; மடந்தை- மகள்; கெட்டு-நிலைதடுமாறி)

தசரதனைக் காண நடந்தே சென்ற கோசலை, கேகய நாட்டு மன்னனான அசுவதியின் புதல்வியாகிய கைகேயியின் அரண்மனையை அடைந்தாள். அங்கே தசரதன் மூர்ச்சையுற்று விழுந்து கிடந்த தரையின் மீது துயரம்

Koviloor Digital Library

தாங்காது தானும் உயிரை விட்டு நீங்கிய உடல் நிலைகெட்டு வீழ்ந்ததைப் போலச் சாய்ந்தாள்.

தசரதனும் கோசலையும் உயிரும் உடலும் போன்று இணைபிரியாது வாழ்ந்தவர் என்பது பெறப்படும்.

30. கோசலை அழுது புலம்பி அரற்றுதல்

''பிறியார் பிரிவு ஏது?'' என்னும்; ''பெரியோய்! தகவோ?'' என்னும்;
''நெறியோ? அடியேம் நிலை நீ நினையா நினைவு ஏது?'' என்னும்;
''வறியோர் தனமே?'' என்னும்; ''தமியேன் வலியே'' என்னும்;
''அறிவோ?வினையோ?''என்னும்; ''அரசே! அரசே!''என்னும். (1727)

(பிறியார்-பிரியாதவர்கள்; வறியோர்-செல்வமற்ற ஏழைகள்; தமியேன்-தனியேன்; நினைவு-மனம்; வினை-சூழ்வினை; நெறி-நீதி)

''இதுவரையிலும் பிரியாதிருந்த நீங்கள் இருவரும் பிரிவதற்கான காரணம் என்ன?'' என்பாள்; ''பெருமையுடையவனே! இவ்வாறு பிரியச் செய்வது உன் தகுதிக்குத் தக்கது தானா?'' என்பாள். இது நீதியாகுமோ? இவனைப் பிரிந்த பின்னர் எங்கள் நிலை என்ன ஆகும் என்று நீ நினைத்துப் பாராத வன்னெஞ்சம் எப்படி வந்தது?'' என்பாள்; ''செல்வமற்ற ஏழைகளுக்குச் செல்வம் போன்றவனே!'' என்பாள். இவனைப் பிரிந்தால் தனிமையாக நிற்கப்போகும் எனக்கு வலிமை தரும் ஆற்றல் சான்றவனே'' என்பாள். ''இவ்வாறு நீ செய்தது நீ உன்னை அறிந்தே செய்ததுவா? அல்லது வேறு ஏதேனும் சூழ்ச்சி உள்ளதா? அல்லது ஊழ்வினைப் பயனா?'' என்பாள். ''மன்னா! மன்னா!'' என்று மீண்டும் மீண்டும் கதறி அரற்றலானாள்.

இராமன் தசரதனுக்கு உயிர் போன்றவன்; கண்போன்றவன்; அவனை இதுவரை தசரதன் பிரிந்ததே இல்லை; அவ்வாறு இருக்க இப்பொழுது இராமன் தசரதனையும் தன்னையும் விட்டுப் பிரிந்து போவதற்கான காரணம் என்னவென்று கோசலைக்குத் தெரியவில்லை. அதனால் தசரதனிடம் என்ன காரணம் என்று வற்புறுத்திக் கேட்கிறாள். இவ்வளவு பெரிய சக்கரவர்த்தி செய்யக் கூடிய செயலா இது என்று இடித்துக் கூறுகிறாள்; நடுவு நிலைமையினின்றும் வழுவாது அரசியல் ஆற்றும் மன்னர் மன்னன் செய்கின்ற முறையா இது என்று கண்டிக்கிறாள். இவனைப் பிரிந்தால் எங்கள் நிலை என்ன ஆகும் என்பதை எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டாயே என்று தன் சக்களத்தியரையும் உடன்படுத்தி வாதாடுகின்றாள்; செல்வமற்ற ஏழையர்க் கெல்லாம் செல்வம் போன்றவனே! உன் செல்வத்தைப் பிரிந்து வறியவனாக நிற்கிறாயே என இரங்கிக் கூறுவாள்; இதுகாறும் எனக்குப் பக்கபலமாக இருந்தவனே? இப்பொழுது நீயே பலமிழந்து தவிக்கிறாயே? எனக்கு எவ்வாறு வலிமை தருவாய்? என ஐயுற்றுக் கேட்கிறாள்; இது நீயாக ஆராய்ந்து செய்த செயலாக எனக்குத் தெரியவில்லை; ஏதோ ஒரு

Koviloor Digital Library

சூழ்ச்சியால் நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லது உன் ஊழ்வினைப் பயனாய் இருக்க வேண்டும் என்று தீர்மானமாக முடிவு செய்கிறாள்.

31. "இருள் அற்றிட, உற்றுஒளிரும் இரவிக்கு எதிரும் திகிரி
உருளத் தனிஉய்த்து, ஒரு கோல் நடவிக் கடைகாண் உலகம்
பொருள் அற்றிட முற்றுறும் அப்பகலில் புகுதற்கு என்றோ?
அருளக் கருதிற்று இதுவோ? அரசர்க்கு அரசே!" என்னும். (1728)

(அற்றிட-அழியும்படி; இரவி-சூரியன்; திகிரி-ஆணைச் சக்கரம்; உருள-சுழலுமாறு; உய்த்து-செலுத்தி; நடவி-நடத்தி வந்து; பகல்-காலம்; எதிரும்-நிகராகும்; கடை-பிரளய காலம்; காண்டல்-அனுபவித்தல்)

"அரசர்க்கரசனே! உலகத்து இருளையெல்லாம் விரட்டி, ஒளிவீசும் சூரியனுக்கு நிகரான ஆணைச் சக்கரத்தைத் தனி ஒருவனாகவே செலுத்தி, ஒப்பற்ற செங்கோலாட்சியை நடத்திக் கொண்டிருந்த நீ, இப்பொழுது இராமனுக்கு இந்நாட்டின் அரசுரிமை வழங்க அருள் கூர்ந்து எண்ணியது, இவன் பிரிவால் எல்லாப் பொருள்களும் உயிர்களும் முற்றும் அழியப் போகும் அந்தக் கடை ஊழிக் காலத்தைக் கருத்திற் கொண்டு தானோ?" என்றாள்.

சூரியன் இருளை அகற்றி ஒளியை உலகம் முழுவதும் பரப்புவது போலத் தசரதனும் தனது ஆணைச் சக்கரத்தாலும், செங்கோலாட்சியினாலும் மக்களின் வறுமை, அறியாமை, பகை ஆகிய துன்ப இருளை விரட்டினான் என்பதால் தசரதனின் ஆணைச் சக்கரம் சூரியனுக்கு உவமை. இராமனுக்கு அரசளிக்க ஏற்பாடு செய்ததனால் தான் அவன் காடேக நேர்ந்தது. அதனால் தான் நாடு ஊழிக்கால இறுதியெய்துவது போன்ற பெரும்துயர் உற்றது. எனவே அவனுக்கு அரசுரிமை அளித்தது இவ்வுலகம் துன்பத்தில் சூழத்தானோ? என்று வினவுகிறாள்; திகிரி உருளத் தனி உய்த்தலும், ஒரு கோல் நடவி என்பதும் தசரதனின் ஒப்பற்ற அரசியல் சிறப்பை வெளிப்படுத்துவதாகும். உன் அரசாட்சியில் நலம் பெற்ற உலகம் பிரய காலத்து அழிவை அடையக் கருதியோ இத்தகைய செயலைச் செய்யக் கருதியது என்று கோசலை புலம்பினாள் என்க.

32. "திரை ஆர்கடல் சூழ் உலகின்தவமே! திருவின் திருவே!
நிரைஆர் கலையின் கடலே! நெறிஆர் மறையின் நிலையே!
கரையா அயர்வேன் எனை, நீ கருணாலயனே! என்? என்று
உரையா இதுதான் அழகோ? உலகு ஏழ்உடையாய்!" என்னும். (1729)

(ஆர்-நிறைந்த; நிரை-வரிசை; மறை-வேதங்கள்; நிலை-நிலையம் / தங்குமிடம்; அயர்தல்-சோர்தல்; கரைதல்-மனம் உருகுதல்; ஆலயம்-இருப்பிடம்; கருணாலயன்-கருணைக்கு இருப்பிடமானவன்)

Koviloor Digital Library

''அலைகள் நிறைந்த கடல்களால் சூழப்பெற்ற இவ்வுலகம் பெற்றெடுத்த தவப்புதல்வனே! செல்வங்களுக்கெல்லாம் செல்வமாக விளங்கும் திருமகனே! வரிசையாகப் பொருந்திய எல்லாக் கலைகளுக்கும் கடல் போன்றவனே! நீதி மொழிகள் நிறைந்த வேதங்களுக்கெல்லாம் நிலைக்களன் போன்றவனே! கருணைக்கு இருப்பிடமானவனே! இவ்வேழு உலகங்களுக்கும் உரிமை உடையவனே! உன் முன்னால் மனம் உருகிச் சோர்ந்து விழும் என்னைப் பார்த்து ஏன், என்று ஒருவார்த்தை கூடப் பேசாது இருக்கின்றாயே! இது உனக்கு அழகாகுமா?'' என்று புலம்புகின்றாள் கோசலை.

தசரதன் ஏற்கனவே மூர்ச்சையுற்று, நினைவிழந்த நிலையில் தரையில் விழுந்து கிடக்கிறான். எனவே அவனால் ஏதொன்றும் பேச இயலாது என்று கோசலைக்குத் தெரியும். எனினும் கணவனாகிய அவன் மனைவி துயருறும் போது தேற்றமுடியாது இருக்கிறானே என்று கழிவிரக்கம் கொள்கிறாள். முன்னர் ''தவம் ஒக்கும் நலம்பயப்பில்'' என்றதும், ''எண்ணில் நன்னூல் ஆய்ந்தே கடந்தான் அறிவு என்னும் அளக்கர்'' என்றதும், ''வேதத்துறை வேந்தர்க்கு ஏய்ந்த யாரும் செய்யாத யாகம் இவன் செய்து முடித்த'' என்றதும் ''செம்மாண்தனிக்கோல் உலகு ஏழினும் செல்ல நின்றான்'' என்றதும் இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

33. ''மின்நின்று அனைய மேனி வெறிதாய் விட நின்றது போல்
உன்னும் தகைமைக்கு அடையா உறுநோய் உறுகின்று உணரான்;
''என்'' என்று உரையான்; என்னே! இதுதான் யாது? என்று அறியேன்;
மன்னன் தகைமை காண வாராய் மகனே!'' என்னும். (1730)

(உன்னுதல்-நினைத்தல்; தகைமை-தன்மை / நிலை; வெறிதாய்-ஒளியற்றதாகி)

மின்னல் நிலைத்து நிற்கும் தன்மையற்றது. அவ்வாறு நிலைத்து நின்றால் எத்தகைய ஒளி வீசுமோ, அது போன்ற ஒளி வீசும் தசரதனது மேனி, இப்பொழுது ஒளியற்றதாகி விட்டது. எண்ணுதற்கும் அரிதான வருத்தம் தன்னை வந்து அடைந்தும் அதனை உணராதவனாக இருக்கிறான். தன் நிலைமை பற்றி என்ன என்று கூறாதவனாகவும், என் நிலைமை பற்றி என்ன என்று கேட்காதவனாகவும் பேச்சற்றுக் கிடக்கிறான். என்ன விந்தை இது? இதற்குக் காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. மகனே! இராமா! மன்னனின் நிலைமையைக் காண்பதற்கு விரைந்து வருவாயாக! என்று கூக்குரலிட்டு அழுது புலம்புகிறாள் கோசலை.

உயிர் நீங்கிய உடல் உணர்ச்சியற்றுக் கிடப்பது போல் பேச்சு மூச்சற்றுக் கிடப்பதனால் தசரதன் ஒரு வேளை இறந்து போயிருப்பானோ என்று ஐயுற்று மகனை அரற்றி அழைக்கிறாள் கோசலை.

Koviloor Digital Library

34. வசிட்டன் வருதல்

இவ்வாறு அழுவாள் இரியல்குரல் சென்று இசையா முன்னம்
''ஒவ்வாது! ஒவ்வாது! என்னா, ஒளிவாள் நிருபர்'', ''முனிவ!
அவ்வாறு அறிவாய்!'' என்ன, வந்தான் முனிவன்; அவனும்
வெவ்வாள் அரசன் நிலைகண்டு, ''என்னாம் விளைவு?'' என்று உன்னா;(1731)

(இரியல்குரல்-அழுது அரற்றும் குரல் / விரைந்து பரவும் உரத்த குரல்; இசைத்தல்-ஒலித்தல்; நிருபர்-அரசர்கள்; ஒவ்வாது-இசைவானதல்ல; ஆறு-வழி / காரணம்; வெவ்வாள்-கொடியவாள்; உன்னா-உன்னி / நினைத்து / யோசித்து) குளகப்பாடல்

இவ்வாறு கூக்குரலிட்டு அழுகின்ற கோசலையின் அழுகுரல் முடிசூட்டு மண்டபத்தில் சென்று ஒலிக்கும் முன்னரே, அங்கிருந்த அரசர்கள், இம்மங்கலமான நிகழ்ச்சி நடைபெறும் வேளையில் அமங்கலமான அழுகைச்சத்தம் பொருந்தாது பொருந்தாது என்று தம்முள் கூறிக்கொண்டு, பதற்றம் அடைந்து, முனிவனான வசிட்டனை அணுகி, ''முனிவரே! இவ்வழுகைக் குரல் வருவதற்குரிய காரணத்தைக் கண்டு வருவீராக!'' என்று வேண்டிக் கொள்ள, அரண்மனையில் எங்கும் தடையின்றிச் செல்லத் தகுதி வாய்ந்தவனான முனிவனும் தசரதன் இருக்குமிடத்தை அடைந்து, கொடிய வாளேந்திய தசரதனது மூர்ச்சையுற்ற நிலையைக் கண்டு, ''இது எப்படி முடியும்?'' என்று யோசிக்கலானான்.

முடிசூட்டு விழாவிற்கு வந்த அரசர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்க, அப்பொழுது அரண்மனைக்குள்ளிருந்து வந்த அழுகைக் குரல் இந்நிகழ்ச்சிக்குப் பொருந்தாதாக இருக்கவே அவர்கள் பொருந்தாது பொருந்தாது என்று விரைவாகக் கூறினர் என்க. கைகேயி வரம்பெற்றதையும் அதற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் அறியாதவன் வசிட்டன். எனவே இதன் விளைவு என்னாகும் என்பதைப் பற்றி யோசிக்கலானான்.

35. வசிட்டன் தன் மனத்திற்குள் எண்ணுதல்

''இறந்தான் அல்லன் அரசன்; இறவாது ஒழிவான் அல்லன்;
மறந்தான் உணர்வு'' என்று உன்னா, வன்கேகயர் கோன்மங்கை,
துறந்தாள் துயரம் தன்னை; துறவாது ஒழிவாள் இவளே!
பிறந்தார் பெயரும் தன்மை பிறரால் அறிதற்கு எளிதோ?'' (1732)

(பெயர்தல்-மாறுதல் / நிலைவேறுபடுதல்) குளகப்பாடல்.

அந்நிலையைக் கண்ட வசிட்டன், மன்னவன் இன்னும் இறக்க வில்லை; உயிர் இருக்கிறது. ஆனால் இறவாமல் இருக்க மாட்டான். விரைவில் இறந்துவிடுவான்; உணர்ச்சிகள் மறைந்து விட்டன. என்று

Koviloor Digital Library

தன்னுள் நினைத்தான். அருகே நின்றிருந்த வலிமை வாய்ந்த கேகய மன்னனது மகளாகிய கைகேயி துயரத்தைத் துறந்து சாதாரணமாக நிற்கின்றாள்; ஆனால் கோசலை துயரத்தை விடாது தானே அழிந்து போகப்போவது போல அரற்றிக் கொண்டிருக்கின்றாள். இவ்விருவர் மனநிலையையும் உற்று நோக்கிய முனிவன், இவ்வுலகில் நற்குடியில் பிறந்தவர்கள் தத்தம் நிலையிலிருந்து மாறுபடுதலைப் பிறர் அறிந்து கொள்வது என்பது எளிதான செயலல்ல என்று நினைத்துக் கொண்டான்.

தசரதன் மூர்ச்சையுற்று இறக்கும் தருவாயில் இருப்பது ஒரே நிலை. இதைக் கண்ணுறுபவர்கள் இருவர்-இருவரும் பெண்கள்; இருவரும் மனைவியர்; இருவரும் நற்குடியில் பிறந்தவர்கள் என்றாலும் ஒருத்தி துயர் துறந்து நிற்கிறாள்; ஒருத்தி துயர் விடாது அரற்றிக் கொண்டிருக்கிறாள். இந்த வேறுபாட்டிற்கு உரிய காரணத்தை முனிவனால் உய்த்துணர முடியவில்லை. உலகத்தில் ஒருவரின் மனவேறுபாட்டைப் பிறர் அறிவது என்பது அவ்வளவு எளிதல்ல போலும் என்று மாமுனிவனே எண்ணிக் கொள்கிறான். பெண்களின் மனம் கடல்போல் ஆழ்ந்தது. அதை அறிய இயலாது என்பது உட்கருத்து.

36. முனிவன் வினவக் கைகேயி கூறுதல்

என்னா உன்னா முனிவன், இடரால் அழுவாள் துயரம்
சொன்னாள் ஆகாள் என, முன் தொழு கேகயர் கோன்மகளை,
''அன்னாய்! உரையாய்! அரசன் அயர்வான் நிலை என்?'' என்னத்
தன்னால் நிகழ்ந்த தன்மை, தானே தெரியச் சொன்னாள். (1733)

(என்னா-என்று; உன்னா-உன்னி / நினைந்து; அயர்வான்-மூர்ச்சையுற்றுக் கிடப்பதற்கு; தெரிய-விளக்கி)

என்று நினைத்து, முனிவன், துன்பத்தால் வருந்தி அழுகின்ற கோசலை அத்துயரத்தின் காரணத்தைச் சொல்ல இயலாதவளாய் இருக்கிறாளே என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதே, அவன் முன் வந்து கேகய மன்னனின் மகளாகிய கைகேயி வணங்கி நின்றாள்; அவளைப் பார்த்து முனிவன், ''தாயே! அரசன் இவ்வாறு மூர்ச்சையுற்றுத் தரையில் கிடப்பதற்கான காரணம் என்ன? சொல்வாயாக!'' என்று கேட்கக் கைகேயியும், தன்னால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும், முனிவன் தெரிந்து கொள்ளுமாறு தானே விளக்கமாகத் தெரிவித்தாள்.

37. வசிட்டன் மன்னனைத் தேற்றுதல்

சொற்றாள் சொல்லா முன்னம், சுடர்வாள் அரசர்க்கு அரசைப்
பொற்றாமரை போல் கையால் பொடிசூழ் படிநின்று எழுவிக்
''கற்றாய்! அயரேல்; அவளே தரும் நின்காதற்கு அரசை;
எற்றேசெயல்? இன்று ஒழி நீ!'' என்று என்று, இரவா நின்றான். (1734)

Koviloor Digital Library

(சொற்றாள்-சொல்லியவள்; பொடி-புழுதி; படி-தரை / பூமி; எழுவி-எழுப்பி / தழுவி எடுத்து; அயர்தல்-வருந்துதல்; எற்றே-எத்தன்மையது; இரவா-இரந்து / வேண்டிக்கொண்டு; என்று என்று-பலமுறை)

கைகேயி அவ்வாறு சொல்லி முடிப்பதற்கு முன்பே, ஒளி பொருந்திய வாட்படையை உடைய மன்னர்மன்னனான தசரதச்சக்கரவர்த்தியைத் தன் பொன் போன்ற பொலிவு மிக்க தாமரை போன்ற இருகைகளாலும் புழுதி படிந்த தரையினின்றும் தழுவி எடுத்து, ''எல்லாக் கலைகளையும் கற்றவனே? இவ்வாறு வருந்தற்க! கைகேயியே உன் அன்பிற்குரிய புதல்வன் இராமனுக்கு அரசாட்சியைத் தந்து விடுவாள். நீ செய்கின்ற செயல் எத்தன்மைத்து? வருத்தத்தை இப்பொழுதே நீக்குவாயாக!'' என்று பலமுறை வேண்டிக் கேட்டுக் கொண்டான் வசிட்ட முனிவன்.

இரவு முழுவதும் மன்னன் புரண்டு வருந்திய இடமாதலாலும், பணியாளர் தூய்மை செய்ய இயலாமையாலும் புழுதிபடிந்த தரை எனப்பட்டது. துன்பம் வந்த போது வருந்திக் கொண்டிருப்பது கற்றோர்க்கு அழகன்று என்பதாம்.

38. தசரதன் தன் உணர்வு பெறுதல்

சீதப் பனிநீர் அளவித் திண்கால் உக்கம் மென்கால்
போதத்து அளவே தவழ்வித்து, இன்சொல் புகலா நின்றான்;
ஓதக்கடல் நஞ்சனையாள், உரை நஞ்சு ஒருவாறு அவியக்
காதல் புதல்வன்பெயரே புகல்வான் உயிரும் கண்டான். (1735)

(சீதம்-குளிர்ச்சி; கால்-கைப்பிடி / காம்பு; உக்கம்-விசிறி / ஆலவட்டம்; கால்-காற்று; ஓதம்-அலைகள்; உரை-சொல்; அவிய-தணிய; தவழ்வித்து-வீசச்செய்து; புகலா-புகன்று / சொல்லிக்கொண்டு; அளவி-தெளித்து)

குளிர்ச்சி பொருந்திய பனி நீரைத் தெளித்துத் தெளித்துத் திண்ணிய கைப்பிடியை உடைய விசிறியினால் மெல்லிய காற்றினை, அவன் உணர்வுபெற்று எழும்வரை அளவாக வீசச் செய்து, பல இனிய சொற்களைச் சொல்லிக் கொண்டு நின்றான் வசிட்ட மாமுனிவன்; அலைகளையுடைய குளிர்ந்த திருப்பாற் கடலில் தோன்றிய விடம் போன்ற மனத்தையுடைய கைகேயி கூறிய சொற்களாகிய நஞ்சு, ஓரளவிற்குத் தணிந்து போகத் தன் அன்பிற்குரிய மைந்தன் இராமன் பெயரையே உச்சரித்துக் கொண்டிருந்ததால் தசரதனிடம் உயிர்ப்பு நிலை இருக்கிறது என்பதை முனிவன் கண்டு கொண்டான்.

பனி நீர் தெளித்து, விசிறியால் வீசி, இன்சொற்பேசி, சைத்தியோப சாரங்கள் செய்தமையால் தசரதன் ஒருவாறு உயிர்நிலை பெற்றான். முழுவதும் உயிர் பெற்றுவிட வில்லை என்பதைக் குறிக்க ஒருவாறு அவிய என்றான். அறிவு மயக்கம் நீங்கித் தன்னுணர்வு பெறும் வரை அளவாக வீசச் செய்தான் என்பதை போதத்து அளவே தவழ்வித்து என்றான். பொதுவாக

Koviloor Digital Library

நஞ்சு மந்திரம் கலந்த புனலால் தணிவிக்கப்படும். அது போல முனிவன் கூறிய சொற்கள் மந்திரம் போன்றதாக கைகேயி கூறிய சொற்களான நஞ்சு தணிந்தது என்ற உட்கருத்துக் கொண்ட சொற்றொடர் பெய்திருப்பது கம்பனின் கவிநயம். இராமனைப் பிரிய நேருமே என்ற வருத்தம் மிகுதியினால் தானே சோர்வுற்றுத் தளர்ந்து மூர்ச்சையானான் தசரதன், எனவே இப்பொழுது மூர்ச்சை தெளிந்து எழும் போதும் இராமன் பெயரையே உச்சரித்துக் கொண்டு கண் மலர்ந்தான் என்பதாம்.

39. முனிவனின் ஆறுதல் மொழி

காணா, "ஐயா! இனி நீ ஒழிவாய் கழிபேர் அவலம்;
ஆண் நாயகனே இனி நாடாள்வான்; இடையூறு உளதோ?
மாணா உரையாள் தானேதரும்; மாமழையே அனையான்
பூணாது ஒழிவான் எனில், யாம் உளமோ? பொன்றேல்!" என்றான். (1736)

(காணா-கண்டு; கழி-மிக்க; அவலம்-துன்பம்; மாணா- மாட்சிமையில்லாத; மழை-மேகம்; பொன்றுதல்-மனம் வருந்துதல்; ஆண் நாயகன்-புருஷோத்தமன்; பூணாது-முடிசூட்டிக் கொள்ளாது)

மன்னன் உயிர்ப்புற்றதைக் கண்டு முனிவன், "ஐயனே! இனிமேல் தாங்கள் மிக்க பெருந்துன்பத்தை விட்டொழியுங்கள்; ஆண்களில் நல்லவனாகிய இராமனே இனி இந்நாட்டை ஆள்வான்; அதற்கு எந்த இடையூறும் இருக்கப்போவதில்லை; மாட்சிமையற்ற சொற்களைச் சொன்ன கைகேயி தானே முன்வந்து இந்நாட்டை ஆளும் உரிமையை இராமனுக்குத் தருவாள். கார்மேகம் போன்ற இராமன் முடிசூட்டிக் கொள்ளாமல் கானகம் நீங்குவான் என்றால் அதைப் பார்த்துக் கொண்டு நாங்கள் வறிதே இருப்போமோ? எனவே வருந்தாதீர்கள்" என்றான்.

கைகேயி இராமனுக்கு அரசுரிமையைத் தந்துவிடுவாள் என்று உறுதியாக நம்பினான் முனிவன். ஆனால் இராமன் அதை ஏற்றுக் கொள்ளுவானா என்ற ஐயம் வந்து விட்டது. எனவே அதற்கும் ஒரு சமாதானம் சொல்லிக் கொள்ளுகிறான். அவளைப் புகழ்ந்து பேச வேண்டும் என்ற முறையால் மாட்சிமையற்ற சொற்களைச் சொன்னாலும் அவள் பெருமை பெற்ற மனமுடையவள் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான். தீயவழியில் செல்பவர்களை நல்வழிப் படுத்தக் கையாளப்படும் முறைகளில் இதுவும் ஒன்று. பொன்றுதல் என்ற சொல்லுக்கு இறத்தல் என்ற பொருள் பொருந்தாது ஆதலால் வருத்த மடைதல் என்ற பொருள் கொள்ளப்பட்டது. அவனை வற்புறுத்தி ஏற்கச் செய்வோம் அல்லது நாமும் அவன் உடன் செல்வோம் என்பது தான் முனிவனின் கருத்து.

Koviloor Digital Library

40. தசரதன் முனிவனை வேண்டுதல்

என்ற அம்முனிவன் தன்னை, "நினையா வினையேன் இனியான்
பொன்றும் அளவில், அவனைப் புனைமாமகுடம் புனைவித்து
ஒன்றும் வனம் என்று உன்னா வண்ணம் செய்து, என் உரையும்
குன்றும்பழி பூணாமல் காவாய், கோவே!" என்றான். (1737)

(கோ-தலைவன்; பொன்றும்-இறக்கும்; ஒன்றும்-அடையும் / நண்ணும்; உன்னுதல்-நினைத்தல்; குன்றும்-இழிந்த)

இவ்வாறு கூறிய முனிவனை நோக்கித் தசரதன்; "ஐயா! நான் எனக்கு வரப்போகும் நினைத்தற்கு அரிய தீவினையினை எண்ணாமல் வாக்குக் கொடுத்து விட்டேன். இப்பொழுது நான் இறப்பதற்கு முன்னராவது, அந்த இராமபிரானுக்கு அலங்கரிக்கப்பட்ட மணி மகுடம் சூட்டுவித்து, அவன் மனத்தில் காட்டிற்குச் செல்லப் போகிறோம் என்ற நினைவே வராத வண்ணம் செய்து, நான் கூறிய வார்த்தையும் இழிவுபட்டு, பழிக்கு உள்ளாகாமல் காப்பாயாக!" என்று வேண்டிக் கொண்டான்.

வசிட்டன் குலகுரு ஆதலின் கோவே என்று அழைத்தான் தசரதன். இங்கே ஒரு கருத்து வேறுபாடு. முன்பாட்டில் முனிவன் கைகேயி தானே மனமுவந்து இராமனுக்கு அரசுரிமையைத் தந்து விடுவாள் என்று உறுதியாகச் சொன்னதால்தான் தசரதனுக்கு உயிர்ப்பு வந்தது. எனவே அதனை அடியொற்றித் தசரதன் இராமபிரானுக்கு முடிசூட்டி அவன் காடு நண்ணாவண்ணமும், என்வாய்மைதவறாவண்ணமும்காப்பாயாக என்று முனிவனை வேண்டினான் என்பது ஒன்று. இது முன்பாட்டை அடியொற்றிக் கொள்ளும் பொருள். ஆனால் முன்னரே கைகேயியிடம் பரதன்நாடாளட்டும், ஆனால் இராமன்காடேற வேண்டாம்அதை மட்டும் வற்புறுத்தாதே மறந்துவிடு என்று இராமன் மேல் ஆணையாகச் சொல்லியிருக்கிறான் தசரதன். எனவே அவன் வாய்மை காக்கப் படவேண்டுமேயானால் பரதன் முடிசூடிக் கொள்ள வேண்டும் என்று தசரதன் கூறியதாகக் கொள்ள இடம் இருக்கிறது. எனவே இங்கே அவனைப் புனை மாமகுடம் புனைவித்து என்பதற்கு, பரதனுக்கு என்று கொள்ள வேண்டும். சேய்மைச் சுட்டாகப் பரதனைக் குறிக்கும் என்க. எண்ணிச் செய்ய வேண்டிய செயலை எண்ணாது செய்து விட்ட தன் பிழையை எண்ணி வருந்தி "நினையா வினையேன்" என்று தன்னைத் தானே நொந்து கொள்ளுகிறான் தசரதன்.

பரதனுக்கு முடிசூட்டி விட்டு, இராமனை வனம் புகாமல் செய்து விட்டாலே போதும் என்பது தசரதன் கருத்து என்பதாம். இங்கு அவன் என்பதற்கு இராமன் என்று பொருள் கொண்டால் முடிபுனைவித்தாலே அவன் வனம் புகத் தேவையில்லை என்று தானே பொருள். பின் ஏன் மீண்டும் "ஒன்றும் வனம் என்று உன்னா வண்ணம் செய்து என்று

Koviloor Digital Library

கூறவேண்டும்? எனவே பரதன் எனப் பொருள் கொள்ளுதலே, பொருத்தமாகும்.

41. முனிவன் கைகேயியிடம் வேண்டிக் கொள்ளுதல்

முனியும், முனியும் செய்கைக் கொடியாள் முகமே முன்னி,
''இனி உன்புதல்வற்கு அரசும், ஏனையோர்க்கு இன்னுயிரும்
மனுவின் வழி நின்கணவற்கு உயிரும் உதவி, வசைதீர்
புனிதம் மருவும் புகழே புனையாய் பொன்னே!'' என்றான். (1738)

(முனியும்-வெறுக்கும்; முன்னி-நோக்கி; பொன்னே-இலக்குமியே; வசைதீர்-பழி நீங்கிய; மருவுதல்-பொருந்துதல்)

தசரதன் உரைகேட்ட வசிட்டனும், எல்லோரும் வெறுக்கின்ற செயல்களையுடைய கொடியவளான கைகேயியின் முகத்தை இனிது நோக்கி, ''இலக்குமி போன்றவளே! இப்பொழுது உன் புதல்வனாகிய இராமனுக்கு அரசுரிமையும், மற்றுமுள்ளோர்க்கு அவரவர்களின் இனிய உயிரையும் மனுவின் வழி வந்த நின் கணவனான தசரதனுக்கு அவனுடைய இனிய உயிரையும் அளித்து, பழி நீங்கியதும், தூய்மையானதுமான புகழை நீ அணிந்து கொள்வாயாக!'' என்றான்.

தான் கூறும் சொற்களுக்கு அவள் உடன்பட வேண்டும் ஆதலால் கொடியவளான கைகேயியையும் முனிவன் ''தங்கமே! பொன் போன்றவளே'' என்று அழைக்கிறான். இங்கும் உன் புதல்வன் என்பது இராமனைக் குறிக்கிறதா, பரதனைக் குறிக்கிறதா என்பது விவாதத்திற்கு உரியது. கணவன் உயிரைத் தரப்போவதாலும், ஏனையோர்க்கும் நல்வாழ்வு தரப்போவதாலும் அவள் அணியப் போகின்ற புகழ்மாலை, வசைதீர் புகழ், புனிதம் மருவும் புகழ் எனப்பட்டது. இராமன் வனம் புகுந்தால் ஏனையோராகிய மக்களும், தசரதனும் உயிர் துறப்பர். முன்பே அவர்கள் அவ்வாறு கூறி இருக்கிறார்கள். எனவே ஏனையோர் இன்னுயிர் என்றான். எனவே அவர்களுக்கு உயிர் உதவ வேண்டுமானால் இராமன் நாடு துறவாமை வேண்டும் என்பது பெறப்படுகிறது.

42. கைகேயி மறுமொழி கூறுதல்

மொய் மாண்வினை வேர்அற வென்று ஒழிவான் மொழியா முன்னம்
விம்மா அழுவாள், ''அரசன் மெய்யில் திரிவான் என்னில்,
இம்மாண் உலகத்து உயிரோடு இனிவாழ்வு உகவேன்; என்சொல்
பொய் மாணாமற்கு இன்றே பொன்றாது ஒழியேன்'' என்றாள். (1739)

(மொய்-வலிமை; திரிதல்-மாறுபடுதல்; உகத்தல்-விரும்புதல்; பொன்றுதல்-இறத்தல்; இன்றே-இப்பொழுதே)

வலிமையால் சிறந்த ஆற்றல் பெற்ற இருவினைகளையும் அடியோடு அறுத்து வெற்றி கண்டு மேம்பட்டவனான வசிட்ட முனிவன் சொல்லி

Koviloor Digital Library

முடிக்கும் முன்பே, கைகேயி விம்மி விம்மி அழுது கொண்டே, ''அரசன் தான் சொல்லிய சொல்லில் இருந்து வாய்மையில் மாறுபடுவான் என்றால், இப்பெரிய உலகத்தில் நான் இனி உயிர் வாழ விரும்பமாட்டேன்; என் சொல் பொய்த்துப் போகாமல் இருக்கும் பொருட்டு, இப்பொழுது இறவாமல் இருக்க மாட்டேன்-இப்பொழுதே இறந்துபடுவேன்'' என்றாள்.

வினைகள் நல்வினை, தீவினை என இருவகைப்படும். இதனை வள்ளுவன் ''இருள் சேர் இருவினை'' என்கிறான். மன்னன் வாய்மையால் திரிவது என்பது, இரண்டு வரங்களில் ஒன்றிற்கு உடன்பட்டு, மற்றொன்றை மற என்றது. வாய்மை காக்காத மன்னன் ஆட்சியில் உயிர் வாழ்வதைவிட, மாய்வதே தூய்மையுடைய செயல் என்கிறாள் கைகேயி. அவளுக்கு பரதனுக்கு முடிசூட்டுவதைக் காட்டிலும், இராமனைக் காட்டிற்கு அனுப்ப வேண்டும் என்பது தான் அவளது முதல் விருப்பம். அரசன் சொன்ன சொல் தவறினாலும் நான் சொன்ன சொல் தவற மாட்டேன், தவறினால் இறந்து படுவேன் என்று மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறாள் கைகேயி.

43. முனிவன் கைகேயியைக் கடிந்து கூறுதல்

''கொழுநன் துஞ்சும் எனவும், கொள்ளாது உலகம் எனவும்,
பழிநின்று உயரும் எனவும், பாவம் உளதாம் எனவும்
ஒழிகின்றிலை; அன்றியும் ஒன்று உணர்கின்றிலை; யான் இனிமேல்
மொழிகின்றன என்?'' என்னா, முனியும், ''முறையன்று'' என்பான். (1740)

(கொழுநன்-கணவன்; துஞ்சுதல்-இறத்தல்; நின்று உயரும்-நிலைபெற்று வளரும்; ஒழிதல்-விட்டு விடுதல்)

அதைக்கேட்ட வசிட்டன், ''உன் செய்கையால் உன் கணவன் இறந்து படுவான் என்றும், உன் சொற்களை இவ்வுலகம் ஏற்றுக் கொள்ளாது என்றும், அதனால் உனக்குப் பழிதான் நிலைபெற்று வளரும் என்றும், மறுமையிலும் பாவம் உண்டாகும் என்றும் தெரிந்தும் நீ உன் பிடிவாதத்தை விட்டு விடாமல் இருக்கிறாய். அது மட்டுமல்லாது மற்றவர்கள் கூறுகின்ற நல்லனவற்றையும் உணர்ந்து கொள்கின்றாய் இல்லை. எனவே இதற்கு மேலும் நான் உனக்குச் சொல்லுதற்கு என்ன இருக்கிறது? ஆனால் ஒன்று மட்டும் உறுதி. நீ செய்வது தருமத்திற்கும் நியாயத்திற்கும் ஏற்றதன்று'', என்று இறுதி எச்சரிக்கையாகக் கடிந்து கூறினான்.

உணராதார்க்கு மேலும் உரைப்பதில் பயனில்லை என்பது கருத்து. அவள் தன் கருத்தை மாற்றிக் கொள்வதற்கு நான்கு காரணங்கள் சொல்லியும் அவள் மாறுபட விரும்பவில்லை என்பதனால் அவளது திரிந்த கொடிய உள்ளம் நன்கு புலனாகிறது. தானும் உணர்ந்து கொள்ளாமல், பிறர் சொல்லியும் கேட்டுத் திருந்தாதவன், அவன் உயிர்

Koviloor Digital Library

போகும் வரைக்கும் மற்றவர்க்கும் நோய் போன்றவனாவான் என்பார் வள்ளுவர். குறள் இது. ''ஏவவும் செய்கலான், தான் தேறான், அவ்வுயிர் போலும் அளவும் ஓர் நோய்'', குறள் 848.

44. முனிவன் கைகேயியை ஏசுதல்

''கண் ஓடாதே, கணவன் உயிரோடு இடர் காணாதே,
புண்ணோடு ஓடும் கனலோ, விடமோ என்னப் புகல்வாய்;
பெண்ணோ? தீயோ? மாயாப் பேயோ? கொடியாய்! நீ இம்
மண்ணோடு உன்னோடு என்ஆம்? வசையோ வலிதே'' என்றான். (1741)

(காணாதே-நோக்காமல்; ஓடும்-நுழையும்; புகல்தல்-பேசுதல்; மாயா-விடாப்பிடியுள்ள என்றும் அழியாத; வசை-பழி; மாய்தல்-மறைதல்; மாயா-மறைதலில்லாத / வெளிப்பட்டு வருத்துகின்ற; கண்ணோட்டம்-தாட்சண்யம் / இரக்கம்)

''ஒரு சிறிதும் தாட்சண்யமோ இரக்கமோ இன்றி இருக்கின்றாய்; உன்னுடைய கணவனுடைய உயிர்படும் துன்பத்தை நோக்க மறுக்கின்றாய்; புண்ணில் நுழைகின்ற நெருப்போ அல்லது கடுமையான நஞ்சோ என்று பிறர் எண்ணும்படி கொடிய வார்த்தைகளைக் கொட்டுகின்றாய். நீ உண்மையிலேயே பெண் தானோ? அல்லது கொடிய நெருப்போ? அல்லது பெண் உருவில் வந்த மாயப் பேயோ? அல்லது என்றும் அழியாத பேய்த்தன்மை கொண்டவளோ? கொடியவளே? இனி நீ இவ்வுலக அரசாட்சியை, வரத்தால் விரும்பிக் கைக்கொள்ளப் போவதால் உனக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? உனக்கும் இவ்வுலகுக்கும் என்ன தொடர்பு இருக்கப் போகிறது? இராமன் காடேறினால் இவ்வூரே அவன் பின் சென்று விடும். நீ பெற்ற நாட்டை இனிதாக ஆளமுடியாது. அதனால் உனக்கு உண்டாகப் போகிற பழி மிகவும் வலியது-போக்கமுடியாதது'' என்றான்.

கண்ணோட்டம் என்பது தன்னோடு பழகியவரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை. இது அவர்மேல் கண் சென்ற வழி நிகழ்வதாதலின் இப்பெயர்த் தாயிற்று. கைகேயியின் கொடிய சொற்கள் புண்ணில் நுழையும் நெருப்புப் போலவும், கடுவிடம் போலவும் துன்பம் தருகின்றன என்பதாம். வெந்த புண்ணில் வேல் செருகியது போல என்பது பழமொழி; புண்ணிலாம் பெரும் புழையிற் கனல் நுழைந்தாலென என முன்பும் கூறியிருப்பது காண்க.

45. ''வாயால் மன்னன் மகனை வனம்ஏகு என்னா முன்னம்,
நீயோ சொன்னாய்; அவனோ நிமிர்கான் இடை வல்நெறியில்
போயோ புகலோ தவிரான்; புகழோடு உயிரைச் சுடுவெந்
தீயோய்! நின்போல் தீயோர் உளரோ? செயல் என்?'' என்றான். (1742)

(நிமிர்-உயர்ந்த; நெறி-வழி; வெம்-கொடிய; சுடு-அழிக்கின்ற)

Koviloor Digital Library

தசரதன் தன் வாயால் தன் மகன் இராமனைக் காட்டிற்குப் போ என்று சொல்லவில்லை. அதற்கு முன் நீயே அரசன் பணி என்று சொல்லிவிட்டாய்; அவன் தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை; தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று எண்ணுபவன். எனவே உயர்ந்து பரந்து அடர்ந்த மரங்களடங்கிய கானகத்திற்கிடையே கொடிய வழியில் போவதையே, அங்கு சென்று வாழ்வதையே தவிர்க்க மாட்டான். உடனே சென்று விடுவான். இதனால் நீ தசரதனுடைய உயிரோடு புகழையும் அழிக்கின்ற கொடிய நெருப்பினைப் போன்றவளாகிறாய். உன்னைப் போல் தீயகுணம் கொண்ட கொடியவர்கள் உலகில் யார் இருக்கிறார்கள்? என்னே உன்னுடைய செயல்! என்று வியந்து கடிந்து கூறுகிறான் முனிவன்.

வல்நெறி என்பது ''விரல் நுனி சிதைக்கும் பரல் நிறைவழி'' யைக் குறிக்கும். உலகத்தில் நெருப்பு, உருவமுள்ள உயிர்களையும் பொருள்களையும் தான் எரிக்கும். ஆனால் கைகேயியாகிய நெருப்பு அருவமானதசரதனது புகழையும் எரித்தது என்பது புலப்படுத்த ''புகழோடு உயிரைச்சுடு வெந்தீயோய்'' என்றான். நீயே சொன்னாய் என்பதற்கு, வரம் என்ற பெயரால் அவனை வற்புறுத்திக் கட்டுப்படுத்தி, அவன் பணி என்று நீயே இராமனிடம் வஞ்சமாகச் சொல்லி விட்டாய் என்பது விரிவு. அரசன் கூறுவதற்கு முன்பு நீ கூறியதனால், அரசன் வாய்மை தவறுதல் என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? என்று வசிட்டன் மறுத்துரைக்கிறான்.

46. தசரதன் கைகேயியிடம் கடிந்து கூறுதல்

தாஇல் முனிவன் புகலத் தளரா நின்ற மன்னன்,
நாவில் நஞ்சமுடைய நங்கை தன்னை நோக்கிப்
''பாவி! நீயே வெம்கான் படர்வாய் என்று, என்உயிரை
ஏவினாயோ? அவனும் ஏகினானோ?'' என்றான். (1743)

(தளரா நின்ற-தளர்ச்சியுற்று நின்ற; படர்தல்-செல்லுதல்; ஏவுதல்-கட்டளையிடுதல்; தாஇல்-குற்றமற்ற)

குற்றமற்ற வசிட்டமா முனிவன் இவ்வாறு கூறவும், தளர்ச்சியுற்று நின்ற தசரதன், நாக்கில் நஞ்சினையுடைய கைகேயினைப் பார்த்து, ''பாவி! நீயே என் உயிர் போன்ற இராமனைக் கொடிய காட்டிற்குப் போவாயாக என்று கட்டளையிட்டு விட்டாயோ? அவனும் சென்று விட்டானோ?'' என்று கேட்டான்.

கைகேயி இராமனை அழைத்து ''இது மன்னவன் பணி; ஆழி சூழ் உலகமெல்லாம் பரதனே ஆள, நீ பூழி வெங்கானம் போய் ஏழிரண்டு ஆண்டில் வா என இயம்பினன் அரசன்'' என்று கூறியதையும் தான் உணர்ந்து அவளைக் கடிந்து உரைக்கிறான். இந்தக் கால இடைவெளிக்குள் இராமன் நகர்விட்டு நீங்கியிருப்பானோ என்ற ஐயமும் அவன் மனத்தில் எழுகிறது. அதனால் தான் அவனும் ஏகினானோ? என்றான். தன் உடம்பின்

Koviloor Digital Library

உறுப்புக்குள்ளேயே விடத்தைக் கொண்டிருப்பது பாம்பு ஒன்று தான். அதற்குப் பல்லில் விடம்; ஆனால் மானிடப் பிறவியாகிய கைகேயிக்கு நாவில் விடம் என்று மற்றவற்றிற்கும் மானிடர்க்கும் வேறுபாடு காட்டிக் கூறினான் என்க.

47. கண்டேன் நெஞ்சம்; கனிவாய்க், கனிவாய்விடம் நான்நெடுநாள்
உண்டேன்; அதனால் நீ என் உயிரை முதலோடு உண்டாய்;
பண்டே எரிமுன் உன்னைப் பாவி! தேவி ஆகக்
கொண்டேனல்லேன்; வேறு ஓர் கூற்றம் தேடிக் கொண்டேன். (1744)

(நெஞ்சம்-மனநிலை / மனக்கருத்து; கனி-கொவ்வைக் கனி; முதலோடு-அடியோடு; எரி-ஓமத்தீ; தேவி-மனைவி; கூற்றம்-இயமன்; கனிவு-முதிர்ச்சி; பண்டே-முன்னமே)

தசரதன் கைகேயியை நோக்கி, ''பாவி! உன்னுடைய உள்ளக் கருத்தினை இப்போது தான் கண்டு கொண்டேன்; அன்பு முதிர்ச்சியாலும், காமக்களிப்பாலும், உன்னுடைய கொவ்வைக்கனி போன்ற வாயில் ஊறிய விடத்தை நான் நீண்ட நாட்களாக அருந்திக் கொண்டு இருந்தேன். அதனால்தான் நீ இப்போது என்னுடைய உயிரை அடிவேரோடு பறித்துக் கொண்டு விட்டாய்; நான் முன்பு ஓமத்தீ முன்னால் உன்னை என் மனைவியாகவும் பட்டத்தரசியாகவும் ஏற்றுக் கொள்ளவில்லை போலும். வேறு ஓர் தனித்தன்மை படைத்த இயமனையே தேடிக் கொண்டேன் போலும்''! என்றான்.

நெஞ்சம் உருவப் பொருளல்ல; காட்சிக்கு உரியதன்று; அவள் செயலால் அவள் நெஞ்சக் கருத்தை அறிந்ததால் கண்டேன் நெஞ்சம் என்றான். வால் எயிறு ஊறிய நீர் எல்லோர்க்கும் அமிழ்தமாகும்; எனக்கு மட்டும் அது விடமாகப் போயிற்று என்று கழிவிரக்கம் கொள்கிறான். முன்பு திருமணத்தின்போது அக்னி சாட்சியாக நான் உன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளவில்லை போலும். பொதுவாக இயமன் என்றால் சாற்றும் நாள் அற்றது எண்ணும், தருமம் பார்க்கும் பின்புதான் எல்லா உயிரையும் விண்ணில் ஏற்றும்; ஆனால் கைகேயியோ நாள், காலம் பார்க்காது தருமம் எண்ணாது தான் நினைத்த போதே என் உயிரைக் கவர்ந்து கொண்டாள். எனவே வேறு ஓர் கூற்றும் தேடிக் கொண்டேன் என்றான். குற்றம் அவள் பால் இல்லை. தன் பால் உள்ளது என்பதைக் குறிக்க நானே உன்னை மனைவியாக அரும்பாடுபட்டுத் தேடிக் கண்டு மணம் செய்து கொண்டேன் என்றான். முன் பாட்டில் நாவில் நஞ்சம் என்ற கவிஞன், இப்பாடலில் கனிவாயில் விடம் என்றது கருதி இன்புறத்தக்கது. ''எரி என்று எதிர் நிற்பாள் கூற்றம்; சிறு காலை அட்டில் புகாதாள் அரும்பிணி; அட்டதனை உண்டி உதவாதாள் இல்வாழ்பேய்; இம்மூவர் கொண்டானைக் கொல்லும் படை'' என்பது நாலடியார் 363.

Koviloor Digital Library

48. ''விழிக்கும் கண் வேறுஇல்லா வெம்கான், என்கான் முளையைச்
சுழிக்கும் வினையால் ஏகச் சூழ்வாய், என்னைப் போழ்வாய்;
பழிக்கும் நாணாய்; மாணாப்பாவி! இனி என்பல? உன்
கழுத்தின் நாண், உன்மகற்குக் காப்பின் நாண்ஆம்'' என்றான். (1745)

(கான்முளை-புதல்வன் / மகன் / குலக்கொழுந்து; சுழிக்கும் வினை-சூழ்வினை / வஞ்சகச் செயல்; போழ்தல்-பிளந்து கொல்லுதல்; மாணா-மாட்சிமை அடைய இயலாத / பெருமையற்ற)

''எனக்கு விழிக்கும் கண் வேறு இல்லாத என் குலக்கொழுந்தாகிய இராமனை, உன் வஞ்சகச் செய்கையால் கொடிய கானகத்திற்குப் போகுமாறு சூழ்ச்சி செய்து விட்டாய். அதன் காரணமாக என் உயிரைப் பிளந்து கொன்று விட்டாய்; நீ எத்தகைய வசைச் சொற்களுக்கும் வெட்கப்படாதவள்; பெருமை என்பதே இல்லாத மகா பாவி; இனி நான் பலவாறு பேசி என்ன பயன்? உன் கழுத்தில் நான் கட்டிய மங்கல சூத்திரம், உன் மகன் பரதனுக்கு முடிசூட்டும்பொழுது கையில் அணியும் காப்புக் கயிறாக விளங்கட்டும்'' என்று மனம் நொந்து ஏசினான்.

இராமன் தசரதனுக்குக் கண் போன்றவன்; உயிர் போன்றவன்; அவன் இல்லாமல் இவன் இல்லை. எனவே அவன் கானகம் புகுமாறு சூழ்ச்சி செய்து அவன் இங்கு இல்லாமல் போனதனால், தசரதன் கண்ணும் உயிரும் இல்லாதவனானான் என்பதாம். பாவம் செய்தவர்கள் திருந்தி பிறகு பெருமை அடைதலும் உண்டு; ஆனால் இவள் எக்காலத்தும் பெருமைக்குரியவள் அல்லள் என்பது தெரிவிக்கவே மாணாப் பாவி என்றான். காப்பு நாண் என்பது முடிசூடுதற்கு முன்பு கையில் மந்திரத்துடன் கட்டப்படும் இரக்ஷாபந்தனம். பரதனுக்கு முடிசூடும் முன் நான் இறந்து போவேன். நீ மாங்கல்யம் இழப்பாய்; அந்த மாங்கல்யமே பரதனுக்கு இரக்ஷாபந்தனமாக அமையும் என்பது கருத்து. தாலிக்கயிறே காப்புக் கயிறாகும் என்பதாம்.

49. தசரதன் முனிவனிடம் கூறுதல்

இன்னே பலவும் பகர்வான்; இரங்காதாளை நோக்கிச்
''சொன்னேன், இன்றே, இவள் என்தாரம் அல்லள்; துறந்தேன்;
மன்னே ஆவான் வரும் அப்பரதன் தனையும் மகன் என்று
உன்னேன்; முனிவா! அவனும் ஆகான் உரிமைக்கு'' என்றான். (1746)

(நோக்கி-சுட்டிக் காட்டி; இன்றே-இப்பொழுதே; உன்னுதல்-நினைத்தல் / கருதுதல்; துறத்தல்-முற்றும் நீக்குதல்; உரிமை-இறுதிச் சடங்கு செய்யும் உரிமை)

இவ்வாறு பலவற்றையும் கூறி வந்த தசரதன், கைகேயியை முனிவனுக்குச் சுட்டிக் காட்டி ''முனிவரே! இப்பொழுதே சொல்லி விடுகிறேன். இங்கே என் எதிரில் நிற்கின்ற எதற்கும் இளகாத கைகேயி, இன்று முதல் என்னுடைய மனைவி அல்லள்; அவளை முற்றிலுமாக நீக்கி

Koviloor Digital Library

விட்டேன்; இவள் வயிற்றிற் பிறந்து, இப்பொழுது மன்னன் ஆவதற்காக வந்து கொண்டிருக்கும் அந்தப் பரதனையும் நான் என் மகன் என்று கருதமாட்டேன்; அதனால் அவன் என் இறுதிச் சடங்கு செய்யும் உரிமைக்கும் உரியவனாகான்'' என்று வெறுத்துக் கூறினான்.

வசிட்டன் குலகுரு ஆதலானும், மேல் நிகழ வேண்டுவனவற்றைச் செய்தற்குரியவன் ஆதலானும் அவனை அழைத்து மன்னன் கூறினான் என்க.

50. கோசலையின் நிலை

''என்னைக் கண்டும் ஏகா வண்ணம் இடையூறு உடையான்
உன்னைக் கண்டும் இலனோ!'' என்றான் உயர் கோசலையை;
பின்னைக் கண்தான் அனையான் பிரியக் கண்ட துயரம்
தன்னைக் கண்டே தவிர்வாள், தளர்வான் நிலையில் தளர்வாள். (1747)

தசரதன் அங்கு நின்றிருந்த உயர்ந்த குணங்கள் பொருந்திய கோசலையைப் பார்த்து, ''இராமன் காடு செல்லும் போது என்னைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போக முடியாதபடி இந்தக் கைகேயி தான் தடையாக இருந்தாள். ஆனால் அவன் உன்னையும் கண்டு சொல்லிக் கொண்டு போகவில்லையோ?'' என்று கேட்டான். பின்னர் தன்னுடைய கண் போன்றவனான இராமன் பிரிந்து போன துயரத்தை விடவும், தன் கணவன் இருக்கின்ற துயர நிலையை எண்ணிச் சோர்ந்து போன கோசலை தசரதன் நிலை கண்டு மீண்டும் தளர்ந்து போகலானாள்.

தசரதனுக்கு மூத்த மனைவி, முதல் பட்டத்தரசி, இராமனைப் பெற்றெடுத்தவள், நால்வர்க்கும் மறுஇல் அன்பினில் வேற்றுமை மாற்றினாள் எனவே கோசலை, உயர் கோசலை எனப்பட்டாள். கணவன் படும் பெருந்துயரம் கண்டபின், மகன் பிரிவதனால் உண்டாய துயரம் தவிர்ந்தாள் என்பதாம்.

51. மாற்றாள் செயலாம் என்றும், கணவன் வரம் ஈந்து உள்ளம்
ஆற்றாது அயர்ந்தான் என்றும் அறிந்தாள்; அவளும் அவனைத்
தேற்றா நின்றாள்; மகனைத் திரிவான் என்றாள்; அரசன்
தோற்றான் மெய் என்று உலகம் சொல்லும் பழிக்கும் சோர்வாள். (1748)

(திரிவான்-திரும்புவான்; மெய்-வாய்மை; மாற்றாள்-சக்களத்தி; அயர்தல்-தளர்ச்சி உறுதல்)

இந்தச் செய்கை-இராமன் வனம் புகுந்தது சக்களத்தி கைகேயியின் செயல் என்றும், தன் கணவன் அவளுக்கு வரம் தந்து விட்டு அதிலிருந்து மீள முடியாமல் உள்ளம் பொறுக்க மாட்டாது நொந்து சோர்ந்திருக்கிறான் என்றும்அறிந்தாள்கோசலை; அவளும் இராமன்கானகத்திலிருந்து திரும்பி வந்து விடுவான் என்று சொல்லித் தன் கணவனைத் தேற்றத்

Koviloor Digital Library

தொடங்கினாள். என்றாலும் அவ்வாறு நடந்தால் அரசன் வாய்மை தவறி விட்டான் என்று உலகத்தார் இகழ்வார்களே என்ற பழிச் சொல்லை நினைத்து அஞ்சியும் தளர்ச்சி யடைந்தாள்.

52. கோசலை கூறுதல்

''தள்ளா நிலைசால் மெய்ம்மை தழுவா வழுவா வகை நின்று
என்னா நிலை கூர்பெருமைக்கு இழிவாம் என்றால், உரவோய்!
விள்ளா நிலைசேர் அன்பால் மகன்மேல் மெலியின், உலகம்
கொள்ளாதன்றோ?'' என்றாள், கணவன் குறையக் குறைவாள். (1749)

(குறைதல்-மெலிதல்; உரவு-அறிவு / வலிமை; தள்ளா நிலை-தவறத்தகாத தன்மை; தழுவி-தழுவா / ஏற்று; எள்ளல்-இகழ்தல்; சுடர்-சிறந்த / மேம்பட்ட; விள்ளா-பிரியாத; மெலிதல்-வருந்துதல்; உலகம்-உயர்நதோர்)

''அறிவும் வலிமையும் மிக்கவனே! தவறத்தகாத, தவறாது பின் பற்ற வேண்டிய சத்தியத்தை ஏற்று, அதனின்றும் வழுவாத வண்ணம் நிலைபெற்று நின்று, பிறர் இகழத்தகாத நிலை, சிறந்த உன் பெருமைக்கு இழிவாகும் என்றால், உன் உயிர் போன்று பிரிக்க இயலாத பேரன்புடைய மகன் இராமன் மேல் அன்பு கொண்டு அதற்காக வருந்துவாயென்றால், உலகம் அதை நன்று என்று ஏற்றுக் கொள்ளாது அல்லவா?'' என்று கணவனது துன்பத்தைக் கண்டு தானும் சோர்வுறும் கோசலை கூறினாள்.

தசரதன் துன்புற்று மெலிதல் இராமனைப் பிரிய வேண்டுமே என்பதற்காக; கோசலை துன்புற்று மெலிதல் தசரதன் தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல், இருதலைக் கொள்ளி எறும்பாகத் துன்புறுகிறானே என்பதற்காக. கோசலை தசரதன் வாய்மையினின்றும் தவறக் கூடாது என்பதிலும், அவ்வரத்தின் படி இராமன் வனம் புகுதல் தவறில்லை என்றும் தன் கருத்தைத் தெரிவிக்கின்றாள். இராமன்பால் உள்ள பேரன்பால் வருந்துதலினும் வாய்மை தவறிய குற்றம் மிக்க வருத்தத்தைக் தரும் எனக்கூறிக் கணவனைத் தேற்றுகின்றாள். மகன் மேல் உள்ள அன்பால் வாய்மை தவறுதல், வரம் கொடுத்த பிறகு மனம் தளர்தல், இவ்விரண்டனுள் சத்தியம் தவறாமையே செய்யத்தக்கது என்றாலும், இதனால் தன் கணவனை இழக்க நேரிடும் என்பதனால் கோசலை தசரதனைத் தேற்றினாலும் தானே தளர்வுற்றாள். பெருமை என்பது எவ்வழியிலும் மனக்கலக்கமின்றித் தாம் செய்ய வேண்டியவைகளைச் செய்யும் உறுதிப்பாட்டால் ஆன உயர்வே ஆகும்.

53. கவிக் கூற்று

''போவாது ஒழியான்'' என்றாள்; புதல்வன் அகலக் கணவன்
சாவாது ஒழியான் என்று என்று உள்ளம் தள்ளுற்று அயர்வாள்

Koviloor Digital Library

காவாய் என்றாள் மகனைக் கணவன் புகழுக்கு அழிவாள்;
ஆ! ஆ! உயர் கோசலையாம் அன்னம் என் உற்றனளே? (1750)

(ஆ-ஐயோ என்னும் இரக்கத்தை உணர்த்தும் சொல்; அழிதல்-வருந்துதல்)

உயர்ந்த பண்புகளை உடைய அன்னம் போன்ற கோசலை, ''இராமன் காட்டிற்குச் செல்லாமல் இருக்க மாட்டான் என்றும், அவன் நீங்கி விட்டால் தன் கணவன் தசரதன் உயிருடன் இருக்க மாட்டான் என்றும் தனக்குள் எண்ணி எண்ணித் தளர்ந்து சோர்வாள். எனவே இராமனைக் காட்டிற்குச் செல்லாமல் காப்பாயாக'' என்று தன் கணவனிடம் கேட்க மாட்டாள். ஏனெனில் அது தன் கணவன் புகழுக்கும் பெருமைக்கும் மாசு ஏற்படுத்தும் என்பதை நினைத்து மனம் சோர்வாள். அடடா, இந்தக் கோசலை என்னவாறெல்லாம் துன்பம் அடைகிறாள்? அவள் அடைகின்ற துன்பத்தை நம்மால் சொல்ல முடியாது''.

கோசலை இங்கு வந்ததே தன் கணவனை அணுகி, வற்புறுத்தி, இராமனை வனம் புகாமல் செய்து விடலாம் என்ற தன்னம்பிக்கையுடன் தான் இங்கு வந்தாள். வந்த பின்பு தசரதன் படுகின்ற துன்பத்தைக் கண்ட பிறகு அதனைக் கேட்பதற்கு அவளால் இயலவில்லை. மகனைத் தடுத்தால் கணவன் புகழுக்கு அழிவு; மகனைத் தடுக்காது விட்டால் கணவனின் உயிருக்கு அழிவு. இரண்டில் எதனைச் செய்வாள் கோசலை? எனவே எதனையும் செய்ய இயலாது தடுமாறினாள் பாவம் என்கிறான் கவிஞன்.

54. தசரதன் புலம்புதல்

உணர்வான் அனையாள் உரையால் ''உயர்ந்தான் உரைசால்
குமரன் புணரான் நிலமே வனமே போவானே ஆம்'' என்னா
இணர்ஆர் தருதார் அரசன் இடரால் அயர்வான், ''வினையேன்
துணைவா! துணைவா! என்றான்;'' தோன்றால் தோன்றாய்! என்றான். (1751)

(இணர்-பூங்கொத்துக்கள்; ஆர்-நிறைந்த; உரை-புகழ்; புணர்தல்-பொருந்தியிருத்தல்; நிலம்-நாடு / அயோத்தி; தோன்றல்-வாரிசு / உத்தமன் / மகன்)

பூங்கொத்துக்கள் அடர்ந்த மலர் மாலை அணிந்த தசரதன், கோசலையின் மொழிகளால், உயர்ந்த குணங்களுடையவனும் மிக்க புகழ் பெற்றவனுமாகிய தன் மைந்தன் இராமன், இதற்குப் பிறகும் இவ்வயோத்தியில் இருந்து முடிசூட்டிக் கொள்ளமாட்டான்; நிச்சயமாக வனம் தான் புகுவான் என்று துயரடைந்து வருந்துவான். எல்லோர்க்கும் துணை செய்கின்றவனே! தீவினையேனாகிய எனக்கும் துணை செய்ய வருவாயாக! என் மகனே! உத்தமனே! இப்பொழுது என் முன் தோன்ற மாட்டாயா?'' என்று உருகினான்.

Koviloor Digital Library

தசரதன் இதுவரை மூர்ச்சையுற்றிருந்ததனால் இராமன் நாட்டைத் துறந்து வனம் சென்று விட்டான் என்றே கருதியிருந்தான். ஆனால் இப்பொழுது கோசலையியின் சொற்களால் அவன் இதுகாறும் போகவில்லை. ஆனால் இப்போது போகாமல் இருக்க மாட்டான் என்பதை அறிந்தான். எனவே தனக்குத் துணை செய்யுமாறும் தன் முன்தோன்றித் தனக்குத் துணையாக வரும்படியும் கேட்டுக் கொள்கிறான் என்பதாம்.

55. ''கண்ணும் நீராய் உயிரும் ஒழுகக் கழியா நின்றேன்,
எண்ணும் நீர் நான்மறையோர் எரிமுன், நின்மேல் சொரிய
மண்ணும் நீராய் வந்த புனலை, மகனே! வினையேற்கு
உண்ணும் நீராய் உதவி உயர்கான் அடைவாய்'' என்றான். (1752)

(கழியா-கழியும் / நீங்கும் / போகும்; எண்ணும்-மதிக்கத்தக்க; நீர்மை-தன்மை; எரி-ஓமத்தீ; மண்ணுதல்-கழுவுதல் / நீராட்டுதல்)

தசரதன், மகன் தன் அருகில் இருப்பது போல் எண்ணி, ''மகனே! இரண்டு கண்களிலும் நீர் சொரிகின்றது; உயிரும் உடலை விட்டு நீங்கும் நிலையில் உள்ளேன். மதிக்கத்தக்க தன்மையுடைய நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த அந்தணர்கள் ஓமத்தீயின் முன்னால் உன் மேல் சொரிய இருக்கின்ற கங்கை முதலாய புண்ணிய நதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட மண்ணுமங்கல நீரை, அது நடக்காததனால், தீ வினையானாகிய எனக்கு, நான் இறந்த பின்பு கொடுக்கும் எள், நீர் ஆகியவைகளான நீர்க் கடனாகச் செய்து, அதன் பின் நீ மரங்களடர்ந்த உயர்ந்த கானகத்திற்குச் செல்வாயாக!'' என்று இரங்கிப் புலம்பினான்.

மகன் தன் எதிரே இருப்பது போல் ஒரு உருவெளித் தோற்றம். அவனிடம் பேசித் தன் துயரைத் தீர்த்துக் கொள்ள விழைகிறான் தசரதன். தான் இன்னும் சிறிது நேரத்தில் இறக்கப் போவது உறுதி. உனக்கு முடிசூட்டுதலின் பொருட்டுக் கங்கை முதலாய நதிகளிலிருந்து கொணர்ந்துவைத்திருக்கின்ற புண்ணிய தீர்த்தங்களையெல்லாம், அவ்விழாத் தடைபட்டதால் நான் இறக்கும் இப்பொழுது நீர்க் கடன்களுக்காக உத்தர கிரியைகளுக்கு-என்னை ஈடேற்றி விட்டு உபயோகப்படுத்தி விட்டுப் பின்னர் நீ காடேகுவாய் என்கிறான் தசரதன். உயிர்நீங்கும் போது புதல்வர்கள், இறந்து கொண்டிருப்பவர்களின் வாயில் புனித நீரும் பாலும் ஊற்றுவது மரபு. அவ்வாறு அவர்கள் கொடுக்கும் எள், நீர் முதலியன உடம்பினின்றும் பிரிந்த உயிர்கட்கு உணவாகும் என்பது நூற்கொள்கை. பிரேத பூதத்திற்குத் தாக சாந்தி செய்வது நித்தியவதி நீர்க் கடனாகும்.

56. ''படைமாண் அரசைப் பலகால் பகுவாய் மழுவால் எறிவான்
மிடைமா வலிதான், அனையான் வில்லால் அடுமா வல்லாய்!
''உடை மாமகுடம் புனை'' என்று உரையா, உடனே கொடியேன்
சடைமாமகுடம் புனையத் தந்தேன் அந்தோ!'' என்றான். (1753)

Koviloor Digital Library

(மாண்-மாட்சிமை; கால்-தலைமுறை; பகுத்தல்-பிளத்தல்; மிடை-செறிந்த; அடுமா-சுடும்மாறு / அழிக்கும் நெறி; படை-படைக்கலன்கள் / நால்வகைப் படைகள்; உரையா-உரைத்து; அந்தோ-இரக்கக்குறிப்பு; மழு-மழுப்படை / கோடரி)

''படைக்கலன்களின் பெருமையும், நால்வகைப் படைகளையும் உடைய அரசர்களை இருபத்தொரு தலைமுறை தன் மழுவாயுதத்தாலேயே எறிந்து வெற்றி கொண்டவனும், சிறந்த வலிமையால் தனக்குத் தானே ஒப்பானவனுமான பரசுராமனை, அவன் தந்த அவனுடைய வில்லினாலேயே அழிக்கும் நெறியில் வல்லமை பொருந்திய இராமா! உனக்கு உரிமையுடைய சிறந்த முடியினை நீ சூட்டிக்கொள் என்று இப்போது தான் உரைத்தேன். ஆனால் அதற்குள்ளாகவே கொடியவனாகிய நான், காடு செல்லும் பொருட்டு சடாமுடியைப் புனைந்து கொள் என்று மரவுரியைத் தந்து விட்டேனே! ஐயகோ!'' என்று தசரதன் இரங்கிப் புலம்பினான்.

எல்லாப்படையும் படைக்கலன்களும் பெற்றிருந்தும் இருபத்தொரு தலைமுறை அரசர்கள் பரசுராமனின் மழுவாயுதத்திற்கு முன் நிற்க முடியவில்லை என்று பரசுராமனின் ஆற்றல் புலப்படுத்தப்பட்டது. உடை மாமகுடம் என்னும் சொல்லாட்சி கருத்தாழம் மிக்கது. இந்தப் பரசுராமனைஇராமன்அவனது வில்லால்அவனது செருக்கைஅடக்காமல் இருந்திருந்தால், இந்த உலகத்தின் ஆட்சி முழுவதும் பரசுராமன்பால் சென்று சேர்ந்திருக்கும். அப்படிச் சேராது நாட்டைக் காப்பாற்றியதனால், இந்த நாட்டை ஆளுகின்ற உரிமையும் இராமனுக்கே உண்டு என்பதும் புலப்படும். மரபு முறைப்படி உரிமையுடையவனேனும், அவனது வில்லாற்றலால் நாட்டைக் காத்ததால் அம்முறைப்படியும் அவன் உரிமையுடையவன் என்பதை இச்சொற்றொடர் நன்கு விளக்கும்.

57. ''கறுத்தாய் உருவம்! மனமும், கண்ணும், கையும், செய்யாய்!
பொறுத்தாய்! பொறையே! இறைவன், புரம்மூன்றும் எரித்த போர்வில்
இறுத்தாய்! தமியேன் என்னாது, என்னை இம்மூப்பிடையே
வெறுத்தாய்! இனிநான், வாழ்நாள் வேண்டேன், வேண்டேன்'' என்றான். (1754)

(பொறுத்தல்-பெற்றிருத்தல் / தாங்குதல்; இறுத்தல்-ஒடித்தல் / முறித்தல்; செய்ய-சிவந்த / செம்மையான; பொறை-பொறுமை)

''கரியமேனி கொண்டவனே! செம்மையான மனமும், சிவந்த கண்களும், கைகளும் உடையவனே! பொறுமைக்கு இருப்பிட மானவனே! சிவபெருமான், முப்புரம் எரித்த போரில் கைக்கொண்ட வில்லினை முறித்தவனே! உன்னையன்றி வேறு துணை எனக்கு இல்லை இன்று நான் தனியனாய் இருக்கிறேன் என்று அறிந்தும், என்னை இம்முதுமைப் பருவத்தில் வெறுத்துவிட்டுக் கானகம் செல்லுகின்றாயே!

Koviloor Digital Library

நீ இல்லாமல், எனக்கு இந்த வாழ் நாளும் வாழ்க்கையும் வேண்டாம்; வேண்டவே வேண்டாம்'' என்று தசரதன் இரங்கிப் புலம்பினான்.

மேனி தான் கரியது; உள்ளம் செம்மையானது; கைகளும், கண்களும், திருவடிகளும் சிவந்த நிறம் உடையன என்பதாம். மனத்திற்குச் செம்மையென்பது கோட்டமின்மை; ''கண்ணும், திருவடியும், கையும், திருவாயும் செய்ய கரியவனை'' என்பது சிலப்பதிகாரம்; ''கையும், மலரடியும், கண்ணும் கனி வாயும் செய்ய கரிய திருமாலே'' என்பது விக்கிரம சோழன் உலா. பொறுமையிற் சிறந்த நீ, தனிமையானவனும், மூப்பு எய்தியவனுமான என்னை விட்டுக் காட்டுக்குச் செல்லுதல் தக்கதன்று என்று கூறியவாறாம். நீ தான் என் கண், என் உயிர், நீ என்னை விட்டுப் பிரிந்து போனபின் நான் மட்டும் வாழ்வதால் என்ன பயன்? எனவே நான் இனிமேலும் வாழ விரும்பவில்லை என்று வாழ்க்கையை வெறுத்துக் கூறுகிறான் தசரதன். இராமன் வெறுத்தல் என்பது, உடன் இருந்து தேற்றாது தனியனாய் விட்டுச் செல்லுதலை உணர்த்தும். சிவபெருமான் முப்புரம் எரித்த கதை-தாராட்சன், கமலாட்சன், வித்வன்மாலி என்பவர் மூன்று அரக்கர்கள். தேவர்களுக்குத் தொல்லை தந்தனர் தேவர்களைக் காப்பதற்காகச் சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்து, வாசுகிப் பாம்பை நாணாகக் கொண்டு, திருமாலாகிய அம்பை ஏந்திக் கொண்டு சிரித்தே அம்மூவரின் கோட்டைகளையும் எரித்தார் என்பது புராணவரலாறு.

58. ''பொன்னின் முன்னம் ஒளிரும் பொன்னே! புகழின் புகழே!
மின்னின் மின்னும் வரிவில் குமரா! மெய்யின் மெய்யே!
என்னின் முன்னம் வனம்நீ அடைதற்கு எளியேன் அல்லேன்;
உன்னின் முன்னம் புகுவேன் உயர்வானகம் யான்'', என்றான். (1755)

(முன்னம்-மிகுதியாக / மேற்பட்டு; வரி-கட்டமைந்த; ஒளிரும்-ஒளி வீசும்; எளியன்-இளைத்தவன்)

''பொன்னினும் மிகுந்து ஒளி வீசும் பொன் போன்றவனே! புகழுக்கே புகழ் சேர்ப்பவனே! மின்னுகின்ற மின்னலைப் போல் ஒளி வீசும் கட்டமைந்த வில்லை ஏந்திய கோதண்டராமா! உண்மையின் வடிவமானவனே! எனக்கு முன்னால் நீ கானகம் சென்று சேர்வதைப் பார்த்துக் கொண்டிருக்க நான் எளியவன் அல்லேன்; உனக்கு முன்னால் நான் உயர்ந்த சுவர்க்கம் சென்று அடைந்து விடுவேன்'' என்றான்.

மேகமனைய கரியது இராமன் திருமேனி; மேகத்தில் ஒளி விடும் மின்னல் போல, அவன் உடலுடன் இணைந்தது அவனுடைய கோதண்டம் என்னும் வில் அது மின்னலைப் போல் ஒளி வீசியது என்பது கருத்து. மெய்யின் மெய்யே என்றது சத்திய சொரூபி என்ற கருத்துடையது. நீ குமரன், நான் முதியவன்; நீ வனம் புகுவாய், நான் வானம் புகுவேன்; நீ அண்மையிலுள்ள கானகம் புகுவாய், நான் சேய்மையிலுள்ள வானகம்

Koviloor Digital Library

புகுவேன்; நீ என் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வனம் புகுவாய், நான் உன் அன்புக்குக் கட்டுப்பட்டு வானம் புகுகிறேன் என்ற கருத்துக்கள் படிக்குந்தோறும் இரசிக்கத்தக்கன. ''கானகமே மிக விரும்பி நீ துறந்த வளநகரைத் துறந்து, நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன்'' என்பது குலசேகராழ்வாரின் பெரிய திருமொழி. பொன் பிரகாசத்திற்கும்-மேனியெழில் ஒளிக்கும், குண நலன்களுக்கும் உவமை கூறப்பட்டது. எளியன் என்பது நான் உனக்கு இளைத்தவன் அல்லன் என்ற பொருளில் கையாளப் பட்டிருக்கிறது.

59. ''நெகுதற்கு ஒத்த நெஞ்சும், நேயத்தாலே ஆவி
உகுதற்கு ஒத்த உடலும் உடையேன்; உன்போல் அல்லேன்;
தகுதற்கு ஒத்த சனகன் தையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணால், போகக் காணேன்'', என்றான். (1756)

(நெகுதல்-நெகிழ்ந்து உருகுதல் / கசிதல்; உகுதல்-விடுதல் / பிரிதல்; தகுதல்-தகுதி; தையல்-சீதை; நேயம்-அன்பு)

''தசரதன் இராமனைப் பார்த்து, அன்பினால் நெகிழ்ந்து உருகிப் போகின்ற உள்ளமும், அன்பினால் உயிரைப் பிரிவதற்கேற்ற உடலும் கொண்டவன் நான்; உன்னைப் போல இளமையும், வன்னெஞ்சமும் கல் போன்ற உடலும் கொண்டவன் அல்லன்; உன் தகுதிக்கேற்ப சனக மன்னனின் மகளாகிய சானகியைக் கைப்பிடித்து மணக்கோலத்துடன் இவ்வயோத்தி மாநகர்க்குள் புகுந்த உன்னைக் கண்ட இந்தக் கண்களால், நீ இந்நகரை விட்டு தவக்கோலத்துடன் என்னை விட்டுப் பிரிந்து செல்லுதலைக் காண இயலாதவன் ஆனேன்'' என்று இரங்கிப் புலம்பினான்.

இராமன்பிரிவினால் அவன்மேலுள்ள பாசத்தால் உள்ளம் உருகி, உடல் மெலிந்து, உயிர் விடுவான் என்பது கருத்து. ''பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு'' என்பது பழமொழி; தகுதிக்கு ஒத்தல் என்பது பத்துப் பொருந்தங்கள்-அவையாவன : பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் என்பனவாம்; குலன், நலன், உரு, திரு என்பாரும் உளர். சானகியுடன் அயோத்தி நகரைவிட்டுப் போகக் காணேன் என்று கூறியதால் இராமனுடன் சானகியும் உடன் செல்வாள் என்பதைத் தசரதன் உணர்ந்திருந்தான் என்பதாம். இதனால் தான் இராமன் இருக்குமிடம் அயோத்தி என்ற பழமொழியும் உருவானதோ? நீ அவ்வாறு சென்றால் என் மனம் பொறாது; நான் உயிரை விட்டு விடுவேன் என்பது கருத்து.

60. ''எற்றே பகர்வேன் இனியான்? என்னே! உன்னின்பிரிய
வற்றே உலகம் எனினும், வானே வருந்தாது எனினும்,
பொற்றேர் அரசே! தமியேன் புகழே! உயிரே! உன்னைப்
பெற்றேன் அருமை அறிவேன்; பிழையேன்'' பிழையேன்''என்றான். (1757)

Koviloor Digital Library

(வற்றே-வல்லதே; உன்னில்-உன்னை; எற்றே-எவ்வாறு)

''பொன்னாலான தேரினை உடைய அரச குமரனே! என்னுடைய புகழுக்குக் காரணமானவனே! என் உயிரினும் மேலானவனே! உன்னைப் பிரிவதற்கு இந்த உலகம் வல்லமை படைத்திருந்தாலும், தேவர்கள் அதனால் வருத்தப்பட மாட்டார்கள் என்றாலும், உன்னை அரிதாகப் பெற்றெடுத்த தந்தையான நான் உன் அருமையினை நன்கு அறிவேன்; கைகேயிக்கு வரம் கொடுத்துப் பிழை செய்த யான், இனிமேல் பிழைத்திருக்க மாட்டேன். என் நிலையை உனக்கு எவ்வாறு எடுத்துரைப்பேன்'' என்று அரற்றினான் தசரதன்.

தசரதன் தன் மகனை ''அரசே'' என்று அழைப்பது நோக்கத்தக்கது. தன் மனத்தாலும் வாக்காலும் இராமனை அரசனாக ஏற்கனவே ஆக்கிவிட்டான்தசரதன். அதே நினைவு இன்னும் நெஞ்சில் நிலைத்திருக்க அவ்வாறு அரசே என அழைத்தான் என்பதாம். அயோத்தி நகர மக்களுக்கு இராமன் உயிர் போன்றவன். தேவர்கள் காரியமாகத் தான் அரக்கர்களை ஒழிப்பதற்காகத் தான் இராம அவதாரமே நிகழ்ந்திருக்கிறது, எனவே தேவர்களும் இதற்காக வருந்த வேண்டுவது இயல்பு தான். ஒரு வேளை அவர்கள் வருந்தாது, இதைத் தாங்கிக் கொள்ளும் வல்லமை பெற்றவர்களாயிருந்தாலும், உன்னைப் பெற்ற-தவமிருந்து பெற்றெடுத்த என்னால், உன் அருமையை முழுவதுமாக அறிந்த என்னால்-வருந்தாது இருக்கவோ, வல்லமையுடன் உயிர்வாழவோ இயலாது. எனவே நான் இறந்துபடுவேன் என்பதாம். ''பெற்றவர்க்கே தெரியும் பிள்ளையின் அருமை'' என்பது பழமொழி. பிழையேன்பிழையேன்என்பதற்குப் பிழை செய்த நான் இனி உய்ய மாட்டேன் என்றும் பொருள் கொள்ளலாம்.

61. ''அள்ளல் பள்ளப் புனல் சூழ்அகல் மாநிலமும், அரசும்
கொள்ளக் குறையா நிதியின் குவையும், முதலாம் எவையும்
கள்ளக் கைகேசிக்கே உதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளல் தனம், என்உயிரை மாய்க்கும்! மாய்க்கும்''! என்றான். (1758)

(அள்ளல்-சேறு; பள்ளம்-கடல் / ஆழம்; கள்ளம்-வஞ்சனை; மாய்க்கும்-கொல்லும்; உதவி-கொடுத்து; வள்ளல் தனம்-உதார குணம் / வள்ளன்மை)

''குழைந்த சேறுடையதும் ஆழமானதுமான கடல் சூழ்ந்த இந்தப் பரந்த பூமியையும், அதை ஆளுவதற்கு உரிய அரசு உரிமையையும், எவ்வளவு பேர் எவ்வளவு எடுத்துக் கொண்டாலும் குறையாது நிறைந்தே விளங்கும் செல்வப் பெருக்கையும் முதலிய இன்னும் உள்ள எல்லாவற்றையும், வஞ்சக எண்ணம் கொண்ட கைகேயிக்கே கொடுத்து விட்டு, என்றும் அழியாது நிலைத்த புகழைத் தேடிக் கொண்ட வள்ளன்மையாகிய உதாரகுணம், என் உயிரைக் கொல்லும், கொன்று விடும்'' என்று தசரதன் இரங்கிப் புலம்பினான்.

Koviloor Digital Library

நாடு, அரசுரிமை அதற்குத் துணைக் காரணமான செல்வம் மற்றும் எல்லாமும் அழிதலுக்குட்பட்டன. இவைகளை அவளுக்குக் கொடுத்ததனால் இராமன் என்றும் அழியாத உயர்ந்த நிலைத்த புகழைப் பெற்றான் என்பதாம்.

62. ''ஒலிஆர்கடல் சூழ் உலகத்து, உயர்வானிடை, நாகரினும்
பொலியா நின்றார் உன்னைப் போல்வார் உளரோ? பொன்னே!
வலியாருடையார்?'' என்றான்; ''மழுவாள் உடையான் வரவும்
சலியா நிலையாய் என்றால், தவிர்வார் உளரோ?'' என்றான். (1769)

(ஆர்-நிறைந்த; நாகர்-பாதலத்தார்; பொலியா-பொலிந்து / விளங்கி; சலியா-நடுங்காது / கலங்காது / தளராது; தவிர்தல்-பிரிதல்)

''பேரொலி மிக்க கடல்களால் சூழப்பட்ட இந்நிலவுலகத்திலும், உயர்ந்த வானுலகத்திலும், சிறந்து வாழும் பாதாள உலகத்திலும், ஆக இம் மூன்று உலகங்களிலும் உன்னைப் போல் சிறந்து விளங்குபவர்கள் யாரேனும் உள்ளனரோ? மூவுலகத்தாராலும் போற்றி மதிக்கப்படுபவன் நீ ஒருவனே; பொன் போன்றவனே! மழுப்படையை ஏந்திச் செருக்கோடு, ''என்னை விட வலிமை உள்ளவர்கள் இவ்வுலகில் யார் இருக்கிறார்கள்?'' என்று முழங்கிக் கொண்டு வந்த பரசுராமன், உன் எதிரில் வந்த போது கூடச் சிறிதும் கலங்காது மனம் தளர்ந்து நடுங்காது நிலைபெற்று நின்று அவன் தருக்கை அடக்கினாய் என்றால், உன் பேச்சுக்கு மறுபேச்சு சொல்லி உன்னைத் தடுப்பவர்கள் யாரும் இருக்கிறார்களோ?'' என்றான் தசரதன்.

பெறற்கு அருமையானதும், பேரொளி மிக்கதும், விலை மதிப்பற்றதுமான பொன்னை இராமனுக்கு அடைமொழியாக்கியது கூர்ந்து நோக்கத் தக்கது. நான் உன்னைக் காட்டுக்குச் செல்லாதே என்று சொல்லும் போது, என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நீ செல்லாமல் இருந்தால் உன்னைத் தடுத்துப் பேசி உன்னைக் காட்டிற்கு அனுப்பக் கூடியவர்கள் யாரேனும் இருக்கிறார்களோ? என்று குறிப்பால் தசரதன் கேட்டதாகவும் கொள்ளலாம்.

63. ''கேட்டே, இருந்தேன் எனினும், கிளர்வான் இன்றே அடைய
மாட்டேன் ஆகில் அன்றோ, வன்கண் என்கண்? மைந்தா!
காட்டே உறைவாய் நீ! இக்கைகேசியையும் கண்டு, இந்
நாட்டே உறைவேன் என்றால், நன்று என் தன்மை!'' என்றான். (1760)

(கிளர்-விளங்குகின்ற; இன்றே-இப்போதே; வன்கண்-கொடுமைத் தன்மை; என் கண்-என்னிடம்)

இராமா! நீ காட்டிற்குச் செல்லப் போகிறாய் என்பதைப் பிறர் சொல்லக் கேட்டறிந்தும், நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன் என்றாலும், விளக்கம் உற்ற வானுலகத்தை இப்பொழுது அடைய மாட்டேன் என்று நான் சொன்னால் அல்லவோ உலகத்தார் என்னை கொடுமைத் தன்மை

Koviloor Digital Library

மிக்கவன் என்று இகழ்வர்? மகனே! நீ காட்டிற்குச் சென்று வாழவும், நான் உயிருடனிருந்து என்கண் எதிரே இக்கைகேயியை நாள் முழுவதும் கண்டு கொண்டும் இருப்பேன் என்றால் என்னுடைய இயல்பு மிக நல்லதாகும் என்று தன்னைத் தானே இகழ்ந்து கூறிப் புலம்புகின்றான் தசரதன்.

நீ காட்டிற்குச் சென்று விடுவாய் என்று கூறியதும் நான் உடனே விண்ணுலகு எய்தி விடுவேன். அதன் பிறகும் வாழ்ந்து கொண்டு இக்கைகேசியின் முகத்தில் விழிக்கக் கூட மாட்டேன் என்பது கருத்து. எனவே தசரதன் இறப்பதற்கு முடிவெடுத்ததற்குக் காரணம் இராமனை விட்டுப் பிரிய நேரிடுமோ என்பது மட்டுமல்ல; இந்தக் கொடியவளைக் கண்டு கொண்டிருக்க வேண்டுமே என்ற வருத்தமும் தான் என்பது பெறப்படுகிறது. அவ்வாறு நான் உயிரோடு இருந்தால் என் தன்மை இகழ்ச்சிக்குரியதாகும் என்றான் என்பதாம். வன் கண்ணன் என்று உலகத்தார் கூறும் படியும், கைகேயியின் முகத்தில் விழிக்கும் படியும் வாழ்வதைக் காட்டிலும், இறப்பதே மேல் என்று தசரதன் முடிவு செய்கிறான்.

64. ''மெய்ஆர் தவமே செய்து, உடன் மிடல் மார்பு அரிதில் பெற்ற
செய்யாள் என்னும் பொன்னும், நிலமாது என்னும் திருவும்,
உய்யார்! உய்யார்! கெடுவேன்! உன்னைப் பிரியின், வினையேன்
ஐயா! கைகேசியை நேர் ஆகேனோ நான்?'' என்றான். (1761)

(ஆர்-பொருந்திய; மிடல்-வலிமை; நேர்-நிகர்/ஒப்பு; செய்யாள்-அரசச் செல்வம்; உய்யார்-பிழைத்திரார்)

''அன்பு மகனே! உண்மையான சிறந்த தவத்தைச் செய்து, உள்வலிமை பெற்ற மார்பில் தங்கும் அரிய வாய்ப்பினைப் பெற்ற செய்யாள் என்னும் திருமகளும், நிலமாது என்கின்ற பூதேவியும், நீ பிரிந்து சென்றால், உயிர் பிழைக்க மாட்டார்கள். இது நிச்சயம்; பாவியானவனும், தீவினை யாளனானவனுமாகிய நானும் உன்னைப் பிரிந்தால் உடனே உயிரை மாய்த்துக் கொள்வேன். அதன் பின்னரும் நான் உயிருடன் இருந்தால் எனக்கும் கைகேசிக்கும் என்ன வேறுபாடு? அவளோடு நிகராக வன்கண் உடையவனாக மாட்டேனோ?'' என்று இரங்கிப் புலம்பினான்.

திருமகளும் நிலமகளும் இராமனைத் தலைவனாகப் பெறத் தவம் செய்தனர் என்பது முன்பே கூறப்பட்டது. பிறரெல்லாம் தவம் கிடந்து பெறுதற்குரிய திருமகளும் நிலமகளும், தாங்களே உண்மையான பெருந்தவம் செய்து உன் மார்பில் உறையும் அரிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள் என்பது இராமனின் சிறப்பினைக் குறித்ததாகும். வாழ வேண்டியவர்களான அவர்கள் இருவருமே பிழைத்திருக்க மாட்டார்கள் என்னும் போது, வயதில் மூப்படைந்தவனான நான் இறவாது உயிர்வாழ்ந் திருப்பேனானால், எனக்கும் கைகேயிக்கும் ஒரு வேறுபாடும் இருக்காது என்பதாம். திருமகளும் நிலமகளும் திருமாலின் மார்பில் உறைகின்றனர் என்பது புராணக் குறிப்பு.

Koviloor Digital Library

65. ''பூண்ஆர் அணியும், முடியும், பொன்ஆசனமும், குடையும்
சேண்ஆர் மார்பும், திருவும், தெரியக் காணக் கடவேன்,
மாணா மரவற்கலையும், மானின் தோலும், அவை நான்
காணாது ஒழிந்தேன் என்றால் நன்றுஎன் கருமம்'' என்றான். (1762)

(ஆர்-அரிய; அணி-அணிகலன்கள்; ஆசனம்-அரியணை; சேண்-அகன்ற; மாணா-மாட்சிமை இல்லாத; வற்கலை-மரஉரி; கருமம்-நல்வினை; கடவேன்-உரிமையுடையவன் / கடமைப்பட்டவன்)

''அணியக் கூடிய அரிய அணிகலன்களும், மணி மகுடமும், பொன்னால் இயன்ற சிங்காசனமும் வெண் கொற்றக் குடையும், உனது அகன்ற மார்பும், அதில் வீற்றிருக்கின்ற வெற்றித் திருமகளும் ஆகிய அரசத் திருக் கோலத்தைத்தான் நான் என் கண்ணாரக் கண்டு களிக்கக் கடமைப்பட்டவன். அதை விடுத்துப் பெருமையற்ற மரப்பட்டையாலான வலிமையான மரவுரியை இடையிலும், மானின் தோலை மார்பிலும் அணிந்து கொண்டிருக்கின்ற தவக் கோலத்தைக் காணாது நான் இறந்து விட்டால் தான் என்வினை நல்வினையாகும்'' என்று இரங்கிப் புலம்பினான் தசரதன்.

மரவுரியும் மான் தோலும் பற்றற்ற முனிவர்கள் அணிய வேண்டுவன. அவற்றை மணி முடிசூட வேண்டிய நீ அணிவதைப் பார்க்க என் மனம் பொறுக்காது. எனவே அந்நிலையில் உன்னைக் காணாது நான் இப்போதே இறந்து விடுவது தான் நான் செய்யக் கூடிய நல்ல செயலாகும் என்றான் என்பதாம். ''பூ மருவு நறுங்குஞ்சிப் புன் சடையாய்ப் புனைந்து, பூந்துகில் சேர் அல்குல் காமர் எழில் விழல் உருத்துக் கலன் அணியாது, அங்கங்கள் அழகுமாறி, ஏமரு தோள் என் புதல்வன், யான் இன்று செயத்தக்கவனம் தான் சேர்தல், தூமறையீர். இது தகவோ? சுமந்திரனே! வசிட்டனே! சொல்லீர் நீரே!'' என்பது குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழி.

66. வசிட்டன் கூறுதல்

ஒன்றொடு ஒன்று ஒன்று ஒவ்வா உரைதந்து, ''அரசன் உயிரும்
சென்றான் இன்றோடு'' என்னும் தன்மைஎய்தித் தேய்ந்தான்;
மென்தோல் மார்பின் முனிவன், ''வேந்தே! அயரேல்! அவனை
இன்று ஏகாத வண்ணம் தகைவென் உலகோடு'', என்னா. (1763)

(ஒவ்வா-இயைபு இல்லாத / பொருத்தமல்லாத; தேய்தல்-மெலிவுறுதல்; அயர்தல்-வருந்துதல்; தகைதல்-தடுத்தல்; உலகு-நாடு / நாட்டு மக்கள்; இன்றே-இப்போதே; உலகம்-உயர்ந்தோர்) குளகப்பாடல்.

ஒன்றோடு ஒன்று பொருந்தாத சொற்களைக் கூறிப் புலம்பிக் கொண்டிருந்த தசரதன் அவனுடைய உயிரும் இப்போதே போயிற்று என்று கண்டார் கூறும் தன்மையை எய்தி மெலிவுற்றான். இதனைக் கண்ட மெல்லிய மானின்தோலை மார்பில் போர்த்திய வசிட்ட முனிவன் ''அரசே! வருந்தாதீர்கள்; இராமனை இப்பொழுது நாட்டை விட்டு நீங்காவண்ணம்,

Koviloor Digital Library

இந்நாட்டுப் பெரியவர்களோடும் மக்களோடும் சேர்ந்து சென்று, இயல்வன கூறித் தடுப்பேன்'' என்றான்.

ஆற்றாமையால் அரற்றுகிறான் அரசன். எனவே அவன் கூறும் வார்த்தைகள் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் இருத்தல் இயல்பே. தான் மட்டும் சென்று இராமனை வேண்டினால் அது ஒரு வேளை முடியாமற் போனாலும் போகலாம் என்று கருதிய முனிவன், நாட்டிலுள்ள உயர்ந்தோர்களையும், நாட்டு மக்களையும் உடன் அழைத்துக் கொண்டு சென்று, அவன் நாடு கடக்காத வண்ணம் தடுப்பேன் என்று தசரதனுக்கு உறுதி கூறித் தேற்றுகிறான்.

67. மன்னன் நிலை

முனிவன் சொல்லும் அளவில் ''முடியும் கொல்?'' என்று, அரசன்
தனி நின்று உழல்தன் உயிரைச் சிறிதே தகைவான்; இந்தப்
''புனிதன் போனால் இவனால் போகாது ஒழிவான்'' என்னா
மனிதன் வடிவம் கொண்ட மனுவும் தன்னை மறந்தான். (1764)

(தகைவான்-தடுத்து நிறுத்துதல்)

இவ்வாறு முனிவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, ''இவனால் இராமனைத் தடுத்து நிறுத்த முடியும் போலும்'' என்று கருதி, மன்னன் தான் வேறு எவர் துணையும் இன்றித் தனியே அல்லற் பட்டுக் கொண்டிருக்கின்ற-ஊசலாடிக் கொண்டிருக்கின்ற-உயிரைச் சற்று நேரம் தடுத்து நிறுத்தி, ''இந்தத் தூயவனான முனிவன் போய் இராமனிடம் பேசினால், ஒரு வேளை இராமன் நாட்டைவிட்டு நீங்காது இருப்பான்'' என்று நம்பிக்கையுடன், மனு என்னும் தரும தேவதையே மனித வடிவில் வந்தது போன்று நடுவு நிலை தவறாது ஆட்சி புரிபவனான தசரதன் சற்று நேரம் செயலற்றுத் தன்னை மறந்து மூர்ச்சையுற்றான்.

வசிட்டன் திரிகரணங்களாலும், மனம், மொழி, மெய் இவற்றால் தூய்மையுடையவன் ஆதலால் புனிதன் எனப்பட்டான். தனக்கு மந்திரங்களையும், அத்திர சாத்திரங்களையும் கற்பித்தவன் ஆதலால் இம்முனிவன் வேண்டினால் குரு மொழிக்கு மறுமொழி கூறாது, இராமன் ஏற்றுக் கொள்ளக்கூடும் என்று தசரதன் நம்பினான் என்பதாம்.

68. கோசலை புலம்புதல்

''மறந்தான் நினைவும் உயிரும் மன்னன்'' என்ன மறுகா,
''இறந்தான் கொல்லோ அரசன்?'' என்னா, இடருற்று அழிவாள்,
''துறந்தான் மகன் முன்எனையும்; துறந்தாய் நீயும்; துணைவா!
அறந்தான் இதுவோ ஐயா! அரசர்க்கு அரசே!'' என்றாள். (1765)

(மறுகா-மறுகி; மறுகுதல்-மனம் கலங்குதல்; உயிர் மறத்தல்-ஓய்தல் / சோர்தல்; என்னா-என்று)

Koviloor Digital Library

தன் கணவன் தசரதன் தன் உணர்வுடன் நினைவும் உயிரும் சோர்வுற்றான் என்று அறிந்து மனம் கலங்கி, அரசன் இறந்து விட்டானோ என்று அச்சமுற்றுத் துன்பமடைந்து மனம் அழிந்தாள் கோசலை. பின்னர் தசரதனைப் பார்த்து ''ஐயா! சக்கரவர்த்தியே! என் மகன் முன்னரேயே என்னைத்துறந்து சென்று விட்டான்; இப்பொழுது நீயும் என்னை விட்டுப் போய்விட்டால் என் நிலை என்ன ஆகும்? இதுபோலத் தாயை மகனும், வாழ்க்கைத் துணையைத் துணைவனும் விட்டு விட்டுப்போய் விடுதல் தான் அறம், தருமம் என்பதா?'' என்று கேட்டுப் புலம்புகிறாள்.

மகனைப் பிரிந்து வருந்தும் மனைவியின் துயரைத் துடைப்பது தானே ஒரு கணவனின் கடமை தருமம். அதை விடுத்து இப்போது இவனும் ஆறுதல் கூறாது, இறக்கப் போகிறானே என்று கருதி இது நியாயமா? என்று கேட்கிறாள் கோசலை.

69. கோசலை மன்னனைத் தேற்றுதல்

''மெய்யின் மெய்யே! உலகின் வேந்தர்க் கெல்லாம் வேந்தே!
உய்யும் வகைநின் உயிரை ஓம்பாது இங்ஙன் தேம்பின்,
வையம் முழுதும் துயரால் மறுகும்; முனிவனுடன் நம்
ஐயன் வரினும் வருமால்; அயரேல்; அரசே!'' என்றாள். (1766)

(ஓம்புதல்-பாதுகாத்துக் கொள்ளுதல்; தேம்புதல்-வருந்துதல்; மறுகும்-கலங்கும்; அயர்தல்-வருந்துதல்; ஐயன்-மகன் / இராமன்)

உண்மையின் வடிவமே! இவ்வுலகத்து அரசர்களுக்கெல்லாம் பேரரசே! நாங்கள் எல்லாம் பிழைத்திருக்க வேண்டுமாயின், நீ உன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அவ்வாறு செய்யாமல் நீ இவ்வாறு வருந்திக் கொண்டிருந்தாயானால் இவ்வுலகம் முழுவதும் துன்பத்தால் கலக்கமடையும். வசிட்ட முனிவனுடன் நம் மகன் இராமன் திரும்பி வந்தாலும் வருவான்; எனவே நீ வருந்தாதே! என்று கூறித் தசரதனைத் தேற்ற முயலுகிறாள் கோசலை.

இராமன் திரும்பி வருவதைக் காண்பதற்காகவாவது நீ உயிர் துறவாமல் இருக்க வேண்டும் என்பது கோசலையின் தேறுதல் மொழி.

70. தசரதன் கூறுதல்

என்று என்று அரசன் மெய்யும், இருதாள் இணையும், முகமும்
தன்தன் செய்யகையால் தைவந்திடு கோசலையை
ஒன்றும் தெரியா மம்மர் உள்ளத்து அரசன் மெள்ள
''வன்திண் சிலைநம் குரிசில் வருமே வருமே'' என்றான். (1767)

(மெய்-உடம்பு, தைவருதல்-தடவிக் கொடுத்தல்; தெரியா-தெளிவில்லாத; மம்மர்-மயக்கம்; சிலை-வில்; குரிசில்-ஆண்மகன்; ஒன்றும்-சிறிதும்)

Koviloor Digital Library

என்று இவ்வாறு பலவாறாகத் தேற்றிய கோசலை, மன்னனது உடம்பையும், பெரிய இரண்டு பாதங்களையும், முகத்தையும், தன்னுடைய சிவந்த கைகளினால் அன்போடு வருடிக் கொடுத்தாள். சிறிதும் தெளிவில்லாத மயக்க நிலையில் இருந்த அரசன் அதனால் மெல்ல உணர்வு பெற்று கைகேயியை நோக்கி ''வலிய திண்ணிய கனத்த கட்டமைந்த வில்லை ஏந்திய ஆண்மகனாகிய நம் மகன் இராமன் இப்போது வந்துவிடுவானா, இப்போது வந்து விடுவானா என்று பலமுறை கேட்டான்''.

உயிர் உடம்பில் உள்ளது என்பதை அறிவதற்கு உடம்பில் வெப்பம் இருக்கிறதா என்று பார்த்தல் இயல்பு. முகம் இங்கு நெற்றியைக் குறித்தது. எனவே அவள் உடம்பையும் நெற்றியையும் பாதங்களையும் தொட்டுத் தடவிக் கொடுத்தாள் என்பதாம்.

71. ''வன்மாயக் கைகேசி, வாக்கால், என்தன் உயிரை
முன் மாய்விப்பத் துணிந்தாள்; என்றும், கூனிமொழியால்
தன்மாமகனும் தானும் தரணி பெறுமாறு உன்னி
என் மாமகனைக் கான்ஏகு என்றாள் என்றாள்'', என்றான். (1768)

(வன்-வலிய; மாயம்-வஞ்சனை; வாக்கு-சொல்)

''வன்மையான உள்ளமும், வஞ்சனையான எண்ணமும் கொண்ட கொடியவளாகிய கைகேயி, தன் வாக்குச் சாதுர்யத்தாலும், வரத்தாலும் என்னுடைய உயிரைப் போக்குவதற்கு முன்பே துணிந்து விட்டாள்; கூனியின் வஞ்சக வார்த்தைகளால் கைகேயி மனம் மாறி, தானும், தன்னுடைய சிறந்த மகனுமாகிய பரதனும் இவ்வுலக அரசுரிமையைப் பெறுவதைக் கருதியதோடு மட்டுமல்லாமல் என்னுடைய சிறந்த மூத்த புதல்வனாகிய இராமனையும் காட்டிற்குப் போகச் சொல்லித்தானே கட்டளையும் இட்டு விட்டாள்'' என்று பலமுறை தசரதன் கோசலையிடம் தெரிவித்தான்.

கைகேயியின் மனந்திரிந்ததற்குக் காரணம் கூனியின் துர்போதனையே என்பதைத் தசரதன் தன் நுண்ணிய அறிவினால் எண்ணி அறிந்தான் என்பதாம். இந்தச் செய்தி வான்மீகத்தில் கூறப்படவில்லை. ஆனால் அத்யாத்ம இராமயணம், இந்தச் செய்தியை இராமனுக்கு முடிசூட்டும் முதல் நாளே, தசரதன், கோசலை, சுமித்திரை ஆகிய மூவரும் இரகசியமாக அறிந்திருந்தனர் என்று கூறுகிறது. கம்பன் இது நிகழ்ந்த உரிய இடத்தில் கூறாது விடுத்து, இங்குக் கூறுகிறான்.

72. தசரதன் சாப வரலாறு கூறத் தொடங்குதல்

பொன்ஆர் வலயத் தோளான் கானோ புகுதல் தவிரான்;
என்ஆர் உயிரோ அகலாது ஒழியாது; இது கோசலை! கேள்;
'முன்னாள் ஒரு மாமுனிவன் மொழியும் சாபம் உளது'' என்று
அந்நாள் உற்றது எல்லாம், அவளுக்கு, அரசன் அறைவான். (1769)

Koviloor Digital Library

(ஆர்-இயன்ற; வலயம்-தோள்வளை; தவிர்தல்-நீங்குதல்; சாபம்-வெகுண்டு கூறும் மொழி; முனிவன்-சலபோசனன் / நீரையே ஆதாரமாக உடையவன்)

''கோசலையே! நான் கூறுவதைக் கேள்; பொன்னால் இயன்ற வாகுவலயத்தை அணிந்த தோள்களை உடைய இராமன், கானகம் செல்லுவதைத் தவிர்க்க மாட்டான். போயே தீர்வான்; அதனால் என் அருமையான உயிர் என்னை விட்டுப் போகாமல் நில்லாது; போயே தீரும்; இதற்கு ஒரு காரணம் இருக்கிறது. முன்பு ஒரு காலத்தில் என் இளமைப் பருவத்தில் ஒரு பெரிய முனிவன் எனக்கு அளித்த சாபம் ஒன்று இருக்கிறது'', என்று கூறி, அப்பொழுது நிகழ்ந்தவை அனைத்தையும் ஒன்று விடாமல் தசரதன் கோசலைக்குக் கூறத் தொடங்கினான். வனம்

இராமன் வனம் புகுவதும் தான் வானம் புகுவதும் நடந்தே ஆக வேண்டிய நிகழ்ச்சிகள் என்று கூறி அதற்கான காரணத்தையும் விவரிக்கத் தொடங்குகிறான் தசரதன். அகலாது ஒழியாது என்று இரு எதிர்மறைச் சொற்களைக் கூறி அகலும் என்ற உடன்பாட்டுப் பொருளைத் தந்த நயம் நோக்கத்தக்கது.

இது முதல் *16* பாடல்களில் சாப வரலாற்றை எடுத்துக் கூறுகிறான் கம்பன். ஆனால் வான்மீகம் இவ்வரலாற்றை இந்த இடத்தில் கூறவில்லை. இராமனை வனத்தில் விட்டு விட்டு மீண்டு வந்த சுமந்திரன் செய்தி சொல்ல அது கேட்டு வருத்த முற்றிருந்த கோசலையிடம், மூர்ச்சை தெளிந்த தசரதன் கூறுவதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

73. சாப வரலாறு [16 பாடல்கள்]

வெய்ய கானத்திடையே, வேட்டைவேட்கை மிகவே,
ஐய சென்று கரியோடு அரிகள் துருவித் திரிவேன்;
கையிற் சிலையும் கணையும்கொடு, கார்மிருகம் வரும் ஓர்
செய்ய நதியின் கரைவாய்ச் சென்றே மறைய நின்றேன். (1770)

(வேட்கை-விருப்பம்; வெய்ய-கொடிய; ஐய-வியக்கத்தக்க / அழகான; கரி-யானை; அரி-சிங்கம்; துருவி-தேடி; கார்மிருகம்- யானைகள்; செய்ய-செம்மையான)

முன்பு ஒரு காலத்தில், வேட்டையாடுதலில் மிக்க விருப்பம் கொண்டு, கொடிய காட்டினிடையே, வியக்கத்தக்க யானைகளோடு சிங்கங்களையும் தேடித் திரிந்த நான், கையில் வில்லையும் அம்பையும் ஏந்திக் கொண்டு, அச்சம் தரக்கூடிய கரிய யானைகள் நீர் பருக வரும் ஒரு செம்மையான நதியின் கரையின் அருகில் சென்று, எதன் கண்ணுக்கும் புலனாகாதவாறு மறைந்து நின்றேன்.

உயிர்களுக்கும் பயிர்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வனவிலங்குகளை வேட்டையாடுதல் மன்னனுடைய கடமையுமாகும்.

Koviloor Digital Library

நேரே, அவற்றின் கண்களுக்குப் புலப்படுமாறு நின்றிருந்தால் மிருகங்கள் நீர்க்கரைக்கு வாராது. எனவே மறைய நின்றான். செய்ய நதியின் கரை என்றதனால் மனிதரும் தண்ணீர் எடுக்க வசதியான ஒரு துறை, ஒழுங்கான ஆறு என்பது புலப்படும்.

74. ஒரு மாமுனிவன் மனையோடு, ஒளி இன்று இலவாய் நயனம்
தரு மாமகவே துணையாய்த் தவமே புரி போழ்தினின் வாய்
அரு மாமகனே புனல்கொண்டு அகல்வான் வருமாறு அறியேன்
பொரு மாகணை விட்டிடலும் புவி மீதுஅலறிப் புரள. (1771)

(ஒன்றுதல்-பொருந்துதல்; பொருதல்-தாக்குதல்; ஆறு-வகை / வழி; நயனம்-கண்கள்) (குளகப்பாடல்)

சலபோசனன் என்ற ஒரு பெரிய முனிவர், தன் மனைவியுடன், தங்கள் இருவர் கண்களிலும் ஒளி பொருந்தி இல்லாமையால்- பார்வை யற்றதனால்-தாங்கள் பெற்றெடுத்த சிறந்த புரோசனன் என்ற மகனையே தங்களுக்குக் கண் போன்று துணையாகக் கொண்டு, தவம் இயற்றி வரும் சமயத்தில், அந்த அரிய மைந்தன் தாய் தந்தையர்க்குத் தாகம் தீர்க்க நீர் கொண்டு வரும் பொருட்டு அந்நதிக் கரையை அடைந்து குடத்தில் நீர் முகக்க, அது யானையின் நீர் பருகும் சப்தமோ என்று தவறாகக் கருதி, தாக்குகின்ற சிறந்த கணை ஒன்றை விட்டேன். அது அவன் மீது தாக்கி, அவன் தரையில் விழுந்து அலறிப் புரண்டபொழுது.

தாய் தந்தையர் இருவர்க்கும் கண்ணொளி இலாமையால் தம் மைந்தரையே கண் போன்று துணையாகக் கொண்டிருந்தனர். அவர்கள் தாகம் தீர்க்கும் பொருட்டு நீர் கொண்டுவர நதிக் கரையை அடைந்தான் மகன். வாய் குறுகிய பாத்திரத்தில் நீர் மொண்டு கொண்டிருக்கும் போது, யானை நீர் குடிக்கும் போது எழும் சப்தம் போல் இருக்கவே, சப்தத்தினாலேயே அது எந்த மிருகம் என்பதை அறியக் கூடிய சப்தவேதி என்னும் வித்தையை அறிந்திருந்த தசரதன், அதன் உருவத்தைக் கவனிக்காமல் சப்தத்தைக் கொண்டே தன் வில்லிலிருந்து அம்பினை ஏவினான். அது அம்மகனைத் தாக்க அவன் தரையில் விழுந்து புரண்டு அரற்றினான்.

சப்தவேதி என்பது ஒலி வரும் வழியே சென்று ஒலிக்குக் காரணமான பொருளைத் தாக்கவல்ல அம்பு.

75. புக்குப் பெருநீர் நுகரும் பொருபோதகம் என்று, ஒலிமேல்
கைக்கண் கணைசென்றது அலால் கண்ணில் தெரியக் காணேன்;
அக்கைக் கரியின் குரலே அன்று ஈது என்ன வெருவா,
மக்கள் குரல் என்று அயர்வேன்; மனம்நொந்து அவண் வந்தனென் ஆல். (1772)

(நுகரும்-குடிக்கின்ற; பொரு-போர் செய்யும்; போதகம்-யானைக் கன்று; வெருவா-வெருவி / அஞ்சி; அயர்தல்-சோர்தல்)

Koviloor Digital Library

அவ்வாறு நீர்த் துறையில் புகுந்து மிக்க நீரைப்பருக வருகின்ற போர் செய்யும் யானைக் கன்று என்று அது நீர் குடிக்கும் ஒலியைக் கேட்டு என் கையிலிருந்த அம்பு சென்றதே அல்லாமல், நான் அதனைக் கண்களால் காணவில்லை; இந்த அலறலைக் கேட்டபிறகு தான், இது துதிக் கையை உடைய யானையின் அலறல் அன்று இது மனிதனின் குரல் தான் என்று தீர்மானம் செய்து அஞ்சி, சோர்ந்து போனேன். பின்னர் மனம் நொந்து அவன் இருந்த இடத்தை அடைந்தேன்.

குறுகிய வாயையுடைய குடத்தில் நீர் முகக்கும் போது எழுகின்ற ஒலிக்கும், யானைநீர்பருகும்போது எழுகின்ற ஒலிக்கும் ஒற்றுமை உண்டு. வேறுபாடு தெரியாது. எனவே தசரதன் மயங்கினான் என்பதாம்.

76. கையும் கடனும் நெகிழக் கணையோடு உருள்வோற் காணா
வெய்ய தனுவும் மனனும் வெறிது ஏகிடவே, வீழா
''ஐயன்! நீ தான் யாவன்? அந்தோ! அருள்க'', என்று அயரப்
பொய்ஒன்று அறியா மைந்தன், ''கேள் நீ'' என்னப் புகல்வான். (1773)

(கடன்-குடம்; வெய்ய-கொடிய; தனு-வில் / உடம்பு; வெறிது-பயனற்றது / உணர்வற்றது; கடம்-கமண்டலுமாம்)

கையிலிருந்த குடம் நெகிழ்ந்து கீழே விழ, அவன் உடம்பில் தைத்திருந்த அம்பினோடு உருண்டு கொண்டிருந்தவனைக் கண்டு, கொடிய வில்லும், என் மனமும் வெறிதாகிப் பயனற்றுப் போய்விடவே, கீழே விழுந்து ''மகனே! நீ யார்? ஐயோ? தயது செய்து கூறுவாயாக! என்று சோர்ந்து போய் வினவ, பொய் என்ற ஒன்றையே அறியாத சத்திய சீலனான அம்மைந்தன் நான் கூறுவதை நீ கேட்பாயாக!'' என்று தன் வரலாற்றைக் கூறத் தொடங்கினான்.

கையில் இருந்த வில் பயனற்றதாகக் கீழே விழவும், உடம்பு உயிரற்ற வெற்றுடம்பு போல் ஆகவும், உள்ளம் உணர்வற்றுப் போகவும் மண்மேல் அவன் வீழ்ந்தான் என்பதாம். மைந்தன் பருவத்தால் இளையவன் ஆயினும், அவன் அணிந்திருந்த உடையினால் அவனும் முனிவன் குமாரன் தான் என்பது கருதி ''அருள்வாய்'' என்றான் தசரதன் என்பதாம்.

77. ''அந் நான்மறையோன் வழியில் அருள் காசிபன் நன் மைந்தன்
மின்ஆர் புரிநூல் மார்பன் விருத்தசேனன் மெய்ப்புதல்வன்
நன் னால்மறைநூல் தெரியும் நாவான் சலபோசன் எனச்
சொன்னான் முனிவன் தரு சுரோசனன்யான்'' என்றான். (1774)

''நான்கு மறைகளுக்கும் உரியவனான பிரமனின் வழிவந்தவன் காசிபன்; அவனுடைய புதல்வன், மின்னல் போல் ஒளிவிடும் முப்புரி நூல் அணிந்த மார்பை உடைய விருத்தேசனன் அவனுடைய உண்மை மிகுந்த புதல்வன். நல்ல நான்கு வேதங்களையும் ஓதி உணர்ந்தவனும், நாவன்மை உடையவனான சலபோசனன் என்று பெயர் சொல்லுகின்ற முனிவன் ஈன்றெடுத்த மைந்தன் நான் என் பெயர் சுரோசனன் என்பதாகும்'' என்றான்.

Koviloor Digital Library

பிரமன்-காசிபன்-விருத்தேசனன்-சலபோசனன்- சுரோசனன் என்பது குலமுறை. பெரும்பலான சுவடிகள் இதை மிகைப் பாடல் என்றே கருதியிருக்கின்றன. தசரதன் சாப வரலாற்றைக் கூறுவதால் சுரோசனனின் முன்னோர்கள் பற்றித் தெரிந்து கொள்ளுதல் பொருந்தும் என்பதால் நேராகவே பாடலாகக் கொள்ளப்பட்டது.

78. ''இருகண்களும் இன்று யாய்க்கும் எந்தைக்கும்; இங்கு அவர்கள்
பருகும் புனல் கொண்டு அகல்வான் படர்ந்தேன், பழுது ஆயினதால்;
இருகுன்றனைய புயத்தாய்! இபம் என்று உணராது எய்தாய்;
உருகும் துயரம் தவிர் நீ; ஊழின் செயல் ஈது என்றே'' (1775)

(ஆய்-தாய்; படர்தல்-வருதல்; இபம்-யானை; அகல்வான்-போகும் பொருட்டு; ஊழி-விதி)

''என்னுடைய தாய்க்கும் தந்தைக்கும் இருகண்களும் கிடையாது. இங்கு அவர்கள் பருகுவதற்காக நீர் கொண்டு செல்லுவதற்காக நான் வந்தேன். நான் வந்த காரியம் பழுதாயிற்று. நிறைவேறவில்லை. இரண்டு பெரிய மலைகளைப்போன்ற தோள்களைஉடையவனே! நீ மனிதன்என்று கருதாமல், யானை என்று தவறாகக் கருதித் தானே அம்பு எய்தாய். எனவே இது நீயாகச் செய்த செயலன்று, இது விதியால் நிகழ்ந்த செயல் என்று உணர்ந்து, நீ எனக்காக மனம் நொந்து உருகுவதைத் தவிர்ப்பாயாக!'' என்றான் முனிகுமாரன் சுரோசனன்.

உருகும்துயரம் என்பது, தன்னால் அவன் உயிர் இழக்க நேர்ந்ததே என்று உள்ளமும் உடம்பும் நீராய் உருகி வருந்துதல்.

79. உண்நீர் வேட்கை மிகவே, உயங்கும் எந்தைக்கு, ஒரு நீ
தண்ணீர் கொடுபோய், அளித்து, என்சாவும் உரைத்து, ''உம்புதல்வன்
விண் மீது அடைவான் தொழுதான் எனவும் அவர்பால் விளம்பு''என்று
எண் நீர்மையினான், விண்ணோர் எதிர்கொண்டிட, ஏகினன் ஆல். (1776)

(வேட்கை-விருப்பம்; உயங்கும்-வருந்தும்; ஒரு-ஒப்பற்ற; விளம்பு-சொல்; எண்-மதிக்கத்தக்க; நீர்மை-தன்மை / பண்புகள்)

''தண்ணீர் பருக வேண்டும் என்ற விருப்பத்தினால், வருந்துகின்ற என் தாய் தந்தையர்க்கு, ஒப்பற்றவனான நீ குளிர்ந்த நீரைக் கொண்டு போய்க் கொடுத்து, என்னுடைய மரணத்தைப் பற்றியும் தெரிவித்து, ''உங்கள் புதல்வன் சுவர்க்க லோகம் சென்றான்; செல்லும் போது உங்களை வணங்கிப் போனான்'' எனவும் தேவர்கள் அவனை எதிர்கொண்டு அழைக்க, விண்ணுலகு அடைந்தான்'' எனவும் அவர்களிடம் சொல்லுவீராக என்று யாவரும் மதிக்கத்தக்க நற்குணங்களையுடைய சுரோசனன் கூறினான். என்று தசரதன். கூறினான்

தசரதன்?தான் தன்னைக் கொன்றிருக்கிறான் என்று தெரிந்தும் அவனை ஒரு நீ, ''ஒப்பற்றவனாகிய நீ என்று அழைக்கிறான் சுரோசனன். காரணம்

Koviloor Digital Library

தான் செய்த தவறுக்கு மிக வருந்தி இரங்கும் இயல்பு அவனிடம் இருந்தமையை சுரோசனன் கண்டதனால் தான் என்க. நல்வினை செய்தோர் கொலை செய்யப்பட்டாலும், நல்லுலகம் சேர்வர் என்பது விதி. எடுத்துக்காட்டு கோவலன். கோவலனும் கொலையுண்டவன் தான். அவனும் விண்ணுலகு புகுந்தான் என்பார்'' இளங்கோவடிகள். அவனை விண்ணோர் எதிர்கொண்டழைக்கக் காரணம், தன் உயிர் பிரியும் போதும் தன்தாய்தந்தையரை எண்ணி வணங்கிய மதிக்கத்தக்க நற்பண்பினால்தான் என்பது தெரியவரும்.

80. மைந்தன் வரவே நோக்கும் வளமாதவன்பால், மகவோடு
அம்தண்புனல் கொண்டு அணுக, ''ஐயா! இதுபோது அளவாய்
வந்துஇங்கு அணுகாய்; என்னோ வந்தது? என்றே நொந்தேம்;
சந்தம் கமழும் தோளாய்! தழுவிக் கொளவா'', எனவே. (1777)

(அம்-அழகிய / சுவைமிக்க; நொந்தேம்-வருந்தினோம்; சந்தம்-சந்தனம்; நோக்கும்-மனத்தால் நோக்குதல் / நோக்கல் நோக்கம்; (குளகப்பாடல்)

தன் மகன் வருகையை எதிர் நோக்கிக் காத்திருக்கும் வளமையான தவத்தினையுடைய அவன் தந்தை சலபோசனிடத்தில், மகனின் இறந்த உடலைத் தன் தோள் மீது சுமந்து கொண்டும், சுவை மிக்க குளிர்ந்த தண்ணீரையும் குடத்தில் கொண்டு வந்து அவர்களைத் தசரதன் நெருங்கவும், தங்கள் மகன் தான் வருகிறான் என்று எண்ணிய முனிவன். ''மகனே! இவ்வளவு நேரம் இங்கு நீ வந்து சேராமையால், உனக்கு ஏதோ இடையூறு வந்தது என்று எண்ணி வருந்தினோம்; சந்தன மணம் கமழும் தோள்களையுடைவனே! நாங்கள் தழுவிக் கொள்ளும் படியாக எங்கள் அருகில் நெருங்கி வா'' என்றான்.

நோக்கும் என்பது இங்கு மனத்தால் நோக்குவதைக் குறிக்கும். இது நோக்கல் நோக்கம் எனப்படும். இறந்த மகனின் உடலைத் தன் தோளில் சுமந்து கொண்டு வந்ததாகக் கம்பனும் காளிதாசனும் கூற, வான்மீகியோ, அவன் இறந்து கிடந்த இடமாகிய நதிக்கரைக்குத் தாய் தந்தையரை அழைத்துச் சென்று தொட்டு பார்க்கும்படி செய்தான் என்கின்றார். அம் என்பது அழகைக் குறிக்கும். நீருக்கு அழகு சுவை. எனவே இங்கு சுவையுள்ள குளிர்ந்த நீர் என்று பொருள் கொள்ளப்பட்டது. தன் மகன்தான் சந்தன மாலை அணிந்து கொண்டு வருகிறான் போலும் என்று மனத்தால் அறிந்த முனிவன் சந்தம் கமழும் தோளாய் என்றார்.

81. ''ஐயா! யான் ஓர் அரசன்; அயோத்தி நகரத்து உள்ளேன்;
மைஆர் களபம் துருவி, மறைந்தே வதிந்தேன் இருள்வாய்;
பொய்யா வாய்மைப் புதல்வன் புனல் மொண்டிடும் ஓதையின்மேல்
கைஆர் கணை சென்றது அலால், கண்ணில் தெரியக் காணேன்''. (1778)

(மை-கருமை; ஆர்-பொருந்திய; களபம்-யானைக்கன்று; துருவி-தேடி; தெரிய-தெளிவாக; ஓதை-ஓசை; பொய்யா-குற்றமில்லாத்)

Koviloor Digital Library

''முனிவர் பெருமானே! நான் கோசல நாட்டு அரசன். அயோத்தியில் வாழ்ந்து வருபவன். வேட்டையாடும் எண்ணத்துடன் கரிய நிறம் பொருந்திய யானைக் கன்றுகளைத் தேடி இருட்டில் மறைந்து நின்றேன். அப்பொழுது குற்றமில்லாத வாய்மையுடைய தங்கள் புதல்வன் குடத்தில் நீர் முகக்கும் ஒலி கேட்டது. அது யானை நீர் குடிக்கும் ஒலி என்று கருதி, அவனைப் பார்க்காமல், ஒலியை மட்டும் கேட்டு என்னுடைய கையிலிருந்த அம்பு என் வில்லிலிருந்து சென்று விட்டது. அதனைத் தவிர நான் அவனைக் கண்ணால் தெளிவாகக் காணவில்லை. கண்டிருந்தால் எய்திருக்க மாட்டேன்''

கண்ணால் காணுமிடத்தில் இருந்தால் நீர்த் துறைக்கு யானைகள் வாராது. எனவே இருட்டில் மறைந்திருந்தேன். செவிப் புலனால் அறிந்ததன்றிக் கட்புலனால் அறியாமைக்குக் காரணம் நான் இருட்டில் இருந்ததும் மறைந்திருந்ததுமே காரணங்களாகும். இலக்கை நேரே காணமேலேயே ஓசையின் மேற்சென்று இலக்கைத் தாக்கவல்ல சப்தவேதி என்ற அம்பினை எய்தேன் என்கிறான். இது அறிவு பூர்வமாக நிகழ்ந்த செயலன்று தன்னை அறியாமல் நிகழ்ந்தது என்றும் கூறுகிறான்.

82. வீட்டுண்டு அலறும் குரலால் வேழக்குரல் அன்று எனவே
ஓட்டந்து எதிரா, ''நீ யார்?'' என, உற்ற எலாம் உரையா,
வாட்டம் தரும் நெஞ்சினனாய் நின்றான் வணங்கா வானோர்
ஈட்டம் எதிர் வந்திடவே, இறந்து ஏகினன் விண்ணிடையே. (1779)

(வீட்டல்-வீழ்த்துதல் ./ சொல்லுதல்; வேழம்-யானை; ஓட்டாது-ஓடி / ஓட்டம் தந்து; எதிரா-எதிரே / நேரே; உரையா-உரைத்து; வணங்கா-வணங்கி; ஈட்டம்-கூட்டம்)

''என்னுடைய அம்பால் வீழ்த்தப்பட்டு அதனால் அலறும் குரல் மனிதக் குரலாக இருக்கவே, இது யானையின் குரல் அல்லவே! ஏதோ தவறு நடந்து விட்டது என்று எண்ணிப் பதை பதைத்து ஓடிப்போய் அவன் எதிரே நின்று அவனைக் கண்டு, ''நீ யாரப்பா?'' என்று கேட்டேன். அவன் அங்கு நிகழ்ந்தனவற்றையெல்லாம் கூறினான். தான் வந்த காரியம் பழுதானமையினால் நெஞ்சில் துக்கம் மிகக் கொண்டு செய்வதறியாது திகைத்து நின்று உங்களைத் தொழுதான்; அதற்குள் தேவர்கள் கூட்டம் விண்ணில் எதிர் வந்து நின்று அழைக்கவே, இறந்து விண்ணுலகம் சென்றடைந்தான்'' என்றான் தசரதன்.

வாட்டம் தரும் நெஞ்சு என்பது தான் வந்த காரியம் பழுதானமையினாலும், தன்னை இழந்தமையால் கண்களற்ற பெற்றோர் முதுமையால் உதவுவாரின்றி வாடுவரே என்ற வாட்டம் என்பதாம்.

83. ''அறுத்தாய் கணையால் எனவே அடியேன் தன்னை, ஐயா!
கறுத்தே அருளாய்; யானோ கண்ணில் கண்டேன் அல்லேன்,

Koviloor Digital Library

மறுத்தான் இல்லான் வனம் மொண்டிடும் ஓதையின் எய்தது அலால்
பொறுத்தே அருள்வாய்'' என்னா, இருதாள் சென்னி புனைந்தேன். (1780)

(அறுத்தல்-கொல்லுதல் / எய்தல்; கறுத்தல்-கோபித்தல்; மறு-குற்றம்; வனம்-நீர்; சென்னி-தலை; புனைதல்-சூடிக்கொள்ளுதல்)

''உனது அம்பினால் என் ஒரே மகனைக் கொன்றுவிட்டாய்'' என்று என்னைத் தாங்கள் கோபித்துக் கொள்ளாதீர்கள். ஐயா, குற்றமற்ற அவன் நீர் முகக்கும் ஓசையை மட்டும் கேட்டு நான் சப்தவேதி என்ற ஒலி மேற்சென்று தாக்கும் அம்பினை எய்தேனே அல்லாமல் நான் உங்கள் மகனை என் கண்களால் பார்க்கவே இல்லை; எனவே என் பிழையைப் பொறுத்தருள்வீராக என்று சொல்லி அம்முனிவனின் இருதாள்களையும் என் முடிபட வணங்கினேன்'' என்று கோசலையிடம் தசரதன் கூறினான்.

இது அறிந்து நிகழ்ந்த குற்றம் அன்று என்பதனாலும், இறந்து விட்டவனின் பெற்றோர்கள் தவம் இயற்றும் முனிவர்கள் என்பதனாலும் ''கறுத்து அருளாய்; பொறுத்து அருள்வாய்'', என்று அருளுதலை இணைத்து மரியாதையாகக் கூறினான் என்பதாம். காரணம் முனிவர்கள் அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவை தப்பாமற் சென்றடையும் என்பதால், தாள் மேல் தலையுறப் பணிதல் , சென்னி புனைதல், என்பன சினங்கொள்ளாது பிழை பொறுத்து மன்னித்தருள வேண்டும் என வேண்டினான் என்பது கருத்து.

84. ''வீழ்ந்தார்; அயர்ந்தார்; புரண்டார்; விழி போயிற்று இன்று'' என்றார்
ஆழ்ந்தார் துன்பக் கடலுள்; ஐயா! ஐயா! என்றார்;
''போழ்ந்தாய் நெஞ்சை'' என்றார்; ''பொன்னாடதனில் போய் நீ
வாழ்ந்தே இருப்பத் தரியேம்; வந்தேம்; வந்தேம் இனியே!'' (1781)

(அயர்தல்-தன் நிலை மறத்தல்; போழ்தல்-பிளத்தல்; தரித்தல்-பொறுத்திருத்தல்; பொன்னாடு-சுவர்க்கம்; இனியே-இப்பொழுதே)

தன் மகன் இறந்து விட்டான் என்ற செய்தியை நான் சொல்லக் கேட்ட அப்பெற்றோர், மண்ணில் வீழ்ந்தார்கள்; தம் நிலை மறந்து சோர்ந்து போயினர்; தரையில் விழுந்து புரண்டனர்; இவ்வளவு நாள் எங்களுக்குக் கண்ணுக்குக் கண்ணாக இருந்து எங்களைக் காப்பாற்றிய எங்கள் மகன் இறந்து போனதனால் இன்று தான் எங்களுக்கு உண்மையிலேயே கண்கள் போயிற்று என்று உணர்கிறோம் என்றனர்; புத்திர சோகமாகிய துன்பக்கடலுள் ஆழ்ந்தனர்; இறந்த தன் மகனை எண்ணி ஐயா! ஐயா! என்று அரற்றினர்; நீ இறந்து எங்கள் இதயத்தைப் பிளந்து விட்டாய் என்றனர்; நீ மட்டும் சுவர்க்கலோகம் சென்று நாங்கள் இம்மண்ணுலகத்தில் வாழ்ந்திருப்பதை எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே நாங்களும் இப்பொழுதே உன்னைத் தொடர்ந்து அங்கே வந்து விடுகிறோம் வந்துவிடுகிறோம் என்று பல முறை கூறிப் புலம்பினார்கள்.

Koviloor Digital Library

தமக்குக் கண்களில்லாத போதும், தம் மகனையே தம் கண்களாகக் கொண்டிருந்தனர் என்பது கருத்து.

85. என்று என்று அயரும் தவரை, இருதாள் வணங்கி, ''யானே
இன்று உம்புதல்வன்; இனி, நீர்ஏவும் பணி செய்திடுவேன்;
ஒன்றும் தளர்வுற்று அயரீர்; ஒழிமின்இடர்''; என்றிடலும்
"வன்திண்சிலையாய்! கேண்மோ?" எனவே, ஒருசொல் வகுத்தான். (1782)

(அயர்தல்-சோர்தல்; தவர்-தவமுதியவர்கள்; இன்று- இனிமேல்; ஒன்றும்-சிறிதும்; அயர்தல்-வருந்துதல்; இடர்-துன்பம்; வகுத்தல்-சொல்லுதல் / வகைப்படுத்திக் கூறுதல்; சொல்-கருத்து)

என்று இவ்வாறு பலப்பல கூறிச் சோர்வுறும் தவமுதியவர்களின் இரண்டு தாள்களையும் வணங்கி, ''இன்று முதல் நானே உங்கள் மகனாக இருப்பேன்; இனிமேல் நீங்கள் இடுகின்ற பணிகள் யாவற்றையும் செய்து முடிப்பேன்; தயவு செய்து சிறிதும் மனத் தளர்ச்சி கொள்ளாதீர்கள். துயரத்தைத் விட்டு விடுங்கள்'' என்று நான் கூறியதும், ''வலிய திண்ணிய வில்லைக் கைகளில் ஏந்தியவனே! நான் சொல்வதைக் கேட்பாயாக!'' என்று கூறி ஒரு கருத்தினை வகைப்படுத்திக் கூறத் தொடங்கினார்.

முனிவனையும் அவன் பத்தினியையும் இணைத்துக் குறிக்க ''தவர்'' என்றார். தன் மகனை அம்பால் கொன்றவன் நிச்சயம் வில் கொண்டிருக்க வேண்டும் என்றும், குறி தப்பாது அம்பு எய்தலால் அச்சிலை வலியதாகவும், திண்ணியதாகவும் இருத்தல் வேண்டும் என்றும் ஊகித்து, அவனை வன்திண் சிலையாய் என்று அழைத்தான் முனிவன் என்பதாம்.

86. ''கண்ணுள் மணிபோல் மகவை இழ்ந்தும், உயிர்காதலியா
உண்ண எண்ணி இருந்தால், உலகோர் என்என்று உரையார்?
விண்ணின்தலை சேருதும்யாம்; எம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா உடையாய்! அடைவாய்! படர் வான்'' என்னா. (1783)

(காதலியா-காதலித்து / விரும்பி; தலை-இடம்; பண்ணுதல்-அலங்கரித்தல்; பரி-குதிரை; விடலை-மகன்; வான்-விண்ணுலகு; படர்-பரந்த) (குளகப்பாடல்)

''கண்ணுக்குள் இருக்கும் கருமணிப் பாவை போன்ற எங்கள் மகனை இழந்தும், உயிர்மேல் விருப்பம் கொண்டு, உண்டும் பருகியும் உயிர்த்தும் வாழ்ந்தால், இவ்வுலகோர் எங்களை என்ன என்று நினைப்பார்கள்? எனவே நாங்களும் விண்ணுலகு அடைகிறோம். ஆனால் ஒன்று; அலங்கரிக்கப்பட்ட குதிரைப் படையை உடைய மன்னனே! நீயும் எங்களைப் போல, உன் மகன் உன்னை விட்டுப் பிரியும் நிலை அடைந்து, பிறகு பரந்த வானுலகை அடைவாயாக!'' என்று ஒரு சாபம் கொடுத்தான்.

கண்ணிற்குள் உள்ள கருப்பாகத் தோன்றும் சிறிய கண்மணி-பாவை தான்-பார்க்கும் தொழிலைச் செய்வது. அக்கருமணியைப் போலத்

Koviloor Digital Library

தங்களது பார்வைக்குத் துணை புரிந்து வந்தவன் தம் மகன் என்பதனால் கண்ணுள் மணி போல் என்றார்; உரிமையன்புக் குரியவரைக் கண்மணி என்றும், கண் என்றும் கூறுவது இயல்பு; உலகோர் தம்மை வன் நெஞ்சன், கொடியவன் என்று பழிப்பார்களே என்று அஞ்சி உயிர்விடத் துணிகிறான் என்பதாம். எவ்வாறேனும் உண்டு உயிர் வாழவேண்டும் என்ற விருப்பமோ, இன்றியமையாமையோ எங்களுக்கு இல்லை; புதல்வனை இழந்த பின், பிறர் பழிக்க நாங்கள் உயிர் வாழ விரும்பவில்லை என்றான் என்பதாம். முன் பாட்டில் ஒரு சொல் என்றது இந்தச் சாபத்தைக் குறித்ததாகும்.

87. ''தாவாது ஒளிரும் குடையாய்! தவறு இங்கு இது நின்சரணம்
காவாய்'' என்றாய்; அதனால் கடிய சாபம் கருதேம்;
ஏவா மகவைப் பிரிந்து, இன்றுஎம் போல் இடர் உற்றனை நீ
போவாய் அகல்வான் என்னாப் பொன்நாட்டிடை போயினர் ஆல். (1784)

(தாவாது-என்றும் அழியாது; ஒளிர்தல்-நிழல் செய்தல்; அகல்-அகன்ற / விரிந்த; ஏவா மகவு-ஏவுவதற்கு முன்பே குறிப்பறிந்து செய்யும் மகன்; பொன்னாடு-சுவர்க்கம்)

''என்றும் அழியாது நிழல் பரப்பும் வெண் கொற்றக் குடையை உடைய அரசனே! ''நான் அம்பு எய்து நின் மகனைக் கொன்றது தவறு; நான் உன் அடைக்கலம்; என்னைக் காப்பாற்றுவாயாக!'' என்று இரங்கிக் கேட்டுக் கொண்டதனால், உனக்கு மிகக் கடுமையான சாபத்தைத் தர நாங்கள் விரும்பவில்லை; இன்று நாங்கள் படும் துயரத்தைப் போல நீயும், ஏவுவதற்கு முன்பே குறிப்பறிந்து தொழில் இயற்றும் மகனைப் பிரிந்து, துயரப்பட்டுப் பின்னர் அகன்ற விண்ணுலகு அடைவாயாக!'' என்று கூறி, அவர்களிருவரும் விண்ணுலகு அடைந்தனர்.

தன்னை அடைந்தோர்க்கெல்லாம் நிழல் பரப்பி, என்றும் அழியாத வெண்கொற்றக் குடை, இன்று தன் நாட்டிடை வந்து தவம் இயற்றிய இவ்விரு முனிவர்களுக்கும் அவர்தம் மகவுக்கும் நிழல் செய்யாது போயிற்றே என்ற ஆதங்கத்தில் முனிவன் மன்னனை அவ்வாறு அழைத்தான் என்க. சக்கரவர்த்தியாயிருந்தும் தன்னைப் பணிந்து, தவறை உணர்ந்து, அடைக்கலமடைந்து காப்பாற்று என்று வேண்டிக் கொண்ட நற்பண்பினால் கடிய சாபம் கொடுக்க எண்ணவில்லை அம்முனிவன். கடிய சாபம் என்பது இப்போது தாங்கள் மகனை இழந்தது போல் தசரதனும் தன் மகன் இராமனை இழப்பதும், தாங்கள் இருவரும் விண்ணுலகு அடைவது போல் தசரதனும் தன் மனைவியருடன் விண்ணுலகு அடைவது என்பதும் ஆகலாம். ஆனால் முனிவன் மன்னன்பால் அருள் கூர்ந்து ஏவா மகவு ஒருவன் மட்டும் பிரிந்தால் போதும், இறக்க வேண்டாம்; அதனைக் கண்டு துன்புற்று நீ இறக்க வேண்டும் என்றும் கூறியது மெல்லிய மென்மையான-கடியதல்லாத சாபம் என்பதாம். ஏவா மக்கள் மூவா மருந்து என்பது கொன்றை வேந்தன். மற்றும் ஒன்று. தங்களுக்கு இறுதிக் கடன் செய்யப் புத்திரன் இல்லாது போனது போல,

Koviloor Digital Library

உனக்கும் இறுதிக் கடன் செய்ய புத்திரன் இல்லாமல் போகட்டும் என்றும் பொருள் கொள்ளலாம். இராமன் நகரில் இல்லாத நிலையில் தான் தசரதன் இறந்து படுகிறான் என்பது குறிப்பிடத்தக்கதாம்.

88. "சிந்தை தளர்வுற்று, அயர்தல் சிறிதும் இலனாய், இன்சொல்
மைந்தன் உளன் என்றதனால் மகிழ்வோடு இவண் வந்தனன் ஆல்;
அந்தமுனி சொற்றமையின், அண்ணல் வனம் ஏகுதலும்,
எந்தன் உயிர் வீகுதலும் இறையும் தவறா" என்றான். (1785)

(வீகுதல்-நீங்குதல் / வீதல்; இறையும்-சிறிதும்)

"அம்முனிவன் இட்ட சாபத்தால் நான் மனம் தளர்ச்சியடைந்து சோர்வு சிறிதும் இல்லாமல் மிக்க மகிழ்ச்சியோடு அந்நகருக்குத் திரும்பி வந்தேன். காரணம் அப்பொழுது நான் நீண்ட காலமாக மகப்பேறு இன்றி வருந்தியிருந்தேன். இம்முனிவன் இனிய சொல்லுடைய மைந்தன் பிரிய என்று சொன்னதனால் எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்ற மகிழ்ச்சியால் இங்கு வந்தேன். அவ்வாறு அந்த முனிவன் சொன்னவையும், என் அருமை மகன் வனம் புகுதலும், அத்துயரால் நான் வானம் புகுதலும் சிறிதும் தவறாமல் நடைபெற்றே தீரும்" என்று தசரதன் தன் சாபவரலாற்றைக் கோசலைக்குக் கூறி முடித்தான்.

முனிவன் சாபம் மன்னனுக்கு வருத்தத்தைத் தாராது, அவன் வரம் தந்தது போல் மகிழ்ந்து வந்ததற்குக் காரணம், மகப்பேறின்றித் தவிக்கும் தனக்கு ஒரு நல்ல மகன் பிறப்பான். பிறந்து பின் பிரிவால் என்றதனால், இப்பொழுது மகன் பிறந்தாலே போதும் என்று மகிழ்ச்சியுற்று வந்தான் என்பதாம். அவன் சொற்படி எனக்கு மைந்தன் பிறந்தான். எனவே அவன் சொற்படியே அவன் பிரிதலும், நான் இறந்தலும் சிறிதும் தவறாமல் நிகழும் என்று உறுதியாகக் கூறினான்.

89. இம்மாமொழி தந்து, அரசன் இடர்உற்றிடு போழ்தினில், அச்
செம்மாமயில் கோசலையும், திகையா, உணர்வு ஓவினள் ஆல்;
மெய்ம்மாநெறியும், விதியின் விளைவும், தளர்வின்றி உணரும்
அம்மாதவனும், விரைவோடு அவலம் தருநெஞ்சினனாய். (1786)

(மா-சிறந்த; மாதவன்-வசிட்டன்; ஓவுதல்-நீங்குதல்; அவலம்-அழுகை; உணர்வு-அறிவு)

இத்தகைய சிறந்த சொற்களைக் கூறித் தசரதன் துன்பப்படும் போது அந்தச்சிவந்த சிறந்த மயில் போலும் சாயலை உடைய கோசலையும் மனம் திகைத்து அறிவு நீங்கி மயங்கினாள். தவத்திற் சிறந்த வசிட்டனும், ஊழ்வினையினது விளைவையும், அதனால் தொடர்ந்து வரும் துன்பத்தையும், இராமன், கோசலை, தசரதன் ஆகியோர் பட்டதுன்பத்தினையும் கண்டு, பற்றற்ற அம்முனிவனே அவலம் தரும் நெஞ்சினன் ஆனான்.

Koviloor Digital Library

மெய்ம்மா நெறி என்றது இராமன் புகுதலையும், விதியின் விளைவு என்றது தசரதன் இறத்தலையும் குறித்தது எனலாம். தசரதனது சோக நிலை, எந்நிலையிலும் தளரா மனத்தையுடைய மாதவன் வசிட்டனையும் கலங்கச் செய்தது என்பதாம்.

90. வசிட்டன் அரசவைக்குச் செல்லுதல்

உரைசெய் பெருமை உயர் தவத்தோர் ஓங்கல்
புரைசை மதகளிற்றான் பொன் கோயில் முன்னர்,
முரைசம் முழங்க, முடிசூட்ட, மொய்த்து ஆண்டு
அரைசர் இனிது இருந்த நல்அவையின் ஆயினான். (1787)

(உரை-புகழ்; ஓங்கல்-மலை; புரைசை-யானை கழுத்தில் கட்டும் கயிறு; கோயில்-அரண்மனை; மொய்த்தல்-நெருங்கியிருத்தல்; ஆண்டு-அவ்விடம்)

எல்லோராலும் புகழ்ந்து பேசப்படுகின்ற பெருமைக்குரிய உயர்ந்த தவத்தை உடைய முனிவர்களில் எல்லாம் உயர்ந்த மலை போன்ற வசிட்டமாமுனிவன், கழுத்திடு கயிறும், மதமும் உடைய யானைப் படையை உடைய தசரதனின் அழகிய அரண்மனைக்கு முன்னால்-முன்றிலில்-பேரிகைகள் முழங்கவும், இராமபிரானுக்கு முடிசூட்டும் நிகழ்ச்சியைக் காண்பதற்கு அங்கே நெருங்கி இனிது அமர்ந்து கொண்டிருக்கும் அரசர்கள் இருக்கின்ற அத்தாணி மண்டபத்தைச் சென்று சேர்ந்தான்.

உயர் தவத்தோர்க் கெல்லாம் உயர்ந்தவன் வசிட்டன் என்பதால் ஓங்கல் என்றார். தவக்குன்று என்பது கருத்து. கைகேயியின் அரண்மனையிலிருந்து எழுந்த அரற்றல் ஒலிக்குக் காரணம் கண்டு வருமாறு இம்மன்னர்கள்தான் முனிவனை அனுப்பி வைத்தனர். இப்போது மாதவன் காரணம் அறிந்து அதைச் சபையோருக்குத் தெரிவிப்பதற்காக மீண்டு சபைக்குத் திரும்பினான் என்பதாம்.

91. முனிவனை அரசர்கள் வினவுதல்

வந்த முனியை முகம்நோக்கி, வாள் வேந்தர்,
''எந்தை புகுதற்கு இடையூறு உண்டாயதோ?
அந்தம்இல் சோகத்து அழுத குரல்தான் என்கொல்?
சிந்தை தெளிந்தோய்! தெரிஎமக்கு'', ஈது என்று உரைத்தார். (1788)

(அந்தம்இல்-முடிவில்லாத / அளவற்ற)

அத்தாணி மண்டபத்திற்கு வந்த வசிட்ட முனிவனின் முகத்தைப் பார்த்து, அங்கிருந்த வாட்படையை உடைய வேந்தர்கள், விழாவிற்கு முன்பே வந்து சேர வேண்டிய எம்தந்தை போன்ற தசரதன் இவ் அவையை

Koviloor Digital Library

அடையாததற்கு ஏதேனும் தடைகள் ஏற்பட்டனவோ? அளவற்ற சோகத்தினால் எழுந்த அழுகுரல் எதனால் ஏற்பட்டது? மனம் தெளிந்த நல்லவரே! எங்களுக்குத் தெளிவாகத் தெரிவிப்பீராக! என்று வினவினர்.

முனிவனைநோக்கி என்னாது, முனியை முகம் நோக்கி என்றது காண்க. முன் பாடலில் முனிவன் அவல நெஞ்சினனாய் வந்தான் என்பதனால், இன்பதுன்பங்களால் மாறுபடாத மனத்தெளிவுடைய முனிவனின் முகமே நெஞ்சம் கடுத்தது காட்டிற்று. எனவே அவன் முகக்குறிப்பை உணர்ந்து கேட்டனர் என்பதாம்.

92. "கொண்டாள் வரம் இரண்டு கேகயர் கோன்கொம்பு; அவட்குத்
தண்டாத செங்கோல் தசரதனும் தான் அளித்தான்;
ஒண்தார் முகிலை, "வனம் போகு" என்று ஒருப்படுத்தாள்;
எண்தானும் வேறுஇல்லை; ஈது அடுத்தவாறு" என்றான். (1789)

(கொம்பு-பூங்கொம்பு; தண்டாத-நீங்காத / தடையில்லாத; ஒண்-ஒளிமிக்க; முகில்-மேகம் / மேக வண்ணன் / இராமன்; ஒருப்படுத்தல்-உடன்படச் செய்தல்; எண்-எண்ணத்தக்கது; அடுத்த-நேர்ந்துள்ள; ஆறு-நிலை / வகை)

"கேகய மன்னனின் மகளும், பூங்கொம்பு போன்றவளுமான கைகேயி, மன்னனிடத்தில் இரண்டு வரங்களைப் பெற்றுக் கொண்டாள்; அவளிடம் தடையில்லாத அன்பும், நடுவு நிலைமையினின்றும் நீங்காத செங்கோல் ஆட்சியும் உடைய மன்னன் அவளுக்கு அதனைக் கொடுத்து விட்டான். அந்த இருவரங்களுள் ஒன்றால், ஒளிவீசும் மாலை யணிந்த கார்மேக வண்ணனாகிய இராமபிரானைக் "காட்டிற்குச் செல்" என்று கூறி அவனையும், மன்னனையும் உடன்படச் செய்து விட்டாள். இதுதான் அங்கு நிகழ்ந்த நிகழ்வுகள். இதனைப் பற்றி மேலும் எண்ணுவதற்கு ஒன்றும் இல்லை", என்று வசிட்டன் சபையோருக்குக் கூறினான்.

மன்னன் வரமாகக் கொடுத்து விட்டதனால், இனி அதனை மாற்றுவதற்கு வகையில்லை என்பது தோன்ற எண்தானும் வேறு இல்லை என்றான்.

93. முனிவன் காரணம் கூறுதல்

"வேந்தன் பணியினால், கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தள் மிசைக் கிடர்ந்த பார் அளிப்பான் ஆயினான்;
ஏந்து தடந்தோள் இராமன், திருமடந்தை
காந்தன், ஒருமுறை போய்க் காடு உறைவான் ஆயினான்". (1790)

(பணி-கட்டளை; பாந்தள்-பாம்பு / ஆதிசேடன்; அளிப்பான்-காப்பான்; காந்தன்-கணவன்; ஏந்து-உயர்ந்த; முறை-காலவரையறை)

"மன்னன் இட்ட கட்டளையினால், கைகேயியின் உண்மையான புதல்வனான பரதன், ஆயிரம் முடிகளை உடைய பாம்பாகிய ஆதிசேடன்

Koviloor Digital Library

தாங்கிக் கொண்டிருக்கின்ற இந்த உலகத்தைக் காப்பாற்றி ஆளுபவன் ஆகிறான்; இவ்வுலகத்தைத் தாங்கக் கூடிய உயர்ந்த பெரிய தோள்களையுடை இராமன், திருமகள் கணவன், ஒரு வரையறைக்கு உட்பட்டுக் கானகம் சென்று தங்கி வருபவன் ஆகிறான்'' என்றான்.

தசரதன் நேரே இட்ட கட்டளைகள் அல்ல என்றாலும், அவன் வரத்தால் விளைந்தவை. எனவே மன்னன் பணியினால் என்றார். முன்பு கைகேயி இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ என்று கூறியதை நினைவு படுத்த கைகேசியின் உண்மையான புதல்வன் பரதனே என்பதை நிலைப்படுத்துகிறான். பரதன் சிறியவன். ஆயிரம் முடிகளைக் கொண்ட ஆதிசேடனால் தாங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்ற பாரை அவன் காப்பது எளிதல்ல என்பது தோன்ற பாந்தள் மிசைக்கிடந்த பார் என்றார். அவ்வுலகை இராமனால் ஆட்சி செய்ய முடியும். அவன் மூத்தவன் என்பது தோன்ற ஏந்து தடந்தோள் இராமன் என்றார். திருமகளுடன் நாட்டில் உறைந்து இன்பத்தை அனுபவிக்க வேண்டியவன் நாடு துறந்து காடு சென்று தங்குவான் என்பது தோன்ற திருமடந்தை காந்தன் ஒரு முறை போய்க்காடு உறைவான் என்றார். காடு சென்று உறைவது நிரந்தரமான தன்று, பதினான்கு ஆண்டுகள் என்ற ஒரு காலவரம்புக்கு உட்பட்டது என்பதைக் குறிக்க ஒருமுறை என்றார்.

94. நகரத்தார் நிலை [20 பாடல்கள்]

வார்ஆர் முலையாரும், மற்று உள்ள மாந்தர்களும்
ஆராத காதல் அரசர்களும், அந்தணரும்
பேராத வாய்மைப் பெரியோன் உரை, செவியில்
சாராத முன்னம், தயரதனைப் போல் வீழ்ந்தார். (1791)

(வார்-கச்சை; ஆராத-தணியாத; காதல்-அன்பு; பேராத-பேறுபடாத / தவறாத / பிறழ்ந்து போகாத)

கச்சணிந்த கொங்கைகளையுடைய மகளிரும், மற்றும் அங்கே உள்ள அமைச்சர், சேனைத்தலைவர், தூதுவர் முதலானவர்களும் மக்களும், இராமன்பால் தணியாத பேரன்பு கொண்ட அரசர்களும், வேதியர்களும், தவறாத வாய்மையையுடைய சான்றோனாகிய வசிட்ட முனிவனின் சொற்கள், தங்கள் செவிகளில் சென்று சேராத முன்னரேயே, தசரதன் வீழ்ந்ததைப் போல் தரையில் சாய்ந்தார்கள்.

பெண்கள், அரசர்கள், அந்தணர்களைத் தனித்தனியாகக் கூறியதனால், மற்று உள்ள மாந்தர்கள் என்பது ஆடவரையும் குறிக்கும். ஆராத காதல் என்பது எல்லா வகையினருக்கும் பொருந்துமாறு இடைநிலை விளக்காக எடுத்துக்கொள்ள வேண்டும். இராமனை எத்தனை முறை கண்டாலும், மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும் என்று தூண்டுகின்ற அன்பே தணியாத காதல் எனப்பட்டது. வசிட்டன் சாதாரணமான சான்றோன் அல்லன் அவன்

Koviloor Digital Library

சத்தியம் தவறாவனும்கூட என்பதை பால் புளிப்பினும், பகல் இருளினும், நால் வேதநெறி திரியினும், திரிவுபடாத மெய்ம்மையுடையான் என்பதனையே பேராத வாய்மைப் பெரியோன் என்றார். கேட்டவுடன் என்று கூறுவதை விரைவு கருதி செவியில் சாராத முன்னம் என்றார். தயரதனைப் போல் வீழ்ந்தார் என்பது, இராமன் பிரிவுச் செய்தியால் துயருற்று தயரதன் அராவின் வேக மடங்கிய வேழம் மென்ன வீழ்ந்தான் என்றது போல, மக்களும் விரைவில் தரையிற் சாய்ந்தனர் என்பதாம். மற்றொன்று, இராமன் தசரதன் மகன். தன் மகன் தன்னை விட்டு நீங்குகிறானே என்று தசரதன் எவ்வாறு துயருற்று வீழ்ந்தானோ அதுபோல அந்நகர மாந்தர் அனைவரும் இராமனைத் தத்தம் மகன் என்று கருதி வருந்தினர் என்பதாம்.

95. புண்உற்ற தீயில் புகைஉற்று உயிர் பதைப்ப,
மண்உற்று அயர்ந்து மறுகின்ற உடம்பு எல்லாம்;
கண்உற்ற வாரி கடல்உற்றது; அந்நிலையே
விண்உற்றது, எம்மருங்கும் விட்டு அழுத பேரோசை. (1792)

(உறுதல்-படுதல்; பதைப்ப-துடிக்க; அயர்ந்து-சோர்ந்து; மறுகுதல்-விழுந்து புரளுதல்; வாரி-கண்ணீர் ஆறு; உற்றது-அடைந்தது; புகை உறுதல்-வெதும்புதல்; மண்-தரை)

வெந்த புண்ணில் நெருப்புப் பட்டது போல மக்கள் எல்லோரும் வெதும்பி, உயிர் துடிதுடிக்க உடம்பு தரையில் சோர்ந்து விழுந்து புரண்டனர். அவர்கள் சிந்திய கண்ணீர்ப் பெருக்கு ஆறு போல் ஓடிக் கடலில் கலந்தது. அந்த நிலையிலேயே அவர்கள் எல்லாத் திசைகளிலும் இருந்து வாய் விட்டு அழுத ஓசையின் பேரொலி விண்ணைச் சென்று அடைந்தது.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுதல் என்பதும், வெந்த புண்ணில் கனல் நுழைவது என்பதும் துன்பம் மிகுதிக்குக் கூறப்படும் பொதுவான உவமைகள். கண்ணீர் சென்று கடலில் சேர்வதற்குள் அவர்களின் பேரொலி விண்ணிற் சென்று சேர்ந்தது என்பது நீர் ஓடுவதினும் ஓசை ஓடுவது மிகவும் விரைவானது என்பது குறித்தது.

96. மாதர் அருங்கலமும், மங்கலமும் சிந்தித் தம்
கோதை புடைபெயரக் கூற்றனைய கண் சிவப்பப்
பாதமலர் சிவப்பத் தாம் பதைத்துப் பார் சேர்ந்தார்,
ஊதை எறிய ஒசி பூங்கொடி ஒப்பார். (1793)

(கோதை-கூந்தல்; புடை பெயர்தல்-அவிழ்தல்; கூற்று-இயமன்; ஊதை-வாடைக் காற்று; எறிதல்-வீசுதல்; ஒசிதல்-சாய்ந்து விழுதல்)

மகளிர், தாம் அணிந்திருந்த அரிய அணிகலன்களையும், மங்கல நாணையும் கூட வெறுப்பினால் களைந்தெறிந்து, தங்களுடைய கூந்தல் பின் பக்கம் அவிழ்ந்து அலையவும், தங்களைக் காண்போரை இயமனைப்

Koviloor Digital Library

போலத் தாக்கும் தங்கள் கண்கள் சிவந்து போகும் படியும், தங்களுடைய சிவந்த தாமரை போன்ற பாதங்கள் மேலும் சிவக்கவும், தங்கள் உயிர் துடித்து, வாடைக்காற்று வீசும் பொழுது பூங்கொடிகள் சாய்வதைப் போலத் தரையில் சாய்ந்து விழுந்தனர்.

செய்தி கேட்டதும் மகளிரின் துன்ப நிலை கூறப்பட்டது. பொதுவாகவே பெண்களைப் பூங்கொடி போன்ற மெல்லியல்பு கொண்டவர்கள் என்று கூறுவது கவிமரபு. கம்பன் அந்தப் பூங்கொடி, வாடைக் காற்று வீசினால் எப்படித் தரையில் சாய்ந்து விழுமோ, அவ்வாறு வீழ்ந்தனர் என்கிறான். முதலில் அது தன்னை அழகு படுத்தும் பூக்கள், இலைகள் ஆகியவற்றை உதிர்க்கும், பின்னர் வெறும் கொடி மட்டுமே சாயும். அது போல இவ்வயோத்தி நகரப் பெண்டிரும் முதலில் தாம் அணிந்திருந்த அணிகலன்களையும், மலர் மாலைகளையும், வெறுத்துக்களையத் தகாத மங்கல நாணையும் சிந்திவிட்டு வெற்றுடம்போடு சாய்ந்தனர் என்று கூறியது ஒரு நயம். பெண்களின் கண்களைக் கூற்று எனவும், நஞ்சு எனவும் கூறுதல் கவிமரபு.

97. ''ஆ! ஆ! அரசன் அருள்இலனே ஆம்'' என்பார்;
''காவா அறத்தை இனிக் கைவிடுவேம் யாம்'' என்பார்;
தாவாத மன்னர் தலைத்தலை வீழ்ந்து ஏங்கினார்;
மாவாதம் சாய்த்த மராமரமே போல்கின்றார். (1794)

(ஆ ஆ-ஐயோ! ஐயோ!; தாவாத-கெடுதியில்லாத / குறையாத / அழியாத; மாவாதம்-பெருங்காற்று; மராமரம்-சால விருட்சம் / கச்சா மரம் / வெண் கடம்ப மரம்; தலைத்தலை-இடங்கள் தோறும்)

இராமனிடம் அழியாததும், குறையாததுமாகிய அன்பு கொண்ட அரசர்கள், அந்தோ! அந்தோ! மாமன்னன் தசரதன் அருள் என்பதே சிறிதும் இல்லாதவனாவான் என்பார்கள்; அறத்தைக் காக்க வேண்டிய அவனே அதனைக் காப்பாற்றாத போது, நாம் மட்டும் ஏன் அறத்தைக் காக்க வேண்டும்? நாமும் இன்றிலிருந்து அதனைக் கைவிட்டு விடுவோம் என்பார்கள். அவர்கள் எல்லா இடங்களிலும், பெருங்காற்று அடித்ததனால் சாய்ந்த வெண்கடம்ப மரம் போலத் தரையில் சாய்ந்து ஏங்கினார்கள்.

நூமரமாகவும், கொடி சாய்வதற்கு ஊதைக் காற்றும், மரம் வீழ்வதற்கு மாவாதமும் காரணமாகக் கூறியிருப்பதும் நயம் இரசித்து மகிழத்தக்கது.

98. கிள்ளையொடு பூவை அழுத; கிளர் மாடத்து
உள்ளுறையும் பூசை அழுத; உரு அறியாப்
பிள்ளை அழுத; பெரியோரை என் சொல்ல?
''வள்ளல் வனம் புகுவான்'' என்றுரைத்த மாற்றத்தால். (1795)

Koviloor Digital Library

(மாற்றம்-சொல்; பூவை-நாகண வாய்ப் பறவை; கிளர்-உயர்ந்த; பூசை-பூனை)

வரையாது வாரி வழங்கும் வள்ளலான இராமபிரான் காடு ஏகுவான் என்று கூறிய சொற்களால், உயர்ந்து அழகுடன் விளங்குகின்ற மாளிகைகளின் உள்ளே வசிக்கும் கிளிகள், அவைகளோடு நாகண வாயப் பறவைகளும், பூனைகளும் அழுதன. இராமனது உருவத்தையே கண்டறியாத சிறு பிள்ளைகள் கூட அழுதன; என்றால் பகுத்தறிவும் உணர்வுள்ள பெரியோர்கள் அழுததைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!.

கிளியைப் போல நாகண வாய்ப் பறவையும் பேசும் என்று கூறுர்வ; கிளி, நாகணவாய்ப் பறவை, பூனை இவற்றை மகளிர் தங்கள் மாளிகைகளில் வளர்ப்பது வழக்கம். அவைகளுக்குத் தாங்கள் அன்பு கொண்ட தலைவர்களின் பெயரைக் கற்றுக் கொடுத்து, அவைகள் அதைத் திருப்பிச் சொல்லும் போது கேட்டு மகிழ்வதும் அவர்கள் வழக்கம். எனவே இப்பொழுது அம்மகளிர் துயர் உற்றதனால் அவைகளும் காரணம் அறியாமலேயே துன்பம் தாங்காமல் அழுதன என்பதாம். இராமன் அஃறிணை, உயர்திணை உயிர்கள் எல்லாவற்றிலும் உள் உறைந்து வாழ்பவன். எனவே அஃறிணை உயிர்களும், உணர்வே இல்லாத சிறு உள்ளங்களும் அழுதன என்றால் பகுத்துணரும் அறிவு பெற்ற பெரியோர்கள் நிலையைப் பற்றி என்ன சொல்ல என்று கேட்கிறான் கவிஞன். பிள்ளையென்பது உயர்திணையாகிய ஆண் பெண் ஆகிய இருபாலார்க்கும் உரிய இளமைப் பெயர். உரு அறியாப் பிள்ளை என்ற சொற்றொடர்க்கு கருவிலிருக்கும் வடிவு காணாத குழந்தைகளும் என்றும் பொருள் கூறித் துன்பத்தின் உச்ச நிலையைக் காட்டுவர் சிலர்.

99. சேதாம்பல் போது அனைய செங்கனிவாய் வெண்தளவப்
போது ஆம்பல் தோன்றப் புணர்முலைமேல், பூந்தரளம்
மாதாம்பு அற்று என்ன, மழைக்கண்ணீர் ஆலிஉக,
நாதாம் பற்றா மழலை நங்கைமார் ஏங்கினார். (1796)

(சே-சிவந்த; ஆம்பல்-அல்லி மலர்; கனி-கொவ்வைக்கனி; தளவம்-முல்லை; புணர்-நெருங்கிய; தரளம்-முத்து; தாம்பு-கயிறு; மழை-குளிர்ந்த; ஆலி-கண்ணீர்த் துளிகள்; உக-சிந்த; நா-நாக்கு; பற்றா-பொருந்தாது / நிரம்பாது; போது-மலர்ச்சிக்கு முற்பட்ட நிலை; மழலை-எழுத்து நிரம்பாத மொழி)

நாக்கில் பொருந்தாத சொற்களை மழலை போலப் பேசும் மகளிர், செவ்வாம்பல் மலர் போன்ற வாயும், கொவ்வைக் கனி போன்ற இதழ்களும், வெண்மையான முல்லை அரும்பு போன்ற பற்கள் வெளித் தோன்றவும், தங்களது நெருங்கிய கொங்கைகளின் மேல், பொலிவு மிகுந்த முத்துக்கள் கோர்த்த பெரிய வடம் அறுந்ததனால் சிந்திய

Koviloor Digital Library

முத்துக்கள் போல, குளிர்ந்த கண்களிலிருந்தும் கண்ணீர்த் துளிகள் சிநத இரங்கி ஏங்கினர்.

பெண்களின் சிவந்த குவிந்த நறுமணமுள்ள வாய்க்கும் இதழுக்கும் செவ்வாம்பல் போதையும், கொவ்வைக் கனியையும், வெண்மையான பற்களுக்கு முல்லை அரும்பையும் உவமை கூறினார். அவர்கள் பற்கள் தெரிய அழுதார்கள் என்கிறார். உயர்குலப் பெண்கள் சிரிக்கும் போது கூட, தம் பற்கள் தெரிய நகைக்க மாட்டார்களாம். அவர்கள் சிரிக்கிறார்கள் என்பதை அவர்கள் முகமும் கண்களும் தான் காட்டுமாம். அப்படி ஒரு பாடல் கலித்தொகையில் கிடைக்கிறது. பாடலைக் கேளுங்கள். ''ஒண் நுதல் ஆயத்தார் ஓராங்குத் திளைப்பினும், முன் நுனை தோன்றாமை முறுவல் கொண்டு அடக்கித் தம் கண்ணினும், முகத்தினும் நகுபவர் என்பது பாடல். எனவே பற்கள் தெரிய அழுதார்கள் என்பது அவர்களின் துக்கமிகுதியைக் குறிப்பதாம். வாய்விட்டு அழுதார்கள் என்பதைப் போல. அவர்கள் அழும் போது கண்ணீர்த் துளி மார்பில் விழுந்து பின் தரையில் சிந்தியதல்லவா? அதற்கு ஒரு உவமை கூறுகிறான் கவிஞன். மார்பில் அணிந்த முத்து மாலை கோர்க்கப்பட்ட சிறந்த பெரிய கயிறு அறுந்து போனதால், அம்முத்துக்கள் எப்படிச் சிந்துமோ அவ்வாறு கீழே விழுந்ததாம். கண்ணீர்த் துளிகள், மார்பிலிருந்து சிந்தும் முத்துக்களுக்குச் கண்ணிலிருந்து சிந்தி மார்பை அடைந்து மார்பிலிருந்து சிதறும் கண்ணீர் உவமை.

100. ஆவும் அழுத; அதன் கன்று அழுத; அன்றலர்ந்த
பூவும் அழுத; புனல்புள் அழுத; கள் ஒழுகும்
காவும் அழுத; களிறு அழுத; கால் வயப்போர்
மாவும் அழுத; அம்மன்னவனை மானவே. (1797)

(மான-ஒப்ப; ஆ-பசு; அன்று-அப்பொழுது; புள்-பறவை; கள்-தேன்; கா-மலர்ச் சோலைகள்; வய-வலிமை; மா-குதிரை)

இராமன் பிரிவின் துயரச் செய்தியால் வருந்தி அழும் மன்னர் மன்னன் தசரதனைப் போலவே, அயோத்தி நகரத்திலுள்ள பசுக்களும், அவற்றின் கன்றுகளும், அப்பொழுதே மலர்ந்த புதிய மலர்களும், நீர் வாழ் பறவையினங்களும், தேன் சிந்துகின்ற மலர்களை உடைய மலர்ச் சோலைகளும், யானைகளும், காலில் வலிமையும் போரில் வெற்றியையுமே உடைய குதிரைகளும் இவை எல்லாமும் அழுதன.

பசு, கன்று, பறவைகள், யானைகள், குதிரைகள் முதலானவை கண்களில் நீரைப் பெருக்கிக் கதறி அழுதன. மலர்கள், மலர்ச் சோலைகள் ஆகியவை வாடி வதங்கிப் பொலிவிழந்து நின்றன என்பதாம். இவ்வாறு ஓரறிவுயிர்களான மலர்களும், ஐயறிவுயிர்களான பசு கன்று முதலியனவும் இராமன் பிரிவுச் செய்தி கேட்டுத் துயர் தாங்காமல் ஆறறிவுடைய தயரதனைப் போல் அழுதன என்பதனால் இதற்கு இடைப்பட்ட ஈரறிவுயிர் முதல் நாலறிவுயிர் வரை எல்லாமும் அழுதன என்பதைப் பெற வைத்தார்.

Koviloor Digital Library

ஓரறிவு உயிர்க்கும் நுண்ணிய ஐம்புலன் உணர்வு உண்டு என்னும் தாவரசாத்திரக் கருத்து இங்கு உரைக்கப் பட்டதாம் என்க.

101. ஞானியும் உய்கலான் என்னாதே, நாயகனைக்
''கான் ஈயும்'' என்றுரைத்த கைகேசியும், கொடிய
கூனியும் அல்லால் கொடியார் பிறர் உளரோ?
மேனியும் இன்றி, வெறு நீரே ஆயினார். (1798)

(உய்தல்-பிழைத்திருத்தல்)

இராமனைப் பிரிந்த பின்னர், முற்றும் துறந்த ஞானியர்களான முனிவர்கள் கூட உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளாது, தன் நாயகனாகிய தசரதனைப் பார்த்துக் கைகேயி, ''இராமனுக்குக் காட்டைக் கொடு'' என்று சொல்லியதும், அவனைத் தூண்டி அவ்வாறு சொல்ல வைத்த கொடியவளாகிய கூனியையும் தவிர இவ்வயோத்தியில் வேறுயாரும் அழாமல் இருக்கிறார்களா? அல்லது அவர்களைத் தவிர வேறுயாரும் கொடியவர்கள் இருக்கிறார்களா? மற்றவர்கள் எல்லோரும் தன் உடம்பெல்லாம் நீராய் உருக உடம்பு என்பது ஒன்று இல்லாமல், வெறும் நீராய் உருகிப் போனார்கள்-உருக்குலைந்து போனார்கள்.

இன்பம் துன்பம் என்ற இரண்டையும் ஒன்றாகவே கருதக் கூடிய ஞானியர்கள் கூட, இராமன் பிரிவால் மனம் பேதலித்தனர் என்பதாம். துன்பத்தால் உருகாமல் நின்றவர் கொடியவர்களான கூனியும் கைகேயியும் மட்டுந்தான் என்றவாறு. உருக்கத்தால் உடம்பும் நீராய் உருகும் என்பது ''நீராய் உருக்கி, என் ஆருயிராய் நின்றானே'', என்ற மாணிக்கவாசகர் திருவாசகத்திலிருந்து அறியப்படும். ஞானியர்களே உயிர் பிழைத்திரார் என்றால் மற்றவர்கள் நிலை பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை என்பதாம்.

102. தேறாது அறிவு அழிந்தார் எங்கு உலப்பார்? தேர்ஓட
நீறு ஆகிச் சுண்ணம் நிறைந்த தெருவெல்லாம்
ஆறுஆகி ஓடின கண்ணீர்; அரு நெஞ்சம்
கூறுஆகி ஓடாத இத்தனையே குற்றமே. (1799)

(தேறாது-தெளியாது நீறு-துகள்; சுண்ணம்-புழுதி; கூறு-பிளவு; அறிவு அழிதல்-உணர்வு மயங்குதல்)

இராமனது பிரிவால் மீண்டும் தெளிய முடியாதபடி திகைத்து அறிவும் உணர்வும் மயங்கிப் போனவர்கள் எந்தக் கணக்கு எண்ணிக்கையிலும் அடங்க மாட்டார்கள்; அளவற்றவர்கள். தேர் அந்நகரத்துத் தெருக்களில் ஓடியதால் மண்ணெல்லாம் துகள்களாகிப் புழுதியாகிப் போயிருந்தன. அந்தத் தெருவெல்லாம் அந்நகர மக்கள் அழுது அரற்றியதால் உண்டாகிய கண்ணீர்ப் பெருக்கால் ஆறுகள் போலாகி வெள்ளப் பெருக்கு எடுத்து

Koviloor Digital Library

ஓடின. அவர்களுடைய அருமையான நெஞ்சங்கள் மட்டும் தான் துண்டு துண்டாகச் சிதறி ஓடாமல் இருந்தன. அது தான் குறை.

அறித்தெளிவில்லாது மயங்கினவர்களின் கண்ணீர் ஆறாக ஓடியதென்றால் அவர்களை எங்ஙனம் எண்ண முடியும் என்பது கருத்து. பலர் கண்ணீரும் பல வழியாக ஓடினமையால் ஆறு ஓடின என்று பன்மையில் கூறினார் என்க. நெஞ்சம் பிளந்து ஓடியதைப் பார்க்க முடியவில்லையே தவிர மற்ற எல்லாம் நிகழ்ந்து விட்டன என்பது உட்கருத்து.

103. ''மண் செய்த பாவம் உளது''என்பார்; ''மாமலர் மேல்
பெண் செய்த பாவம் அதனில் பெரிது'' என்பார்;
''புண் செய்த நெஞ்சை, விதி'' என்பார்; ''பூதலத்தோர்
கண் செய்த பாவம் கடலில் பெரிது'' என்பார். (1800)

(மண்-மண் மகள்; மாமலர்மேல் பெண்-திருமகள்)

இராமன் காடு செல்லுதற்குக் காரணம் இந்தப் பூமாதேவி மிகப் பாவம் செய்திருக்கிறாள்அதனால்தான்இராமன்வனம்புகுகின்றான்என்பர்சிலர்; சிலர் அவளைக் காட்டிலும் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் செய்த பாவம் தான் பெரிது என்பர்; வேறு சிலர் நம்முடைய விதிதான் நம்முடைய நெஞ்சங்களைப் புண்ணாக்கி விட்டிருக்கிறது என்பர்; இன்னும் சிலர் இவ்வுலகத்து மக்களின் கண்கள் செய்த பாவம் கடலினும் பெரிது அதனால் தான் இராமன் முடிசூடிக் கொள்ளாமல் வனம்புக நேர்ந்தது என்று தம்மைத் தாமே நொந்து கொள்ளுவார்கள்.

இராமன் மன்னனாக இந்நாட்டில் வாழாவிடினும், காடு சென்றாலும் அவனுடைய திருப்பாதங்கள் எப்போதும் மண்ணின் மேல் பட்டுக் கொண்டிருக்கும். ஆனால் திருமகளுக்கு அந்த வாய்ப்பு இல்லை என்பதைச் சுட்டிக் காட்டத்தான் மாமலர் மேல் பெண் செய்த பாவம் அதிற்பெரிது என்றார். இராமனால் ஆளப்பெறாமையால் பூமகளும், அனுபவிக்கப் பெறாமையால் திருமகளும் பாவம் செய்தனர்; மணி முடிதரித்துச் செல்லுகின்ற காட்சியைக் காணவேண்டிய நகர மக்களின் கண்கள், மரவுரி தரித்துச் செல்வதைக் காணநேர்ந்ததால் நகர மக்களின் கண்கள் பாவம் செய்தனவாயின.

104. ''ஆளான் பரதன் அரசு'' என்பார்; ''ஐயன் இனி
மீளான், நமக்கு விதி கொடிதே காண்!'' என்பார்;
''கோளாகி வந்தவா கொற்ற முடிதான்'' என்பார்;
''மாளாத நம்மின் மனம் வலியார் யார்?'' என்பார். (1801)

(கொற்ற முடி-வெற்றி; மாளாத-மாண்டு போகாத; கோள் இடையூறு / தூமகேது போன்ற தீக்கோள்)

Koviloor Digital Library

''பரதன் நீதி தவறாதவன். கைகேயி பரதனுக்கு அரசுரிமையை வாங்கித் தந்தாலும் அவனுக்கு உரிமையல்லாத அரசை அவன் அரசாட்சி செய்ய மாட்டான்'' என்று சிலர் கூறுவர்; சிலர் ''நமது தலைவன் இராமன் காடு சென்ற பின் நகருக்கு மீண்டும் வர மாட்டான்; நம்முடைய கொடிய விதி அப்படிப்பட்டது தான் பாருங்கள்'' என்பார்கள்; இன்னும் சிலர் ''இம்முடி சூட்டுவிழாவுக்கான வெற்றி வாய்ந்த மகுடமே ஒரு பெரிய தீங்கை விளைவிக்கும் தூமகேது போன்ற தீக்கோளாக வந்து விட்டதே என்ன செய்ய? என்று அங்கலாய்ப்பார்கள்; மற்றும் சிலர் இவ்வளவு தீங்கினைக் கூறக் கேட்டும், கண்களால் கண்டு கொண்டும், இன்னும் இறந்து போகாமல் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோமே? நம்மைக் காட்டிலும் வன்னெஞ்சர் யார் இருக்க முடியும்?'' என்று தம்மையே பழித்துக் கொள்வர்.

கோள் என்பது இடையூறு என்ற பொருளில் உலகுக்கே தீங்கு விளைவிக்கும் தூமகேது போன்ற தீக்கோளை உணர்த்தி நின்றது.

105. ''ஆதி அரசன், அருங்கேகயன் மகள் மேல்
காதல் முதிரக் கருத்து அழிந்தானாம்'' என்பார்;
''சீதை மணவாளன் தன்னோடும் தீக்கானம்
போதும்; அது அன்றேல் புகுதும் எரி'' என்பார். (1802)

(ஆதி-பழைய / முதுமையான / மூல முதல்வன்; போதும்-போவோம்; எரி-நெருப்பு; கருத்து-அறிவு / மதி)

''பழைய வேந்தனான தசரதன், தன் அருமைமிக்க மனைவி கேகய அரசன் மகள் கைகேயி மேல் கொண்ட முதிர்ந்த காதலால் தன் அறிவு கெட்டு, மதிமயங்கி, இருவரங்களையும் கொடுத்து விட்டான்'' என்பர் சிலர். சிலர் ''சீதையின் கணவன் இராமனுடன் கொடிய கானகத்திற்கு நாமும் சென்றுவிடுவோம். அதற்கு அவன் உடன்படாவிட்டால், அவன் இல்லாத இந்நாட்டில் வாழ்வதைக் காட்டிலும், நெருப்பில் புகுந்து உயிரை மாய்த்துக் கொள்வோம்'' என்றனர்.

புதிதாக வேறு ஒரு அரசன் பரதனோ, இராமனோ முடிசூட்டிக் கொள்ளப்படப் போவதால், தசரதன் இப்போது பழைய அரசனாகி விட்டான். எனவே அவன் ஆதி அரசன் என்றார். மன்னன் தவற்றையும் அஞ்சாது எடுத்துக் கூறும் பேச்சுரிமை அப்போது இருந்தது என்பது பெறப்படுகிறது. தசரதன் அறம் பிறழ்ந்தான்; இராமனும் வனம் புகப்போகிறான். எனவே அறமற்ற இந்நாட்டில் வாழ்வதைக் காட்டிலும், நல்ல அரசனான இராமனைத் தொடர்ந்து நாமும் வனம் புகுவோம் என்று துணிந்து சொன்னவர் பலர். அவன் இசையாவிட்டால் அவனைப் பிரிந்திருப்பதைக்காட்டிலும் தீயுள் புகுந்து உயிரை மாய்த்துக் கொள்ளுதல் சிறந்தது என்றனர் சிலர். ''பசைந்தாரில் தீர்தலில், தீப்புகுதல் நன்று''

Koviloor Digital Library

என்பது நான்மணிக்கடிகை. இராமன் இருக்கும் இடமே அயோத்தி என்ற சொல் வழக்கை நோக்குக.

106. கையால் நிலம்தடவிக் கண்ணீர் மெழுகுவார்;
''உய்யாள் பொன் கோசலை'' என்று ஓவாது வெய்துயிர்ப்பார்;
''ஐயா! இளங்கோவே! ஆற்றுதியோ நீ?'' என்பார்;
நெய்ஆர் அழல் உற்றது உற்றார் அந்நீள் நகரார். (1803)

(பொன்-தங்கம்; வெய்து-வெப்பமாக; உயிர்த்தல்-பெருமூச்செறிதல்; கோ-அரசன்; ஆற்றுதல்-பொறுத்திருத்தல்; அழல்-நெருப்பு; இளங்கோ-இலக்குவன்; ஓவாது-இடைவிடாது)

அயோத்தி நகர மக்கள் தங்கள் கண் போன்ற இராமன் பிரிந்து போவதை எண்ணிக் கண்ணிழந்தவர்கள் போலக் கையால் நிலத்தைத் தடவிப் பார்த்துத் தம் கண்களில் இருந்து பெருகும் கண்ணீரால் அந்நிலத்தை மெழுகுவார்கள்; தங்கம் போன்ற நற்குணம் பொருந்திய கோசலை இதற்குப் பின்னும் பிழைத்திருக்க மாட்டாள், மாண்டு விடுவாள் என்று எண்ணி, இடைவிடாது வெப்பப் பெருமூச்சு விடுவர்; ஐயா! இளவரசே! என்று இலக்குவனை அழைத்து, இராமன் கானகம் செல்லுவதை உன்னால் பொறுத்துக் கொள்ள முடியுமோ? என்று கேட்பார்கள்; மொத்தத்தில் அந்நகர மக்கள் நெய் சொரிந்த நெருப்பு எப்படிக் கொழுந்து விட்டு எரியுமோ அவ்வாறு உள்ளம் கொதித்துப் போய் இருந்தனர்.

முன் பாடலில் எரி புகுதும் என்ற கவிஞன் இப்பாடலில் அவ்வாறு தீப்புகுதற்கு முன்பே, அது போன்ற துன்பம் அடைந்தனர் என்றார். தங்களாலேயே தாங்கிக் கொள்ள முடிவில்லையே. பெற்ற தாய் எவ்வாறு இதைத் தாங்கிக் கொண்டு உயிரோடிருப்பாள் என்று உறுதியாக உய்யாள் பொன் கோசலை என்றனர். அது போலவே இராமனை விட்டுப் பிரியாது வாழும் இலக்குவன் எவ்வாறு பொறுத்துக் கொள்வான் என்று கருதி அவனை அழைத்துக் கேட்பதாகக் கவிஞன் கூறுவது ஒரு நயம்.

107. ''தள்ஊறு வேறில்லை; தன் மகற்குப் பார் கொள்வான்
எள்ஊறுதீக் கருமம் நேர்ந்தாள் இவள்'' என்பார்;
''கள்ஊறு செவ்வாய்க் கணிகையரும் கைகேசி
உள்ஊறு காதல் இலள் போல்''என்று உள் அழிந்தார். (1804)

(தள்ஊறு-தடையாக உற்றது; பார்-அரசு; கொள்வான்-கொள்ளும் பொருட்டு; எள்ளூறுதல்-பழித்தல்; நேர்தல்-இசைதல்; ஊறுதல்-பொருந்துதல் / சுரத்தல்; உள் அழிதல்-மனம் இரங்குதல்)

''கள்ளைப் போன்று தேன் ஊறுகின்ற சிவந்த வாயை உடைய கணிகையர் போன்ற கைகேசி மன்னனிடம் உண்மையான அன்பு கொண்டவள் இல்லை; அதனால் தான் தள்ளுவதற்குரிய வேறு காரணமே இல்லாமல், இரண்டு வரங்கள் என்ற காரணத்தைக் காட்டி, மன்னனிடமிருந்து தன் மகன் பரதனுக்கு இவ்வரசுரிமையைக் கொள்ள

Koviloor Digital Library

நினைத்து இவ்விகழ்ச்சிக்குரிய தீய காரியத்தைச் செய்யத் துணிந்திருக்கிறாள்'' என்று நினைத்துத் தம் நெஞ்சம் கலங்கினர்.

எள் ஊறு கருமம் என்ற சொற்றொடர் இறந்தார்க்கு எள்ளும் நீரும் கலந்து செய்யும் நீர்க்கடனாகிய இறுதிக் கடனைக் குறிப்பதாகவும் தொனிப்பது நோக்கத்தக்கது. கணவனை உள்ளன்போடு நேசிப்பவள் தானே உண்மையான மனைவி? இவளுக்குத் தன் கணவனிடம் நெஞ்சார்ந்த அன்பு இல்லை போலும். அதனால் தான் அவளை வேசி என்று ஊர் மக்கள் சொல்லினர் என்பதாம். ''அன்பின் விழையார், பொருள் விழையும் ஆய் தொடியார்'' என்று கணிகையரைப் பற்றிக் கூறுவார் வள்ளுவர். குறள் 911 வேசையர் வால் எயிறு ஊறிய நீர் தீங்கு விளைத்தலால் ''கள்'' என்றார்.

108. ''நின்று தவம் இயற்றித் தான்தீர நேர்ந்ததோ?
அன்றி, உலகத்துள் ஆருயிராய் வாழ்வாரைக்
கொன்று களையக் குறித்த பொருளதுவோ?
நன்று; வரம் கொடுத்த நாயகற்கு நன்று'' என்பார். (1805)

(தீர-நீங்கிவிட; நேர்ந்ததோ-இசைந்ததோ; களைதல்-ஒழித்தல்; குறித்த-எண்ணிய; பொருள்-எண்ணம்; நன்று நன்று-இகழ்ச்சிக் குறிப்பு)

''தசரதன் கைகேயிக்கு வரம் கொடுத்த இச்செயல், தான் மட்டும் நிலைத்து நின்று நல்ல தவம் செய்து, சிறிது நாள் உயிர் வாழ்ந்து, பின்னர் உலகை விட்டு விட்டு நீங்கி விடலாம் நாடு எக்கேடாவது கெட்டுப் போகட்டும் நாம் மறுமைக்கு வழிதேடிக் கொள்ளலாம் என்ற சுய நல எண்ணத்தாலா? அல்லது இந்நாட்டில் அரசனுக்கும் இராமனுக்கும் அருமையான உயிர் போன்று வாழ்ந்து கொண்டிருக்கும் உயிரினங்களையெல்லாம் வேரோடு கொன்று ஒழித்து விடவேண்டும் என்ற எண்ணத்தாலா? எது வாயிருந்தாலும் அரசன் செயல் நன்றன்று என்று அவனைப் பழித்துக் கூறலானார்கள்.

தனக்கு மட்டும் கேடு சூழ்ந்து கொள்ளாமல், உலகில் வாழும் உயிரினங்களுக்கெல்லாம் கேடு சூழ நினைத்துத்தான் தசரதன் கைகேயிக்கு வரம் கொடுத்திருக்கிறான் என்பது கருத்து. இராமன் நீக்கத்தால் தசரதன் எவ்வாறு உயிர் துறப்பானோ, அதே போல நாட்டு மக்களும் உயிர் துறப்பர் என்பதாம். விளைவை நினையாது வரம் கொடுத்த அரசர் செயல் நன்று நன்று என்று இகழ்ந்தனர்.

109 ''பெற்றுஉடைய மண் அவளுக்கு ஈந்து, பிறந்து உலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது, மொய்த்து ஈண்டி
உற்றுஉறைதும், யாரும் உறையவே, சில நாளில்
புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போம் என்பார். (1806)

(முற்று-முழு உரிமை; மொய்த்து-நெருங்கி; மண்-பூமி)

Koviloor Digital Library

''தான் பெற்ற வரத்தால் பெற்றுக் கொண்ட பூமியை மட்டும் கைகேயிக்குக் கொடுத்துவிட்டுத் தசரதனுக்கு மூத்தவனாகப் பிறந்த காரணத்தால் இவ்வுலகம் முழுவதையும் ஆளுகின்ற உரிமை படைத்தவனான அரசனாகிய இராமனைப் பிரியாது, நாம் எல்லோரும் அவனைச் சூழ்ந்து நெருங்கி, அவன் போகின்ற காட்டிற்கே அவனுடன் சென்று வாழ்வோம்; அவ்வாறு நாம் எல்லோரும் அங்கு வசிக்க ஆரம்பித்தால் சில நாட்களில் அங்கே புற்றாக-புதராக-காடாக இருப்பவை யெல்லாம் நாடாக மாறிவிடும் என்று சிலர் கூறுவர்.

உரிமையால் நாட்டினைப் பெறாமல், வரத்தினால் நாட்டினைப் பெற்றமையால் ''பெற்று உடைய மண்'' என்றார். அவள் வரமாகப் பெற்றது பூமியையே அன்றி நாட்டு மக்களை அல்ல என்றார். தசரதனுக்கு மூத்த மகனாகப் பிறந்ததனாலேயே அவன் இவ்வுலகம் முழுவதும் ஆளுகின்ற உரிமையைப் பெறுகிறான் என்பது தோன்ற, பிறந்து, உலகம் முற்றுடைய கோ என்றார். பெற்றுஉடைய மண் என்றும், பிறந்து முற்றுடைய உலகம் என்றும் கவிஞன் கையாண்டிருக்கும் சொற்றொடர்கள் பொருள் பொதிந்தவை. நாம் எல்லோரும் காட்டில் வசிக்கவே காடெல்லாம் நாடாகிப் போய்விடும் என்பது கருத்து. இதனைத் தான் இராமன் இருக்குமிடம் அயோத்தி என்றனரோ? மக்கள் தங்கத் தகுதியற்ற இடம் என்பதனால் புற்றுடைய காடு என்றார்.

110. ''என்னே நிருபன் இயற்கை இருந்தவா?
தன்னேரில்லாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து, முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால் பிழையாதோமெய்?'' என்பார். (1807)

(நிருபன்-அரசன்; இயற்கை-இயல்பு; நேர்-நிகர்; தாரணி-அரசு; திறம்ப-மாறுபட)

தனக்கு நிகரில்லாத தன் மூத்த மகனான இராமனுக்கு இவ்வுலக அரசுரிமையை அவையில் எல்லோர்க்கும் முன்னே சொல்லி, அவனுடைய இசைவும் பெற்று முடிசூட்ட எல்லா ஏற்பாடுகளும் செய்ததன்பின், மூத்தவனுக்கே அரசு உரியது என்ற வரன் முறையில் மாறுபட்டு, கைகேயியிடம் கொடுத்த வரத்தைக் காத்தல் என்ற பெயரால், நாட்டின் அரசுரிமையை இளையவனுக்குக் கொடுத்தால், அது வாய்மை தவறியதாகாதோ? என்று வாதிடுவர் சிலர்.

''கைகேயிக்குக் கொடுத்த வரத்தினைக் கொடுக்க மாட்டேன் என்று இப்பொழுது கூறினால் அது மன்னவன் வாய்மை தவறியவன் ஆவான் என்று சொன்னால், முடிசூட்டும் அவையில் எல்லோர்க்கும் முன்னால் நான் முதுமையடைந்ததால், தவமியற்றப் போகிறேன் அதனால் இந்நாட்டின் அரசுரிமையை என் மூத்த மகனுக்கு ஈந்து அவனுக்கு முடிசூட்டப் போகிறேன் என்ற சொற்களிலிருந்து பிறழ்ந்து

Koviloor Digital Library

செயல்படுவது வாய்மை தவறியதாகாதா?'' நமது அரசனின் செயல் எப்படியிருக்கிறது என்று இகழ்கின்றனர் மக்கள்.

இங்கே ஒன்றை நோக்க வேண்டும். மன்னன் தசரதன் கைகேயிக்குக் கொடுத்த வரம், வெறும் வாய்ச் சொல் அல்ல; இரண்டு அவன் வரம் கொடுத்தது இன்று நேற்றல்ல; நெடு நாளைக்கு முன்பே கொடுததது. முதற் சொல்லிய சொல்லிற் பிறழாமையே வாய்மை காத்தல் என்பது வழக்கு. எனவே அதனைக் காப்பதற்காகப் பின்னர் வாய்ச் சொல்லால் கூறியதை மாற்றுதல் வாய்மை தவறியதாக ஆகாது என்பதாம். என்றாலும் வரத்தைக் கொடுத்தாலும், மறுத்தாலும் வாய்மை தவறிப் போகப் போவதால், உலக நன்மை கருதி மறுத்தே இருக்கலாம் என்பதை மக்கள் கருத்தாகக் கவிஞன் கூறுகிறான். மூத்தவனுக்கு இயல்பாக உரிமை உடைய அரசுரிமையை உரிமையற்ற பரதனுக்கு அரசன் எவ்வாறு கொடுக்க இயைந்தான் என்பதே அவர்கள் வியப்பிற்குக் காரணம்.

111. ''கோதை வரிவில் குமரற்கொடுத்த நில
மாதை ஒருவர் புணர்வாராம்? வஞ்சித்த
பேதை சிறுவனைப் பின்பார்த்து நிற்குமே
சீதை பிரியினும் தீராத்திரு?'' என்பார். (1808)

(கோதை-வெற்றி மாலை; வரி-கட்டமைந்த; புணர்தல்-அடைதல்; தீர்தல்-பிரிந்திருத்தல்; பின் பார்த்தல்-சம்மதித்தல்)

''வெற்றி மாலை அணிந்த கட்டமைந்த வில்லைக் கையில் ஏந்திய மூத்தமகனாகிய இராமனுக்கு எல்லோர் முன்னிலையிலும் கொடுத்த நிலமகளை வேறு ஒருவனாகிய பரதன்தனக்குரியவளாக எண்ணி அடைய முற்படும்படி வஞ்சனை செய்து வரம் வாங்கிக் கொண்ட அறிவிலியாகிய கைகேயியின் சிறுவன் நாடாள, அதைப் பார்த்துக் கொண்டு இலக்குமியாகிய திருமகள் மட்டும், சீதை இராமனோடு பிரிந்து சென்று விட்டாலும், இங்கேயே தங்கி இருப்பாளோ? இருக்க மாட்டாள் என்று கூறுவர்.

இராமனுக்கு நாடு இல்லை என்று சொன்னால் அவன் காடேகும் போது சீதையும் அவன் உடன் செல்லுவாள். அவ்வாறு சீதை நாட்டை விட்டு வெளியேறிய பின் திருமகளாகிய இலக்குமி மட்டும் இந்நகரத்திலிருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பாளா? அவளும் நீங்கி விடுவாள், என்றால் நாடு செல்வம் இழந்து பொலிவற்றதாகி விடும் என்பது கருத்து. அரசவையில் எல்லோர் முன்னிலையிலும் கூறி, அவன் இசைவும் மந்திரிகளின் இசைவும் பெற்று, முடிசூடுதற்கு வேண்டிய எல்லா நிகழ்ச்சிகளையும் செய்ததனால், அவன் முடிமட்டும் சூடிக்கொள்வதற்கு முன்னரே நாடு அவனுக்கு உரிமையாயிற்று என்பது பொருள். இங்கே ஒரு எடுத்துக்காட்டு. திருநாவுக்கரசரின் தங்கையாகிய திலகவதியாருக்குத் திருமணம் நிச்சயம் செய்யப் பெற்றது. ஆனால் இன்னும் மணம் நிகழவில்லை. இந்நிலையில் நிச்சயித்திருந்த மணமகன்

Koviloor Digital Library

இறந்து போனார். திலகவதியார் என்ன செயதார்?. உடனேயே கைம்மைக் கோலம் பூண்டது நாம் அனைவரும் அறிந்ததே. அதே போல் நிச்சயிக்கப்பட்டதை நிகழ்ந்ததாகவே கொள்ள வேண்டும். இங்கே இராமன் நாடாள முழுத்தகுதியும் பெற்றவன் என்பதும் கருதத்தக்கதாகும். பொறாமையால் வஞ்சித்தவர்கள் வாழும் நாட்டில் இலக்குமி தங்க மாட்டாள் என்பதாம் ''அவ்வித்து, அழுக்காறுடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்'' என்பது குறள் *167.*

112. உந்தாது, நெய்வார்த்து உதவாது, கால்எறிய
நந்தா விளக்கின் நடுங்குகின்ற நங்கைமார்
''செந்தாமரைத் தடங்கண் செவ்வி அருள்நோக்கம்,
அந்தோ! பிரிதுமோ? ஆ! விதியே! ஓ!'' என்பார். (1809)

(உந்துதல்-தூண்டுதல்; வார்த்தல்-பெய்தல்; கால்எறிதல்-காற்று வீசுதல்; நந்தா-அணையாத; செவ்வி-அழகு; நோக்கம்-பார்வை)

தூண்டப்படாமலும், நெய் சொரிந்து துணை செய்யப்படாமலும் எரிகின்ற விளக்கு; ஆனால் காற்று வீசுவதால் அணையாமலும், ஒளி குன்றாமலும் நடுங்கிக் கொண்டே எரியும் விளக்கு. இத்தகைய விளக்கைப் போன்று அலைகின்ற நெஞ்சத்தையுடைய உயர்குல மகளிர், இராமனுடைய சிவந்த தாமரை மலர் போன்ற அகன்ற கண்களிலிருந்து தோன்றும் அருட்பார்வையை இனி நாம் பிரிய நேரிடுமோ? அப்படியாயின் இது நமது ஊழ்வினையின் பயனே! என்று புலம்புவார்கள்.

இதுகாறும் மக்கள் புலம்பியதைக் கூறிவந்த கவிஞன், இப்பொழுது உயர்குலத்து மகளிர் இராமனின் அருட்பார்வை கிடைக்காமற் போய் விடுமே என்று இரங்கி ஏங்குவதைக் கூறி முடிக்கிறான். விளக்கு அணையாது நன்கு எரிவதற்கு அடிக்கடி தூண்டிக் கொண்டிருக்க வேண்டும்; நெய் அல்லது எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும்; காற்று வீசக் கூடாது. இவ்வாறிருந்தால் விளக்கு அணையாது நின்று எரியும். ஆனாலும் நடுங்கிக் கொண்டே தான் எரியும். அது போல இராமனுடைய அருட்பார்வை கிடைக்காது என்று தெரிந்த குலப்பெண்கள் தம் நெஞ்சம் நடுங்கிக் கொண்டே இருந்தனர் என்பதாம். மனைக்கு விளக்கம் மடவார். எனவே அவர்களுக்கு விளக்கை உவமை கூறினார். இவர்கள் அவன் பிரிவிற்கு வருந்துவதைக் காட்டிலும் அவன் அருள் நோக்கத்தைப் பிரிய வேண்டியிருக்கிறதே என்பதில் தான் பெருவருத்தம் கொண்டனர் என்பதாம். இவ்வாறு அவன் அருள் நோக்கத்தைப் பிரிதற்கு அவர்கள் வேறு எவரையும் குறை கூறாது, தம் விதியே காரணம் என்று கூறிப் புலம்புகின்றனர். மகளிர் உயிர் விடாமலும், வாழ இயலாமலும் அவலத்தில் துடிக்கின்றனர் என்றவாறு.

Koviloor Digital Library

113. இலக்குவன் சீற்றம் [10 பாடல்கள்]

கேட்டான் இளையோன்; ''கிளர் ஞாலம் வரத்தினாலே
மீட்டாள்; அளித்தாள் வனம்தம் முனை; வெம்மை முற்றித்
தீட்டாத வேற்கண் சிறுதாய்'' என, யாவராலும்
மூட்டாத காலக் கடைத்தீ என மூண்டு எழுந்தான். (1810)

(முற்றி-நிரம்பி; கிளர்-விளங்குகின்ற; முனை-முன்னவன்; கேட்டான்-கேள்வியுற்றான்; அளித்தல்-அருள் உள்ளத்தோடு கொடுத்தல்; காலக்கடை-ஊழி இறுதி; சிறுதாய்-சிற்றன்னை / அற்பத்தனமுள்ள தாய்; தீட்டாத-உலையிலே காய்ச்சிக் கூராக்கப்படாத)

கொடுமை நிரம்பிய, உலையிலே காய்ச்சிக் கூராக்கப்படாத இயற்கையிலேயே வேல் போன்ற கூரிய கண்களை உடைய சிற்றன்னையாகிய கைகேயி, தான் தன் கணவனாகிய தசரதனிடத்தில் கேட்ட இருவரங்களில் ஒன்றினால், விளங்குகின்ற இவ்வுலக அரசுரிமையை, முறைப்படி உரிமையுடைய இராமனிடமிருந்து மீட்டுத் தன் மைந்தன் பரதனுக்குக் கொடுத்தாள். மற்றொரு வரத்தால் அவன் தமையனுக்குக் காட்டினை அளித்தாள் என்று கேள்விப்பட்டான் இளையவனான இலக்குவன். கேள்வியுற்றதும், வேறுயாரும் தூண்டாமலேயே, தானே தன் இயல்புக் கேற்ப, ஊழியிறுதிக் காலத்தில் மூண்டு எழும் வடவைத்தீயைப் போலச்சினம் மிகுந்து மூண்டு எழுந்தான்.

கொல்லன் உலைக்களத்தில் வேலை நெருப்பில் வைத்து வெதுப்பத் தீட்டுவான். அப்போது தான் அது கூர்மை பெறும். ஆனால் கைகேயியின் கொடுமையான கண்களோ இயற்கையிலேயே கூர்மை வாய்ந்த வேல் போன்ற கண்கள் என்பதாம். தீட்டாத வேற்கண் என்பது ''கடையாமே கூர்த்த கருநெடுங்கண்'' என்ற தண்டியலங்காரச் சொற்றொடரை நினைவுபடுத்தும். பிரளய காலத்தில் வடவைக் கனல் கனன்று எழுந்து உலகையழிக்கும் என்பது புராணக் குறிப்பு. இது முன்னரே பல இடங்களிலும் கூறப்பட்டிருப்பது காண்க. சிறுதாய் என்பது இலக்குவனுடைய சிற்றன்னை என்பதோடு கூட, அற்பத்தன்மையுள்ள தாய் என்ற பொருளும் தொனிப்பது நோக்கத்தகும். ''வனம் அளித்தாள் ஞாலம் மீட்டாள்'' என்பதன் கருத்து மிக்க ஆழமுடையது. இராமனுக்கு உரிமையுடையதாய், அவன் கைக்கொண்டிருந்த அரசாட்சியை வரம் என்ற ஆயுதத்தால் மீட்டுக் கொடுத்தாள் என்பது விளக்கம்.

114. கண்ணில் கடைத்தீ உக, நெற்றியில் கற்றை நாற,
விண்ணில் சுடரும் சுடர்வீய, மெய் நீர்விரிப்ப,
உள்நிற்கும் உயிர்ப்பு எனும் ஊதைபிறக்க, நின்ற
அண்ணல் பெரியோன் தனது ஆதியின் மூர்த்தி ஒத்தான். (1811)

(உக-சிந்த; நாற-விளங்க / தோன்ற; சுடர்-சூரியன்; வீய-வீழ / ஒழிய; மெய்-உடம்பு; நீர்-வியர்வை; விரிப்ப-மிகுவிக்க; ஊதை-வாடைக் காற்று

Koviloor Digital Library

/சண்டமாருதம்; ஆதி-பழைய; மூர்த்தி-ஆதிசேடன்/திருவனந்தாழ்வான்; அண்ணல்-பெருமை மிக்கவன்)

இலக்குவன் கண்களில் பிரளய காலத்து வடவைத் தீப்பொறி சிந்தியது; புருவத்தின் கற்றை நெற்றியின் மேல் ஏறித் தோன்றியது; இதனைக் கண்டு ஆகாயத்தில் ஒளி வீசித் திகழும் சூரியனும் கூடத் தன் நிலை திரிந்தான்; உடம்பில் வியர்வை ஆறாகப் பெருக்கெடுத்தது. உடம்பின் உள்ளே இருந்து மூச்சுக் காற்று எனும் பெருங்காற்று வெளிப்பட்டது; இவ்வாறு உக்கிரமான தோற்றத்துடன் நின்ற பெருமை வாய்ந்த இலக்குவன், தனது பழைய அவதாரத் தோற்றமாகிய ஆதிசேடனைப் போல நின்று இருந்தான்.

கண்கள் தீப்பொறி சிந்துவதும், புருவம் நெரிந்து நெற்றியில் ஏறுவதும், உடம்பில் வியர்வை பெருக்கெடுப்பதும், உள் நின்று பெருமூச்சுத் தோன்றுவதும், வெகுளியின் மெய்ப்பாடுகள். இலக்குவன் ஆயிரம் முடிகளை உடைய ஆதிசேடனாகிய பாம்பு சீறுவது போலச் சீறினான் என்பதாம். ஊழி இறுதியில், ஐம்பூதங்களுள், ஆகாயம் தவிர, மற்ற நான்கும் தத்தம் நிலையின் மிக்கெழுந்து உலகை அழிக்க, பின்னர் எல்லாம் ஆகாயத்துள் ஒடுங்கும் என்பது புராணக் குறிப்பு.

115. சிங்கக் குருளைக்கு இடு தீஞ்சுவை ஊனை, நாயின்
வெங்கண் சிறுகுட்டனை ஊட்ட விரும்பினாள் ஆல்;
நங்கைக்கு அறிவின் திறம் நன்றுஇது! நன்று இது! என்னாக்
கங்கைக்கு இறைவன் கடகக்கை புடைத்து நக்கான். (1812)

(குருளை-குட்டி; தீஞ்சுவை-இனிய சுவை; ஊன்-மாமிசம் / புலால் உணவு; வெங்கண்-கொடுமையான கண்; குட்டன்-குட்டி; நக்கான்-சிரித்தான் / இகழ்ச்சி நகை; கடகம்-கங்கணம்; புடைத்து-தட்டி)

வலிமை பொருந்திய சிங்கக் குட்டிக்கு இடுதற்குரிய இனிய சுவையுள்ள புலால் உணவை, அற்பமான கொடிய கண்களையுடைய நாயின் குட்டிக்கு ஊட்ட விரும்பிய கைகேயியின் அறிவின் அழகு மிக நன்றாய் இருக்கிறது, மிக நன்றாய் இருக்கிறது என்று கூறி, கங்கைக்குத் தலைவனாகிய இலக்குவன், தன் கங்கணம் அணிந்த கைகளைத் தட்டி இகழ்ச்சியாகச் சிரித்தான்.

கங்கைக்கு இறைவன் என்பது, கோசல நாட்டின் எல்லை கங்கைக் கரைவரை பரவியிருந்ததால் அந்நாட்டின் இளவரசன் என்றும், கங்கையைப் பூமிக்குக் கொணர்ந்த பகீரதன் வழித் தோன்றல் இலக்குவன் என்பதாலுமாம், கோசல நாட்டில் பாயும் சரயு நதிக்கே ''இராம கங்கை'' என்ற ஒரு பெயரும் உண்டு என்பதாலும், அவன் அவ்வாறு அழைக்கப்பட்டான். இராமபிரான் ஆள்வதற்குரிய கோசல நாட்டை பரதனுக்குத் தருதல் முறைமையாகததோடு இகழ்ச்சிக்கும் உரியதாகும் என்ற கருத்தை சிங்கக் குட்டிக்கு உரிமையான ஊனை நாய்க் குட்டிக்குக் கொடுப்பது போலும் என்று உபமேயத்தை, உபமானத்தால்

Koviloor Digital Library

பெறவைத்தார். பரதன் அரசுரிமை ஏற்கும் உரிமையும், தகுதியும் உடையவன் அல்லன் என்பது இலக்குவன் கருத்து. அத்தகைய பொருத்தமற்ற செயலைச் செய்ததால் கைகேயியின் அறிவுத் திறத்தை இகழ்ந்து கைகொட்டிச் சிரித்தான் இலக்குவன் என்பதாம்.

116. சுற்றுஆர்ந்த கச்சில் சுரிகைபுடை தோன்ற ஆர்த்து,
வில்தாங்கி, வாளிப் பெரும் புட்டில் புறத்து வீக்கிப்
பற்று ஆர்ந்தசெம் பொன்கவசம் பனிமேரு ஆங்குஓர்
புற்றாம் என ஓங்கிய தோளோடு, மார்பு போர்க்க. (1813)

(சுற்று ஆர்தல்-வளைத்துக் கட்டப்படுதல்; கச்சு-அரைப்பட்டிகை; சுரிகை -உடைவாள்; புடை-பக்கம்; ஆர்த்தல்-கட்டுதல்; வீக்குதல்-கட்டுதல்; பற்றுஆர்தல்-பொடிவைத்துச் செய்தல் / பிணைப்பு மிக்க; போர்க்க-மறைக்க; (குளகப்பாடல்)

இலக்குவன் தனது இடுப்பில் சுற்றிக் கட்டியிருந்த அரைப்பட்டிகையில் ஒரு பக்கத்தில் உடைவாளைச் செருகியிருந்தான்; இடது கையிலே வில்லும், அம்புகள் அடங்கிய பெரிய அம்பறாத் தூணியை முதுகின் புறத்திலும் கட்டியிருந்தான்; பொடி வைத்துச் செய்து பிணைத்திருந்த சிவந்த பொன்னாலாகிய கவசத்தை, குளிர்ச்சி பொருந்திய, பனி அடர்ந்த மேருமலை கூட ஒரு பாம்புப் புற்றுப் போல உயர்ந்து விளங்குகின்ற அவனது தோள்களையும், மார்பினையும் மறைக்கும் வண்ணம் அணிந்திருந்தான்.

இலக்குவன் போர்க் கோலம் பூண்டமை கூறப்படுகிறது. இடுப்பில் உடைவாள், இடக்கையில் வில், முதுகில் அம்பறாத்தூணி, தோளையும் மார்பையும் மறைத்துப் பொன்னாலாகிய கவசம் இவைகளை அணிந்து போருக்கு ஆயத்தமாக நிற்கிறான் என்பதாம். அவனுடைய தோளின் உயர்ச்சியைக்கூற வந்த கவிஞன் அது மேருமலையைக் கூட ஒரு புற்றாகும் என்று சொல்லும் வண்ணம் உயர்ந்த தோள் என்றான். இலக்குவன் மேனி பொன்னிறம் என்பது பெறப்பட்டது.

117. அடியில் சுடர்பொன்கழல் ஆர்கலி நாண ஆர்ப்பப்
பொடியில் தடவும் சிறுநாண் பெரும்பூசல் ஓசை
இடியில் தொடரக் கடல்ஏழும் மடுத்து, இஞ்ஞாலம்
முடிவில் குமுறும் மழை மும்மையின் மேல்முழங்க. (1814)

(சுடர்-ஒளி வீசுகின்ற; ஆர்கலி-கடல்; பொடி-புழுதி; மடுத்து-உண்டு; மும்மை-மும்மடங்கு; பூசல்-ஆரவாரம்; குமுறுதல்-பேரொலி செய்தல்; மழை-மேகம்)

இலக்குவனின் கால்களில் கட்டியிருந்த ஒளி வீசுகின்ற பொன்னாலாகிய வீரக்கழல், கடலும் நாணும்படி ஆரவாரிக்கவும், புழுதியினால் தடவும் சிறிய நாண் பெரிய ஆரவாரம் செய்யவும், அந்த

Koviloor Digital Library

ஓசை இடியோசை போல விடாது தொடரவும், இவ்விரு ஓசைகளுடன் கூட, ஏழு கடல்களும் ஒன்றையொன்று உண்டு, ஊழியிறுதியில் பேராரவாரம் செய்து முழங்கும் மேகத்தைப் போல மூன்று மடங்கு முழங்கிற்று.

இலக்குவனுடைய வீரக்கழல்கள் கடல்கள் போல் ஒலித்தன; அவன் வில்லில் நாண் ஏற்றிய ஓசை இடி முழக்கம் போல் கேட்டது. இவ்விரண்டு ஒலியும் சேர்ந்து ஊழியிறுதிக் காலத்தில் ஏழு கடல்களும் ஒன்றுக்கு ஒன்று மேலோங்கி முழங்கும் மேகத்தின் ஓசையினும் மும்மடங்கு அதிகமாக ஒலித்தது. வில் நாணின் வழவழப்பு நீங்குமாறு புழுதி கொண்டு தடவுவது வீரர்களின் வழக்கம். நிறைந்த ஒலியையுடையது என்பதால் ஆர்கலி, கடலுக்குக் காரணப் பெயர். இடியோசை தொடர்ந்து இடைவிடாது ஒலிப்பது போல, இலக்குவன் வில்லில் நாண் ஏற்றிய ஓசையும் விடாது தொடர்ந்து கேட்டது என்பதாம். வில்லில் நாண் ஏற்றிய பிறகு நாணின் இறுக்கத்தைச் சோதித்துப் பார்ப்பதற்காக அதைத் தெறித்துப் பார்ப்பர். அது தெறிக்கும் பொழுது எழும் ஓசை பேரொலியாக உண்டாகும். நீரால் உலகம் அழியும் ஊழி இறுதியில் ஏழு மேகங்களும் ஏழுகடலையும் குடித்து, இடித்துப் பெருமழையாகப் பெய்து உலகை அழிக்கும் என்பது புராணக் குறிப்பு.

118. வானும் நிலனும் முதல், ஈறுஇல் வரம்புஇல் பூதம்
மேல்நின்று கீழ்காறும் விரிந்தன வீழ்வபோலத்
தானும், தம்முனும் அல்லது மும்மை ஞாலத்து
ஊனும் உயிரும் உடையார்கள் உளைந்து ஒதுங்க. (1815)

(தம்முன்-தன் அண்ணன்; உளைந்து-மனம் வருந்தி; வரம்புஇல்-அளவிடற்கரிய; மும்மை-மூன்று; ஒதுங்குதல்-புகலிடம் தேடி விலகுதல் / ஒதுங்கியிருத்தல்)

ஆகாயம் தொடங்கி, பூமி வரையுள்ள, அழிவில்லாத, அளவற்ற ஐம்பெரும் பூதங்களும், மேலிருந்து கீழ்வரை விரிந்து நிற்பவை. அவை, இலக்குவன் எழுப்பிய வீரக்கழல் ஒலியாலும், வில் நாண் ஒலியாலும் அஞ்சி நடுங்கிக் கீழே வீழ்வன போல, ஆயின. இலக்குவனையும், அவனது முன்னவனாகிய இராமபிரானையும் தவிர, இம்மூவுலகத்துள்ளும் உடலோடும், உயிரோடும் வாழும் சீவராசிகள் எல்லாம் மனம் கலங்கிப் புகலிடம் தேடி ஒதுங்கி நின்றன.

ஐம்பெரும் பூதங்களுள் வான் முன்னதும், நிலம் கடைசியுமாகும். முன்னதும் முடிவும் கூறியதால் ஏனைய மூன்று பூதங்களான நீர், காற்று, நெருப்பு முதலியன பெறப்பட்டன. இவை நிச்சயமானவை; அழிவற்றவை. ஆகாயம் முதல் பூமி வரை பரந்து நிற்பவை. இவை அனைத்தும் தலைகீழாய் நிலை தடுமாறி விழுவன போலத் தோன்றின என்பதாம். ஊழி இறுதி போன்ற தோற்றத்தால் உயிர்களெல்லாம் அஞ்சி நிலை குலைந்தன. ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும்,

Koviloor Digital Library

நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றுமென்பது ஐம்பெரும் பூதங்களின் தோற்றமுறையாகும்.

119. ''புவிப்பாவை பரம்கெடப் போரில் வந்தோரை எல்லாம்
அவிப்பானும், அவித்து அவர் ஆக்கையை, அண்டம் முற்றக்
குவிப்பானும், எனக்கு ஒரு கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும், நின்றேன்; இது காக்குநர் காமின்!'' என்றான். (1816)

(புவிப்பாவை-பூமி தேவி; பரம்-பாரம் / சுமை; அவித்தல்-கொல்லுதல்-ஒரு-ஒப்பற்ற; கொற்ற மௌலி-வெற்றி மகுடம்; காக்குநர்-தடுக்கவல்லவர்)

''பூதேவியின் சுமை குறையும் வண்ணம், என்னுடன் போர் செய்ய வருவோர்கள் அனைவரையும் கொன்று அழிப்பேன்; அவ்வாறு அழித்து, அவர்களது உயிரற்ற உடல்களை, இவ்வுலகத்தின் அண்டத்தின் முகடு முட்டும் வரை குவிப்பேன்; பின்னர் என்னுடைய அரசனாகிய இராமனுக்கு வெற்றித் திருமுடியைச் சூட்டுவேன். இதில் உறுதி பூண்டு இங்கு இப்பொழுது நிற்கிறேன். இதைத் தடுப்பவர்கள் யாராய் இருந்தாலும் தடுத்துப் பாருங்கள்'' என்று கோபாவேசமாகக் கூறினான் இலக்குவன்.

இதைத் தடுக்கக் கூடியவர்கள் என்று அவன் குறிப்பிட்டது கைகேயியையும் மந்தரையையும் என்று கொள்ளலாம். முன் இருபாடல்களிலும் அவன் போர்க் கோலம் பூண்டதைப் பற்றிக் கூறிய கவிஞன் இப்பாடலில் அவன் எதற்காகப் போர்க் கோலம் புனைந்தான் என்பதைத் தெளிவாக்குகிறான். என்னுடைய அரசனான இராமனுக்கே முடி சூட்டுவேன். இதைத் தடுப்பவர்கள் யார் வந்தாலும் என்னுடன் போர் செய்யட்டும். அவ்வாறு போர் செய்பவர்களை அழிப்பேன்; அழித்து அவர்கள் உடல்களை அண்டம் முட்டக் குவிப்பேன், என்று வீரவுரை நிகழ்த்துகிறான் இலக்குவன்.

120. ''விண்நாட்டவர், மண்ணவர், விஞ்சையர், நாகர் மற்றும்
எண்நாட்டவர், யாவரும் நிற்க; ஓர் மூவர்ஆகி,
மண்நாட்டுநர், காட்டுநர், வீட்டுநர் வந்த போதும்
பெண்நாட்டம் ஒட்டேன் இனிப்பேருலகத்துள்'' என்னா. (1817)

(விஞ்சையர்-வித்யாதரர்; எண்-எண்ணப்படுகின்ற; ஓர்-ஒப்பற்ற; நாட்டுதல்-நிலைபெறச் செய்தல் / காத்தல்; காட்டுநர்-படைத்தல்; வீட்டுநர்-அழித்தல்; நாட்டம்-நோக்கம்; ஒட்டேன்-நிறைவேறவிட மாட்டேன் / உடன்படேன் / தரியேன்) (குளகப்பாடல்)

விண்ணிலுள்ள தேவர்கள், மண்ணிலுள்ள மானுடர்கள், இரண்டிலும் இல்லாது எங்கும் திரியவல்ல வித்யாதரர்கள், பாதலத்துள்ள நாகர்கள், இன்னும் மற்றும் எண்ணத்தக்க வேறு எந்த நாட்டவர்களாயிருந்தாலும் அவர்கள் ஒருபுறம் இருக்கட்டும்; எல்லோர்க்கும் மேலோராகிய மூன்று

Koviloor Digital Library

தெய்வங்களாகிய இவ்வுலகை நிலை நிறுத்துகின்ற அரியும், படைக்கின்ற அயனும், அதை அழிக்கின்ற அரனும் ஆகிய பிரம்ம, விஷ்ணு, உருத்திரர்களே வந்தாலும் சரி, இவ்வுலகத்துள் நான் ஒரு பெண்ணாகிய கைகேயியின் நோக்கம் நிறைவேறுதற்கு உடன்பட மாட்டேன் என்றான்.

இனிமேல் பெண்களின் கருத்துக்கு உலகத்திலேயே இடந்தரலாகாது என்ற கருத்தும், ''இனிப் பேருலகத்துப் பெண் நாட்டம் ஒட்டேன்'' என்ற சொற்றொடரில் தொனிப்பதும் காண்க. எல்லா உலகங்களுக்கும் தலைமையுடைய மூவரையும் பொருட்படுத்தாத எனக்கு, மற்றவர்கள் ஒரு பொருட்டோ? என்பதால் யாவரும் நிற்க என்றான்.

121. காலைக் கதிரோன் நடு உற்றது ஓர் வெம்மை காட்டி
ஞாலத்தவர் கோமகன், அந்நகரத்து நாப்பண்,
மாலைச் சிகரத் தனி மந்தரமேரு முந்தை
வேலைத் திரிகின்றது போல், திரிகின்ற வேலை. (1818)

(வெம்மை-சினவெப்பம்; நாப்பண்-நடுவில்; மாலை-வரிசை; வேலை-கடல் / பாற்கடல்; முந்தை-முற்காலத்தில்; திரிகின்றது-சுழல்கின்றது; வேலை-பொழுது; மேரு-மலை)

காலையில் தோன்றும் உதய சூரியன், உச்சிப் போதில் வானின் நடுவில் வரும் போது காட்டுகின்ற கடும் வெப்பத்தைப் போல, கைகேயி இருவரங்கள் கேட்டதிலிருந்தே மனம் வருந்தியவனான இவ்வுலகத்தவர்க் கெல்லாம் அரசனான தசரதனின் இளைய மகனான இலக்குவன், இப்போது அக்கதிரோன் நடு உச்சியில் காட்டும் வெப்ப நிலையை மனத்துள் கொண்டு, அந்நகரத்தின் நடுவில் நின்று கொண்டு, முன்பு வரிசையான சிகரங்களைக் கொண்ட ஒப்பற்ற மந்தர மலை தான் மத்தாகிப்பாற்கடலைக்கடைந்த போது சுழன்றது போல இப்போது இவன் தானும் கலங்கி, நாட்டையும் கலக்குவிக்கின்ற சமயம். பாடல் முடியவில்லை-தொடர்கிறது.

இலக்குவன் கோபத்திற்கு, நடுவானில் உச்சிப் போதில் வருகின்ற சூரியனின் வெம்மை உவமை. காலையில் தோன்றும் இளஞ்சூரியன் படிப்படியாக வெம்மையில் வளர்ச்சியுற்று, நடுப்பகலில் வெப்பம் முற்றி நிற்பது போல, இலக்குவன், இராமன் காடு புகுவான், பரதன் நாடாளுவான் என்பதைக் கேட்டதிலிருந்து கோபம் கொண்டவனாகி, சின வெம்மை வளரப் பெற்று, இப்பொழுது இராமன் முடிசூட முடியாத நிலை ஏற்பட்ட பொழுது சினத்தின் உச்சிக்கே போய் விட்டான் என்பது கருத்து. பாற்கடல் கடையும் பொழுது மந்தர மலை தனித்தே சுழன்று கடலைக் கலக்கியது போல, இலக்குவனும் நகரத்தின் நடுவில் தனித்தே நின்று அந்நாட்டைக் கலக்குகிறான் என்பதாம். முற்பாடலில் இலக்குவனைக் கங்கைக்கு இறைவன் என்ற கவிஞன் இந்தப் பாடலில் ஞாலத்தவர் கோமகன் உலகாளும் மன்னவன் மகன் என்று சிறப்பிப்பது நோக்கத்தக்கது.

Koviloor Digital Library

122. இராமன் நாண் ஒலி கேட்டல்

வேற்றுக் கொடியாள் விளைவித்த வினைக்கு விம்மித்
தேற்றத் தெளியாது அயர்சிற்றவை பால் இருந்தான்,
ஆற்றல் துணைத் தம்பிதன் வில்புயல் அண்ட கோளம்
கீற்று உற்று உடையப் படும்நாண் உரும்ஏறு கேட்டான். (1819)

(வேற்று-மாற்றவள்; அயர்-துன்புறுகின்ற; புயல்-மேகம்; கோளம்-உருண்டை; விம்மி-தேம்பி; உரும் ஏறு-பேரிடி)

மாற்றாளானவளும், மனம் மாறியவளுமான கொடிய இயல்புகளைக் கொண்ட கைகேயி செய்த தீய செயலுக்காக அழுது தேம்பி, இராமன் தேற்றவும் தெளிய மாட்டாது துன்புறுகின்ற சிற்றன்னையாகிய சுமத்திரையின் அருகில் இருந்த இராமன், ஆற்றல் மிக்கவனும், தன்னை விட்டு எப்போதும் அகலாதவனும், தன் காரியங்களில் துணையாய் இருப்பவனுமாகிய தன்தம்பி இலக்குவனின்வில்லாகிய புயல், இவ்உலக உருண்டையே கீற்றுக் கீற்றாக உடைந்து போகும்படி எழுப்பிய நாணின் இடியோசையைக் கேட்டான்.

முன்பு எல்லோரிடமும் நல்லன்பு கொண்டிருந்த கைகேயி இப்பொழுது மனம் மாறுபட்டதனாலும், சுமத்திரைக்குக் கைகேயி இயல்பிலேயே மாற்றாள் என்பதாலும் அவள் இப்பொழுது பிறர் யாவரினும் கொடியவளாக மாறியிருப்பதாலும், அவளை ''வேற்றுக் கொடியாள்'' என்றான். தன்னைப் போல் ஆற்றல் மிக்கவனும், தன்னை விட்டு ஒரு கணமும் பிரியாதவனும், தான் ஆற்றும் காரியங்களுக்கு எப்போதும் துணையாய் நிற்பவனும் ஆகிய இலக்குவனை ''ஆற்றல் துணைத் தம்பி என்றான். வில்லைப் புயலாகக் கூறியதற்கு ஏற்ப அதனின்றும் எழும் நாணொலியை இடியோசையாகக் கூறியது நோக்கத்தக்கது. உருண்டை வடிவம் உள்ள எந்தப் பொருளும் கீழே விழுந்து உடையும் போது, கீற்றுக் கீற்றாகவே உடையும் என்ற அறிவியல் கருத்தை இங்கே ''அண்டகோளம் கீற்று உற்று உடைய'' என்று கூறுவது கருதத்தக்கது.

123. இராமன் வருதல்

வீறுஆக்கிய பொன்கலன் வில்இட, ஆரம்மின்ன,
மாறாத்தனிச் சொல் துளி மாரி வழங்கி வந்தான்;
கால்தாக்க நிமிர்ந்து, புகைந்து, கனன்று பொங்கும்
ஆறாக்கனல் ஆற்றும் ஓர் அஞ்சனமேகம் என்ன. (1820)

(கால்-காற்று; பொங்குதல்-மேல் எழுதல்; அஞ்சனம்-மை; வீறு-தனிச்சிறப்பு; வில்-ஒளி; மாறா-மாறுபட முடியாத; தனி-ஒப்பற்ற; மின்-ஒளி; வழங்குதல்-பெய்தல் / பேசுதல்; ஆறாத-அணையாத)

Koviloor Digital Library

தனக்கெனத் தனிச்சிறப்பு மிக்க பொன்னாலாகிய அணிகலன்கள் வான வில்லைப் போல ஒளி வீசவும், அவன் அணிந்திருக்கின்ற முத்தாரம் மின்னலைப் போல மின்னவும், மாறுபட முடியாத ஒப்பற்ற சொற்களை, மழை பொழிதல் போலக் கூறிக் கொண்டே, காற்றால் மோதப்பட்டு உயர்ந்து, புகைந்து, கொழுந்து விட்டு மேல் எழும்பி எரியும் தணிக்க முடியாத நெருப்பினைத் தணிவிக்கும் ஒரு கரிய நிற மேகம் போன்று, இராமன், இலக்குவன் நாணொலி கேட்டு, சுமித்திரையின் மாளிகையிலிருந்து விரைந்து வந்தான்.

இலக்குவன் நாண் ஏற்றிய ஒலி, சுமத்திரையின் அரண்மனையிலிருந்த இராமனுக்கு இடியோசை போலக் கேட்டது. அதனைத் தணிவிப்பதற்காக வந்தான் இராமன் இது தான் கருத்து. இங்கே இலக்குவனைச் சீற்றத்தை ஆற்ற முடியாத நெருப்பாகவும், இராமனை அதைத் தணிவிக்கும் மழையாகவும், மழையை வழங்கும் அஞ்சன மேகமாகவும் உருவகித்திருப்பதும் உணர்ந்து இன்புறத்தக்கது.

மாறாத் தனிச்சொல் என்பது கேட்பவர் மாறு கொள்ள இயலாத இனிமையும், உறுதியும், ஆழமும் உடைய ஒப்பற்ற சொல், ''கேட்டார்ப் பிணிக்கும்தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிவதாம் சொல்'' என்பது குறள் 643. நீருண்ட கரிய மேகம் அஞ்சன மேகம் என்று அஞ்சன வண்ணனாகிய இராமனைக் குறித்தார். காற்றுத் தாக்குவதால் நெருப்பு நிமிரும், புகையும், கனலும், பொங்கும் என்பது கைகேயின் சூழ்ச்சி என்ற கூற்றால் இலக்குவனது சினக்கனல் அடைந்த முறைகளையும் கூறியதாயிற்று. அந்த ஆறாக் கனலை ஆற்று விப்பதற்காக இராமன் இன்சொற்கள் என்னும் மழைத் துளியைப் பெய்து கொண்டே வந்தான் என்பதாம்.

124. இராமன் இலக்குவனை வினவுதல்

மின்ஒத்த சீற்றக்கனல் விட்டு விளங்க நின்ற
பொன்ஒத்த மேனி, புயல் ஒத்த தடக்கை யானை
''என் அத்த! என், நீ, இறையேனும் முனிவு இலாதாய்
சன்னத்தன் ஆகித் தனு ஏந்துதற்கு ஏது?'' என்றான். (1821)

(மின்-மின்னல்; புயல்-மேகம்; அத்த-ஐயனே! / அப்பன்; இறை-சிறிதும்; முனிவு-கோபம்; சன்னத்தன்-போர் முயற்சியுடையவன் / ஆயத்தமானவன்; தனு-வில்; ஏது-காரணம்; விட்டு-வெளிப்படுத்திக் கொண்டு)

மின்னலைப் போன்ற மிக்க சீற்றத்தை, நெருப்புப் போல் வெளிப்படுத்திக் கொண்டு நிற்கின்ற, பொன்னைப் போன்ற அழகிய மேனியையும், மேகத்தைப் போன்று வரையாது வாரி வழங்கும் பெரிய கைகளையும் உடைய இலக்குவனை நோக்கி, இராமன் ''என் ஐயனே! என்ன இது! இதுவரை கொஞ்சம் கூடக் கோபம் கொண்டிராத நீ, இப்போது

Koviloor Digital Library

போர் முனைக்குச் செல்லுபவன் போல் ஆயத்தமான நிலையில் வில்லைக் கையில் ஏந்திக் கொண்டு நிற்கின்றாயே? இதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

இலக்குவன் பொன் ஒத்த மேனியன் என்றாலும், புயல் ஒத்த தடக்கையன் என்றாலும், அவன் நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவன் என்பதை, அவன் கொண்ட சினம் மின்னலைப் போன்றது என்று கூறியதால் அவனைச் சிறப்பித்தார். ''குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேனும் காத்தல் அரிது'' என்பது குறள் 29. ''விற்பிடித்து நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்'' என்பது வாக்குண்டாம். அம்பு மழை பொழியும் மேகத்தைப் போன்ற பெரிய கைகளையுடையவன் என்பது இன்னும் நன்கு பொருந்துவது உணர்க. சீற்றத்தால் கண்கள் கக்கிய கனல் மின்னலைப் போல ஒளி வீசிற்று என்பதும் ஒன்று. இலக்குவன் சீற்றத்தைத் தணிக்க வந்த இராமன் முதலில் அவனை அத்த! என்று கனிவாக அழைத்ததிலும், இதுவரை ஒரு சிறிதும் கோபப்படாத சாந்தமூர்த்தியாயிற்றே என்று அவனைப் புகழ்ந்ததிலுமே அவனுடைய சினம் அடங்கி விடும் என்க. அவனது சீற்றம் கணநேரம் நின்று மறையும் என்பதால் தான் மின்னலை உவமை கூறினான் என்பதாம்.

125. இலக்குவன் காரணம் கூறுதல்

''மெய்யைச் சிதைவித்து, நின்மேல் முறைநீத்த நெஞ்சம்
மையில் கரியாள் எதிர், நின்னை அம்மௌலி சூட்டல்
செய்யக்கருதி, தடைசெய்குநர் தேவரேனும்,
துய்யைச் சுடு வெம்கனலில் சுடுவான் துணிந்தேன்''. (1822)

(மேல்-பழமையான; துய்-பஞ்சு; மெய்-மெய்ம்மை / சத்தியம் / வாய்மை)

''வாய்மையைச் சிதையச் செய்து, உனக்கு உரிமையுள்ள தொன்மையான அரசுரிமையை நீக்கிய, மை போல உள்ளம் கறுத்த கைகேயியின் எதிரிலேயே, அதே மணி மகுடத்தை உனக்குச் சூட்ட வேண்டும் என்று கருதினேன். அதைத் தடை செய்வார்கள் முத்தேவர் களாயிருந்தாலும் சரி, அவர்களைப் பஞ்சினைக் கொளுத்துகின்ற கொடிய நெருப்பினைப் போல அழித்து விடவும் துணிந்து நிற்கிறேன்'' என்றான் இலக்குவன்.

''போர் முனைக்குச் செல்லுவான் போல் ஆயத்தமாய் நிற்கிறாயே? என்ன காரணம்?'' என்று கேட்ட இராமனுக்கு இலக்குவன் காரணம். கூறுகிறான். எல்லோர் முன்னாலும் அரச சபையில் உனக்கு முடிசூட்டுவேன் என்று நம் தந்தை தசரதன் கூறிய வாய்மை மொழிகளைச் சிதையச் செய்து, நம் குலமுறைப்படி மனுமுதல் தொன்று தொட்டு வழங்கி வரும் மூத்தவர்க்கு உரியது அரசுரிமை என்ற சீரிய மரபையும் நீக்க வைத்த மை போன்று கறுத்த நெஞ்சம் உடையவள் கைகேயி என்பது

Koviloor Digital Library

''மெய்யைச் சிதைவித்து நின்மேல் முறை நீத்த, மையில் கரிய நெஞ்சத்தாள்'' என்று சுட்டப்பட்டது. அவள் எதிரிலேயே, ''அதே மணி மகுடத்தை இராமனுக்குச் சூட்ட இலக்குவன் துணிந்து உறுதியான முடிவு எடுத்திருக்கிறான். இதற்கு இடையூறாக முத்தேவர்களே வந்தாலும் சரி, அவர்களைப் பஞ்சைத் தீய்க்கின்ற கொடிய நெருப்புப் போலத் தீய்த்து அழித்து விடுவதற்குத் துணிந்து நிற்கிறேன் என்று சூளுரையாகக் காரணம் கூறுகிறான் இலக்குவன். நெஞ்சத்தால் தீயவள், வஞ்சனையுடையவள் என்பது குறிக்க நெஞ்சம் கரியாள் என்றான். ''மை பொதி விளக்கே என்ன, மனத்தினுள் கறுப்பு வைத்து'' என்பது பெரிய திருமொழி.

126. ''வலக்கார்முகம் என் கையது ஆக, அவ் வானுளோரும்
விலக்கார்; அவர் வந்து விலக்கினும், என் கைவாளிக்கு
இலக்கா எரிவித்து, உலகு ஏழினோடு ஏழும், மன்னர்
குலக்காவலும், இன்று உனக்கு யான் தரக்கோடி!'' என்றான்.
(1823)

(வலம்-வலிமையுடைய; கார்முகம்-வில்; இன்று-இப்பொழுது; கோடி-கொள்க!; விலக்குதல்-தடுத்தல்)

''வலிமையான என்னுடைய வில் என் கையில் இருக்கும் பொழுது, அந்த வானுலகில் உள்ள தேவர்களும் கூட என்னைத் தடுக்க மாட்டார்கள். ஒரு வேளை அவர்கள் வந்து தடுத்தாலும் கூட, என் கையில் இருக்கும் அம்புகளுக்கு அவர்களை இலக்காக வைத்து அவர்களை அழித்துவிட்டு, பதினான்கு உலகங்களையும், அவற்றிற்குரிய அரசர் குலக் காவல் உரிமையையும், என்னதாகச் செய்து கொண்டு பின்னர், இப்பொழுதே உனக்கு அவற்றை நான் தருவேன். அதனை நீ பெற்றுக் கொள்ளுவாயாக!'' என்றான் இலக்குவன்.

இலக்குவன் வில்லாற்றலுக்குத் தேவர்களும் அஞ்சுவர் என்பது பெறப்பட்டது. பிறப்புரிமையால் தசரதன் தாராத அரசுரிமையை, தனது வில்லாற்றல் வெற்றிச் சிறப்புரிமையால் தான் இன்றே பெற்றுத் தருவதாகக் கூறினான் இலக்குவன் என்க. தசரதன் உனக்குத் தர இருந்தது கோசல நாட்டு அரசுரிமை மட்டுமே. ஆயினும் நான் ஈரேழு பதினான்கு உலக அரசுரிமையையும் உனக்கு அளிக்கிறேன் என்று தன் வில்லாற்றலையும், இராமன்பால் தனக்கு இருந்த பேரன்பையும் புலப்படுத்தினான் என்பதாம்.

127. இராமன் மீண்டும் வினவுதல்

இளையான் இதுகூற, இராமன், ''இயைந்த நீதி
வளையா வரும் நல்நெறி நின் அறிவு ஆகும் அன்றே!
உளையா அறம் வற்றிட, ஊழ்வழு உற்ற சீற்றம்
விளையாத நிலத்து, உனக்குஎங்ஙன் விளைந்தது''? என்றான். (1824)

Koviloor Digital Library

(இயைந்த-பொருத்தமான; வளையா-மாறுபடாது / கோணாது; உளையா-உளைந்து / மனம் வருந்தி; ஊழ்-முறை; எங்ஙன்-எவ்வாறு; இளையான்-இளையவன் / இளையாதவன்; வற்றுதல்-கெட்டுப்போதல்; வழுவுறுதல்-தவறுதல்; விளைதல்-உண்டாகுதல்)

இளையவனான இலக்குவன் இவ்வாறு கூறக் கேட்ட இராமன் ''நீதி நெறிக்கு மாறுபடாது பொருந்தி வரும் நல்ல நெறியினைத் தானே உன் அறிவு ஏற்றுக்கொள்ளும்? அப்படி இருக்க, இப்போது கெடுதலில்லாத தருமமே கெட்டுப்போகும்படி சினம் உண்டாகாத இடமாகிய உன் உள்ளத்தில் இக்கொடிய முறை தவறிய சினம் எவ்வாறு உண்டாயிற்று?'' என்றான்.

சீற்றத்தால் அறம் வற்றிக்கெடும் என்பதும், முறைதவறும் என்பதும் புலப்படுத்தப்பட்டது. சீற்றமாகிய விதை, இலக்குவன் மனமாகிய நிலத்தில் விளைவதற்கு வாய்ப்பே இல்லை என்பதை நன்கு அறிந்தவன் இராமன். எனவே தான் ஊழ் வழுவுற்ற சீற்றம் விளையாத நிலத்து, உனக்கு எங்ஙன் விளைந்தது? என்று கேட்டான் என்பதாம். முறை தவறிய சீற்றம் என்ன? தன்தாய், தன்தந்தை, தன்தமையன்இவர்கள்மேல்சினம் கொண்டு அறம் கெடும்படி நடந்து கொண்டது. இளையான் என்ற சொல் எத்தகைய பகைவர்க்கும் இளையாதவன் என்றும், வீரத்தில் இளைக்காதவன் என்றும், தான் கொண்ட கருத்திலிருந்து சற்றும் பின் வாங்கித் தளராதவன் என்றும் பொருள்கள் தந்து நிற்பதை உணர்க. இலக்குவன் அறிவு செல்லும் வழியே நல்ல வழி; நல்ல வழியில் அன்றிப் பிற வழியில் அவன் அறிவைச் செலுத்தாதவன் என்பதை நன்குணர்ந்தவன் இராமன்.

128. இலக்குவன் மறுமொழி கூறுதல்

நீண்டான் அது உரைத்தலும்,
நித்திலம் தோன்ற நக்கு
''சேண்தான் தொடர் மாநிலம்
நின்னது என்று உந்தை செப்ப,
பூண்டாய்; பகையால் இழந்தே
வனம் போதி என்றால்,
யாண்டோ அடியேற்கு இனிச்
சீற்றம் அடுப்பது?'' என்றான். (1825)

(நீண்டான்-இராமன் / நெடியோன்; நித்திலம்-பற்கள் / முத்து; சேண்-பழங்காலம்; பூணுதல்-ஏற்றுக் கொள்ளுதல்; அடுப்பது-வருவது; தொடர்தல்-வழிவழி உரிமையாய் வருதல்; நக்கு-சிரித்து)

ஓங்கி உலகளந்த உத்தமனான இராமன் அவ்வாறு கூறியதும், முத்துப் போன்ற பற்கள் வெளியே தெரியும்படி சிரித்த இலக்குவன், ''வழிவழி யாகத் தொன்மையான காலத்திலிருந்தே தொடர்ந்து வரும் இப்பெரிய

Koviloor Digital Library

நிலத்தின் அரசுரிமை உன்னுடையதே ஆகும் என்று உன்னுடைய தந்தை சொல்ல, அதை நீ ஏற்றுக்கொண்டாய். ஆனால் இப்போது பகைவர்களால் அவ்வரசாட்சி உனக்கு இல்லை, நீ காட்டிற்குச் செல்வாயாக! என்று சொன்னால், உன் அடியவனான எனக்கு, இந்த நேரத்தில் சீற்றம் வராமல் பின் எப்போது வரும்?'' என்று இலக்குவன் ஆவேசமாகக் கேட்டான்.

நீண்டான்என்பது எல்லாவகைக் குணங்களாலும் மேம்பட்டவன்என்ற பொருளையும், திருமாலின் அவதாரம் இராமன் என்ற கருத்தையும் தருதல் காண்க. இராமனுக்கு முன் இலக்குவன் முன்பு எப்போதும் இவ்வாறு வெகுண்டு சிரித்தவன் அல்லன். அதைக் குறிக்கவே நித்திலம் தோன்ற நக்கு என்றான். நம் தந்தை என்று கூறாமல், தன் தந்தையின் மீது தனக்கு உள்ள வெறுப்பைக் காட்டவே உந்தை என்று இராமனை நோக்கிக் கூறினான் என்க. கைகேயி என்று நேரே கூறாமல் பகையால் என்று குறித்தான். தகுந்த நேரத்தில் தான் தனக்குச் சீற்றம் வந்துள்ளதாக இலக்குவன் நிறுவுகிறான்.

129. ''நின்கண் பரிவு இல்லவர்
நீள்வனத்து உன்னை நீக்க,
புன்கண் பொறி யாக்கை
பொறுத்து, உயிர் போற்றுகேனோ?
என்கண் புலம்முன், உனக்கு
ஈந்துவைத்து, ''இல்லை'' என்ற
வன்கண் புலம்தாங்கிய
மன்னவன் தான் கொல்?'' என்றான். (1826)

(பரிவு-அன்பு; புன்-புன்மையான / புல்லிய / இழிந்த; யாக்கை-உடம்பு; பொறுத்தல்-தாங்குதல்; போற்றுதல்-காத்தல்; நரம்பால் யாக்கப்பட்டதால் யாக்கை என்பது உடம்பிற்குக் காரணப் பெயர்; வன்கண்-இரக்கமின்மை)

என் கண் முன்னாலேயே உனக்கு இந்நாட்டின் அரசுரிமையைத் தந்து, பின்னர் ''இல்லை என்று கூறிய இரக்கமில்லாத மன்னவன் தசரதனைப் போல, உன்னிடம் அன்பில்லாதவர்கள், உன்னை நீண்ட காட்டிற்குப் போகச் செய்ய, அதைப் பார்த்துக் கொண்டு, புன்மையான ஐம்பொறிகளால் ஆக்கப்பட்ட இவ்வுடம்பைத் தாங்கிக் கொண்டு நம்மன்னவன் தசரதன் போல என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வேனோ? மாட்டேன். உடனே மாய்ந்து விடுவேன் என்று இலக்குவன் கூறினான்.

நின் கண் பரிவு இல்லவர் என்று கைகேயியையும் அவளைச் சார்ந்தவர்களையும் குறிக்கிறான். இராமனுக்கு அரசாட்சியை நல்கிய செய்தியைத் தசரதன் அரசவையில் கூறும் பொழுது இலக்குவனும் அங்கே இருந்தான். எனவே தான் என் கண் புலம்முன் உனக்கு ஈந்து வைத்த என்றான். தந்தை என்னாது மன்னவன் என்றது அன்பின்மை

Koviloor Digital Library

காரணமாகவும் தந்தை மீது ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவும் என்று கொள்க. அவன்நீ பிரிந்தாலும், உயிரைப்போற்றி வாழ்வான். ஆனால் நான் அவனைப் போல உயிர் போற்றி வாழேன், உடனே மாய்வேன் என்றான் என்பதாம்.

130. இராமன் அமைதி கூறுதல்

''பின்குற்றம் மன்னும் பயக்கும்
அரசு என்றல் பேணேன்;
முன்கொற்ற மன்னன் ''முடிகொள்க''
எனக், கொள்ள மூண்டது
என்குற்றம் அன்றோ? இகல்
மன்னவன் குற்றம் யாதோ?
மின்குற்று ஒளிரும் வெயில்
தீக்கொடு அமைந்த வேலோய்?'' (1827)

(குற்றுதல்-குன்றச் செய்தல் / கீழ்ப்படுத்துதல்; மன்னும்-மிகுதியாக; பயத்தல்-தருதல்; பேணேன்-நோக்காது / பாராது / எண்ணாது; இகல்-வலிமை; மூண்டது-ஏற்கப்பட்டது)

''மின்னலை வென்று ஒளி வீசுவதும், வெயில், நெருப்பு ஆகியவற்றின் வெம்மைத் தன்மையும் கொண்டு அமைந்த வேற்படையை உடைய இலக்குவனே! முன்பு வெற்றி பொருந்திய மன்னன் தசரதன், நீ முடிசூட்டிக் கொள்வாயாக? என்று கூறிய போது, அதை ஏற்றுக் கொண்டால், பின்னால் அரசாட்சியினால் பல வகைக் குற்றங்கள் மிகுதியாக வரும் என்பதை ஆராய்ந்து நோக்காது, நான் உடனே ஏற்றுக் கொண்டது என்னுடைய குற்றம் தானே? அதனால் தானே இவ்வளவு விளைவுகளும் நிகழ்ந்தன? எனவே இதில் வலிமையையுடைய மன்னவனின் குற்றம் என்ன இருக்கிறது?'' என்றான் இராமன்.

''கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று'' என்பது புறநானூறு. அதன்படி அம்மன்னவன் முடிசூட்டிக் கொள்க என்று பெருந்தன்மையோடு கொடுத்திருந்தாலும் கொள்ளேன் என்று சொல்லி முடிசூட்டிக் கொள்ளாமல் இருந்திருத்தலே நன்றாயிருந்திருக்க வேண்டுவது. அவ்வாறு செய்யாமலும், அரசாட்சி ஏற்றுக் கொள்வதனால் பின்னால் விளையப் போகும் மிகுதியான குற்றங்களையும் ஆராய்ந்து எண்ணிப் பார்க்காது நான் உடனே உடன்பட்டு அரசுரிமையை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறியது என்னுடைய குற்றமே அல்லவா? இதில் மன்னவனை எவ்வாறு குற்றம் சொல்ல முடியும்? என்றான் இராமன். ''மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும், இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும், காவலர்ப் பழிக்கும் இக்கண் அகல் ஞாலம்'' என்பது புறநானூறு.

Koviloor Digital Library

131. ''நதியின் பிழையன்று நறும் புனல் இன்மை; அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன் பிழையன்று; மைந்த!
விதியின் பிழை; நீ இதற்கு என்னை வெகுண்டது?'' என்றான். (1828)

(நறும்புனல்-நல்ல நீர்; அற்றே-அது போலவே; பதி-மன்னவன் / தசரதன்; புரந்தாள்-வளர்த்தவள்; மைந்து-வலிமை; என்னை-எதனால்?; விதி-ஊழ்வினை)

''நதியில் நல்ல நீர் இல்லாமல் வறண்டு போவதற்கு மழையின்மை காரணமே அன்றி அது நதியின் பிழை ஆகாது. அது போலவே நான் வனம் புகவேண்டும் என்ற இச்செயலுக்கு மன்னவன் தசரதன் காரணமாக மாட்டான்; நம்மைப் பெற்று வளர்த்த நம் அன்னை கைகேயியின் அறிவுத் திறத்தின் குற்றமும் இல்லை; அவளது மகனும் குற்றம் செய்ய வில்லை-வலிமையுடையவனே! மகனே! இது நாம் முற்பிறவியில் செய்த ஊழ்வினையால் வந்த பயன். விதி வசத்தாலானது; இதற்காக நீ எல்லோரையும் கோபிப்பது எதனால்?'' என்று கேட்டான் இராமன்.

ஆற்றில் வெள்ளமில்லாததோ, நல்ல நீர் இல்லாமல் சில சமயங்களில் வறண்டு போவதோ, இயற்கையாகிய மழை பெய்யாததனால் தானே தவிர, அதை நதியின் குற்றம் என்று கூற முடியுமா? அதைப் போலத்தான் நான் வனம் புகவேண்டும் என்பதும் விதி. அது நீ கூறியது போல நம் தந்தையின் குற்றமோ, நம்மைப் பெற்றெடுத்து வளர்த்த தாய் கைகேயியின் அறிவின் குற்றமோ; அவளுடைய மகன் பரதனின் குற்றமோ அன்று. பெற்று வளர்த்த தாய் தன் மகனுக்குத் தீங்கு விளைவிக்க எண்ண மாட்டாள் என்று இங்கு இராமன் குறிப்பால் உணர்த்துவது, பின்னால் காப்பிய நோக்கத்திற்குக் கைகேயி எவ்வாறு உதவியிருக்கிறாள் என்பதையும், இந்தக் கைகேயியின் செயலினால் தானே நாம் இன்று இராமபிரான் புகழ் பற்றிப்பாடிக் கொண்டு இருக்கிறோம் என்பதையும் காப்பியப் போக்கில் நாம் உணரலாம். எய்தவனை விடுத்து அம்பை நோவது போல, நம் ஊழ்வினையை நினைத்து அமைதியுறாது மற்றவர்களைக் குறை கூறிப் பயன் இல்லை. அவ்வாறு தண்டிக்க வேண்டும் என்று நீ எண்ணினால் என்னைத் தான் தண்டிக்க வேண்டும் என்று கூறி இலக்குவனை அமைதிப்படுத்தினான் இராமன் என்பதாம். எதிர்பாராததும், காரணம் அறிய முடியாததுமான நிகழ்ச்சிகளுக்கு, மனிதன் தந்த ஒரு பொருள் குறித்த பல சொற்கள்; விதி, அதிர்ஷ்டம், பாக்கியம், நியதி, கைதவம் என்பன. தன்னுடைய முயற்சியோ, பிறருடைய சூழ்ச்சியோ இல்லாது நிகழும் நிகழ்ச்சிகள் இவை.

Koviloor Digital Library

132. இலக்குவன் கூறுதல்

''உதிக்கும் உலையுள் உறுதீ
என ஊதை பொங்க,
கொதிக்கும் மனம் எங்ஙனம்
ஆற்றுவென்? கோள் இழைத்தாள்
மதிக்கும் மதியாய், முதல்
வானவர்க்கும் வலி ஈதாம்
விதிக்கும் விதியாகும் என்
வில் தொழில் காண்டி?'' என்றான். (1829)

(உதித்தல்-தோன்றுதல்; ஊதை-மூச்சுக் காற்று; கோள்-தீமை / இடையூறு; மதி-சூழ்ச்சி)

''உலைக்களத்தில் துருத்தியால் ஊதப்படும் போது தோன்றும் மிகுந்த தீயைப் போல, என் மூச்சுக் காற்று மிகுந்து எழுகின்ற என் மனத்தின் கொதிப்பை எவ்வாறு தணித்துக் கொள்வேன்? உனக்குத் தீங்கிழைத்தவளான அந்தக் கைகேயியின் சூழ்ச்சிக்கும் மேம்பட்ட சூழ்ச்சியாய், முதன்மையான கடவுளர்களான முத்தேவர்களாலும் வெல்ல முடியாததான அந்த ஊழ்வினைக்கும் ஒரு ஊழ்வினை போல் இருக்கும் என்னுடைய வில்லின் ஆற்றலை இப்போது காண்பாயாக?'' என்று இலக்குவன் இராமனிடம் கூறினான்.

எல்லாம் விதியின் செயல் என்று கூறிய இராமனுக்கு, அந்த விதியையும் என் வில்தொழிலால் வென்று காட்டுவேன் பார் என்று சவால் விடுகிறான் இலக்குவன். ''ஊழிற் பெருவலியாவுள'' என்பது இராமன் கருத்து; ''ஊழையும் உப்பக்கம் காண்பேன்'' என்பது இலக்குவன் கருத்து. விதியை இலக்குவன் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதும், இதனால் கைகேயிக்கு ஒரு பாடம் கற்பிக்கலாம் என்பதும், இடையூறாக இருப்பவர்களை அழித்துவிட்டால் இராமனுக்கு முடிசூட்டி வைத்து விடலாம் என்பதும் இலக்குவனது நம்பிக்கை.

133. இராமன் கடிந்து கூறுதல்

ஆய்தந்து, அவன் அவ்வுரை கூறலும், ''ஐயன்! நின்தன்
வாய் தந்தன கூறுதியோ, மறை தந்த நாவால்?
நீ தந்தது அன்றே நெறியோர் கண் நிலாதது? ஈன்ற
தாய் தந்தை என்றால் அவர்மேல் சலிக்கின்றது என்னோ?'' (1830)

(ஆய்தரல்-ஆராய்தல்; தந்த-பயின்ற / கொள்ளுதல்; தந்தன-வந்தன / கூறியன; சலித்தல்-கோபித்தல்)

அவ்வாறு இலக்குவன் ஆராய்ந்து ''விதிக்கு விதியாகும் என் வில் தொழில் காண்டி'' என்று கூறியதைக் கேட்டவுடன் இராமன்

Koviloor Digital Library

இலக்குவனை நோக்கி, ''ஐயனே! நான்கு வேதங்களையும் பயின்ற உன்னுடைய வாயினால், உன் வாய்க்கு வந்தனவற்றையெல்லாம் பேசலாமோ? நீ இப்பொழுது சொல்லுகின்ற இந்தச் சொல், நல்ல நெறியில் வாழ்வோர்கள் செய்யக் கூடாத செயலல்லவா? பெற்ற தாயையும் தந்தையும், தன் கருத்துக்கு அவர்கள் மாறுபட்ட கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால், வெறுத்துக் கோபித்துக் கொள்ளுதல் முறையாகுமோ?'' என்று கேட்டான்.

இலக்குவன் நான்கு வேதங்களையும், அத்திர, சத்திரங்களையும் விற்பயிற்சியையும் இராமனுடன் கூட வசிட்டனிடமிருந்து கற்றுக் கொண்டான் என்பதை முன்பே கண்டோம். பெற்றோர்கள் நம் கருத்துக்கு மாறுபட்டவர்கள் என்றாலும் கூட நாம் அவரைக் கோபித்துக் கொள்ளக் கூடாது என்பது இராமன் அறவுரை. ஒழுக்க நெறியில் நிற்போர் யாரும் பெற்றோரைக் கொல்லுதற்கு எண்ணார்; அவ்வாறு கூறவும் கூறார் என்பதாம் அவற்றை அவர்கள் நம் நன்மையை நாடித் தான்அவ்வாறு செய்கிறார்கள் என்றும் கொள்ள வேண்டும் என்கிறான் இராமன்.

134. இலக்குவன் பிடிவாதம்

நல்தாதையும் நீ; தனி நாயகன் நீ; வயிற்றில்
பெற்றாயும் நீயே; பிறர் இல்லை; பிறர்க்கு நல்க
கற்றாய்! இது காணுதி இன்று, எனக் கைமறித்தான்,
முற்றா மதியம் மிலைந்தான் முனிந்தானை அன்னான். (1831)

(முற்றா மதியம்-இளம்பிறை; மிலைதல்-சூடுதல்; முனிதல்-கோபித்தல்; தனி-ஒப்பற்ற; நாயகன்-கடவுள்; மறித்தல்-அசைத்தல்; காணுதி-மனத்தால் நோக்குக)

இளம்பிறைச் சந்திரனைத் தலையில் சூடிய சிவபெருமான் கோபித்துக் கொள்ளுவதைப் போலக் கோபம் கொண்ட இலக்குவன், இராமனைப் பார்த்து ''உனக்குக் கிடைக்க வேண்டியவைகளை எல்லாம் மற்றவர்களுக்குக் கொடுக்கக் கற்றவனே! என்னுடைய செய்கையைக் கருத்தால் எண்ணிப்பார்க்க; எனக்கு நல்ல தந்தையும் நீயே; ஒப்பற்ற தலைவனும் நீயே! வேறு எவரும் இல்லை''; என்று கூறி இராமனது கருத்தை மறுத்து உரைத்தான்.

நல்ல தந்தையும் நீயே என்று சொன்னதனால், தசரதன் நல்லதோர் தந்தை அல்லன் என்பதும், என்னை வயிற்றில் சுமந்து பெற்றெடுத்த தாயும் நீயே என்றதனால், எனக்குத் தாய் கைகேயி அல்லள் என்பதும் பெறப்படுவதால், நான் என் தாய் தந்தையரைக் கொல்ல நினைக்கவில்லை. மற்றவர்களைத் தான் அழிக்க நினைக்கிறேன் என்று இராமன் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைச் சொல்லிப் பிடிவாதமாக மறுக்கிறான். இலக்குவன் எனவே கைகேயியைக் கொல்லுவதால் தாய்

Koviloor Digital Library

தந்தையரைக் கொன்ற பாவம் என்னை அணுகாது என்று சமாதானம் சொல்லிக் கொள்கிறான் என்பதாம். சீற்றத்திற்குச் சிறந்த உதாரணம் சிவபெருமானே. எனவே அவரையே எடுத்துக்காட்டாகக் கூறினான். பெற்ற தாய் தந்தையரைக் கோபித்தல் தவறு என்று அறிவுறுத்திய இராமனுக்கு, எனக்குப் பெற்றதாய், தந்தை எல்லாம் நீயே; அதற்கு மேலும் எனக்குக் கடவுளும் நீயே! எனவே அவர்களை நான் பெற்றோராகக் கருதவில்லை. எனவே நான் தவறிழைத்தவனாகக் கருதப்படக் கூடாது என்பது அவன் கூற்று. ஊழி இறுதிக் காலத்தில் எல்லாவற்றையும் அழிக்கப் பொங்கி வரும் சிவபெருமானை, உருத்திரன், கால உருத்திரன், காலாக்கினி உருத்திரன், காலக் கடவுள் என்று பல பெயர்களில் வழங்குவர். கடுஞ்சீற்றம் கொள்வோர்க்கு உருத்திரனை உவமை கூறுதல் மரபு.

135. இராமன் அதை மறுத்து உரைத்தல்

வரதன் பகர்வான், ''வரம்பெற்றவள் தான் இவ்வையம்
சரதம் உடையாள்; அவள் என் தனித்தாதை செப்பப்
பரதன் பெறுவான்; இனி, யான் படைக்கின்ற செல்வம்
விரதம்; இதில் நல்லது வேறு யாவது?'' என்றான். (1832)

(சரதம்-உரிமை / உண்மை; விரதம்-தவம்; வையம்-நாடு; வரதன்-வரம் தருபவன் / இராமன்)

''வரம் தரவல்லவனாகிய இராமன் மேலும் இலக்குவனைப் பார்த்துக் கூறுகிறான். வரம் வேண்டிக் கேட்டு பெற்றவளாகிய கைகேயி தான் இந்நாட்டினைப் பெறுவதற்கு உண்மையான உரிமை உடையவள்; அவளும், என் தந்தையின் அனுமதியுடன் தான், இவ்வையத்தினை ஆளும் உரிமையைப் பரதனுக்குப் பெற்றுத் தந்தாள். நான் பெறப் போகின்ற செல்வம் தவம் தான். இதனை விடச் சிறந்த மேன்மையுடையது வேறு என்ன இருக்கிறது?'' என்றான்.

மூத்தவனுக்குத் தான் அரசுரிமை என்பது பொது விதி யென்றாலும், என் தாய் என் தந்தையிடமிருந்து சிறப்பான வரம் பெற்றிருப்பதனால், பொது விதியை இச்சிறப்பு விதி வென்று விட்டது. எனவே இந்நாட்டுக்கு இனிக் கைகேயிதான் உண்மையான உரிமை உடையவள். என் தனித்தாதை என்று தசரதனை இராமன் கூறுவது, நோக்கத்தக்கது. முன் பாடலில் உந்தை என இலக்குவன் இராமனுக்கு மட்டும் தந்தையாகப் பிரித்துக் கூறியதனால், இப்பாடலில் இராமன் எந்தை என்று கூறாது அடைமொழியுடன் என் தனித்தாதை என்கிறான். நான் பெறப்போகின்ற செல்வம் என்னாது நான் படைக்கின்ற செல்வம் விரதம் என்றது, படைத்தல் என்பது முன்பு இல்லாத ஒன்றைப் புதிதாக உண்டாக்குவது என்று பொருள் தருதலால். தசரதன் இராமனுக்கு முடிசூட்டுவேன் என்று கூறியது இப்போது தான்,

Koviloor Digital Library

அதுவும் வெறும் வாய்ச் சொல் அளவில் கூறியது தான். ஆனால் கைகேயி வேண்டிப் பெற்றது பல ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்தது. அது வெறும் வாய்ச் சொல் அல்ல. அவன் தந்த வரம். அதைப் பேணிக்காப்பது அவனுடைய முதற்கடமை. எனவே கைகேயியின் வரம் தான் இவ்வாய்ச் சொல்லினும் சிறந்து நிற்கிறது எனவே யாரையும் குற்றம் சொல்லிப் பயனில்லை என்கிறான். தவச்செல்வமே நிலையற்ற அரசச் செல்வத்தினும் சிறந்தது மேம்பட்டது என்கிறான். எனவே உன்னுடைய முறையற்ற சீற்றத்தைத் தணித்துக் கொள் என்பது குறிப்பு. நான் இதனையே நல்லது என்று கருதுகிறேன். எனவே என்னையே தாயாகவும், தந்தையாகவும், கடவுளாகவும் கருதும் நீ, என்னுடைய எண்ணத்திற்கு மாறாகவும், என்னுடைய நன்மையைக் கெடுக்கவும் முயற்சிக்கலாமா? என்பது கருத்து.

136. ஆன்றான் பகர்வான் பினும்;
ஐய! இவ்வையம் மையல்
தோன்றா நெறிவாழ் துணைத்
தம்பியைப் போர் தொலைத்தோ?
சான்றோர் புகழ்நல் தனித்
தாதையை வாகை கொண்டோ?
ஈன்றாளை வென்றோ? இனி
இக்கதம் தீர்வது?'' என்றான். (1833)

(ஆன்றான்-அறிவாலும், பண்பாலும் நிறைவு பெற்றவன்; மையல்-மயக்கம்; வாகை-வெற்றி; கதம்-கோபம்)

நற்குணங்கள் நிறைந்து ஆன்றவிந்தடங்கிய சான்றோனாகிய இராமன் மேலும் பின் வருவனவற்றைக் கூறலானான். ''மகனே இலக்குவா! இந்த உலகம் என்னும் மயக்கம் இன்னும் தன் மனத்தில் தோன்றாமல், நல்ல வழியில் வாழ்ந்து கொண்டிருக்கும், நமக்கு உடன் பிறந்த துணையாகிய தம்பி பரதனைப் போரில் அழித்து நீ இக்கோபம் நீங்குவாயா? அல்லது பெரியோர்கள் ஏத்திப் புகழ்கின்ற நல்ல ஒப்பற்ற நம் தந்தை தசரதனைப் போரில் தோல்வியுறச் செய்து வெற்றி வாகை சூடிக்கொண்ட பின்னர் நீ இக்கோபத்தை நீக்கிக் கொள்வாயா? அல்லது நம்மைப் பெற்றெடுத்த தாய் கைகேயியைப் போரில் வென்ற பின்னர் இக்கோபத்தை நீக்கிக் கொள்ளப் போகிறாயா? நீ எப்போது தான் இந்தச் சீற்றத்தை விட்டொழிக்கப் போகிறாய்?'' என்று கேட்டான்.

பரதன் இன்னும் உலக மயக்கம் தலைகாட்டாத நிலையில் உள்ளவன். அவனுக்கு இங்கே நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எதுவும் தெரியாது. அவன் கேகய நாட்டில் இருக்கிறான். அவன் நன்னெறியில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். நம் தந்தையோ சான்றோர்களால் போற்றிப் புகழப்படும் நற்குணங்கள் வாய்ந்தவன். கைகேயியோ நம்மைப்

Koviloor Digital Library

பெற்றெடுத்த தாய், இந்த மூவரையும் கொன்று அழித்த பிறகு தான் நீ உன்னுடைய சீற்றத்தை நீக்கிக் கொள்வாயா? என்று கேட்கிறான் இராமன். இவர்கள் மூவரும் தீங்கு செய்யாதவர்கள் என்பதுடன், நற்குணங்களும் வாய்ந்தவர்கள், கொல்லுதற்குரிய பாவத்தைச் செய்யாதவர்கள் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான். ''மாறன் மையின் மறம் வாடுமென்று இளையாரையும் எறியான், ஆறன்மையின் முதியாரையும் எறியான்'' என்பது சீவகசிந்தாமணி. எனவே இளையவனாகிய பரதனையோ, முதியோராகிய தாய் தந்தையரையோ கொல்லுதல் அறத்தின் பாற்பட்டதும் ஆகாது என்கிறான்.

137. இலக்குவன் மறுமொழி

செல்லும் சொல் வல்லான் எதிர்
தம்பியும், ''தெவ்வர் சொல்லும்
சொல்லும் சுமந்தேன்; இருதோள்
எனச் சோம்பி ஓங்கும்
கல்லும் சுமந்தேன்; கணைப்
புட்டிலும், கட்டமைந்த
வில்லும் சுமக்கப் பிறந்தேன்;
வெகுண்டு என்னை?'' என்றான். (1834)

(செல்லுதல்-கேட்டார் மனம் கொள்ளுதல்; தெவ்வர்-பகைவர்; ஓங்கும்-உயர்ந்துள்ள; கல்-மலை; சோம்பி-வறிதாய் / ஓய்ந்து கிடக்கும்; சுமத்தல்-பயனின்மை)

கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்ச் சொல்லும் சொல் வல்லானாகிய இராமனின் முன்பு, அவன் தம்பியான இலக்குவனும் ''இதுவரை நம் பகைவர்கள் பழித்துச் சொல்லிய சொற்களையும் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருந்தேன்; இரண்டு தோள்கள் என்று சொல்லப்படும் அவைகளை வறிதாய் ஓய்ந்து கிடக்கும் உயர்ந்த இரு மலைகளைப் போலச் சுமந்து கொண்டு இருக்கின்றேன். அவற்றோடு, அம்பறாத் தூணியையும், கட்டமைந்த வில்லையும் சுமந்து கொண்டிருக்கத் தான் இப்பிறவி எடுத்தேன் போலும். அதனைப் பயன்படுத்த இயலாது நான் சினம் கொண்டு என்ன பயன் விளையப் போகிறது?'' என்று வெறுத்து, தன்னைத் தானே இகழ்ந்து கூறிக் கொள்ளுகிறான் இலக்குவன்.

பொதுவாக மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும் சொற்களையே கூறும் இராமன் என்றாலும் இங்கே இலக்குவனால் மறுமொழி ஏதும் கூற முடியாதபடி சொற்களைக் கையாண்டதால், இராமனை, செல்லும் சொல் வல்லான் என்றார். பகைவர் சொல்லும் சொல் என்பது இலக்குவன் போன்ற வில்லாற்றல் மிக்கவர் உடனிருந்தும், இராமனுக்கு அரசுரிமையை வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்ற இகழ்ச்சியும்

Koviloor Digital Library

பழிப்பும் கலந்த சொற்கள்; அம்பறாத்தூணியும், கட்டமைந்த வில்லும் வீரன் போல் சுமக்கத்தான் பிறந்தேனேயன்றி, அவற்றைப் பயன்படுத்தி வெற்றி விளைவிக்க முடியவில்லை என்பது அவன் ஆற்றாமை. அவற்றைப் பயன்படுத்தினால் எனக்குச் சினம் கொள்ளும் உரிமை ஒரு வேளை கிடைக்கலாம். பயன்படுத்தாது வறிதே சுமந்து கொண்டு இருக்கின்ற எனக்கு வெகுளும் உரிமை ஏது? வெகுண்டாலும் அதனால் என்ன பயன் விளைந்து விடும்? என்று தன்னைத் தானே தாழ்த்திக் கூறிக் கொள்ளுகிறான் இலக்குவன். சுமத்தல் என்ற சொல் பயனின்மையைக் குறித்தது.

138. இராமன் வெறுத்துக் கூறுதல்

"நன்சொற்கள் தந்து ஆண்டு
எனைநாளும் வளர்த்த தாதை,
தன்சொல் கடந்து எற்கு அரசு
ஆள்வது தக்கது அன்றால்,
என்சொல் கடந்தால் உனக்கு
யாதுளது ஈனம்?" என்றான்,
தென்சொல் கடந்தான், வடசொல்
கலைக்கு எல்லை தேர்ந்தான். (1835)

(எல்லை-கரை; ஈனம்-குற்றம்-தென்சொல்-தமிழ்; எற்கு-எனக்கு)

தென் நாட்டில் வழங்கும் தமிழ் மொழியின் எல்லா நூல்களையும் கற்றறிந்தவனும்; வடமொழியின் வேதம் உட்பட எல்லாக்கலைகளையும் கரை கண்டவனுமாகிய இராமன், இலக்குவனை நோக்கி, "இது நாள் வரையிலும் எனக்கு நல்ல அறிவுரைகளையே தந்து என்னை வளர்த்து வந்த தந்தை தசரதனின் சொற்களை மீறி நான் அரசாளுவது என்பது தகாத செயலாகும். அப்படி என்றால் என்னைத் தாயாகவும் தந்தையாகவும் கருதுகின்ற நீ, என் சொற்படி நடந்தால் உனக்கு என்ன இழுக்கு வந்துவிடப் போகிறது?" என்று கேட்டான்.

139. இலக்குவன் சீற்றம் அடங்குதல்

சீற்றம் துறந்தான்; எதிர் நின்று தெரிந்து செப்பும்
மாற்றம் துறந்தான்; மறை நான்கு எனவாங்கல் செல்லா
நால்தெண்திரை வேலையின் நம்பிதன் ஆணையாலே
ஏற்றம் தொடங்காக் கடலின் தணிவு எய்திநின்றான். (1836)

(தெண்-தெளிவான; திரை-அலை; வேலை-கடல்; தெரிந்து-ஆராய்ந்து; ஏற்றம்-கரை கடத்தல் / மீதூர்தல்; வாங்கல் செல்லா-மறுக்க மாட்டாத / பின்வாங்க இயலாத)

Koviloor Digital Library

நான்கு வேதங்களில் சொல்லப்பட்ட அறிவுரைகளிலிருந்து பின்வாங்க முடியாத நான்கு புறமும் சூழ்ந்திருக்கின்ற தெள்ளிய அலைகளையுடைய கடல் போன்ற வண்ணமுடையவனாகிய இராமனது கட்டளை யினின்றும் மாறுபட முடியாத இலக்குவன், இக்கடல்கள் எப்படி இறைவன் ஆணையால் ஒருகட்டுக்குள் அடங்கிக் கரைகடக்காது தணிவடைகின்றனவோ, அதுபோல தான் கொண்ட சீற்றம் தணிந்தான்; இராமன் எதிரில் நின்று ஆராய்ந்து கூறும் மறுமொழிகளையும் நீக்கினான். சீற்றம் தணிந்ததனால் ஏதும் பேசவில்லை.

பெரியோர் மொழிகளை வேதவாக்காகக் கொள்ள வேண்டும் என்பது கருத்து. கோபம் தணிந்தமைக்குக் கரைக் கடவாக்கடல் உவமை. என்றும் வற்றாத நாற்பெருங்கடல்களைப் போல, நான்கு வேதங்களை உடைய இராமன் என்றலுமாம். அலை ஓயாது ஆனால் கட்டுக்குள் அடங்கி நிற்கும். அது போலவே இலக்குவனது உணர்ச்சி ஓயாது; இராமனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நிற்கிறான் என்பதாம்.

140. இராமன் சுமித்திரை அரண்மனை செல்லுதல்

அன்னான் தனை ஐயனும்
ஆதியோடு அந்தம் என்று
தன்னாலும் அளப்பரும் தானும்
தன் பாங்கர் நின்ற
பொன்மான் உரியானும், தழீஇ
எனப் புல்லி, பின்னை
சொல்மாண்பு உடை அன்னை
சுமித்திரை கோயில் புக்கான். (1837)

(ஆதி-முதல்; அந்தம்-இறுதி; அளப்பரும்-அளந்து காண்பதற்கரிய; உரி-தோல்; புல்லி-தழுவிக் கொண்டு; கோயில்-மாளிகை / அரண்மனை; புக்கான்-அடைந்தான்; பாங்கர்-பக்கம்)

இராமனும், முதலும் இறுதியும் இன்னது தான் என்று தன்னாலேயே அளவிட்டுக் காண முடியாத, தானாகிய திருமாலும், தன் மற்றொரு பாகத்தில் உறைகின்றவனான பொன் போன்ற வண்ணமுடையவனும், மானின் தோலை இடையில் அணிந்திருப்பவனுமாகிய சிவபெருமானும் ஒருவரையொருவர் தழுவிக்கொள்வது போல, இலக்குவனைத் தன்னுடன் இறுகத் தழுவிக் கொண்டு, பின்பு சொல்லில் மாட்சிமையுடைய தாயாகிய சுமித்திரையின் மாளிகையை மீண்டும் அடைந்தான்.

தன்னுடைய முதலையும் முடிவையும் தானே அளந்து அறியவொண்ணாதவன், ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியான்'' என்பது திருவெம்பாவை. தன்பாங்கர் நின்ற பொன்மான்

Koviloor Digital Library

உரியானும் என்பது சங்கர நாராயண மூர்த்தியைக் குறித்ததாகும். ''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து'' என்பது பெரியதிருமொழி. இராமன் இலக்குவனைத் தழுவியதற்குக் காரணம், தன் சொற்களைத் கேட்டுச் சினம் தணிந்தமையால் உண்டான மகிழ்ச்சி குறித்து என்க. இலக்குவனை உருத்திரனுக்கு உவமை கூறியது பொன்னார் மேனியன் என்பதாலும், அவனைப் போல் இவனும் சீற்றகுணம் உடையவன் என்பதாலும் என்க. சங்கர நாராயண மூர்த்தியை உவமை கூறியதால் இராமன் இலக்குவனை ஈருடலும் ஓர் உடலாகும் வண்ணம் இறுகத் தழுவினான் என்பது பெறப்படும். கம்பன் இலக்குவனோடு இராமன் சுமித்திரையின் மாளிகையை மீண்டும் அடைந்தான் என்கிறான். வான்மீகி இராமன் மட்டும் தனியாகச் சென்றதாகக் கூறுகிறார்.

141. சுமித்திரை துன்பம் அடைதல்

கண்டாள், மகனும் மகனும் தன்கண்கள் போல்வார்;
தண்டாவனம் செல்வதற்கே சமைந்தார்கள் தம்மை;
புண்தாங்கு நெஞ்சத்தனளாய்ப் படிமேல் புரண்டாள்;
உண்டாய துன்பக் கடற்கு எல்லை உணர்ந்திலாதாள். (1838)

(சமைதல்-ஆயத்தமாதல்; படி-தரை / பூமி)

தனது இரண்டு கண்களைப் போன்றவர்களான தனது மகன் இலக்குவனும், கோசலையின் மகன் இராமனும், தடைபடாத காட்டிற்குச் செல்வதற்கு ஆயத்தமாகித் தன் முன்வந்து நிற்பவர்களைக் கண்டாள், சுமித்திரை. அதனால் அவள் அடைந்த துன்பக்கடலின் எல்லையைக் காண முடியாதபடி பெருந்துன்பத்தில் ஆழ்ந்து, அதனால் உண்டான பிரிவு என்னும் புண்பட்ட நெஞ்சத்தவளாய்த் தரையில் விழுந்து புரண்டாள்.

தனது மகனும் கோசலையின் மகனும் தனது இருகண்கள் போல்வர் என்றதனால் அவளது வேற்றுமை கருதாத் தாயுள்ளம் நன்கு புலப்படுத்தப்பட்டது. தன் மகன்கள் காடு புகுவதாலும், அதன் விளைவாகத் தன்கணவன் வானகம் புகுவான் என்பதாலும் அவள் நெஞ்சம் புண்ணுற்றது, கவலைக் கடல் எல்லை உணர முடியாதவளானாள். தரையில் விழுந்து புரண்டாள் என்பதாம். தண்டாவனம் என்பது தண்டகவனம் என்றும் தண்டகாரண்யம் என்றும் அழைக்கப்படும். இதன் வரலாறு. சூரிய குலத்தைச் சேர்ந்த இட்சுவாகு மன்னனின் கடைசிப் புதல்வன் தண்டகன். இவன் விந்திய மலைக்கும் சைவல மலைக்கும் இடைப்பட்ட பகுதியை மதுமந்தம் என்ற நகரைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். இவனது குரு சுக்கிராச்சாரியார். தனது குருவின் ஆசிரமத்திற்குச் சென்ற தண்டகன் அங்கே குருவின் மகளான அரஜை என்பவளைக் கண்டு காமுற்றுக் கற்பழித்தும் விட்டான். இதனையறிந்த சுக்கிராச்சரியார் கோபம் கொண்டு இந்நாடு ஏழுநாட்களுக்குள் மண் மாரியால் எந்த ஓர் உயிரும் வாழ முடியாத நிலையில் அழிந்து போக

Koviloor Digital Library

வேண்டும் என்று சாபம் இட்டார். அதன்படி அந்நாடு பாழாகியது; காடாகியது. அதுதான் தண்டக ஆரண்யம் என வழங்கப்படுகிறது.

142. இராமன் சுமித்திரையைத் தேற்றுதல்

சோர்வாளை, ஓடித் தொழுது
 ஏந்தினன்; துன்பம் என்னும்
ஈர்வாளை வாங்கி, மனம்
 தேற்றுதற்கு ஏற்ற செய்வான்
''போர்வாள் அரசர்க்கு இறை
 பொய்த்த஌ன் ஆக்ககில்லேன்,
சார்வான் நெடுங்கான் இறை கண்டு,
 இவண் மீள்வன்'' என்றான். (1839)

(வான்-மேகம்; ஈர்தல்-பிளத்தல் / அறுத்தல்; இறை-சிறிது)

அவ்வாறு சோர்ந்து தரையில் விழுந்து புரள்கின்ற சுமித்திரையை, இராமன்ஓடோடிச்சென்று வணங்கித்தன்கைகளில்தாங்கினான்; அவளை அரிக்கின்ற துன்பம் என்னும் வாளை அகற்றினான். அவள் மனம் தேறுவதற்கு வேண்டியனவற்றைச் செய்தான். பின்னர் அவளை நோக்கி ''நம்முடைய போர் செய்தற்குரிய வாட்படையை உடைய அரசர்க்கெல்லாம் அரசனான தசரதனைப் பொய் கூறுபவன் என்று பிறர் சொல்லா வண்ணம், அவன் வாய்மை காப்பவன் என்று பிறர் கூறும்படி செய்வேன். எனவே அவன் கட்டளைப்படி அரிய மேகங்கள் தவழுகின்ற நீண்ட கானகத்திற்குச்சிறிது சென்று பார்த்து விட்டு உடனே இங்கே மீண்டு வந்து விடுகிறேன்'' என்று கூறித் தேற்றினான்.

பதினான்குஆண்டுகள்என்று சொன்னால்தாய் மீண்டும்சோர்வுறுவாள் என்று கருதி விரைவில் திரும்பி விடுவேன் என்று கூறுமுகத்தான் ''இறை கண்டு இவண் மீள்வென்'' என்றான்.

143. ''கான்புக்கிடினும் கடல் புக்கிடினும், கலிப்போர்
 வான்புக்கிடினும், எனக்கு அன்னவை, மாண் அயோத்தி
 யான்புக்கது ஒக்கும்; எனையார் நலிகிற்கும் ஈட்டார்?
 ஊன்புக்கு, உயிர்புக்கு, உணர்புக்கு உலையற்க!'' என்றான். (1840)

(கலி-ஒலித்தல்; நலிகிற்றல்-வருத்துதல்; ஈடு-வலிமை; உலைதல்-வருந்துதல்)

இராமன் தொடர்ந்து சுமித்திரையைத் தேற்றுகிறான். ''தாயே! நான் காட்டிற்குச் சென்றாலும், கடலினுள்ளே புகுமாறு நேர்ந்தாலும், ஒலிக்கின்ற தன்மையும், ஐம்பூதங்களிலும் முதன்மையானது என்று பெருமை பெற்றதுமான ஆகாயத்திற்குள் செல்ல நேரிட்டாலும், எனக்கு அவைகள் அனைத்தும் நான் மாட்சி பொருந்திய அயோத்தி நகருக்குள்

Koviloor Digital Library

புகுந்து இருப்பதைப் போலவே ஆகும். எந்த இடத்திலும் எனக்குத்துன்பம் தந்து என்னை வருத்தும் வலிமை உள்ளவர்கள் யார் இருக்கிறார்கள்?'' ஒருவரும் இல்லை எனவே நீ உடல் கெட்டு, உயிர் தளர்ந்து, அறிவு மங்கிப் போகும் படியாக வருந்தாதே'' என்றான்.

ஏனைய நான்கு பூதங்களையும் அடக்கி நிற்கும் பெருமையுடையதால் ஆகாயம் பேர்வான் எனப்பட்டது. காடு புகுதலைக் காட்டிலும் கடல் புகுதலும், கடல் புகுதலைக் காட்டிலும் வான் புகுதலும் கடுமையானவை. எனவே அவற்றை அவ்வாறு வரிசைப்படுத்தினார் என்க. அயோத்தி என்ற சொல்லுக்குப் பகைவரால் வெல்ல முடியாத நகரம் என்று பொருள் இருப்பது போல நான் இருக்கும் இடமெல்லாம் அயோத்தியாகத் தெரிவதால் கானிலோ, வானிலோ, கடலிலோ எனை எதிர்ப்பாரும் எனைப் பகைப்பாரும் எவருமிலர். எனவே கானும், கடலும், வானும் எனக்கு அயோத்தியையே ஒக்கும் என்கிறான். உடம்பு பருப்பொருள்; உயிர் நுண்பொருள், உணர்வு மிகுநுண்பொருள் எனவே ''ஊன், உயிர், உணர்வு என்று முறைப்படுத்திக் கூறினான். ''ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு, என் உள்ளமும் போய் நான் கெட்டவா பாடி'' என்பார் மாணிக்கவாசகர். அயோத்தியை மாண்அயோத்தி என்றது, அது முத்திதரும் நகரங்கள் ஏழனுள் முக்கியமானதாகும். மற்ற ஆறு நகரங்கள் காசி, மதுரா, மாயா, அவந்தி, துவாரகை, காஞ்சி என்பன.

144. மரவுரி கொண்டு வந்து தருதல்

தாய் ஆற்றுகிலாள் தனை ஆற்றுகின்றார்கள் தம்பால்
தீ ஆற்றுகிலார், தனிச்சிந்தையின் நின்று செற்ற
நோய் ஆற்றுகில்லார், உயிர்போல நுடங்கு இடையார்,
மாயாப் பழியாள்தர, வற்கலை ஏந்தி வந்தார். (1841)

(தீ-சினத்தீ; செற்ற-பெருங்கோபம் கொண்ட; நோய்-துன்பங்கள்; நுடங்குதல்-தள்ளாடுதல்; மாயா-அழியாத; வற்கலை-மரவுரி / வன்கலை-வலிய ஆடை; வற்கலா என்ற வடசொல்லின் தமிழ் ஆக்கம் வற்கலை)

தாங்க முடியாத துன்ப முடையவளான தாய் சுமத்திரையைத் தேற்றிக் கொண்டிருப்பவர்களான இராம இலக்குவனிடத்தில், கைகேயிக்கு ஏற்பட்ட சினத்தீயை நல்லவை கூறித் தணிக்க முடியாதவர்களும், உலகெல்லாம் இராமன் பிரிவால் வருந்தும் போது, தான் மட்டும் தனித்த, வருந்தாத உள்ளம் கொண்டவளுமான கைகேயியின் பெருங்கோபத்தால் உண்டான துன்பங்களைத் தீர்க்க வகையில்லாதவர்களுமான, கைகேயியின் ஏவற்பெண்டிர், தங்கள் உயிர் வருந்துவது போலத் தங்கள் இடையும் வருந்தித் தள்ளாடும் வண்ணம் மெதுவாக அசைந்து, அந்த அழியாத பழியை உடையவளான கைகேயி எடுத்துக் கொடுத்த மரவுரிகளைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு வந்தனர்.

Koviloor Digital Library

ஆற்றுகின்றார்பால் ஆற்றுகிலார் வந்தார் என்ற சொல் நயம் சுவைக்கத்தக்கது. இராம இலக்குவர் தாய் ஆற்றுகிலார்; அச்சேடிப் பெண்கள் தீ ஆற்றுகில்லார்; நோய் ஆற்றுகில்லார் என்பதனால், அவர்கள் தங்கள் விருப்பத்துடன் வரவில்லை என்பதும், கைகேயி வற்புறுத்தித் தந்ததால் மனம் வருந்தி எடுத்து வந்தனர் என்பதும் புலப்படும். எய்தவள் கைகேயி; அம்புகள் ஏவற்பெண்டிர். அவளது சீற்றத்திற்கு அஞ்சி மரவுரி ஏந்தி வந்தனரே அன்றி அவர்கள் மனம் ஒன்றி விருப்பத்துடன் வந்தனரல்லர் என்பதாம். பழி என்பது சதி செய்து தீங்கு விளைத்தலைக் குறிக்கும். அது அழியாது.

145. கார்வானம் ஒப்பான் தனைக் காண்தொறும் காண்தொறும் போய்,
நீராய் உகு கண்ணினும் நெஞ்சு அழிகின்ற நீரார்
பேரா இடர்ப்பட்டு அயலார் உறு பீழை கண்டும்,
தீரா மனத்தாள் தர வந்தன சீரம் என்றார். (1842)

(கார்-கரிய; உகு-சிந்துகின்ற; பேரா-தீராத; பீழை-வருத்தம்; தீரா-பற்றுவிடாத; சீரம்-வடசொல் மரவுரி; போதல்-மிகுதல்)

கரிய மழை மேகத்தை ஒத்த கருமையும் தண்மையும் உடைய இராமனைக் காணும்பொழுதெல்லாம் கண்ணிலிருந்து கண்ணீர் பெருகவும், கண்ணே நீராய் உருகுகிறதோ என்று சொல்லும்படியும் தம் உள்ளங்கள் சிதைந்து கண்ணீர் சொரிகின்ற ஏவற்பெண்கள், ''இராமனுக்கு உறவேதும் இல்லாத மற்றவர்கள் கூட தீராத துன்பம் அடைந்து வருத்தம் உறுவதைக் கண்ட பின்னரும், தான் கொண்ட கொள்கையாகிய ''இராமனைக் காட்டிற்குத் துரத்துதல்'' என்பதிலிருந்து சற்றும் விலகாது பற்றிக் கொண்டு நிற்கும் வன் நெஞ்சத்தாளாகிய அக்கைகேயி கொடுத்தனுப்ப வந்தன இம்மரவுரிகள்'' என்றார்.

இராமனைக் காணாத போதே உள்ளம் வருந்தியவர்கள் இந்த ஏவற்பெண்டிர். இவர்களே இத்தகைய மரவுரியை இராமனிடத்து எடுத்து வரவேண்டிய நிலைக்குள்ளானார்கள். எனவே அவனை நேரில் காணக்காண அவர்களுடைய கண்களிலிருந்தும் இடைவிடாது கண்ணீர் பெருக்கெடுத்தது. அதனைக் கண்டால் கண்களே நீராய் உருகுகின்றனவோ எனக் கூறத் தோன்றும்படி இருந்தது என்பதாம். அதைத்தான் ''நீராய் உகு கண்'' என்றார். கண் உருகுவதால் நெஞ்சம் அழிகின்றது என்றது ஒரு நயம். ஏவற்பெண்டிரின் உள்ள நிலை இப்பாடலில் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இராமனை நெருங்கி அருகில் காணக் காண அவர்கள் துயரம் அதிகரித்தது என்பதைக் கூறக் காணும் தொறும் காணும் தொறும் என்ற அடுக்கைப் பயன்படுத்தினார்.

Koviloor Digital Library

146. மரவுரியை இலக்குவன் பெற்றுக் கொள்ளுதல்

வாள் நித்தில வெண்நகை யார்
தர, வள்ளல்தம்பி
''யாணர்த்திருநாடு இழப் பித்தவர்
ஈந்த எல்லாம்
பூணப்பிறந்தானும் நின்றான்;
அவை போர் விலோடும்
காணப் பிறந்தேனும் நின்றேன்;
அவை காட்டுக!'' என்றான். (1843)

(வாள்-ஒளி பொருந்திய; நித்திலம்-முத்து; நகை-பற்கள்; யாணர்-புதுமை / அழகு / வளம் / வருவாய்; ஆர்தரல்-பெருகச் சிரித்தல்; காட்டு-கொடு; பூண-புனைய / அணிய / மேற்கொள்ள)

ஒளி பொருந்திய முத்துக்களைப் போன்ற வெண்மையான பற்களை உடைய இராமனின் தம்பியாகிய இலக்குவன் பெரிதாகச் சிரித்து, ''புதுவருவாய் தரும் எழில் கொஞ்சும் இக்கோசல நாட்டின் அரசுரிமையை இராமனுக்கு வாராமல் இழப்பித்தவர்கள் தருகின்ற எல்லாவற்றையும் அணிந்து கொள்ளவும், அவர்கள் சொல்லுகின்ற எல்லாவற்றையும் சிரமேற்கொண்டு பணியாற்றவும் என்றே பிறந்திருக்கின்ற இராமன் என் தமையன் இதோ நிற்கின்றான்; அதைக் கண்டும் ஏதும் செய்ய முடியாத நிலையில், ஆனால் போர் செய்வதற்குரிய வில்லோடு நானும் நிற்கின்றேன்; நீங்கள் கொண்டு வந்த மர்வுரியைத் தாருங்கள்'' என்று அவர்களிடம் கேட்டு வாங்கிப் பெற்றுக் கொண்டான் இலக்குவன்.

இலக்குவன் பெருகச் சிரித்தது தன் கையறு நிலையை எண்ணி என்க; வில் என்பது போர் செய்யத் தானே? அது செய்யாது செயலற்று நிற்கும் போது அதைப் ''போர்வில்'' என்று ஏன் கவிஞன் கூறவேண்டும்? இதனால் இலக்குவனுடைய நெஞ்சப் புழுக்கத்தை வெளிப்படுத்துகிறான் கவிஞன் என்பதாம். ஈந்த எல்லாம் என்ற சொற்றொடரும் சுவைக்கத்தக்க தொன்றாம். முன்னர் ''நாட்டை விட்டுக் காட்டுக்குப் போ'' என்றாள்; இப்பொழுது மரவுரியைக் கொடுத்து அனுப்பி இருக்கிறாள். இன்னும் என்னவெல்லாம் சொல்லுவாளோ, தருவாளோ? என்பதைக் குறிக்க, மொத்தமாக ''ஈந்த எல்லாம்'' என்றார்.

147. இலக்குவன் அன்னையை வணங்குதல்

அன்னான் அவர்தந்தன ஆதரத்தோடும் ஏந்தி
''இன்னா இடர்தீர்ந்து உடன் ஏகு'' என, எம்பிராட்டி
சொன்னால், அதுவே துணைஆம்; எனத்தூய நங்கை
பொன்னார் அடிமேல் பணிந்தான்; அவளும் புகன்றாள். (1844)

Koviloor Digital Library

(ஆதரம்-அன்பு / விருப்பு; இன்னா-ஆற்றாத; துணை-வலிமை / பற்றுக்கோடு)

அந்த இலக்குவன், கைகேயியின் ஏவல் மகளிர் கொணர்ந்து தந்த மரவுரிகளைவிருப்பத்துடனும், அன்புடனும்பெற்றுக்கொண்டு, தன்தாய் சுமித்திரையை நோக்கி, ''தாயே! இந்தத் துன்பத்திலிருந்தும் நீங்கி, நீயும் இராமனுடன் வனம் ஏகுவாயாக / எனத் தன் தாயும் ஆணையிட்டு உடன்பட்டால், அதுவே எனக்கு வலிமை தருவதும், பற்றுக்கோடானதும் ஆகும்'' என்று கருதித் தூய்மையானவளான சுமித்திரையின் பொன் போன்ற திருவடிகளில் விழுந்து வணங்கினான். சுமித்திரையும் பின் வருவனவற்றைக் கூறலானாள்.

இராமனுடன் தான் உடன் செல்வது என்று முன்னரே தீர்மானித்து விட்டான் இலக்குவன். என்றாலும் தன் அன்னையே தன் வாயால் அதனைக் கூறினால் அவனுக்கு அது இன்னும் வலிமையைச் சேர்க்கும் என்று கருதி அவளது ஆணையினை எதிர் நோக்கினான். கைகேயியின் மனப் போக்கையும், சுமத்திரையின் மனப்போக்கையும் வேறுபடுத்திக் காட்டுதற்கே இங்கு சுமித்திரையைத் ''தூய நங்கை'' என்றான்.

148. சுமித்திரை கூற்று

''ஆகாதது அன்றால் உனக்கு அவ்வனம் இவ்வயோத்தி;
மாகாதல் இராமன் நம் மன்னவன்; வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் நம் பூங்குழல் சீதை என்றே
ஏகாய்; இனி, இவ்வயின் நிற்றலும் ஏதம்'' என்றாள். (1845)

(மாகாதல்-பேரன்பு; இவ்வயின்-இவ்விடத்தில்; ஏதம்-குற்றம்)

சுமித்திரை இலக்குவனைப் பார்த்து, ''இனிமேல் உனக்கு அந்த வனம் தான் இவ்அயோத்தி மாநகரம் போன்றதாகும். பேரன்பிற்குரிய இராமன் தான் நம் மன்னவன் தசரதன் ஆவான். இராமன் பரதனுக்கே இந்நிலவுக அரசுரிமையைத் தந்த பிறகும் இன்னும் உயிர் போகாமல் இருக்கின்ற என்னைப் போலவும் கோசலையைப் போலவும் பூக்கள் சூடியுள்ள கூந்தலை உடைய சீதையை, எண்ணிக் கொண்டு இராமனுடன் வனம் செல்வாயாக. இனிமேல் இங்கு நிற்பதும் குற்றமாகும்'' என்று விரைவு படுத்தினாள்.

ஆகாதது அன்று என்னும் இரண்டு எதிர்மறைச் சொற்கள் ஆகும் என்ற ஒரு உடன்பாட்டுப் பொருளைத் தந்தது. இராமனுக்கு ஆகிய அந்த வனம் நீயும் செல்லுதற்குத் தகாதது அன்று. தக்கதே யாம் என்பது பொருள். இது தான் இன்று உலக வழக்கத்தில் உள்ள ''இராமன் இருக்கும் இடம் அயோத்தி'' என்ற சொற்றொடரின் கருத்து. இலக்குவன் ஒரு வேளை தாய் தந்தையரைப் பிரிந்து செல்லுவதற்கு வருந்துவானோ என்று கருதிய சுமித்திரை, தந்தை தசரதனாக இராமனையும், தாய் சுமித்திரை கோசலையாகச் சீதையையும் கருதிக் கொள் என்றாள்.

Koviloor Digital Library

இவ்வயின் நிற்றலும் ஏதம் என்பது விரைவு குறித்தது. உயிர்த் தாயர் என்றது தன்னையும். கோசலையையும் உட்படுத்தி என்பதாம். அண்ணனைத் தந்தையாகவும் அண்ணன் மனைவியைத் தாயாகவும் கருதுதல் மரபு. அவ்வாறு கருத வேண்டும் என்பது சுமித்திரையின் விருப்பமும் கூட. அதையே இலக்குவனும் முன்பே நற்றாயும் தந்தையும் நீயே என்று கூறினான். நாட்டின் அரசுரிமையை இராமனுக்கு ஈயாது பரதனுக்குஈந்தபொழுது இவ்விருதாயரும் உயிர்இழக்கும்நிலைஎய்தினர் என்றாலும் உயிர் இழக்காது இன்னும் உயிருடன் இருக்கின்றனர் என்பது பெறப்பட்டது.

149. பின்னும் பகர்வாள், ''மகனே! இவன்பின்செல்; தம்பி
என்னும்படி அன்று; அடியாரினில் ஏவல் செய்தி;
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அது அன்றேல்
முன்னம்முடி; என்றனள் வார்விழி சோர நின்றாள்''. (1846)

(மன்னும்-நிலைபேறுள்ள; முடிதல்-இறத்தல்)

சுமித்திரை இலக்குவனை நோக்கி இன்னும் சொல்லலானாள், ''மகனே! இவ்விராமன் பின்னால் நீயும் செல்வாயாக. ஆனால் அவனுடைய தம்பி என்னும்படியல்ல; அடியார்களுக்கு ஏவல் செய்யும் ஒரு அணுக்கத் தொண்டனாகச் செல். இவ்விருவருக்கும் மனம் கோணாது குறிப்பறிந்து பணி விடைகளைச் செய்; இந்நிலை பெற்ற அயோத்தி நகருக்கு அவன் வந்தால் நீயும் உடன் வா; அவ்வாறு அல்லாது, வேறு ஏதேனும் ஆயிற்று என்றால் அவனுக்கு முன்னால் நீ இறந்துபடு;'' என்று தன் கண்களில் நீர் சொரியக் கூறி நின்றாள்.

தம்பி என்று எண்ணினால் உரிமைதான் முதலில் தோன்றும். கடமை தோன்றாது. எனவே தம்பி என்று சொல்வதை மறுத்தாள். பசுவத்கைங்கர்யம் செய்வதற்காகவே அவனுடன் செல் என்றாள் என்பதாம். நகருக்கு அவனன்றி நீ தனித்து வருதல் கூடாது என்பதை வற்புறுத்திக் கூறுகிறாள். அன்பின் மிகுதியால் கண்ணீர் சொரிதல் மெல்லிய மனம் கொண்டார்க்கு இயல்பு. ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? ஆர்வலர் புண்கண் நீர் பூசல் தரும்'' என்பது குறள் 71. ''அவனுக்கு ஏதாவது ஆபத்து வந்து அவன் உயிர்துறக்க நேர்ந்தால்'' என்று தன் வாயால் சொல்லுவதற்கும் அஞ்சி ''அஃதன்றேல்'' என்று சுருங்கக் கூறி விளங்க வைத்தாள்.

150. இராம இலக்குவர் விடைபெற்றுச் செல்லுதல்

இருவரும் தொழுதனர்; இரண்டுகன்று ஒரீஇ
வெருவரும் ஆவினின், தாயும் விம்மினாள்;
பொரு அரும் குமரரும் போயினார் புறம்
திரு அரைத்துகில் ஒரீஇச் சீரை சாத்தியே. (1847)

Koviloor Digital Library

(ஒரீஇ-பிரிந்து; வெருவரல்-அஞ்சுதல் / கலங்குதல்; பொருஅரும்-ஒப்பற்ற; ஒரீஇ-நீக்கிவிட்டு / களைந்து; சீரை-மரவுரி; சாத்தி-உடுத்துக்கொண்டு)

இராமனும் இலக்குவனும் விடைபெறும் முகத்தான் தாய் சுமித்திரையை வணங்கினர்; அவளும் இரண்டு கன்றுகளை ஒரே நேரத்தில் பிரியும் தாய்ப் பசுவைப் போல் அஞ்சி நடுக்கமுற்றுத் தேம்பி அழுதாள்; ஒப்பற்ற இரண்டு மைந்தர்களும் தம் இடுப்பில் அணிந்திருந்த பட்டாடைகளை நீக்கி விட்டு மரவுரியை அணிந்து கொண்டு வெளியே செல்லலாயினர்.

இருமக்களைப் பிரியும் சுமித்திரைக்கு இரண்டு கன்றுகளை ஒருங்கே பிரியும் பசு உவமையாயிற்று. தாயன்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது பசுவின் அன்பு. அது வாத்சல்யம் எனப்படும். ''கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே'' என்பது மாணிக்கவாசகரின் திருவாசகம்.

151. இலக்குவனுக்கு இராமன் கூறுதல்

தான்புனை சீரையைத் தம்பி சாத்திட,
தேன்புனை தெரியலான் செய்கை நோக்கினான்;
''வான்புனை இசையினாய்! மறுக்கிலாது நீ
யான் புகல் இனையது ஓர் உறுதிகேள்'' எனா. (1848)

(புனைதல்-பொருந்துதல் / அணிதல்; தெரியல்-மாலை; புகல்தல்-சொல்லுதல்; உறுதி-நல்லுரை / நன்மை பயக்கத்தக்க)

தான் அணிந்திருப்பதைப் போலவே மற்றொரு மரவுரியை இலக்குவனும் அணிந்திருப்பதைக் கண்ணுற்ற தேன் துளிர்ப்பதும், வண்டுகள் ரீங்காரிப்பதுமான மலர் மாலையை அணிந்த இராமபிரான், இலக்குவனை நோக்கி ''வானளாவிய புகழை உடையவனே! நான் கூறப்போகும் ஒரு நன்மை பயக்கும் சொல்லை, தயவு செய்து மறுக்காமல் கேட்பாயாக!'' என்றான். (குளகச் செய்யுள்)

தான் கூறப்போகும் சொற்கள் நன்மை பயக்குமெனினும், இலக்குவன் அதை மறுக்கக் கூடும் என்று எதிர்நோக்கிய இராமன் மறுக்கிலாது கேள் என்றும், அவன் மறுக்க இயலாதவண்ணம் ''வானளாவிய பரந்த புகழை உடையவனே!'' என்றும் முன்னரே அவனை அழைக்கிறான் என்பதாம். அவன் மரவுரி அணிந்ததால், அவனும் கூடவர ஆயத்தமாய் இருக்கிறான் என்பதைக் கருத்தால் உணர்ந்தான் இராமன் என்பது ''செய்கை நோக்கினான்'' எனக் கூறப்பட்டது.

152. ''அன்னையர் அனைவரும், ஆழி வேந்தனும்
முன்னையர் அல்லர்; வெம்துயரில் மூழ்கினார்;

Koviloor Digital Library

என்னையும் பிரிந்தனர்; இடர் உறாவகை
உன்னை நீஎன் பொருட்டு உதவுவாய்'' என்றான். (1849)

(ஆழி-ஆணைச் சக்கரம்; வெம்-கொடிய)

''நம் தாய் மார்கள் எல்லோரும், ஆணைச் சக்கரத்தை உடைய மன்னர் மன்னன் தசரதனும், முன்பு போல மகிழ்வோடு இப்போது இருக்கின்றனரல்லர்; அவர்கள் கொடுந்துன்பக் கடலில் மூழ்கியிருக்கின்றனர். இந்நிலையில் இப்போது என்னையும் பிரிய நேரிட்டது. நீயும் என் உடன் வந்தால் அவர்கள் மேலும் துன்புறுவர். அவர்கள் இன்னும் மேன்மேலும் துன்புறாவண்ணம், உன்னை என் பொருட்டுத் தந்து உதவுவாயாக'' என்றான்.

அன்னையர் இருவரும் என்று கூறியிருக்கலாம். அன்னையர் அனைவரும் என்றதால் உரிமை மகளிர் அறுபதினாயிரவரையும் உட்படுத்தியது என்க. எனக்காக இந்த உதவியை நீ மறுக்காது செய் எனலுமாம். என்னைப் பிரிந்த துயரை, உன்னைக் கண்டேனும் தீர்த்துக் கொள்வர். எனவே என் பொருட்டு உன்னைத் தந்து உதவுக என்றான். இராமனுக்கு முடிசூட்ட எண்ணிய தசரதனும் ''உய்யலாக தோர் நெறிபுக உதவிட வேண்டும்'' என்று கேட்டது இங்கு நினைவு கூரத்தகும்.

153. இலக்குவன் மறுமொழி

ஆண்தகை அம்மொழி பகர, அன்பனும்
தூண்தகு திரள்புயம் துளங்கத் துண்எனா
மீண்டது ஓர் உயிரிடை விம்ம விம்முவான்
''ஈண்ட உனக்கு அடியனேன் பிழைத்தது யாது?'' என்றான். (1850)

(துளங்க-குலுங்க; துண்எனா-திடுக்கிட்டு; விம்ம-துன்புறுதல்; விம்முதல்-தேம்புதல்; பிழைத்தது-பிழைசெய்தது)

ஆண்களிற் சிறந்தவனாகிய இராமன் அவ்வாறு கூறியதும், இராமனிடம் மாறாத அன்பும், அபரிமிதமான பக்தியும் உடையவனான இலக்குவன், பருத்த தூண்களைப் போன்ற திரட்சி மிகுந்த தன் தோள்கள் குலுங்கும்படித் திடுக்கிட்டு, முன்பு சென்ற உயிர் மீண்டு, அது பின்னும் மாண்டது போலத் தேம்பியழுது ''நான் உனக்கு என்ன தீங்கிழைத்தேன்?'' என்று கேட்டான்.

இராமன் வனம்புகுவான் என்று கேட்ட போதே இலக்குவனது உயிர் போகும்நிலை எய்தியது. தன்தாய் நீ இராமனுடன் வனம் புகுக என்ற போது அவ்வுயிர் மீண்டும் வந்தது எனத் தேறுதலுற்றான். இப்பொழுது இராமன் நீ இங்கேயே இருந்து தாய் தந்தையார்க்கு ஆறுதல் கூறு என்ற பொழுது அவ்வுயிர் மீண்டும் இறந்தது போன்ற நிலை எய்தித் தேம்பி அழுதான் என்பதாம். ''நான் எந்த விதத் தவறும் செய்யாதிருக்கும் போது, உன்னுடன்

Koviloor Digital Library

வரவேண்டாம் என்றும், இங்கேயே இருப்பாயாக என்றும் கூறுவதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்கிறான் இலக்குவன் என்பதாம்.

154. ''நீர் உள எனின் உள மீனும் நீலமும்;
பார்உள எனின் உள யாவும்; பார்ப்புறின்
நார் உள தனு உளாய்? நானும் சீதையும்
ஆர் உளர் எனின் உளம்? அருளுவாய்!'' என்றான். (1851)

(நீலம்-நீலக்கொடி /கருங்குவளை; யாவும்-எல்லா உயிர்களும்; பார்ப்புறின்-ஆராய்ந்து பார்க்குமிடத்து; நார்-நாண்; தனு-வில்)

''நாண் பொருந்திய கோதண்டம் என்னும் வில்லை உடையவனே! நீர் நிலைகளில் இருந்தால்தான் மீன்களும் கருங்குவளை மலர்களும், மற்ற நீர்ப் பூங்கொடிகளும் உளவாகும். வாழும், பூமி இருந்தால்தான் அதிலுள்ள எண்ணிறந்த உயிரினங்கள் எல்லாம் வாழும்; ஆராய்ந்து பார்த்தால், நானும் சீதையும் யார் இருந்தால் உயிர் வாழ்வோம்? நீங்களே கூறுங்கள்!'' என்றான் இலக்குவன்.

நீரில் வாழும் நீர்ப் பூங்கொடிகளும், கருங்குவளை மலர்களும் நீர் குளத்தில் இருக்கும் வரை தான் உயிர் வாழும். நீர் வற்றிப் போனால் அவை வாடி அழியும். மீன் இலக்குவனுக்கும், பூங்கொடி சீதைக்கும் உவமை. அதுபோல பூமி என்ற ஒன்று இருந்தால் தான் ஜீவராசிகள் உயிர் வாழும். இல்லையேல் அவை வாழ்வதற்கு இடமின்றி மாண்டுபோகும். அதுபோலவே நானும் சீதையும் யார் இருந்தால் உயிர் வாழ்வோம் என்பதை நீயே கூறுவாயாக என்று மிகச் சாதுர்யமாகப் பேசினான் இலக்குவன். இங்கே சீதையைக் குறிப்பித்தது, என்னிடம் சொன்னது போலச் சீதையிடமும் போய்ச் சொல்லி அவளையும் துன்பத்திற்கு உள்ளாக்கி விடாதே என்று இராமனை எச்சரிப்பதற்காகத் தான் என்று கொள்ள வேண்டும்.

நாணை விட்டு வில் இல்லாதது போல நானும் உன்னை விட்டு இருக்க மாட்டேன் என்று குறிக்க ''நார் உளதனு உளாய்'' என்றான். ''ஆதாரமான பொருள்கள் இன்றி ஆதேயமான பொருள்கள் நிலைத்திட முடியாது'' என்பது உட்கருத்து.

155. ''பைந்தொடி ஒருத்திசொல் கொண்டு, பார்மகள்
நைந்து உயிர் நடுங்கவும், ''நடத்திகான்'' எனா
உய்ந்தனன்; இருந்தனன்; உண்மை காவலன்
மைந்தன், என்று இனைய சொல் வழங்கினாய்?'' எனா. (1852)

(தொடி-வளையல்; நைந்து-வருந்தி)

''பசுமையான வளையல்கள் அணிந்த ஒருத்தியாகிய தன் மனைவி கைகேயியின் சொல்லை மனத்துள் ஏற்றுக் கொண்டு, பூமிதேவி வருந்தி உயிர் நடுங்கி நிற்பதையும் கருதிப் பார்க்காது, ''நீ காட்டிற்குச் செல் என்று

Koviloor Digital Library

உன்னை நோக்கிக் கட்டளையிட்ட பின்னும் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற, வாய்மைக்குக் காவலன் என்று உங்களால் புகழப்படும் தசரதனின் மைந்தன் நான் என்று எண்ணித்தானே இத்தகைய கொடிய வார்த்தைகளை என்னைப் பார்த்துச் சொன்னாய்?'' என்று இலக்குவன் இராமனிடம் கோபமாகக் கேட்டான்.

இவ்வளவு நிகழ்நத பின்னரும் வாய்மை காப்போன் தசரதன் வன்கண்மையாக உயிரை வைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் நான் அப்படிப்பட்டவன் அல்லன். நின்னைப் பிரிந்து நான் உயிர் வாழேன் என்ற கருத்துப்படக் கூறினான் என்க. ''மகனறிவு தந்தையறிவு'' என்பது பழமொழி. ''தந்தையர் ஒப்பர் மக்கள்'' என்பதும் மற்றொரு பழமொழி.

156. ''மாறு இனி என்னை? நீ வனம் கொள்வாய்''
எனஏறின வெகுளியை ''யாதும் முற்று உற
ஆறினை தவிர்க'' என, ஐய! ஆணையின்
கூறிய மொழியினும் கொடியதாம்'' என்றான். (1853)

(மாறு-ஒப்பு; ஏறின-வளர்ந்த)

இலக்குவன் இராமனை நோக்கி, ''ஐயனே! நீ வனம் புகுவாய் என்று கேள்விப்பட்டவுடனே எனக்குள் மூண்டெழுந்த கோபத்தைக் கண்டு, ''எல்லாவற்றையும் முழுதுமாகத் தணித்துத் தவிர்ப்பாயாக!'' எனறு நீ இட்ட கட்டளையைக் காட்டிலும், இப்பொழுது நீ ''என் உடன் கூட வராதே. இங்கேயே இரு'' என்று கூறிய வார்த்தைகள் மிகவும் கொடுமையானவை. இதற்கு ஒப்பு வேறு எதுவும் இல்லை'' என்று இலக்குவன் கூறினான்.

அவனுடைய சினத்தீயை அவிப்பதற்காக இராமன் பயன் படுத்திய வார்த்தைகளை அடுக்கிக் காட்டுகிறான் இலக்குவன். யாதும் தவிர்க; முற்றுறத்தவிர்க்க; ஆறு; பின்னர் தவிர்க, என்று சொல்லியவற்றையெல்லாம் விட இப்போது நீ கூறிய சொற்கள் கொடுமையானது என்று வேறு எந்த அடைமொழியும் கொடுக்காமல் கூறியதனால் அதன் வலிமையைப் புலப்படுத்தினான். கோபம் தணிக என்ற போது சரி, கோபம் தணிந்தால் உன்னுடன் கூடவே வந்து உனக்குப் பணிவிடை செய்யலாம் என்று இருந்தேன். இப்பொழுது நீ இவ்வாறு கூறியதால் இந்தக் கொடிய வார்த்தைகளுக்கு வேறு ஒப்புமையே கிடையாது'' என்றான். ''சினம் தவிர்க'' என்று இட்ட கட்டளையைக்காட்டிலும் ''அயோத்தியிலேயே தங்குக'' என்ற சொல் மிகக் கொடுமையானதாகும் என்பதாம்.

157. ''செய்துடைச் செல்வமோ யாதும், தீர்ந்து, எமைக்
கைதுடைத்து ஏகவும் கடவையோ? ஐயா!
நெய்துடைத்து, அடையலர் நேயமாதர் கண்
மை துடைத்து, உறை புகும் வயம் கொள் வேலினாய்! (1854)

Koviloor Digital Library

(துடைத்து-பூசப்பெற்று; அடையலர்-பகைவர்; வயம்-வெற்றி / வலிமை; செய்தல்-ஈட்டுதல்; ஏக-துறந்து செல்ல; நேயமாதர்-அன்புமிகு கற்புடைய மனைவியர்; தீர்ந்து-துறந்து; கடவையோ-செய்வாயோ? துடைத்தல்-அழியச்செய்தல்; துடைத்தல்-துறத்தல்)

''ஐயனே! துருப்பிடிக்காது இருப்பதற்காக நெய் பூசப்பட்டு, பகைவர்களின் அன்பும் கற்பும் கொண்ட மனைவியர்களது கண் மையையும் அழித்து விட்டு, வேறு பகைவர்கள் இல்லாததால் உறையில் வந்து புகுந்து கொள்ளும் வெற்றியும் வலிமையும் மிக்க வேற்படையை உடையவனே! நீ செய்த பாக்கியத்தால் பெற்றவற்றையும், உன்னுடைய முன்னோர்கள் ஈட்டிய செல்வங்கள் எல்லாவற்றையும் துறந்து செல்வதுடன் உன்னிடம் மாறாக்காதலுடைய என்னையும் சீதையையும் கூடக் கை கழுவி விட்டுக் கானகம் செல்லவும் துணிந்தனையோ?'' என்று இலக்குவன் இராமனை நோக்கிக் கேட்டான்.

இங்கே துடைத்த என்ற ஒரே சொல்லை மிக அழகாகக் கம்பன் பல பொருள்களில் பயன்படுத்தியிருப்பது சுவைக்கத் தக்கது. கை துடைத்து என்பது கை கழுவுதல் என்ற பொருளிலும், நெய் துடைத்து என்பது நெய் பூசப்படுதல் என்ற பொருளிலும், மை துடைத்து என்பது மகளிரின் கண்மையை அழித்தல் என்ற பொருளிலும் கையாளப்பட்டிருப்பது உணர்க. கண் மை துடைத்தல் என்பது இட்டிருக்கும் மையை அழித்தல் என்பதும் பொருள். கைம்மை மகளிர் கண்ணிற்கு மை தீட்டி அழகு புனையார் என்பது மரபு. கண்களுக்கு மை தீட்டுதல் மங்கல மகளிர்க்கே உரியது. தீர்ந்த என்பது துறத்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ''தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்'' என்பது தொல்காப்பியம். கை துடைத்தல் என்பது கையிலுள்ள நீர்ப்பற்றைத் துணியில் துடைப்பது போல பற்று நீக்கத்திற்கும் இதனையே உவமையாகக் கூறினார். எமை என்று இலக்குவன் தன்னுடன் கூடச் சீதையையும் உளப்படுத்திப் பேசினான் என்க.

158. இராமன் நிலை

உரைத்தபின் இராமன் ஒன்று உரைக்க நேர்ந்திலன்;
வரைத்தடந் தோளினான் வதனம் நோக்கினான்;
விரைத்தடம் தாமரைக் கண்ணின் மிக்க நீர்
நிரைத்து, இடையிடை விழ, நெடிது நிற்கின்றான். (1855)

(வரை-மலை; வதனம்-முகம் / முகக்குறிப்பு; விரை-மணம்; நிரைத்து-வரிசை வரிசையாக; நேர்தல்-வாய்த்தல்; இடை-இடம் / தரை)

இவ்வாறு இலக்குவன் கூறிய பிறகு, இராமனால் மாற்றம் ஏதும் கூற இயலவில்லை. மலை போன்ற உயர்ந்த தோள்களையுடைய

Koviloor Digital Library

இலக்குவனது முகத்தையும், அதில் தோன்றும் முகக்குறிப்பினையும் ஆழ்ந்து நோக்கினான். நறுமணம் பொருந்திய அகன்ற தாமரை மலர் போன்ற கண்களிலிருந்து மிகுதியான கண்ணீர் வரிசையாக இடைவிடாது சொரிந்தது. அப்படியே நீண்ட நேரம் செயலற்று நின்றான்.

முன்பு இராமன் சினம் தணிக என்று கூறிய பொழுது எப்படி இலக்குவன் மாற்றம் ஒன்றும் உரையாது செயலற்று நின்றானோ, அதேபோல இப்பொழுது இலக்குவன்கூறிய பணிமொழிகளால் இராமன் ஒன்றும் கூற இயலாது வறிதே நின்றான் என்பதாம். உள்ளக்குறிப்பைச் சொல்லால் உணர்வதினும், முகக்குறிப்பால் உணர்வதே சிறந்தது. எனவே இராமன் இலக்குவனது வதனம் நோக்கினான் என்றார். கண்ணீர்த்துளி ஒன்றன்பின் ஒன்றாய் இடைவிடாது தரையில் விழுந்தது என்பதை ''நிரைத்து விழ'' என்றான். இலக்குவனது உணர்ச்சிமயமான சொற்கள், கலங்காத உள்ளம் கொண்ட ஒரு தன்மையனாகிய இராமனையும் கலங்கச் செய்து கண்ணீர் வரவழைத்துச் செயலற்று நிற்கச் செய்தது என்றது ஒரு நயம். மறு மாற்றம் சொல்லாததும் செயலற்று வறிதே நின்றதும் அவன் இலக்குவன் கூற்றுக்கு உடன்பட்டான் என்பதைக் குறிக்கும்.

159. வசிட்டன் வருத்தம்

அவ்வயின் அரசவை நின்றும் அன்பினன்
எவ்வம்இல் இருந்தவ முனிவன் எய்தினான்;
செவ்விய குமரரும் சென்னி தாழ்ந்தனர்;
கவ்வைஅம் பெருங்கடல் முனியும் கால்வைத்தான். (1856)

(எவ்வம்இல்- துன்பமறியாத; செவ்விய-நேரிய / செம்மை நலமுடைய; கவ்வை-துன்பம்)

அப்பொழுது, அரசசபையினின்றும் அன்புடையவனும், குற்றமும் துன்பமும் அற்ற பெருந்தவ முனிவனுமாகிய வசிட்டன் சுமித்திரையின் மாளிகையை அடைந்தான்; முனிவன் வந்ததைக் கண்ட நேரிய குணம் படைத்த இராம இலக்குவர் இருவரும் தங்கள் துன்பத்தை மறைத்துக் கொண்டு, அவருக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் தெரிவித்தனர். அவர்கள் முகக் குறிப்பால் அகத்தினை உணர்ந்த முனிவனும், துன்பம் என்னும் பெருங்கடலில் தன் முதல் அடியை எடுத்து வைக்கத் துவங்கினான்.

அவ்வயின்என்ற சொல் அப்பொழுது என்றும் அவ்விடம் என்றும் இரு பொருளையும் தந்து நின்றது. ''எவ்வம் இல் இருந்தவ முனிவன் கவ்வைஅம் பெருங்கடல்கால்வைத்தான்'' என்றது ஒரு நயம். ''இடும்பை யாவதும் அறியா இயல்பினர் முனிவர்'' என்பது திருமுருகாற்றுப்படை. துன்பம் என்பதே இன்னதென்றறியாத வசிட்டன் கூட, இராம இலக்குவர் நிலை கண்டு துன்பக் கடலில் கால் பதித்தான் என்பதாம். கால் பதித்தான் என்பதால் அதில் மூழ்குதற்கும் வாய்ப்பு உண்டு என்பதைக் கூறாது

Koviloor Digital Library

கூறுகிறான் கவிஞன். பின்னர் ''அன்னமும் துயர்க்கடல் அடிவைத்தாளரோ'', எனக் கூறப்போவதும் இங்கு நினைவு கூரத்தகும்.

160. அன்னவர் முகத்தினோடு அகத்தை நோக்கினான்;
பொன் அரைச் சீரையின் பொலிவு நோக்கினான்;
என்இனி உணர்த்துவது? எடுத்த துன்பத்தால்,
தன்னையும் உணர்ந்திலன், உணரும் தன்மையான். (1857)

(நோக்குதல்-உணர்தல்; பொன்-அழகிய; சீரை-மரவுரி; எடுத்த-உள்ளத்தில் உண்டாக்கிய; உணர்தல்-மெய்ப்பொருளைக் காணுதல்)

எல்லாவற்றிலும் மெய்ப்பொருளைக் கண்டு உணரும் தன்மையுடைய வசிட்டன் அங்கு வந்து சேர்ந்து அவர்கள் முகத்தைத் தம் ஊனக் கண்களாலும், அவர்கள் நெஞ்சத்தைத் தம் ஞானக்கண்களாலும் கண்டான். அவர்கள் இடையில் உடுத்தியிருந்த மரவுரியும் அழகுபெற்றுப் பொலிந்து விளங்குவதையும் கண்டான். அவர்கள் நிலை கண்டு தன் உள்ளத்தில் உண்டாகிய துன்பத்தால் தன்னையும் மறந்தவனாகித் துன்பக் கடலுள் ஆழ்ந்தான். அவன் நிலையை எவ்வாறு உணர்த்துவது?

நோக்கம் கண்ணால் நோக்குதல், மனத்தால் நோக்குதல் என இருவகைப்படும். அவ்விரு நிலையினின்றும் நோக்கினான் முனிவன் என்பதாம். ''முன்னம் முகம்போல முனி உரைப்பதுஇல்'' என்பது நான்மணிக்கடிகை.

161. ''வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை அதுவரச் சீரை சாத்தினான்;
சூழ்வினை நான்முகத்து ஒருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?''. (1858)

(நுதலிய-உறுதி செய்த / கருதிய; சூழ்வினை-ஆராய்ந்து செய்தல்)

மணி மகுடம் சூடி நல்வாழ்வு பெற வேண்டி உறுதி செய்த மங்கள கரமான அதே நாளில், தாழ்ச்சியடைதற்குக் காரணமான தன் ஊழ்வினைப் பயன் வந்து சேர்ந்ததால், மரவுரி தரிக்க வேண்டி நேரிட்டது இராமனுக்கு. ஆராய்ந்து செயல்படுபவனும் விதிக்குத் தலைவனுமாகிய பிரமதேவனே வந்தாலும், ஒருவர் செய்த தீவினையின் பயன் அவரைச் சென்று சேர்ந்தே தீரும். இதனைத் தவிர்ப்பதற்கு யாராலும் முடியாது.

''ஊழிற் பெருவலியாவுள? மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'' என்பது குறள் 380. நான்கு முகமுடைய பிரமதேவனாலும் விதிப் பயனைத் தவிர்க்க இயலாது என்றால் ஒரே முகத்தையுடைய இராமனால் எவ்வாறு தவிர்க்க இயலும்? என்பது கருத்து. விதிக் கடவுளாலும் விதியை வெல்ல இயலாது என்பதும், இராமன் மரவுரி தரித்தற்கு அவனது ஊழ்வினையே காரணம் என்பதும் வசிட்டனின் கருத்து. ''கடப்பார் எவரே கடு வினையை?'' என்பது நளவெண்பா.

Koviloor Digital Library

162. ''வெவ்வினை அவள்தர விளைந்ததேயும் அன்று;
இவ்வினை இவன்வயின் எய்தற்பாற்றும் அன்று;
எவ்வினை நிகழ்ந்ததோ? ஏவர் எண்ணமோ?
செவ்விதின் ஒருமுறை தெரியும் பின்'' என்றான். (1859)

(செவ்விதின்-நன்கு)

''இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டியதான இந்நிகழ்வு, கொடிய தீச்செயலைச் செய்யும் கைகேயினால் விளைந்தது அல்ல; புண்ணிய மூர்த்தியாகிய இராமனுக்கு இந்நிலை தானே வந்து சேர்தலும் இயலாதது. இது எவ்வாறு நிகழ்ந்ததோ? யார் செய்த சூழ்ச்சியோ? எப்படியாயினும் இறுதியில் ஒரு வழியாக இதன் காரணம் நன்கு புரிந்து விடும்'' என்று வசிட்டன் தன் மனத்துக்குள் எண்ணிக் கொண்டான்.

''செவ்வியான்கேடும்நினைக்கப்படும்'' என்பது குறள்169. காரணத்தை வசிட்டன் ஆராயத் தொடங்குகிறான். இது கைகேயியினால் மட்டும் விளைந்ததல்ல; இது இராமனுக்குத் தானாகவே வந்து சேரவும் வாய்ப்பு இல்லை; இதன் பின்புலமாக ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று ஆராய்கிறான் முனிவன். இவ்வாறே சிலப்பதிகாரத்திலும் மாடலன், கோவலனது ஊழ்வினையை ஆராய்கிறான். ''இம்மைச் செய்தது யானறி நல்வினை, உம்மைப் பயன்கொல் ஒரு தனி உழந்தித் திருத்தகு மாமணிக் கொழுநனுடன் போந்தது'' என்று கண்ணகியைக் கோவலன் மதுரைக்குக் கூட்டிக் கொண்டு வருவதைக் கண்ட மறையவன் மாடலன் அதற்குரிய காரணத்தை ஆராய்கிறான். கைகேயி ஒரு கருவியே தவிர அவளே முழுக் காரணமும் அல்ல. இதற்கு வேறொரு வித்து இருத்தல் வேண்டும். அது பின்னர்நன்கு தெரியவரும்என்பது முனிவனின்கருத்து. அது தேவகாரியம் என்பதை அறிந்தவன் அல்லவா அவன்?.

163. வசிட்டன் கூறுதல்

வில்தடம் தாமரைச் செங்கண் வீரனை
உற்றுஅடைந்து, ''ஐய! நீ ஒருவி ஓங்கிய
கல்தடம் காணுதி என்னில், கண் அகன்
மல்தடம் தானையான் வாழ்கிலான்'', என்றான். (1860)

(ஒருவி-நீங்கி; மல்-மற்போர்; காணுதல்-அடைதல்)

வசிட்ட முனிவன், வில்லினையும், பெரிய தாமரை மலர் போன்ற சிவந்த கண்களையும் உடைய வீரனாகிய இராமனை நெருங்கி அருகில் வந்து, ''ஐயனே! நீ இந்நகரை விட்டு நீங்கி, உயர்ந்த மலைகள் நிறைந்த கானகம் அடைவாய் என்றால், பரந்த மற்போர் புரியும் சேனைகளை உடைய தசரத மன்னன் உயிர் வாழ்ந்திருக்க மாட்டான், இறந்து படுவான்'' என்றான்.

Koviloor Digital Library

நீ பிரியின், தசரதன் ஆவி பிரியும் என்றான் என்பதாம்.

164. இராமன் மறுமொழி

''அன்னவன் பணி தலையேந்தி ஆற்றுதல்
என்னது கடன்; அவன் இடரை நீக்குதல்
நின்னது கடன்; இது நெறியும்''; என்றனன்;
பன்னகப் பாயலுள் பள்ளி நீங்கினான். (1861)

(பன்னகம்-பாம்பு; பாயல்-படுக்கை; ஏந்தி-மேற்கொண்டு; நெறி-முறை)

ஆதிசேடனாகிய பாம்பணையில் இருந்து அறிதுயில் நீங்கி வந்த திருமாலின்அவதாரமானஇராமபிரான், வசிட்டனைநோக்கி, ''என்தந்தை தசரதனுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்து முடித்தல் என்னுடையகடமையாகும். என்பிரிவால் அவன்அடைகின்றதுன்பத்தை நீக்கி அவனை ஆற்றுப்படுத்துதல் குலகுருவாகிய தங்களுடைய கடமையாகும்; இதுவே நீதியுமாகும்'' என்றான்.

இறுதி அடி அவனது அவதார உண்மையைக் குறிப்பதாகும்.

165. வசிட்டன் பதில் கூறுதல்

''வெவ்அரம் பயில் சுரம் விரவு'' என்றான் அலன்;
தெவ்வர் அம்பனைய சொல் தீட்டினாள் தனக்கு
அவ்அரம் பொருதவேல் அரசன், ஆய்கிலாது
''இவ்வரம் தருவென்'' என்று ஏன்றது உண்டு'' என்றான். (1862)

(வெவ்-கொடிய; சுரம்-வெப்பமுள்ள காடு ; விரவுதல்-செல்லுதல் / அடைதல்; தெவ்வர்-பகைவர்; ஏன்றது-உடன்பட்டுக் கூறியது; தீட்டுதல்-சொல்லுதல்)

''வெம்மையான அரம் போன்ற பரற்கற்களும், முள்ளும் நிறைந்த வெப்பமுள்ள காட்டிற்கு நீ சென்று சேர்'' என்று உன் தந்தை உனக்கு நேராகத் தன்வாயால் கட்டளை இடவில்லை; பகைவர்களின் கூரிய அம்பு போன்ற சொற்களைக் கூறிய கைகேயிக்கு, அந்த அரத்தால் அராவப்பட்ட வேற்படையை உடைய தசரத மன்னன், பின் விளைவுகளை ஆராய்ந்து பார்க்காது ''நீ கேட்ட வரத்தைத் தருவேன்'' என்று கூறி ஒப்புக் கொண்டது மட்டும் தான் உண்மை'' என்றான்.

என் தந்தையின் கட்டளையைச்சிரமேற் கொண்டு முற்றுவித்தல் எனது கடமை என்று கூறிய இராமனுக்கு வசிட்டன் உன் தந்தை அவ்வாறு உனக்குக் கட்டளை இடவே இல்லை. எனவே நீ வனம் புகுவது தவறு என்று கூறித் தடுக்க முயற்சிக்கிறான். கைகேயியின் வரத்தின்-வார்த்தைகளின் கொடுமையைப் பகைவர்களின் கூரிய அம்புக்கு

Koviloor Digital Library

ஒப்பிட்டிருப்பது ஒரு நயம். இலக்குத் தப்பாது தாக்கும் கணை போல நினைத்ததைத் தப்பாது கேட்டுப் பெறும் ஆற்றல் அவள் சொற்களுக்கு உண்டு என்பது உட்கருத்து. தசரதன் ஆராயாது செய்த செயல் இது இரண்டாவது, முதலில் தன் அரண்மனையில் விசுவாமித்திரன் வந்து அமர்ந்ததும், அவன் என்ன கேட்கப் போகிறான் என்பதை ஆராயாமலேயே, நீ எது கேட்டாலும் உடனே தருவேன் என்றான்; இப்போது கைகேயிக்கும் நீ எது கேட்டாலும் கடும்பற்றுள்ளம் இன்றித் தருவேன் என்று இராமன் மீது ஆணை கூறித்தர உடன்பட்டான். இவற்றையெல்லாம் கூறும் வசிட்டனின் உள்நோக்கம் அவன் காடேகுவதைத் தடுப்பதாம். அவ்வாறு ஆராய்ந்து பார்த்திருந்தால் ஒரு வேளை இதற்கு உடன்படாமல் போயிருக்கலாம் என்பது வசிட்டனின் எண்ணம். எனவே இது அரசனது ஆணையை மீறுதல் என்பது இல்லை என்கிறான்.

166. இராமன் மறுமொழி

''ஏன்றனன் எந்தை இவ்வரங்கள்; ஏவினாள்
ஈன்றவள்; யான் அது சென்னி ஏந்தினேன்;
சான்றென நின்ற நீ தடுத்தியோ?'' என்றான்,
தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றினான். (1863)

(நிறுத்த-அழியாது நிலை பெறச் செய்ய; ஏன்றனன்-ஏற்றுக்கொண்டான்; தோன்றுதல்-விளங்குதல்)

உயர்ந்து விளங்குகின்ற தருமத்தை அழியாது நிலை நிறுத்துவதற்கென்றே அவதாரம் எடுத்து வந்தவனாகிய இராமன், வசிட்ட முனிவனை நோக்கி, ''என் தந்தை இவ்வரங்களைத் தந்ததாக ஏற்றுக் கொண்டான். அதன்படி என் தாயும் நான் வனம் புகவேண்டும் என்று கட்டளை இட்டாள்; நானும் அதைத் தலைமேல் ஏற்றுக் கொண்டு வனம்புக முற்படுகின்றேன். இவையெல்லாவற்றுக்கும் சான்றாக நின்றவனாகிய நீ என்னைத் தடுத்து நிறுத்தலாமோ?'' என்றான்.

''தாங்கள் கூறும் விளக்கம் எனக்கு ஏற்புடைத்தன்று. தந்தை என்னிடம் நேரே கூறவில்லை என்று தாங்கள் சொல்லும் சமாதானம் போக்குக் காட்டுவது போன்றதாகும். தந்தை வரங்களைத் தருவேன் என்ற பிறகு, தாய் அவ்வரத்தின் படி செய் என்று கட்டளையிட்ட பிறகு, நான் அதைச் சிரமேற்கொண்டு செய்ய வேண்டியவனாகிறேனே தவிர, அதில் எந்தக் குற்றத்தையும் நான் காணவில்லை. இவை எல்லாவற்றையும், அறிந்த எல்லா சாத்திரங்களையும் கற்றுணர்ந்த நீ, இவ்வாறு என்னைத் தடுக்கலாமா?'' என்று இராமன் வசிட்டனை வினவினான் என்பதாம். முன்னர் தேவ சபை நிகழ்ச்சியின் போதும் வசிட்டன் அங்கே இருந்ததாக வான்மீகம் கூறுவதால், அந்த நிகழ்ச்சிக்கும் சான்றாக நின்ற நீ, தேவகாரியம்

Koviloor Digital Library

நடைபெறுவதற்காக நான் வனம் புகுவதைத் தடுக்கலாமா?'' என்றும் ஒரு பொருள் தோன்றுதல் காணலாம்.

167. இராமன் புறப்படுதல்

என்றபின் முனிவன் ஒன்றுஇயம்ப நேர்ந்திலன்;
நின்றனன் நெடுங்கண் நீர்நிலத்து நீத்து உக;
குன்றுஅன தோளவன், தொழுது, கொற்றவன்
பொன்திணி நெடுமதில் வாயில் போயினான். (1864)

(நேர்தல்-விரும்புதல் / இயலுதல்; நீத்தம்-வெள்ளம்; உக-சிந்த; நீந்துதற்குரியது என்ற காரணம் பற்றி நீத்து என்பது வெள்ளத்திற்குக் காரணப் பெயர்)

என்று இவ்வாறு இராமன் கூறிய பிறகு, வசிட்ட முனிவனால் ஒன்றும் கூற இயலாது போயிற்று; எனவே இராமனது நிலையை எண்ணித் தனது நீண்ட கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமாகத் தரையில் சிந்தும்படி சிறிது நேரம் நின்றான் குன்று போன்ற தோள்களை உடைய இராமன், முனிவனைத் தொழுது, வெற்றி பொருந்தியதும், பொன்னால் இயற்றப்பட்டதுமான வலிமையான நீண்ட மதில் வாயில் வழியே போகலானான்.

முன்பு இலக்குவன் கூறிய போது இராமன் வாயடைத்து நின்றது போல இப்பொழுது இராமன் கூறியது கேட்டு முனிவன் வாயடைத்து நின்றான் என்பதாம்.

168. கவிக்கூற்று

சுற்றிய சீரையன்; தொடர்ந்த தம்பியன்;
முற்றிய உவகையன்; முளரிப் போதினும்
குற்றம்இல் முகத்தினன்; கொள்கை கண்டவர்
உற்றதை ஒருவகை உணர்த்துவாம்; அரோ. (1865)

(சீரை-மரவுரி; முற்றிய-முதிர்ந்த; முளரிப்போது-தாமரை மலர்; கொள்கை-கருத்து / மனக்கோள்; கண்டவர்-உணர்ந்தவர்; குற்றம்இல்-கலக்கமில்லாத; ஒருவகை-ஓரளவுக்கு)

இடையில் மரவுரி தரித்திருக்கிறான் இராமன்; அவனைத் தொடர்ந்து வருகிறான் அவன் தம்பி இலக்குவன். முதிர்ந்த மகிழ்ச்சியுடையவனாய், தாமரை மலரினும் சிறந்த, களங்கமற்ற முகத்தை உடையவனான இராமனது உள்ளக்கருத்தை நன்கு உணர்ந்து கொண்ட நகர மக்கள் பட்ட துயரத்தை, முழுவதும் உரைக்க முடியாவிட்டாலும் ஓரளவாவது உரைக்கின்றேன்.

பெற்றோர் ஏவிய கட்டளையை இனிது நிறைவேற்றும் வாய்ப்புக் கிடைத்ததால் முற்றிய உவகையன். முன்பே கூறியது போல அன்றலர்ந்த செந்தாமரை போலும் முகத்தினன். இராமனது முகம் மேலுக்கு

Koviloor Digital Library

மலர்ந்திருந்தாலும், அவன் அகத்துள்ளே படும்துயரைக் கண்டு உணர்ந்த மக்கள் படும் துயரத்தினைச் சொல்லப்புகுகிறான் கவிஞன். அதை முற்ற முடியக் கூறுவது என்பது முடியாதது. ஓரளவு சிறிதளவு கூறுகிறான்.

169. மக்கள் அடைந்த துயரம் [8 பாடல்கள்]

அந்தணர், அருந்தவர், அவனி காவலர்,
நந்தல்இல் நகர்உளார், நாட்டு உளார்கள்தம்
சிந்தை என்புகல்வது? தேவர் உள்ளமும்
வெந்தனர், மேல்வரும் உறுதி வேண்டலர். (1866)

(உறுதி-நன்மை; நந்தல்இல்-குறைவிலாத; சிந்தை-மனநிலை)

''மரவுரிதரித்துத் தவக்கோலம் பூண்டு நகர் நீங்குகின்ற இராம இலக்குவர்களைப் பார்த்து, தேவர்களே தங்களுக்கு இராமனால் விளையப்போகும் அரக்கரை ஒழித்தலாகிய நன்மையினை விரும்பாதவர்களாகி, உள்ளம் நொந்து போயினர் என்றால், அந்நகரிலுள்ள வேதியர்கள், அரியதவம் செய்கின்ற முனிவர்கள், சிற்றரசர்கள், குறைதலில்லாத அயோத்தி நகரத்தார், கோசல நாட்டு மக்கள், இவர்களுடைய மனநிலையைப் பற்றி என்ன வென்று கூறுவது?'' என்று கவிஞன் கூறத் தொடங்குகிறான்.

அயோத்தி என்ற சொல்லுக்குப் பகைவர்களால் போரினால் அழிக்க முடியாதது என்று பொருள். அது தோன்றுமாறு நந்தல்இல் நகர் எனக் குறைதலில்லாத நகர் எனக் கூறினார். இராமன் காட்டை அடைந்து அரக்கர்களைக் கொன்று தேவர்களுக்கு இன்பம் அளிப்பது தான் இராம அவதாரத்தின் உண்மை நிலை அதனால் தேவர்கள் உண்மையிலேயே மகிழவேண்டும். ஆனால் இராமன் தவக்கோலத்தைக் கண்டு உள்ளம் வெதும்பிய தேவர்கள், தங்களுக்கு அந்த நன்மை கிடைக்காது போனாலும் போகட்டும், இராமனை இவ்வுருவில் காண ஒண்ணாது என்று சிந்தையழிந்தனர் என்பதாம். தேவர்களே இவ்வாறு வருந்தினார்கள் என்றால், தங்கள் நாட்டை இராமன் முடிசூடி ஆளப்போகின்றான் என்று மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களான அயோத்தி நகர மக்கள், கோசலநாட்டு மக்கள் மனநிலையை என்னவென்று சொல்லுவது என்கிறான் கவிஞன்.

170. மாதர் செயல்

ஐயனைக் காண்டலும் அணங்கு அனார்கள் தாம்,
மொய்இளந் தளிர்களால் முளரிமேல் விழும்
மையலின் மதுகரம் கடியும் ஆறுஎனக்
கைகளின் மதர்நெடும் கண்கள் எற்றினார். (1867)

Koviloor Digital Library

(அணங்கு-தேவமகளிர்; முளரி-தாமரைமலர்; மையல்-மது மயக்கம்; மதுகரம்-வண்டுகள்; கடிதல்-ஓட்டுதல்; மதர்-மதர்த்த; எற்றுதல்-அடித்துக்கொள்ளுதல் / மோதுதல்)

மரவுரி தரித்துத் தவக்கோலம் பூண்டு தம் எதிரே வந்து நின்ற இராமபிரானைக் கண்டவுடன், தேவமகளிர் போன்ற அயோத்தி நகர மக்கள், மது மயக்கம் கொண்டு தாமரை மலர் தம் மேல் வந்து விழும் வண்டுகளைத் தமது அடர்ந்த இளந்தளிர்களால் விரட்டுமாறு போலத் தம் கைகளால் மதர்ந்த தம் நெடிய கண்களில் அடித்துக் கொண்டார்கள்.

மணி மகுடம் சூடித் தேரில் வருவான் நம் அரசன் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த மக்களின் முன்னால் சடைமுடி சூடி, மரவுரி தரித்துத் தவக்கோலம் பூண்டு வருகின்ற இராமனைத் தங்கள் கண்களால் பார்க்க ஒண்ணாத தேவ மகளிர் போன்ற அயோத்தி நகரத்துப் பெண்டிர் இவ்வாறு காண நேர்ந்த தங்கள் கண்களைத் தங்கள் கைகளால் அடித்துக் கொண்டனர். காணக்கூடாத காட்சியைக்கண்டால் அவலத்தால் பெண்கள் தங்கள் கண்களிலும், மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்வது இயல்பு. மக்களின் துயர நிலையைக் கூறவந்த கவிஞன், முதற்பாடலில் பொதுவாக எல்லோரையும் கூறி இப்பாடலில் இருந்து மகளிரை முதலில் கூறிப் பின் அனைவரையும் ஒருவர் பின் ஒருவராகக் கூறும் அழகு சுவைக்கத்தக்கது. தாமரை மலர் முகத்துக்கும், வண்டுகள் கண்களுக்கும், இளந்தளிர்கள் கைகளுக்கும் உவமை.

171. தம்மையும் உணர்ந்திலர்; தணிப்புஇல் அன்பினால்
அம்மையின் இருவினை அகற்றவோ? அன்றேல்
விம்மிய பேர்உயிர் மீண்டுஇலாமை கொல்?
செம்மல் தன்தாதையின் சிலவர் முந்தினார். (1868)

(தணிப்புஇல்-தணியாத; அம்மை-மறுமை; விம்முதல்-துன்புறுதல்)

இராமபிரான் பால் அடங்காத ஆசை உள்ள சிலர், தம்மையும் அறியாதவர்களாய், இராமனது தந்தை தசரதனை விட முந்திக் கொண்டு இறந்து போனார்கள்; அவ்வாறு அவர்கள் செய்தது இராமன் இல்லாத இடத்தில் உயிர்வாழ்வதிலும் உயிரை நீத்து, மறுமையில் இருவினை அகற்றலாம். என்ற எண்ணத்தோடோ? அல்லது அவன் பிரிவான் என்று உணர்ந்த அளவிலே உயிர்கள்தாமே போய் விட்டனவோ? இன்னது என்று அறிய முடியவில்லை.

முன்பு மகிழ்ச்சியால் ''சாதுகை மாந்தரெல்லாம் தசரதன் தன்னை ஒத்தார்'' என்று கூறியது போல இப்போது துக்கத்தாலும் தசரதனுக்கு முன், இறந்தார்கள் எனக் கூறுவதால் இவர்களும் சாதுகை மாந்தராகவே இருந்தல் கூடும் என்பதாம். ஒருவன் செய்த வினைக்கு ஏற்றவாறுதான், அவன் ஆயுளும், போகமும், மறுபிறப்பும் அமையும் என்பது

Koviloor Digital Library

நூற்கொள்கை. முந்தினர் என்பது இறப்பதில் முந்திக் கொண்டதைக் குறிக்கும்.

172. விழுந்தனர் சிலர்; சிலர்விம்மி விம்மி மேல்
எழுந்தனர்; சிலர் முகத்து இழிகண்ணீர் இடை
அழுந்தினர்; சிலர் பதைத்து அளகவல்லியின்
கொழுந்து எரிஉற்றெனத் துயரம் கூர்கின்றார். (1869)

(விம்மி-தேம்பி; அளகம்-கூந்தல்; வல்லி-கொடி; கொழுந்து-நுனி; கூர்தல்-மிகுதல்; இழிதல்-வழிதல்)

சிலர் அக்காட்சியைக் கண்டவுடன் மயங்கி விழுந்தனர்; சிலர் தேம்பித் தேம்பி அழுது பின் எழுந்தார்கள்; சிலர் முகத்திலிருந்து விழுகின்ற கண்ணீரில் மூழ்கினர்; சிலர் கூந்தலாகிய கொடியின் நுனியில் தீப்பற்றிக் கொண்டது போலத் துடிதுடித்துத் துயரம் மிக அடைந்தனர்.

பெண்டிர் கூந்தலில் தீப்பற்றுவது அவர்களுக்குப் பெரும் துன்பம் தரும். என்பதைக் குறிக்கும்.

173. கரும்புஅன மொழியினர், கண் பனிக்கிலர்;
வரம்புஅறு துயரினால் மயங்கியே கொலாம்!
இரும்புஅன மனத்தினர் என்ன நின்றனர்;
பெரும்பொருள் இழந்தவர் போலும் பெற்றியர். (1870)

(பெற்றி-தன்மை; வரம்புஅறு-எல்லையற்ற)

கரும்பு போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்டிர் சிலர் பெரும் பொருளை இழந்தவர்கள் போலும் தன்மையை அடைந்தனர். அவர்கள் இத்தகைய துன்பத்திலும் கண்ணீர்த் துளி சொரிதல் இல்லாதவராயும், காண்பவர்கள் இவர்கள் இரும்பினால் ஆகிய நெஞ்சம் உடையவரோ என்று கருதும்படி சிறிதும் இளகாமலும் அசைவற்று நின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் துன்பம் எல்லையற்றதாயிற்று எனவே அவர்கள் திக்பிரமை பிடித்தது போல மயங்கி நின்றனர் என்பதாம்.

துன்பம் எல்லை மீறிவிட்டால் மனம் இறுகிப் போய் விடும். மனம் உருகாது. கண்ணீர் பெருகாது. சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற நிலை எய்தினர் என்பது கருத்து. ஒரு மீளா நிலை எய்தினர் என்பதாம். உருகாத மனத்திற்கு இரும்பை உவமை கூறுவது மரபு. பொதுவாகப் பெண்கள் துயர் உறுகின்றனர் என்று சொன்னால் கண்கள் கண்ணீர் சொரிய வேண்டும், மனம் உருகுதல் வேண்டும். இதுதான் உலக இயற்கை. ஆனால் இந்நகரப் பெண்டிரோ இவ்விரண்டும் நிகழாமல் இரும்பைப் போல் அசைவற்று நிற்கின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் துன்பத்தின் எல்லையைக் கடந்து மதிமயக்கத்தால் திக்பிரமை பிடித்து ஜடமாக ஆகிவிட்டனர் என்கின்றார்.

Koviloor Digital Library

174. நெக்கனஉடல்; உயிர் நிலையின் நின்றில;
இக்கணம்! இக்கணம்! என்னும் தன்மையும்
புக்கன; புறத்தன; புண்ணில் கண்மலர்
உக்கன நீர் வறந்து உதிர வாரியே. (1871)

(நெக்கன-நெகிழ்ந்து மெலிவுறுதல்; உதிரம்-குருதி / இரத்தம்; வாரி-வெள்ளம்; வறந்து-வற்றிப்போய்)

சிலருடைய உடல்கள் நெகிழ்ந்து மெலிவுற்றன; சிலருடைய உயிர்கள் முன் இருந்த நிலையில் நில்லாது போய் இக்கணமே மாய்ந்து விடும் என்று சொல்லும்படியான தன்மையை அடைந்தன. சில உயிர்கள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாய் இருந்தன. சிலருடைய தாமரை மலர் போன்ற கண்களிலிருந்து சிந்திய கண்ணீர் வற்றிப்போய், அதனால் கண்கள் புண்ணாகிப் போய், அந்தப் புண்களிலிருந்து இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

175. இருகையின் கரிநிகர் எண் இறந்தவர்,
பெருகையில் பெயர்த்தனர், தலையைப் பேணலர்,
ஒருகையில் கொண்டனர் உருட்டுகின்றனர்;
சுரிகையில் கண்மலர் சூன்று நீக்கினார். (1872)

(கரி-யானை; சுரிகை-உடைவாள்; சூன்று-தோண்டி / குடைந்து; பேணல்-பொருட்படுத்துதல்; பெயர்த்தல்-திருகி எடுத்தல்)

இரண்டு கைகளை உடைய யானைக்கு ஒப்பான வீரர்கள் கணக்கற்றவர் தங்கள் தலையை விரும்பாமலும், பொருட்படுத்தாமலும் அதனைத் தமது பெரிய கையினால் திருகி எடுத்து, அம்மானை ஆடுதல் போல் உருட்டிக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் தங்கள் மலர் போன்ற கண்களைத் தம் உடைவாளால் தோண்டிஎடுத்து எறிந்து விட்டார்கள்.

இராமனுடைய இந்நிலையைக் காணப் பொறுக்காமல் தங்கள் கண்களையே உடைவாளால் குடைந்து எடுத்து எறிந்து விட்டவர்கள் எண்ணற்றவர்கள்; அதே போல, எண்ணற்ற வீரர்கள் தங்கள் சிறு கை வாளால் தங்களது தலையையே திருகி எடுத்து உருட்டிக் கொண்டிருந்தனர். காரணம், இராமன் இல்லாத இந்நாட்டில் வாழப் பிடிக்காமையாம். ''அடிக் கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவராலோ? அரித்த சிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ? கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ? குறையுடலும் கும்பிட்டு நிற்குமாலோ?'' என்பது கலிங்கத்துப்பரணி. இதனைப் புறப்பொருள் இலக்கணம் ''அட்டை ஆடுதல்'' என்று கூறும்.

176. சிந்தினஅணி; மணி சிதறி வீழ்ந்தன;
பைந்துணர் மாலையில் பரிந்த மேகலை;

Koviloor Digital Library

நந்தினர் நகையொளி விளக்கம் நங்கைமார்;
சுந்தர வதனமும் மதிக்குத் தோற்றவே. (1873)

(அணி-அணிகலன்கள்; துணர்-பூங்கொத்துக்கள்; பரிந்த-அறுபட்டன; நகை-புன்சிரிப்பு; நந்துதல்-குறைதல்; விளக்கம்-பொலிவு)

மகளிர் அணிந்திருந்த அணிகலன்கள் சிதறி விழுந்தன; அவற்றில் பதிக்கப் பெற்றிருந்த இரத்தினக் கற்களெல்லாம் உருண்டு விழுந்தன; பசுமையான பூங்கொத்துக்களாலான மாலைகள் அறுந்து விழுந்ததைப் போலவே, அவர்கள்இடையில்அணிந்திருந்த மேகலா பரணமும் அறுந்து வீழ்ந்தது. அவர்களது புன் சிரிப்பு தெளிவும் ஒளியும் பொலிவும் குறைந்து தோன்றுவதால், முன்பு சந்திரனைத் தோற்பித்த அவர்களது முகங்கள் இப்போது சந்திரனுக்குத் தோற்றுப் போய் ஒளியிழந்து வாடிக்கிடந்தன.

177. தேவியர் துயரம்

அறுபதினாயிரர், அரசன் தேவியர்,
மறுஅறு கற்பினர், மழைக்கண் நீரினர்,
சிறுவனைத் தொடர்ந்தனர், திறந்த வாயினர்
எறிதிரைக் கடல்என இரங்கி ஏங்கினார். (1874)

(மறு-குற்றம்; எறிதல்-வீசுதல்; ஏங்குதல்-அழுதல் / மனம் வாடுதல்; சிறுவன்-மகன்)

குற்றமற்ற கற்பினை உடையவரான தசரதனது உரிமை மகளிர் அறுபதினாயிரம் பேரும் மழை போன்று கண்ணீர் சொரிந்து கொண்டு, தம் மகன் இராமனைத் தொடர்ந்து போய், அழுகையால் திறந்த வாயை உடையவராய் அலை வீசுகின்ற கடல் ஒலிபோலப் பேரொலி எழுப்பி அரற்றினர்.

கற்பிற்கு மறு என்பது பிறர் நெஞ்சு புகுதல்; கம்பன் தசரதனது மனைவியர் அறுபதினாயிரம் என்று கூறினாலும், வான்மீகி இவர்கள் முந்நூற்று ஐம்பதின்மர் என்றே கூறுகிறார். இவர்கள் தசரதனது உரிமை மகளிர். ஆயினும் பட்டத்தரசியர் மூவரே.

178. கன்னிநல் மயில்களும், குயில் கணங்களும்,
அன்னமும், சிறைஇழந்து அவனி சேர்ந்தன
என்ன, வீழ்ந்து உழந்தனர்; இராமன் அல்லது
மன்னுயிர்ப் புதல்வரை மற்றும் பெற்றிலார். (1875)

(மன்-நிலைபெற்ற; கன்னி-இளமையான; கணம்-கூட்டம்; சிறை-சிறகுகள்; அவனி-பூமி; உழத்தல்-பெரிதும் வருந்துதல் / தடுமாறுதல்)

இராமனைத் தவிர வேறு நிலை பெற்ற உயிர் போன்ற புதல்வர்களைப் பெறாத அந்த அறுபதினாயிரம் தாய்மாரும், இளமையான நல்ல மயில்,

Koviloor Digital Library

குயில் கூட்டங்கள், அன்னப் பறவை ஆகியவை தத்தம் சிறகுகளை இழந்து பூமியில் விழுந்து தவிப்பன போல, இவர்களும் தரையில் விழுந்து நிலைதடுமாறிப் பெரிதும் வருந்தினர்.

மயில் அவர்கள் சாயலுக்கும், குயில் அவர்கள் இன்சொற்களுக்கும், அன்னம் அவர்களின் நடைக்கும் உவமை. பறவைகளுக்குச் சிறகே ஆதாரம். அவையின்றிப் பறவைகள் வாழ்க்கை நடத்துதல் இயலாதது. இங்கே சிறகு இராமன். இராமன் இல்லாமல் அவர்களால் இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள முடியாது. அவர்கள் ஒருவருக்கும் மகப்பேறு இல்லை. எனவே எல்லோரும் இராமனையே தத்தம் புதல்வனாகக் கருதினர். எனவே தான் அவன் இல்லாத வாழ்வை எண்ணித் தரையில் விழுந்து புரண்டு அழுதனர்.

179. கிளையினும் நரம்பினும் நிரம்பும் கேழன,
அளவிறந்து உயிர்க்கவிட்டு அரற்றும் தன்மையால்,
தொளைபடு குழலினோடு யாழ்க்குத் தோற்றன,
இளையவர் அமுதினும் இனிய சொற்களே. (1876)

(உயிர்க்க-பெருமூச்சு விடுதல்; கிளை-மூங்கில் / குழல்; நரம்பு-யாழ்; கேழ்-சுவைச்சிறப்பு)

இளம் பெண்டிரான இவ்வறுபதினாயிரம் பேரின் இனிய சொற்கள் குழலோசையினும், யாழ் ஓசையினும், அமிழ்தினும் நிரம்பிய சுவையுடையனவாக முன்பு இருந்தன. இப்பொழுது அளவற்ற நீண்ட பெருமூச்சு விட்டு அழுது அரற்றுகின்ற தன்மையால், தம் இயல்பான தன்மை கெட்டு, உள்தொளையோடு கூடிய புல்லாங்குழலின் ஓசைக்கும், யாழின் ஓசைக்கும் தோற்றுப்போயின.

180. புகலிடம் கொடு வனம் போலும் என்று, தம்
மகன்வயின் இரங்குறும் மகளிர் வாய்களால்
அகல்மதில் நெடுமனை அரத்த ஆம்பல்கள்,
பகலிடை மலர்ந்தது ஓர்பழனம் போன்றவே. (1877)

(கொடு-கொடிய; வயின்-இடம்; இரங்குறுதல்-அழுதல்; மனை-மாளிகைகள்; அரத்த-சிவந்த; பழனம்-வயல் / கழனி; ஆம்பல்-அல்லி; புகலிடம்-தங்கும் இடம்)

இராமனுக்கு இனிமேல் தங்கும் இடம் கொடிய கானகம் தான் போலும் என்று, தங்களுடைய மகனிடத்து இரக்கம் கொண்டு அறுபதினாயிரம் மகளிரும் தங்கள் வாய்களால் அழுது அரற்றுவது இவ்வகன்ற மதில்களிலும், உயர்ந்த மாளிகைகளிலும் செவ்வல்லி மலர்கள் பகற்காலத்தில் பூத்துக் குலுங்கும் ஒப்பற்ற வயல்கள் போலத் தோற்றமளித்தது.

Koviloor Digital Library

அறுபதினாயிரம், மகளிரும் வாய் திறந்து அரற்றுகின்றனர். அவர்களது சிவந்த வாய் திறந்திருப்பது கவிஞனுக்குச் செவ்வாம்பல் மலர்கள் மாளிகைகளில் மலர்ந்திருப்பது போலவும், ஒவ்வொரு மாளிகையும் ஒவ்வொரு வயல் போலும் காட்சி தருகிறது. அல்லி மலர் பகலில் பூப்பதல்ல, இரவில்தான் மலரும், இவர்கள் அழுதது பகலில். எனவே தான் இங்கு அதை வேறுபடுத்திக் காட்ட அரத்த ஆம்பல்கள் பகலிடை மலர்ந்ததோர் பழனம் போன்றவே என்றான். மகளிரின் திறந்த வாய்களுக்கு மலர்ந்த் செவ்வாம்பல் மலர்கள் உவமை.

181. திடர்உடைக் குங்குமச் சேறும், சாந்தமும்
இடையிடை வண்டலிட்டு ஆரம் ஈர்த்தன;
மிடைமுலைக் குவடு ஒரீஇ, மேகலைத்தடம்
கடலிடைப் புகுந்த, கண்கலுழி ஆறுஅரோ!. (1878)

(கலுழி-கண்ணீர் / கலங்கல்; திடர்-மேடு; ஆரம்-முத்து மாலை; ஈர்த்தல்-இழுத்தல்; மிடை-நெருங்கியுள்ள; குவடு-மலைச் சிகரம்; ஒரீஇ-நீங்கி)

அவ்வறுபதினாயிரம் மகளிரும் கண்கள் கலங்க அழுத கண்ணீர் ஆறானது, நெருங்கிய கொங்கைகளிலிருந்து நீங்கி, அதில் அப்பப்பட்டிருக்கும் மேரு போன்ற குங்குமம், சந்தனம் ஆகிய சேறுகளை இடையிலே வண்டலாக்கிக் கொண்டு, அங்கே அணிந்திருக்கின்ற முத்து மாலையையும் இழுத்துக் கொண்டு, மேகலாபரணம் அணிந்துள்ள கடிதடமான அல்குலாகிய கடலில் சென்று புகுந்து கொண்டன.

இது அவர்கள் அழும் பொழுது அவர்களுடைய கலங்கிய கண்ணீர் எங்கெங்கே போய், எவ்வெவற்றைக் கொண்டு, இறுதியில் எங்கே போய்க் கலந்தன என்பதைக் கூறுகிற பாடல். இது மலையிலிருந்து விழும் அருவி இடையிடையே சில பொருள்களை வண்டலாக ஒதுக்கியும், மலையிலுள்ள முத்துக்களை இழுத்துக் கொண்டும், மலையை விட்டு நீங்கித் தரையில் பாய்ந்து கடலினைச் சென்று சேரும் என்பதற்கு ஒப்பு. குங்குமச் சேறும் சாந்தும் வண்டல்; கொங்கைகள் மலை; மேகலைத் தடம் கடல்; கண்ணீர்-ஆறு. இது ஒரு அழகிய உருவகப் பாடல்.

182. "தண்டலைக் கோசலத் தலைவன் மாதரைக்
கண்டனன் இரவியும், கமலவாள் முகம்;
விண்தலத்து உறையும் நல்வேந்தற்கு ஆயினும்
உண்டு இடர்உற்ற போது என்உறாதன?" (1879)

(தண்டலை-சோலை; வாள்-ஒளிபொருந்திய; இரவி-சூரியன்; தண்டலை, தண் தலை என்று பிரிந்து குளிர்ந்த இடத்தை உடையது என்ற காரணத்தால் தண்டலை சோலைக்குக் காரணப்பெயர்; வேந்தன்-இந்திரன்)

குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த கோசல நாட்டின் சக்கரவர்த்தியாகிய தசரதனின் அறுபதினாயிரம் உரிமை மகளிரது தாமரை மலர் போன்ற ஒளி

Koviloor Digital Library

பொருந்திய முகங்களை யெல்லாம், அவற்றை என்றுமே கண்டிராத சூரியனும் இன்று கண்டுவிட்டான்; சொர்க்க லோகத்தில் வாழும் தேவர்கள் தலைவனான தேவேந்திரனுக்கே துன்பம் என்பது வருவது உண்டு. அது இயற்கை. எல்லோருக்கும் வரும். அப்படித் துன்பங்கள் வரும்போது தாழ்வுகளும் அவமானங்களும் கூட, கூடவே வாராதிருக்குமா?

தசரதனது அறுபதினாயிரம் மனைவியரும் இதுவரை அரண்மனையின் அந்தப் புரத்தை விட்டு வெளியே வந்து அறியாதவர்கள். இன்று இராமன் பொருட்டு வனம் புகுதற்காக வெளியே வந்ததால் அவர்களுடைய தாமரை மலர் போன்ற முகங்களைத் தாமரை என்று கருதிச் சூரியன் கூர்ந்து பார்க்க நேரிட்டது. சூரியனுக்குத் தாமரையை மனைவி முறையில் வழங்குவது கவிமரபு காரணம், சூரியன் தோன்றும் போது தாமரை மலரும், சூரியன் மறையும் போது தாமரை கூம்பிப் போகும். துன்பம் வரும் போது எல்லா இழிவுகளும் எல்லோருக்கும் வருவது இயற்கை. இதற்குத் தேவேந்திரன் கூட விதிவிலக்கல்ல; எனவே தசரதனுக்கும் துயர் வந்தது; அவன் மனைவியர்க்கும் வந்தது என்பதாம். சூரியன் கூர்ந்து பார்த்தது தாழ்வாயிற்று.

183. பெண்கள் நெருங்கி நிறைதல்

தாயரும், கிளைஞரும், சார்ந்து ளார்களும்
சேயரும், அணியரும், சிறந்த மாதரும்,
காய்எரி உற்றனர் அனைய கவ்வையர்
வாயிலும், முன்றிலும் மறைய மொய்த்தனர். (1880)

(கிளைஞர்-உறவினர்கள்; காய்-எரிகின்ற; எரி-நெருப்பு; கவ்வை-துன்பம்; முன்றில்-முற்றம்; மொய்த்தல்-கூடி நெருங்குதல்)

தசரதன் உரிமை மகளிரும் இராமன் தாயருமான இவ்வறுபதினாயிரம் பேரும், அவர்களுடைய சுற்றத்தினரும், அவர்களைச் சார்ந்து பற்றுக் கோடாக வாழ்கின்றவர்களும், தூரத்திலிருந்து வந்தவர்களும், அண்மையிலிருந்து வந்தவர்களும், அன்பிலும் அழகிலும் சிறந்த மற்ற பெண்டிரும், இராமன் பிரிவால் எரிகின்ற நெருப்பில் புகுகின்றவரைப் போன்று துன்பமுற்று இராமனைக் காணும் பொருட்டு மாளிகைகளின் வாயில்களும், முற்றங்களும், மறையும்படி கூடி நெருங்கி மொய்த்துக் கொண்டு நின்றிருந்தனர்.

கவ்வை என்பது அரற்றுதலுக்குக் காரணமாகிற பெருந்துன்பம் என்று பொருள் படும்.

184. இராமன் தன் மனைக்குச் செல்லுதல்

இரைத்தனர், இரைத்து எழுந்து ஏங்கி, எங்கணும்
திரைப்பெருங் கடலெனத் தொடர்ந்து பின்செல,

Koviloor Digital Library

உரைப்பதை உணர்கிலன்; ஒழிப்பது ஓர்கிலன்;
வரைப்புயத்து அண்ணல் தன்மனையை நோக்கினான். (1881)

(இரைத்தல்-ஆரவாரித்தல்; ஏங்கி -அழுதுகொண்டு; ஒழிப்பது-நிறுத்துவது; வரை-மலை; மனை-வீடு; ஓர்தல்-அறிதல் / ஆராய்தல்)

அவ்வாறு வாயிலிலும் முற்றத்திலும் நெருக்கி நின்ற ஏனைய மகளிர் ஆரவாரம் செய்து புலம்பி அழுதனர். எல்லாப் பக்கங்களிலும் அலைகளையுடைய பெரிய கடலைப்போல இராமனைப் பின் தொடர்ந்து சென்றனர். அதனைக் கண்ட மலைகள் போன்ற தோள்களை உடைய இராமன் அவர்களுக்கு ஆறுதலாக என்ன சொல்லலாம் என்பதையும், அவர்கள் தன்னைப் பின் தொடர்ந்து வருவதை எவ்வாறு தடுக்கலாம் என்பதையும் ஆராய்ந்து அறிய இயலாதவனாகித் தடுமாறி ஒன்றும் பேசாது, தனது மாளிகையை நோக்கிச் செல்லலானான்.

தாய்மார்கள் அறுபதினாயிரவவரைப் பற்றி முதலில் கூறும் போது ''எறிதிரைக் கடலென'' என்ற கவிஞன், இப்போது பிற மகளிர் கூட்டமும் சேர்ந்து, மிகுதியான திரள் ஆகியதால், மறவாமல், ''திரைப் பெரும் கடல்'' என்று கூறியது உணர்ந்து இன்புறத்தக்கது.

185. நல்நெடும் நளிர்முடி சூட, நல்மணி
பொன்நெடும் தேரோடும் பவனி போனவன்
துன்நெடும் சீரையும் சுற்றி, மீண்டும் அப்
பொன்நெடும் தெருவிடைப் போதல் மேயினான். (1882)

(நளிர்-பெரிய / பெருமைதங்கிய; பவனி-உலா; துன்-தைக்கப்பட்ட; பொன்-அழகிய)

முன்பு, நல்ல பெரிய பெருமை பொருந்திய மணிமகுடம் சூட்டிக் கொள்வதற்காக, நல்ல இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற அழகிய பெரிய தேரிலே உலாப் போன இராமன், இப்பொழுது, தைக்கப்பட்ட மரவுரியை இடையில் சுற்றிக் கொண்டு, திரும்பவும் அதே அழகிய பெரிய அரச வீதியில் நடந்து போகலானான்.

''அப்போது பொன்னாடையும் அணிகலன்களும் அணிந்து தேரில் கண்டோர் மனம் களிக்கச் சென்றவன், இப்போது அரையிற் சுற்றிய மரவுரியோடும், அணிகலன்கள் ஏதும் அணியாதும் கண்டோர் துயருறும் வண்ணம் செல்கின்றானே! இது என்ன துன்பம்?'' என்று கவிஞர் இரங்கிக் கூறுகிறார் என்பதாம். இரண்டு நிலைகளையும் பொருத்திக் காட்டிக் கவிஞன் கற்போரிடம் அவலச்சுவையை அதிகமாக்குதல் நோக்கத் தக்கது.

186. பொது மக்கள் சொல்லும் செயலும்

''அஞ்சனமேனி இவ் வழகற்கு எய்திய
வஞ்சனை கண்டபின், வகிர்ந்து நீங்கலா

Koviloor Digital Library

நெஞ்சினும், வலிதுஉயிர்; நினைப்பது என்சில?
நஞ்சினும் வலிது நம்நலம்'' என்றார் சிலர். (1883)

(அஞ்சனம்-மை; வகிர்தல்-பிளத்தல்; நலம்-நன்மை; வஞ்சனை-தீங்கு; எய்திய-நேர்ந்த)

''மை போன்ற கரிய மேனியை உடைய இந்த அழகனான இராமனுக்கு நேர்ந்த வஞ்சனையாலாகிய தீங்கினைக் கண்ட பின்பும் நம் நெஞ்சு பிளந்து உயிர் போகவில்லை; நெஞ்சைக் காட்டிலும் உயிரை வலியதாகக் கருதி விட்டோம் போலும்? எல்லாவற்றையும் நினைத்து என்ன பயன்? நமக்குக் கிடைத்திருக்கின்ற இந்நன்மைகள் எல்லாம் நஞ்சினை விடக் கொடியன'' என்று சிலர் கூறுவர்.

முதலில் நாட்டைத் தந்து முடி சூடுவேன் என்ற பிறகு காட்டைத் தந்து மரவுரியையும் கொடுத்த செய்கையை வஞ்சனை என்றார். இதனைக் கண்ட பின்னாவது நம்முடைய இதயம் பிளந்து, உயிர் போயிருக்க வேண்டும். இரண்டும் இல்லாது வறிதே எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? தம்மனமும், உடம்பும், உயிரும் மிக வலியன என்று தம்மைத் தாமே நொந்து கொள்ளுகின்றனர்.

187. ''மண்கொடு வரும் என வழி இருந்தது யாம்,
எண்கொடு சுடர்வனத்து எய்தல் காணவோ?
பெண்கொடு வினை செயப்பெற்ற நாட்டினில்
கண்கொடு பிறத்தலும் கடை'' என்றார் சிலர். (1884)

(மண்-முடி; எண்-எண்ணங்கள்; சுடர்-வெயிலொளி; கடை-இழிவு)

''இவ்வுலக அரசுரிமையை ஏற்று மணி மகுடம் தரித்து வருவான் என எதிர்பார்த்துக் காத்திருந்த நம்முடைய எண்ணங்களை யெல்லாம் அழித்து விட்டு, அவன் வெயிலொளி வீசுகின்ற கானகத்தை அடைவதைக் காணுவதற்கோ இதுகாறும் காத்திருந்தோம்? ஒரு பெண் செய்த கொடிய வஞ்சனைச் செயலை உடைய இந்த நாட்டினில், இவற்றையெல்லாம் கண்டு கொண்டு இருக்கக் கண்களைப் பெற்றிருத்தலும் மிக இழிவாகும்'' என்பர் சிலர்.

நகரத்தெருக்கள் எங்கும் மக்கள் இராமன் முடிசூடி உலாவரும் அழகைக் காணக் காத்திருந்தனர். முடிவில் இராமன் மரவுரி தரித்து வெயில் வீசும் கானகம் செல்லும் காட்சியைத் தான் காண முடிந்தது. இது எதனால் ஆயிற்று? கணவன் வழி ஒழுகும் மனைவியன்றித் தன் வழியே கணவனை இழுத்துத் தீவினை புரிந்த கைகேயியின் செயலால் ஆகும். அத்தகையவள் வாழும் இந்நாட்டில், இத்தகைய அவலக் காட்சிகளைக் கண்டு கொண்டு இருப்பதற்கு இந்த இரண்டு கண்களையும் கொண்டு பிறந்திருக்கவே கூடாது. குருடர்களாகவே பிறந்திருக்க வேண்டும். ஏனெனில் அப்பொழுதாவது இத்தகைய கொடிய வஞ்சனைச் செயல்களைப் பார்த்துக் கொண்டு இருக்காமல் இருக்கலாமல்லவா? என்று கூறுவர் சிலர். சுடர் வனம் என்றது சூரியன் ஆட்சி செய்யும் காடு என்பதாம்.

Koviloor Digital Library

188. ''முழுவதே பிறந்து உலகுடைய மொய்ம்பினோன்,
''உழுவைசேர் கானகத்து உறைவென் யான்'' என,
எழுவதே? எழுதல் கண்டு இருப்பதே? இருந்து
அழுவதே? அழகிது இவ்வன்பு!'' என்றார் சிலர். (1885)

(மொய்ம்பு-வலிமை; உழுவை-புலி)

''தசரதனுக்கு மூத்தமைந்தனாகப் பிறந்ததனாலும், பரசுராமனைச் செருக்கழித்து வென்றதனாலும் இவ்வுலக அரசுரிமை முழுவதையும் தனக்கே உரிய வலிமையுடையவனான இராமன், ''நான் புலிகள் வாழும் காட்டில் சென்று தங்குவேன்'' என்று கூறிப் புறப்படுவதா? அதைக் கண்டும் நாம் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதா? பின்பும் அழுது அரற்றுவதா? என்ன இது? நாம் அவன்பால் கொண்டிருக்கின்ற அன்பு மிக்க அழகாக இருக்கிறது'' என்று தம்மைத் தாமே வெறுத்துக் கூறுவர் சிலர்.

இங்கே ''மொய்ம்பினோன்'' என்று கூறியதற்குப் பரசுராமன் தருக்கை அழித்த வலிமை என்று கொள்ள வேண்டும். தசரதன் மூத்த மகனாகப் பிறந்து அரசுரிமை ஏற்பது அவனது பிறப்புரிமை என்றால், பரசுராமன் செருக்கழித்து அவன் பெற்ற எல்லா உலக அரசுரிமையையும் தான் பெறுவது சிறப்புரிமை என்பதாம். இவ்வாறு அவன் புகுதலைக் கண்டு கொண்டு இன்னும் உயிர்வாழ்ந்து கொண்டிருத்தல் நாம் அவனிடம் சிறந்த அன்பு கொண்டிருப்பதாகப் பொருளாகாது என்பது கருத்து. எழுவதே? எழுதல் கண்டு இருப்பதே? இருந்து அழுவதே? என்று இவ்வாறு ஒரு சொல்லை இன்னொரு சொல் பற்றித் தொடர்ந்து வந்துள்ள அழகு சுவைக்கத்தக்கது. இது ஒற்றைச் சரமாலை அணி எனப்படும். இதனை ''ஏகாவளி'' என்பர் வடநூலார்.

189. அரசர்களை நோக்கிக் கூறுதல்

வலம்கடிந்து ஏழையர் ஆய மன்னரை,
''நலம் கடிந்து அறம்கெட நயக்கலீர்கள்; நும்
குலம்கடிந்தான் வலி கொண்ட கொண்டலை
நிலம் கடிந்தாளோடு நிகர்'' என்றார் சிலர். (1886)

(கடிந்து-நீங்கி; ஏழையர்-எளியர்; நயத்தல்-விரும்புதல்; கடிதல்-அழித்தல் / நீக்குதல்; கொண்டல்-மேகவண்ணன்)

தம்முடைய வலிமையெல்லாம் நீங்கி அறிவற்ற எளியவராய்த் தோன்றும் அரசர்களை நோக்கி, ''உலக நன்மையை யெல்லாம் நீக்கி, தருமம் கெட்டுப் போகும்படி செய்ய விரும்பாதீர்கள்; அவ்வாறு செய்தால் உங்களுடைய அரசபரம்பரையை இருபத்தொரு தலைமுறை அழித்தவனாகிய பரசுராமனின் தவவலிமையையும் செருக்கையும்

Koviloor Digital Library

வெற்றி கொண்ட கார்மேக வண்ணனாகிய இராமபிரானை நாட்டை விட்டு நீக்கிய கைகேயியோடு நீங்களும் சமமாவீர்கள்'' என்று ஏசினர் சிலர்.

இராமன் நாடு கடந்து காடேகும் நிகழ்ச்சியை வறிதே பார்த்துக் கொண்டிருந்த அரசர்களை நோக்கிப் பொதுமக்கள் ஏசுவதாகக் கூறுவது இப்பாடல். உங்கள் குலத்தையே இருபத்தொரு தலைமுறை அழித்தவனான பரசுராமனை அழித்து உங்களுக்கு அரசாட்சியை மீட்டுத் தந்த இராமபிரானுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு இது தானோ? உங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லையே? அவனைக் காடேகாமல் தடுத்து நிறுத்த முடியவில்லையே? உங்களுக்கும் கைகேயிக்கும் என்ன வேறுபாடு? என்று ஏசினர், என்பதாம்.

190. ''திருஅரை சுற்றிய சீரை ஆடையன்,
பொருவு அருந்துயரினன், தொடர்ந்து போகின்றான்,
இருவரைப் பயந்தவள் ஈன்றகான் முளை
ஒருவனோ இவற்கு இவ்வூர் உறவு?'' என்றார் சிலர். (1887)

(திரு-அழகிய; அரை-இடுப்பு; சீரை-மரவுரி; பொருவு-ஒப்பு; கான்முளை-மூத்த புதல்வன்)

''அழகிய இடுப்பில் மரவுரி தரித்திருப்பவனும், அளவற்ற துன்பங்கொண்டவனும், இராமனைப் பின் தொடர்ந்து செல்லுபவனும், இலக்குவன், சத்துருக்கனன் என்ற இரு புதல்வர்களைப் பெற்றெடுத்த சுமித்திரையின் மூத்த புதல்வனான இலக்குவன் ஒருவன் மட்டும் தானா இராமபிரானுக்கு இவ்வூரில் உள்ள உறவு'' என்று தம்மையே நொந்து கொண்டனர் சிலர்.

நாடு விட்டுக் காடேகும் இராமன், அவ்வாறு செய்யக் கூடாது என்று எல்லோரும் விரும்பினார்கள், ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டார்களே தவிர, ஒருவராவது அவன் கூடச் செல்லவில்லை. இலக்குவன் ஒருவன் மட்டுமே இராமனைப் போலவே மரவுரியும் தரித்து அவன் பின்னே தொடர்ந்து செல்லுகிறான். இதனைக் கண்ட மக்களில் சிலர், இந்த ஊரில் இலக்குவன் மட்டும் தானா இராமனுக்கு உறவுடையவன்? வேறு யாருமே இல்லையா? என்று தங்களைத் தாங்களே வெறுத்துப் பேசிய பேச்சு இது.

191. ''முழுக்கலின் வலிய நம் மூரி நெஞ்சினை
மழுக்களில் பிளத்தும்'' என்று ஓடுவார், வழி
ஒழுக்கிய கண்ணின்நீர் கலுழி ஊற்றிடை
இழுக்கலில் வழுக்கி வீழ்ந்து இடர் உற்றார் சிலர். (1888)

(முழுக்கல்-பெரிய கல் / பெரும்பாறை; மூரி-கடுமையான; கலுழி-கண்ணீர்; இழுக்கல்-சேறு; மழு-கோடரி; ஊற்று-நீர்ப் பெருக்கு)

பெரிய பாறையை விடக் கடுமையான நம் நெஞ்சங்களைக் கோடரியாலாவது பிளந்து கொள்வோம் என்று கருதிச் சிலர் கோடரியைத்

Koviloor Digital Library

தேடி ஓடுவார்கள். அவ்வாறு செல்லுகின்றவர்கள் தாங்கள் பெருக்கிய கண்ணீரின் நீர்ப் பெருக்குச் சேற்றில் வழுக்கி விழுந்து துன்பம் அடைவார்கள்.

இவ்வளவையும் கண்டு தானாகப் பிளந்து போகாத நெஞ்சைக் கோடாரியாலாவது இரு கூறாக்கிப் பிளப்போம் என்று கருதி ஓடுவர் சிலர். அவர்கள் தாம் பெருக்கிய கண்ணீர்ச் சேற்றிலேயே வழுக்கி விழுந்து அல்லலுறுவர் என்பது கருத்து. அவர்களது ஆற்றாமையும், வருத்தமும், ஒருங்கே கூறப்பட்டன. கண்ணீர் இடையறாது தொடர்ந்து பெருகுதலின் ஊற்று என்றார்.

192. பொன் அணி, மணி அணி மெய்யில் போக்கினர்;
மின்என மீன்என விளங்கும் மெய்விலைப்
பல் நிறத் துகிலினைப் பறித்து நீக்கினர்
சின்ன நுண் துகிலினைப் புனைகின்றார் சிலர்; (1889)

(மெய்-உடம்பு; துகில்-பட்டாடைகள்/நூலாடைகள்; பறித்தல்-இழுத்தல்)

சில மகளிர், தாம் அணிந்திருந்த பொன்னாலாகிய அணிகலன் களையும், இரத்தினாபரணங்களையும் தம் உடலிலிருந்து கழற்றி வீசினர். மின்னலைப்போலவும், விண்மீனைப் போலவும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தம் மேனியிலிருந்து, விலைமதிப்பற்ற பல வண்ணமுடைய பட்டாடைகளை இழுத்து எறிந்து விட்டுச் சிறிய நுண்ணிய நூலாடைகளை அணிந்துகொண்டனர்.

இராமன் முடி புனை விழாக் காணத் தம்மை நல்ல விலையுயர்ந்த பட்டாடைகளாலும், அணிகலன்களாலும் அலங்கரித்துக் கொண்டு வந்த மகளிர், இராமன் முடிசூடாது காடேகுகிறான் என்பதைக் கண்டவுடன் அவற்றையெல்லாம் தம் உடம்பிலிருந்து நீக்கிச் சாதாரண ஆடைகளை அணிந்து கொண்டனர் என்பதாம். இராமன் வருத்தத்தில் தாமும் பங்கு கொள்ள விழைந்தனர் என்பது கருத்து. அணிகலன்களை முழுதும் கழற்றி எறிந்தவர்கள், ஆடைகளை மட்டும் அணிந்து கொண்டனர் என்பது மானம் காத்துக் கொள்வதற்காக என்க. போக்கி, பறித்து, நீக்கி என்ற சொற்கள் அவர்கள் வெறுப்பு மிகுதியை உணர்த்தியதாயிற்றது.

193. ''நிறைமக உடையவர், நெறிசெல் ஐம்பொறி
குறைமக குறையினும் கொடுப்பராம் உயிர்;
முறை மகன் வனம் புக, மொழியைக் காக்கின்ற
இறைமகன் திருமனம் இரும்பு'' என்றார் சிலர். (1890)

(குறைமகவு-குறைபாடுடைய மகன்; குறைதல்-இறத்தல்; மொழி-வாய்மை; இறை-தலைவன்)

Koviloor Digital Library

''பல மக்களைப் பெற்றெடுத்தவரும் கூட, தம் மக்களுக்கு மனம்போன வழியில் செல்லும் ஐம்பொறிகளில் ஏதேனும் ஒன்று குறைவானாலும் அதனால் அம்மகவு இறக்க நேரிட்டாலும், தாமும் தம் உயிரைக் கொடுக்க விழைவர். ஆயினும், எல்லாவகையிலும் முறையான மூத்த மகன் காட்டிற்குச் செல்லவும், தான் சொன்ன வாய்மையுரையே மிக்கக் காப்பாற்றப்பட வேண்டியது என்று கருதுகின்ற நம்முடைய அரசரான தசரதனது அழகிய மனம் இரும்பாலானதுதான்'' என்று சிலர் கூறுவர்.

ஐம்பொறிகளில் ஏதேனும் ஒரு பொறி குறைந்து, ஊமையாகவோ, செவிடாகவோ, குருடாகவோ, முடமாகவே, ஊனமுற்றுப் பிறந்து விட்டாலும், அவர்களுக்கு வேறு பல மக்கள் இருந்த போதிலும், இந்தக் குழந்தை இறக்க நேரிடுமானால் தன் உயிரையும் கொடுத்து அக்குழந்தையைக் காப்பாற்ற விழைவர். இதுதான் உலக இயற்கை. ஆனால் நம்முடைய அழகிய மனம் கொண்ட தசரதனோ, பிள்ளை எப்படிப் போனாலும் போகட்டும், நான் கொடுத்த சத்தியம் தான் எனக்குப் பெரிது என்று எண்ணுவதனால் அவன் மனம் இரும்பாகத்தான் இருக்கவேண்டும். ஈரமற்ற நெஞ்சினன் என்று இகழ்வர் சிலர். திருமனம் என்றது இகழ்ச்சிக் குறிப்பு.

194. வாங்கிய மருங்குலை வருத்தும் கொங்கையர்
பூங்கொடி ஒதுங்குவ போல் ஒதுங்கினர்;
ஏங்கிய குரலினர், இணைந்த காந்தளில்
தாங்கிய செங்கை தம்தலையின் மேல்உளார். (1891)

(வாங்கிய-வளைந்த; மருங்குல்-இடை; ஒதுங்குதல்-நடந்து செல்லுதல்)

உள்வாங்கி மெலிந்து வளைந்த இடையைத் தன் பாரத்தால் வருத்துகின்ற கொங்கைகளையுடைய மகளிர், ஏங்கி அழுது கொண்டு, தம்முடைய இரண்டு சிவந்த கைகளையும் செங்காந்தள் மலர் போல் இணைத்துக் கை குவித்துத் தலைமேல் தாங்கியவராய்ப் பூங்கொடிகள் அசைந்து செல்வது போல ஒருபுறமாக ஒதுங்கி நடந்து சென்றனர்.

தங்கள் சிவந்த கைகளைத் தலையின் மீது குவித்துத் தம் குல தெய்வங்களை எண்ணி அழுது வணங்கினர். இந்தக் கோலத்தைப் பார்த்தாவது இராமன் நாடு திரும்ப உடன்படமாட்டானா என்பது அவர்கள் எண்ணம். காந்தள் மலர் பெண்களின் சிவந்த இணைந்த கைகளுக்கு உவமை.

195. ''வானமே அனையதோர் கருணை மாண்பு அலால்
ஊனம் வேறிலானுடன் உலகம் யாவையும்
கானமே புகும்எனில், காதல் மைந்தனும்
தானுமே ஆளும்கொல் தரை!'' என்றார் சிலர். (1892)

Koviloor Digital Library

(வானம்-மேகம்; தரை-பூமி / வெறும் தரை)

- ''மேகம் போன்று வாரி வழங்கும் கருணை என்ற மாட்சிமைப் பண்பைத் தவிர, வேறு குறைபாடு ஏதும் இல்லாதவனாகிய இராமபிரானுடன் உலகத்து மக்கள் எல்லோரும் கானகம் சென்று விட்டால், இந்தக் கைகேயி அவளுடைய அன்புக்குரிய புதல்வனாகிய பரதனோடு மட்டும் இருந்து கொண்டு இவ்வெறுந்தரையை ஆட்சி செய்வாளோ?'' என்று இகழ்ந்தனர் சிலர்.

196. தலைக்குவட்டு அயல் மதிதவழும் மாளிகை
நிலைக்குவட்டு இடை இடைநின்ற மங்கைமார்
முலைக்குவட்டு இழிகண் நீர் ஆலி மொய்த்துஉக
மலைக்குவட்டு அகவுறும் மயிலின், மாழ்கினார். (1893)

(முகடு-உச்சி / சிகரம்; மதி-சந்திரன்; இழி-இறங்குகின்ற; ஆலி-துளி; உக-சிதற; மாழ்குதல்-அழுது மனம் வருந்துதல்; நிலைக்குவடு-மேல் நிலை / உப்பரிகை; மொய்த்து-திரண்டு; அகவுதல்-கூவுதல்)

உச்சியின் அருகில் சந்திரனே வந்து தவழுகின்ற அளவு உயர்ந்த மாளிகைகளின் உப்பரிகை தோறும் நின்ற மகளிர், தங்கள் கண்களிலிருந்து புறப்பட்டுக் கொங்கைகளிலிருந்து வழிகின்ற கண்ணீர்த் துளிகள் திரண்டு தரையில் சிந்துமாறு, மலையுச்சியில் கூவித் திரிகின்ற மயிலைப் போலத் துன்பத்தால் வருந்தி அழுதனர்.

மலை உச்சியிலிருந்து வருந்திக் கூவுகிற மயில்களுக்கு, இராமன் காடேகுவதைப் பார்த்து வருந்தி அழுகின்ற மகளிர் உவமை; சந்திரன் தவழ்கின்ற மாளிகை உச்சி என்பதனால் அதன் உயர்ச்சி பெறப்பட்டது.

197. மஞ்சு எனஅகில்புகை வழங்கும் மாளிகை
எஞ்சல்இல் சாளரத்து இரங்கும் இன்சொலார்,
அஞ்சனக் கண்ணின் நீர்அருவி சோர்தரப்
பஞ்சரத்து இருந்து அழும்கிளியின், பன்னினார். (1894)

(மஞ்சு-மேகம்; வழங்கும்-வெளிவிடுகின்ற; எஞ்சல்இல்-குறைவில்லாத; சாளரம்-சன்னல் / பலகணி; அஞ்சனம்-மை; பஞ்சரம்-கூடு; பன்னுதல்-பலவும் பலமுறை சொல்லுதல்)

மேகம் போல அகிற்புகை வெளிவிட்டுக் கொண்டிருக்கும் மாளிகைகளின் சன்னல்களின் அருகிலிருந்து இராமன் காடேகுவதைக் கண்டு வருந்தும் இனிய சொல்லை உடைய மகளிர், தங்களது மை தீட்டப்பட்ட கண்களிலிருந்து சொரியும் கண்ணீர் அருவியாக, கூட்டிலிருந்து கொண்டு அழுகின்ற கிளியைப் போலச் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிப் புலம்பினர்.

மகளிர் தம் கூந்தலும், துகிலும் உலர்வதற்காக அகிற்புகை ஊட்டுதல் வழக்கம். அது மேகம் போலத் திரண்டு மாளிகை எங்கும்

நிறைந்திருந்ததாம். அந்த மாளிகையின் சன்னல் கம்பிகளுக்கிடையே தலைகாட்டி இரங்கி நிற்கும் இன்சொல் வாய்க்கப் பெற்ற பெண்கள், கூண்டுக்குள் அடைபட்டிருக்கும் கிளியைப் போலச் சொன்னதையே சொல்லிச் சொல்லி அழுதனராம். சாளரம் பஞ்சரத்திற்கும், கிளி பெண்களுக்கும் உவமை.

198. நல்நெடுங் கண்களின் நான்ற நீர்த்துளி
தன்நெடுந் தாரைகள் தளத்தின் வீழ்தலால்,
மன்நெடும் குமரன்மாட்டு அழுங்கி, மாடமும்
பொன் நெடுங்கண் குழித்து, அழுவ போன்றவே. (1895)

(நான்ற-வழிந்த; தளம்-தரை / மேல்தளம்; அழுங்கி-வருந்தி; பொன்-அழகிய)

இராமன் காடேகுவதைக் கண்டு வருந்திய பெண்டிரின் நல்ல நீண்ட கண்களில் இருந்து வழிந்த கண்ணீரின் நீர்த்துளி வெள்ளப் பெருக்குப் போல் தரையில் விழுவது, அரசனும், இளங்குமரனுமாகிய இராமனிடத்தில் உண்டான இரக்கத்தால் வருந்தி, மாளிகைகளும் கூடத் தங்கள் அழகிய நீண்ட கண்களைக் குழித்துக் கொண்டு அழுவது போன்றிருந்தது.

மாளிகையின் உப்பரிகையிலிருந்து மகளிர் பெருக்கிய கண்ணீர் தரையில் பெருகி விழுவது, அம்மாளிகைகளே இராமனது நிலைக்கு வருந்தி அழுவது போன்றிருக்கிறது என்கிறான். ஜடப்பொருளாகிய மாளிகையும் அழுதது என்பது தற்குறிப்பேற்றம். மகளிர் அழுத கண்ணீர் தரைகுழிபட விழுந்தது என்பதும் பெறப்படும்.

199. மக்களை மறந்தனர் மாதர், தாயரைப்
புக்கிடம் அறிந்திலர் புதல்வர்; பூசலிட்டு
உக்கனர் உயங்கினர்; உருகிச் சோர்ந்தனர்;
துக்கம் நின்று அறிவினைச் சூறை ஆடவே. (1896)

(சூறை ஆடுதல்-கொள்ளை கொள்ளல்; பூசல்-ஆரவாரம்; உயங்குதல்-வருந்துதல் / வாடுதல்; நின்று-நிலை பெற்று)

இராமனது பிரிவின் துக்கம், நீங்காமல் நிலைத்து நின்று மக்களின் அறிவைக் கொள்ளை கொண்டு விட்டதனால் அவர்கள் புத்தி பேதலித்தனர்; பெண்கள் தங்கள் புதல்வர்களை மறந்தனர். பிள்ளைகள் தங்கள்தாயர்சென்று சேர்ந்த இடம் தெரியாது கலங்கினர். ஆரவாரமிட்டுக் கண்ணீர் சிந்தினர். வாடி வருத்த முற்றுச் சோர்வடைந்தனர்.

தாயை மகவு மறத்தலும், மகவைத் தாய் மறத்தலும் என்றும் நிகழ இயலாதன; இங்கே அவ்வாறு நிகழ்தற்குக் காரணம் துக்கம் அறிவை மயங்கச் செய்ததே என்பதாம். வெளியே வந்த மகளிர், இந்தச் சோகத்தால் அங்கங்கே நின்று விட்டனர். அதனால் மக்களை மறந்தனர் என்பதாம்.

Koviloor Digital Library

ஆனால் பிள்ளைகள் தாயரைத் தேடும் இயல்புடையன. இங்கே அவர்கள் எவ்வளவு தேடியும் தாயர் இருக்கும் இடம் அறியமுடியாமல் வாடி வருந்தி அழுது கண்ணீர் சிந்தி சோர்வுற்றனர் என்பதாம்.

200. காமரம் கனிந்தெனக் கனிந்த மென்மொழி
மா மடந்தையரெலாம் மறுகு சேர்தலால்,
தேம்அரு நறுங்குழல் திருவின் நீங்கிய
தாமரை ஒத்தன தவள மாடமே. (1897)

(காமரம்-சீகாமரம் என்பது ஓர் பண்ணிசை; மறுகு -தெரு; தவளம்-வெண்மையான; மாடம்-மாளிகைகள்; தேம்மரு-இனிமை அமைந்த; கனிதல்-சுவை முதிர்தல்; மா-திருமகள்; தேம்-தேன் / இனிமை)

சீகாமரம் என்னும் ஒரு பண் இசையே முத்தாகி உதிர்ந்தது போன்ற மெல்லிய சொற்களை உடைய இலக்குமி போன்ற பெண்களெல்லாம், இராமனைக் காணும் பொருட்டுத் தங்கள் மாளிகையை விடுத்துத் தெருவிற்கு வந்து சேர்ந்ததனால் இனிமையமைந்த நறுமணம் மிக்கக் கூந்தலையுடைய திருமகளை விட்டுப் பிரிந்த தாமரை மலர் போல், அவர்களிருந்த வெண்மையான மாளிகைகள் எல்லாம் பொலிவிழந்து போயின.

தாமரை மலர்-தவளமாடம்; திருமகள்-மடந்தையர்; ''மனைக்கு விளக்கம் மடவார்'' என்பது நான்மணி; பொதுவாகவே பெண்களை ''கிரகலக்ஷமி'' என்று கூறுவதும் நோக்கத்தக்கது. மகளிர் வெளிச் சென்றதால் வெறுமை அடைந்த மாளிகையைத் திருமகள் நீங்கிய தாமரைக்கு உவமித்தார்.

201. மழைக்குலம் புரைகுழல் விரிந்து மண்உற,
குழைக்குல முகத்தியர் குழாம் கொண்டு ஏகினர்
இழைக்குலம் சிதறிட, ஏஉண்டு ஒய்வுறும்
உழைக்குலம் உழைப்பன ஒத்து, ஓர்பால் எலாம். (1898)

(குழை-குண்டலம் / காதணி; மழை-மேகம்; புரை-போல; குழல்-கூந்தல்; இழை-அணிகலன்கள்; ஏ-அம்பு; உண்டு-தாக்கப்பட்டு; உழை-மான்; உழைப்பன-வருந்துவன; ஓர்பால்-ஒருபகுதி; குலம்-கூட்டம் / சிறப்பு / வகை; ஒய்தல்-முன்னுள்ள வலிமை குன்றுதல்)

காதணி வகைகளை அணிந்துள்ள முகத்தை உடைய பெண்கள் மேகக்கூட்டம் போன்ற தங்கள் கூந்தல் அவிழ்ந்து தரையில் விழவும், அவர்கள் அணிந்திருந்த அணிகலன்கள் தரையில் விழுந்து சிதறிவிடவும், அதைப் பொருட்படுத்தாமல், அம்பினால் தாக்கப்பட்டு வலிமை குன்றிச் சோர்ந்துள்ள மானின் கூட்டம் வருந்துவது போல, வருத்தமுற்று ஒரு புறமாகக் கூட்டம் கூட்டமாகச் சென்றனர்.

Koviloor Digital Library

''ஒய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய், ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்'' என்பது தொல்காப்பியம். மான்போன்ற மகளிர் இராமன் பிரிவு கண்டு வருந்துதலுக்கு, மான் கூட்டமே அம்பால் தாக்குண்டு சோர்வடைவதை உவமை கூறினார். அவ்வாறு அம்பால் தாக்குண்ட மான்கள் ஓர் இடத்திலே கூடிவருந்துவது போல இவர்களும் கூட்டம் கூட்டமாய்க் கூடியிருந்தனர் என்பதும் ஒரு நயம்.

202. நகரின் பொலிவு அழிதல் [15 பாடல்கள்]

கொடி அடங்கின மனைக்குன்றம்; கோமுரசு
இடிஅடங்கின; முழக்கு இழந்த பல்லியம்;
படிஅடங்கலும் நிமிர் பசுங்கண் மாரியால்,
பொடிஅடங்கின மதில்புறத்து வீதியே. (1899)

(மனை-மாளிகை; பல்லியம்-வாத்தியங்கள்; நிமிர்தல்-பெருகுதல்; படி-பூமி / நிலம்; அடங்கலும்-முழுவதும்; கண்மாரி-கண்ணீர் மழை; பொடி-புழுதிகள்)

மலை போல் உயர்ந்த மாளிகைகளில் எப்பொழுதும் பறக்கின்ற கொடிகள் பறக்காமல் அடங்கிவிட்டன; சிறந்ததுவும், அரசர்க்குரியனவுமான முரசங்கள் தங்கள் இடி போன்ற ஒலியை அடக்கிக் கொண்டன; எப்பொழுதும் இசைத்துக் கொண்டிருக்கும் வாத்தியங்கள் தங்கள் முழக்கங்கள் இன்றி அடங்கிக் கிடந்தன; பூமி முழுவதும் பெருகுகிற பசிய கண்களின் கண்ணீர் வெள்ளத்தால், மதிற்புறத்துக்கு அப்பாலுள்ள வீதிகளில் இருக்கும் துகள்கள் கூட அடங்கிப் போயின.

கொடிகள், முரசங்கள், பல்வகை வாத்தியங்கள் இவையெல்லாம் மகிழ்ச்சிக்குரிய அடையாளங்கள். இவைகள் அயோத்தியில் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கும். இராமன் பிரிவால், மாளிகைகளில் கொடிகள் பறக்கவில்லை; முரசங்கள் ஒலிக்கவில்லை; பல்வகை வாத்தியங்கள் இசைக்கப்படவில்லை. இப்பொழுது மகிழ்ச்சியான முடிசூட்டும் விழா நிகழாமையால் இந்நிகழ்ச்சிகளும் நிகழாது ஒழிந்தன என்பதாம். புழுதிகள் கூடப் பறக்கவில்லை என்றது ஒரு நயம்.

203. அட்டிலும் இழந்தன புகை; அகிற்புகை
நெட்டிலும் இழந்தன; நிறைந்தபால் கிளி
வட்டிலும் இழந்தன; மகளிர் கால்மணித்
தொட்டிலும் இழந்தன மகவும் சோரவே. (1900)

(அட்டில்-மடைப்பள்ளி / சமையற்கூடம்; நெட்டில்-நெடு + இல்-மேல் மாடங்கள்; வட்டில்-கிண்ணம் / தட்டு / உண்கலம்)

மகளிரெல்லாம் இவ்வாறு சோர்வுற்றுக் கிடந்ததால் அவர்கள் ஆற்றும் நிகழ்ச்சிகள் நிகழாது போயின. சமையற்கட்டில் சமையல் செய்யாததால்

Koviloor Digital Library

அவை புகை வெளியிடவில்லை; கூந்தலுக்கும் துகிலுக்கும் அகிற்புகை காட்டாததால் மேன்மை பொருந்திய மாடங்கள் அந்தப் புகையையும் இழந்தன. கிளிகளை வளர்க்கும் பெண்கள் சோர்வுற்றுக் கிடப்பதால் கிளிகளுக்கும் நிறைந்த பால் நிரம்பிய வட்டில் உண்கலங்களும்-கிடைக்கவில்லை. மணிகள்பதிக்கப்பெற்றகால்களைஉடையகட்டில்கள் குழந்தைகள் இல்லாமல் கிடந்தன.

சமையற்கட்டில் புகை இல்லை என்பதனால் பிறர்க்கு-விருந்தினர்க்கு உணவு படைக்கும் அறத்தொழில் நின்று போயிற்று; அகிற்புகை இல்லை என்பதனால் அவர்கள் இன்பத் தொழில் நடைபெற வில்லை என்பது ஆயிற்று; கிளிப்பிள்ளைகளுக்குப் பால் கிடைக்கவில்லை என்பதாலும், தங்கள் பிள்ளைகள் தொட்டிலில் துயில வில்லை என்பதாலும் பொருள் திறம் மறந்து போயிற்று என்பதனால் அயோத்தி நகர மக்கள் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பேறுகளையும் இழந்து வருந்தி இருந்தனர் என்பது பெறலாயிற்று.

204. ஒளி துறந்தன முகம் உயிர் துறந்தென;
துளி துறந்தன முகில் தொகையும்; தூயவாம்
தளி துறந்தன பலி; தான யானையும்,
களி துறந்தன; மலர்க்கள் உண் வண்டினே. (1901)

(முகில்-மேகம்; பலி-பூசை; தளி-கோயில்; கள்-தேன்; தானம்-மதம்)

நகரிலுள்ள மக்களின் முகங்கள் எல்லாம் உயிரைத் துறந்தது போல ஒளியைத் துறந்தன; மேகக் கூட்டங்களெல்லாம் மழைத்துளிகளைத் துறந்தன. தூய்மையான கோயில்கள் எல்லாம் பூசைகளை இழந்தன; மலரிலுள்ள தேனைப் பருகிக் களிக்கும் வண்டுகள் போல, மதயானைகளும் கவளம் கிடைக்காமையால் மகிழ்ச்சியை இழந்தன.

மேகக்கூட்டங்கள் மழைத்துளி இல்லாது போயிற்று என்பது மன்னன் தவறிழைத்து விட்டான் என்னும் குறிப்பை உடையது. ''கோன் நிலைதிரிந்திடில், கோள் நிலை திரியும், கோள் நிலை திரிந்திடில் மாரி வறங்கூரும்'' என்பது மணிமேகலை. கோவில்களில் பூசை செய்வார் இல்லாமையால் அவை பூசையை இழந்தன என்பதாம். மலர்களைக் கவனித்துப் போற்றுவார் இல்லாமையால் அவை தேன் சொரியவில்லை எனவே வண்டுகள் தேனை நுகர முடியாது மகிழ்ச்சியை இழந்தன என்பதாம்.

205. நிழல் பிரிந்தன குடை; நெடுங்கண் ஏழையர்
குழல் பிரிந்தன மலர்; குமரர் தாள் இணை
கழல் பிரிந்தன; சினக் காமன் வாளியும்
அழல் பிரிந்தன; துணை பிரிந்த அன்றிலே. (1902)

(ஏழையர்-மகளிர்; குழல்-கூந்தல்; காமன்-மன்மதன்; வாளி-அம்பு)

Koviloor Digital Library

நாட்டில் உள்ள குடைகள் எல்லாம் விரிப்பாரின்றி, நிழல்தருவதை நீக்கின; நீண்ட கண்களையுடைய மகளிருடைய கூந்தலெல்லாம் மலர்களைப் பிரிந்தன; வீரர்கள் தங்கள் இரு பாதங்களிலும் வீரக் கழல் அணிவதை நீக்கினர்; கோபமுடைய மன்மதனுடைய கணைகள் கூடக் காம வெப்பத்தைத்தூண்டாது நீங்கின; என்றும் பிரியா அன்றிற் பறவைகள் கூடத் தங்கள் துணையைப் பிரிந்து வாடின.

மொத்தத்தில் இராமன் பிரிவால் நாட்டில் அகத்துறையைச் சார்ந்த காதலும் நிகழவில்லை, புறத்துறையைச் சார்ந்த வீரமும் நிகழவில்லை என்பதாம். காதல் வேட்கை இல்லை என்பதை மகளிர் மலர் சூடவில்லை என்றும், மன்மதன் அம்பு காம வெப்பம் தரவில்லை என்றும், அன்றில் பேடை பிரிந்து வருந்தியது என்றும் கூறியவர், போர் நிகழவில்லை என்பதைக் குமரர்தாள் இணைகழல் பிரிந்தன என்றும் கூறிய அழகு வியந்து போற்றுதற்குரியது. அன்றிற் பறவையும் துணை பிரிந்த என்பது அவலத்தின் உச்சம். எது நிகழ்ந்தாலும் அவை இணைபிரியாது என்பது நூல் வழக்கு.

206. தார் ஒலி நீத்தன புரவி; தண்ணுமை
வார் ஒலி நீத்தன; மழையின் விம்முறும்
தேர் ஒலி நீத்தன தெருவும்; தெண்திரை
நீர் ஒலி நீத்தன நீத்தம் போலவே. (1903)

(தார்-கிண்கிணி மாலை; தண்ணுமை-மத்தளம்; வார்-நீண்ட; மழை-மேகம்; விம்முதல்-முழங்குதல்; தெண்-தெள் / தெள்ளிய / தெளிவான; நீத்தம்-வெள்ளம் / ஆறு; புரவி-குதிரைகள்)

குதிரைகள் அவற்றின் கழுத்திலிடப்படும் கிண்கிணி மாலைகளின் ஒலியை இழந்தன; மத்தளங்கள் மேகம் போல முழங்குகின்ற நீண்ட ஒலியை இழந்தன; தெள்ளிய அலைகளை உடைய ஆறு தன் ஒலியை இழந்தது போல, அயோத்தி நகரத்தெருக்களும் தேர்கள் ஓடுகின்ற ஒலியை இழந்து அமைதியாகக் காட்சியளித்தன.

எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் தேர்களும் குதிரைகளும் ஓடவில்லை; எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் மத்தளம் இசைக்கவில்லை. தெருவெல்லாம் அமைதியாக இருந்தது. எதைப் போல? தெள்ளிய அலைகளை உடைய ஆறு சத்தமில்லாமல் ஓடுவது போல. ''ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு'' என்பது நெடுநல்வாடை.

207. முழவு எழும் ஒலிஇல; முறையின் யாழ் நரம்பு
எழஎழும் ஒலிஇல; இமைப்பில் கண்ணினர்
விழவு எழும் ஒலி இல; வேறும் ஒன்று இல;
அழ எழும் ஒலி அலது, அரச வீதியே. (1904)

(முழவு-முரசம் / மத்தளம்; விழவு-விழா; யாழ்-வீணை)

Koviloor Digital Library

அயோத்தி நகர அரச வீதிகளில் முரசங்கள் , மத்தளங்கள் ஆகியவற்றினால் எழுகின்ற ஓசை இருக்கவில்லை; வீணையின் நரம்புகளால் முறையாக மீட்டி இசைக்கப்படுகின்ற ஒலிகளும் கேட்கப்படவில்லை. இமையா நாட்டம் கொண்டவர்களான தேவர்களுக்கு எடுக்கப்படும் இந்திர விழா முதலியவற்றிற்கு இசைக்கப்படும் ஒலிகள் கூட இல்லை; வேறு வகையான மங்கல ஆனந்த ஒலிகள் எவையுமே கேட்கப்படவில்லை. எல்லோரும் அழுகின்ற ஒலிமட்டும் தான் அரச வீதிகளில் முழுதும் கேட்டது.

முழவு என்பது பொதுவாக மத்தளத்தைக் குறிக்கும் எனினும் இங்கே அது ஒரு தோற்கருவியைக் குறித்தது. மத்தளம், தண்ணுமை, முரசு பேரிகை குடமுழா ஆகியவை எல்லாமே வெவ்வேறானவை. முறையின் என்பது யாழ் நரம்பில் எழும் ஒலிகள் குறித்தது. அவை எட்டு வகைப்படும். அவை வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்பனவாம். கேட்க வேண்டிய மங்கல ஓசைகள் கேட்கவில்லை; கேட்கக்கூடாத, கேட்கத்தகாத அமங்கல ஓசைகளே கேட்டன என்பதாம்.

208. தெள் ஒலிச்சிலம்புகள் சிலம்பு பொன்மனை
நள் ஒலித்தில; நளிர் கலையும் அன்னவே;
புள் ஒலித்தில புனல்; பொழிலும் அன்னவே;
கள் ஒலித்தில மலர்; களிறும் அன்னவே. (1905)

(தெள்-தெளிவான; பொன்-அழகிய; நள்-நடு இடங்கள்; சிலம்புதல்-ஒலித்தல்; நளிர்-பெருமை பெற்ற; கலை-மேகலை; புனல்-நீர்நிலைகள்; புள்-பறவைகள்; பொழில்-சோலைகள்; கள்-வண்டுகள்)

தெளிவான ஒலியினை உடைய சிலம்புகள் அழகிய வீடுகளின் நடுக்கூடத்திலிருந்து ஒலி எழுப்பவில்லை; அதுபோலவே மேகலைகளும் ஒலி எழுப்பவில்லை; நீர்நிலைகளில் பறவை இனங்கள் ஒலி எழுப்பவில்லை; அவ்வாறே சோலைகளிலும் அவை பறந்து திரிந்து ஒலியெழுப்பவில்லை; மலர்களில் வண்டுகள் அமர்ந்து ரீங்கார ஒலி எழுப்பவில்லை; அவ்வாறே யானைகளின் மதநீரில் படிந்தும் வண்டுகள் இசைக்கவில்லை.

நடன மாதரும் இசைவாணரும் பாடவும் இல்லை; ஆடவும் இல்லை; இவர்கள் ஆறறிவு உடையவர். ஐந்தறிவு உடையவைகளான பறவைகளும், நான்கறிவுடைய உயிர்களான வண்டு முதலியவைகளும் கூட இராமன் பிரிவால் ஏங்கித் தத்தம் தொழிலைச் செய்யாதொழிந்தன என்பதாம்.

209. செய் மறந்தன புனல்; சிவந்த வாய்ச்சியர்
கைமறந்தன பசுங்குழவி; காந்துளரி

Koviloor Digital Library

நெய்மறந்தன; நெறி அறிஞர் யாவரும்
மெய் மறந்தனர்; ஒலி மறந்த வேதமே. (1906)

(செய்-வயல்கள்; குழவி-குழந்தைகள்; காந்து-கொழுந்துவிட்டு எரியும்; மெய்-மெய்ப்பொருள் / தியானம்)

வயல்களில் வேலை செய்வார் இன்மையால் வயல்கள் நீர்பெறுதலை மறந்தன. நீர்பெறவில்லை; சிவந்த வாயினையுடைய பெண்டிரின் கைகள் பச்சிளங்குழந்தைகளை எடுக்க மறந்தன; கொழுந்து விட்டு எரிகின்ற வேள்வித்தீ நெய் மிகுதியை மறந்தன; வேள்விகள் நிகழவில்லை; மெய்நெறிஉணர்ந்த ஞானிகள் எல்லோரும் மெய்ப்பொருள் தியானத்தை மறந்து, தம்மையே மறந்து இருந்தனர்; ஆதலால் வேதங்களை ஓதுவாரே இல்லாமல் வேதங்கள் ஓசையை மறந்தன.

வயல்கள் நீரையும், மகளிர் கைக் குழந்தைகளையும், நெருப்பு ஆகுதியையும், அறிஞர் மெஞ்ஞானத்தையும், வேதங்கள் ஒலியையும், மறக்கவும், இழக்கவும் நேர்ந்தது. இராமபிரான் பிரிவால் உலக வாழ்க்கையே பாதிக்கப்பட்டது என்பது கருத்து. வேள்வித்தீ மூன்று வகைப்படும். அவை ஆகவனீயம், காருக பத்தியம், தட்சிணாக்கினியம் என்பனவாம்.

210. ஆடினர் அழுதனர்; அமுத ஏழிசை
பாடினர் அழுதனர்; பரிந்த கோதையர்
ஊடினர் அழுதனர்; உயிரின் அன்பரைக்
கூடினர் அழுதனர், குழாம் குழாம் கொடே. (1907)

(பரிந்த-அறுத்தெறிந்த; கோதை-மாலை; அன்பர்-காதலர்; குழாம்-கூட்டம்)

கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து ஆடிக்கொண்டிருந்தவர்கள் அழுதனர்; தேவாமிர்தம் போன்ற ஏழு இசைப்பண்களைப் பாடிக் கொண்டிருந்தவர்கள் அழுதனர்; அறுத்தெறிந்த மாலையையுடைய பெண்கள் தங்கள் கணவரோடு ஊடல் புரிந்து கொண்டிருந்தவர்களும் அழுதனர்; தங்கள் உயிர்போன்ற காதலரைக் கூடிக் களித்துக் கொண்டிருந்தவர்களும் அழுதனர்.

பல திறத்து மகளிரும் ஆடலை, பாடலை, ஊடலை, கூடலைக் கைவிட்டு அங்கங்கே கூடி நின்று அழலாயினர் என்பதாம்.

211. நீட்டில களிறு கைந்நீரின்; வாய்புதல்
பூட்டில புரவிகள்; புள்ளும் பார்ப்பினுக்கு
ஈட்டில இரை; புனிற்று ஈன்ற கன்றையும்
ஊட்டில கறவை; நைந்துஉருகிச் சோர்ந்தவே. (1908)

Koviloor Digital Library

(பார்ப்பு-குஞ்சுகள்; ஈட்டுதல்-தேடிக்கொண்டு வருதல்; இரை-உணவு; கறவை-பசுக்கள்; புதல்-புல் / புல் நிறைந்த பைகள்; கறத்தலுடையது என்பதால் கறவை, பசுவிற்குக் காரணப்பெயர்)

யானைகள் நீர் நிலைகளில் தம் துதிக்கைகளை நீட்டி நீர் பருகவில்லை; குதிரைகள் புல் நிறைந்த பைகளை மாட்டிக் கொண்டு புல்லைத் தின்னவில்லை; பறவைகளும் தம் குஞ்சுகளுக்கு உணவு தேடித்தரவில்லை; கறவைப் பசுக்கள் அப்பொழுதுதான் ஈன்றெடுத்த இளம் கன்றுகளுக்கும் பால் ஊட்டவில்லை; எனவே எல்லா உயிரினங்களும் வாடி உருகிச் சோர்ந்து நின்றன.

புல் / கொள் நிறைந்த பையைக் குதிரையின் வாயில் பூட்டித் தின்னச் செய்வது வழக்கம்; இராமன் பிரிவினால், யானை, குதிரை, பறவைகள், பசுக்கள், கன்றுகள் ஆகியவை உணவு உண்ணவும், ஊட்டவும் மறந்து வருந்தின என்பதாம். ''புதல், புல் என்பன புற்பிறப்பாகும்'' என்பதும், ''பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றுள் இளமை'' எனபதும் திவாகரம்.

212. மாந்தர்தம் மொய்ம்பினில் மகளிர் கொங்கையாம்
ஏந்துஇள நீர்களும் வறுமை எய்தின
சாந்தம்; அம்மகிழ்நர் தம்முடியில் தையலார்
கூந்தலும் வறுமைய மலரின் கூலமே. (1909)

(மாந்தர்-மைந்தர் / ஆடவர்; ஏந்து-உயர்ந்த / நிமிர்ந்த; சாந்தம்-சந்தனம்; மகிழ்நர்-கொழுநர்; கூலம்-கூட்டம் / இனம்; மொய்ம்பு-தோள்)

ஆடவர்களின் வலிமை பொருந்திய தோள்களைப் போலவே, மகளிரின் கொங்கைகள் என்னும் நிமிர்ந்த இளநீர்களும் சந்தனம் பூசப் பெறாமையால் வறுமை அடைந்தன-வறிதாய் இருந்தன; அந்தக் கணவர்களது முடியைப் போலவே, பெண்களது கூந்தலும், மலரின் கூட்டம் வைக்கப்பெறாமல் வறுமை அடைந்தன.

ஆடவர்கள் தோள்களில் சந்தனம் பூசிக்கொண்டு மகளிர் கொங்கைகளைச் சார்வர். அது இப்பொழுது நடைபெறாமையால் மகளிர் கொங்கைகள் சந்தனம் பெறாமல் வறிதாயிருந்தது. அது போலவே ஆடவர் குஞ்சியில் வைத்திருக்கும் மலர்க் கூட்டங்கள் கூடல் காலத்தில் மகளிரின் கூந்தலை அடையும். இப்பொழுது இருவரும் கூடாதிருத்தலால், அவ்வாறு நிகழாது வெறுமையாய் இருந்தது என்பதாம். ஆடவர் மகளிர் கூடல் நீத்தனர் என்பது கருத்து.

213. ஓடைநல் அணிமுனிந்தன உயர்களிறு; உச்சிச்
சூடைநல் அணிமுனிந்தன தொடர்மனை; கொடியின்
ஆடைநல் அணிமுனிந்தன அம்பொன்செய் இஞ்சி;
பேடைநல் அணிமுனிந்தன மென்னடைப் புறவம். (1910)

Koviloor Digital Library

(ஓடை-முகபடாம் / நெற்றிப் பட்டம்; முனிந்தன-வெறுத்திருந்தன / புனையாதிருந்தன; அம்-அழகிய; இஞ்சி-மதில்கள்; அணி-அலங்காரம்; உச்சி-தூபியின் உச்சி; சூடை-தலை; புறவம்-புறாக்கள்)

உயர்ந்த யானைகள் தமது நெற்றிப் பட்டத்தை வெறுத்திருந்தன; தொடர்ந்து வரிசையாக இருந்த மாளிகைகள் தமது தூபியின் உச்சியில் செய்யப்படும் அலங்காரத்தை வெறுத்திருந்தன; அழகிய பொன்னால் செய்யப்பட்ட மதில்கள் கொடியாகிய ஆடை அலங்காரங்களை வெறுத்திருந்தன. மெல்லிய நடையையுடைய ஆண் புறாக்கள் தம் பெடைப் புறாக்களுடன் கூடி நுகரும் அழகினை வெறுத்திருந்தன.

யானைகள் முகபடாம் அணியவில்லை; மாளிகைகளின் உச்சியில் அலங்காரத் தூபி அணிகள் நாட்டப்பெறவில்லை; அழகிய மதிற்சுவர்களில் கொடிகள் ஏற்றி வைக்கப்பட வில்லை; ஆண் புறாக்கள் பெண் புறாக்களை நாடித் திரியவில்லை என்பது கருத்து.

214. யோகியர்களும் துயரடைதல்

''திக்குநோக்கிய தீவினைப் பயன்எனச் சிந்தை
நெக்குநோக்குவோர்''; நல்வினைப்பயன் எனநேர்வோர்;
பக்கம்நோக்கல் என்? பருவரல், இன்பம் என்று இரண்டும்
ஒக்கநோக்கிய யோகரும் அருந்துயர் உழந்தார். (1911)

(நெக்கு-நெகிழ்ந்து; நேர்தல்-உடன்படுதல்; பருவரல்-துன்பம்; ஒக்க-சமமாக)

தாம் செய்த தீவினையின் பயன் தாம் இருக்கிற திக்கை நோக்கி வருகிறது என்றாலே அதனை எண்ணி அச்சமுற்று மனம் நெகிழ்ந்து வருந்துபவர்களும், தாம் செய்த நல்வினைப் பயனான புண்ணியம் தமக்கு கிடைத்ததே என்று அகமகிழ்ந்து உடன்பட்டு மகிழ்பவர்களும் ஆகிய மானிடர்கள், இராமன் பிரிவினால் வருந்துகிறார்கள் என்று கூறுவதில் என்ன இருக்கிறது? இது இயல்பு. ஆனால் இன்பம், துன்பம் இரண்டையும் சமமாகப் பாவிக்கின்ற யோகியர்களும், ஞானிகளுமே மீளுதற்கரிய பெருந்துன்பத்தில் ஆழ்ந்தார்கள்.

தீவினைப் பயனாகிய பாவமும், நல்வினைப் பயனான புண்ணியமும் வருவதற்கு முன்னரே அச்சமும் மகிழ்ச்சியும் கொள்ளும் இயல்புடைய மக்கள், இராமன் பிரிவினால் வருந்துவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? என்பது கருத்து; இன்பம் துன்பம் என்ற இரண்டையும் ஒக்க நோக்கும் உயரிய குணம்படைத்த ஞானியர்களே. அருந்துயர் உழந்தனர் என்றால் தீவினையில் துவண்டு, நல்வினையில் மகிழும் உலகினர் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? சமநிலை உடைய ஞானிகளே பெரிதும் வருந்தினர் என்பதாம். ஞானியர் என்பவர் ''செஞ்சாந்து பூசினும், செத்தினும், போழினும், நெஞ் சோர்ந்து ஓடா நிலைமையுடையோர்'' என்பதாம்.

Koviloor Digital Library

215. நகரத்தின் நிலை

ஒவுஇல் நல்லுயிர் உயிர்ப்பினோடு உடல்பதைத்து உலைய,
மேவுதொல் அழகுஊழில் கெட, விம்மல்நோய் விம்மத்
தாவுஇல் ஐம்பொறி மறுகுறத் தயரதன் என்ன
ஆவி நீக்கின்றது ஒத்தது அவ்வயோத்தி மாநகரம். (1912)

(ஒவுஇல்-நீங்காத; உயிர்ப்பு-பெருமூச்சு; உலைய-வருந்த; மேவு-பொருந்திய; தொல்-பழைய; விம்மல்-துன்பம்; விம்முதல்-தேம்புதல்; தாவுஇல்-வலிஇழந்த; மறுகுறுதல்-கலங்குதல்; ஆவி-உயிர்)

அந்த அயோத்தி மாநகர மக்களின், நீங்குதலில்லாத நல்ல உயிர்கள், பெருமூச்சினோடு, உடல்பதை பதைத்து வருந்தவும், இயல்பாகவே பொருந்திய பழைய அழகும், இப்போது செயற்கையாக ஊட்டப்பட்ட அழகும் கெட்டுப் போகும்படியும், துன்ப நோயினால் தேம்பி அழுவதாலும், வலிவிழந்த ஐந்து பொறிகளும் தம்முள் கலக்கமுற்று, தசரத மன்னன் எவ்வாறு உயிர் போகும் படி துடிக்கின்றானோ, அதைப் போலவே உயிர் போகும்படி துடிக்கின்றனர்.

உடலை விட்டு உயிர் நீங்கும் போது உடல் பதை பதைக்கும்; உயிர் உலையும், துன்பம் மிகும். அழகு கெடும்; ஐம்பொறிகளும் கலங்கும். இத்தனையும் தசரதனும் பட்டான். அதைப் போலவே அயோத்தி நகரமும் பட்டது என்பதாம். நகரத்தை ஓர் உயிர்ப் பொருள் ஆக்கி வருணிப்பது ஒரு நயம்.

216. இராமன் சீதையிருக்கும் இடம் செல்லுதல்

உயங்கி, அந்நகர் உலைவுஉற, ஒருங்கு உழைசுற்றம்,
மயங்கி ஏங்கினர்; வயின்வயின் வரம்பு இலர்தொடர,
இயங்கு பல்உயிர்க்கு ஓர்உயிர்என நின்ற இராமன்
தயங்கு பூண்முலைச் சானகி இருந்துழிச் சார்ந்தான். (1913)

(உயங்கி-வாடி; உலையுற-வருந்த; உழை-சுற்றம் / ஏவலர்; வயின் வயின்-இடங்கள் தோறும்; தயங்கு-விளங்குகின்ற; பூண்-அணிகள்; வழி-இடம்; சனகன் மகள் என்பதால் சானகி சீதைக்குக் காரணப்பெயர் / பெயர் வழி வரும் பெயர்)

அவ்வயோத்தி நகரமே இவ்வாறு வாடி வருந்திக் கொண்டிருக்கவும், அவன் பக்கத்தே சூழ்ந்து நின்று ஏவல் கேட்போர் ஒருங்கே கூடிவரவும், மற்ற எண்ணற்றவர்கள் அனைவரும் அறிவு மயங்கி அழுது கொண்டு அவன் செல்லும் வழியெல்லாம் தொடர்ந்து வரவும், இயங்குகின்ற எல்லா உயிர்களுக்கும் மூலாதாரமான உயிர் எனக் கருதப்படும் இராமன், ஒளி விளங்குகின்ற அணிகலன்களை அணிந்துள்ள கொங்கைகளை உடைய சனகன் மகளான சீதை இருக்கும் இடத்தை அடைந்தான்.

Koviloor Digital Library

உழைச் சுற்றம் என்பது பக்கத்தே சூழ்ந்து நின்று ஏவல் கேட்போரைக் குறிக்கும். ''உழைச் சுற்றாளர்'' என்று பெருங்கதை கூறும். இராமன் திருமாலின் அவதாரம் என்னும் உண்மையை ''இயங்குபல் உயிர்க்கு ஓர்உயிர்'' எனச் சிறப்பித்தார்.

217. சீதை அதிர்ச்சியடைதல்

அழுது, தாயரொடு, அருந்தவர், அந்தணர், அரசர்
புழுதிஆடிய மெய்யினர், புடைவந்து பொருமப்
பழுது சீரையின் உடையினன் வரும்படி பாரா
எழுது பாவையன்னாள் மனத்துணுக்கமொடு எழுந்தாள். (1914)

(ஆடிய-படிந்த; மெய்-உடம்பு; புடை-பக்கம்; பொருமுதல்-விம்முதல் / தேம்புதல்; பழுது-பயன்படாத / தகாத / அழகற்ற / தாழ்வுடைய; சீரை-மரவுரி; படி-தன்மை; பாரா-பார்த்து; துணுக்கம்-நடுக்கம்)

இராமனின் அறுபதினாயிரம் தாயரும், அரிய தவசிகளும், வேதியர்களும், அரசர்களும், புழுதி படிந்த உடம்புடன் அவன் பக்கத்தில் உடன் வந்துத் தேம்பியழவும், அரசகுமாரனுக்குத் தகாத அழகற்ற, இல்வாழ்வோர்க்குப் பயன்படாத மரவுரியைத் தரித்துக் கொண்டு வருகின்ற தன்மையைப் பார்த்து, எழுதற்கரிய சித்திரத்தில் தீட்டப்பெற்ற பதுமை போல்பவளாகிய சீதை, மனத்துள் அதிர்ச்சியடைந்து நடுக்கத்தோடு எழுந்து வந்தாள்.

முடிசூடி அரச கோலத்துடன் வர வேண்டிய கணவன், அதற்கு மாறாக மரவுரி தரித்துத் தவக்கோலத்துடன், வந்ததை எதிர்பாராதபடி பார்த்ததால் மனம் துணுக்குற்று நடுங்கினாள் என்பதாம். ''பழுது பயம் இன்றே'' என்பது தொல்காப்பியம். பயம்-பயன்; எதிர்பாராததைப் பார்க்கும் போது எல்லோரும் துணுக்க முறுவது இயற்கை; பெண்கள் சிறது நடுக்கமும் அடைவர் என்பது வழக்கு.

218. சீதை இராமனை வினவுதல்

எழுந்த நங்கையை மாமியர் தழுவினர்; ஏங்கிப்
பொழிந்த உண்கணீர் புதுப்புனல் ஆட்டினர்; புலம்ப
அழிந்த சிந்தையள், அன்னம், இதுஇன்னது என்று அறியாள்,
வழிந்தநீர் நெடுங்கண்ணினள், வள்ளலை நோக்கி. (1915)

(ஏங்கி-அழுது; உண்-மைபூசப்பெற்ற)

அவ்வாறு எழுந்து வந்த சீதையை, அவளுடைய மாமியர் தழுவிக் கொண்டனர். அவர்கள் அழுதலால் மை பூசப்பெற்ற கண்களிலிருந்து பொழிந்த கண்ணீர் சீதையின் மேல் விழும்படி புதுப்புனல் ஆட்டினர். புலம்பினர். எனவே அன்னம் போன்ற சீதை மனக்கலக்கமுற்றவளாய் இவர்கள் எதற்காக இப்படி அழுகிறார்கள் என்பதை அறியாதவளாகத்

Koviloor Digital Library

தானும் தன்னுடைய பெரிய நீண்ட கண்களிலிருந்து கண்ணீரைப் பெருக்கி, வள்ளலாகிய இராமனைப் பார்த்தாள். குளகச் செய்யுள்.

இதுகாறும் இம்மாமியர் அழுததில்லை. இப்பொழுது தான் அழுகிறார்கள். எனவே அவர்கள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் புதுப்புனல் எனப்பட்டது.

219. ''பொன்னை உற்ற பொலன் கழலோய்! புகழ்
மன்னை உற்றது உண்டோ? மற்று இவ் வன்துயர்
என்னை உற்றது? இயம்பு?'' என்று இயம்பினாள்
மின்னை உற்ற நடுக்கத்து மேனியாள். (1916)

(பொலன்-அழகிய; மன்-மன்னன் தசரதன்; உற்ற-பொருந்திய / போன்ற)

மின்னலைப் போன்று ஒளியும் நடுக்கமும் உடைய உடம்பைப் பெற்ற சீதை, இராமனை நோக்கி, ''பொன்னால் இயன்ற அழகிய வீரக்கழலை அணிந்தவனே! புகழ்மிக்க சக்கரவர்த்திக்கு ஏதேனும் தீங்கு நிகழ்ந்து விட்டதா? பின்னர் இவர்கள் ஏன் இவ்வளவு கொடுந்துயரடைந்து வருந்தி அழுகிறார்கள்? என்ன நிகழ்ந்தது? எனக்குச் சொல்லுவாயாக'' என்று கேட்டாள்.

பெருந்துயர் கொண்டு மாமியர் அழுதலால் மன்னனுக்கு ஏதும் தீங்கு நேர்ந்திருக்கலாம் என்று கருதி இவ்வாறு கேட்டாள் என்க.

220. இராமன் கூறுதல்

''பொருவுஇல் எம்பி புவி புரப்பான்; புகழ்
இருவர் ஆணையும் ஏந்தினென்; இன்றுபோய்க்
கருவி மாமழைக் கல்கடம் கண்டு நான்
வருவென், ஈண்டு வருந்தலை நீ'' என்றான். (1917)

(புரத்தல்-காத்தல் / ஆளுதல்; பொருவுஇல்-ஒப்பற்ற; மழை-மேகம்; கல்-மலைகள்; கடம்-காடு; ஈண்டு-இங்கு; கருவி-தொகுதி; எம்பி-என் தம்பி)

''தனக்கு ஒப்பில்லாதவனான என் தம்பி பரதன் இவ்வுலகைக் காத்து அரசு செய்வான். புகழ் மிக்க என் தாய் தந்தை ஆகிய இருவரது கட்டளையையும் நான் சிரமேற்கொண்டு, இன்றே போய், தொகுதியாக இடி மின்னலோடு கூடிய மேகங்கள் தழுவுகின்ற மலைகள் நிறைந்த கானகத்தையும் பார்த்து விட்டுத் திரும்பி வருகிறேன், நீ இங்கு வருந்தாது இருப்பாயாக!'' என்றான்.

இருவர் என்று கூறியதில் ஒன்று தந்தை யென்பதைப் புரிய வைத்த கம்பன், தாய் யார் என்பதைச் சொல்ல நினைக்காதது கூர்ந்து நோக்கத்தக்கது. அவ்வாறே கானகத்திற்கு இன்றே சென்று மீள்வேன்

Koviloor Digital Library

என்று கால அளவைக் குறிப்பிடாதது, சீதையின் மனம் பொறுக்காது என்பது கொண்டு என்க. ஈண்டு வருந்தலை என்ற இருசொற்களில், நீ இங்கேயே இருக்க வேண்டும் என்பதும், வருந்தாது இருக்க வேண்டும் என்பதும் பெறப்படுகின்றன. சுருங்கக்கூறி விளங்கவைத்தலுக்கு இப்பாடல் ஒரு எடுத்துக்காட்டு. ''கருவி தொகுதி'' என்பது தொல்காப்பியம்; ''கருவி வானம்'' என்பது அகநானூறு.

221. சீதை வருந்துதல்

நாயகன் வனம் நண்ணல் உற்றான் என்றும்,
மேயமண் இழந்தான் என்றும் விம்மலள்;
''நீ வருந்தலை; நீங்குவென் யான்''; என்ற
தீய வெம்சொல் செவிசுடத் தேம்புவாள். (1918)

(நண்ணுதல்-அடைதல் / செல்லுதல்; மேய-பெற்ற; மண்-அரசுரிமை; விம்முதல்-அழுதல்)

அவ்வாறு இராமன்கூறியதைக் கேட்டதும், சீதை தன்கணவன்கானகம் புகப்போகிறான் என்பதற்காகவோ, தசரதனால் தரப்பட்ட தனக்கு உரிய அரசுரிமையை இழந்து விட்டானே என்பதற்காகவோ வருத்தமுற்று அழவில்லை; இராமன், ''நான் கானகம் போய் வருகிறேன்; நீ இங்கேயே வருந்தாமல் இருப்பாயாக'' என்று கூறிய கொடிய கடுமையான வார்த்தைகள் அவள் செவிகளில் நுழைந்து சுடுவதால் அவ்வாறு தேம்பித் தேம்பி அழுதாள்.

தன் கணவன் கானகம் புகுதலினாலும், நாட்டை இழப்பதனாலும் அவள் வருந்தியழவில்லை காரணம் அவளுக்கு இத்தகைய செல்வங்களில் பற்று இல்லை. ஆனால் இராமனிடம் அசைக்க முடியாத பற்று இருந்ததால்தான் அவனைப் பிரிய முடியாமல் பிரிவுத் துன்பத்தால்தான் தேம்பி அழுதாள் என்பது ஒரு நயம். அவன் நாட்டைத் துறந்தாலும், காட்டில் இருந்தாலும் தானும் அவன் கூடவே அவன் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிற கற்புக்கரசி சீதை என்பது பெறப்படுகிறது. அவன் கூறியது தீய சொல், கொடிய சொல் என்று இரு அடைமொழி கொடுத்துத் தன் உள்ளக் கருத்தை வெளியிடுகிறாள் சீதை. எந்நிலையிலும் தான் அவனைப் பிரியாது இருத்தலே அவள் நோக்கம். தன்னைப் பிரிவதில் அவன் கவலை கொள்ள வில்லையே என்பது அவள் ஏக்கம்.

222. கவிக் கூற்று

''துறந்துபோம் எனச் சொற்ற சொல் தேறுமோ?''
உறைந்த பாற்கடல் சேக்கை உடன் ஒரீஇ
அறம் திறம்பும் என்று ஐயன் அயோத்தியில்
பிறந்த பின்பும் பிரிவு இலள் ஆயினாள். (1919)

Koviloor Digital Library

(திறம்புதல்-மாறுபடுதல்; ஒரீஇ-நீங்கி; சொற்ற-சொன்ன; தேறுதல்-தெளிந்து ஆறி இருத்தல்; உறைந்த-தங்கியிருந்த; சேக்கை-படுக்கை / ஆதிசேடனாகிய பாம்பணை)

தாமும் உடன் சென்று பிறக்காவிட்டால் பூவுலகில் தருமம் மாறுபட்டுக் கெடும் என்று கருதித் திருமால் மனிதனாக இராமன் என்ற பெயர் கொண்டு, தான் உறைந்த பாற்கடலில் ஆதிசேடனாகிய பாம்பணையை விட்டு நீங்கி அயோத்தியில் பிறந்த பின்பும், அவனை விட்டுக் கணமேனும் பிரிய இயலாமல் தானும் இலக்குமி என்ற பெயரை விடுத்துச் சீதை என்ற பெயருடன் பூவுலகில் அவதரித்து அவனைப் பிரியாதிருந்தவளான சீதை, ''நான் உன்னை விட்டு நீங்கிக் கானம் சென்று திரும்பி வருவேன்'' என்று சொல்லிய சொல்லை நல்ல சொல் என்று கருதித் தெளிந்து ஆற்றியிருப்பாளோ? மாட்டாள் அல்லவோ!

அறம் திறம்புதல் என்பது தரும நெறி குறைந்து பாவச் செயல்கள் அதிகரித்தல். பாவம் செய்வோரைக் கொன்று அறம் செய்வோரைக் காப்பது தான் இராம அவதாரத்தின் உண்மை. தெய்வ நிலையிலேயே பிரிவைத் தாங்காத இலக்குமி, இப்பொழுது மனித நிலையில் அவன் பிரிவைத் தாங்க மாட்டாள் என்பது கருத்து. திருமால் கண்ணபிரானாகப் பின்னர் அவதாரம் எடுக்கும் போதும் இலக்குமி ருக்குமணியாக அவதரித்து அவனை நீங்காதிருந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது.

223. சீதை-இராமன் உரையாடல்

அன்ன தன்மையள் ''ஐயனும் அன்னையும்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே;
என்னை? என்னை ''இருத்தி'', என்றாய்'', என்றாள்
உன்ன உன்ன உயிர் உமிழா நின்றாள். (1920)

(தூயது-நல்லது; உன்ன-நினைக்க; ஐயன்-தந்தை; உயிர் உமிழா-உயிர் உமிழ்ந்து / உயிரை விட்டு விடுதல்)

அத்தகைய இயல்புடைய பிரிவை ஆற்றாத சீதை, ''தாயும் தந்தையும் கூறியவற்றைச் செய்ய முற்பட்டது சிறந்ததே. என்றாலும், என்னை ஏன் ''இங்கேயே இரு'' என்று சொன்னாய்?'' என்று கேட்டு, அந்தப் பிரிவை நினைக்க நினைக்க நெஞ்சு தாங்காது உயிர் விடும் நிலையை அடைந்து துயருற்றாள்.

உன்ன உன்ன என்ற அடுக்கு அவள் நெஞ்சு பிரிவுத் துயரைத் தாங்காமையைப் புலப்படுத்தும்.

224. ''வல்லரக்கரின் மால்வரை ஊடு எழும்
அல்அரக்கின் உருக்கு அழல்காட்டு அதர்க்
கல் அரக்கும் கடுமைய அல்ல நின்
சில் அரக்குஉண்ட சேவடிப் போது'' என்றான். (1921)

Koviloor Digital Library

(மால்வரை-பெரிய மலை; எழுதல்-ஏறுதல்; அல்-இரவு; அதர்-வழி; அரக்குதல்-வருத்துதல் / உறுத்துதல்; சில்-குளிர்ந்த; அரக்கு-செம்பஞ்சுக் குழம்பு; ஊட்ட-பூசப்பட்ட; போது-மலர்; அழல்-வெப்பம்; கல்-பருக்கைக் கற்கள்)

இராமன் சீதையை நோக்கி, ''நின்னுடைய குளிர்ந்த மெல்லிய சிவந்த செம்பஞ்சு ஊட்டப்பெற்ற மலர் போன்ற பாதங்கள், வலிமையான அரக்கர்கள் வாழும் பெரிய மலைகளின் மீது ஏறும்போதும், பகலிலும் இரவிலும் அரக்கினை உருக்கி வார்த்தாற்போல வெப்பமுடைய காட்டு வழியில் செல்லும் போதும், அங்கே கிடக்கின்ற பருக்கைக் கற்கள் உன் காலை வருத்தி உறுத்தும் போதும், அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவுக்குக் கடுமையானவை அல்ல; அவை மெல்லிய பாதங்கள்'' என்றான்.

''இருத்தி'' என்று ஏன் சொன்னாய் என்று கேட்ட சீதைக்கு இராமன், நான் செல்லப் போகின்ற வழி, அரக்கர்கள் வாழுகின்ற வழி; மலை வழி, காட்டு வழி, இரவிலும் வெப்பம் செய்யும் வழி, கூரிய பருக்கைக் கற்கள் இருக்கும் வழி; எனவே இவற்றை எல்லாம் உன்னுடைய மலர் போன்ற பாதங்கள்தாங்கக்கூடிய வலிமை பெற்றனஅல்ல என்பதால்தான்உன்னை உன் நன்மை கருதி இங்கேயே இருக்குமாறு சொன்னேனே அன்றி, உன்னைப் பிரிய முடியும் என்ற வல்லமையால் சொல்லவில்லை என்று தன்னிலை விளக்கம் அளித்தான் இராமன்.

225. ''பரிவு இகந்த மனத்தொரு பற்று இலாது
ஒருவுகின்றனை; ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது? ஈண்டு, நின்
பிரிவினும் சுடுமோ பெருங்காடு?'' என்றாள். (1922)

(பரிவு-இரக்கம்; இகந்து-நீங்கிய; ஒருவுதல்-நீங்குதல்; அருக்கன்-சூரியன்; எரியும்-சுடும்)

''பெண் என்று என்மேல் சிறிதும் இரக்கம் இல்லாத மனத்துடனும், நான் உன் மனைவி என்கின்ற பற்றுதலும் இல்லாது, என்னை விட்டு நீங்குவதற்கு முற்படுகின்றாய்; உன்னைப் பிரிந்து நான்இங்கு இருப்பதைக் காட்டிலும் நீ கூறுகிற அந்தப் பெரிய காடு என்கால்களைச் சுட்டுவிடுமோ? ஊழிக் காலத்தில் எரிக்கின்ற சூரியனும், அக்கினியும் என்று சொல்வதெல்லாம் எங்கே இருக்கிறது? அதையெல்லாம் ஒப்பிடும் போது நின்னைப் பிரிந்திருப்பது தான் மிகப் பெரும் அளவில் என்னைச் சுட்டு எரிக்கும்'' என்று கூறுகிறாள் சீதை.

உன் உடன் நான் இருந்தால் அந்தப் பெருங்காட்டில் இருக்கும் சூரியன் மட்டுமல்ல; பிரளய காலத்துச் சூரியனும், நெருப்பும் கூட என்னைச் சுடமுடியாது என்பது அவள் கருத்து. ''பெருங்காடு இன்னா என்றீர் ஆயின்

Koviloor Digital Library

இனியவோ பெரும! தமியோர்க்கு மனையே?'' என்பது குறுந்தொகை. தமியர்-தனியாக இருப்பவள்; தலைவனின் பிரிவை நெருப்புச் சுடுதற்கு ஒப்பிடுவது பிற இலக்கியங்களிலும் பேசப்படுகின்றன. ''மல்லுறை அலங்கல் மார்பன், பிரிவெனும் எரியுள் வீழ்ந்து, மாதர் வெந்தனள் கிடப்ப'' என்பது சீவகசிந்தாமணி. காட்டில் உடற்புறத்தில் உண்டாகும் வெப்ப உணர்ச்சியைக் காட்டிலும், இங்கே நாட்டில் மனத்தின் உட்புறத்தில் பிரிவினால் உண்டாகும் துயர உணர்ச்சியே அதிகமாகும் என்று சீதை கூறுகிறாள் என்பதாம்.

226. அண்ணல் அன்ன சொல் கேட்டனன்; அன்றியும்
உள்நிவந்த கருத்தும் உணர்ந்தனன்;
கண்ணீன் நீர்க்கடல் கைவிட நேர்கிலன்;
எண்ணுகின்றனன், ''என் செயற் பாற்று?'' எனா. (1923)

(நிவந்த-மேற்பட்டுத் தோன்றிய; நேர்தல்-இசைதல்; செயற்பாற்று-செய்யத்தக்கது)

சீதை கூறிய அத்தகைய சொற்களை இராமன் கேட்டான். கேட்டதோடு அன்றியும் அவளது உள்ளத்தில் முற்பட்டுத் தோன்றிய கருத்தினையும் உணர்ந்தான். சீதையைப் பிரிந்து அவளைத் தனியே கண்ணீர்க் கடலில் மூழ்கித் தவிக்குமாறு கை விட்டுச் செல்ல அவன் உள்ளம் ஒப்பவில்லை. எனவே ''இப்போது என்ன செய்யத் தக்கது?'' என்று சிந்திக்கலானான்.

அவளுடைய உள் நிவந்த கருத்து-''நான் உன்னை விட்டுத் தனியே இருக்க மாட்டேன், உன்னுடன் கூடவே வருவேன்'' என்பது. என் செயற்பாற்று என்பது. அவளுடைய மென்மைத் தன்மையை நோக்கும் போது அவளைத் தன்னுடன் காட்டிற்கு அழைத்துச் செல்லுவது தகாது என்பதையும், அவளுடைய உள்ளக் கருத்தை நோக்கும் போது, அவளை விட்டுப் பிரிந்திருப்பதால் அவள் மேலும் கண்ணீர்க் கடலில் மூழ்குவாள் எனவே அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்வது தகுமோ என்பதையும் காரணகரியங்களுடன்புலப்படுத்திய பின்பும் இந்த இரண்டு செயல்களுள் எதைச் செய்வது என்று தடுமாறினான். பாற்கடலில் இருந்து வந்தபொழுதே அவனைப் பிரிந்திருக்க இயலாது உடன் வந்தவளை இப்போது கண்ணீர்க் கடலில் அழுந்தியிருக்கச் செய்து தனியே போதல் முறையாகுமா? எனச் சிந்தித்தனன் என்க.

227. சீதை மரவுரி உடுத்து எதிர் தோன்றுதல்

அனைய வேலை, அகல் மனை எய்தினள்;
புனையும் சீரம் துணிந்து புனைந்தனள்;
நினைவின், வள்ளல் பின்வந்து, அயல் நின்றனள்;
பனையின் நீள்கரம் பற்றிய கையினாள். (1924)

Koviloor Digital Library

(அகல்-அகன்ற; சீரம்-மரவுரி; நினைவின்-மனோவேகத்தில்; அயல்-அருகில்)

இவ்வாறு இராமன் சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது, தனது அகன்ற விசாலமான அரண்மனைக்குள் சென்றாள் சீதை; பிறர் எவரும் கூறாதவாறு, தானே எண்ணித் துணிந்து இராமன் உடுத்தியிருக்கும் மரவுரி போன்றே தானும் ஒன்றை உடுத்துக் கொண்டு வந்து அவனுடன் உடன் செல்லும் எண்ணத்தோடு, மனோ வேகத்தில் திரும்பி வந்து இராமன் பின்னால் அருகில் நின்று கொண்டு, பனை போன்ற நீண்டு, திரண்ட இராமனது கைகளைப் பற்றி நின்றாள்.

அரண்மனைக்கு வரும் முனிவர்களுக்குக் கொடுப்பதற்கென்றே மரவுரிகள் அரண்மனைகளில் எப்பொழுதும் இருக்கும். எனவே சிரமமில்லாது அதை எடுத்து உடுத்திக் கொண்டாள். அவளை மரவுரிதரிக்கச் சொல்லி யாரும் தூண்டவில்லை. அவளே, தானாகவே எண்ணிச் செய்தாள் என்பதைத் துணிந்து என்ற சொல்லால் குறிப்பித்தார். நினைவின் என்பது இராமன் நினைத்துப் பார்ப்பதற்குள்ளாகவே என்று விரைவினைக் குறிக்கும். கை என்ற சொல்லுக்குச் செய்கை என்ற பொருளும் உண்டு. எனவே எண்ணுதல், துணிதல், செய்தல் ஆகிய மூன்று காரியங்களும் மனோ வேகத்தில் முடிந்து விட்டது என்பது பெறப்படும். இராமன் கண் எதிரில் தோன்ற அஞ்சி, அவன் பின்னால் வந்து அருகில் கை பற்றி நின்றாள் என்று கூறுவது ஒரு நாடக நயம். இந்தக் காட்சியைப் பின்னால் சுந்தர காண்டத்தில் இராமன் அனுமனிடம் சீதையின் அடையாளம் சொல்லும் இடத்தில் கூறியிருப்பது நினைவில் கொள்ளத்தக்கது.

228. கவிக் கூற்று

ஏழைதன் செயல் கண்டவர் யாவரும்
வீழும் மண்ணிடை வீழ்ந்தனர்; வீந்திலர்;
வாழும் நாள்உள என்றபின் மாள்வரோ?
ஊழி பேரினும் உய்குநர் உய்வரே! (1925)

(ஏழை-பெண் / வறியவள் / சீதை; வீந்திலர்-இறந்திலர்; நாள்-ஆயுள்; உய்குநர்-விதி உள்ளவர்)

அணிகலன்களை யெல்லாம் களைந்து, மரவுரி தரித்து, ஏழை போல் தோற்றமளித்து நின்ற சீதையின் இந்தச் செயலைக் கண்டவர்கள் அனைவரும் திடுக்கிட்டு, எல்லோரும் வீழ்ந்து இறப்பதற்குரிய பூமியின் மேல் விழுந்தனர்; ஆனால் இறக்கவில்லை. காரணம் அவர்கள் உயிரோடு வாழவேண்டிய ஆயுட்காலம் இன்னும் இருக்கிறது என்னும் போது அவர்களால் இறக்கமுடியுமோ? இறந்தவர்கள் படுகின்ற துன்பம் எல்லாம்

Koviloor Digital Library

பட்டாலும் இறக்கவில்லை. பிரளய காலமே வந்துற்றாலும், விதி உள்ளவர்கள் அவர்கள் ஆயுள் காலம் வரை வாழ்ந்தே தீருவர்.

229. அன்னையர் முதவியோர் வருந்துதல்

தாயர், தவ்வையர், தன்துணைச் சேடியர்,
ஆயம் மன்னிய அன்பினர் என்று இவர்
தீயில் மூழ்கினர் ஒத்தனர்; செங்கணான்
தூய தையலை நோக்கினன், சொல்லுவான். (1926)

(தவ்வையர்-தமக்கையர்; ஆயம்-விளையாட்டுத் தோழியர்; மன்னிய-நிலைபெற்ற)

சீதைக்குத் தாய் முறையில் உள்ள பெண்களும், தமக்கை முறையில் உள்ள பெண்களும், அவளுக்குத் துணை செய்யும் ஏவற் பெண்டிரும், விளையாட்டுக் குழுவினரும், தொடர்ந்து இடைவிடாது நிலை பெற்ற அன்பினை உடையவர்களும் ஆகிய இவர்கள் எல்லோரும் தீயுள் மூழ்கியதைப் போன்ற துயரை அடைந்தனர். அதனைக் கண்ணுற்ற, இயற்கையிலேயே சிவந்த கண்களை உடையவனான இராமபிரான் இப்போது சினத்தால் சிவந்து, குற்றமற்ற கற்புடையவளான சீதையை நோக்கிப் பின்வருமாறு கூறலானான்.

தூய தையல் என்ற சொல்லால், கவிஞன் சீதை செய்த செயல் குற்றமற்றது என்பதை நிறுவி உடன்படுகிறான் என்பது நோக்கத்தக்கது.

230. இராமன் கூறுதல்

''முல்லையும் கடல் முத்தும் எதிர்ப்பினும்
வெல்லும் வெண்நகையாய்! விளைவு உன்னுவாய்
அல்லை; போத அமைந்தனை; ஆதலின்
எல்லையற்ற இடர்தருவாய்'' என்றான். (1927)

(நகை-பற்கள்; உன்னுதல்-நினைத்தல்; போத-உடன்வர; விளைவு-தீங்கு)

''காட்டில்பூக்கின்ற முல்லையரும்பும், கடலில் தோன்றுகின்ற முத்தும் கூட உன்னை எதிர்த்து வந்தாலும், அவற்றை எளிதாக வெல்லும் வெண்மையான முல்லைப் பூப்போன்ற பற்களும், முத்துப் போன்ற பற்களும் உடையவளே! பின்னால் விளையப் போகும் தீங்குகளை எண்ணிப் பாராமல் நீ என்னுடன் கானகத்திற்கு வரத்துணிந்து விட்டாய். இதனால் நீ எனக்கு எல்லை யற்ற துன்பங்களைத் தரப் போகிறாய்'' என்று அவளைத் தடுக்கும் எண்ணத்தில் கூறினான்.

அவன் அவதாரம் ஆகையால் பின் வரும் தீங்குகளை, அறிந்திருந்தான். அதனால் அதனைக் குறிப்பாக உணர்த்த வேண்டி காட்டையும், கடலையும் கடக்க வேண்டியிருக்கும் என்பதை உணர்த்தவே முல்லையையும்

Koviloor Digital Library

முத்தையும் உவமித்தானோ என்று எண்ணத் தோன்றுகிறது. காட்டில் விராதனையும், கடல் சூழ்ந்திருக்கின்ற இலங்கையில் இராவணனையும் வெல்லும் தன்மை உண்டாகப் போகிறது என்பதைக் கருதித் தான் இவ்வாறு கூறினானோ எனவும் கருதத் தோன்றுகிறது. இவள் உடன் வந்ததனால் இராமன் பட்ட துயரம் யாவரும் அறிந்தது தானே!

பின்னர் நிகழ்வதனை முன்னோட்டமாகக் கற்பவர்களுக்கு உணர்த்துவது கம்பனுக்குக் கை வந்த கலை. ''நீ அவசரப்பட்டுத் துணிந்து செய்த செய்கை உனக்கு இப்போது மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கலாம். எனவே நீ சிரிக்கிறாய். பின்னால் தீங்கு விளையப் போகிறது. அதனால் நீ துயரப்படப் போவது மட்டுமில்லை, என்னையும் துன்பத்திற்கு உள்ளாக்கப் போகிறாய்'' என்று வருமுன் கூறின தன்மை நோக்கத்தக்கது. பெண்கள் உடன் காட்டிற்கு வந்தால் தன் நினைவு முழுவதும் அவர்களைக் காப்பாற்றுவதிலும், அவர்களுக்கு எந்தத் தீங்கும் நேரா வண்ணம் அவர்களைப் பாதுகாப்பதிலுமே சென்று விடும். தான் நினைத்து வந்த காரியம் நிகழத் தடையாக இருக்கும் என்பது அவனது எண்ணம்.

231. சீதையின் மறுமொழி

கொற்றவன் அது கூறலும், கோகிலம்
செற்றது அன்ன குதலையள் சீறுவாள்,
''உற்று நின்ற துயரம் இது ஒன்றுமே!
என்துறந்த பின்இன்பம் கொலாம்?'' என்றாள். (1928)

(கொற்றவன்-மன்னவன்; கோகிலம்-குயில்; செற்றது-வென்றது; குதலை-மழலை மொழி / சொல் தெரிந்து பொருள் தெரியாதது)

மன்னவன் இராமன் இவ்வாறு கூறியதைக் கேட்ட, குயிலையும் வெல்லும் மழலைச் சொற்களை உடைய சீதை, அவன் பால் சீற்றம் கொண்டு, ''உனக்கு விளைந்த துயரம் நான் உன் கூட வரப்போவதாகிய இது மட்டும் தானா? என்னைத் துறந்து நீ கானகத்திற்குச் சென்றால் எல்லாம் இன்பமாக அமைந்து விடுமா?'' என்று கேட்டாள்.

இங்கே கணவன் என்று கூறாது, மன்னவன் என்று கூறியது நோக்கத்தக்கது. கணவன் நிலையில் நின்று கூறியிருந்தால் அவனுடன் தான் கூட வருவது அவனுக்கு மகிழ்ச்சியளித்திருக்க வேண்டும். அதனால் வாராதே என்று தடுத்திருக்க மாட்டான். அரசன் என்ற நிலையில் இருந்து ஆணை பிறப்பித்தது போலத் தோற்றியதால் கவிஞன் அவனைக் கொற்றவன் என்றே அழைக்கிறான். குயில் இனிமையாக கூவும்; சீறுமா? இங்கே சீதையைச் சீறும் குயிலாக உவமிக்கும் அழகு சுவைக்கத்தக்கது. என்னைவிட்டுப் பிரியாது இருந்தாலும், நீ வனம் புகுவதால் நீ படப்போகும் துன்பம் மிக இருக்கிறது. இதில் நான் வருவதை மட்டும் ஏன் தடுக்கிறாய்? நான் வராவிட்டால் மட்டும் உனக்கு இன்பமே கிடைத்துவிடப்

Koviloor Digital Library

போகிறதா? அப்போதும் துன்பம் தான் அனுபவிக்கப் போகிறாய் என்று குறிப்பால் உணர்த்துகிறாள் திருமகளின் அவதாரமான சீதை என்பதாம்.

காட்டு வாழ்க்கை யாராயிருந்தாலும் துன்பம் தருவது தானே? நான் வராவிட்டால் மட்டும் அது உனக்கு இன்பத்தைத் தந்து விடுமோ? என்று குறிக்கிறாள்சீதை. இதுவும் பின்னர் வரப்போவதற்கு ஒரு முன்னோட்டம்.

232. இராமன் புறப்படுதல்

பிறிதுஓர் மாற்றம் பெருந்தகை பேசலன்;
மறுகி வீழ்ந்து அழ மைந்தரும் மாதரும்,
செறுவின் வீழ்ந்த நெடுந்தெருச் சென்றனன்;
நெறி பெறாமை அரிதினில் நீங்குவான். (1929)

(மாற்றம்-மறுமொழி; மறுகி-மனம் கலங்கி; செறு-வயல் / சேறு; வீழ்ந்த-குழிந்து கிடக்கும்; நெறி-நேர்வழி)

இவ்வாறு சீறிக் கூறிய சீதைக்கு மறுமொழி ஒன்றும் கூறவில்லை பெருந்தகையனான இராமன். இதனைக் கண்டு மனம் கலங்கி விழுந்து அழுது கொண்டிருக்கின்றனர் அயோத்தி நகர மாந்தரும், மகளிரும், அதனால் தெருக்களெல்லாம் சேறாகி வயல் போலக் குண்டும் குழியுமாய்த் தோற்றிற்று. அந்தத் தெரு வழியே சீதையுடன் இராமன் நேர் வழி கிடைக்கப் பெறாததால் மிகச் சிரமப்பட்டுச் சென்றான்.

சீதையின் சீற்றத்திற்கு மறுமொழி கூறாது பேசாது இருந்ததனால் அவனைக் கவிஞன் பெருந்தகை என்று சிறப்பிக்கிறான். மைந்தரும் மாதரும் அழுதமையால் கண்ணீர் வெள்ளம் வீழ்ந்து தெரு சேறு ஆகியது. அதனால் வயல் போல உள்ளது என்பதாம்.

233. மூவரும் செல்லுதல்

''சீரை சுற்றித் திருமகள் பின்செல,
மூரிவில்கை இளையவன் முன் செலக்
காரை ஒத்தவன் போம்படி கண்ட அவ்
ஊரை உற்றது, உணர்த்தவும் ஒண்ணுமோ?'' (1930)

(சீரை-மரவுரி; மூரி-பெரிய / வலிய; கார்-கரிய மேகம்; உற்றது-நேர்ந்த துன்பம்; ஒண்ணுமோ-கூடுமோ?; செல-வர)

''மரவுரியை இடையிலே சுற்றிக் கொண்டிருக்கின்ற சீதை பின்னால் வர, வலிய பெரிய வில்லைக் கையில் ஏந்திய இலக்குவன் முன்னால் செல்லக் கார்மேக வண்ணனான இராமன் இருவர்க்கும் இடையில் செல்லும் தன்மையைக் கண்ணுற்ற அந்நகர மக்கள் அடைந்த துன்பத்தை என்னால் கூறவும் முடியுமோ?'' என்பது கவிக் கூற்று.

Koviloor Digital Library

சீதைக்கு மரவுரியை உடுத்துக் கொள்ளத் தெரியவில்லை. அப்படியே எடுத்து இடையில் சுற்றிக் கொண்டு வருகிறாள் என்பது தோன்ற சீரை சுற்றிய என்றார்; முன் இலக்குவன் செல்லப் பின் சீதை வர, இடையில் இராமன் சென்றான் என்பதாம்; முன்னே இலக்குவனும், அடுத்துச் சீதையும் மூன்றாவதாக இராமனும் சென்றனர் என்றும் கொள்ளலாம். முன்னே இராமபிரானும், நடுவில் சீதையும், பின்னே இலக்குவனும் சென்றனர் என்பது வான்மீகம்.

234. மக்களும் பின் தொடர்தல்

ஆரும் பின்னர் அழுது அவலித்திலர்;
சோரும் சிந்தையர் யாவரும் சூழ்ந்தனர்;
''வீரன்முன் வனம் மேவுதும் யாம்'', எனாப்
போர்ஒன்று ஒல்ஒலி கைம்மிகப் போயினார். (1931)

(அவலித்தல்-துன்புறுதல்; ஒல்லும்-விளையும் / ஏற்படுகின்ற; கைம்மிகல்-அன்பு கடத்தல்; மேவுதல்-அடைதல் / விரும்புதல்)

மூவரும்வனம்புகுதலைத்தடுக்கஇயலாதுஎன்பதைஉணர்ந்தபின்னர், நகர மக்கள் யாரும் அங்கு அழுது புலம்பவில்லை. மேலே என்ன நடக்க வேண்டும் என்பதை உணர்ந்து, சோர்ந்த சிந்தையராய் எல்லோரும் ஒன்று கூடி ஆலோசித்து, ''இராமன் வனம் புகுதற்கு முன்பு, நாம் அனைவரும் அங்கு சென்று சேர்ந்து விடுவோம்'' என்று கூறிப் போரில் ஒலிக்கின்ற விரைவான பேர்ஒலியை எழுப்பிக் கொண்டு போகலானார்கள்.

இராமன் வருவதற்குமுன் நாம் வனம் அடைந்துவிட்டால், அதைத் திருத்திச் செப்பனிட்டு உறைவதற்குத் தகுதியுடைய இடமாக ஆக்கி விடலாம் என்பது அவர்கள் கருத்து.

235. இராமன் தாயருக்குக் கூறுதல்

தாதை வாயில் குறுகினன் சார்தலும்
கோதை வில்லவன் தாயரைக் கும்பிடா,
''ஆதி மன்னனை ஆற்றுமின் நீர்'' என்றான்,
மாதராரும் விழுந்து மயங்கினார். (1932)

(குறுகுதல்-நெருங்கிச் செல்லுதல்; சார்தல்-அடைதல்; கோதை-மாலை; ஆதி-முதன்மை)

மாலையணிந்த வில்லையுடைய இராமன் தன் தந்தை தசரதனது மாளிகை வாயிலை நெருங்கி அடைந்ததும், தன்னுடன் தொடர்ந்து வந்த அறுபதினாயிரம் தாய்மாரையும் வணங்கி, ''நம் முதன்மையான மன்னன் தசரதச்சக்கரவர்த்தியைத் தேற்றிக் கொண்டு இங்கேயே இருங்கள்'', என்று கூறினான்; அவன் குறிப்பறிந்த தாய்மார்கள் அனைவரும் மயங்கி விழுந்து மூர்ச்சித்தனர்.

Koviloor Digital Library

தசரதனைக் கண்டபின் வனம் புகுந்தான் என்று வான்மீகம் கூறும். தசரதனைக் காணாமலேயே இராமன் வனம் புகுந்தான் என்பது கம்பரது மாற்றம்.

236. தாய்மார் வாழ்த்துதல்

ஏத்தினார் தம் மகனை; மருகியை
வாழ்த்தினார்; இளை யோனை வழுத்தினார்;
''காத்து நல்குமின் தெய்வதங்காள்!'' என்றார்;
நாத் தழும்ப அரற்றி நடுங்குவார். (1933)

(நல்குதல்-அருளுதல் / திரும்பத்தருதல்; ஏத்துதல்-துதித்தல்; வழுத்துதல்-பாராட்டுதல்; தழும்பு-காய்ப்பு)

நாக்குத் தழும்பேறிப் போகும்படி கத்தி அழுது நடுக்க முற்றவர்களான தாய்மார்கள், தம் மகனான இராமன் தந்தையை வாய்மையுடையவ னாக்கியதற்காகத், தீங்கு நேராமல் வாழ்க என்று வாழ்த்தினார்கள். சீதையின், கணவனைவிட்டுப் பிரியாத கற்பு நெறி கண்டு போற்றினார்கள்; இலக்குவனை, அணுக்கத் தொண்டனாக இணைபிரியாது செல்லும் செய்கைக்காகப் பாராட்டினார்கள்; ''இவர்கள் மூவருக்கும் எந்தத் துன்பமும் வாராது காத்தருளுங்கள்'' என்று தம் குலதெய்வங்களை எண்ணித் துதித்தார்கள்.

''தீக்கானகத்து உறையும் தெய்வங்காள்! பீமன் தன் கோக்காதலியை குறிக்கொண்மின்'', என்பது நளவெண்பா.

237. தேரில் ஏறிச் செல்லுதல்

அன்னதாயர் அரிதில் பிரிந்த பின்,
முன்னர் நின்ற முனிவனைக் கைதொழாத்
தன்னது ஆருயிர்த் தம்பியும், தாமரைப்
பொன்னும், தானும், ஓர்தேர் மிசைப் போயினான். (1934)

(தாமரைப் பொன்-இலக்குமி; மிசை-மேல்; தொழா-தொழுது; முன்னர்-எதிரில்)

அவ்வாறு தாய்மார்கள் பிரிய மனமில்லாது பிரிந்து போன பின்னர், இராமன் தன் எதிரே நின்ற வசிட்ட முனிவனை வணங்கி, தனது அருமையான உயிர் போன்ற தம்பியான இலக்குவனும், தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி போன்ற சீதையும், உடன்வர தானும், சுமந்திரன் கொணர்ந்த ஒரு தேரின்மேல் ஏறி அமர்ந்து சென்றான்.

நகர் நீங்கு படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

5. தைலம் ஆட்டு படலம் [87 பாடல்கள்]

இராமன் அயோத்தியினின்றும் நீங்கி வனம் புக்க செய்தி கேட்ட தசரதன் இறந்ததனால், அவனது உடல், கேகய நாட்டிற்குச் சென்றிருக்கும் பரத சத்துருக்கனர் திரும்பி வந்து ஈமக்கிரியைகள் நடத்தும் வரை கெடாது இருக்கும் பொருட்டு, எண்ணெய்க் கொப்பரையில் மூழ்கி வைத்திருக்கும் செய்தியை விரித்துரைப்பதால் இது தைலம் ஆட்டு படலம் என்று பெயர் பெற்றது. தைலம்- எண்ணெய்; ஆட்டுதல்-மூழ்குவித்தல். இங்கே ஆட்டுதல் என்பது நீராட்டுதல் என்ற சொல்லில் வரும் பொருள் தாராமல், மூழ்குவித்தல் என்றும் தைலத்தில் இட்டு வைத்தல் என்றும் பொருள் படுதல் காண்க. இது 87 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் இலம்பாட்டுப் படலம் எனவும் குறிக்கப் பெற்றிருக்கிறது. இலம்பாடு என்பது வறுமை, இல்லாமையைக் குறிக்கும் சொல். இராமன் இல்லாமலும், தசரதன் இல்லாமலும், பரத சத்துருக்கனர் இல்லாமலும், நாடே வறிதாயிருந்தது என்பதைக் குறிப்பதால் இப்படலத்திற்கு இந்தப் பெயரும் பொருந்துவதாகிறது. இந்த ஒரே படலம் ''சுமந்திரன் மீட்சிப் படலம்'', ''தசரதன் மோட்சப் படலம்'' என இரண்டாகவும் சில சுவடிகளில் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படலத்துள், இராமனைத் தொடர்ந்து நகர மக்கள் அனைவரும் செல்லுதலும், இருள் பரவ எல்லோரும் ஒரு சோலையை அடைந்து சுமந்திரனுடன் தங்குதலும், நள்ளிரவில் இராமன் சுமந்திரனை அழைத்துத் தேரை நகரத்திற்குத் திருப்பிச் செலுத்திக் கொண்டு போக வேண்டுதலும், சுமந்திரன் வருந்தி மறுக்க, இராமன் அவனைத் தேற்றி இராம, இலக்குவர், சீதை ஆகியோரிடமிருந்து செய்திகளைப் பெற்று, விடை பெற்றுக் கொண்டு தேரைத் திருப்பிச் செலுத்துதலும், இராமன் முதலியோர் இரவில் இரண்டு யோசனை தூரம் நடந்து செல்லுதலும், சுமந்திரன் ஐந்து நாழிகைக்குள் அயோத்தி சென்று வசிட்டனிடம் செய்தி சொல்லுதலும், பின்னர் வசிட்டனுடன் மன்னனை அணுகுதலும், இரதம் வந்தது என்பது அறிந்து தசரதன் கண் விழித்து இராமன் வந்தானோ என்று கேட்டலும், முனிவன் விடை கூறாது அகலுதலும், குறிப்பு உணர்ந்த தசரதன் சுமந்திரனை அழைத்துச் செய்தி அறிந்ததும் மன்னன் உயிர் பிரிதலும், கோசலை, சுமத்திரை, கைகேயி முதலிய அனைவரும் வருந்திப் புலம்புதலும், சுமந்திரன் அச்செய்தி சொல்ல வசிட்டன் வந்து வருந்துதலும், மன்னன் உடலைப் பரத சத்துருக்கனர் வரும் வரை

Koviloor Digital Library

எண்ணெய்க் கடாரத்துள் இட்டு வைக்குமாறு கட்டளை இடுதலும், பரதனுக்கு ஓலை அனுப்புதலும், மகளிரை அந்தப்புரத்திற்கு அனுப்புதலும், சூரியன் தோன்ற சோலையில் துயின்ற மக்கள் கண் விழித்துப் பார்க்க, இராமனைக் காணாது, தேர்ச்சுவடு அயோத்தி நோக்கிப் பதிந்திருந்தமையைக் கண்டு, இராமன் அயோத்திக்குத் திரும்பியிருக்கக் கூடும் என்று கருதி அவர்கள் அயோத்தி திரும்புதலும், அங்கே இராமன் வனம் புகுந்ததையும், மன்னன் வானம் புகுந்ததையும் அறிந்து புலம்புதலும், அவர்களை வசிட்ட முனிவன் தேற்றுதலும் ஆகிய செய்திகள் நன்கு விரித்துரைக்கப் பட்டிருக்கின்றன.

1. இராமனுடன் எல்லோரும் செல்லுதல்

ஏவிய குரிசில்பின் யாவர் ஏகிலார்?
மாஇயல் தானை அம்மன்னை நீங்கலாத்
தேவியர் ஒழிந்தனர்; தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன, உயிர் இலாமையால். (1935)

(மா-பெருமை / சிறந்த; தானை-படை / சேனை; ஒழிந்தனர்-தவிர்ந்தனர்; ஓவியம்-சித்திரங்கள்)

வனம் புகுமாறு ஏவப்பட்ட இராமபிரான் பின்னால் செல்லாதவர்கள் யாருமில்லை. எல்லோரும் சென்றார்கள். சிறந்த பெருமை பொருந்திய படைகள் உடைய அம்மன்னன் தசரதனை விடடு நீங்க முடியாத அவன் மனைவியர்கள் செல்லவில்லை. அந்தத் தெய்வீகம் பொருந்திய அயோத்தி மாநகரத்தில் இருக்கின்ற சித்திரங்கள் உடன் செல்லவில்லை காரணம் அவைகளுக்கு உயிர் இல்லை. எனவே உயிர் உள்ள எல்லாரும் சென்றனர்.

பொதுவாகவே அந்தப்புரத்தை விட்டுச் செல்லாத தேவியர் இந்த நிலையில் தசரதனை விட்டு அகல முடியாது; எனவே அவர்கள் செல்லவில்லை. அயோத்தியை இங்கே தெய்வ மாநகர் என்று குறிப்பது, அது முக்தித் தலங்கள் ஏழனுள் முதலானது என்பதாலும், திருமால் இராமனாக இங்கே அவதாரம் செய்ததாலும் என்க. யார் யார் போனார்கள் என்று விளக்கமாகக் கூறாமல், யார் எவை போகவில்லை என்பதைச் சுருங்கக் கூறித் தெளிய வைத்த தன்மை வியத்தற்குரியது.

2. தேர் செல்லும் காட்சி

கைகள் நீர் பரந்து, கால்தொடரக் கண்உகும்
வெய்யநீர் வெள்ளத்து மெள்ளச் சேறலால்,
உய்யஏழ் உலகும் ஒன்றான நீர் உழல்
தெய்வ மீன் ஒத்தது அச்செம்பொன் தேர் அரோ! (1936)

Koviloor Digital Library

(கைகள்-பக்கங்கள்; கால்-சக்கரம் / வாய்க்கால்; சேறல்-செல்லுதல்; ஒன்றான நீர்-ஊழி வெள்ளம்; தெய்வ மீன்-மச்சாவதாரம்; உழல்தல்-திரிதல்)

இராமபிரான் ஏறிச் சென்ற செம்பொன்மயமான தேர், இரு பக்கங்களிலும் மக்கள் உகுக்கும் வெம்மையான கண்ணீர் வெள்ளம் வாய்க்காலாகப் பெருகிப் பரந்து வருவதால் மிக மெதுவாகச் சென்றது. அது எப்படி இருந்தது? முன்பு பிரளய காலத்தில் ஏற்பட்ட ஊழி வெள்ளத்தில், இவ்வேழ் உலகும் உய்தி பெறும்படி கடல் நீருக்குள் உலவித் திரிந்து கொண்டிருந்த தெய்வத் தன்மை பொருந்திய மீனைப் போன்று மெதுவாகச் சென்றது.

மக்கள் வெள்ளமும், அவர்கள் உகுத்த கண்ணீர் வெள்ளமும் வாய்க்காலாகப் பரவி இருந்ததால் தேர் மெள்ளச் செல்ல வேண்டிய தாயிற்று. பின் இரண்டு அடிகளில் திருமாலின் மற்றொரு அவதாரமான மச்ச அவதாரத்தின் கதை கூறப்படுகிறது. முன்னொரு காலத்தில் குதிரை முகம் கொண்ட அசுரன் இருந்தான். அவன் பெயர் சோமுகன் என்பது. பிரமதேவன் துயில் கொண்டிருக்கையில் அவனிடமிருந்து நான்கு வேதங்களையும் கைப்பற்றிக் கொண்டு கடலுக்குள் சென்று ஒளிந்து கொண்டான். திருமால் வேதங்களை அவனிடமிருந்து மீட்பதற்காகப் பெரிய மீன் வடிவம் (மச்சாவதாரம்) கொண்டு, கடலுக்குள் புகுந்து, அவ்வரக்கனைக் கொன்று, அவ்வேதங்களை நான்முகனிடம் திருப்பி ஒப்படைத்து, மீண்டும் தான் அன்னப் பறவையாய் இருந்து அவ்வேதங்களை நான்முகனுக்கு உபதேசித்தார் என்பது பாகவதம். அம்மீன் மெள்ளச் சுற்றித் திரிந்தது போல இத்தேரும் மெள்ள ஊர்ந்து சென்றது என்பது கருத்து.

3. சூரியன் மறைதல்

மீன்புகல் பெற, வெயில் ஒதுங்க, மேதியோடு
ஆன்புகக் கதிரவன் அத்தம் புக்கனன்;
''கான்புகக் காண்கிலேன்'' என்று கல்அதர்
தான்புக முடுகினன் என்னும் தன்மையான். (1937)

(கல்-மலைகள்; அதர்-வழி; முடுகுதல்-விரைதல்; மீன்-நட்சத்திரங்கள்; புகல்பெறுதல்-தோன்றுதல்; ஒதுங்க-மறைய; மேதி-எருமை; ஆன்-பசு; அத்தம்-அத்தமனகிரி / மாலை / மறைமலை)

''என் குலத்தோன்றலான இராமன் காடு செல்வதைக் காண்பதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது'' என்று சூரியன், மலைகள் நிறைந்த காட்டு வழியே அவனுக்கு முன்பு தான் முதலில் சென்று விட வேண்டும் என்று கருதி விரைவாகச் செல்லும் தன்மையனாய், வெய்யில் மறையவும், விண்மீன்கள் ஆகாயத்தில் தோன்றி ஒளி வீசவும்,

Koviloor Digital Library

எருமைகளும் பசுக்களும் மேய்ச்சல் முடிந்து நகருக்குள் புகவும், தானும் அத்தமனகிரியை அடைந்தான்.

வெயில் மறைவதும், விண்மீன்கள் தோன்றுவதும், எருமைகளும் பசுக்களும் அந்தி மாலையில் தொழுவம் திரும்புதலும், அப்பொழுது சூரியன் மறைதலும் இயற்கையான நிகழ்ச்சிகள் தான். ஆனால் இன்று சூரியன் மறைவதற்கு ஒரு சிறப்புக்காரணம் இருக்கிறது. அது தன்னுடைய வழித் தோன்றலான இராமன் வனம் புகுவதைத் தன்னால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது என்று வருந்தி, சூரியன் அத்தமனகிரியில் மறைந்தான் என்கிறான் கவிஞன். சூரியன் உதிப்பது உதயகிரியில் என்றும், மறைவது அத்தமனகிரியில் என்றும் கூறுவது கவிமரபு.

4. தாமரைகள் குவிதல்

பகுத்தவான் மதிகொடு பதுமத்து அண்ணலே
வகுத்தவாள் நுதலியர் வதனராசி போல்
உகுத்த கண்ணீரினின், ஒளியும் நீங்கின,
முகிழ்த்து அழகு இழந்தன முளரி ஈட்டமே. (1938)

(பதுமம்-தாமரை மலர்; வகுத்த-படைத்த; நுதல்-நெற்றி; வதனராசி-முகங்கள்; முளரி-தாமரைமலர்; முகிழ்த்து-குவிந்து / கூம்பி / சாம்பி; பகுத்த-பகுக்கப்பட்ட / பாதியான; உகுத்தல்-சிந்துதல்; ஈட்டம்-தொகுதி / கூட்டம்)

தாமரை மலரில் வீற்றிருக்கும் பெரியோனான நான்முகனே, அயோத்தி நகர மகளிரின் சிறந்த நெற்றியைப் பாதிச் சந்திரனைப் போலப் படைத்து விட்டிருக்கிறான். அத்தகையவர்களுடைய முகக் கூட்டத்தைப் போலத் தாமரை மலர்க் கூட்டமும், தன்னிடமிருந்து தேனாகிய கண்ணீரைச் சிந்தி, நிறம் இழந்து, அழகு கெட்டுப் போய்க் கூம்பி விட்டன.

முன் பாட்டில் சூரியன் மறைவைச் சொன்ன கவிஞன், சூரியன் மறைந்ததும் இயற்கையாக நிகழ்கின்ற தாமரை குவிதலையும் சொல்லுகிறான். ஆனால் இந்தத் தாமரை மலர்கள் குவிந்து கூம்பி சாம்பிப்போய் இருப்பதை, அயோத்தி நகர மகளிரின் முகக் கூட்டங்கள், இராமன் பிரிவால் வருந்தித் துயருற்றுக் கூம்பிப் போய் இருப்பதற்கு ஒப்பிடுகிறான். பகுத்த வான்மதி என்பது அட்டமிச்சந்திரனைக் குறிக்கும். அது சரியாக எட்டாம் நாள் தோன்றும் பிறைச் சந்திரனை ஒத்திருக்கும் என்பதாம். முன்பு இராமன் முடிசூட்டிக் கொள்ளும் நிகழ்ச்சியைக் காண வந்த மகளிரின் மகிழ்ச்சியுற்ற முகத்தினை, அன்றலர்ந்த தாமரை மலருக்கு உவமித்த கவிஞன், அதை மறக்காது, இப்போது, இராமன் முடிசூடாது அவனைப் பிரியப் போகிறோம் என்ற துயரத்தால் அதே தாமரை மலர் குவிவது போலக் கூம்பி, வாடி, வதங்கிப் பொலிவிழந்து போனது என்று கூறுவது ஒரு நயம். குவிந்த தாமரை வாடிய மகளிர் முகத்துக்கு உவமை.

Koviloor Digital Library

பகுத்தமதி பாதி மதி-பிறைச் சந்திரன்-நெற்றிக்கு உவமை; ''மாக்கடல் நடுவண், எண்ணாட் பக்கத்துப் பசுவெண்திங்கள்தோன்றியாங்குக்கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல்'' என்பது குறுந்தொகை.

5. இரவின் தோற்றம்

அந்தியில் வெயில் ஒளிஅவிய, வானகம்
நந்தல்இல் கேகயன் பயந்த நங்கைதன்
மந்தரை உரையெனும் கடுவின் மட்கிய
சிந்தையில் இருண்டது செம்மை நீங்கியே. (1939)

(அந்தி-மாலைக்காலம்; அவிய-மறைய / கெட; மந்தரை-கூனி; கடு-நஞ்சு; மட்குதல்-ஒளி மழுங்குதல்; நந்தல்இல்-கேடில்லாத; பயந்த-பெற்றெடுத்த; சிந்தை-மனம் / உள்ளம்; வானகம்-ஆகாயம்; உரை-கொடுமொழி; செம்மை-செக்கர்த் தன்மை; இருள்-வஞ்சனை; செம்மை-நேர்மை)

மாலைக்காலத்தில்சூரியனின்ஒளிமறைய, ஆகாயம், செக்கர்த்தன்மை நீங்கி இருள் அடைந்தது போல, குற்றமும் கேடும் இல்லாத கேகய நாட்டு மன்னன் பெற்றெடுத்த கைகேயியின் உள்ளம், மந்தரை என்ற கூனியின் கொடுமொழி என்னும் நஞ்சினால் நேர்மைநீங்கி மங்கிப்போய் ஒளிகுன்றி இருண்டுபோனது.

இரவுவருதலால் செக்கர் நீங்கி இருள் பரவிய வானத்திற்கு, கூனியின் கொடுமொழியால் நேர்மைத் தன்மை நீங்கி இருண்டுபோனகைகேயியின் மனம் உவமை. கூனியின் ஆலோசனையைக் கேட்கும் முன் கைகேயி இயல்பிலேயே செம்மையானமனம் கொண்டிருந்தாள்என்பது ''தேவிதன் தூயசிந்தையும்திரிந்தது'' என்பதனால்பெறப்படும். செம்மையானமனம், கூனியின் வஞ்சனை மொழியாகிய நஞ்சின் கருமை பாய்ந்து இருளாகிப் போனது என்பது ஒரு நயம்.

6. பரந்துமீன் அரும்பிய பசலை வானகம்
அரந்தைஇல் முனிவரன் அறைந்த சாபத்தால்
நிரந்தரம் இமைப்பு இலாநெடுங்கண் ஈண்டிய
புரந்தரன் உருஎனப் பொலிந்தது எங்குமே. (1940)

(மீன்-நட்சத்திரங்கள்; அரும்பிய-தோன்றிய; பசலை-பசுமை நிறம்; அரந்தை-துன்பம்; அறைந்த-சினந்து கூறிய; நிரந்தரம்-எப்பொழுதும்; ஈண்டிய-நிறைந்த; புரந்தரன்-இந்திரன்; பொலிந்தது-விளங்கியது; முனிவரன்-முனிவரில் உயர்ந்தோன்; மின்னுதலின் காரணமாக நட்சத்திரத்துக்கு மீன் என்பது காரணப்பெயர்.

நட்சத்திரங்கள் எங்கும் விரிந்து தோன்றுகின்ற பசுமை நிறமுள்ள ஆகாயம், துன்பமேயில்லாத முனிவர்களில் உயர்ந்தவனான கோதமன்

Koviloor Digital Library

சினந்து கூறிய சுடுமொழியால், எப்போதும் இமைத்தலே இல்லாத நிறைந்த ஆயிரம் கண்களைக் கொண்ட தேவேந்திரனது உருவத்தைப் போலச் சிறந்து விளங்கியது.

நட்சத்திரங்களுடன் பசுமையாக விளங்கும் ஆகாயத்திற்கு, உடம்பெல்லாம் ஆயிரம் கண்களைக் கொண்டு விளங்கும் இந்திரனின் உருவம் ஒப்பு. இந்திரன் கருநிறமுடையவன். இந்திரன் சாபம் பெற்ற வரலாறு அகலிகைப் படலத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. வானம் இந்திரனின் உடம்பு; நட்சத்திரங்கள் அவன் உடம்பில் உள்ள ஆயிரம் கண்கள்.

7. முனிவர்களோடு ஒரு சோலையில் தங்குதல்

திருநகர்க்கு ஓசனை இரண்டு சென்று, ஒரு
விரைசெறி சோலையை விரைவின் எய்தினான்,
இரதம் நின்றுஇழிந்து, பின்இராமன் இன்துணை
உரைசெறி முனிவரோடு உறையும் காலையே. (1941)

(திரு-சிறந்த / செல்வம் மிக்க; விரை-நறுமணம்; செறி-நிறைந்த / மிகுந்த; இழிந்து-இறங்கி; உரை-புகழ்; உறைதல்-தங்குதல்; இன்துணை-நல்ல துணைவர் பாடல் முடியவில்லை தொடர்கிறது. குளகச் செய்யுள்)

செல்வம் மிக்க சிறந்த அழகிய அயோத்தி நகரத்திலிருந்து இரண்டு யோசனை தூரம் சென்று, இராமன், ஒரு நறுமணம் நிறைந்த மலர்களையுடைய சோலையை விரைவாக அடைந்தான்; அங்கே, தான் ஏறி வந்த தேரிலிருந்து இறங்கி, பின்னர் தனது நல்ல துணைவர்களாகிய புகழ் மிகுந்த முனிவர்களோடு அங்கே தங்கியிருந்த பொழுது.

8. தொடர்ந்து வந்தோரும் வெளியே தங்குதல்

வட்டம் ஓர்ஓசனை வளைவிற்றாய் நடு
எள்தனை இடவும் ஓர்இடம் இலாவகை
புள்தகு சோலையின் புறத்துப் போர்த்துஎன
விட்டது; குரிசிலை விடாத சேனையே. (1942)

(குரிசில்-ஆண்களிற் சிறந்தோன் / இராமன்; வட்டம்-சுற்றிலும் / மக்கள் கூட்டம்; புள்-பறவைகள்; புறத்து-வெளியே; போர்த்தல்-சூழ்தல்; விடுதல்-தங்குதல்; ஓர்-சிறிய; தருதல்-நிறைதல்)

இராமனைத் தொடர்ந்து வந்த மக்கள் கூட்டமும், அரசர் கூட்டமுமாகிய சேனைகள், இராமனைவிட்டு நீங்காதவாறு, வட்டமாக, அவன் தங்கியிருந்த, பறவைகள் நிறைந்து விளங்குகின்ற சோலையின் வெளிப் புறத்தைச் சுற்றிலும் ஒரு யோசனைதூரத்திற்கு, நடுவில் எள்ளைப்

Koviloor Digital Library

போட ஒரு சிறிய இடம் கூட இல்லாதபடி அத்தனை நெருக்கமாகச் சூழ்ந்து தங்கியிருந்தனர்.

9. குயின்றன குலம்மணி நதியின் கூலத்தில்,
பயின்று உயர் வாலுகப் பரப்பில், பைம்புலில்,
வயின்தொறும் வயின்தொறும் வைகினார்; ஒன்றும்
அயின்றிலர்; துயின்றிலர்; அழுது விம்மினார். (1943)

(குயின்றன-பதித்தது போன்ற; குலம்-சிறந்த; மணி-இரத்தினங்கள்; கூலம்-கரைகள்; பயின்று-பொருந்தி இருந்த; வாலுகம்-வெண்மணல்; வயின் தொறும்-இடங்களில் எல்லாம்; அயிலுதல்-உண்ணுதல்; விம்முதல்-தேம்புதல் / பொருமுதல்; வைகுதல்-தங்குதல்)

இராமனுடன் கூடத் தொடர்ந்து சென்றவர்கள், சிறந்த மணிகள் பதித்தாற்போன்ற தாமஸ நதியின் இரு கரைகளிலும், பொருந்திய உயர்ந்த வெண்மணற் பரப்புகளிலும், பசியபுல் தரையிலும், இன்னும் கிடைத்த இடங்களில் எல்லாம் தங்கலானார்கள். அவர்கள் இராமன் பிரிவையே எண்ணியிருந்தனர் எனவே சிறிது உணவுகூட உண்ணவும் இல்லை. நெடு நேரம் தூங்காமலும் இருந்தனர். ஆனால் அழுது புலம்பிக் கொண்டே இருந்தனர்.

இங்கு கூறப்படுகின்ற நதி தாமஸ நதி என்று முதல் நூலால் அறிகிறோம்; துயின்றிலர் என்பது உறங்கவில்லை என்று குறிக்காது. நீண்ட நேரம் தூங்காது விழித்திருந்தனர் என்று கொள்ள வேண்டும். காரணம் பின்னால் இவர்கள் நள்ளிரவுக்குப் பின் தூங்கியதால்தான் இராமன் இவர்களைப் பிரிந்து கானகம் செல்ல முடிந்தது என்பதால்.

10. இளமங்கையர் துயிலுதல்

வாவிவிரி தாமரையின் மாமலரின் வாசக்
காவிவிரி நாள் மலர் முகிழ்த்தனைய கண்ணார்
ஆவிவிரி பால் நுரையின் ஆடை அணையாக
நாவிவிரி கூழை இள நவ்வியர் துயின்றார். (1944)

(வாவி-குளங்கள் / நீர் நிலை; விரி-மலர்ந்த / வீசுகிற; காவி-கருங்குவளை / நீலோற்பலம்; நாள்-அன்றலர்ந்த; முகிழ்த்தல்-குவிதல்; நாவி-கத்தூரி; கூழை-முடிசூடாத கூந்தல்; நவ்வி-மான்; ஆவி-நறும்புகை; அணை-படுக்கை; மா-சிறந்த)

குளங்களில் மலர்ந்துள்ள சிறந்த தாமரை மலர் போன்றமுகமும் பூவில் மணம் வீசுகின்ற, கருங்குவளையின் அன்றலர்ந்த மலர் மலர்ந்து குவிதலைப் போன்ற கண்களும் உடைய, இளமான்களைப் போன்ற கண்களையும், கத்தூரி மணம் பூசப்பட்ட கூந்தலையும் உடைய மகளிர், ஆவி பரக்கும் பாலின் வெண்மையான, மென்மையான நுரை போன்ற

Koviloor Digital Library

மெல்லிய ஆடைகளையே தங்களது படுக்கையாகக் கொண்டு உறங்கினார்கள்.

முகிழ்த்தல் என்பது மலர்தல் என்ற பொருளிலும் குவிதல் என்ற பொருளிலும் கையாளப்பட்டிருப்பது கருதத்தக்கது. கூழை என்பது பொதுவாகக் கூந்தலைக் குறிக்கும் என்றாலும் இங்கே முடிசூடாத, அவிழ்ந்து தொங்குகின்ற கூந்தலைக் குறிக்கும். மகளிரின் முகத்துக்குத் தாமரை மலரும், கண்களுக்குக் கருங்குவளை மலரும் உவமைகள். எப்பொழுதும் பஞ்சணையிலேயே படுத்துப் பழக்கப்பட்டவர்கள் இப்போது தரையில், தங்களது மெல்லிய ஆடைகளையே அணையாகக் கொண்டு, துன்பத்தைக் கருதாது உறங்கினர் என்பதாம்.

11. பெரும்பகல் வருந்தினர், பிறங்கும் முலை தெங்கின்
குரும்பைகள் பொரும் செவிலி மங்கையர் குறங்கில்
அரும்புஅனைய கொங்கை, அயில்அம்புஅனைய உண்கண்,
கரும்பனைய செஞ்சொல் நவில் கன்னியர் துயின்றார். (1945)

(அரும்பு-கோங்கு அரும்பு; அயில்-கூரிய; உண்-மை பூசப்பெற்ற; பகல்-பொழுது / நேரம்; குறங்கு-தொடை; பிறங்குதல்-பெருத்தல்; பொரும்-ஒத்த)

கோங்கு அரும்பினையும், தாமரை மலரின் அரும்பினையும் ஒத்த கொங்கைகளை உடையவரும், கூர்மையான அம்பு போன்ற, மை பூசப்பெற்ற கண்களையும், கருப்பஞ்சாறு போன்று இனிமையான சொற்களையும் பேசுகின்ற மணமாகாத இளமங்கையர், தாம் இராமனுடன் கூடத் தொடர்ந்து பெரும் பொழுது நடந்து வந்ததனால் உண்டான பெருங்களைப்பால் வருந்தினர். எனவே, பெருத்த தெங்கங் குரும்பைகள் போன்ற கொங்கைகளையுடைய தங்கள் செவிலித் தாயரின் தொடையில் தலை வைத்துப் படுத்து உறங்கலாயினர்.

செவிலித் தாயர் வயதில் முதியோர் என்பதனைக் குறிக்க, அவர்களது கொங்கைகளைப் பருத்த தெங்கங்குரும்பைக்கும், மணமாகாத கன்னிப் பெண்கள் வயதில் இளையவர் என்பதைக் குறிக்க அவர்களது கொங்கைகளுக்கு தாமரை மலரின் அரும்புகளையும் ஒப்பிட்ட கவிஞரின் கவித்திறம் சுவைக்கத் தக்கது. இப்பாடலில் ஒரு சீர் தவிர ஏனைய சீர்கள் அனைத்திலும் குற்றெழுத்துக்களையே பயன்படுத்தியிருக்கும் கவித்திறம் வியந்து போற்றற்கு உரியது. இது குறுஞ்சீர் வண்ணம் எனப்படும்.

12. ஆடவர் துயில்தல்

பூஅகம் நிறைந்த புளினத் திரள்கள் தோறும்
மா வகிரின் உண்கணர் மடப்பிடியின் வைகச்
சேவகம் அமைந்த சிறுகண் கரிகள் என்னத்
தூஅகல்இல்குந்த மறமைந்தர்கள் துயின்றார். (1946)

Koviloor Digital Library

(புளினத்திரள்-மணற்குன்றுகள் / ஆற்றிடைத் திட்டுக்கள்; மாவகிர்-மாவடுவின் பிளவு; மடப்பிடி-பெண்யானை; தூ-தசை / ஊன் / மாமிசம்; அகல்இல்-அகல்தல் இல்லாத / அகலாத; குந்தம்-எறிபடை / குத்துக் கோல்; மறம்-வீரம்; சேவகம்-உறக்கம் / பாதுகாவல்; வைக-துயில)

தன்னிடத்து மலர்கள் நிறையப் பூக்கப்பெற்ற மணற்குன்றுகள் உள்ள இடமெல்லாம், மாவடுவைப் பிளந்தாற் போன்ற மையூட்டப் பெற்ற கண்களையுடைய பெண்கள், பெண்யானைகளைப் போலத் தங்கியிருக்க, அவர்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் சிறிய கண்களையுடைய களிற்று யானைகளைப் போல, பகைவரைக் கொன்றதால் அந்த எறிபடைகளிலிருந்து தசை அகலாது ஒட்டிக் கொண்டிருக்கும் கூரிய வேற்படைகளை உடைய வீரம் மிக்க ஆடவர்கள், அம்மகளிரைப் பாதுகாத்துக் கொண்டு இடையிடையே உறங்கிக் கொண்டும் இருந்தனர்.

குந்தம் என்பது குத்துக்கோல் எனவும், எறிபடைகளான வில், வேல் எனவும் பொருள்படும்.

13. மகளிர் மகவோடு துயில்தல்

தகவும் மிகுதவமும் இவைதழுவ, உயர் கொழுநர்
முகமும் அவர்அருளும் நுகர்கிலர்கள், துயர்முடுக
அகவும் இளமயில்கள் உயிர்அலசியன அனையார்
மகவு முலைவருட இளமகளிர்கள் துயின்றார். (1947)

(தகவு-நடுவு நிலைமை; தவம்-ஒழுக்கம் / இல்லற ஒழுக்கம்; முகம்-காதல் நோக்கு; வருடுதல்-நெருடுதல் / பற்றுதல்; அலசுதல்-சோர்தல்; முடுகுதல்-மிகுதல்; அகவுதல்-ஆடுதல்; மகவு-குழந்தை; தழுவுதல்-கைக்கொண்டு நடத்துதல்)

நெடுந்தொலைவு நடந்து வந்ததனால் துயரம் மிக, சில கற்புடைய இளம்பெண்கள், நடுவு நிலையும், இல்லற ஒழுக்கமும் கைக்கொண்டு, தங்களது உயர்ந்த குணம் பொருந்திய கணவன் மார்களின் காதல் நோக்கையும் அருள் நோக்கையும் அனுபவிக்காதவர்களாய், பசியால் தங்கள் குழந்தைகள் முலைகளை வருடிக்கொண்டிருக்க, ஆடுதலை உடைய இளமையான மயில்கள் உயிர் சோர்ந்து கிடப்பதைப் போல உடல் வருந்தி உறங்கலானார்கள்.

இங்கு குறிக்கப் பெற்றவர்கள் கணவர்களோடு இனிதாக இல்லறம் நடத்திக் குழந்தைகளைப் பெற்ற கற்புடைய மகளிர் என்பதாம். தம்மைப் பிரிந்து இருக்க இயலாத சிறு குழந்தைகளையும் உடன் ஏந்திக் கொண்டு வந்தனர் என்பது அவர்கள் இராமன் பாற்கொண்ட மிகுந்த அன்பினைப் புலப்படுத்தும். முறை தவறாத இல்வாழ்க்கையைத் தவம் என்பது உணரத்தக்கது. பால் உண்ணும் போதும், உண்ட பின்பும் குழந்தைகள்

Koviloor Digital Library

தாயின் முலைகளை வருடுதல் இயல்பு. ''ஒரு முலை வாய் மடுத்து, ஒரு முலையை நெருடிக் கொண்டு, இரு முலையும் முறை முறையாய் ஏங்கி ஏங்கி இருந்து உணாய்'' என்பார் பெரியாழ்வார்.

14. மயிலும் அன்னமும் போலத் துயிலுதல்

மாகமணி வேதிகையில் மாதவிசெய் பந்தல்
கேகய நெடுங்குலம்எனச் சிலர் கிடந்தார்;
பூகவனம் மூடு படுகர்ப் புளினம் முன்றில்
தோகை இளஅன்ன நிரையில் சிலர் துயின்றார். (1948)

(மாகம்-ஆகாயம் / மேகம்; மணி-அழகிய / நீலமணி; வேதிகை-திண்ணை / மேடை; கேகயம்-மயில்; பூகம்-கமுகம்; படுகர்-நீர்நிலை; புளினம்-மணல் திடர்கள்; நிரை-வரிசை; மூடுதல்-கவிந்து மறைத்தல்; மாதவி-குருக்கத்திக்கொடி; முன்றில்-இடம்)

மேகம் போன்ற நீல நிறத்தாலான மேடையில், குருக்கத்திக் கொடி அமைந்த பந்தலின் கீழ், மயில் கூட்டங்களைப் போலச் சில மகளிர் உறங்கிக்கிடந்தார்கள்; வேறு சில பெண்கள் கமுக வனம் கவித்து மூடியிருக்கின்ற நீர்நிலையை அடுத்த மணல் திட்டுகளினிடத்தில், சிறகுகளையுடைய இளமையான அன்னப்பறவைகள் போல வரிசையாகப் படுத்துக்கிடந்தார்கள்.

நீல மணியாலியன்ற மேடையில் நீல நிறமயில்கள் போன்ற பெண்களும், வெண்மையான மணல் திட்டுக்களில் வெள்ளை நிற அன்னப்பறவைகள் போன்ற பெண்களும் உறங்கினர் என்ற நயம் சுவைக்கத்தக்கது. மகளிர்க்கு மயிலும் அன்னமும் உவமை.

15. கொடிகளாய்த் துவண்டு துயில்தல்

சம்பக நறும் பொழில்களில் தருண வஞ்சிக்
கொம்பு அழுது ஒசிந்தன எனச்சிலர் குழைந்தார்;
வம்பு அளவு கொங்கையொடு வாலுகம் வளர்க்கும்
அம் பவள வல்லிகள் எனச்சிலர் அசைந்தார். (1949)

(சம்பகம்-சண்பகம்; தருண-இளைய; ஒசிந்தன-துவண்டன; வம்பு-கச்சு; வாலுகம்-மணற்பரப்பு; அம்-அழகிய; வல்லி-கொடி; அசைதல்-சோர்தல்; அளவுதல்-கூடுதல்; குழைதல்-வாடிக்கிடத்தல்)

நறுமணமுள்ள சண்பக மலர்ச் சோலைகளில், இளமையான வஞ்சிக் கொடிகள் வருந்தித் துவண்டது போலச் சில மகளிர், வாடிக் கிடந்தனர்; சில மகளிர், கச்சையணிந்த கொங்கைகளோடு, மணல்திட்டுகளில் வளரும் அழகிய பவளக் கொடிகள் போல வருந்திச் சோர்ந்து கிடந்தனர்.

Koviloor Digital Library

வஞ்சிக் கொம்பும், பவளக் கொடியும் மகளிர்க்கு உவமை.

16. குங்கும மலைக்குளிர் பனிக் குழுமி என்னத்
துங்க முலையில் துகள்உறச் சிலர் துயின்றார்;
அங்கை அணையில் பொலிவு அழுங்க முகமெல்லாம்
பங்கயம் முகிழ்த்தன எனச்சிலர் படிந்தார். (1950)

(துங்க-பூரித்த / உயர்ந்த; துகள்உற-பொடிபடிய; பங்கயம்-தாமரை மலர்; முகிழ்ந்தன-குவிந்தன; அழுங்க-கெட்டுப்போக; அம்-அழகிய; அணை-தலையணை / படுக்கை; குழுமி-நிறைந்து; படிதல்-படுத்து உறங்குதல்)

குங்கும மலையில் குளிர்ந்த பனி படிந்தாற் போலச் சில மகளிர் தமது உயர்ந்து பூரித்த, சிவந்த கொங்கைகளில் மணல் துகள் படிந்திருக்கத் தூங்கினார்கள்; இன்னும் சிலர், தாமரை மலர் குவிந்தது போலத் தங்களது அழகு மிக்க முகங்களெல்லாம் பொலிவு கெட்டுப் போகும்படித் தமது அழகிய கைகளையே தலையணையாகக் கொண்டு தரையில் படுத்துக் கிடந்தனர்.

குங்கும மலையில் பனி படிந்தது என்பது மகளிரின் கொங்கைகளில் புழுதி படிந்ததற்கு ஒப்பு; வெண்மையான பனிக்கு வெண்மையான மணல் துகள்களும், குங்கும மலைக்குக் குங்குமம் அப்பிய மகளிர் கொங்கைகளும் உவமை. கம்பன் மகளிர் மகிழ்வோடு இருந்த போதெல்லாம் மலர்ந்த தாமரையையும், துயரோடு இருந்த போதெல்லாம் குவிந்த தாமரையையும், தவறாது ஒப்பிட்டு வருவது கூர்ந்து நோக்குதற்குரியது. பொதுவாக, ஆடவர்களைக் காட்டிலும், மகளிர் துன்பத்தில் மிகவும் சோர்ந்து போவர். எனவே அவர்களின் துயரையே மிகுதியாக எடுத்துக் கூறுதலும் காணத்தக்கது.

17. தொடுத்த கல்லிடைச் சிலர் துவண்டனர் துயின்றார்;
அடுத்த அடையினிற் சிலர் அழிந்தனர் அயர்ந்தார்;
உடுத்த துகில் சுற்றுஒருதலைச் சிலர் உறைந்தார்;
படுத்த குழையிற் சிலர் கண்படை பயின்றார். (1951)

(தொடுத்த-இணைந்த; கல்-பாறை; அடுத்த-வீழ்ந்து கிடந்த; அடை-இலைகள்; படுத்த-பரப்பிய; குழை-தளிர்கள்; கண்படை-கண்படுத்தல் / உறங்குதல்; பயிலுதல்-செய்தல்)

ஒன்றொடொன்று இணைந்திருந்த கற்பாறைகளில் சிலர் துவண்டு உறங்கலானார்கள்; கீழே விழுந்து கிடந்த இலைகளில் சிலர் மனம் அழிந்து அயர்ந்து தூங்கலானார்கள்; தாம் உடுத்தி இருந்த ஆடையின் சுற்றின் ஒரு தலைப்பிலே சிலர் தூங்கலானார்கள்; தாமே பரப்பிய இலை தழை தளிர்களின் மேல் சிலர் கண் துயின்றார்கள்.

Koviloor Digital Library

இவ்வாறு எல்லோரும் கற்பாறைகளிலும், இலை தழைகளின் மேலும், தமது உடையையே பாயாகப் பாவித்தும் அயர்ந்து தூங்கலானார்கள் என்பதாம்.

18. இராமன் சுமந்திரனிடம் கூறுதல்

ஏனையரும் இன்னணம் உறங்கினர்; உறங்கா
மானவனும், மந்திரி சுமந்திரனை ''வா'' என்று
''ஊனம்இல் பெருங்குணம் ஒருங்குடைய உன்னால்,
மேல் நிகழ்வது உண்டு; அவ்வுரை கேள்!'' என, விளம்பும். (1952)

(மானவன்-மனுகுலத்து உதித்தவன் / பெருமை பெற்றவன்; ஊனம் இல்-குறைபாடு இல்லாத / குறைவற்ற; இன்னணம்-இப்படி / இவ்வாறு)

மற்றவர்களும் இவ்வாறு அங்கங்கே தூங்கலாயினர்; உறங்காது விழித்திருந்த, மனுகுலத்தில் உதித்தவனும், பெருமை சான்றவனுமான இராமபிரான், அமைச்சன் சுமந்திரனை வருக என அழைத்து, ''குற்றமற்ற சிறந்த குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற உங்களால் மேலே சில நிகழ்ச்சிகள் நடக்க வேண்டுவது உள்ளது. அது பற்றி நான் கூறப் போவதைக் கேளுங்கள்'', என்று கூறலானான்.

19. ''பூண்ட பேரன் பினாரைப்
போக்குவது அரிது; போக்காது
ஈண்டு நின்று ஏகல்பொல்லாது;
எந்தை! நீ இரதம் இன்னே
தூண்டினை மீள்வது ஆக்கின், சுவடு
தேர்ந்து, என்னை அங்கே
மீண்டனன் என்ன, மீள்வர்; இது
நின்னை வேண்டிற்று'' என்றான். (1953)

இராமன் சுமந்திரனை நோக்கி, ''என் தந்தை போன்றவரே! என்னிடம் இவ்வளவு பேரன்பு கொண்டிருக்கும் இம்மக்களைத் திருப்பிப் போகச் சொல்லுவது இயலாத காரியமாகும்; இவர்களைத் திருப்பி அனுப்பாது நான் இங்கிருந்து கானகம் புகுதல் என்பதும் தீமை பயக்கும். குற்றமாகும். எனவே தாங்கள் தேரினை இப்பொழுதே செலுத்தி அயோத்திக்குத் திரும்பிப் போவதைச்செய்தீர்களானால், அந்தத் தேர்த்தடத்தினைக் கண்டு அறிந்து, நானும் அயோத்திக்குத் திரும்பிச் சென்று விட்டேன் என்று கருதி அவர்களும் திரும்பி வந்து விடுவர்; இதுவே நான் தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுவது'' என்றான்.

இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. மக்கள் தூங்கிக் கொண்டிருக்கையிலேயே இவர்கள் மூவரும் சுமந்திரனோடு தேரில் ஏறித் தேவசுருதி, கோமதி என்னும் இரு நதிகளைக் கடந்து, கங்கைக் கரையை அடைந்து, அங்கே குகனோடு நட்புக்கொண்ட பிறகு அவனுடைய

Koviloor Digital Library

ஓடத்தில் ஏறிய பின்புதான், சுமந்திரனை அயோத்திக்குத் திருப்பி அனுப்புவதாக முதல் நூல் கூறுகிறது.

20. சுமந்திரன் மறுமொழி

செவ்விய குரிசில் கூறத்
தேர்வலான் செப்புவான், ''அவ்
வெவ்விய தாயின் தீயவிதியினில்
மேலன் போலாம்,
இவ்வயின் நின்னை நீக்கி,
இன்னுயிர் தீர்ந்து இன்றுஏகி,
அவ்வயின் அனைய காண்டற்கு
அமைதலால் அளியன்'' என்றான். (1954)

(குரிசில்-மேலானவன்; அளியன்-இரங்கத்தக்கவன்; இவ்வயின்-இவ்விடம்; தீர்ந்தின்று-தீராது / விடாது; வெவ்விய-கொடிய; விதி-ஊழ்; மேலன்-பெரியோன் / மேம்பட்டவன்)

நற்குணங்களில் சிறந்து விளங்கும் மேலோனாகிய இராமன் இவ்வாறு கூறவும், தேர் செலுத்துவதில் வல்லவனான சுமந்திரன் பின் வருமாறு கூறலானான்; ''இந்த நிலையில் இவ்விடத்தில் உன்னைத் தனியாக விட்டு விட்டு, எனது இனிய உயிரைப் போக்கிக் கொள்ளாது, இப்போதே அயோத்தி சென்று அங்கு நீ இல்லாமையால் நிகழப்போகும் கொடிய நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு என்னை ஆளாக்குவிப்பதால் நான் இரங்கத்தக்கவன் ஆவேன்; இதனால் உன்னைக் காட்டிற்கு ஏவிய உன் கொடிய தாய் கைகேயியைக் காட்டிலும், அவளை அவ்வாறு சொல்லச் செய்த ஊழ்வினையைக் காட்டிலும் நான் கொடுமையில் மேம்பட்டவன் ஆகிவிடுவேன் போலும்'' என்றான்.

அங்கே நிகழ இருப்பன தசரதன் உயிர் துறத்தலும், மற்றையோர் துன்பமுமாம்; எனவே இராமபிரானை விட்டுப் பிரிதல் சுமந்திரனுக்கு உடன்பாடு அன்று என்பதை உணர்த்துகிறான்.

21. ''தேவியும் இளவலும் தொடரச் செல்வனைப்
பூஇயல் கானகம் புகஉய்த்தேன் என்கோ?
கோவினை உடன்கொடு குறுகினேன் என்கோ?
யாவது கூறுகேன் இரும்பின் நெஞ்சினேன்''? (1955)

(இயல்-பரவிய; உய்த்தல்-செலுத்துதல்; குறுகுதல்-வருதல்; கோ-அரசன்)

என்னை எதிர்வந்து கேட்பவர்களிடமும், சக்கரவர்த்தியிடமும், ''சீதாதேவியும், தம்பி இலக்குவனும் பின் தொடர்ந்து வர, இராமனைப் பூக்கள் நிறைந்த கானகத்தில் செலுத்தி விட்டு வந்து விட்டேன் என்று

Koviloor Digital Library

கூறுவேனா? அரசனாகிய இராமனை என்னுடன் கூட அழைத்து வந்திருக்கிறேன் என்று கூறுவேனா? வலிய இரும்பு போன்ற நெஞ்சத்தை உடையவனான நான் என்ன சொல்லி எல்லோரையும் தேற்றுவேன்?'' என்றான்.

22. ''தார்உடை மலரினும் ஒதுங்கத் தக்கிலா
வார்உடை முலையொடு மதுகை மைந்தரைப்
பாரிடைச் செலுத்தினேன்; பழைய நண்பினேன்,
தேரிடை வந்தனென், தீதிலேன் என்கோ?''. (1956)

(தார்-ஒழுங்கு / வரிசை; ஒதுங்க-நடக்க; வார்-கச்சு; மதுகை-ஆற்றல் / வலிமை; பார்-தரை)

''மாலையாக ஒழுங்காக வரிசையாகக் கட்டப்பட்டிருக்கும் மலர்களின் மேல் கூட நடக்க இயலாதனவான, கச்சணிந்த கொங்கைகளையுடைய சீதாதேவியோடு, வலிமையும் ஆற்றலும் பெற்ற மைந்தர்களான இராம இலக்குவரை, பழைய நீண்ட கால நட்புக் கொண்டவனாகிய நான் தரையில் கால் நோவ நடக்க வைத்து விட்டு, நான் மட்டும் எந்தத் தீங்கும் இல்லாமல் சுகமாகத் தேரில் ஏறி வந்து சேர்ந்தேன் என்று கூறுவேனோ?'' என்றான்.

சீதையின் மென்மைத் தன்மை புலப்படுத்தப்பட்டது. உங்களைத் தரையிலே நடக்கவிட்டு விட்டு நான் மட்டும் தேரில் ஏறி ஊர் சேர்ந்தால் என்னுடைய அன்பும், நட்பும் என்ன ஆகும்? என வினவினான் என்பதாம்.

23. வன்புலக் கல்மன மதிஇல் வஞ்சனேன்,
என்பு உலப்புஉற உடைந்து இரங்கும் மன்னன்பால்
உன் புலக்கு உரியசொல் உணர்த்தச் செல்கெனோ?
தென்புலக் கோமகன் தூதில் செல்கெனோ? (1957)

(வன்புலம்-கொடிய பொறிகள்; உலப்பு உறல்-அழிதல்; புலக்கு-புலனுக்கு / அறிவோடு கூடிய; தென்புலம்-தெற்குத்திசை; கோமகன்-இயமன்; என்பு-எலும்பு / உடம்பு)

''வலிய ஐம்பொறிகளையும், கல் போன்று இறுகிய மனத்தையும், அறிவற்றவனானவனும் வஞ்சகனானவனுமாகிய நான், உடம்பும் உயிரும் அழியும்படி மனம் உடைந்து வருந்தி உயிர் தரித்திருக்கும் தசரதனிடம் சென்று, நீ இப்போது அறிவோடு கூடிய சொற்களைச் சொன்னாயே, அதைப் போய் அவருக்கு உணர்த்துவதற்காகச் செல்லட்டுமா? அல்லது அவர் உயிரைப் பறிக்கின்ற, தெற்குத் திக்குப்பாலகனாகிய இயமனுடைய தூதுவனைப் போலச் செல்லட்டுமா? எவ்வாறு அங்கு போவேன்?'' என்கிறான்.

சுமந்திரன் அயோத்தி மீண்டு, இராமன் உடன் வரவில்லை என்று தெரிவிப்பானானால் தசரதன் உயிர் பிரியப் போவது உறுதி. எனவேதான் தன்னை இயமனின் தூதுவனாகப் போகச் சொல்லுகிறாயா? என்று

Koviloor Digital Library

இராமனிடம் கேட்கிறான். முதல் பாடலில் இரும்பு நெஞ்சினேன் என்றான்; இங்கே இயமனின் தூதன் என்று தன்னைத் தானே பழித்துரைக்கிறான். இராமன் கூறியவை அவனது உயர்ந்த அறிவுக்கு ஏற்றதாயினும், அதைக் கேட்கும் தசரதனுக்கும், மற்றையோர்க்கும் மரணத் துன்பத்தைத் தரவல்லன என்பதாம்.

24. ''நால்திசை மாந்தரும் நகர மாக்களும்
''தேற்றினர் கொணர்வர் என்சிறுவன் தன்னை''. என்று
ஆற்றின அரசனை, ஐய! வெய்ய என்
கூற்று உறழ் சொல்லினால் கொலை செய்வேன் கொலோ? (1958)

(ஐய-வியப்பு; சிறுவன்-மகன்; ஆற்றின-பொறுத்திருந்த; கூற்று-இயமன்)

''தலைவனே! கோசல நாட்டின் நான்கு திசைகளிலிருந்தும் வந்து குழுமியிருக்கின்ற மக்களும், நம் அயோத்தி நகர மக்களும், நமது மகன் இராமனைத் தேறுதல் செய்து, திருப்பி நகரத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து விடுவர் என்று தேற்றியதால் உயிர் நீங்காது பொறுத்துக் கொண்டிருக்கின்ற நமது சக்கரவர்த்தியை, இப்போது என்னுடைய கொடிய இயமனைப் போன்ற சொற்களைச் சொல்லுவதால் நான் கொலைஞன் ஆகி விடுவேனோ'' என்று வருந்திக் கூறினான்.

நான் போய்ச் சொல்ல இருக்கின்ற சொற்களால் தசரதன் உடனே உயிர் நீத்து விடுவான். எனவே நான் அவனைக் கொன்ற கொலைஞன் ஆகிவிடுவேன் அல்லவா? என்றான். முன் பாடலில் இயமனின் தூதன் என்று கூறியதற்கு விளக்கமாக இங்கே கொலைஞன் என்று கூறுகிறான் என்பதாம்.

25. ''அங்கிமேல் வேள்வி செய்து, அரிதின்பெற்ற, நின்
சிங்கஏறு அகன்றது'' என்று உணர்த்தச் செல்கெனோ?
எங்கள் கோமகற்கு இனி என்னில், கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால். (1959)

(அங்கி-அக்கினி / ஓமகுண்ட நெருப்பு; கடைமுறை-முடிவாக; அரிதின்-கடுமையாக / பெறாப்பேறு; சிங்கஏறு-ஆண் சிங்கம்)

''அறுபதினாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் இயற்றி, அசுவமேதம், புத்திரகாமேட்டி முதலிய வேள்விகளைச் செய்து, அருமையாகப் பெற்றெடுத்த உன்னுடைய ஆண் சிங்கம் போன்ற இராமன் நம்மை விட்டுக் காட்டுக்குச் சென்று விட்டான் என்று தசரதனிடம் சொல்லுவதற்காக நான் செல்லட்டுமா? கைகேயி தன் வரத்தால் தசரதனைத் துன்புறுமாறு தான் செய்தாள். என்றாலும் அவன் உயிர் தரித்திருந்தான். நான் இவ்வாறு சென்று சொல்வேனானால் தசரதன் உயிர்

Koviloor Digital Library

பிரிந்துவிடும். எனவே கைகேயி என்னை விட நல்லவளாகி விடுவாள் போலும்'' என்றான் சுமந்திரன்.

கைகேயியின் சொற்கள் தசரதன் உயிரைப் பறிக்காததாலும், சுமந்திரனது சொற்கள் நிச்சயம் தசரதனது உயிரைப் பறித்துவிடும் என்பதாலும், கைகேயி, சுமந்திரனை விட நல்லவள் ஆகிவிடுவாள் என்பது கருத்து.

26. முடிவுற இன்னனம் மொழிந்த பின்னரும்,
அடிஉறத் தழுவினன்; அழுங்கு பேர்அரா
இடிஉறத் துவளுவது என்னும் இன்னலன்,
படிஉறப் புரண்டனன், பலவும் பன்னினான். (1960)

(முடிவுற-கடைசியாக / முழுவதும்; தழுவுதல்-பற்றுதல்; அழுங்குதல்- வருந்துதல்; அரா-பாம்பு; படி-தரை; பன்னுதல்-கூறுதல் / ஒன்றையே திரும்பத் திரும்பத் சொல்லுதல்)

இவ்வாறு முற்றும் முடிவாகச் சொல்லிய பின்னரும், இராமன் தன் நிலையிலிருந்து மாறாததால், இடியோசை கேட்ட பெரிய பாம்பு துவளுவதைப் போல் இராமன் பாதங்களில் விழுந்து பற்றிக் கொண்டும், தரையில் விழுந்து புரண்டும் மிகவும் வருந்தி, மீண்டும் மீண்டும் இராமன் அயோத்திக்குத் திரும்பிவர வேண்டும் என்று பல முறை சொல்லிப் புலம்பினான்.

பெருந்துன்பத்தைக் குறிக்க இடியோசை கேட்ட நாகத்தை உவமை கூறுவது கவிமரபு.

27. இராமன், சுமந்திரனை எடுத்துத் தழுவுதல்

தடக்கையால் எடுத்து, அவன்தழுவிக் கண்ணநீர்
துடைத்து, வேறுஇருத்தி, மற்றுஇனைய சொல்லினான்
அடக்கும் ஐம்பொறியோடு, கரணத்து அப்புறம்
கடக்கும் வால் உணர்வினுக்கு அணுகும் காட்சியான். (1961)

(கரணம்-மனம்; வால்உணர்வு-தூய மெய்யுணர்வு; வேறு-தனிமை)

ஐம்பொறிகளையும் அடக்கியாளும் வல்லமையோடு, மனம் முதலிய அந்தக் கரணங்களுக்கும் அப்பால் கடந்து நிற்கின்ற தூய மெஞ்ஞானத்திற்கு மட்டுமே தோற்றமளிக்கின்ற பரம்பொருளின் அம்சமான இராமபிரான், தனது அகன்ற பெரிய கைகளினால், கீழே விழுந்து புரண்டு கொண்டிருந்த அந்தச் சுமந்திரனைத் தூக்கி, அவனைத் தன் மார்போடு இறுகத்தழுவி, அவனுடைய கண்களிலிருந்து பெருகுகிற கண்ணீரைத் துடைத்து, அவனைத் தனியாக வேறு இடத்திற்கு அழைத்துச் சென்று உட்காரவைத்து, பின்வருவனவற்றைக் கூறத் தொடங்கினான்.

Koviloor Digital Library

இலக்குவனும் சுமந்திரனைப் போலவே, இராமன் வனம் புகுதலை விரும்பவில்லை. எனவே அவனிடம் இருந்து பிரித்துக் கூட்டிச் சென்று தனியாகப் பேசினான் என்பது பெறப்படுகிறது. தன் கருத்துக்கு அவனை இணங்கச் செய்து அவனைத் திருப்பி அனுப்ப வேண்டுவதால் சீதா இலக்குவர்களைத் தவிர்த்துத் தனியே அழைத்துச் சென்றான் என்பதாம். பொறி புலன்களுக்கும் அப்பாற்பட்டு, மனம் போன்ற அந்தக் கரணங்களையும் கடந்து நிற்பவனாய், யோகிகளின் மெய்யுணர்வுக்கு மட்டுமே புலப்படுபவனாய் இருக்கும் பரம்பொருள் என்பது இராமனைக் குறித்ததாகும். ஐம்பொறிகளுக்கும் மனத்திற்கும் பரம்பொருள் எட்டாதவன் என்பதை ''புலன் ஐந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி'' என்பார் நம்மாழ்வார். அந்தக் கரணங்கள் என்பது புத்தி, சித்தம், அகங்காரம் என்பதாம். பகுத்தறிவது புத்தி என்றும், சிந்திப்பதற்கு ஆதாரமாக உள்ளது சித்தம் என்றும், சிந்தித்தபின், விரும்பவோ, வெறுக்கவோ தூண்டுவது அகங்காரம் என்றும் மூன்று கரணங்களைக் கூறுவர்.

28. பிறத்தல் ஒன்று உற்றபின் பெறுவயாவையும்;
திறத்துளி உணர்வது ஓர்செம்மை உள்ளத்தாய்!
புறத்துஉறு பெரும்பழி பொதுவின்று எய்தவும்,
அறத்திறம் மறத்தியோ? அவலம் உண்டு எனா. (1962)

(அவலம்-துன்பம்; திறம்-முறை / தன்மை / கூறுபாடு; செம்மை-நடுவு நிலைமை; பொதுஇன்று-பொதுவாக அல்லாத / சிறப்பாக)

''எல்லாவற்றையும் முறைப்படி உணர்ந்து அறியும் நடுவு நிலை தவறாத நேர்மையான உள்ளத்தை உடைய சுமந்தரனே! பிறப்பு என்று ஒன்று வந்து விட்டால் அதில் நிகழும் இன்பம், துன்பம் எல்லாமும் வந்து சேரத்தானே செய்யும்? அப்படி இருக்க, நான் வனம் புகுவதால் துன்பம் உண்டாகும் என்று கருதி, நான் வனம் புகாது இருந்தேனேயானால் அதனால் தந்தை சொல் தவறியவன் என்ற பெரும்பழி என்னை மட்டுமே தனியாக வந்து அடையும் என்பதை- தருமத்தின் தன்மையை மறந்து விட்டாயோ? என்றான்.

''காடு செல்லும் துன்பம் வருகிறதே என்பதற்காகத் தந்தை சொல்லைக் காப்பாற்றாதவன் என்ற பெரும்பழி என்னை வந்து அடைவதை நீ ஏன் மறந்து விடுகிறாய்? எனவே என்னைத் தடுக்காதே'' என்கிறான் இராமன். துன்பத்திற்குப் பயந்து தருமத்தை விடலாமோ? அதனால் பெரும்பழி தானேவந்து சேரும்? எனவே துன்பத்தை ஏற்றுக் கொள்ளுதலே அறமாகும் என்றான் என்பதாம்.

29. முன்பு நின்று இசை நிறீஇ முடிவு முற்றிய
பின்பும் நின்று உறுதியைப் பயக்கும் பேர்அறம்

Koviloor Digital Library

இன்பம் வந்து உறும்எனில் இயைவது, ஆயிடைத்
துன்பம் வந்து உறும்எனில் துறக்கலாகுமோ? (1963)

(நிறீஇ-நின்று / நிறுவி / நிலைபெறுவித்து; முடிவுமுற்றுதல்-இறத்தல்; உறுதி-நன்மை; பேர்-சிறந்த; இசை-புகழ்; துறக்கல்-கைவிடுதல்; முன்பு-முதன்மை)

''சிறந்த அறம் என்பது, தன்னை மேற்கொண்டவர்க்கு முதன்மையாகி நின்று, புகழை நிலை நிறுத்தி, வாழ்நாள் முடிந்து இறந்த பின்பும் கூட நிலைத்து நின்று, நன்மையாகிய வீடுபேற்றைத் தரும் தன்மையது. அவ்வாறிருக்க, அறம் செய்வதால் இன்பம் வந்த பொழுது அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதும், ஒரு வேளை துன்பம் வந்து சேர்ந்தால் அதனைப் பழித்து, ஏற்றுக் கொள்ளாது விலகிப் போகுவதும் முறையாகுமா?'' என்றான்.

துன்பம் வரும் என்று அறத்தினைக் கை விடுதல் தகாது. இறுதி இரண்டு அடிகள் ''நன்றாங்கால் நல்லவாக் காண்பவர், அன்றாங்கால் அல்லற்படுவது எவன்?'' என்னும் குறளை *(379)* நினைவுபடுத்துதல் காண்க.

30\. நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேர்உற
மறப்பயன் விளைக்குறும் வன்மை அன்று; அரோ
இறப்பினும், திருஎலாம் இழப்ப எய்தினும்
துறப்பிலர் அறம் எனல் சூரர் ஆவதே. (1964)

(நிறம்-ஒளி; படைக்கலம்-ஆயுதங்கள்; நிறம்-மார்பு; மறம்-வீரம்; துறத்தல்-கை விடுதல்; மறப்பயன்-வெற்றி; விளைக்குறும்-உண்டாக்குகின்ற; சூரம்-வீரம்; சூரர்-வீரர்)

''ஒளி பொருந்திய பெரிய ஆயுதங்கள் தன் மார்பின் மீது நேரே வந்து பாய்வதனால், அதனை எதிர்த்து வீரம் காட்டி அதனால் விளையும் வெற்றியைச் சிறந்த வீரம் என்றோ, அதனைச் செய்தவர் சிறந்த வீரர் என்றோ கருதப்பட மாட்டார்கள். தன் உயிரே போயினும், தன்னுடைய செல்வங்கள் எல்லாவற்றையும் இழக்க நேரிட்டாலும், அறத்தைக் கைவிடாது துன்பத்தை எதிர் கொள்பவர்களே மிகச்சிறந்த வீரர் என்று புகழ்ந்து பேசப்படுவர்''.

போர்க்களத்தில் வீரம் காட்டுதல் வீரம் ஆகாது. வாழ்க்கையில் தன் நிலையில் தாழாது அறத்தின் நின்று வழுவாது மனம் தளராது காரியம் இயற்றுபவரே வீரர் எனப்படுவர் என்று இராமன் கூறுகிறான்.

31\. ''கான்புறம் சேறலில் அருமை காண்டலால்
வான்பிறங்கிய புகழ் மன்னர் தொல்குலம்
யான்பிறந்து, அறத்தின் நின்று இழுக்கிற்று என்பவோ?
ஊன்திறந்து உயிர்குடித்து உழலும் வேலினாய்!'' (1965)

Koviloor Digital Library

(ஊன்-உடல்; திறந்து-பிளந்து; உழலும்-திரியும்; புறம்-அயல்; அருமை-துன்பம் / கொடுமை; வான்-மேலுலகம்; பிறங்கிய-விளங்கிய; தொல்-பழைய; இழுக்குதல்-தவறுதல்).

''பகைவர்களின் உடலைப் பிளந்து உயிரைப் பருகத் திரியும் கூர்மையான வேற்படையை உடைய சுமந்திரனே! நான் வனம் புகுவதால் உண்டாகின்ற துன்பத்தை நீ கருதுவது தகாதது. நான் வனம் புகுவதைத் தவிர்த்து நாடு திரும்பினால் மேலுலகத்திலும் விளங்குகின்ற புகழையுடையவர்களானவரும், பழமையான எனது சூரிய குலத்தில் பிறந்த மன்னர்களும். பிறந்த குலத்தில் பிறந்ததனால் நான் அறத்திலிருந்து தவறியவன் என்று உலகத்தார் பழி கூறுவரல்லவா?''

தசரதன், ககுத்தன் முதலியோர் பகைவருடன் போர் செய்து, தேவருலக அரசாட்சியைத் தேவர்களுக்கே மீட்டுக் கொடுத்தனால் அவர்களது சூரிய குலத்தின் புகழ் வான் பிறங்கிய புகழ் ஆயிற்று. அறம் தவறிய குற்றம் என் குலத்திற்கே இழுக்கைத் தருவதன்றோ? எனவே அது தகாது என்றான்.

32. ''வினைக்கு அருமெய்ம்மையன் வனத்து விட்டனன்
மனக்குஅரும் புதல்வனை'' என்றல், மன்னவன்
தனக்கு அருந்தவம்; அதுதலைக் கொண்டு ஏகுதல்
எனக்கு அருந்தவம்; இதற்கு இரங்கல் எந்தை! நீ''. (1966)

(வினைக்குஅரு-செய்தற்கரிய; விட்டனன்-செலுத்தினான்; இரங்கல்-வருந்துதல்; மெய்ம்மை-சத்தியம் / வாய்மை)

''என் தந்தை போன்றவனே! பிறரால் செய்தற்கரிய வாய்மையை நிலை நிறுத்துதற்காகத் தனது குலக்கொழுந்தாகியவனும், தன் மனத்திற்குப் பிடித்தவனுமான அருமையான புதல்வன் இராமனை, தசரதன், வனம் புகுதற்கு ஆணையிட்டான் என்று உலகோர் கூறுவது அவனுக்குப் பெரிய தவம் போன்றதாகும். அது போல, அவனுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு, நான் வனம் புகுதல், எனக்கு உரிய பெருந்தவமாகும். இதில் துன்பம் நேருமே என்று, நீ வருத்தப்படாதே என்றான் இராமன்.

வாய்மை காத்தலால் தந்தை புகழுறுவார்; அவர் சொற்காத்தலால் நான் புகழடைவேன். இதற்காக நீங்கள் வருந்தாதீர்கள் என்றான் இராமன். பிறர் செய்தற்கரிய காரியத்தில் உறுதியாக நின்று செய்து முடித்தல் தவம் எனக்கருதப்படுகிறது என்பதாம்.

33. ''முந்தினை முனிவனைக் குறுகி, முற்றும்என்
வந்தனை முதலிய மாற்றம் கூறினை;
எந்தையை அவனொடும் எய்தி, ஈண்டுஎன்
சிந்தனை உணர்த்துதி'' என்று செப்புவான். (1967)

(முந்துதல்-விரைதல்; குறுகி-அடைந்து; வந்தனை-வணக்கம்; மாற்றம்-உரைகள்; சிந்தனை-நினைவு)

Koviloor Digital Library

இராமன் சுமந்திரனை நோக்கி, ''நீ இங்கிருந்து விரைவாகச் சென்று வசிட்ட முனிவனை அடைவாயாக! அடைந்து அவருக்கு என்னுடைய வணக்கம் முதலிய நல்லுரைகளை முழுவதும் தெரிவிப்பாயாக! பின்னர் அவனையும் அழைத்துக் கொண்டு என் தந்தையை அடைந்து, இங்கு இவ்வனத்தைப் பற்றிய என்னுடைய நினைவுகளை அவனைக் கூறச் சொல்லுவாயாக!'' என்றான்.

வனவாசம் பற்றி மாறுபட்ட கருத்துச் கொண்ட சுமந்திரன், தன் மனக்கருத்தைத் தசரதனுக்குச் சுமந்திரனால் நேராகச் சொல்ல முடியாது என்று கருதியதால், வசிட்ட முனிவனை உடன் அழைத்துக் கொண்டு போய்அவனைச்சொல்லச்சொல்லுவாயாக!என்றான்இராமன்என்பதாம். முனிவன் சொல் வல்லான். செவ்வியறிந்து சொல்லித் தெளிவிக்க வல்லவன் என்பதால் என்பதாம். அதுதான் முறையும் கூட.

34. ''முனிவனை, எம்பியை முறையில்நின்று அரும்
புனித வேதியர்க்கும், மேல்உறை புத்தேளிர்க்கும்
இனியன இழைத்தி'' என்று இயம்பி, ''எற்பிரி
தனிமையும் தீர்த்தி'' என்று உரைத்தி தன்மையால்''. (1968)

(புனித-தூய; மேல்-வானில்; புத்தேளிர்-தேவர்கள்; எற்-என்னை; முனிவனை-முனிவனிடம்; இனியன-நல்லன; தன்மை-முறை)

என் தம்பி பரதன் அரச நீதி நெறி முறைகளின்று வழுவாது அரசு செய்யுமாறும், அரிய தூய அந்தணர்களுக்கும் மேலுலகத்தில் வாழும் தேவர்களுக்கும் அவரவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதான செயல்களைத் தவறாது செய்வாயாக என்றும் கூறி, ''என்னைப் பிரிதலால் அவனுக்கு உண்டாகும் தனிமைத் துயரையும் தீர்ப்பாயாக! என்று நான் வசிட்ட முனிவனை வேண்டிக் கொண்டதாக, முனிவனிடம் முறையோடு சொல்லுவாயாக!'' என்றான் இராமன்.

தேர்ச் சாரதியாகிய சுமந்திரனைக் கொண்டு இளவரசனுக்கு அறிவுரை கூறக்கூடாது. எனவே வசிட்ட முனிவனைக் கொண்டு இவ்வாறு கூறுமாறு செய்யும்படி இராமன் சுமந்திரனை வேண்டிக் கொண்டான் என்பதாம். வேதியர்க்கு இனியன வேள்வி இயற்றுதல் தேவர்களுக்கு இனியன பூசனை வழுவாது செய்வித்தலுமாம். அறவுரையும் அறிவுரையும் கூறுதற்குத் தகுதியும் உரிமையும் படைத்தவன் குலகுருவும், புரோகிதனுமான வசிட்டனே. ஆதலால் இராமன் அவ்வாறு கூறினான் என்க.

35. ''வெவ்வியது அன்னையால் விளைந்தது ஈண்டு ஒரு
கவ்வை'' என்று இறையும் தன்கருத்தில் நோக்கலன்,
''எவ்வருள் என்வயின் வைத்தது, இன்சொலால்
அவ்வருள், அவன்வயின் அருளுக!'' என்றியால். (1969)

Koviloor Digital Library

(வெவ்வியது-கொடியது; கவ்வை-துன்பம்; இறையும்-சிறிதும்; கருத்தில்-மனத்தில்; நோக்குதல்-நினைவிற் கொள்ளுதல்; வயின்-இடம்)

''என்சிற்றன்னைகைகேயியின்கொடிய செயலால் இங்கே ஒருதுன்பம் விளைந்து விட்டது என்று சிறிதும் தன் கருத்தில் மாறுபாடு கொள்ளாமல், என்னிடம் எவ்வளவு அருள் காட்டி வந்தானோ, அதே போன்ற அருளையும், இனிய சொற்களையும், என் தம்பி பரதனிடத்தும் காட்டியருளுமாறு வசிட்ட முனிவனிடம் கூறுங்கள்'' என்றான் இராமபிரான்.

முன்பாட்டில் ''பரதனுக்குத் தான் கூற விழைந்தவற்றை, முனிவர் மூலமாகக் கூறும்படி, சுமந்திரனை இராமன் வேண்டிக் கொண்டது போலவே, இப்பாடலிலும் முனிவன் தன்னிடம் எத்தகைய அருள் கொண்டிருந்தானோ, அதே அருளைத் தன் தம்பியாகிய பரதனிடமும் காட்ட வேண்டும், அவனது தாயினால் ஒரு துன்பம் விளைந்து விட்டதே என்று கருதி அவனைப் புன் சொற்களால் இகழாமல் இருக்க வேண்டும்'' என்று கூறு கிறான் இராமன்.

36\. ''வேண்டினென் இவ்வரம்'' என்று மேலவன்
ஈண்டு அருள் எம்பிபால் நிறுவி, ஏகினை;
பூண்ட மாதவனோடும் கோயில் புக்கு, இனிது
ஆண்தகை வேந்தனை அவலம் ஆற்றிப் பின். (1970)

(மேலவன்-முனிவன்; ஈண்டு-நிறைந்த; நிறுவி-நிலைக்கச் செய்து; பூண்ட-மேற்கொண்ட; கோயில்-மாளிகை; அவலம்-துயரம்; ஆற்றுதல்-தணிவித்தல்)

''நீ இங்கிருந்து சென்று, எல்லோர்க்கும் மேலானவனும், அரிய தவத்தை மேற்கொண்டிருப்பவனுமான வசிட்ட முனிவன் மாளிகையை அடைந்து, என்னிடம் அவர் எவ்வளவு அருள் காண்பித்தாரோ, அதே அன்பினிலும் அருளிலும் சற்றும் குறையாமல், என் தம்பி பரதன் பாலும் நிலையாகக் கொள்ள வேண்டும். இது தான் நான் அவரிடம் வேண்டிக் கேட்டுக் கொள்ளும் வரம் என்று அவரிடம் முதலில் கூறி, அதன் பின், இனிமையான, ஆண்மைத்தன்மை நிறைந்த தசரதச்சக்கரவர்த்தி என்னைப் பிரிதலால் படும் துயரத்தைத் தணிவித்து, பின்னர் (பாடல் முடியவில்லை. தொடர்கிறது குளகச் செய்யுள்)

37\. ''ஏழ்இரண்டு ஆண்டும் நீத்து, ஈண்டவந்து, உனைத்
தாழ்குவன் திருவடி, தளரல் ஈண்டு எனச்
சூழிவெம் கடகளிற்று அரசற் சொல்லிப் பின்,
வாழி மாதவன் சொலால் மனம் தெருட்டுவாய்'' (1971)

(ஈண்ட-விரைவாக; ஈண்டு-இங்கே; சூழி-முகபடாம் / நெற்றிப் பட்டம்; வெம்-கொடிய; கடம்-மதம்; தெருட்டுதல்-தெளிவித்தல்)

Koviloor Digital Library

''பதினான்கு ஆண்டுகளை வனத்தில் கழித்து விட்டு, காலம் தாழ்த்தாது விரைவாக வந்து, உன்னுடைய திருவடிகளைத் தொழுது வணங்குவேன், அங்கு தளர்ச்சி இல்லாது மனம்தேறி இருப்பாயாக!'' என்று, முகபடாம் அணிந்த கொடிய மதத்தைச் சொரிகின்ற யானைப் படையை உடைய தசரதச் சக்கரவர்த்திக்கு, வசிட்ட முனிவன் சொற்களால் சொல்லி, கலங்கியிருக்கின்ற அவனது மனத்தைத் தேற்றுவீர்களாக!'' என்றான்.

பதினான்கு ஆண்டுகள் என்றால் மிகுதியான காலம் எனத் தோற்றும் என்பதால் ஏழிரண்டு ஆண்டுகள் என்றான் என்பதாம். சிலம்பில், கோவலனும் கண்ணகியிடத்தில் முப்பது காத தூரம் என்னாது, ஆறு ஐங்காதம் எனச் சொல்லியது இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

38. ''முறைமையால் எற்பயந் தெடுத்த மூவர்க்கும்
குறைவுஇலா என்நெடு வணக்கம் கூறிப் பின்
இறைமகன் துயர்துடைத்து இருத்தி மாடு'' என்றான்
மறைகளை மறைந்துபோய் வனத்து வைகுவான். (1972)

(பயந்த-பெற்றெடுத்த; நெடு வணக்கம்-சாஷ்டாங்க நமஸ்காரம்; இறை மகன்-தசரதன்; மாடு-அருகே / பக்கத்தில்)

வேதங்களுக்கெல்லாம் எட்டாதவனாய், மறை பொருளாய் விளங்கி, இன்று தன் அவதாரத்தால் மானுடனாகிக் காட்டில் தங்கியிருப்பவனான இராமன், சுமந்திரனை நோக்கி, ''என்னைப் பெற்றெடுத்து வளர்த்த தாய் மார்களான, கோசலை, கைகேயி, சுமத்திரை ஆகிய மூவருக்கும் குறைவுபடாத முறைமையான என்னுடைய நெடிய வணக்கத்தைச் கூறுங்கள். பின்னர் சக்கரவர்த்தியாகிய தசரதனது துயரைத்தைப் போக்கி, அவனை விட்டு அகலாது, அவன் அருகிலேயே இருப்பீராக!'' என்று இறுதியாகக் கூறி முடித்தான்.

நெடு வணக்கம் என்பது உடலின் எட்டு உறுப்புகளும் நிலம் தோய விழுந்து வணங்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் என்பதாம். இராமன் மீண்டும் அவர்களை நேரில் பார்த்து வணங்கப் போவது அடுத்த பதினான்கு ஆண்டுகள் கழித்துத்தான். எனவே ''நெடு வணக்கம்'' என்றான் என்றலுமாம்.

39. ''ஆள்வினை ஆணையில் திறம்பல் அன்று'' எனாத்
தாள்முதல் வணங்கிய தனித்திண் தேர்வலான்
''ஊழ்வினை வரும்துயர் நிலை'' என்று உன்னுவான்
வாழ்வினை நோக்கியை வணங்கி நோக்கினான். (1973)

(திறம்பல்-மாறுபடுதல்; ஆள்வினை-பணியாளர்க்குரிய செயல் / ஆட்பட்டவர்கள் செயல் / அடியார் பணி; திண்-வலிய; ஊழ்-விதி; நோக்கி-கருதுபவனான / நோக்குதல் உடையவள்)

Koviloor Digital Library

''அடியார்களின் பணி, தலைவன் இட்ட கட்டளையினின்றும் மாறுபடுதல் அன்று என்று எண்ணித்தான் இராமன் கருத்துக்கு உடன் பட்டதைத் தெரிவிக்கும் எண்ணத்தால், அவனுடைய திருவடிகளின் கண் விழுந்து வணங்கிய ஒப்பற்ற வலிய தேரினைச் செலுத்துவதில் வல்லவனாகிய சுமந்திரன், மக்களுக்கு வருகின்ற துயரநிலைக்குக் காரணம் அவர்களின் ஊழ்வினைப் பயனே'' என்று நொந்து நினைந்து, உலகில் உள்ள எல்லோர்க்கும் நல்வாழ்வினையே கருதுகின்ற சீதாதேவியையும் வணங்கி, அவள் ஏதும் கூற முற்படுவாளோ என்று அவளைச் சிறிது நோக்கினான்.

இங்கே தேர்வலான் என்பது தேரைச் செலுத்துவதில் வல்ல சுமந்திரன் என்றும், ஆராய்ந்து தெளிந்து அறவுரை சொல்லுவதில் வல்லவன் என்றும் இருபொருள் படுதலைக் காண்க. வாழ்வினை நோக்கி என்று சீதாதேவியைக் குறிப்பதும் ஒரு அருமையான சொல்லாட்சி. உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் நல்ல வாழ்வையே கருதும் நோக்கமுடைய சீதாதேவி என்பது கருத்து. இராமன் வேண்டுகோளுக்குத் தான் இசைந்ததைக் குறிப்பால் உணர்த்தும் பொருட்டு அவன் திருவடிகளில் வணங்கினான் சுமந்திரன். தான் நாட்டிற்குத் திரும்பிச் செல்லுவதால், சீதாதேவி ஏதேனும் செய்தி சொல்லி அனுப்பக் கூடும் என்று கருதி அவளது முகத்தைக் கூர்ந்து நோக்கினான் என்பதாம். பண்டு அமைச்சர்களே அரசர்களுக்குத் தேர் ஒட்டும் சாரதியாகவும் செயல் பட்டனர் என்பது தெரியவருகிறது.

40. சீதை சொல்லுதல்

அன்னவள் கூறுவாள், ''அரசர்க்கு அத்தையர்க்கு
என்னுடை வணக்கம் முன்இயம்பி, யான்உடைப்
பொன்நிறப் பூவையும், கிளியும் போற்றுக என்று
உன்னும் என்தங்கையர்க்கு உணர்த்துவாய்'' என்றாள். (1974)

(பொன்-அழகிய; பூவை-நாகணவாய்ப் பறவை; போற்றுதல்-பாதுகாத்தல்)

சீதை சுமந்திரனை நோக்கி, ''தசரதச்சக்கரவர்த்திக்கும், மூன்று அத்தைமார்களுக்கும் என்னுடைய வணக்கத்தை முதலில் கூறுங்கள். பின்னர், நான் வளர்த்து வருகிற அழகிய நிறத்தையுடைய நாகணவாய்ப் பறவையையும், கிளிகளையும் நன்கு பாதுகாத்து வரும்படி, என்னையே நினைத்துக் கொண்டிருக்கும் என்தங்கையர்களான ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி முதலியவர்களுக்குக் கூறுவீராக!'' என்றாள்.

அவளுடைய தங்கையர் என்பது ஊர்மிளை சனக மன்னன் மகள் இலக்குவன் மனைவி; மாண்டவியும் சுருதகீர்த்தியும் சனக மன்னனின் இளவல் குசத்துவசனின் புதல்வியர். மாண்டவியின் கணவன் பரதன்;

Koviloor Digital Library

சுருதகீர்த்தியின் கணவன் சத்துருக்கனன் என்பதாம். சீதையின் பேதைமைத் தன்மையை / குழந்தை மனத்தை இச்செய்யுள் புலப்படுத்துகிறது.

41. சுமந்திரன் வருந்துதல்

''தேர்வலான் அவ்வுரை கேட்டுத் தீங்கு உறின்
யார்வலார்? உயிர் துறப்பு எளிதன்றே!'' எனாப்
போர்வலான் தடுக்கவும் பொருமி விம்மினான்;
சோர்விலான் அறிகிலாத் துயர்க்குச் சோர்கின்றான். (1975)

(சோர்வு-பிழை / வருந்துதல்; பொருமுதல்-விம்முதல் / தேம்புதல் / குமுறுதல் / குமைதல்)

தேர் செலுத்துவதில் வல்லவனான சுமந்திரன், சீதை இவ்வாறு கூறியதைக்கேட்டு, ''இராமன் உடன்வரத்தானும் வனம் செல்லுகிறோமே என்ற தளர்ச்சி சிறிதும் இல்லாமலும், பின்னால் விளையப்போகும் துயரங்களை அறியாத பேதைப் பெண்ணாக இருக்கிறாளே என்று நினைத்தும் சுமந்திரன், விதிவசத்தால் இவளுக்கு வனத்தில் ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அதைத் தாங்கிக் கொள்ளவோ தடுத்துக்கொள்வதற்கோ இவளால் முடியுமோ?'' இந்நிலைகளைக் காணாது நாம் முன்னரே உயிர் துறந்து விடுவோம் என்றாலும் அதுவும் அவ்வளவு எளிதானது அல்லவே?'' என்று வருந்துகின்ற போது, போரில் வல்லவனான இராமபிரான் சுமந்திரனின் வருத்தத்தைத் தடுக்க முயன்றும் கூட, அதையும் மீறித் தேம்பி அழலானான்.

உயிரை விட்டு விடுவது என்பது நாம் நினைத்த உடன் நிகழ்கின்ற எளிய செயலன்று. வரையறுக்கப்பட்ட வாழ்நாள் முடிந்ததன் பின்னால் தான் உயிர் போகும் என்பது கூறப்பட்டது.

42. இலக்குவனிடம் செய்தி கேட்டல்

ஆறினன் போல் சிறிதுஅவலம் அவ்வழி
வேறிலா அன்பினான், ''விடைதந்தீக'' என,
ஏறுசேவகர் தொழுது இளைய மைந்தனைக்
''கூறுவது யாது?'' என, இனைய கூறினான். (1976)

(அவலம்-துன்பம்; இனைய-இவற்றை; ஏறுதல்-மேன்மேலும் வளர்தல்; சேவகன்-வீரன் / வீரம் உடையவன்; ஆறுதல்-தணிதல்; தந்து ஈக-தருக)

வேறுபாடற்ற, எப்போதும் ஒரே தன்மைத்தான தன்மையினை எல்லோரிடமும் கொண்ட சுமந்திரன், இராமன் கூறிய தேறுதல் வார்த்தைகளால் சிறிது துயரம் தணிந்தவன் போல் ஆகி, இராமபிரானை நோக்கி வணங்கி ''விடை தருக'' என்று கேட்டு மேலும் மேலும்

Koviloor Digital Library

வளர்கின்ற வீரத்தையுடைய அவனிடம் விடைபெற்றுக் கொண்டு, இளையவனான இலக்குவனை நோக்கி, ''நான் அயோத்திநகர் அடைந்து கூற வேண்டிய செய்தி யாது?'' என்று கேட்கவும், இலக்குவன் பின் வருவனவற்றைக் கூறலானான்.

இராமபிரான் தேறுதல் கூற அவன் துயரம் தணிந்தது போலக் காணப்பட்டானே அன்றி, அவன் துயரம் முழுவதும் ஆறவில்லை என்பதைக் குறிக்கவே ''ஆறினன் போல்'' என்றான்.

43. இலக்குவன் கூறியவை

''உரைசெய்து எம்கோமகற்கு உறுதி ஆக்கிய
தரைகெழு செல்வத்தைத் தவிர, மற்றொரு
விரைசெறி குழலிமாட்டு அளித்த மெய்யனை
அரைசன் என்று இன்னம் ஒன்றுஅறையற் பாலதோ?''. (1977)

(தரை-நிலம் / பூமி / உலகம்; விரை-நறுமணம்; செறி-நிறைந்த; குழல்-கூந்தல்; மெய்யன்-வாய்மையாளன்; கோமகன்-அரசன்)

எங்களுடைய அரசனான இராமபிரானுக்கு ''உனக்குத் தான் இவ்வரசு என்று கூறி அதை அரசவையில் பலர் முன்னிலையில் உறுதிப்படுத்திய பின்னரும், அவ்வுலக அரசாட்சியை அவனுக்குக் கிடைக்காத படி தவிர்த்து, அதனை விலக்கி, வேறு ஒருத்தியான, நறுமணம் வீசுகின்ற அடர்ந்த கூந்தலையுடைய கைகேயிக்குக் கொடுத்த வாய்மையாளனான தசரதனை இன்னும் அரசன் என்று கருதுவது தகுமோ? அவ்வாறு கருதி அவனுக்குச் செய்தி சொல்லி அனுப்புதல் என்பது இயலுமோ?'' இயலாது.

அரசன் என்றால் அது இராமனையே குறிக்கும். தசரதன் அரசன் என வழங்கப்படுதற்குத்தகுதியற்றவன்என்பது இலக்குவன்கருத்து. மெய்யன் என்பது இகழ்ச்சிக் குறிப்பு. கைகேயியை வேறு எவளோ ஒருத்தி என்று கூறுவது, அவனது சினத்தின் மிகுதியைப் புலப்படுத்தும். தந்தையை அரசன் அல்லன் என்பதும், தாயை எவளோ ஒருத்தி என்பதும் நோக்கத்தக்கது.

44. ''கானகம் பற்றி நற்புதல்வன் காய்உணப்
போனகம் பற்றிய பொய்இல் மன்னற்கு, இங்கு
ஊன்அகம் பற்றிய துயரொடு இன்னும் போய்
வானகம் பற்றிலா வலிமை கூறு'' என்றான். (1978)

(போனகம்-உயர்ந்த உணவு / சிறந்த அறுசுவை உண்டி; பற்றுதல்-விரும்பி உண்ணுதல்; அகம்-மனம்)

''நற்குணங்களையுடைய புதல்வனாகிய இராமன், கானகம் புகுந்து, அங்கே கிடைக்கின்ற, காய், கனி, கிழங்கு முதலியவற்றை உண்டு கொண்டிருக்க, அரண்மனையில் வசித்துக் கொண்டு, அறுசுவை

Koviloor Digital Library

உண்டியை விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டு இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும், சத்திய சீலனான தசரதனிடம், இங்கு நாங்கள் உடலைப் பற்றிய உயிரைக் கையில் கொண்டு, துயரத்தோடும் உயிரோடும் இருப்பதாகவும், இன்னும் விண்ணுலகு எய்தவில்லை என்ற எங்கள் ஆற்றல் பற்றியும் தெரிவிப்பாயாக'' என்றான்.

''போனகம் என்பது அறுசுவை உண்டியைக் குறிக்கும். அவை உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என நால்வகைப்படும். ''உண்டி நாலுவிதத்தில் அறுசுவைத் திறத்தினில்'' என்பது பெரியபுராணம். ''அறுசுவை நால்வகைப் போனகம்'' என்பது மணிமேகலை. மனத்துயரோடு காட்டில் இருந்தாலும், காய்கனிகளையே உண்டு வாழ்ந்தாலும், நாங்கள் இன்னும் இறந்து போகவில்லை என்று தெரிவி என்பது ஒரு பொருள். மற்றொரு பொருள். அறுசுவை உண்டி சுவைத்து அரண்மனையில் வாழ்ந்து கொண்டு தசரதன் இன்னும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறானே அவனுடைய வலிமையை அவனுக்கே எடுத்துக் கூறு'' என்றும் கூறுவர். பொய்இல் மன்னற்கு என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

45. ''மின்னுடன் பிறந்த வாள் பரதவேந்தற்கு, என்
மன்னுடன் பிறந்திலேன்; மண்கொண்டு ஆள்கின்ற
தன்னுடன் பிறந்திலேன்; தம்பிமுன் அலேன்
என்னுடன் பிறந்த யான் வலியன் என்றி'' ஆல். (1979)

(மின்-ஒளி; மன்-மன்னன்; மண்-நிலம்; தம்பி-சத்துருக்கன்; முன்-அண்ணன்; வலியன்-சுகமாகவே இருப்பவன்)

''மின்னல் போல் ஒளியுடன் கூடிய வாட்படையுடன் பிறந்த வலிமை பெற்ற பரதனுக்கும், என் மன்னனாகிய இராமனுக்கும் நான் உடன் பிறந்தவனல்லன்; இந்நிலவுலகின் அரசுரிமையைக் கொண்டு ஆட்சி செய்து வருகின்ற பரதனுக்கும் நான் உடன் பிறந்தவன் அல்லேன்; அவன் தம்பியாகிய சத்துருக்கனனுக்கும் நான் அண்ணன் அல்லேன். நான் என்னுடன் மட்டும் தான் பிறந்தேன். நான் தனியன்; ஆனால் எதனையும் எதிர் கொள்ளும் வலிமை மிக்கவன் என்று கூறு'' என்றான்.

இராமனுக்கு முடி சூட்டிப்பார்க்க முடியவில்லையே என்ற இயலாமையினால் தான் இராமனுக்கு உடன் பிறந்தான் இல்லை யென்றும்; வஞ்சகத்தால் தாயின் உதவியோடு அயோத்தியை ஆள்கின்ற உரிமையைப் பெற்றதனால் அவள் மீது வெறுப்புக் கொண்டு தான் பரதனுக்கு உடன் பிறந்தான் இல்லை யென்றும், பரதனுடனேயே ஒட்டி உறவாடுவதால் சத்துருக்கனனும் அப்படிப்பட்டவனே ஆவான் என்று கருதி அவனையும் தன் உடன் பிறந்தான் அல்லன் என்றும், விரக்தியால், கோபத்தால், இகழ்ச்சியால், வெறுப்பால் இவ்வாறு கூறினான் என்பதாம்.

Koviloor Digital Library

சீதாதேவியும், இலக்குவனும், சுமந்திரனிடம் செய்தி கூறி அனுப்பியதாக வான்மீகத்தில் கூறப்படவில்லை.

46. சுமந்திரன் திரும்பிச் செல்லுதல்

ஆரியன், இளவலை நோக்கி, ''ஐய! நீ
சீரிய அல்லன செப்பேல்'', என்ற பின்
பாரிடை வணங்கினன் பதைக்கும் நெஞ்சினன்
தேரிடை வித்தகன், சேறல் மேயினான். (1980)

(ஆரியன்-உயர்ந்தோன் / மேலோன்; சீரிய-நல்லன / நேர்மையான / சிறந்தன; வித்தகன்-தேர்ந்தவன் / அறிஞன் / திறமையாளன்; பார்-நிலம்; சேறல்-செல்லுதல்; மேவுதல்-தொடங்குதல்; பதைத்தல்-நடுங்குதல் / துடித்தல்; இளவல்-தம்பி / இலக்குவன்)

எல்லோர்க்கும் எல்லாவற்றிற்கும் மேலானவனான இராமபிரான், தன் தம்பி இலக்குவனை நோக்கி மேலும் ஏதேனும் சொல்லாதிருக்கும் பொருட்டு ''தம்பி! நீ சிறந்தன அல்லாத சொற்களைக் கூறாது இருப்பாயாக'' என்ற பின், இலக்குவன் சிறிது தணிந்தான். தேரோட்டுவதில் திறமையாளனான சுமந்திரன், இராமனையும் இருவரையும் பிரிய வேண்டுமே என்று துடிக்கின்ற நெஞ்சத்தோடு, இராமபிரானைத் தரையில் விழுந்து வணங்கி, தேரைச் செலுத்திச் செல்ல முற்பட்டான்.

47. கூட்டினன் தேர்ப்பொறி; கூட்டி கோள் முறை
பூட்டினன் புரவி; அப்புரவி போம்நெறி
காட்டினன்; காட்டித் தன் கல்வி மாட்சியால்
ஓட்டினன் ஒருவரும் உணர் வுறாமலே. (1981)

(பொறி-உறுப்புக்கள் / இயந்திரம்; கூட்டுதல்-இணைத்தல்; கோள்-கொள்ளுதல் / அனுபவம்; புரவி-குதிரை; காட்டுதல் -குறிப்பால் அறிவித்தல்; நெறி-வழி; உணர்தல்-அறிதல்; மாட்சி-மேம்பாடு)

தேரை நோக்கிச் சென்ற சுமந்திரன் இயந்திரங்களையும் உறுப்புக்களையும் சரியாகத் தேருடன் இணைத்தான்; குதிரைகள் ஏற்றுக் கொள்ளும் முறைப்படியும், தன் அனுபவ முறையாலும் குதிரைகளைத் தேர்களில் பூட்டினான்; அந்தக் குதிரைகள் செல்ல வேண்டிய வழியைக் குறிப்பால் உணர்த்தினான்; தனது தேர்த்தொழில் கல்வி மேம்பாட்டால், அங்கு தூங்குகின்றவர்கள் விழித்தெழாவண்ணம் ஓசையில்லாமலும், அதே சமயம் அவர்கள் தேர் எந்தப் பக்கம் போய் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் படி தேர்ச்சுவடுகள் தெரியும் படியும், மிகச் சாமர்த்தியமாகத் தேரை ஓட்டிச் சென்றான்.

Koviloor Digital Library

கூட்டினன் என்பது பண்ணுதல், இணைத்தல், சித்தம் செய்தல் என்ற பொருள்களைத் தந்து நின்றது. எல்லாக் குதிரைகளையும் தேரில் எல்லாப்பக்கங்களிலும் பூட்டி விட முடியாது. எந்தக் குதிரை எந்தப் பக்கமாகப் பூட்டப்பட வேண்டும் என்று ஒரு நியதி உண்டு. வலமும் இடமுமாகிய பக்கங்களில், அவ்வவை நிற்றற்குரிய முறைப்படி பூட்டினான் என்பதைக் கொள்முறை பூட்டினன் என்றார். ஓசையில்லாமலும் ஓட்ட வேண்டும்; சுவடு தெரிகின்றாற் போலும் ஓட்ட வேண்டும். இதற்குத் தனித்திறமை வேண்டும். அதனைத் தான் தன் கல்வி மாட்சியால் ஒட்டினன் என்றார். குதிரைக்குச் சேணம் இட்டுக் கண்ணை மறைப்பது உண்டு அல்லவா? அதனைத் தான் போம் நெறி காட்டினன் என்றார். யாவர்க்கும் புலனாகும்படி சுவடு தோன்றவும், ஆனால் ஓசை இல்லாமலும் திறமையாகத் தேரைச் செலுத்திச் சென்றான் சுமந்திரன் என்பதாம்.

48. இராமன் வனத்துள் புகுதல்

தையல்தன் கற்பும், தன் தகவும், தம்பியும்
மையறு கருணையும், உணர்வும், வாய்மையும்
செய்ய தன் வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே. (1982)

(தகவு-நடுவு நிலைமை; மைஅறு-குற்றமற்ற; உணர்வு-அறிவு; செய்ய-நல்ல / செப்பமான; சேமம்-பாதுகாப்பு; அல்-இரவு; நாப்பண்-நடுவில்; அல்லின் நாப்பண்-நள்ளிரவு)

இராமபிரான் தன்னுடைய நடுவு நிலைமை என்ற அருங்குணத்தோடும், தன் துணைவியாகிய சீதா தேவியின் கற்பு என்னும் பெருங்குணத்தையும், தன் தம்பியாகிய இலக்குவனையும், குற்றமற்ற கருணை, மேலான அறிவு, மெய்ம்மை ஆகிய அருவப் பொருள்களையும், தனது செப்பம் அமைந்த கோதண்டம் என்னும் உருவப் பொருளையும் தனக்குப் பாதுகாவலாகக் கொண்டு, நள்ளிரவில் வனத்திற்குள் புகுந்தான்.

மெல்லியல்புடைய சீதாதேவிக்கு வலிய அவள் கற்பும், வலியவனான இலக்குவனுக்கு வில்லைத் தவிர வேறு படைக்கலம் இல்லாததால் செப்பனிடப்பட்ட வில்லும், இராமனுக்கு அவனுடைய அருங்குணங்களாகிய நடுவு நிலைமை, கருணை, அறிவு, வாய்மை இவைகளையுமே அவர்களுக்குப் பாதுகாப்பு என்றார். சிலப்பதிகாரத்தில் ''பேணிய கற்பும் பெருந்துணையாக்க'' கண்ணகி போனாள் என்பார் இளங்கோவடிகள். நள்ளிரவில் செல்லும் போது உள்ளும் புறமும் பாதுகாப்பு வேண்டுமல்லவா? எனவே உள்பாதுகாப்பு அவர்களின் அருவக்குணங்கள்; வெளிப்பாதுகாப்பு, தானும், தம்பியும், தையலும் ஒருவர்க்கொருவர் பாதுகாப்பாம் என்பது ஒரு நயம்.

Koviloor Digital Library

49. நிலவு தோன்றுதல்

பொய்வினைக்கு உதவும் வாழ்க்கை
அரக்கரைப் பொருந்தி, அன்னார்
செய்வினைக்கு உதவும் நட்பால்
செல்பவர்த் தடுப்பது ஏய்க்கும்
மை விளக்கியதே அன்ன
வயங்கு இருள்துரக்க, வானம்
கை விளக்கு எடுத்தது என்ன
வந்தது கடவுள் திங்கள். (1983)

(பொய் வினை-வஞ்சகச் செயல்கள்; ஏய்க்கும்-போல விளங்கும் / ஒக்கும்; விளக்குதல்-துலக்குதல்; துரக்க-ஒட்ட; கடவுள்- தெய்வத் தன்மை; பொருந்தி-சேர்ந்து)

வஞ்சகச் செயல்களான கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் செய்கைகளையே தொழிலாகச் செய்து கொண்டிருக்கும் அரக்கர்களுடன் சேர்ந்து கொண்டு, இருட்டு அவர்களுக்கு உதவி செய்து நட்புரிமை பெறுகிறது. இராமன் முதலானோர் இப்போது அவ்வரக்கர்களை அழிக்கச் செல்வதால் அவர்களைத் தடுக்கும் பொருட்டு மேலும் இருட்டு கரியதான அஞ்சன மை போல விளங்குகிறது. ஆனால் விண்ணுலகில் தேவர்கள் தங்கள் பொருட்டு அரக்கர்களை அழிக்கச் செல்லும் இராம இலக்குவர்களுக்கு உதவவேண்டும் என்னும் கருத்தால், தாங்களே தங்கள் கைகளில் சிறு விளக்கினை ஏந்தி வருவது போல தெய்வத்தன்மையுடைய சந்திரன் தோன்றியது.

நள்ளிரவு நேரம் என்பதால் கரிய இருட்டு. இது அரக்கர்கள் தீ வினை புரிகின்ற நேரம். எனவே இந்நள்ளிருள் கருமை அவர்களுக்கு நட்பு; ஆனால் இராமன் முதலியோர் இத்தீவினை புரியும் அரக்கர்களை அழித்துக் கருமை நீக்கி வெளிச்சம் கொணரச் செல்லுகிறார்கள். எனவே அவர்களுக்கு நள்ளிரவிலும் வெளிச்சம் தேவை என்பதால் விளக்கு ஏற்றி வைத்தாற் போல, சந்திரன் உதயமானான் என்றார். இயற்கையாக நிகழும் சந்திரோதயத்தை இராமனுக்கு உதவுவதற்காகத்தான் தோன்றினான் என்று கூறுவது ஒரு நயம். இதே கருத்தையே திருத்தக்க தேவரும் கூறுகிறார். ''ஏறு அனார்க்கு இருளை நீங்கக் கை விளக்கு ஏந்தி, அங்கு வீறுஉயர் மதியம் தோன்ற'' என்பது சீவகசிந்தாமணி. அரக்கர்களுக்கு இருள் நட்பு; இராமன் முதலியோர்க்கு நிலவு நட்பு என்பதாம். கை விளக்கு என்ற சொல்லாட்சி நோக்கத்தக்கது. மக்களுக்குக் கையில் ஏந்திய விளக்கு கை விளக்கு எனப்படுதல் போல, வானம் தன் கையில் ஏந்திய திங்கள் அதற்குக் கை விளக்கு என்பதாம். இன்னும் ஒன்று. வானத்திற்குச் சூரியன் தான் பெரிய விளக்கு. எனவே சந்திரனைக் கை விளக்கு என்றார்.

Koviloor Digital Library

50. மருமத்துத்தன்னை ஊன்றும்
மறக்கொடும் பாவம் தீர்க்கும்
உரும்ஒத்த சிலையினோரை
ஒருப்படுத்து, உதவி நின்ற
கருமத்தின் விளைவை எண்ணிக்
களிப்பொடு காணவந்த
தருமத்தின் வதனம் என்னப்
பொலிந்தது தனிவெண் திங்கள். (1984)

(மருமம்-உயிர் நிலை / மார்பு; ஊன்றும்-குத்தித் தாக்கும்; பாவம்-தீவினை; உரும்-இடி; ஒருப்படுத்து-இசைவித்து / உடன்படச் செய்து; பொலிதல்-அழகாக விளங்குதல்)

அப்பொழுது தோன்றிய ஒப்பற்ற வெண்மையான சந்திரன் தருமதேவதையின் அழகிய முகம் போல இருந்தது. எப்படி? தன்னுடைய உயிர் நிலையைக் குத்தித்தாக்குகின்ற, வீரம் வாய்ந்த தீவினை புரிகின்ற, அரக்கனை ஒழிப்பதற்காக வரும் இடி போன்ற முழக்கமுடைய, வில்லினை ஏந்திய இராம இலக்குவர்களைக் கானகத்தை நாடி வரும்படி இசைவித்துத் தனக்கு உதவி புரிந்த தன்னுடைய வினைப்பயனை எண்ணி மகிழ்ச்சியோடு அவ்விருவரையும் காண்பதற்காக எழுந்து வந்த அறக்கடவுளின் முகம் போல, ஒப்பற்ற வெண்மையான சந்திரன் அழகாக விளங்கித் தோன்றினான்.

தீவினையையே செய்யும் அரக்கரை அழிப்பதற்காகப் புறப்பட்டு வந்து கானகத்தில் புகுந்த இவர்களைக் காணவந்த அறக்கடவுளின் முகம் போலத் தோற்றிற்றுத் தனி வெண் திங்கள் என்பதாம். மறம் தீர்த்து அறம் காக்கத் தோன்றிய இராமன், வனம் புகுந்தால்தான், தன் குறிக்கோள் முற்றுப் பெறும். எனவே அவனைக் கானகத்திற்கு அனுப்பித் தனக்கு உதவியது தன்னுடைய நல்வினையே என்று கருதியதாம் தருமதேவதை. எனவே மகிழ்ந்து அவரைக் காண வந்த போது அதன் முகம் பொலிவுற்று விளங்கியதாம்.

51. மலர்கள் குவிதல்

காம்புஉயர் கானகம் செல்லும் கரியவன் வறுமை நோக்கித்
தேம்பின குவிந்த போலும் செங்கழுநீரும், சேரைப்
பாம்பின தலைய ஆகிப்பரிந்தன குவிந்து சாய்ந்த
ஆம்பலும், என்றபோது நின்றபோது அலர்வது உண்டோ? (1985)

(காம்பு-மூங்கில்; உயர்-ஓங்கி வளர்ந்துள்ள; வறுமை-எளிமை; தேம்பின, பரிந்தன-வருந்தினவாய்; போது-மலர்கள்; சேரைப் பாம்பு-சாரைப்பாம்பு; நின்ற-மிகுந்துள்ள)

Koviloor Digital Library

மூங்கில் உயர்ந்து ஓங்கி வளர்ந்துள்ள காட்டிற்குள் செல்லும் கரிய மேனியனான இராமபிரானின் எளிமைத் தன்மையைக் கண்டு, செங்கழுநீர்ப்பூக்களும் வருந்தினவாய்க் குவிந்திருந்தன போல இருந்தன; சாரைப் பாம்பின் தலை போன்ற தோற்றத்தை உடைய ஆம்பல் பூக்களும், வருந்தினவாய்த் தலை குவிந்து சாய்ந்திருந்தன என்றால், எஞ்சிய மிகுதியுள்ள தாமரை போன்ற மலர்கள் மலர்வது உண்டோ? அவைகளும் கூம்பித்தானே இருக்கும்?

செங்கழுநீர்ப் பூக்கள் பகலில் மலர்ந்து இரவில் குவியும் தன்மையன; ஆம்பல் பூக்கள் இரவில் மலரும் தன்மையுடையன. ஓரறிவுயிருடைய அஃறிணை உயிர்களும் துயருற்று வருந்தித் தேம்பிக் குவிந்தன என்பது கருத்து. சந்திரனைக்கண்டு மலரும் இயல்புடைய ஆம்பல் மலரேகுவிந்தது என்றால், சந்திரனைக் கண்டு குவியும் மலர்கள் மலரவா செய்யும்? அவைகளும் குவிந்து தானே கிடக்கும் என்பது எச்சப்பொருள். தாமரையும் பகலில் மலர்ந்து இரவில் குவிவது. மலராத அல்லிப்பூவுக்குச் சாரைப் பாம்பின்தலை உவமை. ஆம்பல் இரவில் மலர்வது. படம் எடுக்காத பாம்பு சாரை; போது என்ற சொல் பொழுது என்ற பொருளில் காலத்தைக் குறித்து அக்காலத்தே மலரும் மலருக்குப் பெயராய் நின்றது. மலர் மலர்வதை வைத்துக் காலை, உச்சி, மாலை, முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு என்று காலங்களை அறிதல் முன்னோர் வழக்கு.

52. மூவரும் வழி நடத்தல்

அஞ்சனக் குன்றம் அன்ன அழகனும், அழகன் தன்னை
எஞ்சலில் பொன்போர்த்துஅன்ன இளவலும், இந்து என்பான்
வெஞ்சிலைப் புருவத்தாள் தன் மெல்லடிக்கு ஏற்ப, வெண்நூல்
பஞ்சிடைப் படுத்தாலன்ன வெண்ணிலாப் பரப்பப் போனார். (1986)

(இந்து-சந்திரன்; வெம்-விரும்பத்தக்க; பஞ்சு-நூலாடை; இடை-தரை; பருத்தல்-விரித்தல்; எஞ்சல்இல்-குறைவற்ற / மாற்றுக்குறையாத)

சந்திரன் என்று சொல்லப்படுகின்ற நிலவு, எல்லோராலும் விரும்பத்தக்கதும், கொடியதுமான வில் போன்ற புருவத்தை உடைய சீதாதேவியின் மென்மையான அடிகள், பரற்கற்களில் நடக்க இயலாது என்று கருதி, அவளுக்கு ஏற்றபடி வெண்மையான பஞ்சின் நூலாலான ஆடையைத் தரையெங்கும் விரித்து வைத்தாற் போன்று, தனது நிலவொளியைப் பரப்பிக் கொண்டிருக்க, மை போலும் கரிய நிறமுடைய மலை போன்ற அழகனான இராமனும் அவனுக்கு எவ்விதத்திலும் குறைவற்ற-அவனை விட்டு நீங்குதல் இல்லாத, மாற்றுக் குறையாத பொன்னால் மூடியது போன்ற தோற்றமுடைய இலக்குவனும் சென்றார்கள்.

சீதாதேவி சந்திர குலத்தவள். எனவே அவளுடைய மெல்லிய பாதங்கள் வருந்தக் கூடாது என்று எண்ணிச் சந்திரன் தன் நிலவொளியைப் பஞ்சு

Koviloor Digital Library

போலத் தரையெல்லாம் பரப்பி வைத்திருந்தான். அதனைச் சூரிய குலத்துதித்தவர்களான இராமனும் இலக்குவனும் அனுபவித்துக் கொண்டே சென்றனர் என்றது ஒரு நயம். காட்டில் பரவிய நிலவொளி வெண் பஞ்சைப் பரப்பியது போன்று இருந்தது என்பதாம்.

53. சீதாதேவி வருந்தாது வழி நடத்தல்

சிறுநிலை மருங்குல் கொங்கை ஏந்தியசெல்வம் என்னும்
நெறிஇருங்கூந்தல் நங்கை சீறடி நீர்க்கொப்பூழின்
நறியன தொடர்ந்துசென்று நடந்தன; நவையுள் நீங்கும்
உறுவலி அன்பின்ஊங்கு ஒன்றுஉண்டு எனஉணர்வதுண்டோ? (1987)

(சிறுநிலை-இளைத்தல் / வறுமை; மருங்கு-இடை; கொப்பூழ்-குமிழி; நவை-குற்றம்; ஊங்கு-மேலும்; நறியன-வல்லன)

சிறிய இளைத்த இடையையும், பருத்த கொங்கைகளையும், அடர்ந்த நீண்ட கூந்தலையும் உடைய சீதாதேவியின் மெல்லிய பாதங்கள், நீர்க் குமிழிகள் போன்று மென்மையானவை. அவைகளே இராமனைத் தொடர்ந்து தாழாது காட்டில் செல்ல வலிமையுடையனவாயின என்றால், குற்றம் நீங்கிய அன்பு என்பதைக் காட்டிலும் வலிமையானது வேறு ஏதேனும் ஒன்று உண்டு என்று அறியக் கூடுமோ? முடியாது.

சீதை சிறுத்த நுண்ணிய இடையையும், பருத்த கொங்கைகளையும் அடர்ந்த கூந்தலையும் உடைய திருமகள் போன்றவள் என்பதை சிறுநிலை மருங்கு, கொங்கை ஏந்திய செல்வம்; நெறி இருங்கூந்தல் நங்கை எனச் சிறப்பித்தார். அவளுடைய மெல்லிய பாதங்களை நீர்க்குமிழிக்கு ஒப்பிட்டது ஒரு அரிய உவமை. பெண்டிரின் பாதங்களுக்கு நாயின் நாக்கை உவமை கூறியுள்ளார் ஒரு சங்ககாலப் புலவர். இவ்வளவு பாரங்களையும், தடைகளையும் தன் உடம்பிலே கொண்டு, கல்லும் முள்ளும் நிறைந்த காட்டிலே இராமனுக்கு ஈடு கொடுத்து விரைவாகத் தாமதமின்றி நடந்து செல்கிறாள் சீதாதேவி என்றால், அது அவள் அவனிடம் கொண்ட பேரன்பினால் தான்-அளப்பரும் காதலினால் தான் என்பதைக் காட்டிலும் வேறு ஒரு காரணத்தை எப்படிக் கூற முடியும்? இளைத்த இடை வறுமை என்றும், பருத்த முலை செல்வம் என்றும், ஒன்றுக்கொன்று மாறுபட்ட சொற்களைக் கம்பன் கையாண்டிருக்கும் விதம் சுவைக்கத்தக்கது. அன்பு எதையும் சாதிக்கும் என்பதை நிறுவுகிறான்.

54. இரவில் இரண்டு யோசனை தூரம் செல்லுதல்

பரிதிவானவனும் கீழ்பால் பருவரை பற்றாமுன்னம்
திருவின் நாயகனும், தென்பால் ஓசனை இரண்டு சென்றான்;
அருவிபாய் கண்ணும் புண்ணாய், அழிகின்ற மனமும், தானும்
துரிதமான் தேரில் சென்றான் செய்தது சொல்லல் உற்றாம். (1988)

Koviloor Digital Library

(பரிதிவானவன்-சூரியன்; பருவரை-பெரிய உதயகிரி; பற்றுதல்-சேர்தல்; அழிகின்ற-உலைகின்ற; துரித-விரைந்த; மான்- குதிரைகள்; திருவின் நாயகன்-இராமபிரான்; துரிதம் என்பது த்வரிதம் என்ற வட சொல்லின் திரிபு)

சூரியனும், கிழக்குத் திசையில் பெரிய உதயகிரியை அடைவதற்கு முன்பு-பொழுது புலர்வதற்கு முன்னால், இரவிலேயே, இலக்குமியின் கணவனான இராமபிரானும், தெற்குத் திசையில் இரண்டு யோசனைதூரம் கடந்து சென்று விட்டான்; அருவி போலக் கண்ணீர் பொழியும் கண்களும், புண்பட்டு வருந்துகின்ற மனமும் உடையவனும், தானும் விரைவாகச் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரில் அயோத்தி நகருக்குத் திரும்பிச் சென்றவனான சுமந்திரன் செய்த செயல்களை இப்போது சொல்ல முற்படுவோம்.

ஓசனை என்பது நீட்டல் அளவைப் பெயர்.

55. சுமந்திரன் வசிட்டனுக்குச் சொல்லுதல்

கடிகைஓர் இரண்டு மூன்றில்,
கடிமதில் அயோத்தி கண்டான்;
அடியிணை தொழுதான் ஆதி
முனிவனை; அவனும் உற்ற
படியெலாம் கேட்டு, நெஞ்சில்
பருவரல் உழந்தான்; முன்னே
முடிவெலாம் உணர்ந்தான் ''அந்தோ!
முடிந்தனன் மன்னன்'', என்றான். (1989)

(கடி-காவல்; ஆதி-பழமையான / முதன்மையான; பருவரல்-துன்பம் / வேதனை; அந்தோ-ஐயோ / இரக்கக்குறிப்பு; முடிபு-இன்னது இன்னவாறு முடியும் என்ற துணிவு; உழல்தல்-வருந்துதல்; கடிகை-நாழிகை)

''ஐந்து நாழிகைக்குள் சுமந்திரன் காப்பமைந்த மதில்களையுடைய அயோத்தி நகரை அடைந்தான். முதன்மையானவரும், தொன்றுதொட்டுக் குலகுருவாய் இருப்பவருமான வசிட்ட மாமுனிவனின் இரண்டு பாதங்களையும் வணங்கினான். வனத்தில் நிகழ்ந்தவை அனைத்தையும் சுமந்திரன் கூறக் கேட்ட முக்காலும் உணர்ந்த வசிட்டன், நெஞ்சில் வேதனைப்பட்டு வருந்தினான். பின்னால் என்ன நடக்கும் என்பதைத் தன் ஞானக் கண்ணால் உணர்ந்த வசிட்டன், ஐயோ! மன்னன் தசரதன் இறந்துபட்டான'' என்றான்.

கடிகை என்பது நாழிகை; இரண்டரை நாழிகை என்பது ஒரு மணி நேரம்; இங்கே ஐந்து நாழிகை என்றதனால் இரண்டு மணி நேரத்தில் சுமந்திரன் அயோத்தியை அடைந்தான் என்பதாம். ஆனால் மூன்றாம் நாள்

Koviloor Digital Library

மாலை சுமந்திரன் அயோத்தியை அடைந்தான் என்று வான்மீகம் கூறுகிறது. அந்தோ என்பது ஐயோ என்பதைக் குறிக்கும் இரக்கக் குறிப்பு; மன்னவன் இச்செய்தி கேட்டு இறப்பது உறுதி மன்னன் இறத்தல் தப்பாது என்று கருதிய முனிவன் முடிந்தனன் மன்னன் என்று இறந்த காலத்திலேயே கூறியது கருதத்தக்கது.

56. வசிட்டன் சுமந்திரனோடு அரண்மனை செல்லுதல்

''நின்று உயர்பழியை அஞ்சி
நேர்ந்திலன் தடுக்க வள்ளல்;
ஒன்றும் நான் உரைத்தல் நோக்கான்
தருமத்துக்கு உறுதி பார்ப்பான்;
வென்றவர் உளரோ மேலை
விதியினை?'' என்று விம்மாப்
பொன்திணி மன்னன் கோயில்
சுமந்திரனோடும் புக்கான். (1990)

(நேர்தல்-முற்படுதல்; நின்று உயர்-நிலைத்து ஓங்கிய; நோக்குதல்-கருதுதலுமாம்; மேலை-தொன்றுதொட்டு வருகின்ற; விம்மா-விம்மி / பொருமிக் கொண்டு; ஒன்றும்-சிறிதளவும்)

''இராமன் வனம் புகுவதைத் தடுத்தால் தன்னுடைய வாய்மைக் குணத்திற்கு நிலைத்து ஓங்கிய பழி ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி, வள்ளலாகிய தசரதன், இராமன் வனம் புகுவதைத் தடுக்க முற்படவில்லை; அறத்தைத் தலை நிறுத்த வந்த இராமபிரானோ, வனம் போக வேண்டாம் என்று நான் கூறியவற்றையும் ஒரு சிறிதும் கருதினனில்லை; தொன்றுதொட்டு வருகின்ற ஊழின் பெருவலியை வென்றவர்கள் யார் உளர்? எல்லாம் விதிப்படியே நடக்கும். விதியை யாரால் வெல்ல முடியும்?'' என்று புலம்பிக் கொண்டு, சுமந்திரனையும் அழைத்துக் கொண்டு, பொன்னால் இயன்ற தசரதனின் மாளிகைக்குள் வசிட்டன் சென்றான்.

நின்று உயர் பழி என்பது தசரதன் வாய்மை காவாததால் அவனுக்கும், தந்தை ஏவிய கட்டளையை நிறைவேற்றாததால் இராமனுக்கும் வந்து சேருகிற இரண்டு விதப் பழிகளுமாம்.

57. தேர் வருவதைக் காணுதல்

''தேர்கொண்டு வள்ளல் வந்தான்''
என்றுதம் சிந்தை உந்த
ஊர்கொண்ட திங்கள் என்ன,
மன்னனை உழையர் சுற்றிக்

Koviloor Digital Library

கார்கொண்ட மேனியானைக்
கண்டிலர்; கண்ணில் வற்றா
நீர்கொண்ட நெடுந்தேர்ப்பாகன்
நிலைகண்டே நிலையில் தீர்ந்தார். (1991)

(உந்த-செலுத்த / தூண்ட; உழையர்-அருகிலுள்ள அமைச்சர் முதலியோர் / அமாத்தியர்; ஊர்-பரிவேடம் / ஊர்கோள்; தீர்தல்-அழிதல் / கெடுதல் / தவிர்தல் / நீங்குதல்; ஊர்கோள்-சந்திரனைச் சுற்றிய ஒளிவட்டம்)

தேர் மன்னன் மாளிகையை நெருங்கியதைக் கண்டு, தேரில் இராமபிரான் திரும்பி வந்து விட்டான் என்று தங்கள் மனம் தூண்ட, மன்னனை அடுத்திருந்த அமைச்சர் முதலானோர், சந்திரனை ஊர்கோள் பற்றிக் கொண்டாற் போலச்சூழ்ந்து கொண்டனர். ஆனால் மேகம் போன்ற கரியவனான இராமபிரானைக் காண இயலவில்லை; அவன் வரவில்லை என்பதறிந்தனர். கண்களில் வற்றாத நீர்ப்பெருக்கை உடைய பெரிய தேர்ச்சாரதியான சுமந்திரனது அவல நிலையைக் கண்டு, தாமும் தாம் இன்புற்றிருந்த நிலையிலிருந்து நீங்கித் துன்புற்று அழலானார்கள்.

ஊர் என்பது ஊர்கோள், பரிவேடம் எனவும் வழங்கப்பெறும். இது சந்திரனைச் சுற்றிய ஒளி வட்டம் என்பதாம். தசரதனைச் சுற்றி நின்றிருந்த அமைச்சர் முதலானோர்கட்கு ஊர்கோள் உவமை.

58. தசரதன் ''இராமன் வந்து விட்டானோ?'' எனல்

''இரதம் வந்துற்றது'' என்று, ஆங்கு யாவரும் இயம்பலோடும்
''வரதன் வந்துற்றான்'' என்ன, மன்னனும் மயக்கம் தீர்ந்தான்;
புரைதபு கமலநாட்டம் பொருக்கென விழித்து நோக்கி,
விரத மாதவனைக் கண்டான் ''வீரன் வந்தனனோ?'' என்றான். (1992)

(புரைதபு-குற்றமற்ற; நாட்டம்-கண்கள்; வரதன்-வேண்டுவார் வேண்டுவன தருபவன்)

இராமனை ஏற்றிச் சென்ற தேர் அயோத்திக்கு வந்து விட்டது என்று அங்குள்ள எல்லோரும் கூறியவுடன், வேண்டியார்க்கு வேண்டுவன வழங்கும் வள்ளல் இராமன் வந்து விட்டான் என்று கருதித் தசரதனும் மயக்கம் தீர்ந்தான்; குற்றமற்ற தாமரை மலர் போன்ற தன் கண்களை விரைவாக விழித்துப் பார்த்தான். எதிரே நின்றிருந்த பெருந்தவத் தனானவனும், விரதம் மேற்கொண்டிருக்கும் மேலானவனுமான வசிட்டமாமுனிவனை நோக்கி, ''இராமன் வந்து விட்டானோ?'' என்று கேட்டான்.

Koviloor Digital Library

59. தசரதன் தளர்தலும் முனிவன் செல்லுதலும்

''இல்லை'' என்று உரைக்கலாற்றான்;
ஏங்கினன் முனிவன் நின்றான்;
நல்லவன் முகமே நம்பி
வந்திலன் என்னும் மாற்றம்
சொல்லலும், அரசன் சோர்ந்தான்;
துயர்உறும் முனிவன், ''நான்இவ்
அல்லல் காணகில்லேன்'' என்னா,
அங்கு நின்று அகலப்போனான். (1993)

(சோர்தல்-மூர்ச்சித்தல் / தளர்தல்)

''இராமன் வரவில்லை'' என்று தசரதனிடத்தில் சொல்லும் வல்லமை முனிவனுக்கு இருக்கவில்லை. எனவே மிக்க வருத்தத்துடன் முனிவன் நின்றிருந்தான்; அந்த நல்லவனுடைய முகக்குறிப்பே, இராமன் திரும்பி வரவில்லை என்னும் பொருளைத் தசரதனுக்குத் தெரிவித்து விட்டது. எனவே அரசன் மறுபடியும் மூர்ச்சித்தான்; அதனைக் காணப் பொறுக்காது துன்புற்று வருந்தும் முனிவன், ''என்னால் இந்தத் துன்பத்தைப் பார்க்க முடியவில்லை'' என்று கூறி, அவ்விடத்தை விட்டு நகர்ந்து அப்பால் சென்றான்.

உள்ளக் கருத்தை முகம் தெரிவிக்கும். நல்லவன் முகமே மாற்றம் சொல்லல் என்ற சொற்றொடர் ''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்'' என்னும் குறளை *(706)* நினைவுபடுத்தும். ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் பற்றற்றவனாகிய வசிட்டனுக்கே தசரதனது துன்பத்தைக் காணப் பொறுக்கவில்லையென்றால் தசரதனது துன்ப மிகுதியையும், அவன்இராமனிடம் கொண்டிருந்த அன்பின்மிகுதியையும் உணரலாம்.

60. தசரதன் உயிர் பிரிதல்

நாயகன் பின்னும் தன் தேர்ப்பாகனை நோக்கி ''நம்பி
சேயனோ? அணியனோ?'' என்று உரைத்தலும், தேர்வலானும்
''வேய்உயர் கானம் தானும், தம்பியும், மிதிலைப் பொன்னும்
போயினன், என்றான்; என்ற போழ்தத்தே ஆவி போனான். (1994)

(பின்னும்-மறுபடியும் / மீண்டும் / திரும்பவும்; சேய்மை-நெடுந்தூரம்; அணிமை-அருகாமை; வேய்-மூங்கில்கள்; ஆவி-உயிர்)

தசரதன் மீண்டும் தன் தேர்ப் பாகனான சுமந்திரனை நோக்கி, ''இராமன் வெகுதூரத்தில் வந்து கொண்டிருக்கின்றானா? அருகாமையில் வந்து விட்டானா?'' என்று கேட்டதும், தேர் செலுத்துவதில் வல்லவனான சுமந்திரன், ''மூங்கில்கள் நிறைந்துள்ள காட்டிற்குள் இராமனும்,

Koviloor Digital Library

இளையவன் இலக்குவனும், மிதிலையில் தோன்றிய திருமகளாகிய சீதாதேவியும் போய் விட்டனர்'' என்று கூறிக்கொண்டிருக்கும் போதே, தசரதனது ஆவி பிரிந்தது. உயிர் நீங்கினான்.

தசரதன் தன் வாயால் இது வரையிலும் ''காடு'' என்ற சொல்லையே பயன்படுத்தாதது கருதத்தக்கது.

61. தசரதன் வீடு பேறடைதல்

இந்திரன் முதல்வராய கடவுளர் யாரும் ஈண்டிச்
சந்திரன் அனையது ஆங்குஓர் மானத்தில் தலையில் தாங்கி,
''வந்தனன் எந்தை தந்தை எனமனம் களித்து, வள்ளல்
உந்தியான் உலகின் உம்பர் மீள்கிலா உலகத்து உய்த்தார்''. (1995)

(ஈண்டி-கூடி; மானம்-விமானம்; உம்பர்-மேல்; உய்த்தார்-சேர்த்தார்கள்; உந்தியான்-திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றியவனான பிரமன்; கடவுளர்-தேவர்கள்)

இந்திரனைத் தலைவனாகக் கொண்ட தேவர்கள் அனைவரும் கூடி, ''எங்கள் தநதையான திருமாலின் அவதாரமாகிய இராமபிரானுக்குத் தந்தையாகிய தசரதன் இங்கு வந்து சேர்ந்து விட்டான்'' என்று உள்ளம் மிக மகிழ்ந்து, சந்திரனைப் போன்ற ஒளி மிகுந்த ஒரு விமானத்தில் அவனை எழுந்தருளச் செய்து, அதனைத் தாங்களே தங்கள் தலையில் சுமந்து கொண்டு, திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றியவனான பிரமனின் சத்திய லோகத்திற்கும் மேலே உள்ள, சென்றவர் மீண்டுவர முடியாத பரமபதம் விஷ்ணுலோகம் என்னும் வீட்டுலகில் அவனைச்சேர்த்தார்கள்.

இங்கே ஒரு குறிப்பு. வான்மீகம் தசரதன் வீடுபேறடைந்ததாக-பரமபதம் எய்தியதாகக் கூறவில்லை; சுவர்க்க லோகம் சென்றான் என்றே கூறுகிறது. வீட்டுலகிற்குச் சென்றவர் மீட்டும் வருவதில்லை என்பது நூல் துணிபு. எனவே தான் அதை மீள்கிலா உலகம் என்றான் கம்பன். இதைத் தான் ''கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்'' என்கிறோம். ஆனால் தசரதன் மீண்டும் வருவதாக யுத்த காண்டத்தில் பேசப்படுகிறது. இது மேலும் ஆராய்ச்சிக்குரியது.

62. கோசலை புலம்புதல்

உயிர்ப்பிலன்; துடிப்பும் இல்லன்; என்று உணர்ந்து, உருவம் தீண்டி
அயிர்த்தனள் நோக்கி, மன்னற்கு ஆர்உயிர் இன்மை தேறி
மயில்குலம் அனைய நங்கை கோசலை மறுகி வீழ்ந்தாள்;
வெயில்சுடு கோடை தன்னில் என்பிலா உயிரின் வேவாள். (1996)

(உயிர்ப்பு-மூச்சுக்காற்று; தேறி-தெளிந்து; கோடை-முதுவேனில்; என்பு-எலும்பு; துடிப்பு-நாடிகளின் நடை; அயிர்த்தல்-ஐயமுறுதல்; வேகுதல்-துடித்தல்; மறுகுதல்-பரிதவித்தல்)

Koviloor Digital Library

மயில் போலும் சாயலை உடைய, பெண்டிருள் சிறந்தவளாகிய கோசலை, மன்னனது நிலை கண்டு ஐயுற்று அவனது உடலைத் தன் கைகளால் தொட்டுப் பார்த்து, அவனுக்கு மூச்சும் வரவில்லை, நாடித் துடிப்பும் இல்லை என்பதை உணர்ந்து, மன்னனின் அரிய உயிர் பிரிந்து விட்டது என்பதை நன்கு தெளிந்து, வெயில் கொதிக்கின்ற முதுவேனிற் காலத்தில் அவ்வெயிலில் அகப்பட்ட எலும்பே இல்லாத உயிரையுடைய புழுவினைப் போன்று வெந்து துடிதுடித்துக் கலக்கமுற்றுத் தரையில் வீழ்ந்தாள்.

உருவம் என்ற சொல்லாட்சி நோக்கத்தக்கது. உயிர் போன உடம்பை உருவம் என்றார். தீண்டுதல் என்பது, மூக்கில் கை வைத்து மூச்சுக் காற்றையும், நெஞ்சில் கை வைத்து இதயத்துடிப்பையும், கையில் விரல் வைத்து நாடித் துடிப்பையும் அறிதலை ஒரே சொல்லில் ''தீண்டி'' என்று கூறியது ஒரு நயம். என்பிலா உயிர் என்பது புழுவினைக் குறிக்கும். ''என்பிலதனை வெயில் போலக் காயுமே'' என்பது குறள் (77). இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. இராமன் முதலியோர் காடு புகுந்ததோ, சுமந்திரன்வாளாத் திரும்பி வந்ததோ, அவன் சொல் கேட்டுத் தயரதன் ஆவி பிரிந்ததோ யார்க்கும் தெரியவில்லை. எல்லோரும் பெரும் சோகத்தால் அயர்ந்து உணர்விழந்து உறங்கிவிட்டனர். காலையில் துயிலெடைமங்கலம் பாடித் துயில் எழுப்புவோர் தசரதன் மாளிகை வந்து வெகுநேரம் பாடியும் தசரதன் துயில் உணராமையால் ஐயுற்று, அந்தப்புரமகளிர் அரசன் பள்ளியறைக்குச் சென்று பார்த்த பின்னர்தான் அரசன் இறந்திருப்பது தெரியவருகிறது. அவர்கள் அழுகை ஓசையினால் தான் கோசலையும் சுமித்திரையும் கண் விழித்துப் பதைத்துப் போயினர் என்கிறது வான்மீகம்.

63. கோசலை புலம்பிய விதம்

இருந்த அந்தணனோடு எல்லாம் ஈன்றவன் தன்னை ஈனப்
பெருந்தவம் செய்த நங்கை, கணவனில் பிரிந்து, தெய்வ
மருந்து இழந்தவரின் விம்மி, மணிபிரி அரவின் மாழ்கி,
அருந்துணை இழந்த அன்றில் பெடை என அரற்றலுற்றாள். (1997)

(அந்தணன்-பிரமன்; தெய்வ மருந்து-தேவ அமிர்தம்; மணி-இரத்தினம்; அரவு-பாம்பு; மாழ்குதல்-மயங்குதல்; அரற்றுதல்-அழுது புலம்புதல்)

திருமாலின் உந்திக் கமலத்தில் வீற்றிருக்கும் பிரமனோடு, இவ்வுலகங்கள் எல்லாமும், எல்லா உயிர்களும் தோன்றுதற்குக் காரணமானகடவுளாகியதிருமாலையேதான்பெற்றெடுக்கப்பெருந்தவம் செய்தவளாகிய கோசலை, தன் கணவன் இறந்ததும், கைக்கு எட்டிய தேவாமிர்தத்தைத் தவற விட்டு விட்டு வருந்துபவர்கள் போலக் கதறி, இரத்தினத்தைப் பிரிந்து விட்ட பாம்பினைப் போல மயக்கமுற்று,

Koviloor Digital Library

இணைபிரியாத ஆண் அன்றிலைப் பிரிந்த பெடை அன்றிற் பறவை போலக் கதறி அழத் தொடங்கினாள்.

கோசலையின் துன்பத்திற்குத் தேவாமிர்தத்தை இழந்தவர்கள் நிலையும், ஒளி உமிழும் மாணிக்கத்தை இழந்து அல்லலுறும் நாகமு'', ஆண் துணையை இழந்த பெண் அன்றிற் பறவையும் உவமைகள். நாகம் தன் தலையில் உள்ள மாணிக்கத்தை இரவில் ஓர் இடத்தில் உமிழ்ந்து வைத்து, அந்த ஒளியின் உதவியால் தனக்கு இரை தேடிக் கொள்ளும். அப்பொழுது அந்த இரத்தினம் தவறி விட்டால் பெருந்துயரம் அடையும் எனக் கூறுவர்.

64. ''தானே தானே தஞ்சம் இலாதான், தகவு இல்லான்
போனான் போனான் எங்களை நீத்து இப்பொழுது'' என்னா
வான்நீர் சுண்டி, மண் அறவற்றி, மறுகுற்ற
மீனே என்ன, மெய்தடுமாறி விழுகின்றாள். (1998)

(தகவு-கருணை / அருள்; நீத்து-கைவிட்டு; தானே-தனியாக; தஞ்சம்-தாழ்வு / பற்றுக்கோடு; வான் நீர்-மழை நீர்; சுண்டுதல்-குறைதல் / சுருங்கிப்போதல்; தகைதல்-தடுத்தலுமாம்; மறுகுறுதல்-கலக்கமடைதல்)

''எந்த விதத்திலும் தாழ்வில்லாதவனாகிய தசரதன், எந்த நோயினாலும் ஆட்கொள்ளப்படாமலும், எங்களை யெல்லாம் அழைத்துக் கொள்ளாமலும் தானே தானே தனியாக எங்களிடம் சிறிதும் கருணையில்லாமல் எங்களை யெல்லாம் விட்டுவிட்டுப் போய் விட்டானே! போய் விட்டானே'' என்று, வானத்திலிருந்து பொழிகின்ற மழை நீரும் குறைந்து போக, தான் வாழும் நிலத்திலுள்ள நீர் நிலை நீரும் வற்றிப் போக, வாழ்வதற்கே அல்லலுறுகிற மீனைப் போல, உடம்பு நிலைகெட்டுத் தரையில் வீழ்ந்தாள் கோசலை.

தானே தானே என்பதில் முன்னது, எந்த நோயின் வாய்ப்படாமல், இராமன் பிரிந்தான் என்ற சொல்லைக் கேட்டவுடனே தானே என்றும், இரண்டாவது தானே என்பது, எங்களையெல்லாம் அழைத்துக் கொள்ளாமல் தானே தனியனாக என்றும் பொருள்படும். மீன் உயிர் வாழ்வதற்கு நீர்நிலையின் நீரும், பல்கிப் பெருகி வாழ்வதற்கு மழை நீரும் தேவை என்பது ''விசும்பின் துளி வீழின் அல்லால் மற்று ஆங்கே பசும்புல் தலை காண்பது அரிது'' என்ற குறட்பாவினால் *(16)* அறியலாகும். இவ்விரண்டும் வற்றிய நிலையில் மீன் இறந்து விடும் என்பது உறுதி. பசும்புல் என்பதில் நீர் வாழ் உயிர்களான மீன்களும் அடங்கும் என்பதாம். இங்கே மீன் கோசலை; நீர் நிலை நீர் தசரதன்; வானநீர் இராமபிரான்.

65. ''ஒன்றா நல்நாட்டு உய்க்குவர் இந்நாட்டு உயிர்காப்பார்
அன்றே! மக்கள் பெற்று உயிர் வாழ்வார்க்கு அவம் உண்டே?
இன்றே வந்து ஈண்டு ''அஞ்சல்'' எனாது, எம்மகன் என்பான்
கொன்றான் அன்றோ தந்தையை?'' என்றாள்; குலைகின்றாள். (1999)

Koviloor Digital Library

(குலைதல்-நடுங்குதல் / நிலைதடுமாறுதல்; ஒன்றா-இணையில்லாத; உய்த்தல்-சேர்ப்பித்தல்; அவம்-கேடு; இன்றே-இப்பொழுது; நாடு-உலகம்)

''புதல்வர்கள் என்பவர் தம்மைப் பெற்றோரை இம்மையில் வாழும் பொழுது அவர்களுக்குத் தீங்கு ஏதும் வாராவண்ணம் பாதுகாப்பவரும், அவர்கள் உயிர் நீத்த பின், மறுமையில் அவர்கள் ''புத்'' என்னும் நரகத்தில் செல்லாமல், நல்லுலகாகிய சுவர்க்க லோகத்திற்குச் செல்லும்படி செய்தலும் ஆகிய கடமைகளைக் கொண்டவர்கள். எனவே உலகத்தில் நன் மக்களைப் பெற்று உயிர் வாழ்கின்ற பெற்றோர்களுக்கு ஒரு தீங்கும் இருக்காது. ஆனால் நாங்கள் பெற்ற எங்கள் மகன் என்று சொல்லப்படுபவனாகிய இராமன், இப்போது என் அருகில் வந்து ''கலங்காதே என்று ஆறுதல் கூறாது, அவனுடைய தந்தையைக் கொன்றவனாகி விட்டானே? இது நன்றாகவா இருக்கிறது?'' என்று நிலை தடுமாறினாள் கோசலை.

''ஒன்றா நல் நாடு என்பது தனக்கு இணையற்ற ஒப்பற்ற நல்ல சுவர்க்க லோகம்'' என்று பொருள்படும். எம்மகன் என்னாது, எம்மகன் என்பான் என்று கோசலை இராமனைக் குறிப்பது அவள் கொண்டிருந்த மனக்கலக்கத்தையும் நிலைத்தடுமாற்றத்தையும் குறிக்கும். ''இம்மை உலகத்து இசையொடும் விளங்கி, மறுமை உலகமும் மறுவின்று எய்துப, செழுநரும் விழையும் செயர் தீர்க்காட்சிச் சிறுவர்ப் பயந்த செம்மலோர்'' என்பது அகநானூறு. புதல்வர்களைப் பெற்றவர்களுக்கு இம்மையில் பாதுகாப்பும், புகழும், மறுமையில் நற்கதியும் உண்டு என்பது நூற்கொள்கை.

66. நோயும்இன்றி, நோன் கதிர் வாள், வேல் இவை இன்றி,
மாயும் செல்வ மக்களினாலோ மற மன்னன்?
''காயும் புள்ளிக் கர்க்கடம் நாகம் கனி வாழை
வேயும் போன்றான்'' என்று மயங்கா விழுகின்றாள். (2000)

''எந்த விதமான நோயும் இல்லாமல், பகைவர்களின் வலிமையுள்ள வாள், வேல் போன்ற படைக்கலங்களினாலும் இல்லாமல், வீரம் செறிந்த தசரதன், தன் செல்வத்திற்குரிய மக்களாலேயே மாண்டு போனானே? இது என்ன அநியாயம்? வருத்துகின்ற புள்ளிகளையுடைய நண்டு, பாம்பு, பழங்களைத்தரும் வாழை மரம், மூங்கில் இவைகள் எல்லாம், தாம் ஈன்ற கன்றுகளினாலே-கருவினாலேயே-அழிதல் போலத் தசரதனும் தான் பெற்றெடுத்த மக்களினாலேயே இறந்துபட்டானே?'' என்று கூறிப்புலம்பி மயங்கி வீழ்ந்தாள்.

பொதுவாக மக்கள் பிணி, மூப்பு முதலியவற்றால் இறத்தல் இயல்பு; வேந்தர்கள் என்றால் பகைவர்களின் ஆயுதங்களால் இறந்துவிடுவர்; ஆனால் தசரதனோ இவ்விரண்டு வகையாலும் இல்லாது, தான்

Koviloor Digital Library

பெற்றெடுத்த மக்களான இராமன், பரதன் ஆகியவர்களினாலேயே இறந்துவிட்டானே என்று புலம்பி நடுங்குகிறாள். இது போலப் பெற்ற மகவால் அழிகின்ற வேறுசில உயிரினங்களையும் எடுத்துக்காட்டாகக் காட்டுகிறாள் ''புத்தன்தாய், நண்டு, சிப்பி, வாழை, புனைமூங்கில், கத்தும் விரியன், கடுஞ்சிலந்தி, இத்தனையும் வேலாலும் வாளாலும் இன்றியே தாம் கொண்ட சூலாலே தம் உயிர்க்குச் சோர்வு'' என்பது நீலகேசி உரை; புத்தன் தாய் என்பது கௌதம புத்தனின் தாய் மாயா தேவியைக் குறிக்கும் என்றும், புத்தன் பிறந்த ஏழே நாட்களில் அவன் தாய் மாயாதேவி இறந்துவிட்டாள் என்றும் கூறுவர். இது ஆராய்ச்சிக்கு உரியது. ''நண்டு, சிப்பி, வேய், கதலி, நாசமுறும் காலத்துக் கொண்ட கரு அழிக்கும் கொள்கை போல்'' என்பது நல்வழி; ''மெல்லிய வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்'' என்பது நான்மணி; நண்டு கரு உயிர்க்கும் போது இறந்துபடும்; நாகம் தன் முட்டையாலே இறந்துவிடும்; வாழை குலை ஈனும் போது இறந்துபடும், மூங்கில் தன் பக்கக் கிளைகள் தோன்றும் போது உராய்வினால் பற்றி அழியும்; இவ்வாறு இவையெல்லாம் தன் வம்சத்தாலேயே அழிகின்றதைப் போலத் தசரதனும் தன் மக்களாலேயே இறந்துவிட்டான் என்பதாம்.

67. கோசலை கைகேயியிடம் கூறுதல்

''வடித்தாழ் கூந்தல் கேகயன் மாதே! மதியாலே
பிடித்தாய் வையம்; பெற்றனை பேராவரம்; இன்னே
முடித்தாய் அன்றே மந்திரம்?'' என்றாள்; முகில்வாய் மின்
துடித்தால் என்ன, மன்னவன் மார்பில் துவள்கின்றாள். (2001)

(முகில்-மேகம்; வடி-நீண்ட; பேரா-பிறழாத / மாறு சொல்லுதற்கு இயலாத; இன்னே-இப்பொழுதே; மந்திரம்-சூழ்ச்சி; முடித்தல்-நிறைவேற்றிக் கொள்ளுதல்; துவளுதல்-துடித்தல்)

மேகத்தில் மின்னல் ஒளிவிட்டுத் துவள்வது போலத் தசரதன் மார்பில் துவளுகின்றவளான கோசலை, கைகேயியை நோக்கி, ''நீண்டு தாழ்ந்து தொங்குகின்ற அழகிய கூந்தலையுடைய கேகய நாட்டு மன்னன் மகளான கைகேயியே! உன்னுடைய அறிவுக் கூர்மையினால், மன்னனிடமிருந்து மறுத்துச் சொல்ல முடியாத வரங்களைப் பெற்றாய்; அதனால் இக்கோசல நாட்டை ஆள்கின்ற அரசுரிமையையும் பெற்றாய்; இப்பொழுதே உன்னுடைய சூழ்ச்சிகளையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டுவிட்டாய் அல்லவா?'' என்று இடித்துக் கூறினாள்.

தசரதன் மார்புக்கு முகிலும், அம்மார்பில் துவளும் கோசலைக்கு முகிலில் துடிக்கும் மின்னலும் உவமை.

Koviloor Digital Library

68. கோசலை தசரதனை நோக்கிக் கூறுதல்

''அருந்தேரானைச் சம்பரனைப் பண்டு அமர்வென்றாய்;
இருந்தார் வானோர் நின்அருளாலே இனிது; அன்னார்
விருந்து ஆகின்றாய்'' என்றனள்; வேழத்து அரசுஒன்றைப்
பெருந்தாள் அன்பின் சூழ்பிடி என்னப் பிரிவுற்றாள். (2002)

தசரதனைப் பிரிந்த கோசலை, அரசயானை ஒன்றின் பெரிய தாள்களை அன்பினால் பற்றிக் கொண்டு சுற்றிவரும் பெண் யானையைப் போல அவன் கால்களைப் பற்றிக் கொண்டு, ''யாராலும் வெல்லுதற்கரிய தேரையுடைய சம்பரன் என்னும் அசுரனை முற்காலத்தில் நீ போரில் வென்றாய்; அதனால் தேவர்கள் உன் அருளினாலே இன்றும் இனிது வாழ்ந்து வருகின்றனர். எனவே அவர்கள் உன்னை அவர்களது உலகத்திற்கு நல்ல விருந்தினனாய் எதிர் கொண்டு அழைத்துக் கொள்வார்கள். நீ அவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவாய்'' என்று புலம்பினாள்.

தசரதன் அரசவேழம். அவனைச் சூழவந்து அரற்றுகின்ற கோசலை பெண்யானை. உன்னாலே உதவி பெற்ற தேவர்கள் நன்றி உணர்வுடன் உன்னைத் தம் விருந்தினராக அழைத்துக் கொண்டார்களோ? என்று கூறுவதும் பொருந்தும்.

69. ''வேள்விச் செல்வம் துய்த்தி கொல்?
மெய்ம்மைத் துணையின்மை
சூழ்விற்செல்வம் துய்த்தி கொல்?
தோலா மனு நூலின்
வாழ்விற்செல்வம் துய்த்தி கொல்?
மன்'' என்றனள், வானோர்
கேள்விச் செல்வம் துய்க்க
வயிற்று ஓர் கிளை தந்தாள். (2003)

(துய்த்தல்-நுகர்தல்; கிளை-புதல்வன் / உறவு; துணையின்மை-ஒப்பில்லாத; தோலா-தோல்வியுறாத; கேள்வி-காது; கேள்விச் செல்வம் / செவிச் செல்வம்; வேள்வி-யாகம்; செல்வம்-சுவர்க்க இன்பம்; மரபு கிளைக்க ஏதுவானவன் ஆதலால் மகனுக்குக் கிளை காரணப்பெயர்)

தேவர்கள் இராமசரிதத்தைக் கேட்டு நுகரும் இன்பத்தை அனுபவிப்பதற்காகத் தன் வயிற்றில் ஓர் புதல்வனாகிய இராமபிரானைத் தோற்றுவித்தவளான கோசலை, தசரதனை நோக்கி, ''மன்னனே, நீ முன்பு செய்த எண்ணற்ற வேள்விகளின் பயனை அனுபவிப்பதற்காக விண்ணுலகு புகுந்தாயோ? அல்லது வாய்மையைப் போன்ற ஒப்பில்லாத செல்வத்தைக் காப்பாற்றினாயே அதற்கு உண்டாகும் மறுமைப் பயனை நுகர்வதற்காக விண்ணுலகு சென்றாயோ? அல்லது, எவற்றாலும்

Koviloor Digital Library

தோல்வியுறாத மனு நூலின்படி செம்மையான வாழ்வு வாழ்ந்து நடுவுநிலை பிறழாது செங்கோல் ஒச்சினாயே அதனால் விளையும் பயனை அனுபவிக்க விண்ணுலகு புகுந்தாயோ?'' என்று கூறிப் புலம்பினாள்.

தசரதன் இம்மையில் எண்ணற்ற வேள்விகள் இயற்றியவன்; வாய்மை தவறாது ஒழுகினான்; மனுநீதி நெறி பிறழாது அரசாட்சி செய்தான்; எனவே இம்மூவறங்களின் பயனைத் துய்ப்பதற்காக அவன் சுவர்க்கலோகம் சென்றானோ என்று கூறிப் புலம்புகிறாள் கோசலை. வேள்வி, சத்தியம், செங்கோன்மை இவற்றைத் தவறாது காத்து வந்தான் தசரதன் என்பதாம்.

70. சுமித்திரையும் உரிமை மகளிர் அனைவரும் அழுது புலம்புதல்

ஆழிவேந்தன் பெருந்தேவி
அன்னபன்னி அழுது அரற்றத்
தோழிஅன்ன சுமித்திரையும்
துளங்கி ஏங்கி உயிர் சோர
ஊழிதிரிவது எனக்கோயில்
உலையும் வேலை, மற்று ஒழிந்த
மாழை ஒண்கண் தேவியரும்
மயிலின் குழாத்தின் வந்து இரைத்தார். (2004)

(ஆழி-ஆணைச்சக்கரம்; பெருந்தேவி-முதன்மையான மனைவி; ஊழி-பிரளயம்; உலைதல்-நிலைதளர்தல்; மாழை-மாவடு; ஒண்-ஒள்ளிய; இரைத்தல்-பேரொலி எழுப்புதல்; ஊழி திரிதல்-உலக முடிவு நிகழ்தல்; துளங்கி-நடுங்கி; கோயில்-அரண்மனை)

ஆணைச் சக்கரத்தையுடைய தசரதச்சக்கரவர்த்தியின் முதல் பட்டத்தரசியான கோசலை அவ்வாறு அழுது அரற்றவும், அவளுக்கு உயிர்த் தோழி போன்றவளான இளைய பட்டத்தரசியான சுமித்திரையும் நடுங்கி ஏக்கமுற்று உயிர்போகும் நிலையை அடையவும், அரண்மனை முழுவதும் பிரளய காலத்தில் நிகழும் உலக முடிவு போல நிலைதடுமாறும் சமயம், இப்பட்டத்தரசியரைத் தவிர்த்த, மாவடு போன்ற ஒள்ளிய மை பூசப்பெற்ற கண்களையுடைய அறுபதினாயிரம் ஏனைய உரிமை மகளிரும், மயில்களின் கூட்டத்தைப் போல ஓடி வந்து தசரதனைச் சுற்றிக் கூச்சலிட்டு அழத்தொடங்கினார்கள்.

மாவடு அவர்கள் கண்ணுக்கும், அவர்கள் அத்தனை பேருக்கும் மயிலின் கூட்டமும் உவமை. மூவருள் மூத்தவள் என்பதோடு மட்டுமல்லாமல் இராமனைப் பெற்றெடுத்தவள் என்பதாலும் கோசலை ''பெருந்தேவி'' எனப்பட்டாள்; அதுபோலக் கோசலையின் கருத்தோடு என்றும் மாறுபாடில்லாத உறுதுணையான சுமித்திரை ''தோழி'' எனப்பட்டாள்.

Koviloor Digital Library

71. உரிமை மகளிரும் உயிர் துறக்கத் துணிதல்

துஞ்சினானைத் தம் உயிரின் துணையைக்
கண்டார்; துணுக்கத்தால்
நஞ்சு நுகர்ந்தார் என உடலம்
நடுங்குகின்றார்; என்றாலும்
அஞ்சி, அழுங்கி விழுந்திலரால்;
அன்பில் தறுகண் பிறிதுண்டோ?
வஞ்சம் இல்லா மனத்தானை,
வானில் தொடர்வான் மனம் வலித்தார். (2005)

(துஞ்சுதல்-இறந்துபடுதல்; துணுக்கம்-பதைப்பு; நுகர்தல்-உண்ணுதல்; வலித்தல்-உறுதி பூணுதல்; அழுங்கி-நிலைகெட்டு; தறுகண்-கொடியது)

இவ்வாறு மயில் கூட்டம் போல இரைத்துக் கொண்டு வந்த அறுபதினாயிரம் உரிமை மகளிரும், இறந்து போனவனும், தமது உயிருக்குத் துணையானவனுமான தசரதனைக்க கண்டு பதை பதைத்து நஞ்சை உட்கொண்டாற்போல உடல் நடுக்கமுற்றனர். என்றாலும் அதற்காக அச்சப்பட்டு, நிலை கலங்கி மெய் சோர்ந்து தரையில் விழுந்து விடவில்லை; ஆனால் வஞ்சக எண்ணமில்லாத மனத்தை உடைய தசரதனைத் தொடர்ந்து தாமும் விண்ணுலகு செல்வதென முடிவு செய்து அதில் உறுதியாய் இருந்தனர். அன்பினைக் காட்டிலும் வலியதும் கொடியதும் வேறு ஏதேனும் உண்டோ?

தசரதனிடத்தில் அவர்கள் கொண்டிருந்த மெய்யன்பும், பேரன்புமே அவர்களை அவ்வாறு எண்ணத்தூண்டியது எனவே அவ்வன்பின் வலிமையை அன்பின் தறுகண் என்றார். அன்பு மன நெகிழ்ச்சியை மட்டுமல்ல மனஉறுதியையும் தரும் என்பது புலப்படுத்தப்பட்டது.

72. ''அளம்கொள் அளக்கர் இரும்பரப்பில்,
அண்டர் உலகில், அப்புறத்தில்
விளங்கும் மாதர் கற்பினார்
இவரின் யாவர்?'' என நின்றார்;
களங்கம் நீத்த மதி முகத்தார்,
கானவெள்ளம் கால் கோப்பத்
துளங்கல் இல்லாத் தனிக்குன்றில்
தொக்கமயிலின் சூழ்ந்திருந்தார். (2006)

(அளம்-உப்பளம்; இரும்-பெரிய; பரப்பு-நிலவுலகு; அண்டர்-தேவர்; கானவெள்ளம்-காட்டாற்று வெள்ளம்; கால்கோத்தல்-வளைந்து கொள்ளுதல்; துளங்கல்இல்-அசையாத; தொக்க-கூடிய; அளக்கர்-கடல்; அளத்தற்கு அருமையானது பற்றி அளக்கர் என்பது கடலுக்குக் காரணப்பெயர்)

Koviloor Digital Library

உப்பளங்களைக் கொண்டுள்ள கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகில் தேவர்களின் விண்ணுலகத்தில், அதற்கும் அப்பாற்பட்ட ஏனைய உலகங்களில் எல்லாம், இவர்களைப் போலக் கற்பிற் சிறந்து விளங்கும் மகளிர் யாரேனும் இருக்கிறார்களா? என்று சொல்லும் படி நிற்கின்ற, களங்கம் இல்லாத சந்திரன் போன்ற முகத்தை உடையவர்களான அறுபதினாயிரம் உரிமை மகளிரும், காட்டாற்று வெள்ளம் சுற்றிவளைத்துக் கொள்ள, சிறிதும் அசையாத நிலையில் உள்ள ஒப்பற்ற ஒரு மலையில் வந்து கூட்டமாகக் கூடி நிற்கின்ற மயில்களைப் போல அரண்மனையில் திரண்டிருந்தனர்.

தசரதனுக்குப் பின்னரும் தாம் உயிர் வாழ்ந்து இருக்க விரும்பாது, உடனே உயிர்போக்கிக் கொள்ள உறுதி பூண்டதால் அவர்களை ''விளங்கு மாதர் கற்பினார் இவரின் யார் உளர்?'' என்றான். அசையாது நின்றிருக்கும் மலைக்கு, உயிர்நீங்கி அசையாது இருக்கும் தசரதனும், மலையைச்சூழ்ந்து நின்ற மயிற்கூட்டங்களுக்கு அறுபதினாயிரம் உரிமை மகளிரும் உவமை. இதே போலச் சீவகசிந்தாமணியிலும், சச்சந்தன் இறந்து கிடந்த போது அவனைச் சுற்றி நின்றிருந்த அவனது உரிமை மகளிரைத் திருத்தக்கதேவர் பாடும் பாடலையும் கேளுங்கள். ''அரிமானோர் மெல்லணைமேல், மஞ்ஞை சூழக்கிடந்து ஆங்கு வேந்தன் கிடந்தானை'', என்பது சீவகசிந்தாமணி. களங்கமில்லா மதி முகத்தார் என்கிறானே? இந்தச் சூழ்நிலையில் அவர்கள் முகம் வாடிவதங்கிப் போய் அல்லவோ இருக்க வேண்டும்? காரணம். மன்னனைத் தொடர்ந்து வான்புகவேண்டும் என்று மனஉறுதி பூண்டு விட்டார்கள் எனவே மனக் கலக்கம் நீங்கி, முகம் தெளிவாக விளங்கியது எனவே களங்கம் நீத்த மதி முகத்தினர் என்றான்.

73. கைத்த சொல்லால் உயிர்இழந்தும், புதல்வற் பிரிந்தும், கடைஓட
மெய்த்த வேந்தன் திருஉடம்பைப் பிரியார்; பற்றி விட்டிலரால்;
பித்தமயக்காம் சுறவுஎறியும் பிறவிப் பெரிய கடல்கடக்க
உய்த்து மீண்ட நாவாயில் தாமும் போவார் ஒக்கின்றார். (2007)

(கைத்த-கசந்த; கடைஓட-முடிவுபோக / இறுதிவரை; மெய்த்த-வாய்மையைக் காத்த; மயக்கம்-அவிச்சை; சுறவு-சுறாமீன்கள்; எறிதல்-தாக்குதல் ; நாவாய்-புணை / மரக்கலம் / கப்பல்)

கைகேயியின்கசப்பானமொழிகளால், தன்புதல்வனைப்பிரிந்தும், தன் உயிரினை இழந்தும், தன் வாழ்நாளின் இறுதிவரை வாய்மையைக் காப்பாற்றியதசரதனது நல்லஅழகிய மேன்மையான உடம்பினைவிட்டுப் பிரியாதவர்களாய், அவன் திருவடிகளைவிடாது பற்றிக் கொண்டேயிருந்தனர் இவ்வறுபதினாயிர உரிமை மகளிரும். அவர்கள் பித்துக்கொள்ளுவதற்குக் காரணமாகிய அவிச்சை என்னும் சுறா மீன்களால் தாக்கப்படுகின்ற பிறவி யென்னும் பெரிய கடலைக் கடப்பதற்கு, முன்பே கரையைக் கடந்து மீண்டு திரும்பிய ஒரு

Koviloor Digital Library

மரக்கலத்திலே தாமும் அப்பிறவிக் கடலைக் கடக்கும் எண்ணத்துடன் செல்லுகின்றவர்களை ஒத்திருந்தார்கள்.

கைத்த சொல் என்பது கூறுகின்றவர் நாவுக்கும், கேட்பவர்கள் செவிக்கும் கசப்பினைத் தரும் சொல் என்பது பொருள். இவ்வாறு கைத்த கொல் சொல்லிய இன்னொருத்தி கூனி. அங்கே கம்பன், ''வாய் கயப்புற மந்தரைவழங்கிய வெஞ்சொல்'' என்றான் ''கடைஓட'' என்பது ஒரு அரிய சொற்றொடர் வாழ்நாள் இறுதிவரை என்ற பொருள் தருவது. மெய்யினைக் காத்த என்ற பொருள் தருமாறு ''மெய்த்த'' என்று ஒரு புதுவகைப் பயன்பாட்டை அறிமுகப் படுத்துகிறான் கம்பன்''. பதியிழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த நிதி இழந்தனம்; இனி நமக்குளது என நினையும் கதி இழக்கினும், கட்டுரை பிழைக்கிலேம்'' என்பது அரிச்சந்திரபுராணம். திரு உடம்பு என்பது இன்னும் ஒரு நல்ல சொற்றொடர். வேள்விகள்பல செய்ததனாலும், வாய்மையில் இறுதிவரை ஊன்றி நின்றதனாலும் அவன் உடம்பு திரு உடம்பு எனப்பட்டது. திரு உடம்பு என்பது அவன் திருவடிகளையே குறிக்கும் ''பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார், இறைவனடி சேராதார்'' என்பது குறள் (10).

பிறவியைக் கடல் என்றதால், பித்தமயக்கத்தைச் சுறா மீன்களுக்கு ஒப்பிட்டார். பித்த மயக்கம் என்பது, மண், பெண், பொன் என்னும் மூன்று ஆசைகளினால் உண்டாகின்ற அவிச்சை; ஐந்து மயக்கங்களில் அவிச்சையை மட்டும் கூறினாலும், அதனோடு தொடர்புடைய அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு, என்னும் மற்ற நான்கினையும் உட்கொண்டதேயாகும். இவற்றைப் ''பஞ்சக்கிலேசம்'' என்பர் வடநூலார்.

74. வசிட்டன் வருதலும் வருந்துதலும்

மாதரார்கள் அறுபதினாயிரரும்
உள்ளம் வலித்து இருப்பக்
கோதுஇல் குணத்துக் கோசலையும்,
இளையமாதும், குழைந்து ஏங்கச்
சோதி மணித்தேர்ச் சுமந்திரன் சென்று,
அரசன் தன்மைசொல, வந்த
வேதமுனிவன், விதி செய்த வினையை
நோக்கி விம்முவான். (2008)

(வலித்து இருத்தல்-உறுதிகொண்டிருத்தல்; கோதுஇல்-குற்றமற்ற; குழைந்து-மனம் கரைந்து / வாடி வருந்தி; ஏங்க-மெலிய; சோதி-ஒளி; வினை-செயல்; விம்முதல்-வருந்துதல்; தன்மை-நிலைமை)

தசரதனின் உரிமை மகளிர் அறுபதினாயிரம் பேரும், அவனுடன் வானுலகு தொடர்ந்து செல்லுவது என்று மனத்தில் உறுதி கொண்டிருக்க,

Koviloor Digital Library

குற்றமற்ற குணங்களையுடைய கோசலையும், இளையவான சுமத்திரையும் சோர்வுற, ஒளிபொருந்திய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தேரினை ஓட்டுவதில் வல்லவனான சுமந்திரனும், வெளியே சென்று அரசன் இறந்து விட்ட நிலையைக் கூற, வேதங்களில் வல்லவனான வசிட்ட முனிவன் உடனே வந்து, விதி செய்த செயலைக் கண்டு வருத்தம் அடைந்தான்.

விதி செய்த வினையென்பது, இராமன் வனம் புகுந்ததும்,தசரதன் வானம் புகுந்ததுமாம். கலங்காத உள்ளம் கொண்ட முனிவனையும் கலங்கச் செய்தது தசரதன் இறந்து கிடந்த நிலைஎன்பதாம். விம்முதல் என்பது பொதுவாகத் தேம்புதலைக் குறித்தாலும், முனிவனுக்குச் கூறுமிடத்து வருந்துதலையே குறிக்கும். முன்பு மன்னன் துடித்ததையே காணப்பொறாமல் அப்பால் அகன்றவன் தானே முனிவன். இப்போது உயிர்போன நிலையில் மீண்டு வந்து மீண்டும் வருந்தினான் என்க.

75. வந்தமுனியும் ''வரம்கொடுத்து, மகனை நீத்த வன்கண்மை
எந்தை தீர்ந்தான்'' என உள்ளத்து எண்ணி எண்ணி, இரங்குவான்;
உந்துகடலில் பெருங்கலம் ஒன்று உடையா நிற்பத் தனிநாய்கன்
நைந்து நீங்கச் செயல் ஓரா மீகாமனைப் போல் நலிவுற்றான். (2009)

(வன்கண்மை-கொடுமை; உந்து-அலை மோதுகின்ற; நாய்கன்-வணிகன்; ஓரா- செய்வதறியாது திகைத்தல்; மீகாமன்-மாலுமி; நைவுறுதல்-வருந்துதல்)

''அங்கே வந்து சேர்ந்த வசிட்ட முனிவன், கைகேயிக்கு இருவரங்களைக் கொடுத்து, தன் புதல்வன் இராமனைக் காட்டிற்கு அனுப்பிய கொடுமையிலிருந்து, என் தந்தை போன்றவனாகிய தசரதன் நீங்கினான்'' என்று தன் மனத்துள்ளே எண்ணி வருந்தலாயினான். பெருங்காற்றால் அலை மோதுகின்ற கடலில் ஒரு பெருங்கலம் உடைந்து போய் நிற்க, அதனைக் கண்ட அதற்கு உரிமையாளனான வணிகன், தன் பொருள்கள் எல்லாம் அழிந்து போனதால் மனம் உடைந்து இறந்து போய்விட, அதனைக்கண்ட அம்மரக்கலத்தின் மாலுமி, என்ன செய்வதென்றறியாது நடுக்கடலில் திகைத்து நிற்பது போல, வசிட்டன் ஒன்றும் செய்வதறியாது வருந்தி நின்றான்.

இன்பதுன்பங்களால் உணர்ச்சி வேறுபடாத முனிவனும் வருந்தினான் என்பதாம். வரம் கொடுத்து மகனைப் பிரிந்த கொடுமையை, தன் உயிரைக் கொடுத்துத் தீர்த்துக் கொண்டான் என்பது, சிலப்பதிகாரத்தில் தவறு செய்த பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்த போது இளங்கோ அடிகள் கூறுவதை ஒத்திருத்தல் காணலாம். ''வல்வினை வளைத்த கோலை, மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது'' என்பது சிலப்பதிகாரம். வசிட்டனை மீகாமனுக்கு உவமித்தார்.

Koviloor Digital Library

76. தசரதன் உடலை எண்ணெய்க் கொப்பரையில் இடுதல்

''செய்யக்கடவ செயற்கு உரிய
சிறுவர் ஈண்டையர் அல்லர்;
எய்தக் கடவபொருள் எய்தாது
இகவா என்ன இயல்பு?'' என்னா,
''மையல் கொடியாள்மகன் ஈண்டு
வந்தால் முடித்தும் மற்று'' என்னாத்
தையல் கடல் நின்று எடுத்து அவனைத்
தைலக் கடலின்தலை உய்த்தான். (2010)

(சிறுவர்-மக்கள்; ஈண்டு-இங்கு; இகவா-நீங்காது; மையல்-ஆசை / மண்ணாசை / மனமயக்கம்; முடித்தும்-நிறைவேற்றுவோம்; கடல்-கூட்டம்; தைலக்கடல்-எண்ணெய் நிறைந்த கொப்பரை / கடாரம்; இயல்பு-உலக இயற்கை; உய்த்தான்-இடுவித்தான்; மற்று-மேல்)

இறந்து போன மன்னனுக்கு ஆற்றவேண்டிய இறுதிக் கடன்களை இயற்றுவதற்கு உரிமையுடைய அவனது மக்கள் நால்வரில் ஒருவர் கூட இங்கு இப்போது இல்லை; வந்து சேர வேண்டியவை எதையும் யாராலும் தடுக்க முடியாது; அது வந்து சேர்ந்தே தீரும் என்று இவ்வுலக இயற்கையையும், ஊழின் செயலையும் எண்ணி, மனமயக்கமும் மண்ணாசையும் கொண்ட கொடியவளான கைகேயியின் மகன் பரதன் இங்கு வந்து சேர்ந்த பின்னர் எல்லா உத்திரக்கிரியைகளையும் நிறைவேற்றுவோம் என்று கருதி, முத்தேவியரும், அறுபதினாயிரம் உரிமை மகளிரும், மற்றுள்ள நகரத்தார்களாகிய கூட்டமாகிய கடலால் சூழப்பட்டிருந்த தசரதனது உடலை எடுத்து, பரதன் வரும்வரை தைலக்கடாரத்தில் இட்டுக் கெடாது பாதுகாத்து வைக்குமாறு செய்தான் வசிட்டன்.

இந்த ஆலோசனையை அமைச்சர்கள் அனைவரும் சேர்ந்தே முடிவு செய்தனர்என்றும்கூறுவர். ஒருகடலில் இருந்து எடுத்து மற்றொரு கடலில் இட்டனர் என்பதில் உள்ள சொல் நயம் உணர்தற்குரியது. தையல் கடல் நின்று எடுத்து அவனைத் தைலக் கடலில் தலை உய்த்தான் என்பது ஒரு நயம். வரவேண்டியவற்றைவாராது தவிர்த்தலோ, தடுத்தலோ, எக்காலத்தும் எத்தகையார்க்கும் இயல்வதன்று. ''ஆம் பொருள்கள் ஆகும்; அது யார்க்கும்அழிக்க ஒண்ணாக'' என்பது சீவகசிந்தாமணி; ''உறற்பால நீக்கல் உறுபவர்க்கும் ஆகா; உறற்பால தீண்டாவிடுதல் அரிது'' என்பது நாலடியார்.

77. பரதனை அழைத்து வரத் தூதுவரை அனுப்புதல்

தேவிமாரை ''இவற்கு உரிமை
செய்யும் நாளில் செந்தீயில்

Koviloor Digital Library

ஆவி நீத்திர்'' என நீக்கி,
அரிவைமார்கள் இருவரையும்
தாஇல் கோயில் தலை இருத்தித்
தண்தாரப் ''பரதற்கொண்டு அணைக'' என்று
ஏவினான், மன்னவன் ஆணை
எழுதும் முடங்கல் கொடுத்து அவரை. (2011)

(தாஇல்-குற்றமற்ற; தண்-குளிர்ந்த; அணைக-அழைத்து வருக; முடங்கல்-ஓலை; கோவில்-அரண்மனை)

இவனுடன் சேர்ந்து தாங்களும் உயிர் விடுவோம் என்று அரற்றிக் கொண்டிருந்த அறுபதினாயிரம் தேவியர்களையும் ''இவனுக்கு இறுதிக் கடன்கள் செய்யும் நாளன்று நீங்களும் தீயில் விழுந்து உங்கள் கருத்தை, நிறைவேற்றிக் கொள்வீர்களாக'' என்று அவர்களை ஆற்றி அந்தப்புரத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, கோசலை, சுமத்திரை ஆகிய இருபட்டத்தரசியர்களையும் அவரவர்களுடைய குற்றமற்ற அரண்மனைகளில் கொண்டு சேர்த்து விட்டு, ''குளிர்ந்த மலர்மாலையையணிந்த பரதனை, இங்கே அழைத்துக் கொண்டு வருவீர்களாக'' என்று கூறி அரசனது கட்டளையாக ஓலை ஒன்றைக் கொடுத்துத் தூதுவரைக் கேகய நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

இங்கே வான்மீகம் கூறுவது நினைவிற் கொள்ளத்தக்கது. முனிவன் கேகய அரசனுக்கும் பரதனுக்கும் அவரவர்க்குரிய பரிசுப்பொருள்களைக் கொடுத்தனுப்பினான் என்றும், தூதுவர்கள் பரதனிடம் மன்னன் இறந்ததையோ, இராமன் வனம் புகுந்ததையோ எந்தச் செய்தியையும் கூறாமல், பரதனே விரைந்து செய்ய வேண்டிய ஒரு பணி இருப்பதால் அவனை விரைந்து வருமாறு அரசன் பணித்ததாகக் கூறும்படியும், பணித்ததாகவும் வான்மீகம் கூறும். தூதுவர் ஐவர்-சித்தார்த்தன், விஜயன், ஐயந்தன், அசோகன், நந்தன் என்றும் கூறுகிறது. ஓலை சக்கரவர்த்தியின் ஆணையாகவே எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

78. வசிட்டன் தவப்பள்ளி அடைதல்

போனார் அவரும் கேகயர் கோன்
பொன்மாநகரம் புகவெய்தின்;
ஆனா அறிவின் அருந்தவனும்,
அறம் ஆர்பள்ளி அதுசேர்ந்தான்;
சேனாபதியில் சுமந்திரனை
''செயற்பாற்கு உரிய செய்க'' என்னா
மேல்நாம் சொன்ன மாந்தர்க்கு
விளைந்தது இனிநாம் விளம்புவாம். (2012)

Koviloor Digital Library

(ஆனா-பிறர் ஒருவர்க்கும் அமையாத / கெடாத; பள்ளி-தவச்சாலை / ஆசிரமம்; வெய்தின்-விரைவில்)

''முனிவனால் ஏவப்பட்ட தூதுவர்களும் கேகய நாட்டு மன்னனின் அழகிய தலை நகரத்தை அடைவதற்காக விரைவில் சென்றார்கள்; அப்பொழுது பிறர் எவர்க்கும் அமையாத மெய்யறிவினையும் சிறந்த தவத்தினையும் உடைய வசிட்ட முனிவன், சுமந்திரனை நோக்கி நல் அமைச்சனும் சேனாதிபதியுமாகிய தாங்களே இப்பொழுது செய்து முடிக்க வேண்டிய அவசிய, அவசரக் காரியங்களை செய்வீராக'' என்று பணித்துவிட்டு, தான் தான் இயற்றும் அரிய தவச்சாலையை அடைந்தான். முன்பு அயோத்தியில் நின்று வனத்திற்கு நீங்கிய இராமனுடன் கூடவந்து சோலையில் தங்கி உறங்கியவர்களான நகர மாந்தர்களுக்கு விளைந்த செயல்களை இனிமேல் நாம் கூறத் தொடங்குவோம்.

அரசன் இல்லாக் காலத்து நாட்டைக் கவனிக்கும் பொறுப்பு சேனாபதியர்க்கே உண்டு. சேனாபதியரும் அமைச்சரே ஆவர்.

79. சூரியன் உதித்தல்

மீன்நீர் வேலை முரசு இயம்ப,
விண்ணோர் ஏத்த, மண் இறைஞ்ச,
தூநீர் ஒளிவாள் புடைஇலங்கச்
சுடர்த்தேர் ஏறித் தோன்றினான்
''வானேபுக்கான் அரும்புதல்வன்;
மக்கள் அகன்றார்; வரும் அளவும்
யானே காப்பென் இவ்வுலகை'',
என்பான் போல், எறி கதிரோன். (2013)

(எறி-பரந்த; இயம்ப-ஒலிக்க / முழங்க; ஏத்த-துதிக்க; மண்-மக்கள்; இறைஞ்ச-வணங்க; தூ-தூய்மையான; நீர்-நீர்மை / தன்மை; புடை-பக்கம்; வேலை-கடல்)

பரந்து விரிந்த ஆயிரம் கிரணங்களையுடைய சூரியன், ''என் புதல்வனான தசரதன் இறந்து போய் வானகம் புகுந்தான்; அவனுடைய அருமையான புதல்வர் நால்வரும் இப்போது நகரத்தில் இல்லை. சேய்மையில் உள்ளனர்; அவர்கள் வருகின்ற வரையில், நானே இவ்வுலகைக் காப்பாற்றுவேன்'' என்று கூறுவது போல, மீன்களும், நீரும் நிறைந்திருக்கின்ற கடல், முரசு முழங்குவது போல ஒலிக்கவும், விண்ணுலகத்துத் தேவர்கள் துதிக்கவும், மண்ணுலக மக்கள் வணங்கித் தொழவும், தூய்மையான தன்மையும், ஒளியுமுடைய வாள் பக்கத்திலே விளங்கவும், சூரியன் ஒளி மிக்க தனது ஒற்றைச் சக்கரத் தேரில் ஏறி வந்து உதயமானான்.

ஒரு நாட்டில் மன்னன் இறந்த பிறகு, அவன் குலத்து முதியோர் ஒருவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளுதலும் உண்டு. தசரதன் சூரிய

Koviloor Digital Library

குலமரபினன். எனவே சூரியன் குல முதல்வன். எனவே அரசனும் அவன் மக்களும் இல்லாத போது, நானே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறிக் கொண்டு வருவதைப் போல சூரியன் உதயமானான் என்கிறார். அரசர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்க வரும் பொழுது, முரசங்கள் முழங்குவதும், விண்ணோர் ஏத்துவதும், அந்தணர்கள் வாழ்த்துவதும், மக்கள் பல்லாண்டு பாடுதலும், வாள் புடை இலங்கத்தேர்ஏறி வருதலும் மரபு. எனவே அது போலச்சூரியனும் வந்தான் என்றது ஒரு நயம். இதனால் தசரதன் இறந்தது நள்ளிரவுக்குப் பின்னும், வைகறைக்கு முன்னும் என்பது தெளிவாகிறது.

80. விழித்தெழுந்த மக்கள் இராமனைக் காணாது வருந்துதல்

வருந்தா வண்ணம் வருந்தினார்
மறந்தார் தம்மை; வள்ளலும் ஆங்கு
இருந்தான் என்றே இருந்தார்கள்
எல்லாம் எழுந்தார்; அருள் இருக்கும்
பெருந் தாமரைக்கண் கருமுகிலைப்
பெயர்ந்தார்; காணார்; பேதுற்றார்;
''பொருந்தா நயனம் பொருந்தி நம்மை
பொன்றச் சூழ்ந்த'', எனப் புரண்டார். (2014)

(பேதுறுதல்-மயங்குதல் / கலங்குதல்; நயனம்-கண்கள்; பொன்றுதல்-இறத்தல்; சூழ்ந்த-சதி செய்தன; வண்ணம்-வகை)

இதுவரையிலும் தம் வாழ்க்கையில் வருத்தமுறாத வகையில் இப்பொழுது வருத்தமுற்று வந்தவர்களும், தம்மைத் தாமே மறந்த நிலையில் உள்ளவர்களுமாகிய அயோத்தி நகர மக்கள், இராமபிரானும் தம்முடன் இங்கேயேதான் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்று எண்ணிக் கொண்டு இருந்தார்கள். அவ்வாறு இருந்தவர்கள் எல்லோரும் ஒருங்கு திரண்டு எழுந்து சென்று கருணையே குடி கொண்டிருக்கும் பெரிய தாமரை மலர் போன்ற கண்களையுடையவனும், மேகம் போன்ற கருநீல நிறவண்ணனான இராமபிரான் இருந்த இடத்திற்குச் சென்றார்கள்; அங்கே இராமபிரானைக் காணாது மனம் கலக்கம் அடைந்தனர்; எப்பொழுதுமே ஒன்றுடன் ஒன்று பொருந்தி உறங்காத கண்கள், இன்று ஒன்றுடன் ஒன்றுபொருந்தி நம்மை உறங்கச் செய்து சதி செய்து விட்டன. அதனால் நாம் உயிர் அழிந்தவர்கள் ஆனோம் என்று வருந்தித் தரையில் விழுந்து புரண்டார்கள்.

81. மக்கள் செயல்கள்

எட்டுத்திசையும் ஓடுவார்; எழுவார்;
விழுவார்; ''இடர்க்கடலுள்
விட்டுநீத்தான் நமை'' என்பார்;
வெய்ய வினையின் விளைவு'' என்பார்;

Koviloor Digital Library

''ஒட்டிப்படர்ந்த தண்டகம் இவ்
உலகத்து உளதன்றோ? உணர்வைச்
சுட்டுச் சேர்தல் ஆற்றுதுமோ?
தொடர்தும் தேரின் சுவடு''என்பார். (2015)

(வெய்ய-கொடிய; சுட்டு-கெடுத்து; சேர்தல்-செல்லுதல்; ஆற்றுதல்-பொறுத்திருத்தல்; சுவடு-தடம்; ஒட்டி-துணிந்து; படர்தல்-அடைதல்)

இராமன் இருந்த இடத்திற்குச் சென்று பார்த்தவர்கள் அவனை அங்கே காணாது கலக்கம் அடைந்து, எட்டுத் திசைகளிலும் தேடிப் போவார்கள்; சிலர் எழும் பொழுது கால் தடுமாறி விழுவார்கள். ''நம்மைத் துன்பக் கடலில் செலுத்திவிட்டுத் தான் மட்டும் துணிந்து போய் விட்டானே'' என்பார்கள் சிலர்; ''நமது முன் பிறவியின் தீ வினைப்பயன் இது'' என்பார் சிலர்; ''பரந்த தண்டக வனம் இந்த உலகத்தில் தானே உள்ளது? நமது அறிவைப் பயன்படுத்தி அந்தத் தண்டக வனத்தை அடையாது பொறுத்திருப்போமா? அவனுடைய தேர் சென்ற சுவட்டின் அடையாளத்தை வைத்துக் கொண்டே தொடர்ந்து போவோம்'' என்பார் சிலர்.

82. மக்கள் அயோத்திக்கு மீளுதல்

தேரின்சுவடு நோக்குவார்
திருமா நகரின் மிசைத்திரிய
ஊரும் திகிரிக் குறிஒற்றி
உவந்தாரெல்லாம் உயிர் வந்தார்;
''ஆரும் அஞ்சல்? ஐயன்போய்
அயோத்தி அடைந்தான்'' என, அசனிக்
காரும் கடலும் ஒருவழிக் கொண்டு
ஆர்த்த என்னக் கடிது ஆர்த்தார். (2016)

(திரிய-மீட்டும் / திரும்புதல்; ஊர்தல்-செலுத்துதல்; திகிரி-தேர்ச்சக்கரம்; குறி-அடையாளம் / சுவடு; ஒற்றி-பின்பற்றி / தொடர்ந்து; அவனி-இடி; கார்-மேகம்; ஆர்த்தல்-முழங்குதல்; ஒருவழிக் கொள்ளல்-ஓர் இடத்தே சேர்தல்; கடிது-மிகவும்; நோக்குதல்-நாடிச் செல்லுதல்)

தேரின் அடிச்சுவட்டைப் பின் பற்றித் தேடிச் சென்றவர்கள், செல்வவளம் பொருந்திய சிறப்பான அயோத்தி மாநகரத்திற்குத் திரும்பச் செலுத்தப்பட்ட சக்கரத்தின் அடையாளத்தைப் பார்த்து உணர்ந்து, எல்லோரும் சென்ற உயிர் திரும்பி வந்தது போல மகிழ்ச்சியடைந்தார்கள். ''யாரும் அஞ்ச வேண்டாம்; இராமபிரான் அயோத்தி மாநகரம் சென்று அடைந்துவிட்டான்'' எனக்கருதி இடியுடன்கூட மேகமும், கடலும் ஒன்று சேர்ந்து ஓர் இடத்தில் கூடி முழங்கியது போல மிகுதியாக ஆரவாரித்தார்கள்.

Koviloor Digital Library

மகிழ்ச்சியால் உண்டான ஆரவாரத்திற்கு இடியுடன் கூடிய மேகமும் கடலும் ஓரிடத்தில் கூடி முழக்கியது உவமை. சுமந்திரன் திருப்பிச் செலுத்திய தேர்ச்சுவட்டை இராமன் திரும்பிச் சென்றதாகக் கருதி மயங்கினர் என்பதாம்.

83. மானஅரவின் வாய்த் தீய வளை வான்
தொளை வாள் எயிற்றின்வழி
ஆனகடுவுக்கு அருமருந்தா அருந்தும்
அமுதம்பெற்று உய்ந்து
போனபொழுதில் புகுந்த உயிர்
பொறுத்தார் ஒத்தார்; பொருஅரிய
வேனில் மதனை மதன்அழித்தான்
மீண்டான் என்ன ஆண்டையார். (2017)

(பொரு-ஒப்பு; மதன்-மன்மதன்; மதம்-செருக்கு; மான-வலிய; அரவு-பாம்பு; தீய-கொடிய; வான்-பெரிய; வாள்-கூர்மையான; எயிறு-பற்கள்; கடு-நஞ்சு; ஆண்டை-அவ்விடத்தே; உய்ந்து-தப்பி)

அவ்விடத்தே இருந்த அயோத்தி மக்கள், தன் அழகிற்கு யாரும் ஒப்பில்லை என்று செருக்குக் கொண்டிருந்த இளவேனில் காலத்திற்கு உரியவனும், அழகனுமான மன்மதனின் செருக்கை அழித்தவனான இராமபிரான், திரும்பி அயோத்திக்கே வந்து விட்டான் என்றதனால் மிக மகிழ்ந்தனர் என்பதற்குக் கம்பன் ஒரு அழகிய உவமையைக் கூறுகிறான். வலிமையுள்ள பாம்பின் வாயில் உள்ள கொடிய வளைந்த தொளையுடைய ஒளி பொருந்திய பல்லின் வழியாக வந்து நஞ்சு உடலில் புகுந்ததும், அதைத் தீர்ப்பதற்கான ஒப்பற்ற மருந்து போன்றதாகிய சாவாமருந்தாகிய தேவாமிர்தத்தைப் பருகி, போன உயிரைத் திரும்பி பெற்று உடலில் தாங்கிக் கொண்டிருப்பவர்களை ஒத்திருந்தனர் என்கிறான்.

இராமன் தம்மை உறங்கவைத்து விட்டுத் தண்டகாரண்யம் சென்று விட்டான் என்று உணர்ந்த பொழுது அயோத்தி நகர மக்களின் உயிர் போய் விட்டது. இப்போது தேர்ச்சுவட்டின் குறியை நோக்கியதில் அவன் தண்டகாரண்யம் செல்லவில்லை. தனது அயோத்தி நகருக்குத் தான் திரும்பிச்சென்றிருக்கிறான் என்று உணர்ந்த பொழுது போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்ததாம். அதற்குப் பாம்பு கடித்ததனால் உள்ளே போன விடத்தால் உயிர் போன ஒருவன், சாவாமருந்தாகிய தேவாமிருதத்தை உண்டதும் அவன் உயிர் திரும்பப் பெற்றதை உவமையாக்கினார். பாம்பின் மேல் வாய் அன்னத்தில் நச்சுப் பையில் உள்ள நஞ்சு நீர், பல்லின் வழியாகக் கடிவாயில் இரத்தத்தோடு கலந்து உடல் எங்கும் பரவிச் சாவை விளைவிக்கும் என்பர்.

Koviloor Digital Library

84. மக்கள் அயோத்தியை அடைதல்

ஆறுசெல்லச்செல்லத் தேர்ஆழி கண்டார்; அயல்அப்பால்
வேறுசென்ற நெறிகாணார்; விம்மாநின்ற உவகையராய்
மாறி உலகம் வகுக்கும் நாள் வரம்பு கடந்து மண்முழுதும்
ஏறி ஒடுங்கும் எறிகடல்போல் எயில் மாநகரம் எய்தினார். (2018)

(ஆறு-வழி; ஆழி-சக்கரம்; நெறி-வழி; மன்-உலகம்; எறி-அலை மோதுகின்ற; எயில்-அரண் / மதில்; அயல்-புறத்தே; உலகம் மாறி வகுக்கும் நாள்-உலகம் அழிந்து, மீண்டும் படைத்தற்குரிய ஊழிக்காலம்; ஏறி-மேலிட்டுப் பொங்க)

தேர்ச்சக்கரத்தின் சுவட்டின் வழியையே பின்பற்றிச் சென்றவர்கள், சிறிது தூரத்திற்குப் பிறகு வேறு வழியில் தேர்ச்சுவடு தெரியாததால் அயோத்திக்குத் தான் இராமன் திரும்பி விட்டான் என்று உறுதி கொண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். பிரளய காலத்தில் தன் எல்லை கடந்து நிலமெங்கும் பொங்கி மேலெழுந்த கடல், பின்பு மீண்டும் படைப்புக் காலத்தில், தனக்குள் தானே அடங்கி ஒடுங்கி விடுகின்ற கடலைப் போல அமைதியாக, மதில்களால் சூழப்பெற்ற சிறந்த அயோத்தி மாநகரத்தை அடைந்தார்கள்.

ஊழி முடிவில் வரம்பு கடந்து பொங்கி எழும் கடல் போல, அயோத்தியிலிருந்து இராமனைத் தொடர்ந்து சென்ற அதே மக்கள், இப்பொழுது இராமன் அயோத்திக்குத் திரும்பி விட்டான் என்று உறுதியாகத் தெரிந்து கொண்ட பின்னர் பிரளய முடிவில் மீண்டும் அக்கடல் தன் எல்லையுள் ஒடுங்கியிருப்பதைப் போல அமைதியுடன் அயோத்தி நகரத்தை அடைந்தனர் என்பதாம். பொங்கி எழுந்த கடலையும் ஒடுங்கி அடங்கிய கடலையும் அயோத்தி மக்களின் மனநிலைக்கு உவமித்தது ஒரு நயம்.

85. இராமன் வனம் புகுந்ததையும், தசரதன் இறந்ததையும் அறிந்து வருந்துதல்

புக்கார், அரசன் பொன்னுலகம்
போனான் என்னும் பொருள் கேட்டார்;
உக்கார் நெஞ்சம், உயிர் உகுத்தார்;
உற்றது எம்மால் உரைப்ப அரிதால்;
தக்கான் போனான் வனம் என்னும்
தகையும் உணர்ந்தார்; மிகை ஆவி
அக்காலத்தே அகலுமோ? அவதி
என்று ஒன்று உளதானால்? (2019)

(பொருள்-செய்தி; தக்கான்-தகுதியுடையவன்; தகை-நிகழ்ச்சி; உக்கார்-உடைந்தார்கள்; உகுத்தல்-சிந்துதல் / ஒழிதல்; உரைப்ப-உரைக்க

Koviloor Digital Library

/ சொல்ல; அவதி-காலவரையறை / எல்லை; ஆவி-உயிர்; மிகை ஆவி-வேண்டாத உயிர்)

இவ்வாறு அயோத்தி மாநகருக்குள் புகுந்த மக்கள், தசரதன் விண்ணுலகு எய்தினான் என்னும் செய்தியையும், தக்க குணங்களும் தகுதியும் உடைய இராமன் கானகத்திற்குச் சென்றுவிட்டான் என்ற நிகழ்ச்சியையும் கேட்டு உடைந்தனர்; நெஞ்சம் நிலை தடுமாறினர்; உயிர் போகும் நிலையை எய்தினர்; அவர்கள் அடைந்த துயரத்தை என்னால் எடுத்துச்சொல்ல இயலாது. அவர்கள் நினைத்த உடனேயே அப்பொழுதே உயிர் போய் விடுமா? அதற்கு என்று ஒரு காலவரையறை நியமிக்கப்பட்டிருக்கிறதல்லவா? எனவே அவர்கள் உயிர் விடத்துணிந்தும் அவர்களால் இறந்து போக முடியவில்லை. இறப்புக்கு உரிய காலம் வாராததால் அவர்கள் இறக்கவில்லை.

தசரதன் விண்ணுலகு அடைந்தான் என்ற செய்தியைக் கேட்ட உடனேயே உயிர் பிரியும் நிலையை அடைந்தனர். எஞ்சி இருந்த உயிரும் இராமன் வனம் புகுந்தான் என்றதனை உணர்ந்ததும் போயிற்று என்றாலும் உயிர் என்பது நாம் நினைக்கும் போது போய் விடுமா? அதற்கு என்று ஒரு எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதல்லவா? அதனால் அவர்கள் உயிர் நீங்கவில்லை என்பதாம்.

86. மக்களை வசிட்டன் தேற்றுதல்

மன்னற்கு அல்லர்; வனம்போன
மைந்தர்க்கு அல்லர்; வாங்கரிய
இன்னல் சிறையின் இடைப்பட்டார்
இருந்தார்; நின்ற அருந்தவனும்
''உன்னற்கு அரிய பழி அஞ்சி
அன்றோ ஒழிந்தது யான்'' என்று
பன்னற்கு அரிய பல நெறியும்
பகர்ந்து பதைப்பை நீக்கினான். (2020)

(வாங்க அரிய-போக்குதற்கு அரிய / நீக்குதற்கரிய; நின்ற-நிலைபேறுடைய; உன்னற்கு அரிய-நினைத்தற்கு அரிய; பழி-தீவினை; பதைப்பு-வருத்தம் / துன்பம் / துடிப்பு / பரபரப்பு; ஒழிந்தது-கைவிட்டது; நெறி-நீதி / நியாயம்)

நகரில் இருந்து மன்னர் பட்ட துயரத்திற்காவது ஆறுதல் கூறியிருக்கலாம்; அல்லது காட்டிலேயே இருந்து இராமபிரானைத் திருப்பிக் கூட்டி வந்திருக்கலாம், இவ்விரண்டையும் செய்யாது இவ்விரண்டிற்கும் இடையில் போக்குதற்கு அரிய சிறையில் அகப்பட்டதைப் போல அயோத்தி மக்கள் துன்பம் அடைந்து நின்றனர்; அப்போது அங்கு வந்த, நிலை பெற்ற அரிய தவத்தைச் செய்தவனான வசிட்ட முனிவன், ''நானும் உங்களைப் போலவே உயிர் துறக்க

Koviloor Digital Library

எண்ணினேன்; ஆனால் அதனால் நினைத்தற்கரிய பெரும் பாவமும் பழியும் வந்து சேரும் என்று கருதியே அச்செயலைக் கைவிட்டேன்'' என்று கூறி, இன்னும் சொல்லுவதற்கரிய பல வகை நீதி நெறிகளையும் கூறி, அம்மக்களின் துடிப்பையும் வருத்தத்தையும் போக்க முயன்றான்.

நாட்டிலும் இருக்காமல், காட்டிலும் சிறிது நேரம் தங்கியிருக்காமல், மன்னருக்கும் உதவாமல், மைந்தன் இராமனுக்கும் உதவாமல் இப்படி இரண்டும் கெட்ட நிலையில் சிறையில் அகப்பட்டுக் கொண்டதைப் போலத் துயருற்றனர் மக்கள் என்பதாம். பழி என்றது தற்கொலையைக் குறித்தது.

87. மக்கள் தணிந்திருத்தல் [கவிக் கூற்று]

வெள்ளத்து இடைவாழ் வடஅனலை அஞ்சி, வேலைகடவாத
பள்ளக்கடலின், முனிபணியால், பையுள் நகரம் வைகிட, மேல்
வள்ளல் தாதை பணியினால், வானோர் தவத்தால் வயங்கு இருளின்
நள்ளில் போன வரிசிலைக்கை நம்பி செய்கை நடத்துவாம். (2021)

(பையுள்-துன்பம்; பணி-கட்டளை; பள்ளம்-ஆழம்; வைகிட-தங்கிட; வயங்கு-விளங்குகின்ற; வரி-கட்டமைந்த; வடவனல்-வடவைத்தீ / வடவா முகாக்கினி; வேலை-கரை; நள்-நடு; நடத்துதல்-சொல்லுதல்)

வெள்ளம் போன்ற நீர்ப்பெருக்கை உடைய கடலில் வாழுகின்ற வடவைத்தீக்கு அஞ்சி, தனது கரையைக் கடக்காத ஆழமுடைய கடலைப் போல, வசிட்ட முனிவன் கட்டளையால் அயோத்தி நகர மக்கள் தங்கள் துயரம் தணியப் பெற்று நகரத்தில் தங்கியிருந்தார்கள். வள்ளன்மை மிக்க தசரதன் கட்டளையினாலும், தேவர்கள் செய்த பெருநதவத்தினாலும், விளங்குகின்ற இருட்டில், நள்ளிரவு வேளையில் கானகம் புகுந்த, கட்டமைந்த வில்லினைக் கையிலேந்திய இராமபிரானது செய்கைகளைப் பற்றி இப்போது கூறத்தொடங்குவோம்.

அயோத்தி நகர மக்கள் வெள்ளத்திற்கும், வசிட்ட முனிவன் வடவாமுகாக்கினிக்கும் உவமை; வடவைக் கனலால்தான் கடல் பெருகி உலகை அழிக்காமல் இருக்கிறது என்பது நூற்கொள்கை. அது போல வசிட்ட முனிவன் நல்நெறியில் சேர்ந்த அறவுரைகளினால்தான் அயோத்தி நகர மக்கள் உயிர் விடாது தணிந்திருக்கின்றனர் என்பதாம்.

தேவர்கள் தவத்தால் தான் தசரதன் கட்டளை இட நேர்ந்தது என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான் கவிஞன். வடவை என்பது பெண் குதிரை முகம் கொண்டு, கடலின் நடுவில் இருந்து, கடல் நீரைக் கட்டுப்படுத்தும் நெருப்பு.

தைலம் ஆட்டு படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

6. கங்கைப் படலம் [27 பாடல்கள்]

கங்கைக் கரையில் நிகழ்ந்தவற்றைக் கூறும் பகுதி என விரியும். இது 27 பாடல்களைக் கொண்டது. இப்படலத்துள் இராமன், சீதையோடும், இலக்குவனோடும் வழி நடத்தல், வழியிலுள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து செல்லுதல்; கங்கைக் கரையை அடைதல்; அங்கு வாழும் தவசியர் இராமனைக் காண வருதல்; அவர்களைத் தவச்சாலைக்கு அழைத்துச் சென்று விருந்து உபசரித்தல்; பின் நீராடி, எரிஓம்பி, அமுது செய்தல்; இராமனும் சீதையும் கங்கையில் நீராடுதல்; எல்லோரும் விருந்து உண்டு இனிது இருத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டு இருக்கின்றன.

1. இராமன், சீதை, இலக்குவரோடு வழி நடத்தல்

வெய்யோன்ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும், இளையானொடும் போனான்;
மையோ! மரகதமோ! மறி கடலோ! மழைமுகிலோ!
ஐயோ! இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான். (2022)

(மை-அஞ்சனம்; மறி-அலை மடங்கி வருதல்; ஓர்-ஒப்பற்ற; விரிதல்-பரவி எழுதல்; சோதி-ஒளி; வெய்யோன்-சூரியன்; பொய்-இல்லை; மரகதம்-பச்சை மணி; வடிவு-திருமேனி)

இராமனது திருமேனியின் வண்ணத்தை மை போன்ற மிகக் கருமையானது என்பேனா? மரகதக் கல் போலப் பச்சையாகவும் தண்ணொளி பெற்றதுவும் என்பேனா? அலை மடங்கி எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கும் நீலநிறக் கடல் என்பேனா? சூல் கொண்டு மழை பொழிய நிற்கும் கரிய நிறமேகம் என்பேனா? ஐயோ? இவன் வடிவழகை எப்படிச் சொல்வேன்? இவனுடைய வடிவழகு தூயது-அழியாதது-மாறாதது-குறையாதது இவன் பேரழகன்; இவனுடைய மேனியிலிருந்து பரவுகின்ற பசிய தண் ஒளியில், சூரியனின் வெய்ய ஒளி கூட மறைந்து போகும்; அப்படிப்பட்ட ஒளியை உடைய மேனியை உடைய இராமன், இடை இருக்கிறதோ, இல்லையோ என்று ஐயுறும்படியான நுண்ணிய இடையை உடையவளான தன் மனைவி சீதாதேவியோடும், தன் இளவலான இலக்குவனோடும், காட்டு வழியில் நடந்து போனான்.

Koviloor Digital Library

பொதுவாக மக்களின் உடல் அழகு வளர்ந்து தேய்ந்து, வாடி, வதங்கி அழியும் இயல்புடையது. ஆனால் இராமபிரானின் அழகோ அழியா அழகு என்கிறான் கவிஞன். வடிவு வேறு, அழகு வேறு என்பது இன்றி அழகே வடிவாக நின்றது என்கிறான் கவிஞன். அழித்தல் என்பது பிறிதொன்றால் இல்லை என்று ஆக்கப்படுதல் ஆகும். இவ்வழகினும் சிறந்ததோர் அழகு இருந்தால் தானே இது அழகில்லை என்று சொல்லமுடியும்? இங்கு அவ்வாறு ஒன்று இல்லவே இல்லை. எனவே ''அழியா அழகு'' என்றான். மை என்பது நிறத்திற்கும், மரகதம் என்பது நிறத்தோடு ஒளிக்கும், மறிகடல் என்பது நிறம், ஒளியோடு எல்லையில்லாத தன்மைக்கும், முகில் என்பது நிறம், ஒளி, எல்லையின்மை, என்பதோடு தண்மைக்கும் உவமையாகும். எனவே இராமனது மேனி எழில், நிறம், ஒளி, எல்லையின்மை, தண்மை ஆகிய எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியது என்பதாம். இதே சொற்கள் பெரியதிருமொழியில் காணக்கிடைக்கின்றன. ''மை வண்ணம், கருமுகில் போல் திகழ் வண்ணன், மரகதத்தின் அவ்வண்ண வண்ணன்'' என்பதும், ''மை வளர்க்கும் மணி உருவாம் மரகதமோ, மழை முகிலோ?'' என்பதும் ''மையார் கடலும், மணிவரையும், மாமுகிலும் போன்று இருண்ட மெய்யான்'' என்பதும் பெரியதிருமொழி. ''ஐயோ'' என்பது கவிக்கூற்று. இது இரக்கப்பொருளும் தரும், வியப்புக் குறிப்பும் தரும். இரக்கம் தொனிக்கக் குலசேகர ஆழ்வார் பாடுகிறார் கேளுங்கள். ''நெய்வாய வேல்நெடுங்கண் நேரிழையும், இளங்கோவும், பின்பு போக எவ்வாறு நடந்தனை எம் இராமாவோ?'' என்பது பெருமாள் திருமொழி. ''அச்சோ, ஐயோ, என்னே, எற்று, எவன் எனும் சொல் அதிசயம் உற இரங்கல்'' என்பது சூடாமணி நிகண்டு. கண்ணீர் எப்படி இன்பத்திற்கும் துன்பத்திற்கும் பொதுவானதோ, அதுபோல இந்த ''ஐயோ'' என்னும் சொல்லும் இரக்கத்திற்கும், வியப்பிற்கும் பொதுவானது.

2. மூவரும் மருத நிலக்காட்சிகள் கண்டு செல்லுதல் [7 பாடல்கள்]

அளிஅன்னது ஓர் அறல் துன்னிய
 குழலாள்; கடல் அமுதின்
தெளிவு அன்னது ஓர் மொழியாள்;
 நிறைதவம் அன்னது ஓர் செயலாள்;
வெளி அன்னது ஓர் இடையாளொடும்,
 விடை அன்னது ஓர் நடையான்
களிஅன்னமும், மடஅன்னமும்
 உடன் ஆடுவ கண்டான். (2023)

(அளி-வண்டு; அறல்-நெறிந்த / கருமணல்; துன்னிய-அடர்ந்த; குழல்-கூந்தல்; செயல்-தூய ஒழுக்கம்; வெளி-ஆகாயம்; விடை-காளை; ஆடுவ-விளையாடுவது)

Koviloor Digital Library

வண்டு போன்று கருமையானதும், கருமணல் போலச் செறிந்ததும், நெருங்கியுள்ளதுமான கூந்தலையுடையவளும், திருப்பாற்கடலிலிருந்து கடைந்தெடுக்கப் பெற்ற தேவாமிர்தத்தின் தெளிவு போன்ற இனிய சொற்களை உடையவளும், சிறந்த தவம் போன்ற கற்பு என்னும் ஒழுக்கம் உடையவளும், ஆகாயம் போன்று இல்லையோ என்று கூறும்படியான நுண்ணிய இடையை உடையவளுமான சீதாதேவியுடன், காளை போன்ற செருக்கும், மிடுக்கும் கொண்ட நடையை உடையவனான இராமபிரான், அந்த மருத நிலத்தில் மதக்களிப்புடைய ஆண் அன்னமும், மடப்பம் பொருந்திய இளமையான பெண் அன்னமும் ஒன்று கூடி விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

வண்டு அவள் கூந்தலின் கருமை நிறத்திற்கும், அறல் நெருக்கத்திற்கும் உவமைகள்; முனிவர்களுக்கு ஒழுக்கம் தவம் போன்று, பெண்டிருக்கு ஒழுக்கம் கற்பு. எனவே நிறைதவம் அன்னது ஓர் செயலாள் என்றார், செயல் என்பது இங்கே கற்பு ஒழுக்கத்தைக் குறிக்கும். ஆகாயம் நுண்மையால் உருவம் புலப்படாமையால் அவள் இடைக்கு உவமை. இராமனுடைய நடைக்கு, காளையின் கம்பீரமும் மிடுக்கும் உவமை. இவர்கள் இப்போது சென்று கொண்டிருப்பது கோசல நட்டின் தெற்கு எல்லை எனவே இவை மருத நிலக்காட்சிகள். இவற்றைக் கண்டான் என்பது, தானும் கண்டு, அவர்களுக்கும் காட்டி, மூவரும் மகிழ்ந்தனர் என்பதை உள்ளடக்கியது. இவர்கள் வனம் புகுந்ததால் வருத்தமுற்றிலர், மாறாக மகிழ்ச்சியே அடைந்தனர் என்பது பெறப்படும்.

3. அஞ்சு அம்பையும், ஐயன் தனது அலகு அம்பையும் அளவா
நஞ்சங்களை வெலல் ஆகிய நயனங்களை உடையாள்,
துஞ்சும் களிவரி வண்டுகள் குழலின்படி சுழலக்
கஞ்சங்களை மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாள். (2024)

(அஞ்சு-ஐந்து; அலகு-கூர்மையான / இலைவடிவான; அளவா-அளந்து; நயனம்-கண்கள்; குழல்-வேய்ங்குழல் / பாவில் நெய்கின்ற குழல்; சுழலல்-மயங்கித்திரிதல்; கஞ்சம்-தாமரை மலர்; மஞ்சன்-மைந்தன் / வீரன் / இராமன்; துஞ்சுதல்)

மன்மதனது ஐந்து மலரம்புகளையும், இராமபிரானுடைய கூர்மையான, இலை வடிவான அம்பினையும் அளந்தறிந்து, அவற்றினின்றும் மேம்பட்டதும், நஞ்சினையும் தன் கருமையாலும் விடத்தன்மையாலும் வெல்லுகின்ற ஆற்றலுமுடைய கண்களையுடைய சீதாதேவி, மதக்களிப்பும் உடல்களில் வரிவடிவமும் கொண்ட வண்டுகள், பாவில் மூங்கிலாலான நெய்குழல் போவதும் வருவதும் போல, ரீங்காரித்துக் கொண்டு சுற்றிச் சுற்றித் திரியவும், இராமபிரானுடைய திருவடிகளா அல்லது தாமரை மலரா என்று இனம் பிரித்தறியாதபடி, இராமபிரானது திருவடிகள் மேம்பட்டு இருப்பதைக் கண்டு அவ்வண்டுகள் நகைப்பதைக் கண்டாள்.

Koviloor Digital Library

மன்மதனது ஐந்து மலரம்புகள் தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் அல்லது கருங்குவளை என்பன; அவனுடைய ஐந்து அம்புகளையும்., இராமபிரானது கூர்மையான அம்புகளின் ஆற்றலையும், தனது கண்களினாலேயே ஆற்ற வல்லவள் சீதை என்று சீதையின் கண்கள் சிறப்பிக்கப்பட்டன. தேன் உண்டு உறங்கும் செருக்குடைய வண்டுகள் இராமனது திருவடிகள் எவை, தாமரை மலர்கள் எவை என்று இனம் கண்டு பிடிக்கமுடியாமல் சுற்றிச் சுற்றிப் போவதும் வருவதுமாய்த் திரிந்து கொண்டு இருந்தன. இராமனது திருவடிகளுக்குத் தாமரை மலர்கள் ஒப்பாகாமை கண்டு வண்டுகள் இகழ்ந்து நகைத்ததைக் கண்டு சீதை மகிழ்ந்தாள் என்றவாறு.

4. மாகந்தமும் மகரந்தமும், அளகம் தரும் மதியின்
பாகம்தரும் நுதலாளொடு, பவளம் தரும் இதழான்
மேகம்தனி வருகின்றது மின்னொடு என, மிளிர்பூண்
நாகம் தனி வருகின்றது பிடியொடு என, நடவா. (2025)

(மாகந்தம்-மிக்க நறுமணம்; மகரந்தம்-சுண்ணம் / பூந்தாது / வாசனைப்பொடி; அளகம்-கூந்தல்; மிளிர்-விளங்குகின்ற; நாகம்-யானை; பிடி-பெண்யானை; நடவா-நடந்து; மதியின்பாகம்-பிறைமதி; பூண்-யானைக் கொம்பிற்கு இடும் பூண் / கிம்புரி; நாகம் என்பது மலை; மலைப் பகுதியில் வாழ்வது ஆதலின் நாகம் என்பது ஆண்யானைக்குக் காரணப்பெயர்)

மிக்க நறுமணமும், வாசனைப் பொடி போன்ற சுண்ணம் அல்லது பூந்தாதுக்களை அப்பிய கூந்தலையும், பிறைச் சந்திரன் போன்ற நெற்றியையும் உடைய சீதாதேவியோடு, பவளம் போன்ற சிவந்த இதழ்களையுடைய இராமபிரான், மேகம் ஒன்று இடி முழக்கம் செய்யாமல் மின்னலோடு மட்டும் தனித்து வருவது போலவும், ஒளி விளங்குகின்ற கிம்புரி என்ற பூண் அணிந்துள்ள கம்பீரமான ஆண்யானை ஒன்று, தன் பெண் யானையொடு எவ்வித ஆரவாரமும் இன்றித் தனித்து வருவது போலவும், காட்டின் வழியே நடந்து சென்று-குளகப்பாடல்.

மேகமும் நாகமும் இராமபிரானுக்கும், மின்னலும் பிடியும் சீதாதேவிக்கும் உவமை. மகளிர் கூந்தலில் பூந்தாதுக்களையும், வாசனைப் பொடிகளையும் இட்டு, மணம் ஊட்டி வைப்பது வழக்கம்.

5. தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச் சுவை அமுதின்,
கிளைகட்டிய கருவிக் கிளர் இசையின், பசைநறவின்,
விளைகட்டியின், மதுரித்து எழுகிளவிக் கிளி விழிபோல்,
களைகட்டவர் தளைவிட்டு எறி குவளைத் தொகை கண்டான். (2026)

(கிளை-வேய்ங்குழல் / மூங்கில்; சுருதி-இசை; கிளை-நரம்பு; கருவி-யாழ்; பசை-சாரம்; நறவு-தேன்; விளைகட்டி-வெல்லம் / கற்கண்டு;

Koviloor Digital Library

மதுரித்து-இனித்து; கிளவி-சொல்; கட்டல்-பறித்தல்; தளை-வயல்; கட்டிய-அமைக்கப்பெற்ற; முட்டுதல்-தாக்குதல்)

தொளைகள் அமைக்கப்பட்ட மூங்கிலாலாகிய புல்லாங்குழலில் காற்று மோதுவதால் உண்டாகின்ற இசையின் சுவை என்கிற அமிர்தத்தைக் காட்டிலும், நரம்பால் அமைக்கப்பட்ட கருவியாகிய யாழ் எழுப்புகின்ற இசையினைக் காட்டிலும், சாரமுள்ள பசுமையான தேனின் இனிமையைக் காட்டிலும், கருப்பஞ்சாற்றில் உண்டாகிற கண்டின் சுவையைக் காட்டிலும், இனிமையாகப் பேசுகின்ற, கிளி போலும் கொஞ்சிப் பேசுகின்ற சீதாதேவியின் கண்களைப் போன்ற, கருங்குவளை மலர்களின் கூட்டத்தை களை பறிக்கும் உழவர்கள் அம்மலர்க் கொத்துக்களை, களை என்று கருதி வயலை விட்டு வரப்பினில் எறிகின்ற காட்சியைப் பார்த்தான்.

கிளை என்பது மூங்கிலைக் குறித்துப் புல்லாங்குழலையும், கிளை கட்டிய கருவி என்பது நரம்புகளால் இணைக்கப்பட்ட கருவியாகிய யாழையும் குறித்து நின்றது. சீதாதேவியின் சொல் இனிமைக்குப் புல்லாங்குழல், யாழ், தேன், கருப்பஞ்சாறு, கற்கண்டு, கிளியின் சொல் ஆகியவை உவமை; களை பறிப்பவர்கள் கருங்குவளை மலர்களைக் களையெனப் பறித்து எறியும் செயலால், சீதாதேவியின் கண்ணழகும் சிறப்பிக்கப்பட்டது ஒரு நயம். பொதுவாக மகளிர் கண்களுக்குக் கருங்குவளை மலர்களை உவமை கூறுவது கவிமரபு.

6. அருப்பேந்திய கலசத்துணை, அமுதுஏந்திய மதமா
மருப்பேந்திய எனலாம் முலை, மழைஏந்திய குழலாள்;
கருப்பேந்திரம் முதலாயின கண்டாள்; இடர்காணாள்;
பொருப்பேந்திய தோளானோடு விளையாடினள், போனாள். (2027)

(அருப்பு- கோங்கு-தாமரை அரும்பு; துணை-இரண்டு; மா-யானை; மருப்பு-கொம்பு / தந்தங்கள்; மழை-மேகம்; குழல்-கூந்தல்; கருப்பேந்திரம்-கரும்பு ஆலை; பொருப்பு-மலை; ஏந்திய-உயர்ந்த / போன்ற / சிறந்த; யந்த்ரம் என்பது வடசொல் எந்திரம் தமிழாக்கம்)

கோங்கு, தாமரை போன்றவற்றின் அரும்பு போன்ற முலைக் காம்புகளையும், அமிர்தம் நிரம்பிய பொற்கலசம் போன்ற வடிவமுள்ள இருமுலைகளையும், மதச்செருக்குக் கொண்ட யானையின் கொம்புகள் என்று சொல்லும் படியான தனங்களையும், மேகம் போன்று சிறப்பித்துச் சொல்லும்படியான கரிய கூந்தலையும் உடைய சீதாதேவி, மருத நிலம் வழியாகச் செல்லும் போது கரும்பாலை முதலியனவற்றைக் கண்டு கொண்டே சென்றாள்; வழி நடை வருத்தம் சிறிதும் தோற்றாதவளாய்ச் சென்றாள்; மலையைப் போன்ற உயர்ந்த தோள்களையுடைய இராமபிரானோடு விளையாடிக் கொண்டே சென்றாள்.

வேறு வேறு தன்மையால் கொங்கைகளுக்கு, அரும்பும், அமுத கலசமும், யானைக் கொம்புகளும் உவமையாயின. வழியிடைக்

Koviloor Digital Library

காட்சிகளைக் கண்டு கொண்டு சீதை நடை வருத்தம் தெரியாமல் மகிழ்ச்சியாகச் சென்றாள் என்பதாம்.

7. பல்நந்து உகுதரளம் தொகு படர்பந்திகள் படுநீர்;
அன்னம்துயில் வதி தண்டலை; அயல் நந்து உறையும் புளினம்,
சின்னம் தருமலர் சிந்திய செறி நந்தனவனம், நன்
பொன் நந்திய நதி, கண்டு உளம் மகிழ்தந்தனர், போனார். (2028)

(நந்து-சங்குகள்; தரளம்-முத்து; பந்தி-வரிசை; நீர்-நீர்த் துறைகள்; தண்டலை-சோலை; புளினம்-மணற்குன்றுகள்; சின்னம்-விடுபூ / உதிரிப்பூ; நந்திய-மிகுதியாக உடைய; உகு-ஈன்ற / சிந்திய; தொகு-திரண்ட)

பல வகைப்பட்ட சங்குகள் ஈன்றெடுத்த முத்துக்கள் திரண்டு, பரந்த பெரிய வரிசையாக அமைந்திருக்கிற நீர் நிலைகளையும், அன்னம் தங்கித் துயிலும் சோலைகளையும், அதன் அருகில் சங்குப் பூச்சிகள் உறைகின்ற மணற்குன்றுகளையும், உதிரிப் பூக்கள் சிந்திக் கிடக்கின்ற அடர்ந்த நந்தவனங்களையும் நல்ல பொற்பொடிகள் கொழித்து விளங்குகின்ற நதிகளையும் கண்டு கொண்டு, மிக மகிழ்ச்சியுடன் மூவரும் சென்றனர்.

நீர்நிலைகள், சோலைகள், மணற்குன்றுகள், நந்தவனங்கள், நதிகள் முதலியன மருத நிலத்திற்கு உரியன.

8. கால்பாய்வன முதுமேதிகள், கதிர்மேய்வன கடைவாய்ப்
பால்பாய்வன; நறைபாய்வன மலர்வாய் அளிபடரச்
சேல்பாய்வன; கயல்பாய்வன; செங்கால் மடஅன்னம்
போல், பாய்புனல், மடவார் படி நெடுநாடு அவை போனார். (2029)

(கதிர்-நெற்கதிர்கள்; முது-பெரிய / கிழட்டுத்தன்மை / பருவம் முதிர்ந்த; மேதி-எருமைகள்; மட-இளமை; மடவார்-மகளிர்; நாடு-மருத நிலப்பகுதிகள்; அளி-வண்டுகள்; புனல்-நீர் நிலைகள்; படி-நீராடுகின்ற)

தம் கால்களால் பாய்ந்து செல்லுகின்ற பருவம் முதிர்ந்த கிழட்டு எருமைகள், முற்றாத பசிய நெற்கதிர்களை மேய்வதால், அதன் பால் எருமைகளின் கடைவாயிலினின்று ஒழுகுகின்றன; அவை அங்குள்ள நீர் நிலைகளில் போய்ப் பாய்கின்றன. அதனால் நீர் நிலைகளில் உள்ள நீர்ப்பூக்களின் மேல் ரீங்காரமிட்டுத் திரியும் வண்டுகள், தேன் போன்ற மகரந்தங்களைப் பருக, அதில் நிறைந்திருந்த சேல் மீன்களும், கயல் மீன்களும் பாய்ந்து செல்வன ஆயின; சிவந்த கால்களையுடைய இளமையான அன்னப்பறவைகள் போல், பாய்கின்ற நீர் நிலைகளில் மகளிர் படிந்து நீராடிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய ஒப்பற்ற மருதநிலக் காட்சிகளைக் கண்டு கொண்டே அப்பெரிய கோசல நாட்டைக் கடந்து மூவரும் சென்றனர்.

கோசல நாட்டின் நீர்வளம் பேசப்பட்டது.

Koviloor Digital Library

9. மூவரும் கங்கைக் கரையை அடைதல்

பரிதி பற்றிய பல்பகல் முற்றினர்,
மருதவைப்பின் வளம்கெழு நாடு ஒரீஇச்
சுருதிகற்று உயர் தோம்இலர் சுற்றுறும்
விரிதிரைப் புனல் கங்கையை மேவினார். (2030)

(பரிதி-ஒளி; முற்றுதல்-கழித்தல்; ஒரீஇ-நீங்கி / கடந்து; சுருதி-வேதங்கள்; தோம்-குற்றம்)

ஒளி பொருந்திய பல பகல்களைக் கடந்து, மருத நிலமாகிய, வளம் பொருந்திய கோசல நாட்டை விட்டு நீங்கி, வேதங்கள் கற்று உயர்ந்த, குற்றமற்றவர்களான முனிவர்கள் சூழ்ந்து வாழுகின்ற, பரந்த அலைகளையுடைய கங்கை நதி தீரத்தை மூவரும் அடைந்தனர்.

கங்கைக்கரை, தவமுனிவர் பலர் ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டு தங்குவதற்கு ஏற்ற இடம் என்பதாம். கங்கை நதி தன்னை அடைந்தாரின் பாவத்தைக் போக்குவதால் முனிவர்கள் கங்கைக் கரையைச் சுற்றித் தங்கியிருந்து தவம் செய்து வரலாயினர் என்பதாம்.

10. முனிவர்கள் இராமனைக் காணவருதல்

கங்கை என்னும் கடவுள் திருநதி
தங்கி வைகும் தபோதனர் யாவரும்
''எங்கள் செல்கதி வந்தது'' என்று ஏம்உறா
அங்கண் நாயகற் காணவந்து அண்மினார். (2031)

(கடவுள்-தெய்வத்தன்மை வாய்ந்த; வைகுதல்-வாழுதல்; தபோதனர்-தவச்செல்வர்கள்; யாவரும்-எல்லோரும்; கதி-புகலிடம்; ஏம்உறுதல்-மகிழ்தல்; அண்முதல்-அடைதல் / நெருங்கிச் செல்லுதல்)

கங்கை என்று சொல்லப்படும் தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த நதியின் கரையில் தங்கி தவம் இயற்றி வரும் தவச் செல்வர்கள் அனைவரும், கங்கைக் கரைக்கு இராமன் வந்து இருக்கிறான் என்பதை உணர்ந்து, ''நாங்கள் சென்றடைய வேண்டிய புகலிடமான பெரிய பரம்பொருள் இங்கேயே எழுந்தருளியிருக்கிறது'' என்று மிக்க மகிழ்ச்சியுற்று, அழகிய அருள் பொழியும் கண்களையுடைய தலைவனாகிய இராமபிரானைக் காணும் பொருட்டு, அவன் இருக்குமிடத்திற்கு வந்து குழுமினர்.

''எழுமையும் கூடி ஈண்டிய பாவம், இறைப்பொழுது அளவினில் எல்லாம் கழுவிடும் பெருமைக் கங்கை'' என்பது பெரியாழ்வார் திருமொழி. தம்பால் மூழ்கியவரது பாவத்தைப் போக்குவதாலும், திருமாலின் திருவடியிலிருந்து ஓங்கி உலகளந்த போது நான்முகனால் தோற்றுவிக்கப்பட்டதாலும், சிவபெருமானது சடைமுடியில் தங்கியிருப்பதாலும் கங்கை தெய்வத்திருநதி எனப்பட்டது.

Koviloor Digital Library

11. முனிவர்கள் இராமன் அழகைக் கண்ணாரப் பருகுதல்

பெண்ணின் நோக்கும் சுவையை, பிறர் தமக்கு
எண்ணின் நோக்கி, இயம்ப அரும் இன்பத்தைப்
பண்ணின் நோக்கும் பராஅமுதைப் பசும்
கண்ணின் நோக்கினர், உள்ளம் களிக்கின்றார். (2032)

(சுவை-இன்பம்; இயம்ப அரும்-உணர்த்தற்கு அரிய; எண்-மனம்; பண்-இசை / வேதம்; பசும்கண்-அருள் தவழும் கண் / குளிர்ந்த கண்; பராவு-போற்றுதற்குரிய)

முனிவர்கள் அல்லாத பிறரான இல்லறத்துறைவோர்கள் பெண்களிடம் ஐம்புல நுகர்ச்சியில் அடையும் சுவையைத் தருபவனும், மற்றவர்கள் மனத்தால் எண்ணிப்பார்த்து, வெளிப்படையாக விளக்கிச் சொல்ல முடியாத இன்பத்தைத் தருபவனும், பண்ணோடு கூடிய வேதங்களைக் கற்றுணர்ந்த, போற்றுதற்குரிய அமிழ்தம் போன்றவனுமாகிய இராமபிரானைத் தங்களது அருள் தவழும் குளிர்ந்த கண்களினால் முற்றுற நோக்கி மனம் மகிழ்ச்சியுற்றனர் அம்முனிவர்கள்.

இராமன் இன்ப வடிவும், அமுத உருவும் கொண்டவன் என்பதாம். பரம்பொருளை எப்போதும் அகக்கண்ணாலேயே கண்டு களிக்கும் தவமுனிவர்கள், இன்று இராமபிரானை மானிடவடிவில் தமது புறக் கண்ணாலும் கண்டு களித்தார்கள் என்பதாம். அவர்கள் மனக்கண்ணால் கண்டு அனுபவிக்கும் இன்பத்தை வெளியே எடுத்துச் சொல்வது என்பது மிக அரிய செயல், இல்லறத்தார் பெண்களிடத்து நுகரும் சிற்றின்பமும் அத்தகையதே. வெளியிற் சொல்லுதற்கரிது. இந்தத் தன்மைக்காகத்தான் இரண்டையும் ஒப்புமைப்படுத்தினாரே அன்றி இழிந்த காமச் சுவைக்கு இறைவனை ஒப்பிட்டதாகக் கருதக்கூடாது. இன்பம் அடைகின்ற திறத்தில்தான் ஒற்றுமையே தவிர, இவ்விரு இன்பத்தின் முடிவுகள் வேறுபட்டுத் தான் இருக்கும். ஒன்று சிற்றின்பம்; மற்றொன்று பேரின்பம். ''கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள'' குறள் 1102. ''கண்டு, கேட்டு, உற்று, மோந்து உண்டு உழலும் ஐங்கருவி கண்ட இன்பம், தெரிவு அரிய, அளவில்லாச் சிற்றின்பம்'' என்பது திவ்யப்பிரபந்தம். ''ஐம்புலன்கள் ஆரவந்து, என் உள்ளே புகுந்த விச்சை மால்அமுதப் பெருங்கடல்'' என்பார் மணிவாசகர்; இயம்ப அரும் இன்பம் என்பதை, ''எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பது?'' என்பார் அருணகிரியார்; ''கண்டவர் விண்டிலர்'' என்பது திருமந்திரம்.

12. எதிர்கொடு ஏத்தினர்; இன்னிசை பாடினர்;
வெதிர்கொள் கோலினர் ஆடினர், வீரனைக்
கதிர்கொள் தாமரைக் கண்ணனைக் கண்ணினால்
மதுரவாரி அமுதுஎன மாந்துவார். (2033)

Koviloor Digital Library

(வெதிர்-மூங்கில்; கோல்-திரிதண்டம் / முக்கோல்; கதிர்-ஒளி; ஏத்துதல்-வாழ்த்துதல்; மதுரம்-இனிய; வாரி-பாற்கடல்; மாந்துதல்-பருகுதல்)

மூங்கிலாலான முக்கோலினை உடைய தவமுனிவர்கள், இராமபிரானை எதிர்கொண்டு அழைத்து வாழ்த்தினார்கள்; மகிழ்ச்சியால் இனிய இசைகளைப் பாடினார்கள்; ஆனந்தக் கூத்து ஆடினார்கள்; வீரனாகிய இராமபிரானை, ஒளிமிகக் கொண்ட தாமரை போன்ற கண்களை உடைய இராமபிரானின் அழகைக் கண்ணினால் பருகினர். எப்படி? இனியபாற்கடலில் இருந்து தோன்றிய தேவாமிர்தத்தை நாவால் சுவைத்துப்பருகுபவர் போலக் கண்களினாற் பருகினர்.

''முக்கோல் கொள் அந்தணர்'' என்பது கலித்தொகை; ''நூலே கரகம், முக்கோல், மனையே, ஆயும்காலை அந்தணர்க்குரிய'' என்பது தொல்காப்பியம்.

13. மனையின் நீங்கிய மக்களை வைகலும்
நினையும் நெஞ்சினர், கண்டிலர், நேடுவார்
அனையர் வந்துற, ஆண்டு எதிர்ந்தார்கள் போல்
இனிய மாதவப்பள்ளி கொண்டு எய்தினார். (2034)

(மனை-வீடு; வைகலும்-நாளும் / எப்போதும்; எதிர்தல்-சந்தித்தல்; நேடுதல்-தேடுதல்; ஆண்டு-அங்கே)

தங்கள் வீட்டிலிருந்து பிரிந்து வெளியேறிச் சென்ற தம்பிள்ளைகளை எப்போதும் அவர்கள் நினைவாகவே இருக்கும் பெற்றோர்கள், தேடித் தேடி அலைந்து காணாதவராய் இருக்கும் போது, அம்மக்களே, எதிர்பாராது அங்கே வந்து சேர்ந்தவர்களைப் பெற்றோர்கள் சந்திக்கும் போது ஏற்படுகின்ற மகிழ்ச்சியைப் போல, இத்தவசியர்களும் இராமனைக் கண்டு மிக்கு மகிழ்ந்து, தங்களுடைய இனிமையான சூழல் அமைந்த சிறந்த தவச்சாலைக்கு மூவரையும் அழைத்துக் கொண்டு சென்றனர்.

வீட்டை விட்டுப் பிரிந்து சென்ற தம் மக்கள் தாம் எதிர்பாராத போது வந்தால், அவர்களைச் சந்திக்கின்ற பெற்றோரின் மனநிலை, தமது அஞ்ஞானத்தால் மனத்தை விட்டு அகன்று சென்ற பரம்பொருளைத் தவத்தாலும் பிறவற்றாலும் தேடி அலைந்து கொண்டிருக்கின்ற முனிவர்கள், இப்போது தங்கள் கண்களின் நேரே எதிர்வந்து நிற்கின்ற அந்தப் பரம்பொருளின் அவதாரமாகிய இராமபிரானைக் காணும் மனநிலைக்கு ஒப்புக் கூறப்பட்டது.

14. முனிவர்கள் செய்த பணி விடைகள்

பொழியும் கண்ணீர்ப் புதுப்புனல் ஆட்டினர்;
மொழியும் இன்சொலின் மொய்ம்மலர் சூட்டினர்;

Koviloor Digital Library

அழிவுஇல் அன்புஎனும் ஆர்அமுது ஊட்டினர்;
வழியின்வந்த வருத்தத்தை வீட்டினர். (2035)

(பொழிதல்-சொரிதல்; மொய்-நிறைந்த; அழிவுஇல்-கெடாத; வீட்டுதல்-போக்குதல்; வருத்தம்-அயர்ச்சி)

தவச்சாலைக்கு அழைத்துச் சென்ற மூவரையும், முனிவர்கள் தங்கள் கண்களிலிருந்து சொரியும் கண்ணீரினால் நீராட்டினர். தாங்கள் பேசும் இன்சொற்களாகிய அடர்ந்த மணம்மிக்க மாலையை அவர்களுக்குச் சூட்டினர்; குறைதல் இல்லாத அன்பு என்னும் தேவாமிர்தமாகிய உணவை அவர்களுக்குப் படைத்தனர்; அதனால் அவர்கள் வழி நடந்து வந்த வருத்தத்தைப் போக்கினர்.

விருந்தினர்களை நீராட்டுதல், மலர் சூட்டுதல், பிறகு விருந்து படைத்தல் முதலியன முறையே ஆற்றும் கடமைகள். அது போலவே முனிவர்களும் செய்தனர் என்பதாம். முறையே சொல், செயல், மனம் என்ற மூன்றாலும் இராமன்பால் உள்ள அன்பை வெளிப்படுத்தினர்.

15. காயும், கானில் கிழங்கும், கனிகளும்
தூயதேடிக் கொணர்ந்தனர்; "தோன்றல்! நீ
ஆயகங்கை அரும்புனல் ஆடினை;
தீயை ஓம்பினை; செய்அமுது" என்றனர். (2036)

(தோன்றல்-மேலானவன் / பிறர் அறியுறுமாறு புகழுடன் விளங்குபவன்; ஆய-ஆடுதற்குரிய; ஓம்புதல்-வளர்த்தல்)

காட்டில் கிடைக்கின்ற காய்கள், கிழங்குகள், பழங்கள் முதலியவற்றில் தூயனவையாக உள்ளனவற்றைக் கொண்டு வந்தார்கள் முனிவர்கள்; பின்னர் இராமபிரானை நோக்கி, "எல்லோரிலும் மேலானவனே! நீ புனித கங்கையில் நீராடி, தீ வார்த்துச் செய்ய வேண்டுவன செய்து, பின்னர் உணவு அருந்துவாயாக!" என்றனர்.

நீராடி, எரிஓம்பி, அமுது செய்தல் நித்திய கரும நெறியாகும்.

16. இராமன் சீதாதேவியுடன் நீராடுதல்

மங்கையர்க்கு விளக்கு அன்ன மாதையும்
செங்கை பற்றினன்; தேவரும் துன்பு அறப்
பங்கயத்து அயன், பண்டு, தன் பாதத்தின்
அங்கையின் தரும் கங்கையின் ஆடினான். (2037)

(அற-அழியும்படி; பங்கயம்-தாமரை; பண்டு-உலகளந்த முற்காலத்து)

இராமபிரான் மங்கையர்களுக்கெல்லாம் ஒளி விளக்காகத் திகழும் தன் மனைவி சீதாதேவியின் சிவந்த செம்மையான கைகளைப் பற்றிக் கொண்டு, தேவர்கள் தங்கள் துன்பங்களெல்லாம் ஒழிந்து போகும்படி, முன்பு திரிவிக்கிரம அவதாரத்தில் தாமரையில் வீற்றிருக்கும் திருமால்

Koviloor Digital Library

ஓங்கி உலகளந்தபோது அவன் ஒரு பாதம் விண்ணுலகத்திற்கு அப்புறம் எட்டியபோது நான்முகன் அதைத் தனது கமண்டல நீரால் மஞ்சனம் சூட்டுவித்தபோது தன் உள்ளங்கைகளிலிருந்து உண்டாக்கிய கங்கை நதியில், இப்போது நீராடினான்.

பொதுவாகப் பெண்கள் தங்கள் வீடுகளுக்கு எல்லாம் விளக்குப் போன்றவர்களானவர்கள். 'மனைக்கு விளக்கம் மடவார்' என்பது நான்மணிக்கடிகை; இங்கே சீதை மங்கையர் எல்லோருக்குமே விளக்குப் போல்பவள் என்கிறான் கவிஞன். ''சதுமுகன் கையில், சதுப்புயன் தாளில் தங்கிக்கதிர்முகமணி கொண்டு இழிபுனல் கங்கை'' என்பது பெரியாழ்வார் திருமொழி. புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவோர், சங்கல்பம் செய்து கொண்டு, தம் மனைவியர் கைபற்றி ஒன்றாக நீராடுதல் மரபு.

17. கங்காதேவி இராமனைப் போற்றுதல்

கன்னி நீக்க அரும் கங்கையும் கைதொழாப்
'பன்னி நீக்க அரும் பாதகம் பார் உளோர்
என்னின் நீக்குவர், யானும் இன்று என்தந்த
உன்னின் நீக்கினேன்; உய்ந்தனன் ஆம்' என்றாள். (2038)

(தொழா-தொழுது; பன்னுதல்-சொல்லுதல்; பாதகம்-பாவங்கள்; தந்த-பெற்றெடுத்த; கன்னி-அழியாத்தன்மை; உய்தல்-கடைத்தேறுதல்)

அழியாத்தன்மை நீங்காத கங்கா தேவியும் இராமபிரானைக் கைதொழுது, ''சொல்லி முடிக்க முடியாத அளவு பாவங்கள் செய்தவர்களான இவ்வுலகத்தோர், அதைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு என்னிடம் நீராடுவார்கள். அந்தப் பாவங்களையெல்லாம் இதுகாறும் சுமந்துவந்த நானும், இன்று என்னைத் தோற்றுவித்த நீயே நீராடியதால் போக்கிக் கொண்டேன். எனவே கடைத்தேறினேன்'' என்றாள்.

கங்கைக்கு ''கன்னி நீக்க அரும் தன்மை'' என்பது எக்காலத்தும் வற்றாது ஓடும் நீர்ப்பெருக்குடைய ஜீவ நதி என்பதைக் குறிப்பதாகும். பிறர் பாவங்களைப் போக்கும் கங்கை, இன்று தன்னைத் தோற்றுவித்த இறைவனே தன்னில் மூழ்கியதால், தனது பாவங்கள் அற்றுப்போய் கடைத்தேறியதாகக் கூறினாள் என்க. பன்னி நீக்கரும் பாதகம் என்பது பிராயச்சித்தத்தாலும் நீக்க முடியாத பாவங்கள் என்று பொருள்படும்.

18. நீராடிய இராமபிரானது தோற்றம்

வெங்கண் நாகக்கரத்தினன், வெண்நிறக்
கங்கை வார்சடைக் கற்றையன், கற்புடை
மங்கை காண நின்று ஆடுகின்றான், வகிர்த்
திங்கள் சூடிய செல்வனின் தோன்றினான். (2039)

Koviloor Digital Library

(வெம்-கொடிய; நாகம்-பாம்பு / யானை; ஆடுதல்-கூத்தாடுதல் / முழுகுதல்; வகிர்-துண்டம்)

கொடிய கண்களை உடைய யானையின் துதிக்கையைப்போன்ற பெரிய நீண்ட கைகளை உடையவனும், கற்புக்கு இலக்கணமாகிய சீதா தேவியுடன் இருந்து, நேரே காணும்படி நின்று, நீரில் மூழ்குகின்ற வனுமாகிய இராமபிரான், வெண்மை நிறம் பொருந்திய கங்கை நீர் தன் சடைமுடியிலிருந்து ஒழுகுகின்ற முடியினை உடையவனும், பிறைச்சந்திரனைத்தலையில்சூடியவனுமானசிவபெருமானைப்போலத் தோற்றமளித்தான்.

இங்கே இதே பாடல் சிவபெருமானுக்கும் பொருந்திவருதல் காண்க. கொடிய கண்களையும், பாம்புகளைக் கைகளில் உடையவனும், இமய மலையில் பிறந்தவளுமான உமாதேவியின் கண் எதிரே அம்பலத்தில் கூத்தாடுகின்றவனும், பிறைச்சந்திரனைத் தன் தலையில் சூடியவனுமாகிய சிவபெருமான் என்பதாம்.

19. தள்ளும் நீர்ப்பெரும் கங்கைத் தரங்கத்தான்
வள்ளி நுண்இடை மாமலராளோடும்
வெள்ளி வெண் நிறப் பாற்கடல் மேலைநாள்
பள்ளி நீங்கிய பான்மையில் தோன்றினான். (2040)

(தள்ளும்-மோதுகின்ற; தரங்கம்-அலைகள்; வள்ளி-வல்லி / கொடி; பள்ளி-படுக்கை)

மோதுகின்றஅலைகளையும், நீர்ப்பெருக்கையும்உடையகங்கையில், வல்லிக்கொடி போன்ற நுண்ணிய இடையையுடைவளும், சிறந்த தாமரைப் பூவில் வாழும் திருமகளோடும், நீராடுகின்ற இராமபிரான் முன்னொரு காலத்தில் வெள்ளியைப் போன்ற வெண்மை நிறமுடைய திருப்பாற்கடலில் ஆதிசேடனாகிய பாம்பணையில் இருந்து அறிதுயில் நீங்கி வெளி வந்த தன்மையைப் போல இராமன் இப்போது தோற்றமளித்தான்.

வெண்ணிறத்தாலும், அலைமோதுவதாலும் பாற்கடல் கங்கைக்கு ஒப்பு; வெண்மையான அலைகள் நிறைந்த கங்கையில் சீதாதேவியோடு இராமபிரான் நீராடியெழுந்து நின்ற காட்சி, திருப்பாற்கடலில் துயிலும் திருமால் திருமகளோடும் முன்பு எழுந்துநின்ற காட்சியைப் போன்றிருந்தது என்பதாம். முதற்பாட்டில் சிவபெருமான் போன்றிருந்தான் என்ற கவிஞன் இப்பாடலில் திருமாலுக்கு உவமை கூறினான்.

20. சீதாதேவி கங்கையில் நீராடுதல்

வஞ்சி நாணி வணங்க, மடநடைக்கு
அஞ்சி அன்னம் ஒதுங்க, அடிக்கு மென்

Koviloor Digital Library

கஞ்சம் நீரில் ஒளிப்ப, கயல்புக,
பஞ்சி மெல்லடிப் பாவையும் ஆடினாள். (2041)

(பஞ்சி-செம்பஞ்சுக்குழம்பு; வஞ்சி-வஞ்சிக்கொடி; மட-மெல்லிய / இளமையான; கஞ்சம்-தாமரை மலர்கள்)

செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப் பெற்ற, பஞ்சுபோன்ற மெல்லிய பாதங்களையுடையவளும், ஓவியப்பதுமை போன்றவளுமான சீதாதேவி, நீராடுவதால், கங்கையிலுள்ள வஞ்சிக் கொடி அவள் இடைக்குத் தோற்று வணங்கிப் போனது; அவளுடைய மெல்லிய நடைக்குத் தோற்று அன்னப் பறவைகள் கரைக்கு ஒதுங்கிப் போயின; அவள் திருவடிகளுக்குத் தோற்றுத் தாமரை மலர்கள் நீருக்குள் ஒளிந்து கொண்டன; அவளுடைய கண்களுக்குத் தோற்றுக் கயல் மீன்கள் நீர்க்கடியில் புகுந்து கொண்டன. இவ்வளவும் நடைபெறச் சீதை கங்கையில் நீராடினாள்.

பொதுவாகப் பெண்களின் இடைக்கு வஞ்சிக் கொடியையும், நடைக்கு அன்னப்பறவைகளையும், பாதங்களுக்குத் தாமரை மலரையும், கண்களுக்குக் கயல் மீன்களையும் உவமையாகக் கூறுவது மரபு. இவ்வாறு உவமைகூறப்படும் நீர்வாழ்வனவெல்லாம் சீதாதேவியின் அங்கங்களுக்கு ஆற்றாது தோற்று ஓடியதாகக் கூறிச் சீதாதேவியின் அழகைச் சிறப்பித்துப் பாடுகிறான் கவிஞன்.

21. தேவதேவன் செறிசடைக் கற்றையுள்
கோவைமாலை எருக்கொடு கொன்றையின்
பூவும் நாறலள், பூங்குழல் கற்றையின்
நாவி நாள்மலர் கங்கையும் நாறினாள் (2042)

(செறி-அடர்ந்த; நாவி-கத்தூரிக்குழம்பு; நாள்-புதிய / அன்றலர்ந்த)

சீதாதேவி கங்கையில் முழுகியதால், கங்காதேவியும், தனக்கு இயற்கையிலேயே உள்ள, தேவர்களுக்கெல்லாம் தேவனான சிவபெருமானின் அடர்ந்த சடைமுடியில் உள்ள, தொடுக்கப்பெற்ற மாலையால் ஆகிய வெள்ளெருக்க மலர், கொன்றை மலர் ஆகியவற்றின் நறுமணம் வீசப்பெறாமல், மெல்லிய கூந்தலையுடைய சீதாதேவியின் கூந்தல் தொகுதியிலுள்ள கத்தூரிப் புனுகின் வாசமும், இன்னும் அவள் அணிந்திருந்த அன்றலர்ந்த மலர்களின் நறுமணமும் தான் உடையவளானாள்.

கங்கை சிவபெருமான் தலை முடியிலிருந்து பெருக்கெடுத்து வருவது. அதனால் அவன் சடைமுடியில் அணிந்திருக்கும், வெள்ளெருக்கு, கொன்றை முதலிய மலர்களின் நறுமணம் தான் கங்கையில் பரவியிருக்க வேண்டும். ஆனால் இன்று சீதாதேவி கங்கையில் நீராடியதால், கங்கை சீதாதேவி அணிந்திருந்த கூந்தலில் பூசப்பட்ட கத்தூரிப் புனுகு மற்றும் அன்றலர்ந்த மலர்களின் நறுமணம் தான் வீசியது என்று சீதாதேவியின் கூந்தல் நறுமணத்தைச் சிறப்பித்தார். வெள்ளெருக்கும் கொன்றையும்

Koviloor Digital Library

கூறியதால் அதன் இனமானதும், கூறாது விடப்பட்டதுமான கரந்தை, மத்தம், கூவிளம் முதலியவற்றையும் கொள்ளலாம். தேவதேவன் என்பது மகாதேவன் என்பதைப்போல.

22. கங்கை செவிலித்தாய் போல் நீராட்டுதல்

நுரைக் கொழுந்து எழுந்து ஓங்கி நுடங்கலால்
நரைத்த கூந்தலின் நங்கை மந்தாகினி
உரைத்த சீதை தனிமையை உன்னுவாள்
திரைக்கை நீட்டிச் செவிலியின் ஆட்டினாள். (2043)

(நுடங்குதல்-அசைதல் / வளைந்து சூழ்தல்; மந்தாகினி-கங்காதேவி; உரைத்த-புகழப்பட்ட)

நுரையின் நுனி எழுந்து பொங்கி அசைவதால், நரைத்த கூந்தலை உடைய முதியவள் போன்ற மந்தாகினி என்ற கங்காதேவி, எல்லோராலும் புகழ்ந்து உரைக்கப்படுகின்ற சீதாதேவி வேறு ஒருவர் துணையில்லாமல் தனியாக வந்திருப்பதை எண்ணித் தன்னுடைய அலைகளாகிய கைகளை நீட்டிச் செவிலித் தாயர் அவளுக்கு நீராட்டுவிப்பதைப்போலத் தானே சீதாதேவிக்கு நீராட்டினாள்.

ஆற்றில் எழுந்து பொங்கி ஓங்கும் நுரையின் கொழுந்தை, முதியவளான செவிலித்தாயான கங்காதேவியின் கூந்தலுக்கு உவமித்தார். மந்தாகினி என்பது கங்கைக்கு மற்றொரு பெயர். பொதுவாக இளவரசிகள் செவிலித்தாயர் சூழத்தான் நீராடப் போவர். இங்கே அவர்கள் துணையின்றி இவள் தனியாக வந்திருப்பதால் கங்காதேவி தானே செவிலித்தாயைப் போல் அன்பு பாராட்டி அவளை நீராட்டுவித்தாள் என்பதாம். பொதுவாகச் செவிலித்தாயர் என்பவர் முதியவர்களாகத் தான் இருப்பார்கள். 'நரை விராவு உற்ற நறுமென் கூந்தல் செம்முது செவிலியர்' என்பது அகநானூறு.

23. கங்கையும் யமுனையும் கலத்தல்

மங்கை வார்குழல் கற்றை மழைக்குலம்
தங்கும் நீரிடைத் தாழ்ந்து குழைப்பன,
கங்கையாற்றுடன் ஆடும் கரியவள்
பொங்கும் நீர்ச்சுழி போவன போன்றவே. (2044)

(வார்-நீண்ட; மழை-மேகம் ; கரியவள்-யமுனை / காளிந்தி நதி; ஆடுதல்-கலத்தல்; தாழ்ந்து-அமிழ்ந்து; குழைப்பன-சுழலுவன)

சீதாதேவியின் நீண்ட கூந்தலின் தொகுதி, மேகக்கூட்டம் போன்று கரிய நிறமுடையது. அவள் கங்கையாற்றில் தன் கூந்தலை அமிழ்த்திச் சுழன்று நீராடும் காட்சி. வெண்ணிறமான கங்கையாற்றின் நீரோடு, கரிய

Koviloor Digital Library

நிறமுடைய யமுனை நதியின் நீர் வந்து கலந்து பொங்கி, நீர்ச்சுழியில் செல்வது போலத் தோற்றமளித்தது.

கங்கை வெண்ணிறமான நீரையுடையது. யமுனை கரிய நிறமுடைய நீரையுடையது. இவை இரண்டும் கலக்குமிடம் ப்ரயாகை, திரிவேணி சங்கமம் என்று வழங்கப் படுகிறது. யமுனை கங்கையோடு கலக்கும் உபநதி. அது கலக்குமிடத்தில் இரண்டு நிறமும் கலந்து காணப்படும். அதுபோல வெண்ணிற கங்கையில் சீதாதேவியின் கருநிறக்கூந்தல் சுழலும்போது இரண்டு வண்ணங்களும் கலந்து தெரிகின்றன என்பதாம்.

24. சீதை திருமகள் போல் தோற்றமளித்தல்

சுழிபட்டு ஓங்கிய தூங்கு ஒலி ஆற்றுத்தன்
விழியில் சேல் உகள் வால் நிறவெள்ளத்து
முழுகித் தோன்றுகின்றாள், முதல் பாற்கடல்
அழுவத்து அன்று எழுவாள் என ஆயினாள். (2045)

(தூங்கு-செறிந்த; உகள்தல்-பிறழ்தல்; வால்-வெண்மை; முதல்-சிறந்த ; அழுவம்-பரப்பு / பள்ளம்; அன்று-முற்காலத்து)

சுழித்துக் கொண்டு, மிகுந்த ஒலியுடன் ஓடுகின்ற கங்கையாற்றின் வெண்மையான நீர்ப்பரப்பில் முழுகித் தோற்றுகின்றவளான, பிறழ்கின்ற சேல் மீன்கள் தன் கண்களைப் போல் தோன்றுகின்ற சீதை, முற்காலத்தில், முதன்மையானதும் சிறந்ததுமான பாற்கடல் பரப்பில் தோன்றிய திருமகள் போல் தோன்றினாள்.

பேரொலியாலும், வெண்மை நிற நீர்ப்பெருக்காலும், கங்கையாறு பாற்கடலுக்கு உவமை. அதில் முழுகி எழுகின்ற சீதாதேவி, அன்று பாற்கடலில் இருந்து எழுந்து தோன்றிய திருமகளுக்கு உவமை. இராமபிரானைத் திருமால், சிவபெருமான், முதலியோர் தோற்றத்திற்கு ஒப்புப்படுத்திய கவிஞன் மறவாமல் சீதையைத் திருமகளுக்கு ஒப்புக் காட்டுதல் நோக்கத் தக்கது.

25. கங்கையின் பேறு–கவிக்கூற்று

செய்ய தாமரைத் தாள் பண்டு தீண்டலால்
வெய்ய பாதகம் தீர்ந்து விளங்கினாள்
ஐயன் மேனியெலாம் அளைந்தாள், இனி
வையம் மா நரகத் திடை வைகுமே? (2046)

(செய்ய-சிவந்த; தீண்டுதல்-ஸ்பரிசித்தல்; வெய்ய-கொடிய; பாதகம்-பாவங்கள்; வைகுதல்-தங்குதல்; அளைதல்-அளாவப்பெறுதல் / தீண்டப்பெறுதல்)

முன்பு திருவிக்கிரம அவதாரத்தில் திருமால் ஓங்கி உலகளந்தபோது, அவனது ஒரு திருவடி சத்திய லோகத்திற்கும் அப்புறம் சென்ற போது

Koviloor Digital Library

நான்முகன் தன் கமண்டலத்திலிருந்து நீர் வார்த்துத் திருமஞ்சனம் ஆட்டினான். அப்போது அவனது சிவந்த தாமரை போன்ற பாதங்கள் பட்டதனால் தன்னிடம் தேக்கி வைத்திருந்த உலகத்தின் கொடிய பாவங்கள் எல்லாவற்றையும் போக்கிக் கொண்டவளாக விளங்கினாள் கங்காதேவி. இப்போது அத்திருமாலின் அவதாரமான இராமபிரானின் திருமேனி முழுவதும் தன் நீர்ப்பரப்பில் தோயப்பெற்றதால், தான் அவன் மேனி முழுவதும் தழுவிக் கொண்டதால் இனிமேல் இந்த உலகத்தில் உள்ளவர்கள் நரகத்தின்பால் தங்குவார்களோ? தங்க மாட்டார்கள் என்பதாம்.

திருவடி தீண்டப் பெற்றதாலேயே உலகத்தார் கொடிய பாவங்களை யெல்லாம் போக்கிக் கொண்டவளான கங்காதேவி, இப்போது அவன் திருமேனி முழுதும் தன்னில் படியப் பெற்றதனால் அவள் சிறப்பு இன்னும் மிகுவதாயிற்று. எனவே, உலகத்தார் இதில் மூழ்கி நற்கதி பெற்றுவிடுவது திண்ணம். எனவே, நரகம் என்பதே அவர்களுக்கு இல்லை என்றவாறு.

26. இராமபிரான் முனிவர்களுடன் விருந்துண்டல்

துறை நறும் புனல் ஆடி, சுருதியோர்
உறையுள் எய்தி, உணர்வுடையோர் உணர்
இறைவற் கைதொழுது, ஏந்து எரி ஓம்பி, பின்
அறிஞர் காதற்கு அமை விருந்தாயினான். (2047)

(உணர்-அறியப்படுகின்ற; துறை-நீர்நிலை; சுருதியோர்-வேதம் வல்ல முனிவர்கள்; ஏந்து-சிறந்த; காதல்-அன்பு / பக்தி; ஓம்பி-கடன்களைச் செய்து)

இராமபிரான் கங்கை நதித் துறையில் புனித நீராடி, வேதம் வல்ல முனிவர்களின் ஆச்ரமத்தை அடைந்து, மெய்யுணர்வுடையவர்களே அறியத்தக்க பரம்பொருளைக் கைகூப்பி வணங்கி, சிறந்த முத்தீ முதலியன வளர்த்து, ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றிமுடித்துப் பின்னர் அறிவில் சிறந்த முனிவர்களின் அன்பிற்குப் பாத்திரமாகி அவர்களுக்கு நல்லதோர் விருந்தினன் ஆயினான்.

இராமபிரானும் தான் எடுத்துக் கொண்ட அவதாரத்திற்கு ஏற்பத் தன்னை மானிடனாகவே கருதிக்கொண்டு பரம்பொருளை வழிபட்டான் என்பதாம். தன்னைத் தானே வணங்கிக் கொண்டான் என்க.

27. வருந்தித் தான் தர வந்த அமுதையும்
'அருந்தும் நீர்' என்று அமரரை ஊட்டினான்,
விருந்து மெல் அடகு உண்டு விளங்கினான்
திருந்தினார் வயின் செய்தன தேயுமோ? (2048)

(தர-உண்டாக்க; அடகு-கீரை / இலை; திருந்தினார்-நல்லோர்; தேய்தல்-குறைபடுதல்)

Koviloor Digital Library

அன்று தான் மிகவும் சிரமப்பட்டு உண்டாக்கிய தேவ அமிழ்தத்தையும் தான் உண்ணாது 'நீங்களே உண்ணுங்கள்' என்று தேவர்களுக்கு ஊட்டி உண்பித்தவனான இராமபிரான், இன்று முனிவர்கள் விருந்துணவாக அளித்த இலைக்கறி, கீரை முதலியவற்றை உண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தான். நற்குணங்கள் கொண்டவர்க்குச் செய்கின்ற செயல்கள் என்றேனும் குறைபடுமா? குறைபடாது.

பாற்கடலிலிருந்து கடைந்து அமிழ்தத்தை எடுப்பதற்குத் திருமால் எவ்வளவு வருந்தித் துயருற்றான் என்பதைக் கவிஞன் பலவிடத்தும் கூறுகிறான். என்றாலும் பெரிய திருமொழிப்பாடல் ஒன்று மிக அழகாகக் கூறுகிறது கேளுங்கள். ' மா இருங்குன்றம் ஒன்றுமத்தாக, மாசுணம் அதனொடு அளவிப், பாயிரும் பௌவம் பகடு விண்டு அலறப், பகுதிரை விசும்பிடைப் படரச், சேயிரும் விசும்பும், திங்களும், சுடரும், தேவரும் தாம் உடன்று, இசைப்ப ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்தான்' என்பது பெரிய திருமொழி. எனவே இது அரும்முயற்சி செய்து பெற்றது. நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு முதலியவற்றை நீக்கி மரணமில்லாப் பெருவாழ்வு அளிக்கவல்லது. அத்தகைய சிறந்த அமுதத்தைத் தான் உண்ணாது, ''தேவர்களே நீங்கள் அருந்துங்கள்'' என்று கூறி அளித்த திருமால், இன்று முனிவர்கள் விருந்தாகப் படைக்கின்ற வெறும் கீரையை மட்டும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு உண்கின்றான் என்றால் நல்லோர் மாட்டுச் செய்தவை குறை படாது என்று நிறுவுகிறார். இவ்வாறு இராமபிரான் முனிவர் உறையுளுள் விருந்துண்டதாக வான்மீகம் கூறவில்லை. மனம் செம்மைப்பட்டவர்கள் பொருளின் உயர்வு தாழ்வு கருதமாட்டார்கள். கொடுத்தவர்களின் அன்பையே பெரிதாகக் கருதுவர். இங்கே இராமபிரான் தாழ்ந்த கீரை உணவை, உயர்ந்த அமிழ்தமாகக் கருதி உண்டான் என்பதாம்.

கங்கைப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library
KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 14559

7. குகப் படலம் [46 பாடல்கள்]

காப்பிய நாயகனான இராமபிரான் வனத்தில் புகுந்து ஒரு ஆசிரமத்தில் தங்கியிருக்கிறான் என்று கேள்விப்பட்ட, வேடுவர் குலத்தலைவனும், கங்கையில் நாவாய் ஓட்டுபவனுமான குகன் என்பவன், இராமபிரானைத் தரிசித்து, தோழமை கொண்ட செய்திகளை விவரிக்கும் பகுதி எனவிரியும். இது 46 பாடல்களைக் கொண்டது. குகன் நட்புப் புரி படலம் எனவும் சில சுவடிகளில் காணப்படுகிறது. குகன் என்ற சொல்லுக்குக் குகையில் மறைந்து வாழ்பவன் என்றும், அஞ்ஞான இருளைப் போக்கியவன் என்றும், பகைவர் படையினின்றும் தன் படையைக் காத்துக் கொள்ளுபவன் என்றும் பல பொருள்கள் உண்டு. ஆனால் அவன் இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. குகன் என்பது முருகப்பொருமானுக்கு வழங்கும் பெயர்களுள் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படலத்துள், குகன் கையுறைப் பொருள்களை எடுத்துக் கொண்டு இராமபிரான் தங்கியிருக்கும் தவச்சாலைக்கு வருதல், வந்து கூவுதல், இலக்குவன் தடுத்து ''யார்'' என வினவலும், அவன் கூற அதனை இலக்குவன் இராமனுக்கு அறிவித்தல், இராமன் இசைவு பெற்றுக் குகன் உள்வந்து வணங்கி நிற்றல், இராமன் ''இரு'' என, அவன் கையுறைப் பொருளைத் தருதல்; இராமன் குகனின் அன்பைப் பாராட்டுதல்; ''நாளை நாவாய் கொணர்க'' எனல்; ''நீங்காது அடிமை செய்வேன்'' எனக் குகன் கூறுதல்; இறுதியில் ''எம்மொடு இருத்தி'' என இசைதல்; இரவில் இலக்குவனிடமிருந்து இராமன் நகர் நீங்கியமை பற்றி முழுவதும் கேட்டு அறிதல்; இராமனும் சீதையும் நாணல் படுக்கையில் துயில் கொள்ள, இலக்குவன் காத்து நிற்றல்; குகனும் தன் பரிவாரங்களுடன் அவர்களை இரவு முழுவதும் காத்து நிற்றல்; சூரியன் உதித்தலும் தாமரை மலர்தல்; இராமன் நாவாய் கொணருமாறு குகனுக்கு கட்டளை இடுதல்; குகன் இராமனைத் தாம் இருக்குமிடத்தில் தங்கி விடுமாறு வேண்டுதல்; ''மீண்டு வரும் போது உன்னிடம் வருவோம்'' என இராமன் கூறுதல்; நாவாய் கொணர, மூவரும் கங்கைக் கரையைக் கடத்தல்; சித்திர கூடம் செல்லும் வழிகேட்டு அறிதல்; தானும் உடன் வருவதாகக் குகன் கூறுதல்; இராமன் குகனின் ஆழ்ந்த அன்பைப் பாராட்டி அவனைக் கிளைஞர்களுடன் இருக்குமாறு பணித்தல்; அதன்பின் குகன் கரையிலேயே நிற்க, மூவரும் வனத்துள் செல்லுதல் ஆகிய இச்செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

1. குகனது இயல்புகள்

ஆய காலையின், ஆயிரம் அம்பிக்கு
நாயகன், போர்க்குகன் எனும் நாமத்தான்,
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்,
காயும் வில்லினன், கல்திரள் தோளினான். (2049)

(ஆயிரம்-ஒரு பேரெண் / எண்ணற்ற; அம்பி-ஓடம் / மரக்கலம் / படகு; நாயகன்-தலைவன்; தொன்மையோன் பழையவன்; காயும்-வருத்தும்; கல்-மலை; காலை-சமயம் / தருணம்; விடுதல்-செலுத்துதல்) (குளகப் பாடல்)

அவ்வாறு இராமன் கங்கையின் வடகரையில் ஆசிரமத்தில் முனிவர்கள் அளித்த கீரை உணவை உண்டு கொண்டிருந்த சமயத்தில், எண்ணற்ற ஓடங்களுக்குத் தலைவனும், போர்த் தொழிலில் வல்லவனுமான குகன் என்னும் பெயரையுடையவன், தூய்மையான கங்கை நதியில் நெடுங்காலமாக நாவாய் செலுத்தும் உரிமையுடையவன், பகைவர்களையும் விலங்குகளையும் வருத்தி அழிக்கும் விற்படையை உடையவன்; மலை போன்ற திரண்ட தோள்களை உடையவன்.

இது முதல் 10 பாடல்கள் ஒரு தொடர். இவ்வளவு பாடல்களிலும் குகனின் குணநலன்களைக் கூறி அவனை நமக்கு அறிமுகப்படுத்துகிறான் கவிஞன்.

2. துடியன், நாயினன், தோல்செருப்பு ஆர்த்த பேர்
அடியன், அல்செறிந்து அன்ன நிறத்தினான்
நெடிய தானை நெருக்கினன், நீர்முகில்
இடியினோடு எழுந்தால் அன்ன ஈட்டினான். (2050)

(துடி-ஒரு வகைப்பறை; ஆர்த்த-அணிந்த / கட்டிக்கொண்ட; அல்-இருள்; தானை-படை; நெருக்கம்-சூழ்ந்திருத்தல் / செறிவு; ஈடு-ஆற்றல்)

அவன் தொழிலால் வேடுவன். எனவே துடி என்னும் ஒரு வகைப் பறையும், வேட்டை நாயும் உடையவன்; தோலால் செய்த செருப்புக் கட்டப்பட்ட கால்களை உடையவன்; இருள் திணிந்தது போன்ற கரிய நிறமுடையவன்; பெரிய சேனைப்படைகள் தன்னை எப்பொழுதும் சூழப் பெற்றிருப்பவன்; நீர் உண்ட காளமேகம் இடியோடு முழங்கிக் கொண்டு வருதல் போலப் பேராற்றல் பெற்றவன்.

துடி என்னும் பறையை வேடுவர்கள் எப்பொழுதும் தன்னுடனேயே வைத்திருப்பர். இது அவர்களுக்குள் அங்கேத மொழி பரிமாறிக் கொள்ளவும், விலங்குகளை இடம் பெயர்ப்பதற்காகவும் பயன்படுத்துவர். வேடன் ஆகையால் வேட்டை நாய் எப்போதும் உடன் இருக்கும். காட்டில் நடந்து, ஓடிச் செல்லுவதற்குத் தகுந்தாற் போல காலுடன் சேர்த்துக் கட்டப்பட்ட தோல் செருப்பை அணிந்திருப்பர்.

Koviloor Digital Library

காட்டில் திரிவதனால் கரிய நிறம் உடையவர்கள்; நீருண்ட மேகம் உலகத்தை ஆக்கவும் வல்லது அழிக்கவும் வல்லது. அது போல இவனும் அத்தகைய ஆற்றல் பெற்றவன் எனவும் குறிப்பித்தார்.

3. கொம்பு, துத்தரி, கோடு அதிர்பேரிகை
பம்பை, பம்பு படையினன், பல்லவத்து
அம்பன், அம்பிக்கு நாதன், அழிகவுள்
தும்பி ஈட்டம் புரை கிளை சுற்றினான். (2051)

(துத்தரி-ஊது கொம்பு / சிறு சின்னம்; கோடு-சங்கு; அதிர்- முழங்கு கின்ற; பம்பை-பறை; பம்பு-நிறைந்த; பல்லவம்-இலை; அம்பன்-அம்புகளை உடையவன்; அம்பி-ஓடம்; நாதன்-தலைவன்; அழி-கசிகின்ற; கவுள்-கன்னம்; தும்பி-யானை; ஈட்டம்-கூட்டம்; புரை-ஒத்த; கிளை-சுற்றத்தார்; சுற்றுதல்-சூழ்தல்; கொம்பு-ஊதுகொம்பு)

ஊதுகொம்பு, சிறுசின்னம், சங்கு, ஒலித்து முழங்குகின்ற பேரிகைகள்; பம்பை என்னும் இருதலைப் பறை ஆகியவைகள் நிறைந்த சேனைப் படையை உடையவன்; தளிர், இலை போன்ற சிவந்த அம்புகளைப் பெற்றவன்; நாவாய்களுக்குத் தலைவன்; மதநீர் பெருகுகின்ற கன்னத்தை உடைய யானைக் கூட்டங்களை ஒத்த சுற்றத்தாரால் சூழப்பெற்றவன்.

கொம்பு, துத்தரி, கோடு என்பவை ஊது கருவிகள்; பேரிகை, பம்பை முதலியன அடிக்கும் தோற்கருவிகள்; இவையெல்லாமே இசைக்கருவிகள். வேடுவர்களிடம் காணப்படுவன. துத்தரி என்ற கொம்பை இரட்டையாகச் சேர்த்து ஊதுவர் என்பர்; இவன் ஓடத்திற்குத் தலைவன் என்று பல இடங்களிலும் கவிஞர் கூறுவார். காரணம் குகன் உதவி செய்தலில் ஓடத்திற்குச் சிறப்பான பங்கு இருப்பதே.

4. காழம் இட்ட குறங்கினன், கங்கையின்
ஆழம் இட்ட நெடுமையினான், அரை
தாழ விட்ட செந்தோலன், தயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினான். (2052)

(காழம்-சல்லடம்; குறங்கு-தொடை / துடை; இட்ட-அறிந்த; அரை-இடுப்பு; தொடு-ஒன்றோடொன்று தொடுக்கப் பெற்ற; தயங்குதல்-விளங்குதல்; நெடுமை-பெருமை)

சல்லடம் என்ற உடையை உடைய தொடையை உடையவன்; கங்கை நதியின் ஆழத்தை அளவிட்டு அறிந்த பெருமையை உடையவன்; இடுப்பிலிருந்து கீழே தொங்க விடப்பட்ட சிவந்த தோலாடையை உடையவன்; விளங்குகின்ற, ஒன்றோடொன்று தொடுக்கப் பெற்ற புலி வால்களை உடம்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருப்பவன்.

குகனது உடையலங்காரம் கூறப்பட்டது. காழம் என்பது காழகம் எனவும் வழங்கப்பெறும். சல்லடம் என்பது பொருள். இடுப்பிலிருந்து

Koviloor Digital Library

தொடைவரை மறைக்கும் படி கருப்புத் துணியால் தைத்து அணியப்படும் ஒருவகை அரைக்கால் சட்டை; இடுப்பிலிருந்து தொங்கவிடப்பட்ட செந்நிறத் தோலாகியவார்ப் பட்டை, கூம்பு முதலியவற்றைத் தீட்டுவதற்காக அணிந்திருப்பர்.

5. பல் தொடுத்தன்ன பல்கு கவடியன்,
கல் தொடுத்தன்ன போலும் கழலினான்,
அல் தொடுத்தன்ன குஞ்சியன், ஆளியின்
நெற்றொடு ஒத்து நெரி புருவத்தினான். (2053)

(பல்கு-பலவாகிய / மிகுதல்; கல்-மணிகள்; அல்-இருள்; குஞ்சி-ஆண்களின் தலை மயிர்; நெற்று-வற்றியுலர்ந்த காய்; நெரி-வளைந்த / மேலேறிய; ஆளி-கீரை வகையுள் ஒன்று; கவடி-சோழி)

பற்களைத் தொடுத்து வைத்தாற் போன்ற மிகுதியான சோழிகளாலான மாலையை அணிந்தவன்; கற்களை-மணிகளைப் பரற்கற்களாகக் கொண்ட வலிய வீரக்கழலை அணிந்தவன்; இருள் போன்று கரிய நிறமுடைய தலை முடியை உடையவன்; ஆளியென்னும் கீரையின் வற்றியுலர்ந்த காய் போன்று வளைந்து மேலேறிய புருவத்தை உடையவன்.

சோழி நாம் அறிந்ததொன்றே. அது பல் போன்ற வடிவம் கொண்டது. அவற்றை மாலையாகக் கோத்து அணிந்து கொள்வதை இன்றும் நாம் குறவர்களிடம் காணலாம். இவற்றைத் தோள், மார்பு, கழுத்து, இடை, கால் முதலிய உறுப்புக்களில் அணிந்து கொள்வர்.

6. பெண்ணை வன் செறும்பில் பிறங்கிச் செறி
வண்ண வன்மயிர் வார்ந்துஉயர் முன்கையன்;
கண்அகன் தடமார்பு என்னும் கல்லினன்;
எண்ணெய் உண்ட இருள்புரை மேனியான். (2054)

(பெண்ணை-பனை; வன்-வலிய; செறும்பு-சிறாம்பு / சிலாம்பு; பிறங்கி-விளங்கி; செறி-அடர்ந்த; வார்ந்து-வளர்ந்து / நீண்டு; கண்அகன்-மிகஅகன்ற / பரந்த; கல்-மலை; உண்ட-ஊட்டிய; புரை-போன்ற)

பனை மரத்தின் வலிய சிறாம்பு போன்று விளங்கி அடர்ந்துள்ள கரிய நிறம் கொண்ட வலிய மயிர்களை உடைய நீண்டு உயர்ந்த முன்னங்கைகளைஉடையவன்; அகன்ற பரந்த விசாலமான மார்பு என்னும் கல்லை உடையவன்; எண்ணெய் பூசப்பட்ட கரிய இருட்டுப் போன்ற பளபளப்பான மேனியை உடையவன்.

செறும்பு என்பது சிலாம்பு என்றும் வழங்கப்பெறும். கரடி, பன்றி முதலிய விலங்குகளின் உடல்களில் உள்ள மயிர்கள், பனைமரத்துக் சிறாம்பைப் போல வலிமையுடையன என்பது பொருள்; மார்பு எனும் கல்லினான் என்பது உருவகம். மலையைப் போன்ற பன்பை உடையவன்

Koviloor Digital Library

என்பது உவமை; மார்புக் கல்லினான் என்பது உருவகம். உருவகத்திற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு; முன்பு இருளைப் போன்ற கரிய நிறமுடையவன் என்று அல்செறிந்தன்ன நிறத்தினான் என்ற கவிஞன் இங்கு எண்ணெய் உண்ட இருள் புரை மேனியான் என்பது, உடம்பு கரிய நிறமுடையதாயினும் பளபளப்பானது என்பதைக் குறிக்கவே என்க.

7. கச்சுடன் ஆர்த்த கறைக்கதிர் வாளினன்;
நச்சு அராவின் நடுக்குறும் நோக்கினன்;
பிச்சராம் அன்ன பேச்சினன்; இந்திரன்
வச்சிராயுதம் போலும் மருங்கினான். (2055)

(ஆர்த்த-பிணித்த; கறை-இரத்தக் கறை; அரா-பாம்பு; பிச்சர்-பித்தர்; மருங்கு-இடை; கச்சு-இடையில் உடையை இறுகப் பிணிக்கும் ஒரு வகை உடை; நோக்கு-பார்வை)

இடையில் இழுத்துக் கட்டப்பெற்ற இரத்தக் கறைபடிந்த ஒளிபொருந்திய வாட்படையை உடையவன்; நஞ்சுள்ள கொடிய பாம்பினைப் போல கண்டவரை நடுங்க வைக்கும் பார்வையை உடையவன்; பித்தர்களைப் போல ஒன்றுக்கொன்று தொடர்பில்லாது இயைபவற்றைப் பேசுபவன்; தேவேந்திரனது வலிய வச்சிராயுதம் போன்ற வலிய இடையை உடையவன்.

நடுப்பகுதி சிறுத்து, இருபக்கமும் பெருத்தும் இருப்பதனால் அவனது இடுப்புக்கு வச்சிராயுதத்தை உவமை கூறினார்.

8. ஊற்றுமொய் நறவு ஊனொடு மீன்நுகர்
நாற்றம் மேய நகைஇல் முகத்தினான்;
சீற்றம் இன்றியும் தீஎழ நோக்குவான்;
கூற்றம் அஞ்சக் குமுறும் குரலினான். (2056)

(ஊற்றுதல்-வார்த்தல்; மொய்-ஈக்கள் மொய்க்கின்ற; நறவு-கள்; நுகர்தல்-உண்ணுதல்; மேய-பொருந்திய; நகை-சிரிப்பு; சீற்றம்-சினம்; கூற்றம்-இயமன்; குமுறுதல்-முழங்குதல்)

வலிமை மிக்கதும் ஊக்கம் தருவதும், கிண்ணத்தில் ஊற்றப்படுவதால் ஈக்கள் மொய்க்கும் கள்ளையும், மாமிசத்தோடு, மீனையும் உண்ணுதலால் ஏற்படுகின்ற புலால் நாற்றத்தை உடையவன்; சிரிப்பே இல்லாத எப்போதும் கடுகடுவென்றிருக்கின்ற முகத்தை உடையவன்; கோபமே இல்லாத போதும் கூட, இயல்பாகவே அனற்பொறி பறக்கும் படி விழித்துப் பார்க்கும் பார்வையை உடையவன்; இயமனே அஞ்சும்படி முழக்கும் இடிக்குரல் உடையவன்.

புலால்நாறும் வாய்; சிரிப்பற்ற முகம்; கனல் பார்வை; இடிக்குரல் என்று அவன் தன்மைகளை எளிய நடையில் விவரிக்கின்றான் கவிஞன்.

Koviloor Digital Library

9. குகன் இராமபிரானைக் காண வருதல்

சிருங்கிபேரம் எனத் திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகர்உறை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீன் உபகாரத்தன்;
இருந்த வள்ளலைக் காணவந்து எய்தினான். (2057)

(மருங்கு-அடுத்து; உபகாரத்தன்-கையுறையாகக் கொண்டவன் / காணிக்கை)

அலைகளையுடைய கங்கைக் கரையை அடுத்து விளங்கும் சிருங்கி பேரம் என்று அழைக்கப்படும் நகரத்தில் வசிப்பவன் இந்தக் குகன். இராமன் முனிவர்களோடு ஆசிரமத்தில் தங்கியிருப்பதை அறிந்து, அவ்வள்ளலைக் காணும் பொருட்டு, தனக்கு விருப்பமான தேனொடு, மீனையும் கையுறைப் பொருளாக ஒருங்கே எடுத்துக் கொண்டு தன் சுற்றத்தாருடன் அங்கு வந்து சேர்ந்தான்.

சிருங்கி பேரம் என்ற நகரத்தின் அரசன் குகன் என்றும் அவன் ஒரு வேடுவன் என்றும், எனவே அவனை இராமனும் இலக்குவனும் தாம் தங்கியிருந்த ஆசிரமத்தில் அவனை எதிர்கொண்டு அழைத்தனர் என்றும் வான்மீகம் கூறும்; ஆனால் குகனை இவ்வளவு நீண்ட அளவு அறிமுகப்படுத்தவில்லை வான்மீகி. அரசன், குரு, தெய்வம், சான்றோர்கள் ஆகியோரைக் காணச்செல்லும் போது வெறுங்கையுடன் செல்லலாகாது என்பது விதி.

10. சுற்றம் அப்புறம் நிற்கச் சுடுகணை
வில்துறந்து, அரைவீக்கிய வாள் ஒழித்து,
அற்றம் நீத்த மனத்தினன், அன்பினன்
நல்தவப் பள்ளி வாயிலை நண்ணினான். (2058)

(அற்றம்-குற்றம் / குறை / பொய்; சுற்றம்-பரிவாரங்கள்; துறந்து-நீக்கி; அரை-இடுப்பு; வீக்கிய-கட்டிய; நண்ணுதல்-அடைதல்; ஒழித்து-அகற்றி)

தன்னுடன் அழைத்து வந்த சுற்றத்தாரையும் பரிவாரங்களையும் ஒரு புறமாக ஒதுக்கி நிற்க வைத்துவிட்டு, கொல்லும் தன்மையுடைய அம்புகளையும் வில்லையும் நீக்கி விட்டு, இடுப்பில் சுற்றிக்கட்டியிருந்த உடைவாளையும் அகற்றி விட்டு, தீய எண்ணங்களற்ற, குற்றமற்ற தூய்மையான மனம் உடையவனாகவும், அம்மனம் நிறைய இராமபிரான் பால் பேரன்பு உடையவனாகவும் நல்லதவத்தைச் செய்கின்ற முனிவர்கள் வாழும் தவச்சாலையின் வாயிலை அணுகினான்.

முனிவர்கள் வாழ்கின்ற இடங்களுக்கும், அரசர்கள் வாழ்கின்ற இடங்களுக்கும் செல்லும் போது கொலைக் கருவிகளோடு செல்லக் கூடாது என்பது விதி. எனவே அம்பு, வில், வாள் முதலியவற்றை

Koviloor Digital Library

அகற்றிவிட்டுச் சென்றான் என்பதாம். இன்னும் இந்தச் சூழலில் அடக்கத்துடனும், மனத்தூய்மையுடனும் செல்லவேண்டும் என்பதால் பரிவாரங்களைப் பக்கலில் நிறுத்தித் தான் கொண்டு வந்திருந்த கையுறைப் பொருளோடும் சென்றான் என்பதாம். வேட்டைக்குச் செல்லும் போது வில், அம்பு, வாள், சேனையுடன் செல்வான் என்பது பெறப்பட்டது.

11. குகன் முதலில் இலக்குவனைக் காணுதல்

கூவா முன்னம், இளையோன் குறுகி, ''நீ
ஆவான் யார்?'' என், அன்பின் இறைஞ்சினான்;
''தேவா! நின்கழல் சேவிக்க வந்தனென்;
நாவாய் வேடுவன்; நாய் அடியேன்;'' என்றான். (2059)

(குறுகி-நெருங்கி; தேவா-அரசே!; நாவாய்-ஓடம்; கழல்-பாதங்கள்; சேவித்தல்-வணங்குதல்)

குகன் வாயிலில் வந்து அழைப்பதற்கு முன்பாகவே, இளையவனாகிய இலக்குவன் அவன் முன் தோன்றி, ''நீ யார்? என அன்புடன் வினவினான்; குகன் அவனை அன்புடன் வணங்கி, ''அரசே! தங்கள் திருவடிகளைத் துதிப்பதற்காக வந்துள்ளேன்; நான் ஒரு வேடுவன்; கங்கையில் ஓடம் ஓட்டுபவன்; நாய் போன்று ஏவுதல் செய்தற்குரிய அடியேன் நான் என்றான்''.

அவன் அழைப்பதற்கும், இவன் வெளி வந்து யார் என்று கேட்பதற்கும் காலஇடைவெளி இன்மையின் கூவா முன்னம் என்றார்; இரண்டும் ஒரே காலத்தில் நிகழ்ந்தது என்பதாம். குகன் இலக்குவன்தான் இராமன் என்று கருதி, ''நின் கழல் சேவிக்க வந்த னென்'' என்று கூறினான் என்பதாம். தாழ்ந்தோர் உயர்ந்தோரைக் காணவரும் போது, சற்றுதூரத்தில் நின்று, தான் வந்திருப்பதைத் தெரிவிப்பதை இன்றும் நாம் கண்கூடாகக் காணலாம்.

12. இலக்குவன் இராமனிடம் குகன் வரவு கூறுதல்

''நிற்றி ஈண்டு'', என்று புக்கு, நெடியவர் தொழுது, தம்பி,
''கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன், நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும், தானும்; உள்ளம் தூயவன்; தாயின் நல்லன்;
எற்றும் நீர்க்கங்கை நாவாய்க்கு இறை, குகன் ஒருவன்'', என்றான்.(2060)

(நிற்றி-நிற்பாயாக; நெடியவன்-பெரியோன்; எற்றும்-அலை எறிகின்ற; நாவாய்-ஓடங்கள்; இறை-தலைவன்; நிமிர்ந்த-அளவறிந்த; சுற்றம்-பரிவாரம்)

இராமனின் தம்பியாகிய இலக்குவன், குகனை நோக்கி, '' இங்கேயே சற்று நிற்பீராக'', என்று கூறி, தவச்சாலைக்குள் புகுந்து, மேலோனான இராமபிரானை வணங்கி, ''அரசே! தங்களைக் காண்பதற்காக, உள்ளம் தூய்மையுடையவனும், தாயினும் மேலாக அன்னபைப் பொழியும்,

Koviloor Digital Library

நல்லவனும், அலைமோதுகின்ற கங்கை நீர்ப்பெருக்கில் ஓடுகின்ற எண்ணற்ற ஓடங்களுக்குத் தலைவனும் ஆகிய குகன் என்னும் பெயரை உடைய ஒருவன், தனது எண்ணற்ற பரிவாரங்களுடனும் தானும் வந்திருக்கிறான்'' என்று கூறினான்.

குகனோடு முதல் முறை பார்த்து உரையாடும் போதே, இலக்குவன் அவன் குணநலன்களைப் புரிந்து கொண்டான். எனவே தான் உள்ளம் தூயவன் என்றும் தாயின் நல்லான் என்றும் கூறினான். தன்னைக் கண்டு, தான்தான் இராமன் என்று கருதி நின்கழல் சேவிக்க வந்தனென் என்றதனால் அவன் உள்ளத் தூய்மையை உணர்ந்து கொண்டான்; கையுறைப் பொருள்களைப் பேரன்புடன் கொண்டு வந்திருந்ததனால் தாயினும் நல்லன் என்றான்; நாயின் அடியன் என்றதனால் அவனது உதவி செய்யும் மனப்பாங்கை அறிந்து கொண்டு, தாம் கங்கைக் கரையைக் கடக்க இவன் உதவி தேவைப்படும் என்பதை உணர்ந்து, கங்கை நாவாய்க்கு இறை என்றான் என்பதாம். இராமன் குகனை ஏற்றுக்கொள்ளும் முன்பே, உள்ளத்தால் இலக்குவன் குகனின் தோழமையை ஏற்றுக்கொண்டான் என்பது இவ்வறிமுகத்திலிருந்து புலப்படுகிறது.

13. குகன் இராமனைக் கண்டு மனம் உருகுதல்

அண்ணலும் விரும்பி,''என்பால் அழைத்தி நீ அவனை'' என்னப்
பண்ணவன் ''வருக'' என்றான்; பரிவினன் விரைவிற் புக்கான்;
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன்; இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து, மேனி வளைந்து, வாய்புதைத்து நின்றான். (2061)

(அழைத்தி-அழைத்துவருக; பண்ணவன்-வலியன் / நற்குணவான்; பரிவு-அன்பு; கனிதல்-மனம் நெகிழ்தல்; இருண்ட-கரிய; குஞ்சி-ஆண்களின் தலைமுடி; புதைத்து-பொத்தி / மூடி; பண்ணவன்-பண்புகள் நிறைந்தவன் / தேவன்)

இலக்குவனைப் போலவே, இராமபிரானும் அவனைக் காணவேண்டும் என்று விழைந்து, இலக்குவனை நோக்கி, ''அவனை என்னிடம் அழைத்து வருவாயாக'', என்று கூறினான்; பண்புகள் நிறைந்த இலக்குவனும் குகனை நோக்கி, ''உள்ளே வருக'' என்றான்; குகன் மிக்கப் பேரன்புடன் விரைவாக உள்ளே நுழைந்தான்; யாவர்க்கும் கண் போன்றவனாகிய இராமபிரானைத் தன் கண்களாரப் பார்த்து மனம் நெகிழ்ந்தான்; தனது கரிய தலைமுடி நிலத்தில் படியுமாறு வணங்கி, தனது உடலை வளைத்து, வாயைப் பொத்திக் கொண்டு அடங்கி ஒடுங்கி நின்றான்.

கண்ணன் என்பது கண்ணுள் உறைபவன் என்றும், கண்ணழகு உடையவன் என்றும் பொருள்படும். பெரியோர்களிடத்துக் காட்டவேண்டிய மரியாதைகள் என்ன என்பதைக் குகன் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறான். தன் தாய் கைகேயி முன் இராமபிரான் நின்ற

Koviloor Digital Library

நிலையையும் கம்பன் இவ்வாறே காட்டியது நினைவிற் கொள்ளத்தகும். பணிந்த மொழி, தணிந்த நடை, தன்னை மடக்கிக் கொள்ளுதல், வாய் மூடி இருத்தல் முதலியன அடங்கி ஒழுகும் ஒழுக்கமாகிய அடக்கம் எனப்படும்.

14. காணிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு குகன் வேண்டுதல்

"இருத்தி நீ" என்னலோடும், இருந்திலன்; எல்லை நீத்த
அருத்தியன், "தேனும் மீனும் அமுதினுக்கு அமைந்த ஆகத்
திருத்தினென், கொணர்ந்தேன்; என்கொல் திருவுளம்? என்ன, வீரன்
விருத்த மாதவரை நோக்கி முறுவலன், விளம்பலுற்றான். (2062)

(எல்லை நீத்த-அளவு கடந்த; அருத்தி-அன்பு / ஆசை; அமைதல்-தக்கன ஆதல்; திருத்துதல்-பக்குவப்படுத்துதல் / தூயனவாக்குதல்; விருத்தம்-முதுமை; முறுவல்-இளநகை)

"இங்கே அமர்வாயாக" என்று இராமபிரான் கூறியும் குகன் அமரவில்லை; அளவுகடந்த பேரன்பும், பக்தியும் உடைய குகன் அமராது, "தேனையும், மீனையும் தாங்கள் உண்ணுவதற்குத் தகுந்த படியாகப் பக்குவப்படுத்தித் தூய்மையானதாக்கிக் கொண்டு வந்துள்ளேன்; தங்கள் உளக்கருத்து யாதோ? என்றான்; வீரனாகிய இராமபிரானும், முதிர்ந்த தவமுனிவர்களை நோக்கி இளநகை செய்து கீழ்வருமாறு கூறத் தொடங்கினான்.

பெரியோர்கள் "உட்கார்" என்று சொன்னவுடன் உடனே உட்கார்ந்து விடுதல் பண்புக்குறைவு என்பதைக் குகன் வாயிலாக அறியலாகும். தெய்வத்தின் அம்சமான இராமனுக்கும், முதிர்ந்த தவச்செல்வர்களுக்கும் சமமாகத் தானும் அமர்தல் தகுதியன்று என்ற நற்குணத்தினாலேயே குகன் அமரவில்லை என்பதாம். இராமனும், தவம் இயற்றும் முனிவர்களும், தேனையும் மீனையும் உண்ணல் தகாது என்பதை உள்ளத்துள் நிறுத்தி, முனிவர்களைப் பார்த்து, குகனின் பேரன்பை / தூய உள்ளத்தை நோக்குமாறு கூறும் முகத்தான் இராமன் இளநகை புரிந்தான் என்பதாம்.

15. இராமன் காணிக்கையைப் பாராட்டுதல்

அரிய, தாம்உவப்ப, உள்ளத்து அன்பினால் அமைந்த, காதல்
தெரிதரக்கொணர்ந்த, என்றால், அமுதினும் சீர்த்த அன்றே!
பரிவினில் தழீஇய என்னின் பவித்திரம்; எம்மனோர்க்கும்
உரியன; இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ!" என்றான். (2063)

(உவப்ப-விரும்பப்படுவன; காதல்-அன்பு; தெரிதர-வெளிப்படும் படி; சீர்த்த-சிறந்தன; தழீஇய-தழுவிய / கூடிய; பரிவு- அன்பு; பவித்திரம்-தூயன)

Koviloor Digital Library

கிடைப்பதற்கு அருமையானதும் தாம் மனம் மகிழ்ந்தும், பெற்றுக் கொள்பவர்கள் மனம் மகிழும் படியும், உள்ளத்துத் தூய்மையான அன்பினால் உண்டான பக்தி, உலகத்தார் அனைவருக்கும் வெளிப்பட்டுத் தெரியும்படி கொண்டுவந்த எந்த உணவாக இருந்தாலும் அது அமிழ்தத்தைப் போன்றும், அமிழ்தத்தை விடவும் சிறந்ததல்லவா? அன்போடு கொணரப்பட்டது என்றால் அது மிகவும் தூய்மையானதே; எனவே எனக்கும் என்னைப் போன்று தவம் மேற்கொண்டிருக்கும் முனிவர்களுக்கும் ஏற்புடைத்தனவே யாகும்; நாமும் மகிழ்ச்சியுடன் உண்டது போல ஆகும்'' என்றான்.

குகன் அன்புடனும் பக்தியுடனும் கொண்டு தந்த காணிக்கையை இராமபிரான் அமிழ்தினும் சிறந்ததாகவும், தூயதாகவும் கருதிப் பாராட்டி அங்கீகரித்தான் என்பதாம். இராமனும் முனிவர்களும் தவமேற் கொண்டிருப்பதாலும், அவர்கள் முதலிலேயே விருந்து உண்டு முடித்து விட்டனர் என்பதாலும், இப்போது இக்கையுறையை உண்ணமுடிய வில்லை. என்றாலும் மகிழ்ச்சியுடன் உண்டதாக ஏற்றுக் கொண்டார்கள் என்பதாம்.

காணிக்கைப் பொருளின் தூய்மையும் தூய்மையின்மையும், கொண்டு வருவோரது அன்பினைப் பொறுத்ததே ஆகும். இராமனின் சொல்லாற்றலைக் குறிக்கும் இடங்களில் இதுவும் ஒன்று. தன் சொற்களால் முனிவர்களையும் நிறைவு செய்தான்; குகனையும் முழுமையான மனநிறைவு அடையும்படி செய்தான் என்பது நோக்கத்தக்கது. கம்பன் தேனும் மீனும் கொண்டு போனான் என்கிறான். வான்மீகி பல விதபணியாரங்களும் உணவுப் பண்டங்களும் கொண்டு போனான் என்கிறார். துளசி இராமாயணமும், அத்யாத்தம இராமாயணமும், குகன் பழங்களையும், கிழங்குகளையும், மலர்களையும் கொண்டு சென்றான் என்று கூறுகின்றன.

16. இராமன் குகனிடம் மறுநாள் நாவாய் கொணரும்படி கூறுதல்

சிங்கஏறு அனைய வீரன் பின்னரும் செப்புவான், ''யாம்
இங்கு உறைந்து, எறிநீர்க்கங்கை ஏறுதும் நாளை; யாணர்ப்''
பொங்கும்நின் சுற்றத்தோடும்போய், உவந்து, இனிது உன் ஊரில்
தங்கி, நீ, நாவாயோடும் சாருதி விடியல்'' என்றான். (2064)

(சிங்கஏறு-ஆண்சிங்கம்; எறி-மோதுகின்ற; ஏறுதல்-கடத்தல்; யாணர்-புதிய / அழகுமிக்க; சாருதல்-வருதல்)

ஆண்சிங்கம் போன்ற பீடு நடையுடைய வீரனான இராமன், மீண்டும் சொல்லுவான்; ''நாங்கள் இன்று இங்கு தங்கியிருந்து, அலை மோதுகின்ற நீர்ப் பெருக்கையுடைய கங்கையை நாளை கடக்க எண்ணியுள்ளோம்.

Koviloor Digital Library

எனவே அழகு மிக்க உன்னுடைய பரிவாரத்தோடும் நீ உனது ஊர் சென்று அங்கு மகிழ்ச்சியுடன் தங்கியிருந்து, நாளை விடியற்காலையில், நாங்கள் கங்கையைக் கடப்பதற்கேற்ற ஓடத்துடன் வருவாயாக'' என்று கூறினான்.

கம்பீரமான-ஏறு போல் பீடு நடை யாருக்கு உண்டு என்று திருக்குறள் கூறுகிறது. கேளுங்கள் ''புகழ் புரிந்தஇல் இல்லோர்க்கு இல்லை இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை'' என்பது குறள் 59.

17. குகன் இராமனை வேண்டுதல்

கார்குலாம் நிறத்தான் கூறக்காதலன் உணர்த்துவான், ''இப்
பார்குலாம் செல்வ! நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை,
ஈர்கிலாக் கள்வனேன் யான், இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன்; ஆனது ஐய! செய்குவன் அடிமை'' என்றான். (2065)

(கார்-மேகம்; குலாம்-போன்ற; காதலன்-பேரன்பினன் / குகன்; குலாம்-விரும்புதல்; ஈர்குதல்-அகழ்ந்து எடுத்து எறிதல் / பெயர்த்து எறிதல்; தீர்தல்-இறத்தல் / நீங்குதல்; இருக்கை-இருப்பிடம்; அடிமை-தொண்டு; கள்வன்-வஞ்சகன்)

கார்மேகம் போன்ற கரிய நிறமேனியை உடைய இராமபிரான் இவ்வாறு கூற, அவனிடம் தீராக்காதல் கொண்ட குகன் தன் கருத்தைத் தெரிவிக்க விரும்பி; ''இந்த உலகத்துக்கெல்லாம் உரிமையுடைய செல்வனே! உன்னை அரசகோலத்தில் பாராது, இத்தவக் கோலத்தில் கண்ட என் கண்களைப் பிடுங்கி எறியாமல் இன்னும் வைத்துக் கொண்டிருக்கின்ற வஞ்சகன் நான்; உன்னை இந்த நிலையில் பார்த்த பிறகு, என்னுடைய துன்பம் தரும் இருப்பிடமாகிய என் ஊருக்குத் திரும்பிச் செல்ல நான் விழைய மாட்டேன்; தலைவனே! என்னால் ஆன தொண்டுகளை குற்றேவல்களைச் செய்து கொண்டு உன்னுடனேயே இருந்து விடுகிறேன்'' என்று வேண்டினான்.

18. இராமன் மறுமொழி

கோதைவில் குரிசில் அன்னான் கூறியகொள்கை கேட்டான்;
சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் ''தீராக்
காதலன் ஆகும்'', என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
''யாதினும் இனிய நண்ப! இருத்தி ஈண்டு எம்மொடு'' என்றான். (2066)

(கோதை-மாலை; கொள்கை-கோட்பாடு / வேண்டுகோள்; தீரா-நீங்காத; குரிசில்-ஆடவரில் சிறந்தவன்)

மாலை சூட்டப்பட்ட விற்படையை உடைய, ஆடவர்களில் சிறந்தோனாகிய இராமபிரான், குகன் அவ்வாறு கூறிய கோட்பாட்டைக் கேட்டதும், சீதையை நோக்கினான்; பின்னர் இளவல் இலக்குவனின் திருமுகக் குறிப்பையும் உணர்ந்தான். பின்னர் நம்மிடம் குகன் ''நீங்காத அன்புடையவன்'' என்று கூறி, தனது கருணை பொழியும் கண்களால்

Koviloor Digital Library

அவனைப் பார்த்து ''எல்லாவற்றிலும் இனிமையான என் நண்பனே! இன்று எங்களோடு இருப்பாயாக?'' என்று கூறினான்.

சீதையின் கருத்தை அறிந்து கொள்வதற்காக அவளை முதலில் பார்த்தான். இலக்குவன் தன் இசைவை முன்பே தெரிவித்துவிட்டான். எனவே அவனைப் பின்னர் பார்த்தான் என்பதாம். ஒரு தலைவன் ஒருவனைப் பணியாளாகக் கொள்ளுதற்கு முன் தன் மனைவியின் கருத்தையும், உடன் பிறந்தார் இசைவையும் பெறுதல் மரபு; உலகியல் முறை; ஒருவருக்கு எவற்றினும் மேம்பட்டதும் சிறந்ததும், இனிமையானதும் அவனது உயிரே; இங்கே இராமபிரான் குகனை நோக்கி யாதினும் இனிய நண்ப என்றதனால் அவனை உயிரை விடவும் மேலான நண்பனாகக் கருதித் தோழமை கொண்டான் என்பது பெறப்படுகிறது. ''என்னில் யாரும் எனக்கு இனியார் இல்லை; என்னிலும் இனியான் ஒருவன் உளன்'' என்பது அப்பர் தேவாரம்.

19. குகன் காவல் காத்து நிற்றல்

அடிதொழுது, உவகைதூண்ட, அழைத்தனன் ஆழிஅன்ன
துடியுடைச் சேனை வெள்ளம், பள்ளியைச் சுற்றஏவி
வடிசிலை பிடித்து, வாளும் வீக்கி, வாயம்பு பற்றி,
இடியுடை மேகம் என்ன இணையடி காத்து நின்றான். (2067)

(ஆழி -கடல்; துடி-துடி முழக்கம்; வடி-கூரிய)

அவ்வாறு இசைவு தந்த இராமபிரானின் திருவடிகளைத் தொழுது, மகிழ்ச்சி மிக்கவனாய், தன்னுடைய கடல் போன்றதும், துடிப்பறையை முழக்குவதுமான சேனைப் பெருக்கத்தைச் கூவி அழைத்து, தவச் சாலையைச் சுற்றிப் பாதுகாவல் செய்யுமாறு பணித்து; தானும், கூரிய வில்லினைக் கைக்கொண்டு, இடையில் கட்டியிருந்த வாட்படையையும் கையில் ஏந்திக் கொண்டு, கூர்மையான வாயையுடைய அம்பினைப் பெற்றுச் சித்தமாக ஆகி இடிமுழக்கம் கொண்ட மேகத்தைப் போல ஆர்ப்பரித்து, இராமபிரானது இரண்டு திருப்பாதங்களை அடைந்து அருகே காவலுக்கு ஏற்றவாறு நின்றான்.

20. இராமன் அயோத்தியினின்று நீங்கியமையை இலக்குவனிடமிருந்து அறிந்த குகன் வருந்துதல்

''திருநகர் தீர்ந்த வண்ணம், மானவ! தெரித்தி! என்னப்
பருவரல் தம்பி கூறப் பரிந்தவன் பையுள் எய்தி,
இருகண் நீர் அருவிசோரக் குகனும் ஆண்டு இருந்தான்''; என்னே!
பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலும்'' என்னா. (2068)

(மானவ-பெருமை உடையவனே! / மனுகுலத்தவனே; தீர்தல்-துறத்தல் / நீங்குதல்; தெரித்தி-தெரிவிப்பாயாக; பருவரல் -துன்பம்;

Koviloor Digital Library

பரிவு-அன்பு; பையுள்-துன்பம்; கிழத்தி-நங்கை; நோன்பு-தவம்-தன்மை-வகை)

''பெருமையுடைய மனுகுலத்தில் உதித்தவனே! அழகிய, செல்வம் மிக்க அயோத்தி நகரை விட்டு நீங்கள் வெளியேறி வந்ததன் காரணத்தைத் தெரிவிப்பீராக!'' என்று குகன் கேட்க, துன்பம் மிகுந்திருந்த இளவல் இலக்குவன், நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூற, அதனைக் கேட்ட அன்புடைய குகன் தானும் மிகுந்த துன்பம் எய்தி, இரண்டு கண்களினின்றும் கண்ணீர் அருவி போலப் பொழிய, ''என்ன வியப்பு இது! பெரிய நிலமகள் இராமனைப் பெறுவதற்காகத் தவம் செய்திருந்தும், அவனைப் பெற்றபின் அவனால் ஆளும் பேறு பெறவில்லை போலும்'' என்று இரங்கி அத்தவச்சாலையிலேயே தங்கியிருந்தான்.

பூமிதேவி தவம் செய்ததால் இராமபிரான் திருஅவதாரம் செய்தான். இது அவளது பேறு, பாக்கியம். ஆனால் அவன் அரசாளும் பேறு பெறாதவள் ஆகிவிட்டாள். எனவே இது அவளுக்கு இழப்பு. நோற்றதன் பயன்கிட்டவில்லையே என்று இரங்கினான் என்பதாம். இராமனைக் கேட்கும் இடங்களில் எல்லாம் இலக்குவனே மறுமொழி கூறுவதாக அமைத்திருப்பது கம்பனின் கை வண்ணங்களுள் ஒன்று. இராமன் நிகழ்வுகளைப் பற்றி அவனே கூறிக் கொள்ளுதலும் நயமுடைத்தன்று என்பதும் ஒன்றாம்.

21. சூரியன் மறைதல்

விரி இருள் பகையை ஓட்டி, திசைகளை வென்று, மேல் நின்று
ஒருதனித்திகிரி, உந்தி உயர்புகழ் நிறுவி, நாளும்
இருநிலத்து எவர்க்கும் உள்ளத்து இருந்து, அருள்புரிந்து, வீந்த
செருவலிவீரன் என்னச் செங்கதிர்ச் செல்வன் சென்றான். (2069)

(விரி-பரவிய; ஓட்டி-துறத்தி; ஒரு-ஒப்பற்ற; தனி-சிறந்த; திகிரி-ஆணைச்சக்கரம்; உந்தி-செலுத்தி; நிறுவி-நிலை நிறுத்தி; இரு-பெரிய; வீந்த-இறந்த; வீரன்-தசரதன்; செரு-போர்; செல்லுதல்-மறைதல் / அஸ்தமித்தல்) ஒரு தனித்திகிரி-ஏகச்சக்ராதிபதி.

பரவிய பகைவர்களைத் தோல்வியுறச் செய்து துரத்தி, பத்துத் திக்குகளையும் வென்று, அரசர்கள் எல்லோரினும் மேம்பட்டு நின்று, ஒப்பற்ற சிறந்த ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி, உயர்ந்த புகழை நிலைபெறச் செய்து, எப்போதும் இவ்வுலகத்துள்ளோர் எல்லோரின் உள்ளத்திலும் மலர்ந்திருந்து, அவர்களுக்கு அன்பும் அருளும் புரிந்து, இறந்துபட்ட போரில் வல்லவனான வீரன் தசரதச் சக்கரவர்த்தியைப் போல, சிவந்த கிரணங்களையுடைய சூரியன் அத்தமித்தான்.

இருளாகிய பகையை ஓட்டுதலும், எல்லாத் திசைகளிலும் தனது ஒளியைப் பரப்புதலும், உச்சியில் நின்று, ஒற்றைச் சக்கரத் தேரைச் செலுத்திக் கொண்டு, அதனால் ஒப்பற்ற புகழை நிலைபெறச் செய்தலும்,

Koviloor Digital Library

எப்பொழுதும் உலகத்தில் உள்ளவர்கள் உள்ளத்தில் எல்லாம் நிறைந்து நின்று, மழை வளத்தால் அருள் புரியச் செய்தலும், சூரியனுக்கும் உரிய பொதுத்தன்மைகளாகும். சூரிய குலத்தோன்றலான தசரதன் மறைவைச் சூரியன் மறைதலுக்கு ஒப்பிட்டது ஒரு நயம். இதே கருத்தை இதே சொற்களில் கூறும் பாடல் ஒன்று கலித்தொகையில் கிடைக்கிறது. ''வெல் புகழ் மன்னவன், விளங்கிய ஒழுக்கத்தான், நல்லாற்றின் உயிர் காத்து, நடுக்கு அறத்தான் செய்த, தொல்வினைப் பயன் துய்ப்பத் துறக்கம் வேட்டு எழுந்தாற்போல், பல்கதிர் ஞாயிறு பகல் ஆற்றி மலை சேர'' என்பது கலித்தொகை.

22. இராமனும் சீதையும் தருப்பைப் புல்லில் துயில, இலக்குவன் காத்து நிற்றல்

மாலைவாய் நியமம் செய்து, மரபுளிஇயற்றி, வைகல்
வேலைவாய் அமிழ்து அன்னாளும், வீரனும் விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினர்; வரிவில் ஏந்திக்
காலைவாய் அளவும் தம்பி இமைப்பிலன் காத்து நின்றான். (2070)

(நியமம்-கடமைகள்; மரபுளி-முறைப்படி; வைகல்-நாளும்; வேலை-கடல் / பாற்கடல்; விரித்த-பரப்பிய; நாணல்-தருப்பைப் புல்; பார்-தரை; வரி-கட்டமைந்த; வைகல்-கழிதல்)

மாலை நேரக் கடன்களை முறையாகச் செய்து முடித்து, பாற்கடலில் தோன்றிய அமிழ்தம் போன்ற சீதாதேவியும், வீரனாகிய இராமபிரானும், தரையில் ஒழுங்காகப் பரப்பப்பட்ட தர்ப்பைப்புல் படுக்கையில் துயில் கொண்டனர்; இளையான் இலக்குவனும், கட்டமைந்த வில்லினைக் கையில் ஏந்திக் கொண்டு, விடியற்காலை வரும் காலம் வரையிலும் கண்களை இமைக்காது அவர்களைக் காவல் காத்துக் கொண்டு நின்று கொண்டே இருந்தான். இராமன் இப்போது புல்பரப்பிய தரையையே இனிய படுக்கையாகக் கொண்டான் என்பதாம்.

23. குகன் அவர்களுடன் வருந்தி நிற்றல்

தும்பியின் குழாத்தில் சுற்றும் சுற்றத்தன்; தொடுத்தவில்லன்;
வெம்பிவெந்து அழியாநின்ற நெஞ்சினன்; விழித்த கண்ணன்;
தம்பி நின்றானை நோக்கித் தலைமகன் தனிமை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர் அருவிசோர் குன்றின் நின்றான். (2071)

(தும்பி-யானை; சுற்றும்-சூழவளைத்துக்கொள்ளும்; சுற்றம்-பரிவாரங்கள்; அழியா நின்று-அழிந்து; அம்பி-ஓடம்; சோர்தல்-வழிதல்; குன்றின்-மலையைப்போல)

யானைக் கூட்டத்தைப் போலத் தன்னைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் தன் பரிவாரங்களையுடையவனும், நாண் ஏற்றி வில்லினில் அம்பு பொருத்தித்

Koviloor Digital Library

தயார் நிலையில் இருப்பவனும், புழுங்கி நொந்து, நைந்த மனத்தை உடையவனும், இமையாது விழித்துப் பார்க்கும் கண்களை உடையவனும், நாவாய்களுக்குத் தலைவனுமான குகன், இளவலாகிய இலக்குவன் கண் இமைக்காது சோர்வுறாது சுற்றம் சூழ இல்லாமல் தான் மட்டும்தனித்து நிற்கும் நிலையை நோக்கியும், மனம் வெதும்பிக் கண்ணீர் அருவி போலப் பொழிய, ஒரு மலை போல அசைவற்று நின்றான்.

24. சூரியன் உதித்தல்

துறக்கமே முதலஆய தூயன யாவையேனும்
மறக்குமா நினையல்; அம்மா! ''வரம்புஇல தோற்றும் மாக்கள்
இறக்கும் ஆறு இது" என்பான் போல், முன்னைநாள் இறந்தான், பின்னாள்
"பிறக்கும் ஆறு இது" என்பான் போல், பிறந்தனன் பிறவா வெய்யோன். (2072)

(பிறவா-தோற்றம் அற்ற; வரம்புஇல்-எல்லையற்றன; மாக்கள்-மக்கள் / உயிரினங்கள்; ஆறு-விதம்; இறந்தான்-கடந்து மறைதல்; பிறந்தான்-தோன்றுதல்; மறக்குமா-மறக்குமாறு / மறக்கும்படி; நினையல்-நினைக; துறக்கம்-சுவர்க்கம்)

உலகத்து மக்களைப் போல பிறப்பு என்பதே இல்லாத சூரியன், எண்ணற்ற பிறவிகளைப் பெறும் உலக உயிரினங்கள் இறப்பது இப்படித் தான் என்று காட்டுவதைப் போல், முதல் நாள் அத்தமனகிரியில் மாலையில் மறைகிறான்; மறுநாள், உயிரினங்கள் பிறப்பது இப்படித்தான் என்று காட்டுவதைப் போல் உதயகிரியில் காலையில் தோன்றுகின்றான்; எனவே துறக்கம் போன்ற எவ்வளவு நல்ல உலகம் கிடைக்குமேனும் அவற்றை நினைக்காமல், மீண்டுவர முடியாத வீடுபேற்றை-பரமபதத்தையே எல்லோரும் நினைக்க வேண்டும் என்பதாம்.

''உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'' என்பது குறள் 339. ''தேய்தலுண்மையும், பெருகல் உண்மையும், மாய்தல் உண்மையும், பிறத்தலுண்மையும், அறியாதோரையும் அறியக் காட்டித் திங்கள் புத்தேள் திரிதரும் உலகம்'' என்பது புறநானூறு. உயிர்கள் எத்தகைய நல்லுலகு எய்தினும் ஒரு குறித்த கால அளவுக்குப் பின் இறத்தலும், மீண்டும் பிறத்தலும் உண்டு என்பதைத் தன் மறைவு, தோற்றத்தால் சூரியன் நன்கு உணர்த்துகின்றான். எனவே மீண்டு வந்து பிறத்தல் இல்லாத வீடுபேற்றையே எல்லோரும் நாடவேண்டும் என்பது கருத்து.

25. தாமரை மலர்தல்

செஞ்செவே சேற்றில் தோன்றும் தாமரை, தேரில் தோன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கின விரிந்த,வேறுஓர்
அஞ்சன ஞாயிறு அன்ன ஐயனை நோக்கிச் செய்ய
''வஞ்சிவாழ் வதனம் என்னும் தாமரை மலர்ந்ததன்றே! (2073)

Koviloor Digital Library

(சுடர்-ஒளிமிக்க; விரிந்த-மலர்ந்தன; அஞ்சனம்-மை / கருமை; செஞ்செவே-செக்கச்செவேலென / செம்மையான அழகு / மிக்க அழகு; வெம்-வெப்பமான)

செக்கச்செவேலென்று மிக்க அழகு பொருந்திய சேற்றில் மலரும் செந்தாமரை, வானில் ஒற்றைச் சக்கரத் தேரில் தோற்றமளிக்கும் வெப்பமானஒளிபொருந்தியகதிர்களைஉடையசூரியனின்தோற்றத்தைக் கண்டு மலரும் இயல்புடையன; அதற்குமாறான, குளிர்ச்சி பொருந்திய கருமையான சூரியன் போன்ற வியப்புக்குரிய வடிவழகு உடைய இராமபிரானை நோக்கி, சிவந்த செம்மையான வஞ்சிக் கொடி போன்றவளும், ஒளி பொருந்திய முகம் கொண்டவளுமான சீதாதேவியின் முகம் என்னும் தாமரை மலர்ந்தது என்பதாம்.

செங்கதிர்த் தோற்றம் கண்டு மலர்ந்த சேற்றுத் தாமரை மலரினும், கரு ஞாயிற்றின் ஒளியைக் கண்டு மலர்ந்த சீதாதேவியின் திருமுகச் செவ்வி மிகுதி என்பதாம். தாமரை மலர்க்கு நாயகனாகச்சூரியனைக்கூறுவது மரபு. அவன் முகம் கண்டு தாமரை மலர்வது போல், தன் நாயகனான இராமபிரான் முகம் கண்டு சீதாதேவியின் முகமாகிய தாமரை மலர்கிறது என்று கூறியது ஒரு நயம்.

26. நாவாய் கொணரப் பணித்தல்

நாள்முதற்கு அமைந்த யாவும், நயந்தனன் இயற்றி, நாமத்
தோள்முதற்கு அமைந்தவில்லான்,மறையவர் தொடரப்போனான்;
ஆள்முதற்கு அமைந்த கேண்மை அன்பனை நோக்கி, "ஐய!
கோள்முதற்கு அமைந்த நாவாய் கொணருதி விரைவின்", என்றான். (2074)

(நாமம்-அச்சம்; நாள்முதல்-காலைப் பொழுது / நாளின் முற்கூறு / வைகறைப் பொழுது; அமைந்த-செய்யத்தக்கன; நயந்து-விரும்பி; ஆள்முதல்-ஆண்மை / அடிமை; கேண்மை-நட்பு உறவு; கோள்-கொண்டு செல்லுதல்; நாவாய்-ஓடம்; முதல்-சிறப்பான / தரம் வாய்ந்த)

ஒரு நாளின் முதற்கூறாகிய வைகறைப் பொழுதில் இயற்றுதற்குரியதான காலைக் கடன்கள் அனைத்தையும் விருப்பத்துடன் செய்து முடித்து, பகைவர்க்கு அச்சம் தரும் வில்லை தன் தோளில் கொண்டவனான இராமபிரான், வேதம் வல்ல வேதியர்கள் தன்னைப் பின் பற்றி வரச்செல்லல் ஆனான்; அடிமைத் தொண்டு செய்யும் அன்புள்ளமும், ஆண்மையும் கொண்ட நட்புரிமையாளனான குகனை நோக்கி, "ஐயனே! எங்களைக் கொண்டு செல்வதற்கான தரமும் உறுதியும் வாய்ந்த நாவாயினை விரைவில் கொண்டு வருவாயாக! என்று கூறினான்.

அயோத்தி மக்கள் மீண்டு வந்து தம்மை அழைப்பார்களோ என்ற கருத்தால் நாவாயை விரைவில் கொணரப் பணித்தான் என்பதாம். முதல் என்ற சொல்லைப் பல் பொருளில் பயன்படுத்தியிருப்பது கருதத்தக்கது. குகன் இராமபிரானைக் கண்ட அளவிலேயே அவனுக்கு அடிமைத்

Koviloor Digital Library

தொண்டு செய்ய உள்ளம் கொண்டு, அதை அவனுக்குத் தெரிவிக்கவும் செய்தவன் ஆதலின் ''ஆள்முதற்கு அமைந்த கேண்மை அன்பன்; ஆண்மையுடையவன், அடிமையுடையவன், நட்புடையவன், அன்புடையவன் என்று குகனை எவ்வளவு அடைமொழி கொடுத்து அழைக்கிறான் பாருங்கள். இறைவனுக்கும் அடியவனுக்கும் ஒன்பது சம்பந்தங்கள் உண்டு என்பர் வடநூலார். அதில் முதன்மையானதும் முக்கியமானதும் சேஷீ சம்பந்தம்; சேஷீ என்பது சேஷன் என்று விரிந்து, அடிமை, தொண்டன் எனப்பொருள்படும்.

27. குகன் இராமனிடம் வேண்டுதல்

ஏவியமொழி கேளா, இழிபுனல் பொழி கண்ணான்
ஆவியும் உலைகின்றான்; அடிஇணை பிரிகல்லான்;
காவியின் மலர், காயா, கடல், மழை அனையானைத்
தேவியோடு அடிதாழாச் சிந்தனை உரை செய்வான். (2075)

(கேளா-கேட்டு; ஏவிய-கட்டளையிட்ட; இழி-இறங்குகின்ற / ஒழுகுகின்ற; பிரிக அல்லான்-பிரிதல் ஆற்றாதவன்; காவி-நீலோற்பலம்; காயா-காயாம்பூ; தாழா-தாழ்ந்து / வணங்கி; சிந்தனை-உள்ளக்கிடக்கை / கருத்து; உலைதல்-துடித்தல் / வாடுதல்)

''நாவாயை விரைவிற் கொணர்க'' என்று கட்டளையிட்ட இராமபிரானின்சொற்களைக்கேட்டுத்தன்னைவிட்டு இராமன்விரைவிற் பிரிந்து விடுவானோ என்ற ஏக்கத்தால், கண்களில் இருந்து ஒழுகுகின்ற கண்ணீரை உடையவனாய், உடலோடு உயிரும் துடிக்கின்றவனாய், இராமபிரானது, இருதிருவடிகளையும் பிரிய மனம் ஆற்றாதவனாய், நீலோற்பலமலர், காயாம்பூ, கடல், மேகம் ஆகியவற்றின் கருநீல நிற மேனியை உடைய இராமபிரானை அவனது மனைவியாகிய சீதாதேவியோடு, அவர்கள் திருவடிகளைத் தாழ்ந்து வணங்கி, தன் உள்ளக்கருத்தைக் கூறத் தொடங்கினான்.

இராமனது திருமேனி வண்ணத்திற்கு ஒப்புச் சொல்லக் கூடிய எல்லாப் பொருள்களையும் ஒருசேர ஒரே வரியில் தந்து, கற்போரைக் களிப்பில் ஆழ்த்துவது கவிஞனின்வழக்கம். ''பூவையும், காயாவும் நீலமும் பூக்கின்ற காவிமலர் எல்லாம் பிரான் உருவே'' என்பது பெரியதிருவந்தாதி.

28. ''பொய்ம்முறை இலரால்; எம் புகலிடம் வனமே யால்;
கொய்ம் முறைஉறு தாராய்! குறைஇலெம்; வலியேமால்;
செய்ம்முறை குற்றேவல் செய்குதும்; அடியோமை
இம்முறை உறவுஎன்னா இனிதுஇரு நெடிது எம்ஊர்'' (2076)

(கொய்-கொய்து / பறித்து; முறைஉறு-ஒருங்கு படத்தொடுத்த; தார்-மாலை; புகலிடம்-இருப்பிடம்; நெடிது-நெடுங்காலம்; குற்றேவல்-

Koviloor Digital Library

சிறுதொண்டுகள்; வலி-வலிமை / பொய்ம்முறை-பொய்யுறவு / பொய்யொழுக்கம் / வஞ்சகம்)

கொய்யப்பட்ட மலர்களைக் கொண்டு ஒழுங்காகத் தொடுக்கப்பட்ட மலர் மாலையணிந்தவனே! எங்கள் சுற்றத்தினர் வஞ்சகர்கள் அல்லர்; பொய்யொழுக்கம் உடையவர் அல்லர்; நாங்கள் வாழும் இருப்பிடம் கானகமே ஆகும்; எங்களுக்கு ஒரு குறையும் இல்லை; சுகமாக வாழ்கிறோம். பகைவர்களை எதிர்க்கும் வல்லமை பெற்றுள்ளோம்; தங்களுக்கு எங்களால் முடிந்த அளவும், உங்கள் விருப்பப்படியும், செய்கின்ற முறை தவறாமல் குற்றேவல் செய்வோம்; அடியவர்களாகிய எங்களையும் உங்களுடைய உறவு என்று கருதி இனிமையாக எங்களுடன் இங்கேயே நீண்ட காலம் எங்கள் ஊரிலேயே வாழ்ந்திருப்பீர்களாக'' என்று வேண்டினான். (குளகச்செய்யுள்)

உன்னுடைய நோக்கமே வனம் புகுந்து தவம் செய்து அரக்கர்களை அழிக்க வேண்டும் என்பது தானே? நாங்கள் இருக்குமிடம் வனம் தான்; தாம் செய்வதற்கு ஏற்ற இனிய சூழ்நிலை உள்ள இடம் தான்; பகைவர்களை அழிக்கின்ற ஆற்றலும் எங்களிடம் மிக உள்ளது; உன்விரத ஒழுக்கத்திற்கு ஏற்றது எனவே நீ இங்கு நீண்ட காலம் தங்கியிருப்பாயாக என்றான் என்பதாம்; நீண்ட காலம் இங்கு இருப்பாயாக என்பது, நீ கருதி வந்த பதினான்கு ஆண்டு காலம் மட்டுமல்ல; அதற்கு மேலும் இங்கேயே நீ இனிதாகத் தங்கியிருக்கலாம் என்பதையும் உட்படுத்திக் கூறிய சொற்களாகும். அடிமை என்பதும் ஒரு உறவு முறைதான். ஆண்டான் அடிமை என்பதும், இறைவன் தொண்டன் என்பதும் சேஷீ சம்பந்தம்தான். எனவே நீ எங்களுடன் தான் இருக்க வேண்டும். வேறு எங்கும் செல்லுவது தேவையற்றது என்கிறான். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதவர் என் சுற்றத்தார் என்பதைத் தான் பொய்ம் முறை இலரால்'' என்றார்.

29. தேன்உள; தினை உண்டால்; தேவரும் நுகர்தற்குஆம்
ஊன்உள; துணை நாயோம் உயிர்உள; விளையாடக்
கான்உள; புனலாடக் கங்கையும் உளதன்றோ?
நான் உளதனையும் நீ இனிது இரு; நட எம்பால்! (2077)

(நுகர்தற்காம்-உண்ணத்தக்க; கான்-காடுகள்; புனலாடுதல்-நீராடுதல்; இனிது-சுகமாக; ஊன்-புலால் / மாமிசம்)

நீங்கள் பருகுவதற்குத் தேன் வகைகள் உள்ளன; தினையும் நிறைய உண்டு; தேவர்களும் உண்பதற்குரிய தூய்மையான அவியிற் சொரியத்தக்க புலாலும் உண்டு; தங்களுக்குத் துணையாக நாயைப் போன்ற எங்களது உயிர் இருக்கிறது; சீதை விளையாட்டாகப் பொழுது போக்கப் பரந்த கானகம் இருக்கிறது. நீங்கள் இருவரும் மகிழ்ச்சியாக நீராடிப் பொழுது போக்கப் பெருமை வாய்ந்த கங்கை நதி இருக்கிறது; எனவே நான் உயிரோடு இருக்கும் வரையிலும் தாங்கள் எங்களுடன்தான் தங்கவேண்டும். இப்பொழுது என்னுடன் கூட எங்கள் இடத்திற்கு நடந்து வருவாயாக! என்றான்.

Koviloor Digital Library

சுவை மிக்க அமுதினையே உண்பவர்களான தேவர்களும் விரும்பி உண்ணத்தக்க சுவையுடையதாகிய ஊன் என்பதாம். முன்பு தேனையும் மீனையும் கையுறைப் பொருளாகக் கொண்டுவந்து, முனிவர்களும் இராமனும் அதை உண்ணாமல், உண்டதாகக் கொள்க என்று கூறிய தர்ம சங்கட நிலையை இங்கே தவிர்த்திருக்கிறான் பாருங்கள். இங்கே மீனைத் தவிர்த்துத் தேனை மட்டும் சொல்லித் தினையையும் சேர்த்திருக்கிறான் பாருங்கள். இதைக் குகனது பண்பு முதிர்ச்சி என்பதா? கவிஞனின் கவிதை நயம் என்பதா?

30. தோல்உள துகில் போலும்; சுவை உள; தொடர் மஞ்சம்
போல்உள பரண்; வைகும் புரைஉள; கடிது ஓடும்
கால்உள; சிலைபூணும் கைஉள; கலிவானின்
மேல்உளபொருளேனும்விரைவொடுகொணர்வேமால். (2078)

(துகில்-நல்லாடை / மெல்லிய ஆடை; சுவை-இன்பம்; மஞ்சம்-படுக்கை; வைகும்-தங்குதல்; புரை-இலை வேய்ந்த குடில்கள்; கடிது-விரைந்து; கலி-ஒலித்தல்; தொடர்-கயிறு / சங்கிலி; பரண்-உயர்ந்த இருக்கை)

மெல்லிய நூலாடை போலத் தோலால் ஆகிய உடைகள் இருக்கின்றன; உண்ணுதற்குரிய சுவையான பண்டங்கள் இருக்கின்றன; சங்கிலியால் பிணைக்கப்பட்ட தொட்டில் போன்ற படுக்கை போல் உயர்ந்த இருக்கைகளாகிய பரண்கள் உள்ளன; தங்குவதற்கேற்ற சிறிய குடில்கள் இருக்கின்றன; நீங்கள் விரும்பியதைக் கொண்டுதர விரைந்து ஓடும் வல்லமை பெற்ற கால்கள் எங்களுக்கு உண்டு; உங்களைப் பகைவர்களிடம் இருந்து காப்பாற்றுவதற்காக வில்லை ஏந்தி நிற்கின்ற கைகளும் உண்டு; ஒலியையே தன் இயற்கைக் குணமாகக் கொண்ட ஆகாயத்தின் மேல் கூட, ஏதேனும் கிடைத்தற்கரிய பொருள் இருந்தால், அதைத் தாங்கள் விரும்பினால், அதையும் விரைந்து கொண்டு வரும் ஆற்றல் எங்களிடம் உள்ளது. எனவே நீ எங்களுடன் தங்கித் தான் ஆகவேண்டும் என்று அன்புக் கட்டளையிடுகிறான் குகன்.

உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்று வசதிகளும் இங்கிருப்பதாகக் கூறுகிறான். பரண் என்பது தினை முதலியவற்றைக் காவல் புரியும் பொருட்டு, உயர்ந்த மரக்கம்புகளை நட்டு, மேலே குறுக்காகக் கிளை இலை முதலியவற்றைப் பரப்பி அமைத்த உயர்ந்த இருக்கை இவற்றை இன்றும் வயல் பக்கங்களில் காணலாம்.

31. ''ஐஇரு பத்தோடு ஐந்தாயிரர் உளர் ஆணை
செய்குநர்; சிலைவேடர்; தேவரின் வலியரால்;
உய்குதும் அடியோம், எம்குடிலிடை ஒருநாள் நீ
வைகுதி எனின், மேல் ஓர் வாழ்வுஇலை பிறிது'' என்றான். (2079)

Koviloor Digital Library

(ஆணை-கட்டளை; செய்குதல்-நிறைவேற்றுதல்; ஐஇருபத்தோடு ஐந்தாயிரர்-5 லட்சம்; குடில் இருப்பிடம்;வைகுதல்-தங்குதல்; உய்குதல்-பெரும் பேறுபெறுதல் / கடைத்தேறுதல்.

''எனது கட்டளைக்குட்பட்டவர்கள் ஐந்திலக்கம் வில்லேந்திய வேடுவர்கள், தேவர்களினும் வலிமை மிக்கவர்கள் உன் கட்டளையையும் நிறைவேற்றுபவர்கள் இங்கு இருக்கின்றனர்; எனவே எங்கள் குடிலில் ஒரே ஒரு நாள் தாங்கள் தங்கியிருந்தாலும் அதுவே நாங்கள் கடைத்தேறுவதற்குப் போதுமானதாகும். அதைவிட மேம்பட்ட ஒரு பெரும்பேறு வேறு ஒன்றும் எங்களுக்கு இல்லை'' என்றான் குகன்.

இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். முதலில் காலஅளவற்ற வரையிலும் நீ இங்கேயே இரு என்றான். ''இனிது இரு நெடிது எம்மூர்'' என்றான். பின்னர் அது இயலாவிட்டால் நான் உயிரோடு இருக்கின்ற வரையிலாவது தங்கிப் போஎன்றான், நான்உளதனையும்எம்பால்நீ இனிது இரு'' என்றான். இப்போது அதுவும் முடியாது என்கிற நிலையில் ஒரே ஒரு நாளாவது தங்கிப் போ என்கிறான். ''ஒரு நாள் நீ வைகுதி'' என்கிறான்.

32. இராமன் குகனுக்கு மறுமொழி கூறுதல்

அண்ணலும் அதுகேளா, அகம் நிறைஅருள் மிக்கான்,
வெண்ணிற நகைசெய்தான்; ''வீரநின்உழை யாம் அப்
புண்ணிய நதி ஆடிப்புனிதரை வழிபாடு உற்று
எண்ணிய சிலநாளில் குறுகுதும் இனிது'' என்றான். (2080)

(கேளா-கேட்டு; நகை-புன்முறுவல்; எண்ணிய-அறுதியிட்ட; குறுகுதல்-வந்து சேர்தல்; உழை-இடம்)

பெருமை மிகுந்தவனான இராமபிரானும் குகன் கூறியவற்றைக் கேட்டு, நெஞ்சம்நிறையக்கருணைமிக்கவனாய், அன்புததும்ப வெள்ளிய புன்முறுவல் செய்து, ''வீரனே! அந்தப் புண்ணிய நதிகளில் நீராடி, அங்கங்குள்ள முனிவர்களையும் துதித்து, எங்களுக்கு அறுதியிட்ட சில நாட்களில் உன்னிடம் இனிதே வந்து சேருவோம்'' என்றான்.

அப்புண்ணிய நதி நீராடி, என்பது கைகேயி குறிப்பிட்ட புண்ணிய தீர்த்தங்கள் அனைத்திலும் என்பதாம். எண்ணிய சில நாள் என்பது நோக்கத்தக்கது. கைகேயி கூறிய ஏழிரண்டு ஆண்டுகள் என்றால் கேட்பவர் யாருக்குமே மலைப்பாகத் தோன்றும் என்பதால்தான் முன்பே கோசலையிடம் '' ஆண்டவை பத்தும் நாலும் பகலலவோ?'' என்று பதினான்கு ஆண்டுகளைப் பதினான்கு நாட்கள் போலக் கூறினான்; அதன் படியே குகனிடமும் எண்ணிய சில நாளில் என்றே எளிதாகக் கூறுகிறான்.

33. குகன் கொணர்ந்த ஓடத்தில் மூவரும் செல்லுதல்

சிந்தனை உணர்கிற்பான், சென்றனன் விரைவோடும்
தந்தனன் நெடுநாவாய்; தாமரை நயனத்தான்

Koviloor Digital Library

அந்தணர் தமையெல்லாம் ''அருளிதிர் விடை'' என்னா,
இந்துவின் நுதலாளோடு, இளவலோடு இனிது ஏறா. (2081)

(சிந்தனை-நினைவு / எண்ணம்; ஏறா-ஏறி / வீற்றிருந்து; இந்து-பிறைச்சந்திரன்; நுதல்-நெற்றி; அம்தண்அர்-அந்தணர்-அழகிய தண்ணளியுடையவர் (குளகப்பாடல்)

இராமபிரர்னின் மனக்கருத்தை உணர்ந்த குகன், விரைவாகச் சென்று பெரிய படகு ஒன்றைக் கொணர்ந்தனன்; தாமரை மலர் போலும் கண்களையுடைய இராமபிரான் அங்கிருந்த கருணையுள்ளம் கொண்ட வேதியர்களிடமும் முனிவர்களிடமும் ''எனக்கு விடை கொடுங்கள்'' என்று கூறிப் பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய சீதாதேவியுடனும், இளையவனாகிய இலக்குவனோடும் இனிதாக அவ்வோடத்தில் ஏறி அமர்ந்திருந்தான்.

34. கங்கை கடந்து செல்லுதல்

''விடுநனிகடிது'' என்றான்; மெய் உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய்; முரிதிரை நெடுநீர் வாய்க்
கடிதினின் மடஅன்னக் கதிஅதுசெல, நின்றார்
இடர்உற, மறையோரும் எரிஉறும் மெழுகு அன்னார். (2082)

(மெய்-உடல்; முரி-மடங்கி; திரை-அலைகள்; மட இளமையான; கதி-நடை; முடுகுதல்-விரைந்து செலுத்துதல்; நனி-மிகவும்)

''படகினை விரைவாகச் செலுத்து'' என்று குகனை நோக்கி இராமபிரான் கூறினான்; இராமபிரானுடைய உடலில் உயிர் போன்று வாழ்பவனான குகனும் பெரிய படகினை விரைவாகச் செலுத்தினான்; மடங்குகின்ற அலைகளையுடைய பெரிய நீர்ப்பெருக்கை உடைய கங்கையில் அப்படகு இளமையான அன்னம் நடப்பது போல அசைந்து செல்லவும், கரையிலுள்ள குகனது உற்றார் உறவினர்கள் இராமபிரானது பிரிவு கருதித் துன்புறவும், அங்குள்ள அந்தணர்கள் நெருப்பில் இட்ட மெழுகு போன்றும் உருகி நின்றனர்.

இங்கே முனிவரும் துயருற்றனர் என்று உம்மை உயர்வு சிறப்பாய், இன்பமும் துன்பமும் ஒக்க நோக்கும் இயல்புடைய முனிவர்களும் இராமன் பிரிவால் துன்புற்றனர் என்பதைக் குறிக்கும். ஓடம் விரைந்து சென்றாலும் அதன் நடை-செலவு-அன்ன நடை போல அழகாக இருந்ததாம். விரைவிலும் அழகை அனுபவிக்க மறக்காதவன் கம்பன். பொதுவாக நட்புக்கு உடம்பும் உயிரும் சேர்ந்த சேர்க்கையைக் கூறுவது வழக்கம். ''உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு'' என்பது குறள் 1122.

35. பாலுடை மொழியாளும், பகலன் அனையானும்
சேலுடை நெடுநல்நீர் சிந்தினர் விளையாடத்

Koviloor Digital Library

தோலுடை நிமிர்கோலில் துழவிட, எழும் நாவாய்
காலுடைநெடு ஞெண்டின் சென்றது கடிது அம்மா! (2083)

(பகலன்-சூரியன்; சிந்தி-இறைத்து / தூவி; கோல்-துடுப்புக்கள் / தள்ளுகோல்; எழும்-அசைந்து செல்லும்; ஞெண்டு-நண்டு; நிமிர்-நேரான)

பால் போன்று இனிமையான சொற்களை உடைய சீதாதேவியும், சூரியன் போன்று ஒளி மிக்க இராமபிரானும், கயல் மீன்கள் துள்ளி விளையாடும் நெடிய நீர்ப்பெருக்கையுடைய கங்கையின் நீரை ஒருவர் மீது ஒருவர் வாரி இறைத்து விளையாடிக் கொண்டே செல்ல, நுனியில் தோல் பட்டையையுடைய உயர்ந்த துடுப்புக்கள் நீரைத் தூழாவித் தள்ள, பல கால்களையுடைய பெரிய நண்டு ஒன்று விரைந்து செல்வதைப் போல, அவ்வோடம் கங்கையில் சென்றது.

கைகளில் அழுத்தம் தெரியாமல் இருப்பதற்காகக் கோலின் நுனியில் தோல்பட்டை இருப்பது வழக்கம். தோலுட என்ற தெலுங்குச் சொல் ஓட்டுதல் / செலுத்துதல் என்றும் பொருள்படும். படகில் செல்லுவோர் இப்போதும் கூட நீரில் கையை யளைத்துக் கொண்டும், நீரை ஒருவர் மீது ஒருவர் தூவிக்கொண்டும் செல்லுதலையும் காணலாம். அது மனித உள்ளத்தின் இயல்பு. கானகத்திலும் இருவரும் இன்பமாகவே சென்றனர், துன்பம் தோற்றவில்லை என்பது உட்கருத்து. குகனே படகை ஓட்டிச் சென்றான் என்று கம்பன் மட்டுமே கூறுகிறான். வால்மீகியும், துளசியும், ஓடத்தைக் குகனின் ஓட்டுநர்கள் செலுத்திச் சென்றதாகவே கூறுகின்றனர். கங்கையில் செல்லும் போது, இராமபிரான் வனவாசத்தை இனிது முடித்துச் சுகமாகத் திரும்பிவர வேண்டும் என்று கங்காதேவியைச் சீதாதேவி வணங்கிக் கொண்டே சென்றாள் என்று வான்மீகம் கூறம்.

36. எல்லோரும் கங்கையின் தென்கரையை அடைதல்

சாந்து அணி புளினத்தின் தடம் முலை உயர் கங்கை
காந்துஇன மணி மின்னக் கடிகமழ் கமலத்தின்
சேந்து ஒளி விரியும் தெண்திரை எனும் நிமிர்கையால்
ஏந்தினள்; ஒரு தானேஏற்றினள் இனிதுஅப்பால் (2084)

(புளினம்-மணற்குன்று; ஒருதானே-தான் ஒருத்தியாகவே; காந்து-விளக்கம் மிகுகின்ற; சேந்து-சிவந்து; தெண்-தெளிந்த; ஏந்தி-தாங்கி; ஏற்றுதல்-அடைவித்தல்; அப்பால்-அக்கரை / மறுகரை)

கங்கையாற்றில் உயர்ந்த மணல் திட்டுக்கள், கங்கை என்னும் பெண்ணின் உயர்ந்த சந்தனம் அணிந்திருக்கின்ற பெரிய கொங்கைகளைப் போலவும், மாணிக்கங்களின் கூட்டங்கள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கவும், நறுமணம் கமழ்கின்ற தாமரை மலரைப் போலச் சிவந்து ஒளிவீசுகின்ற தெள்ளிய அலைகள் என்னும் தனது கைகளால் தான் ஒருத்தியே தனியாகத்

Koviloor Digital Library

தன் கைகளில் தாங்கி, அந்நாவாயை இனிதாக அக்கரையில் கொண்டு சேர்த்தாள்.

குகனின் முயற்சியால் மட்டும் படகு அக்கரை சேர்ந்துவிட வில்லை. நீண்ட ஆழமும் பெரிய அலைகளும், பெரும் சுழிகளும், வேகமும் உடைய கங்கையாற்றைக் கடப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. எனவே, இவர்கள் கங்கைக் கரையைக் கடக்க கங்காதேவியே தன்னுடைய அலைகள் என்னும் கைகளால் அவ்வோடத்தைத் தாங்கி அக்கரையில் இனிதாகச் சேர்ப்பித்தாள் என்பதாம்.

37. இராமன் சித்திர கூடத்திற்கு வழி கேட்டல்

அத்திசை உற்று, ஐயன், அன்பனை முகம் நோக்கிச்
சித்திர கூடத்தின் செல்நெறி பகர்'' என்னப்
பத்தியின் உயிர் ஈயும் பரிவினன் அடிதாழா
''உத்தம! அடிநாயேன் ஓதுவது உளது'' என்றான். (2085)

(அத்திசை-அக்கரை / அவ்விடம்; பத்தி-பக்தி / அன்பு; பரிவு-இரக்கம் / உள்ளன்பு; தாழா-தாழ்ந்து / வணங்கி; உத்தமன்-நல்லவன் / சற்குணன்; நாயேன்-தொண்டன்)

அக்கரை சென்றடைந்த இராமபிரான், தன்னிடம் பற்றுக் கொண்டுள்ள குகனை நோக்கி, ''சித்திர கூடத்திற்குச் செல்லும் வழியைக் கூறுவாயாக'', என்று கேட்கவும், பேரன்பினால் உயிரையும் விடத்துணியும் இரக்கமுடைய குகன், இராமபிரான் திருவடிகளை வணங்கி ''எல்லோரிலும் உயர்ந்தவனே! அடிமைத்தொண்டனாகிய நான் தங்களுக்குக் கூறவேண்டுவது ஒன்று உள்ளது'' என்றான்.

இந்நிகழ்ச்சி வான்மீகத்தில் இடம் பெறவில்லை. சித்திர கூடத்திற்குச் செல்லும் வழியை இராமபிரான், குகனிடம் கேட்டதாகக் கம்பன் மட்டுமே சொல்லுகிறான். வான்மீகி பரத்வாச முனிவரே, இராமனைச் சித்திர கூடத்தில் தங்குமாறு பணித்ததாகக் கூறுகிறார்.

38. குகன் வேண்டுதல்

''நெறிஇடு நெறிவல்லேன்; நேடினேன் வழுவாமல்
நறியன கனிகாயும் நறவுஇவை தரவல்லேன்;
உறைவிடம் அமைவிப்பேன்; ஒருநொடிவரை உம்மைப்
பிறிகிலென்; உடன் ஏகப்பெறுகுவென் எனில், நாயேன்.'' (2086)

(நாயேன்-அடியவன்; நறியன-நல்ல; நறவு-தேன்; வழுவாமல்-மாசுபடாமல்; நெறி-பெருவழி; இடுநெறி-சிறுவழி / கிளை வழி; இடும்நெறி என்பது அடி இடுதலால் ஆகிய வழி-ஒற்றையடிப்பாதை / குறுக்குப்பாதை; நேடுதல்-தேடுதல்)

Koviloor Digital Library

ஒரு நாளேனும் எங்கள் குடிலில் தங்கினால் பேறு பெற்றவர்கள் ஆவோம் என்று முன்பு கூறிய குகன் இப்பொழுது, நீ தங்காவிட்டாலும் பரவாயில்லை, என்னையேனும் உன்னுடன் அழைத்துச் செல்ல அருள்புரிக என்று வேண்டுகிறான். அப்படி உன்னுடன் நான் வர அருள் பெறுவேனாயின், நீ செல்லும் பெருவழிகளில், இடையில் குறுக்கிடுகின்ற கிளை வழிகள் இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்தவன் நான். அவற்றில் உங்களைச் சிரமமில்லாமல் செலுத்தும் ஆற்றல் பெற்றவன். தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களான பழங்கள், காய்கள், தேன் முதலியவற்றை நல்லனவாகவும், காலம் தவறாமலும், மாசுபடாதனவாகவும் தங்களுக்குத் தேடிக் கொணர்ந்து தருவேன். தாங்கள் அங்கங்கு தங்குதற்குரிய இடங்களையும் நன்கு அமைத்துத் தருவேன்; உங்களை விட்டு ஒரு நொடிப் பொழுது கூடப் பிரிந்திருக்க மாட்டேன் என்று தான் செய்யப் போகும் நன்மைகளைக் கூறுகிறான்.

முன்பு மீனும் தேனும் கொணர்ந்தவன், அவர்கள் மனநிலை அறிந்து இங்கேதான் விரும்பும் மீனைப் பற்றிக் குறிப்பிடாமல் அவர்கள் விரும்பும் காய்கனி தேன் முதலியவற்றை மட்டும் குறிப்பிட்டது ஆழ்ந்து நோக்கத்தக்கது. நொடி என்பது ஒரு கால அளவு. கண் இமைப்பொழுது அதற்குச் சமம். ஒரு மாத்திரையளவு என்றும் கூறுவர். ''கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை, நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே'' என்பது தொல்காப்பியம்.

39. தீயன அவையாவும் திசைதிசைசெல நூறித்
தூயன உறைகானம் துருவினன் வரவல்லேன்;
மேயின பொருள் நாடித் தருகுவென்; வினை மற்றும்
ஏயின செயவல்லேன்; இருளினும் நெறி செல்வேன். (2087)

(தீயன-கொடிய விலங்குகள்; நூறி-அழித்து; துருவி-தேடி; மேயின-விரும்பிய; நெறி-வழி)

தீமை விளைவிப்பதான காட்டு விலங்குகள் எல்லாம் தங்களை நெருங்க விடாமல் திசைதோறும் ஓடி, ஒழிய அழிக்கும் வல்லமை பெற்றுள்ளேன். விலங்குகளிலேயே அன்புடையதும் பரிசுத்தமானதுமானவை வசிக்கும் கானகத்தில் நல்ல இடம் தேடித் தங்களைக் கொண்டு செல்வேன்; தாங்கள் விரும்பிய பொருள்கள் எதுவாயினும் தேடிக் கொணர்ந்து தருவேன்; தாங்கள் இடுகின்ற கட்டளை எதுவாயினும் சிரமேற்கொண்டு செய்து முடிப்பேன்; நல்ல இருட்டிலும் கூட வழியறிந்து செல்லும் ஆற்றல் பெற்றுள்ளேன் என்றான் குகன்.

தீயன என்பவை கொடியவை என்ற பொருளில் துன்பம் விளைவிக்கும் புலி, கரடி, சிங்கம், பாம்பு முதலியனவற்றையும், தூயன என்பது துன்பம் விளைவிக்காத பசு, மான், மயில் முதலியனவற்றையும் குறிக்கும் என்க.

40. கல்லுவென் மலை மேலும் கவலையின் முதல்யாவும்;
செல்லுவென் நெறிதூரம்; செறிபுனல் தரவல்லேன்;

Koviloor Digital Library

வில்லினம் உளன்; ஒன்றும் வெருவலென்; இருபோதும்
மல்லினும் உயர் தோளாய்! மலரடி பிரியேனால். (2088)

(மல்-மல்தொழில்; கவலை-குறிஞ்சி நிலத்தில் கிடைக்கும் ஒருவகைக் கிழங்கு; கல்லுத்தல்-கிண்டியெடுத்தல்; வெகுளுதல்-அஞ்சுதல்; இருபோது-பகல் இரவு; செறி-உயிர் தங்குதற்குரிய)

கவலை முதலிய கிழங்குகள் மலையின் மேலேதான் கிடைக்குமென்றாலும் மலையைத் தோண்டி அவற்றை எடுத்துவந்து தங்களுக்குத் தருவேன்; நீண்டதூரம் சோர்வில்லாமல் நடக்கும் ஆற்றல் பெற்றுள்ளேன். எனவே உயிர் தங்குதற்குரிய தண்ணீர் எவ்வளவு சேய்மையிலிருந்தாலும் எளிதில் கொணர்ந்து தருவேன்; வில்லையும், வில்லேந்திய சுற்றத்தினரையும் உடையேன்; யாருக்கும் எதற்கும் அஞ்சமாட்டேன்; உனது தாமரை மலர் போன்ற திருவடிகளை பகல் இரவு இருபோதும் எப்போதும் பிரியாமல் நின்று இருப்பேன்'' என்றான் குகன்.

அவன் தோள்கள் அவன் விற்பயிற்சியில் மட்டுமல்ல, மற்பயிற்சியிலும், வல்லவன் என்பதை எடுத்துகாட்டும் உயர்ந்த தோள்கள் என்பதாம்.

41. ''திருஉளம் எனின், மற்று என் சேனையும் உடனே கொண்டு
ஒருவலான் ஒருபோதும் உறைகுவன்; உளர் ஆனார்
மருவலர் எனின், முன்னே மாள்குவென்; மிகையல்லேன்;
பொருஅரு மணிமார்ப! போதுவென் உடன்'' என்றான். (2089)

(பொருஅரு-ஒப்பற்ற; மணி-அழகிய; திருஉளம்-விருப்பம்; ஒருவுதல்-நீங்குதல்; மருவலர்-பகைவர்;)

''ஒப்பற்ற அழகிய மார்பினை உடையவனே! தாங்கள் விருப்பப்பட்டு இசைந்தால், என்னுடன் என்னுடைய படையினரையும் உடன் அழைத்துக் கொண்டு வருவேன்; உங்களை விட்டு ஒருசிறு பொழுது கூடப் பிரியாது தங்குவோம்; எதிர்க்கவல்ல பகைவர்கள் எவரேனும் எதிர்ப்பட்டால் நானே அவர்களுடன் போர் செய்து வெல்வேன்; இன்றேல் தங்களைக் காக்கும் பொருட்டு, தங்களுக்கு முன்பே நான் உயிர் துறப்பேன். உண்மை. இது வெறும் புகழ்ச்சியில்லை; நான் உங்களுக்குப் புறம்பானவனோ அயலானவனோ அல்லன்; உங்களில் ஒருவனாக என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுடன் நானும் கூட வருவேன்.

இங்கே ஒன்று நோக்க வேண்டும். இராமன் புகுந்திருப்பது வனவாசத்திற்காக கானகத்திற்குள். எனவே படை, ஆரவாரம் முதலியன வேண்டற்பாற்றன்று. எனவேதான் இராமனின் திருவுள்ளம் இசைவு தருமாயின் நான் படைகொண்டு வருவேன் என்று கூறியவன், பின்னர்தான் உடன் வரட்டுமா என்று அவன் திருவுள்ளத்தின் இசைவு கேட்காமல் போதுவென் உடன் மிகையல்லேன் என்று உரிமை பாராட்டிக் கூறுகிறான்.

Koviloor Digital Library

அதற்கு ஏற்பப் பின் கவியில் நீ மிகையல்லன். எங்களுள் ஒருவன் என்று இராமபிரான் திருவுள்ளம் காட்டப்போகிறான்.

42. இராமன் மறுமொழி

அன்னவன் உரைகேளா, அமலனும் உரை நேர்வான்;
''என்னுயிர் அனையாய் நீ; இளவல் உன் இளையான்;
இந்நன்னுதல் அவள் நின்கேள்; நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடையது; நான் உன்தொழில் உரிமையில் உள்ளேன். (2090)

(அமலன்-குற்றமற்றவன்; கேள்-உறவு / கொழுந்தி; நளிர்-குளிர்ந்த; தொழில்-பணி; நேர்தல்-கூறுதல்)

அவ்வாறு கூறிய குகனின் சொற்களைக் கேட்ட குற்றமற்றவனான இராமபிரான் அவனை நோக்கி மறுமொழி கூறுவான். ''என்னுடைய உயிர்போன்றவன் நீ; என்னுடைய தம்பி உனக்கும் தம்பியாவான்; இந்த நல்ல நெற்றியை உடைய சீதை உனக்கும் கொழுந்தி என்ற உறவாவாள்; குளிர்ந்த கடல் சூழ்ந்த இவ்வுலகமெல்லாம் உன்னைச் சேர்ந்தது. நான் உன்னுடைய ஏவலுக்கு உரிமையுடைவனாயிருக்கிறேன் என்றான்.

''ஏழை, ஏதலன், கீழ்மகன் என்னாது, இரங்கி, மற்றவர்க்கு இன்னருள் சுரந்து, மாழை மான்மட நோக்கி உன்தோழி; உம்பிஎம்பி என்று ஒழிந்திலை உகந்து தோழன் நீ எனக்கு இங்கு ஒழி என்ற சொற்கள் வந்து அடியேன் மனத்து இருந்திட ஆழிவண்ண! நின் அடியினை அடைந்தேன்'' என்பார் திருமங்கையாழ்வார்.

43. ''துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது இடை மன்னும் பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளம் ஒரு நால்வேம்; முடிவு உளது என உன்னா
அன்பு உள இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம். (2091)

(உன்னுதல்-நினைத்தல்; முடிவு-எல்லை)

''துன்பம் என்று ஒன்று இருந்தால் தானே சுகம் என்பது ஒன்று இருப்பது பற்றித் தெரியும். அவ்வாறு நினைக்காமல், பின்பு வருகின்ற இன்பத்தைக் கருதாது இப்போது ஏற்படப் போகின்ற பிரிவைப் பற்றிக்கருதிக் கவலைப் படாதே! உன்னைச் சந்திப்பதற்கு முன்பு நாங்கள் நான்கு பேர்கள் தான் சகோதரர்களாக இருந்தோம். எங்கள்பால் அளவற்ற பேரன்புடைய உன்னையும் சேர்த்து இப்பொழுது நாம் ஐந்து சகோதரர்கள் ஆகிவிட்டோம்'' என்றான்.

''துன்பமுற்றவர்க்கல்லால் இன்பமில்லை'' என்பது சீவகசிந்தாமணி. எனக்கு நீண்ட வனவாசம் துன்பமென்று, கருதாதே; மீண்டும் நாம் கூடிச் சந்திக்கும்போது உண்டாகும் இன்பம் எல்லையற்றதாகும் என்பது கருத்து. பின்னர் வரப்போகும் இன்பத்திற்கு இடையே ஏற்படுகின்ற சிறு

Koviloor Digital Library

பிரிவினைத் துன்பம் என்று எண்ணி நீ வருந்தாதே'' என்றான் என்பதாம். நேற்றுவரை நீ எனக்கு குகன்; இன்று முதல் எங்களைப் போல் எங்கள் தந்தைக்கு நீயும் இன்னொரு மகன்'' என்பார் கவிஞர் வாலி.

44. படர் உற உளன் உம்பி கான் உறை பகல் எல்லாம்;
இடர்உறு தகையாயோ? யான் என உரியாய் நீ;
சுடர்உறு வடிவேலாய்; சொல் முறை கடவேன்; நான்
வடதிசை வரும் அந்நாள் நின் உழை வருகின்றேன். (2092)

(சுடர்-ஒளிபொருந்திய; வடி-கூர்மையான; படர்உறுதல்-தொடர்ந்து வருதல்; பகல்-நாள்; தகை-தகுதி; உழை-இடம் / இருப்பிடம்)

''ஒளி பொருந்திய கூரிய வேற்படையை உடையவனே! நான் கானகத்தில் வசிக்கும் காலமெல்லாம் துன்பத்தில் சேராமல் என்னைக் காப்பதற்காக உன் தம்பியாகிய இலக்குவன் என்னுடன் எப்பொழுதும் துணையாகத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறான். என்னைப் போலவே உரிமை உடைய நீ இத்தகைய துன்பங்களை ஏற்றுக் கொள்ளத் தக்கவனோ? எனவே நான் சொல்லியபடியே செய்வாயாக; நானும் என் வார்த்தைகளிலிருந்து மீறாமல், நான் வனவாசத்திலிருந்து திரும்பி வடதிசை நோக்கி அயோத்திக்கு வரும்போது உன்னுடைய இருப்பிடத்திற்கு உறுதியாக வருகின்றேன் என்றான்.

இங்கே ''வருவேன்'' என்னாது ''வருகின்றேன்'' என நிகழ்காலத்தில் கூறியது விரைவுப்பொருள் உணர்த்தி நின்றது. பகல் என்பது ஆண்டுகளைக் குறிக்கும். யான் என உரியாய் நீ என்பது நானே நீ, நீயே நான் என்பது குறித்தது.

45. அங்குஉள கிளை காவற்கு அமைதியின் உளன் உம்பி
இங்குஉள கிளை காவற்கு யார் உளர்? உரைசெய்யாய்;
உன்கிளை எனது அன்றோ? உறுதுயர் உறலாமோ?
என்கிளை இதுகா என் ஏவலின் இனிது! என்றான். (2093)

(அங்கு-அயோத்தியில்; கிளை-சுற்றத்தார்; அமைதி-நிறைவு / தகுதி; ஏவல்-கட்டளை)

அயோத்தியில் உள்ள நம் சுற்றத்தினரைக் காக்க உன் தம்பியாகிய பரதன் எல்லா நிறைவுகளையும் தகுதியையும் பெற்று அங்கே இருக்கிறான். அதுபோல இங்குள்ள நம் சுற்றத்தாராகிய வேடுவர்களைக் காக்க யார் இருக்கிறார்கள்? நீயே சொல்வாயாக. உனது சுற்றத்தார் என்னுடைய சுற்றத்தாராகவும் ஆகிவிட்டார்கள் அல்லவா? எனவே நம் சுற்றத்தார் துன்பப்படலாமோ? எனவே என் கட்டளையாக இதனையேற்று எனது சுற்ற்த்தாராகிய இவ்வேடுவர்களை நீ இங்கிருந்தே காப்பாற்றுவாயாக!'' என்றான்

Koviloor Digital Library

அமைதி என்பது காத்தற்கு உரிய அறிவு, ஆற்றல், சூழ்ச்சி ஆகியவற்றின் நிறைவினைக் குறிக்கும். இங்கே ஒன்று கருதவேண்டும். முன்பு இலக்குவனையும் உம்பி என்றான் இராமன்; இங்கு பரதனையும் உம்பி என்கிறான். எனவே குகன் இராமனுக்கு அடுத்தபடியாகக் கருதப்பட்டான் என்க. மேற்கூறிய நான்கு பாடல்களிலும் இராமன், குகன் தன்னுடன் வாராதபடி தவிர்த்து அதற்குத் தக்க காரணங்களையும் காட்டியிருக்கும் பாங்கு உணரத்தக்கது.

46. குகன் விடைபெறுதல், இராமன் முதலியோர் கானகம் புகுதல்

பணிமொழி கடவாதான், பருவரல் இகவாதான்
பிணி உடையவன் என்னும் பேதினன், விடை கொண்டான்;
அணிஇழை மயிலோடும், ஐயனும், இளையோனும்
திணிமரம் நிறை கானில் சேண் உறுநெறி சென்றார். (2094)

(பணிமொழி-கட்டளை; கடத்தல்-மீறுதல்; பருவரல்-துன்பம்; இகவுதல்-நீங்குதல்; பேது-மயக்கம்; இழை-அணிகலன்கள்; திணி-செறிந்த / சேண்-நெடுந்தூரம்; நெறி-வழி; பிணி-நோய்)

இராமன் இட்ட கட்டளையை மீறாதவனும், இராமன் பிரிவுத் துயரினின்றும் இன்னும் நீங்காதவனும், ஏதோ நோயுற்றவன்போல மயக்கமுற்றிருப்பவனுமான குகன், இராமன் முதலியோர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு சிருங்கிபேரம் சென்றான். அழகிய அணிகலன்கள் அணிந்த மயிலைப் போன்ற சாயலை உடைய சீதாதேவியோடு, இராமபிரான், தனது இளவலான இலக்குவனோடும், மரங்கள் அடர்ந்து நிறைந்த காட்டுப் பகுதிக்குள் நெடுந்தூரம் செல்லும் வழியில் செல்லலானார்கள்.

காட்டின் உள் பகுதிக்குச் செல்லும் வழியில் செல்லலானார்கள் என்று, அடுத்த வனம்புகு படலத்திற்குத் தோற்றுவாயாக அமைகிறது இப்பாடல்.

குகப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

8. வனம் புகு படலம் [47 பாடல்கள்]

குகன் உதவியால் கங்கையைக் கடந்து தென்கரையை அடைந்த இராமன், இலக்குவன், சீதாதேவி ஆகிய மூவரும், குகன் விடைபெற, மரங்கள் அடர்ந்த காட்டின் உட்பகுதிக்குள் செல்லுதலைப் பற்றிக் கூறும் படலம் என விரியும். இது 47 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''வனம்போகு படலம்'' எனவும் ''வனம் போக்கு படலம்'' எனவும் குறிக்கப்பட்டிருக்கிறது.

இப்படலத்துள், இராமன் சீதாதேவிக்கு வனத்தின் வளங்களைக் காட்டிக் கொண்டே செல்லுதலும், பரத்துவாச முனிவன் இராமனை எதிர்கொள்ள வந்ததும், இராமன் வணங்குதலும், முனிவன் இராமன் வனம் வந்த காரணத்தை வினவுதலும், அதற்கு இராமன் நிகழ்ந்தவற்றைக் கூற, முனிவன் மனம் நொந்து பேசுதலும், ஒருவாறு தேறி ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்லுதலும், அங்கே உபசரித்தலும், இராமனை அங்கேயே தங்குமாறு முனிவன் வேண்டுதலும், இராமன் இயலாமையைக் கூறுதலும், ''சித்திர கூடத்தில்'' தங்குமாறு முனிவன் கூறவும், மூவரும் முனிவரிடம் விடைபெற்று யமுனை நதிக்கரையை அடைதலும், அங்கே நீராடி, உணவுண்டு இலக்குவன் அமைத்த தெப்பத்தில் மூவரும் கடந்து அக்கரை செல்லுதலும், பாலை நிலம் ஒன்றை அடைதலும், சீதை துன்புறுவாளே என்று இராமன் எண்ணிய மாத்திரத்திலேயே பாலை நிலம் சோலை நிலமாக மாறியதும், பாலைவனத்தைக் கடந்து சித்திரகூட மலையைக் காணுதலுமான நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

1. இராமன் வனம் புகுந்த காலநிலை

பூரியர் புணர்மாதர் பொதுமனம் என, மன்னும்
ஈரமும் உளது, இல் என்று அறிவுஅரும் இளவேனில்,
ஆரியன் வரலோடும், அமுதுஅளவிய சீதக்
கார்உறுகுறி வானம் காட்டியது அவண் எங்கும். (2095)

(பூரியர்-கீழ்மக்கள்; புணர்-சேர்கின்ற; ஆரியன்-இராமன்; சீதம்-குளிர்ச்சி; அமுது-மழைத்துளி; மன்னும்-மிகவும்; குறி-அடையாளம்)

கீழ்மக்கள் சேர்கின்ற பொது மாதர்கள் மனம் போல, நிலைத்த இரக்கமும், ஈரப்பசையும் இருக்கிறதோ இல்லையோ என்று கூறும்படி, இளவேனில் காலம், தனக்கு முந்திய பின்பனிக் காலம் போல ஈரப்பசை

Koviloor Digital Library

உடையது என்று சொல்ல முடியாமலும், தன்னைத் தொடர்ந்து வரப்போகிற முதுவேனிற்காலம் போல வறட்சி மிக உடையது என்று சொல்ல முடியாமலும் இருந்தது. ஆனால் இராமபிரான் வனம் புகுந்தவுடன், அமிழ்தம் கலந்த குளிர்ந்த கார்காலத்திற்கு உரிய அடையாளங்களை அக்கானகம் முழுவதும் வானம் தோற்றுவித்தது.

இளவேனிற்காலத்தை அடுத்து வர இருக்கிற காலம் முதுவேனில். அப்பொழுது வறட்சி மிகும். அதற்கு முந்தைய பருவம் பின்பனிக்காலம். அதில் ஈரப்பசைமிகுந்திருக்கும். இவை இரண்டும் இல்லாது இளவேனில் சாதாரண வெப்பம் உடையதாய் இருக்க வேண்டும். இதற்குக் கம்பன் விலை மகளிரின் பொது மனத்தை உவமிக்கிறான். அவர்கள் வெளியே அன்பு இரக்கம், ஈரம் கொண்டவர் போல் நடித்தாலும் உள்ளுக்குள் அவர்கள் விரும்புவது பசையைத்தான்-பொருளைத்தான். செல்வத்தின் மீதே பற்றுக் கொண்டு ஈரமற்று இறுகிய தன்மையையுடையவராய் இருப்பர் என்று முன்பு பாலகாண்டத்தில் கூறியது போலவே கூறுகிறான். இந்தப் பாடலால், இராமன் வனம் புகுந்த பருவம் இளவேனில் காலம் என்பது புலப்படும். வறண்டு கிடக்க வேண்டிய இளவேனிற் பருவத்தில் கார்காலப் பருவம் வருவது போல மழைக்குறி காட்டிற்று வானம். காரணம் இராமன் வனம் புகுந்ததே. அவனுக்கும் அவன் மனைவி சீதாதேவிக்கும் துயர் தரக்காரணமாகி விடக் கூடாதே என்று சூரியன் தன் வெப்பத்தைத் தணித்துக் குளிர்ச்சியைக் காட்டுமாறு தோற்றினான் என்பதாம். நல்லோர் புகும் இடம் குளிர்ச்சியும் வளமும் உடையதாகும். நளன் காடு புகுந்த போதும் காடு இதே நிலை அடைந்தது என நைடதம் கூறும்.

2. வெயில், இளம்நிலவே போல் விரிகதிர் இடைவீசப்
பயில்மரம் நிழல்ஈன, பனிபுரை துளி மேகம்
புயல்தர, இளமென்கால் பூஅளவியது எய்த,
மயிலினம் நடமாடும் வழி இனியன போனார். (2096)

(வீச-பரப்ப; பயில்-அடர்ந்த; ஈன-தர; புரை-போன்ற; புயல்-மேகம்; இளமென்கால்-தென்றல் காற்று; வெயில்-சூரியன்)

சூரியன் தன் வெப்பக் கதிர்களை வீசாது, இளநிலவைப் போலத் தன் கிரணங்களை இடையே பரப்பவும், அடர்ந்த மரங்கள், நெருங்கிய நிழலைத் தரவும், பனித்துளியைப் போன்று மேகம் மழைத்துளியை அளவோடு சிந்தவும், இளமையான மெல்லிய தென்றற் காற்று நறுமணம் மிக்க பூக்களின் வாசனையோடு கலந்து வந்து வீசவும், மயில் கூட்டங்கள் நடனமாடுகின்ற வழியில் அம்மூவரும் களைப்புறாது இனிமையாகச் சுகமாகச் சென்றார்கள்.

வெயில் நிலவைப் போல் கதிர் பரப்ப, மரங்கள் அடர்ந்த நிழலைத் தர, மேகம் பனித்துளிபோல் மழைத் துளியைச் சொரிய, தென்றல் நறுமணம் வீச, மயில் கூட்டங்கள் நடனமாட இம்மூவரும் சென்றதனால் இனியதல்லாத காட்டுப் பயணம் கூட இனியதாயிற்று என்பதாம். ''குறித்த

Koviloor Digital Library

முகில் பந்தரிட்டுக் குறுந்துளி தூற்றிட, ஆயர்தறித்த மரம் அத்தனையும் தழைத்து, அலர்ந்து, பழுத்து, உதவ'' என்பது அழகர் கலம்பகம்.

3. இராமன் சீதாதேவிக்கு வழியிடைக் காட்சிகளைக் காட்டிச் செல்லுதல் [15 பாடல்கள்]

''மன்றலின் மலிகோதை மயில்இயல் மடமானே!
இன்துயில் வதி கோபத்து இனம் விரவின எங்கும்,
கொன்றைகள் சொரி போதின் குப்பைகள், குலமாலைப்
பொன்திணி மணிமானப் பொலிவன பலகாணாய்!''. (2097)

(மன்றல்-நறுமணம்; மலி-மிகுந்த; கோதை-கூந்தல்; இயல்-சாயல்; கோபம்-இந்திரகோபம் / தம்பலப் பூச்சிகள்; குப்பை-குவியல்; குலம்-சிறந்த; மான-போல; விரவுதல்-பொருந்துதல்; வதி-வசிக்கின்ற)

''நறுமணம் மிக்க கூந்தலையும், மயில் போன்ற சாயலையும், இளமையான மான் போன்ற மருண்ட பார்வையையும் உடையவளே! இங்கே இனிதாகத் தூங்குகின்ற சிவந்த நிறமுள்ள இந்திரகோபம் என்ற தம்பலப்பூச்சிக் கூட்டங்கள் நிறைந்து கிடக்கின்றன பார்; கொன்றை மரங்கள் உதிர்த்த மஞ்சள் நிறமுள்ள கொன்றை மலர்க் குவியல்களைப் பார். அவை மஞ்சள் நிறமுள்ள பொன்னால் திணித்துச் செய்யப்பட்ட மாலையில் பதிக்கப் பெற்ற சிவந்த மாணிக்கக் கற்களைப் போல ஒளி வீசுவதைப் பார்''-பாடல் முடியவில்லை-தொடர்கிறது.

மஞ்சள் நிறம் உடைய கொன்றைப் பூவுக்குப் பொன்னாலான மாலையும், அக்கொன்றைப் பூவில் பொருந்திய இந்திரகோபப் பூச்சிகளுக்கு பொன்மாலையில் பதிக்கப்பெற்ற மாணிக்கங்களும் உவமை. இந்திரகோபம் என்பது தம்பலப்பூச்சி-சிவந்த நிறமுடையன. வெற்றிலை குதப்பித் துப்பும் எச்சில் போல் தோற்றம் உடையதால் தம்பலப்பூச்சி என்பது காரணப் பெயர். இது கார்காலத்தில் காணப்படுவது. ''கொண்டல் எழ, மின் நுடங்க, கொடுஞ்சாபம் விளைவுற, செங்கோபம் தோன்ற, கார்காலம் ஆனது எனக் களிக்கும்'' என்பது வில்லிபாரதம்.

4. ''பாண்இனம் நிமிறுஆக, படும்மழை பணையாக,
நாணின தொகுபீலி கோலின நடம்ஆடப்
''பூண்இயல்! நின்சாயல் பொலிவது, பலகண்ணில்
காணிய'' எனல் ஆகும் களிமயில் இவை காணாய்!'' (2098)

(பூண்-அணிகலன்; இயல்-ஒழுக்கம்; பாண்இனம்-பாணர் கூட்டம்; நிமிறு-வண்டுகள்; படும்-முழங்குகின்ற; மழை-மேகம்; பணை-முழவு / மத்தளம்; தொகு-சுருங்கி; பீலி-தோகைகள்; கோலுதல்-விரித்தல்; சாயல்-மேனியழகு; காணிய-காணும் பொருட்டு; நாணுதல்-குவிதல்)

Koviloor Digital Library

"ஆபரணங்களை அணிந்தவளே! ஒழுக்கத்தையே ஆபரணமாக உடையவளே! ரீங்காரமிட்டுத் திரியும் வண்டுகளைப் பாடும் பாணர்களாகவும், கொட்டுகின்ற இடி முழக்கத்தை மத்தளமாகவும் கொண்டு, குவிந்து, சுருங்குகின்ற தோகைகளை விரித்து நடனம் ஆடுகின்ற இந்தக் களிப்புடைய மயில்கள் ஏன் அப்படிச் செய்கின்றன தெரியுமா? அவை தமது சாயல் உன்னிடம் பொருந்தி விளங்குவதால், அவ்வழகைத் தன் எண்ணற்ற கண்களால் காணும் பொருட்டாகும். அவற்றையெல்லாம் நீ காண்பாயாக".

கார்கால வரவு கண்டு இன்பமுற்றுக் களித்து ஆடும் மயில்களின் செயலை, அவை களிப்புற்று ஆடுவது சீதா தேவியின் சாயலைக் காணும் பொருட்டுத்தான் என்றும், அவை நடனமாடும் போது பக்கவாத்தியங்களாக வண்டுகள் பாணர்களாகவும், மழையொலி மத்தள ஒலியாகவும் இருந்ததாகவும் கம்பன் கற்பனைச் சிறகு விரிக்கிறான் என்பதாம். உன்னழகைக் காண்பதற்கு இருகண்கள் போதாது என்பது முன்பும் கூறப்பட்டது நினைவு கூரத்தகும். "சுமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரை காணார்; இமையா நாட்டம் பெற்றிலம் என்றார்; இருகண்ணால் அமையாது என்றார். அந்தர வானத்தவரெல்லாம்" (பாலகாண்டம்) மயிலின் தோகையில் அமைந்துள்ள பீலியைக் கண் என்று கூறுவது மரபு. அவை மூடித்திறக்காத இயல்புடையன; கார் காலத்தின் வருகையைக் கண்டு களித்துத் தோகை விரித்து ஆடுதல் மயிலின் இயல்பு; நாணின தொகுபீலி என்பதற்குச் சீதாதேவியின் கூந்தலின் அழகு தம் தோகைக்கு இல்லை என்பதால் மயில்கள் நாணமுற்றுத் தம் தோகைகளைச் சுருக்கிக் கொண்டன என்றும் கூறுதல் உண்டு.

5. "சேந்துஒளி விரிசெவ்வாய்ப் பைங்கிளி செறிகோலச்
காந்தளின் மலர் ஏறிக்கோதுவ, "கவின் ஆரும்
மாந்தளிர் நறுமேனி மங்கை!" நின்மணி முன்கை
ஏந்தின எனலாகும் இயல்பின; இவை காணாய்!" (2099)

(கவின்-அழகு; ஆர்தல்-பொருந்துதல்; செறி-அடர்ந்த; கோலம்-அழகு; ஏறுதல்-தங்குதல்; சேந்து-சிவந்து; விரிதல்-பரப்புதல்; மணி-அழகிய)

"அழகு பொருந்திய, மாந்தளிர் போன்ற மணமும் நிறமும் கொண்ட மேனியை உடைய மங்கையே! சிவந்த ஒளி பரப்புகின்ற செம்மையான வாயையும், பசுமையான உடல் நிறத்தையும் உடைய இக்கிளிகள், அழகு செறிந்து விளங்குகின்ற செங்காந்தள் மலர் மேல் ஏறி அமர்ந்து அவற்றைக் கோதிக் கொடுத்துக் கொண்டிருக்கும் இவ்வழகிய காட்சி, உனது அழகிய முன்னங்கைகளில் அவற்றை ஏந்திக் கொண்டிருப்பதைப் போன்று தோன்றுகின்றன. அவற்றின் அழகையும் நீ காண்பாயாக".

காந்தள் மலரை, அதன் வடிவுக்கு உவமை கூறிப் பெண்களின் கைகளை ஒப்பிடுவது மரபு. செங்காந்தள் மலரில் தங்கியிருக்கின்ற பைங்கிளிகள்

Koviloor Digital Library

சீதாதேவியின் முன்னங்கைகளில் கிளிகள் அமர்ந்திருப்பது போல் தனக்குத் தோன்றுகின்றது என்று இராமன் அவள் கையின் அழகைப் பாராட்டுகிறான்.

6. ''நெய்ஞ்நிறை நெடுவேலின் நிறம்உறு திறம்முற்றிக்
கைஞ்நிறை நிமிர்கண்ணாய்! கருதின இனம் என்றே
மெய்ஞ்நிறை விரி சாயல் கண்டு, நின்விழி கண்டு,
மஞ்ஞையும் மட மானும் வருவன இவைகாணாய்!'' (2100)

(நிறை-நிறைய/நிரம்ப; நிமிர்-பெரிய; விழி-பார்வை; மடம்-இளமை; நிறம்-மார்பு; கை-உள்ளங்கை; மஞ்ஞை-மயில்)

''எதிர்ப்பட்டவர்களின் மார்பினை ஊடுருவிச் செல்லும் பேராற்றலும், நெய்பூசப்பட்டு நிரம்பியதுமான நெடிய வேற்படை போன்றதும், உள்ளங்கையளவு பரந்ததுமான கண்களைப் பெற்றவளே! உன்னுடைய மேனியின் பரந்த சாயலைக் கண்டு மயிலும், உன்னுடைய மருண்ட பார்வையைக் கொண்ட விழிகளைக் கண்டு இளமையான மானும், அவை தம்மினம் தானோ என்று கருதினவாய் இங்கே வருவனவற்றைக் காண்பாயாக''.

ஞிறை என்பது நிறை என்பதன் போலி. உள்ளங்கையளவு நீண்ட கண் என்று கூறுவதும் காதளவோடிய கண் என்பதும் கவிமரபு. ''குடங்கையின் நெடிய கண் என்பது சீவகசிந்தாமணி; ''குடங்கையின் அகன்ற வாட்கண்'' என்பது சூளாமணி; ''குடங்கையின் நெடியவாள் தடங்கண் என்பது கூர்மபுராணம்; ''குடங்கையின் அகன்ற விழி'' என்பது நைடதம்.

7. ''பூஅலர் குரவோடும், புடைதவழ் பிடவு ஈனும்
மாஅலர் சொரிசூழல், துயில் எழும் மயில் ஒன்றின்
தூவியின் மணம்நாற, துணை பிரிபெடை தான் அச்
சேவலோடுஉற ஊடித் திரிவதன் இயல் காணாய்!'' (2101)

(அலர்-மலர்ந்த; புடை-பக்கம்; சொரி-சிந்திய; சூழல்-இடம்; தூவி-தோகை; பெடை-பெண்மயில்; குரவு-குரா என்னும் மரம்; பிடவு-பிடவு என்னும் மரம்; சேவல்-ஆண்மயில்; மாஅலர்-சிறந்த மலர்)

''குரவ மரத்தின் மலர்ந்த பூக்களும், பக்கத்தில் தழைத்துப் பரந்திருந்த பிடவம் என்னும் மரம் தோற்றுவித்த சிறந்த பிடவ மலர்களும் சிந்திக்கிடந்த சூழல் உள்ள இடத்தில் உறங்கி எழுந்த ஆண்மயில் ஒன்றின் தோகையில், அந்த இருமலர்களின் நல்ல மணம் வீசுவதை நுகர்ந்த, தன் ஆண் மயிலைப் பிரிந்திருந்த பெண்மயில், அந்த ஆண் மயில் வேறொரு பெண் மயிலோடு கூடியதால் தான் அதன் தோகையில் இத்தகைய நறுமணம் வீசுகிறது என்று தவறாகக் கருதி, ஊடல் கொண்டு முகம் கொடுத்துப் பாராது இங்கும் அங்கும் திரிந்து கொண்டு இருப்பதைக் காண்பாயாக''.

Koviloor Digital Library

குரா-குரவு-குரவம் எனவும், பிடா-பிடவு-பிடவம் எனவும் வழங்கப்பெறும். இவைகள் கார்காலத்தில் பூக்கும் இயல்புடையன.

8. ''அருந்ததி அனையாளே! அமுதினும் இனியாளே!
செருந்தியின் மலர் தாங்கும்செறி இதழின் அசோகம்
பொருந்திய களிவண்டில் பொதிவன, பொன்ஊதும்
இருந்தையின் எழுதீ ஒத்து எழுவது ஓர்இயல் பாராய்!'' (2102)

(செறி-நெருங்கிய; பொதிதல்-மறைக்கப்படுதல்; இருந்தை-கரி; செருந்தி-பொன்போல மலரும் பூக்களையுடையதொருமரம்; களி-களிப்பு / மதிமயக்கம்)

''கற்பினில் அருந்ததி போன்றவளே! அமிழ்தத்தைக் காட்டிலும் இனிமையான இயல்புடையவளே! செருந்தி என்னும் மலர்களைத் தன்னிடத்துக் கொண்டுள்ள நெருங்கிய இதழ்கள் விரியப் பெற்ற இனிமையான அசோக மரங்களின்மேல், மதுமயக்கத்தால் களிப்புற்றுத் திரியும் வண்டுகள் மறைந்திருப்பதானது, பொன்னை வைத்து ஊதுகின்ற கரியினின்று எழுகின்ற தீயின் கொழுந்து போலத் தோன்றும் தன்மையைக் காண்பாயாக!''

செருந்தி என்பது பொன் போல மஞ்சள் மலர்களைப் பூக்கும் ஒரு மரம். அசோக மலர் சிவப்பு நிறம் உடையது. எனவே செருந்திப் பூவுக்குப் பொன்னையும், அசோக மலருக்கு நெருப்பையும், வண்டுக்குக்கரியையும் உவமித்திருக்கிறான் கவிஞன். அசோக மலரில் படிந்திருந்த செருந்தி மலர் தீயில் வைத்த பொன் போன்று இருந்தது, அதன்மேல் மொய்த்த வண்டுகள் கரி போன்றிருந்தன. பொற்கொல்லர் தீயில் பொன்னையிட்டு மேலேகரியால் மூடி ஊதும் போது, கரியிடையே நெருப்புக் கொழுந்து மேல் எழுந்து தோன்றுவது போல அசோக மலரின் சிவந்த நிறம் வண்டுகளிடையே தோன்றியது என்பதாம்.

9. ''ஏந்துஇள முலையாளே! எழுதஅரு எழிலாளே!
காந்தளின் முகை கண்ணில் கண்டு, ஒரு களி மஞ்ஞை
''பாந்தள் இது'' என உன்னிக் கவ்வியபடி பாரா,
தேம்தளவுகள் செய்யும் சிறுகுறுநகை காணாய்!'' (2103)

(ஏந்து-பூரித்த / நிமிர்ந்த; முகை-அரும்பு; பாந்தள்-பாம்பு; பாரா-பார்த்து; தேம்-தேன் / இனிய; தளவுகள்-முல்லை மலர்கள்; குறுநகை-புன் சிரிப்பு)

''பூரித்து நிமிர்ந்த கொங்கைகளை உடையவளே! எழுதுதற்கரிய அழகினை உடையவளே! ஒவ்வொரு முறையும் புதிது புதிதாகத் தோன்றுகின்ற அழகினை உடையவளே! செங்காந்தள் மலரின் அரும்பினைத் தன் கண்ணால் பார்த்துவிட்டு, ஒரு களிப்புற்ற மயில் ''இது பாம்பு'' என்று எண்ணி, அதைத் தன் வாயால் பற்றிக் கொண்டு பார்க்கிறது

Koviloor Digital Library

பார்; அதனை இனிய முல்லை மலர்கள் ஏளனமாகப் பார்த்துச் செய்யும் புன்சிரிப்பையும் காண்பாயாக''.

காந்தள் அரும்பு பாம்பின் தலை போன்ற உருவ அமைப்புக் கொண்டிருக்கும். மயிலுக்கும் பாம்புக்கும் எப்போதும் பகைதான். வனத்தில் பூத்துள்ள காந்தள் அரும்பை ஒரு மயில் காணுகிறது. இது தனக்கு எதிரியான பாம்புதான் என்று எண்ணி அதனைப் பற்றிக் கவ்வுகிறது. மதமயக்கம் கொண்ட மயில் காந்தளரும்பைப் பாம்பு என்று கருதிக் கவ்வுவதைப் பார்த்து இனிய முல்லை மலர்கள் ஏளனமாகச் சிரித்தன என்பதாம்.

10. ''குன்றுஉறை வயமாவின் குருளையும், இருள்சிந்திப்
பின்றின எனல் ஆகும் பிடி தருசிறு மாவும்
அன்றில பிரிவு ஒல்லா அண்டர்தம் மனை ஆவின்
கன்றொடு விளையாடும் களியன பல காணாய்!'' (2104)

(வயம்-சிங்கம் / புலி; குருளை-சிங்கக்குட்டிகள்; பின்றுதல்-இணைத்து வைத்தல்; சிந்துதல்-துண்டித்தல்; பிடி-பெண்யானை; மா-யானை; அண்டர்-இடையர்; ஆ-பசு; களியன-மகிழ்ச்சியுடையன; அன்று-பகை; தரு-ஈன்ற)

''மலைகளிலும் குகைகளிலும் வாழ்கின்ற புலி, சிங்கம் போன்ற குட்டிகளும், இருட்பிழம்பையே துண்டித்து இணைத்து வைத்ததைப் போன்ற கரிய நிறமுடைய பெண்யானை ஈன்றெடுத்த அதன் சிறு யானைக் கன்றுகளும், தமக்குள் பகையில்லாது, ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிய இயலாதபடி, இடையர்களின் வீடுகளில் வளர்க்கப் பெறும் பசுங்கன்றுகளோடும் விளையாடி மகிழ்ச்சி கொள்ளுகின்ற இந்தக் காட்சியையும் காண்பாயாக''.

குணமென்னும் குன்றேறி நின்ற முனிவர்கள் வாழும் காடு. எனவே கொடிய விலங்குகளான புலி சிங்கக் குட்டிகளும், யானைகளும் நல்ல விலங்குகளான பசுங்கன்றுகளும் தமக்குள் பகையில்லாது, ஒன்றை விட்டு மற்றொன்று பிரியாது மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றன என்பதாம். சிங்கமும் யானையும் மலைக் காடுகளில் வாழ்வன. இயற்கையிலேயே தமக்குள் பகை கொள்வன. இவை தமக்குள் உள்ள பகையை மறந்து விளையாடுகின்றன. அவை பசுங்கன்றுகளுடனும் உறவாடி மகிழ்கின்றன என்பது இன்னும் வியப்பிற்குரியது. தமக்குள் மாறுபட்டு இருக்கும் விலங்குகளும் அங்கே ஒன்றுபட்டிருந்தன என்பதாம்.

11. ''அகில்புனை குழல்மாதே! அணிஇழை எனல் ஆகும்
நகும்மலர் நிறைமாலைக் கொம்புகள், நதிதோறும்
துகில்புரை நுரைநீரில் தோய்வன; துறை ஆடும்
முகிழ் இளமுலையாரின் மூழ்குவ பல காணாய்!'' (2105)

Koviloor Digital Library

(நகும்-மலர்ந்த; முகிழ்-தாமரை அரும்பு; புரைதல்-பொருந்துதல்; புரை-போன்ற; துகில்-வெள்ளாடை; மாலை-வரிசை)

''அகிற்புகையூட்டப் பெற்ற நறுமணம் மிக்க கூந்தலையுடைய பெண்ணே! அணியத்தகுந்த அணிகலன்கள் என்று சொல்லப்படுவதான மலர்கின்ற மலர்கள் நிறைந்த வரிசையான பூங்கொடிகள், நதியில் எல்லா இடங்களிலும், வெண்பட்டாடை போன்ற வெள்ளிய நுரையும் அலையும் உடைய நீரில் படிந்திருக்கின்றன. அவை நதித்துறையில் மூழ்கி இருத்தல், தாமரை அரும்பு போன்ற இளமையான கொங்கைகளையுடைய மகளிர் மூழ்கிப் படிவது போலத் தோன்றுவதையும் காண்பாயாக''.

பல நிறப் பூக்களை உடைய பூங்கொம்புகள் நீரில் படிந்திருப்பதற்குப் பல விதமான அணிகலன்கள் அணிந்து நீராடும் மகளிர் உவமை. வெள்ளிய நுரை வெண்பட்டாடைக்கு உவமை.

12. ''முற்றுறும் முகைகிண்டி முரல்கில சிறுதும்பி
வில் திருநுதல் மாதே! அம்மலர் விரி கோங்கின்
சுற்றுஉறும் மலர் ஏறித் துயில்வன, சுடர் மின்னும்
பொன்தகடு உறும் நீலம் புரைவன பல காணாய்!'' (2106)

(வில்-ஒளி; திரு-அழகிய; முகை-அரும்பு; கிண்டுதல்-கிளைத்தல் / குடைதல்; முரல்தல்-ஒலித்தல்; சுற்று-சூழல் / இடம்; புரைவன-ஒத்திருத்தல்; தும்பி-வண்டு)

''ஒளிவிடுகின்ற அழகிய நெற்றியை உடைய பெண்ணே! மலர்ந்த நிலையிலிருக்கும் அரும்புகளைக் கிளறிச் சிறு வண்டுகள் ரீங்காரம் செய்யாது, ஏற்கனவே விரிந்து மலர்ந்திருக்கும் கோங்கு மரச் சூழலில் உள்ள மலர்களில் தங்கி உறங்குகின்றன பார்த்தாயா? அவை ஒளி மிக்கு வீசுகின்ற பொன்னாலாகிய தகட்டில் நீலமணிகள் பதிக்கப் பட்டிருப்பதைப் போலத் தோற்றமளிக்கின்றன அல்லவா? அவற்றையும் பார்ப்பாயாக''!

சிறு வண்டுகள் மலரும் நிலையில் உள்ள அரும்புகளைக் கிண்டி ரீங்காரமிட்டுத் தேன் பருகி மகிழ்வதை விட, முன்னரேயே விரிந்து மலர்ந்திருக்கும் கோங்கு மரச்சூழலில் உள்ள மலர்களில் தங்கி ரீங்காரமிட்டுத் தேன் பருகுகின்றன. கோங்கு மலர்கள் பொன்னிறமும் தட்டை வடிவமும் உடையன. எனவே அவற்றின் மேல் நீல நிறவண்டுகள் அமர்ந்து தேன் பருகுவது பொன் தகட்டில் நீலமணிகள் பதிக்கப் பெற்றிருப்பதைப் போன்று தோற்றமளிக்கின்றன என்பதாம். கோங்கு மலருக்குப் பொன்தகடும், அதில் தங்கி உறையும் நீலநிற வண்டுகளுக்குப் பொன் தகட்டில் பதித்த நீல மணிகளும் உவமை.

13. ''கூடியநறை வாயில் கொண்டன, விழி கொள்ளா
மூடியகளி மன்னும் முடுகின; நெறி காணா
ஆடிய சிறை மாவண்டு அந்தரின், இசை முன்னம்
பாடிய பெடை கண்ணா வருவன பல காணாய்!'' (2107)

Koviloor Digital Library

(நறை-தேன்; முடுகுதல்-விரைதல்; நெறி-வழி; சிறை-சிறகு / இறக்கை; மா-அரிய / பெரிய; அந்தர்-குருடர்; மன்னும்-மிகவும்; ஆடிய-அசைகின்ற;

''மிக்க தேனை வாயால் பருகிய பெரிய ஆண் வண்டுகள், களிப்பு மிகுதியால் மூடிய கண்களைத் திறந்து பார்க்க முடியாமலும், தாம் செல்ல வேண்டிய சரியான வழியை அறியாத நிலையிலும் தள்ளாடிச் சிறகுகளை அசைத்துக் கொண்டு, குருடரைப் போலத் தமக்கு முன்னே ரீங்காரமிட்டு இசைபாடிக் கொண்டு செல்லும் பெண் வண்டுகளையே தமது கண்களாகக் கொண்டு விரைந்து வருகின்ற பல வண்டுகளையும் காண்பாயாக''.

தேனைமிகுதியாக உண்டதனால் ஆண்வண்டுகளால் கண்களைக் கூடத் திறக்க முடியவில்லை. செல்ல வேண்டிய வழியும் தெரியவில்லை. தள்ளாடுகின்றன. குருடர்கள் எப்படி மற்றவர்களின் ஒலியையே வழியாகக் கொண்டு முன்னேறிச் செல்வார்களோ, அதைப் போலத் தமது பெண் வண்டுகள் தமக்கு முன்னர் இசைபாடிக் கொண்டு செல்லுதலையே தமது கண்களாகக் கொண்டு விரைந்து அவற்றின் பின்னே தொடர்ந்து வருகின்றன என்பதாம்.

14. ''கன்னியர் அணிகோலம் கற்று அறிகுநர் என்னப்
பொன்அணி நிற வேங்கை, கோங்குகள், புதுமென்பூ
அன்னம் மெல்நடையாய்! நின்அளக நன்னுதல் அப்பும்
சின்னநல்மலர் மானச்சிந்துவ பல காணாய்!'' (2108)

(அளி-வண்டுகள்; அளகம்-கூந்தல்; சின்னம்-விடுபூ / உதிரிப் பூ; மான-போல; கோலம்-வகை)

''அன்னம் போன்ற மென்மையான நடையை உடையவளே! இங்கு இருக்கின்ற பொன் போன்ற வண்ணமுடைய வேங்கை மரங்களும் கோங்கு மரங்களும், திருமணம் ஆகாத கன்னிப் பெண்கள் அலங்கரித்துக் கொள்ளும் முறையைத் தாம் கற்று அறிபவர் போல, புதுமையான மென்மையான பூக்களை உன்னுடைய கூந்தல் படிந்திருக்கின்ற முன்நெற்றியில் சூட்டுதல் போல, உதிரிப் பூக்களைச் சிதறுகின்றதையும் காண்பாயாக!''

வழியிலுள்ள கோங்கு மரங்களும் வேங்கை மரங்களும் இயல்பாக உதிர்க்கின்ற பொன்நிறமுடைய உதிரிப் பூக்களை, அவர்கள் அணிதற்குரிய விடு பூக்கள் சிந்துவதாகக் கூறினார் என்க.

15. ''மணம்கிளர் மலர்வாசம் மாருதம் வர, வீச
கணம்கிளர் தருசுண்ணம் கல்இடையன கானத்து;
அணங்கினும் இனியாய்! உன் அணிவட முலை முன்றில்
சுணங்குஇனம் அவை மானத் துறுவன பல காணாய்!'' (2109)

(அணங்கு-திருமகள்; வாருதல்-அள்ளிக் கொண்டு வருதல்; மாருதம்-காற்று; சுண்ணம்-நறுமணப் பொடி / மகரந்தப் பொடி / வாசனைப் பொடி;

Koviloor Digital Library

வடம்-முத்து மாலை; சுணங்கு-தேமல்; கிளர்தல்-மிகுதல்; கணம்-திரட்சி; கானம்-வனம்; வர-மிகுதியாக; முன்றில்-இடம்)

''தெய்வ மகளிரினும் இனிமையானவளே! நறுமணம் மிக்க மலர்களினின்றும் காற்று வீசுவதால் உதிர்கின்ற மகரந்தப் பொடிகள், நாட்டிலுள்ள கற்பாறைகளின் மேல் படிகின்றன. அவை உன் முத்துவடம் அணிந்த கொங்கைகளினிடத்து மேற்பரப்பில் படிந்துள்ள தேமல் கூட்டத்தைப் போல நெருங்கியிருப்பதைக் காண்பாயாக''.

நல்ல காற்று வீசுவதனால் மலர்களிலிருந்து மகரந்தத் தூள் அருகிலிருக்கும் உருண்டையான கல்லின் பாறைகளில் படிந்து கிடக்கின்றன. அவை சீதாதேவியின் முத்து மாலை அணிந்த கொங்கைகளின் மேற்பரப்பில் படிந்துள்ள தேமலைப் போல இருக்கின்றன என்ற ஒரு அழகான கற்பனையைத் தருகிறான் கவிஞன். பாறைப்பரப்பில்சுண்ணம்பரவிப்படிந்திருப்பதுபோலமுலைப்பரப்பில் சுணங்கு படிந்திருக்கிறது என்றது ஒரு நயம்.

16. ''அடிஇணை பொறைகல்லா என்று கொல், அதர் எங்கும்
இடையிடை மலர்சிந்தும் இனம்மரம் இவை காணாய்!
கொடியினொடு இளவாசக் கொம்புகள், குயிலே! உன்
துடிபுரை இடைமானத் துவள்வன இவை காணாய்!'' (2110)

(பொறைகல்லா-பொறுக்கலாற்றாது; அதர்-வழி; துடி-உடுக்கை)

''குயில் போன்ற இனிய குரலை உடையவளே! உன்னுடைய இரண்டு திருவடிகளும் வழியில் காணப்படும் பரற்கற்களில் நடக்கப் பொறுமை வாய்ந்தன அல்ல என்று கருதித்தான் போலும், வழியெங்கும் இடையிடையே மலர்களை உதிர்த்து நிரப்பியிருக்கும் இந்த மலர்க் கூட்டங்களைக் காண்பாயாக! மலர்கள் மிகுதியாகப் பூத்திருப்பதனால் இவற்றின் கொடிகளோடு, இளமையான நறுமணம் வீசுகின்ற பூங்கொம்புகளும் உன்னுடைய உடுக்கை போன்ற இடை போல ஒகிந்து அசைவதையும் காண்பாயாக!''

மரங்கள் இயற்கையிலே உதிர்த்திருக்கின்ற மலர்கள், சீதாதேவி பரற்கற்களின் மேல் நடக்கலாற்றாதவள் என்று கருதித்தான் அவை மலர்ப் பாதை அமைத்திருக்கின்றன என்று கூறுவது ஒரு நயம். எப்படி சீதாதேவியின் உடுக்கை போன்ற இடை வளைகின்றதோ. அதைப் போலவே மரக்கொம்புகளும் கிளைகளும் பூக்களின் பாரத்தைத் தாங்க முடியாது ஒசிந்து வளைகின்றன என்பது மற்றொரு நயம்.

17. ''வாள்புரை விழியாய்! உன் மலரடி அணிமானத்
தாள்புரை தளிர்வைகும் தகை நிமிறு இவை காணாய்!
கோள்புரை இருள்வாசக் குழல்புரை மழை காணாய்!
தோள்புரை இளவேயின் தொகுதிகள் இவை காணாய்!'' (2111)

Koviloor Digital Library

(புரை-போன்ற / பொருந்திய; மான-போல; மலர்-விரிந்த; தாள்-காம்பு; நிமிறு-வண்டுகள்; கோள்-கொள்ளுதல்; இருள்-கரிய; மழை-மேகம்; வேய்-மூங்கில்; தொகுதி-கூட்டம்; தகை-அழகு)

''வாள் போன்ற கூரிய விழிகளை உடையவளே! உன் மலர் போன்ற திருவடிகளில் அணிந்திருக்கின்ற அணிகலன்கள் போலக் காம்புகள் பொருந்திய தளிர்களில் தங்கியிருக்கின்ற அழகு பொருந்திய வண்டுகளைக் காண்பாயாக! பொருள்களைக் காண ஒட்டாது எல்லாவற்றையும் தன்னகத்தே மறைத்துக் கொண்டுள்ள இருள் போலக் கரியதும், நறுமணம் மிக்கதுமான உன்னுடைய கூந்தல் போன்ற மேகங்களைக் காண்பாயாக! உன்னுடைய தோள்களை ஒத்திருக்கும் இளமையான மூங்கில் கூட்டங்களையும் காண்பாயாக!''

சீதையின் திருவடி தளிருக்கும், அவள் அணிந்திருக்கின்ற சதங்கை போன்ற அணிகலன்கள் தளிரில் உள்ள வண்டுக்கும் உவமை. புரை என்ற சொல் இருவேறுபட்ட பொருள்களைத் தந்து நிற்பது காணத்தக்கது. தாள் புரை தளிர்; குழல் புரை மழை; தோள்புரை வேய் என்று எதிர் நிலையாக உவமித்திருப்பது கம்பனின் கை வண்ணம்.

18. ''பூ நனைசினை துன்றிப் புள் இடையிடை பம்பி,
நால்நிற நளிர் வல்லிக்கொடி நவையில பல்கி
மானினம், மயில் மாலை குயிலினம் வதி கானம்
தீ நிகர் தொழில் ஆடைத்திரை பொருவன பாராய்!'' (2112)

(நனை-அரும்பு; சினை-கிளை; துன்றி-மிகுந்து; புள்-பறவைகள்; பம்பி-நிறைந்து; நால்-நாலா / நானா / பலவித; நளிர்-குளிர்ந்த; நவைஇல-குற்றமற்றனவாய்; பல்கி-மிகுந்து; மாலை-வரிசை; வதி-வாழ்கின்ற; தொழில்-வேலைப்பாடு; ஆடைத்திரை-திரைச்சீலை; பொருவுதல்-ஒத்திருத்தல்)

''மலர்களும், அரும்புகளும் கிளைகளில் மிகுந்திருக்கவும், பறவைகள் இடையிடையே நிறைந்திருக்கவும், பலவிதமான வண்ணங்களுடைய குளிர்ந்த வல்லி என்னும் கொடிகள், குற்றமற்றனவாய் அழகாகப் பெருகியிருக்கவும்; மான் கூட்டம், மயில் கூட்டம், வரிசையான குயிலின் கூட்டங்கள் இவையெல்லாம் தங்கி வாழ்கின்ற இந்தக் காட்டுப் பகுதிகள், ஓவிய வித்தகர் தீட்டிய நல்ல சித்திர வேலைப்பாடமைந்துள்ள தீயை ஒத்த சிவந்த நிறமுள்ள திரைச்சீலையை ஒத்து விளங்குவதையும் காண்பாயாக''!

இதைப் போலவே ஒரு பாடல் மணிமேகலையில் கிடைக்கிறது. ''குரவமும், மரவமும் எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி, வித்தகர் இயற்றிய, விளங்கிய கைவினைச் சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே ஒப்பத் தோன்றிய உபவனம்'' என்பது பாடல். துன்றி, பம்பி, பல்கி என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்கள். பூங்கொடிகள், பறவைகள், பல நிறக்கொடிகள், மான்கள், மயில்கள், குயில்கள்

Koviloor Digital Library

இவையெல்லாம் நிரம்பியிருப்பதால், காட்டை வண்ண வேலைப் பாடமைந்த ஒரு திரைச் சீலைக்கு உவமித்தார்.

19. சூரியன் மறைதல்

என்று, நல்மடவாளோடு இனிதினின் விளையாடிப்
பொன்திணி திரள் தோளான் போயினன் நெறி; போதும்
சென்றது குடபால்; ''அத்திருமலை இதுவன்றோ?''
என்றனன், ''வினைவென்றோர் மேவும் இடம்'' எனலோடும். (2113)

(பொன்-அழகு; மடம்-இளமை; நெறி-வழி; குடபால்-மேற்றிசை; மேவு-தங்குகின்ற; திணி-செறிந்த; போது-பொழுது / காலம் குளகப்பாடல்.

இவ்வாறு வனவளக் காட்சிகளை நல்ல அழகு பொருந்திய சீதாதேவிக்குக் காண்பித்துக் கொண்டு மகிழ்ச்சியாய் விளையாடிக் கொண்டு, பொன்னாலாகிய ஆபரணங்களை அணிந்த திரண்ட தோள்களை உடைய இராமபிரான் காட்டின் வழியே போய்க் கொண்டு இருந்தான். அப்போது காலக்கடவுளான சூரியனும் மேற்குத் திசையில் சென்று மறைந்தான். சற்று தூரத்தில் ஒரு மலை அவன் கண்களுக்குத் தெரிந்தது. ''இருவினைகளையும் தவவலிமையால் வென்றவர்களான முனிவர்கள்வாழ்கின்ற சித்திரகூட மலையல்லவா இது?'' என்று சீதையை நோக்கிக் கூறிக் கொண்டே செல்லும் பொழுது. பாடல் முடியவில்லை தொடர்கிறது.

இராமபிரானுக்கும் சீதாதேவிக்கும் வனத்துள் செல்வது ஒரு கடினமான செயலாகத் தெரியவில்லை. அவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டே வருத்தமுறாது சென்றனர் என்பதாம். முதலில் ''இடர்காணாள், பொருப்பேந்திய தோளானோடு விளையாடினள் போனாள்'' என்று சீதையைச் சொன்ன கவிஞன், இப்பொழுது, திரள் தோளான், விளையாடி நெறி போனான் என்று கூறி முடிப்பதும் நோக்கத்தக்கது.

20. பரத்துவாசர் இராமனை எதிர் கொள்ளுதல்

அருத்தியன், அகம்விம்மும் அன்பினன், ''நெடுநாளில்
திருத்திய வினை முற்றிற்று இன்று'' எனல் தெரிகின்றான்;
பரத்துவன் எனும் நாமப்பரமுனி, பவநோயின்
மருத்துவன் அனையானை வரவு எதிர்கொள வந்தான். (2114)

(அருத்தி-ஆசை; விம்மும்-நிரப்பும் / பூரிக்கும்; திருத்திய-குற்றமறச் செய்த / செவ்விதாக்குதல்; பரமுனி-உயர்ந்த / மேலான / முனிவன்; பவநோய்-பிறவிப் பிணி; வினை-தவம்)

இராமபிரானைக் காண வேண்டும் என்னும் ஆசையுடையவனும், நெஞ்சம் பூரிக்கும் அன்பை உடையவனும், ''நீண்ட நாட்களாக நான்

Koviloor Digital Library

செம்மையாகச் செய்து வந்த தவத்திற்குரிய பயன் இன்று தான் நிறைவேறியது'' என்று பரிபூரணமாக உணர்ந்தவனும், பரத்துவாசன் என்னும் பெயரினைக் கொண்டவனுமான மேலான உயர்ந்த முனிவன், பிறவிப் பிணிக்கு மருத்துவன் போன்றவனாகிய இராமபிரானை நல்வரவு கூறி எதிர்கொள்ள வந்தான்.

பரம் என்பது மேலான உயர்ந்த என்னும் பொருளில் எல்லோரினும் மேம்பட்டவன் என்ற கருத்தைத் தந்து நின்றது. பவநோய் என்பதன் தமிழாக்கம் பிறவிப் பிணி; பிறப்பை நோயாகவும், பிறப்பறுக்கும் பெம்மானை மருத்துவனாகவும் பெரியாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் பாடியிருப்பவை இங்கு நோக்கத்தக்கன. ''எருத்துக் கொடி உடையானும், பிரமனும், இந்திரனும், மற்றும் ஒருத்தரும், இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்து அறிவாரும் இல்லை; மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா!'' என்பது பெரியாழ்வார் திருமொழி; ''வாளால் அறுத்துச் சுடினும், மருத்துவன் பால், மாறாத காதல் நோயாளன் போல், மாயத்தால் மீளாத்துயர் தரினும், வித்துவக் கோட்டம்மா? நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே'' என்பது குலசேகராழ்வார் பெருமாள்திருமொழி. புத்ததேவனைப் பிறவிப்பிணி மருத்துவன் என்பது மணிமேகலை. பரத்துவாச முனிவன், இராமபிரானை எதிர் கொண்டு நல்வரவு கூறியதாக முதல் நூலில் கூறப்படவில்லை. இராமபிரானை நாம் மானிடன் என்று கருதினாலும், முக்காலும் உணர்ந்த முனிவர்கள் அவனைப் பரம்பொருளாகவே உணர்ந்தார்கள் என்பது நினைவில் கொள்ளத் தக்கது.

21. பரத்துவாசன் தோற்றமும், இயல்பும்

குடையினன்; நிமிர்கோலன்; குண்டிகையினன்; மூரிச்
சடையினன்; உரிமானின் சருமன்; நல்மரநாரின்
உடையினன்; மயிர் நாலும் உருவினன்; நெறி பேணும்
நடையினன்; மறைநாலும் நடம் நவில்தரு நாவான். (2115)

(நிமிர்-ஓங்கிய / நீண்ட; கோல்-முக்கோல் / திரிதண்டம்; குண்டிகை-கமண்டலம்; மூரி-பெரிய; சருமம்-தோல் / போர்வை; உரி-உரித்த; நாலும்-தொங்கும்; நடை-ஒழுக்கம்; நடம் நவிலுதல்-நடனம் செய்தல்; நெறி-மெய்ம்மை நெறி / முக்தி நெறி)

அப்பரத்துவாச முனிவன் கையில் எப்போதும் குடை வைத்திருப்பவன்; நீண்டு ஓங்கிய முக்கோலை உடையவன்; நீர் நிறைந்த கமண்டலத்தை உடையவன்; பெரிய சடா முடியை உடையவன்; உரித்த மானின் தோலைப் போர்த்துக் கொண்டிருப்பவன்; நல்ல மரத்தின் நாரினால் ஆகிய மரவுரியை ஆடையாக அணிந்தவன்; உரோமம் மழிக்காததால் நீண்டு தொங்கும் உருவத்தை உடையவன்; மெய்ம்மை நெறி முக்தி நெறி ஆகியவற்றை வழுவாது பேணும் தவ ஒழுக்கத்தை

Koviloor Digital Library

உடையவன்; வேதங்கள் நான்கும் நடனம் ஆடும் நாவினை உடையவன். பாடல் முடியவில்லை தொடர்கிறது.

''நூலே கரகம், முக்கோல் மணையே, ஆயும் காலை அந்தணர்க்குரிய'' என்பது தொல்காப்பியம்; ''எறித் தருகதிர் தாங்கி, ஏந்திய குடை நீழல், உரித்து ஆழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்'' என்பது கலித்தொகை; மான் தோல் கிருஷ்ணாஜினம் என வடமொழியில் வழங்கப் பெறும். பரத்துவாச முனிவன் முன்னூறு ஆண்டுகள் பிரம்மச்சரிய விரதம் பூண்டு வசித்தான் என்று வேதங்கள் கூறுகின்றன. நடம் நவில் தரு நாவான் என்பதை இன்று நடமாடும் பலகலைக் கழகம் என்கிறோம்.

22. செந்தழல்புரி செல்வன்; திசைமுகமுனி செவ்வே
தந்தன உயிர்எல்லாம் தன்உயிர் என நல்கும்
அந்தணன்; ''உலகு ஏழும் அமை'' எனின், அமரேசன்
உந்தியின் உதவாமே உதவிடு தொழில் வல்லான். (2116)

(தழல்-எரி; செவ்வே-செவ்வனே / நன்றாக; அமரேசன்-தேவதேவன் / திருமால்; உதவுதல்-படைத்தல் / தோற்றுவித்தல்; நல்குதல்-அருள் செய்தல்)

செம்மையான முத்தீயை வளர்க்கும் செல்வன் எரிஓம்புதலையே தலையாய கடமையாகக் கொண்டவன்; நான்முகன் நேர்மையாகப் படைத்த உயிர் இனங்களையெல்லாம், தன் உயிர் எனக் கருதி அருள் செய்யும் தண்ணளி உடையவன்; '' ஏழு உலகங்களையும் அமைத்திடுக'' என்று கூறினால் தேவதேவனான திருமாலின் நாபிக் கமலத்தின் உதவியின்றியே, தானே படைத்திடும் தொழில் ஆற்றல் பெற்றவன்.

செந்தழல் என்பது முத்தீயைக் குறிக்கும். முத்தீ என்பன ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினியம் என்பனவாம். தழல் புரிதல் எரிஓம்புதல் என்பதுவாம். திசைமுகமுனி என்பது நான்கு திசைகளிலும் நான்கு முகங்களைக் கொண்ட நான்முகனைக் குறிக்கும். அமரேசன் என்பது அமரர்க்கு ஈசன் என்று தேவதேவனாகிய திருமாலைக் குறிக்கும். எனவே பரத்துவாச முனிவனின், ஒழுக்க நெறி, கருணை நெறி, ஆற்றல் மிகுதி முதலியன குறிக்கப் பெற்றன. ''அந்தணர் என்போர் அறவோர்; மற்று எவ்வுயிர்க்கும் செந்தணமை பூண்டு ஒழுகலான்'' என்பது குறள் 30. முதலில் திருமால் தன் சங்கற்பத்தால் உந்தித் தாமரையில் உலகங்களைத் தோற்றுவிக்க, பின்னர், சராசரங்களைச் செம்மையாகப் படைக்கும் தொழிலை ஏற்றுக் கொண்டவன் பிரமன் என்பது நூற்கொள்கை. பரத்துவாசன் பிரமனைப் போலன்றித் தானே உலகங்களைப் படைக்கும் ஆற்றல் பெற்றவன் என்பதை உணர்த்தினார். எனவே பரத்துவாசன் பிரமனைக் காட்டிலும் ஆற்றல் மிக்கவன் என்பதும், திருமாலை ஒத்தவன் என்பதும் புலப்படும். அந்தணர்களை ''முத்தீச் செல்வத்து இரு பிறப்பாளர்'' என்று திருமுருகாற்றுப்படை கூறுவதும் நோக்கத்தக்கது.

Koviloor Digital Library

23. முனிவன் இராமனைக் கண்டு வருந்துதல்

அம்முனி வரலோடும், அழகனும் மலர்தூவி
மும்முறை தொழுதான்; அம்முதல்வனும் எதிர்புல்லி,
''இம்முறை உருவோ நான் காண்குவது?'' எனஉள்ளம்
விம்மினன்; இழி கண்ணீர் விழிவழி உக நின்றான். (2117)

(புல்லி-தழுவி; உரு-வடிவம்; விம்மி-வருந்தி; இழி-புல்லிய; தூவி-அருச்சித்து)

அத்தகைய பரத்துவாச முனிவன் இராமனை எதிர்கொள்ள வந்ததும், அழகு மிக்கவனாகிய இராமபிரானும் மலர்களைத் தூவி அர்ச்சித்து அம்முனிவனை மூன்று முறை வலம் வந்து வணங்கினான்; முதன்மையான அம்முனிவனும் அவனை எடுத்துத் தழுவி, ''இத்தகைய வடிவத்தையோ நான் காண வேண்டும்?'' என்று உள்ளம் வருந்தினான்; கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் சொரிய நின்றான்.

பரத்துவாசனுக்குத் தவத்தால் அமைந்த சிறப்புக் கருதி முதல்வன் என்றார். பொன் மகுடமும், பொன்னாபரணங்களும், பொன்னாடையும் கொண்டு விளங்கும் அரசக் கோலத்தைத் தவிர்த்து, சடை முடியும், மரவுரியும், மான் தோலும் கொண்ட துறவிக் கோலத்திலா காண வேண்டும்? என்பதைத் தான், ''இம்முறை உருவோ நான் காண்குவது?'' என்றார். முனிவனானாலும் வருந்திக் கண்ணீர் உக நின்றான் என்பது ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்''? என்ற வள்ளுவனின் குறளை நினைவு படுத்தும். உயர்ந்தோரையும், கடவுளரையும், மும்முறை வலம் வந்து தொழுதல் முறை; வணங்கியவரை எடுத்துத் தழுவுதல் உயர்ந்தோர்க்கு உரிய பண்பு.

24. முனிவன் காரணம் கேட்டல்

''அகல்இடம் நெடிது ஆளும் அமைதியை, அதுதீரப்
புகலிடம் எமதாகும் புரையிடை, இதுநாளில்,
தகவுஇல் தவவேடம் தழுவினை வருவான் என்?
இகல்அடு சிலைவீர! இளையவனோடும்?'' என்றான். (2118)

(இகல்-பகைவர்; அடுத்தல்-அழித்தல்; அமைதி-நிறைவுடைமை; தகவுஇல்-பொருத்தம் இல்லாத; வருவான்-வருவதற்கு; தீர்தல்-நீங்குதல்; புரை-காடு / காட்டிடம் / குகை)

''பகைவர்களை அழிக்கின்ற விற்படையை யுடைய வீரனே! பரந்து அகன்ற இடமாகிய பூமியை நீண்ட காலம் ஆளுகின்ற நிறைவுடையவன் நீ; ஆனால் அதைத் தவிர்த்து, எம் போன்ற முனிவர்களின் புகலிடமாகிய குகைகள் நிறைந்த காட்டிடத்திற்கு, இந்த இளமைப் பருவத்திலேயே, உனக்குப் பொருந்தாத தவக் கோலத்தை ஏற்றுக் கொண்டு, இளையவனும்

Koviloor Digital Library

கூடவரும்படியான காரணம் என்ன''? என்று பரத்துவாச முனிவன் இராமபிரானை நோக்கிக் கேட்டான்.

நெடிது ஆளும் அமைதி என்பது அவன் இளமைப் பருவத்தினன், இன்னும் நீண்ட காலம் ஆட்சி செய்வதற்கு ஆற்றலும், தகுதியும், உரிமையும் ஆகிய எல்லா நிறைவும், உடையவன் என்பதைக் குறிக்கும். இது நாளில் என்பது இந்த இளமைப் பருவத்திலேயே என்பதைக் குறிக்கும் முதுமையடைந்தால் அரசுப் பொறுப்பை இளையவர்களிடம் அளித்துவிட்டுத் தவம் மேற்கொள்ளுதற்காகக் காட்டிடம் அடைவது சூரிய குல முன்னோர்கள் வழக்கம். ஆனால் நீ அத்தகைய முழுமையடையாமல், இத்தகைய இளமைப்பருவத்திலேயே வனம் புகுந்தாயே என்பதைக் குறிப்பதாம். இந்தத் தவக் கோலம் உனக்குத் தகாதது; இதை ஏன் தழுவினை? என்று வினவினன் என்பதாம்.

25. முனிவன் வருந்துதல்

உற்றுள பொருள் எல்லாம் உணர்வுற உரைசெய்தான்;
நற்றவமுனி, ''அந்தோ! விதிதரும் நவை'' என்பான்;
''இற்றது, செயல்உண்டோ? இனி'' என இடர் கொண்டான்;
''பெற்றிலள் தவம் அந்தோ பெரும் நிலமகள்'' என்றான். (2119)

(உற்றுள-நிகழ்ந்த; பொருள்-செயல் / காரியம்; விதி-ஊழ்வினை; நவை-தீங்கு; இற்றது-இத்தகையது / முடிந்து விட்டது; தவம்-பேறு / பாக்கியம்)

இதுவரை நிகழ்ந்த காரியங்கள் எல்லாவற்றையும், முனிவன் புரிந்துகொள்ளும் வண்ணம் இராமன் விளக்கமாக எடுத்துரைத்தான்; அதைக் கேட்ட நல்ல தவசியான பரத்துவாச முனிவனும் ''ஐயோ! ஊழ்வினையால் நேர்ந்த தீங்கு இது என்றும், எல்லாமே முடிந்து விட்டதே. அதை மாற்றுவதற்குரிய காரியம் வேறு ஒன்றும் இல்லையே!'' என்றும் பெருந்துயரம் கொண்டான். ''பெருமைக்குரிய பூமாதேவி, இராமபிரானை அரசனாகப் பெறுவதற்கு உரிய தவப்பேறு பெற்றிலள் போலும்'' என்றான்.

''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்பது சிலப்பதிகாரம். வசிட்டனே முன்பு ''ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?'' என்று கூறியதும் இராமனே முன்பு இலக்குவனிடம் ''மைந்த! விதியின் பிழை'' என்று கூறியதும் நினைவு கூரத்தகும்.

26. முனிவன் மீண்டும் வினவுதல்

''துப்புஉறு துவர்வாயின் தூமொழி இவளோடும்
அப்பு உறு கடல் ஞாலம் ஆளுதி கடிது'' என்னா
ஒப்புஅறும் மகன் உன்னை ''உயர் வனம் உற ஏகு'' என்று
எப்பரிசு உயிர் உய்ந்தான் என்துணை அவன்?'' என்றான். (2120)

Koviloor Digital Library

(துணையவன்-நட்பினன்; துப்பு-பவழம்; உறு-போன்ற; துவர்-சிவந்த; அப்பு-நீர்; உறு-நிறைந்த; உயர்-ஓங்கிய; பரிசு-தன்மை; உய்த்தல்-தாங்கியிருத்தல்)

''என்னுடைய நண்பனான தசரதன் ஒப்பற்ற மகனாகிய உன்னை, பவழம் போன்ற சிவந்த வாயில் தூய இனிய மொழிகளை உடைய சீதாதேவியோடு, நீர் நிறைந்த கடல்களால் சூழப்பெற்ற இந்நிலவுலகு முழுவதையும் விரைவாக ஆட்சி செய்வாயாக என்று முன்னர் கூறிவிட்டுப் பின்னர் அதே வாயினால், மரங்கள் ஓங்கிவளர்ந்துள்ள வனம் புகுவாயாக என்று ஆணையிட்ட பின்பும் எவ்வாறு உயிர் வாழ்ந்து கொண்டிருந்தான்?'' என்று முனிவன் கேட்டான்.

முனிவன் தசரதனை என் துணையவன் என்று கூறுவதனால் முனிவனுக்கும் தசரதனுக்கும் முன்பே தொடர்பு இருந்திருக்கிறது என்பதும். முனிவன் தசரதனது குணநலப் பண்புகளையும், இராமன் முதலான அவன் குடும்பத்தினரையும் நன்கு அறிந்திருந்தான் என்பதும் புலனாகிறது.

27. ''அல்லலும் உள, இன்பம் அணுகலும் உள அன்றோ?
நல்லவும் உள, செய்யும் நவைகளும் உள அன்றோ!
இல்லை ஓர் பயன் நான் இன்று இடர் உறும் இதின்'' என்னாப்
புல்லினன், உடனே கொண்டு இனிது உறை புரை புக்கான். (2121)

(அணுகல்-அடைதல்; நவை-தீங்கு; புல்லி தழுவி; புரை-பன்னசாலை / ஆசிரமம்)

''ஒவ்வொருவர் செய்யும் நல்ல வினைகளுக்கேற்ப இன்பமும், தீய வினைகளுக்கு ஏற்பத் துன்பமும் மாறி மாறி வருதல் இயற்கை தானே? இப்பொழுது உனக்கு ஏற்பட்டிருக்கும் இத்துன்பம் கருதி நான் துயரப்படுவதில் பொருள் ஏதும் இல்லை'' என்று பரத்துவாசன் இராமபிரானைநோக்கிக்கூறி அவனை எடுத்துத்தழுவி, உடன்அழைத்துக் கொண்டு, தான் இனிதாக வாழும் ஆசிரமத்துக்குள் சென்றான்.

உலகத்தில் எல்லோரும் நல்வினை, தீவினை என்ற இரண்டையும் செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற செயல்களுக்கு ஏற்ப அவர்களுக்கு விதிப்படி இன்பம், துன்பம், புண்ணியம், பாவம் என்பன மாறி மாறி வரத்தான் செய்யும். இதுதான் உலக நியதி. எனவே இப்பொழுது இராமனுக்கு வந்திருக்கும் இவ்விடர் பற்றி நான்வருந்துவதில் பயனேதும் இல்லை என்று கருதினான் முனிவன் என்க.

28. முனிவன் விருந்து படைத்தல்

புக்கு, உறைவிடம் நல்கி, பூசனை முறை பேணி,
தக்கன கனிகாயும் தந்து, உரைதரும் அன்பால்
தொக்க நல்முறை கூறி, தூயவன் உயிர் போலும்
மக்களின் அருள் உற்றான்; மைந்தரும் மகிழ்வுற்றார். (2122)

Koviloor Digital Library

(உறைவிடம்-தங்குமிடம்; பேணுதல்-உபசரித்தல்; உரைதருதல்-பாராட்டுதல் / புகழ்தல்; தொக்க-தொகுதியாக / நிறைந்த; நன்முறை-நல்ல ஒழுகலாறு)

தூயவனாகிய பரத்துவாச முனிவன், அவர்களை அழைத்துக் கொண்டு தமது ஆசிரமத்தில் புகுந்து, அவர்கள் தங்குவதற்கு நல்ல இடம் அளித்து, விருந்தினர்க்குச் செய்ய வேண்டிய உபசாரங்கள், பூசனை முதலியவற்றை முறையாகச் செய்து, அவர்கள் உண்பதற்குத் தகுந்தனவான காய் கனிகளையும் கொடுத்து, புகழ்ந்து கூறப்படும் அன்பினால், நிறைந்த நல்ல ஒழுக்க நெறிகளைக் கூறி, உயிர் போன்றவர்களான அந்த மக்களுக்குக் கருணை பாராட்டினான்; அதனைக் கண்டு இராம இலக்குவ சீதை முதலியோர் மிகவும் மகிழ்ச்சியுற்றனர்.

ஒரு தந்தை தன் மக்களிடம் காட்டும் அன்பினைப் போல அருள் காட்டினான் என்பதாம்.

29. தன்னுடன் தங்குமாறு முனிவன் வேண்டுதல்

வைகினர்; கதிர் நாறும் அளவையின் மறையோனும்,
''உய்குவென் இவனோடு யாம் உடன் உறைதலின்'' என்பான்
செய்தனன் இனிது எல்லாம், செல்வனை முகம் முன்னாக்
கொய்குல மலர் மார்ப! கூறுவது உளது'' என்றான். (2123)

(வைகுதல்-தங்குதல்; நாறுதல்-தோன்றுதல்; கதிர்-சூரியன்; குலம்-சிறந்த; உய்குதல்-நற்கதி பெறுதல்; முன்னா-முன்னி / நோக்கி /கருதி)

அவ்வாறு அவர்கள் மூவரும் பரத்துவாச முனிவன் ஆசிரமத்தில் அன்று இரவு தங்கினர்; வைகறைப்போதில் சூரியன் தோன்றும் நேரத்தில் வேதவித்தாகிய பரத்துவாச முனிவனும், ''இராமபிரானோடு சேர்ந்து தங்கியிருந்தால் நானும் நற்கதி அடைவேன்'' என்று கருதியவனாய், அவர்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடியன எல்லாம் நிறைவேற்றி, இராமபிரானின் முகத்தை நோக்கி, ''கொய்யப்பட்ட மலர்களைக் கொண்டு செய்த மாலைகளை அணிந்த மார்பை உடையவனே! நான் உன்னிடம் கூற வேண்டுவது ஒன்று இருக்கிறது'' என்றான்.

முனிவன், இராமபிரான் தன்னுடன் தங்கியிருந்தால் தனக்கும் அவர்களுக்கும் நன்மையாகும் என்று கருதினான் என்பதாம்.

30. காரணங்கள் கூறுதல்

''நிறையும், நீர்மலர், நெடுங்கனி, கிழங்கு, காய் கிடந்த;
குறையும் தீயவை; தூயவை குறைவு இல; எம்மோடு
உறையும் இவ்வழி, ஒருங்கினில் உயர்தவம் முயல்வார்க்கு
இறையும் ஈதுஅலாது, இனியது ஓர் இடம் அரிது; இன்னும்'' (2124)

Koviloor Digital Library

(நெடும்-அளவற்ற; இறையும்-ஒன்றும் /சிறிதும்; அரிது-இல்லை) குளகப்பாடல்.

''இங்கே நீரும், மலர்களும், நிறைந்திருக்கின்றன; அளவற்ற கனிகளும், கிழங்குகளும், காய்களும் கிடைக்கின்றன; இங்கே தங்கியிருந்தால் தீயவையான பாவங்கள் குறையும், தேயும், தூயவையான புண்ணியங்கள் மேன்மேலும் மிகும்; குறைவுபடாது; எங்களோடு இங்கே தங்குவீர்களாக! ஒருசேர உயர்ந்த தவம் செய்ய முயல்கின்றவர்களுக்கு, இதைவிடச் சிறந்த ஓர் நல்ல சூழல் உள்ள இடம் வேறு இல்லை. மேலும், பாடல் முடியவில்லை, தொடர்கிறது.

தக்க காரணங்கள் காட்டி இராமபிரானை அங்கேயே தங்கித் தவமியற்றும்படி பரத்துவாச முனிவன் வேண்டினான் என்பதாம். தவம் செய்வார்க்கு நீரும் மலர்களும், உண்ண உணவும் தவம் இயற்றுதற்கு அருமையான அமைதியான சூழ்நிலையும் வேண்டும். அவையெல்லாம் இங்கே அமைந்திருக்கின்றன எனவே இது மிகச் சிறந்த இடம். இதைவிட வேறு ஓர் நல்ல இடம் கிடைப்பது அரிது என்றார் என்க.

31. கங்கையாளோடு கரியவள், நாமகள் கலந்த
சங்கம்; ஆதலின் பிரியலென்; தாமரைச் செங்கண்
அங்கண் நாயக! அயனுக்கும் அரும்பெறல் தீர்த்தம்
எங்கள் போலியர் தரத்தது அன்று; இருத்தி ஈண்டு'' என்றான். (2125)

(கண்-கண்ணோட்டமுமாம்; கரியவள்-யமுனை; நாமகள்-சரசுவதி; சங்கம்-சங்கமம் / கூடுமிடம் / முக்கூடல்; தரத்தது-நிலைமை; கலந்த-கூடுகின்ற; அயன்-பிரமன்)

செந்தாமரை மலர் போன்ற கண்களையும் கண்களுக்கு அணிகலமாகிய அழகிய கண்ணோட்டத்தையும் உடைய தலைவனே! கங்கை நதியோடு கருமை நிறம் பொருந்திய யமுனை நதியும் நாமகளான சரசுவதியின் பெயரையுடைய சரசுவதி நதியும் கூடும் முக்கூடல் சங்கமத்துறை ஆகும் இந்த இடம். இந்தப் புண்ணிய தீர்த்தம் பிரமனுக்கும் கிடைப்பதற்கு அரிதானது; எங்களைப் போன்ற தவசியர்களுக்கும் இதுபோன்ற தீர்த்தமும், இடமும் கிடைப்பது எளிதானது அல்ல; அதனால்தான் இந்த இடத்தை விட்டு நீங்கிப் போகாமல் இங்கேயே தங்கியிருக்கிறேன். எனவே நீங்களும் இங்கேயே தங்கித் தவம் இயற்றுங்கள்'' என்று கூறி முடித்தான்.

பொதுவாக நதிகளைப் பெண்களாகக் கூறுவது மரபு. எனவேதான் கங்கையாள், கரியவள், நாமகள் என்று பெண்பாலால் குறிப்பித்தார். கரிய நிறமுடைமையால் யமுனை கரியவள் எனப்பட்டாள். இம்மூன்று நதிகளும் ஒன்று கலக்கும் நீர்த்துறை திரிவேணி சங்கமம் என்று வழங்கப்படுகிறது. முக்கூடல் என்பது தமிழாக்கம். இந்த இடம் பிரயாகை என்றும் இப்பொழுது அலகாபாத் என்றும் வழங்கப்படுகிறது. தலச்சிறப்பும், தீர்த்தப் பெருமையும் உரைக்கப்பட்டன. கண்ணோட்டம்

Koviloor Digital Library

என்பது தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறுவனவற்றை மறுக்க மாட்டாமை என்பதாம். சரசுவதி நதி கட்புலனுக்கு எட்டாமல் பூமியினுள் அந்தர்யாமியாகிப் பாய்கின்றது என்று கூறுவர்.

32. இராமபிரான் மறுமொழி

பூண்ட மாதவன் அம்மொழி விரும்பினன் புகல
''நீண்டது அன்று இது நிறைபுனல் நாட்டுக்கு நடுஆம்;
மாண்டசிந்தைய! இவ்வழி வைகுவென் என்றால்
ஈண்ட யாவரும் நெருங்குவர்'' என்றனன் இராமன். (2126)

(பூண்ட-மேற்கொண்ட; மாண்ட-மாட்சிமைப்பட்ட; புனல்-நீர்வளம்; நீண்டது-நெடுந்தூரத்தது; நடு-இடைப்பட்டது; ஈண்ட-விரைவாக)

சிறந்த பெருந்தவத்தை மேற்கொண்ட பரத்துவாச முனிவன் ''இருத்திர் ஈண்டு'' என்று அன்புடன் கூறிய மொழிகளைக் கேட்ட இராமபிரான், முனிவனை நோக்கி, ''நீர்வளம் நிறைந்த கோசல நாட்டுக்கு, இந்த இடம் நீண்ட தூரத்தில் இல்லை; இரண்டுக்கும் நடுப்பட்ட இடத்தில் உள்ளது. எனவே மாட்சிமைப்பட்ட மனக்கருத்தை உடைய முனிவனே! நான் இங்கேயே நீண்ட நாள் தங்கியிருப்பேன் என்றால் அயோத்தி நகர மக்கள் அனைவரும் விரைவாகவும், அடிக்கடியும் இங்கே வந்து கூடிவிடுவார்கள்'' என்றான்.

தன்னுடன் கூடவே வந்த மக்கள் கொண்டுள்ள மனக்கருத்தை இராமன் அறிவான். ஆதலின் இங்கு தங்குதல் என்னுடைய தவ ஒழுக்கத்திற்கு மட்டுமல்லாமல், உங்களைப் போன்ற பெருந் தவசியர்களின் தவ ஒழுக்கத்திற்கும் இடையூறு விளைவிப்பதாகும். எனவே இதை விடத் தூரமாக உள்ள ஓர் இடத்தைக் கூறுங்கள் எனக் குறிப்புணர்த்தினான் என்க. கோசல நாடு சரயு, கங்கை முதலிய நதிகள் பாய்வதால் நீர்வளம் நிறைந்தது எனவே நிறைபுனல் நாடு என்றான்.

33. பரத்துவாசன் சித்திர கூடம் பற்றிச் சொல்லுதல்

''ஆவது உள்ளதே ஐய! கேள்; ஐயிரண்டு அமைந்த
காவதப் பொழிற்கு அப்புறம் கழிந்தபின் காண்டீ!
மேவுகாதலின் வைகுதி, விண்ணினும் இனிதால்
தேவர் கைதொழும் சித்திரகூடம் என்று உளதால். (2127)

(ஐயிரண்டு-பத்து; காவதம்-காதம்; காதலின்-விருப்பொடு; ஆவது-நோவது; பொழில்-வனம்; காதம்-10 மைல் அல்லது 16 கிலோ மீட்டர்)

பரத்துவாச முனிவன் இராமனை நோக்கி, ''தலைவ! நீ கூறியபடி அயோத்தி நகர மக்கள் இங்கு வந்து உனக்கும் முனிவர்களுக்கும் இடையூறு செய்வர் என்பது நேரக்கூடியதே. எனவே நான் சொல்லுவதைக் கேட்பாயாக! இந்தச் சோலை 10 காத தூரம் உள்ளது. இதனைத் தாண்டிச்

Koviloor Digital Library

சென்றாயானால் ஒரு மலையைக் காண்பாய். அது சித்திரகூடம் என்ற பெருமை மிக்க மலை. விண்ணுலகத்தினும் இனியதென்று தேவர்களாலும் வணங்கிப் போற்றப் படக்கூடிய மலையாகும். அங்கே விருப்பத்துடன் தங்கியிருப்பீர்களாக! என்றான்.

பரத்துவாசன் ஆசிரமத்திலிருந்து சித்திரகூடம் பத்து காத தூரம் உள்ளது என்பது தெரிகிறது. வான்மீகம் 10 குரோசதூரம் எனப் பேசுகிறது. (குரோசம் என்பது இந்தக் கால நீட்டல் அளவையில் எவ்வளவு என்பது தெரியவில்லை)

34. இராமன் முதலியோர்விடைபெற்று யமுனைக்கரை அடைதல்

என்று காதலின் ஏயினன்; அடிதொழுது ஏகிக்
கொன்றைஅம் குழல் கோவலர் முல்லையும் குறுகிச்
சென்று, செங்கதிர்ச் செல்வனும் நடுஉறச் சிறுமான்
கன்று கரையுடைக் காளிந்தி கண்டார். (2128)

(ஏயினன்-விடைகொடுத்தான்; கோவலர்-ஆயர்கள்; நடுஉற-உச்சியை அடைய; உகள்தல்-துள்ளுதல்; காளிந்தி-யமுனை; கருமைநிறம் உடையது என்பதால் காளிந்தி, யமுனைக்குக் காரணப் பெயர்)

என்று கூறி பரத்துவாச முனிவன் இராமன் முதலியோர்க்கு விடை கொடுத்து அனுப்பினன். அவர்களும் முனிவனது திருவடிகளை வணங்கிச் சென்று, கொன்றைப் பழங்களால் ஆன புல்லாங்குழலைக் கொண்டிருந்த அம்முல்லை நிலத்து ஆயர்கள்தம்மை அடைந்து, மீண்டும் நடந்து சென்று சூரியன் உச்சிப் போதில் வர, சிறிய மான் கன்றுகள் நின்று துள்ளி விளையாடும் யமுனை நதிக்கரையைக் கண்டனர்.

இராமன் முதலியோர் வைகறையில் பரத்துவாசன் ஆசிரமத்திலிருந்து கிளம்பி, வழியில் முல்லை நிலத்து ஆயர்களைக் கண்டு, உச்சிப்போதில் யமுனை நதிக்கரையை அடைந்தனர் என்பதாம். கோசல நாடு மருத நிலம்; பரத்துவாசன் ஆசிரமும் சித்திர கூடமும் முல்லை நிலம் என்பதாம். கொன்றைப் பழத்தைக் குடைந்து துளையிட்டுக் குழல் அமைத்து ஊதுவர் என்க.

35. யமுனையைக் கடக்க ஆலோசித்தல்

ஆறுகண்டனர் அகம் மகிழ்ந்து இறைஞ்சினர்; அறிந்து
நீறுதோய் மணி மேனியர், நெடும்புனல் படிந்தார்;
ஊறும் மென்கனி கிழங்கினோடு உண்டு நீர் உண்டார்;
''ஏறி ஏகுவது எங்ஙனம்?'' என்றலும், இளையோன். (2129)

Koviloor Digital Library

(நீறு-புழுதி; மணி-அழகிய; படிதல்-நீராடுதல்; ஊறும்-சுவைமிக்க; ஏறுதல்-அடைதல்) குளகப்பாடல்

வழிநடந்ததால் புழுதி படிந்திருந்த மேனியை உடைய அவர்கள் இப்பொழுது யமுனை ஆற்றை நன்கு கண்டு அகம் மிக மகிழ்ந்து அதைத் தொழுது வணங்கினர். நாட்கடன்களை முடித்து, யமுனையில் நீராடி, சுவைமிக்க மெல்லிய கனிகள், கிழங்குகள் முதலியவற்றை உண்டு யமுனையின் தூய நீரைப்பருகி இளைப்பாறியபின், இராமன் ''இந்நதியைக் கடந்து செல்லுதல் எவ்வாறு?'' எனக் கேட்க, இலக்குவனும், பாடல் முடியவில்லை, தொடர்கிறது.

36. இலக்குவன் தெப்பமமைத்து நீந்திக் கடத்தல்

வாங்கு வெம்கழை துணித்தனன், மாணையின் கொடியால்
ஓங்கு தெப்பம் ஒன்று அமைத்து, அதில் உம்பரின் உலம்போல்
வீங்குதோள் அண்ணல் தேவியோடு இனிது வீற்றிருப்ப
நீங்கினான் அந்த நெடுநதி இருகையால் நீந்தி. (2130)

(வாங்கு-வளைந்த; வெம்-வலிய ; கழை-மூங்கில்; துணித்தல்-வெட்டுதல்; உலம்-திரண்ட கல்; வீங்கு-பெருத்த; நீங்குதல்-கடத்தல்; மாணை-ஒருவகைக் கொடி; உம்பர்-மேலே; நெடு-ஆழமான / நீண்ட)

வளைந்த வலிய மூங்கில் கழிகளை வெட்டி, மாணை என்னும் ஒருவகைக் கொடியால் அவற்றைப் பிணைத்துக் கட்டி உயர்ந்த தெப்பம் ஒன்றை அமைத்து, அதன்மேல், திரண்ட கல்லைப் போன்ற பருத்த தோள்களையுடைய இராமபிரான் தன் துணைவி சீதாதேவியோடு மகிழ்ச்சியாக எழுந்தருளியிருக்க, அந்தத் தெப்பத்தைத் தள்ளிக் கொண்டே நீண்ட ஆழமான யமுனை நதியைத் தன் இரு கைகளாலும் நீந்திக் கடந்தான் இலக்குவன்.

இராமன் இலக்குவன் இருவருமே தெப்பத்தைக் கட்டினர் என்றும், அவர்கள் இருவரோடு இலக்குவனும் அமர்ந்திருக்க, இராம இலக்குவர் இருவருமே அதனைச் செலுத்திக் கொண்டு நதியைக் கடந்தனர் என்றும் வான்மீகம் கூறும். ஒரு அரசகுமாரன் தெப்பம் கட்டும் கலையையும் அறிந்திருந்தான் என்பது புலனாகிறது.

37. இலக்குவன் நீந்தியதால் ஏற்பட்ட விளைவுகள்

ஆலைபாய் வயல் அயோத்தியர் ஆண் தகைக்கு இளையான்
மாலைமால் வரைத் தோள் எனும் மந்தரம் திரியக்
காலை வேலையின் உற்றது கழிந்த நீர்; கடிதின்
மேலைவேலையில் பாய்ந்தது மீண்ட நீர் வெள்ளம். (2131)

Koviloor Digital Library

(ஆலை-கரும்பாலைகள்; ஆண்தகை-தலைவன்; வேலை-கடல்; காலைவேலை-கிழக்குக்கடல்; மாலைவேலை-மேற்குக் கடல்; திரிதல்-சுழலுதல்; கழிந்த-எஞ்சிய)

கரும்பாலைகளில் இருந்து பாய்கின்ற கருப்பஞ்சாறு மிக்க அயோத்தி நகரில் உள்ளார்க்கெல்லாம் தலைவனாகிய இராமனுக்கு இளையவனான இலக்குவன், தனது ம..லை அணிந்த மலை போன்ற தோள் என்னும் மந்தர மலை சுழன்று திரிந்ததால் தள்ளப்பட்ட யமுனை நதி நீர், சூரியன் காலை வேளையில் உதிக்கின்ற கிழக்குக்கடலில் போய்ச் சேர்ந்தது. எஞ்சிய, திரும்பி வந்த வெள்ளம், விரைவாகச் சென்று மேலைக் கடலில் பாய்ந்தது.

இலக்குவன் தெப்பத்தோடு ஆற்றின் குறுக்கே நீந்திச் சென்றதனால், மேற்கே இருந்து வரும் நீர்ப்பெருக்கு தடைப்பட்டுத் திரும்பி மேலைக்கடலை அடைந்தது. எஞ்சிய நீர் கீழ்க்கடலை அடைந்தது என்பதும் ஒன்றாம். கைகளால் தள்ளிய நீர் கீழ்க்கடலை அடைந்தது; தெப்பத்தால் விடுபட்ட நீர் மேலைக்கடலை அடைந்தது.

38. பாலைவனம் புகுதல்

அனையர் அப்புனல் ஏறினர்; அக்கரை அணைந்தார்;
புனையும் வற்கலைப் பொற்பினர், நெடுநெறி போனார்;
சினையும், மூலமும் முகடும் வெந்து, இருநிலம் தீய்ந்து
நினையும் நெஞ்சமும் சுடுவது ஓர் நெடுஞ்சுரம் நேர்ந்தார். (2132)

(புனையும்-அணிந்துள்ள; வற்கலை-மரவுரி; பொற்பு-அழகு; புனல்-நீர் / நதி; அணைதல்-அடைதல்; சினை-கிளைகள்; மூலம்-வேர்; இரு -பெரிய; தீய்ந்து-கொதிப்புற்று; சுரம்-பாலை நிலம்; நேர்தல்-அணுகுதல் / அடைதல்; முகடு-உச்சி; நிலம்-தரை)

மரவுரி அணிந்திருந்தாலும் அழகுமிகப் பெற்றவர்களான மூவரும் யமுனை நதியைக் கடந்தனர். தெற்குக் கரையை அடைந்தனர். பின்னர் நீண்டதூரம் காட்டுவழியில் நடந்தே சென்றனர். பின்னர் மரங்களின் கிளைகளும், வேரும், உச்சியும் வெந்து போய், நிலமே ஈரப்பசையற்றுத் தீய்ந்து கருகிப் போயிருந்த, நினைப்பவர் நெஞ்சங்கள் கூடச் சுடுவது போன்றதாகிய ஒரு நீண்ட அகன்ற பாலை நிலத்தை அடைந்தார்கள்.

பால காண்டத்தில் பாலை நிலத்தைப் பற்றி மிக விளக்கமாக விவரித்துள்ளதும், இங்கு நினைவு கூரத்தக்கது. காணும் கண்களையும், பேசும் நாவினையும் நினையும் நெஞ்சினையும் சுடும் எனப்பட்டது.

39. இராமன் நினைவால் பசுமையாக மாறிய பாலை நிலம்

"நீங்கல் ஆற்றலள் சனகி என்று அண்ணலும் நினைந்தான்;
ஓங்கு வெய்யவன், உடுபதி எனக் கதிர் உகுத்தான்;
தாங்கு வெம் கடத்து உலவைகள், தழைகொண்டு தழைத்த;
பாங்கு வெம்கனல் பங்கய வனங்களாய்ப் பரந்த; (2133)

Koviloor Digital Library

(நீங்கல்-கடந்து செல்லுதல்; உடுபதி-சந்திரன்; உகுத்தல்-பொழிதல்; கடம்-கரம் / பாலைநிலம்; உலவை-பட்டமரம்; பங்கயம்-தாமரை; உடு-நாள் நட்சத்திரங்கள் ; உடுபதி-நட்சத்திரங்களுக்குத் தலைவன் சந்திரன்; தாங்கு-ஏற்ற; பாங்கு-இடம் / தன்மை)

சீதாதேவி இப்பாலைவனத்தைக் கடக்கும் ஆற்றல் அற்றவள் என்று இராமபிரான் நினைத்த அளவிலேயே உயர்ந்த வெப்பக் கதிர்களை வீசி நின்ற சூரியன், விண்மீன்களுக்குத் தலைவனாகிய சந்திரனைப் போல தண்ணிய குளிர்ந்த கிரணங்களை வீசத் தொடங்கினான்; வெப்பமுள்ள பாலை நிலத்தில் வளர்ந்திருந்த பட்டுப்போன உலர்ந்த மரங்கள் எல்லாம் இலை, தழை, கிளைகள் பெற்று தழைத்து நின்றன; வெப்பமான சுடுகதிர்களைப் பரப்பிக் கொண்டு நெருப்புப் பரவியிருந்த பாலைவனம், தாமரைக் காடாகப் பொலிந்து விளங்கியது.

இங்கே, பாலகாண்டத்துள், விசுவாமித்திர முனிவன், இராம இலக்குவர்களுக்கு, வழிநடையில் ஏற்படும் களைப்பு, பசி, தாகம் முதலியவற்றைப் போக்குவதற்காகக் கற்பித்த பலை, அதிபலை என்ற இரண்டு மந்திரங்களையும் நினைவிற் கொள்ளுதல் பொருந்தும். அதனால்தான் இப்போது இராமபிரான் நினைத்த அளவிலேயே பாலைவனம் சோலைவனமாகியது என்பதாம்.

40. வறுத்து வித்திய அனையன வல் அயில் பரல்கள்;
பறித்து வித்திய மலர் எனக் குளிர்ந்தன பசைந்த;
இறுத்து எரிந்தன வல்லிகள், இளம்தளிர் ஈன்ற;
கறுத்த வாள் அரவு எயிற்றினூடு அமுது உகக் களித்த; (2134)

(வித்திய-பரப்பிவைத்த; அயில்-கூரிய; பரல்-பருக்கைக் கற்கள்; பசை-ஈரம்; இறுத்து-ஒடிக்கப்பட்டு; எரிந்தன-கரிந்து போன; வல்லி-கொடி; கறுத்த-சினந்த; வாள்-கொடிய; அரா-பாம்பு; எயிறு-பற்கள்; உக-சிந்த)

நெருப்பினால் வறுத்துப் பரப்பிவைக்கப்பட்டது போன்றிருந்த வலிமையான கூர்மையான பருக்கைக் கற்கள் அப்பொழுதுதான் பறித்துப் பரப்பிவைக்கப்பட்ட மலர்கள் போலக் குளிர்ச்சியும், ஈரப்பசை மிகுந்தும் காணப்பட்டன. ஒடிக்கப்பட்டுக் கருகிப் போய் இருந்த கொடிகள், இளமையான தளிர்களைத் தோற்றுவிக்கலாயின. சினம் மிகுந்த கொடிய பாம்புகள் தம் பற்களிலிருந்து நஞ்சுக்குப் பதிலாக அமிழ்தத்தைச் சிந்தி, அதனால் மகிழ்ச்சியுற்று நடமாடின.

பரல்கற்கள் மலரானது; காய்ந்த தீய்ந்த கொடிகள் தளிர் ஈன்றன; பாம்புகள் அமுதத்தைச் சிந்தின; எனப் பாலை, சோலையாகியதைக் கூறினார் என்க.

Koviloor Digital Library

41. குழுமி மேகங்கள் குமுறின; குளிர் துளி கொணர்ந்த;
முழுவில் வேடரும் முனிவரின் முனிகிலர்; உயிரைத்
தழுவி நின்றன பசி இல, பகை இல, தணிந்த;
உழுவையின் முலை, மான் இளங்கன்றுகள் உண்ட. (2135)

(குழுமி-திரண்டு; குமுறின-முழங்கின; துளி-மழைத்துளி / நீர்த்துளி; முழு-குறைவற்ற / நிறைந்த; முனிதல்-சினத்தல்; உழுவை-பெண்புலி; தணிதல்-நிறைதல்)

மேகங்கள் ஒன்று திரண்டு முழங்கி குளிர்ந்த மழைத்துளிகளைப் பொழிவித்தன. குற்றமற்ற நிறைந்த வில்லை உடைய வேடர்களும், முனிவர்களைப் போலக் கோபம் நீங்கிச் சாந்த சொரூபிகளானார்கள். உயிரை விடாது பற்றி நிற்கும் பசி இல்லாது போயிற்று; பகைவர்களே இல்லாது எல்லாமும் நிறைந்திருந்தன; இளமான் கன்றுகள் தங்களுக்குப் பகையான பெண் புலியின் கொங்கைகளிலிருந்து பாலைப் பருகிக் களித்திருந்தன.

பசியும், பிணியும் பகையும் நீங்கி வளம் பெற்று இருத்தல் ஒரு நல்ல நாட்டின் இலக்கணம். அவைகள் இங்கே இப்போது பாலைவனத்திற்கு உடையதாயிற்று.

42. கல்அளைக்கிடந்து, அகடுவெந்து அயர்கின்ற கதழ்பாம்பு
அல்லல் உற்றில; அலை புனல் கிடந்தன அனைய;
வல்லை உற்ற வேய், புற்றொடும் எரிவன, மணிவாழ்
புல் எயிற்று இளங்கன்னியர் தோள் எனப் பொலிந்த; (2136)

(அளை-மலைக்குகை / பொந்து / இடுக்கு; அகடு-வயிறு; வெந்து-கொதித்து; அயர்தல்-சோர்வுறுதல்; கதழ்-சினம்; வல்லை-பெருங்காடு; வேய்-மூங்கில்கள்; புல்-சிறிய)

கல் இடுக்குகளில் தங்கியிருந்த, பசியால் வயிறு வெந்து சோர்வுற்றுத் திரிகின்ற சீறிப்பாயும் பாம்புகள் பசியால் துன்பமுறாது அலைகள் மிகுந்த நீர்ப்பெருக்கில் வாழ்வன போல அமைதியாக மகிழ்ந்திருந்தன. தம்மைப் பற்றியிருக்கும் புற்றுக்களோடு எரிந்துபோகும் தன்மையனவான மூங்கில் பெருங்காடுகள், இப்போது பசுமை நிறைந்து அழகிய முத்துக்கள் போன்ற சிறிய பற்களை உடைய இளமையான கன்னிப் பெண்களின் தோள்கள் போல மென்மையாக ஒளிவீசித் திகழ்ந்தன.

43. படர்ந்து எழுந்த புல், பசுநிறக் கம்பளம் பரப்பிக்
கிடந்த போன்றன; கேகயம் தோகைகள் கிளர
மடந்தைமார் என நாடகம் வயின்தொறும் நவின்ற;
தொடர்ந்து பாணரின் பாங்கு இசை முரன்றன தும்பி. (2137)

Koviloor Digital Library

(படர்ந்த-பரவி வளர்ந்த; கேகயம்-மயில்கள்; வயின்தொறும்-இடங்கள்தோறும்; நவின்ற-நடித்தன; கிளர்த்தல்-விளங்குதல்; முரலுதல்-ஒளிர்தல் / பாடுதல்; பாங்கு-பக்கம்; பாணர்-பாடுவோர்; தும்பி-வண்டுகள்)

தரையில் பரவி வளர்ந்த புற்கள், அங்கே பச்சை நிறக் கம்பளத்தை விரித்து வைத்தாற்போல மெத்தெனக் காட்சியளித்தன. மயில்கள் நாடக மகளிரைப் போலத் தம் தோகைகளை விரித்து எல்லா இடங்களிலும் நாடகம் ஆடின. அதனைத் தொடர்ந்து, பாணர்களைப் போல, வண்டுகள் அருகில் இருந்து இசை ஒலி செய்தன.

பச்சைக் கம்பளம் பரப்பியது போன்ற புற்கள், மயில்கள் நடனமாடுகின்றன; வண்டுகள் ரீங்காரமிட்டு இசைபாடுகின்றன. எனவே பாலைவழி இனிதாக இதம் தந்தது என்பதாம்.

44. எல்லாவற்றிற்கும் காரணம்

காலம் இன்றியும் கனிந்தன கனி, நெடுங்கந்தம்
மூலம் இன்றியும் முகிழ்த்தன நிலன் உற; முழுதும்
கோல மங்கையர் ஒத்தன கொம்பர்கள்; இம்பர்ச்
சீலம் அன்றியும் செய்தவம் வேறும் ஒன்று உளதோ? (2138)

(கந்தம்-கிழங்குகள்; மூலம்-வேர்; முகிழ்த்தல்-தோன்றுதல் ; கோலம்-அழகு / ஒப்பனை; சீலம்-நல்லொழுக்கம்)

தாம் பழுத்தற்குரிய காலம் இல்லாதபோதும் இப்போது, அப்பாலைவனத்தில் பழங்கள் பழுத்துத் தொங்கின; பெரிய கிழங்குகள், வேர்களே இல்லாமல் கூட நிலப்பிரப்பில் தோன்றலாயின. கரிந்து போயிருந்த கொம்புகள் / கொடிகள் இப்போது அலங்கரிக்கப்பட்ட அழகிய பெண்களை ஒத்திருந்தன. எனவே இவ்வுலகத்தில் நல்லொழுக்கத்தைத் தவிர, வேறு செய்யக் கூடிய தவம் என்று ஒன்று தனியாக இருக்கிறதோ? இல்லை.

எல்லாமரங்களும்பழம்தருதல்உண்டு. இங்கேமாறுபட்டகாலத்திலும் பழங்கள்பழுத்துத்தொங்குதற்கும், கோடைவெப்பத்தால்வாடித்தளிரும் இலையும்உதிர்ந்து கருகி நின்ற கொடிகள், இப்போது தளிர்த்துத் தழைத்து அரும்பிப் பூத்துக் குலுங்குவதற்கும் காரணம் சீதையின் நல்லொழுக்க மாகிய கற்புநெறியும், இராம இலக்குவர்களின் நல்லொழுக்கமாகிய சான்றாண்மையுமே என்பது விளக்கப்பட்டது. எனவே சீரிய ஒழுக்கமே எல்லா நலன்களுக்கும் காரணம் என்ற பொதுக்கருத்து வலியுறுத்தப்பட்டது. இராம இலக்குவர்களுக்குப் பாலையைக் கடத்தல் அரிதாகாதது. காரணம் அவர்களிடம் பலை அதிபலை என்ற இரு மந்திரங்களும் இருக்கின்றன. மேலும் இங்கே இராமபிரான் சீதாதேவியின்

Koviloor Digital Library

நிலையையே சிந்திக்கிறான். எனவே இங்கே சீதாதேவியின் கற்பொழுக்கமே மிகுத்துக் கூறப்பட்டது என்று கொள்வது பொருந்தும்.

45. எயினர் தங்குஇடம், இருடிகள் இருப்பிடம் ஏய்ந்த;
வயின் வயின் தொறும் மணி நிறக் கோபங்கள் மலர்ந்த;
பயில் மரம் தொறும் பிரிந்தன பேடையைப் பயிலும்
குயில் இரங்கின; குருந்தம் நின்று அரும்பின முருந்தம். (2139)

(எயினர்-வேடர்கள்; இருடிகள்-முனிவர்கள்; மணி-மாணிக்கம்; கோபங்கள்-இந்திர கோபத்தம்பலப்பூச்சிகள்; மலர்ந்தன-பரவின; பயில்-நெருங்கிய; பயிரும்-தழைக்கும்; இரங்குதல்-ஒலித்தல்; முருந்தம்-மயில் இறகின் அடிக்குருத்து / இளம்தளிர்கள் பயிலும்-அழைக்கும்).

வேடுவர்கள் தங்குகின்ற இடமான சேரிகளும் குறிச்சிகளும், முனிவர்கள் வாழுகின்ற ஆசிரமங்கள் போலத் தூய்மையாக விளங்கின. எல்லா இடங்களிலும் கார்காலம் ஆதலால், மாணிக்கம் போன்ற சிவந்த தம்பலப் பூச்சிகள் பரந்து காணப்பட்டன. நெருங்கியிருந்த மரங்களில் எல்லாம், பெண்குயிலைப் பிரிந்த ஆண்குயிலின் அழைப்பு ஒலி கேட்டன. குருந்த மரக் கூட்டங்கள் மயில் இறகின் அடிக்குருத்துப் போன்ற அரும்புகளைத் தோற்றுவித்தன.

பொதுவாக வேடுவர்கள் வாழுகின்ற இடங்கள் வேட்டைத் தொழிலுக்குத் தேவையான கொலைக் கருவிகளும், வேட்டையாடிய ஊன் முதலியவையும் நிரம்பி முடை நாற்றம் கொண்டிருக்கும். ஆனால் இப்போது அந்த இடம் எல்லாம் முனிவர்களது தவச்சாலைகள் போலத் தூய்மையுடையனவாக மாறி விளங்கின. ஊனுக்குப் பதிலாகக் காய்கனிகளும் கிழங்குகளும், மலர்களின் நறுமணமும் நிரம்பியிருந்தன என்பதாம். குருந்தின் அரும்புக்கு மயில் இறகின் அடிக்குருத்து உவமை. இந்திர கோபம் தம்பலப் பூச்சிகள் எனப்படும். இவை செந்நிறமாக இருக்கும். கார் காலத்தில் மட்டுமே தோன்றும் இயல்புடையன.

46. பாலை வெம்மை நீங்கிக் குளிர்ந்தமை

பந்தம் ஞாட்பு உறுபாசறை பொருள் வயின் பருவம்
தந்த கேள்வரை உயிர் உறத் தழுவினர் பிரிந்த
கந்த ஓதியர் சிந்தையின் கொதித்தது, அக்கழலோர்
வந்தபோது அவர் மனம் எனக் குளிர்ந்தது அவ்வனமே. (2140)

(பந்தம்-தொடர்பு ; ஞாட்பு-போர்; கேள்வர்-கணவர்; கந்தம்-நறுமணம்; ஓதி-கூந்தல்; பாசறை-படைவீடு; தந்த-குறித்த / தெரிவித்த)

தனக்குத் தொடர்புடைய போர்க்களத்தில் அமைத்த படைவீட்டின் பொருட்டோ, அல்லது பொருள் ஈட்டும் பொருட்டோ தலைவரைப்

Koviloor Digital Library

பிரியும் போது தம் உயிர் உறத்தழுவிப் பிரிவு காணும் நறுமணம் மிக்க கூந்தலையுடைய மகளிர் மனம் போலக் கொதித்துக் கொண்டிருந்தது அப்பாலைநிலம்; தாம் மீண்டும் பருவம் குறித்துத் தெரிவித்த கார்காலத்தில் அவ்வீரக்கழலை அணிந்த கணவர்கள் திரும்பி வரும் போது அவர்கள் உள்ளம் அடைகின்ற குளிர்ச்சிபோல இராமஇலக்குவர் சீதை ஆகியோர் வந்தபோது அப்பாலைவனம் மிகக் குளிர்ந்து காணப்பட்டது.

சங்க இலக்கியங்களில் கூறப்படும் போர்வயின் பிரிவு, பொருள்வயின் பிரிவு என்பதைக் கம்பர் இந்தப் படலத்தின் முத்தாய்ப்புப் பாடலாகக் கையாண்டுள்ளார். அவ்வாறு தலைவியைப் பிரிந்து செல்லும் கணவர்கள் தாம் செய்வினை முற்றியும் செய்பொருள் முற்றியும் திரும்பி வரப்போகும் காலத்தையும் தெரிவித்துவிட்டுச் சென்றுவிடுவர். அது பொதுவாகக் கார்காலமாகவே இருக்கும். அவ்வாறு பிரியும்போது உயிர் உறத் தழுவிப் பிரிந்து போனவர்கள் திரும்பி வரும்போது எப்படி மனம் மகிழ்ந்து தண்மையாக இருப்பார்களோ, அவ்வாறு கொதிப்புற்றிருந்த பாலைவனம் இப்போது குளிர்ச்சி உள்ள நிலமாக மாறியது என்கிறான் கவிஞன். பாலைக்குரிய பெரும்போது முதுவேனில். அது இப்போது கார்காலம் போல மாறியது என்பதாம். பாலையின் வெம்மைக்குப் பிரிந்த மகளிரின் உள்ளக் கொதிப்பும், கார்காலக் குளிர்ச்சிக்குக் கூடிய மகளிரின் உள்ளத் தண்மையும் உவமை. பொதுவாக இலங்கியங்களில் வெப்பக் கொடுமையால் முல்லை நிலம் திரிந்து பாலையாவதைக் கூறுவர். ஆனால் இங்கு கம்பன் பாலை திரிந்து முல்லையானதைக் கூறியது ஒரு நயம்.

47. மூவரும் சித்திரகூட மலையைக்காணுதல்

வெளிறு நீங்கிய பாலையை மெல்லெனப் போனார்;
ஒளிறு வான்மதிக் குழவி தன் சூல்வயிற்று உதைப்பப்
பிளிறும் மேகத்தைப் பிடியெனப் பெரும் பனைத்தடக்கை
களிறு நீட்டும் அச்சித்திர கூடத்தைக் கண்டார். (2141)

(வெளிறு-பயனற்ற தன்மை/குற்றம்; ஒளிறுதல்-விளங்குதல்; சூல்-கரு; பிளிறுதல்-முழங்குதல்; பிடி-பெண் யானை; மதிக்குழவி-பிறைச்சந்திரன்)

வெப்பம் என்ற குற்றமும், பயனற்ற தன்மையும் நீங்கிய அந்தப் பாலைவனத்தை, மூவரும் மெதுவாக, இனிமையாகக் கடந்து போனார்கள். விளங்குகின்ற பிறைச்சந்திரன் கர்ப்பம் நிறைந்த வயிற்றில் உதைப்பது போல முழக்கமிடும் மேகத்தைத் தனது பெண் யானை என்று கருதி, ஆண் யானை தனது பனைமரம் போன்ற பெரிய துதிக்கைகளை நீட்டிப் பிடிக்கும் உயரமுள்ள அந்தச் சித்திரகூட மலையை மூவரும் கண்டனர்.

Koviloor Digital Library

பாலை நிலத்திற்கு வெளிறு என்பது அதன் கொடிய வெப்பத்தைக் குறித்தது. பிறைச்சந்திரனும் மேகமும் வானில் இயங்குபவை. அவை அவ்வாறு திரியும்போது ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வது இயல்பு. அப்போது மேகம் முழங்குதலைத் தன் சூல்கொண்ட வயிற்றில் உதைத்தமையால் பிறைச்சந்திரன் வருந்தி முழங்கியதாய்க் கூறினார். அவ்வருத்தத்தைத் தணிவிக்கும் பொருட்டுத் தன் கைகளால் வருடிக் கொடுப்பதற்காகக் களிறு கை நீட்டியதாகக் கூறினார். கால் உதைத்தல் குழவிக்கு இயல்பு. இதனால் அம்மலையின் வளமும் உயரமும் கூறப்பட்டன. அம்மலை மேகமண்டலம் வரை உயர்ந்தது என்பதைக் களிறு கைநீட்டிப் பிடிக்கும் அளவு என்று கூறியது ஒரு நயம். விசித்திரமான சிகரங்களையுடையதால் இம்மலை சித்திரகூடம் எனவழங்கப்பெறுகிறது என்றும் கூறுவது உண்டு.

வனம்புகு படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

௯. சித்திரகூடப் படலம் (56 பாடல்கள்)

பரத்துவாச முனிவன் ஆசிரமத்திலிருந்து விடைபெற்றுப் புறப்பட்ட மூவரும் சித்திரகூட மலையில் தங்கித் தவம் இயற்றுதலைக் கூறும் பகுதி என விரியும். இது 56 பாடல்களைக் கொண்டது.

இப்படலத்துள், சித்திரகூட மலையின் இயற்கை வளங்களை இராமன் சீதைக்குக் காட்டுதலும், அங்கே வாழ்கின்ற தவசியர்கள் இராமபிரானை எதிர்கொண்டு வரவேற்றலும், இராமன் அவர்கள் விருந்தினன் ஆதலும், இலக்குவன் சாலை அமைத்தலும், மூவரும் அதில் தங்குதலும், இராமன் சீதையின் வழிநடை வருத்தத்தையும், இலக்குவன் சாலை அமைக்க நேர்ந்ததையும் கூறி வருந்துதலும், இராமன் நோன்பு நோற்று இனிது இருத்தலும் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராமன் சீதாதேவிக்குச் சித்திரகூட மலைவளம் காட்டுதல் [38 பாடல்கள்]

நினையும் தேவர்க்கும் நமக்கும் ஒத்து, ஒருநெறி நின்ற
அனகன், அம் கணன், ஆயிரம் பெயர் உடை அமலன்,
சனகன்மா மடமயிற்கு அந்தச் சந்தனம் செறிந்த
கனக மால்வரை இயல்பு எலாம் தெரிவுறக் காட்டும். (2142)

(அனகன்-தூயோன், அம்-அழகிய; கணன்-கண்ணோட்டம் உடையவன்; அமலன்-நின்மலன் / குற்றம் அற்றவன்; செறிந்த-அடர்ந்த; கனகம்-பொன்; நெறி-உபாயம்; தெரிவுற-விளங்கும்படி; இயல்பு- இயற்கை வளம் / தன்மை நலன்கள்)

எப்பொழுதும் இடையறாது தொடர்ந்து இறைவனையே நினைத்துக் கொண்டிருக்கும் நித்திய சூரிகளாகிய தேவர்களுக்கும், எப்போதாவது, தமக்கு வேண்டும்போது மட்டுமே அவனை நினைக்கும் மானிடர்களாகிய நமக்கும், ஒரே தன்மைத்தாய ஒப்பற்ற உபாயத்தைத் தருகின்ற தூயவனாகியவனும், அழகிய கண்ணோட்டம் உடையவனும், ஆயிரம் பெயர்களை உடையவனும், குற்றமற்றவனுமாகிய இராமன், சனகன் மகளும், சிறந்த மயில் போலும் சாயலை உடையவளுமான சீதாதேவிக்கு, அந்தச் சந்தன மரங்கள் அடர்ந்ததும், பொன் மயமானதுமான சித்திரகூட மலையின் இயற்கை வளங்களையும், தன்மை நலன்களையும் முழுவதும் விளங்கும்படித் தெளிவாகக் காட்டலானான்.

Koviloor Digital Library

ஆயிரம் பேருடைய அமலன் என்பது அவனது சகஸ்ர நாமத்தைக் குறித்ததாகும். ''பேரும் ஓர் ஆயிரம் படிபல உடைய எம்பெருமான்'' என்பது திருவாய்மொழி. நித்திய சூரிகள் எப்பொழுதும் இறைவனை நினைத்தலே தமது வாழ்வாக உடையவர் என்பதாம். உயர்ந்தவர்க்கும், தாழ்ந்தவர்க்கும் வேற்றுமை பாராட்டாது யாவரிடத்தும் ஒரு நிகராகத் திருவருள் புரிபவன் ஆகையால் ''நினையும் தேவர்க்கும், நமக்கும் ஒத்து ஒரு நெறி நின்ற அனகன்'' என்றார்.

2. ''வாளும் வேலும் விட்டு, அளாயின அனையகண் மயிலே!
தாளின் ஏலமும், தமாலமும் தழைதரு சாரல்
நீள மாலைய துயில்வன, நீர் உண்ட கமம் சூல்
காளமேகமும் நாகமும் தெரிகில காணாய்!'' (2143)

(அளாவுதல்-கலத்தல்; தாள்-தண்டு; ஏலம்-ஏலச்செடிகள்; தமாலம்-பச்சிலை மரம்; சாரல்-பக்கமலை / அடிவாரம்; மாலை-வரிசை; துயில்வன-தங்கிய; சூல்-கரு / கர்ப்பம்; நாகம்-யானை; தெரிகில -அறிய முடியாதனவாய்; கமம்-நிறைவு)

''வாட்படைபோன்று ஒளியும், வேற்படை போன்று கூர்மையும் இரண்டும் ஒன்று சேர்ந்து கலந்தாற் போன்ற கண்களையும், மயில்போலும் சாயலையும் உடைய சீதையே! தண்டுப் பகுதியை உடைய ஏலச் செடிகளும், பச்சிலை மரங்களும் தழைத்திருக்கின்ற இம்மலையடிவாரத்தில், நீண்ட வரிசையாகத் தங்கியிருக்கின்ற நீர் உண்ட நிறைவான கருக் கொண்ட கரிய மேகமும், யானையும் ஒன்றுக்கொன்று வேறுபாடு தெரியமுடியாதபடி இருக்கும் தன்மையைக் காண்பாயாக!''

வாளின் தன்மை ஈர்தல் என்றும், வேலின் தன்மை பாய்ந்து அழுத்துதல் என்றும் கொண்டு, ஈர்க்கின்ற தன்மையும், பாய்ந்து அழுத்துகின்ற தன்மையும் கொண்ட கண்களையுடையவளே என்று சீதையை விளித்ததாகக் கூறுவதும் பொருந்தும். அம்மலையில் தங்கியிருக்கும் நீருண்டு சூல் கொண்ட மேகங்களுக்கும் அங்கே உறங்கும் யானைகளுக்கும் வேறுபாடு காண முடியாதபடி அவை நிறைந்துள்ளன என்பதாம். நீளமாக இருக்கின்ற தன்மையும், அசையாது இருக்கின்ற தன்மையும், கருமை நிறத்தைப் பெற்றிருப்பதுவும் மலைச் சாரலுக்கும் யானைக்கும் பொதுவான தன்மைகள். எனவே இரண்டிற்கும் வேறுபாடு காண இயலவில்லை என்பதாம்.

3. ''குருதிவாள் எனச் செவ்வரி பரந்த கண் குயிலே!
மருவி மால்வரை உம்பரில் குதிக்கின்ற வருடை,
சுருதிபோல் தெளி மரகதக் கொழுஞ்சுடர் சுற்றப்
பருதி வானவன் பசும்பரி புரைவன பாராய்!'' (2144)

(குருதி-இரத்தம்; உம்பர்-மேலே / உச்சியில்; மருவி-பொருந்தி; வருடை-வரையாடுகள் / மலையில் வாழும் ஒரு விலங்கு; சுருதி-இசை /

Koviloor Digital Library

வேதம்; சுற்ற-சூழ; பசும்பரி-பச்சைக் குதிரைகள்; புரைதல்-ஒத்திருத்தல்; அரி-இரேகைகள்)

''இரத்தக்கறை படிந்த வாள் எனும்படிச் சிவந்த இரேகைகளையும் பரந்த கண்களையும், குயில்போன்று இனிய மொழிகளையும் உடைய சீதையே! இந்த மலையின் உச்சியில் பொருந்தித் துள்ளிக் குதிக்கின்ற மலையாடுகளின் மேல், வேதங்கள் போலத் தெளிந்த மரகத மணியின் வளமான பச்சை வண்ண ஒளி சூழ்ந்து பரவுவதால் அவை, சூரிய தேவனது பச்சைக் குதிரைகளை ஒத்து விளங்குவனவற்றைக் காண்பாயாக!''

செவ்வரி பரந்த கண்ணுக்குக் குருதி தோய்ந்த வாள் உவமை; தெளிவுடைமையால் வேதங்கள் மரகத மணியின் மாசில்லாத தெளிந்த ஒளிக்கு உவமை; பச்சை நிறம் பாய்ந்த வரையாடுகளுக்குச் சூரியனுடைய தேரில் பூட்டிய பச்சைக் குதிரைகள் உவமை; சூரியன் தேர்க்குதிரைகள் 7 என்றும், அவை பச்சை நிறம் உடையவை என்றும் முன்னர் பாலகாண்டத்துள் கூறியது இங்கே நினைவு கூரத்தகும்.

4. ''வடம் கொள் பூண் முலை மட மயிலே! மதக் கத மா
அடங்கு பேழ்வயிற்று அரவுரி, அமை தொறும் தொடக்கித்
தடங்கள் தோறும் நின்று ஆடுவ, தண்டலை அயோத்தி
நுடங்கும் மாளிகைத் துகிற்கொடி நிகர்ப்பன நோக்காய்!''
(2145)

(பூண்-அணிகலன்கள்; கதம்-சினம்; மா-யானை; அரவு-பாம்பு; அமை-மூங்கில்கள்; தொடக்கி-சிக்குண்டு; தடங்கள்-பக்கவரைகள்; தண்டலை-சோலைகள்; நுடங்கும்-அசையும்; வடம்-முத்து முதலிய மணிகள் தொடுத்த மாலை / ஆரம்; பேழ்-பிளக்கப்பட்ட / பெரிய; உரி-சட்டை)

முத்து முதலிய மணிகள் தொடுத்த மாலையை அணிந்த கொங்கைகளையுடையவளே! இளமையான மயில்போன்ற சாயலை உடையவளே! மதமும் சீற்றமும் கொண்ட யானையையே, தன் பெரிய பிளவுபட்ட வயிற்றினால் அடக்குகின்ற பாம்புகள் உரித்துப் போட்ட அதன் சட்டைகள், அம் மலையில் உள்ள மூங்கில் மரங்கள் உள்ள இடங்களில் எல்லாம் சிக்குண்டு அசைகின்றன; அவை, நமது அயோத்தி நகரத்து மாளிகைகளில் அசைகின்ற திரைச்சீலைகள் அசைவதைப் போல் இருக்கின்றன. அவைகளையும் காண்பாயாக!''

யானைகளைத் தன் வயிற்றுள் அடக்கும் பெரிய மலைப்பாம்புகள் இருக்கின்றன என்பதை முன்பு பால காண்டத்திலும் கண்டோம். ''இடிகொள் வேழத்தை எடுத்து உடன் எயிற்றொடு விழுங்கும் கடியமா சுணம்'' ''வேட்ட கரியை விழுங்கிப் பெரும் பசியால் மோட்டு வயிற்று அரவு'' என்பது நளவெண்பா. ''குஞ்சரம் கோள் இழைக்கும் பாம்பு'' என்பது திருக்கோவையார்.

Koviloor Digital Library

5. ''உவரி வாய் அன்றிப் பாற்கடல் உதவிய அமுதே!
துவரின் நீள் மணித் தடம் தொறும் இடம்தொறும் துவன்றிக்
கவரி மான் நிறவால் புடை பெயர்வன கடிதின்
பவள மால்வரை அருவியைப் பொருவிய பாராய்!'' (2146)

(உதவிய-தந்த; பெயர்வன-அசைபவை; பொருவுதல்-ஒத்திருத்தல்; உவரி-உப்பு நீரை உடைய கடல்; துவர்-பவளம் / செந்நிறம்; தடம்-பக்கமலைகள்; துவன்றி-நெருங்கி; வால்-வெண்மை)

''உப்புக் கடலில் இல்லாமல், திருப்பாற்கடலில் தோன்றிய அமிழ்தம் போன்று இனிமையானவளே! செந்நிறம் வாய்ந்த பவழம் போன்ற நீண்ட பக்க வரைகளின் இடங்களில் எல்லாம் நெருங்கி இருக்கின்ற கவரி மான்களின் வெள்ளிய நிறமுடைய வால்கள் அசைந்தாடுவன, அவை பவள மலையிலிருந்து விழுகின்ற வெண்மை நிறமுள்ள அருவியை ஒத்திருப்பதையும் காண்பாயாக!''

சிவந்த மலையிடத்திருந்து வெண்மையான வால்களை அசைத்துக் கொண்டிருக்கும் கவரி மான்களுக்குச் சிவந்த மலையிடத்திருந்து வெண்மையாகப் பொழிந்து கொண்டிருக்கும் அருவி உவமை.

6. ''சலம் தலைக் கொண்ட சீயத்தால் தனி மதக்கத மா
உலந்து வீழ்தலின், சிந்தின உதிரத்தின், மடவார்
புலந்த காலை அற்று உக்கன குங்குமப் பொதியில்
கலந்த முத்து என, வேழமுத்து இமைப்பன காணாய்!'' (2147)

(தனி-ஒப்பற்ற-கதம்-சினம்; சலம்-சினம்; தலைக்கொள்ளல்-மிகுதல்; சீயம்-சிங்கம்; உலந்து-இறந்து; உதிரம்-இரத்தம்; மடவார்-மகளிர்; புலந்த-ஊடிய; உக்கன-சிந்திய; பொதி-வாசக்கலவை / குழம்பு; இமைத்தல்-விளங்குதல்)

''தணியாத கோபம் மிகக் கொண்ட சிங்கம் ஒன்றினால் தாக்கப்பட்டு, ஒப்பற்ற மதமும் சினமும் கொண்ட யானை ஒன்று இறந்து வீழ்ந்தபோது, அது சிந்திய இரத்தத்தில் இருந்து வெளிப்பட்டுத் தோன்றிய முத்துக்கள், மகளிர் தம் கணவன்மாரோடு ஊடல் புரிந்த காலத்து வழித்தெறிந்த குங்குமக் கலவையில் தனது முத்து மாலைகளில் இருந்து விழுந்து சிதறிய முத்துக்கள் கலந்திருப்பன போல், கிடந்து விளங்குவதையும் காண்பாயாக!''

சிங்கத்திற்கும் யானைக்கும் போர். யானை இறந்துவீழ்கிறது. இரத்தம் சொட்டுகிறது. அதன் தந்தத்திலிருந்து உதிர்ந்து விழுந்த முத்துக்கள் அவ்விரத்தத்தில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கிடக்கின்றன. இதற்குக் கம்பன் கையாளும் உவமை. மகளிர் கணவர்களோடு ஊடல் கொள்ளுகின்றனர். முத்துமாலைகளைக் கழற்றி எறிகின்றனர். குங்குமக் கலவையை வழித்து வீசுகின்றனர். அப்போது அந்தச் சிவந்த குங்குமக்

Koviloor Digital Library

கலவைக்குள், முத்து வடத்திலிருந்து சிதறிய வேழ முத்துக்கள் அமிழ்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. முத்துத் தோன்றும் இடங்கள் இருபது என்கிறது திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ். ''தந்தி, வராக, மருப்பிப் பிடீகம் தழை, கதலி, நந்து, சலஞ்சலம், மீன்தலை, கொக்கு, நளினம், மின்னார், கந்தரம் சாலி, கழை, கன்னல் ஆவின்பல், கட்செவி, கார், இந்து, உடும்பு, கரா, முத்தம் ஈனும் இருபதுமே'' என்பது பாடல்.

7. ''நீண்ட மால்வரை மதி உற, நெடுமுடி நிவந்த
தூண்டு மாமணிச்சுடர் சடைக் கற்றையில் தோன்ற,
மாண்ட வால்நிற அருவி அம்மழ விடைப் பாகன்
காண்தகும் சடைக் கங்கையை நிகர்ப்பன காணாய்!'' (2148)

(முடி-சிகரம்; மாண்ட-சிறந்த; வால்-வெள்ளிய; மழ-இளைய; விடை-ஆண் ஏறு / எருது; காண்தகு-காணத்தக்க / காண்பதற்கு இனிய; நிவந்த-மிக்குத் தோன்றுகின்ற)

''உயர்ந்தோங்கிய இம்மலையின் பெரிய சிகரத்தின் மீது மிக்குத் தோன்றுகின்ற பிறைச் சந்திரன், சிறந்த ஒளியைப் பரப்புகின்ற சிவபெருமானின் சடைக்கற்றையைப் போலத் தோற்றமளிப்பதையும், சிறந்த வெண்மை நிறமான, அருவி அந்த இளமையான எருதை வாகனமாகக் கொண்ட, காண்பதற்கு இனிய சிவபெருமானின் சடையில் உள்ள கங்கையின் நீர்த்திரளை ஒத்திருப்பதையும் காண்பாயாக!''

மலை-சிவபெருமான்; சிகரம்-சிவபெருமான் திருமுடி; அருவி-கங்கைப் பிரிவுகள்; அந்தச் சித்திரகூட மலை சிவபெருமானைப் போலத் தோற்றமளிக்கிறது என்பது கருத்து.

8. ''தொட்டவார்சுனை சுடர் ஒளி மணியொடும் தூவி
விட்ட சென்றன, விடா மதமழையென வேழம்
வட்ட வேங்கையின் மலரொடும் ததைந்தன வயங்கும்
பட்டம் நெற்றியில் சுற்றிய போல்வன பாராய்!'' (2149)

(வார்-நீண்ட / பெரிய; தொட்ட-தோண்டிய / கைக்கொண்ட; விடா-நீங்காத)

''நீண்ட மலையிலிருக்கும் சுனைகளில் உள்ள மிகுந்த ஒளிவீசுகின்ற மாணிக்கக் கற்களைத் தம் தலைமீது சொரிந்து கொள்ளுகின்றன நீங்காத மதத்தைப் பெருக்குகின்ற யானைகள், அவற்றுடன் வட்டவடிவ மானதும், பொன் போன்ற நிறமுடையதுமான வேங்கை மலர்கள் நெருங்கி வந்து அவற்றின் நெற்றியின் மீது படிகின்றன. அவை அவ்யானைகளின் நெற்றியில் பொன்னாலும் பலவித மணிகளாலும் ஆன நெற்றிப்பட்டம் சுற்றியது போன்று விளங்குவதையும் காண்பாயாக!''

தன் கையில் அகப்பட்ட புழுதி, மணல், நீர் முதலியனவற்றைத் தன் தலைமீது தூவிக்கொள்வது யானையின் இயல்பு.

Koviloor Digital Library

9. ''இழைந்த நூல் இணை மணிக்குடம் சுமக்கின்றது என்னக்
குழைந்த நுண் இடைக் குவிஇள வனமுலைக் கொம்பே!
தழைந்த சந்தனச் சோலை தன் செலவினைத் தடுப்ப
நுழைந்து போகின்றது ஒக்கின்ற மதியினை நோக்காய்'' (2150)

(இழைந்த-நுணுகிய; இணை-இரண்டு; மணி-இரத்தினம்; குடம்-கலசங்கள்; வன-அழகிய; கொம்பு-பூங்கொடி; செலவு-செல்லுதல் / போக்கு)

''நுண்மையான ஒற்றைவட நூல், இரண்டு இரத்தினக் கலசங்களைத் தாங்கிக் கொண்டிருப்பது போல, ஒல்கித்தளர் வடைந்த நுட்பமான இடையையும், குவிந்த இளமையான அழகிய கொங்கைகளையும் உடைய பூங்கொடி போன்றவளே! இம்மலையில் தழைத்துச் செழித்து உயர்ந்து வளர்ந்திருக்கின்ற சந்தன மரச்சோலைகள் தன் போக்கினைத் தடுப்பதால் சந்திரன் அம்மலையின் மேலே செல்ல முடியாமல், அந்த மரங்களின் ஊடே புகுந்து செல்லுவது போலத் தோன்றுகின்றதைக் காண்பாயாயக!''

அம்மலையில் செழித்து வளர்ந்துள்ள சந்தன மரச் சோலை சந்திர மண்டலத்தளவும் ஓங்கியது எனச் சிறப்பிக்கப்பட்டது. மேலே செல்ல வழியில்லாமல், சந்திரன் அம்மரங்களின் ஊடே செல்வதுபோலத் தோற்றம் அளிக்கிறது என்றது ஒரு நயம்.

10. ''உருகுகாதலில் தழை கொண்டு மழலை வண்டு ஓச்சி,
முருகு நாறு செந்தேனினை முழை நின்றும் வாங்கிப்
பெருகு சூல் இளம் பிடிக்கு ஒருபிறை மருப்பு யானை
பருக, வாயினில், கையில் நின்று அளிப்பது பாராய்!'' (2151)

(மருப்பு-கொம்புகள்/தந்தங்கள்; உருகு-கசிந்த; மழலை-மெல்லிசை; ஓச்சி-ஓட்டி; முருகு-நறுமணம்; நாறும்-கமழுகின்ற; பெருகு-முதிர்ந்த; முழை-குகை / மலைப்பொந்து; சூல்-கர்ப்பம்; வாங்கி-எடுத்து / கைக் கொண்டு)

பிறைச்சந்திரனைப்போன்றவளைந்தகொம்புகளைஉடையஒருஆண் யானை, தன் பெண் யானையிடம் கொண்ட கனிந்த காதலால், தேன் கூட்டில் ரீங்காரம் இட்டு மெல்லிய இசையெழுப்பிக் கொண்டு இருக்கும் வண்டுகளைத் தழைகளால் ஓட்டிவிட்டு, நறுமணம் கமழ்கின்ற சிவந்த தேனை, அந்த மலைப்பொந்திலிருந்து சிதறிவிடாமல் எடுத்துத் தன் கையில்கொண்டு, முதிர்ந்தகர்ப்பத்தைஉடையதனதுஇளமையானபெண் யானைக்கு, அது பருகுவதற்கு ஏற்பத் தனது துதிக் கையினால் ஊட்டுவிப்பதைக் காண்பாயாக!''

இந்த அரிய காட்சி தமிழ் இலக்கியங்களில் பரவலாகப் பேசப்பட்டிருக்கிறது. முன்பு பால காண்டத்திலும், ''உம்பர் வானகத்து

Koviloor Digital Library

நின்ற ஒளிதரு தருவின் ஓங்கும், கொம்புகள் பனைக்கை நீட்டிக் குழையொடும் ஒடித்துக் கோட்டுத் தும்பிகள், உயிரேயன்ன துணைமாப் பிடிக்கு நல்கும்'' என்று பேசியதும் நினைவு கூரத்தகும் ''பெருகுமத வேழம் மாப்பிடிக்கு முன்னின்று இருகண் இள மூங்கில் வாங்கி, அருகிருந்த தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம்'' என்பது திவ்வியப்பிரபந்தம்; ''வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர்முளை அனைமிகு தேன்தோய்த்துப் பிரசவாரி தன் இளம் பிடிக்கு அருள் செய்யும் பிரிதி'' என்பது பெரிய திருமொழி; ''சந்தனப் பூம்பைந்தழையைச் செந்தேனில் தோய்த்து, யானை மந்த மடப்பிடியின் வாங்க கொடுப்ப, வந்ததன் கண்களிக்கத் தான் களிக்கும் ஈங்கோய்'' என்பது ஈங்கோய் மலை எழுபது.

11\. ''அளிக்கும் நாயகன் மாயை புக்கு அடங்கினன் எனினும்
களிப்பில் இந்தியத்து யோகியைக் கரக்கிலன்; அதுபோல்
ஒளித்து நின்றுளர் ஆயினும், உருத்தெரிகின்ற
பளிக்கறைச் சில பரிமுக மாக்களைப் பாராய்!'' (2152)

(அளிக்கும்-காக்கும்; நாயகன்-தலைவன் / திருமால்; கரத்தல்-மறைத்தல்; பரிமுகமாக்கள்-குதிரைமுகமுடையவர்கள் / கின்னரர்கள்; இந்தியம்-புலன்கள்; பளிக்கறை-பளிங்குப்பாறைகள்)

''உலகத்தைக் காத்தல் தொழில் செய்துவரும் தலைவனான திருமால், தனது மாயச் செயல்களினால் ஒருவர் கண்ணுக்கும் தெரியாதபடி புகுந்து தன்னை மறைத்துக் கொள்வான் என்றாலும், தமது இந்திரியங்களை-ஐம்புலன்களை அடக்கி ஆள்வதால் மகிழ்ச்சி மிக்கில்லாதவரான யோகியர்களுக்கு அவன் மறைக்கமாட்டான். அவர்கள் கண்களுக்குப் புலனாவான். அதுபோல, சில குதிரை முகம் கொண்ட தேவ சாதியினரான கின்னரர்கள் தங்களைப் பளிக்குப் பாறைகளுக்குள் ஒளித்துக் கொண்டாலும், பளிக்குப் பாறை அவர்களைத் தோற்றுவித்துக் காட்டிவிடுகின்றதைக் காண்பாயாக!''

பரிமுக மாக்கள் என்பவர் குதிரை முகமும் மானிட உடலும் கொண்டவர்கள். இவர்கள் ஒரு தேவசாதியினர். பதினெட்டு வகைத் தேவ கணங்களுள் ஒரு சாரார். இவர்கள் கின்னரர்கள் எனப்படுவர். மணிமேகலையில் பளிக்கறை புக்ககாதை என்றே ஒரு பகுதி இருப்பதை அறிக.

12\. ''ஆடுகின்ற மாமயிலினும் அழகிய குயிலே!
கூடுகின்றிலர் கொடிச்சியர் தம்மனம் கொதிப்ப
ஊடுகின்றனர், கொழுநரை உருகினர் நோக்கப்
பாடுகின்றன கின்னர மிதுனங்கள் பாராய்!'' (2153)

(கொடிச்சியர்-குறிஞ்சி நில மகளிர் / குறத்தியர்; மிதுனம்-இரட்டை; குயிலே-பெண்ணே)

Koviloor Digital Library

''கார்காலத்தில் தோகை விரித்தாடும் சிறந்த மயிலினும் அழகுடையவளும், குயில்போன்ற குரல்வளமும் உடைய பெண்ணே! இந்தக் குறிஞ்சி நில மகளிராகிய குறத்திகள், தங்கள் மனம் வெதும்பிக் கணவர்களைக் கூடாமல் ஊடல் புரிந்திருக்கின்றனர்; இவர்கள் தாமே மனம் விரும்பித் தம் கணவர்களைக் கூடுமாறு காதல் நோக்கம் கொண்டு உருகிப் பாடும் கின்னர இரட்டையர்களையும் காண்பாயாக!''

கின்னரர் என்பவர் தேவ சாதியினருள் ஒரு வகையினர். ஆணும் பெண்ணுமாய் ஒன்றியவர். எனவே மிதுனம் எனப்பட்டனர். இசை வல்லவர். இவர்கள் பாடும் இசை காம இச்சையைத் தூண்டி, ஊடலால் பிரிந்திருக்கும் மகளிரைத் தாமே விரும்பித் தம் கொழுநர் பால் கூடல் பொருட்டுச்சேர்ப்பிக்கும் ஆற்றல் பெற்றது என்று கூறுவர். ''கேடிலா மகர யாழில் கின்னர மிதுனம் பாடும் பாடலால் ஊடல் நீங்கும் பரிமுக மாக்கள் கண்டனர்'' என்பது பாலகாண்டப் பாடல். இவர்களின் இசை, கேட்போர் மனத்தை உருக்கும்; காமத்தைத் தூண்டும்; ஊடிய மகளிரைக் கூட்டுவிக்கும். இவர்கள் குதிரை முகமும் மனித உடலும் கொண்டவர். ஆணும் பெண்ணும் இணைந்தே இருப்பர். கின்னரம் என்னும் இசைக்கருவி கொண்டு பாடுவர்.

13. ''வில்லிவாங்கிய சிலை எனப் பொலி நுதல் விளக்கே!
வல்லிதுஆம் கழை தாக்கலின் வழிந்து இழிபிரசம்
கொல்லி வாங்கிய குன்றவர் கொடி நெடுங்கவலை
கல்லி வாங்கிய குழிகளை நிறைப்பன காணாய்!'' (2154)

(வில்லி-வில் தொழிலில் வல்லவன்; வாங்கிய-வளைத்த / கேட்ட / எடுத்த; நுதல்-புருவமுமாம்; கழை-மூங்கில்; பிரசம்-தேன்; கொல்லி-தோண்டு கருவி / ஒருவகைப் பண் இசை; குன்றவர்-குறிஞ்சி நிலமக்கள்; கவலை-ஒருவகைக் கிழங்கு; கல்லி-தோண்டி; இழிதல்-கீழ்நோக்கி இறங்குதல்)

''வில் தொழிலில் வல்லவனான ஒருவன் வளைத்த வில்லினைப் போன்று சிறந்து விளங்குகின்ற புருவத்தை உடையவளே! குலத்தின் விளக்கே! வன்மையுடைய மூங்கில் தாக்கியதால் தேனடை உடைபட்டு அதிலிருந்து வழிந்து இறங்கி ஓடும் தேன் வெள்ளம், கொல்லி என்னும் தோண்டு கருவியால், குறிஞ்சி நில மக்கள் நீண்ட கொடியோடு கூடிய கவலைக் கிழங்குகளைத் தோண்டி எடுத்ததனால் ஏற்பட்ட பள்ளங்களை நிரப்புவதைக் காண்பாயாக!''

விளக்கு என்பது குலவிளக்கைக் குறித்துப் பிறந்த வீட்டின் பெருமையையும், புகுந்த வீட்டின் புகழையும் தன் சீலத்தால் விளக்குகின்ற பெண்களைக் குறித்தது. கொல்லி என்பது ஒருவகைப் பண் இசையுமாம். அதைனச் செவிமடுத்த மலைவாழ் மக்கள் என்பதும் பொருந்தும். அம்மலையின் தேன் வளம் சிறப்பிக்கப்பட்டது. கொடிகளில் கட்டப்

Koviloor Digital Library

பெற்றிருந்த தேனடையை மூங்கில்கள் மோதித் தாக்க, அத்தேனடை கெட்டுத் தேன் வழிந்து, கவலைக் கிழங்கு அகழ்ந்த குழியைத் தூர்த்து நிரப்பும் என்பதாம்.

14. ''ஒருவு இல் பெண்மை என்று உரைக்கின்ற உடலினுக்கு உயிரே!
மருவு காதலின் இனிது உடன் ஆடியமந்தி
அருவி நீர் கொடுவீச, தான் அப்புறத்து ஏறிக்
கருவி மாமழை உதிர்ப்பது ஓர் கடுவனைக் காணாய்!'' (2155)

(ஒருவுஇல்-நீங்காத; மருவு-பொருந்திய; மந்தி-பெண்குரங்கு; கடுவன்-ஆண்குரங்கு; கருவி-தொகுதி; மழை-மேகம் / மழைநீர்; வீச-தெளிக்க)

''ஒருபொழுதும்நீங்காத பெண்மைஎன்று புகழ்ந்துசொல்லப்படுகின்ற உடல் போன்ற எனக்கு உயிர் போன்றவளே! பொருந்திய காதலினால், ஆண்குரங்கோடு மகிழ்ச்சியாய் விளையாடிக்கொண்டிருந்த பெண்குரங்கு ஒன்று அருவி நீரைத் தன் ஆண் குரங்கின்மீது தெளிக்க, தானும் அருவி நீரைத் திருப்பித் தெளித்தால் அதுதன் ஆண்மைக்கு இழுக்காகும் என்று கருதி, அந்த ஆண் குரங்கு அந்த மலையின் அப்புறத்து உச்சியில் ஏறி, உலகம் உய்வதற்குக் கருவியாகிய மேகத்தை உலுக்கி அதனின்றும் மழைத்துளியைச் சிந்துவதைப் பார்ப்பாயாக!''

''கருவிதொகுதி'' என்பது தொல்காப்பியம். இங்கே கருவி மாமழை என்பது மேகத்துடன் கூடிய இடி, மின்னல் போன்ற தொகுதியையும் குறிக்கும் என்க.

15. ''வீறுபஞ்சு இன்றி அமுத நெய் மாட்டிய விளக்கே!
சீறு வெம்கதிர் செறிந்தன, பேர்கல, திரியா,
மாறுஇல் மண்டிலம் நிரம்பிய மாணிக்க மணிக்கல்
பாறை, மற்று ஒரு பரிதியின் பொலிவன பாராய்!'' (2156)

(வீறு-சிறந்த; பஞ்சு-திரி; மாட்டிய-ஏற்றிய / கொளுத்திய; வெம்-விரும்பத்தக்க; கதிர்-ஒளிக்கற்றை; பேர்கல-இடம்பெயராத; திரியா-சுழற்சியில்லாத; மாறு-கோட்டம்; மண்டிலம்-முழுவட்டம்; மாணிக்கம்-பதுமராகம்; பரிதி-சூரியன்; மணி-அழகிய)

''சிறந்த பஞ்சுத்திரியில்லாமல், அமுதத்தையே நெய்யாகக் கொண்டு ஏற்றிய விளக்குப் போன்றவளே! சீறுகின்ற விரும்பத்தக்க ஒளி நிரம்பியனவும், இடம்பெயர்ந்தனவும், சுழற்சியில்லாதனவும் கோட்டம் இல்லாது வட்ட வடிவமானதுவுமாக நிரம்ப இருக்கின்ற மாணிக்கங் களால் செய்யப்பெற்ற அழகிய கற்பாறைகள், வேறுஒரு சூரியனைப் போல ஒளி விட்டுப் பிரகாசிப்பதைக் காண்பாயாக!''

Koviloor Digital Library

வீறு பஞ்சு என்பது கோது போக்கிய, உயர்ந்த வகைப் பஞ்சினாலாகிய திரியைக் குறிக்கும். நெய்க்குப் பதிலாக அமிழ்தத்தையே ஊற்றி ஏற்றப்பட்ட தூண்டா விளக்கு என்பது சீதாதேவியின் மேனி ஒளிக்குக் கூறப்பட்ட உவமை. பொதுவாகச் சூரியன் இடம் பெயரும் தன்மையுடையது, சுழன்று கொண்டேயிருப்பது, இவை இரண்டும் இல்லாத வட்டவடிவமான மரகதக் கற்பாறை மற்று ஒரு சூரியனுக்கு உவமை.

16. ''சீலம் இன்னது என்று அருந்ததிக்கு அருளிய திருவே!
நீல வண்டினம் படிந்துஎழ, வளைந்தன நிமிர்வ,
கோல வேங்கையின் கொம்பர்கள், பொன் மலர் தூவிக்
காலினில் தொழுது எழுவன நிகர்ப்பன காணாய்!'' (2157)

(சீலம்-ஒழுக்கம்; இன்னது-இத்தன்மைத்து; அருளிய-கற்பித்த; கோல-அழகிய; கொம்பர்-கிளைகள்)

''கற்பொழுக்கம் என்பது இத்தன்மையது என்று கற்பினிற் சிறந்த அருந்ததிக்கும் கற்பித்த இலக்குமி போன்ற அழகுடையவளே! நீல வண்ண வண்டின் கூட்டங்கள் மொய்ப்பதால் அழகிய வேங்கை மரத்தின் கிளைகள் அவற்றின் பாரம் தாங்காமல் வளைகின்றன. அதனால் பொன் நிறமுள்ள வேங்கை மலர்கள் கீழே சிதறுகின்றன. வண்டுகள் மேல் எழும்பிப் பரந்து போகும்போது, அக்கிளைகள் சுமை நீங்கி நிமிர்கின்றன. இது எப்படி இருக்கிறது என்றால் அவை வளைந்து பொன் மலர்களை உதிர்க்கும்போது அவை உன்னுடைய திருவடிகளை வணங்கி மலர்களால் வழிபடுவது போலவும், அவை நிமிர்வன மீண்டும் அவை வணங்கி எழுவன போலவும் எனக்குத் தோற்றுகிறது. அவற்றையும் நீ காண்பாயாக!''

கற்புடைய மகளிர்க்கு எடுத்துக்காட்டாக அருந்ததியைக் கூறுவது மரபு. அவளுக்கும் இவள் கற்பொழுக்கத்தைக் கற்பித்தாள் என்பது சீதையைச் சிறப்பிப்பதற்காகக் கூறப்பட்டது. முன்பு சீதையை ''அருந்ததி அனையாளே'' என்று ஒப்பிட்ட கவிஞன், இப்பொழுது அவளை விஞ்சியவள் எனக் கூறுவது ஒரு நயம்.

17. ''வில்கொள் வாள் நுதல், விளங்குஇழை, இளந்தளிர்க் கொழுந்தே!
எல்கொல் மால்வரை உம்பரில், இரும் புனம் காக்கும்
கொல்கொள் வேல்கணார் குரீஇ இனத்து எறி குருவிந்தக்
கற்கள், வானிடை மீன் என விழுவன காணாய்!'' (2158)

(கொள்-கொண்டு; எல்-வெயில் / விளக்கம்; கொள்-வாய்ந்த; உம்பர்-உச்சி; குருவிந்தம்-மாணிக்கம்; நுதல்-புருவம்; கொழுந்து-மருக்கொழுந்து; குரீஇ-குருவி; மீன்-நட்சத்திரங்கள்; வாள்-ஒளி அமைந்த)

''வில்லைப்போன்று வளைந்த ஒளி படைத்த புருவத்தையும், விளங்குகின்ற அணிகலன்களையும் அணிந்தவளே! இளமையான

Koviloor Digital Library

மாந்தளிர் போன்ற மேனியை உடையவளே! மருக்கொழுந்து போன்ற நறுமணம் மிக்கவளே! சூரியனைத் தொடுகின்ற மலையின் உச்சியில் பரண் அமைத்து அங்கே பெரிய தினைப் புனத்தைக் காவல் காத்து வரும், கொல்லுகின்ற தொழிலை உடைய வேற்படை போன்ற கண்களை உடைய குறமகளிர், தினையைக் கொத்தவரும் குருவிக் கூட்டத்தின்மீது எறிகின்ற குருவிந்தம் என்ற மாணிக்கக் கற்கள், ஆகாயத்திலிருந்து நட்சத்திரங்கள் கீழே விழுவதைப் போல விழுகின்றனவற்றையும் காண்பாயாக!''

இது நடப்பது பகல் பொழுது. எனவே அக்கற்கள் ஒளி மழுங்கிய விண்மீன்கள் போலக் காணப்பட்டன என்பதாம்.

18. ''வரிகொள் நோன் சிலை வயவர்தம் கணிச்சியின் மறிந்த
பரியகார் அகில்சுட, நிமிர் பசும் புகைப்படலம்
அரிய வேதியர் ஆகுதிப் புகையொடும் அளவிக்
கரிய மால்வரைக் கொழுந்து எனப் படர்வன காணாய்!'' (2159)

(வரி-கட்டமைந்த; நோன்-வலிய; வயவர்-வீரர் / வேடர்கள்; கணிச்சி-கோடரிப்படை; மறிந்த-அழிந்த; அளவி-கலந்து; கொழுந்து- சிகரம்; படர்தல்-செல்லுதல்; பரிய-பருத்த; ஆகுதி-வேள்வித் தீயில் இடும் பொருட்கள்)

''கட்டமைந்த வலிய வில்லை ஏந்திய வேடர்கள், தமது கோடாரிப் படையால் வெட்டி வீழ்த்திய பருத்த கருமையான அகில் கட்டைகளைச் சுட்டெரிக்க, அதிலிருந்து ஓங்கி எழும் பசுமையான புகையின் தொகுதி, பெருமை பெற்ற மறையோர்களால் ஓமகுண்டத்தில் ஆகுதியாகப் பெய்யப்படுவதனால் உண்டாகும் வேள்விப் புகையோடும் கலந்து, இந்தக் கருமையான பெரிய சித்திரகூட மலையின் சிகரங்கள் போலப்படர்ந்து செல்வதையும் காண்பாயாக.

வீரர்கள் அகிற்புகை எழுப்புதலால் வீரமும், மறையோர்கள் வேள்விப் புகை எழுப்புவதால் அறமும் கூறப்பட்டது என்பதாம்.

19. ''நானம், நாள்மலர், நறை, அகில், நாவி, தேன் நாறும்
சோனை வார்குழல் சுமைபொறாது, இடுகுஇடைத் தோகாய்!
வானயாறு மீன் மலர்ந்தன எனப் புனல் வறந்த
கான யாறுகள் கணம் மணி இமைப்பன காணாய்!'' (2160)

(நானம்-புனுகு; நாள்-அன்றலர்ந்த / புதிய; நறை-நறுமணம்; நாவி-கத்தூரி; தேன்-நறுமணம்; நாறுதல்-கமழ்தல்; சோனை-விடாத மழை; வார்-நீண்ட; இடுகுதல்-மெலிதல்; தோகை-மயில்; வறந்த-நீரற்ற / வறட்சியுற்ற; கணம்-கூட்டம்; மணி-மாணிக்கம்; இமைப்பன-விளங்குவன / பொலிவன)

Koviloor Digital Library

''புனுகு நெய், அன்றலர்ந்த புதிய பூ, நறுமணம் மிக்க அகிற்புகை, கத்தூரி ஆகியவற்றின் நறுமணம் கமழ்கின்ற இடைவிடாத மழை மேகம் போல் நீண்ட கரிய கூந்தலின் சுமையைத் தாங்கமாட்டாது தளர்வுறுகின்ற மெல்லிய இடையையும், மயில் போன்ற சாயலையும் உடையவளே! ஆகாயமாகிய ஆற்றிலே விண்மீன்கள் தோன்றின என்று சொல்லும்படி, நீர் வறண்டு போன காட்டாறுகளிலே மாணிக்கக்கற்களின் கூட்டங்கள் மிளிர்வனவற்றைக் காண்பாயாக!''

மகளிர் கூந்தலுக்கு புனுகு நெய், அகிற்புகை, கத்தூரி முதலியவற்றின் புகைகளையும் ஊட்டி நறுமணம் பெறச் செய்வர். நீர் வற்றிய ஆற்றின் வெண்மணல் பரப்புக்கு ஆகாயமும், மணற்பரப்பில் தோன்றும் மாணிக்க மணிகளுக்கு விண்மீன்களும் உவமை.

20. ''மஞ்சுஅளாவிய மாணிக்கப் பாறையின் மறைவ
செஞ்செவே நெடு மரகதப்பாறையில் தெரிவ,
விஞ்சை நாடியர் கொழுநரோடு ஊடிய விமலப்
பஞ்சு அளாவிய சீறடிச் சுவடுகள் பாராய்!'' (2161)

(மஞ்சு-அழகு / மேகம்; அளாவிய-பொருந்திய / கலந்த; விஞ்சை நாடியர்-வித்யாதர மகளிர்; செஞ்செவே-நன்றாக / நேராக; விமலம்-குற்றமற்ற; மறைவ-புலப்படாத; நாடியர்-நாட்டு மகளிர்)

''வித்யாதர மகளிர் தம் கணவரோடு ஊடல் புரிந்ததனால் உண்டாகிய கோபத்தால், அவர்களது செம்பஞ்சு ஊட்டப்பெற்ற சிறிய பாதங்களின் சுவடுகள், அவர்கள் நடந்து சென்ற மேக மண்டலத்தை எட்டிய அழகு பொருந்திய சிவந்த மாணிக்கப் பாறைகளில் புலனாகாமலும், நீண்ட பச்சை நிற மரகதப் பாறையில் நன்றாகத் தெரிவதையும் காண்பாயாக!□.

ஊடல் கொண்ட மகளிர் சிவந்த மாணிக்கப் பாறையில் நடந்து சென்ற பொழுது அவர்கள் பாதங்களிலும் செம்பஞ்சுக் குழம்பே ஊட்டப் பெற்றிருந்ததால் அவர்களின் சுவடுகள் கண்களுக்குப் புலப்படவில்லை. சிகப்புக்கு மாறான பச்சை நிறமுள்ள மரகதப் பாறையில் நடந்து செல்லும் போது, நிறவேறுபாட்டால், அவர்களது சுவடுகள் மிக நன்றாகப் பளிச்சிட்டுத் தெரிகின்றன என்பதாம்.

21. ''சுழித்த செம்பொனின் தொளைபுரை உந்தி இன்துணையே!
கொழித்த மாமணி அருவியோடு இழிவன, கோலம்
அழித்து மேவிய அரம்பையர் அறல்புரை கூந்தல்
கழித்து நீக்கிய கற்பக நறுமலர் காணாய்!'' (2162)

(சுழித்த-வட்டமாக இடப்பட்ட; செம்பொன்-மாற்றுயர்ந்த பொன்; புரை-ஒத்த; அழித்து-நீக்கி; அறல்-கருமணல்; மணி-இரத்தினங்கள்; உந்தி-கொப்பூழ்; அரம்பையர்-தேவமகளிர்)

Koviloor Digital Library

''மாற்றுயர்ந்த பொன்னில் வட்டமாக இடப்பட்ட துளையை ஒத்த கொப்பூழை உடைய இனிமையான துணைவியே! மேலிருந்து இறங்கிவரும் அருவி, தாம் கொழித்துக் கொண்டு வருகின்ற சிறந்த இரத்தினங்களோடு, தேவமகளிர், நீராடுவதற்காகத் தாம் புனைந்திருந்த கோலத்தைக் கழித்து, அணிகலன்களைக் கழற்றி வைத்து, தமது கருமணல் போன்ற கூந்தலினின்றும் எடுத்து எறிந்த கற்பக மலரினால் ஆன மாலைகளையும் மலர்க் கொத்துகளையும் சேர்த்து வாரிக் கொண்டு வருவதைக் காண்பாயாக!''

சித்திரகூட மலையில் அருவி கொட்டுகிறது. இதில் நீராட விழைந்த தேவமகளிர், தாம் முன்பு கொண்டிருந்த அலங்காரத்தைக் கழித்துவிட்டு, தம்முடைய கருமணல் போன்ற கூந்தலில் சூடியிருந்த கற்பக மலர்களால் கட்டப்பட்ட மாலைகளையும் அவிழ்த்து வைத்திருந்தனர். அருவி இயற்கையிலேயே இரத்தினங்களைக் கொழித்துக் கொண்டு வரும் தன்மையுடையது. அத்துடன் இந்தக் கற்பக மலர்களையும் அடித்துக் கொண்டு வந்தது என்பதாம். பொன்துளை சீதையின் கொப்பூழுக்கு உவமை; மாற்றுயர்ந்த பொன் சில கல்வெட்டுக்களில் ''தொளைப் பொன்'' என்றே குறிப்பிடப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

22. அறைகழல் சிலைக்குன்றவர் அகன்புனம் காவல்
பறைஎடுத்து ஒரு கடுவன் நின்று அடிப்பது பாராய்!
பிறையை எட்டினள் பிடித்து, ''இதற்கு இது பிழை'' என்னாக்
கறை துடைக்குறு பேதை ஓர் கொடிச்சியைக் காணாய்!'' (2163)

(அறை-ஒலிக்கின்ற; குன்றவர்-மலைவாழ் மக்கள் / குறவர்கள்; பீழை-குறை; கொடிச்சி-குறமகள்; பறை-தொண்டகம் என்னும் பறை; சுடுவன்-ஆண் குரங்கு; கறை-களங்கம்; பேதை-அறிவிலி)

''ஒலிக்கின்ற வீரக்கழல்களையும், வில்லையும் உடைய மலை வாழ் குறவர்கள், தங்களுடைய அகன்ற தினைப் புனத்தைக் காவல் செய்வதற்காக வைத்திருக்கும் பறையை எடுத்து ஒரு ஆண் குரங்கு அடித்துக் கொண்டு நிற்பதைப் பார்ப்பாயாக! பிறைச் சந்திரனைக் கையினால் எட்டிப் பிடித்து, இதற்குக் கறை இருப்பது ஒரு குறை என்று கருதி அம்மறுவைத் துடைக்க முயலுகின்ற அறிவிலியாகிய ஒரு குறமகளையும் காண்பாயாக!''

தினைப் புனத்தைக் காவல் செய்வதற்காக-விலங்குகள், பறவைகள் முதலியன வந்து தினையைக் கொத்தித் தின்றுவிடாமல் அவைகளை அச்சுறுத்தி ஓட்டுதற்காகத் தொண்டகம் என்ற ஒரு பறையை ஒலி எழுப்புவது வழக்கம். அவ்வொலி கேட்டுப் பறவைகள் ஓடிவிடும். பறையுடன், தட்டை என்ற கிளிகடி கோலும், தழல் என்ற கிளிகடி கருவியும் இருப்பதாகக் கூறுவர். தன் கண்ணால் கண்டதைச் செய்தல் குரங்கின் இயல்புதானே! எனவே குறவர்கள் பறையடித்ததைக் கண்ட

Koviloor Digital Library

ஆண் குரங்கு தானும் பறையை எடுத்து அடிக்க முற்பட்டது என்பதாம். பிறையை எட்டினள் பிடித்தாள் என்பது, அந்தச் சித்திர கூட மலையின் உயர்ச்சியைச் சிறப்பித்துக் கூறுவதாகும். சந்திரனில் உள்ள களங்கத்தை யாராலும் அழிக்க முடியாது என்பது தெரியாமல், அதைத் துடைக்க முயலும் அவளைப் பேதை என்றார் என்பதாம்.

23. ''அடுத்த பல்பகல் அன்பரைப் பிரிந்தனர் என்பது
எடுத்து நம்தமக்கு இயம்புவ எனக் கரிந்து இருண்ட
தொடுத்த மாதவிச் சூழலில், சூர்அர மகளிர்
படுத்து வைகிய பல்லவ சயனங்கள் பாராய்!'' (2164)

(பகல்-நாட்கள்; சூழல்-பந்தல் / நிழல்; பல்லவ சயனம்-தளிர்ப்படுக்கை; தொகுத்த-பின்னிப் படர்ந்த / அடர்த்தியாக உள்ள; சூர்அர மகளிர்-பிறரை வருத்தும் தெய்வப் பெண்கள்; அடுத்த-தொடர்ந்த; இருண்ட-இருள் நிறமான; மாதவி-குருக்கத்திக் கொடி)

''அடர்த்தியாகப் பின்னிப் படர்ந்துள்ள குருக்கத்திக் கொடிகளின் பந்தல் நிழலில், பிறரை வருத்தும் இயல்புடைய தெய்வமகளிர் தமது கணவர்களைத் தொடர்ந்து பல நாட்கள் பிரிந்திருந்தனர் என்பதை நமக்கு எடுத்துச் சொல்லும் வகையில், அம்மகளிர் படுத்து உறங்கிய தளிர்களால் ஆனபடுக்கைகள், அவர்களின் பிரிவினால் உண்டாகிய வெப்பம் தாளமாட்டாது கருகி, இருள் நிறம் பெற்றிருப்பதைக் காண்பாயாக!''

நீண்ட நாட்கள் தம் கணவரைப் பிரிந்திருந்த சில தேவமகளிர் காம வெப்பத்தை ஆற்றிக் கொள்வதற்காகக் குருக்கத்திக் கொடி அடர்த்தியாகப் பின்னிப்படர்ந்துள்ள பந்தலின் கீழ் தளிர்களாலாகிய படுக்கைகளை அமைத்து அதில் உறங்குவாராயினர். ஆனால் அவர்கள் காமவெப்பம் தாங்காது அத்தளிர்ப் படுக்கைகள் கருகிப் போயின என்பதாம்.

24. ''நினைந்த போதினும் அமிர்து ஒக்கும் நேரிழை! நிறைதேன்
வனைந்த வேங்கையில், கோங்கினில், வயின்தொறும் தொடுத்துக்
குனிந்த ஊசலில் கொடிச்சியர் எடுத்த இன்குறிஞ்சி
கனிந்த பாடல்கேட்டு, அசுணமா வருவன காணாய்!'' (2165)

(இழை-அணிகலன்கள்; தொடுத்து-இணைக்கப்பட்டு; குனிந்த-தாழ்ந்த; கொடிச்சியர்-குறிஞ்சி நில மகளிர்; வயின்தொறும்-இடம்தோறும்; குறிஞ்சி-ஒருவகைப் பண்; அசுணமா-இசையறிவதோர் விலங்கு; நேர்-நுட்பமான; வனைந்த-தங்கிய)

''நினைத்த பொழுதே அமிழ்தத்தை ஒத்த மகிழ்ச்சியினைத் தருபவளே! நுட்பமான நேரிய அணிகலன்களை அணிந்தவளே! நிறைந்த தேன் தங்கிய வேங்கை மரங்கள், கோங்கு மரங்கள் முதலியவற்றை எல்லா இடங்களிலும் பிணைத்துக் கட்டித் தாழ்ந்து தொங்கவிடப் பட்டிருக்கின்ற ஊஞ்சல்களில் அமர்ந்து, குறமகளிர் இனிமையான குறிஞ்சிப் பண்ணை

Koviloor Digital Library

மிக்க சுவையாகத் தம் குரலெடுத்துப் பாடுகின்ற பாடலைக் கேட்டு, இசையறி பறவையான அசுணமா வந்து கொண்டு இருப்பதைக் காண்பாயாக!''

வாயால் சுவைத்தால்தான் அமிழ்தம் சுவைக்கும். ஆனால் சீதாதேவி மனத்தால் நினைத்தாலே இனிப்பவள் எனவே நினைத்த போதினும் அமிழ்தொக்கும் நேரிழை என்றார். நினைத்த போதினும் அமிழ்து ஒக்கும் என்பது ''உள்ளக் களித்தலும்'' என்ற குறள் வரிகளை நினைப்பூட்டுவதாக அமைகின்றது. அசுணமா என்பதை இசையறியும் ஓர் விலங்கு என்றும், பறவை என்றும், ஒரு வகை மான் என்றும் கூறுவர். இது இனிய இசையை நன்கு நுகரும். வல்லோசை கேட்கின் உயிர்மாளும். ''பறைபட வாழா அசுணமா'' என்பது நான்மணிக்கடிகை; இதைப் போலக் ''கேகயப்புள்'' என்று ஒன்று இருப்பதாகவும், இப்பறவை இனிய யாழ் போன்றவற்றிலிருந்து எழும் ஓசைகளைக் கேட்டு மகிழும் என்றும் கூறுவர்.

25. ''இலவும் இந்திரகோபமும் புரைஇதழ் இனியாய்!
அலவும் நுண்துளி அருவிநீர், அரம்பையர் ஆட,
கலவை, சாந்து, செங்குங்குமம், கற்பகம் கொடுத்த
பலவும் தோய்தலின், பரிமளம் கமழ்வன பாராய்!'' (2166)

(கலவை-சந்தனக் குழம்பு; அலவும்-சிதறுகின்ற; பரிமளம்-நறுமணம்; துளி-திவலை; இலவு-முருக்க மலர்)

''முருக்க மலரும், இந்திர கோபப்பூச்சியும் போன்ற சிவந்த இதழ்களையுடைய, கண்ணுக்கும் மனத்திற்கும் இனியவளே! தேவமகளிர் நீராடுவதால், சிதறுகின்ற நுட்பமான தண்மையான திவலைகளையுடைய இவ்வருவி நீரில், அவர்கள் தம் உடம்பில் பூசியிருந்த சந்தனக் கலவை, சிவந்த குங்குமக் குழம்பு, கற்பக மரம் அளித்த பல நறுமணமுள்ள பொருள்கள் ஆகியவை படிந்து கலந்திருப்பதால் மிக்க நறுமணம் கமழ்வதைக் காண்பாயாக!''

முருக்கமலரும், இந்திர கோபப்பூச்சியும் சிவந்த நிறத்தால் சீதாதேவியின் அதரங்களுக்கு உவமை. தேவருலகத்தைத் தொடும் மலை உச்சியில் உள்ள அருவிகளின் சிறப்புப் புலப்படுத்தப்பட்டது. இந்திரகோபம் என்பது தம்பலப்பூச்சி எனவும், செம்மூதாய் எனவும் வழங்கப் பெறும்.

26. ''செம்பொனால் செய்து, குலிகம்இட்டு எழுதிய செப்புஓர்
கொம்பு தாங்கியது எனப்பொலி வனமுலைக் கொடியே!
அம்பொன் மால்வரை அலர்கதிர் உச்சிசென்று அணுகப்
பைம்பொன் மாமுடி மிலைச்சியது ஒப்பது பாராய்!'' (2167)

Koviloor Digital Library

(எழுதுதல்-கோலம் வரைதல் / வரிக் கோலம் எழுதுதல்; பொலிதல்-விளங்குதல்; வன-அழகிய; மிலைச்சியது-சூட்டியது; குலிகம்-இங்குலிகம் / சாதிலிங்கம்; முடி-கிரீடம்; செப்பு-சிமிழ்)

''மாற்றுயர்ந்த செம்மையான பொன்னால் செய்யப்பட்டு, அதற்கு இங்குலிகச் சாதிலிங்கத்தால் வரிக்கோலம் எழுதிய இரண்டு செப்புச் சிமிழ்களை ஒரு கொம்பு தாங்கிக் கொண்டு நிற்பதைப் போல விளங்குகின்ற அழகிய கொங்கைகளையுடைய பூங்கொடி போன்றவளே! விரிந்த கிரணங்களை உடைய சூரியன் இந்தப் பொன் போன்ற அழகிய மலையின் உச்சிக்குச் சென்று சேர்கிற போது, அது பார்ப்பதற்கு பசிய பொன்னாலாகிய சிறந்த கிரீடத்தைச் சூட்டியது போல இருக்கிறது அவற்றையும் காண்பாயாக!''

சாதிலிங்கத்தால் வரிக்கோலம் எழுதப் பெற்ற இரு சிமிழ்கள், தொய்யிற்கோலம் எழுதப்பட்ட சீதாதேவியின் கொங்கைகளுக்கு உவமை; உச்சி நேரத்தில் சூரியன் மலை மேல் அணுகுவது அந்தச் சிகரத்துக்கு பொன் முடிசூட்டியது போன்று இருந்தது என்பதாம்.

27. ''மடந்தை மார்களில் திலதமே! மணிநிறத் திணிகல்
தொடர்ந்த பாறையில் வேய்இனம் சொரிகதிர் முத்தம்
இடம்தொறும் கிடந்து இமைப்பன, எக்கு இளம்செக்கர்
படர்ந்த வானிடைத் தாரகை நிகர்ப்பன பாராய்!'' (2168)

(திணி-வலிய; தொடர்ந்த-நீண்ட; இமைப்பன-ஒளிவிடுதல்; எக்குதல்-மேல்எழுதல்; தாரகை-நட்சத்திரம்)

''மங்கையர்களுக்குள் திலகம் போன்று திகழ்பவளே! மாணிக்கம் போன்ற சிவந்த நிறத்தை உடைய வலிய கல்லாலான நீண்ட பாறைகளில், மூங்கில் கூட்டங்கள் சிந்தியிருக்கின்ற ஒளி வீசுகின்ற முத்துக்கள், எல்லா இடங்களிலும் கிடந்து பிரகாசிக்கின்றன. அவை மேலெழுகின்ற இளமையான, சிவந்த, விரிந்த ஆகாயத்தினிடையில் விண்மீன்கள் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதைப் போன்று மிளிர்வனவற்றையும் காண்பாயாக!''

மூங்கிலிலிருந்து பிறந்த முத்துக்கள் செந்நிறமுடைய சித்திரகூட மலைப் பாறைகளில் உதிர்ந்து கிடப்பனவற்றுக்கு, செக்கர் பரவிய ஆகாயத்தில் விளங்கும் நாள் மீன்கள் உவமை. எக்குதல் என்பது மிகுதல் என்பதைக் குறிக்கும் தெலுங்குச் சொல்லும் ஆகும்.

28. ''குழுவும் நுண்தொளை வேயினும், குறிநரம்பு எறிவுற்று
எழுவுதண்தமிழ் யாழினும், இனியசொல் கிளியே!
முழுவதும் மலர்விரிந்த நாள் முருக்கு இடைமிடைந்த
பழுவம், வெங்கனல் கதுவியது ஒப்பது பாராய்!'' (2169)

Koviloor Digital Library

(குழுவும்-தொக்க; பழுவம்-காடு / சோலை; கதுவுதல்-பற்றுதல்; குறி-பெயர்; எழுவு-எழுப்புதல்; முருக்க மரம்-பலாசமரம்; எறிவுறுதல்-தெறித்தல்)

''நுண்ணிய துளைகள் அதிகம் உள்ள புல்லாங்குழல் இசையினும், சுரங்களைத் தனித்தனி குறிக்கும் நரம்புகளைத் தெறித்து இசை எழுப்பப்படுகிற குளிர்ந்த இனிய தமிழ் நாட்டு இசைக்கருவியாகிய யாழின் இசையினும், இனிமையான சொற்களைப் பேசும் கிளி போன்றவளே! அன்றலர்ந்த விரிந்த பூக்களை உடைய முருக்க மரங்கள் நிரம்பப் பெற்ற இக்காடு முழுவதும், கொடிய நெருப்புப் பற்றிக் கொண்டு கொழுந்து விட்டு எறிவது போல இருப்பதையும் காண்பாயாக!''

தமிழ் யாழ் என்பதற்கு இனிய யாழ்க் கருவி என்றும், தமிழ் நாட்டின் இசைக்கருவியாகிய யாழ் என்றும் இருவேறு பொருள்கள் கூறுதல் உண்டு; நெருப்புப் போலச் செந்நிறமாக மலர்ந்த பூக்களை மிகுதியாக உடைய முருக்க மரங்களை உடைய காடு, தீப்பற்றி எரிவது போல இருக்கிறது என்று கூறியது ஒரு நயம். முள் முருக்கின் பூக்கள் தீப் போலச் செந்நிறமுடையன. அம்மரங்களில் இலையே இல்லாமல் முழுதும் பூக்களே நிரம்பியிருத்தலால், அத்தகைய மரங்கள் அடர்ந்த காடே தீப்பற்றி எறிவது போலத் தோற்றுகின்றது என்பதாம்.

29. ''வளைகள் காந்தளில் பெய்தன அனைய கைமயிலே!
தொளைகொள் தாழ்தடக்கை நெடுந்துருத்தியில் தூக்கி,
அளவுஇல் மூப்பினர் அருந்தவர்க்கு, அருவி நீர் கொணர்ந்து
களப மால்கரிக் குண்டிகை சொரிவன காணாய்!'' (2170)

(அளவுஇல்-மிக்க; தாழ்-தொங்குகின்ற; துருத்தி-தோல்பை; குண்டிகை-கமண்டலம் / கரகம்; தூக்கி-தாங்கி; மால்-மதமயக்கம்; களபம்-யானைக்கன்று)

''காந்தள் மலருக்கு வளையல்கள் இட்டிருப்பது போன்ற கைகளையுடைய, மயில் போலும் சாயலை உடையவளே! நுனியில் துளை பொருந்திய தாழ்ந்து தொங்குகின்ற பெரிய துதிக்கையையுடைய மதம் மயக்கம் மிக்க பெரிய யானைக் கன்றுகள், தம்முடைய துருத்தி போன்ற தோற்பைகளில் அருவி நீரைத் தாங்கிக் கொண்டுவந்து, அளவற்ற, மிக்க மூப்பினை உடைய, அரிய தவம் செய்யும் முனிவர்களின் கமண்டலங்களில் ஊற்றுவதைக் காண்பாயாக!''

காந்தள் மலருக்குப் பெண்களின் கைகளை உவமை கூறுவது கவிமரபு. அம்மலையில், மதமயக்கம் உடைய யானைகளும் சாந்த குணமுடையனவாய் முதுமையான தவசியர்க்கு உதவுகின்றன என்பதாம். களபம் என்பது முப்பது வயதுடைய யானையைக் குறிக்கும் என்று கூறுவர். துருத்தி என்னும் தோல்பை தண்ணீர் முகக்க உதவுவது.

Koviloor Digital Library

30. ''வடுவின் மாவகிர் இவைஎனப் பொலிந்த கண்மயிலே!
இடுகு கண்ணினர், இடர்உறு மூப்பினர், ஏக,
நெடுகு கூனல்வால் நீட்டின, உருகுஉறும் நெஞ்சக்
கடுவன், மாதவர்க்கு அருநெறி காட்டுவ, காணாய்!'' (2171)

(வகிர்-பிளப்பு; இடுகு-இடுங்கிய; உருகுறும்-நெகிழ்ந்த; கூனல்-வளைந்த; கடுவன்-ஆண் குரங்கு)

''இவை மாவடுவின் பிளப்பு என்று சொல்லும் படியாக அமைந்த கண்களை உடைய, மயில் போன்ற சாயலை உடையவளே! இங்கு பெரிய தவம் செய்திருக்கின்ற முனிவர்களில் இடுங்கிய கண்களை யுடையவர்களும், மூப்பினால் துன்புறுகிறவர்களும், தங்கள் வழியறிந்து செல்ல, நெகிழ்ந்த நெஞ்சமுடைய ஆண் குரங்குகள், தமது நீண்டதும், வளைந்ததுமான வால்களை நீட்டி அவைகளைப் பற்றி நடக்குமாறு உதவுகின்றதையும் காண்பாயாக!''

வகிர்ந்த மாவடு, மகளிரின் கண்களுக்கு உவமை; முன் பாடலில் சித்திரகூட மலையில் யானைகள் உதவி செய்தன எனக் கூறிய கவிஞன், இப்பாடலில் ஆண்குரங்குகளும் அவர்களுக்கு உதவி செய்தன என்கிறான். வாழ்கின்ற இடத்திற்கு ஏற்ப, அஃறிணை உயிர்களின் பண்பும் மாறக்கூடும் என்பது இதன் மூலம் புலனாகும்.

31. ''பாந்தள், தேர் இவை பழிபடப் பரந்த பேர்அல்குல்!
ஏந்தும் நூல் மணிமார்பினர் ஆகுதிக்கு இயையக்
கூந்தல் மென்மயில் குறுகின, நெடுஞ்சிறை கோலிக்
காந்துகுண்டத்தில்அடங்கு எரிஎழுப்புவ,காணாய்!'' (2172)

(பாந்தள்-பாம்பின் படம்; பட-அடையும்படி; இயைய-ஏற்றதாக; கூந்தல்-தோகை; காந்து-சூடுஉடைய; கோலி-வீசி; எரி-நெருப்பு; சிறை-இறக்கை; எழுப்புவ-கனன்று-எழச் செய்வது)

''பாம்பின் படமும், தேர்த்தட்டும், ஒப்பாகாமையால் அவை, பழிப்பிற்கு உள்ளாகும் படியான, அகன்ற பெரிய அல்குலை உடையவளே! முப்புரிநூல் அணிந்த மார்பினையுடைய அந்தணர்கள் இயற்றும் வேள்விக்கு ஏற்ப, இம்மலையில் உள்ள மெல்லிய தோகைகளையுடைய மயில்கள், தமது பெரிய இறக்கைகளை அசைத்து விசிறி போல், காற்றைப் பரவச் செய்து வீசி, சுடுகின்ற வேள்விக் குண்டத்தில் அடங்கியிருக்கின்ற நெருப்பினைக் கனன்று எழும்படி செய்வதைக் காண்பாயாக!''

பாம்பின் படமும், தேரின் தட்டும் பெண்களின் அல்குலுக்கு உவமையாகக் கூறப்படுவது கவிமரபு. முன்பு யானைகளும், பின்பு குரங்குகளும், இப்போது மயில்களும் சித்திர கூட மலையில் முனிவர்களுக்குத் தம்மால் ஆன உதவிகளைச் செய்கின்றன என்பதாம்.

Koviloor Digital Library

32. ''அலம்பு வார்குழல் ஆய்மயில் பெண் அருங்கலமே!
நலம்பெய் வேதியர் மார்பினுக்கு இயைவுஉற நாடிச்
சிலம்பி, பஞ்சினில் சிக்குஅறத் தெரிந்த நூல், தேமாம்
பலம்பெய்மந்திகள்,உடன்வந்துகொடுப்பன,பாராய்!'' (2173)

(அலம்பு-அசைகின்ற; வார்-நீண்ட; ஆய்-அழகிய; அருங்கலம்-அணிகலம்; பலம்-பழம் / கனிகள்; பெய்-எறிந்து விளையாடுதல்; மந்தி-பெண் குரங்குகள்; பெய்-செய்கின்ற; இயைவுற-ஏற்றதாக; சிலம்பி-சிலந்தி; நாடி-கருதி; தெரிந்த-நன்கு ஆராய்ந்த)

''அசைகின்ற நீண்ட கூந்தலையுடைய, அழகிய மயில் போலும் சாயலை உடைய, பெண்ணினத்திற்கே அணிகலனாய் விளங்கு கின்றவளே! உலகினுக்கு நன்மை செய்கின்ற மறையோர்கள் மார்பில் அணிவதற்கு ஏற்புடையதாக, சிலந்தி, பருத்தி, பட்டுப்பூச்சி ஆகியவற்றிலிருந்து பெறப்படுகின்ற நூல்களில் உள்ள சிக்குகளை அகற்றி, நன்கு ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட நூல்களையும், தேமாங்கனிகளையும், இங்கு வாழும் பெண்குரங்குகள் ஒரு சேரக் கொண்டு வந்து கொடுக்கும் அழகினைக் காண்பாயாக!''

யானைகள், ஆண் குரங்குகள், மயில்கள் வரிசையில் இப்பொழுது பெண் குரங்குகளும் முனிவர்களுக்கு உதவுகின்றன என்கிறான் கவிஞன்.

33. ''தெரிவைமார்க்கு ஒருகட்டளை எனச் செய்த திருவே!
பெரியமாக்கனி, பலாக்கனி, பிறங்கிய வாழை
அரியமாக்கனி, கடுவன்கள் அன்புகொண்டு அளிப்பக்
கரியமா, கிழங்கு அகழ்ந்தன கொணர்வன காணாய்!'' (2174)

(தெரிவைமார்-மகளிர்; கட்டளை-உவமை / முன்மாதிரி / உரைகல்; கடுவன்-ஆண்குரங்குகள்; பிறங்கிய-திரளான / அழகிய / மிக உயர்ந்த; கரிய மா-பன்றிகள்; அகழ்ந்தன-தோண்டியெடுத்தன)

''பெண்ணினத்திற்கே ஒரு முன் மாதிரியாகப் படைக்கப்பட்ட இலக்குமி போன்றவளே! ஆண் குரங்குகள், பெரிய மாம்பழங்கள், பலாப்பழங்கள், திரளாகவும், அழகாகவும் விளங்குகின்ற வாழை மரத்தின் பெறற்கரிய வாழைப்பழங்கள் முதலியவற்றை அன்புடனும் பக்தியுடனும் முனிவர்களுக்கு அளிக்கின்றதையும், விலங்குகளில் கரியதான பன்றிகள், தாம் பூமியைத் தோண்டிப் பறித்த வள்ளி, கவலை ஆகிய கிழங்கு வகைகளை அன்புடன் கொண்டு வந்து கொடுப்பதையும் காண்பாயாக!''

மகளிரைப் படைப்பதற்கு முன்மாதிரியாகச் செய்து அமைத்துக் கொள்ளும் வடிவம் கட்டளை எனப்படும். விலங்குகளுள் அறிவிற் சிறந்தன குரங்குகள் என்க. முன்னர்க் கூறிய நான்கு விலங்கு, பறவைகளுடன் இப்பொழுது பன்றியும் உதவி செய்கின்றது என்பதாம்.

Koviloor Digital Library

34. ''ஐவனக்குரல், ஏனலின் கதிர், இறுங்கு, அவரை,
மெய்வணக்குறு வேய்இனம் ஈன்ற மெல்அரிசி,
பொய்வணக்கிய மாதவர் புரைதொறும் புகுந்து, உன்
கைவணத்த வாய்க்கிள்ளை தந்து அளிப்பன, காணாய்!''(2175)

(வணத்த-வண்ணத்த / நிறம் வாய்ந்த; கிள்ளை-கிளிகள்; வணக்கிய-வென்ற; புரை-தங்கும் குடில் / இடம்; ஐவனம்-மலைநெல்; குரல்-கதிர்; ஏனல்-தினை / செந்தினை; இறுங்கு-ஒரு வகைச் சோளம்; வணக்குஉறு-வளைவு பொருந்திய; வாய்-அலகு)

''உன்னுடைய கைகளின் செந்நிறத்தைத் தன் வாய் அலகின் நிறமாகப் பெற்றிருக்கும் கிளிகள், மலை நெல்லின் கதிர்கள், செந்தினையில் இனிமையானகதிர்கள், சோளக்கதிர்கள், அவரை, உடல்வளைந்திருப்பது போல வளைந்திருக்கும் மூங்கில்கள் தோற்றுவித்த மெல்லிய அரிசி, முதலியவைகளை பொய்ம்மையைப் புறமுதுகிட்டுத் தோற்றோடச் செய்த சிறந்த தவசியர்கள் வாழும் குடில்களில் எல்லாம் புகுந்து, அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருப்பதைக் காண்பாயாக!''

இங்கு கூறப்பட்ட ஐவனம் முதலிய அனைத்தும் தவத்தினருக்கு ஏற்ற உணவுப் பொருள்கள் ஆகத்தக்கன. இதே போல பாரியின் பறம்பு மலையை, மூவேந்தரும் முற்றுகையிட்ட போது கிளிகள் தொண்டு செய்த நிகழ்ச்சிகள் இங்கு ஒப்பு நோக்கத் தகும்.

35. ''இடிகொள் வேழத்தை எயிற்றொடும் எடுத்து உடன்விழுங்கும்
கடிய மாசுணம், கற்றறிந்தவர் என அடங்கிச்
சடைகொள் சென்னியர், தாழ்வுஇலர், தாம் மிதித்து ஏறப்
படிகளாம் எனத் தாழ்வரை கிடப்பன பாராய்!'' (2176)

(இடி-முழக்கம்; எயிறு-கொம்புகள்; மாசுணம்-மலைப்பாம்புகள்; மிதித்து-அடிவைத்து; தாழ்வரை-மலையடிவாரம்)

''இடி முழக்கம் போன்று பிளிறுதலையுடைய யானைகளை அவற்றின் கொம்புகளோடு சேர்த்து எடுத்து விழுங்கும் இயல்புடைய கொடிய மலைப்பாம்புகள், இப்போது, இம்மலையில், கற்றறிந்தசான்றோர்போல அடக்கம் உடையனவாய், சடாமுடியை உடைய தலையையுடையவரும், எவ்விதத்திலும் தாழ்வில்லாதவருமான முனிவர்கள், தம்மைப் படியென்று கருதி அடிவைத்து ஏறிச் செல்லுவதற்கு ஏற்ப, மலையடிவாரத்தில் படுத்துக்கிடப்பனவற்றைக் காண்பாயாக!''

மலைப்பாம்புகளின்கொடியகுணத்தைக்கூறி, அவைகளும்அடங்கிப் போயிருந்தனஎன்று அந்தச்சித்திரகூட மலையின்பெருமைகூறப்பட்டது. யானையின்பிளிறலை இடிக்குஉவமிப்பதுகவிமரபு. ''பெருங்கையானை இடிக்குரல் இயம்பி'' என்பது பெருங்கதை. ''அரிமான் இடித்தன்ன'' என்பது கலித்தொகை; வலிமையுடைய மலைப் பாம்புகள் அடங்கி

Koviloor Digital Library

இருத்தலுக்கு, ஆற்றல் சான்ற கற்றுணர்ந்தவர்களின் அடக்கம் உவமை. ''நெடியோனே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல், அடியாரும், வானவரும், அரம்பையரும் கிடந்து இயங்கும் படியாய்க் கிடந்து, உன் பவளவாய் காண்பேனோ?'' என்பார் குலசேகராழ்வார். ''அறிஞர்க்கழகு கற்றுணர்ந்து அடங்கல்'' என்பது வெற்றிவேற்கை.

36. ''அசும்பு பாய்வரை அருந்தவம் முடித்தவர்; துணைக்கண்
தசும்பு வேய்ந்தவர் ஒத்தவர் தமக்கு விண் தருவான்,
விசும்பு தூர்ப்பனவாம் என, வெயில் உகவிளங்கும்
பசும்பொன் மானங்கள், போவன, வருவன பாராய்!'' (2177)

(அசும்பு-நீர் ஒழுக்கு / நீர்க்கசிவு; துணை-இரண்டு; தசும்பு-குடம்; விண்-வீட்டுலகு; தருவான்-தரும் பொருட்டு; விசும்பு-ஆகாயம்; தூர்ப்பன-மறைப்பன; உக-ஒளிகெடும்படி; மானங்கள்-விமானங்கள்; வேய்தல்-தாங்குதல்; வெயில்-சூரியன்)

''ஊற்றுப் பெருக்காலும், நீர்க் கசிவினாலும் நீர் பாய்கின்ற இம்மலையில், செய்தற்கரிய தவத்தைச் செய்து முடித்தவர்கள், தமது இரண்டு கண்களிலும், நீர்க் குடங்களைப் பொருத்தியவரைப் போல, எப்போதும் இறைவனையே நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடிப்பவர்கள், இவர்களுக்கு வீடுபேறு தரும் பொருட்டு, ஆகாயத்தையே போர்த்தி வைத்தது போல, சூரியனுடைய ஒளியே கெட்டு அழிந்து போகும்படி விளங்குகின்ற, பசிய பொன்னாலாகிய விமானங்கள் மேலுலகத்திற்கும் சித்திரகூட மலைக்கும் வருவதையும், மீண்டு செல்வதையும் காண்பாயாக!''

சித்திரகூடமலை, தேவர்களும் விமானத்தில் வந்து சஞ்சரித்துத் தங்கிப் போகும் பெருமை படைத்தது. அந்த விமானங்களே, அருந்தவம் முடித்த முனிவர்களை வீடுபேறடைதற்காக அழைத்துச் செல்ல வந்த விமானம் போலத் தோற்றம் அளித்தது என்பது ஒரு நயம்.

37. அந்தணர்களுக்கு விருந்தினராய் ஆகுதல்

இனைய யாவையும் ஏந்திழைக்கு இயம்பினன் காட்டி,
அனைய மால்வரை அருந்தவர் எதிர்வர, வணங்கி
வினையின் நீங்கிய வேதியர் விருந்தினன் ஆனான்
மனையில் மெய்எனும் மாதவம் புரிந்தவன் மைந்தன். (2178)

(மனை-இல்லற நெறி; ஏந்திழை-சிறந்த அணிகலன்கள் அணிந்த தேவி; நீங்கி-தொடர்பற்ற)

இல்லறத்தில் இருந்து கொண்டே வாய்மையென்னும் பெருந்தவத்தைப் புரிந்தவனான தசரதனது மைந்தனான இராமபிரான் இவ்வாறு சித்திரகூட மலையின் வளங்கள் எல்லாவற்றையும்

Koviloor Digital Library

எடுத்துக்கூறிக் காட்டிக் கொண்டே வந்தான். அவ்வாறு வந்தவர்களை, அந்த மலையில் வசித்துவரும் அரியதவத்தைச் செய்து வருகின்ற முனிவர்கள் எதிர்கொண்டு வரவேற்க, இராமன் முதலியவர்கள் அம்முனிவர்களை வழிபட்டு, இருவினைப் பயன்களினின்றும் தொடர்பற்றுப் போன அவ்வேதம் வல்லாருக்கு விருந்தினர் ஆயினர்.

வனத்திற்குச் செல்லாமல் அரண்மனையில் இருந்து கொண்டே, துறவறம் மேற்கொள்ளாமல் இல்லறத்தில் இருந்து கொண்டே, கடுந்தவம் இயற்றாமல், வாய்மை எனும் பெருந்தவம் இயற்றியவன் என்று தசரதனது சத்திய சீலத்தைப் புகழ்ந்து கூறியது கருதத்தக்கது. சித்திரகூட மலையில் வான்மீக முனிவரும் இருந்து அம்மூவரையும் வரவேற்று உபசரித்தார் என்று வான்மீகம் கூறும்.

38. சூரியன் மறைதல்

மாஇயல் உதயமாம் துளப வானவன்
மேவிய பகையிருள் அவுணர் வீந்துஉகக்
காஇயல் குடவரைக் கால நேமிமேல்
ஏவிய திகிரிபோல், இரவி ஏகினான். (2179)

(மாஇயல்-பெருமை பொருந்திய; துளபம்-துளசி மாலை; வானவன்-திருமால்; அவுணர்-அசுரர்கள்; வீந்து-இறந்து; காஇயல்-சோலைகள் பொருந்திய; குடவரை-மேற்கு மலை / அத்தமனகிரி; திகிரி-சக்கரப்படை; இரவி-சூரியன்; காலநேமி-அசுரர் தலைவன்; ஏவிய-செலுத்திய)

பெருமை பொருந்திய உதயகிரியில் துளசி மாலை அணிந்து விளங்கும் தேவனான திருமால், தேவர்களுக்குப் பகையாக அமைந்த இருள் போன்ற கரிய நிறம் வாய்ந்த அசுரர்கள் அழிந்து இறந்து போகுமாறு, சோலைகள் நிரம்பப் பெற்ற மேற்கு மலையில், அசுரர்களின் தலைவனான காலநேமி என்பவன் மேல் செலுத்திய சக்கராயுதத்தைப் போல, சூரியன் சென்று மறைந்தான்.

உதயகிரிக்குப் பெருமை மங்கலத்திசையாகிய கிழக்கில் இருத்தலும், பலரும் துதிக்கும் சூரியன் தன் பால் உதித்தலுமாம்; காலநேமி என்பவன் வரலாறு காணத்தகுந்தது. நரசிம்மாவதாரத்தில் இரணியன் அழிந்தான்; அவனுக்குப் புதல்வனாய் நூறு தலைகளும் நூறு கைகளும் கொண்ட காலநேமி என்ற அசுரன் பிறந்தான். அவன் தேவர்களை யெல்லாம் வென்று சத்திய லோகம் சென்றான். பிரமனைத் தேவர்கள் வணங்குவது போலத் தன்னை அசுரர்கள் வணங்க வேண்டும் என்று கூறி, அது போலவே சில காலம் வீற்றிருந்தான். தனது தந்தையைக் கொன்ற திருமாலையும் வெல்ல வேண்டும் என்ற செருக்கினால் போர் தொடங்கினான். திருமால் தனது சக்கராயுதத்தால் காலநேமியின் நூறு தலைகளையும் நூறு கைகளையும் அறுத்தெறிந்தான் என்பது வரலாறு.

Koviloor Digital Library

39. நிலவு தோன்றுதல்

சக்கரம் தானவன் உடலில் தாக்குற
எக்கிய சோரியில் பரந்தது எங்கணும்
செக்கர்; அத்தீயவன் வாயில் தீர்ந்து, வேறு
உக்க வான் தனிஎயிறு ஒத்தது, இந்துவே. (2180)

(தானவன்-அசுரன் / காலநேமி; எக்கிய-மேலெழுந்த; சோரியில்-இரத்தத்தைப்போல; செக்கர்-செந்நிறம் / செவ்வானம்; தீர்ந்து-நீங்கி; உக்க-உதிர்ந்த / கழன்று சிந்திய; வான்-பெரிய; தனி-ஒற்றை; இந்து-சந்திரன்; எயிறு-கோரப்பல்)

திருமாலினுடைய சக்கராயுதம், அசுரனான காலநேமியின் உடலில் சென்று தாக்கியதால், மேல் பொங்கி எழுந்த இரத்தத்தைப் போன்று செந்நிறம் வானம் எங்கும் பரவியது; அவன் வாயிலிருந்து நீங்கி, கழன்று உதிர்ந்த பெரிய ஒற்றைக் கோரப்பல் போல இருந்தது அப்பொழுது தோன்றிய சந்திரன்.

காலநேமி உடம்பிலிருந்து பொங்கிப் பரவிய இரத்தம், சூரிய அத்தமன காலத்தில் தோன்றும் செவ்வானமாகவும், அவனது வாயிலிருந்து உதிர்ந்த ஒற்றைக் கோரப்பல் அதன்பின் தோன்றிய சந்திரனாகவும் உருவகிக்கப்பட்டன. செவ்வானம்-இரத்தம்; சந்திரன்-கோரப்பல்.

40. மாலைக் கால வருணனை

ஆளனம் மகளிருக்கு அளித்த தாமரைப்
பூ, நனி முகிழ்த்தன புலரி போன பின்
மீன்என விளங்கிய வெள்ளி ஆம்பல் வீ
வான்எனும் மணித்தடம் மலர்ந்த எங்குமே. (2181)

(புலரி-சூரியன்; நனி-மிகவும்; முகிழ்ந்தன-குவிந்தன; மணி-அழகிய; தடம்-வாவி / நீர்நிலை; ஆனனம்-முகம்; மீன்-நட்சத்திரம்; வீ-பூ; ஆம்பல்-அல்லிப்பூ; புலரி-புலர்தலைச் செய்வது என்று சூரியனுக்குப் புலரி காரணப்பெயர்)

சூரியன் மறைந்த பிறகு, அதுகாறும் மகளிருக்குப் பொலிவை அளித்து வந்த தாமரைப் பூக்கள் மிகுதியாகக் குவிந்தன. வெள்ளிய அல்லிப் பூக்கள் ஆகாயம் எனும் அழகிய நீர் நிலைகளில் எல்லாம் , நட்சத்திரங்கள் விளங்கியது போல மலர்ந்திருந்தன.

சூரியன்மறைவதால்தாமரைகுவிதலும்,ஆம்பல்மலர்தலும்இயற்கை; பகலெல்லாம், பெண்களின் முகத்திற்குப் பொலிவை ஏற்படுத்திய தாமரைப் பூக்கள், சூரியன் மறைந்த பின் குவிந்து போயின. ஆனால் பெண்களின் முகம் மட்டும் அவ்வாறு குவியாது எப்போதும் போல் மலர்ந்தே இருந்தன என்பதாம். வானத்தில் விண்மீன்கள் மின்னுவது

Koviloor Digital Library

போல், நீர்நிலைகளில் வெள்ளாம்பல் மலர்கள் பூத்திருந்தனஎன்க. சூரியன் மறைந்த பிறகு தாமரைப் பூக்கள் பெண்களுக்குத் தம் பொலிவைத் தந்தனவாய் முற்றிலும் குவிந்துவிட்டன.

41. மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கின;
தந்தியும் பிடிகளும் தடங்கள் நோக்கின;
நிந்தைஇல் சகுந்தங்கள் நீளம் நோக்கின;
அந்தியை நோக்கினான் அறிவைநோக்கினான். (2182)

(மந்தி-பெண் குரங்கு; கடுவன்-ஆண் குரங்கு; தந்தி-ஆண்யானை; பிடி-பெண்யானை; தடங்கள்-மலைப்பக்கம் / வழி / உறையும் இடம்; நிந்தைஇல்-குற்றமற்ற; சகுந்தங்கள்-பறவை இனங்கள்; நீளம்-கூடு; அந்தி-மாலைக்கடன்கள்; தந்தத்தை யுடையதால் ஆண் யானைக்குத் தந்தி காரணப்பெயர்)

சந்திரன் தோன்றியதால், ஆண் குரங்குகளும் பெண் குரங்குகளும் தாம் தாம் உறைவதற்கு ஏற்ற இடமான மரங்களை நோக்கிச் செல்லலாயின; ஆண் யானைகளும் பெண்யானைகளும் தாம் உறைவதற்கு ஏற்ற மலையடிவாரம் செல்லும் வழியை நோக்கிச் சென்றன; குற்றமும் பழிப்பும் இல்லாத பறவைகள் எல்லாம் தம்முடைய உறைவிடமான கூடுகளை நோக்கிச் சென்றன; மெஞ்ஞானத்தால் மட்டுமே அறிவதற்கு உரியவனான இராமபிரான் தான் அந்திக் காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்காகச் செல்லலானான்.

சகுந்தம் என்ற சொல் பொதுவாகப் பறவைகளைக் குறிக்கும் என்றாலும், கழுகு என்பதே அதற்கு நேர் பொருள். இங்கே நிந்தைஇல் சகுந்தங்கள் என்றதனால், பழிப்புள்ளவையாகிய கழுகு, ஆந்தை, கோட்டான் முதலிய பறவைகளை விலக்குவதற்காகவே இவ் அடைமொழி பெய்யப்பட்டிருக்கிறது என்பதாம். அறிவை நோக்கினான் என்பதற்கு யாரிடம் மெய்யறிவு இருக்கிறது என்று அவர்களைத் தேடிப் போய் அருள்புரிபவனாகிய இராமபிரான் என்பதும் பொருந்துதல் காண்க.

42. மாலை வழிபாடு

மொய்உறு நறுமலர் முகிழ்த்தவாம் சில;
மையறு நறுமலர் மலர்ந்தவாம் சில;
ஐயனொடு இளவற்கும் அமுது அன்னாளுக்கும்
கைகளும் கண்களும் கமலம் போன்றவே. (2183)

(மொய்-நெருங்கிய; முகிழ்த்த-குவிந்தன; மையறு-குற்றமற்ற; ஐயன்-வியக்கத்தக்க குணநலன்களை உடையவன்)

இதழ்கள் நெருங்கிய நறுமணம் மிக்க மலர்கள் சில குவிந்தன; குற்றமற்ற மணம் மிக்க சில மலர்கள் மலர்ந்தன; வியக்கத்தக்க

Koviloor Digital Library

நற்பண்புகளை உடைய இராமபிரானுக்கும், இளையவன் இலக்குவனுக்கும், அமிழ்தம் போன்ற சீதாதேவிக்கும் அவர்கள் கைகளும், கண்களும், தாமரைப் பூப்போலக் குவிந்திருந்தன.

மாலையில் குவியும் மலர்கள் சில. எடுத்துக்காட்டு தாமரை; காலையில் மலரும் மலர்கள் சில. எடுத்துக்காட்டு ஆம்பல், குவளை; இங்கே இராமபிரான், இலக்குவன், சீதாதேவி ஆகியோரது கைகளும், கண்களும் தாமரை மலரைப் போல் இருந்தன என்று கூறி நமக்குக் குறிப்பால் உணர்த்துகிறான் கவிஞன். அவர்கள் கைகள் குவிந்திருப்பது வணங்கித் தொழுவதையும், கண்கள் குவிந்திருப்பது அவர்கள் தியானத்தி லிருப்பதையும் குறிக்கும் என்பதாம். மூவரும் மாலை வழிபாடு நிகழ்த்தினர் என்றவாறு. வழிபடும் போது கைகள் குவிந்திருத்தலும், கண்கள் மூடியிருந்தலும் இயல்பு தானே? விரிந்த நிலையிலும் கைகளும் கண்களும், அவற்றின் சிவந்த நிறத்தாலும், அழகாலும் தாமரைக்கு உவமிக்கப்பட்டன. இப்போது குவிந்த நிலையிலும் அவ்வுறுப்புக்களை அதே தாமரை மலருக்கு உவமித்தது ஒரு நயம். அவர்கள் கை குவித்துக் கண்மூடிக் கடவுளைத் தியானித்தது குறித்தது.

43. இலக்குவன் அமைத்த சாலை

மாலைவந்து அகன்ற பின், மருங்குஇலாளோடு
வேலைவந்து உறைவிடம் மேயதாம் எனக்
கோலைவந்து உமிழ்சிலைத் தம்பி கோலிய
சாலைவந்து எய்தினான், தவத்தின் எய்தினான். (2184)

(உமிழ்-பொழிகின்ற; கோலிய-செய்த / அமைத்த; சாலை-பன்ன சாலை / பர்ணசாலை / தழைக்குடில்; வேலை-கடல்; மேயது-வந்தடைவது; கோல்-அம்பு; வந்து-காற்று)

தேவர்களும் பிறரும் செய்த பெருந்தவத்தின் பயனாய் இவ்வுலகில் அவதரித்த இராமபிரான், மாலை வந்து அகன்று இரவு வந்த போது, இடையே இல்லாத / நுண்ணிய இடையை உடைய சீதாதேவியோடு, பாற்கடலே வந்து தனது உறைவிடத்தை அடைந்தது போன்று, அம்புகளைக் காற்றுப் போலப் பொழிகின்ற வில்லை உடைய தம்பியாகிய இலக்குவன் திருத்தமாக அமைத்த ஒரு பர்ணசாலை இருந்த இடத்தை அடைந்தான்.

அந்தத் தழைக்குடில், இவர்கள் தங்குவதற்காகவே பாற்கடலில் ஒரு பகுதி அங்கு வந்து அமைந்தாற் போன்று திருத்தமாகச் செய்யப்பட்டிருந்தது என்பது கருத்து. வந்து என்பது காற்று என்ற பொருளில் கந்தபுராணத்தில் கையாளப்பட்டிருப்பதால், இங்கும் வந்து என்பதற்குக் காற்று என்று பொருள் கொள்ளப்பட்டது. ''வந்தெனக் கந்தன் நூறுகணை தொட'' என்பது கந்தபுராணம்.

Koviloor Digital Library

44. இலக்குவன் சாலை அமைத்த முறை

நெடுங்கழை குறுந்தறி நிறுவி, மேல்நிரைத்து,
ஒடுங்கல்இல் நெடுமுகடு ஒடுக்கி, ஊழ்உற
இடுங்கல்இல் கைவிசித்து ஏற்றி, எங்கணும்
முடங்கல்இல் வரிச்சு மேல் விரிச்சு மூட்டியே. (2185)

(குறுந்தறி-குறுகிய தூண்கள்; நெடுங்கழை-நீண்ட மூங்கில்கள்; நிரைத்து-ஒழுங்குபட / வரிசையாக; ஒடுங்கல்இல்-குறைவுபடாத; ஒடுக்கி-போக்கி; ஊழ்-வரிசை / முறை; இடுங்கல்இல்-நெருங்குதல் இல்லாத; விசித்து-இணைத்துக் கட்டி; முடங்கல் இல்-வளைவு இல்லாத; விரிச்சு-பரப்பி; மூட்டி-இணைத்து; முகடு-முகட்டுவளை; வரிச்சு-வரிச்சுக் கோல்களுமாம் / ஓலைக் கொத்து) (குளகப்பாடல்)

குறுகிய தூண்களை நீண்ட மூங்கில்களின் மேல்நிலை பெறுமாறு வைத்து, வரிசையான, ஒழுங்கான, குறைவுபடாத முகடுகளைப் போக்கி, முறையாக, நெருங்குதல் இல்லாத மூங்கில் கைகளை ஏற்றி, எல்லா இடங்களிலும் வளைவில்லாத நேரான பருமனான வரிச்சுக் கோல்களை வைத்துப் பரப்பி இணைத்தான். பாடல் முடியவில்லை தொடர்கிறது.

நெடுங்கழை, குறுந்தறி, வளை, முகடு, கை, வரிச்சு, தூலம், ஓலைக் கொத்துக்கள் என்பவை எல்லாமும் பர்ணசாலை அமைக்கத் தேவையான உறுப்புக்கள்.

45. தேக்குஅடைப் படலையின் செறிவு செய்து, பின்
பூக்கிளர் நாணலின் புல்லு வேய்ந்து, கீழ்த்
தூக்கிய வேய்களில் சுவரும் சுற்றுறப்
போக்கி, மண் எறிந்து, அவை புனலில் தீற்றியே. (2186)

(அடை-இலை; செறிவு செய்தல்-மூடி மறைத்தல் / நெருங்க அமைத்தல்; கிளர்-மிக்க; தூக்கிய-மேல்எழ ஊன்றிய; சுற்றுற-சூழ; தீற்றி-தெளித்து / தேய்த்து / மெழுகிப் பூசி / மணியாசு செய்தல்; படலை-படல் / பரப்பு; வேய்-மூங்கில்; வேய்ந்து-மூடி)

உலர்ந்த தேக்கு இலைகளின் பரப்பினால் நெருங்க அமைத்து மூடினான். பின்னர் பாதுகாப்புக்காக பூக்கள் மிகுந்த நாணற்புல்லினால் கூரை வேய்ந்தான். கீழே, மேல்எழும்படியாக ஊன்றியிருக்கின்ற மூங்கில்களால் சுற்றிலும் நீளமாகச் சுவர் எழுப்பினான். பின்னர் அவற்றின் இடையே குழைத்த மண்ணை எறிந்து அப்பி, அவை உறுதிபடும்படி தண்ணீர் தெளித்துப்பின் மணியாசுக்கட்டையால் மெழுகிப்பூசிச் சமன் செய்தான்.

கூரைகளின் மேல் நாணல், விழல்போன்ற புற்கள் வேய்தல் இன்றும் வழக்கத்தில் இருக்கிறது. மூங்கில் கோல்களை பிளாச்சுகளை நெருங்க நிறுத்தி, அவற்றின்மேல் குழைத்த மண்ணை அப்பி அமைக்கும் சுவர்

Koviloor Digital Library

தனியாக மண்ணினால் அமைக்கும் சுவர்களைக் காட்டிலும் உறுதியுடையதாகும்.

46. வேறு இடம் இயற்றினன் மிதிலை நாடிக்கும்
கூறின நெறிமுறை குயிற்றிக் குங்குமச்
சேறுகொண்டு அழகுஉறத் திருத்தித் திண்சுவர்
ஆறுஇடு மணியோடு, தரளம் அப்பியே. (2187)

(குயிற்றி-அமைத்து; இடு-கொணர்ந்து ஒதுக்கிய; மணி-இரத்தினங்கள்; தரளம்-முத்துக்கள்; சேறு-செஞ்சாந்து; அப்பி-பதித்து / பொருத்தி) குளகப்பாடல்.

மிதிலை நாட்டவளான சீதாதேவிக்கும் தனியான வேறு இடம்-வேறு அறை-அமைத்தான். முன்பு கூறியபடியும், மனையடி சாத்திரத்தில் கூறிய முறைப்படியும் இயற்றினான். உட்புறத்தில் குங்குமம் கலந்த செஞ்சாந்து கொண்டு, அழகாகத் திருத்தமாக வலிய சுவர்களை அமைத்து, அதன்மேல் ஆறுகள் கொண்டு வந்து சேர்க்கும் இரத்தின, மாணிக்கங்களோடு, முத்துக்களையும் பதித்தான்.

தவநெறியில் வாழ்கின்றனர். எனவே இருவருக்கும் வெவ்வேறு தனித்தனி அறைகள் அமைத்தான் என்பதாம்.

47. மயிலுடைப் பீலியின் விதானம் மேல் வகுத்து,
அயிலுடைச் சுரிகையால் அருகு தூக்கு அறுத்து,
எயில் இளங் கழைகளால் இயற்றி, ஆறுஇடு
செயல் உடைப் புது மலர் பொற்பச் சிந்தியே. (2188)

(பீலி-தோகை; விதானம்-மேற்கட்டி; அயில்-கூர்மையான; சுரிகை-உடைவாள் / கத்தி; அறுத்து-கொய்து; எயில்- புறமதில் / அரண்; பொற்பு-அழகு பொருந்திய; வகுத்தல்- செய்தல்; அருகு-ஓரங்கள்; கழை-மூங்கில்; தூக்கு-தொங்கல்; சிந்தி-பரப்பி)

மயிலின் தோகையை மேற்கட்டியாக அமைத்தான். கூர்மையான தனது உடையவாளினால் கூரையின் விளிம்புகளில் தொங்கும் புல், தழை முதலியவற்றைக் கொய்து எறிந்தான். அரண் போலப் புற மதில்களை இளமையான மூங்கில்களால் அமைத்தான். ஆறுகள் கொண்டு வந்து குவித்த புதிய மலர்களை அழகுறப் பரப்பி வைத்தான்.

முன்பாடல்களில் அவன் குடில் அமைத்ததைக் கூறி இந்தப் பாடலில் அழகு செய்தலையும் புறக்காவல் அமைத்தலையும் கூறியதால் குடிலின் சிறப்பும் அமைப்பும் தெளிவாகக் கூறப்பட்டன. இலக்குவனின் கைவண்ணம் காட்டும் இடம் இது. இந்தக் குடில், சித்திரகூட மலைப்பிரதேசத்தில் ''மால்யவதி'' என்னும்நதிக்கரையில் அமைக்கப் பட்டது என்றும் கூறுவர்.

Koviloor Digital Library

48. அந்தச் சாலையில் இராமன் புகுதல்

இன்னணம் இளையவன் இழைத்த சாலையில்
பொன்நிறத் திருவொடும், குடிபுக்கான், அரோ!
நன்னெடுந் திசைமுகன் அகத்தும், நம்மனோர்க்கு
உன்னரும் உயிருளும் ஒக்க வைகுவான். (2189)

(திசைமுகன்-நான்முகன் / பிரமன்; உன்னஅரும்-நினைத்தற்கும் அரிய; ஒக்க-ஒரு தன்மையாக; இன்னணம்-இவ்வாறு; நெடுமை-பெருமை)

இவ்வாறு இளையோனான இலக்குவன் அழகுற அமைத்த சாலையில், பொன்னைப் போன்ற அழகுடைய இலக்குமி போன்ற சீதாதேவியோடும், நன்மையும், பெருமையும் உடைய நான்முகனான பிரமன் உள்ளத்திலும், நம்மைப் போன்ற நினைப்பதற்கும் அருமையான தாழ்ந்த உள்ளங் கொண்ட உயிரினங்களிலும் ஒரே தன்மைத்தாக உறைகின்ற இராமபிரான், இப்போது இந்த எளிய குடிலில் புகுந்தான்.

இறைவனையும் மக்களையும் இரு துருவங்களாகக் கூறுவது வழக்கு. அத்தகைய இரண்டு வகையினர் இடத்தும் ஒரே தன்மையாக உறைபவன், இப்போது இந்தச் சிறிய குடிசையில் உறைவதற்காகப் புகுகிறான் என்பது இராமபிரானின் எளி வந்த தன்மையை உணர்த்துவதாகும். இலக்குவனைக் கொண்டு ஒரு மானை அடித்துவரச் செய்து அதனால் ''வாஸ்து ஹோமம்'' செய்தபின் பர்ணசாலையில் புகுந்ததாக வான்மீகம் கூறும். குடில் அமைத்துத் தங்க வேண்டியதற்குக் காரணம், காட்டில் வாழ விதிக்கப்பட்ட காலம் முழுவதும் சித்திரகூட மலையிலேயே தங்கியிருக்கலாம் எனப் பரத்துவாச முனிவன் கூறியதே என்க.

49. மாயம் நீங்கிய சிந்தனை, மாமறை
தூயபாற்கடல், வைகுந்தம், சொல்லலாம்
ஆயசாலை, அரும்பெறல் அன்பினான்
நேயநெஞ்சின் விரும்பி நிரம்பினான். (2190)

(மாயம்-மயக்கம் / அவிச்சை; மா-பெருமை / சிறந்த; அரும்பெறல்-பெறுதற்கரிய; நேயம்-நட்பு; நிரம்புதல்-நிறைவுடைமை)

அஞ்ஞானம் என்னும் மயக்கத்திலிருந்து நீங்கிய ஞானியர்களின் மனம், சிறந்த பெருமை பொருந்திய வேதம், தூய்மையான பாற்கடல், பரமபதம் எனப்படும் வைகுந்தம், இவைகள் எல்லாம் இறைவன் உறையும் இடங்கள். இவைகளுக்கெல்லாம் ஒப்பு என்று சொல்லும்படி இளையவனால் அமைக்கப்பட்ட இந்தச் சாலையில், யாவரும் பெறற்கரிய அன்பையுடையவனும், நேசம் மிகுந்த நட்பினனும் ஆன இராமபிரான் தானே விரும்பிப் புகுந்து மனநிறைவு எய்தினான்.

Koviloor Digital Library

இதேபோல வில்லிபாரதத்தில் ஒரு குடில். அங்கே கிருஷ்ணன் எழுந்தருளுகிறார். பாடலைக் கேளுங்கள். ''முன்னமே துயின்றருளிய பயோததியோ? பன்னகாதிப் பாயலோ? பச்சை ஆலிலையோ? சொன்ன நான் மறைச் சுருதியோ? கருதி நீ எய்த, என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்?'' என்றான் என்பது வில்லிபாரதம்.

50. இராமன் கருத்து

''மேவுகானம் மிதிலையர் கோன் மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன;
தாஇல்எம்பி கை சாலை சமைத்தன;
யாவை யாதும் இலார்க்கு இயையாதவே!'' (2191)

(மேவு-பொருந்திய; தாஇல்-குற்றமற்ற)

சனக நாட்டு மன்னர் மகளாகிய சீதாதேவியின் பூவை விட மென்மைனயான பாதங்களும், நாம் வந்தடைந்த கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் வந்து சேர்ந்தன; குற்றமற்ற என் தம்பியாகிய இலக்குவனின் கைகள், நாம் தங்குதற்கேற்ற இனிய பர்ணசாலைகளை அமைத்தன; எதுவும் இல்லாதவர்க்கு எய்த முடியாதவை என்ன இருக்கிறது? எல்லாம் முடியும்.

51. இராமன் இலக்குவனைப் பாராட்டுதல்

என்று சிந்தித்து, இளையவற் பார்த்து, ''இரு
குன்று போலக் குவவிய தோளினாய்!
என்று கற்றனை நீ இதுபோல்?'' எனாத்
துன்று தாமரைக் கண் பனி சோர்கின்றான். (2192)

(குவவிய-திரண்ட; துன்று-நிறைந்த / செறிந்த; பனி-நீர்த்துளி; சோர்தல்-சிந்துதல்)

என்று இவ்வாறு நினைத்து இளையவனான இலக்குவனை நோக்கி, ''இரண்டு மலைகளைப் போலத் திரண்ட தோள்களை உடையவனே! இவ்வாறு அழகிய குடிலை இவ்வளவு சிறப்பாக அமைப்பதற்கு எப்பொழுது, எங்கு கற்றுக்கொண்டாய்?'' என்று பாராட்டித்தனதுதாமரை மலர்போன்ற கண்களில் கண்ணீர்த்துளி பெருகி நிற்கலானான், இராமபிரான்.

இருவரும் எல்லாக்கலைகளையும் வசிட்டரிடம் ஒன்றாகத் தானே கற்றுக் கொண்டோம்? இந்தக்கலையை மட்டும் நீ எப்படி எங்கு எப்பொழுது கற்றுக் கொண்டாய் என்று வியப்புற்றான் என்பதாம்.

52. ''அடரும் செல்வம் அளித்தவன் ஆணையால்,
படரும் நல்லறம் பாலித்து, இரவியின்

Koviloor Digital Library

சுடரும் மெய்ப்புகழ் சூடினென் என்பது என்?
இடர் உனக்கு இழைத்தேன் நெடுநாள்'' என்றான். (2193)

(அடரும்-செறிந்த; செல்வம்-தவச்செல்வம்; பாலித்து-காத்து; சூடினென்-தரித்தேன்; இரவி-சூரியன்)

''மிக அடர்த்தியான தவச் செல்வத்தை வனம் புகுவதால் எனக்கு அளித்த நம் தந்தை தசரதனது கட்டளையினால், பரவுகின்ற நல்லறச் செயல்களைக்காத்து, சூரியனைப்போல் ஒளிவிடும் உண்மையான புகழை நான்அடைந்தேன் என்று உலகோர்கூறுவதில் என்ன நன்மை இருக்கிறது? நான் நீண்ட நெடுங்காலமாக உனக்குத் துன்பத்தைத் தந்துவிட்டேன்'' என்று மனம் வெதும்பிக் கூறினான் இராமன்.

''நான் வனம் புகுந்து தவம் செய்வதாலும், தந்தையை வாய்மையுடையவனாக ஆக்கியதாலும், உலகோர் என்னைப் புகழ்வார்கள். இருந்தாலும் அதனால் என்ன நன்மை? உனக்கு நான் நெடுங்காலம் தீமை செய்து கொண்டிருக்கிறேனே'' என்று வருந்துகிறான் இராமன். தன்னால் பிறருக்குத் துன்பம் இன்றி ஒருவர் எய்தும் புகழே உண்மையான புகழாகும். ஆனால் நானோ ஒரு பாவமும் அறியாத உனக்கு வனத்தில் அலைவதாகிய பெருந்துன்பம் தருபவனாக இருக்கிறேனே என்று கூறி வருந்தினான் என்க. பிறருக்குத் துன்பம் செய்து தனக்குப் புகழ் தேடிக் கொள்வது அறத்தின் பாற்பட்டதன்று என்பது இராமன் கருத்து.

53. இலக்குவன் மறுமொழி

அந்தவாய் மொழி ஐயன் இயம்பலும்,
நொந்த சிந்தை இளையவன் நோக்கினான்,
''எந்தை! காண்டி! இடரினுக்கு அங்குரம்
முந்திவந்து முளைத்ததன்றோ?'' என்றான். (2194)

(அங்குரம்-முளை; முந்தி-கருவாய்ப் புகும் முன்னரே / பழவினையால்; முளைத்தது-தோன்றியது; வாய்மொழி-சொல்)

அவ்வாறு இராமன் கூறக்கேட்டதும், இலக்குவன் மனம் மிக நொந்து இராமனை நோக்கி, ''என் தந்தை போன்றவனே! நான் கூறுவதைக் கேளுங்கள். இத்தகைய துன்பத்திற்கு முளை-வித்து நீ மூத்தவனாகப் பிறந்ததாலும், நான் கருவில் உருவாவதற்கு முன்னரே நம் தந்தை நம் தாய் கைகேயிக்குக் கொடுத்த இரு வரங்களினாலும் தோன்றியதன்றோ?□ என்று கூறினான்.

பொதுவாக இத்துன்பங்களுக்கெல்லாம் காரணம், முன்னரே தசரதன் கைகேயிக்கு வரம் தந்ததனால் உண்டாகியதே; இதற்கு நீ வருந்துதல் கூடாது என்று கூறியதாகக் கொள்வது பொருந்தும். என்று நம் தந்தை கைகேயிக்கு வரம் தந்தாரோ, அன்றே நீங்கள் இன்று அடையும்

Koviloor Digital Library

துன்பங்களுக்கும் வித்து இட்டாகிவிட்டது என்று இலக்குவன் கூறினான் என்பதாம்.

54. ஆகச் செய்யத் தக்கது இல்லை; அறத்தின் நின்று
ஏகல் என்பது அரிது என்றும் எண்ணினான்;
ஓகை கொண்டவன் உள்இடர் நோக்கினான்
சோக பங்கம் துடைப்பு அரிதால் எனா. (2195)

(ஓகை-உவகை / மகிழ்ச்சி; உள்இடர்-மனத்துன்பம்; பங்கம்-மாசு / அழுக்கு / பிணிப்பு / சோர்வு; ஏகல்-கைவிடுதல் / மீறிச் செல்லுதல்; அறம்-நோன்பு / விரதம்; துடைப்பு-துடைத்தல் / போக்குதல்)

அதனைக் கேட்ட இராமபிரான், தனக்குப் பணிவிடை செய்வதில் மகிழ்ச்சி கொள்பவனான இலக்குவனது மனத்துயரத்தை எண்ணிப் பார்த்து, இவனுடைய சோகப்பிணிப்பைப்போக்குவது என்பது இயலாது. அதைப் போலவே நாமும் நாம் மேற்கொண்ட அறநெறியாகிய தவவொழுக்கத்தினின்றும் நீங்குதல் என்பதும் இயலாதது என்று எண்ணி, எனவே இப்போது நாம் செய்யத் தக்கது ஒன்றும் இல்லை என்று கருதினான்.

55. பின்னும் தம்பியை நோக்கி, பெரியவன்
''மன்னும் செல்வத்துக்கு உண்டு வரம்பு; இதற்கு
என்ன கேடு உண்டு? இவ் எல்லைஇல் இன்பத்தை
உன்னு; மேல்வரும் ஊதியத்தோடு'' என்றான். (2196)

(பெரியவன்-மூத்தவன்; கேடு-அழிவு; ஊதியம்-பயன் / இலாபம் / பேறு; உன்னு-நினைக; மன்னும்-பொருந்தும்; மேல்-மறுமையில்)

மூத்தவனும், யாவரினும் பெரியவனுமாகிய இராமபிரான், மீண்டும் ஒருமுறை தம்பி இலக்குவனைப் பார்த்து, ''உலக மக்களிடையே வந்து பொருந்தும் பொருட் செல்வத்துக்கும், அரச குமாரர்களுக்கு வந்து பொருந்தும் அரசச் செல்வத்துக்கும் ஒரு எல்லை உண்டு. ஆனால் நாம் இப்போது மேற் கொண்டிருக்கின்ற தவ வாழ்க்கையாகிய செல்வத்திற்கு என்ன கேடு உள்ளது? இதற்கு அழிவே இல்லை. நாமே இதை விட்டு விலகிப்போனால் தானே தவிர, பகைவர்களாலோ, மற்ற பிற பொருள்களாலே இவ்வாழ்க்கைக்கு அழிவே இல்லை; எனவே வரம்பே இல்லாத இவ்வின்ப வாழ்க்கையை, அது மறுமையில் தருகின்ற வீடுபேறாகிய நற்பயனோடு கருதிப்பார்'' என்று இலக்குவனைத் தேற்றினான்.

அரசச்செல்வத்துக்கு ஒரு எல்லை உண்டு; அது கேடு சூழ்ந்தது; துன்பம் தருவது; ஆனால் அதற்கு மாறாக நாம் மேற்கொண்டுள்ள தவவாழ்க்கைக்கு ஒரு காலவரையறை இல்லை; கேடற்ற நற்பேறு விளைவிப்பது, என்றும் இன்பம் தருவது. எனவே இதனால் நாம்

Koviloor Digital Library

மகிழவேண்டுமே யன்றி வருந்துதல் கூடாது என்று இலக்குவனை இராமபிரான் தேற்றினான் என்க.

56. கவிக்கூற்று

"தேற்றித் தம்பியைத் தேவரும் கைதொழ
நோற்று இருந்தனன் நோன் சிலையோன்; இப்பால்
ஆற்றல் மாதவன் ஆணையில் போனவர்
கூற்றின் உற்றது கூறல் உற்றாம் அரோ!" (2197)

(நோன்-வலிய; தேற்றி-தெளிவித்து; நோற்று-நோன்புகளைக் செய்து கொண்டு; கூற்று-சொற்கள்)

வலிமைமிக்க வில்லை ஏந்திய இராமபிரான், இவ்வாறு தன் தம்பியைத் தெளிவித்து, தேவர்களும் கைதொழும்படி விரதம் மேற்கொண்டு சித்திரகூட மலையில் தங்கியிருந்தான். இனி, வலிமை வாய்ந்த சிறந்த தவசியான வசிட்டமாமுனிவனின் கட்டளையினால் பரதனை அழைத்துவரக் கேகய நாட்டிற்குப் போன தூதுவர்களின் சொற்களினால் அயோத்தியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விரிவாகக் கூறுவோம்.

சித்திரகூடப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

10. பள்ளி படைப் படலம் [144 பாடல்கள்]

பள்ளி என்பது ஈமப்பள்ளியையும்; படை என்பது படுத்தலையும் குறித்து, பள்ளி படைப் படலம் என்பது தசரதனது இறந்த உடலை ஈமப்பள்ளியில் படுக்க வைத்து எரியூட்டி ஈமக்கடன்களை நிறைவேற்றிய பகுதிகளைக் கூறும் படலம் என விரியும். இது 144 பாடல்களைக் கொண்டது. இது சில சுவடிகளில் ''பள்ளியடைப் படலம்'' எனவும், ''பள்ளியரைப் படலம்'' எனவும், ''பள்ளிப்படலம்'' எனவும், ''பள்ளியிடைப் படலம்'' எனவும் குறிக்கப் பெற்றிருக்கின்றன. சில பிரதிகளில் இது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு, முன்பகுதி ''பரதன் நகர்புகு படலம்'' எனவும் பின் பகுதி ''தகனம் செய்படலம்'' எனவும் குறிக்கப்பெற்றிருக்கின்றன.

இப்படலத்துள் தசரதன் இறந்ததும், பரதனை அழைத்துவர வசிட்டன் அனுப்பிய தூதர்கள் கேகய நாட்டை அடைந்து பரதனிடம் திருமுகத்தைக் காண்பித்தலும், அவர்களுக்கு அவன் நிதியம் அளித்தலும், பரதனும் சத்துருக்கனனும் இராமனைக் காணும் மகிழ்ச்சியோடு விரைந்து புறப்படுதலும், உடன் வந்த சேனைகளோடு ஏழுநாள் பயணம் செய்து கோசல நாட்டை அடைதலும், அங்கே அலங்கோலக் காட்சிகளைக் காணலும், அயோத்தியை நெருங்கி அதன் பொலிவிழந்த நிலையைக் காணுதலும், அதனைச் சத்துருக்கனனுக்குக் காட்டுதலும், முதலில் தந்தையைக் காண அவன் அரண்மனை நோக்கிச் செல்லுதலும், அங்கே தசரதனைக் காணாது ஐயம் கொண்டு, கோசலையைக் காண அவள் அரண்மனைக்குச் செல்ல இருக்கும் போது, கைகேயி அழைப்பதாக ஒருத்தி வந்து உரைக்க அவன் கைகேயி அரண்மனை அடைந்து கைகேயியை வணங்குதலும், கைகேயி தன் தந்தை முதலானோர் நலம் உசாவுதலும், தந்தை எங்கே என்று பரதன் வினவ ''அவர் வானகம் சென்றார் நீ வருந்தாதே'' என்று கூறுதலும், அது கேட்ட பரதன் பெருந்துயர் கொண்டு கைகேயியைப் பலவாறு கடிந்து கூறுதலும், பின்னர் தேறி இராமனைக் கண்டால் அல்லது இத்துயர் தீராது என்று கருதி ''இராமன் எங்குளன்?'' என்று தாயைக் கேட்க, கைகேயி, அவன் கானகம் சென்றமையைக் கூறுதலும், இன்னும் எத்துணை துன்ப நிகழ்ச்சிகளைக் கேட்க நேருமோ என்று கருதி ''இராமன் வனம்புகக் காரணம் என்ன?'' என்று கேட்க, தனது வரத்தினால் இவை நேர்ந்தன எனக் கைகேயி கூறுதலும், பரதன் கொதித்து எழுந்து அவளைக் கொல்லாது, மீண்டும் கடிந்து கூறிக் கோசலையின்

Koviloor Digital Library

அரண்மனையை அடைதலும், அவள் பாதங்களில் விழுந்து புலம்பிய பரதனைத் தூயன் என்று உணர்ந்த கோசலை ''கைகேயியின் வஞ்சனை உனக்குத் தெரியாது போலும்'' என்று கூறப் பரதன் சூளுரைத்தலும், கோசலை அவனை அன்புடன் தழுவி எடுத்துத் தந்தைக்குரிய ஈமக்கடன்களை நிறைவேற்ற வேண்டுதலும், பரதன் வசிட்டனோடு சென்று தசரதனது உடலைத் தைலக் கொப்பரையில் காணுதலும், புலம்புதலும், உடலை ஒரு விமானத்தில் வைத்து யானை மீது ஏற்றி, சாப்பறை ஒலிக்கச் சரயு நதிக்கரையை அடைதலும், பரதனை ஈமக்கடன்கள் செய்யுமாறு அந்தணர் அழைக்கவும், வந்த பரதனை வசிட்டன் தந்தை அவனைத் துறந்தமை கூறித் தடுத்தலும், பெருந்துயரடைந்த பரதன் நிலையும், பின்னர் வசிட்டன் சத்துருக்கனனைக் கொண்டு ஈமக்கடன்கள் முடித்தமையும், அறுபதினாயிர மனைவியரும் உடன் தீக்குளித்தலும், பத்து நாட்கள் கழித்து சடங்குகள் நடைபெற்று முடிதலும், மன்னன் இல்லாமல் நாடு இருப்பது மரபன்று என்று கருதி வசிட்டனும், அமைச்சர்களும், குடிமக்களும், படைத் தலைவர்களும் பரதனை அணுகுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

1. தூதுவர் தம் வரவு கூறுவித்தல்

பொருவுஇல் தூதுவர் போயினர், பொய்யிலார்,
இரவும் நன்பகலும் கடிது ஏகினார்;
பரதன் கோயில் உற்றார்; ''படிகாரீர்! எம்
வரவு சொல்லுதிர் மன்னவற்கே!'' என்றார். (2198)

(பொருவுஇல்-ஒப்பற்ற; கடிது-விரைந்து; படிகாரர்-வாயிற் காவலர்)

ஒப்பற்ற தூதுவர்கள் அயோத்தியிலிருந்து புறப்பட்டுப் போனவர்கள், பொய்ம்மை பேசாதவர்கள், இரவிலும் நல்ல பகலிலும் விரைந்து கேகய நாடு நோக்கிச் சென்றார்கள்; பரதன் அரண்மனையை அடைந்தார்கள். ''வாயிற் காவலரே! அயோத்தியிலிருந்து வந்திருக்கும் எங்கள் வரவை, உங்கள் அரசகுமரன் பரதனிடம் தெரிவியுங்கள்'' என்றனர்.

கண் மறைக்கும் இரவிலும், கதிர் மிகக் காயும் நண் பகலிலும் எங்கும் தங்காது விரைந்து சென்றதால் பொய்யிலார் என்றார். தானே வகுத்துக் கூறுவோன், கூறியது கூறுவோன், ஓலை கொடுப்போன் என்று தூதுவர்கள் மூவகைப் படுவர். இவர்கள் ஓலை கொடுக்கும் தூதுவர்கள். இவரை முறையே முதல், இடை, கடைத் தூதுவர் என்பது நூல் வழக்கு. ஆனால் தூதுவர்க்கு அமைந்த எல்லா குணநலன்களும் வாய்ந்தவர். எனவே பொருவுஇல் தூதுவர் என்றார். வாயிற் காப்போர் அனுமதி பெற்றே அரண்மனைக்குள் செல்லவேண்டுமென்பது மரபு. படிகாரர் என்பது ''ப்ரதீஹாரர்'' என்ற வடசொல்லின் தமிழாக்கம். பரதனிடம் சென்ற

Koviloor Digital Library

தூதுவர்கள் சித்தார்த்தன், விஜயன், ஜயந்தன், அசோகன் என்ற நால்வர் என்று வான்மீகம் கூறும்.

2. பரதன் தந்தை நலம் உசாவுதல்

''தூதர் வந்தனர் உந்தை சொல்லோடு'' எனக்
காதல் முந்திக் களிக்கின்ற சிந்தையான்,
''போதுக'' என்ன, உள்புக்கு அவர் கைதொழத்
''தீதுஇலன்கொல்? திருமுடியோன்!'' என்றான். (2199)

(போதுக-வரவிடுக; சொல்-முடங்கல் / செய்தி / ஓலை; முந்துதல்-மிகுதல்)

வாயிற்காப்போர் பரதனை அணுகி ''அயோத்தியிலிருந்து தங்கள் தந்தையார் அனுப்பிய செய்தியோடு தூதுவர்கள் வந்திருக்கிறார்கள்'' என்றதும், ஆசைமிக்க மனத்தையுடைய பரதன், மகிழ்ச்சியோடு, ''அவரை உள்ளே வரவிடுக'' என்றலும், தூதுவர்கள் உள்ளே புகுந்து கை தொழுது வணங்க ''திருமுடியினையுடைய மன்னர் தீதின்றி நலமாய் உள்ளாரோ!'' என்று கேட்டான் பரதன்.

''வலியன் கொல்?'' என்றோ ''நலமாக இருக்கிறானோ?'' என்று கேட்டிருக்கலாம். ஆனால் தீதில்லாமல் இருக்கின்றானா? என்று கேட்கிறான் பரதன். காரணம் வான்மீகியும் துளசிதாசரும், முதல் நாள் இரவு பரதன் தன் தந்தை பற்றி ஓர் தீக்கனாக் கண்டதாகக் கூறுகிறார்கள். அதனைஅனுவதித்துக்கம்பன்தீதிலன்கொல்? என்றுகேட்கவைக்கிறான். தசரதன் இறந்துபட்டது பரதனுக்குத் தெரியாதே தவிர காப்பியம் ஆக்கிய கம்பனுக்குத் தெரிந்தது தானே! இது குறிப்பு மொழி எனப்படும். அது போலவே ''திருமுடியோன்'' என்பதும் ஒரு குறிப்பு மொழியே. இப்போது தசரதன் இறந்தது அவனுடைய திருமுடியால் தானே? மன்னர் மன்னன் என்று கூறியிருக்கலாமே ஏன் கம்பன் திருமுடியோன் எனக் கூற வைத்தான்?. கற்போர்க்கு அதனைக் குறிப்பால் உணர்த்தவே என்க. இவ்விரண்டு சொற்றொடர்களும் அவனை அறியாமல் அவன் வாக்கில் வந்து விட்டது என்றும் கூறுவர். கம்பன் கவிச்சக்கரவர்த்தி என்று நிரூபணம் ஆகும் பாடல்களில் இதுவும் ஒன்று.

3. இராம இலக்குவர் நலம் கேட்டல்

''வலியன்'' என்று அவர் கூற, மகிழ்ந்தனன்;
இலைகொள் பூண் இளங்கோன், எம்பிரானோடும்
உலைவுஇல் செல்வத்தனோ? என, ''உண்டு'' எனத்
தலையில் ஏந்தினன் தாழ்தடக் கைகளே. (2200)

(பூண்-அணிகலன்; வலியன்-வலிமையுடையவன்; உலைவுஇல்-நீங்காத / அழியாத; தாழ்-நீண்டுள்ள)

Koviloor Digital Library

பரதன் கேட்ட கேள்விகளுக்கு, ''வலிமையுடன் இருக்கிறான் தசரதன்'' என்று அவர்கள் மறுமொழிகூற, அது கேட்ட பரதன் மனம் மிக மகிழ்ந் தான்; பின்னர், இலை போன்ற வடிவுள்ள ஆபரணங்கள் அணிந்துள்ள இலக்குவன், ''எமது தலைவனாகிய இராமபிரானோடு, நீங்காத, அழியாத உடல் நலமாகிய செல்வத்துடன் இருக்கிறானோ?'' எனக் கேட்டலும் ''உண்டு'' என அவர்கள் மறுமொழி கூற, தந்தை, தமையன்கள் இருவர் ஆகிய மூவரும் நலமாய் இருப்பது உணர்ந்து, பரதன் மிக்க மகிழ்ந்து தனது முழங்கால் வரை நீண்டுள்ள பெரிய கைகளைத் தன் தலை உச்சியில் சேர்த்துக் கூப்பி அவர்கள் இருந்த திசை நோக்கி வணங்கினான்.

முன் பாடலில் பொய்யிலார் தூதுவர் என்று கூறிய கவிஞன் அடுத்த பாடலிலேயே அவர்களைப் பொய் பேச வைத்து விட்டானே! அவர்கள் கூறியது பொய் என்றாலும், அது கேட்டோனுக்கும், நாட்டுக்கும் நன்மை பயப்பதால் குற்றமாகக் கருதப்படமாட்டாது. ''பொய்ம்மையும் வாய்மை இடத்த, புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்'' என்பது குறள் 292. ''வலியன், உண்டு'' என்ற ஒற்றைச் சொல்லைக் கையாண்டு கம்பன் ஓர் அற்புதத்தை நிகழ்த்தியிருக்கிறான். உலைவுஇல் செல்வம் என்பதில் இராமன் அரசச் செல்வத்தை நீங்கியிருக்கும் குறிப்புத் தோன்றுகிறது பாருங்கள். தந்தையையும், இராமனையும், இலக்குவனையும் பரதன் தெய்வமாகக் கருதியதால் உச்சியில் கை கூப்பி அவர் இருந்த திசை நோக்கி வணங்கினான் என்பதாம். தூதுவர்களைத் தாமாக ஏதும் கூறவைக்காமல், பரதனுடைய கேள்விக்கு வலியன், உண்டு என்று மட்டும் கூற வைத்தது ஒரு நயம். செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்பர். எனவே இங்கு பரதன் செல்வத்தனோ என்று கேட்டது மன, உடல் நலத்தைத் தான் என்று நிறுவுதலும் பொருந்தும்.

4. திருமுகம் கொடுத்தல்

மற்றும் சுற்றத்து உளார்க்கும் வரன்முறை
உற்றதன்மை வினாவி, உவந்த பின்,
''இற்றது ஆகும்; எழுத அருமேனியாய்!
கொற்றவன் தன் திருமுகம் கொள்க'' என்றார். (2201)

(இற்றது-இது; திருமுகம்-ஓலை)

மேலும் உள்ள சுற்றத்தார்களின் நலன்களை முறைப்படி அவர்களுக்கு உற்ற தன்மையை அவர்களிடம் கேட்டறிந்து மிக மகிழ்ந்தான். பின்னர் தூதுவர்கள் ''ஓவியத்திலும் எழுத இயலாத அருமையான மேனி படைத்தவனே! வெற்றியை உடைய மன்னவன் அனுப்பிய திருமுகம் இதுவாகும்'' என்று கூறி நீட்டினர்.

முதன்மையான மூவர் நலனும் அறிந்த பின், மற்றுமுள்ள சுற்றத்தார்களின் நலன்களையும் முறைப்படி விசாரித்து அறிந்தான். தூதுவர்கள் அது பற்றி என்ன கூறினார்கள் என்பதைச் சொல்லாமலே

Koviloor Digital Library

விடுத்த கவிஞன் கவித்திறம் வியப்பிற்குரியது. கொற்றவன் இற்றது ஆகும் திருமுகம் என்னும் சொல்லிலேயே இறந்து பட்டது என்ற குறிப்புப் பொருளும் தொனித்தல் காணத்தகும். ஓலையைத் திருமுகம் எனக் கூறுதல் மங்கல வழக்கு.

5. பரதன் பெற்றுக் கொள்ளுதல்

என்று கூறலும், ஏத்தி இறைஞ்சினான்
பொன் திணிந்த பொருஇல் தடக்கையால்
நின்று வாங்கி, உருகிய நெஞ்சினான்
துன்று நாள்மலர்ச் சென்னியில் சூடினான். (2202)

(திணிந்த-அணிந்த; நாள் மலர்-அன்று மலர்ந்த மலர் மாலை; ஏத்தி-துதித்து; சூடுதல்-தலைமேற் கொள்ளுதல்; துன்று-நிறைந்த)

என்று தூதர்கள் கூறியதும், ஓலையைத் துதித்து வணங்கி, எழுந்து நின்று பொன் ஆபரணங்கள் அணிந்த அழகிய ஒப்பற்ற தன் நீண்ட கைகளினால் வாங்கி, நெகிழ்ந்த உள்ளத்துடன் அன்றலர்ந்த மலர்கள் நிறைந்த மாலை சூட்டபெற்ற தலைமேற்கொண்டான்.

6. பரதன் மகிழ்தல்

சூடிச் சாதனம் தோய்த்து உடைச்சுற்று மண்
மூடு தோட்டின் முடங்கல் நிமிர்த்தினன்;
ஈடுநோக்கி வந்து எய்திய தூதர்க்குக்
கோடிமேலும் நிதியம் கொடுத்தனன். (2203)

(சூடுதல்-தலைமேற்கொள்ளுதல்; சாதனம்-முத்திரை / இலச்சினை; முடங்கல்-ஓலை; தோடு-பனைஓலை / ஏடு; நிமிர்த்தல்; அவிழ்த்துப் பிரித்தல்; ஈடு-செய்தி / எழுத்து / உள்ளீடு; நிதியம்-பொன்; கோடி-பேர் எண் / மிகுதி / புதிய ஆடை; முடங்சிச் சுருண்டிருக்கும் நீண்ட பனை ஓலைக்கு முடங்கல் காரணப் பெயர்)

அவர்கள் நீட்டிய ஓலையைத் தலையில் சூடி, அரச முத்திரை பதிக்கப் பெற்றுச் சுற்றிலும் வாய்ப்புறத்தே களி மண்ணால் மூடப்பட்ட (இப்பொழுது அரக்கால் மூடப்படுவது போல) பனை ஓலையின் சுருளை அவிழ்த்துப் பிரித்துப் பார்த்தான். அதன் உள்ளீடாகிய செய்தியைப் படித்துப் பார்த்து, தசரதனையும், இராமனையும் காணப் போகிறோம் என்று மிக்க மகிழ்ந்து, அவ்வோலை கொண்டு வந்த தூதுவர்களுக்குக் கோடிக்கு மேலும் பொற்குவைகளும், புதிய ஆடைகளும் தந்தான்.

''சாதனம்'' என்று கொண்டு முத்திரை, இலச்சினை, அரசச்சின்னம் பதிக்கப் பெற்ற, என்று பொருள் கொண்டோம். தற்போது வந்துள்ள சில அச்சுப் பிரதிகளில், ''சந்தனம்'' என்று கொண்டு, ஓலையில் தலை வாய் சந்தனம் அப்பி மூடப்பெற்றிருந்தது எனக் கூறுவர். அதற்கு அவர்கள்

Koviloor Digital Library

கூறும் காரணம் உள்ளீடாகிய செய்தி மங்கலச் செய்தி எனவே சந்தனம், மஞ்சள் ஆகியவற்றைப் பூசி அனுப்புவது வழக்கம் என்கின்றனர். ஆனால் ஒன்று நோக்க வேண்டும். கம்பன் உள்ளே என்ன எழுதியிருக்கிறது என்பதை எங்கும் தெரிவிக்கவில்லை. பழைய சுவடிகளில் ''பரத! உன்னால் நிறைவேற்ற வேண்டிய அவசரகாரியம் இருப்பதால் உடனே புறப்பட்டு வருக!'' என்று எழுதியிருந்ததாகக் கூறுவர். எனவே இங்கே சந்தனம் என்று கொள்வதை விடச் சாதனம் என்று கொள்வதே பொருத்த முடையது என்பதால் சாதனம் என்றே பொருள் உரைக்கப் பெற்றது. இவ்வாறு வாய்ப் புறத்தே மண் வைத்து அனுப்பும் செய்தியை ''மண்ணுடை முடங்கல்'' என்றே சிலப்பதிகாரமும் பேசுகிறது என்பது கருதத்தக்கது. உவகைச் செய்தி கொணர்ந்தோர்க்குப் பரிசு வழங்குதல் மரபு. இராமனின் திருமணச் செய்தி கொணர்ந்த மிதிலைத் தூதுவர்களுக்குத் தசரதன் பரிசளித்ததும், இராமன் முடிசூடப் போகிறான் என்ற செய்தி கொணர்ந்த மந்தரைக்குக் கைகேயி பரிசளித்ததும் நினைவிற் கொள்ளத்தக்கன. ஈடு என்ற சொல் இடப்பட்டது என்ற கருத்தில் உள்ளீடாகிய செய்தியைக் குறித்தது. ஓலையில் தசரதன் இறந்த அவலச் செய்தியும் இல்லை; இராமனுக்கு முடிசூட்டல் என்ற நற்செய்தியும் இல்லை என்பது நோக்கத்தக்கது. முடங்கல் தசரதன் எழுதியதாகவே எழுதப்பட்டது என்பதும் அதை அனுப்பியது தான் வசிட்டன் என்பதும் குறிப்பிற்கொள்ள வேண்டும்.

7. வாள்நிலா நகை தோன்ற, மயிர்புறம்
பூண, வான் உயர்காதலில் பொங்கினான்;
தாள்நிலாம் மலர்தூவினன்; தம்முனைக்
காணலாம் எனும் ஆசை கடாவவே. (2204)

(முன்-அண்ணன் / முன்னவன்; நிலாம்-நிலவும் / விளக்கம் மிக்க; கடாவ-தூண்ட / உந்த; வாள்-ஒளி பொருந்திய; நகை-பற்கள்; மயிற்புறம் பூணல்-மயிர்க் கூச் செறிதல் / மயிர் சிலிர்த்தல்; பொங்குதல்-மகிழ்ச்சி மிகுதல்)

தன்முன்னவனாகிய இராமபிரான் திருவடிகளில் விளக்கம் பொருந்திய மலர்களைத் தூவி வழிபட்டுக் காணலாம் என்ற ஆசை தூண்டுதலால், ஒளி பொருந்திய தன் பற்கள் வெளித் தோன்ற, உடம்பில் மயிர் சிலிர்க்க, மிகுந்த பேருவகையில் மூழ்கித் திளைத்தான்.

மிகுந்த மகிழ்ச்சியில் பற்கள் வெளித்தோன்றச் சிரிப்பதும், உடம்பில் மயிர் சிலிர்த்தலும் இயல்பு; இராமபிரானுடைய திருவடிகளில் மலர் தூவி அர்ச்சித்து வழிபடுவதில் மிக்க மகிழ்ச்சி பெற்றான் என்பது பின்னால் கதைப் போக்கில் இராமனது பாதுகைகளுக்கு மலர்தூவி அர்ச்சித்து வழிபட்டு அரசாளப் போகிறான் என்று கூறப்போவதன் முன்னோட்டம். பெரியோரையும், கடவுளரையும் பார்க்க, வணங்கப் போகுங்கால் அவர்களை மலர் கொண்டு வழிபடுதல் முறையாகும்.

Koviloor Digital Library

8. பரதன் புறப்படுதல்

''எழுக சேனை'' என்று ஏவினன்; எய்தினன்
தொழுது, கேகயர் கோமகன் சொல்லொடும்,
தழுவு தேரிடைத் தம்பியொடு ஏறினான்;
பொழுதும் நாளும் குறித்திலன் போயினான். (2205)

(ஏவுதல்-கட்டளையிடுதல்; பொழுது-நேரம் / முகூர்த்தம் / முழுத்தம்; தழுவுதேர்-தன்னை அடைந்த தேர்; நாள்-நட்சத்திரம்)

உடனே, ''என்னுடன் வந்த சேனைகளெல்லாம் புறப்படட்டும்'' என்று கட்டளையிட்டான். விரைவாக கேகய மன்னனின் மகனான யுதாசித்திடம் சென்று அவனைத் தொழுது, அவனிடம் செய்தியைச் சொல்லி, அவன் அனுமதியோடு, தனக்கெனத் தயார் நிலையில் நின்ற தேரில், எப்பொழுதும் தன்னை விட்டுப் பிரியாத தம்பி சத்துருக்கனனுடன், நாள் நட்சத்திரம் பார்க்காமல் விரைவாகச் சென்றான்.

பாடலில் எல்லாச் சொற்களிலும் விரைவு புலப்படுதலை உணர்க. பொழுது என்பது நல்ல முகூர்த்த நேரத்தையும், நாள் என்பது நல்ல நட்சத்திரத்தையும் குறித்தது. தான் கடவுளாக மதிக்கும் இராமபிரானைக் காணச் செல்கிறான். எனவே, நாள் நட்சத்திரம் பார்க்காது சென்றான் என்பதாம். பரதன் புறப்பட்டது, பயணத்திற்கு உதவாத பொழுதும், நாளும் என்பது புலப்படுகிறது. நாள் என்பது விண்மீன் வழியும், பொழுது என்பது ஒரு நாளின் அறுபது நாழிகையில் அமைந்த ஓரை வழியும் நிகழும் காலம் என்றும் நூல்வல்லார் கூறுவர்.

9. சேனை செல்லுதல் [9 பாடல்கள்]

யானை சுற்றின; தேர்இரைத்து ஈண்டின;
மானவேந்தர் குழுமினர்; வாள் உடைத்
தானை சூழ்ந்தன; சங்கம் முரன்றன;
மீன வேலையின் விம்மின பேரியே. (2206)

(இரைத்து-ஆரவாரித்துக் கொண்டு; ஈண்டுதல்-நெருங்கிச் செல்லுதல்; மான்-குதிரை; தானை-காலாட்படை; முரல்தல்-ஒலித்தல்; வேலை-கடல்; விம்மின-முழங்கின; பேரி-முரசங்கள்)

பரதன் புறப்பட்டதும், அவனைச் சுற்றிலும் யானைப் படைகள் வந்து சூழ்ந்து கொண்டன; தேர்ப் படைகள் ஆரவாரித்து நிறைந்து நெருங்கின; குதிரைப் படைகளை உடைய அரசர்கள் வந்து குவிந்தனர்; வாட்படையை உடைய காலாட்படைகள் வந்து சேர்ந்தன; சங்குகள் ஒலித்தன; மீன்கள் நிறைந்துள்ள கடலின் ஒலியைக் காட்டிலும் முரசங்கள் முழங்கின.

நால்வகைப் படைகளும் எழுந்த முறை சொல்லப்பட்டது.

Koviloor Digital Library

10. கொடி நெருங்கின; தொங்கல் குழீஇயின;
வடிநெடுங்கண் மடந்தையர் ஊர் மடப்
பிடி துவன்றின; பூண்ஒளி பேர்ந்தன;
இடிதுவன்றின மின் என, எங்குமே. (2207)

(தொங்கல்-மயிற்பீலிக் குஞ்சங்கள்; வடி-கூர்மையான; ஊர்-ஊர்ந்து செல்லும்; மடம்-இளமை; பிடி-பெண்யானை; துவன்றின-வீசின; பூண்-அணிகலன்கள்; பேர்தல்-விட்டு விட்டு ஒளி வீசுதல்)

துகிற் கொடிகள் எங்கும் நிரம்பின; மயிற் பீலிக் குஞ்சங்கள் எல்லாம் திரண்டு வந்தன; கூர்மையான மாவடுப் போன்ற நீண்ட கண்களையுடைய மகளிர் ஊர்ந்து செல்லும் இளமையான பெண் யானைகள் எல்லாம் ஒன்று கூடின; அவர்கள் அணிந்திருந்த அணிகலன்களின் ஒளி, இடியுடன் கூடிய மின்னல் போல எல்லா இடத்திலும் விட்டு விட்டுப் பிரகாசித்தன.

ஆண் வீரர்கள் ஆண் யானை / களிற்றின் மேலும், பெண்கள் / அரச மகளிர் பெண் யானை / பிடியின் மீதும் செல்வது மரபு. ''பிடியின் மேல் வரும் பிடிக்குலம் அநேகம்; எனவே பெய் வளைக்கை மடமாதர் பிடி மீது வரவே'' என்பது கலிங்கத்துப் பரணி.

11. பண்டி எங்கும் பரந்தன; பல்லியம்
கொண்டு இயம்பின கொண்டலின்; கோதையில்
வண்டு இயம்பின; வாளியின் வாவுறும்
செண்டு இயங்கு பரியும் செறிந்தவே. (2208)

(பண்டி-வண்டி; பல்லியம்-வாத்தியங்கள்; கொண்டல்-மேகம்; கோதை-மாலை; இயம்புதல்-ஒலித்தல்; வாளி-அம்பு; இயங்குதல்-திரிதல்; பரி-குதிரை; செண்டு-செண்டுவெளி / வையாளி வீதி; செண்டு-வட்டவடிவமாக அமைந்த மைதானம்)

பண்டங்களை ஏற்றிச் செல்லும் வண்டிகள் எங்கும் பரவிச் சென்றன; பலவகை வாத்தியங்கள் மேகங்களைப் போல முழங்கின; மகளிரும் ஆடவரும் அணிந்திருக்கின்ற மலர் மாலைகளிலிருந்து வண்டுகள் ரீங்காரமிட்டன; அம்பு போலத் தாவி வருவனவும், வையாளி வீதியில் வலம் வருவனவுமான குதிரைகளும் நெருங்கிச் சேர்ந்தன.

நீண்ட தூரம் செல்ல வேண்டுவதால் உணவுப் பண்டங்கள் நிறைந்த வண்டிகளும் உடன் வரலாயின; குதிரைகள் வட்டவடிவமான மைதானத்தில் சுற்றி வருதலை வையாளி வருதல் என்பர். அம்பின் வேகம் குதிரையின் வேகத்துக்கு ஒப்பு.

12. தொளை முகத்தில் சுருதி விளம்பின;
உளை முகத்தின, உம்பரின் ஏவிடில்
விளை முகத்தன, வேலையின் மீதுசெல்
வளை முகத்தன, வாசியும் வந்தவே. (2209)

Koviloor Digital Library

(தொளை-மூக்குத் தொளை; சுருதி-இசை / வேத ஒலி / கனைப்பு ஒலி; உளை-குதிரையின் தலையில் கட்டும் வெண் கவரி / பிடரி மயிர் / தலையாட்டம்; வாசி-குதிரைகள்)

மூக்கில் தொளையையுடைய முகத்தால் குதிரைகள் எழுப்பும் கனைப்பு ஒலி வேத ஒலிபோல் இனிமையாக இருப்பனவும், தலையில் வெண் கவரி என்னும் தலையாட்டம் கட்டப்பெற்றதுமான குதிரைகளும், ஆகாயத்தில் செலுத்தினாலும், கடலின் மீது செலுத்தினாலும் சென்று மீளும் ஆற்றல் வாய்ந்தவையான வளைந்த முகத்தையுடைய உயர்ந்த சாதிக் குதிரைகளும் வந்து சேர்ந்தன.

இக்குதிரைகள் பறக்கும் தன்மையன என்பதால் தனியே கூறப்பட்டன. குதிரைகளில் பறவை போல் பறக்கும் குதிரைகளும் உண்டு என்பர். ''புள் இயல் கலிமா'' என்பது தொல்காப்பியம். திருமால் குதிரை முகத்தோடு இருந்து வேத கோஷம் செய்தார் என்கிறது ஒரு புராணக்குறிப்பு. கடலில் உள்ள வடவைத்தீ பெண் குதிரை முகத்தின் வடிவத்தில் உள்ளது என்பதும் நாம் பாலகாண்டத்தில் கண்டதே.

13. வில்லின் வேதியர், வாள்செறி வித்தகர்,
மல்லின் மல்லர், சுரிகையின் வல்லவர்,
கொல்லும் வேல், குந்தம் கற்றுஉயர் கொற்றவர்
தொல்லை வாரணப் பாகரும் சுற்றினார். (2210)

(வித்தகர்-தேர்ந்தவர்; வேதியர்-தனுர்வேத நூலறிவுடையோர்; சுரிகை-உடைவாள்; குந்தம்-ஈட்டி / எறிகோல்; கொற்றவர்-வெற்றி யுடைய வீரர்கள்; தொல்லை-பழமையான; வாரணம்-யானை; மல்-உடம்பால் செய்யும் போர்த் தொழில்)

தனுர்வேதமாகிய வில் நூல் அறிவுடையோரும், வாட்படையில் தேர்ச்சி பெற்றவரும் மற்போரில் வல்ல மல்லர்களும், உடைவாள் போர் புரிவதில் விற்பன்னர்களும், பகைவரைக் கொல்லுகின்ற தொழிலை உடைய வேல், ஈட்டி போன்றவற்றைக் கையாளும் அறிவு பெற்று அதில் மேம்பட்டு விளங்கும் வெற்றி வீரர்களும், பழங்காலந்தொட்டே மதயானைகளை அடக்கிக் கையாளும் மிக்க அனுபவம் வாய்ந்த திறமை பெற்ற யானைப் பாகர்களும் பரதனைச் சுற்றிப் புறப்படலானார்கள்.

வேதியர் என்பது வேதத்தில் வல்லவர் என்பதாம். வில் பயிற்சியையும் தனுர்வேதம் எனக் கருதி உபவேதங்களுள் ஒன்றாகக் கொள்வது நூற்கொள்கை. எனவே அதில் தேர்ச்சியுற்றவரையும் வேதியர் என்றே குறிப்பிட்டார். வாளைப் பகைவர் மார்பில் செறிக்கும் திறம் உடையோரை வாள் செறி வித்தகர் என்றார்.

14. எறிபகட்டு இனம், ஆடுகள், ஏற்றுஇனம்,
குறிகொள்கோழி, சிவல், குறும்பூழ், நெடும்

Koviloor Digital Library

பொறி மயிர்க் கவுதாரிகள், போற்றுறும்
நெறியின் மாக்களும், முந்தி நெருங்கினார். (2211)

(எறிதல்-தாக்குதல்; பகடு-யானை; ஏறு-எருது; குறி-குறிப்பு; குறும்பூழ்-காடை; பொறி-புள்ளிகள்; போற்றுதல்-பாதுகாத்தல்; மாக்கள்-மனிதர்கள்)

ஒன்றையொன்று மோதித் தாக்கிக் கொள்ளும் இயல்புடைய யானை, எருமைக் கடாக்கள்; ஆடுகள், எருதுகள், தன்னை ஏவுவாரின் குறி அறிந்து கொள்ளும் கோழிகள், சிவல் என்னும் காடை வகையைச் சேர்ந்த பறவைகள், காடைகள், நீண்ட புள்ளிகளும், மயிரும் பொருந்திய கவுதாரிகள், இவற்றையெல்லாம் வீளையாட்டுப் போர் செய்வதற் கென்றே பாதுகாத்து வரும் வாழ்க்கை நெறி உடைய மனிதர்களும், பரதனோடு முன்னதாகச் சென்றார்கள்.

அரசர்கள் எழுச்சியின் போது இவ்வாறு ஆட்டுக்கடாப் போர், எருமைக்கடாப்போர், எருதுப்போர், கோழிப்போர், சேவற்போர், காடை, கவுதாரிப் போர் முதலியவற்றைக் கண்டு பொழுது போக்கிச் செல்லுதல் வழக்கம். எனவே இவ்வளவு விலங்குகளும், பறவைகளும், அவற்றைப் போற்றிக் காத்துவரும் மனிதர்களும் பரதன் உடன் சென்றனர் என்பதாம். இவர்களைத் தொல்காப்பியர் ''பாலறி மரபிற் பொருநர்'' என்பார்.

15. நிறைந்த மாந்தர் நெருங்கினர் நெஞ்சினில்
''பறந்து போதும் கொல்?'' என்று பதைக்கின்றார்;
பிறந்து, தேவர் உணர்ந்து, பெயர்ந்து, முன்
உறைந்த வானுறுவார்களே ஒக்கின்றார். (2212)

கல்வி கேள்விகளால் நிறைந்த மாந்தர்கள், பரதனோடு சுற்றிச் செல்பவர்கள், காலால் நடந்து சென்றால் அயோத்தியை அடைய நீண்ட நாட்களாகும் என்று உள்ளத்தில் எண்ணி, பறந்து போய் விடுவோமா என்று துடிதுடிக்கின்றனர்; இது எப்படி இருக்கிறது என்றால், ஏதோ சாபத்தால், மண்ணுலகில் வந்து பிறந்த தேவர்கள், அச்சாப நீக்கம் பெற்ற பின், தன்னுடைய உண்மையான தேவர் நிலையை உணர்ந்து, உடனே தான் முன்பு வாழ்ந்திருந்த தேவருலகுக்குச் செல்ல விரைந்து செல்பவர்களைப் போல இருக்கிறது.

பரதனுடன் உடன் செல்லும் மாந்தர்கள் விரைய நினைப்பது, மண்ணுலகில் வந்து சேர்ந்த தேவர்கள் விரைந்து விண்ணுலகு செல்ல நினைப்பதை ஒத்திருக்கிறது என்பதாம்.

16. ஊன் அளைந்த உடற்கு உயிராம் எனத்
தான் அளைந்து தழுவின தண்ணுமை;
''தேன் அளைந்து செவிஉற வார்த்து என
வான் அளைந்தது மாகதர் பாடலே''. (2213)

Koviloor Digital Library

(ஊன்-தசை; அளைந்த-கலந்த; தண்ணுமை-மத்தளம்; மாகதர்-இருந்து ஏத்துவோர்; வார்த்து-ஊற்றியது; அளைந்தது-நிறைந்தது.)

தசையாலாகிய இவ்வுடம்புக்கு உயிர் என்று சொல்லும்படி, மத்தள ஓசை, ஏனைய யாழ், குழல் ஓசைகளையும் அணைத்துக் கலந்து பரவியது; இருந்து ஏத்துவோராகிய மாகதர்களின் பாடல் ஓசை, தேனைச் சேர்த்துச் செவியில் ஊற்றியது போல வான் உலகத்து அளவும் சென்று சேர்ந்து இனிமை பயந்தது.

உடம்பு ஏழுவகைத் தாதுக்களால் ஆனது என்பதும், அவற்றில் தசையே மிகுந்திருப்பது என்பதும் உடல் நூல் கூற்று. அது போல இசைக்கும் யாழ், குழல் முதலிய மற்றக் கருவிகளுக்கும் எல்லாம் மத்தளத்திலிருந்து எழுகின்ற தாள ஒலி தான் உயிர் என்று சொல்லும்படி,. தானும் ஒலித்து, மற்ற வாத்தியங்களையும் ஒழுங்குபடுத்துவது மத்தள ஓசை என்பதாம். அரசர்களைப் போற்றிப் பாடுவோர் மூவகைப்படுவர். அவர்கள் நின்று ஏத்துபவர் சூதர் எனவும், இருந்து ஏத்துபவர் மாகதர் எனவும், கிடந்து ஏத்துவோர் வேதாளிகர் எனவும் வழங்கப்பெறுவர். இங்கே குறிப்பிட்டிருக்கிற இருந்து ஏத்தும் இயல்புடைய மாகதர்களின் பாடல்கள், காதிலே தேனைப் பாய்ச்சியது போல விண்ணுலகு வரை சென்று இனித்தது என்பதாம். உயிர், உடல் முழுவதும் பரவியிருத்தல் போல, மாகதர் பாடல் ஒலி, வானுலகையும் தழுவி நின்றது என்றவாறு.

17. ஊறுகொண்ட முரசு உமிழ் ஓதையை
வீறு கொண்டன வேதியர் வாழ்த்தொலி;
ஏறுகொண்டு எழும் மல்லர் இடிப்பினை
மாறுகொண்டன வந்திகர் ஏத்து அரோ! (2214)

(ஊறு-அடித்தல் / தாக்குதல்; உமிழ்தல்-ஒலித்தல்; வீறு-வெற்றி / விஞ்சுதல்; ஏறு-ஆண் சிங்கம்; இடிப்பு-முழக்கம்; வந்திகர்-நின்று துதி பாடுவோர் / சூதர்)

குணில் என்ற குறுந்தடியால் அடிக்கப்பட்டு முரசங்கள் எழுப்புகின்ற ஓசையை, வேதம் அறிந்த அந்தணர்கள் எழுப்பும் வாழ்த்து ஒலி வெற்றி கொண்டு விஞ்சியது; ஆண் சிங்கம் போலச் செருக்குக் கொண்டு எழுகின்ற மற்போர் வீரர்களின் இடிமுழக்க ஒலியை விட, சூதர் எனப்படும் நின்று துதி பாடும் வந்திகர்கள் எழுப்புகின்ற போற்றி ஒலி மாறுபட்டு மிக்கு ஒலித்தன.

வன்மையான முரசு, மல்லர் ஒலியைக் காட்டிலும், மென்மையான வேதியர், வந்திகர் வாழ்த்தும் ஒலி மிக்கிருந்தன என்பதால் அவர்களின் மிகுதியும் சிறப்பும் எடுத்து உரைக்கப்பட்டது என்பதாம். பொதுவாக முரசங்கள் தணிந்த ஒலியை உடையதாயிருந்தால் அது பின்வரும் தீமைக்கு அறிகுறி என்பர். இன்றும் இறப்பு வீட்டில் ஒலிக்கும் பறையின் ஓசை தணிந்திருந்தால் அது பின்னர் தீமை நிகழும் என்பதை உணர்த்தும் என்று

Koviloor Digital Library

கருதுவதைக் காணலாம். எனவே இங்கே முரசொலி தணிய ஒலித்தது என்கிற கவிஞன் ஏதோ ஓர் தீமை நிகழப் போகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறான் என்று கொள்வது பொருந்தும்.

18. பரதன் கோசல நாட்டை அடைதல்

ஆறும் கானும் அகன் மலையும் கடந்து
ஏறி, ஏழ்பகல் நீந்தி, பின், எந்திரத்து
ஊறுபாகு மடை உடைத்து, ஒள்முளை
நாறுபாய் வயல் கோசலம் நண்ணினான். (2215)

(*பகல்-நாட்கள்; எந்திரம்-கரும்பாலை; ஊறு-சுரக்கின்ற; ஒள்-ஒளி வாய்ந்த; நாறு-நாற்றங்கால்; பாகு-கருப்பஞ்சாறு*)

ஆறுகளையும், காடுகளையும், பெரிய மலைகளையும் அரிதிற் கடந்து, ஏழு நாட்கள் நடந்து, பின் கரும்பாலையிலிருந்து சுரக்கின்ற கருப்பஞ்சாறு மடைகளை உடைத்துக் கொண்டு ஒளி பொருந்திய முளைகள் பரவி யிருக்கிற நாற்றங்கால்களில் பாய்கின்ற தன்மையை உடைய வயல்களை உடைய கோசல நாட்டைச் சேர்ந்தான்.

கேகய நாட்டிலிருந்து கோசல நாடு ஏழு நாள் பயண தூரத்தைக் கொண்டது என்பது பெறப்பட்டது. கான் கடந்து, மலை ஏறி, ஆறு நீந்தி என்று சொற்களை அமைத்த விதம் இன்புறற்குரியது.

19. கோசல நாட்டின் பொலிவு இழந்த தோற்றம் [9 பாடல்கள்]

ஏர் துறந்தவயல்; இளமைந்தர் தோள்
தார் துறந்தன; தண்டலை நெல்லினும்
நீர் துறந்தன; தாமரை நீத்து எனப்
பார் துறந்தனள் பங்கயச் செல்வியே. (2216)

(*தார்-மாலைகள்; தண்டலை-குளிர்ந்த வயல்; பங்கயச் செல்வி-திருமகள்; பார்-கோசல நாடு; நெல்-பயிர்*)

பரதன் கோசலநாட்டின் எல்லையில் வரும் போது, ஏர்கள் இல்லாது வயல்கள் தரிசாகக் கிடந்தன; இளமையான ஆடவர்கள் மகிழ்ச்சியில் அணியும் மாலைகளை அவர்களது தோள்கள் இழந்திருந்தன; குளிர்ந்த வயலிடத்தில் நெற்பயிரும் நீரின்றி வாடிக்கிடந்தன; திருமகள், தான் உறையும் தாமரை மலரை நீத்து வெளியேறியதைப் போல, இலக்குமியும் கோசல நாட்டை விட்டு நீங்கியது போல் நாடு வெறிச்சோடிக்கிடந்தது.

பங்கயச் செல்வி தாமரை நீத்து என்பது சீதாதேவி பார் துறந்தனள் என்பதைக் குறிக்கும் மொழி. எருதுகள் பூட்டப்பட்டு இருக்கின்ற கலப்பைக்கு ஏர் என்பது பெயர். மக்கள் துயருற்றிருந்ததனால் உழவர்கள்

Koviloor Digital Library

வயலுக்கு நீர்பாய்ச்சவில்லை; நிலங்களை உழவில்லை; ஆடவர்கள் மகிழ்ச்சியின்றி மலர்மாலைகளைச்சூடவில்லை. பரதன்கோசலத்திற்குள் நுழையும்போதே அசாதாரணநிகழ்ச்சிகளைக்காண்பதால் ஏதோ ஒரு தீங்கு நாட்டிற்கு விளைந்திருக்கிறது என்பதை உணரவைத்திருக்கிறான் கவிஞன்.

20. பிதிர்ந்து சாறு பெருந்துறை மண்டிடச்
சிதர்ந்து சிந்தி அழிந்தன தேங்கனி;
முதிர்ந்து, கொய்யுநர் இன்மையின், மூக்கு அவிழ்ந்து
உதிர்ந்து, உலர்ந்தன ஒள் மலர் ஈட்டமே. (2217)

(கொய்யுநர்-பறிப்பவர்கள்; பிதிர்ந்து-வெளிப்பட்டு; மண்டிட-விரைந்து பாய்தல்; சிதர்ந்து-சிதறி; முதிர்ந்து-கனிந்து; ஒள்-ஒளி வாய்ந்த; ஈட்டம்-திரள்; மூக்கு-காம்பு; அவிழ்ந்து-கழன்று)

பறிப்பவர்கள் யாரும் இல்லாமையினால் இனிய பழங்கள் கனிந்து அவற்றின் சாறுகள் வெளிப்பட்டுப் பெரிய நீர்த்துறைகளில் விரைந்து பாய்ந்து சிதறிச் சிந்தி அழிந்து போயின; அது போலவே ஒளி பொருந்திய மலர்க் கூட்டங்களும் பறிப்பார் இன்மையால், முதிர்ந்து காம்பிலிருந்து கழன்று கீழே விழுந்து சாய்ந்து கருகிப் போய்க் கிடந்தன.

மக்கள் மகிழ்ச்சியற்று இருப்பதால் பழத்தையும், மலர்களையும் பறிக்காது விட்டு விடவே அவை பதம் கெட்டுச்சிந்திக் கெட்டுப் போயின என்பதாம்.

21. "ஏய்ந்த காலம் இது, இதற்கு ஆம்" என,
ஆய்ந்து, மள்ளர் அரிகுநர் இன்மையால்,
பாய்ந்த சூதப் பசுநறும் தேறலால்
சாய்ந்து ஒசிந்து முளைத்தன சாலியே. (2218)

(ஏய்ந்த-ஏற்ற / இயைந்த; மள்ளர்-உழவர்கள்; சூதம்-மாங்கனி; தேறல்-சாறு / தேன் / மது; சாலி-சம்பாக்கதிர்கள் / விளைந்த நெற்பயிர்கள்)

இந்தப் பயிரை அறுவடை செய்வதற்கு ஏற்ற காலம் இது தான் என ஆராய்ந்து தெளிந்து அதனைச் செய்யும் உழவர்கள், சோகமுற்றிருப்ப தனால், அதனை மறந்து அறுவடை செய்யாது இருக்கிறார்கள், எனவே அவை ஒடிந்து கிழே விழுந்து கிடந்தன. அங்கே விளைந்த மாம்பழங் களையும் அறுப்பவர் இல்லை என்பதால் அவைகள் தானாகவே முதிர்ந்து கீழே விழுந்து, அதிலிருந்து ஓடிய மாம்பழச்சாற்றினால், சாய்ந்து விழுந்து கிடந்த செந்நெற்பயிர்கள் மீண்டும் முளை விடலாயின.

துன்பம் மிகுதியால் வயலை நன்கு பராமரிக்கவும் உழவர் வரவில்லை என்பதால் நெற்பயிரும் மாங்கனிகளும் தாமாகவே கீழே விழுந்து கெடலாயின என்பதாம். காலம் பார்த்துக் கதிரை அறுக்காததால் அவை நிலத்தில் விழுந்து மீண்டும் முளைத்தது என்க.

Koviloor Digital Library

22. எள்குலாம் மலர் ஏசிய நாசியர்
புள் குலாவயல் பூசல் கடைசியர்
கட்கிலார் களை, காதல் கொழுநரோடு
உள் கலாம் உடையாரின் உயங்கினார். (2219)

(குலாம்-விளக்கம்; ஏசிய-பழித்த; நாசி-மூக்கு; புள்-பறவைகள்; குலாம்-குலாவும் / மகிழும்; பூசல்-ஆரவாரம்; கடைசியர்-உழத்தியர்; உயங்குதல்-வருந்துதல்; கட்கிலார்-களையாதவர்களாய்)

விளக்கம் பொருந்திய எள்ளின் மலரையே பழிக்கும் படியான மூக்கினைப் பெற்றவரும், பறவைகள் கலந்து மகிழ்ந்து திரியும் வயல்களில் எப்போதும் ஆரவாரம் செய்பவருமான உழத்தியர், இப்போது களைகளைக் கூடப் பறிக்காமல், தமது அன்பிற்குரிய கணவன்மார்களோடு ஊடல் கொண்டவர்களைப் போல வருந்திச் சோம்பிக் கிடந்தனர்.

மகளிரின் மூக்கிற்கு எள்ளின் பூவை உவமை கூறுவது கவிமரபு. இராமபிரானைப் பிரிந்தும், தன் அரசன் தசரதன் இறந்தும் இருக்கின்ற காரணத்தால் வாட்டமுற்றுத் தம் வேலையில் நாட்டம் இல்லாது வாடியிருந்தவர்களின் நிலை, தம் கணவர்மாரோடு ஊடி வாடியிருந்த நிலைக்கு உவமை.

23. அலர்ந்த பைங்கூழ், அகன் குளக்கீழன,
மலர்ந்த வாயில் புனல் வழங்காமையால்
உலர்ந்த; வன்கண் உலோபர் கடைத்தலைப்
புலர்ந்து நிற்கும் பரிசிலர் போலவே. (2220)

(அகன் குளம்-ஏரி; அலர்ந்த-வளர்ந்த; பைங்கூழ்-பசிய பயிர்கள்; மலர்ந்த-திறந்த; வாயில்-மதகின் வாய்; கடைத்தலை-வாயில்; புலர்ந்து-வாடி / வருத்தமுற்று; வன்கண்-இரக்கமின்மை; பரிசிலர்-இரவலர்; உலர்தல்-காய்ந்து போதல்)

அகன்ற ஏரியை அடுத்து, நீர் நிறைந்திருந்தும், வளர்ந்துமிருக்கும் பசிய நெற்பயிர்கள், அந்த ஏரியின் மதகுக் கதவைத் திறந்து தண்ணீர் பாய்ச்சாததால், உலர்ந்து சாய்ந்து போயின; இது எப்படி இருக்கிறது என்றால், கருணையும் இரக்கமும் இல்லாத உலோபிகளின் வாயிலில், வாடி வருத்தமுற்று நிற்கும் இரவலர்கள் போல இருக்கிறது. ஏன் எனில் அந்த உலோபியிடம் பணம் மிகுந்திருந்தும் அவனுக்கு இரவலர்களுக்குத் தரவேண்டும் என்ற இரக்கத்தன்மை கொண்ட மனம் இருக்கவில்லை. அது போல, ஏரியில் நீர் நிறைய இருந்தும் அந்த மதகுக் கதவைத் திறந்து நீர் பாய்ச்சும் மன நிலையில் அந்த நிலத்து உழவர்கள் இருக்கவில்லை. எனவே வளர்ந்திருந்த பயிர்களும் கூட வாடிப் போயின என்பதாம்.

நீர் மிக்கிருந்தும், நீர் பாய்ச்சப் பெறாமையால் பயிர்கள் நீர் பெறாது வாடி உலர்ந்து போயின என்பது கருத்து. நீருக்காக வாடுகின்ற பயிரையும் பொருளுக்காக வாடும் இரவலர்களையும் உவமைப்படுத்தியது ஒரு நயம்.

Koviloor Digital Library

24. ஓதுகின்றில கிள்ளையும்; ஓதியர்
தூது சென்றில, வந்தில தோழர்பால்;
மோதுகின்றில பேரிமுழா; விழாப்
போதுகின்றில பொன்அணி வீதியே. (2221)

(கிள்ளை-கிளி; ஓதுதல்-பேசுதல்; தோழர்-காதலர்; பேரி-முரசம்; முழவு-மத்தளம்; மோதுதல்-குறுந்தடியால் அடித்தல்; விழா-உலா; போதுதல்-வருதல்)

கிளிப் பிள்ளைகள் பேசக் கூடஇல்லை; கூந்தலுடைய மகளிரிட மிருந்து தூதாக அக்கிளிகள் செல்லவில்லை; காதலர்களிடமிருந்து தூதாக வரவும் இல்லை, இருவரிடமும் போக்கு வரவே இல்லாது போயிற்று; முரசங்களும் மத்தளங்களும் குறுந்தடி கொண்டு அடிக்கப்படவில்லை; பொன் திணித்துச் செய்யப்பட்ட அழகான வீதிகளில் மணவிழாக்களோ, கடவுளர் திருவிழாக்களோ எந்த உலாவும் வரவேயில்லை.

நாடே மகிழ்ச்சியின்றி வெறுமைக் கோலம் பூண்டிருந்தது என்பதாம். ஓதுதல் என்பது பொதுவாக வேதம் ஓதுதலையே குறிக்கும். இங்கும் கிளிகள் வேதம் ஓதாது இருந்தன என்றும் பொருள் கொள்ள இடம் உண்டு. காரணம் ''வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்'' என்பது பெரும் பாணாற்றுப்படை. வேதம் ஓதும் சிறுவர்கள் உரைப்பது கேட்டுக் கிளிகளும் வேதம் ஓதும் என்பது புதிய செய்தி.

25. பாடல் நீத்தன பண்தொடர் பாண்குழல்;
ஆடல் நீத்த அரங்கொடு அகன் புனல்;
சூடல் நீத்தன சூடிகை; சூளிகை
மாடம் நீத்தன மங்கல வள்ளையே. (2222)

(புனல்-நீர் நிலை; சூடிகை-தலையணி / உச்சி; சூளிகை-நிலாமுற்றம் / இடிதாங்கிச்சூலம்; வள்ளை-வள்ளை என்னும் உரற்பாட்டு / ஒருவகைப் பாடல் / உலக்கைப்பாட்டு; குழல்-வேய்ங்குழல்)

இடைவிடாது தொடர்ந்து குழற்பாட்டுப் பாடும் பாணர்கள் பாடுதலை நீங்கினர்; நடனஅரங்குகளில் நடனமாடுதலையும், அகன்ற நீர்நிலைகளில் நீராடுதலையும் மகளிர் நீங்கினர்; மகளிரின் தலை உச்சி, மலர், அணிகலன்கள், சூடிகை போன்ற தலையணிகள் அணிதலையும் நீங்கின; இடிதாங்கியும், நிலா முற்றமும் உடைய மாளிகைகள் உலக்கைப் பாட்டுக்களை நீங்கின.

குழலோசையும் பாடலோசையும் எங்கும் கேட்கவில்லை; மகளிர் நடனமாடும் ஓசையும், நீராடும் ஓசையும் கேட்கவில்லை; மகளிர் தலையணி அணியவில்லை; மாளிகைகளில் உலக்கைப் பாடல்கள் கேட்கவில்லை; எங்கும் துன்பத்தின் நிழலே தெரிந்தது என்பதாம். வள்ளை என்பது மகளிர் நெல் குற்றும் போது தலைவனைப் புகழ்ந்து பாடும் பாடல் எனப்படும். இது உரல்பாட்டு, உலக்கைப் பாட்டு எனவும்

Koviloor Digital Library

வழங்கும். தம் தலைவனைப் புகழ்ந்தும், மற்றவரைக் குறைத்தும் பாடும் பாடல் உரற்பாட்டு என்பர். செல்வர் மனைகளில் நாள் தோறும் மங்கலம் பாடுவோர் பாடுவதும் மங்கலவள்ளை என்றே வழங்கப்படும். இதை நாண் மங்கலம் என்றும் கூறுவர். இந்தப் பெயரில் ''மங்கல வள்ளை'' என்று ஒரு பிரபந்தமே இருக்கிறது.

26. நகை இழந்தன வாள்முகம்; நாறுஅகில்
புகை இழந்தன மாளிகை; பொங்கு அழல்
சிகை இழந்தன தீவிகை; தேமலர்த்
தொகை இழந்தன தோகையர் ஓதியே. (2223)

(வாள்-ஒளி; நாறும்-நறுமணம் கமழும்; தீவிகை-விளக்குகள்; சிகை-கொழுந்து / சுடர் / சுவாலை; தோகை-மயில்; ஓதி-கூந்தல்; தேம்-தேன் நிறைந்த; தீவிகை-தீபிகா என்றும் வடசொல்லின் தமிழாக்கம்)

கோசல நாட்டு மக்களின் ஒளி பொருந்திய முகங்கள் எல்லாம் நல்ல சிரிப்பை இழந்திருந்தன; எப்போதும் அகிற்புகை மணம் கமழும் மாளிகைகள் இப்போது அதை இழந்திருந்தன; ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகள் எல்லாம் அதன் சுடர் கொழுந்து விட்டு எரியாமல் மங்கலாகவே ஒளி இழந்திருந்தன; மயில் போன்ற சாயலை உடைய மகளிரின் கூந்தல்களெல்லாம் அவர்கள் எப்போதும் அணிந்திடும் மலர் மாலைகளை இழந்திருந்தன.

மகளிர் தம் கூந்தலுக்கும் ஆடைகளுக்கும் மணமூட்டுவதற்காக மாளிகைகளில் எப்போதும் அகில், சந்தனம் முதலிய புகைகள் நறுமணம் கமழ்ந்து கொண்டேயிருப்பது வழக்கம். இப்போது இராமபிரான் பிரிவாலும், தசரதன் மறைவாலும் நாடே எல்லாவற்றையும் இழந்திருந்தன என்பது கருத்து.

27. நாவின் நீத்த அரும் நல்வளம் துன்னிய
பூவின் நீத்து என்நாடு பொலிவு ஒரீஇத்
தேவி நீத்து அரும் சேண்நெறி சென்றிட
ஆவி நீத்த உடல் எனல் ஆயதே. (2224)

(நீத்த அரும்-நீங்கிக் கடத்தற்கரிய; சேண்-நெடிய; துன்னிய-நெருங்கி யிருந்த; நாவின் நீத்த அரும்-புகழ்தற்கரிய; பூ-தாமரைப்பூ; பூவி-திருமகள்; ஒரீஇ-நீங்கி; ஈத்து-கொடை / ஈதல்)

எவராலும் முற்றும் நாவால் புகழ்ந்து உரைத்துவிட முடியாத அருமையான நல்ல வளங்களை நிரம்பப் பெற்றிருக்கின்ற இக்கோசல நாடு, இப்போது தாமரை மலரில் உறையும் திருமகள் அம்மலரை நீங்கிப் போனதுபோல, இந்தநாடும் பொலிவு நீங்கியது. சீதாதேவி, யாரும் கடந்து செல்லுதற்கரிய நீண்ட காட்டு வழியிடைச் சென்று விட்டதால் இப்போது இந்நாடு உயிர் பிரிந்த உடல் போலச் செயலற்றுக் காணப்பட்டது.

Koviloor Digital Library

நாடு பொலிவிழந்தமைக்குத் திருமகள் நீங்கினமையும்; தேவி நீங்கினமைக்கு ஆவி நீங்கினமையும், செயலற்றுக் கிடந்த நாட்டிற்கு ஆவி நீத்த உடலும் உவமைகள். மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்றாற் போல இப்போது மன்னன் இல்லாத நாடு உயிரற்ற உடல் போல் ஆயிற்று என்பதாம்.

28. பரதன் அடைந்த துயரம்

என்ற நாட்டினை நோக்கி, இடர் உழந்து,
ஒன்றும் உற்றது உணர்ந்திலன், உன்னுவான்,
''சென்று கேட்பது ஓர்தீங்கு உளதாம்'' எனா,
நின்று, நின்று, நெடிது உயிர்த்தான் அரோ! (2225)

(நின்று நின்று-தயங்கித் தயங்கி; ஒன்றும்-சிறிதளவும்)

இவ்வாறு பொலிவற்றுத் திகழ்ந்த கோசலநாட்டைக் கண்ட பரதன் மிகத் துன்புற்றான்; நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஒன்றையும் சிறிது கூட உணர்ந்தானில்லை; என்னவாயிருக்கும் என்று எண்ணியவன், ''நாம் அரண்மனைக்குச் சென்று கேட்கப் போவது ஒரு பெரிய தீயசெய்தி இருக்கிறது'' என்று மட்டும் மனத்தில் நினைத்து, தயங்கித் தயங்கிப் பெருமூச்செறிந்தான்.

நாடு இவ்வாறு பொலிவிழந்திருப்பதற்குக் காரணம் அரண்மனையில் ஏதோ ஒரு பெரிய தீமை விளைந்திருக்கிறது என்பதை அனுமானத்தால் அறிந்தான் என்பதாம். துன்பம் மிகுதியில் பெருமூச்சு விடுதல் இயல்பு.

29. பரதன் அயோத்தி நகரத்தின் நிலையைக் காணுதல் [10 பாடல்கள்]

மீண்டும் ஏகி, அம்மெய் எனும் நல்லணி
பூண்ட வேந்தன் திருமகன், புந்திதான்
தூண்டு தேரினும் முந்து உறத் தூண்டுவான்
நீண்ட வாயில் நெடுநகர் நோக்கினான். (2226)

(புந்தி-மனம் / அறிவு; நீண்ட-உயர்ந்த)

அவ்வாறு தயங்கித் தயங்கி நின்று பெருமூச்செறிந்தபடிப் பின்னும் சென்று, அந்தச் சத்தியம், வாய்மை என்ற பெருமை சான்ற அணிகலனை அணிந்துள்ள அரசன் தசரதனின் அழகிய மகனாகிய பரதன், தனது மனம், தான் ஏறிவருகின்ற தேர் செல்லும் வேகத்தை விடவும் முந்திச் செல்லும்படி சென்று, உயர்ந்த தலைவாயில்களை உடைய பெரிய நகரான அயோத்தியை நன்றாகப் பார்த்தான்.

வாய்மையைக் காப்பதற்காகத் தனது இன்னுயிரையும் ஈந்த தசரதனைக் கம்பன் ''மெய்யெனும் நல்லணி பூண்ட வேந்தன்'' என்கிறான். தான்

Koviloor Digital Library

செல்லும் தேரினும், பரதனின் மனம் கடிய வேகத்தில் முற்பட்டது, என்ன நடந்தது என்பதை அறிவதற்காக என்க. பரதன் இப்போது நோக்கிய தலைவாயில் மேற்குத் திசையில் உள்ள ''வைஜயந்தம்'' என வான்மீகம் கூறும்.

30. ''அண்டம் முற்றும் திரிந்து அயர்ந்தாய், அமுது
உண்டு போதி'', என்று ஒண்கதிர்ச் செல்வனை
விண் தொடர்ந்து விலக்குவ போல்வன,
கண்டிலன் கொடியின் நெடும் கானமே. (2227)

(அயர்தல்-சோர்ந்து போதல்; கானம்-தொகுதி / கூட்டம்)

ஒளி மிகுந்த கிரணங்களை உடைய செல்வனாகிய கதிரவனை, ''இவ்வுலகம் முழுதும் அலைந்து திரிந்து சோர்வுற்று விட்டாய்; இப்போது இங்கே தங்கி உணவு உண்டு செல்க'' என்று அதன் உடன் தானும் தொடர்ந்து சென்று, அதன் போக்கைத் தடுப்பன போல வானைத் தொட்டு நிற்கும் அயோத்தி நகரத்து மாளிகைகளின் மேல் பறக்கும் கொடியின் கூட்டத்தைப் பரதனால் காணமுடியவில்லை.

அரண்மனை வாயிலை நோக்கும் போது, முதலில் கண்களுக்குத் தெரியவேண்டுவது அங்கு விண்ணைத் தொடுமளவு உயர்ந்து பறக்கும் அந்நாட்டின் கொடிகளின் கூட்டம் தான். ஆனால் அவை இப்போது பறக்கவில்லை. இறக்கப்பட்டிருந்தன. எனவே அங்கே ஏதோ ஒரு தீங்கு விளைந்திருக்கிறது என்பதைப் பரதன் உறுதி செய்து கொண்டான்.

31. ''ஈட்டும்நன் புகழ்க்கு ஈட்டிய யாவையும்,
வேட்ட வேட்டவர் கொண்மின் விரைந்து'' எனக்
கோட்டி, மாக்களைக் கூவுவ போல்வன,
கேட்டிலன் முரசின் கிளர் ஓதையே. (2228)

(ஈட்டிய-முயன்று தேடிய; வேட்டல்-விருப்பம்; கொண்மின்-முகந்து கொள்ளுங்கள்; கோட்டி-கூட்டமான; மாக்கள்-இரவலர்; கூவுதல்-அழைத்தல்; கிளர்-பொங்கும்)

தான்முயன்று தேடிய செல்வங்கள்எல்லாமும் நல்ல புகழைப் பெறுதற் பொருட்டே. எனவே ''வேண்டுவார் வேண்டியபடி விரைந்து வந்து முகந்து கொள்ளுங்கள்'' என்று கூட்டமான இரவலர்களைக் கூவி அழைப்பது போன்ற கொடை முரசங்கள் முழங்கும் ஓசையைப் பரதன் கேட்கவில்லை.

கொடை முரசங்களும் ஒலி கவிந்து போயிருந்தன என்பதாம். இரந்து வாழும் இழிவுடையர் எனவே இரவலர்களை மாக்கள் என்றார். கொடை முரசு ஒலித்தல் இரவலர்களைக் கூவியழைப்பது போன்றது என்றது ஒரு நயம். ''செல்வத்துப் பயனே ஈதல்'', ''ஈதல் இசைபட வாழ்தல்'' என்பதும் கருதத்தக்கது.

Koviloor Digital Library

32. கள்ளை மாக்கவர் கண்ணியன் கண்டிலன்
பிள்ளை மாக்களிறும், பிடி ஈட்டமும்
வள்ளை மாக்கள் நிதியும், வயிரியர்
கொள்ளை மாக்களின் கொண்டனர் ஏகவே. (2229)

(கள்-தேன்; மா-வண்டு; கவர்-கவர்ந்து உண்ணும்; கண்ணி-தலை மாலை; வயிரியர்-பாணர்கள்; பிள்ளை-இளைய; வள்ளை மாக்கள்-நாண் மங்கலம் பாடுவோர்)

தேனைக் கவர்ந்து உண்ணும் வண்டுகள் உள்ள தலை மாலையை அணிந்த பரதன், பாணர்களும், நாண் மங்கலம் பாடுவோரும், இளமை யான யானைக் கன்றுகளையும், பெண் யானைகளின் கூட்டத்தையும், செல்வத்தையும், கொள்ளையடித்துக் கொண்டு போகும் திருடர்களைப் போலப் போகும் காட்சியையும் காணவில்லை.

வள்ளை மாக்கள் என்பவர் நாண் மங்கலம் பாடி அரசர்களையும் செல்வர்களையும் எழுப்பிப் பரிசில் பெற்றுச் செல்லுபவர்கள்; வயிரியர் என்போர் பாணர்களில் ஒருவகையினர். கூத்தும் பாட்டும் உடையோர் வாத்திய இசைஞர். அளவறியாது கொள்ளை கொண்டு செல்வது திருடர் இயல்பு. இங்கே இவர்கள் அளவறியாதும், உரிமையோடும் எடுத்துச் செல்வதனால் கொள்ளை மாக்களின் என்று திருடர்களைப் பரிசிலர்க்கு உவமித்தார்.

33. காவல் மன்னவன் கான்முளை கண்டிலன்,
ஆவும், மாவும், அழிகவுள் வேழமும்,
மேவு காதல் நிதியின் வெறுக்கையும்
பூவின் வானவர் கொண்டனர் போகவே. (2230)

(கான்முளை-புதல்வன் / வழித்தோன்றல்; மா-குதிரை; அழி-மதநீர் பெருகுகின்ற; கவுள்-கன்னங்கள்; வெறுக்கை-செல்வம் மிகுதி; பூ-பூமி; வானவர்-தேவர்; பூதேவர்-நிலத்தேவர் / அந்தணர்கள் / பூசுரர்கள் / புவித் தேவர்)

உலகையே பாதுகாத்து வரும் சக்கரவர்த்தியாகிய தசரதனின் வழித் தோன்றலான பரதன், மாடுகள், குதிரைகள், மதம் பெருகுகின்ற கன்னத்தையுடைய யானைகள், யாவரும் விரும்பும் பெரும் செல்வத்திரள் இவற்றையெல்லாம், மண்ணுலகில் வாழும் தேவர்கள் என்று கூறப்படும் அந்தணர்களும், வேதியர்களும் கொண்டு செல்லுவதைப் பார்க்கவில்லை.

பொதுவாக அந்தணர்கள் தானம் பெறுதற்கு உரியவர்கள். இவர்கள் யாரும் எந்தப் பொருளையும் கொண்டு செல்லுதலைப் பரதன் பார்க்கவில்லை என்பது கருத்து. வானிலுள்ளவர்கள் தேவர்கள் என்பதைப் போல, பூமியில் உள்ள தேவர்கள் பூவின் வானவர், பூதேவர், நிலத்தேவர்,

Koviloor Digital Library

பூசுரர்கள் புவித்தேவர் என்றும் வழங்கப்படுவர். இவை வேதம் வல்ல வேதியரையும், அந்தணர்களையும் குறிக்கும்.

34. சூழ்அமைந்த சுரும்பும், நரம்பும், தம்
ஏழ்அமைந்த இசை இசையாமையால்,
மாழை உண்கண் மயில் எனும் சாயலார்
கூழை போன்ற பொருநர் குழாங்களே. (2231)

(சூழ்தல்-மொய்த்தல் / வட்டமிடுதல்; சுரும்பு-வண்டுகள்; நரம்பு-யாழ்க்கருவி; மாழை-மாவடு; உண்கண்-மை பூசப்பெற்ற கண்கள்; கூழை-கூந்தல்; பொருநர்-கூத்தர் / ஒருவரைப் போலக் கோலம் கொண்டு பாடி ஆடும் கலைஞர் / களம் பாடுவார்)

வட்டமிடுதலையும் மொய்த்தலையும் உடைய வண்டுகளும், முறுக்காணியால் முறுக்கேற்றப்படும் யாழ் போன்ற நரம்புக் கருவிகளும், தமக்கே சிறப்பாக அமைந்துள்ள ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு சுரங்களை உடைய இசையைப் பாடததனால், மாவடு போன்றதும், மை பூசப் பெற்றதுமான கண்களையுடையவரும், மயில் போன்ற சாயலை உடையவருமான மகளிரின் கூந்தல் போல, கூத்தர்களின் கூட்டங்கள் இருந்தன.

மகளிர் வருத்த முற்றிருப்பதனால் அவர்கள் கூந்தலில் மலர் சூடவில்லை; எனவே வண்டுகள் அவர்கள் கூந்தலை மொய்க்கவில்லை. எனவே அவற்றின் ரீங்கார இசை கேட்க வில்லை; அதைப் போல கூத்தர்களும் வருத்த முற்றிருப்பதனால் தமது யாழ்க் கருவியிலிருந்து இசைபாடவில்லை. எனவே எழுசுரங்களின்ஒலி கேட்கப்படாததாயிற்று. பொதுத் தன்மையான இசையின்மையால் இரண்டையும் உவமைப் படுத்தினார் என்க. ஏழு இசை என்பன குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு சுரங்களாகும்.

35. தேரும், மாவும், களிறும், சிவிகையும்,
ஊரும் வண்டியும் ஊருநர் இன்மையால்
யாரும் இன்றி எழில்இல வீதிகள்;
வாரி இன்றிய வாலுக ஆற்றினே. (2232)

(மா-குதிரை; சிவிகை-பல்லக்கு; வாரி-வெள்ளம் / நீர்ப்பெருக்கு; வாலுகம்-வெண் மணற்பரப்பு)

ஊர்ந்து செல்லக்கூடிய தேர்களும், குதிரைகளும், யானைகளும், பல்லக்குகளும், வண்டிகளும், ஏறிச்செல்வாரும், ஏற்றிச்செல்வாரும் இல்லாமையினாலும், தெருக்களில் நடந்து செல்வோர் கூட இல்லாமை யானும், நகரத் தெருக்களெல்லாம், வெள்ளம் இல்லாத வெற்று வெண் மணற் பரப்புடைய ஆறுகள் போல வெறிச்சோடிக் கிடந்தன.

Koviloor Digital Library

''ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு'' என்பது நெடுநல்வாடை; மக்கள் போக்குவரவு இயக்கம் இல்லாத தெருக்கள், நீர் வற்றிய ஆறுகள் போன்றன என்பதாம். இந்தப் பத்துப் பாடல்களின் கருத்தைக் கவிஞர் வாலி எப்படிக் கூறுகிறார் என்பதைக் கேளுங்கள். ''மாளிகைகள் நிறைந்த மாடவீதிகளில் கூட மயான அமைதி; பூமியே புழுக்கம் தாங்காமல் வியர்த்து வாடியது; பார்த்தான் பரதன்; பதற்றமுற்றான்; தனது கூர்ந்த மதியாலும் குறிப்புணர மாட்டாமல் குழம்பினான்''.

36. பரதன் சத்துருக்கனனிடம் கூறுதல்

அன்னதன்மை அகநகர் நோக்கினன்;
பின்னை அப்பெரியோர் தம் பெருந்தகை
''மன்னன் வைகும் வளநகர் போலும் ஈது?
என்ன தன்மை? இளையவனே!'' என்றான். (2233)

இவ்வாறு பொலிவிழந்த நகரத் தெருக்களின் தன்மையை உற்று நோக்கிய, பெரியோர்களுக்கெல்லாம், ஒழுக்கத்திலும், அறிவிலும் பெரியவனான பரதன், பின்பு தன் தம்பி சத்துருக்கனனை நோக்கி, ''தம்பி! இது மன்னவன் வாழும் வளமுள்ள நகரம் போலவா காணப்படுகின்றது? இது என்ன இரங்கத்தக்க தன்மை? எனக்குப் புரியவில்லையே!'' என்றான்.

மன்னன் இருக்கும் நகரம் போலவா தென்படுகிறது? என்ற கேள்வியிலேயே, மன்னன் இல்லாத நகரம் போலத் தென்படுகிறதே என்ற மறுமொழியும் அடங்கியிருக்கும் வண்ணம் சொற்றொடரைப் பெய்திருக்கும் கம்பனின் கைவண்ணம் வியத்தற்கும் போற்றுதற்குமுரியது.

37. ''வேற்று அடங்கலர் ஊர் என மெல்லிதால்
சூல்தடம் கரும்கார் புரை தோற்றத்தான்
சேல்தடம் கண் திருவொடும் நீங்கிய
பால்தடம் கடல் ஒத்தது பார்'' என்றான். (2234)

(அடங்கலர்-பகைவர்; வேற்று-வேறுபட்ட; மெல்லிது-வலிவிழந்தது / தாழ்வுற்றது / அற்பமானது)

''நம்மோடு மாறுபட்ட பகைவர்களது ஊர் போல வலிவிழந்து காணப்படுகிறது நம் நகரத் தெருக்கள். முற்றிய கருக்கொண்ட கரிய மேகம் போன்ற வடிவுடைய திருமால், கயல்மீன் போன்ற பெரிய கண்களை உடைய திருமகளை விட்டு நீங்கிய பெரிய திருப்பாற்கடலைப் போல வெறுமையான தோற்றம் தருவதைக் காண்பாயாக!'' என்று பரதன் சத்துருக்கனனிடம் கூறினான்.

திருமாலும் திருமகளும் நீங்கிய பாற்கடல் என்னும் போதே அவனை அறியாமலேயே இராமனும் சீதையும் நீங்கிய அயோத்தி நகரம் பரதன் கண்ணுக்குப் புலப்பட்டது. அதைச் சத்துருக்கனனுக்குச் குறிப்பால் காட்டினான் என்பதாம். நகரம், பாழ்பட்ட பகைவர் ஊரைப் போலவும்,

Koviloor Digital Library

திருமாலும், திருமகளும் நீங்கிய பாற்கடலைப் போன்று வெறுமையாகவும் காட்சியளித்தது என்பதாம். மெல்லிது என்பது அழகிழந்து அவலம் உற்றதனால் அற்பமானது என்ற பொருளையும் தரும். பார் என்பதற்குப் பரதன் சத்துருக்கனனை விளித்து ''காண்பாயாக'' என்று சொல்லியதாகப் பொருள் கூறப்பட்டது. ஆனால் பார் என்பதற்கு உலகம் என்ற சுட்டுப் பொருள் கொண்டு அயோத்தி நகரம் என்று உரை கூறுவாரும் உளர்.

38. சத்துருக்கனன் மறுமொழி

குருமணிப் பூண் அரசிளங் கோளரி
இருகை கூப்பி இறைஞ்சினன்; ''எய்தியது
ஒருவகைத்து அன்று உறுதுயர்; ஊழிவாழ்
திருநகர்த் திரு தீர்ந்தனளாம்'' என்றான். (2235)

(குரு-நல்ல நிறம்; கோள்அரி-வலிய சிங்கம்; ஊழி-நெடுங்காலமாக; தீர்தல்-நீங்குதல்; உறு-மிகுதி)

சிறந்த நிறம் அமைந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அணிகலன்களை அணிந்துள்ளவனும், இளவரசர்களிலேயே இளமையானவனும், வலிமையான சிங்கத்தைப் போன்ற ஆற்றல் உடையவனுமான சத்துருக்கனன், தனது இரண்டு கைகளையும் கூப்பிப் பரதனைத் தொழுது, ''இப்பொழுது இந்நகரத்திற்கு நேர்ந்துள்ள மிகுதியான துன்பத்தைப் பார்த்தால் இது ஒரு வகையால் ஆனது என்று தோற்றவில்லை. இது பல வகைத்தானது; கற்பக்காலம் வரைக்கும் வாழ்ந்து இருக்க வேண்டிய திருமகள், இந்நகரை விட்டு நீங்கிவிட்டாள் போலத் தோற்றுகிறது'' என்றான்.

எய்தியது ஒரு வகைத்தன்று என்பது, தசரதன் இறப்பு, இராம, இலக்குவரோடு சீதையும் நகர் நீங்கியது ஆகிய பல வகைத் துன்பங்களை உள்ளடக்கியது. நெடிது காலமாக நிலைபெற்றிருந்த செல்வத்திரு என்றும், இன்னும் நீண்ட காலம் நிலை பெற்றிருக்க வேண்டிய செல்வத்திரு என்றும் குறிப்பதை ''ஊழிவாழ் திருநகர்த்திரு'' என்றது ஒரு நயம். ''உறு, தவ, நனி என வரும் மூன்றும் மிகுதி செய்யும் பொருள் என்ப'' என்பது தொல்காப்பியம்.

39. பரதன் தசரதன் மாளிகையை அடைதல்

அனைய வேலையில், அச்சுடைத்தேர் அரண்
மனையின் நீள்நெடு மங்கல வாயிலை
நினையும் மாத்திரத்து எய்தலும், நேமியான்
தனையனும், தந்தை சார்விடம் மேவினான். (2236)

Koviloor Digital Library

(வேலை-சமயம் / வேளை; நேமி-ஆணைச் சக்கரம்; அரணை உடைய அரசன்மனை அரண்மனை. காரணப்பெயர். சார்விடம்-வழக்கமாகத் தங்கும் இடம்)

அந்தச் சமயத்தில், சக்கரங்களை உடைய தேரையுடைய அரண்மனை யின் நீண்ட நெடிய மங்களகரமான தோரணவாயிலை அடைந்ததும், ஆணைச்சக்கரத்தைச் செலுத்தும் தசரத மன்னனின் புதல்வனாகிய பரதன், தசரதன் எப்பொழுதும் வழக்கமாகத் தங்குமிடத்தை மனோவேகத்தில் சென்று சேர்ந்தான்.

அரண்மனை வாயிலின் நீளம், உயர்வு, பொலிவு முதலியவற்றைக் குறிக்க நீள்நெடு மங்கல வாயில் என்றார். தேர் மனோவேகத்தில் சென்றது என்பதை, நினையும் மாத்திரத்து என்று விரைவு குறித்தார். ஓலை வந்தது தந்தையிடம் இருந்து என்பதாலும், தனையன் முதலில் காண வேண்டுவது தந்தையையே என்பதாலும், முதலில் தசரதன் வழக்கமாகத் தங்குமிடத்தை அடைந்தான் என்றார்.

40. தந்தையைக் காணாது ஐயுறுதல்

விருப்பின் எய்தினன், வெம்திறல் வேந்தனை
இருப்பு நல்லிடம் எங்கணும் கண்டிலன்;
''அருப்பம் அன்றுஇது'' என்று, ஐயுறவு எய்தினான்;
பொருப்பும் நாண உயர்ந்த புயத்தினான். (2237)

(பொருப்பு-மலை; வெம்-மிக்க; இருப்பு-இருத்தற்குரிய இடங்கள்; அருப்பம்-அற்பம் / சிறிய நிகழ்ச்சி / அல்பம் என்ற வடசொல்லின் தமிழாக்கம்)

மலைகளும் நாணும் படியான உயர்ந்த தோள்களையுடைய பரதன், தந்தையைக் காண வேண்டும் என்ற பேராவலோடு விரைந்து வந்தவன், மிக்க வலிமை படைத்த மன்னன் தசரதனை, பொதுவாக அவன் தங்கியிருத்தற்குரிய இடங்களில் எல்லாம் தேடினான்; காணமுடிய வில்லை. இவ்வாறு மன்னனை அவன் இருத்தற்குரிய உயர்ந்த இடத்தில் இல்லை என்பது அற்பமான-சாதாரணமான-சாமானியமான நிகழ்வு அன்று. ஏதோ ஒரு பெரிய காரியம் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று உள் மனதுக்குள் சந்தேகம் கொள்ளலானான்.

ஐயுறவு என்பது மன்னவன் மாண்டு போயிருக்கலாமோ என்ற சந்தேகம் என்று கொள்க.

41. கைகேயி அழைப்பதாகப் பணிப்பெண் கூறுதல்

ஆயகாலையில், ஐயனை நாடித் தன்
தூயகையில் தொழல் உறுவான் தனைக்

Koviloor Digital Library

"கூயள் அன்னை, குறுகுதிர் ஈண்டு" என
வேய்கொள் தோளி ஒருத்தி விளம்பினாள். (2238)

(ஐயன்-தசரதன்; வேய்-மூங்கில்; கொள்-போன்ற; கூயள்-கூவினாள் / அழைத்தாள்; குறுகுதல்-அடைதல் / வருதல்)

அந்தச் சமயத்தில், தசரதனை எங்கேயாவது தேடிக் கண்டு பிடித்துவிட வேண்டும் என்று விரைந்து தொழுத கையினனாகச் செல்லும் பரதனை "தங்கள் தாயார் தங்களை அழைக்கிறார்கள் அவரது அரண்மனைக்கு வருக" என்று மூங்கிலை ஒத்த மென்மையான தோள்களையுடைய பணிப்பெண் ஒருத்தி கைதொழுது கூறினாள்.

இங்கே ஐயனை என்பதற்கு இராமபிரானை நாடி என்றும் பொருள் கூறுவர். தந்தையைக் காணாததால், அடுத்து இராமபிரானையாவது காணலாம் என்று அவ்வாறு கூறுவர். தசரதன் என்பதே மிகப் பொருத்தமுடையதாகும். தசரதன் தான் இருக்குமிடத்தில் இல்லாததால், அவன் பேரன்பு கொண்டிருக்கின்ற கைகேயியின் மாளிகைக்குத் தான் சென்றிருப்பான் என்று எண்ணி, பரதன் தானாகவே கைகேயியின் மாளிகைக்குச் சென்றான் என்று வான்மீகம் கூறும்.

42. வந்து வணங்கிய பரதனைக் கைகேயி வினவுதல்

வந்து தாயை அடியில் வணங்கலும்,
சிந்தை ஆரத் தழுவினள்; "தீதுஇலர்
எந்தை என்னையர் எங்கையர்?" என்றனள்;
அந்தம்இல் குணத்தானும், "அது ஆம்" என்றான். (2239)

(ஆர-நிறைவு கொள்ள; ஐயர்-தமையன்மார்; எங்கையர்-என் தங்கையர்; அந்தம்இல்-எல்லையில்லாத)

ஏவற்பெண் வந்து கூறியதும், பரதன், வந்து கைகேயியின் தாள்களில் விழுந்து வணங்கியதும், அவளும் தன் மனம் நிறைவு கொள்ளத் தழுவினாள். பின்னர், "கேகய நாட்டில், என் தந்தையும், என் தமையன் மாரும், என் தங்கைகளும் தீது இல்லாது நலமாக இருக்கின்றார்களோ?" என்று நலம் உசாவினாள். எல்லையில்லாத நற்குணங்களையுடைய பரதனும் "ஆம் அவ்வாறே" என்றான்.

நாட்டின், நகரத்தின் பொலிவிழந்த நிலையைக் கண்டும், தந்தையை அவனுக்குரிய இடத்தில் காணாததாலும் ஏதோ நிகழ்ந்திருக்கிறது என்ற மனநிலையில் உள்ள பரதன், தாய்கேட்ட கேள்விகளுக்கு எதிர்வாதம் செய்யாது பொறுமையுடன் ஒரே வார்த்தையில் பதில் கூறிய நயம் தோன்றவே இங்கே, பரதனை "அந்தம்இல் குணத்தான்" என்றார் என்க. நலமாக இருக்கின்றனரா என்று கேட்பதற்குப் பதில் "தீது இலரோ" என்று அவள் கேட்டது சூழலைப் பொறுத்துச் சொல் வரவு அமைதல் இயல்பு

Koviloor Digital Library

என்பதை நிறுவும். கம்பன் முன்னும், பின்னும் பல இடங்களில் இவ்வாறே பாத்திரங்களின் கூற்றுக்களைப் படைப்பதும் கருதத்தகும்.

43. தசரதனைப் பற்றிப் பரதன் வினவுதல்

''மூண்டு எழுகாதலான், முளரித்தாள் தொழ
வேண்டினென் எய்தினன்; உள்ளம் விம்முமால்;
ஆண்தகை நெடுமுடி அரசர் கோமகன்
யாண்டையான்? பணித்திர்!'' என்று, இருகை கூப்பினான். (2240)

(மூண்டு-கிளர்ந்து / மேற்பட்டு; காதல்-அன்பு; முளரி-தாமரை; விம்முதல்-தேம்புதல் / ஏங்குதல்; பணித்தல்-சொல்லுதல்; அரசர் கோமகன்-அரசர்க்கரசன் / சக்கரவர்த்தி)

''தந்தையைக் காண வேண்டும் என்று மேற்பட்டுக்கிளர்ந்து எழும் ஆசையாலும், அவனுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தொழ வேண்டும் என்ற விருப்பத்தினாலும் இவ்வளவு விரைவாக வந்து சேர்ந்தேன்; அவன் வழக்கமாக இருக்குமிடத்தில் அவனைக் காணவில்லை; எனவே மனம் மிக்க ஏங்குகிறேன்; ஆண்களிற்சிறந்தவனும், நீண்ட மகுடத்தை அணிந்தவனும் ஆகிய மன்னர் மன்னன் எங்கு இருக்கிறான்? தயவு செய்து சொல்லுங்கள்'' என்று பரதன் கைகேயியை நோக்கி இருகரம் கூப்பித் தொழுது கேட்டான்.

அறுபதினாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அரசு புரிந்தவன் ஆகையால் நெடுமுடி என்றான். மூண்டெழுகாதல் என்பது அதீத ஆவல் என்பதாம்.

44. கைகேயியின் மறுமொழி

ஆனவன் உரைசெய, அழிவுஇல் சிந்தையாள்
''தானவர்வலி தொலைத்து அவனி தாங்கிய
தேன்அமர் தெரியலான், தேவர் கைதொழ
வானகம் எய்தினான்; வருந்தல் நீ'' என்றாள். (2241)

(அழிவுஇல் சிந்தை-கலங்காத மனம்; தானவர்-அரக்கர்கள்; நிமிர்ந்த-பெருகிய; தெரியல்-மாலை; வானகம்-சுவர்க்கம்)

அவ்வாறு பரதன் கேட்கவும், கணவன் இறந்து போனானே என்று சற்றும் கவலையோ கலக்கமோ இல்லாத மனத்தையுடைய கைகேயி, ''அரக்கர்களது வலிமையை அழித்து இவ்வுலகத்தை அரசு புரிந்து காப்பாற்றியவனும், வண்டுகள் சூழ்ந்த மலர்மாலை யணிந்தவனுமான சக்கரவர்த்தி, தேவர்களே கைதொழுது எதிர்கொண்டழைக்கச் சுவர்க்கம் புகுந்தான். அது பற்றி நீ வருந்தாதே'' என்றாள்.

Koviloor Digital Library

''அழிவுஇல் சிந்தையாள்'' என்ற சொல்லாட்சி மிகவும் சுவைக்கத் தக்கது. பொதுவாகக் கணவனை இழந்த மனைவியர் எத்துணை துக்கத்தில் இருப்பர்என்பது நாம்அறிந்ததே. சிலம்பில், பாண்டியன்நெடுஞ்செழியன் இறந்ததும், கோப்பெருந்தேவி, ''கணவனை இழந்தோர்க்குச் காட்டுவது இல்'' என்று தானும் உடன் இறந்து போனாள். ஆனால் கைகேயியோ தன் கணவன் இறந்த பிறகும், தான் உயிர்வாழ்வதோடு மட்டுமல்லாமல், தன் மைந்தனிடமே தன் தந்தைஇறந்தது பற்றி வருந்தாதே என்று கூறுகின்ற வலிய கல்நெஞ்சைத் தான் ''அழிவுஇல் சிந்தையாள்'' என்று மிக அழகாகக் குறிப்பிடுகிறான்கம்பன். தேவர்கைதொழ என்பது, சம்பராசுரப் போரில், சம்பராசுரனைச் கொன்று, தேவருலகை மீட்டுத் தேவர்களுக்குக் கொடுத்ததால் நன்றியுணர்வோடு தேவர்கள் கைதொழுது தசரதனை எதிர்கொண்டார்கள் என்பதாம். வானவர் கைதொழுது எதிர் கொண்டமையால், அங்கும் வானவர் போற்ற பெருமையும் இன்பமும் எய்தி வாழ்வான் எனவே நீ வருந்தாதே அது குறித்து நீ மகிழ்க என்று கூறியதாகவும் ஒரு சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். வருந்தல் நீ என்ற சொல்லாட்சி கம்பனுக்குச் கைவந்த சொற்கள். சீதையைப் பிரிந்து இராமன் காடு புகப்போகும் நாள் ''சென்று சில நாட்களில் திரும்பி வந்து விடுவேன் நீ வருந்தாதே இங்கேயே இரு'' என்கிறான். இங்கும் அதே போன்று வருந்தல் நீ என்ற சொற்களையே கவிஞன் கையாண்டிருக்கிறான்.

45. தந்தை இறந்தது கேட்ட பரதன் நிலை

எறிந்தன கடியசொல் செவியுள் எய்தலும்
நெறிந்து அலர் குஞ்சியான் நெடிது வீழ்ந்தனன்;
அறிந்திலன்; உயிர்த்திலன்; அசனி ஏற்றினால்
மறிந்து உயர் மராமரம் மண்உற்று என்னவே. (2242)

(அலர்-விரிந்து கிடக்கும்; குஞ்சி-ஆண்களின் தலை மயிர்; அசனி ஏறு-பேர் இடி; மராமரம்-வெண்கடம்ப மரம்; மறிந்து-தலை சாய்ந்து / வேரற்று; மண்-தரை / பூமி)

வேலைப் பாயச்சினாற் போன்ற கைகேயியின் கொடிய சொற்கள் பரதன் காதுகளில் பட்ட மாத்திரத்திலேயே நெறிப்புடைய தலைவிரி கோலமாக இருந்தான் பரதன், பேரிடியினால் வேரோடு தலை சாய்ந்து விழுகின்ற உயர்ந்த வெண் கடம்ப மரம் பூமியில் விழுவதைப் போன்று, தரையில் விழுந்தான். உணர்வை இழந்தான். மூர்ச்சையுற்றான்.

கைகேயியின் சொல்லின் கொடுமை வேல் கொண்டு எறிந்தது போன்று இருந்தது என்பதாம். உயிரற்ற உடல் போல அறிவிழந்து மூச்சற்றுத் தரையில் விழுந்தான்என்பதாம். கைகேயியின்கடுஞ்சொல்பேரிடி; பரதன் விழுந்தது மராமரம் விழுந்ததற்கு உவமை.

Koviloor Digital Library

46. பரதன் கைகேயியைக் கடிந்து கூறுதல்

வாய்ஒளி மழுங்கத் தன்மலர்ந்த தாமரை
ஆய்அலர் நயனங்கள் அருவி சோர்தரத்
''தீஎரி செவியில் வைத்தஅனைய தீயசொல்
நீ அலதுஉரை செய நினைப்பரோ?'' என்றான். (2243)

(ஆய்-அழகிய; அலர்-மலர்; சோர்தர-பெருக; எரி-கொளுத்துகின்ற; நயனங்கள்-கண்கள்; வாய்-முகமுமாம்)

கீழே விழுந்த பரதன் சற்றுத் தேறி எழுந்து, தன் முகமெல்லாம் ஒளி மழுங்கவும், தனது தாமரை மலர் போல் மலர்ந்த அழகிய கண்கள் அருவிபோலக்கண்ணீர்பெருக்கவும்; ''எரிகின்றநெருப்பின்கொழுந்தைக் காதில் வைப்பது போன்ற இத்தகைய கொடிய சொற்களை உன்னையன்றி வேறு யாராவது மைந்தனிடமே கூறுவதற்கு நினைத்தாவது பார்ப்பார்களா?'' ஒருவர் கூட நினைத்தே பார்க்க மாட்டார்கள்'' என்றான்.

எப்பொழுதும் புன்முறுவல் பூத்து நிற்கும் முகம், இக்கொடிய செய்தியைக் கேட்டதாலும், அதன் விளைவாகத் தரையில் வீழ்ந்து, பின் தெளிந்து எழுந்ததாலும் அவன் முகம் ஒளி மழுங்கி இருந்தது என்பதாம். மற்றவர்கள் யாராவது வருந்தாதே என்ற இத்தகைய கொடிய சொல்லைச் சொல்லவாவது நினைப்பார்களா? ஒருவரும் நினைக்கக் கூட மாட்டார்கள். ஆனால்நீ நினைத்தது மட்டுமல்ல உன்மைந்தனிடமேகூறும் துணிவு பெற்றிருக்கிறாய் என்று கடிந்து கூறினான் என்பதாம். கண்ணீர்ப் பெருக்கு அருவியின் பெருக்குப் போல் மிகுந்திருந்தது என்பதாம். பிறர் நினைக்கவும் முடியாத சொற்களை, பிறர் சொல்ல நினைக்கவும் கூசும் கடும் சொற்களை, அவள் வாய்திறந்து கூறிய கொடுமையைக் கடிந்தான் பரதன்.

47. பரதன் புலம்புதல் [10 பாடல்கள்]

எழுந்தனன்; ஏங்கினன்; இரங்கிப் பின்னரும்
விழுந்தனன்; விம்மினன்; வெய்து உயிர்த்தனன்;
அழிந்தனன்; அரற்றினன்; அரற்றி இன்னன
மொழிந்தனன் பின்னரும் முருகின் செவ்வியான். (2244)

(முருகு-முருகன்; செவ்வி-அழகு; இரங்கி-அழுதுகொண்டே; உயிர்த்தல்-பெருமூச்சு விடுதல்)

முருகனைப் போன்ற அழகுடைய பரதன் இவ்வாறு கீழே விழுந்து கிடந்தவன் மெதுவாக எழுந்தான்; தந்தையை நினைந்து ஏங்கினான் அழுது கொண்டே நிற்க முடியாது மீண்டும் கீழே விழுந்தான்; தேம்பினான்; பொருமினான்; வெப்பப் பெருமூச்சு விட்டான்; மனம்

Koviloor Digital Library

அழிந்தான்; வாய் விட்டு அரற்றினான்; அரற்றிப் பின் வருவனவற்றைக் கூறிப் புலம்பலாயினான்

முருகு என்ற சொல்லுக்கு, இளமை, அழகு, மணம், கடவுள் தன்மை என்றும் பல பொருள்கள் உண்டு. துன்பத்தில் நிகழும் பலவகை மெய்ப்பாடுகள் குறிக்கப் பெற்றன.

48. ''அறம்தனை வேர்அறுத்து, அருளைக் கொன்றனை;
சிறந்தநின் தண்அளித்திருவைத் தேசு அழித்து
இறந்தனையாம் எனில், இறைவ! நீதியை
மறந்தனை; உனக்கு இதின் மாசுமேல் உண்டோ?'' (2245)

(தண்-குளிர்ந்த; அளி-கருணை; தேசு-ஒளி / புகழ்; மாசு-குற்றம் / களங்கம்; அளி-முகம் மலர்ந்து இனியன கூறல்)

''அரசே! நீ அறம் என்பதனை அடியோடு அழித்து விட்டு, அருள் என்பதனையும் கொன்று விட்டாய்; உன்னுடைய பெருமை மிகுந்த குளிர்ந்த கருணை என்ற செல்வத்தின் புகழையும் ஒளியையும் கெடுத்து விட்டாய் இத்தனையையும் சிதைத்துவிட்டு நீ இறந்து போய் விட்டாய் என்றால் நீ நீதியை மறந்தவன் ஆகின்றாய். எனவே உனக்கு இதைவிடப் பெரிய களங்கம் வேறு ஒன்று உண்டோ?'' என்று ஆற்றாமையால் புலம்பினான் பரதன்.

தசரதன் இப்போது இறந்தது நாட்டில் விளங்கிய அறத்தையும், அருளையும், கருணையையும் இல்லாது போகச் செய்தது போல் ஆயிற்று என்பதாம். தசரதனைப் பழிப்பது போலத் தோற்றம் தந்தாலும், இப்பாடல் தசரதனின் அரசாட்சியைப் புகழ்வது என்பதை உணர்க. அறமும், அருளும், கருணையும் அழிகின்றது என்பதை அறிந்தும், தசரதன் இறந்தான் என்றால் அவன் நீதியினின்றும் வழுவினான் என்பது பரதனின் கருத்து. தசரதன் இறந்ததால் நாட்டில் அறம், அருள், கருணை முதலியன இல்லாது போயிற்று என்பது உட்கருத்து.

49. ''சினக்குறும்பு எறிந்து, எழுகாமத்தீ அவித்து
இனக்குறும்பு யாவையும் எற்றி, யாவர்க்கும்
மனக்குஉறு நெறிசெலும் வள்ளியோய்! மறந்து
உனக்குஉறு நெறி செலல் ஒழுக்கின் பாலதோ?'' (2246)

(குறும்பு-பகை / பொல்லாங்கு; எறிந்து-ஒழித்து; எற்றி-தாக்கி அழித்து; மனக்கு-மனத்துக்கு; இனக்குறும்பு-மயக்கம்; அவித்து-அடக்கி)

''சினம் என்னும் பகையை ஒழித்து, அடங்காது எழுகின்ற காமம் என்னும் நெருப்பையும் அணைத்து அடக்கி, அவைகளோடு தொடர்புடைய ஏனையப் பகைகளாகிற எல்லாவற்றையும் தாக்கி அழித்து, எல்லோருடைய மனத்துக்கும் ஏற்ற வகையில் வாழ்க்கை நடத்தும் வள்ளன்மை உடையவனே! அவையெல்லாவற்றையும் மறந்து

Koviloor Digital Library

விட்டு, உனக்கு மட்டும் நன்மை செய்கின்ற சுவர்க்கத்தின் பால் செல்லுதல் என்பது ஒழுக்கத்தின் பாற்பட்டதாகுமா?'' என்றான் பரதன்.

குறும்பு என்பது அகத்தே மறைந்திருந்து தொல்லை கொடுப்பனவும், திரும்பத்திரும்பத் தொல்லை கொடுக்கும் பகைகளுமாகிய காமம் வெகுளி மயக்கம் என்பனவற்றைக் குறிக்கும் பொதுச்சொல். அகப்பகை ஆறு என்பர் வடநூலார். அவை கோபம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாச்சரியம் என்பவையாம். அவற்றை காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனத் தமிழாக்கம் செய்வர். ஆனால் வள்ளுவன் இவை ஆறினையும் மூன்றாகக் காமம், வெகுளி, மயக்கம் என்று கூறுகிறான். தசரதன் எப்பொழுதும் பிறர் நலம் பேணும் பெற்றியாளன். இப்போது தான் இன்பம் துய்க்க மட்டுமே கருதி சுவர்க்கம் புகுந்ததால், இது நல்லொழுக்கத்தின் பாற்பட்டதன்று என்று புலம்புகிறான் பரதன்.

50. ''முதலவன் முதலிய முந்தையோர் பழங்
கதையையும் புதுக்கிய தலைவன், கண்ணுடை
நுதலவன் சிலைவிலின் நோன்மை நூறிய
புதல்வனை எங்ஙனம் பிரிந்து போயினாய்?' (2247)

(முதலவன்-மனு; கதை-வரலாறு; புதுக்குதல்-புதுப்பித்து நிறுவுதல்; நுதல்-நெற்றி; நோன்மை-வலிமை; நூறிய-அழித்த; முந்தையோர்-முன்னோர்)

''நம் குலத்துக்கு முதல்வர்களான சூரியன், மனுமுதலிய முன்னோர் களின் பழமையான வரலாறுகளையெல்லாம் புதுப்பித்து நிறுவிய தலைவன் தசரதனே! நெற்றியில் கண்ணை உடைய சிவபெருமானின் மலை போன்ற வில்லாகிய திரியம்பகத்தின் வலிமையை அழித்துப் புகழ் பெற்ற புதல்வனாகிய இராமனை எவ்வாறு பிரிந்து போனாய்?'' எனப் புலம்பினான் பரதன்.

முன்னோர்களுடைய அரிய செயல்களையெல்லாம் பழங்கதைகள் என்று ஒதுக்கி விடாதபடி, தானும் அவர்களைப் போலவோ அல்லது அவர்களினும் மேம்பட்டோ வீரச் செயல்கள் செய்து அவ்வரலாற்றினைப் புதுப்பித்ததோடு மட்டுமல்லாமல் அதை நிறுவி நிலைபெறச் செய்ததாலும் தசரதனை அவ்வாறு புகழ்ந்தான் பரதன். வில்லின் நோன்மை நூறிய என்பது சனகன் வைத்த வில்லை அழித்ததைக் குறித்ததாகும்.

51. ''செவ்வழி உருட்டிய திகிரி மன்னவ!
எவ்வழி மருங்கினும் இரவலாளர் தாம்
இவ்வழி உலகினில் இனிய நண்பினோர்
அவ்வழி உலகினும் உளர்கொலோ! ஐயா!'' (2248)

(செவ்வழி-செம்மையான / நேர்மையான வழி; திகிரி-ஆணைச் சக்கரம்; வழி-உலகம்; மருங்கு-இடம்)

Koviloor Digital Library

''தலைவனே! நேர்மையான வழியில் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி நீதி வழுவாது அரசு புரிந்த மன்னவனே! இவ்வுலகினில் உனக்கு இனிய நண்பர்களாயிருந்தவர்கள் எல்லோரும் உன்னிடம் இரங்கி இறைஞ்சிப் பெற்றவர்களே எல்லாப் பக்கங்களிலும் இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் விண்ணுலகிலும் இருக்கின்றனர் போலும். அவர்களையும் ஆதரித்து நண்பர்கள் ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று அங்கு சென்றாயோ?'' என்றான் பரதன்.

''இரவலாளர் தமரினும் இனியர் ஆவரே'' என்பது நைடதம். எனவே தான் இரவலாளர் தாம் இனிய நண்பினோர் என்றான்; ''உடையோர் ஈதலும், இல்லோர் இரத்தலும் கடவதன்மையிற் கையறவு உடைத்து'' என்பது புறநானூறு. ''ஈவாரும், கொள்வாரும் இல்லாத வானத்து, வாழ்வாரே வண்கணவர்'' என்பதும், தசரதன் ''இரப்போர் கடலை ஈந்தே கடந்தான்'' என்பதும் ''மொய் ஆர்கலி சூழ் முதுபாரில், முகந்த, தானக்கை ஆர் புனலால் நனையாதன கையும் இல்லை'' என்பதும் ''கொள்வார் இலாமையால்'' என்பதும் நாம் முன்பு அறிந்ததே.

52. ''பல்பகல் நிழற்றும் நின் கவிகைப் பாய் நிழல்
நிற்பன பல்உயிர் உணங்க, நீ நெடும்
கற்பக நறு நிழல் காதலித்தியோ?
மல்பக மலர்ந்ததோள் மன்னர் மன்னனே!'' (2249)

(மல்-மற்போர்; பக-ஒழியுமாறு / கெடும்படி; மலர்ந்த-விரிந்த / அகன்ற; நிழற்றுதல்-நிழல் செய்தல்; பகல்-நாள் / காலம்; கவிகை-குடை; பாய்-பரவிய; உணங்க-வாட்டம் அடைய / வெயிலில் காய்தல்; காதலித்தல்-விரும்புதல்)

''பிறரது மற்போர் வீரம் ஒழியும்படி வல்லமை மிகுந்து பரந்து அகன்ற தோள்களை உடைய மன்னர்க்கெல்லாம் மன்னனே! பல நீண்ட நெடுங்காலமாக நிழல் செய்து வரும் உனது வெண் கொற்றக் குடைபரப்பும் நிழலில் நின்று செம்மாந்திருந்த பலவகை உயிரினங்களும், இப்போது உனது வெண் கொற்றக் குடை நிழல் நிழற்றாததால் வெயிலில் காய்ந்து வாடி வதங்கிப் போயிருக்கின்றன. ஆனால் நீ மட்டும் தன்னலம் கருதி பெரிய உயர்ந்த விண்ணுலகத்தில் உள்ள கற்பக மரத்தின் மணம் மிக்க நிழலை விரும்பிச் சென்று விட்டாயோ?'' என்று புலம்பினான் பரதன்.

பல்பகல் என்பது பலகாலம் என்ற பொருளில் தசரதன் ஆட்சி செலுத்திய அறுபதினாயிரம் ஆண்டுகளைக் குறிக்கும், பிற உயிர்கள் மகிழ்ச்சியுறுதலும் மன்னர்கள் வருந்துவதும் உலக இயற்கை; ஆனால் நீ மகிழ்ந்திருக்க, உன்னால் காக்கப்பட வேண்டிய உயிர்கள் வாடி வருந்துகின்றனவே என்று பழிப்பது போல் கூறினாலும், இது தசரதனின் நல்லாட்சியைக் குறிக்கும் புகழுரையேயாம். பிறருக்கு நிழல் செய்த நீ, அவர்கள் இப்போது வாட்டமுற்றிருக்க மற்றொரு நிழலின் கண் இருக்க விரும்பியது சிறந்ததாகுமோ? என்பதாம்.

Koviloor Digital Library

53. ''இம்பர் நின்று ஏகினை, இருக்கும் சார்பு இழந்து
உம்பர் வந்து உன்கழல் ஒதுங்கினார் கொலோ?
சம்பரன் அனைய அத்தானைத் தானவர்
அம்பரத்து இன்னும் உளர்கொலோ? ஐயா!'' (2250)

(தானை-சேனை; தானவர்-அரக்கர்; அம்பரம்-விண் / வானம்; சார்பு-தங்குமிடம்; உம்பர்-தேவர்கள்; இம்பர்-இவ்வுலகம்)

''தலைவனே! சம்பரனைப் போன்ற சேனைகளையுடைய அசுரர்கள் இன்னும் வானுலகில் இருக்கின்றார்களோ? அவர்கள் தேவர்களிடம் இருக்கும் அவர்களுக்குச் சொந்தமான இடத்தைப் பறித்துக் கொண்டதனால், தேவர்கள் உன்னிடம் வந்து உன் வீரக்கழல் அணிந்த பாதங்களில் புகலிடம் என்று கூறிச் சரணடைந்தார்களோ? அவர்களைக் காப்பாற்றி அவர்களிடத்தைத் திருப்பித் தருவதற்காக நீ இங்கிருந்தும் விண்ணுலகு சென்றனையோ?''

முன்பு சம்பராசுரன் தேவர்களை மிரட்டி அவர்கள் இடத்தை வென்று எடுத்துக்கொள்ள தேவர் தலைவனான இந்திரன் அயோத்தியிலுள்ள தசரதனிடம் ஓடி வந்து முறையிட, தசரதன் சம்பராசுரனை ஓட ஓட விரட்டி, அவனை வெற்றியடைந்து, விண்ணுலகை மீட்டு இந்திரனுக்குத் திருப்பித் தந்தான். அது போல இப்போது ஏதேனும் நிகழ்ந்ததா? என்று தந்தை புகழ் பாடிப் புலம்புகிறான் பரதன். இங்கே அம்பரம் என்ற சொல் வானம் என்ற பொருளில் வந்தது. ''அம்பரம் ஊடுஅறுத்து ஓங்கி உலகளந்த'' என்பது திருப்பாவை.

54. இயம்கெழு தானையர் இறுத்த மாத்திறை
உயங்கலின், மறையவர்க்கு உதவி, உம்பரின்
அயம்கெழு வேள்வியோடு அமரர்க்கு ஆக்கிய
வயங்கு எரிவளர்க்கலை வைக வல்லையோ? (2251)

(இயம்-வாத்தியங்கள்; திறை-கப்பம்; உயங்குதல்-உடம்பு வருந்துதல்; அயம்-குதிரை / பரிவேள்வி / அசுவமேதம்; வயங்கு-விளங்குகின்ற; எரி-ஓமத்தீ; இறுத்த-செலுத்திய; அஜம் என்னும் வடசொல்லின் திரிபு அயம்)

''பல வகை வாத்தியங்கள் முழங்குகின்ற சேனைப் படைகளையுடைய பகை அரசர்கள் உனக்குச் செலுத்திய திறைப் பொருள்களையெல்லாம், விரதம் முதலியவற்றால் தம் உடல் வருந்தி இருக்கின்ற வேதம் வல்ல வேதியர்க்கும் அந்தணர்க்கும் நல்கி, அசுவமேதயாகம் போன்ற வேள்விகளை விண்ணுலகத்துத் தேவர்களுக்காகவே செய்து புகழ் பெற்ற நீ, தேவருலகில் செய்ய இயலாத ஓமத்தீ வளர்த்தல் முதலியவைகளைச் செய்யாது வறிதே அங்கிருக்க உன்னால் முடியுமோ? இவைகளையெல்லாம் செய்து கொண்டு இங்கேயே இனிதாக இருந்திருக்க மாட்டாயோ?''

Koviloor Digital Library

பேரரசன் வேள்வி நடத்தும் போது, அவனிடம் தோற்ற, அவனுடைய ஆட்சியின் கீழ் இயங்கும் சிற்றரசர்கள் சிறந்த திறைப் பொருள்களைக் கொண்டு வந்து செலுத்துதலும், அவற்றை, விரதம் செய்து உடம்பை வருத்திக் கொள்ளுகின்ற வேதம் ஓதுகின்ற மறையவர்களுக்குத் தானமாகத் தந்து மகிழ்வதும் மரபு. ஆனால் இவ்வெரிஓம்பல் முதலானவை விண்ணுலகில் நடவாதவை. எனவே இவற்றையெல்லாம் ஆற்றாது தசரதனால் விண்ணுலகில் வறிதேயிருக்க முடியுமா? என்று கேட்டு பரதன் புலம்புகிறான். இங்கேயும் தசரதனது வேள்விச் சிறப்பும் தானச் சிறப்பும் வெளிப்படுத்தப்பட்டன என்க. ''பகைப்புல மன்னர் பணித்திறை தந்து, நின் நகைப்புல பாணர் நல்குரவு அகற்றி'' என்பது புறநானூறு.

55. ''ஏழ்உயர் மதக்களிற்று இறைவ! ஏகினை,
வாழிய கரியவன், வறியன் கைஎனப்
பாழி அம்புயத்து நின்பணியின் நீங்கலா
ஆழியை, இனி, அவற்கு அளிக்க எண்ணியோ?'' (2252)

(ஏழு-ஏழுமுழம்; கரியவன்-இராமன்; பாழி-வலிய; ஆழி-ஆணைச் சக்கரம்)

''ஏழுமுழம் உயர்ந்ததும், ஏழு உறுப்புக்களைக் கொண்டதும், மதமும் உடைய ஆண் யானையை உடைய அரசனே! கரிய மேனியை உடைய இராமபிரான், தன்கையில் ஏதும் இல்லாது வெறும் கையனாக இருக்கிறான் என்பதைப் பார்த்து, உன்னுடைய வலிமையான, அழகிய தோள்களிலிருந்தும், நின்னுடைய பணிகளிலிருந்தும் நீங்காத அவ்ஆணைச் சக்கரத்தை இனிமேலாவது அவனுக்கு அளிப்போம் என்று கருதித் தான் விண்ணுலகு சென்றாயோ?''

ஏழு முழம் உயரமுடையதாய் இருப்பது சிறந்த யானைக்குரிய உத்தம இலக்கணம். இதையே உயர்ந்த ஏழு உறுப்புகளைக் கொண்டதாக இருக்கும் யானைஅரசயானைஎன்றும் கூறுவர். கால்கள் நான்கும், மருப்பு இரண்டும், துதிக்கையும் ஆக ஏழு உறுப்புகள் உயர்ந்து இருத்தல் உத்தம அரசு யானையின் இலக்கணம். ''தாழ்இருந் தடக்கையும், மருப்பும், தம்பியர், தோழர் தம் தாள்களாச் சொரியும் மும்மதம் ஆழ்கடல் சுற்றமா அழன்று சீவக! ஏழ் உயர் போதகம் இனத்தோடு ஏற்றதே'' என்பது சீவகசிந்தாமணி; ''ஏழுயர் களிற்று மன்னர்'' என்பது பாகவதம். தான் உயிருடன் இருக்கும் வரை ஆணைச்சக்கரம் தன் கையில் தான் இருக்கும். இராமனது கை வெறுங்கையாகவே இருக்கும். தான் விண்ணுலகு ஏகினால்தான் இராமன் கைகளுக்கு ஆணைச்சக்கரம் போய்ச்சேரும் என்று கருதித் தான் நீ விண்ணுலகு சென்றாயோ என்று பரதன் தானே தன் தந்தையின் மரணத்திற்கு ஒரு காரணம் கற்பித்துக் கொண்டு புலம்புகிறான். இந்நிலையில் அவனுக்கு அயோத்தியில் நடந்த முடிசூடுதல் பற்றிய

Koviloor Digital Library

நிகழ்ச்சிகள் எதுவும் அறியாதிருக்கிறான் என்பதைக் கற்போர் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

56. ''பற்றிய தவத்தினில் பயந்த மைந்தற்கு
முற்றுஉலகு அளித்து, அதுமுறையின் எய்திய
கொற்றவன் முடிமணக் கோலம் காணவும்
பெற்றிலை போலும், நின்பெரிய கண்களால்'' (2253)

(பற்றிய-மேற்கொண்ட; பயந்த-பெற்றெடுத்த; முடிமணம்-முடிபுனை விழா)

''நீ மேற்கொண்ட விரதங்களாலும், அசுவமேதயாகம், புத்திர காமேஷ்டி யாகம் முதலியவற்றானும், நீண்ட நெடுநாட்களுக்குப் பின் பிறந்த உன் மைந்தனாகிய இராமனுக்கு, நீ இதுகாறும் ஆண்டு வந்த உலகம் முழுவதையும் அளித்து, அவனும் அதை மூத்தவர்க்கு உரித்து அரசு எனும் முறைப்படி பெறுகின்ற, வெற்றி பொருந்தியவனின் முடிசூட்டு விழாவின் அழகைக் காணவும் இயலாது போயிற்றுப் போலும் உன் பெரிய கண்கள்''.

உனது இரண்டு விருப்பங்களில் ஒன்று இராமன் முடிசூட்டிக் கொள்ள வேண்டும், இரண்டு நீ தவம் செய்யக் கானகம் புகவேண்டும் என்பதுமாம். இவ்விரண்டும் நிறைவேறாமல் இறந்துபோனாயே என்பது உட்கருத்து. ஆனால் இவை இரண்டும் தசரதனின் தணியாத ஆசை என்பது பரதனுக்குத் தெரியாது. பல நெடிய ஆண்டுகள் பிள்ளைப் பேறு இல்லாததால் வேள்விகள் இயற்றி அதன் பயனாய்ப் பிறந்தவன் இராமன் எனவே ''பற்றிய தவத்தினில் பயந்த மைந்தன்'' என்றார்; முற்று உலகு என்பது, தான் இதுகாறும் ஆண்டுவந்த நிலப்பரப்பு முழுவதையும், இராமன் ஒருவனுக்கே அளித்து என்ற பொருளில் வந்தது. அதில் வேறுயாருக்கும் பங்கு இருக்கக் கூடாதென்பதும், நிலப்பரப்பில் ஏதும் குறைவிருக்கக் கூடாது என்பதும் தொனிக்கக் கூறிய சொல் அவை. முறையின் எய்திய என்பது, அப்படி அவன் பெறும் அரசச் செல்வமும் மூத்தவர்க்கு உரித்து அரசு என்னும் முறைப்படியும், அரச நூல்களில் கூறிய விதிப்படியும் அமைய வேண்டுவது என்பது தோன்றவும் கூறப்பட்டதாகும். முடி சூடுதலையும் ஒரு மணக்கோலம் என்றே கூறுவர். தசரதனும் முன்பு ''அவனி மாதெனும் மகள் மணமும் கண்டு உவப்பதாயினேன்'' என்றது நினைவு கூரத்தகும்.

57. பரதன் சிறிது தேறுதல்

ஆற்றலன், இன்னன பன்னி ஆவலித்து,
ஊற்றுஉறு கண்ணினன் உருகுவான் தனைத்
தேற்றினள் அன்னைதான்; சிறிது தேறிய
கூற்று உறழ் வரிசிலைக் குரிசில் கூறுவான். (2254)

Koviloor Digital Library

(ஆவலித்தல்-அழுதல் / அவலித்து; உறழ்-ஒத்த; வரி-கட்டமைந்த; குரிசில்-ஆண்களில் சிறந்தோன்; பன்னி-சொல்லி)

தந்தை இறந்த துன்பத்தைப் பொறுக்க முடியாதவனாகி, இவ்வாறான சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு, அழுது அரற்றி ஊற்றுப் போல் பெருகுகின்ற கண்ணீர்ப் பெருக்கையும், உருகுகின்ற உள்ளத்தையும் உடையவனான பரதனைத் தாயான கைகேயி ஒருவாறு தேற்றினள்; அதனால் சிறிது தெளிவு பெற்றுத் தேறிய, இயமனைப் போன்ற ஆற்றலுடையவனும், கட்டமைந்த வில்லை ஏந்தியவனும், ஆண்களிற் சிறந்தோனும் ஆகிய பரதன் கீழ்க்கண்டவாறு கூறலானான்.

சில சுவடிகளில் தன்னைத் தானே தேற்றிக் கொண்டான் என்னும் பொருள்படும்படி தேற்றினன் ஒரு வகை எனப்பாட வேறுபாடு காணப்படுகிறது.

58. பரதன் இராமனைக் காண விழைதல்

''எந்தையும், ஆயும், எம்பிரானும், எம்முனும்
அந்தம்இல் பெருங்குணத்து இராமன் ஆதலால்
வந்தனை அவன் கழல்வைத்த போது அலால்,
சிந்தைவெம் கொடுந்துயர் தீர்கலாது'' என்றான். (2255)

(பிரான்-கடவுள்; முன்-அண்ணன்; கழல்-திருவடிகள்; வைத்தல்-செலுத்துதல்; தீர்கலாது-நீங்காது)

எல்லையில்லாத நற்பெரும் குணங்களை உடையவனாகிய இராம பிரானே, ''எங்களின் தந்தையும், தாயும், கடவுளும், அண்ணனுமாவான், எனவே அவனைக் கண்டு, அவனது திருவடிகளில் நான் வணக்கம் செலுத்தினால் அன்றி, என் மனத்தில் உள்ள மிகக்கொடிய துயரம் நீங்காது'' என்றான்.

தம்பி சத்துருக்கனனையும் உட்படுத்தி எம் தந்தை, ஆய், பிரான், முன் என்று கூறியது நோக்கத்தக்கது. அந்தம்இல் பெருங்குணத்து இராமன் என்ற குறிப்பு பல இடங்களிலும் கம்பனால் பேசப்பட்டிருப்பதை உணர்க. இப்பாடல் ''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' என்ற குறள் 7ன் விரிவாக்கம் எனக் கொள்ள வேண்டும். வந்தனை வைத்தல் என்பது வணக்கம் செலுத்துவது. தலை தாளிற்பட வணங்குதலைக் குறிக்கும். இங்கே பரதன் தன்னை இராமனுக்கு மகனாகவும், தொண்டனாகவும், தம்பியாகவும் ஆட்படுத்திக் கொண்டு பேசுவது நோக்கற்பாலது.

59. ''அவன் வனம் சென்றான்'' எனக் கைகேயி கூறுதல்

அவ்வுரை கேட்டலும், அசனியேறு என
வெவ்வுரை வல்லவள், மீட்டும் கூறுவாள்,

Koviloor Digital Library

''தெவ்அடு சிலையினாய்! தேவி, தம்பி என்று
இவ்இருவோரோடும் கானத்தான்'' என்றாள். (2256)

(அசனி-இடி; தெவ்-பகைவர்; அடுதல்-வெல்லுதல்)

அவ்வாறு பரதன் கூறியவற்றைக் கேட்டதும், பேரிடி போன்று கொடிய சொற்களைக் கூறுதலில் வல்லமை படைத்தவளான கைகேயி, மீண்டும் கூறுகின்றாள் ''பகைவரை அழிக்கும் வில்லினை ஏந்தியவனே! இராமன் தன் மனைவி சீதாதேவி, தம்பி இலக்குவன் ஆகிய இரண்டு பேர்களோடும் காட்டின் கண் உள்ளான்'' என்றாள்.

கைகேயி கொடுமையான சொற்களை எளிதாகக் கூறுவதில் வல்லமை பெற்றவள் என்பதை ''அசனி ஏறு என வெவ்வுரை வல்லவள்'' என்றான். முன்பே தசரதன் இறந்த கொடிய செய்தியைக் கலக்கமின்றி மிக எளிதாகக் கூறியவள் கைகேயி எனவே இப்பொழுது இராமன் வனம் புகுந்த செய்தியையும் கூறுகிறாள். எனவே ''மீட்டும் கூறுவாள்'' என்றான். இராமன் தனியாகச் சென்று துன்புறவில்லை தன் மனைவி தன் தம்பி ஆகிய இருவரோடும் சேர்ந்துதான் போயிருக்கிறான். அங்கே துன்பப்பட மாட்டான் என்று கூறுகிறாள் என்பதும் இராமனது பெயரைக் கூறாமலேயே தவிர்த்திருக்கும் பான்மையும் நோக்கத்தக்கது.

60. நொந்து போன பரதன் கூறுதல்

''வனத்தினன்'' என்று அவள் இசைத்த மாற்றத்தை
நினைத்தனன், இருந்தனன் நெருப்பு உண்டான் என,
''வினைத்திறம் யாது இனி விளைப்பது? இன்னமும்
எனைத்துள கேட்பன துன்பம் யான்?'' என்றான். (2257)

(இசைத்த-சொன்ன; மாற்றம்-சொல் / வார்த்தை; வினைத்திறம்-வினையின் வலிமை; எனைத்து-எத்துணை)

''இராமன் காட்டில் இருக்கின்றான்'' என்று கைகேயி உரைத்த வார்த்தைகளைப் பரதன் நினைத்து நினைத்துப் பார்த்தான். நெருப்பை விழுங்கியவன் போல் செயலற்று மயக்கமுற்று நின்று இருந்தான். என்னுடைய தீவினையின் வலிமை இவற்றைத் தவிர இன்னும் என்னென்ன விளைவிக்கப் போகிறதோ? இன்னும் எத்தனை துன்பச் செய்திகளைக் கேட்கப் போகின்றேனோ? என்று அஞ்சிப் புலம்பினான் பரதன்.

கேகய நாட்டிலிருந்து வரும்போதே நாட்டினதும் நகரினதும் பொலிவிழந்த தோற்றம் கண்டு ஏதோ தீங்கு நிகழ்ந்துள்ளது என்று கருதினான் பரதன். சத்துருக்கனனோ நிகழ்ந்தது ஒரு வகைத்தன்று உறுதுயர் என்றான். எனவே இப்பொழுது இரண்டு அவலச் செய்திகளைக் கேட்ட பரதன், இன்னும் எத்துணைச் செய்திகள் கேட்கப் போகிறேனோ என்று அஞ்சி நடுங்கினான் என்பதாம். இங்கே கம்பன் ''இசைத்த'' என்ற சொல்லைக்

Koviloor Digital Library

கையாளும் நயம் நோக்கத்தக்கது. இசைவிப்பது இசை, தசரதன் இறந்ததையோ, இராமன் வனம் புகுந்ததையோ அவள் ஒரு பெரும் தீங்காகக் கருதவேயில்லை. அச்செய்திகளை இனிமையாகவே கூறினாள் என்பதைக் குறிக்கவே இசைத்த மாற்றம் என்கிறான் கவிஞன்.

61. பரதன் கைகேயியிடம் கேட்டல்

ஏங்கினன் விம்மலொடு இருந்த ஏந்தல், ''அப்
பூங்கழல் காலவன் வனத்துப் போயது,
தீங்கு இழைத்த அதனினோ? தெய்வம் சீறியோ?
ஓங்கிய விதியினோ! யாதினோ?'' எனா. (2258)

(விம்மல்-பொருமல்; தீங்கு-பெருங்குற்றம்; ஓங்கிய-எவற்றினும் மேம்பட்ட)

ஏங்கிப்போய்ப் பொருமிக்கொண்டிருந்த நல்லவனான பரதன், கைகேயியை நோக்கி, ''அந்த மலர்போன்ற, வீரக்கழல் அணிந்த கால்களையுடையவனாகிய இராமபிரான் கானகத்திற்குச் சென்றதற்கு என்ன காரணம்? யாருக்கும் பெருந்தீங்கு இழைத்துவிட்டானா? தெய்வக் குற்றம் ஏதும் செய்துவிட்டானா? எல்லாவற்றினும் மேம்பட்டு உயர்ந்த ஊழ்வினை உருத்து வந்து ஊட்டியதா? அல்லது இவை தவிர வேறு ஏதேனும் காரணம் உள்ளதா?'' என்று கேட்டான்.

கல்லும் முள்ளும் நிறைந்த வனத்துள் செல்வது பூப்போன்ற கால்களையுடைய இராமனுக்கு ஒவ்வாதது தோன்ற, ''பூங்கழல் காலவன்'' என அவன் காலைச் சிறப்பித்துச் சொன்னான். பெருந்தீங்கு இழைத்தவர்கள் காட்டிற்குத் துரத்தப்படுவர் என்பது வழக்கு. இதற்கு எடுத்துக்காட்டுக்கள் இருக்கின்றன. இராமன் பிறந்த சூரிய குல அரசர்களிலேயே ஒருவனான அசமஞ்சன் என்பவன் மக்களுக்குத் தீங்கு இழைத்ததனால் காட்டிற்குத் துரத்தப்பட்டான். சூதாடிய குற்றத்திற்காகப் பாண்டவர்கள் கௌரவர்களால் காட்டிற்குத் துரத்தப்பட்டிருக்கின்றனர். நளன் புட்கரனிடம் சூதாடித் தோற்றதால் நிடத நாட்டை விட்டுக் காட்டிற்குச் சென்றிருக்கிறான். எனவே, அத்தகைய பெரிய தீங்குகள் ஏதேனும் இராமன் செய்து காட்டிற்குச் சென்றானா என்று பரதன் கைகையியைக் கேட்கிறான். தெய்வக் குற்றத்தாலோ, ஊழ்வினையாலோ இராமன் காட்டிற்குச் செல்வதற்கு வாய்ப்பில்லை. எனவே வேறு ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று கருதிய பரதன் ''வேறு யாதினோ?'' என்றான்என்க. பெருங்குற்றம்என்பது குருக்களைஇகழ்தல் முதலானவை யாகும். அந்தம் இல்பெருங்குணத்தான் ஆன இராமபிரான் இத்தகைய குற்றங்கள் ஏதும் செய்தற்கு வாய்ப்பில்லையே என்று பரதன் ஐயுறவு கொண்டான் என்பதாம்.

62. ''தீயன இராமனே செய்யுமேல், அவை
தாய் செயல் அல்லவோ, தலத்துளோர்க்கு எலாம்?

Koviloor Digital Library

போயது, தாதை விண்புக்க பின்னரோ?
ஆயதன் முன்னரோ? அருளுவீர்'' என்றான். (2259)

(தலம்-நாடு)

''அப்படியே இராமன் தீய செயல்களைச் செய்திருந்தாலும், அவை ஒருதாய் தன் மகவுக்குச் செய்யும் நன்மை போலத்தானே நாட்டில் உள்ள மக்களுக்கு அமைந்திருக்கும்? சரி போகட்டும். அவ்வாறு இராமன் வனம் புகுந்தது தந்தை தசரதன் இறந்ததற்குப் பிறகா? அல்லது அது நேர்வதற்கு முன்னரேயா? தயவு செய்து கூறுங்கள்'' என்றான் பரதன்.

தீயன இராமனே செய்யுமேல் என்பது பரதன் இருந்த மனக் கலக்கத்தில் நிலை தடுமாறிப் பேசிய பேச்சுக்களாகக் கொள்ளப்படும். இராமன் தீமையோ, தீயனவோ செய்திருக்கமாட்டான் என்பது பரதனுக்கு நன்கு தெரியும். அப்படிச் செய்திருந்தாலும் அது தாய், தன் குழந்தையை நல்வழிப்படுத்தற்குச் செய்யும் தண்டனை போன்ற அன்புச் செயலாகவே இருக்கும். அது நாட்டு மக்களின் நன்மையைக் கருதித்தான் இருக்கும். எனவே அதற்காகக் காடு புக வேண்டியிருக்காது என்பதில் பரதன் உறுதியாக இருக்கிறான் என்பதாம். ''தன்னடியார் திறந்தகத்துக், தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல், என்னடியார் அது செய்யார், செய்தாரேல், நன்று செய்தனர் என்பர் போலும்'' என்பது பெரியாழ்வார் திருமொழி.

63. கைகேயியின் மறுமொழி

''குருக்களை இகழ்தலின் அன்று; குன்றிய
செருக்கினால் அன்று; ஒரு தெய்வத்தாலும் அன்று;
அருக்கனே அனைய அவ்வரசர் கோமகன்
இருக்கவே வனத்து அவன் ஏகினான்'' என்றாள். (2260)

(குருக்கள்-ஆசிரியர்கள் / சான்றோர்கள் / பெரியோர்கள்; குன்றிய-இழிந்த; அருக்கன்-சூரியன்)

''இராமன் காட்டுக்குப் போக நேர்ந்ததன் காரணம் சான்றோர்களையோ ஆசிரியர்களையோ அவமதித்ததனால் அன்று; இழிந்த கர்வத்தினாலும் அன்று; ஒரு தெய்வத்தின் சீற்றத்தினாலும் அன்று; வாய்மையில் சூரியனையே ஒத்த அந்த மன்னர் மன்னன் தசரதன் உயிருடன் இருக்கும்போதே, இராமன் வனம் புகுந்தான்'' என்றாள்.

அவன் கேட்ட மூன்று கேள்விகளுக்கு மட்டுமே விடையிறுத்துத் தானாக ஏதும் கூறாதது அவனிடம் தான் கொண்ட அச்சம் குறித்தே என்க. பொதுவாகச் சூரியனை வாய்மைக்கும் புகழுக்கும், நடுவுநிலைமைக்கும் ஒப்பிடுவர். இங்கே வாய்மைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. ''ஞாயிற்றன்ன வாய்மையும்'' என்பது ஆத்திரையன் பேராசிரியன் பாயிரமாகும். எனவே,

Koviloor Digital Library

தந்தையின் வாய்மையைக் காக்கவே இராமன் வனம்புக நேர்ந்தது என்ற குறிப்பும் காணப்படுகிறது.

64. பரதன் காரணம் வினவுதல்

''குற்றம் ஒன்று இல்லையேல், கொதித்து வேறுளோர்
செற்றதும் இல்லையேல், தெய்வத்தால் அன்றேல்,
பெற்றவன் இருக்கவே பிள்ளை கான்புக
உற்றது என்? தெரிதர உரை செய்வீர்?'' என்றான். (2261)

(செற்றது-மனம் கொதித்துப் பகைத்துத் துரத்துதல்; உலந்தது-இறந்தது; வேறுளோர்-பகைவர்)

''இராமன் எந்த விதக் குற்றமும் செய்யவில்லை என்றால் மாறுபட்ட கருத்துடைய பகைவர்கள் மனம் கொதித்துப் பகைத்து அவனைத் துரத்த வில்லை என்றால், தெய்வக்குற்றத்தினால் தெய்வமும் சினந்து சீறவில்லை என்றால் பின் பெற்ற தந்தை தயரதன் உயிருடன் இருக்க, அவன் மைந்தன் இராமன் வனம் புகுதற்கு ஏதுவான காரணம் என்ன? எனக்குப் புரியுமாறு நன்றாக விளக்கிச் சொல்லுங்கள்'' என்றான்.

பரதன் முன்பு கூறிய மூன்று குற்றங்களிலும் இராமன் வனம் புகவில்லை எனவும் தந்தை உயிருடன் இருக்கும் போதே இராமன் கானகம் சென்றான் எனவும் கைகேயி முன்பு கூறியதைத் தழுவி இப்பொழுது பரதன் இம்மூன்று காரணங்களுக்காகவும் இல்லையென்றால் பின்னர் ஏன் இராமன் கானகம் சென்றான் என்பதைத் தெளிவாகக் கூறுங்கள் என்றான். அவன் இப்போது மனம் கலங்கிய நிலையில் இருக்கின்றான் எனவே தெரிதர உரைசெய்வீர் என்றான் என்பதாம்.

65. கைகேயி மறுமொழி

''வாக்கினால் வரம்தரக் கொண்டு, மைந்தனைப்
போக்கினேன் வனத்திடை; போக்கிப் பார் உனக்கு
ஆக்கினேன்; அவன்அது பொறுக்கலாமையால்,
நீக்கினான் தன் உயிர் நேமி வேந்து'' என்றாள்; (2262)

(மைந்து-வலிமை; மைந்தன்-வல்லமையுள்ளவன்; பார்-கோசல நாடு; நேமி-ஆணைச்சக்கரம்; வாக்கு-வாக்குறுதி / வாய்மொழி)

''தசரதன் முன்பு சம்பராசுரப் போரிலே எனக்கு அளித்த வாக்குறுதியால் இப்பொழுது அவன் தந்த இரண்டு வரங்களைப் பெற்றுக் கொண்டு, ஒருவரத்தால் வல்லமையுடையவனான மைந்தன் இராமனைக் காட்டிற்குத் துரத்தினேன். அவ்வாறு போகச் செய்த பின்னர், இன்னொரு வரத்தால் உனக்கு இக்கோசல நாடு முழுவதையும் ஆளுகின்ற அரசுரிமையைப் பெற்றுத் தந்தேன். மைந்தன் பிரிவு தாங்காததனால்

Koviloor Digital Library

ஆணைச் சக்கரத்தை உடைய தசரத மன்னன் தன் உயிரைப் போக்கிக் கொண்டான்'' என்றாள்.

மன்னவன் வாய்மை தவறாதிருக்வே இராமன் வனம் சென்றான் என்பதும், தசரதன் இறந்தது வேறு நோய் முதலிய காரணங்களால் அல்ல, இராமன் பிரிவு தாங்காத துயரத்தினால், புத்திர சோகத்தினால்தான் இறந்தான் என்பதும் தெளிவாக்கப்பட்டது. தசரதன் தந்த இரு வரங்களால் இவ்விரு நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன என்பதாம். என்றாலும் போக்கினேன், ஆக்கினேன் என்று அவள் கூறுவதால் அவள் அகங்காரம்தான், இந்நிகழ்வுகளுக்கெல்லாம் காரணம் என்பதையும் தன்னையுமறியாமல், பெருமையாகக் கூறுவதுபோல் கூறிப் பரதன் ஐயத்தினை உறுதி செய்துவிட்டாள் என்க.

66. பரதன் சினந்த நிலை

சூடின மலர்க்கரம் சொல்லின்முன், செவி
கூடின; புருவங்கள் குனித்துக் கூத்து நின்று
ஆடின; உயிர்ப்பினோடு, அழற்கொழுந்துகள்
ஓடின; உமிழ்ந்தன உதிரம் கண்களே. (2263)

(கூடின-சேர்ந்தன; உயிர்ப்பு-மூச்சுக்காற்று; உதிரம்-இரத்தம் / குருதி; குனிந்த-வளைந்த; கொழுந்து-சுவாலை / சுடர்)

கூப்பியிருந்த பரதனது தாமரைமலர் போன்ற கைகள், கைகேயியின் கொடுஞ்சொற்களைக் கேட்டவுடன் தானே தன் செவிகளைப் பொத்திக் கொண்டன; புருவங்கள் மேலும் கீழுமாய் வளைந்து நடனமிட்டன; மூச்சுக்காற்றோடு தீப்பிழம்புகள் வெளிப்பட்டன; அவனுடைய கண்கள் கோவைக் கனியைப் போலச் சிவந்து இரத்தத்தைக் கக்குவது போல் ஆயின.

சொல்லின் முன் என்பது விரைவு குறித்தது. கேட்கக் கூடாத வார்த்தைகளைக் கேட்கும் போது பெரியோர் காதை மூடிக் கொள்வது இயல்பு. புருவங்கள் துடித்தலும், வெப்பக் காற்று மூச்சாக வெளிப் படுதலும், கண்கள் சிவத்தலும் மிகுந்த சினத்தின் மெய்ப்பாடுகள்.

67. துடித்தன கபோலங்கள்; சுற்றும் தீச்சுடர்
பொடித்தன மயிர்த்தொளை; புகையும் போர்த்தது;
மடித்தது வாய்; நெடு மழைக்கை, மண் பக
அடித்தன ஒன்றோடு ஒன்று அசனி அஞ்சவே. (2264)

(கபோலம்-கன்னம்; பொடித்தல்-தோற்றுவித்தல்; மழை-மேகம்; நெடு-நீண்ட; பக-பிளக்குமாறு; அசனி-இடியேறு / பேரிடி; மண்-தரை; போர்த்தது-சூழ்ந்தது / மூடுதல் / பரவுதல்)

Koviloor Digital Library

பரதனுடைய கண்கள் துடிக்கலாயின; உடம்பிலுள்ள மயிர்த் தொளைகளிலெல்லாம் வியர்வைக்குமாறாக நெருப்புக் கொழுந்துகள் அரும்பாலாயின; அதனால் சுற்றிலும் புகை பரவலானது; வாய் மடித்துக் கொண்டது. மேகம் போன்று கைம்மாறு கருதாது வழங்கும் நீண்ட கைகள் இப்பூமியே இரண்டாகிப் பிளந்துபோகும்படி பேரிடியும் அஞ்சும்படி ஒன்றோடொன்று அடித்துக் கொண்டன.

கன்னங்கள் துடித்தலும், மயிர்க்கால்களில் வெப்பக் காற்றுத் தோன்றுதலும் வாய் மடித்துக் கொள்ளுதலும், கைகள் ஒன்றோடொன்று அடித்துக் கொள்ளுதலும் சினத்தின் மெய்ப்பாடுகளாம். கைகள் ஒன்றோடொன்று தாக்கிக் கொண்ட ஒலியின் மிகுதியால் தரையும் பிளந்தது, இடியும் அஞ்சியது என்பதாம்.

68. பாதங்கள் பெயர்தொறும், பாரும் மேருவும்
போதம் கொள் நெடுந்தனிப் பொருவில் கூம்பொடு
மாதங்கம் வரு கலம் மறுகிக் கால்பொர
ஓதங்கொள் கடலினின்று உலைவ போன்றவே. (2265)

(பார்-பூமி; கலம்-மரக்கலம் / கப்பல்; கூம்பு-பாய்மரம்; மாதங்கம்-யானை; கால்-காற்று; பொர-மோத; மறுகி-சுற்றிச் சுழன்று; ஓதம்-அலைகள்; உலைதல்-வருந்துதல் / நிலைகுலைதல்; பெயர்தல்-அடிபெயர்த்து வைத்தல்; போதம்-அறிவு)

பரதன் தன் பாதங்களை அடியெடுத்து வைக்கும்போதெல்லாம், இந்நிலமும், நிலத்தில் இருக்கின்ற மேரு மலையும், நீண்ட ஒரு யானையை ஏற்றிக் கொண்டு வருகின்ற ஒரு மரக்கலம், சுற்றிச் சுழன்று அடிக்கின்ற பெரும் புயற்காற்றினால் மோதுற, கலத்தைச் செலுத்தும் ஒப்பற்ற பெருமையுடைய அறிவைத் தன்னகத்தே கொண்ட பாய்மரத்தோடு அலைகள் நிறைந்த கடல்களில் அக்கப்பல்கள் அலைக்கழிக்கப்பட்டு வருந்துவது போலத் தோற்றம் தந்தன.

கப்பலின்பாகங்களில் முதலில் எல்லோர்கண்களுக்கும் படுவது கூம்பு. அது திசையறிந்து, காற்றின் போக்கறிந்து, கப்பலுக்குத் திசை காட்டும் கருவி. அது கப்பலுக்கு இன்றியமையாதது. எனவேதான் போதம் கொள், நெடு, தனி, பொருஇல் கூம்பு என்று இத்தனை அடைமொழிகள் தந்தார். கப்பல் நிலத்துக்கும் கூம்பு மேருமலைக்கும் உவமை. பரதன் சீற்றத்தோடு எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், பூமி, காற்றால் மோதுண்ட பெரிய கப்பலைப் போல அதிர்ச்சியுற்றது என்று பரதனின் கோபாவேசத்தைக் குறித்தார். பூமி-கப்பல்; மேரு-பாய்மரம்; பரதன்-யானை; பெருங்காற்று-அவன் அடிவைத்தல்; யானை ஏற்றிய மரக்கலம், காற்றினால் நிலை தடுமாறுதல், இப்பூமி பரதனது அடிகளால் நிலை தடுமாறுதலுக்கு உவமை.

Koviloor Digital Library

69. அஞ்சினர் வானவர்; அவுணர் அச்சத்தால்
துஞ்சினர் எனைப்பலர்; சொரி மதத்தொளை
எஞ்சின திசைக்கரி; இரவி மீண்டனன்;
வெஞ்சினக் கூற்றும் தன் விழி புதைத்ததே. (2266)

(வானவர்-தேவர்; அவுணர்-அசுரர்கள்; ஏனையோர்-நாகர்கள் முதலியோர்; துஞ்சுதல்-இறத்தல்; எஞ்சுதல்-குறைதல்; புதைத்தல்-மூடிக் கொள்ளுதல்)

பரதன் அடிபெயர்த்து வைத்தலைக் கண்ட தேவர்கள் அஞ்சிக் கலங்கிப் போனார்கள்; அசுரர்கள் அச்சத்தால் இறந்தே போனார்கள். ஏனைய நாகர் லோகத்துள்ளவர்களும் இறந்து விட்டனர். இவ்வாறு இறந்தவர்கள் எத்தனை பேரோ? எட்டுத் திக்குகளையும் பாதுகாக்கின்ற, மதநீரைப் பெருக்குகின்ற தொளைகளையுடைய யானைகள்கூட, அச்சத்தால் மதநீர் சொரிவது அளவில் குறைந்து போயிற்று. சூரியனும் தான் செல்லவேண்டிய திசையில் செல்லாமல், அச்சத்தால் தான் உதித்த திசைக்கே மீண்டும் போய் மறைந்து கொண்டான். கொடுமையான சீற்றமுள்ள இயமனும் கூட அச்சத்தால் தன் விழிகளை மூடிக்கொண்டான்.

தேவர்கள் அமரர்கள் மரணமிலாப் பெருவாழ்வு படைத்தவர்கள். எனவே அவர்கள் இறக்கவில்லை என்றான். அவர்களைத் தவிர மற்ற அசுரர்கள், நாகர்கள், மக்கள் முதலானோர் இறந்து விட்டனர் என்றான். எல்லா உயிர்களையும் கொன்று ஈர்க்கும் தன்மையுள்ள கூற்றுக் கூடக் கண்திறந்து பார்க்க விரும்பாது அவைகளை மூடிக்கொண்டன என்றான். யானைக்கு மகிழ்ச்சி மிகும்போது மதநீர் அளவின்றிச் சுரக்கும். ஆனால் வெருட்சியோ அச்சமோ கொண்டபோது அது அளவில் குறைந்து போகும் என்று கூறுவது ஒரு நுட்பமான கருத்து. அஷ்டதிக்கஜங்களாவன- கிழக்கு-ஐராவதம்; தென்கிழக்கு-புண்டரீகம்; தெற்கு-வாமனம்; தென் மேற்கு-குமுதம்; மேற்கு-அஞ்சனம்; வடமேற்கு-புஷ்பதந்தம்; வடக்கு-சார்வ பௌமம்; வடகிழக்கு-சுப்பிரதீபம்)

70. கவிக்கூற்று

கொடிய வெம்கோபத்தால் கொதித்த கோள்அரி
கடியவள் தாய் எனக் கருதுகின்றிலன்;
''நெடியவன் முனியும்'' என்று அஞ்சி நின்றனன்;
இடிஉரும் அனைய வெம்மொழி இயம்புவான். (2267)

(கோள்அரி-வலிய சிங்கம்; கடியவள்-அஞ்சத்தக்கவள்; நெடியவன்-அண்ணன்; முனியும்-வெகுள்வான்; இடிஉரும்-பேரிடி.)

மிகுந்த பெருங்கோபத்தால் கொதித்துப் போய் இருக்கிற வலிய ஆண் சிங்கம் போன்ற பரதன், இத்தகைய அஞ்சத்தக்க கொடுமையான செயல்களைச்செய்தவளான கைகேயியைத்தன்தாய் என்று கருதவில்லை.

Koviloor Digital Library

எனினும் அவளைக் கொல்ல விழைந்தான். அப்படி அவளைக் கொன்று விட்டால், பெருமைமிக்கவனானதன் அண்ணன் இராமபிரான் வெகுண்டு கோபிப்பானே என்று அஞ்சிக் கொல்லாது வாளா நின்றான். என்றாலும் பேரிடி போன்ற கொடிய சில வார்த்தைகளைக் கூறத் தொடங்கினான்.

கொடியவளான கைகேயியைப் பரதன் கொல்லாமல் விட்டது அவன் அண்ணன் இராமபிரான் கோபிப்பானே என்ற கரணத்தால் தானே அன்றி அவள் தன்னைப் பெற்றெடுத்த தாய் என்பதற்காக அல்ல என்பதை வலியுறுத்துகிறான் கவிஞன். இதனால் இராமபிரான்பால் பரதன் கொண்டிருந்த அன்பும், பக்தியும், மரியாதையும் புலனாகும். கோளரி என்பதற்குக் கொல்லுதலைத் தொழிலாக உடைய சிங்கம் என்று பொருள் கொண்டு அத்ததைகய குணம்படைத்த பரதன் கூடத் தன் தாயைக் கொல்லாது விடுத்தான் என்று பரதனின் இராமபக்தியை மேலும் சிறப்பித்ததாகப் பொருள் கொள்ளலும் பொருந்தும்.

71. பரதன் தாயைக் கடிந்து கூறுதல் [17 பாடல்கள்]

''மாண்டனன் எந்தை, என்தம்முன் மாதவம்
பூண்டனன், நின் கொடும் புணர்ப்பினால் என்றால்
கீண்டிலென் வாய் அதுகேட்டும் நின்ற யான்
ஆண்டனனே அன்றோ அரசை ஆசையால்'' (2268)

(புணர்ப்பு-சூழ்ச்சி; கீண்டுதல்-கிழித்தல்)

''உன்னுடைய கொடுமையான சூழ்ச்சியினால் என் தந்தை தசரதன் மாண்டு போனான்; என் தமையன் இராமன் பெருந்தவம் மேற்கொண்டு காட்டிற்குச் சென்றான் என்றால் வரம் கேட்ட உன்னுடைய வாயைக் கிழித்திருக்கவேண்டும். அவ்வாறு கிழிக்காமல் அதைக் கேட்டும் நான் இன்னும் வாளாய் நின்று கொண்டிருக்கிறேன் என்றால், நீ அந்த வரத்தால் வாங்கித் தந்த அரசுரிமையை ஏற்றுக் கொண்டு பேராசையால் அரசை ஆள்பவன் ஆவேன் அல்லவா?'' என்று தன்னையும் கடிந்து கொண்டு, தன் தாயையும் இகழ்ந்தான்.

''உன்னுடைய கொடுமையான சூழ்ச்சியினால் இரண்டு வரங்களைப் பெற்று என்னுடைய தந்தையை மாளச் செய்தாய், என் அண்ணனைக் காடேகச் செய்தாய். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்ட நான், உன் வாயைக் கிழித்திருக்க வேண்டாமா? அவ்வாறு செய்யாது நான் சும்மா நின்றிருந்தால் நீ வாங்கித் தந்த அரசாட்சியைப் பேராசையால் ஏற்றுக் கொண்டதாக ஆகாதோ? என்றான். சூழ்ச்சி சில நேரங்களில் நன்மையும் பயக்கும். அதை வேறு படுத்தவே கொடும் புணர்ப்பு என்றான். ''மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி'' என்பதும், ''மறுக்காதது உடன்பாட்டைக் குறிக்கும்'' என்பதும் கருதி உலகம் தான் அரசாள உடன் பட்டதாகக் கருதுமே என்று கலங்கிக் கூறுகிறான் பரதன்.

Koviloor Digital Library

72. ''நீ இனும் இருந்தனை; யானும் நின்றனென்;
''ஏ'' எனும் மாத்திரத்து எற்றுகிற்றிலேன்;
ஆயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால்
தாயெனும் பெயர், எனைத் தடுக்கற்பாலதோ?'' (2269)

(இனும்-இன்னும்; எற்றுதல்-தாக்குதல்; ஆய்-தாய்; ஏ-குறுகிய கால அளவு / நொடி / கணப்பொழுது)

''இருபெரும் கொடும் செயல்களைப் புரிந்த பின்னரும் இன்னும் உயிரோடு இருக்கிறாய். மாண்டு ஒழிய வில்லை; நானும் ஒரு நொடிப் பொழுதுக்குள் உன்னைத் தாக்கிக் கொல்லாது விடுத்துச் சும்மா நிற்கின்றேன். காரணம் எனக்கும் இவ்வுலகத்து மக்கள் எல்லோருக்கும் தாயாக விளங்கும் இராமபிரான் கோபிப்பான் என்று அஞ்சுகிறேனே தவிர, நீ பெற்றிருக்கும் தாய் எனும் பெயருக்காக அஞ்சினேன் இல்லை; அது என்னைத் தடுக்கும் ஆற்றல் அற்றதும் கூட'' என்றான்.

''ஏ'' என்பது ஒரு நொடிப் பொழுதைக் குறிக்கும் கால அளவு. நீ பெயரளவுக்குத் தான் தாயே தவிர உண்மையிலேயே தாய்மைக்குணம் அற்றவள் என்று தன் தாயைச் சாடினான். இராமன் எனக்கு மட்டும் தாயல்லன், இவ்வுலகத்தார் அனைவருக்குமே தாய் போன்றவன் என்பதைக் குறிக்க ஆய்அவன் என்றான். நீ செய்யும் தவற்றின் விளைவு அறியாமையினால் தவறு செய்திருந்தாலும், விளைவை அறிந்த பின்னரேனும் நீயே உன் உயிரை மாய்த்துக் கொண்டு இருக்கவேண்டும். அது செய்யாமல் நீ இன்னும் உயிருடன் இருக்கின்றாயே என்று கடிகின்றான். இராமன் கோபம் கொள்வானே என்ற அச்சம் தடுத்ததே அன்றித் தாய் எனும் பெயர் தடுக்கவில்லை என்று கூறுகிறான். தன்னைப் பெற்றதால் தாய் எனும் பெயர் மட்டும் உனக்கு இருக்கிறதே தவிர உன்னிடம் தாய்மைத் தன்மையே இல்லை; இராமன் என்னைப் பெற்றெடுக்கவில்லையென்றாலும் தாய்மைத் தன்மை படைத்தவன். எனவேதான் அவன் கோபத்திற்கு அஞ்சி உன்னைக் கொல்லாது விடுகிறேன் என்று கைகேயிக்குக் காரணம் கூறுகிறான் என்பதாம். இராமனுடைய பெருந்தன்மையும் பரதன் இராமனை எவ்வளவு நுட்பமாக அறிந்திருந்தான் என்பதும் புலப்படுகிறது. தாய் என்பது அவளுக்குப் பெயரளவில்தான் பொருந்தும், பொருள் அளவில் அச்சொல்லுக்கு அவள் சிறிதும் தகுதியற்றவள் என்பது பரதன் கருத்து.

73. ''மாளவும் உளன் ஒரு மன்னன் வன்சொலால்,
மீளவும் உளன் ஒரு வீரன்; மேயபார்
ஆளவும் உளன் ஒரு பரதன்; ஆயினால்
கோள் அலது அறநெறி; குறை உண்டாகுமோ?'' (2270)

(மீள-நாடு கடக்க; கோள்-குற்றம்; மேய-விரும்பிய; பார்-நாடு)

Koviloor Digital Library

''உன்னுடைய வரம் என்னும் கொடிய சொற்களால், தன் உயிரையே மாய்த்துக் கொள்ள தசரதன் என்னும் ஒரு மன்னன் இருந்தான்; தான் அரசாட்சி புரிய வேண்டிய நாட்டைவிட்டுக் கடந்து காடு ஏகி மீளவும் இராமன் என்னும் ஒரு வீரன் இருந்தான். நீ அவ்வாறு விரும்பிப் பெற்ற நாட்டைஆளுதற்குப் பரதன்என்ற நானும்ஒருவன்இருக்கிறேன்என்றால், அறநெறி என்பது குற்றமற்றதாகாது? குறை எப்படி இருக்கும்? இருக்காதன்றோ?'' என்று இகழ்ச்சியாகக் கூறுகின்றான்.

தசரதன் மாண்டதும், இராமன் வனம் புகுந்ததும் மட்டும் அறநெறியாகுமே அன்றி, உன் சூழ்ச்சியால் எனக்குப் பெற்றுத் தந்த இந்த நாட்டை நான் ஆள்வது அறநெறியின்பாற் பட்டதாகாது என்பது பரதனின் துணிபு. உயிர் மாளுதலும், கானகம் புகுதலும் துன்புறு செயல்களாயினும் அறத்தின்பாற்பட்டது. ஆனால் அரசாள்வது இன்பம் தரும் செயலாயினும் அறத்தின்பாற்பட்டதன்று என்று கூறும் மனத்திண்மை நோக்குதற்குரியது. தாய் வரம் கேட்டமுறை தவறானது. அறத்திறத்தினது அன்று என்கிறான் பரதன்.

74. ''சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்,
வழியுடைத்தாய் வரும் மரபை மாய்த்து, ஒரு
பழி உடைத்து ஆக்கினன் பரதன் பண்டு'' எனும்
மொழி உடைத்தாக்கலின் முறைமை வேறு உண்டோ?'' (2271)

(பண்டு-முற்காலத்தில்; சுழி-வஞ்சம்; மரபு-குலமுறை; மாய்த்து-கெடுத்து)

''வஞ்சம் நிறைந்த ஒரு தாயாகிய கைகேயியின் தகாத கொடிய சூழ்ச்சித் திறத்தால், முற்காலத்தில் பரதன் என்பவன், வழிவழியாகத் தொன்று தொட்டு வந்த சூரிய குல மரபாகிய மூத்தவர்க்கு உரித்து அரசு என்னும் ஒழுங்குமுறையைக் கெடுத்து, அதற்கு மாறாக மூத்தவனான இராமன் இருக்க இளையவன் ஆன பரதன் அரசேற்றான் என்ற பழிச் சொல்லைத் தோற்றுவித்து நிலைத்து நிற்கச் செய்தலினும் ஒழுங்குமுறை வேறு ஏதேனும் உண்டோ?'' என்று இகழ்ந்து புலம்பினான்.

ஒன்று, மூத்தவற்கு உரித்து அரசு என்ற மரபு மாறுதல்; இரண்டாவது மூத்தவன் இருக்க இளையவன் அரசாண்டான் என்ற பழி வந்து சேருதல்.

75. ''கவ்வு அரவு இது என இருந்தீர்; கற்பு எனும்
அவ்வரம்பு அழித்து, உமை அகத்துளே வைத்த
வெல்வரம் பொருத வேல் அரசை, வேரறுத்து,
இவ்வரம் கொண்ட நீர், இனிஎன் கோடிரோ?'' (2272)

(கவ்வு-பற்றும் / கவ்வும் / கடிக்கும்; அரவு-பாம்பு; பொருத-தீட்டப்பட்ட; கோடிர்-கொள்ளப்போகின்றீர்)

Koviloor Digital Library

''கணவன் வழி நிற்றலாகிய கற்பு என்று கூறப்படும் பெண்களுக்கே உரிய அந்த வரம்பினை அழித்து, உன்னைத் தன் மனையுள்ளும், நெஞ்சகத்தும் வைத்துப் போற்றிய, கொடிய அரத்தால் தீட்டப்பெற்ற வேற்படைய்யை உடைய தசரத மன்னனை, வேரோடும் ஒழித்து, அகப்பட்டதையெல்லாம் பற்றிக் கொல்லும் விஷம் பொருந்திய பாம்பு போல் இருக்கின்றீர். இவ்வரங்களைப் பெற்றுக் கொண்ட நீ, இன்னும் என்ன என்ன கொள்ளப் போகின்றாயோ? தெரியவில்லை'' என்று கடிந்து கூறினான் பரதன்.

''கற்பெனப்படுவது சொல் திறம்பாமை'' என்பது கலித்தொகை. நச்சுப் பாம்பை வீட்டிற்குள் யாரும் வைத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் தசரத மன்னன் உன் நச்சுத் தன்மை தெரியாமல் உன்னை வீட்டில் மட்டுமல்ல தன் நெஞ்சத்தினுள்ளும் வைத்துப் போற்றினான். நீ அரவு போல் அவனை வேரறத்துவிட்டாய் என்றான். முன்பே ''நாகம் எனும் கொடியாள்'' என்று பரதனே கூறியிருப்பதும் இங்கு நினைவு கூரத்தகும். தனது கணவனையே வேரறுத்தவள், இனி எதைச் செய்யவும் தயங்கமாட்டாள் என்பது தோன்ற ''இனி என் கோடிரோ?'' என்றான் என்க.

76. ''நோயீர் அல்லீர்; நும் கணவன் தன் உயிரை உண்டீர்;
பேயீரே! நீர் இன்னம் இருக்கப் பெறுவீரே!
மாயீர்! மாயா வன்பழி தந்தீர்! முலைதந்தீர்!
தாயீரே நீர்? இன்னும் எனக்கு என் தருவீரே?'' (2273)

(மாய்தல்-இறத்தல்; மாயா-அழியாத)

''உன்னுடைய கணவனுடைய உயிரை அழித்துவிட்டாய்; ஆனால் நீ நோயாக இருந்து அழிக்கவில்லை. எனவே உடனே கொல்லும் ஆற்றல் வாய்ந்த பேய்தான் நீ; கணவன் இறந்த பின்னும் இன்னும் நீ உயிருடன் இருக்கிறாயே? நீ உயிருடன் இருக்கத் தகுதியற்றவள். தயவுசெய்து இறந்துபோய்விடு; குழந்தைக் காலத்தில் எனக்கு உன் முலைப்பால் தந்தாய். எனவே தாய் எனக் கொண்டேன். ஆனால் இப்பொழுது என் இளமைப் பருவத்தில் தீர்க்க முடியாத வலிய பழியைத் தந்து விட்டாய். இன்னும் என் வாழ் நாளுக்குள் என்னென்ன பழிகளைத் தரப் போகிறாயோ?'' என்று மிகக் கடுமையான சொற்களை அடுக்கடுக்காகக் கூறிக் கடிந்தான் பரதன்.

பொதுவாக நோய் தோன்றி, தான் பற்றியவரை அழித்து, அவருடன் தானும் அழிந்து விடும். ஆனால் கைகேயியாகிய நோயோ தான் பற்றிய வரை மட்டும் அழித்துவிட்டுத் தான் அழியாமல் இருக்கிறது. எனவே, அவள் நோயல்லள். இத்தகைய தன்மை பேயின் இனத்திற்குத் தான் உண்டு. எனவே, நீ பேயேதான். குழந்தைப் பருவத்தில் பால் தந்தாய்; இளமைப்பருவமாகிய இப்போது பழி தந்தாய்; இன்னும் என்னென்ன தர இருக்கிறாயோ? என்று கேட்டான் என்பதாம். கணவன் வழி நிற்பவள் பெண். சேயின் நலன் நாடி எதையும் செய்பவள் தாய். இவ்விரண்டையும்

Koviloor Digital Library

நீ செய்தாயில்லை. உன் கணவன் உயிரை மாய்த்தாய்; மகனாகிய எனக்குத் தீராத பழியைத் தேடித் தந்தாய்; எனவே நீ பெண்ணுமல்ல, தாயுமல்ல; பேய்தான் என்று நிறுவுகிறான். மனைவி பேயாகி கணவன் உயிரையும் குடித்தல் உண்டு என்பது பழையனூர் நீலி என்னும் கதையால் அறியப்படும்.

77. ''ஒன்றும் பொய்யா மன்னனை வாயால் உயிரோடும்
தின்றும், தீரா வன்பழி கொண்டீர்; திருஎய்தி
என்றும் நீரே வாழ உவந்தீர்; அவன் ஏகக்
கன்றும் தாயும் போவன கண்டும் கழியீரே!'' (2274)

(ஒன்றும்-சிறிதும்; தின்றும்-அழித்தும்; தீரா-நீங்காத; திரு-அரசச் செல்வம்; அழிதல்-இறத்தல்)

''ஒரு சிறிதளவும் கூடப் பொய் பேசாத சத்தியசீலனான தசரதனை, அவனுடைய வரம் என்ற வாய் வார்த்தையால், உயிரோடும் விழுங்கிவிட்டும், உலகம் உள்ளளவும் நீங்காத வலிய பழியை அடைந்தும், அரசச் செல்வத்தை எப்பொழுதும் நீயே அடைந்து வாழ வேண்டும் என்று எண்ணியும் மகிழ்ந்தாய்; இராமன் கானகம் புகும்போது, பசுவினைப் பிரிந்த கன்று போல இலக்குவனும், தாயாகிய சீதாதேவியும் உடன் போதலைக் கண்டும் கழிவிரக்கம் இல்லாதும், இன்னும் இறக்காமலும் இருக்கிறீரே? இது பெரும் வியப்பாக அன்றோ இருக்கிறது?'' என்றான்.

தசரதன் வாய்மை தவறாதவன் என்பது முன்பு பல இடங்களிலும் குறிக்கப்பெற்றது. முன் பாடலில் பேய் என்று கூறியதற்கு ஏற்ப இப்பாடலில் ''வாயால் உயிரோடும் தின்றும்'' என்ற சொல்லைப் பயன்படுத்திய கவிஞனின் கவிநயம் போற்றதற்குரியது.

78. ''இறந்தான் தந்தை ஈந்த வரத்திற்கு இழிவு என்னா
''அறந்தான் ஈது'' என்று அன்னவன் மைந்தன், அரசெல்லாம்
துறந்தான்; தாயின் சூழ்ச்சியின் ஞாலம் அவனோடும்
பிறந்தான் ஆண்டான் என்னும் ஈ.து என்னால் பெறலாமே?''
(2275)

(ஞாலம்-உலகம்)

''தான் தந்த வரத்திற்கு இழுக்கு நேர்ந்துவிடும் என்று கருதி, தந்தை தசரதன் வாய்மையைக் காப்பற்றத் தன் உயிரையே தந்து இறந்தான். அவனுடைய புதல்வன் இராமனோ, தந்தை சொல்லைக் காப்பாற்றுவது தான் அறம் என்று கருதி, அரசச் செல்வத்தையெல்லாம் துறந்தான். காடேகினான்; ஆனால் அவனோடும் உடன் பிறந்த தம்பியாகிய பரதன், தன் தாயின் வஞ்சகச் செயலால் இவ்வுலகை அரசு புரிகின்றான் என்ற பழிச்சொல் என்னை வந்தடைவது எனக்குத் தகுந்ததோ?'' என்று பரதன் புலம்பினான்.

Koviloor Digital Library

வாய்மை தவறாமைக்கும், தந்தை சொல் கடவாமைக்கும் சான்றாக நின்று உலகம் உள்ளளவும் அழியாத புகழைத் தந்தை தசரதனும், தமையன் இராமபிரானும் பெற்றுத் திகழ, தான் மட்டும் உலகை அரசு புரிதலாகிய தீராப் பெரும்பழியை அடைதல் வேண்டுமோ? என்பது பரதன் கருத்து. தந்தையும் தமையனும் இறந்தும் துறந்தும் தம் வள்ளன்மையைக் காட்டினர். ஆனால் பரதனாகிய நானோ அதற்கு மாறாகத் தன்னலமுடையவனாய் இவ்வரசுரிமையைப் பெறுவதோ? இதை எல்லோரும் பழிப்பாரன்றோ? என்றான் பரதன் என்க.

79. ''மாளும் என்றே தந்தையை உன்னான்; வசை கொண்டாள்
கோளும் என்னாலே எனல் கொண்டான்; அது அன்றேல்
மீளும் அன்றே? என்னையும் மெய்யே உலகு எல்லாம்
ஆளும் என்றே போயினன் அன்றோ அரசு ஆள்வான்?'' (2276)

(உன்னுதல்-நினைத்தல்; கோளும்-கொள்ளும்; வசை-பழி)

''அரசாளுதற்கு உரிமையுடைய இராமபிரான், தான் வனம் புகுவதால் தன் தந்தை உறுதியாக இறந்து படுவான் என்பதைக் கருதிப் பார்க்காது இருந்துவிட்டான்; இரு வரங்கள் பெற்றதனால் பழிச்சொல்லை ஏற்றவளான கைகேயி அவ்வரங்கள் பெற்றதும் என்னுடைய ஆலோசனை யின்படி தான் என்று கருதிக் கொண்டிருப்பான்; அதுபோலவே நானும் உண்மையாகவே இந்த உலகையெல்லாம் அவனைத் தவிர்த்துவிட்டு அரசு புரிவேன் என்று கருதியதால்தானே கானகம் சென்று விட்டான்? அவ்வாறு கருதாது இருந்தால் கானகம் செல்லாதிருந்திருக்கலாம் அல்லது காட்டிற்குச் சென்றவன், தந்தை இறந்த செய்தி கேட்டதும் மீண்டும் வந்து இருக்கவேண்டுமல்லவா?'' என்று தன் ஐயப்பாட்டைக் கூறுகிறான் பரதன்.

அரசாள்வான் என்பது, இராமன்தான் இந்த நாட்டை ஆளுதற் குரியவன். அவனைத் தவிர வேறு எவரும் எந்தக் காலத்தும் அரசுபுரிய முடியாது என்பதைக் குறிக்கத்தான் இங்கே அரசு ஆள்வான் என்ற பொதுச் சொல்லைப் பரதன் பயன் படுத்தியிருக்கின்றான் என்பதை உணர்க.

80. ''ஓதா நின்ற தொல் குலமன்னன் உணர்வு அப்பால்
யாதானும் தான் ஆக; ''எனக்கே பணி செய்வான்,
தீதா நின்ற சிந்தனை செய்தான் அவன்'' என்னப்
போதாதோ என்தாய் இவள் கொண்ட பொருள் அம்மா!'' (2277)

(ஓதா நின்ற-ஓதுகின்ற / சிறப்பித்துப் பேசப்படுகின்ற)

''எல்லோராலும் சிறப்பித்துப் பேசப்படுகின்ற பழமையான சூரிய குலத்தோன்றலான மன்னன் தசரதனின் எண்ணம், தான் வரம் கொடுத்ததன் பின்னர் எதுவாகவேனும் இருக்கட்டும். ஆனால் என் தாய் பெற்றுக் கொண்ட வரங்களினால், என் தமையனாகிய இராமன், ''எனக்கே அடிமை

Koviloor Digital Library

செய்து வாழுகின்றவனும், தீதற்ற சிந்தனையுடையனுமாகிய பரதன் கூட அல்லவா இதற்கு உடந்தையாய் இருந்திருக்கிறான்'' என்று கருதுவது ஒன்று போதாதோ?'' என்று தான் இராமன்பால் கொண்ட பேரன்பினைப் புலப்படுத்துகிறான் பரதன்.

தாய் என் நலன் கருதிப் பெற்ற வரத்தினால், எனக்கு இழிதகவே விளைந்தது அன்றி வேறு இல்லை. எனக்கு நன்மை செய்வதாக எண்ணித் தீமையே செய்திருக்கிறாள் என் தாய் என்று பரதன் புலம்புகிறான் என்பதாம். இவள் வேண்டிப் பெற்ற அரசுதான், என் தமையன் இராமன் என்னைத் தவறாக நினைத்தற்குக் கருவியாக அமைந்து விட்டது. அவன் தவறாக நினைப்பது ஒன்று போதாதா? என்றான்.

81. ''உய்யா நின்றேன் இன்னமும்; என்முன் உடன் வந்தான்
கைஆர் கல்லைப் புல் அடகு உண்ணக் கலம் ஏந்தி,
வெய்யோன் நான், இன் சாலியின் வெண் சோறு அமுது என்ன
நெய்யோடு உண்ணா நின்றது, நின்றார் நினையாரோ?''
(2278)

(புல்அடகு-புல்லியதாகிய கீரை முதலியவை; வெய்யோன்-கொடியவன்; உய்யா நிற்றல்-உயிரிழக்காது உயிர்வாழ்தல்; சாலி-சம்பா அரிசி; உண்ணா நின்று-உண்டு; கல்லை-தொன்னை)

இராமன் காடேகியதைக் கேள்விப்பட்டவுடனேயே உயிர் தீர்ந்திருத்தல் வேண்டும். ஆனால் கொடியவனாகிய நான் இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என்னுடைய உடன் பிறந்தவனும், மூத்தவனுமான இராமன், தனது கையிலே தொன்னையை உண்கலமாக ஏந்திக் கொண்டு, அதில் காட்டில் கிடைக்கும் புல்லிய இலை கீரை போன்றவற்றை உண்டு கொண்டிருக்க, நான் மட்டும் இனிய வெண்மையான சம்பா அரிசியினால் ஆக்கிய சோற்றைப் பொற்கலத்தில் தேவாமிர்தம்போல் சுவையுடைய புத்துருக்கு நெய்யோடு சேர்த்து உண்ணுகின்ற காட்சியைப் பார்த்து நிற்கின்ற உலகத்தவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இழிவாகக் கருத மாட்டார்களோ?'' என்று தன்னைத் தானே நொந்து கொள்கிறான் பரதன்.

அரசாளுதற்குத் தகுதியுடைய இராமன் வாழ்வது காடு; கையில் கொண்டிருக்கும் உண்கலம் தொன்னை; உண்பது இலை, கீரை முதலியன. அரசேற்பதற்கு எந்தத் தகுதியும் இல்லாத பரதன் வாழ்வது அரசமாளிகை; கையில் கொண்டிருக்கும் உண்கலம் பொற்கலம்; உணவு, தேவாமிர்தம் போன்ற இனிய சம்பா அரிசியினாலான வெண்சோறும், புத்துருக்கு நெய்யும் கலந்தது என்று காடாள்வார்க்கும் நாடாள்வார்க்கும் உரிய உயர்வு தாழ்வுகளைக் குறித்தான். கல்லை என்பது இலை முதலியவற்றைக் குழித்து உண்ணுதற்குப் பயன்படுத்தும் ஒரு பாத்திரம். இப்போது தொன்னை என்று வழங்கப்படுவதுபோல.

Koviloor Digital Library

82. ''வில்லார் தோளான் மேவினன் வெங்கானகம்'' என்ன
நல்லான் அன்றே துஞ்சினன்; நஞ்சே அனையாளைக்
கொல்லேன், மாயேன், வன் பழியாலே குறைவு அற்றேன்
அல்லேனோ யான்? அன்பு உடையார் போல் அழுகின்றேன்''.
(2279)

(துஞ்சுதல்-இறத்தல்)

''வில்லையேந்திய தோளையுடைய இராமன், கொடிய காட்டிற்குச் சென்று விட்டான்'' என்று கேட்ட மாத்திரத்திலேயே தனது உயிரை மாய்த்துக் கொண்டான் நற்குணங்களை உடைய தசரதன்; அதற்குக் காரணமாயிருந்த விடம் போன்ற கொடியவளான என் தாய் கைகேயியைக் கொல்லாமலும், நானே உயிர் துறக்காமலும் இராமனிடம் மிகுந்த அன்பு கொண்டவர்கள் அழுது அரற்றுவதைப் போல நானும் அழுகின்றேன். இவற்றால் எனக்குக் கொடிய பழிச் சொற்கள்தான் நிரம்பக் கிடைக்கும் அல்லவா?'' என்று புலம்பினான் பரதன்.

இராமன் காடேகினான் என்று கேள்விப்பட்டதும் அப்பொழுதே உயிர் துறந்தான் மன்னன் தசரதன். அவன் நல்லவன், தான் இன்னும் உயிர் துறக்காது இருத்தலினால் தான் நல்லவன் அல்லன். கொடியோன் என்பதையும் கூறித் தன்னைத் தானே நொந்து கொள்ளுகிறான் பரதன். என் தாயைக் கொன்றிருந்தாலோ, அல்லது நான் உடனே இறந்து பட்டிருந்தாலோ, நான் இராமன் பால் மிக்க அன்புடையவன் என்பதாகும். நான் அவளையும் கொல்லவில்லை. நானும் இறந்துபடவில்லை. நான் எவ்வாறு இராமன்பால் உண்மையன்பு உடையவன் என்று சொல்லத் தகும்? எனவே நான்அன்பு உடையார்போல்அழுகின்றேன்என்று கூறியது ஒரு நயம். இதனால் நான் வன்பழியிலே குறைவற்றவனாகிறேன். நிரம்பப் பழி கொண்டவனாகிறேன் அல்லவா? என்பதாம். பழியாலே குறைவற்றேன் என்பது பழி நிரம்பப் பெற்றேன் என்பதைக் குறிக்கும். அவலத்தின் உச்சக் கட்டத்தில் இவ்வாறு தன்னைத் தானே நொந்து கொண்டு கூறுவது மனித இயல்பு.

83. ''பாரோர் கொள்ளார்; யான் உயிர் பேணிப் பழி பூணேன்;
தீராது ஒன்றோ துன்பும்? இவ்ஊரில் திரு நில்லாள்;
ஆரோடு எண்ணிற்று? ஆர் உரை கொண்டாய்? அறமெல்லாம்
வேரோடும் கேடாக முடித்து, என் விளைவித்தாய்?'' (2280)

(பேணி-பாதுகாத்து; பூணுதல்-மேற்கொள்ளுதல்; கேடாதல்-அழிதல்; ஒன்றோ-ஒன்று மட்டுமா?; தீர்தல்-நீங்குதல்)

''நான் அரசாள்வதை இவ்வுலகத்தோர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நானும் என்னுடைய உயிரைப் பாதுகாத்துக் கொண்டு, இப்பெரும் பழியை மேற்கொள்ள மாட்டேன்.; இப்பொழுது வந்திருக்கின்ற துன்பம் என்றைக்கும் நீங்காதது என்பது ஒன்று மட்டுமா? இராமன் இல்லாத ஊரில்

Koviloor Digital Library

திருமகளும் தங்கமாட்டாள். இத்தகைய கொடிய செயல்களைச் செய்ய நீ யாரோடு சேர்ந்து ஆலோசனை செய்தாய்? யார் உனக்கு இவ்வாறு கூறினார்கள்? உலகில் உள்ள தரும நியாயங்கள் அனைத்தும் வேரோடு அழிந்துபோகும்படியாக எத்தகைய தீங்கினை உனக்கும், எனக்கும், நாட்டிற்கும் விளைவித்துள்ளாய்? இதனால் நீ அடையப்போகும் பயன்யாது?'' என்று பரதன் தன் தாயை நோக்கிக் கண்டிக்கிறான்.

நான் அரசுரிமை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று முன்பே கூறி யிருக்கிறேன். அப்படியே நான் ஏற்றுக் கொண்டாலும் இவ்வுலகத்தோர் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதாம். உலகில் மனிதன் உயிர் வாழ்வதே புகழ் பெறுவதற்காகத்தான். நான் உயிரைப் பாதுகாத்துக் கொண்டு பழியை ஏன் மேற்கொள்ள வேண்டும்? நான் அவ்வாறு செய்ய முற்படமாட்டேன்என்றான்என்க. இவ்வூரில்திருமகள்நில்லாள்என்றால் தவ்வை தங்குவாள் என்பது பொருள். இத்தகைய கொடிய செயல்களைச் செய்ய உனக்குச் செயல் துணிவு இல்லை என்பது எனக்குத் தெரியும். இதனை உனக்குச் சொல்லித் தந்தவர்கள் யார் என்று கேட்கிறான். இதனையே முன்பு தசரதன் ''பொய்ந்நிலையோர்கள் புணர்த்த வஞ்சமுண்டோ?'' என்று கேட்டது இங்கு நினைவு கூரத்தகும். அறம் எல்லாம் கேடாக என்பது மூத்தவர்க்குரித்து அரசு என்ற அறம் திறம்பியமையும், அதனால் நிகழ்ந்த பின்விளைவுகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். தருமம் கெட்டது, நம் இருவர்க்கும் பழி வந்து சேர்ந்தது, நாட்டுக்குத் துன்பம் உண்டாயிற்று என்பது கருத்து.

84. ''கொன்றேன் நான் என்தந்தையை, மற்று உன் கொலைவாயால்;
ஒன்றோ? கானத்து அண்ணலை உய்த்தேன்; உலகு ஆள்வான்
நின்றேன்; என்றால், நின்பிழை உண்டோ? பழி உண்டோ?
என்றேனும் தான் என் பழி மாயும் இடம் உண்டோ? (2281)

(உய்த்தல்-செலுத்துதல்; ஆள்வான்-ஆட்சி செய்யும் பொருட்டு; இடம்-வழி)

''உன்னுடைய கொல்லும் தன்மையுள்ள வாய்ச்சொற்களைக் கருவியாகப் பயன்படுத்தி என் தந்தையை நான் கொன்று விட்டேன். அது ஒன்று மட்டுமா? பெருமைக்குரிய தமையன் இராமனையும் கானகத்துப் புகுமாறு செலுத்திவிட்டேன். இவ்வுலகத்தின் அரசாட்சியை மேற்கொள் வதற்காக இப்போது தயார் நிலையில் நிற்கவும் செய்கிறேன் என்றால், இதில் நீ செய்த பிழை ஏதேனும் உண்டா? அதனால் பழி உனக்கா வரப்போகிறது? பிழைசெய்தவன்நான். பழி என்மீது வந்து சேரும். அந்தப் பழியைத்துடைப்பதற்கு ஏதேனும்வழி இருக்கிறதா? ஒன்றும் இல்லை''. என்று தன்னைத் தானே பழித்துக் கொள்ளுகிறான் பரதன்.

''எய்தவன் இருக்க அம்பை நோவதிற் பயனில்லை'' என்ற மொழிகளை நோக்குக. பழி உன் மீது வராது. என்மீதே சேரும். எனவே, நான் உன்னை நல்லவளாக்கிவிட்டேன் என்றான். உலகம் தன் தாயைத்

Koviloor Digital Library

தூற்றாது, தன்னைத் தான் தூற்றும் என்பதைப் பரதன் இப்பாடலால் புலப்படுத்துகிறான். வீணான பழி ஒருவர் மீது ஏற்பட்டால், அதை எவ்வாறேனும் அவர் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பது உலக இயற்கை. அதையே பரதன் இங்கு கூறுகிறான் எனக் கொள்க.

85. ''கண்ணாலே என்செய்வினை இன்னும் சில காண்பார்
மண்ணோர்; பாராது எள்ளுவர்; வாளாப்பழி பூண்டேன்;
''உண்ணா நஞ்சம் கொல்கிலது'' என்னும் உரை உண்டு என்று
எண்ணா நின்றேன்; அன்றி இரேன் என் உயிரோடே!'' (2282)

(மண்ணோர்-மண்ணுலகத்து மக்கள்; எண்ணா-எண்ணி)

''இம்மண்ணுலகத்தில் வாழும் மக்கள் எல்லோரும் நான் செய்யப் போகின்ற சில நல்ல காரியங்களை இனிமேல்தான் பார்க்கப் போகிறார்கள்; இப்போது அவற்றைப் பாராததனால் என்னை இகழ்ந்து பேசுகின்றனர்; உன் செயலால் எனக்கு வீணான பழி உண்டாயிற்று. ஆனால் ஒன்று. நஞ்சு உண்டால்தான் உண்டவனைச் கொல்லும், உண்ணாதவரைக் கொல்லாது என்னும் ஒரு பழமொழி உண்டு என்று எண்ணித்தான் உயிரோடு இருக்கின்றேன். இல்லாவிட்டால் எப்போதோ இறந்து போயிருப்பேன்'' என்றான் பரதன்.

நான் சில நல்ல கரியங்களைச் செய்யப்போகிறேன். அதைக் கண்ட பின்பு இப்போது இகழும் மக்கள் என்னுடைய அந்தக் காரியங்களையும் பார்க்கத்தான் போகிறார்கள் என்கிறான். அவன் அவ்வாறு எண்ணும் காரியங்கள் என்னென்ன? முடிசூடிக் கொள்ளாது இருக்கப்போவதும், தவம் செய்யப் போவதும், இராமனையே அழைத்து வந்து முடிசூடிக் கொள்ளும்படி செய்யப்போவதும் போன்றன என்க. பாராது எள்ளுவர் என்றதனால் பார்த்தால் புகழ்வர் என்பது பெறப்படுவதை உணர்க. வீணான பழி பூண்டேன் என்பது தன் தாய் கைகேயியின் செயலுக்கும் தனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாதிருந்தும் உலகோர் தன்னைத்தான் பழிப்பர் என்று தான் உணர்வதால் என்க. ''உண்ணா நஞ்சம் கொல்கிலது'' என்பது பழமொழி. நஞ்சு உண்டவரைத்தான் கொல்லும், உண்டால்தான் கொல்லும். இதே கருத்தை உண்ணாதே உயிர் உண்ணாது ஒரு நஞ்சு'' என்று பின்பு கவிஞன் கையாண்டிருப்பதைக் கொண்டும் உணரலாம். செய்யாத பிழை, பழி பாவங்களை உண்டாக்காது என்பது கருத்து. பழிக்கு அஞ்சி உயிர்விடுதலினும், உயிரோடிருந்து, நான் குற்றமற்றவன் என்பதை உலகறியச் செய்வேன். அதனால்தான் உயிரோடு இருக்கிறேன் என்றான் என்க.

86. ''ஏன்று, உன் பாவிக்கும்பி வயிற்றின்இடை வைகித்
தோன்றும் தீராப் பாதகம் அற்று, என் துயர்தீரச்
சான்றும் தானே நல் அறமாகத் தகை ஞாலம்
மூன்றும் காண, மாதவம் யானே முயல்கின்றேன்'' (2283)

Koviloor Digital Library

(கும்பி-நரகம் / வயிறு தகை-மேன்மை; ஏன்று-இசைந்து / உடன் பட்டு.)

''பாவியாகிய உன்னுடைய வயிறு என்னும் நரகத்தில் உடன்பட்டுச் சிலகாலம் தங்கி இப்பூமியில் தோன்றியதால் உண்டான நீங்காத தீமை அகலப்பெற்று, என் துயரம் எல்லாம் நீங்க, நல்லறக் கடவுளையும், இம்மூவுலகத்தவரையும் சான்றாகக் கொண்டு, அவர்கள் காணும்படி, நானே பெரிய அரிய தவம் இயற்ற முயல்கின்றேன்'' என்றான் பரதன்.

முன் பாடலில் சில செயல்கள் செய்யப்போவதாகக் கூறிய பரதன், இந்தப் பாடலில் தான் சிறந்த மாதவம் செய்யப் போகின்றேன் என்கிறான். எதற்காக மாதவம்? தன் அன்னையான கைகேயியின் பாவம் செய்த நரகம் போன்ற வயிற்றுக்குள் சிலகாலம் தங்கியிருந்ததனால் உண்டாகின்ற பாதகம் அறவும், தந்தை விண்ணுலகு எய்தவும், தமையன் வனம்புகுதலால் உண்டானதுமான துன்பங்கள் நீங்கவும், தவம் செய்ய முயல்கின்றேன். அதற்குச் சான்று யார்? அறக்கடவுளும், மேன்மை தங்கிய இம்மூவுலகத்தாரும் தான். ஏன் அவனே மாதவம் செய்யவேண்டும்? கைகேயியின் விருப்பப்படி இராமன் மாதவம் செய்ய வேண்டுபவன் அல்லன். அவன் அரசாளப் பிறந்தவன்; அரசாளத் தகுதியுடையவன். எனவே, அவனைத் தவம் செய்தலிலிருந்து நீக்கித் தானே அத்தவத்தை மேற்கொள்ளப் போகிறேன் என்கிறான். நான் தவம் செய்யப் போகிறேன் என்னாது, ஏன் தவம் செய்ய முயல்கின்றேன் என்கின்றான். தவமும்தவம்உடையார்க்கேஆகும். தான்தவமுடையவன் அல்லன். எனவே, தவம் இயற்ற முயல்கின்றேன் என்றான் என்க. அவள் வயிறு பாவிகள் தங்குதற்கு உரிய இடம் என்பது புலப்பட பாவிக்கும்பி என்றான். நரகம் புகுதற்குரிய தீவினைகள் பல இயற்றியவள். எனவே பாவிக்கும்பி உவமை. பாதகம் அற, துயர் தீர, அறம் சான்றாக, ஞாலம் மூன்றும் காண, மாதவம் முயல்கின்றேன் என்று அடுக்கிக் கூறியது ஒரு நயம்.

87\. ''சிறந்தார் சொல்லும் நல்லுரை சொன்னேன்; செயலெல்லாம்
மறந்தாய் செய்தாய் ஆகுதி; மாயா உயிர் தன்னைத்
துறந்தாய் ஆகின், தூயையும் ஆதி; உலகத்தே
பிறந்தாய் ஆதி; ஈது அலது இல்லை பிறிது'' என்றான். (2284)

(மாயா-அழியாத)

''இதுவரையிலும் அழியாத உன் உயிரைப் போக்கிக் கொள்வாய் ஆயின், இதுவரை நீ செய்த கொடிய செயல்களை எல்லாம் தன்னுணர்வு இன்றிச்செய்துவிட்டாள்என்று உலகோர்கூறுவர்; அதனால் உனக்குளந்தப் பழியும் வாராது. உன் செய்கைகளை மறந்து உன்னைத் தூய்மையானவள் என்றும் கூறுவர். அப்பொழுதுதான் நீ இவ்வுலகில் பிறவியெடுத்ததன் பலனாகிய புகழை அடையமுடியும். இதைத்தவிர உன் பழி பாவங்களைத்

Koviloor Digital Library

தீர்த்துக் கொள்ள வேறு வழி இல்லை. இவ்வுரைகளை நான் சொல்ல வில்லை. அறிவொழுக்கங்களில் சிறந்த சான்றோர்கள் கூறுகின்ற நல்ல அறவுரை இது. அதைத்தான் நான் சொன்னேன்'' என்று பரதன் கூறி முடித்தான்.

இப்போது கைகேயி உயிரைத் துறந்தால் உலகத்தார், இதுவரை அவள் செய்த கொடிய செயல்களான, கணவனை வான் புகுத்தியதும், மூத்த மகனைக் கான் புகுத்தியதும் இவையெல்லாம் கைகேயி தன் நல்ல நினைவின்றிச் செய்தனவே, என்றும் அந்தத் தவறுகளை உணர்ந்து உயிர் துறந்தாள் என்றும் உலகத்தார் கூறுவர். எனவே, அவள்மீது உள்ள பழி நீங்கும். தூய்மை உடையவள் ஆவாள். பிறந்த பயனை அடைந்தவள் ஆவாள்என்றான்என்பதாம். முன்பாடலில்தன்பழிநீங்குவதற்கு மாதவமே உயரிய வழி என்று கூறிய பரதன், இப்பாடலில் தன் தாய் செய்த கொடுமைப் பழிநீங்குவதற்கு உயிர்துறத்தலே சிறந்த வழி என்றுகூறினான் என்க. இவ்வாறு அவள் உயிர் துறக்கவில்லை என்றால், அவள்தான் எல்லாத் தீங்குகளுக்கும் காரணம் என்று உலகம் அவளைப் பழிக்கும். அவள் தூய்மையில்லாதவள் ஆவாள். பிறந்த பயனாகிய புகழை அடையாதவளும் ஆவாள் என்பது பரதன் கருத்து.

இங்கே ஒரு செய்தி. இதன் பின்னர், கைகேயி காப்பியத்தில் எந்த இடத்திலும் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, பரதனது உரையை ஏற்று அவள் உயிர் துறக்கவில்லையென்றாலும்., உயிரற்ற நடைப்பிணம் போலவே உலவினாள் என்பது போதரும். உடல்தான் அழியும். உயிர் அழியாதது எனவேதான் மாயா உயிர் என்றான். உயிரைத் துறத்தல் இயலும், அழிக்க இயலாது என்க.

88. பரதன் கோசலையைக் காணச் செல்லுதல்

இன்னனம் இனையன இயம்பி, ''யானும் இப்
பன்னரும் கொடு மனப் பாவிபாடு இரேன்;
துன்னரும் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவென்'' என்று எழுந்து போயினான். (2285)

(பன்னரும்-சொல்லுதற்கரிய; துன்னரும்-நெருங்குதற்கரிய / நினைத்தற்கரிய; பொன்-சிறந்த / பொலிவு பெற்ற; பாடு-பக்கம்)

இவ்வாறு, இத்தன்மையனவான சொற்களைச் சொல்லியும், கைகேயி அவன் வார்த்தைகளைக் கேட்காததால், ''இனிமேலும் இந்தச் சொல்லுதற்கரிய கொடிய மனத்தைப் பெற்றவளான பாவியான என் தாயின் அருகில் நான் இருக்கமாட்டேன். எனக்கு வந்த நினைத்தற்கரிய துன்பங்கள் அனைத்தையும் போக்குகின்ற தூய மனத்தை உடையவளான என் பெரிய அன்னை கோசலையின் சிறந்த அழகிய பொலிவு பெற்ற திருவடிகளை வணங்கித் துயர் நீங்குவேன்'' என்று கூறி அவ்விடம் விட்டு அகன்று சென்றான்.

Koviloor Digital Library

யானும் என்றது, இராமன் இவள் பக்கம் இருக்கப் பிடிக்காமல் தான் காடேகினான், இப்பொழுது நானும் போகிறேன் என்பதையும் குறிக்கும். கைகேயி தானும், தன்னைச் சார்ந்தாரையும் கொடுமனம் உடையவராய் ஆக்குவாள். கோசலை தானும் தூயவள், தன்னைச் சார்ந்தாரையும் தூயவராக்கி அமைதிப்படுத்துவாள் என்று இரு தாயாரிடத்தும் உள்ள வேற்றுமையை வெளிப்படுத்துகிறான் பரதன் என்பது கூர்ந்து நோக்கத்தக்கது. எத்தகைய துயரத்தையும் போக்கி, இதம் அளிக்க வல்ல மாண்புடையவள் கோசலை என்பது பரதனின் கருத்து. இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. பரதன் இவ்வளவு புலம்பிக் கொண்டிருக்கும்போது சுமந்திரன் முதலியோர் அருகில் இருக்கின்றனர் என்றும், அவன் பேச்சொலி கேட்டுக் கோசலை அவனைக் காணவிரும்பினாள் என்றும், சுமத்திரையையும் உடன் அழைத்துக்கொண்டு கைகேயியின் அரண்மனைக்குப் புறப்பட்டபோது, பரதன் சத்துருக்கனனுடன் சென்று கோசலையைக் கண்டதாக வான்மீகம் கூறுகிறது.

89. பரதன் கோசலையை வணங்கிப் புலம்புதல்

ஆண்தகை, கோசலை அருகர் எய்தினன்;
மீண்டும் மண்கிழிதர வீழ்ந்து, கேழ் கிளர்
காண்தகு தடக்கையின் கமலச் சீறடி
பூண்டனன், கிடந்தனன், புலம்பினான் அரோ! (2286)

(அருகர்-அருகில்; கிழிதர-பிளக்குமாறு; கேழ்-நிறம்; பூண்டு-பற்றிக் கொண்டு)

ஆண்களிற் சிறந்தவனான பரதன், கைகேயியின் அரண்மனையிலிருந்து வந்து, கோசலையின் அருகில் சேர்ந்தான். வந்ததும் அத்தரையே பிளக்கும்படியாக அடியற்ற மரம்போலக் கீழே விழுந்து, எண் சாண் உடம்பும் நிலத்தில் படும்படி நல்ல நிறம் கொண்டு விளங்குகின்றதும், காண்பதற்கே இனியதுமான தனது பெரிய கைகளால் கோசலையின் தாமரை மலர் போன்ற சிறிய திருவடிகளைத் தன் தலை மேற் சூடிப் பற்றிக் கொண்டு, அவ்வாறே தரையில் கிடந்து புலம்பலுற்றான். எதுவும் பேச இயலாதவனாய்ச் சிறிதுநேரம் கிடந்த பின்பு புலம்பலானான் என்பதாம்.

90. பரதன் புலம்புதல்

''எந்தை எவ்வுலகு உளான்? எம்முன் யாண்டையான்?
வந்தது தமியென் இம்மறுக்கம் காணவோ?
சிந்தையின் உறுதுயர் தீர்த்திரால்'' எனும்
அந்தரத்து அமரரும் அழுது சோரவே. (2287)

(தமியென்-தனியன் / ஆதரவற்றவன்; மறுக்கம்-கலக்கம்; சோர-வருந்தும்படி.)

Koviloor Digital Library

வானத்திலுள்ள தேவர்களும் அழுது வருந்தும்படி பரதன் கோசலையை நோக்கி, ''என் தந்தையாகிய தசரதன் இப்போது இந்த உலகத்தில் இருக்கிறானா? இல்லாவிடில் எந்த உலகத்தில் இருக்கிறான்? என் தமையனாகிய இராமன் இந்நாட்டில் உள்ளானா? இல்லாவிடில் காட்டில் எந்த இடத்தில் இருக்கிறான்? இத்தகைய துன்ப நிலையைக் காணத்தான் நான் இவ்வளவு விரைவாக என் பாட்டனார் ஊராகிய கேகயத்திலிருந்து தனியனாகவே எந்த ஆதரவும் இல்லாமல் வந்தேனா? நான் கொண்டிருக்கின்ற மனத்துயரைத் தீர்த்து அருளுங்கள்'' என்று புலம்பினான்.

தசரதன் இறந்து பட்டதும், இராமன் கானகம் புக்கதும் பரதனுக்குத் தெரியும். எனவேதான் கோசலையிடம் கேட்கும்போது, எவ்வுலகு உளான் என்று தசரதனைப் பற்றியும் எங்கு இருக்கிறான் என்று இராமனைப் பற்றியும் கேட்கிறான் என்பதாம். தந்தையை இழந்ததாலும், தமையனைப் பிரிந்ததாலும் தமியென் என்றான்; சிந்தையின் உறுதுயர் என்பதும் அதையே குறித்தது. உண்டான துயரைத் தீர்த்தல் என்பது உலகியலையும், நூல் நெறியையும் சான்றாக எடுத்துரைத்து ஆறுதல் கூறுதலைக் குறிக்கும். பரதன் புலம்பியதைக் கண்டு தேவர்களும் அழுது வருந்தினர் என்பது பரதனின் துயர் மிகுதியைக் குறிக்க என்க. ஏனெனில் தேவர்களின் நலன் பொருட்டுத் தான் இராமன் கானகம் புகுந்திருக்கிறான் என்பது அவர்கள் உணர்ந்ததன்றோ? மறுக்கம் என்பது அரண்மனையிலும், நகரத்திலும், நாட்டிலும் மக்கள் கொண்டுள்ள கலக்க நிலையைச் சுட்டுவதாகும்.

91. ''அடித்தலம் கண்டிலென் யான், என் ஐயனை;
படித்தலம் காவலன் பெயரற்பாலனோ?
பிடித்திலிர் போலும் நீர்; பிழைத்திரால்'' எனும்,
பொடித்தலம் தோள் உறப் புரண்டு சோர்கின்றான். (2288)

(பொடி-புழுதி; தலம்-பூமி; அடித்தலம்-திருவடிகள்; படித்தலம்-பூமி; பெயர்தல்-போதல் / செல்லுதல்; பிழைத்தல்-தவறு செய்தல்; பிடித்தல்-தடுத்து நிறுத்துதல்)

மண்ணின் புழுதியெல்லாம் தன் தோள்களில் படும்படி புரண்டு வருந்துகின்றவனான பரதன், கோசலையை நோக்கி, ''என் தலைவனான இராமபிரானுடைய திருவடிகளைக் காணும் பேறு பெற்றிலேன்; இவ் வுலகத்தையே காத்து நிற்கக் கடமைப்பட்டுள்ள இராமன், இந்நாட்டை விட்டு அகன்று போதல் எவ்வாறு சாத்தியமாகும்? அவன் அவ்வாறு காடு ஏகும்போது தாங்களாவது அவனைத் தடுத்து நிறுத்தியிருக்கலாமே? தாங்கள் அவ்வாறு செய்யவில்லை போலும்; எனவே நீங்கள் தவறிழைத்து விட்டீர்கள்'' என்று கோசலையையும் சாடினான்.

உலகக் காவலன் காவலை விடுத்துப் போவது பொருந்தாது. அவன் எப்படிப் போனான். அப்படியே அவன் சென்றாலும் நீங்கள் ஏன் தடுத்து

Koviloor Digital Library

நிறுத்தவில்லை, நீங்கள் கடமை தவறினீர்கள் என்பது பரதனின் குற்றச்சாட்டு.

92. ''கொடியவர் யாவரும் குலங்கள் வேர்அற
நொடிகிலர்; யான்அது நுவல்வது எங்ஙனம்?
கடியவள் வயிற்றினில் பிறந்த கள்வனேன்
முடிகுவென், அருந்துயர் முடிய'' என்னுமால். (2289)

(நொடி-அழிவு; நொடிதல்-அழிந்து ஒழிதல்; கள்வன்-வஞ்சகன்; அருந்துயர்-தீராத துயர்; முடிகுதல்-இறந்துபடுதல்)

''இராமன் காடேகும் செயலைச் செய்த கொடியவர்கள் எல்லோரும் தங்கள் குலங்களோடு வேரே அற்றுப் போகும்படி இறந்து ஒழிந்து போயிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு அவர்கள் இறந்துவிடவில்லை. கடியவளான கைகேயியின் வயிற்றில் பிறந்த வஞ்சகனாகிய யான் அதை எவ்வாறு கூறுவேன்? என்னுடைய தீர்க்க முடியாத இந்தத் துயரைத் தீர்த்துக் கொள்வதற்காக இப்போது நானே இறந்துபோகப் போகிறேன்; அதுவே தக்கது. வேறு என்ன சொல்ல முடியும்?'' என்று பரதன் புலம்பினான்.

கைகேயி, தானே இவ்வாறு செய்திருக்க முடியாது என்பதையும், அவளுக்கு யாரோ தவறான அறிவுரை கூறியிருக்கிறார்கள் என்றும், அத்தகைய உரிமை கூனியைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்றும் பரதன் அறிவான். எனவேதான் தன் தாய் கைகேயியையும் அவள் ஏவல் பெண் கூனியையும் உட்படுத்திக் கொடியவர் என்று பன்மையில் சொன்னான் என்பதாம். குற்றம் செய்தவர்கள் இதுவரை இறந்து ஒழியாததால் நான் இறந்து போகிறேன் என்கிறான் பரதன். நொடிகிலர் என்ற சொல் ஆழம்மிக்கது. இன்று இச்சொல் நிலை குலைதல் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. ஆனால் நொடித்தல் என்ற சொல்லுக்கு அழிவு என்பது பொருள். அழிக்கும் கடவுளாகிய சிவபெருமானை ''நொடித்தான்'' என்பார் சுந்தரர் தமது தேவாரத்தில். திருநொடித்தானமலைப் பதிகம் என்றே ஒரு பதிகம் பாடியிருக்கிறார் சுந்தரர். குலத்தோடு வேர்அற என்றதனால் தன் தாய் அழியவில்லை. எனவே அவள் குலத்தில் அவள் வயிற்றில் பிறந்த வஞ்சகன் நான் அழிகிறேன் என்றது ஒரு நயம். நான் உயிர் நீத்து எனக்கு வரக்கூடிய பழிபாவங்களைத் தீர்த்துக் கொள்ளுகிறேன் என்றான் என்பதாம்.

93. ''இரதம் ஒன்று ஊர்ந்து, பார் இருளை நீக்கும் அவ்
வரதனில் ஒளிபெற மலர்ந்த தொல்குலம்
பரதன் என்ற ஒரு பழி படைத்தது'' என்னுமால்
மரகதமலை என வளர்ந்த தோளினான். (2290)

(இரதம்-தேர்; வரதன்-சூரியன்; மலர்ந்த-தோன்றிய; தொல்-பழமை யான; ஊர்ந்து-செலுத்தி.)

Koviloor Digital Library

மரகத மலை போன்ற வண்ணமும், உயரமும், திண்மையும் கொண்ட உயர்ந்த தோள்களை உடைய பரதன், ''ஒற்றைச் சக்கரத் தேரைச் செலுத்தி இவ்வுலகத்தின் இருளைப் போக்கும் அந்தச் சூரியனிடமிருந்து ஒளியும் புகழும் பெற்றுத் தோன்றிய இப்பழமையான சூரிய குலம் பரதன் என்ற ஒரு பழியையும் கொண்டது'' என்று கூறிப் புலம்புவான்.

சூரியன் தொடங்கி இதுகாறும் ஆட்சிபுரிந்து வந்த மன்னர்கள் அனைவரும் சூரிய குலத்திற்குப் பெருமையும் புகழுமே சேர்த்திருக்கிறார்கள். ஆனால் நானாகிய பரதன் மட்டுமே இக்குலத்திற்குப் பழிச்சொற்களையும் தந்துள்ளேன் என்று தன்னைத் தானே நொந்து கொண்டான் என்க. பழி என்பது மூத்தவர்க்கு உரித்தது அரசு என்ற முறைமை மாறி இராமனிட மிருந்து தனக்கு அரசுரிமையை வாங்கித் தந்த தன் தாய் கைகேயியின் செயலும், அதன் பயனால் தசரதன் இறந்ததும், இராமன் பிரிந்து காடேகியதுமாம்.

இங்கே ஒரு கருத்து. சூரியன் ஒற்றைச்சக்கரத்தில் ஊர்ந்து ஒரே திசையில் போய் உலக இருளைப் போக்குவான். ஆனால் சூரிய குலத்தில் தோன்றிய தசரதனோ, பத்துத் தேர்களைப் பத்துத் திக்குகளிலும் செலுத்திப் பகை இருளைப் போக்குவான். எனவே, சூரியனைக் காட்டிலும் ஆற்றல் படைத்தவன் தசரதன் என்பது இங்கே குறிப்பு. வரதன் என்ற சொல் உலகுக்கு ஒளி கொடுப்பவன் என்றும், வேண்டுவார்க்கு வேண்டும் வரம் தருபவன் என்றும் பொருள்படும். தொடர்ந்து புகழே படைத்த சூரிய குலம் என்னால் பழியும் படைத்தது என்பது உட்கருத்து.

94. ''வாள் தொடு தானையான் வானில் வைகிட,
காடு ஒர் தலைமகன் எய்த, கண்இலா
நாடு ஒரு துயரிடை நைவதோ? எனும்
தாள் தொடு தடக்கை அத் தருமமே'' அனான். (2291)

(தாள்-முழந்தாள்; தொடு-பற்றிய; வைகுதல்-தங்குதல்; நைதல்-துன்புறுதல்; கண்இலா-காப்பவர் இல்லாத)

முழந்தாளைத் தொடும் அளவிற்கு நீண்ட பெரிய கைகளையுடையவனும், தருமமே உருக்கொண்டு வந்தாற் போன்றவனுமான பரதன், ''வாட்படையை ஏந்திய சேனைப் படைகளை உடைய தசரதன் வானுலகத்திற்குச் சென்றுவிடவும், அவனுடைய ஒப்பற்ற மூத்தமகன் இராமன் காட்டிற்குச் சென்றுவிடவும், காப்பவர் என்னும் கண் இல்லாத இக்கோசல நாடு, கூறமுடியாத துயரத்தில் கிடந்து தத்தளிப்பதோ?'' என்று புலம்பினான்.

தாளைத் தொடுகின்ற கையுடைமை உயர்ந்த அரசர்களுக்குரிய உத்தம இலக்கணம். தருமமே ஒரு உருவெடுத்து வந்தது போன்றவன் என்று முன்பு தசரதனையும், இராமனையும் கூறிய கவிஞன் இங்கு பரதனையும் அவ்வாறே கூறுதல் நோக்குதற்குரியது. முன்பே அசரனாக இருந்து

Koviloor Digital Library

ஆட்சிபுரிந்ததசரதனும்இல்லை;அரசுக்குரிமைஉடையவனும்இப்போது அரசாள வேண்டியவனுமான இராமனும் இப்போது நாட்டில் இல்லை; இவ்வாறு காத்தாரும் காப்பாரும் இல்லாது கண்ணிழந்ததாகிக் கலங்கும் நிலை தகுமோ? என்று கோசலத்தைக் கூறுகிறான். மன்னனே நாட்டிற்குச் சிறந்த கண் என்பார். ''கண் எனப்படுவ மூன்று; காவலர், கல்வி, காமர். ''மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெல்லாம் கண்ணும் ஆவியுமாம் பெருங்காவலான்'' என்பது பெரியபுராணம்.

95. கோசலை ''பரதன் தூயவன்'' என்று உரைத்தல்

புலம்புறு குரிசில் தன் புலர்வு நோக்கினாள்
குலம், பொறை, கற்பு இவை சுமந்த கோசலை;
''நிலம் பொறை ஆற்றலன், நெஞ்சம் தூயது'' எனாச்
சலம் பிறிது உற, மனம் தளர்ந்து கூறுவாள். (2292)

(குலம்-உயர் குடிப்பிறப்பு; சுமந்த-பொருந்திய / மேற்கொண்ட; புலர்வு-வாட்டம்; பொறை-சுமை; சலம்-கோபம் / தீது / வஞ்சனை / பொய்; பிறிதுறல்-நீங்குதல்; தளர்ந்து-நெகிழ்ந்து)

நல்ல உயர்ந்த குடிப்பிறப்பு, பொறுமை, திண்ணிய கற்பு என்ற இந்நற்குணங்கள் அமையப் பெற்ற கோசலை, தன்முன் புலம்பிக் கொண்டிருக்கின்ற ஆண்களிற் சிறந்தவனாகிய பரதனைக் கண்ணாலும், கருத்தாலும் நோக்கினாள். பின் ''இவன் இந்நிலவுலக அரசுரிமையை ஏற்கும் ஆசையற்றவன், இவனுடைய நெஞ்சம் தூய்மையானது'' என்று எண்ணித் தான் முன்பு கொண்டிருந்த வேறுபட்ட கருத்தினால் உண்டாகிய தணியாத கோபத்தை நீக்கி, மனம் நெகிழ்ந்து கீழ்வருவனவற்றைக் கூறத் தொடங்கினாள்.

புலர்வு என்பது அகமும் புறமும் வாடுதலைக் குறிக்கும். பின்னர், சீதையைக் கண்டு வந்த அனுமன் இராமபிரானிடம் தெரிவிக்கும், ''இற் பிறப்பென்பதொன்றும், இரும்பொறை என்பதொன்றும், கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்'' என்று கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத் தகும். முன்பு இச்சூழ்ச்சிகளுக்கெல்லாம் பரதனும் உடந்தையாய் இருக்கிறானே என்று, தான் பரதன் மேல் கொண்ட கோபம் நீங்கியதை ''சலம் பிறிது உற'' என்றார்.

96. கோசலை கூற்று

''மையறு மனத்து ஒரு மாசுளான் அலன்;
செய்யனே'' என்பது தேரும் சிந்தையாள்,
''கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐய! நீ அறிந்திலை போலுமால்?'' என்றாள். (2293)

Koviloor Digital Library

(மை-குற்றம்; மாசு-களங்கம்; செய்யன்-நேர்மையுள்ளவன்; கைதவம்-வஞ்சனை / சூது; இழைத்த-செய்த; தேறும்-ஆராய்ந்து அறியும்)

பரதன் இயற்கையாகவே குற்றமற்ற மனம் உடையவன்; மேலும் செயற்கையாக விளைந்த களங்கமும் அற்றவன்; நேர்மையானவனே என்று உணர்ந்து அறிந்த கருத்தை உடையவளான கோசலை, பரதனைப் பார்த்து, ''தலைவ! கேகய மன்னனான அசுவபதியின் மகளான கைகேயி செய்த பெரும் வஞ்சனை மிகுந்த சூழ்ச்சியை நீ முன்னரே அறியவில்லை போலும்?'' என்று கேட்டாள்.

இங்கே மையறு மனம் என்று இயல்பாகவே குற்றமற்ற மனம் உடைய செய்யனே என்று உடன்பாடாகவும், அம்மனத்தில் செயற்கையாகப் பிறர் புகுத்திய களங்கமும் இல்லாதவன்-மாசுளான் அலன் என்று எதிர் மறையாகவும், கூறி ஆராய்ந்து தெளிவு பெற்றாள் கோசலை என்பதால், கோசலை முன்பு பரதன்பால் கொண்டிருந்த கொஞ்சநஞ்சசந்தேகத்தையும் தீர்த்துக் கொண்டாள் என்பதாம். உன் தாய் என்றோ, கைகேயி என்றோ கூறாமல் கைகயர் கோமகள் என்று கூறியது அவள் அரசர் இல் பிறந்து, அரசர் இல் வளர்ந்து பேரரசியான அவள் இன்னும் பேரரசியாகவே இருக்க ஆசைப்படுகிறாள் என்பதை உட்கொண்ட கருத்தாகும்.

97. பரதன் சூள் உரைக்கத் தொடங்குதல் [21 பாடல்கள்]

தாள் உறு குரிசில், அத்தாய் சொல் கேட்டலும்,
கோள் உறு மடங்கலின் குமுறி விம்முவான்;
நாள் உறு நல்லறம் நடுங்க, நாவினால்
சூள் உறு கட்டுரை சொல்லல் மேயினான். (2294)

(கோள்-பொறி / கொள்ளுவது / அகப்படுத்துதல்; மடங்கல்-சிங்கம்; உறு-நிலைபெற்றுள்ள; கட்டுரை-உறுதிமொழி; மேயினான்-தொடங்கினான்; சூள்-சபதம் / வஞ்சினம்)

கோசலைத் தாயின் திருவடிகளில் விழுந்து வணங்கிய ஆண்களில் சிறந்தோனாகிய பரதன், அவள் கைகேயி செய்த வஞ்சகச் செயல் நீ அறியாது செய்யப்பட்டதா என்று கேட்டவுடன், தன் தாய் தன் மீது ஐயுறவு கொள்ளுகிறாள் என்று கருதி, பொறியில் அகப்பட்டுக் கொண்ட வலிய சிங்கம் போலப் பதறி விம்மி அழுதான். எப்பொழுதும் நிலை பெற்றிருக்கும் அறக்கடவுளாகிய தருமதேவதைகூட நடுங்கும்படி, தன் நாவினால், சில சபதங்களைச் செய்து உறுதி மொழிகள் பலவற்றைக் கூறத் தொடங்கினான்.

தனது தாயே தன்னை ஐயுறுகிறாளே என்ற ஆதங்கத்தால் புண்பட்ட மனம் குமுறிப் பொங்கியது. அந்தச் சந்தேகத்தைப் போக்கிவிட வேண்டும் என்று உறுதி செய்துகொண்டு, சில சபதமொழிகளைத் தன் வாய்மையும் சொல் தூய்மையும் பொருந்திய நாவினால் கூறத் தொடங்கினான் என்பதாம். தாயின் சொல்லைக் கேட்டுக் குமுறிய

Koviloor Digital Library

பரதனுக்குப் பொறியில் அகப்பட்டுத் தவிக்கும் சிங்கம் உவமை. அவன் உரைக்கப் போகின்ற வஞ்சினத்தின் கடுமை தோன்ற, நாள் உறு நல்லறம் நடுங்க என்று அறக்கடவுளே நடுக்கமுறும்படி என்றார். தன் உண்மை நிலையைக் கோசலைக்குப் புலப்படுத்திவிட வேண்டும் என்ற உறுதியில் பல சூளுரைகளைச் சொல்லலானான்.

98. அறம் கெடமுயன்றவன்; அருள் இல் நெஞ்சினன்;
பிறன் கடை நின்றவன்; பிறரைச் சீறினோன்;
மறம் கொடு மன்னுயிர் கொன்று! வாழ்ந்தவன்;
துறந்த மாதவர்க்கு அருந்துயரம் சூழ்ந்து உளோன். (2295)

(கடை-வாயில்; மறம்-உடல்வலிமை; மன்-நிலைபெற்ற; சூழ்தல்-எண்ணுதல்; அருள்-இரக்கம்)

பரதன், கோசலையை நோக்கி, ''நான் என் தாயின் வஞ்சகச் செயலை முன்னரே அறிந்திருக்கவில்லை. அவ்வாறு நான் அறிந்து தான் இந் நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்று நீ கருதினால், நான் நரகம் தான் சென்றடைவேன்'' என்று கூறிப் பரதன் வாயிலாகக் கம்பன் யார் யார் நரகம் புகுவர் என்று ஒரு பட்டியலிட்டுக் காட்டுகிறான்.

1. தரும காரியங்கள் சிதைந்து போகும்படி காரியங்கள் ஆற்ற முயற்சிப் பவன்; 2. இரக்கம் இல்லாத நெஞ்சம் உடையவன்; 3. காரணமேயில்லாமல் பிறரைக் கோபித்துச் சீறுபவன்; 4. உடல் வலிமையைக் கொண்டு நிலை பேறுற்ற உயிர்களைக் கொன்று, அவற்றை உண்டு வாழ்க்கை நடத்துப வன்; 5. பிறன் மனைவியை விரும்பி அவள் வீட்டு வாசலில் காத்துக் கிடப்பவன்; 6. அக, புறப் பற்றுக்களைநீக்கி வாழ்க்கை நடத்துகின்ற பெரிய தவம் இயற்றுபவர்களுக்குப் பெருந்துன்பம் விளைக்க எண்ணுபவன்; பாடல் முடியவில்லை. இது முதல் 20 பாடல்கள் ஒரு தொடர். 20வது பாடலில் முடிவு பெறும்.

பரதன் வாயிலாகக் கம்பன் பலவகை அறங்களை விளக்கிச் சொல்லு கின்றான். இப்பாடலில் அறன் வலியுறுத்தல், அருளுடைமை; பிறன் மனை நயவாமை; வெகுளாமை; கொல்லாமை; புலால் உண்ணாமை; பெரியோரைப் பிழையாமை என்ற வள்ளுவனின் குறட்பாக்கள் குறுகிய வடிவம் பெற்றுள்ளமை கண்டு உணர்க.

99. குரவரை, மகளிரை, வாளின் கொன்றுளோன்;
புரவலன் உறுபொருள் புனைவில் வாரினோன்;
விரவலர் வெரிந்நிடை விழிக்க மீண்டுளோன்;
இரவலர் அருநிதி எறிந்து வவ்வினோன்; (2296)

(குரவர்-ஐந்துவகைப்பட்ட குரவர்கள்; புரவலன்-காப்பாற்றும் தலைவன்; புனைவு-கற்பனை / புனைந்துரை; வஞ்சனை மொழி; விரவலர்-பகைவர்; வெரிந்-புறமுதுகு; மீளுதல்-தோற்று ஓடுதல்;

Koviloor Digital Library

எறிந்து-தாக்கி; வவ்வுதல்-கவர்ந்து கொள்ளுதல் / அபகரித்தல்; இரவலர்-யாசகர்)

குரவர் என்பவர் ஐந்து வகைப்படுவர். அவர்கள் தாய், தந்தை, ஆசான், அண்ணன், அரசன் என்பவர். ''அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தம்முன், நிகர்இல் குரவர் இவரைத் தேவரைப் போலத் தொழுது எழுக'' என்பது ஆசாரக்கோவை. 7. இவ்வைந்து பேர்களையோ, பெண்களையோ வாளால் அரிந்து கொன்றவன்; 8. தன்னைப் பாதுகாப்பவனது பெரும் செல்வத்தை வஞ்சனை மொழிகளால் வாரிக் கொள்ளுபவன்; 9. போரில் பகைவர்களுக்குப் புறமுதுகு காட்டித் திரும்பி வந்தவன்; 10. யாசகர்களின் அருமையாகச் சேர்த்துவைக்கப்பட்ட பொருட்செல்வத்தை, அவர்களைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டவன். யாசகர்கள் பல இடத்துக்கும் சென்று யாசித்துச் சிறிது சிறிதாகச் சேர்க்கப்பட்ட பொருள் என்பதால் அருநிதி எனப்பட்டது.

100. ''தழைத்த தண் துளவினோன் தலைவன் அல்லன்'' என்று
அழைத்தவன்; அறநெறி அந்தணாளரில்
பிழைத்தவன்; பிழைப்பிலா மறையைப் பேணலாது
இழைத்த வன்பொய் எனும் இழுதை நெஞ்சினோன்; (2297)

(தண்-குளிர்ச்சி; துளவு-துளசி மாலை; தலைவன்-பரம்பொருள்; அழைத்தல்-கூறுதல்; பிழை-தவறு; பேணல்-போற்றுதல்; இழைத்த-இட்டுக்கூறிய; இழுதை-பேய்; தழைத்த-செழித்த; பிழைப்பு-குற்றம்)

11. ''செழித்து வளர்ந்த குளிர்ச்சி பொருந்திய துளவ மாலையை அணிந்த திருமால் பரம்பொருள் அல்லன் என்று கூறுபவன்; 12. தரும ஒழுக்கங்களில் தவறாது நிலைத்து நிற்கும் அந்தணர்களை அவமதித்துத் தவறு செய்தவன்; 13. குற்றமற்ற வேதங்களைப் போற்றிப் பாதுகாக்காது அவை யாரோ இட்டுக்கட்டிய பொய்க்கதை என்று கூறும் பேய் மனம் கொண்டவன்.

அந்தணரைப் பிழைப்பது என்பது அவரை அவமதித்தல்; துன்புறுத்தல், தீங்கு செய்தல், கொல்லுதல் போன்றன. வேதம் யாராலும் உண்டாக்கப் பட்டதன்று. இறைவனே வாய்மொழியால் அருளியது. இதனை ''அபௌருஷேயம்'' என்பர் வடநூலார். அதைப் பொய் என்பவன் பேய் என்றார்.

101. ''தாய் பசி உழந்து, உயிர் தளரத் தான் தனிப்
பாய் பெரும் பாழ் வயிறு அளிக்கும் பாவியும்;
நாயகன் பட நடந்தவனும்; நண்ணும் அத்
தீஎரி நரகத்துக் கடிது செல்க யான்'' (2298)

(உழந்து-வருந்தி; பாய்-பரந்த; நாயகன்-அரசன்; நடந்தவன்-விட்டுச் சென்றவன்; கடிது-விரைந்து; அளிக்கும்-சோறிட்டுக் காக்கின்ற; நண்ணும்-அடையத்தக்க.)

Koviloor Digital Library

14. ''தன்னைப் பெற்ற தாய் பசியால் துடித்து வருந்தி, உயிர் தளர்ந்து போகவும், அவளுக்கு உணவு அளிக்காது, தான் தனியாகப் பரந்த பெரிய பாழான தன் வயிற்றுக்கு மட்டும் சோறு அளித்துத் தன்னைக் காத்துக் கொள்ளுபவன்; *15.* தன் தலைவன்-அரசன் போரில் இறந்துவிடும்படியும், அவனைத் தனியே அங்கு விட்டுவிட்டுக் களத்தை விட்டு நீங்கியவனுமாகிய இவர்கள் பதினைந்து பேரும் சென்று சேர்கின்ற, தீ எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கக்கூடிய நரகத்திற்கு நான் விரைந்து செல்வேனாக'' என்று சூளுரைத்தான் பரதன்.

''ஈன்றாள் பசி காண்பதே பெரும் பாவம்'' என்கிறான் வள்ளுவன்; அவள் அவ்வாறு பசித்துச் சோர்ந்திருப்பதைக் காண்பது மட்டுமல்லாமல் தான் தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளுபவன் பெரும்பாவி என்கிறான் கம்பன். ''தாயர் பசி கண்டும் நனி தன்பசி தணிக்கும் நாய் அனைய புல்லர் உறு நரகில் உறுவேன்'' என்பது வில்லிபாரதம். அதேபோல, தன் அரசனுக்கு முன்னே தான் மடிந்துபோதலும் அன்றி, அவன் இறந்துபடத் தான் மட்டும் உயிர் பிழைத்து ஓடுதல் பெரும்பாவம் என்பதாம். ''புரந்தார் கண் நீர்மல்கச் சாகில், பின் சாக்காடு இரந்து கோள் தக்கது உடைத்து'' என்பது குறள் 780. ''கைகேயி வரம் கேட்டது என்னால் முன்னரே அறியப்படாத ஒன்று; அவ்வாறு எனக்குத் தெரிந்துதான் என் அன்னை இவ்வாறு செய்தாள் என்று நீ கருதினால், இப்பொழுது சொன்ன இந்தப் பதினைந்துபேரும், இன்னும்நான்சொல்லப்போகும்எல்லோரும்சென்று அடைகின்ற நரகத்திற்கு நான் விரைந்து செல்வேனாகவும் என்று சூள் உரைக்கிறான் பரதன்.

102. ''தாளினில் அடைந்தவர் தம்மைத் தற்கு ஒரு
கோள்உற அஞ்சினன் கொடுத்த பேதையும்,
நாளினும் அறம் மறந்தவனும், நண்ணுறும்
மீளஅரு நரகிடைக் கடிது வீழ்க யான்'' (2299)

(தற்கு-தனக்கு; கோள்-துன்பம்; பேதை-அறிவலி; தாளினில் அடைந்தோர்-அடைக்கலம் புகுந்தவர்.)

16. ''தன் பாதங்களில் வந்து அடைக்கலம் என்று அடைந்தவர்களை அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதால் தனக்கு ஒரு தீங்கு வரும் என்று அஞ்சி, அவரைப் பகைவரிடத்தில் காட்டிக்கொடுக்கும் அறிவிலி; *17.* எந்த நாளிலும் அறம் செய்வதை மறந்துபோய் விடுபவன் ஆகிய இவர்கள் அடையத்தக்க, மீண்டு வருதற்கு அரியதாகிய நரகத்தில் யான் சீக்கிரம் சென்று அடைவேனாக''.

''தஞ்செனஅடைந்தவர்தமக்கு, இடர்நினைக்கும், நஞ்சனையபாதகர் நடக்கும் நெறி சேர்வேன்'' என்பது வில்லிபாரதம்.

103. ''பொய்க்கரி கூறினோன்; போருக்கு அஞ்சினோன்;
கைக்கொளும் அடைக்கலம் கரந்து வவ்வினோன்;

Koviloor Digital Library

எய்த்திடத்து இடர் செய்தோன்; என்று இன்னோர் புகும்
மெய்க்கொடு நரகு இடை விரைவில் வீழ்க யான்'' (2300)

(கரி-சான்று; கரந்து-மறைத்து; வவ்வுதல்-கவர்ந்து கொள்ளுதல்; எய்த்த-இளைத்திருந்த)

18. ''நீதிமன்றத்தில் பொய்ச்சாட்சி சொன்னவன்; *19.* போர் செய்வதாக வீரம் பேசிப் பின்னால் போருக்குச் செல்லாமல் பேடியாய் அஞ்சி ஒதுங்கியவன்; *20.* தன்னிடம் அடைக்கலமாகத் தந்த பொருளை அவனுக்குத் தெரியாமல் மறைத்துப் பின்னர் அதை அபகரித்துக் கொண்டவன்; *21.* ஒருவன் தளர்ந்திருந்த நிலையில் அவனுக்கு மேலும் துன்பம் விளைவிப்பவன்; என்று இவர்கள் எல்லாம் அடையத்தக்க உண்மையான, கொடுமையான நரகத்தில் விரைந்து வீழ்வேனாக!''.

பொய்ச்சாட்சி சொல்லுவது பெரும் பாவம். அவ்வாறு சொன்னால் என்ன ஆகும்? ''வேதாளம் சேருமே; வெள்ளெருக்கம் பூக்குமே; பாதாள மூலிகை படருமே; மூதேவி சென்றங்கு சேர்வளே; சேடன் குடிபுகுமே; மன்று ஓரம் சொன்னார் மனை'' என்பது ஒரு பழம்பாடல். இது இப்பிறப்பில் அடைகின்ற துன்பங்கள். அவர்கள் மறுபிறப்பில் நரகம் அடைவர் என்பது கருத்து. ''அறிகரி பொய்த்தல் ஆன்றோருக்கு இல்லை'' என்பது குறுந்தொகை.

104. ''அந்தணர் உறையுளை அனலி ஊட்டினோன்;
மைந்தரைக் கொன்று உளோன்; வழக்கில் பொய்த்துளோன்;
நிந்தனை தேவரை நிகழ்த்தினோன்; புகும்
வெந்துயர் நரகத்து வீழ்க யானுமே'' (2301)

(உறையுள்-தங்கும்வீடு; நிந்தனை-பழி)

22. ''வேதம் உணர்ந்த அந்தணர்கள் வசிக்கின்ற வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்துகிறவன்; *23.* சிறுவர்களை-தன் மைந்தனைக் கொன்று உயிர் வாழ்பவன்; *24.* பொய் வழக்குத் தொடருபவன் அல்லது வழக்கில் பொய்த் தீர்ப்புக் கூறுபவன்; *25.* தெய்வங்களைப் பழித்துக் கூறுபவன் ஆகிய இவர்கள் செல்லத்தக்க கொடிய துன்பத்தைத் தருகின்ற நரகத்தில் யானும் விரைவில் சேருவேனாக!''

பொதுவாக யாரும் வாழும் வீட்டினைக் கொளுத்துதலே பாவம். அதிலும் அந்தணர்கள் வாழ்கின்ற வீடுகளைக் கொளுத்துதல் மாபாவம். வேதத்தையும் கொளுத்தியது போலாகும் அது. சிறுவரைக் கொல்லுதல் ''சிசு ஹத்து'' எனப்படும். பொய்ச்சான்று கூறியவனைப் பற்றி முன்னரே கூறப்பட்டதால் இங்கே பொய் வழக்குத் தொடுத்தவனைப் பற்றிக் கூறியதாகக் கொள்ளப்பட்டது. வழக்கில் பொய்த்தீர்ப்பு வழங்கியவன் என்றும் கூறுவர். தெய்வங்களைப் பழிக்கும் நாத்திகர்கள் நரகம் அடைவர் என்பதாம்.

Koviloor Digital Library

105. ''கன்றுஉயிர் ஒய்ந்து உகக் கறந்து பால் உண்டோன்;
மன்றிடைப் பிறர் பொருள் மறைத்து வவ்வினோன்;
நன்றியை மறந்திடும் நயம்இல் நாவினோன்;
என்று இவர் உறும் நரகு என்னது ஆகவே'' (2302)

(ஒய்ந்து-இளைத்து; உகுதல்-விடுதல்; மன்று-நீதிமன்றம்; நயம்-நன்மை)

26. ''கன்று பால் இல்லாததால் களைத்துப் போய் உயிர்விடும் வரை பசுவின்பாலைக்கறந்து குடிப்பவன்; 27. நீதிமன்றத்தில் பொய் வழக்காடிப் பிறர் பொருளைத் தன் பொருள் என்று உறுதி செய்து வஞ்சனையால் அபகரித்தவன்; 28. பிறர் செய்த நன்றியை மறந்து நன்மை பேசாது தூற்றுதலை உடைய நாவினையுடையவன் என்று இவர்கள் சென்றடைகின்ற நரகம் எனக்கு உரியதாகுக''.

கன்று பாலின்றி இறந்துபோகும் அளவுக்குப் பால் கறத்தலும், அவ்வாறு கறந்ததை உண்பதும் பெரும் பாவம் ஆகும்; ''யார் உளரோ தன் கன்று சாகக் கறப்பர்?'' என்பது ஒரு பழம்பாடல். ''உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்'' என்பது குறள் 282. உள்ளத்தால் நினைப்பதே தீது என்றால், அதை மறைத்து அபகரித்துக் கொள்பவன் நரகு அடைவான் என்பது உறுதி. ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பது குறள் 110.

106. ''ஆறுதன் உடன்வரும் அம்சொல் மாதரை
ஊறுகொண்டு அலைக்கத் தன் உயிர் கொண்டு ஓடினோன்;
சோறு தன் அயல் உளோர் பசிக்கத் துய்த்துளோன்;
ஏறும் அக்கதியிடை யானும் ஏறவே'' (2303)

(ஆறு-வழி; ஊறு-புண் / இடையூறு; அலைக்க-வருத்த; அயல்-பக்கம்; ஏறும்-செல்லத்தக்க)

29. ''தான் செல்லும் வழியில் தன்னுடன் கூடவரும் அழகிய சொற்களைப் பேசும் இயல்புடைய மகளிரை வழிப்பறிக் கள்வர் துன்புறுத்தி வருத்த, அவர்களைக் காவாது, தான் மட்டும் தன் உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பித்து ஓடிப்போகின்றவன்; 30. தன் அருகில் உள்ளவர்கள் பசியால் துன்புற்றுக் கொண்டிருக்கத் தான் மட்டும் சோறு உண்டு முடித்தவன் ஆகிய இவர்கள் செல்லத்தக்க நரக கதியினை நானும் சென்று அடைவேனாக!''.

ஆறலைக் கள்வர் முதலியோர், அணிகலன்களைக் கவரும் பொருட்டோ, தீய இச்சையின் பொருட்டோ முதலில் பெண்களைத்தான் பற்றித் துன்புறுத்துவர். அவர்கள் நமக்குத் தொடர்புடையராயினும் அல்லரேனும் அப்போது அவர்களைக் காப்பாற்றுதலும், அது இயலாவிடின் கள்வர்களோடு போர் செய்து தன் உயிர் இழத்தலுமே ஒரு ஆண் மகனின்

Koviloor Digital Library

கடமை. அதைவிடுத்து, பெண்களைத்தவிக்கவிட்டுவிட்டுத்தான்மட்டும் உயிர் தப்பிப் போதல் தகாது. அவ்வாறு செல்பவன் நரகம் அடைவது உறுதி என்பதாம். முன்பு தாய் பசித்திருக்கத் தான் உண்டவன் நரகம் புகுவான் என்று கூறியவர் இப்பொழுது மற்ற யாரும் அயலில் உள்ளோரும் எவரேனும் பசித்திருக்கத் தான் மட்டும் உண்டு களித்திருப்பவன் நரகம் அடைவான் என்கிறார். ''விருந்து புறத்ததாத் தான் உண்டல், சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று'' என்பது குறள் 82. ''பசை கொண்டவன் நிற்கப் பாத்து உண்ணான் ஆயின் நசைகொன்றான் செல் உலகம்இல்'' என்பது ஒரு பழம்பாடல். ''மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்பது மணிமேகலை. கதிகள் நான்கு. அவை தேவகதி, மக்கள் கதி, விலங்கு கதி, நரக கதி என்பன. இவற்றுள் நரக கதி என்பது எல்லாவற்றிற்கும் கீழான கதி என்பது வெளிப்படை.

107. ''எஃகு எறி செருமுகத்து ஏற்ற தெவ்வர்க்கு
ஒஃகினன்; உயிர் வளர்த்து உண்ணும் ஆசையான்;
அஃகல் இல் அற நெறி ஆக்கியோன் பொருள்
வெஃகிய மன்னன்; வீழ்நரகின் வீழ்க யான்'' (2304)

(எஃகு-ஆயுதம் / படைக்கலம்; தெவ்வர்-பகைவர்; செருமுகம்-போர்க்களம்; ஒஃகுதல்-ஒல்குதல் / அடிபணிதல்; அஃகல் இல்-சுருங்குதல் இல்லாத; எறிதல்-தாக்குதல்; ஏற்ற-எதிர்த்த)

31. ''படைக்கலன்கள் கொண்டு தாக்குகின்ற போர்க்களத்தில் பகைவருடன் எதிர்த்துப் போர் செய்யாது பயந்து அடிபணிந்து வணங்கி நிற்பவன்; *32.* ஆடு, கோழி முதலிய உயிர்ப் பிராணிகளை வளர்த்து, அவற்றைக் கொன்று தின்னும் ஆசையுடையவன்; *33.* குடிமக்கள் குறைதல் இல்லாத நல்ல அறநெறியில் ஈட்டிய பொருளைக் கவர்ந்து கொண்டு வந்துவிட்ட மன்னவன் ஆகிய இவர்கள் விழுகின்ற நரகத்தில் யானும் சென்று வீழ்வேனாக''.

எஃகு என்பது படைக்கலன்கள் எல்லாவற்றையும் குறிக்கும் ஒரு பொதுப்பெயர். பிறஉயிர் இனங்களை வளர்ப்பது அறம்தான் என்றாலும் அவற்றைக் கொன்று உண்ண வேண்டும் நோக்கத்தால் வளர்த்தல் அறத்தின்பாற்பட்டதன்று. அது பாவச்செயலாகும். ''அலைப்பான் பிறிது உயிரை ஆக்கலும் குற்றம்'' என்பது நான்மணிக்கடிகை. இந்தப் பாடலில் ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது பாருங்கள். ஆயுத எழுத்துக்களையே எதுகையாக அமைத்திருக்கிறான் கம்பன்.

108. அழிவரும் அரசியல் எய்தி, ஆகும்என்று
இழிவரு சிறுதொழில் இயற்றி, ஆண்டு, தன்
வழி வரு தருமத்தை மறந்து, மற்று ஒரு
பழி வரு நெறி படர் பதகன் ஆக யான். (2305)

Koviloor Digital Library

(ஆகும்-பெருகும்; நெறி-வழி; படர்-செல்லுகின்ற; பதகன்-பாதகன் / பாவி; அழிவுஅரும்-கெடுதலில்லாத; இழி-தாழ்வான)

34. ''கெடுதல் இல்லாத அரசுரிமையைப் பிறர்தர, தான் பெற்று, செல்வம் பெருகுவதற்காக எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணி, அற்பமான புல்லிய கரியங்களைச் செய்து, அரசு புரிந்து தன் குலமுறையில் பாரம்பரியமாக வருகின்ற தருமநெறிகளை மறந்து, வேறு பழி தருகின்ற செயல்களில் செல்லுகின்ற பாவிபோல நான் ஆவேனாகவும்; அதனால் என்னை மக்கள் எல்லோரும் தூற்றட்டும்''

இழிவரு சிறுதொழில் என்பது, மக்களிடமிருந்து திரை வசூலிக்கக் கையாளும் அற்பமான காரியங்களைக் குறிக்கும். அவ்வாறு பழிவரு நெறிபடர்அரசன், இம்மையில் பழியும் மறுமையில் நரகமும் அடைவான். அதையே நானும் பெறக் கடவேனாக என்றான் என்பதாம்.

109. ''தஞ்சுஎன ஒதுங்கினர் தனது பார் உளோர்;
எஞ்சல் இல் மறுக்கினோடு இரியல் போய் உற
வஞ்சி சென்று இறுத்தவன் வாகை மீக்கொள
அஞ்சின மன்னவன் ஆக யானுமே''. (2306)

(தஞ்சு-புகலிடம் / அடைக்கலம்; பார்-நாடு; எஞ்சல்இல்-குறைதல் இல்லாத; மறுக்கம்-கலக்கம்; இரியல்-நிலைதடுமாறி ஓடிப்போதல்; இறுத்தல்-தங்குதல்; வாகை-வெற்றி / வெற்றி மாலையுமாம்; வஞ்சி-பகைமேற் செல்வோர் புனையும் மாலை)

35. ''பிற நாட்டிலிருந்து ஓடிவந்து தன்னையே அடைக்கலம் என்று புகலிடம் புகுந்தோரும், தனது நாட்டிலே உள்ள நிலையான பொதுமக்களும், குறைதல் இல்லாத வாணிபம் முதலியவற்றுக்காகத் தன் நாட்டில் தங்கிப்போக வந்த மக்களும், அஞ்சி நிலை கெட்டு ஓடிப்போகுமாறு, தனது பகையரசன் வஞ்சி மாலை சூடிக்கொண்டு தனது பாடி வீட்டில் வந்து தங்கியிருந்து போர் செய்து, வெற்றி பெற்றவனாக வாகை மாலை சூடி ஆரவாரிக்க, அவனுக்குப் பயந்து நடுங்கிப் போகும் ஒரு மன்னன் போல நானும் கோழையாகக் கடவேனாக''.

பொதுவாக ஒரு நாட்டில், அந்நாட்டிலேயே வாழும் மக்களும், மற்ற நாடுகளிலிருந்து தஞ்சம் என்று வந்து சேர்ந்தவர்களும், வாணிகம் முதலிய காரணங்களுக்காக வந்து போய்க் கொண்டிருப்பவர்களும் ஆகிய மூன்றுவகை மக்கள் வசிப்பது வழக்கம். பகை நாட்டு மன்னவன் வஞ்சி மாலை புனைந்து வந்து தங்கிப் பொருது வெற்றி கண்டு வெற்றிமாலை சூடிக்கொண்டு ஆரவாரிக்கும் போது இந்த அரசன் அதற்கு அஞ்சிப் போனால் அவனைப் பேடி என்றும், கோழை என்றும் பாவி என்றும் தூற்றுவது இயல்பு தானே? அவ்வாறு என்னை மக்கள் தூற்றட்டும் என்கிறான் பரதன். வஞ்சி என்பது புறத் திணைகளுள் ஒன்று. அது நிலம்பெறும் ஆசையால் பகைவர் மண்மேல் படையெடுத்துச்

Koviloor Digital Library

செல்லுவதை ஒழுக்கமாகக் கொண்டது. அவர்கள் வஞ்சிப் பூமாலை சூடுதல் மரபு. மன்னவனுக்குரிய ஆண்மையின்றித் தன் நாட்டில் வாழ்வோரும் தானும் கலங்கி அஞ்சி ஓடும் மன்னவன் நரகம் புகுதற்குரிய பாவியாவான் என்பது கருத்து.

110. ''கன்னியை அழிசெயக் கருதினோன்; குரு
பன்னியை நோக்கினோன்; பருகினோன் நறை;
பொன் இகழ் களவினில் பொருந்தினோன்; என
இன்னவர் உறுகதி என்னது ஆகவே''. (2307)

(கன்னி-மணமாகாத இளம்பெண்; பன்னி-பத்தினி / மனைவி; நறை-கள்; பொருந்துதல்-கைக்கொள்ளுதல்)

36. ''மணமாகாத இளம்பெண்ணைக் கற்பழிக்க எண்ணியவன்; *37.* தன் ஆசானின் மனைவியைத் தீய கருத்துடன் நோக்கியவன்; *38.* கள்பருகியவன்; *39.* எல்லோராலும் இகழப்படுகின்ற களவுத் தொழிலால் பொன்னும் பொருளும் கைக்கொண்டவன் என இவ்வாறு சொல்லப்பட்டவர்களுக்கு உண்டான நரக கதியே எனக்கும் வந்து சேர்வதாக!''.

கற்பழிக்க எண்ணுவதும், தவறான கருத்துடன் நோக்குதலுமே நரகம் புகும்பாவம்என்றால்கற்பழிப்பது என்பதற்கு என்னகிடைக்கும்என்பதை உணருங்கள். திருட்டுப் பொருள் சேர்ப்போர் இம்மையில் தண்டிக்கப்படுவர், மறுமையில் நரகம் புகுவர் என்பதாம். ''கட்டழற் காமத்தீயில் கன்னியைக் கலக்கினானும், குட்ட நோய் நரகந் தன்னுள் குளிப்பவர்'' என்பது சீவகசிந்தாமணி.

111. ''ஊண் அல உண்வழி நாயின் உண்டவன்
ஆண் அலன், பெண்அலன், ஆர்கொலாம்?'' என
நாணலன்; நரகம் உண்டு என்னும் நல்உரை
பேணலன், பிறர் பழி பிதற்றி ஆக யான்'' (2308)

(ஊண்-உணவு; ஊண்வழி-உண்ணும்போது; பேணுதல்-போற்றுதல்; பழி-குற்றம்; பிதற்றுதல்-தூற்றித்திரிதல்)

40. ''உண்ணத்தகாதனவற்றை உண்பவன் அல்லது மிகச்சுவை சிறந்த உணவை, உண்ணும்போது, நாயைப் போல எல்லோரையும் துரத்தி விட்டுத்தான் மட்டும் தனியே உண்பவன்; *41.* இவன் ஆண் தன்மை யற்றவன், ஆணைப்போலும் இல்லை; உருவில் பெண்போல்பவன் ஆனால் பெண்ணும் இல்லை என்று பிறர் நகைக்க அதுபற்றி வெட்கப் படாதவன்; *42.* தீயவை செய்தால் நரகம் என்ற ஒன்று இருக்கிறது என்று நல்லவர்களும், நன்னூல்களும் கூறுகின்ற வேதப்பிரமாணத்தைப் போற்றாதவன்; *43* எப்பொழுதும் பிறருடைய குற்றங்களையே பற்றிப் பேசியும் தூற்றியும் திரிபவன் ஆகிய இவர்கள் சேர்கின்ற நரகத்தில் நானும் சேர்வேனாக''.

Koviloor Digital Library

நாய் எப்போதும் தானே தனித்து உண்ண விழையும். எனவே, மற்ற நாய்களை விரட்டித்துரத்திவிடும். காக்கை கரவா கரைந்துண்ணும். பிறரைத் தவிர்த்துத் தனித்து உண்டவனும், பெண்வழிச் செல்வோனும், புறங்கூறுவோனும் நரகம் எய்துவர் என்பது கருத்து.

112. ''மறுஇல் தொல்குலங்களை மாசு இட்டு ஏற்றினோன்;
சிறுவிலை எளியவர் உணவு சிந்தினோன்;
நறியன அயலவர் நாவில் நீர்வர
உறுபதம் நுங்கிய ஒருவன் ஆக யான்'' (2309)

(மறு-குற்றம் / களங்கம்; தொல்-பழைமையான; இட்டு-கற்பித்து; நறியன-நறுமணமும் சுவையும் உடையன; நுங்கிய-விரைந்து விழுங்கிய; குலம்-குடிப்பிறப்பு; பதம்-உணவு; ஏற்றி-மிகுத்து; சிறுவிலை-சிறு விலைக்காலம் / பஞ்சகாலம்.)

44. ''களங்கமில்லாத பழமையான குடிப்பிறப்புள்ள குலங்களுக்குக் களங்கம் கற்பித்து மிகுத்துப் பேசுபவன்; *45.* பஞ்சகாலத்தில் ஏழைமக்கள் பெற்ற உணவைச் சிதறடிப்பவன் அல்லது வீணாக்குபவன்; *46.* நல்ல நறுமணமும் சுவையும் உள்ள உணவுப் பொருட்களை, அருகில் உள்ளோர் நாக்கில் உமிழ்நீர் சுரக்கும்படி அவர்களைப் பார்க்க வைத்துக் கொண்டே தான் மட்டும் விழுங்குகிற ஒருவன் ஆகிய இவர்கள் சேர்கின்ற நரகத்தில் யானும் சென்று சேர்வேனாக''

வி்லைமிகுந்து பொருள் குறைவது பஞ்சகாலத்தில். ஆதலால் சிறுவிலைக்காலம் என்று பஞ்சகாலத்தைக் கூறுவர். சிறுவிலை என்பது பஞ்ச காலத்து உயர்ந்தவிலை, குறைந்த அளவு உள்ள உணவு; வகைகளைக் குறிக்கும் பொதுவாகவே உணவுப் பொருளைச் சிந்தக் கூடாது. அதிலும் எளியவர் உணவுப் பொருளை வீணாக்கக்கூடாது; அதனினும் பஞ்சகாலத்தில் குறைவாகக் கிடைக்கின்ற விலை உயர்ந்த உணவுப்பொருள்களைச் சிதறடிப்பது மாபெரும் குற்றம் என்பதாம். முன்பாடலில் பிறரைத் துரத்திவிட்டுத் தான் மட்டும் உண்டவன் நாய் என்றான். இங்கு அயலாரை அருகிலேயே பார்க்க வைத்துக் கொண்டு விழுங்குபவனைப் பற்றிக் குறிப்பிடுகின்றான். விரைந்து விழுங்கினான் என்பதை ''நுங்கிய'' என்று கூறினான். ''மருந்தே ஆயினும் விருந்தோடு உண்'' என்பது கொன்றை வேந்தன்.

113. ''வில்லினும் வாளினும் விரிந்த ஆண்தொழில்
புல்லிடை உகுத்தனென் பொய்ம்மை யாக்கையைச்
சில்பகல் ஓம்புவான் செறுநர் சீறிய
இல்லிடை இடுபதம் ஏற்க, என் கையால்'' (2310)

(புல்லிடை-இழிந்த இடம் / தூய்மையற்ற இடம்; உகுத்தல்-சிந்துதல்; பகல்-நாள் / காலம்; ஓம்புதல்-பாதுகாக்க வேண்டி; செறுநர்-பகைவர்; இல்-சிறை; பதம்-உணவு)

Koviloor Digital Library

47. ''வில் தொழிலிலும், வாள் தொழிலிலும் பரந்த அனுபவம் பெற்ற ஆண்மைத் தொழிலுடையவன் தேவ அமிர்தத்தை தூய்மையற்ற இழிவான இடத்தில் சிந்திப் பயனற்றதாக்கி வீணாக்கிவிட்டு, நிலைபேறில்லாத அழியத்தக்க பொய்யான இந்த உடம்பைச் சிலகாலம் பாதுகாப்பதற்காக, பகைவர்கள் சீறிச் சிறையிட்டு அங்கே அவர்கள் தருகின்ற தகுதியற்ற உணவை ஏற்று உண்டு வாழ்பவர்கள் செல்லுகின்ற நரகத்தை நான் அடைவேனாக''

''ஊத்தைக் குழியில் அமுதம் பாய்வது போல்'' என்ற பெரியாழ்வார் திருமொழி ''புல்லிடை உகுத்தனென்'' எனக் கையாளப்பட்டிருக்கிறது. இங்கே சொல்லியது அரசர்க்குத் தகாத இழிசெயல். நிலையில்லாத பொய்மையான அழியத் தக்க உடலைப் பாதுகாக்கும் பொருட்டு, மானத்தைவிட்டுப் பகைவரின் சிறைக்கூடத்தில் தருகின்ற பிச்சைச்சோற்றைத் தின்று வாழ்தல் மிகக் கேவலமாகும். தான் பெரு வீரனாய் இருந்தும் அவ்வாறு செய்தல் அதனினும் மிகக் கேவலமாகும் என்றான் என்பதாம்.

114. ''ஏற்றவற்கு ஒருபொருள் உள்ளது, இன்று என்று
மாற்றலன், உதவலன், வரம்புஇல் பல்பகல்
ஆற்றினன் உழற்றும் ஓர் ஆதன் எய்தும் அக்
கூற்று உறு நரகின் ஓர் கூறு கொள்க யான்'' (2311)

(ஏற்றவற்கு-இரந்து வேண்டியவனுக்கு; ஆதன்-கண்ணோட்டம் இல்லாதவன் / அறிவிலி / வீணன் / மூடன்; கூறு-பகுதி; ஆற்றுதல்-காலம் கடத்தல்; மாற்றுதல்-மறத்தல்; வரம்புஇல்-அளவற்ற; பகல்-நாட்கள்; உழற்றுதல்-அலைக்கழித்தல்)

48. ''தன்னிடம் வந்து யாசித்தவனுக்கு, தன்னிடம் ஒரு பொருள் இருக்கிறது என்றால் அதைக் கொடுத்து உதவாமலும், தன்னிடம் அப்பொருள் இல்லையென்றால் அதை மறுத்துக் கூறாமலும், அவனை அளவற்ற பல நாட்கள் வரும்படிக் காலங்கடத்தி அலைக்கழிக்கின்ற ஒரு அறிவிலி அடைகின்ற, அந்த இயமனது ஆளுகைக்கு உட்பட்ட நரகத்தில் எனக்கு ஒரு பகுதியை நான் பெறுவேனாக!''

தன்னிடம் ஒரு பொருள் இருக்கிறது என்றால் அப்பொருளையே ஒருவன் யாசித்தான் என்றால் அதை மனமுவந்து அவனுக்குக் கொடுத்துவிட வேண்டும். அவன் யாசிக்கும் பொருள் தன்னிடம் இல்லையென்றால் தன்னிடம் இல்லையென்று மறுத்துக்கூறிவிட வேண்டும். அவ்வாறு கூறாமல் அவனைப் பல நாட்கள் வரச்சொல்லி அலைக்கழித்து இறுதியில் இல்லை என்று சொல்வது பெரும் பாவம் ஆகும். அத்தகையோர் மூடன் அறிவிலி என்கிறான். அவர்கள் எமனது ஆளுகைக்கு உட்பட்ட நரகத்திற்குச் செல்வர். அந்த நரகத்தின் ஒரு பகுதியை நானும் அடைவேனாக என்கிறான் பரதன். ''வாதவர் கோன் பின்னையென்றான்; வத்தவர் கோன் நாளையென்றான்; யாதவர் கோன்

Koviloor Digital Library

யாதொன்றும் இல்லை என்றான்; ஆதலால் வாதவர் கோன் பின்னையினும், வத்தவர்கோன் நாளையினும் யாதவர்கோன் இல்லை இனிது'' என்பது ஔவையார் பாடிய தமிழ் நாவலர் சரிதை. ''இசைவ கொடுப்பதூஉம், இல்என்பதூஉம் வசையன்று, வையத்து இயற்கை'' என்பது நாலடியார்.

115. ''பிணிக்கு உறும் முடை உடல் பேணிப் பேணலார்த்
துணிக் குறுவயிரவாள் தடக்கை தூக்கிப்போய்
மணிக் குறுநகை இள மங்கையர் கண்முன்
தணிக்குறு பகைஞரைத் தாழ்க என் தலை'' (2312)

(பிணி -நோய்; துணித்தல்-வெட்டுதல்; வயிர-கூரிய; மணி-முத்து; தணித்தல்-வென்று அடக்குதல்; தாழ்க-வணங்குவதாக; பேணலார்-பகைவர்; முடை-நாற்றம்)

49. ''நோய்க்கு இடம் உடையதாகிய இம்முடைநாற்றம் வீசும் உடலைப் பாதுகாப்பதற்காக, பகைவர்களை வெட்டி வீழ்த்துகின்ற கூர்மையான வாட்படையை என் பெரிய கைகளினால் தூக்கிக் கொண்டுபோய், முத்துப் போன்ற சிறிய பற்களையுடைய மகளிரின் கண்முன், என்னால் வென்று அடக்குதற்குரிய பகைவரை எனது தலை தாழ்ந்து வணங்கட்டும்''.

என்னால் அடக்கக்கூடிய பகைவன்தான். இருந்தாலும் இம்முடை நாற்றம் வீசுகின்ற உடலைப் பாதுகாக்க வேண்டுவதால், நான் என்னுடைய கூரிய வாளை என் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு போனாலும், அங்கே தோல்வியுற்று, அங்குள்ள மகளிரின் கண்கள் முன்னால் என்தலை பகைவர்களை வணங்குவதாக என்றான் பரதன் என்பதாம்.

நோய்களுக்கு இடமுள்ள உடல் என்பது வாதம், பித்தம் போன்ற நோய்களுக்கும் இடமுடைய உடம்பு என்பது பொருள். ஆடவர் முன்னால் பகைவரை வணங்குவதே கேவலம்; அதனினும் இளமங்கையர் கண்முன் பகைவரை வணங்குதல் மிக்க இழிவுடையதாகும். மகளிர் பார்த்துச் சிரிக்கப் பகைவரை வணங்கும் பாவம் எனக்கு உண்டாகுக என்றான் பரதன் என்பதாம்.

116. ''கரும்பு அலர் செந்நெல் அம் கழனிக் கான நாடு
அரும்பகை கவர்ந்து உண, ஆவி பேணினென்;
இரும்பு அலர் நெடுந்தளை ஈர்த்த காலொடும்
விரும்பலர் முகத்து எதிர்விழித்து நிற்க யான்'' (2313)

(அலர்-பரவிய; கவர்ந்து-கைப்பற்றி; உண-உண்ண / அனுபவிக்க; தளை-விலங்கு; விரும்பலர்-விரும்பாதவர் /பகைவர்)

50. ''கரும்பும் செந்நெல்லும் பரந்து விரிந்து கிடக்கின்ற அழகிய கழனிக் காடுகள் நிரம்பிய நாட்டினை, வெல்லுதற்கரிய பகைவன் வந்து

Koviloor Digital Library

கைப்பற்றிக் கொண்டு அனுபவிக்க, என்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, இரும்பால் ஆன பெரிய விலங்கினைப் பூட்டி இழுத்துக் கொண்டு செல்லுகின்ற காலோடு, பகைவர்களின் முகத்தின் எதிரில் ஒன்றும் செய்ய இயலாது விழித்துக் கொண்டு செயலற்று நிற்பேனாகவும்''

நாட்டின் நிலவளம் சிறப்பிக்க வேண்டிக் கரும்பலர் செந்நெல் அம் கழனிக் கான நாடு என்றான். தன் நாட்டைக் கவர்ந்த பகைவன் தன் காலில் பூட்டிய விலங்குகளோடு அவர்கள் முகத்தில் விழிப்பதே இழுக்கு. எனவே அத்தகைய இழிவை அடைவேனாக என்றான் பரதன் என்க. இதுகாறும் பரதன் ''நான் கைகேயியின் வஞ்சனை அறியாதவன். நான் அவளுக்கு உடந்தையாய் இருந்திருப்பேன் என்று நீ நினைத்தால், நான் இவ்வாறெல்லாம் ஆகுக'' என்று கோசலையிடம் சூளுரைத்தான் என்பதாம்.

117. ''தீஅனக் கொடியவள் செய்த செய்கையை
நாயினேன் உணரின் நல்நெறியில் நீங்கலாத்
தூயவர்க்கு இடர் இழைத்து உழலும் தோம்உடை
ஆயவர் வீழ்கதி அதனின் வீழ்க யான்'' (2314)

(உழல்தல்-திரிதல்; தோம்-குற்றம்)

''நெருப்புப்போன்ற சேர்ந்தாரைக்கொல்லியாகிய கொடியவளான என் தாய் கைகேயி செய்த வஞ்சனைச் செயல்களை, நாயைப் போன்ற வனான நான் உணர்ந்திருந்தால், நல்ல வழியில் நீங்காது அறம் செய்யும் தூய்மையான இல்லறத்தார்க்குத் துன்பம் செய்து திரியும் குற்றமுடைய வர்கள் வாழுகின்ற நரக கதியில் நானும் வீழ்வேனாக!''

தன்னைச் சார்ந்த தசரதன் உயிர் நீத்தற்குக் காரணமான கைகேயியைத் தன்னைச் சார்ந்தாரைக் கொல்லும் இயல்புடைய நெருப்பிற்கு உவமை கூறினார்.

118. எனைப்பல சூள்உரைத்து, ''என்னை ஈன்றவள்
விளைத்திறத்து அரசினை விரும்பின், அன்னை! கேள்;
அனைத்துள நரகு எனக்காகுக'' என்று அவன்
பனிக்கமலப் பதம் பணிந்து இறைஞ்சினான். (2315)

(பனி-குளிர்ந்த)

என்று இவ்வாறு மேற்கண்ட பல சூள் உரைகளையும் கூறிப் பரதன் கோசலையை நோக்கி, ''தாயே! கேட்பாயாக! என்னை ஈன்றெடுத்த அன்னை கைகேயி தனது வஞ்சனைச் செயல்களால் எனக்கு வாங்கித் தந்த அரசுரிமையை நான் விரும்பினேன் ஆனால், மேற்கூறிய அத்தனை பேரும் அடைகின்ற நரகம் எனக்கும் ஆகட்டும்'', என்று கோசலையின் குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர் போன்ற பாதங்களில் விழுந்து வணங்கினான்.

Koviloor Digital Library

நான் என் தாய் செய்த வஞ்சனைச் சூழ்ச்சிகளை அறியேன் என்றும், அவ்வாறு வஞ்சனையால் கிடைக்கின்ற அரசுரிமையைத் நான் ஏற்க இயலாது என்றும் தெளிவாகத் தெரிவித்ததுடன் இது போன்று நான் அவளுக்கு உடந்தையாய் இருப்பேன் என்று நீ எண்ணினால், இவ்வளவு பேரும் நண்ணும் நரகு எனக்கும் ஆகுக என்று சூள் உரைத்து முடித்தான். வால்மீகி, கம்பன், துளசிதாசர் ஆகிய மூவரும் பரதன் மூலமாக உலகிற்கு இவ்வறநெறிகளை அழகான முறையில் எடுத்துக்காட்டியது நோக்குதற் குரியது. ஒருவன் வாழ்க்கையில் செய்யக் கூடாதனவற்றைத் தொகுத்துக் கூறியிருக்கும் திறம் போற்றுதற்குரியது. இன்னா நாற்பது போல இவை இன்னா ஐம்பது எனக் கொள்ளல் தகும்.

119. கோசலை பரதனைத் தழுவிக் கொள்ளுதல்

தூய வாசகம் சொன்ன தோன்றலைத்
தீய கானகம் திருவின்நீங்கி முன்
போயினான் வரக் கண்ட பொம்மலாள்
ஆய காதலால், அழுது புல்லினாள். (2316)

(பொம்மல்-மகிழ்ச்சி; புல்லுதல்-தழுவுதல்)

இத்தகைய தூய்மையான சூளுரைகளைக் கூறிய சூரிய குலத் தோன்றலான பரதனை, முன்பு கொடிய கானகத்துள், தன் துணைவி சீதையோடும், அரசுச் செல்வத்தை விலக்கிவிட்டுப் போன இராமன் திரும்பி வருவது போலக் கண்டு பெருமகிழ்வுற்றவளாய், அவனிடம் கொண்ட பேரன்பினால் கண்ணீர் பெருக்கி அவனை இறுகத் தழுவினாள் கோசலை.

அவன் கூறிய சூளுரைகள் அவன் அகத்தூய்மையை வெளிப்படுத்தியதால் ''தூயவாசகம்'' என்றார். இராமனும் பரதனும் குணங்களால் கோசலைக்கு ஒன்றே போல்வர். எனவே கானகத்திருந்து திரும்பிவருகின்ற இராமனைப்போலப் பரதனைப்பேரன்பினோடு அழுது தழுவிக் கொண்டாள் என்பதாம். அழுதலும், தழுவிக் கொள்வதும் அன்பின் புறவெளிப்பாடு.

120. செம்மை நல்மனத்து அண்ணல் செய்கையும்,
அம்மை தீமையும் அறிதல் தேற்றினாள்;
கொம்மை வெம்முலை குமுறுபால் உக
விம்மிவிம்மி நின்று அழுது வீங்கினாள். (2317)

(செம்மை-நல்ல; தேற்றல்-தெளிதல்; கொம்மை-குவிந்த / பருத்த / திரண்ட; வெம்-வெப்பமுடைய / விரும்பத்தக்க; குமுறுதல்-சுரத்தல்; உக-சிந்த; அம்மை-தாய்)

நேர்மையான நல்ல மனத்தை உடைய ஆண்களிற் சிறந்தோனாகிய பரதனின் நற்செயல்களையும், அவன் தாயாகிய கைகேயியின் தீய

Koviloor Digital Library

செயல்களையும் இப்போது நன்கு அறிந்து உள்ளம் தெளிவுற்றவள் ஆனாள் கோசலை. தன் மகன் இராமன் திரும்பி வருவது போல் எண்ணியதால், தன் திரண்ட வெப்பமான கொங்கைகளிலிருந்து பீரிட்டுப் பொங்கியெழும் பால் சிந்த, தேம்பித் தேம்பி அழுது கொண்டு முகம் வீங்கும்படி நின்றாள்.

முன்பு தூயவாசகம் என்றவர் இப்போது செம்மை நல்மனம் என்றதனால் பரதன் உள்ளத்தால் நேர்மையும் சொற்களால் தூய்மையும் உடையவன் என்பதை நன்கு அறிந்து தெளிவு பெற்றாள் என்றார். பிரிந்த மகவை நீண்ட நாட்களுக்குப் பின் பார்க்கும் போது தாயின் கொங்கைகளில் தானே பால் சுரப்பது தாய்க்கு இயல்பு. முகம் வீங்கும் அளவுக்குத் தேம்பித் தேம்பி அழுது செயலற்று நின்றாள் என்பது அவளது தெளிந்த உணர்வினைக் குறிக்க என்க. ''இல்லா முலைப்பாலும், கண்ணீரும் ஏந்திழைபால் நல்லாய் உளவாமால்'' என்பது சிவஞானபோதம். முன்பு இலக்குவனை நோக்கிச் சுமித்திரை நின்றதையும் ''பால்சோர நின்றாள்'' என்று குறிப்பிட்டது இங்கு நினைவு கூரத்தகும்.

121. கோசலை பரதனைப் பாராட்டுதல்

''முன்னை நும்குல முதல் உளோர்கள் தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?
மன்னர்மன்னவா!'' என்று வாழ்த்தினாள்
உன்ன உன்ன நைந்து உருகி விம்முவாள். (2318)

(உன்ன-நினைக்க; நைந்து-கசிந்து; விம்முதல்-ஏங்குதல்; முன்னை-முற்பட்டது; நீர்மை-தன்மை; உருகி-கரைந்து; நிகர்க்கும்-ஒக்கும்)

பரதனது தூய்மையான சொற்களையும் செம்மையான செயல்களையும் நினைத்து நினைத்துப் பார்த்து உள்ளம் கசிந்து கரைந்து ஏங்குபவளான கோசலை, பரதனைப் பார்த்து, ''அரசர்க்கரசனே! தொன்று தொட்டு வருகின்ற உனது சூரிய குலத்தில் மனுமுதலாகத் தோன்றியவர்களில் எல்லாம் உன்னைப் போல நற்குணங்களும் நல்ல தன்மைகளும் பெற்று உன்னை ஒப்பானவர்கள் யார் இருக்கிறார்கள் ஒருவரும் இல்லை'' என்று கூறிப் பாராட்டி வாழ்த்தினாள்.

பரதன் முடிசூடத் தகுதியுள்ளவன் என்பதைக் குறிப்பால் உணர்த்தவே கோசலை பரதனை ''மன்னர் மன்னவ'' என்று அழைத்தாள் என்பதாம்.

122. தந்தைக்கு இறுதிக் கடன் செய்யச் சொல்லுதல்

''மறுஇல் மைந்தனே! வள்ளல் உந்தையார்
இறுதி எய்தி நாள்ஏழு இரண்டின;
சிறுவர் செய்கடன் செய்து தீர்த்தி!'' என்று
உறுவல் மேயினாள் உரையின் ஏவினாள். (2319)

Koviloor Digital Library

(உறுவல்-துன்பம்; மறு-குற்றம்; சிறுவர்-புதல்வர்; ஏவினாள்-கட்டளையிட்டாள்)

துன்பத்தால் அல்லலுறும் கோசலை, பரதனைப் பார்த்து, ''குற்றமற்ற பரதனே! மைந்த! வள்ளலாகிய உன்தந்தை இறந்து இன்றோடு பதினான்கு நாட்கள் கழிந்து விட்டன. எனவே புதல்வர்கள் ஆற்ற வேண்டிய இறுதிக் கடன்களை நிறைவேற்றி முடிப்பாயாக'' என்று சொல்லால் கூறினாள்.

முன் பாடலில் வாழ்த்தியவள் இப்போது குற்றமற்றவனே என்றும், மகனே என்றும் நற்சான்று பாராட்டுகின்றாள். தன் உயிரையே ஈந்ததால் உந்தை வள்ளல் என்றாள். கோசலை தன் சொல்லால்தான் கூறினாள். அதைச் செயல்படுத்த வேண்டுவது வசிட்டனின் கடமை என்பதால் ''உரையின் ஏவினாள்'' என்றார்.

123. பரதன் வசிட்டனோடு சென்று தசரதன் உடலைக் காணுதல்

அன்னை ஏவினாள் அடி இறைஞ்சினான்;
பொன்னின் வார்சடைப் புனிதனோடும் போய்த்
தன்னை நல்கியத் தருமம் நல்கினான்
பன்னு தொல் அறப் படிவம் நோக்கினான். (2320)

(வார்-நீண்ட; நல்குதல்-கொடுத்தல் / பாதுகாத்தல்; பன்னு-புகழ்தற் குரிய / சொல்லுதற்குரிய; படிவம்-திருஉருவம்)

இவ்வாறு ஈமக்கடன்களைச் செய்ய ஏவிய தாயின் திருவடிகளை வணங்கித் தொழுதான் பரதன். பின்னர் அழகிய பொன் போன்ற சிவந்த நீண்ட சடையினைக் கொண்ட தூயவனான வசிட்ட முனிவனோடும் போய், தன் உயிரையே கொடுத்து வாய்மையைக் காப்பாற்றிய தன் தந்தை தசரதனது, புகழ்தற்குரிய பழமையான அறத்தின் திருஉருவத்தைக் கூர்ந்து பார்த்தான்.

எண்ணெய் / தைலக் கடாரக்காப்பிலிருந்து எடுத்து இப்பொழுது உடல் கட்டிலில் கிடத்தியிருந்ததாகவும், பரதன் அதனைக் கண்ணுற்றான் என்றும் வான்மீகம் கூறும்.

124. பரதன் புலம்புதல்

மண்ணின் மேல்விழுந்து அலறி மாழ்குவான்;
அண்ணல், ஆழியான், அவனி காவலான்,
எண்ணெய் உண்ட பொன் எழில்கொள் மேனியைக்
கண்ண நீரினால் கழுவி ஆட்டினான். (2321)

(மாழ்குதல்-கலங்குதல்; மண்-தரை; அவனி-பூமி; ஆட்டுதல்-மூழ்குவித்தல்; கழுவி-தூய்மை செய்து)

Koviloor Digital Library

தந்தையின் மேனியைக் கண்டவுடன் பரதன் தரையில் விழுந்து வாய்விட்டு அலறிக் கலங்கிப் பதைபதைத்தான். பெருமைக் குரியவனும், ஆணைச் சக்கரத்தைச் செலுத்தியவனும், இப்பூமியையே காத்தவனு மாகிய தன் தந்தை தசரதனது உடல் எண்ணெயில் மூழ்கப் பெற்றதனால் பொன்போன்று அழகு மிகப் பெற்ற மேனியைத் தனது கண்களிலிருந்து பெருகும் கண்ணீரினால் தூய்மை செய்து மூழ்க வைத்தான்.

எண்ணெய்க் கடாரத்துள் இட்டு வைத்திருந்ததனால் தசரதனது மேனி எண்ணெயை உண்டு பொன்போல் எழில் மிக்கதாய் விளங்கிற்று என்று வான்மீகமும் கூறும். நீராட்டினான் என்பது கண்ணீர்ப் பெருக்கின் மிகுதியை உணர்த்திற்று. எண்ணெயில் மூழ்கிக் கிடந்த மேனி இப்போது பரதனின் கண்ணீரில் மூழ்கிற்று என்றது ஒரு நயம். எண்ணெய் இட்ட திருமேனியைக் கண்ணீர் இட்டுக் கழுவியது போல் இருந்தது என்பதாம்.

125. தசரதன் மேனியை விமானத்தில் ஏற்றுதல்

பற்றி, அவ்வயின் பரிவின் வாங்கினார்;
சுற்றும் நான்மறைத் துறைசெய் கேள்வியார்;
கொற்ற மண்கணை குமுற, மன்னனை
''மற்றுஓர் பொன்னின் மாமானம் ஏற்றினார். (2322)

(துறை-வழி; வயின்-இடம்; பரிவின்-இரக்கத்தோடு; கணை-முரசம் / குமுற-முழங்க; மானம்-விமானம்; மண்-மார்ச்சனை; பற்றி-தாங்கி; மண்கணை-குடமுழவு)

நான்கு வேதங்களின் நெறிமுறைகளையும் முற்றும் கேட்டுணர்ந்த அந்தணர்கள், எண்ணெய்க் கடாரத்திலிருந்த மன்னனது திருமேனியை அன்புடன் சுற்றித் தாங்கி, வெற்றியையுடைய அரசனின் மார்ச்சனை பொருந்திய முரசம் ஒலிக்க, வேறு ஒரு பொன்னலாகிய சிறந்த விமானத்தில் ஏற்றினார்கள்.

வேதம் எழுதாக் கிளவி. எனவே கற்றார் என்னாது கேள்வியார் என்றார்; இந்நிகழ்ச்சிகள் வேதியர் செய்ய வேண்டுவன ஆதலின் அந்தணர்கள் செய்ததாகவே குறித்தார்.

126. தசரதன் மேனியை யானையின் மேல் வைத்துப் போதல்

கரைசெய் வேலைபோல், நகரி கையெடுத்து,
உரைசெய் பூசல்இட்டு, உயிர் துளங்குற,
அரசவேலை சூழ்ந்து, அழுது, கைதொழப்
புரசை யானையில் கொண்டு போயினார். (2323)

(வேலை-கடல்; நகரி-நகரத்தார்; எடுத்து-உயர்த்தி; பூசல்-ஆரவாரம்; துளங்குதல்-நடுங்குதல்; புரசை-கழுத்திலிடும் கயிறு)

Koviloor Digital Library

நகர மக்கள் கரையை உடைய கடலைப் போலத் தம் கைகளை உயரத் தூக்கி, தசரதனது பெருமைகளைப் பற்றிப் பேசி ஆரவாரம் செய்து கொண்டு, உயிர் நடுக்கம் உற வரவும், சிற்றரசர்கள் கூட்டம் கடலைப் போலசூழ்ந்து அழுது கொண்டும், கைகூப்பித் தொழுதும் தொடர்ந்து சுற்றி வரவும், கழுத்திலிடுகின்ற கயிறினையுடைய யானையின் மேல் அவ்விமானத்தை வைத்துக் கொண்டு சென்றனர்.

127. அமைச்சர்களும் நண்பர்களும் சுற்றிவருதல்

உந்துபொன் தடந் தேர்வலானொடும்
மந்திரப் பெருந் தலைவர், மற்றுளோர்;
தந்திரத் தனித் தலைவர், நண்பிளோர்
வந்து சுற்றுமுற்று அழுது மாழ்கினார். (2324)

(உந்து-செலுத்துகின்ற; தந்திரம்-சேனை; மாழ்குதல்-வருந்துதல்)

பொன்னாலாகிய பெரிய தேரினைச் செலுத்துவதில் வல்லவனான தேர்ச்சாரதி சுமந்திரனோடு அமைச்சர் பெருமக்களும், மற்றுமுள்ள எண்பேராயத்தாரும், ஒப்பற்ற சேனைத்தலைவர்களும், நண்பர்களும் கூடி வந்து முற்றிலும் சுற்றிநின்று அழுது கலங்கினார்கள்.

சுமந்திரன் தேர்ச்சாரதி என்பதோடு நல் அமைச்சனுமானவான். எனவே முதலில் கூறப்பட்டான். மற்றுளோர் என்பது எண்பேராயத்தாரைக் குறிக்கும். அவர்கள் ''கரணத்து இயலவர், கருமவாதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், நளி படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் என்று இனையர் எண்பேராயம் என்ப'' என்பதனால் அறியலாம்.

128. வாத்தியங்களின் அழுகை ஒலி

சங்கு பேரியும், தழுவு சின்னமும்
எங்கும் எங்கும் நின்று இரங்கி ஏங்குவ;
மங்குல் தோய்நகர் மகளிராம் எனப்
பொங்கு கண்புடைத்து அழுவ போன்றவே. (2325)

(பேரி-முரசு / சாப்பறை; ஏங்குதல்-முழங்குதல்; மங்குல்-மேகம்; தோய்தல்-தவழுதல் / படிதல்; புடைத்து-மோதிக்கொண்டு; சின்னம்-காளம்; கண்-விழி / அடிக்குமிடம்)

சங்குகளும், முரசு, சாப்பறை முதலியனவும் அவற்றைத் தழுவி ஒலிக்கின்ற ஊது கருவியாகிய காளமும் எல்லா இடங்களிலும் இரக்கக் குறிப்போடு ஒலிப்பனவாயின. அவற்றின் ஒலி, மேகங்கள் படிகின்ற மாளிகைகளை உடைய அயோத்தி நகர மகளிரே, தம் கண்ணீர் பெருக் கெடுக்கும் கண்களில் அடித்துக் கொண்டு அழுவதைப் போலத் தோன்றின.

சின்னம் என்பது ஊது கருவி; காளம். இரட்டையாக ஊதப்படுவது. பேரி இங்கு சாப்பறையைக் குறிக்கும்; கண் என்ற சொல் மகளிர் கண்களில்

Koviloor Digital Library

அடித்துக் கொண்டு அழுவதைக் குறிக்கும், முரசில் குணில் கொண்டு அடிக்கப்படும் இடமும் கண் என்றே அழைக்கப்படும். எனவே மகளிரும் முரசும் அழுதன என்பதாம்.

129. சரயு நதியை அடைதல்

மாவும், யானையும், வயங்கு தேர்களும்,
கோவும், நான்மறைக் குழுவும், முன்செலத்
தேவி மாரோடும் கொண்டு, தெண்திரை
தாவு வார்புனல் சரயு எய்தினார். (2326)

(மா-குதிரை; வயங்கு-விளங்குகின்ற; கோ-பரதன் / அரசர் கூட்டம்; தெண்-தெள்ளிய / தெளிவான; வார்-பெரிய)

குதிரைப் படையும், யானைப் படையும், அழகாக விளங்குகின்ற தேர்ப்படைகளும், பரதனும், தசரதனின் அறுபதினாயிரம் உரிமை மகளிரும், விமானம் ஏற்றிய யானையைப் பின்தொடர்ந்து கொண்டு வந்து, தெளிவான அலைகளை வீசுகின்ற நீண்ட, மிக்க நீரையுடைய சரயு நதிக்கரையை அடைந்தனர்.

கோ என்பது பரதனைத் தனியாகவும், மன்னர்களைக் கூட்டத்துடனும் குறிக்கும். தேவிமார் இங்கு இப்பொழுது வந்தது, முன்பு வசிட்டன் ''தேவி மாரை இவற்கு உரிமை செய்யும் நாளில் செந்தழலில் ஆவிநீத்திர் என இருத்தி'' என்று கூறியதால் என்க. நீர்க்கடன்கள் நதிக்கரையில் இயற்றுதல் சாலப் பொருந்துவதாகும்.

130. பரதனை ஈமக்கடனாற்ற அந்தணர் அழைத்தல்

எய்தி, நூலுளார் மொழிந்த யாவையும்
செய்து, தீக்கலம் திருத்திச் செல்வனை,
வெய்தின் ஏற்றினார், ''வீர! நுந்தை பால்
பொய்இல் மாக்கடன் கழித்தி போந்து'' என்றார். (2327)

(தீக்கலம்-ஈமப்பள்ளி; வெய்தின்-விரைவாக / துக்கத்துடன்; செல்வன்-தசரதன்; போந்து-வந்து; கழித்தல்-ஆற்றுதல்; பொய்இல்-வழுவில்லாத / வேதவழி பிறழாத)

சரயு நதிக் கரையை அடைந்து, அந்தணர்கள்-ஸ்மிருதி நூல்களில் தேர்ந்தவர்கள் கூறிய முறைப்படி எல்லாவற்றையும் நிறைவேற்றி, ஈமப்பள்ளியைச் செவ்வனே அமைத்துத் தசரதன் உடலை விரைவாக, மிக்க துக்கத்துடன் அப்பள்ளியில் ஏற்றி வைத்துப் பின் பரதனை நோக்கி, ''வீரனே! வந்து உன் தந்தைக்குச் செய்ய வேண்டிய வழுவில்லாததும் வேதவழியில் பிறழாததுமான சிறந்த ஈமக்கடன்களைச் செய்து நிறைவேற்றுவாயாக'' என்றனர்.

Koviloor Digital Library

ஸ்மிருதி நூல்கள்தான் மனிதன் பிறப்பு இறப்புச் சடங்குகள் பற்றிக் கூறுவன. எனவே அவற்றைக் கற்றுணர்ந்தவர்களையே இங்கே குறிப்பிட்டார் என்க. ''தீத்தலம்'' என்ற சொல் ஒரு அற்புதமான சொல்லாட்சி. ஈமப்பள்ளி என்பதைக் குறிக்கும். தீக்கலம் என்று கொண்டு தீச்சட்டி என்றும், தீயிடுவதற்கு உரியதாய் விறகு அடுக்கிய ஈமப்பள்ளி என்றும் பொருள் கூறுவார் உண்டு; தந்தையை நல்லுலகுக்கு அடைவிக்கும் கடமை என்று இதனை உணர்ந்து செய்ய வேண்டும் என்பது கருத்து. இறந்து பதினான்கு நாட்கள் ஆயிற்று எனவே வெய்தின் ஏற்றினார் என்றார். ''பொய்இல் மாக்கடன்'' என்ற சொற்றொடர் கருத்தாழம் மிக்கது. தந்தையார்க்குச் செய்யும் ஈமக்கடன்களைக் கடனே என்று செய்தல் கூடாது. வேதநெறி பிறழாது, வழுவில்லாது செய்ய வேண்டும் என்பதையே ''பொய்இல்'' என்றும் ''மாக்கடன்'' என்றும் இரு அடைமொழி கொடுத்துக் கூறுகிறார் என்க.

131. பரதனை வசிட்டன் தடுத்தல்

என்னும் வேலையில், எழுந்த வீரனை,
''அன்னை தீமையால் அரசன், நின்னையும்
துன்னு துன்பத்தால் துறந்து போயினான்
முன்னரே'' என முனிவன் கூறினான். (2328)

(வேலை-வேளை / பொழுது; துன்னு-நெருங்கிய)

என்று அந்தணர்கள் பரதனைத் தசரதனுக்கு ஈமக்கடன்கள் செய்ய அழைத்த பொழுது, பரதன் அதன் பொருட்டு எழுந்தான்; எழுந்த அவனை வசிட்ட முனிவன், ''உன் அன்னை கைகேயி செய்த தீய செயல்களால், தசரதன் உயிருடன் இருந்த பொழுதே அவளோடு உன்னையும், இறுதிக் கடன் செய்வதற்குத் தக்கவன் அல்லன் என்று நீக்கி மிக்க துன்பத்தால் உயிர் நீத்தான்'' என்று பரதனை வசிட்டன் தடுத்துக் கூறினான்.

இங்கே வசிட்டன் பரதன் மனம் புண்படாதவாறு கூறுவது நோக்கத் தக்கது. நீ குற்றம் உடையவன் அல்லன். உன் தாய் செய்த குற்றத்தால் அவளுடன் சேர்த்து உன்னையும் விலக்கி வைத்து இறந்து போனான் என்றார். இது தசரதன் வசிட்டனைச் சான்றாக வைத்துக் கூறிய சொற்கள். வசிட்டனுக்கு மட்டுமே தெரிந்த செய்தி எனவே அவன் தடுக்க வேண்டிய கடப்பாடு உடையவன் ஆனான் என்பதாம். ஆனால் வான்மீகி, வசிட்ட முனிவர் ஈமக்கடன்களைச் செய்ய வொட்டாது தடுத்தார் என்று கூறவில்லை. மேலும் இச்செய்தியைத் தசரதன் கைகேயியின் முன்னிலையில் கூறியதாகவும் கூறுகிறார்.

132. பரதன் துயரநிலை [5 பாடல்கள்]

''துறந்து போயினான் நுந்தை, தோன்றல்! நீ
பிறந்து பேர்அறம் பிழைத்தது என்ற போது

Koviloor Digital Library

இறந்து போயினான்; இருந்தது ஆண்டு அது
மறந்து, வேறுஒரு மைந்தனாம் கொலாம்!'' (2329)

(ஆண்டு-அங்கு; பிழைத்தது-பிழைபட்டது)

வசிட்டன் பரதனை நோக்கி, ''மனுகுலத்துத் தோன்றியவனே! நின் தந்தை, நீ பிறந்ததால் ''மூத்தவர்க்கு உரித்து அரசு'' என்னும் பெரிய தருமநெறி தவறிவிட்டது; எனவே நீ என் மகனும் அல்லன்; என் ஈமக்கடன்களைச் செய்யும் உரிமையும் உனக்கு இல்லை'' என்று கூறி, உன்னைத் துறந்து இறந்தும் போய் விட்டான். இவ்வாறு வசிட்டன் சொல்லக் கேட்ட பரதன் உயிர் ஒடுங்கி, இறந்தவனைப் போல உணர்ச்சி யற்று மூர்ச்சையுற்றுக்காணப்பட்டான். அப்பொழுது பரதன்நிலைஎப்படி இருந்தது என்றால், இவற்றையெல்லாம் மறந்த ஏதோ வேறு ஓர் குடிமகன் நின்று கொண்டிருப்பதைப் போல இருந்தான் என்பதாம்.

அவன் தசரதன் மைந்தன் பரதன் போலத் தோற்றமளிக்கவில்லை. அயோத்தி நகர மக்களுள் ஒருவனாகத் தான் தோற்றினான் என்பதாம். துன்பம் மிகுதியால் முகம் வேறுபட்டு வேறு ஒரு மைந்தன் போலவே பரதன் காட்சியளித்தான் என்க. அவனைக் காண்பவர், இவன் வேறொரு அயலான் போலும் எனக் கருதுமாறு நிலைமாறிக் காணப்பட்டான் என்பதாம்.

133. என்று கொண்டு மாதவன் இயம்பலும்,
நின்று நின்றுதான் நெடிது உயிர்த்தனன்;
''நன்று நன்று'' எனா நகை முகிழ்த்தனன்;
குன்று குன்றுறக் குவவு தோளினான். (2330)

(நின்று-தயங்கி; முகிழ்த்தல்-அரும்புதல் / மொக்கு விட்டு மலர்தல்)

என்று வசிட்டமாமுனிவன் கூறித் தயங்கித் தயங்கித் தானும் பெரு மூச்செறிந்தான். அதனைக் கேட்டதும் மலையை வெல்லும்படியான தோள்களையுடைய பரதனும் பெருமூச்செறிந்து, தந்தைக்கு ஈமக்கடன் இயற்ற இயலா நிலை குறித்து வருந்தி ''நல்லது, நல்லது'' என்று இகழ்ச்சியால் புன்முறுவல் அரும்பினான்.

நன்று நன்று என்ற அடுக்கு இகழ்ச்சி பற்றியது.

134. இடிக்கண் வாள்அரா இடைவதாம் எனாப்
படிக்கண் வீழ்ந்து அகம் பதைக்கும் நெஞ்சினான்,
தடுக்கலாகலாத் துயரம் தன் உளே
துடிக்க, விம்மி நின்று அழுது சொல்லுவான். (2331)

(வாள்-கொடிய; அரா-பாம்பு; இடைவது-நடுங்குவது / நிலை கெடுவது; படி-தரை; தடுக்கல்-ஆற்றுதல்.)

Koviloor Digital Library

இடி இடிக்கும் போது, கொடிய பாம்பு நிலை கெட்டு நடுங்குவது போல், முனிவன்சொற்கேட்ட பரதன், பூமியின் மேல் விழுந்து துடிக்கலானான்; யாராலும் ஆற்ற இயலாத துயரம் தன் மனத்துக்குள்ளே கிடந்து அலைமோத, தேம்பி நின்று வாய் விட்டு அரற்றி அழுது, பின்வருமாறு சொல்லலானான்.

இடியின் ஓசைக்குப் பாம்பு அஞ்சி நடுங்கிச் சாகும். பாம்புக்குக் கண் தான் செவி. எனவே இதற்குக் கட்செவி என்ற பெயரும் உண்டு. ''இடியேறுண்ட நாகம் போல'' என்பது பெருங்கதை. உள்ளத்திலே கொண்ட துன்பம் அதை வெளிப்படுத்தி ஆற்றிக் கொள்ளாவிட்டால் மேலும் மிகும் என்பதாம். அதனை உள்ளடக்கி வைத்தல் இயலாது. யாரிடமேனும் சொல்லி ஆற்றிக் கொள்ளாவிட்டால் அது தணியாது. எனவே பரதன் அழுது சொல்லத் தொடங்குகிறான்.

135. ''உரைசெய் மன்னர் மற்று உன்னில், என்னில் யார்?
இரவிதன் குலத்து எந்தை முந்தையோர்
பிரத பூசனைக்கு உரிய பேறு இலேன்;
அரசு செய்யவோ ஆவது ஆயினேன்?'' (2332)

(பிரத பூசனை-பிரேத பூசனை / ஈமச்சடங்கு / இறுதிக்கடன்; உரை-புகழ்; உன்னில்-நினைக்கும் இடத்து; பிரதம்-பிரேதம் / பிணம்; இரவி-சூரியன்)

''என்தந்தையின்இறந்த உடலுக்கு இறுதிக்கடன்களைச்செய்யும்பேறு பெற்றிலாத நான், அவனுடைய அரசினை மட்டும் ஆட்சி செய்யும் உரிமையைப் பெறுபவன் ஆவேனோ? எண்ணிப் பார்த்தால் புகழ்பெற்ற சூரிய குல மன்னர்களில் என்னைப் போல இந்தப் பேறும் புகழும் பெற்றவர் யார் இருக்க முடியும்? ஒருவரும் இல்லை''.

இது இகழ்ச்சிக் குறிப்பு; ''பொதுவாக யார் ஈமக்கடன்கள் செய்கிறார் களோஅவர்களுக்குச்சொத்திலும்அரசிலும்உரிமை உண்டு என்பது நியதி. ஆனால் இங்கே பரதனுக்கு இறுதிக் கடன் செய்யும் பேறு மட்டும் கிடைக்கவில்லை. ஆனால் இப்பூமியை அரசு செய்யும் உரிமை மட்டும் கிடைத்திருக்கிறது. என்னே வியப்பு?'' என்று தன்னைத் தானே இகழ்ந்து நொந்து கூறுகிறான் பரதன். முன்னோர்க்குக் கடன் செய்யும் தகுதியிழந்த நான், அவர்களது உரிமையைப் பெறுவது எங்ஙனம் பொருந்தும்?'' என்பது கருத்து.

136. ''பூவில் நான்முகன் புதல்வன் ஆதியாம்
தாஇல் மன்னர், தம்தரும நீதியால்
தேவர் ஆயினார்; சிறுவன் ஆகியே
ஆவ! நான் பிறந்து அவத்தன் ஆனவா!'' (2333)

Koviloor Digital Library

(பூ-தாமரை மலர்; நான்முகன்-பிரமன்; புதல்வன்-காசிபன்; தாஇல்-குற்றமற்ற; சிறுவன்-புதல்வன்; அவத்தன்-பயனற்றவன் / வீணன்; ஆவ-ஐயோ! / இரக்கக்குறிப்பு)

''தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனின் புதல்வனாகிய வசிட்ட முனிவனே! சூரிய குலத்து உதித்த குற்றமற்ற முன்னோர்கள், மன்னர்கள் எல்லாம் தத்தம் தரும நெறிகளால் தேவர்கள் ஆனார்கள்; ஆனால் நானோ அவர்களுக்குப் புதல்வனாகப் பிறந்து சிறுவனாய் இருக்கும் இளமைப் பருவத்திலேயே பயனற்றவனாகப் போய் விட்டேனே! ஐயோ!'' என்று புலம்பினான் பரதன்.

அவனுடைய முன்னோர்களெல்லாம் மனிதப் பிறப்பில் இருக்கும் போதே தேவர்களாய் மதிக்கப்பட்டனர். ஆனால் நான் மட்டும் வீணனாய்ப் பயனற்றுப் போய் விட்டேனே என்று இரங்கினான் என்பதாம். அவர்கள் மக்கள் வடிவத்திலிருந்த போதே தேவர்கள் எனப்பட்டனர். ஆனால் நான் நரகன் ஆனேனே என்றான் என்றலும் ஒன்று.

137. ''துன்னுதாள் வளம் சுமந்த தாழையில்
பன்னு வான்குலைப் பதடி ஆயினேன்;
என்னை! என்னையே ஈன்று காத்தஎன்
அன்னையர் எனக்கு அழகு செய்தவா!'' (2334)

(துன்னு-நெருங்கிய; சுமந்த-தாங்கிய; தாள்-அடிப்பாகம்; தாழை-தென்னை; பன்னு-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற; வான்-உயர்ந்த; பதடி-உள்ளீடு இல்லாத காய்)

''நெருங்கிய அடிப்பாகத்தையும், வளம் தங்குதலையும் உடைய தென்னை மரத்தில், எல்லோராலும் புகழ்ந்து கூறப்படுகின்ற உயர்ந்த தென்னங்குலைகளுக்குள், நான் ஒரு உள்ளீடற்ற தேங்காயாக ஆகிவிட்டேன்; என்னைப் பெற்றெடுத்து வளர்த்துக் காப்பாற்றிய என் தாய் எனக்கு எவ்வாறு அழகு செய்திருக்கிறாள், கண்டீர்களா?'' என்று இகழ்ந்தான் பரதன்.

''வளம் மிக்க தென்னை மரத்தில் காய்க்கும் உயர்ந்த தேங்காய்களுக்குள் பயனற்ற உள்ளீடற்ற-தேரை ஏறிய காய்களும் இருக்கும்; அது போலப் பல உயர்ந்த, தேவர்கள் என மதிக்கப் பெறும் சூரிய குலமன்னர்களின் நடுவில், பதடியாக நானும் வந்து பிறப்பதற்கு என் அன்னை என்ன வெல்லாம் செய்திருக்கிறாள் பாருங்கள்'' என்று தன் அன்னையை இகழ்கிறான் பரதன். தன்னைத் தானே நொந்தும் கொள்கிறான். தேய்காய் பதடியாகப் போய் விடுவதற்குத் தேரை என்னும் நோய் தான் காரணமே அன்றி அக்காயின் மேல் தவறில்லை. அது போலப் பரதன் ஈமக்கடன் ஆற்றுவதற்கு உரிமை யில்லாது போனதற்கு அவன் காரணமல்ல, அவனுடைய தாயின் வஞ்சனைச் செயல்தான் காரணம் என்பதாம். என்

Koviloor Digital Library

தாய் என்னை அரசனாக்கிச் சிறப்பிக்கக் கருதிய வழி எத்தகைய அழகானது என்று இகழ்ந்தான்.

சூரிய குலம்-தென்னை மரம்; முன்னோர்கள்-குலைத்தேங்காய்கள்; பரதன்-பதடி. பதடி என்பது மக்களுக்குப் பயன்படாத நெல், தேங்காய் முதலியவற்றைக் குறிக்கும். ''மக்கட் பதடி'' என்பர் திருவள்ளுவர்; ஊமைக் காய்கள் என்றும் கூறுவர்.

138. சத்துருக்கனன் இறுதிக் கடன்களை நிறைவேற்றுதல்

என்று கூறிநின்று இடரில் மூழ்கும் அத்
துன்று தார்அவற்கு இளைய தோன்றலால்
அன்று நேர்கடன் அமைவது ஆக்கினான்
நின்று நான்மறை நெறிசெய் நீர்மையான். (2335)

(துன்று-நெருங்கிய; தார்-மாலை; இளையதோன்றல்-சத்துருக்கனன்; அன்று-அப்போது; அமைவது-ஆக்குதல் / பொருத்தமுறச் செய்வித்தல்)

என்று இவ்வாறு அரற்றிக் கொண்டு துன்பத்தில் மூழ்கியிருக்கும் அந்த நெருங்கிய மாலையணிந்த பரதனுக்கு இளையவனான சத்துருக்கனனைக் கொண்டு அப்பொழுது செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைப் பொருத்தமாகச்செய்து முடித்தான், நான்கு வேதங்களும் கூறும் நெறிப்படி நின்று ஒழுகும் தன்மையுடையவனான வசிட்டமாமுனிவன்.

இறுதிக் கடன்களைப் பரதனே செய்ததாக வான்மீகம் கூறும். தாரவன் என்பது மலர் மாலை அணிந்தவன் என்பதைக் குறிக்காது. அரச குலத்தைச் சார்ந்தவன் என்பதைக் குறித்து நிற்கும்.

139. உரிமை மகளிர் அறுபதினாயிரம் பேரும் தீப்புகுதல்

இழையும், ஆரமும், இடையும் மின்னிடக்
குழையும் மாமலர்க் கொம்பு அனார்கள்தாம்,
தழைஇல் முண்டகம் தழுவு கான்இடை
நுழையும் மஞ்ஞைபோல், எரியில் மூழ்கினார். (2336)

(இழை-அணிகலன்கள்; குழைதல்-துவண்டு நடத்தல்; தழை-இலை; முண்டகம்-தாமரை மலர்கள்; மஞ்ஞை-மயில்கள்; எரி-நெருப்பு; மூழ்குதல்-குளித்தல்)

பொன்னாலான அணிகலன்களும், முத்துவடங்களும், அவர்கள் இடையும் மின்னல்போல ஒளி வீசத்துவண்டு நடக்கும் சிறந்த பூங்கொம்பு போன்ற உரிமை மகளிர் அறுபதினாயிரம் பேரும், இலையில்லாத தாமரைப் பூக்கள் நிறைந்த கானகத்தின் உள் நுழைகின்ற மயில்களைப் போல மகிழ்ச்சியாக, எரிகின்ற நெருப்பிற்குள் புகுந்து தீக்குளித்தனர்.

மின்னல் போன்ற இடை என்பதனால் இடையும் மின்னிட என்றார். இலைகளின் இடையீடற்ற தாமரை மலர்க் கூட்டம் தீப்பரப்புப் போன்று தோற்றமளிக்கும். ''புண்டரீகம் தீ எரிவபோல் விரியப் பூம்புகை போல் வண்டு இரீயும்'' என்பது நளவெண்பா. இலைகள் அகற்றப்பட்ட செந்தாமரைப் பூக்கள் மலர்ந்த காடு எவ்வாறு செந்நிறம் பெற்றுத் திகழுமோ, அவ்வாறு எரியூட்டப்பெற்ற ஈமப்பள்ளி விளங்கியது என்பதாம். மயில்கள் தாமரைக் காட்டிற்குள் நுழைவது போல மகிழ்ச்சியாக அறுபதினாயிரவரும் எரிக்குள் புகுந்து நற்கதி பெற்றனர் என்க. கணவனுடன் எரியுள் புகுவதைப் பத்தினிப் பெண்டிர் சிறிதும் வருத்தமின்றி மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வர். இவ்வறுபதினாயிரம் பேரும் மகப்பேறற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ''பெருந்தோள் கணவன் மாய்ந்து என, அரும்பு அற, வள் இதழ் அவிழ்ந்த தாமரை, நள் இரும் பொய்கையும், தீயும் ஓர் அற்றே'' என்பது புறநானூறு; ''நளி இரும் பொய்கை ஆடுநர் போல, முனி எரிப்புகுஉளம் முதுகுடிப்பிறந்த பத்தினிப் பெண்டிர்'' என்பது மணிமேகலை.

140. அங்கி நீரினும் குளிர, அம்புயத்
திங்கள் வாள்முகம் திரு விளங்குறச்
சங்கை தீர்ந்து, தம்கணவர் பின்செலும்
நங்கைமார் புகும் உலகம் நண்ணினார். (2337)

(அங்கி-அக்னி / தீ; அம்புயம்-மலர் / தாமரை; வாள்-ஒளி பொருந்திய; திரு-அழகு; சங்கை-ஐயம் / மனத்துயருமாம்)

அவ்வாறு அவர்கள் தீக்குளித்த போது, அந்நெருப்புச் சுவாலை தண்ணீரினும் குளிர்ச்சி பொருந்தியதாய் ஆயது; தாமரைக் கூட்டத்தின் நடுவே தோன்றும் திங்களைப் போல அவர்கள் ஒளி பொருந்திய முகம் திருமகள் விளங்குகின்ற முகம் போலவும் ஒளி வீசியது; தாம் நல்லுலகம் அடைவோமோ மாட்டோமோ என்று சந்தேகம் கொள்ளாமலும், மனத்துயர் நீங்கும் படியும் நெருப்புள் புகுந்தனர். கற்புடைமகளிர் தன் கணவன் உடன் செல்லும் நல்லுலகத்தை அடைந்தார்கள்.

அங்கி, நீரினும் குளிர்தல் இவர்களுடைய கற்புடைத் தன்மையால் என்பது அறிக. அந்நிலையிலும் அவர்கள் முகம் அன்றலர்ந்த மலர் போலும் ஒளி வீசிற்று என்பதைக் குறிக்க அம்புயத்திங்கள் வாள்முகம் திருவிளங்குற என்றார். கணவன் உடலைத் தழுவிக் கொண்டு தீப்புகுந்ததால் இத்தகைய மகிழ்ச்சி உண்டாயிற்று என்பதாம். இந்த அறுபதினாயிரம் பேரும் பிள்ளைப் பேறற்றவர்கள். எனவே கணவன் இறந்ததன்பின்பும் உயிர்வாழப் பிடிக்காமல் தீப்புகுந்தனர். ஏனைய மூன்று பட்டத்தரசியரும் மகப்பேறு பெற்றவர். எனவே அவர் பொருட்டு வாழ விழைந்து உயிர் வாழ்ந்தனர் என்க. கணவனுடன் உயிர் நீத்தல் சககமனம் எனப்படும்.

Koviloor Digital Library

141. பரதன் தனது மனையை அடைதல்

அனைய செய்கையால், அரசர் கோமகற்கு
இனைய தன்மையால் இயைவசெய்து, பின்
மனையின் எய்தினான், மரபின் வாழ்வினை
வினையின் எய்தும்ஓர் பிணியின் வெஃகலான். (2338)

(வெஃகுதல்-விரும்பாமல்; மரபு-பரம்பரை)

இவ்வாறு அவ்வறுபதினாயிரவரும் தீப்புகுந்த பின்பு சத்துருக்கன னைக் கொண்டு அரசர் பிரானாகிய தசரதச் சக்கரவர்த்திக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களை முறைப்படி செய்து முடித்த பின், அரச பரம்பரையில்தன்தாயின்தீயசெயல்களால்விளைந்தஓர்நோயைப்போல அரசச் செல்வத்தைக் கருதிய பரதன், விருப்பமில்லாமல் தனது அரண் மனையை அடைந்தான்.

பெரும் பிணியை வெறுப்பது போல அரசர் பதவியை வெறுத்தான் பரதன் என்க. முதல் நாள் சடங்கு மட்டும் தான் சத்துருக்கனனால் செய்விக்கப்பட்டது என்பது குறிப்பு.

142. பரதன் பத்தாம் நாள் இறுதிக்கடன் முடித்தல்

ஐந்தும் ஐந்தும் நாள்ஊழியாம் என
மைந்தன் வெம்துயர்க் கடலின் வைகினான்;
தந்தை தன்வயின் தருமம் யாவையும்
முந்து நூலுளோர் முறையின் முற்றினான். (2339)

(தருமம்-சடங்குகள்; முந்து-முற்பட்ட / பழமையான)

தந்தைக்குச் சத்துருக்கனன் முதல் நாள் கடன்கள் ஆற்றிய பிறகு, பத்து நாட்களும் பரதனுக்குப் பத்து யுகங்கள் கழிவது போல அரிதில் கழிந்தது. மிகுந்த துயரக் கடலில் மூழ்கியிருந்தான்; தந்தையின் பொருட்டுத் தான் இயற்ற வேண்டிய பத்தாம் நாள் இறுதிச் சடங்குகள் எல்லாவற்றையும், பழமையான சாத்திர நூல்களில் கூறியுள்ள முறைப்படி தவறாது செய்து முடித்தான்.

இந்தப் பத்து நாட்களும் வெந்துயர்க் கடலில் மூழ்கினான் என்பது அவன் இராமபிரானைக் காணமுடியாது அடைந்த துயரத்தைக் குறித்தது என்க.

143. வசிட்டன் பரதனை அடைதல்

முற்றும் முற்றுவித்து உதவி, மும்மைநூல்
சுற்றம் யாவையும் தொடரத் தோன்றினான்;
வெற்றி மாதவன் வினை முடித்தஅக்
கொற்ற வேல்நெடும் குமரன் கூடினான். (2340)

Koviloor Digital Library

(மும்மை நூல்-முப்புரி நூல் / மூன்று நூல்; இருக்கு, யஜுர், சாமம்)

வெற்றியையுடைய பெருந்தவசியான வசிட்டன், ஈமக்கடன்கள் எல்லாவற்றையும் முழுமையுமாக நிறைவேற்றிய பின்னர், பலவகையான தானங்களையும் உரியவர்க்குக் கொடுத்து உதவி, முப்புரி நூல் அணிந்தவரும். மூன்று வேதங்களிலும் கற்றுத் துறை போகியவருமாகிய அந்தணர்களும் வேதியர்களும் தன்னைச் சுற்றிச் சூழ்ந்து தொடர்ந்து வர, தீ வினைகளை ஒழித்த வெற்றி பொருந்திய வேற்படையை உடைய பெரியவனான பரதனிடம் மேல் நிகழ்தற்குரியனவற்றைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறும் பொருட்டு அவன் அரண்மனையை அடைந்தான்.

மும்மை நூல் என்பது மூன்று வேதங்களைக் குறிக்கும். இருக்கு, யஜுர், சாமம் ஆகிய மூன்று வேதங்கள்தான் பழமையானதும் முதன்மையானதும் என்றும், அதர்வணவேதம் வழக்கில் இல்லாதது என்றும் குறிக்க மும்மை நூல் என்றார் என்க. அவற்றில் வல்லவர்கள் திரிவேதிகள் எனப்படுவர். இம்மூன்று வேதங்களுமே ''தீரயீ'' என்றும் வழங்கப்பெறும். விசுவாமித்திரனையும் தன் தவவலிமையால் வென்றவன் வசிட்டன். எனவே வெற்றி மாதவன் எனப்பட்டான். இச்சடங்குகள் பதின்மூன்று நாட்கள் நடந்ததாக முதல் நூல் கூறும்.

144. அமைச்சர்களும் நகரத்தாரும் பரதனை அடைதல்

''மன்னர் இன்றியே வையம் வைகல்தான்
தொன்மை அன்று'' எனத் துணியும் நெஞ்சினார்
அன்ன மாநிலத்து அறிஞர் தம்மொடும்
முன்னை மந்திரக் கிழவர் முந்தினார். (2341)

ஆலோசனைக்குரிய, பழமையான மூத்த அமைச்சர் பெருமக்கள், ''மன்னர் இல்லாமல் நாடு இருக்கக் கூடாது; அது மரபும் அன்று என்று தெளிந்து, பரதனை அரசனாக்கும் நோக்கத்தோடு, அந்தச் சிறந்த கோசல நாட்டில் உள்ள அறிவு சான்ற பெருமக்களோடும், பரதன் அரண்மனைக்கு வரமுற்பட்டனர்.

நெஞ்சில் தெளிவுள்ளதால் துணிந்தனர்; துணிந்ததால் தம் கருத்தை நிறைவேற்ற முற்பட்டனர் என்பது கருத்து. நாடு அரசன் இன்றி இருத்தல் பல தீங்குகளுக்கு இடம் ஆகலாம் எனத் தெளிந்தனர் என்பதாம். அரசன் இல்லாத நாட்டை ''அராஜக ஜனபதம்'' என்று கூறி வான்மீகி இது பற்றி விரிவாக ஒரு சர்க்கமே பாடியுள்ளது நோக்கத்தக்கது.

பள்ளிபடைப் படலம் நிறைவுற்றது.

Koviloor Digital Library

11. ஆறுசெல் படலம் [59 பாடல்கள்]

ஆறு என்ற சொல்லுக்கு வழி என்பது பொருள். இராமனைத் திரும்பவும் நாட்டிற்குக் கூட்டி வந்து முடிசூடச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், இராமன் சென்ற வழியிலேயே பரதன், சத்துருக்கனன் முதலியோர், தங்கள் சேனைகளுடன் வனம் நோக்கிச் சென்ற தன்மையைக் கூறும் படலம் என விரியும். இது 59 பாடல்களைக் கொண்டது. இப்படலம் சில சுவடிகளில் ''ஆற்றுப் படலம்'' எனவும் ''பரதன் எழுச்சிப் படலம்'' எனவும் ''கங்கை யாற்றுப் படலம்'' எனவும் கூறப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு சுவடியில் மட்டும் இப்படலம் முதல் இக்காண்டம் முடியும் வரை உள்ள பகுதிக்கு ''ஆறு சென்று அடிதொழுத படலம்'' எனக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இப்படலத்துள், பரதனுடன் வசிட்டன் இருந்த அரசவைக்கு அமைச்சர் பெருமக்கள் வந்து சேர்தல்; சுமந்திரன் கண் நோக்கை உணர்ந்த வசிட்டன், ''உலகினை நீயே இப்போது ஆள வேண்டும்'' எனப் பரதனுக்குக் கூறுதல்; அதைக் கேட்ட பரதன் தன் உளக்கருத்தைச் சபையினருக்குச் சொல்லுதல்; அவையோர் மகிழ்தல்; பரதன் சத்துருக்கனனை அழைத்து, இராமனை அழைத்துவரச் சேனைகளை எழப் பணிக்குமாறும், முரசறைந்து மக்களுக்குத் தெரிவிக்குமாறும் கட்டளையிடுதல்; நகரத்தார் மகிழ்தல்; சேனை எழுதல்; மாந்தர், மகளிர் மகிழ்ச்சிக் காட்சிகள்; வாத்தியங்கள் ஒலிக்காமல் அமைதியாகச் செல்லுதல்; மகளிர் அணிகலன்கள் அணியாமல் செல்லுதல்; வெண் கொற்றக்குடை நிழற்றாமல் இருத்தல்; இப்போது மாந்தர் இல்லாமல் இருக்கும் அயோத்தியின் வெறுமை நிலை; பரதன் மரவுரி தரித்துச் சத்துருக்கனனுடன் தேரில் செல்லுதல்; எழுந்த கூட்டத்தில் மந்தரையைக் கண்டு சத்துருக்கனன் வெகுளல்; பரதன் விலக்கி ஆறுதல் கூறுதல்; எல்லோரும் இராமன் தங்கிய சோலையிலேயே தங்குதல்; புல்லிலும் புழுதியிலும் பரதன் படுத்திருத்தல்; தேர் முதலியன உடன் வந்தும், இராமன் அங்கிருந்து கால் நடையாகவே சென்றான் என்பதைக் கேள்வியுற்றுப் பரதனும் கால் நடையாகவே நடந்து செல்லுதல். ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இப்படலத்துள் வான்மீகி சுருக்கிக் கூறியவற்றைக் கம்பன் விரித்தும், அவன் விரித்துக் கூறியவற்றைச் சுருக்கியும், வான்மீகி கூறியவற்றைத் தவிர்த்தும், அவன் கூறாதவற்றைக் கதைப் போக்கில் இணைத்தும்

Koviloor Digital Library

கூறியிருப்பது பெரிதும் நோக்கத்தக்கது. பாடல்கள் வரும் இடங்களில் அங்கங்கே இதற்கான குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன.

1. அமைச்சர்கள் பரதனை அடைதல்

வரன்முறை தெரிந்து, உணர்மறையின் மாதவத்து
அருமறை முனிவனும், ஆண்டையான் என,
விரைவின் வந்து ஈண்டினர்; விரகின் எய்தினர்;
பரதனை வணங்கினர்; பரியும் நெஞ்சினர். (2342)

(ஆண்டையான்-அங்கு; ஈண்டுதல்-ஒருங்கு சேர்தல்; பரியும்-வருந்தும்; விரகு-திறமை / பணிவு / ஆலோசனை)

அரசியல் மரபு நெறிகளை அறிந்தவனும், வேதங்களில் வல்லவனும், சிறந்த தவசியுமாகிய வசிட்டனும் பரதனுடன் அங்குதான் இருக்கிறான் என்பதை அறிந்த ஆலோசனைத்திறம் படைத்த, அமைச்சர் பெருமக்கள், வருந்தும் மனத்தையுடையவராய், விரைவாக அங்கு நெருங்கி வந்து ஒன்று திரண்டு, பரதனை அடைந்து அவனை வணங்கினர்.

அமைச்சர் பெருமக்கள் பருவத்தால் மூத்தோராயிருப்பினும், இப்போது பரதன் சக்கரவர்த்தியின் நிலையில் இருப்பதால் வணங்கினர் என்பதாம். வசிட்ட முனிவனும் உடன் இருத்தலால் தாங்கள் எண்ணி வந்த காரியம் முற்றுப் பெறும் என்ற எண்ணத்தோடு வந்தனர்.

2. மந்திரக் கிழவரும், நகர மாந்தரும்,
தந்திரத் தலைவரும், தரணி பாலரும்,
அந்தர முனிவரோடு, அறிஞர் யாவரும்,
சுந்தரக் குரிசிலை மரபின் சுற்றினார். (2343)

(தந்திரம்-படை / சேனை; தரணி பாலர்-அரசர்கள்; அந்தரம்-ஆகாயம்; சுந்தர-அழகிய; மரபு-முறை; சுற்றுதல்-சூழ அமர்தல்)

அமைச்சர் பெருமக்களும், நகரத்து முக்கியப் பிரமுகர்களும், சேனைத் தலைவர்களும், நாடு காக்கும் அரசர்களும், ஆகாயத்தில் சஞ்சரிக்கும் இயல்புடைய முனிவர்களோடு, நாட்டில் உள்ள அறிஞர் பெருமக்களும், எல்லோரும், அழகிய ஆண்களிற் சிறந்தோனாகிய பரதனை முறைப்படி சுற்றிச் சூழ்ந்து அமர்ந்தனர்.

நகர மாந்தர் என்பது ஐம்பெருங் குழுவையும், எண் பேராயத்தையும் குறிக்கும். ஐம்பெருங்குழு என்பது அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், சாரணர் ஆகியோர் ஆவர். எண்பேராயம் என்பது ''கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், நளி படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் இனையவர் எண்பேராயம்'' என்பதாம். இவர்களுக்கு அவரவர்களுக்கெனத் தனித் தனி இடம் ஒதுக்கப் பெற்றிருக்கும். அவ்வவற்றில் அவர்கள் பரதனைச் சுற்றி

Koviloor Digital Library

அமர்ந்தனர் என்பதாம். ''ஐம்பெருங் குழுவொடு எண்பேராயமும் அரசு விளங்கும் அவை அம்முறையின் புகுதர'' என்பது சிலப்பதிகாரம்.

3. சுமந்திரன், வசிட்டனைக் கருத்துடன் நோக்குதல்

சுற்றினர் இருந்துழிச் சுமந்திரப் பெயர்ப்
பொற்றடந் தேர்வலான், புலமை உள்ளத்தான்,
கொற்றவர்க்கு உறுபொருள் குறித்த கொள்கையான்,
முற்றுணர் முனிவனை முகத்து நோக்கினான். (2344)

(பொன்-அழகிய; கொள்கை-கருத்து; புலமை-நுண்ணறிவு; கொற்றம்-அரசுரிமை)

அவ்வாறு எல்லோரும் பரதனைச் சுற்றி அமர்ந்திருக்கும் பொழுது, சுமந்திரன் என்ற பெயர் உடையவனும், பொன்னாலான அழகிய பெரிய தேரை ஓட்டுவதில் வல்லவனும், நுண்ணறிவு உடைய நல்ல மனம் கொண்டவனும், அமைச்சர்களின் முதல்வனுமான சுமந்திரன், இப்பொழுது அரசுரிமை ஏற்கத் தகுதி பெற்றிருக்கின்ற பரதனுக்கு, மேல் நிகழ வேண்டிய முடிபுனைதல் செய்திகளைக் கூறவேண்டும் என்ற எண்ணத்துடன், முற்றும் முக்காலமும் உணர்ந்த முனிவனான வசிட்டனின் முகத்தை ஏறிட்டுக் கூர்ந்து நோக்கினான்.

சுமந்திரன் தேர்ச்சாரதி மட்டுமல்ல, அறிஞனுமாம், நல் அமைச்சனுமாம் என்பதை நன்கு புலப்படுத்தினார். இடம், பொருள், ஏவல், இறவு, நிகழ், எதிர் ஆகிய முக்காலங்களையும் நன்கு உணர்ந்தவன் வசிட்டன் எனவே முற்றுணர் முனிவன் என்றான். முகத்து நோக்குதல் என்பது தாங்கள் கருதி வந்த கருத்தைக் கூறுமுகத்தான் நோக்குதல். குறிப்பில் குறிப்பு அறியும் குணமுடையவன் வசிட்டன் எனவே முகத்து நோக்கினான் என்றான் என்றலுமாம். ''முகம் நோக்கி நிற்க அமையும் அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின்'' என்பது குறள்708. குலகுருவும், அமைச்சர்களுள் ஒருவனுமாகிய வசிட்டன் கூறுதலே முறையாகும் என்று அறிந்த சுமந்திரன் இச்செய்தியைத் தான் கூறாது, முனிவனை நோக்கிக் கூறச் செய்தான் என்க.

4. குறிப்புணர்ந்தவசிட்டன்பரதனுக்குக்கூறுதல் [8 பாடல்கள்]

நோக்கினால் சுமந்திரன் நுவலல் உற்றதை
வாக்கினால் அன்றியே உணர்ந்த மாதவன்,
''காக்குதி உலகு! நின் கடன்அது ஆம்'' எனக்
கோக்குமரனுக்கு அது தெரியக் கூறுவான். (2345)

(நுவலல்-கூறியது; தெரிய-விளக்கமாக)

Koviloor Digital Library

சுமந்திரன் தன் கண்பார்வையாலேயே கூற எண்ணியதை, அவனுடைய வாய்ச் சொற்கள் இல்லாமலேயே உணர்ந்த பெருந்தவசியான வசிட்டன், பரதனை நோக்கி ''இவ்வுலகைக் காப்பாற்றுவாயாக; அது உனது கடமையும் ஆகும்'' என்று அரசிளங்குமரனாகிய பரதனுக்கு அரசின் சிறப்புப் பற்றியும் இன்றியமையாமை பற்றியும் அவனுக்கு விளங்கும்படி கூறத் தொடங்கினான்.

''முடிபுனைந்து கொள்க'' என்று கூறாது, ''உலகம் காக்க'' என்று கூறியது வசிட்டனின் சொல் வண்ணம் என்பது உணர்க. இது உன்னுடைய கடமையும் ஆகும் என்று வற்புறுத்திக் கூறியதும் நினைவில் கொள்ளத் தகும். பெருமைக்காக அன்று, இது உன் கடமை. எனவே நீ அரசு ஏற்றல் வேண்டும் என்றான் என்பதாம். நோக்குதல் என்பது இங்கு நோக்கல் நோக்கம். வெறும் பார்வை யன்று; மனத்தால் நோக்குதல் ஆகும்.

5. ''வேதியர், அருந்தவர், விருத்தர், வேந்தர்கள்
ஆதியர் நின்வயின் அடைந்த காரியம்,
நீதியும் தருமமும் நிறுவ; நீ இது,
கோதுஅறு குணத்தினாய்! மனத்துள் கோடியால்!'' (2346)

(கோது-குற்றம்; விருத்தர்-முதியவர்கள்; ஆதி-முதலாக; அடைந்த-வந்த; நிறுவ-நிலைபெறச் செய்ய; கோடி-கொள்க)

வசிட்டன் பரதனை நோக்கி, ''குற்றமற்ற குணங்களையுடைய பரதனே! இப்போது, வேதம் வல்லவர்கள், அரிய தவசியர்கள், முதுபெரும் அறிஞர்கள், சிற்றரசர்கள் முதலிய எல்லோரும் உன்னிடம் வந்திருப்பதற்கான காரணம், நீ இப்போது முடிபுனைத்து அரசனாகி, நாட்டில் கெட்டுப்போக இருக்கின்ற நீதியையும், தருமத்தையும் நிலை பெறுமாறு ஆக்க வேண்டும் என்பதேயாகும். எனவே, நீ இதை மனத்தில் கொள்வாயாக?'' என்றான்.

''நீதி என்பது, மக்கள் பிறர் நலியாது, வேற்றுப் பொருள் வெஃகாது இருக்கச் செய்தல்; தருமம் என்பது, மக்கள் மையில் அறிவினராய்ச் செவ்விதின் நடந்து, தம் அமர்துணைப் பிரியாது பாத்துண்ணச் செய்தல், இதை நீ மனத்துள் கொண்டாய் என்றால் மேலே நான் கூறப்போவனவற்றின்தகுதி உணர்வாய்'' என்று அடிப்படைஅமைத்துக்கொள்ளுகிறான் வசிட்டன்.

அரச நீதி என்பது எளியரை வலியார் வாட்டாது பாதுகாத்தலாம். ''மாநிலம் காவலன் ஆவான், மன்னுயிர் காக்கும் காலைத் தான் அதனுக்கு இடையூறு, தன்னால், தன்பரிசனத்தால், ஊனம் மிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர் தம்மால், ஆயபயம் ஐந்தும் தீர்ந்து அறம் காப்பான் அல்லனோ?'' என்பது பெரிய புராணம். அரச தருமம் என்பது குறை வேண்டுவார்க்கு அது நிரப்புதலாம்.

Koviloor Digital Library

6. தருமம் என்று ஒருபொருள் தந்து நாட்டுதல்
அருமை என்பது பெரியது அறிதி! ஐய! நீ
இருமையும் தருவதற்கு இயைவது; ஈண்டு இது
தெருள்மனத்தார் செயும் செயல்இது ஆகுமால். (2347)

(தந்து-தெளிவித்து / மேற்கொள்ளச் செய்து; நாட்டுதல்-நிலை பெறுமாறு செய்தல்; அறிதி-அறிவாயாக; இருமை-இம்மையும் மறுமையும்; இயைவது-ஏற்றது; தெருள்-தெளிந்த)

வசிட்டன் பரதனை நோக்கி, ''ஐய! தருமம் என்ற ஒப்பற்ற ஒரு பொருளை நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்து, அதை நிலை பெறச் செய்தல் என்பது பெரிது; மிக அரிது; இதை நீ நன்கு அறிவாயாக! அது இம்மை, மறுமை என்ற இருபயன்களையும் தரவல்லது. இது தெளிந்த மனம் உடையவர்களால் மட்டுமே ஆற்றக் கூடிய செயலாகும்'' என்றான். ''தருமத்தை நிலை நிறுத்துதல்தான் அரசாட்சி என்பது; அது பெறுதற்கு அரியது; இம்மையில் புகழையும் மறுமையில் நல்லுலகப் பேற்றையும் தரவல்லது'' எனவும் விளக்குகிறான் என்பதாம்.

7. ''வள்உறு வயிரவாள் அரசுஇல் வையகம்
நள்உறு கதிர் இலாப்பகலும், நாளொடும்
தெள்உறு மதி இலாஇரவும், தேர்தரின்
உள்உறை உயிர்இலா உடலும் ஒக்குமே'' (2348)

(வள்-உறை; வயிரம்-கூர்மை / உறுதி; தேர்தருதல்-ஆராய்தல்; கதிர்-சூரியன்; நாள்-நட்சத்திரம் / விண்மீன்கள்; தெள்-தெளிவு பொருந்திய; உறை-பொருந்திய; நள்ளுறுதல்-விரும்புதல்)

''ஆராய்ந்து பார்த்தால் உறையில் பொருந்தியிருக்கும் கூர்மையான, உறுதியான வாட்படையை உடைய அரசன் இல்லாத ஒரு நாடு, யாவராலும் விரும்பப்படும் சூரியன் இல்லாத பகற்பொழுதையும், நட்சத்திரங்களோடு தெளிவான சந்திரன் இல்லாத இரவையும், உள்ளே உறைந்திருக்கின்ற உயிர்இல்லாத உடம்பையும் போன்றதாகும்'' என்றான் வசிட்டன்.

வள் உறு வயிரவாள் என்றதனால் அரசன் எப்போதும் உறையிற் பொருந்திய வாட்படையையே பெற்றிருக்க வேண்டும். ஆனால் அது கூர்மையானதாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும் என்றதும், பிறரைக் கொல்லும் கருவியாக இல்லாது, பகைவரை அச்சுறுத்தும் கருவியாகவே இருக்கவேண்டும் என்பதும் புலப்படுத்தப்பட்டது. அரசன் இல்லாத நாட்டை மூன்று உவமைகளால் விளக்கினார். சூரியன் இல்லாத பகல்; சந்திரனும் நட்சத்திரங்களும் இல்லாத இரவு, உயிர் இல்லாத உடல். இவை மூன்றாலும் ஒரு அரிய கருத்தினையும் புலப்படுத்தினார். சூரியன் போல் அழிக்கும் ஆற்றலும், சந்திரன் போல் குளிர்ச்சியால் தாக்கும் ஆற்றலும், உயிர் உடலை இயக்குவது போல் இயக்கும் ஆற்றலும்

Koviloor Digital Library

உடையவனாக அரசன் அமைய வேண்டும் என்பது கருத்து. பகைவரை அழித்து, நல்லோரைக் காத்து, மக்களை இயங்கச் செய்வது மன்னனது கடமை என்பதைக் கூறினார்.

8. ''தேவர்தம் உலகினும், தீமைசெய்து உழல்
மாவலி அவுணர்கள் வைகும் நாட்டிலும்,
ஏவெவை உலகம் என்று இசைக்கும் அன்னவை
காவல் செய் தலைவரை இன்மை கண்டிலம்''. (2349)

(உழல்தல்-திரிதல்; வைகும்-வாழும்; இசைத்தல்-சொல்லுதல்; அவுணர்-அசுரர்கள்)

பிறருக்கு நன்மையே செய்யும் தேவர்களின் தேவலோகத்திலும், பிறருக்குத் தீமை செய்தலையே தொழிலாகக் கொண்டுள்ள பெருவலி படைத்த அசுரர்கள் வாழ்கின்ற நாட்டிலேயும், எவை எவை உலகம் என்று சொல்லப்படுகின்றனவோ அவை அவற்றிலெல்லாம், காவல் செய்கின்ற தலைவர் என்ற அரசர் ஒருவர் இல்லாமையை நாம் கண்டதில்லை.

நாடு என்று சொல்லப்பட்டால் அதைக் காக்கும் தலைவன் ஒருவன் இன்றியமையாதவன் ஆகிறான். அது நல்லவர்கள் இருக்கும் தேவருலகமாயிருந்தாலும் சரி, தீயவர்களே வாழும் அசுர உலகமாய் இருந்தாலும் சரி. அரசன் என்பவன் இருந்தே யாகவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறான் வசிட்டன். அவ்வாறு அரசன் இல்லாத ஒரு நாட்டை நாங்கள் இதுகாறும் கண்டதே இல்லை என்று மேலும் கூறுகிறான்.

9. ''முறை தெரிந்து, ஒருவகை முடிய நோக்குறின்,
மறையவன் வகுத்தன, மண்ணில், வானிடை,
நிறை பெருந்தன்மையின், நிற்ப, செல்வன,
இறைவரை இல்லன யாவும் காண்கிலம்''. (2350)

(முடிய-முழுவதும்; மறையவன்-இறைவன்)

முறைமை தெரிந்து, ஒரு படித்தாக உலகெங்கும் முற்றமுடிய ஆராய்ந்து பார்த்தால், பரம்பொருள் தோற்றுவித்த உயிரினங்கள் மண்ணுலகத்திலும், விண்ணுலகத்திலும், நிறைந்த பெருந்தன்மை வாய்க்கப் பெற்ற அஃறிணை உயிர்களான நிற்பனவும், அசைவனவும், தத்தமக்கு உரிய அரசர்களைப் பெற்றில்லாத தன்மையை நாம் எங்கும் கண்டோமில்லை.

முன் பாடலில் உயர்திணையைச் சார்ந்த ஆறறிவுடைய தேவர்கள், மனிதர்கள், அசுரர்கள் முதலியவர்களுக்கெல்லாம் அரசன் இல்லாமை யைக் கண்டதில்லை என்று கூறிய வசிட்டன், இக்கவியில் அஃறிணைப் பொருள்களும், ஓரறிவுடைய தாவரங்கள் முதலாக, ஐந்தறிவுடைய விலங்குகள் வரை உள்ள சர, அசரப் பொருள்கள் கூடத் தத்தமக்கு என்று ஒரு தலைவனை வைத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு தலைவனே

Koviloor Digital Library

இல்லாத ஒரு இனத்தை நாம் கண்டேதேயில்லை என்று மேலும் கூறுகிறான் முனிவன். நிலை இயற்பொருட்கள் நிற்பன என்பது தாவரங்கள் பற்றியும், இயங்கு இயல்பொருள்கள் செல்வன என்பது விலங்கு முதலியவைகளையும் குறித்தது. மரங்களுக்குத் தலைமை அரசமரம், விலங்குகளுக்குத் தலைமை சிங்கம், பறவைகளுக்குத் தலைமை கருடன் என்றிருப்பதையும் எண்ணுக. ஓரறிவு உயிர்களான தாவரங்களுக்கே அரக வேண்டுமாயின், ஆறறிவு உள்ள மனிதர்களுக்கு அரசன் இன்றியமையாதவன் என்பதைக் கூறுகிறான்.

10. பூத்தநாள் மலர் அயன் ஆதிப் புண்ணியர்
ஏத்து வான்புகழினர், இன்றுகாறும் கூக்
காத்தனர்; பின், ஒரு களைகண் இன்மையால்
நீத்தநீர் உடை கலநீரது ஆகுமால். (2351)

(அயன்-பிரமன்; ஆதி-முதலிய; ஏத்து-புகழ்தல்; வான்-உயர்ந்த; கூ-பூமி; களைகண்-பற்றுக்கோடு; நீத்தம்-கடல்; கலம்-கப்பல்; நீரது-தன்மையது; நாள் மலர்-அன்றலர்ந்த மலர்)

''திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய அன்றலர்ந்த மலரில் வீற்றிருக்கும் பிரமன் முதலாக உள்ள நல்வினைச் சான்றோர்கள் அனைவரும் பாராட்டிய உயர்ந்த புகழ்ச்சிக்குரிய உன் குலத்து முன்னோர்கள், இன்று வரை எந்த இடையீடும் இன்றித் தொடர்ந்து இப்பூமியைக் காத்துவந்தனர்; இப்பொழுது நீ அரசேற்காவிட்டால் ஒரு பற்றுக் கோடும் ஆதரவும் இல்லாமையால், நடுக்கடலில் உடைந்து போன, மீகாமன் இல்லாத கப்பலைப் போலும் தன்மையை இந்நாட்டு மக்கள் அடைந்து துன்புறுவார்கள்.

அன்றலர்ந்த, செவ்வியழியாத மலர், நாள் மலர் எனப்பட்டது.

11. ''உந்தையோ இறந்தனன்; உம்முன் நீத்தனன்;
வந்ததும் அன்னைதன் வரத்தில் மைந்த! நீ
அந்தம்இல் பேரரசு அளித்தி; அன்னது
சிந்தனை எமக்கு'' எனத் தெரிந்து கூறினான். (2352)

(அந்தம்இல்-அழிவில்லாத; அளித்தி-காப்பாயாக; சிந்தனை-கருத்து; தெரிந்து-ஆராய்ந்து)

''புதல்வனேபரதா! உன்தந்தைதசரதனோவாய்மைகாக்கும்பொருட்டு இறந்து போனான்; உன் முன்னவன் இராமனோ, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று நாடு நீங்கிக் காடு புகுந்தான்; உனக்கு உன் அன்னையின் வரத்தால் வந்து கிடைத்தது இவ்வுலகு; எனவே, இந்த அழிவில்லாத பேரரசை நீ காப்பாயாக! அதுவே தான் எங்களது கருத்து மாகும்'' என ஆராய்ந்து தெளிந்து கூறினான் வசிட்டன்.

Koviloor Digital Library

''உன் தந்தை தன் வரத்தால் இவ்வரசுரிமையை உனக்களித்தான்; உன் முன்னோன் இராமன் நீ இவ்வரசை ஆள வேண்டும் என்று கருதியே வனம் புகுந்தான. நின்தாயும் நீயே இவ்வரசை ஆள வேண்டுமென வரம் வாங்கித் தந்தாள். எங்களுடைய கருத்தும் நீயே அரசையேற்று ஆள வேண்டும் என்பதேயாகும். எனவே நீயே அரசை ஏற்கவேண்டும். அதில் எந்தக் குற்றமும் பழியும் உன்னை வந்தடையாது. இதுவே உனக்குரிய தருமமுமாகும்'' என்று கூறி முடித்தான் வசிட்டன். இது வரை குறிப்பாகக் கூறிவந்த வசிட்டன், இப்போது வெளிப்படையாகக் கூறியது காண்க.

12. பரதன் நிலை

''தஞ்சம் இவ்வுலகம், நீதாங்குவாய்'' எனச்
செஞ்செவே முனிவரன் செப்பக் கேட்டலும்
''நஞ்சினை நுகர்'' என நடுங்குவாரினும்
அஞ்சினன், அயர்ந்தனன் அருவிக் கண்ணினான். (2353)

(தஞ்சம்-எளிய நிலை; செஞ்செவே-நேரே வெளிப்படையாக; அயர்தல்-சோர்வடைதல்; தாங்குதல்-பாதுகாத்தல்)

''இந்த நாடு உன் பாதுகாப்புக்கு உரியது; இதனை நீ ஏற்று அரசு புரிவாய்'' என்று முனிவர்களில் மேலானவனான வசிட்டன் வெளிப்படை யாகச் சொல்லுவதைக் கேட்டவுடன், பரதன் அருவிபோலக் கண்ணீரைப் பொழிபவனாய், ''நஞ்சினை உண்ணுக'' என்று ஒருவரிடம் சொன்னால் அவர் எவ்வாறு அஞ்சி நடுங்குவாரோ, அதைக் காட்டிலும் மிகுதியாக அஞ்சிச் சோர்ந்து போனான்.

''தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே'' என்பது தொல்காப்பியம். தஞ்சம் என்பது எளிய நிலையைக் குறித்தது. பிறருக்கு அமுதமானது, பரதனுக்கு நஞ்சு ஆனது என்பது கருத்து. கேகயத்திலிருந்து அயோத்திக்கு வந்தது முதல் அழுத கண்ணீருடன் இருக்கும் பரதனுக்கு அருவிக் கண்ணினன் என்ற அடைமொழியைக் கவிஞன் தந்திருப்பது சுவைக்கத் தக்கது.

13. நடுங்கினன், நாத்தடுமாறி நாட்டமும்
இடுங்கினன்; மகளிரின் இரங்கும் நெஞ்சினன்;
ஒடுங்கிய உயிரினன்; உணர்வு கைதரத்
தொடங்கினன்; அரசவைக்கு உள்ளம் சொல்லுவான். (2354)

(கைதர-உதவ; உள்ளம்-உள்ளக் கருத்து; நாட்டம்-கண்; இடுங்குதல்-குழிவிழிந்து உள் செல்லுதல் / சுருங்குதல்)

முனிவன்சொற்கேட்ட பரதன்உள்ளம் நடுங்கினான்; நாத்தழு தழுத்துத் தடுமாறியது; கண்களும் சுருங்கிப் போய் குழிவிழுந்து உள்ளே சென்றன. பெண்டிரைப் போலப் புலம்பி அழும் உள்ளத்தவனானான்; உயிரும், மூச்சுக்காற்றும் நின்றதைப் போல மூர்ச்சை அடைந்தான்; பின்னர்

Koviloor Digital Library

ஒருவாறு உணர்வு திரும்பி வந்து உதவி செய்ய, தனது உள்ளக் கருத்தை அச்சபையினருக்குக் கூறத் தொடங்கினான்.

துன்பம் நேரும்போது உடல் நடுங்குதலும், நாத்தழுதழுத்தலும், கண்கள் சுருங்குதலும், மூர்ச்சயைடைதலும், அழுகை வருதலும் இயல்பு. துன்பத்தில் கண்கள் இடுங்கும் தன்மையால்தான் துன்பத்திற்கு இடுக்கண் என்பது காரணப் பெயர். பொதுவாகப் பெண்கள் துன்பம் சிறிதும் தாங்க இயலாத மெல்லிய மனம் படைத்தவர்கள். எனவே, மகளிரின் இரங்கும் நெஞ்சினான் என்றார்.

14. பரதன் தன் உள்ளக் கருத்தைக் கூறுதல்

''மூன்று உலகினுக்கும் ஒரு முதல்வனாய், முதல்
தோன்றினன் இருக்க, யான்மகுடம் சூடுதல்
சான்றவர் உரைசெயத் தருமம் ஆதலால்
ஈன்றவள் செய்கையில் இழுக்கு உண்டாகுமோ?'' (2355)

(இழுக்கு-குற்றம்; முதல்வன்-தலைவன்; முதல்-மூத்தவன்)

''விண், மண், பாதாளம் என்னும் மூன்று உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைவனாய், எனக்கு மூத்தவனாய் முதலில் பிறந்த இராமன் இருக்க, இளையவனான நான் மணிமுடி சூடுதல் தருமம், நியாயம் என்று ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களே கூறுவார்களேயானால், என்னைப் பெற்றெடுத்த தாய் கைகேயி செயற்பாட்டில் ஒரு குற்றம் உண்டு என்று சொல்லமுடியுமோ?''.

மூத்தவர்க்கு உரித்து அரசு என்ற முறைமை தவறி, மூத்தவனான இராமன் இருக்கும்போதே என்னை முடி புனைய வேண்டுவது, தருமம் அன்று என்று வசிட்டன் முதலியவர்களின் கூற்றைப் பழித்துரைக்கிறான் பரதன். அவ்வாறு செய்வது தருமத்தின் பாற்பட்டதென்றால் என் தாய் கைகேயி வரம் கேட்டதில் என்னதவறு இருக்கமுடியும்? என்பது பரதனின் வாதம். தன்னைஅரசேற்கஅழைத்ததற்காகவசிட்ட மாமுனிவரைப் பரதன் பழித்து உரைத்ததாக வான்மீகம் கூறும்.

15. ''அடைவுஅரும் கொடுமை என் அன்னை செய்கையை
நடைவரும் தன்மை நீர் ''நன்று இது'' என்றிரேல்,
இடைவரும் காலம் இரண்டும் ஈண்டு நீத்து, இது
கடைவரும் தீநெறிக் கலியின் ஆட்சியோ?'' (2356)

(நடை-நல்லொழுக்க நெறி; அடைவுஅரும்-முறையற்ற; நீத்து-கடந்து; காலம்இரண்டு-திரோதாயுகம், துவாபர யுகம்)

பிறர் எவராலும் செய்யமுடியாத முறையற்ற கொடுமைகளைச் செய்யும் என் அன்னையின் செய்கையை நல்லொழுக்க நெறியில் நிற்கும் குணம் படைத்த நீங்கள் எல்லாம் ''இது நல்லது தான்'' என்று

Koviloor Digital Library

கூறுவீர்களேயானால் இப்போது இருக்கின்ற திரேதாயுகம், துவாபர யுகம் ஆகிய இரண்டு யுகங்களையும் கடந்து, கடைசியில் வருகின்ற தீய செயல்களைக் கொண்ட கலி புருஷனின் ஆட்சிக் காலமாகிய கலியுகம் வந்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றுகிறது'' என்று பரதன் அவர்களை இகழ்ந்து கூறினான்.

இராமாயண காலம் கிரேதாயுகம். இடைப்பட்ட இரண்டு யுகங்கள் திரேதாயுகமும், துவாபர யுகமும், இறுதியில் வரவேண்டியது கலியுகம் என்பதாம். கலிகாலத்தில் மிகுந்த தீச்செயல்கள் நிகழ்ந்து, பிரளயம் உண்டாகி உலகம் அழியும் என்பது ஒரு புராணக் குறிப்பு. இப்பொழுது சான்றோர்களாகிய இவர்கள் எல்லோரும் முறையற்ற செயலை நற்செயல் என்று கூறுவார்களே யானால் இப்போதே கலிகாலம் வந்துவிட்டதோ என்று நினைக்கத் தோன்றுவதாக பரதன் இகழ்கின்றான் என்க. கலிகாலத்தில் தருமம் தடுமாறி அதர்மம் ஓங்கும் என்பது நூற்கொள்கை. கலிகாலத்தின் தன்மையைப் பல நூல்களும் கூறும். ''தருமம் தவிர்ந்து, பொறை கெட்டு, சத்தியம் சாய்ந்து, தயை தெருமந்து, தன் பூசனை முழுதும் சிதைய அக்கலியே பொரும் அந்தக் காலம்'' என்பது திருவரங்கத்து மாலை. நான்கு யுகங்களையும், சத்தியம், தவம், சீலம், கருணை என்ற நான்கு கால்களை உள்ள ஒரு காளையாகவும் உருவகம் செய்து கூறுவர். ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு கால் ஒடிந்து போகும் என்றும் கலியுகத்தில் நான்காவது காலும் ஒடிந்து அக்காளை இறந்துபடும் என்றும் அப்பொழுது பிரளயம் வந்து உலகம் அழியும் என்றும் பாகவதம் கூறும். இவை தவிர மகாபாரதம், விஷ்ணு புராணம் போன்ற நூல்களும் கலியுகத்தில் அறம் சுருங்கி அதர்மம் மேலோங்கும் என்று குறிப்பிடுகின்றன.

16. வேத்தவை இருந்த நீர், விமலன் உந்தியில்
பூத்தவன் முதலினர் புவியுள் தோன்றினார்,
மூத்தவர் இருக்கவே, முறைமையால், நிலம்
காத்தவர் உள்ளெனின், காட்டிக் காண்டிரால். (2357)

(வேத்துஅவை-வேந்து அவை / அரச சபை; விமலன்-திருமால்; பூத்தல்-தோன்றுதல்; காட்டிக் காண்டீர்-காட்டுங்கள் / சான்றுரைத்து உறுதி செய்தல்)

''அன்றுதொட்டு இன்று வரை எல்லா அரசவையிலும் அங்கம் வகிக்கும் நீங்கள், திருமாலின் திருஉந்தித் தாமரையில் தோன்றியவன். முதலாக உலகத்துத் தோன்றிய அரச வம்சத்தினருள், அரசுரிமைக்குரிய மூத்தவர் இருக்க, அவரை விடுத்து, முறைமைப்படி, இளையவர் யாராவது இவ்வுலகை ஆண்டு இருக்கிறார்களா? இருந்தால் எனக்கு எடுத்துக் காட்டி விளக்குங்கள்'' என்று பரதன் கேட்டான்.

''சூரியகுல மரபிலும் சரி, வேறு எந்த அரசகுல மரபிலும் சரி, உலகம் தோன்றியது முதலாக இன்றுவரை, எந்த அரசகுலத்திலாவது அரசு

Koviloor Digital Library

புரிதற்குரிய மூத்தவன் இருக்கும்போது அவனை விடுத்து, இளையவர் யாரையாவது எங்காவது அரசனாக ஆக்கி இருக்கிறார்களா? சொல்லுங்கள். அவ்வாறு இருந்தால் எனக்கு எடுத்துக்காட்டுக் கூறி விளக்குங்கள்'' என்கிறான் பரதன். பரதன் வசிட்டனை நேரிடையாகவே நிந்தித்து உரைத்தான் என்று வான்மீகம் கூறும். முறைக்கு மாறாகத் தன்னை முடிசூட்டிக் கொள்ளச் சொல்லுதல் முறையற்ற செயலாகும் என்பது பரதன் கருத்து. மும்மூர்த்திகளிலும் முதல் மூர்த்தியாகிய திருமால்தான் காத்தல் தொழிலை மேற்கொண்டார். எனவே, எந்தக் குலத்திலும் மூத்தவரும் முதன்மையானவருமே அரசு காக்கும் பொறுப்பை ஏற்பதற்குத் தகுதியுடையவர் என்பதாம்.

17. நன்னெறி என்னினும், நான் இந்நானில
மன்னுயிர்ப் பொறை சுமந்திருந்து வாழ்கிலேன்;
அன்னவன் தனைக் கொணர்ந்து, அலங்கல் மாமுடி
தொன்னெறி முறைமையின் சூட்டக் காண்டிரால். (2358)

(பொறை-பாரம் / சுமை; அலங்கல்-மலர்மாலை)

''நீங்கள் எல்லோரும் சேர்ந்து இதுதான் நல்லநெறி'' என்று கூறினாலும், நான் இந்த பூமியில் நிலைபெற்ற உயிர்களின் சுமையைச் சுமந்து கொண்டு அரசு புரிந்து கொண்டிருக்கமாட்டேன். அவ்வரசுரிமைக்கு உடையவனான இராமபிரானை மீண்டும் இங்கு அழைத்துக் கொண்டு வந்து, மலர் மாலையுடன் கூடிய சிறந்த மணி மகுடத்தை பழமையான முறைமைப்படி, அவனுக்குச் சூட்டப் போகிறேன். அதை நீங்கள் அனைவரும் காணுங்கள்'' என்றான்.

அமைச்சர் பெருமக்களும், குலகுருவும் எவ்வளவு வற்புறுத்தினாலும், தான் முடிசூடிக் கொள்ளப் போவதில்லை என்பதையும், இந்நாட்டிற்கு இராமபிரானைத் திரும்பவும் காட்டிலிருந்து அழைத்து வந்து முடிசூட்டி வைத்து அவனையே அரசுரிமையை ஏற்கச் செய்வேன் என்றும் பரதன் தன் கருத்தைத் தெளிவாக வெளிப்படையாகக் கூறினான் என்க. அவ்வாறு இராமபிரானை அழைத்துவந்து முடிசூடச்செய்தலே மரபும் ஆகும் என்பதைப் பின்னும் ''தொல் நெறி முறைமையின்'' என்று கூறி உணர வைக்கிறான் பரதன். நானிலம் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு பாகுபாடுடைய பூமி என்பதாம்.

18. ''அன்று எனின், அவனொடும் அரிய கானிடை
நின்று, இனிது இருந்தவம் நெறியின் ஆற்றுவென்;
ஒன்று இனி உரைக்கின், என் உயிரை நீக்குவென்''
என்றனன்; என்றபோது, இருந்த பேரவை. (2359)

(ஆற்றுதல்-செய்தல்) குளகப்பாடல்

Koviloor Digital Library

''அவ்வாறு இராமபிரானைக் காட்டிலிருந்து கொணர்ந்து முடிசூட்ட இயலவில்லை என்றால், நானும் அவனோடு சேர்ந்து ஆற்றுதற்கரிய பெருந்தவத்தை அக்காட்டிலேயே இருந்து முறையாக மேற்கொள்வேன். இதைத் தவிர்த்து நீங்கள் வேறு ஏதேனும் உரைத்தால் என் உயிரை நீக்கிக் கொள்வேன்'' என்று உறுதிபடக் கூறினான்; அவ்வாறு அவன் கூறிய போது, அந்தப் பெரிய அரசவையில் இருந்தவர்கள்-பாடல் முடிய வில்லை. தொடர்கிறது.

பரதன் மூன்று செய்திகளை மிகத் தெளிவாகக் கூறுகிறான். ஒன்று ''நான் சென்று இராமபிரானை மீண்டும் அழைத்துவந்து முடிசூடச் செய்வேன்; அதற்கு அவன் மறுத்தாலோ, அல்லது அது முடியாமற் போய்விட்டாலோ, நானும் அவனுடன் சேர்ந்து அந்தக் காட்டிலேயே தங்கியிருந்து ஆற்றுதற்கரிய பெருந்தவத்தை இயற்றுவேன்; இதைத் தவிர்த்து, நீங்கள் வேறு ஏதாவது கூறி என்னை வற்புறுத்தினால் நான் என் உயிரை நீக்கிக் கொள்ளுவேன்.'' என்று உறுதியாகக் கூறுகிறான் பரதன். இதனைக் கேட்ட அவையோர் என்ன செய்தார்கள் என்பதைப் பின்வரும் பாடல்களில் கூறுகிறார்.

19. அவையோர் மகிழ்ச்சியுறல்

''ஆன்ற பேர் அரசனும் இருப்ப, ஐயனும்
ஏன்றனன் மணிமுடி ஏந்த, ஏந்தல் நீ
வான்தொடர் திருவினை மறுத்தி; மன்இளந்
தோன்றல்கள் யாருளர் நின்னின் தோன்றினார்?'' (2360)

(ஆன்ற-நிறைந்த; ஏன்றனன்-உடன்பட்டான்; ஏந்தல்-பெருமை யுடையவன்; தொடர்-உயர்ந்த; மன்-அரசகுலம்; ஏந்து-சூட)

''நற்பண்புகள் நிறைந்த பேரரசனான தசரதன் உயிருடன் இருந்த போதே, இராமபிரானும் இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற முடியைச் சூடிக்கொள்ள உடன் பட்டான்; ஆனால் பெருமைக்குரிய பரதனே! நீயோ, தந்தை உனக்குக் கொடுத்ததும், தாய் உனக்கு வாங்கித் தந்ததுவுமான வானளவு உயர்ந்த அரசச் செல்வத்தை மறுத்துரைக்கின்றாய். அரசிளங் குமரர்களுள் உன்னைப் போலப் பெருந்தன்மையுடையவர்கள் வேறுயார் பிறந்திருக்கிறார்கள்? யாரும் இல்லை''.

தசரதனாகிய மூத்தவன் உயிருடன் இருக்கும்போதே, தசரதன் விருப்பத்திற்கிணங்க முடிசூட்டிக் கொள்ள இராமன் உடன்பட்டான்; ஆனால் நீயோ தசரதன் உயிரோடு இல்லாதபோதும், மூத்தவனான இராமன் நாட்டில் இல்லாதபோதும், தாய், வரத்தால் உனக்கு அரசச் செல்வத்தைத் தந்தையிடமிருந்து வாங்கித் தந்தபோதும், அமைச்சர்களும் குலகுருவுமாகிய நாங்கள் உன்னை வற்புறுத்தியபோதும் நீ மணிமுடி சூட மறுக்கிறாய். இதுவன்றே பெருந்தன்மை? உன் குலத்தில் தோன்றிய அரசிளங்குமரர்களுள் உன்னைப் போல இப்பெருந்தன்மை

Koviloor Digital Library

உடையவர்கள் யார் தோன்றியிருக்கின்றார்கள் என்றார்கள் என்பதாம். இராமனிலும் நீ மேம்பட்டவன் என்று இவர்கள் கூறியது உபசார வழக்கு என்க.

20. ''ஆழியை உருட்டியும், அறங்கள் போற்றியும்,
வேள்வியை இயற்றியும், வளர்க்க வேண்டுமோ?
ஏழினோடு ஏழ் எனும் உலகம் எஞ்சினும்
வாழிய நின்புகழ்!'' என்று வாழ்த்தினார். (2361)

(ஆழி-ஆணைச்சக்கரம்; போற்றுதல்-பாதுகாத்தல்; எஞ்சுதல்-அழிதல்)

அரசவையோர் பரதனைப் பார்த்து, ''நீ அரசேற்று ஆணைச் சக்கரத்தைச் செலுத்தியும், சிறந்த தருமங்களைப் பாதுகாத்தும், யாகங்களைச் செய்தும்தான் உன் புகழை வளர்த்துக் கொள்ளவேண்டுமோ? அவ்வாறு செய்ய வேண்டுவதில்லை; கீழ் ஏழு, மேல் ஏழு என்கின்ற பதினான்கு உலகங்களும் அழிந்துபட்டாலும், உன்னுடைய புகழ் அழியாது நிலைத்திருக்கட்டும்'' என்று வாழ்த்துரைத்தார்கள்.

அரசனாகி முயன்று பெறும் பெரும்புகழினைக் காட்டிலும் இப்பொழுது நீ அரசைத் துறந்து பெற்ற புகழ் பெரியது. அழியாதது என்பது கருத்து.

21. பரதன் சத்துருக்கனனிடம் கூறுதல்

குரிசிலும் தம்பியைக் கூவி, கொண்டலின்
முரசறைந்து, ''இந்நகர் முறைமை வேந்தனைத்
தருதும் ஈண்டு'' என்பது சாற்றித் தானையை
விரைவினில் எழுக! என விளம்புவாய்'' என்றான். (2362)

(குரிசில்-ஆண்களிற் சிறந்தோன் / உபகாரி; கொண்டல்-மேகம்; தருதல்-அழைத்துவருதல்; கூவி-அழைத்து)

ஆண்களிற் சிறந்தவனாகிய பரதனும், தனது தம்பி சத்துருக்கனனை அழைத்து, ''மேகத்தைப் போல முரசை முழக்கி, ''இந்நகரத்துக்கு முறைப்படி உரிமை உள்ள அரசனாகிய இராமபிரானை மீட்டு இங்கு அழைத்துக் கொண்டு வருவோம்'' என்று மக்களுக்குச் சொல்லி, நமது படைகளையும் அதற்காக விரைவினிற் செல்லவேண்டும், புறப்படத் தயாராகுக'' என்றும் கூறுக!'' என்று பரதன் கூறினான்.

மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுபோல் பரதன் அரசாளப் போவதில்லை என்பதும் அரசரிமையுடையவனான இராமனைக் கானகத்திலிருந்து இந்நகருக்கு அழைத்து வருவோம் என்று மக்களுக்கு முரசறைந்து அறிவிக்க வேண்டும் என்பதும், அதற்குத் தானும் தன் தம்பியும் மட்டும் போகாமல், மக்களும் படைகளும் புடை சூழப்

Koviloor Digital Library

போகவேண்டும் என்பதும் பரதன் எண்ணம். அவற்றைத் தம்பியின் மூலம் அறிவித்தான் என்க. முறைமை வேந்தன் என்ற சொல்லாட்சிக்கு மரபு முறைப்படி அரசுரிமை உடைய மூத்தவன் என்பது பொருள். பரதன் சத்துருக்கனனுக்குச் சொல்ல, சத்துருக்கனன் வள்ளுவருக்குக் கூறி முரசு அறைவிக்கச் செய்தான் என்பதாம். பரதன் விரைவாகச் செயல்பட்டமை பாடலில் நன்கு தெரிகிறது. காரணம் வேறு ஏதேனும் இடையூறு வரும் என்பதே. இதற்கு முன்பே, செல்லும் ெ ரியையெல்லாம் செப்பனிட அந்தந்தத் தொழில் வல்லாரை அனுப்பி வைத்தான் என்றும், சுமந்திரனால் சேனையைத் தயார் நிலையில் இருக்கும்படி செய்தான் என்றும் வான்மீகம் இதனை விரிவாகக் கூறுகிறது.

22. மக்கள் மகிழ்ச்சி அடைதல்

நல்லவன் உரைசெய, நம்பி கூறலும்,
அல்லலில் அழுங்கிய அன்பின் மாநகர்
ஒல்என ஒலித்ததால்; உயிரில் யாக்கையைச்
சொல்லெனும், அமிழ்தினால் துளிர்த்தது என்னவே. (2363)

(துளிர்த்தது-தெளித்தது; அழுங்கி-தோய்ந்து; நம்பி-ஆடவரிற் சிறந்தவன்; ஒல்-ஒலிக்கும்படி)

அத்தகைய நற்குணங்களிற் சிறந்து விளங்குபவனான பரதன் அவ்வாறு சொல்லியதை, ஆடவரில் சிறந்தவனான சத்துருக்கனன் மக்களுக்குக் கூறியதும், இராமனைப் பிரிந்ததனால் துன்பக்கடலில் மூழ்கியிருந்த அந்த அன்புடைய சிறந்த அயோத்தி நகர மக்கள், மகிழ்ச்சியால் பேராரவாரம் செய்தனர். உயிர் இல்லாத உடம்பு போன்றிருந்த அந்நகர மக்களின் மீது, இராமனைக் கொணர்வோம், என்ற சொல் தேவாமிர்தத்தைத் தெளித்தது போன்று மகிழ்ச்சியுற்று ஆரவாரித்தனர்.

உயிர்-இராமன்; யாக்கை-அயோத்தி நகர மக்கள்; இராமனைக் கொணர்வோம் என்ற சொல் தேவாமிர்தம்; அமிழ்தத்திற்கு உயிர் ஊட்டும் தன்மை உண்டு. எனவே, உயிரில்லாதிருந்த அந்த மக்களின்மீது இந்த அமிழ்தத்தைத் தெளித்தவுடன் அவர்களுக்கு உயிர் வந்தது என்பதாம். பட்டமரம் மழைத்துளியால் துளிர்ப்பது போல, உயிரற்ற உடல் தேவ அமிழ்தத் துளியால் உயிர் பெற்றது என்பதாம். இத்தகைய ஒரு நிகழ்ச்சி திருவிளையாடற் புராணத்திலும் காணப்படுகிறது. சிவபெருமான் தனது சடைமுடியில் உள்ள சந்திரனின் அமிழ்தத்துளிகளை மதுரை மாநகர மக்களின் மீது தெளித்ததால் பாம்பின் நஞ்சால் சாம்பிக் கிடந்த அந்நகர மக்கள் உயிர்பெற்று எழுந்தனர் என்பது நாகம் எய்த படலத்தினால் அறியலாம். ''அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்'' என்பது தொல் காப்பியம்.

Koviloor Digital Library

23. கவிக்கூற்று

அவித்த ஐம்புலத்தவர் ஆதியாய் உள
புவித்தலை உயிர்எலாம், ''இராமன் பொன்முடி
கவிக்கும்'' என்று உரைக்கவே களித்தலால், அது
செவிப்புலம் நுகர்வது ஓர் தெய்வத்தேன் கொலாம்? (2364)

(கவித்தல்-சூடுதல்; அவித்த-அடக்கிய; ஆதியாய்-முதலாக)

''இராமன் நாடு திரும்பிவந்து பொன்னாலாகிய மணிமகுடம் சூட்டிக் கொள்ளப் போகிறான்'' என்று சத்துருக்கனன் கூறிய அளவிலே, ஐம்புலன் களையும் அடக்கியாள்பவரான முனிவர்கள் முதலாக நாட்டில் உள்ள உயிரினங்கள் எல்லாரும் மிக்க மகிழ்ச்சியுற்றனர். அம்மகிழ்ச்சி செவியினால் உணர்தற்குரிய ஒப்பற்றதொரு தெய்வீகத் தன்மை வாய்ந்த தேன் போன்றிருந்தது என்கிறான் கம்பன்.

முன்பு இராமன் கானகம் புகும்போது முனிவர்கள் எல்லாம் துயருற்றனர் என்ற கவிஞன் இப்போது அதை மறவாமல் அவன் மீண்டும் வரப்போகிறான் என்பதைக் கேட்டவுடன் பெரும் மகிழ்ச்சியுற்றனர் என்கிறான். இன்பதுன்பங்களை ஒப்ப மதிக்கும் ஞானியரே களித்தனர் என்பதாம். ''பருவரல் இன்பம் என்ற இரண்டும் ஒக்க நோக்கிய யோகரும் அரும்துயர் உழந்தார்'' என்றார் முன்பு. தேனின் செயல் களிப்பிப்பது. மகிழ்ச்சி செய்வது. அது நாவினால் பருகுவது. அதை வேறுபடுத்திச் செவியினால் பருகுவது ஒரு தேன் இருந்தால் அது எப்படிக் களிப்புத் தருமோ அப்படி மகிழ்ச்சியைத் தந்ததனால் இது தெய்வத் தேன் என்றார். ''தெய்வத்தேன்'' என்பது ஒரு அற்புதமான சொல்லாட்சி. இந்தத் தேன் சாதாரணத் தேனைப் போலக் களிப்பும் மயக்கமும் தருவது அன்று. இது தெளிவும் உயர்வுமுள்ள களிப்பைத் தரும் எனவே, இது தெய்வத் தேன் என்பதாம்.

24. படுமுரசு அறைந்தனர், ''பரதன் தம்முனைக்
கொடி நகர்த் தரும்; அவற்கொணரச் சேனையும்
முடுகுக'' என்ற சொல் மூரி மாநகர்
உடுபதி வேலையின் உதயம் போன்றதே! (2365)

(முடுகுக-விரைவதாக; மூரி-வலிமை; உடுபதி-சந்திரன்; உடு-நட்சத்திரங்கள்; பதி-கணவன் / தலைவன்; உடுபதி-நட்சத்திரங்களுக்குத் தலைவன் சந்திரன்; சொல்-செய்தி; படு-ஒலிக்கும்; வேலை-கடல்)

''பரதன் தனது அண்ணனாகிய இராமனை, கொடிகளாற் சூழப்பெற்ற இவ்வயோத்தி மாநகருக்கு அழைத்துவரப் போகிறான்; அவனை இங்கே அழைத்துவரும்பொருட்டு எல்லா வகைச்சேனைப் படைகளும் விரைந்து எழுக'' என்று வள்ளுவர் ஒலிக்கின்ற முரசறைந்தனர். அவ்வாறு அவர்கள் கூறிய சொல்லைக் கேட்ட, அளவில்லாத வலிமையும் பெருமையும்

Koviloor Digital Library

வாய்ந்த சிறந்த அயோத்தி நகரத்து மக்கள், சந்திரனைக் கண்டதும் ஆரவாரிக்கும் கடலைப் போல மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர்.

முன்பாட்டில் தெய்வத்தேன் என்றவர் இப்பாடலில் உடுபதி வேலையின் உதயம் என்கிறார். சந்திரன் உதிக்கும் வேளையில் கடல் மிகுந்து பொங்கி எழுந்து ஆரவாரிக்கும் அல்லவா? அதுபோல இந்தச் சொல்லைக் கேட்டவுடன் அயோத்தி நரக மக்கள் மகிழ்ச்சி மிகுதியால் கடல்போல் ஆரவாரித்தனர் என்பதாம். அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் கணவன் சந்திரன் என்பது புராண மரபு.

25. படைகள் புறப்படுதல்

எழுந்தது பெரும்படை, ஏழுவேலையின்
மொழிந்த பேர் ஊழியின் முழங்கி, முந்துஎழ
அழிந்தது கேகயன் மடந்தை ஆசை; போய்க்
கழிந்தது துயர், நெடுங்காதல் தூண்டவே. (2366)

(மொழிந்த-நூல்களில் சொல்லப்பட்ட)

நூல்களில் கூறப்பட்டிருப்பது போல ஊழி இறுதிக் காலத்தில் பொங்கி யெழுந்து ஆரவாரம் செய்யும் ஏழுகடலைப் போலப் பெரிய படைகள் எல்லாம் ஒன்று திரண்டு புறப்பட்டு ஆரவாரித்தன; அதற்கு முற்பட்டு எழுந்த கேகய அரசனது மகளாகிய கைகேயியின் ஆசையானது-பரதன் நாடாளவேண்டுமென்பது-நிராசையாகி நிர்மூலமாகி அழிந்து போயிற்று; இராமன் பிரிவால் துன்புற்றுத் துயரத்தில் மூழ்கியிருந்த அயோத்தி நகர மக்களின் துயரம் ஒருவாறு நீங்கிற்று.

படையின் ஆரவாரத்திற்கும் பரப்பிற்கும் ஊழியின் ஏழுகடல்கள் உவமை; இங்கே வான்மீகம் ''கழிந்தது'' என்ற சொல்லுக்குப் பெருகிற்று என்று பொருள் கொண்டு, கைகேயி தான் செய்த செயலுக்கு வருந்தி, இராமனிடம் அன்பு மீதூரப் பெற்று, அவனைஅழைத்துவர அவளும் புறப்பட்டாள் என்று கூறுகிறது. இது சிந்தித்தற்கு உரியது. அதனையும் கருத்தில் கொண்டு, கம்பன் வார்த்தைகளைக் கையாண்டிருக்கும் நயம் நோக்குக.

26. படைகள் சென்ற தன்மை [27 பாடல்கள்]

பண்ணின புரவி, தேர், பகடு, பண்டியும்
மண்ணினை மறைத்தன; வளர்ந்த மாக்கொடி
விண்ணினை மறைத்தன; விரிந்தமாத் துகள்
கண்ணினை மறைத்தன; கமலத்தோனையே. (2367)

(பண்ணின-அலங்கரிக்கப்பெற்ற; பகடு-யானை; துகள்-புழுதி; கமலத்தோன்-பிரமன் / நான்முகன்)

Koviloor Digital Library

அலங்கரிக்கப்பெற்ற குதிரைகள், தேர்கள், யானைகள், வண்டிகள் இவைகள் யாவையும் அளவற்றவனவாய் எழுந்ததால் நிலத்தில் வெற்றிடமே இல்லையென்னும்படி பூமியையே மறைத்து விட்டன; அவைகள் ஏந்திச் சென்ற பெரிய துகிற் கொடிகள் ஆகாயம் முழுவதையும் மறைத்துவிட்டன; அப்படைகள் சென்றதனால் உண்டாகிய புழுதிப் படலம் சத்தியலோகத்தில் உள்ள திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய நான்முகனின் கண்களைக் கூட மறைத்துவிட்டன.

படைகளின் நெருக்கம் மிகுதியாகச் சிறப்பிக்கப்பட்டது. அவற்றால் எழுந்த புழுதித்துகள் விண்ணுலகுவரை எட்டியது என்பது உயர்வு நவிற்சி.

27. ஈசன் இவ்வுலகினை அழிக்கும் நாள் எழும்
ஓசையின் நிமிர்ந்துளது, ஒல்லென் பேர்ஒலி;
காசையில் கரியவர் காண மூண்டு எழும்
ஆசையின் நிமிர்ந்தது அவ்அனிக ராசியே. (2368)

(ஈசன்-சிவபெருமான்; நிமிர்தல்-மேற்சென்றது / மிக்கது; காசை-காயாம்பூ / காசா / காயா; அனிகம்-சேனை; ராசி-கூட்டம் / திரள்)

அழித்தற் கடவுளாகிய சிவபெருமான், இந்த உலகத்தை அழிக்கின்ற சம்காரகாலத்தில் எழுகின்ற ஓசையைக்காட்டிலும், இப்படை எழுந்ததால் உண்டான ஒல்லென்னும் பேர் ஆரவாரம் மிகுந்திருந்தது; காயாம்பூப் போன்ற கரு நிறமுடைய இராமபிரானைக் காணவேண்டும் என்று ஆசை தூண்டுவதால் எழும் ஆசையைக் காட்டிலும், அச்சேனைகளின் திரள் மிகுந்திருந்தது.

உருத்திரன் இவ்வுலகை அழிக்கும் நாள் ஊழிக்காலம்-பிரளய காலம்; அப்போது ஐம்பெரும்பூதங்களும் ஒன்றுக்குள் ஒன்று அடங்கிப் பேரோசை புரிந்து அண்டகடாகங்கள் வெடிக்கும், இவ்வுலகு அழிந்துபோகும் என்பது புராணக்குறிப்பு. அந்தப் பேரோசையை விட, இப்பொழுது எழுகின்ற இந்தப் படையின் பேரோசை மிக்கிருந்தது என்றும், இராம பிரானைக் காணப் போவதால் எழும் ஆசையைவிட இந்தச் சேனைகளின் கூட்டம் மிக்கிருந்தது என்றும் கூறினார். ஈசன் என்பது சிவபெரு மானுக்குரிய சிறப்புப் பெயர். திருமாலின் மேனி நிறத்தை "நீலநெடும் கிரியும், மழைமுகிலும், பவ்வநெடு நீரும், காயாவும் நிகர்க்கும் மேனிக் கோலம்" என்று வில்லிபாரதம் கூறும்.

28. ஆண்யானைகளுடன் பெண் யானைகள் செல்லுதல்

படியொடு திருநகர் துறந்து, பல்மரம்
செடியொடு தொடர் வனம் நோக்கி, சீதையாம்
கொடியொடு நடந்த அக்கொண்டல் ஆம்எனப்
பிடியொடு நடந்தன பெருங்கை வேழமே. (2369)

Koviloor Digital Library

(படி-நிலம் / பூமி / நாடு; கொண்டல்-மேகம்; தொடர்-நெருங்கியுள்ள; பிடி-பெண்யானை; வேழம்-ஆண்யானை)

இப்பூமியிலுள்ள கோசல நாட்டோடு, செல்வம் மிக்கு விளங்குகின்ற அயோத்தி மாநகரத்தையும் விட்டு நீங்க, பலவகையான மரங்கள், செடிகளோடு நெருங்கியுள்ள கானகத்தை நோக்கி, சீதை என்கின்ற பூங்கொடியோடு, இராமன் என்கின்ற மேகம் நடந்து சென்றாற் போல, பெரிய துதிக்கைகளையுடைய களிற்று யானைகள் தமது பெண் யானைகளுடன் நடந்து சென்றன.

இங்கே படி என்ற பொதுப் பெயரால் பூமியை உணர்த்திச் சிறப்பாகக் கோசல நாட்டைக் குறித்தார். சீதை பெண் யானையாகிய பிடிக்கும், இராமன்ஆண்யானையாகிய களிற்றுக்கும் உவமை. அதே போல முன்பும் இராமனைக் களிறாகவும், சீதையைப் பிடியாகவும் கூறியமை நினைவு கூர்க. ''நாகம் தனி வருகின்றது பிடியொடு என நடவா'' என்பது பாடல். கானகத்திலும் ஆண்களைப் போல் மரங்களும், பெண்களைப் போலப் பூங்கொடிகளும் பூஞ்செடிகளும் தொடர்ந்து நிறைந்திருந்தன என்பதாம். ''வேழமும் பிடியும், மரமும் செடியும், கொடியும் கொண்டலும் என்று ஒன்றையொன்று இணைத்துக் கூறியது ஒரு நயம். கொடி என்பதனை மின்னற்கொடியென்றும் கூறுவர்.

29. பெண்கள் பிடிகளின் மேல் ஏறிச் செல்லுதல்

சேற்றுஇள மரை மலர் சிறந்தவாம் எனக்
கால்தளம் பொலிதரு கன்னிமாரொடும்
ஏற்று, இளம் பிடிக்குலம், இகலில் மெல்நடை
தோற்று, இளமகளிரைச் சுமப்ப போன்றவே. (2370)

(மரை-தாமரை; கால்தளம்-பாதங்கள்; குலம்-கூட்டம்; ஏற்று-எதிர்த்து; இகல்-போர் / மாறுபாடு)

சேற்றில் அன்றலர்ந்த செந்தாமரை மலர் போலச் சிறந்து விளங்கும் அழகிய பாதங்களைஉடைய இளமங்கையர்களோடு எதிர்த்து அவர்களின் மெல்லிய நடைக்குத் தோற்றதனால், இளமையான பெண் யானைக் கூட்டங்கள், அந்த அழகிய இளம்பெண்களைச்சுமந்து கொண்டு செல்வன போல, பெண் யானைகளின் மேல் இளம்பெண்கள் ஏறிச் சென்றனர்.

இளம்பெண்கள், இளம் பெண் யானைகளின் மேல் ஏறிப் படைகளுடன் சென்றனர். இது எப்படி இருந்தது என்றால் அம்மங்கையருடைய சிவந்த தாமரை மலர் போன்ற பாதங்களுக்கும் அவர்களின் மெல்லிய நடைக்கும் தோற்றுப் போனதால், அதற்குரிய தண்டனையாக அவர்களைச் சுமந்து கொண்டு செல்வன போன்றிருந்தது என்று கம்பர் தமது குறிப்பை யானைகளின் மேல் ஏற்றிப் பாடுகிறார். தோற்றவர் வென்றவரைச் சுமப்பது வழக்கு. பொதுவாகப் பெண்கள் ஆண் யானைகளின்மேல் ஏறிச்செல்ல மாட்டார்கள். அது அவர்களின்

Koviloor Digital Library

பெண்மைக்கும் கற்புக்கும் ஏற்றதன்று என்பதால் பெண் யானைகளின் மீது ஏறிச் செல்வதே மரபு. அவர்களின் பாதங்களுக்குச் செந்தாமரையும், நடைக்குப் பிடியும் உவமைகள்.

30. துகிற்கொடிகள் செல்லும் காட்சி

வேதனை வெயில் கதிர் தணிக்க, மென்மழைச்
சீத நீரோடு நெடுங்கொடியும் சென்றன;
கோதை வெம்சிலையவள் கோலம் காண்கிலா
மாதரின் நுடங்குவ, வரம்புஇல் கோடியே. (2371)

(வெயில்-சூரியன்; கதிர்-கிரணங்கள்; மழை-மேகம்; சீத-குளிர்ந்த; கோதை-மாலை; நுடங்குதல்-மெலிதல் / அசைதல்; வரம்புஇல்-அளவில்லாத; கோடி-பேரெண்)

சூரியனது கிரணங்களின் வேதனையைத் தணிவித்தற்பொருட்டு, மெல்லிய மேகத்தில் குளிர்ந்த நீரைக் கொண்டு சொரிகின்ற நீண்டு உயர்ந்த துகிற் கொடிகளும் படைகளுடன் சென்றன; மாலை அணிவிக்கப்பட்ட கொடிய வில்லை ஏந்தியவனான இராமபிரானின் அழகிய முடிசூடும் விழாவினைக் காணப் பெறாத மங்கையர்கள், கண்களில் நீர் சொரிந்து அசைவன போல எண்ணற்ற கோடிக்கணக்கான கொடிகளும் உடன் சென்றன.

படையுடன் வந்த துகிற் கொடிகள் அளவில் கோடிக் கணக்காக இருந்தன. அவை நிழல் தந்தது மட்டுமின்றி உயர்ச்சியில் மேகத்தில் தோய்ந்து அங்கிருந்து மெல்லிய பனிநீரையும் சொரிந்து தண்மையையும் தந்தன என்பதாம். பெண்களின் கண்ணீருக்கு மேகத்தின் குளிர்ந்த நீர் உவமை. பெண்கள் நடப்பது கொடிகள் அசைவதற்கு உவமை. கோதை என்ற சொல்லுக்குக் கையுறை என்றும் ஒரு பொருள் உண்டு. உறை அணியப் பெற்ற கொடிய வில் என்றும் பொருள் கூறுவதுண்டு.

31. மன்னர்கள் யானைகளின் மேற்செல்லுதல்

வெண்மதி மீச்செல, மேகம் ஊர்ந்து என,
அண்ணல் வெம் கதிரவன், அளவுஇல் மூர்த்தியாய்,
மண்ணிடை இழிந்து, ஒருவழிக் கொண்டால்என,
எண்அரு மன்னவர், களிற்றின் ஏகினார். (2372)

(மதி-சந்திரன்; மீ-மேலே; அண்ணல்-பெருமையுடையவன்; வெம்-விரும்பத்தக்க; மூர்த்தி-வடிவம்; வழிக்கொள்ளுதல்-பயணம் செய்தல்; எண்அரும்-அளவற்ற; இழிந்து-இறங்கி)

வெண்மையான சந்திரன் ஆகாயத்தின்மீது செல்ல, மேகமும் கூடவே ஊர்ந்து வந்தாற்போல, பெருமையை உடைய வெப்பமுள்ள சூரியன், எண்ணற்ற வடிவம் கொண்டு, மண்ணில் இறங்கி வந்து, ஒரு வகையாகப்

Koviloor Digital Library

பயணப்பட்டுப் போவதைப் போல, கணக்கற்ற அரசர்கள், வெண்கொற்றக்குடை நிழல் பரப்ப, ஆண் யானைகளின் மீது ஏறிச் சென்றனர்.

கணக்கற்ற மன்னர்கள் ஆண்யானை மீது அமர்ந்து வெண் கொற்றக் குடை நிழல் பரப்பப் படையுடன் சென்றனர். அரசர்கள் ஒவ்வொருவரும் விண்ணில் இறங்கி வந்த சூரியன் பல வடிவங்கள் பெற்றதைப் போல் இருந்தனர். அதுபோல அவர்களுக்கு வெண்கொற்றக்குடை நிழல் பரப்ப வந்தது அத்தனை சந்திரர்கள் வந்தது போன்றிருந்தது. அவ்வாறு படை நடந்து சென்றது வெண்மதியுடன் மேகம் ஊர்ந்து வந்ததுபோல் இருந்தது என்பதாம்.

வெண்மதிக்கு வெண்கொற்றக்குடைகளும், மேகத்திற்கு யானை களும் சூரியனுக்கு அரசர்களும் உவமைகள்.

32. நான்கு படைகளும் சென்றமை

தேர்மிசைச் சென்றது ஓர் சிந்து, செம்முகக்
கார்மிசைக் கழிந்தது ஆர்கலி; ஓர் கார்க்கடல்
ஏர்மிசை இவுளி மேல் ஏகிற்று; எங்கணும்
பார்மிசைப் படர்ந்தது, பதாதிப் பௌவமே. (2373)

(சிந்து-கடல்; செம்முகம்-சிவந்த புள்ளிகள்; கார்-மேகம் / யானை; ஆர்கலி-கடல்; இவுளி-குதிரை; பாதாதி-காலாட்படை; பௌவம்-கடல் / சமுத்திரம்; ஏர்-அழகு; பரவை, உவரி, வேலை, சிந்து, ஆர்கலி, பௌவம், சமுத்திரம் என்பன கடல் என்ற ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள்)

தேர்ப்படையாகிய ஒரு கடல் தேரின்மீது ஏறிச் சென்றது; யானைப் படையாகிய மற்றொரு கடல் செம்புள்ளிகள் அமையப்பெற்ற முகத்தை யுடைய கரிய மேகம்போன்ற யானைகளின்மீது ஏறிச்சென்றது. இன்னொரு கருங்கடலாகிய குதிரைப்படை அழகிய குதிரையின்மீது ஏறிச்சென்றது. காலாட்படையாகிய மற்றொரு கடல் பூமியின்மீது எல்லா இடங்களிலும் பரவி நடந்து சென்றது.

தேர், யானை, குதிரை, காலாள் ஆகிய நால்வகைப் படைகளையும் மிகுதி பற்றித் தனித்தனிக் கடலாக உருவகித்தார். சென்றது, கழிந்தது, ஏகிற்று, படர்ந்தது என்பனவும் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களே.

33. வாத்தியங்கள் ஒலிக்காது சென்றமை

தாரையும், சங்கமும், தாளம் கொம்பொடு,
வார் விசி பம்பையும், துடியும், மற்றவும்
பேரியும், இயம்பல சென்ற-பேதமைப்
பூரியர் குழாத்திடை அறிஞர் போலவே. (2374)

Koviloor Digital Library

(விசி-கட்டப்பட்ட; துடி-உடுக்கை; இயம்புதல்-ஒலித்தல்; பூரியர்-கீழ்மக்கள்; தாரை-ஊதுகருவி; பம்பை-பறை)

தாரை என்ற நீண்ட ஊது கருவியும், சங்கும் தாளமும், ஊதுகொம்பும், வாரினால் இழுத்துக் கட்டப்பட்ட பம்பை என்னும் பறையும், உடுக்கையும், முரசங்களும், இன்னும் மற்ற எல்லா மங்கல வாத்தியங்களும் இசைக்கப்படாமல்-ஒலியெழுப்பாமல் சென்றன. அறிவில்லாத கீழ்மக்கள் நிறைந்திருக்கின்ற கூட்டத்தில் நல்ல அறிவுடைய அறிஞர்கள் எவ்வாறு பேசாது அமைதி காப்பார்களோ, அதுபோல ஒலிக்காமல் சென்றன.

மங்கலமான ஊது கருவிகளும், தோற்கருவிகளும், படைகளுடன் சென்றன திரும்பிவரும்போது இராமனைச் சக்கரவர்த்தி என்ற நிலையில் அழைத்துவர வேண்டுமல்லவா? எனவே அவை இசைக்கப்படாமல் வந்தன. மேலும் தசரதன் இறந்துபட்டதனாலும், இராமன் நாடு துறந்து காடேகியதாலும் நாடே துன்பத்தில் கிடந்து உழலுவதால் மங்கலக் கருவிகள் இசைப்பது பொருத்தமன்று என்பதுவுமாம். ''புல்லவையுள் பொச்சாந்து சொல்லற்க, நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார்'' குறள் 719. கற்றோர் மற்றோர்சபையில் வாய் திறந்து பேசமாட்டார்கள் என்பதாம். வாத்தியங்கள் ஒலித்தல் மகிழ்ச்சிக்கு அறிகுறி. இப்போது மகிழ்ச்சி இல்லாததால் அவை வாளா சென்றன என்க. கீழ்மக்களிடையில் அறிஞர்கள் பேசுதல் பெருமை தராது. அதுபோல துயரச் சூழ்நிலையில் மங்கல வாத்தியங்கள் முழங்குதல் பொருத்தமற்றது. ''அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால், தங்கணத்தர் அல்லார் முன் கோட்டி கொளல்'' என்பது குறள் 720. அங்கணம்-சாக்கடை; பேசாதிருத்தலை வாய் வாளாமை என்று குறிக்கின்றனர் அறிஞர்கள்.

34. மகளிர் செல்லுதல்

தாஅரு நாண்முதல் அணி அலால், தகை
மேவரு கலங்களை வெறுத்த மேனியர்,
தேவரும் மருள் கொளத் தெரியும் காட்சியர்,
பூஉதிர்கொம்பு என மகளிர் போயினார். (2375)

(தாஅரு-குற்றமற்ற; நாண்-மங்கல நாண்; தகை-செயற்கை அழகு; மருள்தல்-மயங்குதல்; காட்சி-இயற்கை அழகு; தெரியும்-விளங்குகின்ற)

தேவர்களும் ''இவர்கள் தேவமகளிரோ?'' என்று திகைக்கும்படி இயற்கையழகுடன் விளங்கும் அயோத்தி நகர மகளிர், குற்றமற்ற முதன்மையான அணிகலனாகிய மங்கல நாணை மட்டும் அணிந்து கொண்டு, மற்ற செயற்கையழகுடைய, அணிவதற்கு ஏற்ற அணிகலன்களை அணியாது வெறுத்து ஒதுக்கிய உடம்போடு போனார்கள். அவர்கள் அவ்வாறு சென்ற காட்சி ஒரு பூங்கொடியில் இருந்த மலர்களெல்லாம்

Koviloor Digital Library

உதிர்ந்து போன வெறும் கொம்பு நடந்து போனது போலத் தோற்றமளித்தது.

மங்கையர்களுக்கு முதன்மையானதும் முக்கியமானதுமான அணி அவர்களுடைய மங்கல நாணே. எனவே, மகளிர் அதனை மட்டும் அணிந்து கொண்டு, மற்ற அணிதற்கேற்ற அணிகலன்களை வெறுத்து ஒதுக்கினர் என்க. அவர்கள் செயற்கை அணிகளால் அணி செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும் அவர்கள் இயற்கை அழகைக் கண்டே தேவர்கள் ''இவர்கள் தேவ மகளிரோ?'' என்று மயங்கித் திகைத்தனர் என்பதாம். பூ உதிர்கொம்பு என முன்பே கைகேயியைக் கூறியதும் நினைவு கூரத்தக்கது. தம் அரசர்க்கு வந்த துயரம் தமக்கும் வந்ததே என எண்ணும் மகளிர். எனவே அணி அணியாது சென்றனர்.

35. குடைகள்

அதிர்கடல் வையகம் அனைத்தும் காத்தவன்
விதிவரும் தனிக்குடை மீது இலாப் படை
பொதி பல கவிகை மீன்பூத்தது ஆகிலும்
கதிர் மதி நீங்கிய கங்குல் போன்றதே. (2376)

(அதிர்-ஒலிக்கின்ற; விதி-முறைமை; தனி-ஒப்பற்ற; பொதி-நெருங்கி யுள்ள / குவிந்துள்ள; கவிகை-குடை; கங்குல்-இரவு)

பல சிற்றரசர்களுடைய பலவகையான குடைகள் பிடிக்கப்பட்டுக் கொண்டுவந்த போதிலும், ஒலிக்கின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பெற்ற இவ்வுலகம் முழுவதையும் நடுவுநிலைமை தவறாது காத்து வந்த தசரதச் சக்கரவர்த்தியின் மரபு வழியாகக் கொண்டுவரப்படும் ஒப்பற்ற வெண் கொற்றக்குடை மேலே உயர்த்தி விரித்துப் பிடிக்கப் படாததால், அப்படைகள் சென்ற காட்சி, வானில் நட்சத்திரங்கள் பல்லாயிரக்கணக்காக இருந்த போதிலும், ஒளிக்கதிர்கள் நிரம்பிய சந்திரன் இல்லாத இரவைப் போன்றே பொலிவற்று இருந்தது.

விதிவரும் தனிக்குடை என்றது, மற்ற சிற்றரசர்களின் குடைகளை பாரம்பரியமாக வருகின்ற ஒப்பற்ற தசரதனது வெண்கொற்றக் குடை யினின்றும் வேறுபடுத்திக் காட்டற்பொருட்டும், அதைச் சிறப்பிப்பதின் பொருட்டும் என்க. சிற்றரசர்களின் சிறிய குடைகள் விண்மீன்களுக்கும், சக்கரவர்த்தியின் குடை சந்திரனுக்கும் உவமை. விண்மீன்கள் பல்லாயிர மாய் இருந்தாலும், வெண்மதி இல்லாத இரவு சிறக்காதது போலச் சிற்றரசர்களின் குடைகள் பல தொகுதிகள் இருந்தாலும் சக்கரவர்த்தியின் வெண்கொற்றக்குடை விரிக்கப்படாது படைகள் சென்றமையால் படை பொலிவிழந்து தோன்றிற்று என்பதாம்.

Koviloor Digital Library

36. படையின் பெருமை

செல்லிய செலவினால், ''சிறிய திக்கு'' எனச்
சொல்லிய சேனையைச் சுமந்ததே எனில்,
ஒல்லொலி வேலை நீர் உடுத்த பாரை, ''ஓர்
மெல்லியல்'' என்றவர் மெய்யரே கொலாம்? (2377)

(செல்லிய-சென்ற / பரந்த; செலவு-போக்கு; ஒல்-ஒலி; மெல்லியல்-அபலை என்னும் வடசொல் பொருள் கொண்டது)

இப்படைகள் விரிந்து பரந்து செல்லுகின்ற தன்மையினால் இவை செல்லுதற்கு இவ்வுலகிலுள்ள எட்டுத் திக்குகளும் போதவில்லை, சிறியவையாக இருக்கின்றன என்று சொல்லும் வண்ணம் இந்தப் பூமி அவர்களைத் தாங்கிச் செல்லுகிறது என்றால், ஒல் என்ற பேர் ஒலியைத் தனக்கு ஆடையாக உடுத்துக் கொண்ட கடல் சூழ்ந்த இவ்வுலகத்தை நிலமகள், மெல்லியலாள், பூமகள் என்று கூறியவர் உண்மையைக் கூறியவர் என்று சொல்லப்படுவாரோ?

படையின் மிகுதியினால், எல்லையிலாத் திக்குகளும், சிறியதாகத் தோன்றிற்று என்பது பொருள். ''படைபெருத்தலின், பார் சிறுத்ததோ?'' என்பது கலிங்கத்துப் பரணி. இத்தகைய பெரும் படையைத் தாங்குகின்ற பூமியை நிலமகள் மெல்லியல் என்று பெண்ணாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும்? பொருந்தாது என்பதாம்.

37. பெண்களின் கொங்கைகள்

தங்கு செஞ்சாந்து அகில் கலவை சார்கில;
குங்குமம் கோட்டில; கோவை முத்துஇல்;
பொங்கு இளங் கொங்கைகள் புதுமை வேறு இல;
தெங்கு இளநீர் எனத் தெரிந்த காட்சிய. (2378)

(பொங்கு-பெருத்த / பூரித்த; சாந்து-சந்தனம்; சார்தல்-அப்புதல்; கோடு-தொய்யில்; புதுமை-செயற்கையழகு; காட்சி-இயற்கையழகு)

பூரித்த பருத்த கொங்கைகள், சிவந்த சந்தனக் கலவை அப்பப் பெறாமலும், அகில் முதலிய கலவைகள் பூசப் பெறாதனவுமாய் இருந்தன; குங்குமக் குழம்பினால் தொய்யில் எழுதப்படவுமில்லை; முத்துவடங்கள் அணியப்பெறாதனவாய் வெறுமையாய் இருந்தன. வேறு எந்தச் செயற்கையழகும் செய்து கொள்ளவில்லை. எனவே, இயற்கையாகக் காணப்படுகின்ற தென்னையின் இளநீர்க் காய்கள் போலத் தோற்ற மளித்தன.

முன்பாடலில் அணிகலன்கள் நீக்கியவராய் வந்தனர் என்று கூறிய கம்பர், தமக்கே உரிய முறையில் இங்கே மகளிரின் பூரித்த கொங்கைகள் எந்த அழகும் செய்யப்படாமலேயே இயற்கையிலேயே மிக அழகு

Koviloor Digital Library

பொலிந்து விளங்கின என்கிறார். இவ்வாறு எந்த அணிகலன்களும், அழகுகளும் செய்து கொள்ளாத நிலை கண்ணகிக்கும் வந்தது. அதை இளங்கோவடிகள் வருணிப்பதைக் கேளுங்கள். ''அம்செஞ்சீரடி அணி சிலம்பு ஒழிய, மென்துகில் அல்குல் மேகலை நீங்கக் கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்; மங்கல அணியில் பிறிதணி மகிழாள்; கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காதினள்; திங்கள் வாள்முகம் சிறுவியர் பிரியச் செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப் பவள வாள் நுதல் திலகம் இழப்ப, தவளவாள் நகை கோவலன் இழப்ப, மையிருங்கூந்தல் நெய்யணி மறப்ப, கையறுநெஞ்சத்து கண்ணகி'' என்பது சிலப்பதிகாரம். மகளிர்கொங்கைகளுக்கு இளநீரைஉவமைகூறுதல் மரபு. முன்பும்கம்பன் ''செம்மாந்த தெங்கின் இளநீரை, ஓர் செம்மல்நோக்கி, அம்மா! இவை மங்கையர் கொங்கைகள் ஆகும் என்ன'' என்று கூறியதை நினைவு கூர்க.

38. ஆடவரின் தோள்கள்

இன்துணையவர் முலை எழுது சாந்தினும்
மன்றல்அம் தாரினும் மறைந்திலாமையால்,
துன்று இளங்கொடி முதல் தூறு நீங்கிய
குன்று எனப் பொலிந்தன குவவுத் தோள்களே. (2379)

(குவவு-திரண்ட; தார்-மலர்மாலை; துன்று-நெருங்கிய / அடர்ந்த; தூறு-புதர்கள்; மன்றல்-நறுமணம்)

ஆடவரின் திரண்ட தோள்கள், தங்கள் இனிமையான துணையான மனைவியரின் கொங்கைகளில் தொய்யில் எழுதப்பட்ட சாந்து அப்பாததனாலும், நறுமணம் மிக்க அழகிய மலர்மாலை சூடி மறைத்துக் கொண்டு இல்லாததாலும், அடர்ந்த இளமையான கொடிகள் முதலிய புதர்கள் நீக்கப்பெற்ற மலைகள் போல இயற்கையாகப் பொலிவு பெற்றுத் தோற்றம் அளித்தன.

முன்பாடலில் மகளிரின் கொங்கைகள் இயற்கையாகத் தென்னையின் இளநீர்க்காய்கள் போலத் தோற்றமளித்தன என்று கூறிய கவிஞன், இப்பாடலில் ஆடவர் தோள்களும் இயற்கையான மலைகள் போலத் தோற்றமளித்தன என்கிறான். இராமன் பிரிவால் ஆடவர் மகளிரைத் தழுவவில்லை. அதனால் அவர்கள் தோள்களில் தொய்யில் சாந்தின் சுவடும், மலர்மாலையின் மலர்களும் அப்பிக் கொண்டு இருக்கவில்லை. இயற்கையாகவே மலைபோலத் தோற்றம் தந்தது என்பது கருத்து. தொய்யில் என்பது கொடிபோலவரையப்படுவது. எனவே, தொய்யிலுக்கு இளங்கொடியை உவமை கூறினார்.

39. பெண்களின் கண்கள்

நறைஅறு கோதையர் நாள்செய் கோலத்தின்
துறைஅற, அஞ்சனம் துறந்த நாட்டங்கள்,

Koviloor Digital Library

குறையற நிகர்த்தன கொற்றம் முற்றுவான்
கறையறக் கழுவிய கால வேலையே. (2380)

(நறை-மணப்புகை; கோதை கூந்தல்; கோலம்-அலங்காரம்; நாட்டம்-கண்கள்; முற்றுவான்-நிறைவேறும் பொருட்டு; கழுவுதல்-சாணை பிடித்தல்; அஞ்சனம்-மை; கறை-துரு / இரத்தக்கறை; துறை-வகை; குறையற-முழதும்; காலன்-இயமன்)

நறுமணப்புகை ஊட்டப்பெறாத கூந்தலையுடைய மகளிர், நாள் தோறும் செய்து கொள்ளுகின்ற ஒப்பனையைச் செய்து கொள்ளாது இருத்தலின், மைதீட்டப்பெறாத கண்களை உடையவர்களாய் இருந்தார்கள். அவை, வெற்றி நிரம்பப் பெற்ற அரசனது, குருதிக்கரையும், துருவும் நீங்கும்வண்ணம் சாணை பிடிக்கப்பெற்ற, கொல்லும் தொழிலை உடைய, இயமனைப் போன்ற, வேற்படையை முழுவதுமாக ஒத்திருந்தன.

இராமனது பிரிவால் மகளிர் நாள்தோறும் செய்து கொள்ளும் அலங் காரத்தைத் தவிர்த்து இருந்தனர். எனவே, அவர்கள் கண்கள் மைதீட்டப் பெறாமல் வெறுமையாய் இருந்தன. அது எப்படி இருந்தது என்றால், போரிலே வெற்றிபெற்ற அரசன் போரில் ஈடுபட்ட வேற்படையின் நுனியில் அப்பிக் கொண்டிருக்கும் குருதியை நீக்கிப் புதிதாகச் சாணை தீட்டப் பெற்றது போன்று இயற்கையழகுடன் இருந்தது என்பதாம். இப்பொழுது மை தீட்டப்பெறாமையால் மகளிர் கண்கள், நன்கு கூர் தீட்டிய வேற்படையை முழுதும் ஒத்திருந்தன என்பதாம். மை நீத்த கண்கள். கறை நீத்த வேலை ஒத்திருந்தன என்பது கருத்து.

40. மகளிர் மேகலையும் சிலம்பும் அணியாது இருத்தல்

விரி மணி மேகலை விரவி ஆர்க்கில
தெரிவையர் அல்குல் தார்ஒலிஇல் தேர்என;
பரிபுரம் ஆர்க்கில பவளச் சீறடி;
அரிஇனம் ஆர்க்கிலாக் கமலம் என்னவே. (2381)

(தார்-கிண்கிணி; தெரிவையர்-பெண்டிர்; விரவி-கலந்து; ஆர்த்தல்-ஒலித்தல்; அரி-வண்டுகள்; கமலம்-தாமரை மலர்; பரிபுரம்-சிலம்புகள்)

சிறிய மணிகளாலான கிண்கிணி மாலை பூண்டு அலங்கரிக்கப்பெறாத தேர்த்தட்டுப்போல, பெண்டிரின் இடைப்பகுதி, எட்டு வடங்களாலாகிய முத்துமணி வடங்களால் கலந்து அலங்கரிக்கப் பெற்று ஒலி செய்யாமல் இருந்தன; வண்டுகள் ஒலி செய்யாத தாமரைப் பூக்கள் போலப் பெண்களின் பவளம் போன்று சிவந்த சிறிய பாதங்கள் சிலம்பின் ஒலி இல்லாமல் இருந்தன.

கிண்கிணி மாலையின் ஒலி மணிமேகலையின் ஒலிக்கும்; வண்டுக் கூட்டங்களின்ஒலி சிலம்பின்ஒலிக்கும்உவமை. இராமன்பிரிவால் மகளிர்

Koviloor Digital Library

அல்குலுக்கு மேகலையும், பாதங்களுக்குச் சிலம்பும் அணியாது வெறுமையாய் இருந்தனர் என்பது கருத்து. தெரிவையர் என்பது பொதுவாகப் பெண்களைக் குறித்து நின்றது. பருவத்தைக் குறித்ததன்று.

41. மகளிர் மணிவடம் பூணாதிருத்தல்

மல்கிய கேகயன் மடந்தை வாசகம்
நல்கியது அரிவையர் நடுவிற்கே கொலாம்!
புல்கிய மணிவடம் பூண் கிலாமையால்,
ஒல்கிய ஒருவகைப் பொறைஉயிர்த்தவே. (2382)

(மல்கிய-வளம்மிக்க; வாசகம்-சொல் / வரம்; நல்கியது-நன்மை செய்தது; அரிவையர்-மகளிர்; நடு-இடை; புல்கிய-நெருங்கிய; பொறை-பாரம் / சுமை; உயிர்த்தல்-நீங்கப்பெறுதல்; ஒல்கிய-மெலிந்த)

வளம்மிக்க கேகய நாட்டு மன்னனின் மகளான கைகேயியின் வரம் என்ற சொற்கள், யாருக்காவது உதவி செய்தது என்று சொன்னால், அது பெண்களின் இடைகளுக்கு மட்டுமே போலும்-மற்ற யாருக்கும் அது எந்தவிதப் பயனையும் தரவில்லை. எப்படியெனில், பரதனோடு இராமனை அழைக்க காடேகுதலால் தங்கள் மார்பகங்களில் நெருங்கிய மணிவடங்களை அணியாதிருக்கின்றனர் அல்லவா? அதனால் அவர்களுடைய மெலிந்த, ஒடியும் தன்மை உள்ள இடை, ஒருவகையான சுமையை நீங்கப்பெற்றதாயிற்று, அதனால் இளைப்பாறியது போலாயிற்று என்பதாம்.

கைகேயினுடைய வரங்கள் வேறு யாருக்கும் நன்மை செய்தனவோ இல்லையோ, மகளிரின் இடைகளுக்கு நன்மை செய்தன. அதுவும் ஓரளவிற்குத்தான் நன்மை செய்தது. அவர்கள் முத்துவடங்களாலான அணிகலன்களை அணியாததால் அவர்களின் இடை ஓரளவு சுமை குறைந்ததாயிற்று. என்றாலும் கொங்கைகளின் பாரம் நீங்கப் பெறாமை யால் ''ஒருவகைப் பாரம்'' என்று கூறியது ஒரு நயம் என்க. ''மாதவி மடந்தை கானல் பாணி, கனகவிசயர்தம் முடித்தலை நெரித்தது'' என்பது சிலப்பதிகாரம். அதுபோலக் கேகயன் மடந்தை வாசகம் அரிவையர் நடுவில் பொறை உயிர்த்தவே என்பதாம். புகழ்வது போலப் பழித்தது ஆயிற்று. இங்கும் அரிவையர் என்பது பருவம் குறித்ததன்று. பொதுவாகப் பெண்டிரைக் குறித்தது என்க. ஒரு சுவையான செய்தி. மணிமேகலைகள் ஐந்து வகைப்படும். அவை விரிசிகை, கலாபம், பருமம், மேகலை, காஞ்சி என்பன. இவை முறையே 32, 21, 14, 8, 2 வடங்களால் ஆனவை. ''எண்ணிரண்டு இரட்டி கோத்த விரிசிகை; இருபத்தொன்றில் பண்ணிய கலாபம்; ஈரேழ் பருமம்; நாலிரண்டில் செய்த வண்ணமேகலை; இரண்டில் காஞ்சி, இவ்வகை ஓர் ஐந்தும் புண்ணியக் கொடி வண்டு ஆர்ப்பப் பூத்த போற் புலம்பப் பூட்டி'' என்பது திருவிளையாடற்புராணம்.

Koviloor Digital Library

42. சேனைகள் சென்றமை

கோமகன் பிரிதலின், கோலம் நீத்துள
தாமரைச் செல்வியும், தவத்தை மேவினாள்;
காமனும் அருந்துயர்க் கடலில் மூழ்கினான்
ஆம் என நிகழ்ந்தது அவ் அளவுஇல் சேனையே. (2383)

(கோலம்-அழகு; காமன்-மன்மதன்; நிகழ்ந்தது-சென்றது)

அரசகுமாரனாகிய இராமன் நாட்டைத் துறந்து சென்றதனால், தன் அழகையெல்லாம் தவிர்த்து தாமரைமலரில் வீற்றிருக்கும் இலக்குமியும் தவத்தை விரும்பினள் போலச் சென்றது போலவும், எல்லோருக்கும் காம இச்சையைத் தூண்டுகின்ற மன்மதனும், இப்பொழுது தனக்கு வேலையில்லாததால் கடத்தற்கரிய துன்பக் கடலில் மூழ்கினான் என்றது போலவும், அந்த எண்ணற்ற படைவீரர்கள் மனத்தில் மகிழ்ச்சியும், செல்வச் செழிப்பும் இல்லாமல் வறிதே சென்றனர்.

அவரவர்கள் அவரவர்களது தொழிலைச் செய்தல் மகிழ்ச்சிக்குரிய செயல். அவ்வாறு தம் தொழிலைச் செய்யாது சும்மா வாளா விருத்தல் துன்பம் என்பதாம். மன்மதன் தன் தொழிலைச் செய்யாததால் துயரக் கடலில் மூழ்கினான் என்பதாம். திருமகள் நீங்கியதனால் செல்வப் பொலிவும், மன்மதன் துயரத்தில் மூழ்கியதால் உள்ளக் கிளர்ச்சியும் இன்றி அச்சேனை சென்றது என்பதாம்.

43. சேனையின் மிகுதி

மண்ணையும், வானையும், வயங்கு திக்கையும்
உண்ணிய நிமிர்கடல் ஒக்கும் என்பது என்?
கண்ணினும், மனத்தினும், கமலத்து அண்ணல்தன்
எண்ணினும் நெடிது அவண் எழுந்த சேனையே. (2384)

(அவண்-அங்கு; வயங்கு-விளங்குகின்ற; உண்ணிய-உண்ணுதற்காக / அழித்தற்பொருட்டு; நிமிர்-பொங்கி எழுதல்; எண்-எண்ணம் / கருத்து; கண்-பார்வை; நெடிது-பெரிது)

அங்கு அப்போது பரதனுடன் சென்ற சேனையின் அளவு, இப்பூவுலகையும், விண்ணுலகையும், விளங்குகின்ற எல்லாத் திசைகளையும் அழிக்கும் பொருட்டுப் பொங்கி எழுகின்ற ஊழிக்காலத்துக் கடலைப் போல இருக்கும் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? பொருந்தாது. அந்தக் கடல்களை எல்லாம் படைத்த படைப்புக் கடவுளான தாமரை மலரில் வீற்றிருக்கும் பெரியோனாகிய பிரமன், தன் கண்பார்வையிலும், அவன் மனத்தினும், அம்மனத்தில் தோன்றும் கருத்தினும் நீண்டது, பெரியது என்பதே பொருத்தமாகும்.

Koviloor Digital Library

பொதுவாக அளவின் மிகுதி பற்றிக் கூறுவதற்குக் கடலை உவமை கூறுவது மரபு. ஆனால் இங்கே அந்தக் கடல்களையெல்லாம் படைத்த பிரமனின் கண் பார்வைக்கும், உள்ளத்திற்கும் உவமை கூறுவது ஒரு நயம். பிரமன் தான் படைத்த உயிர்களைத் தன் கண் பார்வையிலேயே வைத்திருக்கவேண்டும் என்ற காரணத்தால் விண்ணுலகத்திற்கும் மேலான உலகத்திலிருந்து பார்த்துக் கொண்டிருப்பதனால் அவனது கண்பார்வை தொலை நோக்குடையது. அதற்கு எல்லையே கிடையாது. எனவே, அங்கு எழுந்த படையின் பெருக்கத்திற்குப் பிரமனின் கண்பார்வையை உவமை கூறினான் என்க. ''மனத்தானை, மனத்துள் நின்ற கருத்தானை'' என்பார் திருநாவுக்கரசர். பிரமனின் கண்களாலும், மனத்தாலும் கூடக் காணமுடியாத அளவு பெரியது அப்படை என்பது கருத்து.

44. அலைநெடும் புனல் அறக்குடித்தலால் அகம்
நிலைபெற நிலைநெறி நிறுத்தலால், நெடு
மலையினை மண்ணுற அழுத்தலால், தமிழ்த்
தலைவனை நிகர்த்தது அத்தயங்கு தானையே. (2385)

(தயங்கு-விளக்கமுடைய; தானை-சேனை / படை; அகம்-மனம் / பூமி; நெடு-நீண்ட; தமிழ்த்தலைவன்-அகத்திய முனிவன்; நிகர்த்தது-ஒத்தது)

அலைகள் வீசுகின்ற நீண்ட ஆறு முதலிய நீர்நிலைகளின் நீரை, அவை வற்றிப்போகும்படி குடித்துக் கொண்டே சென்றதாலும், பூமியின் எல்லா இடங்களிலும் பரவி நெருங்கிச் சென்றதால் எந்தப் பகுதியும் தாழ்ந்துவிடாமல் எல்லாப் பகுதியும் ஒரே நெறியில் இருக்கச் செய்து கொண்டே சென்றதாலும், இவ்வளவு பெரிய சேனை மலைகளின்மேல் ஏறிச் செல்லும்போது, அம்மலைகள் மண்ணில் அழுந்திப் போகுமாறு வேகமாகவும், மிகுதியாகவும் செல்லுவதனாலும், இந்த விளங்குகின்ற படைகள், தமிழின் தலைமகனாகிய அகத்தியனை ஒத்து இருக்கிறது.

இப்பாடல் தமிழ்த்தலைமகன் அகத்தியனுக்கும், சேனைகளுக்கும் சிலேடை வகையில் அமைந்த இரட்டுற மொழிதல் என்னும் அணியின் பாற்பட்ட பாடல். அகத்தியனும் இம்மூன்று செயல்களையும் செய்திருத்தலைப் புராண வரலாறுகளில் இருந்து அறிகிறோம்.

அகத்தியன் நெடும்புனல் அறக்குடித்தல் : இந்திரனுடைய பகைவனான விருத்திராசுரன் என்பவன் இந்திரனைத் தோல்வியுறச்செய்து கடலின் அடியில் சென்று மறைந்து கொண்டான். இந்திராதி தேவர்கள் அகத்திய முனிவனை அணுகி விருத்திராசுரனைக் கொணர்ந்து தரும்படி வேண்டிக் கொண்டனர். அதற்கிணங்கி அகத்தியர் அக்கடலை உழுந்தளவாக்கித் தன் உள்ளங்கையில் கொள்ளுமாறு பருகினார். கடல் வற்றியது. விருத்திராசுரன் வெளிப்பட்டான். இந்திரன் அவனைப் பிடித்து வெற்றி கண்டான். பின்னர் இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கி அகத்தியமுனிவன் தான் பருகிய கடல்நீரை உமிழ்ந்தான். மீண்டும் கடல் நீர் நிரம்பப்பெற்றது. (திருவிளையாடற்புராணம் பழி தீர்த்த படலம்)

Koviloor Digital Library

அகம்நிலைபெறநிறுத்துதல்: சிவபெருமானுக்கும்பார்வதிதேவிக்கும் திருமணம் கயிலயங்கிரியில் நடைபெற்றது. அவ்விழாவினைக் காணத் தேவர்களும், உலகத்தவர் அனைவரும் கைலாய மலையை அடைந்தனர். எனவே வடக்குப் பகுதி தாழ்ந்தது. தெற்குப் பகுதி உயர்ந்து சமநிலை கெட்டது. இதை உணர்ந்த சிவபெருமான் இதைச் சமனப்படுத்த எண்ணி அகத்தியரை அழைத்துப் பொதிய மலையில் சிறிது காலம் தங்கக் கோரினார். அவருடைய வேண்டுகோளுக்கு இசைந்து அகத்திய முனிவன் பொதிய மலை வந்து தங்கவும் வடக்கும் தெற்கும் சமநிலை எய்தியன. பின்னர் அகத்தியருக்காகத் தனியே சிவபெருமானும் பார்வதி தேவியும் மணக்கோலத்தில் காட்சி தந்தருளினர். இங்கேதான் அகத்தியன் சிற்றகத்தியம், பேரகத்தியம் என்னும் இலக்கண நூல்களை இயற்றினான் என்றும், தொல்காப்பியர் முதலான பன்னிரண்டு மாணவர்களுக்கு இலக்கணம் கற்பித்தான் எனவும் அறிகிறோம்.

நெடுமலையினை மண்ணுற அழுத்துதல் : அவ்வாறு சிவபெருமான் வேண்டுகோளின்படி அகத்தியன் தெற்கு நோக்கிப் பொதிய மலை வந்து கொண்டிருந்தபோது, இடையில் விந்திய மலை குறுக்கிட்டுச் சொல்லமுடியாத அளவிற்கு உயர்ந்து செருக்கு மிகக் கொண்டு சூரியன், சந்திரன் முதலானவர்களின் இயக்கத்தைத் தடுத்தது. அவர்களின் வேண்டுகோளின்படி அகத்தியன் விந்தியமலையின் உச்சிக்குச் சென்று தன் கைகளால் அம்மலையினை அழுத்தினான். அப்பொழுது அம்மலை மண்ணுக்குள்அழுந்தி, முன்தான் கொண்டிருந்த அளவு உயரமே திரும்பப் பெற்றது. இவைகளைக் கந்தபுராணம் விரிவாகச் சொல்லும்.

அகத்திய முனிவனைத் ''தழற்புரைச் சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்'' என்றும், ''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்'' என்றும் சிறப்பிப்பார் கவிஞர். அகம் என்பது பூமியைக் குறிக்கும். ''மனமும், உள்ளமும், மனையும், பாவமும், புவியும் மரப்பொதுப் பெயரும் அகமே'' என்பது பிங்கலந்தை.

45. அயோத்தியின் நிலை

அறிஞரும் சிறியரும், ஆதி அந்தமாச்
செறி பெருந்தானையும், திருவும் நீங்கலால்,
குறியவன் புனல்எலாம் வயிற்றில் கொண்டநாள்
மறிகடல் ஒத்தது அவ்அயோத்தி மாநகர். (2386)

(செறி-நெருங்கியுள்ள; மறி-நிலைகெட்ட; திரு-செல்வப் பொலிவு; குறியவன்-அகத்தியன்)

சான்றோர்கள் முதல், இளைஞர்கள் வரை எல்லோரும் கலந்து நெருங்கிச் சென்ற சேனையுடன், திருமகளாகிய சீதாதேவியும்-செல்வப் பொலிவும்-சேர்ந்து நீங்கி விட்டதனால், இப்போது அந்தச் சிறந்த அயோத்தி நகரம், அன்று அகத்தியன் கடலில் உள்ள நீரையெல்லாம்

Koviloor Digital Library

முற்றக் குடித்துத் தன் வயிற்றில் கொண்ட பின் உள்ள நிலை கெட்ட கடல் போல வெறிச்சோடிக் கிடந்தது.

எல்லோரும்-பெரியோர் முதல் சிறுவர் வரை-அயோத்தி நகரை விட்டு நீங்கி விட்டதனாலும், செல்வச் செழிப்பு நிறைந்த இலக்குமி போன்ற சீதாதேவியும் பிரிந்து விட்டதனாலும், அந்த அயோத்தி மாநகரமே வெறிச்சோடிப் போயிற்று என்பதாம். நீர் சிறிதும் இல்லாத போது அது கடல் எனக் கூறத் தகுதியற்றது போல அயோத்தி நகரமும் மாநகர் எனும் தகுதி அற்றதாயிற்று என்பதாம். ''அறம் துறந்து ஈட்டுவார் தம் அருள் பெற்ற செல்வம் போல, வறந்தன படுநீர்ப் பௌவம்'' என்பது திருவிளையாடற்புராணம். வெறிச்சோடிப் போன மாநகருக்கு, வெறிச்சோடிப் போன கடல் உவமை.

46. படைகள் செல்லுகின்ற வழி

பெருந்திரை நதிகளும், வயலும், பெட்புறு
மரங்களும், மலைகளும், மண்ணும், கண்ணுறத்
திருந்தல்இல், அயோத்தியாம் தெய்வ மாநகர்
அருந்தெரு ஒத்தது அப்படைசெல் ஆறு அரோ! (2387)

(ஆறு-வழி; பெட்பு-விருப்பம்; மண்-வெறும் நிலம் / வெற்றிடம்)

பெரிய அலைகளையுடைய நதிகளும், வயல் இடங்களும், விரும்பத் தக்க மரங்களும், மலைகளும், வெற்றிடங்களும், இவையெல்லா இடங்களும், யாவரும் காணத்தக்க வகையில் திருத்தம் செய்யப்படா திருந்ததால், அந்தப் படைகள் செல்லுகின்ற வழியெல்லாம், அயோத்தி என்னும் தெய்வீகத் தன்மை பொருந்திய சிறந்த நகரத்தின் அருமையான தெருக்களை ஒத்திருந்தது.

படைகள் புறப்படுவதற்கு முன்பே, அவ்வத்துறையில் வல்லுநர்களை அனுப்பிப் படை செல்லும் வழியெல்லாம் ஒழுங்கு படுத்திச் செவ்வனே வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று வான்மீகம் இதனை விரிவாகக் கூறுகிறது. திருத்தப்படாத-பொலிவிழந்த-அயோத்தி நகரத் தெருக்களை ஒத்திருந்தது என்பதாம்.

47. சேனையின் தன்மை

''தார்கள்தாம், கோதைதாம், தாமம்தாம், தகை
ஏர்கள்தாம், கலவைதாம், கமழ்ந்தின்று'' என்பரால்
கார்கள்தாம் எனமிகக் கடுத்த கைம்மலை
வார்கடாம் அல்லது, அம்மன்னன் சேனையே. (2388)

(கார்-மேகம்; கடுத்த-ஒப்புமையுடைய; கைம்மலை-யானைகள்; வார்-ஒழுகுகின்ற; கடாம்-மதநீர்; தார்-மாலை; கோதை-தலை மாலை; தாமம்-மலர்மாலை; ஏர்-அழகு; தகை-பெருமை; கடவுதல்-அமைத்தல்;

Koviloor Digital Library

துதிக்கையையுடைய மலை போல இருத்தலின் யானைக்குக் கைம்மலை காரணப் பெயர்)

''பரதன் பின் வந்த சேனைகள், இவைகள் மேகங்களோ என்று சொல்லும் படியாக மிக்க ஒப்புமையுடைய துதிக்கையையுடைய மலையைப்போன்ற யானைகளின் ஒழுகுகின்ற மதநீரின் மணம் அல்லாது. வேறு ஆடவர் மார்பில் அணியும் மலர் மாலைகள், தலையிற்சூடும் கண்ணி மாலைகள், அழகுக்காக சூடிக்கொள்ளப்படும் மலர் மாலைகள், பெருமையும் அழகும் பொருந்திய கலவைப் பூச்சுக்கள், போன்றவைகளிலிருந்து எந்த மணமும் வீச வில்லை'' என்று கூறுவர்.

தார் என்பது ஆடவர் அணியும் அடையாள மாலை; கோதை என்பது மகளிர்தலையில் சூடும் கண்ணி, தலைமாலை; தாமம் என்பது அழகுக்காக மட்டும் அணியும் வட்டமான மாலை; யானையின் மதநாற்றம் தவிர வேறு எந்த மணமும் வீசவில்லை என்பது கருத்து; எனவே படையிற் சென்றவர்கள் வேறு எந்த மாலையும் அணியவில்லை என்பது பெறப்பட்டது. இப்பாடலில் தாம் என்ற சொற்கள் பல முறை பயன்படுத்தப்பட்டு ஓசை நயம் பெற்றிருத்தலை உணரலாம்.

48. ஆள்உலாம் கடலினும் அகன்ற அக்கடல்;
தோள்உலாம் குண்டலம் முதல் தொல்அணி
கேள்உலாம் மின்னொளி கிளர்ந்தது இல்லையால்;
வாள்உலாம் நுதலியர் மருங்குல் அல்லதே. (2389)

(ஆள்-ஆட்கள் / ஆடவர்கள்; உலாம்-உலவும்; வாள்-ஒளி பொருந்திய; நுதல்-நெற்றி; மருங்குல்-இடை; கிளர்ந்தது-விளங்கியது; தொல்-பழமை யான; கேள்-கேழ் / நிறம்)

நீர் நிறைந்து விளங்குகின்ற கடலைக் காட்டிலும், ஆட்கள் நிறைந்து விளங்குகின்ற இச்சேனையாகிய கடலில், ஒளி பொருந்திய நெற்றியை உடைய மகளிரின் இடைகள் மின்னல் போல இருப்பதால் மின்னொளி வீசியதே தவிர, வேறு ஆடவர்கள் காதுகளில் அணிந்துள்ள தோள்வரை நீண்டுள்ள குண்டலம் என்னும் பழமையான காதணிகள் தங்கள் சிறந்த நிறங்களால் மின்னலைப் போல ஒளி வீசவில்லை.

முன் பாடலில் மதநீர் மணத்தையன்றி மாலையின் நறுமணம் இல்லை என்று கூறிய கவிஞன் இப்பாடலில் மகளிரின் இடைதான் மின்னொளி வீசியதே அன்றி படையிலுள்ள ஆடவர்கள் அணியும் குண்டலங்களி லிருந்து ஒளி வீசவில்லை என்கிறான். ஏனெனில் அவர்கள் பழமையான காதணிகள் கூட அணியாமல் வந்திருந்தனர் என்பதாம். முன்பு மணத்தைக் கூறியவர் இங்கு ஒளி பற்றிக் கூறினார் என்க. குண்டலம் என்பது பொதுவாகக் காதில் அணியும் அணிகலன் என்றாலும், இங்கே நெடுமை யால், தோளில் வந்து உலாவும் என்றார். கேழ் என்பது கெழு என்ற உரிச்சொல்லின் எழுந்தது. இங்கு கேள் என எதுகை நோக்கிப் போலியாய்

Koviloor Digital Library

நின்றது. தொல் என்பது பழமையான என்பதனோடு வழக்கமாக அணியும் அணிகலன்கள் என்றும் பொருள் தரும். ''குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே'' என்பது தொல்காப்பியம்.

49. மத்தளம் முதலிய வயங்கு பல்லியம்
ஒத்தன சேறலின், உரை இலாமையின்,
சித்திரச் சுவர் நெடுஞ்சேனை தீட்டிய
பத்தியை நிகர்த்தது அப்படையின் ஈட்டமே. (2390)

(ஈட்டம்-தொகுதி; உரை-பேச்சு; பல்லியம்-பல வகை வாத்தியங்கள்; வயங்கு-விளங்கும்; பத்தி-வரிசை)

அந்தப் படையின் கூட்டம் அச்சேனையில் உள்ளோர் ஒருவர்க் கொருவர் உரையாடிக் கொண்டு செல்லாமையாலும், துன்பத்தால் மிக அமைதியாகச் சென்றதாலும், உடன் வந்த மத்தளம் முதலான பல வகை வாத்தியங்களும் அவர்களுடன் ஒன்று கூடி இசைக்காமல் வந்ததாலும், சுவற்றில் சித்திரமாகத் தீட்டப்பட்ட பெருஞ்சேனைத் தொகுதியின் வரிசையைப் போன்றிருந்தது.

படைகள் அமைதியாக வந்ததாலும், வாத்தியங்கள் முழங்காமல் ஒலியின்றி வந்ததாலும், அந்தச் சேனைப்படை, ஒரு ஓவியத்தில் வரைந்த சேனையின் உருவம் போல் தோற்றம் அளித்தது என்பதாம். சுவரில் எழுதிய சித்திரம் போன்றிருந்தது என்க.

50. ஏடுஅறு கோதையர் விழியின் எய்தகோல்
ஊடுஉற உரம் தொளைத்து உயிர்உணா வகை
ஆடவர்க்கு அரும்பெரும் கவசம் ஆயது,
காடுறை வாழ்க்கை அக்கண்ணன் நண்ணவே. (2391)

(கண்ணன்-கண்போல்பவன் / இராமன்; நண்ணுதல்-மேற் கொள்ளுதல்; ஏடு-புற இதழ் / மலர்; கோதை-கூந்தல்; கோல்-அம்பு; உரம்-மார்பு; விழி-கண்பார்வை)

உலகில் உள்ள எல்லார்க்கும் கண் போல்பவனாகிய இராமபிரான் காட்டில் சென்று வாழும் வாழ்க்கையை மேற்கொள்ளவே, படையில் வந்த ஆடவர், பெண்டிர், எல்லோரும் துன்பத்தில் மூழ்கியிருந்தனர். எனவே புற இதழ்களை விலக்கிய மாலையே அணியாத கூந்தலை உடைய பெண்கள் செலுத்திய காதற் பார்வை என்ற அம்பானது, ஆடவர்களின் மார்பில் ஊடுருவித் தொளைத்துக் கொண்டு போய் அவர்கள் உயிரை அழிக்காதவாறு இச்சூழ்நிலை ஆடவர்க்கு ஒரு அருமையான பெரிய கவசம் போன்றிருந்தது.

எல்லோரும் துன்பத்தில் துவளுவதனால், எப்போதும் காதற்பார்வை நோக்கும் பெண்களும் அவ்வாறு நோக்காதிருந்தனர். அவர்கள் அவ்வாறு நோக்கினாலும், அந்த அம்பு என்னும் பார்வை ஆடவர்களைத்

Koviloor Digital Library

தாக்காதவாறு கவசம் போன்று பாதுகாத்தது. எது? இராமபிரான் காடுறை வாழ்க்கையை மேற்கொண்டதால் உண்டாகிய துக்கம். மகளிரின் காதற்பார்வை அம்பு; அது நுழைத்து தொளைக்காத கவசம் இராமனின் காடுறை வாழ்க்கை நண்ணுதல், துன்ப உணர்ச்சியால் இருபாலாரும் காதற்குறிப்புச் சிறிதும் இன்றிச் சென்றனர் என்பதாம்.

51. கனங்குழைக் கேகயன் மகளின் கண்ணிய
சினம் கிடந்து எரிதலின் தீய்ந்ததே கொலாம்,
அனங்கன் ஐங்கொடுங்கணை கடந்த ஆடவர்
மனம், கிடந்து உண்கில மகளிர் கொங்கையே. (2392)

(அனங்கன்-மன்மதன்; கடந்த-வென்ற; உண்ணல்-நுகர்தல்; கண்ணிய-காரணமாக; குழை-குண்டலம்)

உருவமில்லாத மன்மதனது ஐந்து மலரம்புகளாகிய கொடுங் கணைகளையும், இப்போது இருக்கின்ற துன்ப உணர்ச்சியால் வென்று நின்ற ஆடவர்களின் மனமானது, உடன்வரும் மகளிரின் கொங்கைகளில் பதித்து, அவற்றை நுகரும் இயல்பு இலாத ஆயின. காரணம் கனமான காதணியை அணிந்துள்ள கேகயநாட்டு மன்னன் மகளாகிய கைகேயியின் காரணமாக ஏற்பட்ட கோபம், தங்களிடத்து இன்னும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருப்பதால் அந்த மனங்கள் தீய்ந்து விட்டன.

இராமனைக் காட்டுக்கு அனுப்ப வரம் வேண்டிய கைகேயியின் மேல் பரதன்மட்டுமல்ல, எல்லாமக்களும்கடுங்கோபம்கொண்டிருக்கின்றனர். எனவே இப்பொழுது கூட்டத்தில் வருகின்ற மகளிரின் அழகிய கொங்கைகளில் தம் மனத்தைப் பறிகொடுத்து நிற்கும் நிலையில் ஆடவர்கள் இல்லை. ஏனெனில் அவர்கள் மனம் முன்னமேயே நெருப்பால் தீய்ந்து போய்விட்டது என்பதாம். இங்கே ஒரு சுவையான செய்தி. சில ஆடவர்கள் மக்கள் கூட்டத்திலே கூடத் தம் காதலியரின் கொங்கைகளைக் கண்டு மகிழ்ந்து கொண்டே வருவதும் உண்டு- அவர்களை அறிஞர்கள் காமுகர்கள் என்று இகழ்வதுமுண்டு. ''கோட்டி யுள் கொம்பர் குவிமுலை நோக்குவான், ஒட்டை மனவன் உரம்இலி என்பரும்'' என்பது பரிபாடல். மன்மதனது ஐங்கொடுங்கணைகள்தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலம் என்பன. இவற்றின் செயல்களும் அதனால் ஏற்படும் அவஸ்தைகளும் 1. தாமரை-பெருமயக்கு-சுப்பிர யோகம்-பேசாது ஒழியாது நினைத்திருத்தல்; 2. மாம்பூ-சிந்தாகுலம்-விப்பிரயோகம்-பெருமூச்சு எறிந்து வருந்துதல்; 3. அசோகம்-புணர்ச்சிக்கு இணங்குதல்-சோகம்-வெதும்பி உணவு வெறுத்தல். 4. முல்லை-மோகனம்-மோகம்-அழுதலும் பிதற்றலும்; 5. நீலோற்பலம்-சந்தாபம்-வெப்பம்-மரணம்-உயிர் சோர்தலும் மயங்குதலும் ஆம்.

Koviloor Digital Library

52. பரதனும் சத்துருக்கனனும் புறப்படுதல்

இன்னணம் நெடும்படை ஏக, ஏந்தலும்
தன்னுடைத்திரு அரைச் சீரை சாத்தினான்;
பின் இளையவனோடும், பிறந்த துன்பொடும்
நன்னெடுந் தேர்மிசை நடத்தல் மேயினான். (2393)

(சீரை-மரவுரி; பிறந்த-தோன்றிய; ஏந்தல்-ஆண்மையில் சிறந்தவன்; நடத்தல்-செல்லுதல்; அரை-இடுப்பு)

இவ்வாறு அந்தப் பெரிய சேனை செல்லவும், ஆண்மையிற் சிறந்த பரதனும் தன்னுடைய அழகிய இடுப்பில் மரவுரியைத் தரித்துக் கொண்டான். தன் பின்னே நிழல் போல எப்போதும் தொடர்ந்து வரும் இளையவனாகிய சத்துருக்கனனோடும், தன்னுடன் தோன்றிய பெரிய மனத்துன்பத்தோடும் நல்ல பெரிய தேரின் மீது ஏறிச் செல்லத் தொடங்கினான்.

பின் இளையவன் என்ற சொற்றொடர் நோக்குதற்குரியது. முன் இளையவன் இலக்குவன் என்பதை உணர்த்தத் தனக்குப் பின் இளையவன் சத்துருக்கனன் என்றவாறு. பிறந்த அன்பு என்பது, நினைக்குந்தோறும் மேலும் மேலும் பரதனுக்குத் துக்கம் பொங்குதலைக் குறிக்கும் என்க. பரதன் சீரை சாத்தினான் என்றதனால் சத்துருக்கனனும் சாத்தினான் என்பது பெறப்பட்டது. பெருந்துயரத்துடனும் தம்பி சத்துருக்கனனோடும் தேரில் ஏறிச் சென்றான் என்பதாம்.

53. தாயரும் உடன் வருதல்

தாயரும், அருந்தவத் தவரும், தந்தையின்
ஆய மந்திரியரும், அளவுஇல் சுற்றமும்,
தூய அந்தணர்களும், தொடர்ந்து சூழ்வரப்
போயினன், திருநகர்ப் புரிசை வாயிலே. (2394)

(புரிசை-மதில்; ஆயம்-இரகசியம் / மந்தணம்)

தனது மூன்று தாயார்களான, கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகியோரும், செய்தற்கரிய தவத்தை இயற்றுகின்ற தவசியர்களும், தந்தையைப் போல அன்பு பாராட்டும் தசரதனின் மந்திரிமார்களும், கணக்கிலடங்காச் சுற்றத்தவரும், தூய்மையான வேதியர்களும், தன்னைத் தொடர்ந்து சுற்றிவர, அழகிய அயோத்தி நகரத்தின் மதில் வாயிலைச் சென்றடைந்தான் பரதன்.

தந்தையின் ஆயமந்திரியர் என்பதற்குத் தன் தந்தையாகிய தசரதனின் மந்திராலோசனைக்கு உரிய மந்திரிகளும் என்று பொருள் கொள்ளுதல் இன்னும் சாலப் பொருந்தும். ஏனெனில் பரதன் இன்னும் மன்னன் ஆகவில்லை. எனவே இப்பொழுது அவன்கூட வருபவர்கள் அவனுடைய

Koviloor Digital Library

மந்திரிகள் அல்லர். அவன் தந்தை தசரதனின் மந்திரிகள் என்பதைக் குறிப்பிட்டதாகக் கூறுதலே சாலப்பொருந்தும் என்று அறிக. சுற்றம் என்பதில், ஐம்பெருங்குழுவினரும், எண்பேராயத்தாரும் அடங்குவர். அவர்களில் மந்திரிமார்களைத் தனியே கூறிவிட்டது நோக்குக.

54. சத்துருக்கனன் கூனியைக் கொல்ல முயலுதல்

மந்தரைச் கூற்றமும், வழிச் செல்வாரோடும்
உந்தியே போதல் கண்டுஇளவல் ஓடி ஆர்த்து,
அந்தரத்து ஏற்றுவான் அழன்று, பற்றலும்
சுந்தரத் தோளவன் விலக்கிச் சொல்லுவான். (2395)

(கூற்றம்-இயமன்; அந்தரம்-விண்ணுலகு; ஏற்றுவான்-அனுப்பும் பொருட்டு; அழன்று-கோபித்து; சுந்தர-அழகிய; மந்தரை-கூனி)

மந்தரை என்னும் இயமனும், அங்கு வழிச் செல்லுபவர்களோடு அவர்களை முந்திக் கொண்டும், தனது காலை உந்திக் கொண்டும் சென்றாள்; அதனைக் கண்ணுற்ற இளையவனான சத்துருக்கனன் விரைவாக ஓடிப்போய் ஆரவாரித்துக் கொண்டு, அவளை விண்ணுலகு அனுப்பும் பொருட்டுக் கோபித்து, தாவிச் சென்று பிடித்தான். அதனைக் கண்ட அழகிய தோள்களையுடைய பரதனும், அவளை அவனிடமிருந்து விடுவித்துப் பின்வருமாறு கூறலானான்.

தசரதன் விண்ணுலகு புகவும், இராமன் கானகம் புகவும் காரணமா யிருந்தவள் கூனி என்பதனால் அவளைக் கூற்றம் என்று சாடினார். அவள் கூனிய உருவம் கொண்டவள் எனவே சற்று உந்தி நடந்தாள் என்பது கொண்டு உந்தியே போதல் கண்டு என்றார். அவளும் வழிச்செல்வாரோடு சேர்ந்து செல்வதற்குக் காரணம், தன் செயல் தடைப்பட்டு விடுமோ என்று காண்பதற்கும், இனி மேலும் என்ன நடக்கப் போகிறது என்பதைக் காணுவதற்கும் ஆசை கொண்டு கூட்டத்தை முந்தித்தள்ளி கொண்டு நடந்து சென்றாள் என்பதும் ஒன்று. இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. ''ஒரு பெண்ணின் சொல்லால் காட்டிற்கு இராமன் துரத்தப்பட்டான் என்பது வியப்பே! இலக்குவன் ஏன் அதைத் தடுக்கவில்லை. எனவே தசரதனைத் தண்டிக்க வேண்டும்'' என்று பரதன் சத்துருக்கனனிடம் கூறியதாகவும், 'அப்பொழுது மந்தரை தன்னை அலங்கரித்துக் கொண்டு அப்பக்கம் வந்ததாகவும், வாயிற் காப்போர் அவளைப் பிடித்துச் சத்துருக்கனனிடம் ஒப்படைத்தாகவும், அவன் அவளைக் கீழே பிடித்துத் தள்ளி இழுத்துச் சென்றான் எனவும், அதனைக் கண்ணுற்ற கைகேயி தலையிட்டு அவளைச் சத்துருக்கனனிடம் இருந்து விடுவிக்க முயல, சத்துருக்கனன்அவளையும்அதட்டிவிட்டு, மந்தரையைமேலும்இழுத்துக் கொண்டு சென்றதாகவும், அப்பொழுது பரதன் அதைக் கண்டு அவனைத்தடுத்து அவளை விடுவித்தான் என்றும் வான்மீகம் கூறும்.

Koviloor Digital Library

55. பரதன் தடுத்துக் கூறுதல்

''முன்னையர் முறைகெட முடித்த பாவியைச்
சின்னபின்னம் செய்து, என் சினத்தைத் தீர்வனேல்,
என்னை இன்று என் ஐயன் துறக்கும் என்று, அலால்
''அன்னை'' என்று உணர்ந்திலேன் ஐய! நான்'' என்றான்.
(2396)

(சின்னபின்னம்-சித்திரவதை / கண்டதுண்டம் செய்தல்)

பரதன்சத்துருக்கனனைநோக்கி, ''ஐயனே! நமது சூரிய குல முறைப்படி மூத்தவற்குரித்து அரசு என்னும் நியதி கெடுமாறு முடித்த இந்தப் பாவியாகிய கைகேயியை நான் கண்ட துண்டமாக வெட்டிச் சித்திரவதை செய்து என் கோபத்தைத் தணித்துக் கொண்டிருப்பேன். ஆனால் நான் அவ்வாறு செய்யாமல் அமைதியாயிருந்ததற்குக் காரணம், என்னுடைய தலைவன் இராமபிரான் நான் அவனுக்குத் தம்பியாதற்குத் தகுதியில்லாதவன் என்று கருதி என்னைத் துறந்து விடுவான் என்ற அச்சமே யன்றி, இவள் என் தாய் என்ற உணர்வினால் அல்ல. இதனைப் புரிந்து கொள்'' என்றான்.

வழி வழியாக வருகின்ற முறைமையைப் பேணிப் பாதுகாத்து ஒழுகுதலே ஒரு பெண்ணரசியின் கடமை. அதனைத் தவிர்த்து, அம் முறைமை கெட்டழியுமாறு மூத்தவன் இராமன் இருக்க இளையவனான தனக்குப் பட்டம்சூட்ட விழைந்தகைகேயியைப் ''பாவி''என்றான்பரதன். வாளால் ஒரே வீச்சாக வீசிக் கொல்லுவதைக் காட்டிலும் இவளைச் சித்திரவதை செய்து சிறிது சிறிதாக அவன் உடலைச் சிதைத்துச் கொல்லுதல்தான் தகும் என்று எண்ணினான் என்க. முன்பு அவளைத் தண்டிக்காமல் விடுதற்கு இராமன் கோபிப்பான் என்றே விடுக்கிறேன் என்று கூறிய பரதன், இங்கு இப்பொழுது இவளைக் கொல்லாமல் விடுத்தற்கு, இராமன் என்னைத் தம்பியல்லன் என்று துறந்து விடுவானே என்று கூறுவதை நோக்குக. இராமபிரானுடைய செய்கைக்காகத் தான் இவளை நான் கொல்லாது விடுகிறேனே அன்றி இவளை நான் என்னுடைய தாய் என்று கருதியதால் அன்று'' என்று தெளிவாகக் கூறுகிறான் பரதன். ''தூயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால், தாய் எனும் பெயர், எனைத் தடுக்கற்பாலதோ?'' என்பது பரதன் கூற்று. இவ்வளவுக்கும் நேரடிக் காரணம் மூலகாரணம் தன் தாய் கைகேயியே அன்றிக் கூனி அல்லள் என்பது பரதன் கருத்து.

56. சத்துருக்கனனை அமைதி கூறி அழைத்துச் செல்லுதல்

''ஆதலால், முனியும் என்றுஐயன்; அந்தம்இல்
வேதனைக் கூனியை வெகுண்டும் என்னினும்

Koviloor Digital Library

கோதுஇலா அருமறை குலவு நூல்வலாய்!
போதும் நாம்'' என்று கொண்டு அரிதில் போயினான். (2397)

(கோது-குற்றம்; குலவு-விளக்கம் உடைய; அந்தம்இல்-முடி வில்லாத; போதும்-போவோம்; அரிதின்-சிரமப்பட்டு / மிக முயன்று.)

பரதன் சத்துருக்கனனை நோக்கி, ''குற்றமற்ற அருமையான வேதங் களையும், மற்றும் விளக்கம் பொருந்திய சாத்திர நூல்களையும் கற்றுத் தேர்ந்தவனே! எல்லையில்லாத வேதனையை நமக்கும் மக்களுக்கும் அளித்த இந்தக்கூனியை நாம் கோபித்தோம் என்றாலும் கூட, நம் தலைவன் இராமன் இப்பொழுது நம்மீது வெகுள்வான்; எனவே நாம் அமைதியாகச் செல்வோம் வா''; என்று மிக முயன்று தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றான்.

நாம் அவளைக் கோபித்துக் கொண்டாலே இராமன் நம்மைக் கோபிப்பான் என்றால், அவளைக் கொல்லுதல் என்பது உன் போன்ற மறை நூல், சாத்திர நூல்களைக் கற்றவர்க்குப் பொருந்துமோ? என்பதாம். இதே காட்சி, முன்பு இலக்குவன் கைகேயியை வெகுண்டதும், அப்போது இராமன் வந்து அவனை அமைதிப் படுத்தி அழைத்துப் போனதும் நம் நினைவிற்கு வருகிறது அல்லவா?

57. இராமன் முன்பு தங்கிய சோலையிலேயே பரதனும் தங்குதல்

மொய்பெரும் சேனையும், மூரி ஞாலமும்
கைகலந்து, அயல்ஒரு கடலின் சுற்றிட,
ஐயனும், தேவியும், இளைய ஆளியும்
வைகிய சோலையில் தானும் வைகினான். (2398)

(மொய்-நெருங்கிய; மூரி-பெருமை / வலிமை; ஆளி-சிங்கம்; வைகிய-தங்கிய; கைகலத்தல்-உடன் கலந்து / ஒன்று கூடி; அயல்-பக்கம்)

நெருங்கிய பெரிய சேனைகளும், பெருமை பொருந்திய அயோத்தி நகர மக்களும் ஒன்று கூடித் தன் பக்கத்தே கடல் போலச் சூழ்ந்து வர, பரதன், முன்பு இராமபிரானும், சீதாதேவியும், சிங்கம் போன்ற இளையவனான இலக்குவனும் இரவு தங்கிய அதே சோலையில் தானும் அன்றிரவு எல்லோருடனும் தங்கினான்.

முன்பு இராமன் நகர் நீங்கும் பொழுது தங்கிய சோலையை உடன் வந்த சுமந்திரன் காட்டியதால், அங்கே தங்கிப் போவதில் பரதனுக்கு ஆசை எழுந்ததனால் அங்கேயே எல்லோரும் அன்றிரவைக் கழித்தார்கள் என்பதாம். அது அவனுக்கு ஒரு ஆறுதலைத் தரும் என்பது நுண்பொருள்.

Koviloor Digital Library

58. பரதனும் அதே புல்லணையின் அருகில் தங்குதல்

அல்அணை நெடுங்கண் நீர்அருவி ஆடினன்,
கல்அணை கிழங்கொடு கனியும் உண்டிலன்,
வில்அணைத்து, உயர்ந்த தோள் வீரன் வைகிய
புல்அணை மருங்கில், தான் பொடியின் வைகினான். (2399)

(அல்-இரவு; கல்-மலை; அணை-பொருந்திய / தோன்றும்; மருங்கில்-பக்கத்தில்; பொடி-புழுதி; அணைதல்-பெருகுதல்)

பரதன் அன்று இரவில், தன் பெரிய கண்களிலிருந்து நீர் அருவியாகப் பொழிய அதிலேயே நீராடியவன் போல் ஆனான்; அவ்வாறு நீராடியவன் மலைகளில் விளையும் கிழங்குகள், பழங்கள் முதலிய எதனையும் உண்ணாது இருந்தான்; வில்லை ஏந்திய உயர்ந்த தோள்களையுடைய இராமன் முன்பு தங்கிய அதே புல்லாலாகிய படுக்கையின் அருகில், தானும் அந்தப் புழுதியிலேயே அன்றிரவைக் கழிக்கலானான்.

அருவி எனக் கண்ணீரை உருவகித்ததனால் அவனது துயரம் மிகுதி புலப்படுத்தப்பட்டது. அதே புல்லணையில் தான்தங்குதலும் தவறு என்று கருதி அங்கே படுக்காது, அதன் அருகில் உள்ள புழுதி படிந்த வெறுந் தரையில் தங்கினான் என்பதாம். அயோத்தியில் அறுசுவை உண்டியை நீத்தவன், இப்பொழுது கிழங்கு, பழங்களையும் நீத்தான் என்க. தன் தமையன்இராமனைப்போலவே, தன்னையும்அத்தகைய துன்பங்களுக்கு உட்படுத்திக் கொள்ள பரதன் விழைந்தான் என்பது புலப்படுத்தப்பட்டது.

59. பரதன் தேரில் செல்லாது நடந்தே செல்லுதல்

ஆண்டு நின்று, ''ஆண்தகை அடியின் ஏகினான்
ஈண்டியநெறி'' எனத் தானும் ஏகினான்;
தூண்டிடு தேர்களும், துரக ராசியும்,
காண்தகு கரிகளும், தொடரக் காலினே. (2400)

(ஈண்டிய-நெருங்கிய; அடி-கால்; துரகராசி-குதிரைகளின் தொகுதி; கரி-யானை)

அவ்விடத்திலிருந்து, ''ஆண்களிற் சிறந்தோனாகிய இராமன், காலாலேயே நெருங்கிய காட்டு வழியில் நடந்து போனான்'' என்று சுமந்திரன் சொல்லக் கேட்டறிந்து, தானும் அவ்வாறே காலாலேயே நடந்து சென்றான். சாரதிகளால் செலுத்தப்படுகின்ற தேர்ப்படையும், குதிரைப் படையின் தொகுதியும், காண்பதற்கு இனிமையான யானைப் படைகளும் பரதனைத் தொடர்ந்து வரலாயின.

இராமன் காட்டை அடைந்த பொழுது அவனிடம் தேர் முதலியன ஒன்றும் இருக்கவில்லை. எனவே அவன் காலால் நடந்தே கடக்க வேண்டியதாயிற்று. ஆனால் இப்பொழுது பரதனிடம் எல்லாச்

Koviloor Digital Library

சேனைகளும் அளவிற்கதிகமாகவே இருந்த போதும், தான் காலாலேயே நடந்து செல்ல வேண்டும் என்று அவன் கருதியதும், அவ்வாறே செயல்படுத்தியதும், அவன் இராமன் பால் கொண்ட நன்மதிப்பையும், பேரன்பையும், முதிர்ந்த பக்தியையும் புலப்படுத்தும். படைகளுள் சிறந்தது யானைப் படை எனவே காண்தகு கரிகள் என்றார். ''யானையுடை படைகாண்டல் மிக இனிதே'' என்பது இனியவை நாற்பது; ''படைதனக்கு யானை வனப்பாகும்'' என்பது சிறுபஞ்சமூலம்.

ஆறு செல் படலம் நிறைவுற்றது.

Koviloor Digital Library

12. கங்கை காண் படலம் [72 பாடல்கள்]

பரதன் தன் சேனைகளுடனும், அயோத்தி நகர மக்களுடனும், கங்கையின் வடகரை வந்து சேர்ந்து, குகனைக் கண்டு நட்புக் கொண்டு, கங்கையைக் கடந்து தென்கரை அடையும் வரை நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறும் படலம் என விரியும். இது 72 பாடல்களைக் கொண்டது. இது சில சுவடிகளில் ''குகப்படலம்'' எனவும், ''கங்கைப் படலம்'' எனவும், ''குகன் பரதனை எதிர் கொண்டு வழிவிடு படலம்'' எனவும், ''பரதனைக் குகன் எய்து படலம்'' எனவும் பலவாறாகக் குறிக்கப் பெற்றிருக்கின்றன. முன்னர் இராமன் காடு புகுவதற்காகக் கங்கைக் கரையை அடைந்த செய்தியை விவரிக்கும் பகுதி கங்கைப் படலம் என்று தலைப்பிடப்பட்டது நினைவு கூரத்தக்கது. இராமன் காடு செல்லும் போது கங்கைக் கரையை அடைந்ததால் அது கங்கைப் படலம் எனப்பட்டது. இங்கே பரதன் இராமனைத் தேடிக் கொண்டு வந்து அவனைக் காணவேண்டும் என்னும் காட்சி நோக்கின் முனைப்பால் கங்கையை அடைந்தான். எனவே இது அதனின்றும் வேறாகக் ''கங்கை காண் படலம்'' எனக் குறிக்கப்படலாயிற்று என்க.

இப்படலத்துள், பரதன் தன் பரிவாரங்களுடன் கங்கையை அடைதல்; அங்கேயிருந்த குகன் பரதன் வரவு கண்டு ஐயுறுதல்; தென்கரையை அடைந்து பரதனுக்கு உதவி செய்யக் கூடாது என்று தன் சேனைகளுக்குக் கட்டளை இடுதல்; குகனைக் காண பரதன் விழைதல்; குகன் தனியே நாவாயில் வந்து, பரதன் நிலைகண்டு துணுக்குற்றுத் தொழுதல்; இருவரும் ஒருவரை ஒருவர் தழுவி, வந்த காரணத்தை வினவுதல்; காரணம் அறிந்து குகன் மனம் மாறுபட்டு அவனைப் பாராட்டிப் புகழ்ந்து மீண்டும் வணங்குதல்; பரதன் வேண்டுகோளுக்கு இணங்கி, குகன், இராமன், உறைந்த, துயின்ற இடங்களைக் காட்டுதல்; பரதன் சிந்தித்து ''இலக்குவன் அப்பொழுது என்ன செய்து கொண்டிருந்தான்?'' என வினவுதல்; குகன் இலக்குவனைப் புகழ்ந்து கூறியது கேட்ட பரதன் தன்னைத் தானே நொந்து கொள்ளுதல்; பரதன் தென் கரையை அடையவேண்டும் எனக் கூறி உதவி கேட்க, குகன் தன் படையினருக்குக் கட்டளையிட நாவாய்கள் வருதல்; சேனைகளுடன் கங்கையைக் கடத்தல்; முனிவர்கள் மட்டும் வான் வழியே கங்கையைக் கடத்தல்; குகனுக்குப் பரதன் தன் மூன்று தாய்மார்களையும் அறிமுகப்படுத்துதல்; குகன் மூவரையும் வணங்க நாவாய் அக்கரை அடைதல்; தாயர் சிவிகையிலும், பரதன் நடந்தும் சென்று பரத்துவாசன்

Koviloor Digital Library

ஆசிரமம் அடைதல்; முனிவர் அவர்களை எதிர் கொண்டு அழைத்தல் ஆகிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. சேனைகளுடன் பரதன் கங்கையை அடைதல்

பூவிரி பொலன்கழல் பொருஇல் தானையான்
காவிரி நாடன்ன கழனி நாடு ஒரீஇத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான். (2401)

(விரி-பரவிய; பொலன்-பொன்; பொருஇல்-ஒப்புமையில்லாத; ஒரீஇ-நீங்கி; தாவரம்-நிலத்திணை; சங்கமம்-இயங்கு திணை; கழனி-வயல் / மருதநிலம்; தாவரம்-ஸ்தாவரம்; சங்கமம்-ஜங்கமம் என்னும் வட சொற்களின் திரிபு; பூ-பொலிவுமாம்)

பொன்னாலானதும், பூ வேலைப்பாடு மிக்கதுமான வீரக்கழலை அணிந்துள்ள, ஒப்பற்ற சேனைகளையுடைய பரதன், தமிழ்நாட்டுக்காவிரி பாயும்சோழநாடுபோலநீர்வளம்நிலவளம்பொருந்தியகழனிகள்நிறைந்த கோசல நாட்டை விட்டு நீங்கி, இயங்கு பொருள்கள், இயங்காப் பொருள்களான எல்லா உயிரினங்களும் தன் நிலைமை கண்டு இரக்கம் கொள்ளுமாறு, கங்கைக் கரையை அடைந்தான்.

கோசல நாட்டுக்குக் காவிரி நாடு உவமை. உவமை என்பது தான் கூறும் பொருளினும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது இலக்கணம். எனவே கம்பன் தன் காவிரி நாட்டை உயர்ந்ததாகக் கூறுவதனால் அவனுடைய நாட்டுப் பற்றுப் புலப்படும். காவிரி என்பது காவேரி என்ற சொல்லின் திரிபு. ''கவரேன்'' என்னும் மன்னனது மகள் காவேரி என்றும் அது காவேரி ஆயிற்று என்றும் கூறுவதுண்டு. உலகத்து உயிரினங்கள் அனைத்தையும் ஏழுவகைகளாகப் பிரித்திருப்பது நாம் அறிந்ததே; அவற்றை தாவர, சங்கம என்று இரண்டே பிரிவுகளில் இங்கு அடக்கினார் என்க. மரம் செடி முதலிய தாவரங்கள் இடம் விட்டுப் பெயராதன நிலைத்திணை உயிர்கள்; ஊர்வன, நீர் வாழ்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் ஆகியோர் இடம் விட்டுப் பெயரும் தன்மை படைத்தன, எனவே இயங்கு திணை என்பதாம். மணி முடிசூட்டிவர வேண்டிய இளவரசன் மரவுரி தரித்து வந்திருக்கிறானே என எல்லா உயிர்களும் இரங்கின என்பதாம்.

2. யானைப் படையின் பெருக்கம்

எண்ணஅரும் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது
கண்அகன் பெரும்புனல் கங்கை எங்கணும்
அண்ணல் வெம்கரி மதத்து அருவி பாய்தலால்
உண்ணவும் குடையவும் உரித்தன்று ஆயதே. (2402)

Koviloor Digital Library

(கண்அகல்-இடம் அகன்ற; வெம்-விரும்பத்தக்க; சுரும்பு-வண்டு; குடைதல்-முழுகுதல்; உரித்தது-தகுதியுடையது)

இடம் அகன்றதும், பெரும் நீர்ப் பெருக்கையுடையதுமாகிய கங்கை ஆற்றின் கரைகள் எல்லாவற்றிலும், பெருமையுடையதும், விரும்பத் தக்கதும், வெப்பம் கொண்டவையுமான யானைகள் பொழியும் மதநீர், அருவி எனப் பெருக்கெடுத்து ஓடிக் கங்கையில் கலந்து விடுவதால், அது அளவிடற்கரிய வண்டுகளின் இனத்துக்குத் தான் பருகுவதற்கும் முழுகுவதற்கும் உரியதாய் இருக்கின்றதே யன்றி, ஏனைய மனிதர்கள் பருகுவதற்கும் நீராடுவதற்கும் தகுதியுடையதாய் இல்லாததாயிற்று.

பரதனோடு வந்த யானைப் படைகளின் மிகுதி கூறியவாறு. மதநீர் நாற்றத்தாலும் தூய்மையற்றதாலும்அந்த நீர், மக்கள் பருகுவதற்கும் நீராடுவதற்கும் ஏற்றது அன்று என்பதாம். கங்கை நீர்ப் பெருக்கினும், யானைகளின் மதநீர்ப் பெருக்கு மிகுதி என்று கூறியவாறு. மதம் கொண்ட யானையின் உடல் வெப்பம் மிகுந்திருத்தல் இயல்பு. எனவே மதவெம் கரி என்றார் என்க.

3. குதிரைப் படையின் பெருக்கம்

அடிமிசைத் தூளிபுக்கு அடைந்த தேவர்தம்
முடிஉறப் பரந்தது; ஓர்முறைமை தேர்ந்திலம்;
நெடிது உயிர்த்து உண்டவும், நீந்தி நின்றவும்
பொடிமிசைப் புரண்டவும், புரவி ஈட்டமே. (2403)

(புரவி-குதிரை; ஈட்டம்-கூட்டம்; பொடி-தூளி / புழுதி; முறைமை-இயல்பு; தேர்தல்-அறிதல்)

அந்தப் பரிவாரங்களில் வந்த குதிரைகளின் கூட்டம், வழி நடந்து வந்த களைப்பால் நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டும், நீரைப்பருகிக் கொண்டும், நீரில் நீந்திக் கொண்டும், தரையில் புழுதியில் புரண்டு கொண்டுமே இருந்தன; அவை ஓடி வந்ததால் எழுந்த புழுதித் துகள், வானுலகில் நுழைந்து, தேவர்களுடைய முடிகளில் படிந்து பரவியது. அவ்வாறு பரவியமையை ஓர் அனுமானத்தால் தான் கூறமுடியுமே தவிர, நாம் நேரில் கண்டு அறிந்தோம் இல்லை.

குதிரைப் படையின் மிகுதி கூறியவாறு.

4. காலாட் படையின் பெருக்கம்

பாலைஏய் நிறத்தொடு பண்டுதான் படர்
ஓலைஏய் நெடுங்கடல் ஓடிற்றில்லையால்;
மாலைஏய் நெடுமுடி மன்னன் சேனையாம்
வேலையே மடுத்தது அக்கங்கை வெள்ளமே. (2404)

Koviloor Digital Library

(ஏய்-பொருந்திய; வேலை-கடல்; மடுத்தது-குடித்தது / உண்டது / பருகியது; ஏய்-போன்ற; பண்டு-முன்பு; ஓல்-ஒலி)

மாலை பொருந்திய பெரிய முடியினை உடைய மன்னன் தசரதனது சேனைகள் என்னும் கடலே, அந்தக் கங்கையாற்றின் நீர் முழுவதையும், வழி வந்த களைப்பால் பருகிவிட்டன. எனவே பால் போன்ற வெண்மை நிறத்தோடு எப்போதும் ஒலி செய்து கொண்டு இருக்கின்ற பெருங்கடலில் போய் அக்கங்கையாறு சங்கமம் ஆக வில்லை. பொதுவாக ஆற்று வெள்ளம் எப்போதும் ஓடிப்போய் கடலில் கலக்கும். அவ்வாறே கங்கை ஆறும் கடலில் கலந்து கொண்டிருந்தது. ஆனால் இன்று, தசரதனின் காலாட்படை என்னும் சேனைக் கடல் வந்து அக்கங்கை வெள்ளம் முழுவதையும் பருகிவிட்டதால், அந்நீர்ப் பெருக்கு கடலைப் போய்ச்சேர வில்லை என்பதாம்.

பொதுவாக நீர் ஓடிக் கடலில் கலக்கும்; மாறாக இங்கே கடல் (சேனைக் கடல்) வந்து நீரைக் குடித்தது என்று கூறியது ஒரு நயம். கங்கை நீர் வெண்மை நிறமானது என்பது பாலை ஏய் நிறம் என்பதனாற் பெறப்பட்டது.

5. சேனையின் அளவு

காந்தனை நண்ணிய காளை பின்படர்
தோன்றலை, அவ்வழி தொடர்ந்து சென்றன
ஆன்றவர் உணர்த்திய அக்குரோணிகள்
மூன்று பத்தாயிரத்து இரட்டி முற்றுமே. (2405)

(ஆன்றவர்-கணிதநூல் வல்ல அறிஞர்; உணர்த்துதல்-வரையறுத்துத் தெரிவித்தல்; நண்ணிய-அடைந்த; படர்தல்-செல்லுதல்; தோன்றல்-தலைவன்; அக்குரோணி-படையளவு; அவ்வழி-அப்போது; முற்றும்-நிறையும்)

கானகத்தைச் சென்றடைந்த இராமபிரானின் பின் சென்ற பரதனை அப்போது தொடர்ந்து சென்ற எல்லாப் படைகளின் எண்ணிக்கை, கணித நூல் வல்லார் வரையறுத்துத் தெரிவித்தபடி அறுபதினாயிரம் அக்குரோணிகள் ஆகும்.

அக்குரோணி என்பது ஒரு பேர் எண்ணைக் குறிக்கும். ஒரு அக்குரோணி என்பது 21870 தேர்களும், 21870 யானைகளும், 65610 (மூன்று மடங்கு) குதிரைகளும், 1,09,350 (ஐந்து மடங்கு) காலாட்களும் ஆகமொத்தம் 218700 எண்ணிக்கை உடையது. நான்கு சேனைகளும் சேர்ந்து அதாவது 1:1:3:5 என்ற விகிதப்படி உள்ளது ஒரு அக்குரோணி. இது போல் 60,000 அக்குரோணிப் படைகள் பரதன் பின்னே சென்றன என்பதாம். பெரும் பேரரசனாகிய தசரதனுக்கு 60,000 மனைவியர் என்றும், 60,000 அமைச்சர்கள் என்றும், 60,000 பேர் வில்லைத் தூக்கி வந்தனர் என்றும் கம்பன் எல்லா இடங்களிலும் இவ்வாறு குறிப்பிடுவதைக் காண்க.

Koviloor Digital Library

6. படைகள் வருதலைக் குகன் காணுதல்

அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
துப்புடைக் கடலின் நீர்சுமந்த மேகத்தை
''ஒப்புடை அண்ணலொடு உடற்றவே கொலாம்
இப்படை எடுத்தது'' என்று, எடுத்த சீற்றத்தான். (2406)

(ஆயிடை-அப்பொழுது; துப்பு-பவளம்; உடற்றல்-போர் செய்தல்; எடுத்தது-எழுந்தது; சீற்றம்-சினம்)

பரதனுடன் வந்த அந்தச் சேனையானது, கங்கையின் வடகரையை வந்து அடைந்த பொழுது ''பவளங்கள் நிறைந்துள்ள கடலின் நீரைக் கொண்டிருந்த மேகம் போன்ற திருமேனியுடைய இராமபிரானோடு போர் செய்வதற்கே இந்தப் படை எழுந்து வந்துள்ளது போலும்?'' என்று ஐயம் கொண்டு, தவறாகக் கருதி, சினம் மேற்கொண்டான். *(தென்கரையில் தோன்றிய குகன்)*

இது முதல் 6 பாடல்கள் ஒரு தொடர். குகன் இராமபிரானிடம் கொண்டிருக்கும் பெரு மதிப்பினால், இந்தப் படை இராமபிரானை அழிப்பதற்காகவே புறப்பட்டு வந்திருக்கிறது போலும் என்று தவறாகக் கருதிச் சினம் மேற்கொண்டான் என்பதாம். இப்போது பரதன் வந்து சேர்ந்திருப்பது கங்கையின் வடகரை, குகன் இருப்பதோ தென்கரையில்.

7. அவனிடம் எழுந்த மெய்ப்பாடுகள்

குகன்எனும் பெயரிய கூற்றின் ஆற்றலான்;
தொகைமுரண் சேனையைத் துகளின் நோக்குவான்;
நகைமிக, கண்கள் தீநாற, நாசியில்
புகைஉற, குனிப்புறும் புருவப் போர்விலான். (2407)

(தொகை-கூட்டம்; முரண்-வலிமை; நகை-வெகுளிச் சிரிப்பு; நாற-தோன்ற; குனிப்புறும்-வளைந்த)

குகன் என்னும் பெயர் கொண்ட வேடர் தலைவன்; இயமனைப் போன்ற வலிமை பெற்றவன்; கூட்டமாகவும், வலிமையாகவும் வருகின்ற பரதனது சேனையைத் தூசியைப் போன்று அற்பமாக நோக்கினான்; எனவே வெகுளிச் சிரிப்புத் தோன்றியது; கண்கள் கனலைக் கக்கின; மூக்கில் புகை வெளிவந்தது; புருவங்கள் வளைந்து நெற்றியின் மேலேறின; போர் செய்யும் வில்லினைக் கைகளில் ஏந்தியிருந்தான்.

குகனது தோற்றத்தையும், பரதனது படையைக் கண்டதனால் உண்டான சினக்குறிப்பு மெய்ப்பாடுகளையும் கூறினார்; கோபத்தால் சிரிப்பதும், கண்கள் சிவப்பேறுதலும், மூக்கில் வெப்பக்காற்று வெளி வருதலும், புருவங்கள்நெரிதலும், வெகுளியின்போது ஏற்படும் இயற்கை யான மெய் வெளிப்பாடுகள். இங்கே இவன் பரதன் படையை ஒரு

Koviloor Digital Library

பொருட்டாக எண்ணாது நோக்கினான் என்பது அவனது தறுகண் ஆண்மையைக் குறிக்கும். சினத்தைத் தீயாக உருவகித்ததனால், அப்பொழுது எழுந்த புகை கண்களிலிருந்தும், மூக்கிலிருந்தும் வெளிப்பட்டன என்று கூறியதும் ஒரு நயம்.

8. மைஉறவு உயிர்எலாம் இறுதி வாங்குவான்
கைஉறுகவர் அயில் பிடித்த காலன்தான்
ஐ ஐநூறு ஆயிரம் உருவம் ஆயின
மெய்யுறு தானையான், வில்லின் கல்வியான். (2408)

(மை-குற்றம்; உறவு-தொடர்பு; இறுதி-வாழ்நாள் முடிவு / ஆயுள் முடிவு; அயில்-சூலப்படை; காலன்-இயமன்; ஐ-வியக்கத்தக்க / அழகிய; ஐநூறு ஆயிரம்-ஐந்து லட்சம்; கைத்தல்-வெகுளல்; தானை-காலாட்படை)

குற்றத்தோடு தொடர்புடைய உயிர்கள் எல்லாவற்றிற்கும், அவ்வவற்றின் ஆயுட்காலம் முடியும் வரை காத்திருந்து, முத்தலைச் சூலத்தை கையில் ஏந்தி வெகுண்டு உயிரைக் கவரக் கூடிய, அழகிய, வியக்கத்தக்க, ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயமன் போன்ற தோற்றத்தையும் ஆற்றலையும் உடையவர்களான, ஐந்து லட்சம் படைவீரர்களைக் கொண்ட சேனையை உடையவன். தானே வில் வித்தையில் நன்கு தேர்ச்சி பெற்றவனுமாவான்.

குற்றத்தோடு தொடர்புடைய உயிர்கள்என்பது தீவினைஉடையதாதல். இயமன்ஆயுள்காலம் முடியும்வரைகாத்திருந்து உயிர்கவர்பவன்என்பதை முன்னும், ''சாற்றுநாள் அற்றது எண்ணித் தருமம் பார்த்து ஏற்றும் விண்'' என்றதனால் அறியலாம். ''காலனும் காலம் பார்க்கும்'' என்பது புறநானூறு.

9. குகனின் தோற்றம்

கட்டிய சுரிகையன்; கடித்த வாயினன்;
வெட்டிய மொழியினன்; விழிக்கும் தீயினன்;
கொட்டிய துடியினன்; குறிக்கும் கொம்பினன்;
''கிட்டியது அமர்'' எனக் கிளரும் தோளினான். (2409)

(சுரிகை-உடைவாள்; வாய்-உதடு / பல்; வெட்டிய-கடிய / கொடுமையான; துடி-பறை / உடுக்கை; குறித்தல்-ஊதுதல்; கிளர்தல்-பூரித்தல்; கொம்பு-ஒரு துளைக் கருவி; அமர்-போர்; கிட்டியது-கிடைத்தது / நெருங்கியது)

குகன் இடுப்பில் உடைவாளைப் பிணித்துக் கட்டியிருப்பவன்; உதடுகளும் பற்களும் ஒன்றையொன்று நெறுநெறு வென்று கடித்துக் கொண்டிருக்கின்ற வாயினை உடையவன்; வாளால் வீசியது போன்ற கடுமையான சொற்களுக்குச் சொந்தக்காரன்; கண்கள் அனல் பறக்கப் பார்ப்பவன்; துடி யென்னும் பறையை ஒலித்துக் கொண்டும், ஊது கொம்பு

Koviloor Digital Library

என்னும் துளைக் கருவியை ஊதிக் கொண்டும் ''போர் செய்வதற்குரிய காலம் நெருங்கியது''என்றகளிப்பால் பூரிக்கும்தோள்களையுமுடையவன்.

உடைவாளை இடையில் கட்டியிருப்பது போர்க்குச் சித்தமாயிருக்கிறான் என்பதைக் குறிக்க. அதற்கேற்ப கிட்டியது அமர் என்று கருதியதால் தோள்கள் பூரித்தவன் என முடிக்கிறார். சினத்தால் ஏற்பட்ட மற்ற மெய்ப்பாடுகளையும் மீண்டும் ஒருமுறை கூறினார் என்க. பறை கொட்டுதலும், ஊது கொம்பு கொண்டு ஊதுதலும் ஆங்காங்கே இருக்கின்ற வேடுவர்களை ஒன்று கூட்டவும், போருக்கு ஆயத்தமாகுங்கள் என்று எச்சரிக்கவும் என்க. ''போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள் திண்தோள்'' என்று கம்பர் முன்னர் கூறியதும் நோக்கத்தக்கது. ''போர் எனில் புகலும் புனைகழல் மறவர்'' என்பது புறநானூறு. ''செரு என்ற மாற்றம் கேட்டுச் சிந்தையில் உவகை பொங்க, வாகு பூதரமும் பூரித்து'' என்பது வில்லிபாரதம். வெட்டிய மொழி என்பது கண்ணோட்டமில்லாத கடுஞ்சொல் என்பதாம். துடியும், கொம்பும் குறிஞ்சி நிலத்து இசைக்கருவிகள்.

10. ''எலிஎலாம் இப்படை, அரவம்யான்'', என
ஒலிஉலாம் சேனையை உவந்து கூவினான்;
வலிஉலாம் உலகினில் வாழும் வள்உகிர்ப்
புலிஎலாம் ஒரு வழிப்புகுந்த போலவே. (2410)

(அரவம்-பாம்பு; வள்-கூரிய; உகிர்-நகம்; புகுதல்-திரண்டு நிற்றல்; ஒலி-ஆரவாரம்; உலாவுதல்-பரத்தல்)

சினம் மிக்க குகன், ''இந்தப் பரதனது சேனைகள் எல்லாம் எலிகள் போன்று அற்பமானது. எலிகளைக் கடித்து உண்ணும் பாம்பு போன்றவன் நான்'' என்று கூறி, ஆரவாரம் செய்து கொண்டிருக்கின்ற தன் சேனைகளையெல்லாம், மகிழ்ச்சியால் கூவி அழைத்தான். இவ்வுலகினில் வலிமை பெற்று வாழும் கூரிய நகங்களையுடைய புலிகள் எல்லாம் ஒரே இடத்தில் திரண்டு நின்றாற் போலத் தன் படையையும் ஓரிடத்தில் திரளுமாறு கூவி அழைத்தான்.

முன்பும் இப்படையைத் தூசு போன்று அற்பமானது என்றான். இப்பொழுது எலிகள் போல அற்பமானவை என்கிறான். இது அவனது வஞ்சினக் கூற்று. எவ்வளவு பெரிய படையானாலும் பாம்பு போன்ற என்னிடத்தில் அழிந்தொழியும் என்பது கருத்து. ''ஒலித்தக் கால் என்னாம் உவரி எலிப்பகை, நாகம் உயிர்ப்பக் கெடும்'' என்பது குறள் 763. வள்உகிர்ப் புலிக்கு, ஒலிஉலாம் வாள்உடைச் சேனை உவமை.

11. மருங்குஅடை தென்கரை வந்து தோன்றினான்;
ஒருங்குஅடை நெடும்படை ஒல்என் ஆர்ப்பினோடு,

Koviloor Digital Library

அருங்கடை யுகம்தனில், அசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்து எனக் கலந்து சூழவே. (2411)

(கடையுகம்-ஊழி இறுதி / பிரளயம்; அசனி-இடி; மழை-மேகம்; ஒருங்கு அடை-திரண்டு வந்த; ஆர்ப்பு-பேரொலி; மருங்கு-அடுத்து / பக்கம்; அருமை-துன்பம்; கிளர்தல்-பொங்கியெழுதல்; ஒல்-ஒலிக் குறிப்பு)

குகன் கூவியதால் ஒருங்கு திரண்டு வந்த படையினர் ஒல் என்ற பேரிரைச்சலோடும், துன்பம் மிகுந்த ஊழியிறுதிக் காலத்தில் இடியுடன் கூடிய பெரிய மேகங்களும், கரிய கடல்களும் பொங்கி எழுந்து ஆர்ப்பரிப்பது போல ஆர்ப்பரித்து தன்னைச் சூழ்ந்து சுற்றிவர, குகன், பரதன்நின்றவடகரைக்குநேர்எதிரேதென்கரையில்வந்துநின்றுதோற்றம் அளித்தான்.

மேகம் முழக்கத்திற்கும், கடல் அளவுக்கும் உவமையாகும்

12. குகன் தன் சேனைக்குச் சொல்லுதல்

''தோன்றிய புளிஞரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு
ஏன்றனென்; என்உயிர்த் துணைவற்கு ஈகுவான்
ஆன்ற பேரரசு; நீர் அமைதிராம்'' என்றான். (2412)

(புளிஞர்-வேடர்கள் / படை வீரர்; துணைவன்-தோழன்; ஈகுவான்-கொடுக்கும் பொருட்டு; ஊன்றிய-வந்து தங்கியிருக்கின்ற; உம்பர்-மேல் உலகம் / சுவர்க்கம்; ஏன்றல்-மேற்கொள்ளல்; அமைதி-ஆயத்தம் / தயார் நிலை; சூழ்ச்சி-உபாயம்; ஆன்ற-உரிமையாக அமைந்த)

அவ்வாறு தான் அழைத்தவுடன் வந்து கூடிய வேடர்களாகிய படைவீரர்களைப் பார்த்து, குகன், ''இங்கே எதிரில் வந்து தங்கியிருக்கும் பரதனது சேனையை சுவர்க்கலோகம் அனுப்புவதற்கும், என்னுடைய உயிர்த் தோழனாகிய இராமபிரானுக்கு அவனுக்கு உரிமையாய் அமைந்த கோசல நாட்டுப் பேரரசை அளிப்பதன் பொருட்டும், இப்போது நான் எண்ணிச் செயல் மேற்கொண்டுள்ளேன். எனவே அதற்கு நீங்களும் உடன்பட்டு ஏற்றுக் கொண்டு ஆயத்த நிலையில் அமைவீர்களாக!'' என்றான்.

''பரதன் படையுடன் வந்திருப்பதைக் கண்ட குகன், இராமன் பதினான்கு ஆண்டு காலம் காட்டிலிருந்து திரும்பி வந்து அரசு ஏற்றுக் கொள்வதற்கு முன்னரே அவனை அழித்து விடவேண்டும் என்ற வஞ்சக எண்ணத்துடன்தான் பரதன் வந்துள்ளான் என்று தவறாகக் கருதிக் கொண்டு, தன் படைவீரர்களை நோக்கி ''என் உயிர்த் துணைவனாகிய இராமபிரானுக்குச் சிறந்த கோசல நாட்டுப் பேரரசை அளித்திட வேண்டும். அதற்குத் தடையாக உள்ள இந்தப் பரதனையும் அவனது

Koviloor Digital Library

சேனைகளையும் மேற்கொண்டு செல்லாதவாறு இங்கேயே இப்பொழுதே அழித்து விண்ணுலகு அனுப்பவேண்டும். அதற்கு நீங்கள் உடன்பட்டு உங்களைத் தயார்ப் படுத்திக் கொள்ளுங்கள்'' என்றான் என்பதாம். போரில் இறப்பவர்கள் வீர சுவர்க்கம் புகுவர் என்பது மரபு. எனவே உம்பர் ஏற்றுதற்கு என்றார். இதிலே பொதிந்துள்ள ஒரு கருத்தை உணரவேண்டும். குகன் எல்லாம் வல்லவன். அவனுக்குக் கீழ் அடிமைப் பட்டவர்கள்தான் வேடுவர்களாகிய படைவீரர்கள். என்றாலும் அவன் தனது உறுதியான கருத்தை அவர்களுக்குத் தெரிவிக்கிறான்; அவர்கள் உடன்பாடு வேண்டுகிறான், அவர்களைத் தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்துகிறான். இது பெரிய ராஜதந்திரம். இதனைச் சரியாகச் செய்யாததால்தான் இராவணன் அழிந்து பட்டான் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

13. குகன் இட்ட கட்டளைகள்

''துடிஎறி; நெறிகளும் துறையும் சுற்றுற
''ஒடிஎறி; அம்பிகள் யாதும் ஒட்டலீர்;
''கடிஎறி; கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடிஎறிபட''; எனப் பெயர்த்தும் கூறுவான். (2413)

(துடி-போர்ப்பறை; எறிதல்-கொட்டுதல் / முழங்குதல் / தடைசெய்தல் / மிகுத்திருத்தல் / வெட்டுதல் / அடைத்தல் / அதிகரித்தல்; ஒடி-வெட்டி; அம்பி-ஓடம்; கடி-காவல்; பட-இறந்துபோகும்படி; பெயர்த்தும்-மேலும்)

''போர்ப்பறையை முழக்குங்கள்; வந்து சேர்கிற வழிகளையும், எல்லா நீர்த் துறைகளையும், சுற்றுப் புறங்களையும், மரங்களை வெட்டி வீழ்த்திச் சாய்த்து அடைத்து விடுங்கள்; ஓடங்களை யாரும் ஓட்டாதீர்கள்; காவலை அதிகப்படுத்துங்கள்; அதையும் மீறிக் கங்கையின் தென்கரையை அடைந்து விட்டால், அவர்களைப் பிடியுங்கள்; பிடித்து அவர்கள் இறந்து போகும்படி அழித்து விடுங்கள்'' என்று கட்டளையிட்டும் மேலும் பின்வருமாறு தொடர்ந்தும் கூறினான்.

ஒரு படைத்தலைவன் முன்னெச்சரிக்கையாக என்னென்ன செய்ய வேண்டும் என்பதைக் குகன் வாயிலாகக் கம்பன் அறிவுறுத்துகிறான். பரதன் சேனை கங்கையின் தென்கரையை அடையக் கூடாது என்பதில் குகன் உறுதியாயிருப்பது புலப்படுகின்றது. இக்கட்டளை ஒவ்வொரு வரையும் குறித்துக் கூறியதாகவும், எல்லோரையும் சேர்த்து ஒட்டு மொத்தமாகக் கூறியதாகவும் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

14. குகன் கூற்று [10 பாடல்கள்]

''அஞ்சன வண்ணன்என் ஆருயிர்நாயகன், ஆளாமே
வஞ்சனையால் அரசெய்திய மன்னரும் வந்தாரே!

Koviloor Digital Library

செஞ்சரம் என்பன தீஉமிழ்கின்றன செல்லாவோ?
உஞ்சுஇவர் போய்விடின், ''நாய் குகன்'' என்று எனை ஓதாரோ?''
(2414)

(நாயகன்-தலைவன்; செஞ்சரம்-சிவந்த அம்புகள்; செல்லுதல்-பாய்தல்; உஞ்சு-உய்ந்து / தப்பித்து; ஓதுதல்-பழித்தல்; அஞ்சனம்-மை; வண்ணம்-நிறம்)

''மை போன்ற கரிய மேனியையுடையவனும், என் உயிருக்குத் தலைவன் போன்றவனுமாகிய இராமபிரானை ஆட்சி செய்ய முடியாதபடி, தன் தாயுடன் சேர்ந்து வஞ்சனையால் அரசினைப் பெற்றுக் கொண்ட மன்னனாகிய பரதனும் நம்மை நெருங்கி நமது கங்கைக்கரையை அடைந்து விட்டானே? என்னுடைய சிவந்த கொடிய அம்புகள், நெருப்பை உமிழ்ந்து கொண்டு அவர்கள்மேல் சென்று பாய்ந்து அவர்களை அழிக்காதா? அவ்வாறு அழிக்காமல் இவர்கள் என்னிடமிருந்து தப்பிப் போய் விட்டால், இந்த உலகத்தார் என்னை நாய் போன்ற அற்பமான, நன்றியுணர்வற்ற குகன் என்று இகழ்ச்சியாகப் பழித்துரைக்க மாட்டார்களா?'' என்றும் இன்னும் தொடர்ந்தும் கூறுகிறான்.

வந்தாரே என்று பரதனைப் பன்மையில் அழைப்பது இகழ்ச்சிக் குறிப்பால் என்க. ''உயர் சொல்தானே குறிப்பு நிலையால் இழிவு விளக்கிற்று'' என்பது தொல்காப்பியம். நாம் அவன் இருக்குமிடம் சென்று அழிக்க வாய்ப்புத் தாராது அவனே நம் இடம் அடைந்திருக்கிறானே, எனவே நம் பணி எளிதாயிற்று என்பதைக் குறிக்கும் சொல்லாகவும் கொள்ளலாம். பொதுவாக நாய் என்பது ஒருவரைக் கீழ்மைப் படுத்திப் பேசுவதற்குப் பயன்படுத்தப்படுகிற ஒரு சொல். செய்யத்தக்கதும், தவிர்க்கத்தக்கதும் இன்னவை என்பதை அறியாதது நாயின் இயல்பு. அதையே குகன் இங்கே குறிக்கிறான் என்க. செஞ்சரம் என்பது எப்பொழுதும் அவனுடைய அம்புகளில் இரத்தக்கறை படிந்திருக்கும் என்பதைக் குறிக்க என்பதாம். சூழ்ச்சியால் அரசைக் கவர்ந்து கொண்டதோடு நிற்காமல், இப்பொழுது என்தலைவன்இராமபிரானைஅழிக்கவும் துணிந்து வந்திருக்கிறானே என்று தவறாகக் கருதினமை காண்க.

15. ''ஆழநெடுந்திரை ஆறுகடந்து இவர் போவாரோ?
வேழநெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒருசொல் அன்றோ?
''ஏழைமை வேடன் இறந்திலன்'' என்று எனை ஏசாரோ?''
(2415)

(திரை-அலைகள்; வேழம்-யானை; விலங்குதல்-விலகி நிற்றல்; ஒரு-ஒப்பற்ற; ஏழைமை-அறியாமை / எளிமை / அற்பம்; ஏசுதல்-இகழ்தல்)

''மிக்க ஆழமும், நீண்ட அலைகளையும் உடைய இக்கங்கையாற்றை என் உதவியின்றி இவர்கள் கடந்து போய் விடுவார்களோ?

Koviloor Digital Library

இவர்களுடைய யானை மற்றுமுள்ள பெரிய படைகளைக் கண்டு அஞ்சி விலகி நிற்பதற்கு நான் என்ன வில்வித்தையில் தேர்ந்தவன் அல்லனா? அன்று என்னைஅழைத்து நீ என்தோழன், ''யாதினும் இனிய நண்ப'' என்று என்னைப் பார்த்துக் கூறினானே இராமபிரான். அவன் அவ்வாறு சொல்லிய சொற்கள் ஒப்பற்ற மாறாத தன்மையுடையனவல்லவா? இவர்களைக் கங்கைக் கரையைக் கடக்கவிட்டாலும், அதன் பின் ஏதேனும் நிகழ்ந்து விட்டாலும், இந்த அறிவிலியாகிய குகன் இவ்வளவு நடந்த பின்னும் இன்னும் இறக்காமல் உயிரோடு இருக்கிறானே? என்று உலகத்தவர் என்னைப் பழித்துப் பேச மாட்டார்களா?'' என்று தன்னைத் தானே நொந்தும் கூறிக் கொள்கிறான் குகன்.

என்னையும் ஒரு பொருட்டாக மதித்து, என்னை அவனுடைய தோழன் என்று கூறி இருக்கிறானே அந்த ஒரு சொல் ஒப்பற்ற சொல் அல்லவா? அதற்காகவேனும் எனது உயிரைக் கொடுத்தேனும் இவர்கள் சென்று இராமபிரானை அழித்து விடாமல் தடுத்துவிட வேண்டும். அவ்வாறு நான் பார்த்துக் கொள்ளவில்லை யென்றால், என்னை இவ்வுலக மக்கள் பழித்துரைக்க மாட்டார்களோ? என்றான் என்க.

16. ''முன்னவன் என்று நினைந்திலன்; மொய் புலி அன்னான், ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்; அன்னவை பேசானேல்,
என்இவன் என்னை இகழ்ந்தது? இவ்வெல்லை கடந்தன்றோ?
மன்னவர் நெஞ்சினில், வேடர் விடும்சரம் வாயாவோ?'' (2416)

(மொய்-வலிய; பேசுதல்-எண்ணுதல்; வாய்தல்-பாய்தல் / சேர்தல் / தைத்தல்; இகழ்ந்தது-அலட்சியம் செய்தது)

இந்த பரதன், இராமபிரானைத் தனது தமையன் என்று கூட நினைக்க வில்லை; வலிமை பெற்ற புலி போன்ற தம்பி இலக்குவன் அவனை எப்பொழுதும் இடைவிடாது பாதுகாத்துக் கொண்டு நின்றிருக்கிறான் என்பதையும் நினைக்கவில்லை; சரி அவை தான் போகட்டும்; அவற்றை நினைக்காவிட்டாலும் கூட, கங்கைக் கரையில் இராமனுடைய நண்ப னாகிய நான் இருப்பதைக் கூட நினைக்காமல் என்னையும் அலட்சியம் செய்து விட்டானே? இவனுடைய வலிமை எல்லாம் இந்த என்னுடைய எல்லையைக் கடந்த பின்னாலன்றோ தெரியும்? தாழ்ந்தவர்களாகிய வேடர்கள் எய்யும் அம்புகள், உயர்ந்தோர்களாகிய அரசர்கள் நெஞ்சினில் ஊடுருவிப் பாய்ந்து செல்லாதோ?''

இவன் இராமபிரானைத் தன் தமையன் என்று எண்ணியிருந்தால் அரசுரிமையை அவனுக்குத் தந்திருப்பான்; புலி போன்ற இலக்குவன் இராமபிரானுடன் எப்பொழுதும் உடன் உறைவான் என்று கருதியிருந்தால் அவனைக் கொல்லுதற்குப் படைதிரட்டிக் கொண்டு வந்திருக்க மாட்டான்; இவர்கள் இரண்டு பேரையும் கருதாவிட்டாலும் கங்கையைக் கடப்பதற்கு இராமபிரானின் நண்பனாகிய குகன் உதவி தேவைப்படும் என்று கூடக்

Koviloor Digital Library

கருதாமல் என்னை அலட்சியம் செய்து விட்டானே? என்று வருந்துகிறான் குகன்.

17. பாவமும் நின்ற பெரும்பழியும் பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண்ணுலகு ஆள்பவர் எண்ணாரோ?
ஆ! அதுபோக! என் ஆருயிர்த் தோழமை தந்தான் மேல்
போவது, சேனையும் ஆருயிரும் கொடு போயன்றோ? (2417)

(பாவம்-தீவினை; நின்ற-நிலைபெறும்; ஏவம்-குற்றம்; ஆ-ஐயோ!)

''மண்ணுலகை ஆளுகின்ற மன்னவர்கள், தாம் செய்கின்ற தீவினைகளையும், அதனால் வரும் விளைவாகிய நிலை பெற்ற பெரிய பழியினையும், இவர் நண்பர், இவர் பகைவர் என்று வேறு படுத்தியும், குற்றமுள்ளவை எவை என்று எண்ணியும் பார்க்க மாட்டார்களோ? ஐயோ! அது கிடக்கட்டும். என்னைத் தன் அருமையான உயிர்த் தோழனாக ஏற்றுக் கொண்ட இராமபிரான் மீது இவன் போர் தொடுத்துச் செல்வது எப்படி முடியும்? இவனும் இவனுடைய படைகளும், என்னைத் தவிர்த்து, என்னைக் கடந்து, உயிருடன் போனால் அல்லவோ அது நிகழும்? இவர்களை உயிருடன் அங்கு போக விடமாட்டேன்''.

பாவம் இராமனிடமிருந்து அரசுரிமை கவர்ந்தது; பழி உலகோர் தூற்றும் வசைச் சொல். ''செல்வம் வந்துற்ற காலை, தெய்வமும் சிறிது பேணார்; சொல்வன நினைந்து சொல்லார்; சுற்றமும் துணையும் நோக்கார்; வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிது என்று ஓரார்; வல்வினை விளைவும் எண்ணார்; மண்ணின் மேல் வாழும் மாந்தர்'' என்பது வில்லிபாரதம்.

18. ''அருந்தவம் என்துணை ஆள, இவன் புவி ஆள்வானோ?
மருந்து எனின் அன்று உயிர்; வண்புகழ் கொண்டு பின் மாயேனோ?
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதே
இருந்ததும் நன்று கழிக்குவென் என்கடன் இன்றோடே'' (2418)

(மருந்து-அமிழ்தம்; வண்-சிறந்த; மாய்தல்-விட்டொழித்தல்; கேண்மை-நட்பு; ஆள-மேற்கொள்ள; உகந்த-விரும்பிய; கழித்தல்-செய்து முடித்தல்)

என்னுடைய தமையனும் துணைவனுமான இராமபிரான் செய்தற்கரிய தவத்தைச் செய்து கொண்டு காட்டில் வாழ, இந்தப் பரதன் மட்டும் இவ்வுலகத்தை ஆட்சி செய்துகொண்டு இருப்பானோ? எனக்கு என் உயிர் ஒன்றும் அமிழ்தம் போன்றதன்று; இவனை இராமனிடம் செல்லவிடாமல் தடுத்து, அதனால் உண்டாகின்ற சிறந்த புகழை அடைந்து பின்னர் இறந்து படமாட்டேனோ? என்னுடன் தானே விரும்பி இசைந்து நட்புக் கொண்ட இராமபிரானுடன் வனம் புகாததும் ஒரு வழியில் நல்லதாகப் போயிற்று. இப்பொழுதே என்னுடைய கடமையைச் செய்து முடிப்பேன்.

Koviloor Digital Library

அரசுரிமைக்கு உரிய மூத்தவனும் அரசாளவே பிறந்தவனுமான இராமன், காட்டில் சென்று அதற்கு மாறாகக் கடுந்தவம் புரியவும், அரசு புரிய உரிமையில்லாதவனும், தன் தாயின் வஞ்சகச் செயலாலே அரசுரிமையைக் கைப்பற்ற நினைப்பவனுமான இப்பரதன், உயிருடன் இருந்து இவ்வுலகை ஆட்சி செய்து விடுவானோ? நான் அவ்வாறு நடத்தற்கு விடமாட்டேன். என்னுடைய உயிர் ஒன்றும் தேவாமிர்தம் அல்ல; நானும் இராமனுடன் காட்டிற்குச் செல்லாதது நல்லதாய்ப் போயிற்று. என்னுடைய கடமை என நான் கருதுகின்ற, ''பரதன் இராமனைச் சென்று அடைந்து விடமுடியாத காரியத்தை-கடமையை-இப்பொழுதே செய்து முடிப்பேன்'' என்று சூளுரைக்கிறான் குகன் என்பதாம். தன் உயிர் கொடுத்தேனும் பரதன் மேற்செல்லாது காப்பதைக் குகன் தன் கடமை எனக் கருதினான் என்க. இராமனுக்குப் பகைவராய் உள்ளார் யாராயிருந்தாலும் அவர்களை அழிப்பதே தன் கடமை எனக் கொண்டான் என்று கூறலும் ஒன்று.

19. ''தும்பியும் மாவும் மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பு இயல் தார் இவர் வாள்வலி கங்கை கடந்தன்றோ?
வெம்பிய வேடர் உளீர்! துறை ஓடம் விலக்கீரோ?
நம்பி முன்னே இனி நாம்உயிர் மாய்வது நன்றன்றோ?'' (2419)

(தும்பி-யானைகள்; மா-குதிரைகள்; மிடைந்த-நெருங்கிய; வம்பு-நறுமணம்; வெம்பிய-கொதிக்கின்ற; தார்-அடையாளப்பூமாலை/போர்ப் பூ மாலை; நம்பி-ஆண்களிற் சிறந்தவன்)

''யானைப் படையும், குதிரைப் படையும் நெருங்கிய ஏனைப் படைகளும் கொண்டு சூழ்ந்து வருகின்றவனும், நறுமணம் மிக்க மலர் மாலையணிந்தவனுமான இப்பரதனுடைய வாட்படை வீரம், நம்மையும் இக்கங்கை யாற்றையும் கடந்து சென்றாலன்றோ தெரியும்? சினம் மிகக் கொண்ட வேடுவர்களே! நம்முடைய துறைகளில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் ஓடங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்துங்கள்; இவர்களுடன் போர் புரிந்து நமது இராமபிரான் இறப்பதற்கு முன்னே நாம் இறந்துபட்டால் அதுவும் நல்லது தானே?''

நறுமணம் மிக்க மலர் மாலை அணிந்த பரதன் என்று கூறியிருப்பது உபசார வழக்கு எனக் கொள்க. ''இவனுடைய வீரமெல்லாம் கங்கைக் கரையைக் கடந்து சென்றால் தானே பலிக்கும்? நாம் இவனைக் கரை கடக்கவிட மாட்டோம். நீர்த் துறையிலுள்ள ஓடங்களை யெல்லாம் வேறு இடத்திற்குக் கொண்டு சென்று விடுங்கள். அவர்கள் சினம் மிகுந்து நம்முடன் போர் செய்ய முற்பட்டால் நாமும் போர் புரிவோம். வென்றால்-புகழ்; வெல்லாவிடில் தோற்றாலும் எம்பெருமான் இராமனுக்காக உயிர் கொடுத்தோம் என்ற புகழ். எனவே இரண்டு வகையாலும் புகழே விளையுமல்லவா? அது நல்லது தானே!'' என்று தம் வேடுவர்களுக்குக் குகன் அறிவுறுத்தினான் என்க. முன்பு ஓடத்தைச் செலுத்தாதீர்கள் என்று

Koviloor Digital Library

கூறிய குகன், அவர்களே ஓடத்தைச் செலுத்திக் கொண்டு போய் விடுவார்களோ என்று கருதி, ஓடங்களை அகற்றுங்கள் என்று கூறியது நோக்கத்தக்கது.

20. ''போன படைத்தலை வீரர் தமக்கு இரைபோதா இச்
சேனை கிடக்கிடு; தேவர்வரின், சிலைமா மேகம்
சோனைபட, குடர் சூறைபட, சுடர் வாளோடும்
தானைபட, தனியானைபட, திரள் சாயேனோ?'' (2420)

(தலை-முன்னணி; சோனை-விடாத மழை; பட-சிதற; தானை-காலாட்படை; தனி-ஒப்பற்ற / சிறந்த; திரள்-குவியல்; கிடக்கிடு-கிடக்கட்டும்; குடர்-குடல்; சூறை-சுழற்காற்று; இரை-உணவு / போர்)

''நம்முடைய முன்னணிப் படையின் வீரர்களுக்கு ஒரு வேளை உணவுக்கும் போதாது இந்தப் பரதனுடைய சேனை. அது கிடக்கட்டும்; இவர்களுக்குத் துணையாக ஒரு வேளை தேவர்களே எதிர்த்து வந்தாலும், நான் ஒருவனே, என்னுடைய வில்லினின்று சிறந்த மழை போலத் தொடர்ந்து இடைவிடாது பெய்யும் அம்புகளால், அவ்வீரர்களின் குடல்கள் சுழற்காற்றால் அலைப்புண்டது போலச் சிதறியழியும்படி செய்து விட மாட்டேனோ? ஒளி பொருந்திய வாளோடு நான் செய்யும் போரில் அவர்களது காலாட்படை முற்றிலும் அழிந்து போகும்; அவர்களது ஒப்பற்ற யானைப் படை, மற்றுமுள்ள எல்லாப் படையையும் குவியல் குவியல்களாகச் சாகடிக்க மாட்டேனோ?'' என்று தம் படை வீரர்க்கு ஊக்கம் அளிக்கின்றான் குகன்.

கிடக்கிடு என்பது கிடக்கட்டும் என்ற பொருளில் வரும் வேடுவர் குல வழக்குச் சொல். இரை என்பது உணவைக் குறிக்கும். இங்கே வீரர்களுக்கு உணவாகிய போரைக் குறித்தது. சோனைபட, சூறைபட, தானைபட, தனி யானைபட என்ற சொல் நயம், ஓசை நயம் சுவைக்கத்தக்கன.

21. ''நின்ற கொடைக்கை என் அன்பன் உடுக்க, நெடுஞ்சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தை, என் அம்பாலே
கொன்று குவித்த நிணம்கொள் பிணக்குவை கொண்டு ஓடித்
துன்று திரைக்கடல், கங்கை மடுத்து இடை தூராதோ?'' (2421)

(நின்ற-நிலைத்த; சீரை-மரவுரி; நிணம்-கொழுப்பு; துன்று-செறிந்த; மடுத்து-புகவிட்டு / சேர்த்து; தூர்த்தல்-நிரப்புதல்; பலம்-படை)

''என்றும் நீங்காது நிலைத்த வள்ளன்மை பொருந்திய கைகளையுடைய என் அன்புக்கு உரியவனான இராமபிரான் இடையில் உடுத்திக் கொள்ளும் பொருட்டு, அவன் முடிசூட்டுவிழாவன்று, பெரியமரவுரியைக் கொடுத்தனுப்பியவளான கைகேயியின் மைந்தனான பரதனது சேனைகளை, என்னுடைய அம்புகளாலே கொன்று குவித்த அந்த கொழுப்புக் கலந்த சதைப் பிண்டங்களான பிணக்குவியல்களை, இந்தக் கங்கையாறு

Koviloor Digital Library

இழுத்துக் கொண்டு ஓடி, அலைகள் நெருங்கிய கடலினிடத்தே சேர்த்து, அக்கடலையே நிரப்பி விடாதோ?''

குகனின் சூளுரை. பரதனின் சேனைகள் கங்கையைக் கடக்கா வொட்டாமல் தடுத்து அவற்றை அழித்துவிட வேண்டும் என்பதில் அவன் உறுதியாய் இருக்கிறான் என்பதைப் புலப்படுத்துகிறது. இங்கு மைந்தர் என்று பன்மையில் கூறியது இகழ்ச்சிக் குறிப்பு.

22. ''ஆடுகொடிப் படை சாடி, அறத்தவரே ஆள,
வேடு கொடுத்தது பார்'' எனும் இப்புகழ் மேவீரோ?
நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர், நாம் ஆளும்
காடு கொடுக்கிலராகி, எடுத்தது காணீரோ?'' (2422)

(ஆடு-அசைகின்ற; சாடி-தாக்கி / அழித்து; வேடு-வேட்டுவர் கூட்டம்; பார்-நாடு; எடுத்தல்-படையெடுத்தல்; மேவுதல்-அடைதல்)

''தனக்கு உரிமையுடைய நாட்டின் அரசுரிமையையே பரதனுக்கு அளித்து விட்டுக் காடு போந்த என் தலைவனாகிய இராமபிரான், நம் ஆளுகைக்கு உட்பட்ட இந்தக் காட்டில் வசிக்கக் கூடப் பொறாதவனாகி, இந்தப் பரதன், அவன் மீது படையெடுத்து வந்திருப்பதை நீங்கள் காணவில்லையோ? பரதனது ஆடுகின்ற கொடிகளையுடைய படைகள் அனைத்தையும் தாக்கி அழித்து, அறத்தின்பால் நிலைபெற்று நிற்கின்ற இயல்புடைய இராம இலக்குவரே அந்நாட்டை ஆளும்படி, வேட்டுவக் கூட்டம் அவன் நாட்டை மீட்டுக் கொடுத்தது என்று உலகோர் கூறும் இப்புகழ்ச்சியை அடைய விரும்ப மாட்டீர்களோ?'' என்று குகன் தனது வேடுவர் குலத்தினரைப் பார்த்து, ஒவ்வொருவருக்கும் பொருந்துமாறு கூறுகின்றான்.

தன்னுடைய நாட்டின் அரசாட்சியினைப் பறித்துக் கொண்டதோடல்லாமல், நம் ஆளுகைக்கு உட்பட்ட நமது காட்டிலும் அவனைத் தங்கவிடாது இங்கும் அவன் மேல் நெறிதவறிப் படை எடுத்து வந்திருக்கின்ற பரதனைச்சாடுகிறான் குகன். அவனுக்குரிய நாட்டின் அரசுரிமையை அவனுக்கே மீட்டுக் கொடுக்க வேண்டியது நம் கடமை. அது போலச் செய்ய வேண்டுமானால் இவனது படைகளை அழித்தொழிக்க வேண்டும். அதனால் வேட்டுவச் சாதியின் புகழ் ஓங்கும் என்றான் என்க.

23. ''மா முனிவர்க்கு உறவாகி, வனத்திடையே வாழும்
கோ முனியத் தகும் என்று, மனத்து இறைகொள்ளாதே
ஏமுனை உற்றிடில், ஏழுகடல் படை என்றாலும்
ஆமுனையின் சிறுகூழ் என இப்பொழுது ஆகாதோ?'' (2423)

(மா-சிறந்த; கோ-அரசன் / இராமபிரான்; முனிதல்-சினங் கொள்ளுதல்; இறை-சிறிதும்; ஏ-அம்பு; முனை-போர்; ஆ-பசு; சிறுகூழ்-இளம் பயிர்; முனையின்-முனைந்தால்)

Koviloor Digital Library

''சிறந்த முனிவர்களுடன் நட்புக் கொண்டு, இப்போது கானகத்தில் வசித்து வரும் என்தலைவனாகிய இராமபிரான், தன்தம்பி பரதன் மீது நான் போர் தொடுத்தால் என் மீது சினம் கொள்ளக்கூடும் என்று என் மனத்தில் சிறிதளவும் ஐயம் கொள்ளாமல், போர்முனையில் அம்பை எய்து கொல்லு தலைத் தொடங்க, ஆரம்பித்தால், இந்தப் படை என்ன? இது போல் ஏழு கடல் அளவு பரப்புள்ள படைகள் எல்லாம் ஒன்று திரண்டு வந்தன என்றாலும், இவை எல்லாமும், பசித்த பசு உண்ண வேண்டும் என்று கருதி உண்ணத் தொடங்கினால், அங்கிருக்கின்ற இளம் பயிர்கள் எல்லாம் மிக விரைவில் நாசமாகிப் போகுதல்போல அழிந்து போய் விடாதோ?''

பசித்த பசு, உண்ண முயன்றால் தன் வாயாலும் கால்களாலும் எதிரே உள்ள இளம் பயிர்களை ஒரு நொடியில் தின்று, நாசமாக்கித் துவம்சம் செய்து விடாதா? அது போல என்தலைவன் என்னைக் கோபிப்பான் என்று நினைக்காமல் நான் போர் செய்யத் தொடங்குவேனானால் இந்தப் படை மட்டுமல்ல, இது போல ஏழு கடல்கள் போன்று அளவில்லாத படைகள் வந்தாலும், என் வாள் வீச்சாலும், கால் துகைத்தலாலும் நாசமாகிப் போய் விடாதோ? என்று குகன் வேடுவர்களைப் பார்த்துக் கூறினான் என்க. இது வரையில் மறஉரையாற்றிய குகன் இப்பொழுது சிறிது அச்சம் கொண்டான் என்பது இப்பாடலின் மூலம் தெரிகிறது. ஏழுகடல்கள்-உப்பு நீர், கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், தூய நீர் என்பனவாம்.

24. சுமந்திரன் பரதனிடம் குகனைப் பற்றிச் சொல்லுதல்

என்பன சொல்லி, இரும்புஅன மேனியர் ஏனோர்முன்
வன்பணை வில்லினன், மல்உயர் தோளினன், வாள்வீரற்கு
அன்பனும் நின்றனன்; நின்றது கண்டு, அரியேறு அன்ன
முன்பனில் வந்து, மொழிந்தனன் மூரிய தேர் வல்லான். (2424)

(பணை-பெரிய / பருத்த; மல்-மற்போர்ப்பயிற்சி; ஏனோர்-மற்றையோர்; மூரிய-வலிய; அரியேறு-ஆண்சிங்கம்; முன்பன்-உரிமை)

வலிய பருத்த வில்லினை உடையவனும், மற்போர்ப் பயிற்சியில் தேர்ந்த உயர்ந்த தோள்களை உடையவனும், வாட்படையில் வல்ல இராமபிரானுக்குத் தோழனுமான குகன், இவ்வாறு இரும்பைப் போன்ற உடம்பை உடைய மற்ற வேடுவர்களுக்குச் கூறிச் சற்று நின்றான். அவன் தென் கரையில் நிற்பதைக் கண்ட வலிமை மிகுந்த தேரினை ஓட்டுவதில் வல்லவனான சுமந்திரன், வடகரையில் ஆண் சிங்கம் போல நின்று கொண்டிருக்கின்ற வலிமை மிகுந்த பரதனிடம் வந்து, கீழ்க்கண்டவாறு சொல்லலுற்றான்.

சுமந்திரன் குகனை முன்பே அறிந்தவன். எனவே அவனைப் பற்றிப் பரதனுக்கு எடுத்துச் சொல்ல முற்பட்டான் என்க. இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. இந்தப் பரதன் நல்லவனாக இருந்தால் அவனுக்கு நாம்

Koviloor Digital Library

உதவி செய்வோம்; அவன் இராமபிரானுக்குத் தீங்கிழைக்க வேண்டும் என்ற தீய கருத்தில் வந்திருந்தால் அவனது சேனைகளை அவனோடும் சேர்த்து அழித்து விடுவோம். எச்சரிக்கையாக இருங்கள். எனினும் நானே தனித்துச் சென்று அவன் உள்ளப் பாங்கை அறிந்து வருகிறேன் என்று கூறிக் குகன் தான் மட்டும் தனியாக ஒரு நாவாயில் பரதன் இருந்த வடகரைக்கு வந்து சேர்ந்தான் என்று வான்மீகம் கூறும்.

25. ''கங்கைஇரு கரை உடையான்; கணக்கு இறந்த நாவாயான்;
உங்கள் குலத்தனி நாதற்கு உயிர்த் துணைவன்; உயர்தோளான்;
''வெங்கரியின் ஏறு அனையான்; வில் பிடித்த வேலையினாள்;
கொங்கு அலரும் நறும் தண்தாா்க் குகன் என்னும் குறி உடையான்''.
(2425)

(கணக்கிறந்த-அளவுகடந்த; நாவாய்-ஓடங்கள்; துணைவன்-தோழன்; ஏறு-சிங்கம்; வெங்கரி-மதயானை; வேலை-படைக்கடல்; கொங்கு-தேன்; அலர்தல்-பரவுதல்; குறி-பெயர்)

சுமந்திரன் பரதனை நோக்கி எதிர்க்கரையில் நிற்கின்ற குகனைச் சுட்டிக் காட்டி, ''அவன் இந்தக் கங்கையாற்றின் இரு கரைகளிலுமுள்ள நிலங்களுக்கெல்லாம் சொந்தக்காரன்; எண்ணற்ற ஓடங்களையுடையவன்; உங்கள் சூரிய குலத்தில் தோன்றிய ஒப்பற்ற இராமபிரானுக்கு உயிர்த்தோழன்; உயர்ந்த தோள்களை உடையவன்; மதம் மிக்க யானைக் கூட்டத்துள் ஆண்சிங்கம் போன்ற கம்பீரம் உடையவன்; வில்லையேந்திய சேனைக் கடலை உடையவன்; தேன் பிளிற்றும் நறுமணம் மிக்க குளிர்ச்சி பொருந்திய மாலையை அணிந்தவன்; குகன் என்னும் பெயருக்கு உரியவன்'' என்று கூறினான்.

கணக்கு அளவைக் குறிக்கும். ''கணக்கிலாத் திருக்கோலம்'' என்பது திருவாசகம். விற்பிடித்த வேலையினான் என்பது குகனது காலாட்படை பலத்தைக் குறித்ததாகும். இப்பாடலால் சுமந்திரன் தான் ஒரு மதியூகம் நிறைந்த அமைச்சன் என்பதையும், சொல்வன்மை உடையவன் என்பதையும் உணர்த்தி விடுகிறான். பரதனின் தேவையறிந்து அவனுக்கு ஏற்றாற் போல் ஒன்றன் பின் ஒன்றாகக் குகனைப் பற்றிக் கூறியமை உய்த்துணரவல்லது. சுமந்திரன் குகனோடு சில நாட்கள் தங்கியிருந்தான் என்று வான்மீகம் கூறுவது நோக்கத்தக்கது.

26. ''கல்காணும் திண்மையான்; கரைகாணாக் காதலான்;
அல்காணில் கண்டனைய அழகு அமைந்த மேனியான்;
மல்காணும் திருநெடுந்தோள் மழைகாணும் மணி நிறத்தாய்!
நின்காணும் உள்ளத்தான், நெறி எதிர் நின்றனன்'' என்றான்.
(2426)

Koviloor Digital Library

(மல்-மல் தொழில் பயிற்சி; திரு-கொற்றவை / வெற்றிச் செல்வி; மழை-மேகம்; கல்-மலை; கரை-எல்லை; அல்-இருள்; திண்மை-நிலை கலங்காமை; உள்ளம்-கருத்து; நெறி-வழி)

''மற்போர்ப் பயிற்சியில் திறமை பெற்றவனும், வெற்றித் திருமகள் வீற்றிருக்கும் பெரிய தோள்களையும், மேகத்தை நிகர்த்த கருமணி போன்ற நிறமுள்ள மேனியை உடையவனுமாகிய பரதனே! அந்தக் குகன், மலை போன்ற நிலை கலங்காத உள்ளம் உடையவன்; உன் அண்ணன் இராம பிரானிடத்து எல்லையற்ற பேரன்பு பூண்டவன்; இருளைக் கண்டாற் போன்ற அழகுடைய கரிய திருமேனியை உடையவன்; உன்னைக் காணும் பேரவாவோடு, நாம் செல்லும் வழியில் எதிரில் நிற்கின்றான்'' என்றான்.

''இது சுமந்திரனின் அனுமானக் கூற்று. முன்பு இராமபிரானிடம் குகன் கொண்டிருந்த அன்பைக் கண்டவனல்லவா சுமந்திரன்? எனவே இராம பிரானின் தம்பி பரதனையும் அவ்வாறே அன்புள்ளம் கொண்டு வரவேற்கக் காத்திருக்கிறான் போலும் என்று சுமந்திரன் எண்ணி, பரதனுக்குக் கூறியவை இவை. பரதனும் சுமந்திரனும் நிற்பது வடகரையில். குகன் நிற்பது நேர் எதிர்த் தென்கரையில், அவன் நிற்கும் தோற்றம்தான் தெரிந்ததே தவிர அவன் உள்ளக் குமுறல் தெரியவாய்ப்பில்லை யல்லவா?'' அற்கு ஆணி கண்டு அனைய மேனியான் என்றும் பிரித்து, இருளுக்கெல்லாம் மேலான அடர்ந்த இருள் போன்ற நிறத்தான் என்றும் பொருள் கூறுவதுண்டு. எனவே மேனி நிறத்தைப் பொறுத்த வரையில் இராமன், பரதன், குகன் மூவரும் ஒரே நிறத்தினர் என்பது பெறப்பட்டது.

27. பரதன் குகனைக் காண விரைந்து எழுதல்

தன்முன்னே அவன்தன்மை தன் துணைவன் முந்து உரைத்த
சொல்முன்னே உவக்கின்ற துரிசுஇலாத் திருமனத்தான்,
''மன்முன்னே தழீஇக் கொண்ட மனக்கு இனிய துணைவனேல்,
என்முன்னே அவன் காண்பென் யானே சென்று'' என எழுந்தான்.
(2427)

(துணைவன்-நட்பினன்; துரிசு-குற்றம்; திரு-நல்ல; மன்-தலைவன்; மனக்கு-மனத்துக்கு; முன்-அண்ணன்)

தனக்கு எதிரில் குகனுடைய நல்லியல்புகளை தனக்கும் தன் தந்தைக்கும் நட்பினனான சுமந்திரன் முற்பட்டுச் சொன்ன சொற்கள் தன் செவி சென்று சேரும் முன்பே, மிக்க மகிழ்ச்சியுற்றவனாய், எந்தக் குற்றமும் இல்லாத நல்ல மனத்தையுடைய பரதன், ''நம் மன்னவனாகிய தலைவன் இராமபிரான் ஏற்றுக் கொண்ட அவன் மனத்திற்கு இனிய துணைவன் குகன் என்றால், அவன் என் தமையனே ஆவான். எனவே அவன் வந்து என்னைக் காண்பதற்கு முன், நானே சென்று அவனைக் காண்பேன்'' என்று கூறிப் புறப்பட்டான்.

Koviloor Digital Library

28. பரதனது தோற்றத்தைக் குகன் காணுதல்

என்றெழுந்து தம்பியோடும் எழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர் கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான்; திருமேனி நிலை உணர்ந்தான்;
துன்றுகரு நறுங்குஞ்சி எயினர் கோன், துண் என்றான். (2428)

(காதல்-அன்பு; துன்று-அடர்ந்த; எயினர் கோன்-வேடர் தலைவன்; துண்-நடுக்கம்)

இவ்வாறு கூறிக் கொண்டு புறப்பட்ட பரதனோடு, தம்பி சத்துருக்கனனும் சேர்ந்து எழ, குகன் மீது எழுகின்ற பேர் அன்பினோடும், ஒரு மலையே எழுந்து நடந்து செல்வது போன்று நடந்து சென்று, குளிர்ச்சி பொருந்திய கங்கைக் கரையை அடைந்து நின்றான் பரதன். அவ்வாறு நின்றவனை, அடர்ந்த கருமையான நறுமணம் வீசும் தலைமுடியை உடைய வேடுவர் தலைவனான குகன், பரதனது துன்பத்தால் வாடிய, பொலிவிழந்த உடம்பின் நிலைகண்டு நடுக்கம் உற்றான்.

தான்பரதனைப்பற்றிநினைத்திருந்ததற்கும், இப்போதுஅவன்காணும் மேனித் தோற்றத்திற்கும் மாறுபாடு இருந்தது கண்டு வியந்து நடுக்க முற்றான் என்பதாம். பரதனது உடம்பின் சோர்வும், வருத்தம் தேங்கிய முகமும் குகனைத் திடுக்கிட வைத்தன என்க. அவன் தனது தவறை இப்போது உணர்ந்தான்.

29. வற்கலையின் உடையானை, மாசடைந்த மெய்யானை,
நற்கலை இல்மதி என்ன, நகை இழந்த முகத்தானை,
கற்கனியக் கனிகின்ற துயரானை, கண்ணுற்றான்,
விற்கையின் நின்று இடைவீழ, விம்முற்று நின்றொழிந்தான். (2429)

(வற்கலை-மரவுரி; மாசு-அழுக்கு; நகை-அளி / பொலிவு; கனிதல்-இளகுதல் / குறைதல் / முதிர்தல்; இடை-இடப்பக்கம் / தரை; விம்முறுதல்-ஏங்குதல்; ஒழிதல்-செயலறுதல்; கலை-ஒளி.)

மரவுரியையே, உடையாகத் தரித்திருப்பவனும், நீராடாததால் அழுக்கு நிறைந்த மேனியை உடையவனும், நல்ல அழகிய கலைகள் நிரம்பப் பெறாத ஒளி குறைந்த சந்திரன் போல் பொலிவிழந்த முகத்தை உடையவனும், கல்லும் கூடக் கனிந்து உருகும்படியான துயரத்தை முகத்தில் தேக்கி வைத்திருப்பவனுமாகிய பரதனைக் குகன் உற்று நோக்கினான்; அவனுடன் எப்போதும் உறைகின்ற வில் கூடத் தன்னையறியாமலேயே தரையில் நழுவி விழுந்து விட்டது. விம்மி ஏங்கிச் செய்வதறியாது செயலற்று நின்று விட்டான்.

இராமனது பிரிவால் நீராடாது, உறங்காது, தரையிலேயே கிடந்து உழன்றமையால் மெய் மாசடைந்ததாயிற்று; முகம் ஒளி இழந்ததாயிற்று;

Koviloor Digital Library

மேனிதுயரமே உருவமாயிற்று என்பதாம். தான் பரதனைப் பற்றித் தவறான எண்ணம் கொண்டோமே என்று குகன் விம்முற்றான்; நின்றொழிந்தான் என்க. ஒளி இழந்த முகம், கலை இழந்த மதிக்கு உவமை. நின்றான் என்னாது நின்றொழிந்தான் என்ற சொல்லாட்சி, குகனது கையறு நிலையைக் காட்டுவதாகும்.

30. ''நம்பியும் என்நாயகனை ஒக்கின்றான்; அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்; தவவேடம் தலை நின்றான்;
துன்பம் ஒரு முடிவுஇல்லை; திசை நோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு?'' என்றான்.
(2430)

(நம்பி-ஆண்மையிற் சிறந்தோன் / கல்யாணகுண பூரணன்; நாயகன்-தலைவன்; அயல்-பக்கம்; தலை நிற்றல்-மேற்கொள்ளுதல்; முடிவு-எல்லை; பிழைப்பு-தவறு; இழைத்தல்-செய்தல்)

''ஆண்களிற் சிறந்த குணமுடையவனாகத் தோன்றுகின்ற பரதனும், என்னுடைய தலைவனான இராமபிரானைப் போலவே இருக்கிறான்; அவன் அருகில் நிற்பவனான அவனுடைய தம்பி சத்துருக்கனனும், இராமபிரானுடன் உடன் வந்த அவன் தம்பி இலக்குவனைப் போலவே தோற்றுகின்றான்; தவிரவும் இவனும் இராமபிரானைப் போல் மரவுரி அணிந்து சடைமுடி தரித்துத் தவவேடம் மேற்கொண்டுள்ளான்; இவன் படுகின்ற துயரத்திற்கு ஒரு எல்லையே காண முடியவில்லை; இராமபிரான் சென்ற தென்திசையை நோக்கித் தொழுத வண்ணமே இருக்கின்றான்; இவ்வாறு இருக்கும்போது இவனைப் பற்றித் தவறாகக் கருதிவிட்டேனே; என்னுடைய தெய்வமான இராமனுக்குப் பின் பிறந்த அவன் தம்பியர்கள் தவறு இழைப்பார்களோ? மாட்டார்கள். நான் தான் தவறாகக் கருதி விட்டேன்'' என்கிறான் குகன்.

நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான் என்பது பரதனும் இராமனைப் போலவே தோற்றத்தில் ஒத்திருக்கிறான் என்பதாம். முன்பு ''எள்ளரிய குணத்தாலும், எழிலாலும், இவ்விருந்த வள்ளலையே அனையான்'' என விசுவாமித்திரர் கூறியது இங்கு நினைவு கூரத்தகும். திசை நோக்கித் தொழுதல் என்பது பெரியோரிடத்தும், கடவுளரிடத்தும், தேவர்களிடத்தும் செய்யும் சிறப்பு வழிபாடு. பரத சத்துருக்கனர், இராம இலக்குவர்களைப் போன்றனர் என்பது கருத்து.

31. ''உண்டு இடுக்கண் ஒன்று உடையான்;
உலையாத அன்புடையான்
கொண்ட தவவேடமே
கொண்டிருந்தான்; குறிப்பெல்லாம்

Koviloor Digital Library

கண்டு, உணர்ந்து, பெயர்கின்றேன்;
காமின்கள் நெறி'' என்னாத்
தண்துறை ஓர் நாவாயில் ஒரு
தனியே தான் வந்தான். (2431)

(இடுக்கண்-துன்பம்; குறிப்பு-கருத்து; பெயர்தல்-திரும்புதல்; காமின்-காவல் செய்யுங்கள்; நெறி-வழி; உடையான்-தலைவன்; உலைதல்-கெடுதல் / நிலை குலைதல்)

குகன் தன் படை வீரர்களை நோக்கி, ''இவனுக்கு ஏதோ துன்பம் நேர்ந்திருக்கிறது; என்னுடைய தலைவன் பால் நீங்காத அன்பு உடைய இவன், அவனைப் போலவே தவக்கோலமும் பூண்டிருக்கிறான். எனவே நான் சென்று அவனைக் கண்டுஇந்தக் கருத்துக்களையெல்லாம் அறிந்து திரும்பி வருகிறேன்; அது வரை, நமது வழிகளையெல்லாம் காவல் செய்து நில்லுங்கள்'' என்று கூறி, குளிர்ந்த கங்கை நீர்த் துறையில் இருந்த ஒரு ஓடத்தில் ஒப்பற்ற தான் மட்டும், தனியாகவே பரதனை நோக்கி வடகரைக்கு வந்தான்.

''கண்டு உணர்ந்த'' என்பவை, ஐயம் அகலத் தெளிந்து விடுகிறேன் என்பதைக் குறிப்பதாம். தூரத்திலிருந்து தெரியும் தோற்றத்தால் விளங்காத பல செய்திகள் அண்மையில் நெருங்கி வருதலால் விளங்கக் கூடும். எனவேதான் பரதனது மனக்கருத்தை, நானே நேரில் சென்று அறிந்து வருகிறேன் என்று குகன் கூறினான் என்க. இது வரையிலும் பரதனைப் பற்றித் தாழ்வாகப் பேசிய குகன், இப்போது மனமாற்றம் அடைந்து அவனை நேரில் கண்டு அவனது உளக்கருத்தை ஐயம் இல்லாது உணர்ந்து வருகிறேன் என்று தனது மனமாற்றத்தைத் தன் படைவீரர்களை நோக்கித் தெரியப்படுத்தினான் என்க. இது ஒரு வகை அரச மரபு என்பதும் நோக்கத்தக்கது. அதனை எயினர் கோன் குகன் கடைப்பிடித்தது வியப்பிற்குரியதாம். உலையாத அன்பு என்பது எந்தக் காரணத்தாலும் நிலை குலையாது, என்றும் எப்போதும் ஒரே தன்மையாய் இருக்கும் தளர்ச்சியில்லாத அன்பு என்பதாம்.

32. பரதனும் குகனும் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளுதல்

வந்து, எதிரே தொழுதானை, வணங்கினான்; மலர் இருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனும், அவன் அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களி கூரத்தழுவினான்; தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான். (2432)

(அந்தணன்-பிரமன்; சீர்த்தி-மிக்க புகழ்; தகவு-பெருமை)

தனியாக ஓடத்தில் வந்த குகன், வந்து, இராமபிரான் இருக்கின்ற திசை நோக்கித் தொழுகின்றவனாகிய பரதனை வணங்கினான்; தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் தன்னை வணங்கக் கூடிய தகுதி பெற்றவனும்,

Koviloor Digital Library

பெருமையுடைய சான்றோர்கள் தம் மனத்திலும் உச்சி மேல் வைத்துப் போற்றக் கூடிய தகுதியும் புகழும் பெற்றவனாகிய பரதனும், குகனது பாதங்களில் விழுந்து வணங்கினான். அவ்வாறு வணங்கிய பரதனை ஒரு தந்தையினும் மிக்க மகிழ்ச்சியடைந்து, குகன் அவனை எடுத்து நெஞ்சாரத் தழுவிக் கொண்டான்.

இந்தப் பாடலுக்கு இரு வகையில் பொருள் கூறுவர். அடி வீழ்ந்து வணங்கியது பரதன் என்றும், அல்ல குகனே என்றும் கூறுவர். இங்கே பேசப்படுகின்ற இருவரும் பண்பு நலன்களில் உயர்ந்தவர்கள். குகனைத் தன் முன்னவன் தமையனாகவே கருதித்தான் பரதன் அவனை அணுகுகிறான் என்பதை நினைவில் வைத்துக் கொண்டால் ஒரே பொருள் கொள்வது எளிதாகும். வந்து என்று முன்பாடலை அனுவதித்துக் கூறியதால் வந்தவன் குகன் என்பதும் அவன் பரதனின் மேனி நிலை கண்டு வருந்தியிருந்தவன், மனமாற்றம் ஏற்பட்டவன் என்றும் கொண்டு, அவன் பரதனை நோக்கித் தலை தாழ்த்தி வணங்கினான். ஒருவரையொருவர் காணும் போது, பெரியோராயினும் சிறியோராயினும் கை கூப்பியும் தலை தாழ்த்தியும் வணங்குவதும் இயல்பு தானே? இப்பொழுது அடியில் வீழ்ந்து வணங்கியவன், யார் என்பதில் தான் உரையாசிரியர்களுக்குள் உடன்பாடு இல்லை. தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் கீர்த்தியும், மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும் பரதன் தான் என்பதில் யாருக்கும் எள்ளளவும் ஐயம் இருக்க முடியாது. பரதன் இளையவன் என்பதும் குகன் மூத்தவன் என்பதும் எல்லோருக்கும் புரிந்ததொன்றே. எனவே இளையவனான பரதன், மூத்தவனான குகனின் திருவடிகளில் விழுந்து வணங்கினான் என்றே கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பொருள் கொள்ளுவதனால் இருவருக்கும் பெருமையே சேர்கிறது அன்றித் தாழ்வு வருவதில்லை என்று உணர்க.

இன்னும் ஒன்று. பெரியோரைச் சிறியோர் வணங்குதல் உலக வழக்கு. இது எல்லோருக்கும் பொது ஒழுக்கம். சாதியும் வயதும் மட்டும் கொண்டு பெரியர், சிறியர் என்று கருதாமல் ஒருவரையொருவர் ஒத்து வணங்குவது சிறப்பு ஒழுக்கமாகும். இங்கே பேசப்படுபவர் இருவரும் சிறப்பு ஒழுக்கம் மிக்கவர் ஆதலின் முதலில் குகன் பரதனை வணங்கினான்; பின்னர் பரதன் குகனின் பாதங்களில் விழுந்து வணங்கினான். வணங்கிய பரதனைத் தந்தையினும் மிக்கக் களிப்புப் கொண்டு குகன் அவனை வாரி எடுத்து நெஞ்சாரத் தழுவி மகிழ்ந்தான் என்பதே அமைவுடையதாகும் என்க.

33. குகன் வினவுதலும், பரதன் விடையிறுத்தலும்

தழுவின புளிஞர் வேந்தன், தாமரைச் செங்கணானை
''எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்தியது என்னை?'' என்ன,

Koviloor Digital Library

"முழுதுலகு அளித்த தந்தை, முந்தையோர் முறையில் நின்றும்
வழுவினன்; அதனை நீக்க, மன்னனைக் கொணர்வான்", என்றான்.
(2433)

(புளிஞர்-வேடர்; எழு-கணைய மரம் / கல்தூண்; வழுவுதல்-தவறுதல்; மன்னன்-இங்கே இராமன்; அளித்தல்-காத்தல்)

அவ்வாறு பரதனைத்தழுவிய வேடர்தலைவனானகுகன், செந்தாமரை போன்ற கண்களையுடைய பரதனை நோக்கி, "கணைய மரத்தினும் உயர்ந்த பருத்த தோள்களை உடையவனே! நீ எங்கள் கங்கைக் கரையை அடைந்ததற்கு என்ன காரணம்?" என்று கேட்டான். அதற்குப் பரதன். "உலகம் எல்லாவற்றையும் முற்றிலும் காப்பாற்றி வந்த எனது தந்தையாகிய தசரதன், முன்னோர்கள் குலமரபிலிருந்து பிழை செய்து விட்டான். அந்தப் பிழையினால் வந்த பழியை நீக்குவதற்காக, அயோத்தியின் குலமுறைப்படி உரிமை உள்ள அரசனான இராமபிரானை மீண்டும் நாட்டிற்கு அழைத்துக் கொண்டு போவதற்காக வந்தேன்" என்று சுருக்கமாக விடை கூறினான்.

இந்தச் செய்யுளின் முதல் அடியிலிருந்தும் தழுவியது குகன் தான் என்றும், பரதன் அல்ல என்றும் நன்கு தெளிவாக அறியவைத்திருக்கிறான் கவிஞன். மூத்தவன்தான் இளையவனைத் தழுவுதல் உலகவழக்கு இளையவன் மூத்தவனை எங்ஙனம் தழுவ இயலும்? தழுவி எடுத்தவர்தான் முதலில் பேச முடியுமே தவிர, தழுவப்பட்டவன் அந்நிலையில் பேசஇயலாது என்பது பொது வழக்கம். செந்தாமரை போன்ற கண்கள் என்று இராமனுக்குக் கூறும் கவிஞர், இராமனைப் போன்றவனே பரதன் என்று முன்பு கூறியதனால் இங்கு பரதனையும் செங்கணான் என்றே அழைக்கிறார். முந்தையோர் முறை என்பது மூத்தவர்க்கே உரித்து அரசு என்னும் குலமரபைக் குறித்ததாகும், இங்கும் தந்தைதான் பாசத்தால் தவறிழைத்தான் என்கிறானே தவிர, மன்னர் முறை தவறினார் என்று கூறவில்லை முழுதுலகு அளித்த மன்னன் என்னாது முழுதுலகு அளித்த தந்தை என்று கூறியது நோக்கத்தக்கது. இன்னும் ஒன்று, என்அண்ணனைக்கூட்டிக்கொண்டு போகவந்தேன் என்றுகூறாது, மன்னனைக் கொணர்வான் என்று கூறியதனால் பரதன், இராமனே அரசுரிமை உடையவன் அவனன்றி வேறு ஒருவரும் அயோத்திக்கு அரசுரிமை கொண்டாட இயலாது என்பதைத் தெளிவாகவும் உறுதியாகவும் உணர வைக்கிறான் என்பதை நோக்க வேண்டும். இங்கே வான்மீகம் கூறுவது வேறு. குகன் பரதனை நோக்கி, "நீ இராமபிரானுக்குத் தீங்கு விளைவிக்கக் கருதி அவன் மீது போர் தொடுப்பதற்காக வரவில்லையா? பின் ஏன் நால்வகைப் படைகளையும் அழைத்து வந்திருக்கிறாய்? உன் மேல் எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது" என்று வெளிப்படையாகக் கூறியதாக வான்மீகம் கூறும்.

Koviloor Digital Library

34. குகன் மனமாற்றம்

கேட்டனன் கிராதர் வேந்தன்; கிளர்ந்து எழும் உயிரன் ஆகி
மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்; விம்மினன்; உவகை வீங்கத்
தீட்ட அருமேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்,
பூட்டிய கையன், பொய்இல் உள்ளத்தன், புகலல் உற்றான்.
(2434)

(கிராதர்-வேடர்; கிளர்ந்து-வீறு பெற்று; விம்முதல்-வருந்துதல்; வீங்க-மிக; தீட்ட-எழுத; பூட்டிய-இறுகப் பிணித்த / கோத்த; பொய்-குற்றம்)

இவ்வாறு பரதன் கூறியவற்றைக் கேட்ட வேடர் தலைவனாகிய குகன், வீறு பெற்று எழும் புத்துயிரும் புத்துணர்ச்சியும் உடையவனாகி, தன் தவறான கருத்தை எண்ணி வருந்தி, பரதனை இன்னும் ஒருமுறை வணங்க வேண்டும் போல் அவனுக்குத் தோற்றியதால் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கருதி மீண்டும் தரையில் விழுந்து வணங்கினான்; தேம்பினான்; மகிழ்ச்சியால் பூரித்தான். எழுதற்கரிய அழகிய மேனியை உடைய தன் மைந்தன் போன்றவனாகிய பரதனது சிவந்த சிறந்த தாமரை மலர் போன்ற திருவடிகளில் தன் இரு கைகளையும் இறுகப் பிணித்துக் கொண்டு, குற்றமும் பொய்மையும் இல்லாத மனத்தையுடைய குகன் கீழ்வருமாறு கூறத் தொடங்கினான்.

இங்கேயும் ஒரு வாதம். ''மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்'' என்றதனால் முன்னால் அடி வீழ்ந்தவனும் குகனே என்பர். அது பொருந்தாதது காண்க. பரதன் மேல் ஒரு ஐயப்பாட்டுடனும், அதனைக் களைந்து கொள்ளும் நோக்கமுமாகவே குகன் பரதனை அணுகுகிறான். முதலில் அவனைக் கண்டதும் தொழுதானை வணங்கினான்-கை கூப்பி வணங்கினான் முதலில். இப்பொழுது பரதனிடமிருந்து அவனுடைய உண்மையான நோக்கத்தை அறிந்து கொண்ட அவனைப் பரதனாகக் காணாமல் ஆயிரம் இராமர்களுக்கும் மேலாகக் கருதத் தொடங்கி விட்டான். எனவே இப்பொழுது அப்படிப்பட்டவனைக் கை கூப்பித் தொழுதலோடு நிறுத்துவது சரியன்று. அவனை சாஷ்டாங்கமாக வணங்க வேண்டும் என்று கருதி, இப்பொழுது மீண்டும் அவன் திருவடிகளில் விழுந்து வணங்கினான். வணங்கியதோடு மட்டுமல்ல அவன் மலர்ப் பாதங்களிலிருந்து கைகளை எடுக்கவும் அவனுக்குத் தோற்றவில்லை, பூட்டிய கையனாகவே இருக்கிறான். எனவே இப்பொழுது குகன் அவனைத் தரையில் விழுந்து வணங்கினான் என்பது ஏற்புடைத்தாகும். ஆனால் இங்கே ஒன்று நோக்க வேண்டும். அவ்வாறு திருவடிகளில் விழுந்த குகனை பரதன் எடுத்துத் தழுவியதாகக் கவிஞன் எங்கும் கூற வில்லை. இங்கும் கூறவில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவனை முகஸ்துதியாகப் புகழ்ந்து அவன் அடிகளில் விழவில்லை குகன். உண்மையான அன்புள்ளத்தோடு விழுந்தான் என்பதைக் குறிக்கவே

Koviloor Digital Library

''பொய்இல் உள்ளத்தான்'' என்று மீண்டும் கூறினார் என்க. பரதன் பால் குற்றம் கண்ட தன் பிழைதீர்தற் பொருட்டும் அவன் மலரடிகளில் வணங்கினான் என்பதும் பொருந்தும்.

35. குகன் பரதனைப் புகழ்தல்

''தாய் உரைகொண்டு, தாதை உதவிய தரணி தன்னைத்
''தீவினை'' என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ? தெரியின் அம்மா!'' (2435)

(சிந்தனை-மனக்கவலை; தன்மை-இயல்பு; தெரியின்-ஆராயுமிடத்து; கேழ்-ஒப்பு; தேக்குதல்-நிறைவித்தல்; அம்மா-வியப்புக்குறிப்பு)

குகன் பரதனை நோக்கி, ''மிகுந்த புகழை உடையவனே! உன்னுடைய தாய் கைகேயி உன் தந்தையிடம் இரண்டு வரங்கள் கேட்டாள். அதில் ஒன்று நீ அயோத்தியின் அரசை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது. உன் தந்தை அதற்கு இறுதியில் உடன் பட்டு, இருவரும் இசைந்து உனக்கு இவ்வரசுரிமையை அளித்தனர்; அது முறையற்றது தீவினையானது என்று எண்ணி, அதனை ஏற்காது உதறித் தள்ளிவிட்டாய்; மூத்தவன் இருக்க இளையவன் அரசுரிமை அடைவது மிகக் கொடியது என்ற மனக்கவலை மிகக் கொண்டு அதை உன் முகத்தில் நிறைவித்துக் கொண்டு, உரிமையுடையவனான மன்னன் இராமபிரானைக் காட்டிலிருந்து மீட்டும் நாட்டிற்கு கூட்டிவந்து முடிசூட வைப்பேன் என்று உறுதி பூண்டு அவனை அழைத்துப் போவதற்காக நீயும் காட்டிற்குள் வந்திருக்கிறாய் என்பதை அறிந்த பின், ஆராய்ந்து பார்க்கும்போதும், உன்னுடைய உள்ள இயல்புகளைக் கொண்டு பார்க்கும்போதும், ஆயிரம் இராமர்கள் ஒன்று சேர்ந்து வந்தாலும் அவர்கள் உன் ஒருவனுக்கு ஒப்பு ஆவார்களோ? மாட்டார்கள்'' என்றான்.

தாய் உரை என்பது இரு வரங்களைக் குறித்தது; தாதை அளித்த என்னாது உதவிய என்று கூறியது கூர்ந்து நோக்கத்தக்கது. மூத்தவன் இருக்க இளையவன் அரசுரிமை ஏற்பது முறையன்று. என்றாலும் தாயின் வரம் கருதியும், தனது வாய்மை கருதியும் இந்த உதவியைத் தசரதன் பரதனுக்குச் செய்தான் என்பது போதரும்! தீவினை என்ன நீத்த என்ற சொல்லாட்சியும் மிகுந்த பொருள் ஆழம் கொண்டது. தான் அரசுரிமை ஏற்றால் என்னென்ன பின்விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதை நன்கு உணர்ந்தே பரதன் இவ்வாறு முடிசூட்டிக் கொள்வதைத் ''தீவினை'' என்று கருதி நீத்து விட்டான் என்க. இராமன் அரசவையின் ஒப்புதல்படியும் தசரதனின் மூத்தவன் என்ற முறைப்படியும் வந்த அரசை ஏற்றுக் கொண்டான். ஆனால் பரதன் தாயும் தந்தையும் இசைந்து உதவிய அரசுரிமையைத் தீவினை என்று மறுத்துவிட்டான் என்பது சிறப்பாகும். அவன் முகத்தில் தோன்றிய துன்ப ரேகைகளைப் படம் பிடித்துக் காட்டுவது போல்

Koviloor Digital Library

''சிந்தனை முகத்தில் தேக்கி'' எனறார். ''ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ?'' என்றதனால் குகன் இராமனைக் குறைத்து மதிப்பிட்டான் என்பது பொருளல்ல, இராமனின் குணநலன்களை நன்கு உடன் இருந்து அறிந்தவன் குகன். ஆனால் பரதனை இப்பொழுது தான் முதன் முறையாகப் பார்க்கிறான். அவனுடைய குணநலன்களை நன்கு அறிந்து கொண்ட குகன், ''நீ இராமபிரானையும் மிஞ்சிவிட்டாய்'' என்ற பொருள் படவே கூறினான் என்க. இராமனிலும் பரதன் ஆயிரம் மடங்கு மேம்பாடு டையவன் என்பது கருத்து. பரதன் தானே விரும்பிப் பெற்றதன்று இவ்வரசுச் சுமை. தாய் தந்தை இருவரும் மனம் ஒப்பி உதவியது. இருந்தாலும் அதனை வெறுத்து ஒதுக்குவதற்கு ஒரு உயரிய உளப்பாங்கு வேண்டும். அதனைத்தான் குகன் இங்கு பாராட்டிக் கூறுகிறான். நீ மறுத்ததோடு அல்ல; அதைப்பற்றி மிகுந்த மனக் கவலையும் கொண்டுள்ளாய். அரசுக்கு உரிமை உடைய இராமபிரானை அழைத்துவந்து முடிசூட்டவும் முனைந்து இங்கு வந்துள்ளாய். எனவே நீ அந்த இராமனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு மேம்பட்டவனே என்று மனதாரப் புகழ்கிறான் என்பதாம். பரதனைப் புகழும் போது கூட வேறு யாரையேனும் உவமை கூறத்தோன்றாமல், இராமனையே உவமை கூறியதனால், இராமனது பெருமை இன்னும் உயருமே அன்றித் தாழாது என்பது கருதுக.

36. ''என்புகழ்கின்றது ஏழை எயினனேன்?'' இரவியென்பான்
தன்புகழ்க்கற்றை, மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல்,
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்களெல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய், உயர் குணத்து உரவுத் தோளாய்!''
(2436)

(உரவு-வலிமை; இரவி-சூரியன்; தவிர்த்தல்-அடக்குதல்; மன்-அரசர்; மரபினோர்-முன்னோர்கள்; ஏழை-அறிவற்றவன்; எயினன்-வேடன்)

''உயர்ந்த குணங்களையும், வலிமையுடைய தோள்களையும் உடைய பரதனே! அறிவற்றவனான வேடன் நான் உன்னை எப்படிப் பாராட்டுவது என்பது தெரியவில்லை; சூரியன் என்று சொல்லப்படுகின்றவன் தன்னு டைய ஒளி பொருந்திய கிரணத் தொகுதிகளால், ஏனைய விண்மீன்கள், சந்திரன் முதலிய ஒளிக்கற்றைகளின் ஒளியைத் தவிர்த்துவிட்டுத் தான் மட்டுமே ஒளி விட்டுப் பிரகாசிப்பதுபோல, நீயும் உன் குலத்து உதித்த அரசர்கள் எல்லோருடைய புகழையும் உனது புகழுக்குள் அடக்கிக் கொண்டு ஒளிவிடுகின்றாய்'' என்றான்.

மற்றை ஒளிகள் என்பது கோள்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றைக் குறிக்கும். சூரியன் ஒளிமட்டுமே மேம்பட்டு, மற்றையவற்றின் ஒளிகள் அதன்முன் ஒளி மங்கித் தெரிவது போல, உன்னுயை முன்னோர்களான அரசர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் புகழ் பெற்றிருக்க,

Koviloor Digital Library

அவற்றையெல்லாம் மங்கச் செய்து, நீ உன்னுடைய புகழ் ஒளியை மேம்பட்டதாக்கிக் கொண்டுவிட்டாய் என்பதாம்.

37. கவிக்கூற்று

என, இவையன்ன மாற்றம்
இயைவன பலவும் கூறிப்
''புனைகழல், புலவு வேல்கைப்
புளிஞர்கோன் பொருஇல் காதல்
அனையவர்க்கு அமைவின் செய்தான்;
ஆர்அவற்கு அன்பு இலாதார்?
நினைவு அரும்குணம் கொடு அன்றோ,
இராமன் மேல் நிமிர்ந்த காதல்? (2437)

(புனை-அலங்கரிக்கப்பெற்ற; புலவு-புலால் நாற்றம்; புளிஞர்-வேடன்; மாற்றம்-உரை; இயைவன-பொருந்துவன; நிமிர்தல்-பெருகுதல்; அமைவின்-மனம்பொருந்தி; நினைவுஅரும்-நினைத்தற்கரிய)

அலங்கரிக்கப்பட்ட வீரக்கழலணிந்தவனும், புலால் நாற்றம் வீசும் வேற்படையைக் கையில் ஏந்தியவனுமான வேடர் தலைவனாகிய குகன். இவ்வாறும், இதுபோன்று பரதனுக்குப் பொருந்தியனவான பலவித உபசார வார்த்தைகளைக் கூறியும் பரதன்பால் ஒப்பற்ற மனம் பொருந்திய அன்பு செலுத்தினான்; இவ்வளவு நற்குணங்கள் வாய்ந்த பரதன்பால் அன்பு செலுத்தாதவர் யார் இருக்கமுடியும்? இராமனது நினைத்தற்கரிய நற்குணங்களைக் கண்டு கொண்டுதானே இந்தக் குகனும் அவன் பால் உயர்ந்த அன்பினைச் செலுத்த முற்பட்டான்? அதுபோல இப்பொழுதும், பரதனுடைய உயர்ந்த நற்குணங்களையும், தியாக சீலத்தையும் கண்டுதான் அவன்பால் ஒப்பற்ற அன்பு செலுத்தினான்.

புலவுவேல் என்பது எப்பொழுதும் குருதிக் கரைபடிந்த வேல் படை என்பதைக் குறிக்கும். இராமனிடத்தில் எத்தகைய நற்குணங்களைக்கண்டு அன்பு செலுத்தத் தொடங்கினானோ, அத்தகைய நற்குணங்களும், அதைவிட ஒருபடி மேலாக இவனது தியாக உணர்வும் கண்டுதான் பரதனிடமும் குகன் அன்பு செலுத்தலுற்றான் என்க. உயர்ந்த நல்ல குணங்கள் உடையவர்கள் எத்தகையவராய் இருந்தாலும், எல்லோரும் அவர்களிடம் அன்பு பாராட்டுவார்கள் என்பது கருத்து.

38. குகன் பரதனை அழைத்துச் செல்லுதல்

அவ்வழி அவனை நோக்கி, அருள்தரு வாரி அன்ன
செவ்வழி உள்ளத்து அண்ணல், தென்திசைச் செங்கை கூப்பி,
''எவ்வழி உறைந்தான் நம்முன்?'' என்றலும், எயினர் வேந்தன்,
''இவ்வழி வீர! யானே காட்டுவல்; எழுக!'' என்றான். (2438)

Koviloor Digital Library

(வாரி-கடல்; எயினர்-வேடர்; வழி-இடம்; செவ்வழி-நன்னெறி; இவ்வழி-இப்பொழுது)

அருளினை வாரி வழங்குகின்ற கடல்போன்ற உள்ளத்தை உடையவனும், நேர்மையான வழியில் செல்லும் பெருமையுடையவனுமான பரதன், இராமன் சென்ற தெற்குத் திசையை நோக்கிக் கூப்பிய கையனாய், ''நமது தமையன் இராமன் இங்கே எவ்விடத்தில் தங்கியிருந்தான்?'' என்று கேட்டலும், வேடர் தலைவனாகிய குகன், ''இங்கு இவ்விடத்தில்தான், என்னுடன் புறப்பட்டு வருக, நானே உனக்கு அவ்விடத்தைக் காட்டுகிறேன்'' என்றான்.

பரதன் குகனைத் தன் தமையனாகக் கருதியதால்தான் ''நம்முன்'' என்றான் என்க.

39. அவ்விடத்தைப் பரதன் காணுதல்

கார் எனக் கடிது சென்றான்; கல்லிடைப் படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்;
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான்; பருவரல் பரவை புக்கான்;
வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்.
(2439)

(கார்-மேகம்; கடிது-விரைந்து; வார்-நீண்ட; பதைத்து-நடுக்குற்று; பருவரல்-துன்பம்; பரவை-கடல்; வார்-ஒழுகுகின்ற; மணி-முத்து; மண்ணுநீர்-மங்கல நன்னீர்; புல்-தருப்பை; மண்ணுதல்-மாசு நீங்கக் கழுவுதல்; படுத்த-அமைந்த / பரப்பிய)

பரதன் மேகம் போன்று விரைவாகக் குகன் உடன் சென்றான்; அங்கே, கட்டமைந்த வில்லை ஏந்திய பெரிய கைகளை உடையவனும், வள்ளன்மைக்குணம் படைத்தவனுமாகிய இராமன் முன்பு தங்கியிருந்த, கற்களினிடையே பரப்பப்பட்டிருந்த புல்லினாலாகிய படுக்கையிடத்தைக் கண்டான்; நெஞ்சம் துடிதுடித்துத் தரையில் வீழ்ந்து அரற்றினான்; துன்பக் கடலுள் அழுந்தினான்.; பெருகுகின்ற முத்துப் போன்ற கண்ணீரினால், இப்பூமியை மாசுபோகக் கழுவுதல்போல நீராட்டினான்.

மேகம் போல விரைந்து செல்லுதலை, ''நின்னே உள்ளி வந்தனன், நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே'' என்று ஐங்குறுநூறு கூறும். மாசுபோகக் கழுவுதலை ''மண்ணக மடந்தையை மண்ணு நீர் ஆட்டி'' என்று பெருங்கதை கூறும்.

40. பரதன் கொண்ட துயரம்

''இயன்றது என் பொருட்டினால், இவ்விடர் உனக்கு என்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும், காயும் அமுதுஎன; அரியபுல்லில்

Koviloor Digital Library

துயின்றனை எனவும், ஆவி துறந்திலென்; சுடரும்காசு
குயின்று உயர்மகுடம் சூடும் செல்வமும் கொள்வென் யானே!''
(2440)

(இடர்-துன்பநிலை; இயன்றது-நேர்ந்தது; அயின்றனை-உண்டனை; சுடரும் -ஒளி விடுகின்ற; காசு-மணி / இரத்தினம்; குயின்று-பதித்த)

இராமன் படுத்திருந்த புற்படுக்கையைக் குகன் காட்ட, அதைக் கண்டதும் இராமனைக் கண்டதுபோலவே உணர்ந்தான் பரதன். அவனுடன்பேசுவதுபோல, ''இராமா! என்னால் தானே உனக்கு இத்தனை துன்பமும் உண்டாகியது? அவ்வாறு என் தாய் கைகேயி என்னிடம் கூறிய போதே நான் இறந்துபோயிருக்க வேண்டும். அவ்வாறு செய்தேனில்லை. இப்பொழுது, உண்ணுதற்குத் தகாத கிழங்குகளையும், காய்களையும் நீ அமுதம் என உண்டு வாழ்ந்தாய் என்றும், பிறரால் படுத்தற்கரிய புல்லாலாகிய படுக்கையில் பஞ்சணைபோல் உறங்கினாய் என்றும் குகன் கூறக்கேட்டபோதாவது நான் உயிர் துறந்திருக்க வேண்டும். இப்போதும் அவ்வாறு செய்யவில்லை. ஆனால் ஒளி வீசுகின்ற இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட உயர்ந்த மகுடமாகிய அரசச் செல்வத்தை மட்டும் ஏற்றுக் கொள்வேன் போலும்'' என்று தன்னைத்தானே நொந்து கூறிக் கொள்ளுகிறான். பரதன்.

இவ்விடர்என்பது காடு புகுந்ததைக் குறிக்கும்; உன்னுடைய துயரத்தில் பங்கு கொள்ளாத நான், அரசச் செல்வத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சி அடைவேனோ? எனப் பரதன் கேட்டனன் என்க.

41. இலக்குவன் இரவு கழித்த விதம் பற்றிக் குகன் கூறுதல்

தூண்தர நிவந்த தோளான், பின்னரும் சொல்வான், ''அந்
நீண்டவன் துயின்ற சூழல் இது எனில், நிமிர்ந்த நேயம்
பூண்டவன், தொடர்ந்து பின்னே போந்தவன், பொழுது நீத்தது
யாண்டு?'' என, இனிது கேட்டான்; எயினர்கோன் இதனைச்
சொன்னான். (2441)

(தர-ஒத்த / போல; நிவந்த-உயர்ந்த; நிமிர்ந்த-அளவு கடந்த / ஓங்கிய; நேயம்-நேசம் / அன்பு; நீத்தது-கழித்தது; சூழல்-இடம்; இனிது-மன நெகிழ்ச்சியோடு / மெல்ல; நீண்டவன்-குணங்களாலும் பெருமையாலும் உயர்ந்தவன்)

தூண்களைப் போன்று பருத்து உயர்ந்த தோள்களை உடையவனான பரதன், மீண்டும் ''பெருமையாலும் குணங்களாலும் உயர்ந்தவனாகிய நெடியோன் இராமபிரான் இந்த இடத்தில்தான் உறங்கினான் என்றால், அவன்பால் பேரன்பு கொண்டவனும், அவனைத் தொடர்ந்து நிழல்போல் பின்பற்றி வந்தவனுமான இலக்குவன் இரவுப் பொழுதை எப்படிக்

Koviloor Digital Library

கழித்தான்?'' என்று மன நெகிழ்ச்சியோடு கேட்டான். அதற்கு வேடர் தலைவன் குகன் பின்வருமாறு விடை கூறினான்.

நீண்டவன் என்ற சொல் திருவிக்கிரம அவதாரத்தை நிகழ்த்திய திருமாலின் அம்சமான இராமன் என்ற பொருளையும் தரும். இலக்குவன்பால் பரதன் கொண்ட தீராக் காதல் தெரியும்படி, நிமிர்ந்த நேயம் பூண்டவன் என்றும், தொடர்ந்து பின்னே போந்தவன் என்றும் கூறுவதிலிருந்து, தனக்கு அப்படி ஓர் வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று அவன் ஏங்கிய ஏக்கம் வெளிப்படுகிறது.

இராமன் உறங்கிய இடம் இது என்றால், இலக்குவன் உறங்கிய இடம் எது என்று தானே கேட்டிருக்கவேண்டும்? ஆனால் பரதன் அவ்வாறு கேட்க வில்லை. இராமனும் சீதையும் தனித்திருக்க, இவன், உறங்கியிருக்க மாட்டான் என்பது அவனுக்குத் தெரியும். எனவேதான் எங்கு உறங்கினான் எனக் கேட்காது, எப்படிப் பொழுதைப் கழித்தான் என்று கேட்கிறான் என்பது ஒரு நயம். இனிது கேட்டான் என்பதில் பொதிந்துள்ள பொருள், விளக்கத்திற்கு அப்பாற்பட்டது. அவ்வளவு நெகிழ்ச்சி, அன்பு, இலக்குவன் மேல் எனக் கொள்க. நிவத்தல் என்ற சொல்லுக்கு உயர்தல் என்பது பொருள். ''மாக்கடல் நிவந்து எழுதரும் செஞ்ஞாயிற்றுக் கவின்'' என்பது புறநானூறு.

42. குகன் கூறுதல்

> ''அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச,
> வில்லை ஊன்றிய கையொடும் வெய்து உயிர்ப்பொடும், வீரன்
> கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! கண்கள் நீர் சொரியக் கங்குல்
> எல்லை காண்பு அளவும் நின்றான்; இமைப்பு இலன் நயனம்''
> என்றான். (2442)

(கல்-மலை; ஆண்டு-ஆளுதல் / கீழ்ப்படுத்துதல்; அல்-இருள்; உயிர்ப்பு-பெருமூச்சு; கங்குல்-இரவு; எல்லை-முடிவு; நயனம்-கண்கள்; துஞ்சுதல்-உறங்குதல்)

''மலையைப் போன்று திரண்ட, உயர்ந்த தோள்களை உடைய பரதா! இருளை ஒத்த கரிய திருமேனியனான இராமபிரானும், அவன் மனைவி யான சீதாதேவியும் அங்கே புல் படுக்கையில் தூங்க, வீரனான இலக்குவன், தன் கையில் வில்லை ஏந்திக் கொண்டும், வெப்பப் பெருமூச்சு விட்டுக் கொண்டும், கண்களில் கண்ணீர் பொழிந்து கொண்டும், இரவின் முடிவு வரை-சூரியன் உதிக்கும் காலம் வரை, கண்கள் இமைக்காமல் விழித்த கண் விழித்தபடி நின்று கொண்டே காவல் காத்துக் கொண்டிருந்தான்'' என்றான்.

ஆண்டு என்ற சொல் ஒன்றைக் கீழ்ப்படுத்தி மற்றொன்றை மேம் படுத்திக் காட்டுதற்குப் பயன்படுத்தப்பட்டது. இலக்குவன் தோள்கள்

Koviloor Digital Library

மலையைக் கீழ்ப்படுத்தித் தாம் உயர்ந்து பருத்து இருந்தன; இராமனின் மேனி நிறம் இரவைக் கீழ்ப்படுத்தி அவனது மேனியின் நிறத்தை மேம்படுத்திக் காட்டிற்று என்பதாம். இராமபிரானுக்கு அடைமொழி கொடுத்த கவிஞன், சீதாதேவிக்கு எந்த அடைமொழியும் தாராது அவள் என்று மட்டும் சொல்லிவிட்டு விட்டானே?'' ஏன்? அவளுடைய அழகைச் சொல்லுதற்கு என்னிடம் வார்த்தைகளே இல்லை என்று முன்னர்க் கூறிவிட்டானல்லவா? ஒப்பு எங்கே கண்டு எவ்வுரை நாடி உரை செய்கேன்'' என்பது பாடல் பகுதி. அதுதான் காரணம். ஆனால் ஊன்றிக் கற்போர்க்கு இந்த ஆதங்கம் இருந்து கொண்டேதான் இருக்கும் என்பது உறுதி. இலக்குவனைப் பற்றி அடுக்கிக் கொண்டே செல்லுகிறான்; அவன் கைவில் தரையில் ஊன்றிய வண்ணம் எதற்கும் தயாராய் இருந்தது; வெப்பப் பெருமூச்சு விட்டுக் கொண்டே இருந்தான். கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்து கொண்டே இருந்தது; விடியும்வரை விழித்துக் கொண்டே இருந்தான். கொஞ்சம் உட்காரக்கூட வில்லை. கேட்கின்ற பரதனுக்கும் நமக்கும் இத்தகைய வாய்ப்புக் கிடைக்காமற் போயிற்றே என்று கருதத் தூண்டும் ஒரு அற்புதமான பாடல் இது. கண்கள் இமைக்கவில்லை என்னாது, கண்கள் இமைப்பிலன் என்று அதனையும் இலக்குவன் மேல் ஏற்றிக் கூறியது ஒரு நயம். இங்கே வான்மீகத்தில் ஒரு வேறுபாடு. குகன் இயற்கையிலேயே இராமன்பால் பேரன்பு கொண்டிருந்ததனால், இலக்குவன்மேல் சிறிது சந்தேகம் கொள்ளுகிறான். எனவே அவனுடைய செயல்களைக் கண்காணிக்கும் பொருட்டுக் குகனும் இரவு முழுவதும் உறங்காது, இராமன், சீதை, இலக்குவன் ஆகிய மூவரையும், ஏனையோரையும் காவல் காத்து நின்றான். இலக்குவனால் இராமபிரானுக்கு ஏதேனும் தீங்கு நேரலாமோ என்று ஐயுற்று அவன் சென்ற இடமெல்லாம் இவனும் தொடர்ந்து சென்று காவல் புரிந்து வந்தான்'' என்றும் வான்மீகம் கூறும். இங்கே பரதனிடத்தில் குகன் சொல்லும்போது, தானும் உறங்காது கண்விழித்திருந்தேன் என்று கூறாதது அவன் பெருந்தன்மையைப் புலப்படுத்தும்.

43. பரதன் இலக்குவனைப் பாராட்டித் தன்னை நொந்து கொள்ளுதல்

என்பத்தைக் கேட்ட மைந்தன் ''இராமனுக்கு இளையார்'' என்று
முன்பு ஒத்த தோற்றத்தேமில், யான், என்றும் முடிவில்லாத
துன்பத்துக்கு ஏது ஆனேன், அவன்; அது துடைக்க நின்றான்;
அன்பத்துக்கு எல்லை உண்டோ? அழகிது என் அடிமை''
என்றான். (2443)

(இளையார்-தம்பியர்; தோற்றம்-பிறப்பு; ஏமில்-எங்களுள்; முடிவு-தீர்தல்; ஏது-காரணம்; முன்பு-முன்னே / பெருமை)

Koviloor Digital Library

என்று குகன் சொல்லியவற்றைக் கேட்ட பரதன், ''இராமபிரானுக்குத் தம்பியர்கள் என்று முன்பு பிறக்கும்போது உடன் பிறந்தவர்களுள், நான் மட்டும்தான் என் தமையன் இராமன் தீர்க்கவே முடியாத துன்பங்கள் அடைவதற்கு காரணமாக இருந்துவிட்டேன். ஆனால் இலக்குவனோ, என்னால் உண்டாக்கப்பட்ட துன்பங்கள் அனைத்தையும் தீர்ப்பது என்ற உறுதியுடன் அவனுடனேயே இருந்தான். அன்புக்கு ஒரு எல்லைதான் உண்டோ! நான் என் தமையனுக்குச் செய்யும் அடிமைத் தொழில் மிக நன்றாக இருக்கிறது'' என்று பரதன் தன்னைத்தானே நொந்து கொண்டான்.

அழகிது என்பது இகழ்ச்சிப் பொருளில் நின்றது. பிறப்பால் நாங்கள் எல்லோரும் ஒரே தன்மையர்தான் என்றாலும், இலக்குவன் மட்டும் தான் அன்புச் சிறப்பினால் உயர்ந்து விளங்குகிறான், நானும் மற்றவனும் அடிமைத் தொழிலில் தாழ்ந்து போய் விட்டோம் என்று தன்னைத்தானே நொந்து கூறிக் கொள்கிறான். ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்'' என்னும் குறள், ''அன்பத்துக்கும் எல்லை உண்டோ?'' என்ற அடிகளில் எதிரொலிப்பதைக் காண்க.

44. பரதன் குகனிடம் கங்கையைக் கடக்க உதவ வேண்டுதல்

அவ்விடை அண்ணல் தானும், அன்று அரும் பொடியின் வைகித்
''தெவ் இடைதர நின்று ஆர்க்கும் செறிகழல் புளிஞர் கோமான்!
இவ்விடைக் கங்கை யாற்றின் ஏற்றினை ஆயின், எம்மை
வெவ்இடர்க்கடல் நின்று ஏற்றி வேந்தன்பால் விடுத்தது''
என்றான். (2444)

(அண்ணல்-பெருமையிற் சிறந்தோன்; பொடி-புழுதி; தெவ்-பகைவர்; இடைதருதல்-வருத்துதல்; புளிஞர்-வேடர்; கோமான்-வேந்தன்; ஏற்றுதல்-அடைவித்தல்; வெவ்-கொடிய; விடுத்தது-அடைவித்தது / சேர்த்தது; செறித்தல்-கட்டுதல்)

அந்த இடத்தில் பெருமையிற் சிறந்தவனாகிய பரதனும், அன்று இரவுப் பொழுதைக் கழித்தற்கு இயலாது புழுதிப் படுக்கையில் உறங்காது தங்கியிருந்து, பொழுது புலர்ந்ததும் குகனை நோக்கி, ''பகைவர்கள் வருந்தும்படி நிலைபெற்று நின்று ஒலிக்கின்ற வீரக் கழல் அணிந்த வேடுவர்களின் தலைவனே! நீ எங்களை இந்தக் கங்கையாற்றைக் கடந்து தென் கரையில் சேர்த்துவிட்டாயானால், எங்களையெல்லாம் கொடிய துயர்க்கடலினின்றும் இன்பக் கடலாகிய எங்கள் தலைவன் இராமன்பால் சேர்த்ததுபோல் ஆகும்'' என்றான்.

கங்கையாற்றைக் கடக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வானானால் ஆற்றைக் கடந்தது போல் இல்லை, துயரக் கடலைக் கடந்தது போல இன்பம் அடைவோம் என்று குறித்தான் என்க. கங்கை ஆற்றைக் கடந்து துன்பக் கடல் ஏறினான் என்றது ஒரு நயம். தனது

Koviloor Digital Library

ஆசையையும், அதற்குக் குகனது துணை தேவை என்பதையும் புலப்படுத்தினான் என்க. கங்கையாற்றைத் தாண்டித் தென் கரையில் சேர்ப்பித்தல், துன்பக் கடலைத் தாண்டி இராமபிரானிடத்துச் சேர்ப்பித்ததாகும் என்றான்.

45. குகன் கட்டளை இட, நாவாய்கள் வருதல்

''நன்று'' எனப் புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை; ''நாவாய்
சென்று இனித் தருதிர்'' என்ன, வந்தன; சிவன் சேர் வெள்ளிக்
குன்றுஎன, குனிக்கும்அம்பொன் குவடுஎன, குபேரன் மானம்
ஒன்றுஎன, நாணிப் பல்வேறு உருவு கொண்டு அனைய ஆன.
(2445)

(தமர்-சுற்றத்தார்; நண்ணி-கிட்டி / அடைந்து; சேர்தல்-எழுந்தருளி யுள்ள; வெள்ளிக்குன்று-கயிலைமலை; குனித்தல்-வளைத்தல்; அம்-அழகிய; குவடு-மலைச்சிகரம்; மானம்-விமானம்)

பரதன் கூறியதைக் கேட்ட வேடர் தலைவனாகிய குகன் ''நல்லது'' என்று உடன்பட்டான். பின்னர் தமது இனத்தாரைச் சார்ந்து, ''இனிமேல் ஓடங்களைக் கொண்டு வாருங்கள்'' என்று கட்டளையிட, அவர்களும், சிவபெருமான்எழுந்தருளியிருக்கின்ற வெள்ளி மலையானகயிலை மலை போலவும், அவன் திரிபுரம் எரித்த காலத்தில் வளைத்த அழகிய பொன் மலையாகிய மேரு மலைபோலவும், வடக்குத் திசைக்கு அதிபதியாகிய குபேரனது விமானமாகிய புட்பகம் போலவும், தனித்தனி உருவம்பெற்று வருவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு, பலவேறு வடிவங்கள் தாங்கி வந்து சேர்ந்தன.

இனி என்றது, முன்பு குகன் தன் இனத்தவருக்கு இட்டிருந்த கட்டளை வேறு. இப்போது இடுகின்ற கட்டளை வேறு. எனவே, தன் கருத்து மாறுபாட்டைத் தெரிவிக்க இனிச் சென்று தருதிர் என்றான் என்பதாம். அவர்கள் செலுத்திக் கொண்டு வந்த ஓடங்களுக்கு கயிலங்கிரியும், மேருமலையும், புட்பக விமானமும் உவமைகள். இந்த வடிவங்கள் கொண்ட பல ஓடங்கள் வந்தன என்க.

46. ஓடங்களின் தன்மை

நங்கையர் நடையின் அன்னம் நாண் உறு செலவின் நாவாய்,
கங்கையும் இடம் இலாமை, மிடைந்தன கலந்த எங்கும்;
அங்கொடு இங்கு இழித்தி ஏற்றும் அமைதியின் அமரர் வையத்து
இங்கொடு அங்கு இழித்தி ஏற்றும் இருவினை என்னல் ஆன.
(2446)

(செலவு-நடை / போக்கு; இழித்தி-இறக்கி; அமைதி-திறம்; மிடைதல்-நெருங்குதல்; இங்குஅங்கு-இக்கரை அக்கரை / மண்ணுலகு

Koviloor Digital Library

விண்ணுலகு; அமரர் வையம்-தேவலோகம் / துறக்கம்; இருவினை-பாவ, புண்ணியங்கள்)

நாவாய்கள் எப்படி வந்தன? மகளிர் நடந்து வருவதைப் போல ஒசிந்து அசைந்து வந்தன; அன்னப் பறவைகளெல்லாம் வெட்கப்படும்படி நாவாய்களின் போக்கு அமைந்திருந்தது. கங்கையாற்றில் வெற்றிடமே இல்லை என்னும்படி நெருங்கிக் கலந்து எல்லா இடங்களிலும் நின்றிருந்தன. இந்த நாவாய்கள் இக்கரையில் உள்ளவர்களை அக்கரைக்கும் அக்கரையில் உள்ளவர்களை இக்கரைக்கும் ஏற்றியும் இறக்கியும் ஓடிக் கொண்டிருக்கின்றன. இது எப்படி இருக்கிறது? இவ்வுலகத்திலுள்ளாரை அவர்களது நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப மேலுலகத்திற்கும், கீழ் உலகத்திற்கும் மாற்றி மாற்றிக் கொண்டு செல்லுகின்றஅந்த இருவினைகளின் செயல்களைப் போல இருக்கிறது.

புண்ணியம் மேலுலகத்தையும், பாவம் கீழ் உலகத்தையும் அடைவிக்கும் என்பதாம். படகுகள் நீரில் அசைந்து செல்லும் செலவுக்கு மகளிர் நடையும், அன்னப் பேடைகளின் நடையும் உவமை. இவை பாவ, புண்ணியங்களை ஒத்திருக்கின்றன. விண்ணுலகத்தில் ஏற்றுதல் புண்ணியம் செய்தார்க்குக் கிடைக்கும் துறக்கம். கீழ் உலகத்தில் இறக்குதல் பாவம் செய்தார்க்குக் கிடைக்கும் நரகம் என்பதாம்.

47. நாவாய்களில் படைகள் ஏறுதல்

''வந்தன வரம்புஇல் நாவாய்; வரிசிலைக் குரிசில் மைந்த!
சிந்தனை யாவது?'' என்று சிருங்கிபேரியர்கோன் செப்பச்
சுந்தர வரிவிலானும் சுமந்திரன் தன்னை நோக்கி,
''எந்தை! இத்தானை தன்னை ஏற்றுதி விரைவின்'' என்றான்.
(2447)

(வரி-கட்டமைந்த; குரிசில்-தசரதன்; மைந்தன்-பரதன்; வரம்புஇல்-கணக்கற்ற; சிந்தனை-நினைவு / கருத்து; சுந்தர-அழகிய; சிருங்கிபேரம்-குகனுடைய ஊர்)

சிருங்கிபுர நகரத்தாரின் அரசன் குகன் பரதனை நோக்கி, ''கட்டமைந்த வில்லையுடைய ஆண்களிற் சிறந்தவனாகிய தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தன் பரதனே! கணக்கற்ற நாவாய்கள் வந்து சேர்ந்துவிட்டன. இப்பொழுது உன்னுடைய கருத்து என்ன? மேலே என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்க, அழகிய கட்டமைந்த வில்லினை உடைய பரதனும் சுமந்திரனை நோக்கி, ''தந்தை போன்றவரே! இந்தப் படைகளை யெல்லாம் இந்த நாவாய்களில் ஏற்றி உடனே அக்கரையில் சேர்ப்பிப் பீராக!'' என்றான்.

சிருங்கிபேரம் என்பது குகன் நாட்டின் தலைநகரம்; ஒரே பாடலில் தந்தையை ''வரிசிலைக் குரிசில்'' என்றும், மைந்தனைச் ''சுந்தர வரி

Koviloor Digital Library

வில்லான்'' என்றும் கூறியது ஒரு நயம். சுமந்திரனைத் தசரதன் மைந்தர் அனைவருமே ''தந்தையே'' எனத்தான் அழைக்கின்றனர் என்பதை உணர்க.

48. படைகள் மறுகரை சேர்தல்

குரிசிலது ஏவலால், அக்குரகதத் தேர்வலானும்
வரிசையின் வழாமை நோக்கி, மரபுளி, வகையின் ஏற்றக்
கரி, பரி, இரதம், காலாள், கணக்கறு கரைஇல் வேலை
எரிமணி திரையின் வீசும் கங்கையாறு ஏறிற்று அன்றே! (2448)

(குரிசில்-உயர்ந்தோன்; ஏவல்-கட்டளை; குரகதம்-குதிரை; எரி-விளக்கம்மிக்க; வேலை-கடல்; மரபுளி-முறைப்படி)

உயர்ந்தோனாகிய பரதனது கட்டளையின்படி, அந்தக் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரினை ஓட்டுவதில் வல்லவனான சுமந்திரனும், அப்படைகளையெல்லாம் வரிசையாக, ஒழுங்கு படுத்தி, ஏற்றுமுறையை நன்கு ஆலோசித்து, முறைப்படி, தொகுதி தொகுதியாக ஏற்றவும், யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய எண்ணற்ற கரையில்லாத கடல் போன்ற படைகள், ஒளி வீசும் இரத்தினங்களைக் கரைகளில் வாரி வீசும் அலைகளையுடைய கங்கையாற்றின் கரையைக் கடந்து சென்றன.

தேர்வலான் என்பது தேர் செலுத்துவதில் வல்லவனும், தேர்ச் சாரதியும், அமைச்சனுமான சுமந்திரனைக் குறித்தது. ''கணக்கறு'' என்பது ஒவ்வொரு படையும் தனித்தனியாக எண்ணற்றவையாக இருந்தன என்றும், ''கரைஇல்'' என்பது அவையெல்லாம் ஒன்று சேர்ந்த படைத் தொகுதி அளவற்றதாக-எல்லை காண முடியாததாக இருந்தது என்றும் பொருள்படும். படையாகிய கடல், கங்கையாகிய ஆற்றில் ஏறிக் கடந்தது என்று கூறியது ஒரு நயம். ''வரிசையின் வழாமை'' என்பதும் ''மரபுளி வகையின்'' என்பதும், முன் செல்வோர், பின்செல்வோர், முன் அமர்வோர், பின் அமர்வோர், இருப்போர், நிற்போர், தனித்து ஏற்றப்படுவோர், குழுக்களாக ஏற்றப்படுவோர் என்று அவ்வவற்றின் தன்மைகள் எல்லாம் அடக்கிய சொற்றொடர்களாகும்.

49. யானைகள் கங்கையைக் கடத்தல்

இடிபடு முழக்கம் பொங்க, இனமழை மகர நீரை
முடிவு உற முகப்ப, ஊழி இறுதியில் மொய்ப்ப போலக்
கொடியொடு வங்கம் வேலைக் கூம்பொடு படர்வபோல
நெடிய கையெடுத்து நீட்டி, நீந்தின நெடுங்கை வேழம்.
(2449)

(கை-ஒழுங்கு / வரிசை; முழக்கம்-பேரொலி; ஊழி-யுகம்; முடிவுஉற-வற்றும்படி; வங்கம்-கப்பல்; கூம்பு-பாய்மரம்; படர்தல்-செல்லுதல்;

Koviloor Digital Library

படுதல்-உண்டாகுதல்; மகரநீர்-கடல்; மழை-மேகம்; முகப்ப-பருகுமாறு; மொய்த்தல்-நெருங்குதல்; மகரம்-சுறாமீன்கள்; மகர நீர் என்பது சுறாமீன்களையுடைய கடலுக்குக் காரணப்பெயர்; வேழம்-யானை)

மேகக்கூட்டங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதனால் ஏற்படும் இடிஓசைபோல யானைகள் பிளிறிக் கொண்டும், அவை பிரளய காலத்தில் கடல் நீர் முழுவதையும் வற்றிப் போகும்படி பருகுவதற்காக, நெருங்கிச் செல்வது போலவும், கொடிகளோடு கூடிய கப்பல்கள் கடலில் பாய்மரங்களுடன் செல்வதுபோலவும், யானைகள் தமது நீண்ட துதிக் கைகளை உயரத் தூக்கி, நீண்ட வரிசையாக நீந்திக் கொண்டும் சென்றன. யானைகள் பிளிறிக் கொண்டு நெருங்கி வந்தமைக்கு, யுகமுடிவில் மேகக்கூட்டம் இடியோசையோடு கடல் நீரை முழுதும் பருகுவதற்கு நெருங்குதல் உவமை; யானைகள் நீரில் நீந்திச் சென்றமைக்குக் கப்பல்கள் தமது கொடிகளோடும் பாய்மரங்களோடும் கடலில் செல்லுவது உவமை.

50. யானைகள் நீந்துவதால் கங்கை கரை கடத்தல்

சங்கமும், மகர மீனும், தரளமும், மணியும் தள்ளி
வங்க நீர்க் கடலும் வந்து, தன்வழிப்படர, மானப்
பொங்குவெம் களிறு நூக்கக் கரை ஒரீஇப் போயிற்று; அம்மா!
கங்கையும் இராமன் காணும் காதலது என்ன மாதோ! (2450)

(நூக்குதல்-உந்தி நீந்துதல்; தரளம்-முத்துக்கள்; ஒரீஇ-நீங்கி / கடந்து; தள்ளுதல்-வீசுதல்-பொங்குதல்-மிகுதல்; மானம்-பெருமை)

பெருமையுடைய, பொங்கி எழுகின்ற, கொடிய யானைகள் உந்தி நீந்துதலால், அக்கங்கையாற்றிலுள்ள சங்குகளும், சுறாமீன்களும், முத்துக் களும், இரத்தினங்களும் கரையில் ஒதுக்கப்படுகின்றன; கப்பல்களை உடைய நீரினையுடைய கடலும் அவ்வெற்றிடத்தில் வந்து பாய்கிறது. எனவே கங்கையாற்றின் நீர் கரைநீங்கிப் போகிறது. இது எப்படி இருக்கிறது என்றால் அந்த யானைகளுக்கு முன்னால், கங்கையாறும் இராமபிரானைக் காணுகின்ற ஆசையால் முந்திச் செல்லுவதுபோல இருக்கிறது.

இராமனைக் காணும் ஆசை பரதனுக்கு மட்டுமன்று. கங்கை யாற்றுக்கும் உண்டு என்று சொல்லுமாறு, அது கரை கடந்தது என்பதாம். பரதன் பின்னால் படைக்கடல் வந்தது. கங்கையாற்றின் பின்னால் அலை களையுடைய கடல் வந்தது என்பதாம். யானைகளின் கூட்டமிகுதியால் அவை ஆற்றில் நீந்தும்பொழுது ஆற்று நீர் கரைகளைத் தாண்டி வெளி வருவது இயற்கைதானே! அதனை, இக்கங்கையாறும், இராமபிரானைச் சென்று காணவேண்டும் என்ற ஆசையினால் படைகளை முந்திச் சென்றது என்கிறான் கவிஞன்.

Koviloor Digital Library

51. நீந்தும் யானைகளின் தோற்றம்

பாங்கின் உத்தரீயம் மானப் படர்திரை தவழ, பாரின்
வீங்குநீர் அழுவம் தன்னுள் விழும் மதக் கலுழி வெள்ளத்து,
ஓங்கல் தலைகள் தோன்ற, ஒளித்து, அவண் உயர்ந்த கும்பம்,
பூங்குழல் கங்கை நங்கை முலை எனப் பொலிந்த மாதோ!
(2451)

(கலுழி-கலங்கல் நீர்; ஓங்கல்-யானை / மலை; கும்பம்-தலைமேடு / மத்தகம்; உத்தரீயம்-மேலாடை; அழுவம்-ஆழம்; வீங்குதல்-மிக்கு ஓடுதல்; பாங்கு-நல்ல; பார்-கரை / வரம்பு; வீழ்தல்-விரும்புதலுமாம்)

கங்கையாற்றின் கரைகள் புரண்டோடும் வெள்ளத்தோடு செல்லுகின்ற யானைகள் உகுக்கின்ற மதநீர் என்னும் கலங்கல் நீர் வெள்ளமும் கலந்து போக, அதில் செல்கின்ற யானைகளின் தலைமேடுகள் மட்டும்தான் நீருக்குமேல் வெளியே தெரிகின்றன. அதன் மற்றைய உறுப்புக்கள் நீருக் குள்ளே ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி வெளியே தோன்றும் மத்தகங்கள்-மேல் தலைப்பகுதி, அழகிய மெல்லிய பூக்கள் அணிந்துள்ள கூந்தலையுடைய கங்கை என்னும் பெண்ணின் கொங்கைகளைப் போலத் தோற்றம் அளிக்கின்றன. அலைகள் அந்நங்கையின்மேல் போர்த்தப்படும் மேலாடையான உத்தரீயம் போல் இருக்கிறது.

ஒரு அசாதாரணமான கற்பனை. கங்கை ஆற்றின் அலைகளின் இடையில் தோன்றும் யானைகளின் மத்தகங்கள் கங்கை என்னும் பெண்ணின் கொங்கைகளைப் போலத் தோன்றுகிறது என்பதாம்.

52. தேர்கள் நாவாயில் செல்லுதல்

கொடிஞ்சொடு தட்டும், அச்சும், ஆழியும், கோத்த மொட்டும்
நெடுஞ்சுவர்க் கொடியும், யாவும், நெறி வரும்முறையின் நீக்கி,
விடும்சுவல் புரவியோடும் வேறு வேறு ஏற்றிச் சென்ற
மடிஞ்சபின் உடம்பு கூட்டும் வினை என வயிரத்தேர்கள்.
(2452)

(கோத்த-செருகிய; சுவல்-பிடரி மயிர்; புரவி-குதிரைகள்; வயிரம்-வலிமை; மடிஞ்ச-மடிந்த / அழிந்த; மொட்டு-தேரின் கூம்பு; கொடிஞ்சு-தேரின் மேல்முகடு; கூட்டுதல்-சேர்த்தல்; தட்டு-இருக்கை)

தேரின்மேல் முகடு, தேர்ச்சாரதி அமரும் இருக்கையாகிய தேர்த்தட்டு; சக்கரத்தின் அச்சு, சக்கரம், கோர்க்கப்பட்ட தேரின் கூம்பு, தேரைச் சுற்றி அமைந்துள்ள நீண்ட சுவர் போன்ற மறைப்பு, கொடிகள், இன்னும் மற்ற உறுப்புக்கள் எல்லாம், முன்பு கட்டப்பட்டிருந்த நிலையிலேயே, முறை மாறாமல் பிரிக்கப்பட்ட, அவையும், கத்தரிக்காது விடப்பட்ட பிடரி மயிரினை உடைய புரவிகள் உறுதியான தேர்கள் இவைகள் யாவும்

Koviloor Digital Library

வெவ்வேறு நாவாய்களில் தனித் தனியாக ஏற்றப்பட்டன. இது எப்படி இருக்கிறது என்றால், உயிர் அழிந்த பிறகு, உடம்மை வேறோர் உயிரில் கொண்டு சேர்க்கும் இருவினைகளைப் போல இருக்கிறது.

தேர்களை அப்படியே முழுவதுமாக நாவாய்களில் ஏற்றிக் கங்கையைக் கடக்க இயலாது. எனவே, தேரின் உறுப்புக்கள், அவையவை எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தனவோ, அந்த முறை ஒரு சிறிதும் மாறாமல், அப்படியே பிரிக்கப்பட்டு, தேர்கள் சில நாவாய்களிலும், தேரின் உறுப்புக்கள் சில நாவாய்களிலும் ஏற்றிச் செல்லப்பட்டன. இதற்கு இறந்து போன உயிரிலிருந்து உடம்பைப் பிரித்து, அவ்வுடம்பை வேறு ஒரு உயிருக்குள் கொண்டு சேர்க்கும் நல்வினை தீவினைகளை உவமை யாகச் சொன்னார் என்க. தேரின் உறுப்புக்களின் முறை-கொடி, மொட்டு, கொடிஞ்சு, சுவர், தட்டு, அச்சு, ஆழி என்பனவாம். கொடி தேரின் உச்சியில் கட்டப்படுவது. பட்டாலும், நூலாடையாலும் பல நிறங்களில் அலங்கரிக்கப்படுவது. மொட்டு தேரின் கூம்பு. தேரின் உச்சியில் தாமரை அரும்பின் வடிவமாக அமைந்திருக்கும். கொடிஞ்சு-தேரின் மேல் முகடு. இது கொடிஞ்சு, கொடிஞ்சி எனவும் வழங்கப்படும். இது தாமரைப் பூவாகச் செய்து தேர்த்தட்டின் முன்னே நடப்படுவது; சுவர்-தேரின் சுற்றுப் பக்கங்களில் மரத்தால் அமைத்த மறைப்பு; தட்டு-தேரில் வீரன் அமரும் இருக்கை; அச்சு-உருள் கோத்த மரம்; ஆழி-தேரின் சக்கரம்; உடம்போடு தோன்றிய உயிரை அவ்வுடம்பு அழிந்தபின் வேறு உடம்பில் சேர்ப்பிக்கும் வினை போல என்பது ''மடிஞ்சபின் உடம்பு கூட்டும் வினை'' என்றவாறு. தேர்கள் பிரிக்கப்படாத நிலையில் உயிரோடு கூடிய உடம்பு; பிரித்தபின் உயிரற்ற உடம்புகள். மீண்டும் சேர்க்கப்படும் பொழுது உயிர்பெற்ற புதிய உடம்பு. இதை இருவினைகள் செய்கின்றன. இதை நாவாயின் செயல்களுக்கு உவமை கூறினார். உயிர் போன பிறகு கை, கால், முதலிய உறுப்புக்களைப் பிரித்து அவற்றை மீண்டும் ஒன்று சேர்த்து உடம்பினை உருவாக்குவது சந்தான காரணி என்னும் வித்தை என்பர்.

53. குதிரைகள் அக்கரை சேர்தல்

நால் இரண்டு ஆயகோடி நவைஇல் நாவாய்கள் மீதாச்
சேல் திரண்டனைய ஆய கதியோடு, நிமிரச் சென்ற,
பால் திரண்டனைய மெய்ய, பயம் திரண்டனைய நெஞ்ச,
கால் திரண்டனைய கால, கடு நடைக் கலினப் பாய்மா. (2453)

(மெய்-உருவம்; கடு-விரைந்த; கலினம் -கடிவாளம் / சேணம்; நவை-குற்றம்; நிமிர-விரைவாக; கழி-செலவு / போக்கு)

பால்போன்று வெண்மை நிறம் திரண்டாற்போன்ற உடம்பும், அச்சமே திரண்டாற் போன்ற மனத்தாலாய மருட்சியான பார்வையும், காற்றே திரண்டு வந்தாற் போன்ற வேகம் உடைய பறந்து செல்லுகின்ற கால்களும் விரைவாகச் செல்லும் கடிவாளம் கொண்டு பாயும் தன்மையுமுள்ள

Koviloor Digital Library

குதிரைகள், எட்டுக் கோடியான அளவுடையன. அவை குற்றமற்ற நாவாய்களின் மீது ஏறிச், சேல் மீன்கள் திரண்டு சென்றாற் போன்று வேகமான கதியோடு விரைவாகச் சென்றன.

எட்டுக் கோடிக் குதிரைகள் என்றும் கூறுவர். கணக்கிறந்த நாவாயான் என்று முன்னர்க் கூறியதனால் நாவாயின் மேல் ஏற்றிக் கூறப்பட்டது. யானைகள் நீரில் நிலைத்து நீந்திச் செல்லுதலைப் போலக் குதிரைகளால் செல்ல இயலாது. எனவே, நாவாய்களின்மீது ஏற்றிச் செல்லப்பட்டன என்க. கோடி என்பதை மிகுதி குறிக்கும் பேரெண்ணாகக் கொள்ளுதலே பொருந்தும்.

54. ஓடத்தில் மாதர்கள் செல்லும் தோற்றம்

ஊடுஉற நெருக்கி, ஓடத்து ஒருவர் முன் ஒருவர் கிட்டிச்
''சூடகத் தளிர்க்கை மாதர், தழுவினர்; துவன்றித் தோன்றப்
பாடு இயல் களிநல்யானைப் பந்திஅம் கடையின் குத்தக்
கோடுகள் மிடைந்த என்ன, மிடைந்தன குவவுக் கொங்கை.
(2454)

(சூடகம்-வளை; துவன்றி-நெருங்கி; பாடு-பெருமை; களி-மதச் செருக்கு; பந்தி-வரிசை; கடை-நுனி; கோடு-கொம்பு; மிடைந்த-செறிந்த / நெருங்கிய; குவவு-திரண்ட; தோன்ற-நிற்க)

வளையலணிந்த தளிர் போன்ற மென்மையான கைகளையுடைய மகளிர், ஓடத்தில் ஒருவர்க்கு முன் ஒருவராக நெருங்கிச் சென்று தழுவிக் கொண்டும் நெருக்கிக் கொண்டும் நிற்கலாயினர். அந்தக் காட்சி பெருமை பொருந்திய மதச் செருக்குடையதும், உத்தம இலக்கணங்கள் வாய்க்கப் பெற்றதுமான யானைகள் வரிசையில் தம் அழகிய நுனியால் எதிரில் இருப்பவர்களைத் தாக்கும் இயல்புடைய கொம்பாகிய தந்தங்கள் நெருங்கியிருந்ததைப் போல, அம்மகளிரின் திரண்ட கொங்கைகள் நெருங்கியிருந்தன.

எதிர் எதிராக வரிசையில் நிற்கின்ற யானைகளின் கொம்புகள் ஒன்றையொன்று தாக்குவதற்குத் தயார் நிலையில் இருப்பதுபோல, அவ்வோடத்தில் நெருக்கி ஒருவரையொருவர் தழுவி நின்ற மகளிரின் கொங்கைகள் நெருங்கி இருந்தன. மகளிரின் கொங்கைகளுக்கு யானைகளின் தந்தங்களை கூர்மை நோக்கி உவமை கூறுவது கவிமரபு. சூடகம் என்பது மகளிர் முன் கையில் அணியும் வளையல்.

55. பொலம் குழை மகளிர், நாவாய்ப் போக்கின் ஒன்று ஒன்றுதாக்க
மலங்கினர், இரண்டு பாலும் மறுகினர் வெருவிநோக்க,
அலங்கு நீர் வெள்ளம் தள்ளி அழிதர, அங்கும் இங்கும்
கலங்கின வெருவிப் பாயும் கயற்குலம் நிகர்த்த கண்கள்.
(2455)

Koviloor Digital Library

(பொலன்-பொன்; குழை-குண்டலம் / காதணி; மலங்குதல்-மனங்கலங்குதல்; வெருவி-அஞ்சி; அலங்கு-விளங்குகின்ற / அசையும்; அழிதல்-வலிகெடுதல்; மறுகுதல்-குழப்பமடைதல்; நிகர்த்த-ஒத்தன)

நாவாய்கள் அதன் போக்கில் ஒன்றோடொன்று நெருக்கி மோதிக் கொண்டு செல்லுவதால், அதில் அமர்ந்திருந்த பொன்னாலாகிய காதணி களை அணிந்திருந்த மகளிர் மனம் கலக்கமுற்று, இரண்டு பக்கங்களிலும் அச்சத்துடன் நோக்கிக் கொண்டே வந்தார்கள். அவ்வாறு அவர்கள் பார்த்த காட்சி, அசைகின்ற வெள்ளத்தின் வலிகெட அவற்றிலுள்ள கயல் மீன்களின் கூட்டங்கள் அஞ்சி அங்கும் இங்கும்துள்ளித் திரிவதை ஒத்திருந்தன. மகளிரின் கண்களுக்குக் கயல்மீன்களை உவமை கூறுவது மரபு. கலத்தின் மோதலால் பயந்து மிரளும் பெண்களின் கண்களுக்கு, கலம்செல்லும் வேகத்தால் தள்ளப்படும் நீரில் பயந்து துள்ளும் கயல்மீன்கள் உவமை.

56. இயல்வுறு செலவின் நாவாய் இருகையும் எயினர் தூண்டத்
துயல்வன துடுப்பு வீசும் துவலைகள், மகளிர் மென் தூசு
உயல்வுறு பரவை அல்குல் ஒளிப்பு அறத் தளிப்ப, உள்ளத்து
அயர்வுறும் மதுகை மைந்தர்க்கு அயாஉயிர்ப்பு அளித்தது
அம்மா! (2456)

(கை-பக்கம்; துயல்வன-அசைவன; துவலை-திவலை / நீர்த்துளிகள்; உயல்வு-அசைதல்; அல்குல்-பெண்குறி; தளிப்ப-சிந்த / துளிப்ப / தெரிய; மதுகை-வலிமை; அயர்வு-தளர்ச்சி; அயாஉயிர்ப்பு-தளர்ச்சி நீக்கம் / நெடு மூச்சு; தூசு-ஆடை; பரந்திருத்தலால் பரவை கடலுக்குக் காரணப்பெயர்)

இயல்பாகவே வேகமாகச் செல்லும் அவ்வோடங்கள், இரண்டு பக்கங்களிலும் வேடர்கள் துடுப்பு வீசிச் செலுத்துவதனால் உண்டாகிய நீர்த்துவலைகள், அதில் அமர்ந்திருந்த மெல்லிய ஆடை அணிந்திருந்த மகளிரின் அசைகின்ற பரந்த உள்ளிடத்தை ஒளிக்காது மறைக்காது வெளித் தோன்றும்படி காட்ட, இராமன் பிரிவு முதல் உள்ளத்தில் துன்பமும் தளர்ச்சியும் உற்றிருந்த வலிமை மிகுந்த ஆடவர்க்கு அது தளர்ச்சி நீக்கத்தைத் தந்து பெருமூச்சு விட வைத்தது.

இயல்பாகவே கங்கையில் வேகமாக ஓடும் நாவாய்கள் இரண்டு பக்கங்களிலும் படகோட்டிகள் துடுப்புக் கொண்டு உந்துகின்றனர், எனவே, நாவாய்கள் இன்னும் வேகமாகப் போகின்றன. அவர்கள் துடுப்புக்களை அசைப்பதால் ஆற்றின் நீர்த்துளிகள் அதில் அமர்ந்திருந்த மகளிர் அணிந்திருந்த மெல்லிய ஆடையை நனைத்தது. ஆடை உடம்போடு ஒட்டியதால் உள்ளிருந்த பரந்த அல்குல் மறைக்க ஒண்ணாது வெளிப்பட்டுத் தோன்றியது. எனவே இதுகாறும் சோர்வுற்றுத் தளர்ச்சி யடைந்திருந்த வலிமை மிக்க ஆடவர்கள் தளர்ச்சி நீங்கிப் புது உற்சாகம் பெற்றனர் என்க. இதேபோல சீவகசிந்தாமணியில் ஒரு காட்சி. ''நானநீரில்

Koviloor Digital Library

கலந்து, நலம்கொள் பூம்பட்டு ஒளிப்ப, மேனி தோன்ற விளங்கி'' என்பது பாடல் பகுதி.

57. நாவாய்களின் தோற்றம்

இக்கரை இரைத்த சேனை எறிகடல் முகந்து ஏகி,
அக்கரை அடைய வீசி, வறியன அணுகும் நாவாய்,
புக்கு அலைஆழி நல் நீர் பொறுத்தன, போக்கிப் போக்கி
அக்கணம் உவரி மீளும் அகன்மழை நிகர்த்த அம்மா! (2457)

(இரைத்த-ஆரவாரித்த; எறிதல்-மோதுதல்; ஆழி-கடல்; உவரி-கடல்; அகல்-அகன்ற / பரவிய; மழை-மேகங்கள்; கணம்-காலநுட்பம்; வறியன-பாரம் அற்றன; நல்நீர்-மிகுதியான நீர்; போக்கிப்போக்கி-முழுமையாக / முற்றிலும் பெய்வித்து)

கங்கையின் வடகரையில் ஆரவாரித்துக் கொண்டிருக்கும் பரதனது படைகளாகிய சேனைகளை, மோதுகின்ற கடலில் ஏற்றிக் கொண்டு சென்று தென்கரையில் இறக்கிவிட்டுவிட்டு, ஒன்றும் சுமை இல்லாத வெறும் நாவாய்கள் வருகின்ற காட்சி, அலைவீசும் கடலில் தோய்ந்து உப்பு நீரை மொண்டுகொண்டு, அவ்வங்விடங்களில் சென்று அவற்றை நல்ல, பருகுதற்குரிய நீராக மாற்றி, மழையாகப் பெய்து விட்டு, பின்னர் மீண்டும் இன்னும் நீரை முகந்துகொள்ளுவதற்காகத் திரும்பி வருகின்ற பரந்த மேகக் கூட்டத்தை ஒத்திருந்தன.

தென் கரையிலிருந்து வடகரைக்குச் சேனைகளை ஏற்றிக் கொண்டு சென்ற நாவாய்கள், அவர்களை அங்கே இறக்கிவிட்டுவிட்டு வெறுமை யாகத் திரும்பி வருகின்ற காட்சி, மேகங்கள்கடலிடைப் படிந்து உப்புநீரை முகந்து கொண்டு சென்று நன்னீராக மாற்றி மழையாகப் பொழிந்து விட்டுப் பின்னர் மீண்டும் உப்பு நீரை மொண்டு கொண்டுபோக வருவதைப் போன்றிருக்கிறது என்று உவமிக்கிறார். மேகங்களின் செயலை நாவாய் களின் செயலுக்கு ஒப்புக் கூறினார். வீசுதல் என்ற சொல்லாட்சி மிகுந்த கருத்தாழம் கொண்டது. இறக்குதல் என்ற செயலை விரைவாக இறக்குதல் என்ற பொருளில் வீசி என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பது உணர்ந்து சுவைக்கத்தக்கது. நல்நீர் என்றது உப்பற்ற பருகுதற்குரிய நீர் என்று பொருள் தந்தாலும், மிகுதியான நீர் என்பதே சாலப்பொருந்தும். நல்லபாம்பு, நல்லவெயில் என்று கூறுவதைப் போல் நல் நீர் என்பது. ''நன்று பெரிதாகும்'' என்பது தொல்காப்பியம்.

58. அகில்இடு தூபம் அன்ன ஆய்மயில் பீலி ஆர்த்த,
முகில் உடை முரண் மாத்தண்டு கூம்புஎன, முகிலின் வண்ணத்
துகிலொடு தொடுத்த செம்பொன் தகட்டிடைத் தொடுத்த முத்தம்
நகு கொடி நெடிய பாயின் நவ் எனச் சென்ற நாவாய். (2458)

Koviloor Digital Library

(தூபம்-புகை; ஆய்-சிறந்த; பீலி-தோகை; ஆர்த்தல்-கட்டப்பெறுதல்; முகிழ்-அரும்பு / உச்சி / குமிழ்; முரண்-வலிய; தண்டு-துடுப்பு; தொடுத்தல்-கட்டப்பட்ட / பதிக்கப்பட்ட; நகுதல்-விளங்குதல்; கூம்பு-பாய்மரம்; நவ்-கடலில் செல்லும் பெரிய மரக்கலம் / நாவம் / கப்பல்; துகில்-ஆடை / சீலை)

அகிற்கட்டைகளால் இடப்படும் புகை போல, ஆராய்ந்து எடுக்கப் பட்ட சிறந்த மயில் தோகைகள் கட்டப்பட்டுள்ள உச்சியில் அரும்பு போன்று வலிய சிறந்த துடுப்புக்கள், மேகத்தின் நிறம் போன்ற திரைச் சீலையோடு கட்டப்பட்ட சிவந்த பொன்னாலாகிய தகடு, அதற்கு இடையே கட்டப்பட்டுள்ள முத்துக்கள், விளங்குகின்ற துகிற் கொடி. இவையனைத்தும் கொண்டு பெரிய கடலில் செல்லும் பெரிய மரக்கலக்கப்பல் போலச் சென்றன இந்த நாவாய்கள்.

சிறிய நாவாய்கள் பெரிய கப்பல்கள் போல விரைந்து சென்றன என்பதாம்.

59. மகளிர் செல்லும் நாவாய்கள் விமானம் போன்று இருத்தல்

ஆனனம் கமலத்தன்ன, மின் அன்ன அமிர்தச் செவ்வாய்
தேன்நனை குழலார் ஏறும் அம்பிகள், சிந்தும் முத்தம்
மீன்என, விரிந்த கங்கை விண்என, பண்ணை முற்றி
வானவர் மகளிர் ஊரும் மானமே நிகர்த்த மாதோ! (2459)

(ஆனனம்-முகம்; கமலம்-தாமரை; குழல்-கூந்தல்; பண்ணை-நீர் விளையாட்டு; ஊரும்-செலுத்தும்; மானம்-விமானம்; மீன்-நட்சத்திரம்; அம்பி-ஓடம்)

தாமரை மலர்போன்ற முகமும், மின்னல் போன்ற இடையும், தேவாமிர்தம் போன்ற இனிய சொற்களையுடைய சிவந்த வாயும், தேன் சிந்தும் மலர்களை உடைய கூந்தலும் உடைய மகளிர் ஏறிச் செல்லும் நாவாய்கள், விரிந்து பரந்த கங்கை ஆறே ஆகாயம் போலவும், அதில் சிந்துகின்ற முத்துக்கள் விண்மீன்கள் போலவும், தேவ மாதர்கள் நீர்விளையாட்டு முடித்துவிட்டுத் தாமே செலுத்திக் கொண்டு செல்லும் விமானங்களைப் போலத் தோன்றின.

கங்கையாறு-ஆகாயம்; முத்துக்கள்-விண்மீன்கள்; மகளிர்-தேவ லோகத்துப் பெண்கள்; நாவாய்-விமானம் என்று உவமிக்கப்பட்டது. பண்ணை என்பது நீர் விளையாட்டு என்னும் பொருள் தந்து நின்றது. ''கெடவரல், பண்ணை ஆய்இரண்டும் விளையாட்டு'' என்பது தொல் காப்பியம்.

Koviloor Digital Library

60. ஓடங்கள் உயிர்படைத்தவை போல நடத்தல்

துளிபடத் துழாவு திண்கோல் துடுப்பு இருகாலில் தோன்ற,
நளிர் புனல் கங்கை ஆற்றில் நண்டு எனச் செல்லும் நாவாய்;
களிஉடை மஞ்ஞை அன்ன, கனம்குழை, கயல்கண் மாதர்,
ஒளிர் அடிக் கமலம் தீண்ட, உயிர் படைத்தனவே ஒத்த. (2460)

(பட-சிதறும்படி; திண்-வலிய; கோல்-மரக்கொம்பு; கால்-பக்கங்கள்; நளிர்-குளிர்ந்த; கனம்-பருத்த; குழை-குண்டலம் / காதணி; மஞ்ஞை-மயில்)

நீர்த்துளிகள் சிதறும்படி துழாவிச் செல்லுகின்றன நாவாய்கள். வலிமையான மரக்கொம்பு போன்ற துடுப்புக்கள் இரண்டு பக்கங்களிலும் தோன்ற, குளிர்ந்த நீரையுடைய கங்கையாற்றில் நாவாய்கள் நண்டுபோல, நீரோட்டத்திற்கு ஏற்பக் கரையில் ஒதுங்கிச் செல்லுகின்றன. மகிழ்ச்சி மிகுந்த மயில் போன்ற சாயலையும், கனத்த காதணிகளையும், கயல்மீன் போன்ற கண்களையும் உடைய மகளிர், தமது ஒளிபொருந்தி விளங்குகின்ற தாமரை மலர் போன்ற பாதங்களை வைத்து அப்படகுகளில் ஏறியதனால், அவ்வோடங்களே உயிர் பெற்று நடந்து செல்வன போலச் சென்றன.

தேவ மகளிரை ஒத்த மங்கையரின் கால்கள் பட்டதால், ஓடமே உயிர்பெற்றுச் செல்வது போன்றிருந்தது என்பதாம்.

61. முனிவர்கள் வான்வழியாகக் கங்கையைக் கடந்து செல்லுதல்

மைஅறு விசும்பில், மண்ணில், மற்றும் ஓர் உலகில், முற்றும்
மெய்வினை தவமே அன்றி மேலும் ஒன்று உளதோ? கீழோர்
செய்வினை நாவாய் ஏறித் தீண்டலர்; மனத்தில் செல்லும்
மொய்விசும்பு ஓடம் ஆகத் தேவரின், முனிவர் போனார். (2461)

(மனத்தில்-மனத்தைப் போல; மொய்-வலிய; மைஅறு-குற்றமற்ற; மற்றும்-வேறு; முற்றும்-முழுதும்; விசும்பு-விண்ணுலகு / ஆகாயம்; வினை-தொழில்; தீண்டி-தொட்டு; கீழோர்-தாழ்ந்த குலத்தோர்)

தாழ்ந்த குலத்தோரால் செய்யப்பட்ட ஓடத்தைத் தொட்டு அதில் ஏறிக் கங்கையைக் கடக்க விருப்பமில்லாத வசிட்டன் முதலிய முனிவர்கள், தாம் மனத்தில் நினைத்த மாத்திரத்திலேயே சென்று அடையும் வலிய ஆகாயத்தையே ஓடமாகக் கருதித் தேவர்களைப் போலப் பறந்து சென்று கங்கையைக் கடந்தனர். எனவே, குற்றமற்ற விண்ணுலகு, இம் மண்ணுலகு, மற்றுமுள்ள வேறு எந்த ஒரு உலகத்திலும் முழுவதும் உண்மையான ஒரு தொழில் இருக்கிறது என்றால் அது தவம் இயற்றுதலே யாகும். அதனைத் தவிர வேறு எந்தத் தொழிலாவது அதனினும் மேம்பட்டதோ? இல்லை என்பதாம்.

Koviloor Digital Library

தாழ்ந்த குலத்தோரே ஓடங்களைச் செய்பவர் என்பதனால், முனிவர்கள் அதைத் தொட்டு அதில் ஏறிக் கங்கைக் கரையைக் கடக்க விரும்பவில்லை என்பதும், அதனால் அவர்கள் தங்கள் தவத்தின் ஆற்றலால் தேவர்களைப் போல, ஆகாயத்தையே ஓடமாகக் கொண்டு மனோ வேகத்தில் பறந்து கங்கையைக் கடந்தனர் என்பதும் தவத்தினால் ஆகாதது எதுவும் இல்லை என்பதும் பெறப்படுகின்றன. ''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், செய்தவம் ஈண்டும் முயலப்படும்'' என்பது குறள் 265. எனவே தவத்தை ''மெய்வினை'' என்றார் என்க. இப்பாடல் வேற்றுப் பொருள் வைப்பு அணியாகும். ''முன் ஒன்று தொடங்கி, மற்றுஅது முடித்தற்குப், பின் ஒரு பொருளை, உலகறிபெற்றி, ஏற்றி வைத்து உரைப்பது வேற்றுப் பொருள் வைப்பே'' என்பது தண்டியலங்காரம்.

62. படைகளும், மக்களும் கங்கையைக் கடத்தல்

அறுபதினாயிரம் அக்குரோணி என்று
இறுதிசெய் சேனையும், எல்லைதீர் நகர்
மறுஅறு மாந்தரும், மகளிர் வெள்ளமும்
செறிதிரைக் கங்கை பின் கிடக்கச் சென்றவே. (2462)

(இறுதி-எல்லை / வரையறை; எல்லைதீர்-இறுதியில்லாத; மறு-குற்றம்; திரை-அலை;)

அறுபதினாயிரம் அக்குரோணிகள் என்று கணக்கால் வரையறுக்கப் பட்ட பலவிதப் படைகளும், அளவற்ற குற்றமற்ற அயோத்தி நகர மக்களும், மகளிர் கூட்டமும் நெருங்கிய அலைகளையுடைய கங்கையாறு பின்னிடும்படி அதனைக் கடந்து சென்றனர்.

''மூன்றுபத்து ஆயிரத்து இரட்டி'' என்பது 60000 அக்குரோணிகளைக் குறித்து முன்பே கூறப்பட்டது. ஒரு அக்குரோணி எவ்வளவு படைகளைக் கொண்டது என்பதும் முன்பே கண்டோம். சேனைக்கு ஒரு கணக்குக் காட்டப்பட்டது. ஆனால் அயோத்தி நகரத்தின் எல்லைக்கு அளவே இல்லை. எனவே அது கணக்கால் வரையறுத்துச் சொல்லப்படவில்லை. பெருநகரங்கள் மேலும் மேலும் விரிந்து வளர்வன. அயோத்தி நகரம் யுத்தத்தால் அழிக்கப்பட முடியாதது, எனவே ''எல்லை தீர் நகர்'' என்றார் என்பதாம். கங்கை பின் கிடக்க என்பது அவர்கள் கங்கையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னால் கடந்து சென்றார்கள் என்பதைக் குறிக்கும்.

63. பரதன் நாவாயில் ஏறுதல்

சுழித்து நீர்வருதுறை ஆற்றைச் சூழ்படை
கழித்து நீங்கியது எனக் கள்ள ஆசையை
அழித்து, வேறு அவனி பண்டு ஆண்ட வேந்தரை
இழித்து, மேல் ஏறினான் தானும் ஏறினான். (2463)

Koviloor Digital Library

(நீங்கியது-கடந்தது; கள்ளம்-வஞ்சனை; பண்டு-முன்பு; அவனி-உலகு; இழித்தல்-தாழச் செய்தல் / கீழ்ப்படுத்துதல்; மேல்ஏறுதல்-மேன்மையுறுதல்)

தன்னைச்சூழ்ந்துவந்த படைகள் அனைத்தும் நீர்சுழித்து வருகின்ற பல துறைகளையுடைய கங்கையாற்றைக் கடந்து விட்டன என்று அறிந்தவனும், தன்னுடைய மண்ணாசை என்ற வஞ்சனையான ஆசையை அறவே அழித்தவனும், தன் குலத்தில் முன்பு தோன்றிய பல்வேறு அரசர்களைத் தமது நற்குணங்களால் கீழ்ப்படுத்தியவனும், அதனால் தான் மேலும் சிறப்பும் பெருமையும் பெற்று மேன்மையுற்றவனுமான பரதன், தானும் அந்த நாவாயில் ஏறலானான்.

தானும் ஏறினான் என்பது தன்னுடன் கூடவந்த தன் தாய்மார்கள் அனைவரும் சுமந்திரன், சத்துருக்கனன் மற்றும் உள்ளவர்கள் எல்லோரும் ஏறிய பின்னர் தானும் ஏறினான் என்பதைக் குறித்தது.

64. பரதன் குகனுக்குக் கோசலையை அறிமுகப்படுத்துதல்

சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
''கொற்றத்தார்க் குரிசில்! இவர்ஆர்?'' என்று
குகன் வினவக், ''கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல்தேவி, மூன்றுஉலகும்
ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம், யான்பிறத்தலால்
துறந்த பெரியாள்'' என்றான். (2464)

(கொற்றத்தார்-வெற்றிமாலை; குரிசில்-ஆடவர் திலகம்; கோக்கள்-அரசர்கள்; வைகும்-தங்கும்; முற்றம்-முன்றில்; முதல்தேவி-மூத்த மனைவி; மூன்றுலகும் ஈன்றான்-பிரமன்; துறந்த-இழந்த; பெரியாள்-பெருமை உடையவள்)

உறவினர்களும், தேவர்களும் கூட வணங்கி நின்ற கோசலையைத் தானும் தொழுது, குகன், பரதனை நோக்கி, ''வெற்றி மாலையைச் சூடிய ஆண்களிற் சிறந்தவனே! இவர் யார்?'' என்று கேட்டான். அதற்குப் பரதன், ''சிற்றரசர்கள் எல்லாம் கப்பம் கட்டுவதற்காக, நாள் கணக்காகக் காத்துத் தங்கியிருந்து திறை செலுத்தும் முன்றிலை உடைய தசரதச் சக்கரவர்த்தி யின் மூத்த மனைவி, பட்டத்தரசி இவள்; மூன்று உலகங்களையும் தோற்று விப்பதற்கு முன் நான்முகனின் உந்திக் கமலத்தில் தோன்றியவனான திருமாலின் அம்சமான இராமபிரானைத் தன் மகனாய் பெற்றதனால், அவனுக்கு உரிமையுடைய அரசச் செல்வத்தையெல்லாம் நான் கைகேயிக்கு மகனாகப் பிறந்ததனால், இழந்து நிற்கின்ற பெருமை யுடையவள்'' என்றான்.

Koviloor Digital Library

ஓடத்தில் செல்லும்போது கூடக் கோசலையைச் சுற்றத்தார் வணங்கி நிற்கிறார்கள். காரணம் அவள் முதல் பட்டத்தரசி, அவளைத் தேவர்களும் தொழுது நிற்கிறார்கள் காரணம் அவள்தான் திருமாலின் அம்சமான இராமனை ஈன்றெடுத்தவள்; இவ்விராமன்தான் தேவர்களுக்குத் துணை செய்வதற்காக அரக்கர்களை அழிக்க முற்படப்போகிறவன். எனவே தேவர்களும் கோசலையைத் தொழுது நிற்கின்றனர்.

இதனைக் கண்ட குகன் தானும் கோசலையை முதலில் வணங்கி நின்றான். பின்னர் இத்தகைய பெருமைக்குரியவள் யாராய் இருக்கமுடியும் என்று அறிந்து கொள்வதற்காகப் பரதனிடம் இவர் யார் என்று கேட்கிறான். அரசர்கள் திறை செலுத்துவதற்காக நாள் கணக்கில் தங்கிக் கூடியிருக்கும் முன்றிலையுடைய தசரதச் சக்கரவர்த்தி என்றது, அவனது ஆளுகைக்கு உட்பட்ட நாட்டின் சிற்றரசர்களின் பேரெண்ணிக்கையைக் குறிப்பால் உணர்த்தியது. மூன்றுலகும் ஈன்றான் என்றது பிரமனை. திருமாலின் திருவுந்தியிலே முதலில் தோன்றியவன் பிரமன் எனவே மூவுலகும் ஈன்றானை முன் ஈன்றான் எனச் சிறப்பிக்கப் பெற்றான் இராமபிரான். நான் பிறந்ததால் தனக்கே உரிமையுடைய அரசச் செல்வத்தை இழந்த பெருமையை உடையவள் என்று தன்னைத் தானே நொந்து கொண்டு, தாழ்த்திக்கொண்டு தன்தாயை உயர்த்திக்கூறி அறிமுகப்படுத்தும் பரதனின் பண்பு உய்த்து உணரத்தக்கது.

65. கோசலைக்கு குகனை அறிமுகப்படுத்துதல்

என்றலுமே, அடியின் மிசை நெடிது வீழ்ந்து
அழுவானை ''இவன் யார்'' என்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடி வினவ, கழல்கால் மைந்தன்
இன்துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும் மூத்தான்;
குன்றனைய திரு நெடுந்தோள் குகன்
என்பான், இந்நின்ற குரிசில்'' என்றான். (2465)

(குரிசில்-நம்பி; துணைவன்-தோழன்; கார் ஆ-காராம்பசு; கார்-செவ்வி)

என்று பரதன் சொன்ன அளவிலேயே. கோசலையின் பாதங்களில் விழுந்து சாஷ்டாங்கமாகத் தொழுது, ஆற்றாமையால் அழுது புலம்பு கின்ற குகனைக் காட்டி, ''இவ்வாறு அழுது அரற்றும் இவன்யார்?'' என்று, கன்றினைப் பிரிந்த காராம் பசுவைப் போன்று, இராமனைப் பிரிந்து துயருற்றிருக்கின்ற பூங்கொடி போன்றவளான கோசலை பரதனிடம் கேட்டாள். அதற்கு வீரக்கழல் அணிந்த பாதங்களை உடைய பரதன், ''இந்நிலையில் நிற்கும் குகன், நமது இராமபிரானுக்கு இனிய நண்பன்; இலக்குவனுக்கும் அவன் இளையவனான சத்துருக்கனனுக்கும், எனக்கும்

Koviloor Digital Library

அண்ணன் ஆவான்; மலைபோன்ற அழகிய பெரிய தோள்களைப் பெற்ற இவன் குகன் என அழைக்கப்படும் பெயரினன்'' என்றான்.

குகன் அழுதது தசரதனது பிரிவால் கோசலை கொண்டிருக்கும் கைம்மைக் கோலத்தைக் கண்டும், இராமனது பிரிவால் கோசலை அடையும் பெருந்துன்பத்தைக் கண்டுமே என்க. கன்று பிரி கார் ஆ என்ற உவமை முன்பும் கையாளப்பட்டிருப்பது காண்க; அப்பொழுதுதான் ஈன்றெடுத்த கன்றைப் பிரிந்த பசுவைக் கோசலைக்கு ஒப்பிட்டிருப்பதை உணர வேண்டும். காராம் பசுவை புனிற்றுஆ என்றும் கூறுவதுண்டு. காராம் பசுவின் பால் மனிதர் உண்ணுதற்கு ஆகாதது. கன்றுக்கே முழுதும் பயன்படும் என்பதால் அன்பின் செறிவு மிகுதி உணர்த்தப்பட்டது.

66. கோசலை வாழ்த்துதல்

''நைவீர் அலீர் மைந்தீர்! இனித்துயரால்
நாடு இறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்றாம்
அன்றோ? விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறு அனைய காளை, இவன்
தன்னோடு கலந்து நீவீர்
ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை
நெடுங்காலம் அளித்திர்'' என்றாள். (2466)

(நைதல்-வருந்துதல்; விலங்கல்-மலை; ஒருவீர்-ஒத்த தன்மை; இடம்-நிலம் / பூமி; அளித்தல்-காத்தல் / ஆளுதல்; இறத்தல்-கடத்தல்; பெயர்தல்-செல்லுதல்)

அதனைக் கேட்ட கோசலை அம்மூவரையும் பார்த்து, ''புதல்வர்களே! இனிமேல் நீங்கள் துன்பப்பட்டு வருத்தமுறத் தேவையில்லை; உண்மையான வீரர்களா்ன இராமனும் இலக்குவனும் நாட்டைவிட்டு நீங்கிக் கானகம் வந்ததும் ஒருவகையில் நல்லதாகவே அமைந்தது. காரணம் இத்தகைய ஒரு நல்ல சகோதரனைப் பெற்றிருக்கிறீர்கள் அல்லவா? மலைபோன்ற திண்ணிய தோள்களையும், வில்லாற்றல் மிக்கவனும், யானைபோன்ற ஆண்மை மிக்கவனும், காளைபோன்றவனு மாகிய இந்தக் குகனோடு நீங்களும் ஒன்று கலந்து, ஒற்றுமையாய் இருந்து, நீங்கள் ஐந்து பேரும் ஒரே ஒருவர் என்ற ஒத்த தன்மையோடு, இவ்வகன்ற பூமியை நீண்டகாலம் ஆண்டு காத்து வருவீர்களாக!'' என்று உளமார வாழ்த்தினாள்.

இதுவரை மக்கள் அனைவரும், இராமனும் இலக்குவனும் கானகம் புகுந்தது கொடிய செயல் என்றே கூறிவந்திருக்கிறார்கள் என்பதை இங்கே கருத்திற் கொள்ள வேண்டும். கோசலைதான் முதன்முதலில் இந்த வேற்றுமையில் ஒரு ஒற்றுமையைக் கண்டு கூறுகின்றாள். கொடியதிலும், நல்லதைக்காணும் கொள்கை கொண்டவள் கோசலை என்பது புலனாகும்.

Koviloor Digital Library

குகனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவள் உள்ளம் மகிழ்ச்சியடைந்து, முன்பு கொண்டிருந்த துயரத்தை அனைவரும் தவிர்க்க வேண்டும் என்று வாழ்த்துகிறாள். முன்பு ''இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்'' என்று இராமன் கூறிய கருத்தையே, இப்பொழுது கோசலை ''ஐவீரும் ஒருவீராய்க் கலந்து'' என்கிறாள். இன்னும் ஒருபடி மேலே போய் இந்த நாட்டினைக் காப்பதில் குகனுக்கும் பங்கு உண்டு என்பதைக் குறிப்பிட்டு ''இவ்வகல் இடத்தை நெடுங்காலம் அளித்திர்'' என்றாள். இராமனும் பரதனும் கோசலையும் ஒத்த மனம் படைத்தவர்கள் என்பதும் வெளிப்படுகிறது.

67. சுமித்திரையை அறிமுகப் படுத்துதல்

அறம்தானே என்கின்ற அயல் நின்றாள்
தனை நோக்கி, ''ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை'' என்ன, ''நெறி திறம்பாத்
தன்மெய்யை நிற்பது ஆக்கி,
இறந்தான் தன் இளந்தேவி, யாவர்க்கும்
தொழு குலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான்
தனைப் பயந்த பெரியாள்'' என்றான். (2467)

(அயல்-பக்கம்; நெறி-முறை; திறம்பா-வழுவாத / கடவாத / மாறு படாத; நிற்பது-நிலைநிறுத்தி; தொழுகுலம்-தெய்வம்; பின்பிறந்தான்-தம்பி)

தருமமே ஒரு வடிவெடுத்து வந்து அருகில் நிற்கின்றது போல் தோற்றமும், நெஞ்சமெல்லாம் அன்பே நிறைந்து வழிபவளும் போலக் கோசலையின் பக்கத்தில் நிற்கின்ற சுமித்திரையைக் காட்டிக் குகன், பரதனை நோக்கி, ''இவ்வன்னை யார் என்று சொல்க'' என்று கேட்டான். அதற்குப் பரதன், ''சத்திய வழிமுறைகளிலிருந்து சிறிதும் வழுவாது, தன் வாய்மையையே தனக்குப் பின்னும் நிலைநிறுத்திச் சென்று, இறந்தவனான தசரதச் சக்கரவர்த்தியின் இளம் மனைவி-இரண்டாவது பட்டத்தரசி; எல்லோருக்கும் குலதெய்வம் போல வணங்கத் தக்க இராமபிரானுக்குப் பின்பு பிறந்த தம்பியும் ஒருவன் இருக்கின்றான் என்று அனைவராலும் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றவனும், இராமனை விட்டு அல்லும் பகலும் பிரியாதவனுமாகிய இலக்குவனைப் பெற்றெடுத்த பெருமைமிக்கவள் இவள்'' என்று கூறினான்.

தருமமே ஒரு வடிவெடுத்து வந்தது போன்ற தோற்றம் உடையவர் என்று, கம்பன், தசரதன், இராமன், பரதன், கோசலை முதலிய எல்லாப் பாத்திரங்களையுமே உருவகித்திருப்பதைக் காப்பியப் போக்கில் நம்மால் காணமுடிகிறது. கம்பன்படைத்த பாத்திரங்களின்தனிச்சிறப்பே இதுதான் எனலாம். சுமித்திரையைக் குகன் ''அன்பின் நிறைந்தாள்'' என்கிறான்.

Koviloor Digital Library

காரணம் அவள் இராமன்பால் உள்ள அன்பால் அவன் பிரிவைக் குறித்துக் கலங்கிக் கண்களில் இன்னும் நீர் சொரிய நின்றாள். அன்பின் வெளிப்பாடுதானே கண்ணில் நிறையும் நீர்? அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்? ''நெறிதிறம்பாதன்மெய்யை நிற்பது ஆக்கி இறந்தான்'' என்ற சொற்றொடர் மகிழ்ந்து போற்றத்தக்கது. தனது உயிரைக் கொடுத்து, வாய்மையை நிலைநிறுத்தினான் என்பது தசரதனின் சிறப்பைக் குறித்ததாகும். ''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நீறீஇத் தமக்கு இறந்தனரே'' என்பது புறநானூறு. யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன் என்பது இராமபிரானின் அவதார உண்மையைப் புலப்படுத்தக் குறித்ததாகும். கோசலையை எவ்வாறு சிறப்பித்துப் பெரியாள் என்று கூறினானோ அதைப் போலவே சுமித்திரையையும் பெரியாள் என்று சிறப்பித்தது கூர்ந்து நோக்கத்தக்கது.

68. கைகேயி பற்றிக் குகன் வினவுதல்

சுடும் மயானத்திடை தன்துணைஏகத்
தோன்றல் துயர்க் கடலின் ஏகக்
கடுமை ஆர் கானகத்துக் கருணை ஆர்கலிஏக
கழல்கால் மாயன்
நெடுமையால் அன்று அளந்த உலகெல்லாம்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை, ''யார்இவர்
என்று உரை'' என்ன, குரிசில் கூறும். (2468)

(சுடுதல்-எரித்தல்; மயானம்-சுடுகாடு; துணை-கணவன்; தோன்றல்-புதல்வன்; மாயன்-திருமால்; ஆர்கலி-கடல்; அளத்தல்-வரையறை செய்து பெறுதல்; நெடுமை-திரிவிக்கிரம உருவம்)

பிணங்களைச் சுட்டெரிக்கின்ற சுடுகாட்டிற்குத் தனது கணவனாகிய தசரதனை அனுப்பியவளும், தனது புதல்வனான பரதனை, மீளாத துயரக் கடலுள்ஆழ்த்தியவளும், கொடுமையானகானகத்தில் கருணைக்கடலான இராமபிரானைப் புகுத்தியவளும், வீரக்கழல்அணிந்த பாதங்களையுடைய திருமால் முன்பு தன் திரிவிக்கிரம அவதாரத்தால் இந்த உலகங்களை எல்லாம் அளந்து எடுத்துக் கொண்டதுபோல, தான் இருந்த இடத்திலிருந்தே தனது மனத்தில் நினைத்த வஞ்சக எண்ணங்களால் இப்பூமியை அளந்து எடுத்துக் கொள்ள எண்ணியவளுமான கைகேயியைப் பார்த்து குகன், ''இவர் யார் என்று எனக்குக் கூறுக!'' என்று கேட்க, ஆடவரிற் சிறந்தோனான பரதன் கூறத் தொடங்கினான்.

கைகேயியின் வரத்தின் விளைவுகளை ஒரு பாடல் முழுவதிலும் விளக்குகிறான் கவிஞன். அவள் பெற்ற வரத்தால் அவளது கணவன் சுடுகாட்டிற்குச் செல்ல வேண்டியதாயிற்று; அவ்ளது அன்புப் புதல்வன் பரதன் துயரக் கடலில் மூழ்க வேண்டியதாயிற்று; கருணைக் கடலான

Koviloor Digital Library

இராபிரானோ கடுமையான கானகத்துள் செல்ல வேண்டியதாயிற்று. அவளுடைய உள்நோக்கம் என்ன? தன்மகன் பரதன் இப்பூமி முழுவதும் தனியே அரசாட்சி செய்ய வேண்டும் என்பதுதானே? இதே செயலைத்தானே அன்று திருமால் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொள்ள வேண்டுமென்று தானே மாபலியிடம் மூன்றடி மண் வேண்டும் என்று கேட்டார்? கவிஞன் திருமாலின் செயலைக் கைகேயியின் செயலுக்கு ஒப்பிடுகிறான். என்றாலும் திருமால் நெறி வழுவாமல், தன்இடம் விட்டுப் பெயர்ந்து சென்று, தனது இரண்டே பாதங்களால் உலகளந்தான். ஆனால் கைகேயி அளக்க நினைத்தாள் நெறிதவறிய முறையால்; தான் இருந்த இடத்தில் இருந்தே; தனது இரண்டு கொடிய வரங்களால்; உலகம் முழுதும் இதன் விளைவு எப்படி இருந்தது? திருமால் உலகளந்ததால் மாபலி மடிந்தான். அதனால் மூவுலகமும் மகிழ்வுற்றன; ஆனால் கைகேயி உலகளக்க எண்ணியதால் தசரதன் உயிர் துறந்தான். மூவுலக மக்களும் துயருற்றனர். தன் புதல்வன் துயர்க்கடலுள் அழுந்த நேர்ந்தது. எல்லோர்க்கும் தெய்வமாகிய இராமபிரான் காடேக நேர்ந்தது. காட்டின் கொடுமையைப் பெரிய திருமடல் வரிகளில் பாருங்கள். ''கல் நிறைந்து, தீய்ந்து, கழை உடைந்து, கால் சுழன்று, பின்னும் திரைவயிற்றுப் பேயே திரிந்து உலாவக் கொன்னவிலும் வெங்கானம்'' என்பது பெரிய திருமடல். காட்டிற்குள்ளே கருணையம் கடல் கருணை ஆர்கலி சென்றது என்று கூறியது ஓர் நயம். பின்னும் யுத்த காண்டத்தில் ''கருணைஅம் கடல் துயின்றது கருங்கடல் நோக்கி'' என்பார் கவிஞர். கைகேயியின் கொடுமையின் உச்ச நிலையைக் குறிக்கும் கவிஞனின் கூற்று இப்பாடல்.

69. கைகேயியை அறிமுகப் படுத்துதல்

''கூடர்எலாம் படைத்தாளை, பழிவளர்க்கும்
செவிலியை, தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய
உடரெலாம் உயிரிலா எனத் தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர்இலா முகத்தாளை, அறிந்திலையேல்
இந்நின்றாள் என்னை ஈன்றாள்'' (2469)

(படர்-துன்பம்; படைத்தல்-தோற்றுவித்தல்; பாழ்த்த-பாழ்பட்ட / பயன்இல்லாத; பாவிக்குடர்-தீயவயிறு; பாரம்-சுமை; பழி-நிந்தை / இகழ்ச்சி; இடர்-துன்பம்; செவிலி-வளர்ப்புத்தாய்)

துன்பங்கள் எல்லாவற்றையும் தோற்றுவித்தவள்; உலகத்தார் இகழ்ந்து பேசுகின்ற பழிச் சொற்களை வளர்க்கின்ற வளர்ப்புத் தாய் போன்றவள், தன்னுடைய பாழ்பட்ட தீயவயிற்றுக்குள்ளே என்னைப் பலகாலம் சுமந்தவள், அந்த உயிர்ச் சுமை சிறிது சிறிதாகக் குறைந்து மெலிய, உடல்

எல்லாம் உயிரே இல்லை போலும் என்று பார்ப்பவர்கள் கூறும் வண்ணம் இருப்பவள். இவ்வுலகத்தில் இவள் ஒருத்திதான் இராமன் பிரிவால் துன்பம் இல்லாத முகத்தை உடையவள். இவளைக் கண்ட மாத்திரத்திலேயே உன்னால் தெரிந்து கொள்ள முடியவில்லையா? இங்கு இவ்வாறு நிற்கின்ற இவள் தான் என்னைப் பெற்றெடுத்த தாய் கைகேயி'' என்று கூறி முடிக்கின்றான்.

படரெலாம் என்பது பலவகைத் துன்பங்களையும் உள்ளடக்கியது. துன்பத்தைப் பெற்றெடுத்தவள் மட்டுமல்ல; பழியையும் வளர்க்கின்ற செவிலித்தாய் என்றும் தன் தாயைப் பரதன் குகனுக்கு அறிமுகப் படுத்துகின்றான். இவளுடைய வயிற்றிலேதான் நான் பன்னிரண்டு மாதம் தங்கியிருந்தேன் என்பதை ''நெடுங்காலம் கிடந்தேற்கும்'' என்கிறான். மற்றவர்கள் அனைவரும் தசரதன் இறப்பாலும், இராமன் பிரிவாலும், வாடிய முகத்துடன் இருக்க, இவள் ஒருத்தி மட்டும்தான் துன்பமே வெளிக்காட்டாத முகத்துடன் இருக்கிறாள் என்றும் தன் தாயை இகழ்ந்து குகனுக்கு அறிமுகப்படுத்துகிறான். பரதன் கைகேயியின் வயிற்றில் பன்னிரண்டு மாதம் கருவில் இருந்தான் என்று வான்மீகமும் கூறும். ''முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாள் சுமந்து'' என்பார் பட்டினத்தார். பரதன் தன் தாயைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களையெல்லாம் இப்பாடலில் குகனுக்குத் தெரிவிப்பதன் மூலம் கற்போருக்கும் கூறியிருக்கிறான்.

70. பரதன் கங்கையைக் கடத்தல்

என்னக் கேட்டு, அவ்விரக்கம் இலாளையும்
தன் நற்கையின் வணங்கினன் தாய்என;
அன்னப்பேடை சிறை இலதாய்க் கரை
துன்னிற்று என்னவும், வந்தது தோணியே. (2470)

(சிறை-சிறகு / இறக்கை; பேடை-பெண்; துன்னிற்று-சேர்ந்தது; தோணி-நாவாய் / படகு)

இவ்வாறு பரதன் சொன்னவற்றைக் கேட்டு, அந்த இரக்கமில்லாத கைகேயியையும், தன் இருகரங்களையும் கூப்பித் தன் தாயை வணங்குவது போல வணங்கினான் குகன். இந்நிலையில் அவர்கள் ஏறி வந்த ஓடம், ஒரு சிறகு இல்லாத அன்னப் பறவையைப் போல மிதந்து வந்து கரையை அடைந்தது.

கைகேயிதான் தசரதன் இறப்புக்கும், இராமன் பிரிவிற்கும், உலகத்தார் துன்பத்திற்கும் காரணம். எனவே அவளை இரக்கமிலாதாள் என்றான் பரதன். என்றாலும் அவளைத் தாய் எனக் கருதித் தன் இருகரம் கூப்பித் தொழுதான் குகன் காரணம் கைகேயி இரக்கமில்லாது வரம் கேட்டதால் தானே இராமன் கானகம் புகமுடிந்தது, அங்கே குகனைச் சந்திக்க முடிந்தது, குகன் இராமனுக்குத் தம்பியாக முடிந்தது? எனவே அவள் குகனுக்கும் தாய்

Koviloor Digital Library

தானே? இராமபிரானுக்குத் தொண்டு செய்ய விழைந்ததாலும், எப்பொழுதும் எல்லோருக்கும் நன்மையே செய்வதனாலும் குகனின் கைகள் நற்கைகள் எனப்பட்டன. பொதுவாகத் தோணியின் செலவுக்கு அன்னப் பேடையின் செலவை உவமிப்பது கவிமரபு. சிறகில்லாத அன்னப்பறவை எப்படி நீந்தி வருமோ அதுபோலத் தோணியும் அசைவின்றி வந்து சேர்ந்தது என்பதாம்.

71. தாயர் சிவிகையிலும் பரதன் நடந்தும் செல்லுதல்

இழிந்த தாயர் சிவிகையின் ஏற, தான்
பொழிந்த கண்ணின் புதுப்புனல் போயினான்;
ஒழிந்திலன் குகனும், உடன் ஏகினான்;
கழிந்தனன் பலகாவதம் காலினே. (2471)

(இழிந்த-இறங்கிய; சிவிகை-பல்லக்கு; காவதம்-காதம் / 16 கிலோ மீட்டர் ஒரு காதம்; ஒழிதல்-நீங்குதல் / பிரிதல்; கழித்தல்-கடத்தல்)

ஓடத்தை விட்டு இறங்கிய தாயர் மூவரும் பல்லக்கில் ஏறிச் சென்றனர். ஆனால் பரதன் மட்டும் கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கிக் கொண்டே பல காதங்கள் கால்களினால் நடந்தே சென்றான்; அவனை விட்டு விலகாமல், குகனும் அவன் உடனே தொடர்ந்து சென்றான்.

புதுப்புனல் என்ற சொல்லாட்சி முன்பும் கையாளப்பட்டிருப்பதை நோக்குக. ஒரு காதம் என்பது இப்பொழுது 16 கிலோ மீட்டர் நீளத்தைக் குறிக்கும். கங்கை வெள்ளத்தைக் கடந்தவன் கண்ணீர் வெள்ளத்தில் போனான் என்றது ஒரு நயம். கண்ணீர் வெள்ளம் பெருக்கியது இராமன் பிரிவாற்றாமையால் என்க.

72. பரதனைப் பரத்துவாச முனிவன் எதிர் கொள்ளுதல்

பரத்தின் நீங்கும் பரத்துவன் என்னும் பேர்
வரத்தின் மிக்கு உயர் மாதவன் வைகுஇடம்
அருத்திகூர அணுகினன்; ஆண்டு அவன்
விருத்தி வேதியரோடு எதிர் மேவினான். (2472)

(பரம்-பாரம் / சுமை / வினைச் சுமை; அருத்தி-ஆசை; கூர-மிக; விருத்தி-அறுதொழில்; வரம்-தெய்வத்தால் பெறும் பேறு; விருத்தர்-முதியோர்; வேதியர்-அந்தணர்)

நல்வினை, தீவினை ஆகிய இருவினைச்சுமைகளிலிருந்தும் விடுபட்ட பரத்துவாசன் என்ற பெயர் கொண்ட, வரத்தால் மிக உயர்ந்த பெருந் தவசியானவன் வசிக்கின்ற இடமாகிய ஆசிரமத்திற்கு மிகுந்த விருப்பத் துடன் பரதன் சென்றான். அப்பொழுது அந்தப் பரத்துவாச முனிவனும் அறுதொழிலாளரான முதிர்ந்த வேதம் கற்று உணர்ந்த அந்தணர்களோடும் கூடி எதிர் வந்து பரதனை வரவேற்றான்.

Koviloor Digital Library

முன்பு இராமன் சென்ற போதும் அவன் பரத்துவாச முனிவன் தங்கியிருந்த இடம் சென்றுதான் சித்திர கூட மலை சென்றான் என்பதைப் பரதன் அறிவான். ஆகையால் இப்பொழுது பரதனும் அம்முனிவர் ஆசிரமம் சென்று முனிவனைக்காண மிகுந்த ஆசை கொண்டான். எனவே அங்கு சென்றான் என்பதாம். விருத்தி என்பது பொதுவாகத் தொழிலைக் குறிக்கும். இங்கே விருத்தி வேதியர் என்றதனால் அறுதொழில் இயற்றும் வேதியர் அந்தணர்களைக் குறித்தது என்க. அறுதொழில்கள். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவாம். முனிவனும் பரதன் வரவை அறிவான். ஆதலால் அவனை எதிர் கொண்டான் என்க.

கங்கை காண் படலம் நிறைவுற்றது.

Koviloor Digital Library

13. திருவடி சூட்டு படலம் [142 பாடல்கள்]

இராமபிரானை அழைத்து வருவதற்காகப் பரிவாரங்களோடும், நகரத்தாருடனும், மூன்று தாயர்களுடனும் சித்திர கூடம் நோக்கிச் சென்ற பரதன் பரத்துவாச முனிவன் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு இராமனைச் சந்தித்து அவனது திருவடி நிலைகளை இரங்கிப் பெற்றுத் தன் தலையில் சூடி நந்திக் கிராமத்திலிருந்து அரசாட்சி நடத்தி வந்த பகுதி என இப்படலத்தின் பொருள் விரியும். இது 142 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''கிளை கண்டு நீங்கு படலம்'' எனவும் காணப்படுகிறது. சில சுவடிகளில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற்பகுதி ''பரத்துவன் இருக்கை மேவு படலம்'' எனவும், இரண்டாம் பகுதி ''பரதன் காட்சி பெற்று மீள் படலம்'' எனவும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படலத்துள், பரத்துவாசன் பரதன் வருகை பற்றி வினவுதல், பரத்துவாசனும் மற்ற முனிவர்களும் மனம் குளிர்ந்து பரதனையும், படையினரையும், மற்ற அனைவரையும் அழைத்து விருந்து அளித்தல், பரதன் காய் கனிகள் உண்டு நிலத்தில் படுத்திருத்தல், மறு நாள் பகலில் பாலை நிலம் அடைதல், பின்னர் சித்திர கூடத்தைச் சேர்தல்; இந்நிலையில் இலக்குவன் குன்றின் மீதேறி, பரதன் படையுடன் வருவதைக் கண்டு சீற்றமுற்று இராமனிடம் தெரிவித்தல், இலக்குவன் போர்க்கோலம் பூண்டதைக் கண்ணுற்ற இராமன் இலக்குவனுக்குப் பரதனின் பண்புகளை விளக்கி அவன் சினம் தணித்தல், பரதன் சேனையைப் புறத்தே நிறுத்தி, சத்துருக்கனனோடு இராமனை அணுகுதல், பரதனது தவக்கோலத்தை இராமன் இலக்குவனுக்குக் காட்டியதும் இலக்குவன் வருத்தமுறுதல், பரதன் இராமனைத் தொழுததும், இராமன் பரதனைத் தழுவிக் கொள்ளுதல், ''தந்தை வலியனோ'' என இராமன் கேட்க, பரதன் ''அவன் மேலிடத்தான்'' எனக் கூறுதல்; தந்தையின் மரணம் கேட்டு இராமன் உள்ளம் கலங்குதல், சோர்ந்து புலம்புதல், தம்பியரும் வசிட்டனும் தேற்றுதல், நீர்க்கடன் செய்யுமாறு வசிட்டன் வேண்டுதலும் அவ்வாறே இராமன் செய்தல், சாலையில் தனித்து இருந்த சீதையை பரதன் வணங்குதல், இராமன் அவனைத் தழுவி எடுத்துச் சீதைக்குத் தசரதன் மரணம் பற்றித் தெரிவித்தல், சீதையின் துயரம், தாய்மாரோடும் சான்றோர்களுடனும் சுமந்திரன் இராமனிடம் வருதல், யாவரும் வருந்துதல், மறுநாள் இராமன் பரதனின் தவக்கோலத்திற்கான காரணம் கேட்டல், பரதன் விளக்கம் கூறுதல், இராமன் மறுத்தல், பரதன்

Koviloor Digital Library

இராமனிடம் ''அரசு நின்னதே'' என இறுதியில் கூறி, அங்ஙனமாயின் ''யான்தர, நீ முடி சூடு'' என இராமன் கூறுதல், வசிட்டன் விளக்கம், பரதன் இராமனுடன் தானும் காட்டினில் வாழப் போவதாக உறுதியாகக் கூறுதல், தேவர்கள் தோன்றி இராமன் காட்டில் வாழ்வதும் பரதன் நாட்டில் அரசாள்வதுமே தக்கது எனக் கட்டளை இடுதல், பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் நகர் வந்து மணிமுடி ஏற்க வேண்டும் என்ற உறுதியினை இராமனிடமிருந்து பரதன் பெறுதல், அவ்வாறு இல்லையாயின் தான் உடனே தீக்குளிப்பேன் என்று தன் கருத்தையும் தெரிவித்தல், இராமன் இணங்குதல், பரதன் இராமனது திருவடி நிலைகளை வேண்டிப்பெற்று, அயோத்தி நகர் புகாது நந்தியம்பதியில் தங்கிப் பாதுகைகளுக்கு முடிசூட்டி அரசாளுதல், இராமன் முதலிய மூவரும் தென் திசை நோக்கிச் செல்லுதல், ஆகிய செய்திகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

1. முனிவன் ஆசி கூறுதல்

வந்த மாதவத்தோனை அம்மைந்தனும்
தந்தையாம் எனத் தாழ்ந்து வணங்கினான்;
இந்து மோலி அன்னானும், இரங்கினான்,
அந்தம்இல் நலத்து ஆசிகள் கூறினான். (2473)

(தாழ்ந்து-கீழே விழுந்து / சாஷ்டாங்கமாக; இந்து-சந்திரன்; மோலி-தலையணி / சடைமுடி / மௌலி; இந்து மோலி-சிவபெருமான்; இரங்குதல்-பரிவு கொள்ளுதல் / அன்பு காட்டுதல்; அந்தம்இல்-அழிவில்லாத / முடிவிலாத; ஆசி-வாழ்த்து மொழிகள்)

தன்னை எதிர்கொள்ள வந்த உயர்ந்த தவசியான பரத்துவாச முனிவனை, அப்பரதனும் தன் தந்தை போலக் கருதித் தரையில் விழுந்து தொழுதான்; சந்திரனைத் தலையில் சூடியிருக்கும் சிவபெருமானைப் போன்ற அம்முனிவனும் பரதனிடத்தில் அன்பு கொண்டு பரிவு காட்டினான். அழியாத பல நலன்களைத்தரவல்ல ஆசிமொழிகளைக்கூறி அவனைவாழ்த்தினான். பரத்துவாச முனிவனைச் சிவபெருமானுக்கு ஒப்பிட்டமை சடாமுடி தரித்திருத்தலாலும், தவ ஒழுக்கத்தாலும், காமனை வென்றதாலும் என்க.

2. தவக்கோலத்தின் காரணம் வினவுதல்

''எடுத்த மாமுடி சூடி, நின்பால் இயைந்து
அடுத்த பேர்அரசு ஆண்டிலை, ஐய! நீ,
முடித்த வார் சடைக் கற்றையை, மூசுதூசு
உடுத்து நண்ணுதற்கு உற்றளது யாது?'' என்றான். (2474)

Koviloor Digital Library

(அடுத்த-வந்தடைந்த; எடுத்த-ஓங்கிய; வார்-நீண்ட; மூசு-மொய்த்த / செறிந்த; தூசு-அழுக்கு / மரவுரி)

முனிவன் பரதனை நோக்கி, ''ஐயனே! உன்னிடம் உன் தாயால் தானாகவே தரப்பட்ட கோசல நாட்டின் அரசாட்சியை, ஓங்கிய பெரிய முடியினைச் சூட்டிக் கொண்டு நடத்தாமல், இப்பொழுது, கட்டி முடிக்கப்பட்ட நீண்ட முடிக்கற்றையையும், முனிவர்களுக்கே உரிய அழுக்கடைந்த மரிவுரியையும் உடுத்துக் கொண்டு கானகம் வந்து சேர்வதற்கு உரிய காரணம் என்ன?'' என்று கேட்டான். அரசாட்சியைத் தேடி பரதன் போக வில்லை என்பதையும், அது அவனுக்குத் தானாகவே வந்து சேர்ந்தது என்பதையும் குறிக்க ''நின்பால் இயைந்து அடுத்த பேரரசு'' என்றார். ''வற்கலையின் உடையானை மாசடைந்த மெய்யானை'' என்று முன்பு கூறியதையே இங்க ''மூசுதூசு உடுத்து'' என்றார் என்க.

3. பரதன் காரணம் கூறுதல்

சினக்கடும் திறல் சீற்ற வெம் தீயினான்
மனக் கடுப்பினன், மாதவத்து ஓங்கலை
''எனக்கு அடுப்பது இயம்பிலை நீ என்றான்
உனக்கு அடுப்பது அன்றால் உரவோய்!'' எனா. (2475)

(கடுத்தல்-கொதித்தல்; ஓங்கல்-மலை; உரம்-அறிவு; அடுப்பது-தகுதியானது; திறல்-வலிமை)

பரத்துவாசன் அவ்வாறு கேட்கவும், சினமென்னும் வலிமைமிக்க சீற்றமும், கொடிய நெருப்புப் போன்ற அனல் கொதிப்பும் உடைய பரதன், தவத்தில் பெரிய மலையைப் போன்று உறுதியான முனிவனை நோக்கி, ''பேரறிவிற் சிறந்தவரே! எனக்கு உரியனவற்றைத் தாங்கள் கூறவில்லை; இவ்வாறு கூறுவது உங்களுக்குத் தக்கதன்று'' என்றான்.

சினம் என்பது மனத்துக்குள் ஒளிந்திருக்கும் கோபம்; சீற்றம் என்பது மனத்தைவிட்டு வெளிவந்து காட்டும் கோபம். ''இனத்தாற்றி எண்ணாத வேந்தன், சினத்தாற்றிச் சீறின் சிறுகும் திரு'' என்பது குறள் 568. பரத்துவாசனை மாதவத்தின் ஓங்கல் என்றது அவர் பெரிய தவக்குன்று என்பதைக் குறிக்க. ''மேருவரையின் மேம்பட்ட தவத்தான்'' என்பது பெரியபுராணம். தவத்திற் சிறந்தவனாகையால் நியாய அநியாயங்களைச் சீர்தூக்கிப் பாராது கூறியதனால் ''உனக்கு அடுப்பது அன்றால்'' என்றான் என்க. உரம் என்ற சொல் அறிவு என்ற பொருளில் கையாளப்பட்டிருக் கிறது. ''உரமென்னும் தோட்டியான்'' என்பதும், ''உரம் ஒருவர்க்குள்ள வெறுக்கை'' என்பதும் குறள்.

4. மறையின் கேள்வற்கு மன்இளம் தோன்றல், பின்
''முறையின் நீங்கி முது நிலம் கொள்கிலேன்;
இறைவன் கொள்கிலனாம் எனின், யாண்டு எலாம்
உறைவன் கானத்து ஒருங்கு உடனே'' என்றான். (2476)

Koviloor Digital Library

(மறை-வேதங்கள்; கேள்வன்-நாயகன் / தலைவன்; மன்-பொருந்திய /பெருமைமிக்க; இளம்தோன்றல்-தம்பி / இளவல்; முதுநிலம்-பழமையான நாடு; இறைவன்-தலைவன் / இராமன்; மறையின் கேள்வன்-வேத நாயகன்)

வேத நாயகனாகிய இராமபிரானுக்குப் பின் பிறந்த நிலைபெற்ற பெருமை பொருந்திய பரதன், பரத்துவாச முனிவனை நோக்கி, ''மூத்தவனுக்கே உரித்து அரசுரிமை என்ற நியதியினின்றும் மாறுபட்டு இந்தத் தொன்மையான கோசல நாட்டின் அரசுரிமையை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். இராமனைக் கண்டு அவனே அரசுக்கு உரிமை உடையவன் என்றும், அவனே அரசாள வேண்டும் என்றும் வற்புறுத்து வேன். என்தலைவன்அதற்கு இணங்கமறுத்தால்அவன்கழிக்கவேண்டிய பதினான்கு ஆண்டுகாலம் முழுவதும் நானும்அவனுடன் கூடவே காட்டில் தங்கியிருப்பேன்'' என்றான். மறையின் கேள்வன் திருமால். இங்கே திருமாலின் அம்சமான இராமபிரானைக் குறித்தது. முன்பும் வேதநாயகன் என்று கூறியதை நோக்குக. ஒருங்கு உறைவேன் என்றோ, உடன் உறைவேன் என்றோ சொல்லி முடித்திருக்கலாம் இரண்டு சொற்களையும் பெய்து ஒருங்கு உடன் உறைவேன் என்றது அவனது உறுதியைக் குறிப்பதற்கு என்க.

5. முனிவர்கள் மகிழ்ச்சி

உரைத்த வாசகம் கேட்டலும், உள்எழுந்து
இரைத்த காதல் இரும்தவத்தோர்க்கு எலாம்
குரைத்த மேனியோடு உள்ளம் குளிர்ந்தவால்;
அரைத்த சாந்து கொடு அப்பியது என்னவே. (2477)

(உள்-மனம்; இரும்-பெரிய; சாந்து-சந்தனம்; குரைத்தல்-பூரித்தல்; இரைத்த-பெருகிய)

அவ்வாறு பரதன் கூறியவற்றைக் கேட்டதும், இராமன்பால் உள்ளத்தினின்று பொங்கிப் பெருகி எழுந்த அன்பினால், பெருந்தவமுடைய முனிவர்கள், பரத்துவாசர் ஆகிய எல்லோருக்கும் சந்தனத்தை அரைத்து உடம்பெல்லாம் பூசிக் கொண்டதுபோல உடலும் உள்ளமும் பூரிப்பால் குளிர்ந்து போயின.

முன்பே இராமன்பால் தீராக்காதல் கொண்ட பரத்துவாசனும் மற்ற முனிவர்களும், பரதன் இவ்வாறு சொல்லக் கேட்டவுடன் உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்தனர். எனவே உடலும் குளிர்ந்து போயிற்று என்பதாம். உள்ளம் மகிழ்ச்சியில் திளைக்கும்போது உடல் பூரித்துப் போவது இயற்கை. சந்தனம் புறத்தை மட்டுமே குளிர்விக்கும். ஆனால் பரதனின் சொற்கள்முனிவர்கள்உடல், உள்ளம் இரண்டையும் குளிர்வித்தது என்றது ஒரு நயம்.

Koviloor Digital Library

6. சூரியன் மறைதல்

அன்னகாதல் அருந்தவத்தவர், ''ஆண்தகை!
நின்னை ஒப்பவர் யார் உளர் நீ அலால்?''
என்ன வாழ்த்திடும் ஏல்வை, இரவியும்
பொன்னின் மேருவில் போய் மறைந்திட்டதே. (2478)

(ஆண்தகை-ஆண்களிற் சிறந்தவன்; ஏல்வை-பொழுது; இரவி-சூரியன்)

அத்தகைய பேரன்பு பூண்ட அரிய தவத்தை உடைய முனிவர்கள் பரதனை நோக்கி, ''ஆண்களிற் சிறந்தவனே! உன்னை ஒத்தவர்கள் வேறு யார் உளர்? நீயே உனக்கு நிகர்'' என்று வாழ்த்திடும் போது, சூரியனும் பொன் மயமான பேருமலைக்கு அப்பால் போய் மறைந்தது.

7. பரத்துவாசன் அனைவர்க்கும் விருந்தளித்தல்

ஆயகாலையில் ஐயனைக் கொண்டு தன்
தூயசாலை குறுகினன் தோம்இலான்;
''மேய சேனைக்கு அமைப்பென் விருந்து'' எனாத்
தீயின்ஆவுதி செங்கையின் ஒக்கினான். (2479)

(தோம்-குற்றம்; சாலை-பர்ணசாலை; ஐயன்-பரதன்; ஒக்குதல்-கொடுத்தல் / செய்து அமைத்தல்; குறுகுதல்-அடைதல்; ஆவுதி என்பது ஆஹுதி என்ற வடசொல்லின் தமிழாக்கம்)

அந்தச் சமயத்தில், பரதனை அழைத்துக் கொண்டு, குற்றமில்லாத அப்பரத்துவாச முனிவன் தனது தூய்மையான தவச்சாலையை அடைந்தான்; பரதனோடு இங்கு வந்திருக்கின்ற சேனைகளுக்கெல்லாம் ஒரு நல்ல விருந்து கொடுப்பேன் என்று கருதி, தனது சிவந்த கைகளினால் ஓமத்தீயில் இடுவதற்கான ஆகுதிகளான நெய் முதலியவற்றைக் கொடுத்தான்.

முன்பு வசிட்ட முனிவன் கௌசிகனுக்குச் செய்ததுபோல, இப்பொழுது பரத்து வாசனும் தனது தவ ஆற்றலால் பரதனுடன் வந்த சேனைகளுக்கு விருந்து அளிக்க எண்ணினான் என்க. மேய சேனை என்பது உடன் வந்த அனைவரையும் குறிக்கும் என்பதாம். இங்குதான் பரதன் தன் மூன்று தாயரையும் பரத்துவாசனுக்கு அறிமுகப்படுத்தியதாக வான்மீகம் கூறும்.

8. துறந்த செல்வன் நினையத் துறக்கம்தான்
பறந்து வந்து படிந்தது; பல்சனர்
பிறந்து வேறு ஓர் உலகு பெற்றார் என
மறந்து வைகினர் முன்னைத் தம் வாழ்வு எலாம். (2480)

(படிந்தது-தங்கியது / அமைந்தது; சனர்-மக்கள்)

Koviloor Digital Library

அகப்புறப்பற்றுக்களையெல்லாம் துறந்த தவச்செல்வனாகிய பரத்துவாசன் அவ்வாறு நினைத்த மாத்திரத்தில், சுவர்க்கலோகமே பறந்து வந்து அவனுடைய ஆசிரமத்தில் அமைந்தது. பரதனுடன் கூட வந்த பல வகைப்பட்ட மக்கள், தாம் மறுபிறவி பெற்று வேறு ஓர் உலகத்தில் வந்து சேர்ந்தது போலக் கருதித் தங்களுடைய பழைய அயோத்தி நகர வாழ்வெல்லாம் மறந்தும், வழிநடையில் ஏற்பட்ட சோர்வு அழிந்தும் மகிழ்ச்சியுடன் தங்கியிருந்தனர்.

யாவற்றையும் துறந்து தவத்தினால் மிக்க ஆற்றல் பெற்றவன் என்பதால் பரத்துவாசன் துறந்த செல்வன் எனப்பட்டான்.

9. நந்தல்இல் அறம் நந்தினராம் என,
அந்தரத்தின் அரம்பையர், அன்பினர்
வந்து, உவந்து, எதிர் ஏற்றனர் மைந்தரை,
இந்துவின் சுடர் கோயில் கொண்டு ஏகினார். (2481)

(நந்தல்இல்-கெடுதல் இல்லாத; நந்தினர்-செழிக்கப் பெற்றவர்கள்; அந்தரம்-துறக்கம்; அரம்பையர்-தேவமாதர்கள்; இந்து-சந்திரன்; சுடர்-ஒளி; கோயில்-மாளிகை; நந்து-வளர்ச்சி /கேடு)

''கெடுதல் இல்லாத தவத்தின் பயனால் செழிக்கப் பெற்றவர்கள் இம்மக்கள்'' என்று தேவலோகத்துத் தேவமாதர்கள் அவர்களிடம் அன்புடையவராய் ஒவ்வொருவரும் எதிரிலும் தனித்தனியேயும் வந்து, மகிழ்ச்சியுடன் அவர்களைச் சந்திரனின் ஒளிபோன்று விளங்குகின்ற தமது மாளிகைக்குள் அழைத்துக் கொண்டு சென்றனர்.

நந்து என்ற சொல் குறைதல், வளர்தல் என்ற இரு மாறுபட்ட பொருள்களைக் கொண்ட சொல் என்பது நோக்கத் தக்கது. பொதுவாக மக்கள் இம்மையில் நல்வினை செய்தால் மறுமையில் துறக்கம் அடைவர் என்பது நியதி. ஆனால் பரதனுடன் வந்தவர்கள் அனைவரும் இம்மையிலேயே சுவர்க்கம் அடைந்தனர் என்பதைக் குறிக்க ''நந்தல்இல் அறம் நந்தினராம் என'' என்றார்.

10. நானம் நன்கு உரைத்தார்; நளிர் வானிடை
ஆனகங்கை அரும்புனல் ஆட்டினார்;
தான மாமணிக் கற்பகம் தாங்கிய
ஊனம்இல் மலர் ஆடை உடுத்தினார். (2482)

(நானம்-வாசனைப் பொடிகள் / கத்தூரி / சுண்ணம்; உரைத்தல்-தேய்த்தல் / அப்புதல்; கானம்-நறுமணம்; அணி-அழகிய; ஊனம்இல்-குற்றமற்ற; நளிர்-குளிர்ந்த; தானம்-வண்மைக் குணம்)

மேலும் தேவலோக மாதர்கள் அம்மைந்தர்களுக்கு கத்தூரி கலந்த வாசனைப் பொடிகளை உடலில் தேய்த்துவிட்டனர்; ஆகாய கங்கையின் குளிர்ந்த, பெறுதற்கரிய நீரினால் அவர்களைக் குளிப்பாட்டினர்;

Koviloor Digital Library

வண்மைக் குணம் கொண்ட பெரிய அழகிய கற்பகம் தாங்கிய குற்றமற்ற கற்பக மலர் போலும் மெல்லிய ஆடைகளை உடுத்துவித்தனர்.

11. கொம்பின் நின்று நுடங்குறு கொள்கையார்
செம்பொனின் கலராசி திருத்தினார்;
அம்பரத்தின் அரம்பையர் அன்பொடும்
உம்பர்கோன் நுகர் இன் அமிழ்து ஊட்டினார். (2483)

(கொம்பு-பூங்கொடி; நுடங்குதல்-துவள்தல் / ஒசிதல் / வளைதல்; அம்பரம்-வானுலகம்; ராசி-பலவகை; கொள்கை-இயல்பு; ஊட்டுதல்-உண்பித்தல்)

பூங்கொம்பு போன்று வளைந்து நின்று துவளுகின்ற மேனியை உடைய தேவலோகத்துப் பெண்கள், சிவந்த அழகிய பொன்னாலான அணி கலன்களின் தொகுதிகளைத் திருத்தமாக அணிவித்தனர். அவர்களிடம் மிக்க அன்பு கொண்டு, தேவர் தலைவனான இந்திரன் உண்ணும் இனிமையான தேவ அமிழ்தத்தையும் அவர்களுக்கு ஊட்டினர்.

நானம் நன்கு உரைத்து, கங்கை அரும்புனல் ஆட்டி, ஊனமில் மலராடை உடுத்தி, செம்பொனின் கலராசி திருத்தி, உம்பர்கோன் நுகர் இன்னமுது ஊட்டினர் என்று வகைப்படுத்திக் கூறிய நயம் இன்புறத் தக்கது. அம்பரம் என்பது வானத்தைக் குறிக்கும். ''அம்பரம் ஊடு அறுத்து, ஓங்கி உலகளந்த, உம்பர்கோமானே'' என்பது திருப்பாவை.

12. அஞ்சு அடுத்த அமளி, அலத்தகப்
பஞ்சு அடுத்த பரிபுரப் பல்லவம்,
நஞ்சு அடுத்த நயனியர், நவ்வியின்
துஞ்ச, அத்தனை மைந்தரும் துஞ்சினார். (2484)

(அஞ்சு-ஐந்து பொருள்கள்; அடுத்த-உள்வைத்துத் தைத்த; அமளி-படுக்கை; அலத்தகம்-செம்மை / செம்பஞ்சுக் குழம்பு; பரிபுரம்-சிலம்பு; பல்லவம்-தளிர்கள்; அடுத்த-ஒத்த; நயனம்-கண்கள்; நவ்வி-பெண் மான்கள்; துஞ்சுதல்-தூங்குதல்)

செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப் பெற்ற சிலம்பணிந்த, தளிர்போன்ற பாதங்களையும், விஷத்தை ஒத்த கண் நோக்கினையும் உடைய தேவ மகளிர், ஐந்து மெல்லிய பொருள்களால் ஆன படுக்கையில் பெண் மான்களைப் போலப் படுத்திருக்க, பரதன் படையில் வந்த மைந்தர்கள் அனைவரும் தூங்கலானார்கள்.

பொதுவாக மெத்தையில் ஐந்த மிருதுவான மெல்லிய பெருள்களை வைத்துத் தைப்பது வழக்கம். அவை அன்னத்தூவி, இலவம் பஞ்சு, செம்பஞ்சு, மயில்தூவி, வெண்பஞ்சு என்பனவாம். ''உறுதூவி சேக்கை ஓர்ஐந்து'' என்று கலித்தொகை கூறும். ''மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேல்ஏறி'' என்பது திருப்பாவை. இதனையே அழகு, குளிர்ச்சி, மென்மை,

Koviloor Digital Library

மணம், வெண்மை என்பார் பெரியவாச்சான் பிள்ளை. இவ்வைந்து பொருள்களன்றி எட்டுப் பொருள்கள் வைத்தும் படுக்கை அமையும் என்பதை ''ஐந்து மூன்று அடுத்த செல்வத்து அமளி'' என்று சீவகசிந்தாமணி கூறும் பதினைந்து பொருள்கள் கொண்டும் படுக்கைகள் அமையும் என்பதை ''பதினைந்து அமைத்த படை அமை சேக்கை'' என்னும் பெருங்கதையாலும் அறியலாம்.

13. ஏந்து செல்வத்து இமையவராம் எனக்
கூந்தல் தெய்வ மகளிர் கொண்டாடினார்
வேந்தர் ஆதி, சிவிகையின் வீங்கு தோள்
மாந்தர் காறும், வரிசை வழாமலே. (2485)

(ஆதி-முதல்; காறும்-வரை; சிவிகை-பல்லக்கு; வரிசை-முறைமை; ஏந்து-மிக்க; இமையவர்-தேவர்கள்; கொண்டாடுதல்-உபசரித்தல்)

அழகிய நீண்ட கூந்தலையுடைய தேவமகளிர், அப்படையில் வந்த அரசர்கள் முதல், பல்லக்கைத் தூக்கிப் பருத்திருக்கும் தோள்களையுடைய வேலையாட்கள் வரை யாவரையும் அவரவர்களுக்குரிய முறைமை தவறாமல், அவர்கள் எல்லோரும் மிக்க செல்வத்தையுடைய தேவர்களே என்று கருதி அவர்களை நன்கு உபசரித்தனர்.

உபசாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் இல்லாதபடி, கீழோர் மேலோர் என்ற வேறுபாடு இன்றி, எல்லோரையும் ஒக்க உபசரித்தனர் என்பதாம். இதே போன்ற சொற்றொடர் ''சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான்இடை'' என்ற குறள் 37-ல் பயின்று வந்துள்ளமை காணலாம்.

14. மாதர் யாவரும் வானவர் தேவியர்
கோதுஇல் செல்வத்து வைகினர்; கொவ்வை வாய்த்
தீதுஇல் தெய்வ மடந்தையர், சேடியர்
தாதிமார் எனத் தம் பணி கேட்பவே. (2486)

(தீது-குற்றம்; சேடியர்-தோழிகள்; தாதிமார்-பணிப்பெண்கள் / குற்றேவல் மகளிர்; கோது-குற்றம்; செல்வம்-இன்ப வாழ்க்கை)

பரதனது சேனையில் வந்த மகளிர் யாவரும், கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயினையுடைய குற்றமற்ற தேவமகளிர் தமக்குத் தோழியர் போலவும், குற்றேவல் பெண்டிர் போலவும் தாம் இட்ட பணியினைச் செய்யும்படி, இமையவர்களின் தேவி மார்கள்போலக் குற்றமற்ற இன்ப வாழ்க்கையைத் துய்த்திருந்தனர்.

வானவர் தேவியர் தேவர்களின் மனைவிமார்கள்; தெய்வமடந்தையர் வானுலகத்துத் தேவமகளிர்; தலைவியின் ஏவல் கேட்போர் சேடியர்; சேடியரின் ஏவல் கேட்போர் தாதியர் என்க. முன்பாடல்களில் ஆடவர் துய்த்த இன்பங்களை அடுக்கடுக்காகக் கூறிய கவிஞர் இப்பாடலில் மகளிர் துய்த்த இன்பத்தைக் கூறினார்.

Koviloor Digital Library

15. நந்துஅம் நந்த வனங்களில், நாள்மலர்க்
கந்தம் உந்திய கற்பகக் காவில், நின்று
அந்தர் வந்துஉன, அந்தி தன்கைதர
மந்தமந்த, நடந்தது வாடையே. (2487)

(நந்துதல்-தழைத்தல்; அம்-அழகிய; நந்தவனம்-பூந்தோட்டம்; நாள்-புதிய / அன்றலர்ந்த; கந்தம்-நறுமணம்; உந்திய-வீசிய; கா-சோலை; அந்தி-இரவுப்போது; கைதருதல்-கைகொடுத்து உதவுதல்; அந்தர்-குருடர்; மந்தம்-தென்றல் காற்று / மந்த மாருதம்; நடந்தது-விலகிச் சென்றது; வாடை-காற்று / பொதுப் பெயர்; மந்தமந்த-மெல்ல மெல்ல)

செழித்து வளர்ந்திருக்கின்ற பூந்தோட்டங்களிலிருந்தும், அன்றலர்ந்த புதிய மலர்களின் நறுமணம் வீசுகின்ற கற்பகச் சோலைகளிலிருந்தும், இரவுப்போது கைகொடுத்து உதவ குருடர்கள் நடந்துவந்தது போல, தென்றல் காற்று மெல்லமெல்ல முற்பட்டு வர, வாடைக்காற்று விலகிச் சென்றது.

சுவர்க்கலோகத்தில் இன்பம் துய்த்து உறங்குபவர்களுக்கு வாடைக்காற்று இடையூறு தரும் அல்லவா? எனவேதான் அவர்களுக்கு இன்பம் விளைவிப்பதற்காகத் தென்றல் காற்றும் மெல்லமெல்ல வீசியது என்றான். குருடர்கள் பிறர் உதவியுடன் தானே நடக்க இயலும்? அதுபோலத் தென்றலுக்கும் அந்திப்போது உதவிசெய்தது. அந்தி என்பது இரவின்முதல் யாமம். எனவே அவர்கள்சுவர்க்கத்தில் புதிய நந்தவனத்தில் தென்றல் காற்று மேனி தழுவத் துஞ்சினர் என்பதாம். கற்பகம் வேண்டுவார்க்கு வேண்டிய பொருள்களை உண்டாக்கும் ஒரு மரம். தேவலோகத்தில் உள்ளது. கல்பித்தல் என்றால் உண்டாக்குதல் என்று பொருள்.

16. யானைகளின் மகிழ்ச்சி

மான்று, அளிக்குலம் மாமதம் வந்து உணத்
தேன் தளிர்த்த கவளமும், செங்கதிர்
கான்ற நெல்தழைக் கற்றையும், கற்பகம்
ஈன்று அளிக்க, நுகர்ந்தன யானையே. (2488)

(தளிர்த்தல்-கலத்தல்; கவளம்-உணவுத்திரள் / ஒரு வாய் உணவு; கான்ற-ஈன்ற; கற்றை-தொகுதி; அளிகுலம்-வண்டின்கூட்டம்; மான்று-மயங்கி; மால்-மயக்கம்)

தேவருலகத்தில் உள்ள கற்பக மரங்கள், தேன் கலந்த உணவுத் திரளையும், சிவந்த கதிர்களை ஈன்ற நெற்பயிரின் தழைத் தொகுதி களையும் வரவழைத்துக் கொடுக்க, அவற்றை நன்கு உண்ட யானைகள் மதத்தைப் பெருக்கின. அம்மதத்தினைவண்டின்கூட்டங்கள்வந்து உண்டு மயங்கித் திரிந்தன.

Koviloor Digital Library

மான்று என்பது மால் என்ற உரிச் சொல்லின் அடியாகப் பிறந்தது. மால்-மயக்கம்; மான்று-மயங்கி எனப்பொருள்படும். ஆடவரும் மகளிரும் மகிழ்ச்சி உற்றிருந்ததைப் போலவே யானைகளும், வண்டுகளும் அவற்றிற்குரிய உணவை உண்டு மகிழ்ந்திருந்தன என்பது கருத்து. தன் மதநீரை வண்டுகள் உண்ண, தாம் கற்பக மரம் ஈன்றளித்த கவளமும் தழைக்கற்றையும் உண்டு நுகர்ந்தன யானைகள் என்பதாம். பொதுவாக யானைகளுக்கு நெய்கலந்த கவளம் கொடுப்பர். இதுதேவலோகம் ஆதலின் தேன் கலந்த கவளம் கொடுக்கப்பட்டது என்றது ஓர் நயம்.

17. குதிரைகள் புல் உண்ணுதல்

நரகதர்க்கு அறம் நல்கும் நலத்த நீர்
கர கதக்கரி கால் நிமிர்த்து உண்டன;
மரகதத்தின் கொழுந்து என வார்ந்த புல்
குரகதத்தின் குழாங்களும் கொண்டவே. (2489)

(நரகதர்-நரகத்தை அடையக்கூடிய பாவிகள்; நலத்த-நன்மை தரத்தக்க; கரம்-துதிக்கை; கதம்-சினம்; கரி-யானைகள்; கொழுந்து-இளஒளி; வார்ந்த-வளர்ந்திருந்த / நீண்ட; குரகதம்-குதிரைகள்; கொள்ளுதல்-உண்ணுதல்)

நரகத்தையே அடையும்படி விதிக்கப்பட்ட பாவிகளுக்கும் தருமத்தின் பயனாகிய புண்ணியத்தையே தரத்தக்க நன்மை படைத்த ஆகாய கங்கையின் புனித நீரை, துதிக்கையும், சினமும் கொண்ட யானைகள், காலை நிமிர்த்திக் கொண்டிருந்தவாறே பருகின; நல்ல பச்சை நிறமுள்ள இரத்தினத்தின்இளமையானஒளிபோலப் பச்சையாகநீண்டு வளர்ந்திருந்த புல்களை பரதனின் குதிரைப் படைகளின் கூட்டங்கள் தமக்கு உணவாக உட்கொண்டன.

யானைகள் கங்கை நீரைப் பருகக், குதிரைகள் அதன் கரையிலுள்ள பச்சைப் புல்லை மேய்ந்தன என்பது கருத்து. கங்கையின் தீர்த்தச் சிறப்பு முதல் அடியில் குறிக்கப்பெற்றது. நரகம் அடைய வேண்டியவர்கள் கூட எத்தனை பாவங்கள் செய்திருந்தாலும், கங்கையில் ஒருமுறை முழுகி எழுந்தால் அவர்களுக்குப் புண்ணியத்தை நல்கும் இயல்புடையது கங்கை நீர் என்பதாம். யானை உணவு உண்டபின், ஓடுகின்ற கங்கை நீரைக் குடிப்பதற்குத் தம் கால்களை நிமிர்த்தி வைத்துக் கொண்டே குடிக்குமாம். நீரின் மிகுதி கூறப்பட்டது. இளம் பசும் புல்லை மரகதத்திற்கு ஒப்பிடுவது கவிமரபு. ''மணி வார்ந்தன்ன மாக்கொடி அறுகு'' என்பது குறுந்தொகை.

18. பரதன் காயும் கிழங்கும் உண்டு, புழுதியில் துயிலுதல்

இன்னர், இன்னணம் யாவரும், இந்திரன்
துன்னு போகங்கள் துய்த்தனர்; தோன்றல்தான்,
அன்ன காயும் கிழங்கும் உண்டு, அவ்விரா
பொன்னின் மேனி பொடிஉறப் போக்கினான். (2490)

Koviloor Digital Library

(துன்னு-பொருந்திய; போகங்கள்-இன்பங்கள்; துய்த்தல்-நுகர்தல் / அனுபவித்தல்; பொடி-புழுதி; உற-தோய-இன்னனம்-இவ்வாறு)

இவ்வாறு, ஆடவரும், மகளிரும், யானைகளும், குதிரைகளும், இந்திரனுக்கு உரியனவான இன்பங்கள் எல்லாவற்றையும் அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஆனால் பரதன் மட்டும், முன்பு இராமன் இவ்வாசிரமத்தில் உண்டபடி காய்களையும், கிழங்குகளையும் மட்டுமே உணவாக உட்கொண்டு, தனது பொன்மயமான உடல் புழுதியில் தோயும்படித் தரையில் படுத்திருந்து அவ்விரவுப் பொழுதைப் போக்கினான்.

எல்லோரும் இந்திரன் போல் இன்பம் அனுபவிக்கப் பரதன் மட்டும் அவ்வாறு செய்யாது இராமன் எவ்வாறு தவ ஒழுக்கத்தை மேற்கொண்டானோ, அதுபோல் தவ ஒழுக்கத்தினின்றும் சிறிதும் வழுவாது ஒழுகினமையால் அவனைத் தோன்றல் என்றான் கவிஞன்.

வான்மீகத்தில் பரதனும் இந்திரன் போல் இன்பம் துய்த்தான் எனக் கூறப்பட்டிருக்கிறது. அது வான்மீகத்தில் மிகச் சுவையான பகுதி எனவே இங்கு தரப்படுகிறது. ''அங்கே மதுவும் இறைச்சியும் படைக்கப்பட்டன; இரத்தின மயமான மாளிகைகள் அமைக்கப்பட்டன; ஆடலும் பாடலும் நிகழ்த்த நாற்பதினாயிரம் தெய்வப் பெண்கள் வரவழைக்கப்பட்டனர். அலம்புசை, மிஸ்ரகேசி, புண்டரீகை, வாமனை என்னும் நான்கு பெண்களும் பரதன்முன் நடனம் ஆடி அவனை மகிழ்விக்கின்றனர். பின்னர் மறுநாள் செல்லும்போது மிகஅழகான பல்லக்கில் ஏறிச் செல்கிறான் என்கிறது வான்மீகம். ஆனால் கம்பன் பரதனின் தவ ஒழுக்கத்திற்கு மாசு கற்பிக்க எண்ணாது காப்பியத்தில் மாற்றங்கள் செய்திருக்கிறான் என்பது நோக்கி இன்புறத்தக்கது. பரதனின் உறுதியான மனநிலை இதனால் புலனாகிறது.

இங்கே இன்னும் ஒரு கருத்து நோக்குதற்குரியது. முன்பு இராமன் பரத்துவாசன் ஆசிரமத்தை அடைந்தபோது முனிவர்களுக்குரிய காய்கனி, கிழங்குகளையே அளித்து உதவினான். ஆனால் இப்போது பரதன் அவன் சேனைகளுடன் வந்தபோது பெரிய விருந்து படைத்தான். பரதன் உளத் திண்மையையும், தவஒழுக்கத்தையும் சோதிக்கவே இவ்வாறு செய்ய முற்பட்டான்என்றுகூறுவாரும்உளர். பரதனின்சேனைகள்இந்திரபோகம் துய்க்கப், பரதன் மட்டும் தவஒழுக்கம் தவறாது உறுதியாக நின்றது பரதனுக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாகும் என்க.

19. கதிரவன் தோன்றுதல்

நீல வல் இருள் நீங்கலும். நீங்குறும்
மூலம்இல் கனவில், திரு முற்று உற
ஏல நல்வினை துய்ப்பவர்க்கு ஈறுசெல்
காலம் என்னக் கதிரவன் தோன்றினான். (2491)

Koviloor Digital Library

(நீலம்-கருமையுமாம்; மூலம்-அடிப்படை; திரு-செல்வ வாழ்க்கை; முற்றுற-முடிந்துவிட; ஏல-பொருந்துகின்ற; ஈறு-முடிவு / இறுதி)

கரிய வலிய திணிந்த இருட்டு நீங்கியவுடன், தோன்றி மறைகின்ற அடிப்படை இல்லாத கனவைப் போல, அவர்கள் அனுபவித்திருந்த செல்வ வாழ்க்கை முடிவுக்கு வர, தமக்குப் பொருந்திய நல்வினைப் பயனால் துறக்கத்தில் இன்பம் துய்ப்பவர்க்கும் ஒரு முடிவுகாலம்-காலவரம்பு-உள்ளது என்பதை உணர்த்துவதுபோலச் சூரியன் தோன்றினான்.

இப்பிறவியில் செய்த நல்வினையின் பயனாகிய புண்ணியத்தால் சுவர்க்கலோகம் செல்லுபவர்களும், ஒருகாலவரம்பு முடிந்த பின்னர் மண்ணுலகில் மீண்டும் வந்து பிறக்க வேண்டும் என்பது இதனால் தெரியப்படுத்தப்படுகிறது. இரவு முழுவதும் இன்பம் துய்த்தவர்களுக்கு அந்நுகர்ச்சிக் காலம் முடிந்தது என்பதை உணர்த்துபவன்போலக் கதிரவன் தோன்றினான். சிறிதுநேரமே நிகழ்ந்த இவ்வின்ப நிகழ்ச்சிக்குச் சிறிதுபோதே தோன்றி மறையும் கனவை உவமித்தது நயம். கதிரவன், ஞாயிறு, எல்லோன், பகலவன், தினகரன், இரவி, வெய்யவன் என்பனவெல்லாம் சூரியனுக்குரிய வேறு பெயர்கள்.

20. படையினர் உறங்கி விழித்து எழுதல்

ஆறிநின்று அறம் ஆற்றலர் வாழ்வு எனப்
பாறி வீந்தது செல்வம்; பரிந்திலர்
தேறி, முந்தைத் தம் சிந்தையர் ஆயினார்
மாறி வந்து பிறந்தன்ன மாட்சியார். (2492)

(ஆறி-அடங்கி; பாறி-நிலைமாறி / கெட்டு / சிதறி; பரிந்திலர்-வருந்திலர்; தேறி-தெளிந்து; செல்வம்-இன்பவாழ்க்கை; வீதல்-அழிதல்)

ஐம்புலன்களையும்தீநெறிச்செல்லாதவாறு அடக்கி நின்று புண்ணியம் செய்யாதவர்களது வாழ்க்கை விரைவில் அழிந்து படுதலைப் போல, பரதனுடன்வந்த சேனையினரது ஒரு இரவு வாழ்க்கை சிதறி நிலை கெட்டு அழிந்தது. என்றாலும் அவர்கள் அதற்காக வருந்தவில்லை. மனம் தெளிந்து வேறு ஒரு பிறவி எடுத்துவந்து புதிதாகப் பிறந்த தன்மையுடையவர்கள் போலத் தமது பழைய மனப்பக்குவத்தைப் பெற்றவர் ஆயினர்.

செல்வம் வீழ்வது அறச்செயல்களாலும் ஆவதுதான். ஆனால் இங்கே இந்தச் செல்வம் அறம் ஆற்றலர் வாழ்க்கை எனச் சிதைந்தது என்றது ஒரு நயம். பரிந்திலர், தேறி என்றதனால், பரதனைப் போலவே அவன் படையினரும் இராமனை விரைவில் காண்பதே தமது நோக்கமாகக் கொண்டனர் என்றும், அதில் அவர்கள் உறுதியாக இருந்தனர் என்றும் பெறப்படுகிறது. புண்ணியம்செய்பவர்கள்அனைவரும்துறக்கம் புகுவது

Koviloor Digital Library

உண்மை என்றாலும் அதனைச் செய்யும் போது புலனடக்கத்துடன் செய்ய வேண்டும் என்பதும் குறிக்கப்பட்டது.

21. பாலை நிலத்தை அடைதல்

காலை என்று எழுந்தது; கண்டு, வானவர்
"வேலை" அன்று, "அனிகம்" என்று ஏங்கி விம்முறச்
சோலையும் கிரிகளும் சுண்ணமாய் எழப்
பாலை சென்று அடைந்தது பரதன் சேனையே. (2493)

(விம்முறல்-தவித்தல்; சுண்ணம்-புழுதி; என்று-சூரியன்; அனிகம்-படை; வேலை-கடல்)

பொழுது புலர்ந்தவுடன் சூரியன் உதித்தது; அதனைக் கண்ட வானவர், இது பிரளய காலக்கடலோ என்று ஐயுற்று மனம் கலங்கினர். பின்னர் அது பரதனது சேனைதான் என்று தெளிவடைந்தனர். அப்பொழுது எழுந்த பரதனது சேனை, வழியில் எதிர்ப்பட்ட சோலைகளையும், மலைகளையும் பொடியாகும்படி செய்து கொண்டு புறப்பட்டுப் போய் சித்திர கூடத்திற்கு முன்னால் இருக்கும் ஒரு பாலை நிலத்தை அடைந்தது. படைகளுக்கு இடையில் சூரியனும் உதித்ததால் தேவர்கள் இது கடலோ என்று ஐயுற்றனர். சோலைகளும், மலைகளும் பொடியாகிப் புழுதி எழுந்ததால் அது பரதனது சேனைகள் என்று தெளிவுற்றனர் என்க. பரதனது சேனை மிகுதி சிறப்பிக்கப்பட்டது.

22. சேனைகள் பாலை நிலத்தைக் கடத்தல்

எழுந்தது துகள்; அதின் எரியும் வெய்யவன்
அழுந்தினன்; அவிப்பஅரும் வெம்மை ஆறினான்;
பொழிந்தன கரி மதம்; பொடி வெங்கானகம்
இழிந்தன, வழிநடந்து ஏற ஒணாமையே. (2494)

(துகள்-தூசி; எரியும்-கொதிக்கின்ற; வெய்யவன்-சூரியன்; அவித்தல்-தணித்தல்; பொடி-புழுதி; ஏறுதல்-செல்லுதல்; ஒணாமை-இயலாமை; இழிதல்-பெருகி ஓடுதல்)

படைகள் புறப்பட்டுச் சென்றதனால் தூசி எழுந்து பரவிற்று; அதனால் கொதிக்கும் வெப்பத்தையுடைய சூரியனும் அதில் மூழ்கும்படி நேரிட்டது; சூரியனும் எதனாலும் தணிக்க இயலாத தனது வெப்பத்தை ஆற்றிக் கொண்டான்; அது போல யானைகளும் மிக்க மதநீரைப் பொழியலாயிற்று. அதனால் தூசிப் புழுதி நிறைந்த கொடிய அந்தப் பாலைவனம் கூட, படைகள் மேலே செல்ல முடியாதபடி சேறாகி வழுக்கலாயிற்று.

படைகள் எழுந்து சென்றதால் உண்டான தூசியில் முழுகிக் கதிரவன் தன் வெப்பத்தை ஆற்றிக் கொண்டான்; யானைகள் பெருக்கிய மத நீரால்

Koviloor Digital Library

பாலைவனம் குளிர்ச்சி பெற்று மணலெல்லாம் சேறாகிப் படைகள் மேலே செல்ல இயலாதவாறு வழுக்கலாயிற்று. படைகளின் மிகுதியும், பாலைவனம் குளிர்ச்சியடைந்ததும் குறிக்கப்பெற்றன. பாலை நிலத்தில் எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும் அது உள்வாங்கிக் கொள்ளும் தானே? ஆனால் கம்பன் அந்தப் பாலைவன நிலத்தில் யானைகள் பெருக்கிய மதநீர் சேறாகி வழுக்கினமையால் படைகள் மேற்செல்ல முடியாது திணறிற்று என்றது ஒரு நயம்.

23. வடிஉடை அயில்படை மன்னர் வெண்குடை
செடிஉடை நெடுநிழல் செய்த; தீப்பொதி
படிஉடைப் பரல்உடைப் பாலை, மேல்உயர்
கொடிஉடைப் பந்தரின், குளிர்ந்தது எங்குமே. (2495)

(வடி-கூர்மையாக்கப்பட்ட; அயில்-வேல்; செடி-நெருக்கம் / மரம்; பொதி-தன்னகத்தே கொண்டுள்ள; தீ-வெப்பம்; பரல்-பருக்கைக் கற்கள்; படி-படிதல்)

கூர்மையாக்கப்பட்ட வேற்படையை உடைய மன்னர்களது வெண்கொற்றக் குடைகள் அடர்ந்து நெருக்கமாக இருத்தலின் அவை மிகுதியான நிழலைச் செய்தன; தீப்போன்ற வெப்பத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளதும், பருக்கைக் கற்களை மிகுதியாக உடையதுவுமான பாலை நிலம், மேலே உயர்ந்து நிற்கின்ற கொடிச்சீலைகளால் பந்தரைப் போன்று எல்லா இடங்களும் குளிர்ச்சி உடையதாய் இருந்தன.

மன்னர்களின் வெண்கொற்றக் குடைகளும், கொடிச் சிலைகளும் எங்கும் பரந்தும் அடர்ந்தும் காணப்படுவதால், நெருப்புப் போன்ற வெப்பத்தன்மையும், பருக்கைக் கற்களும் உடைய பாலைவனம்கூட எல்லா இடத்திலும் பந்தல் இட்டது போல குளிர்ச்சியாகவே இருந்தது. அரசர்களின் வெண்கொற்றக் குடைகளின் மிகுதியும், கொடிச் சீலைகளின் உயர்ச்சியும் கூறப்பட்டன.

24. ''பெருகிய செல்வம் நீ பிடி'' என்றாள் வயின்
திருகிய சீற்றத்தால் செம்மையான், நிறம்
கருகிய அண்ணலைக் கண்டு, காதலின்
உருகிய, தளிர்த்தன உலவை ஈட்டமே. (2496)

(செல்வம்-அரசச்செல்வம்; பிடி-ஏற்றுக்கொள்; திருகிய-மாறுபட்ட; உலவை-உலர்ந்துபோன / பட்டுப்போன மரங்கள்; வயின்-இடம்; உருகுதல்-நெகிழ்தல்; தளிர்த்தல்-செழித்தல்; ஈட்டம்-தொகுதி)

''மிகப் பெரிய பெருமைக்குரிய அரசச் செல்வம் அனைத்தையும் நீயே ஏற்றுக்கொள்'' என்று கூறியவளான கைகேயினிடத்தில், அவள் கருத்துக்கு மாறுபட்டு மிக்கச்சினம் கொண்டு சிவந்த முகத்தையுடைய வனானவனும், இயற்கையிலேயே கரிய நிறம் கொண்டவனுமான

Koviloor Digital Library

பரதனைக் கண்டு, அப்பாலைவனத்தில் இருந்த பட்டுப் போன மரங்கள் கூட அவன்பால் அன்பு மிகக்கொண்டு நெகிழ்ந்து, துளிர் விட்டுச் செழித்தன. பட்டமரங்களும் செழித்துக்காட்சியளித்தனால் பரதன் சேனை செல்லுதற்கு வழி இனிமையாயிற்று என்பதாம்.

25. சித்திர கூடம் அடைதல்

வன்தெறு பாலையை மருதமாம் எனச்
சென்றது, சித்திர கூடம் சேர்ந்ததால்;
ஒன்று உரைத்து, ''உயிரினும் ஒழுக்கம் நன்று'' எனப்
பொன்றிய புரவலன் பொருஇல் சேனையே. (2497)

(பொன்றிய-இறந்து போன; புரவலன்-தசரதன்; பொருஇல்-ஒப்பற்ற; வன்-கொடிய; தெறு-கொதிக்கின்ற / சுடுகின்ற / எரிக்கின்ற)

''உயிரைக் காட்டிலும் நல்லொழுக்கமே சிறந்தது'' என்று வாய்மை ஒன்றையே கடைப்பிடித்து இறுதியில் உயிர் நீத்த தசரதச்சக்கரவர்த்தியின் ஒப்பற்ற சேனையானது, மிகக்கொடியதும், மிகவும் கொதிக்கின்றது மாகிய பாலை நிலத்தை, நீரும் நிழலும் உடைய மருதநிலம் என்னும்படி, வெப்பமின்றிக் குளிர்ச்சி பொருந்திய சூழலிலேயே கடந்து சென்று, சித்திர கூடமலையை அடைந்தது.

வன்தெறு பாலையை மருதமாக்கியது, அரசர்களது வெண்கொற்றக் குடைகளும், கொடிச்சீலைகளும், யானைகளின் மதநீர்ப் பெருக்கும் என்று முன்பு கூறியதை நினைவிற்கொள்க. ''ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பது குறள் 131. சேனை பாலை நிலத்தைச் சிரமமின்றி எளிதில் கடந்து சென்றது என்பது பெறப்படுகிறது.

26. பரதன் சேனையை இலக்குவன் காணுதல்

தூளியின் படலையும், துரகம், தேரோடு
மூள்இரும் சினக்கரி முழங்கும் ஓதையும்,
ஆள்இரும் குழுவினர் ஆரவாரமும்
''கோள்இரும் படைஇது'' என்று உணரக் கூறவே. (2498)

(படலை-தொகுதி; துரகம்-குதிரை; மூள்-மூளுகின்ற / பொங்கி எழுகின்ற; இரும்-பெரும்; ஓதை-ஓசை / முழக்கம்; கோள்-வலிய; உணரக் கூறுதல்-தெரியுமாறு அறிவித்தல்) குளகப்பாடல்.

பரதன் சேனையினது வருகையால் எழுந்த புழுதியின் தொகுதியும், குதிரை, தேர்கள், மீண்டும் மீண்டும் பொங்கி எழுகின்ற கோபத்தை உடைய யானைகள் முழங்கும் பேரோசையும், காலாட்படையினரின் பேர் ஆரவாரமும், ஒரு பெரிய வலிமைமிக்க, கொல்லுதலை உடைய சேனை ஒன்று வருகிறது என்பதைத் தெரியுமாறு அறிவிக்க. குளகப்பாடல்-அடுத்த பாடலில் முடியும்.

Koviloor Digital Library

புழுதியும், ஒலியும், படைகளின் வலிமை, பெருமை ஆகியவற்றை உணர்த்துவன.

27. எழுந்தனன் இளையவன், ஏறினான் நிலம்
கொழுந்து உயர்ந்ததுஅனையது ஓர் நெடிய குன்றின்மேல்,
செழும் திரைப் பரவையைச் சிறுமை செய்த அக்
கழுந்து உடைவரிசிலைக் கடலை நோக்கினான். (2499)

(செழும்-நிறைந்த; பரவை-கடல்; கழுந்து-கைப்பிடி / தேய்ந்து வழுவழுப்பான கைப்பிடி)

அதனைக் கண்ட இளையவனான இலக்குவன் எழுந்தான்; நிலத்தில் கொழுந்து விட்டு உயர்ந்தாற் போன்ற ஒரு பெரிய மலையின் சிகரத்தின் மீது ஏறினான்; ஏறி, நிறைந்த அலைகளை உடைய கடலைக் கூடச் சிறியதாகி விடும்படித் தோற்றுகின்ற, தேய்ந்து வழுவழுப்பான கைப்பிடியையும், கட்டமைந்த விற்படையையும் உடைய அச்சேனைக் கடலைத் தன் கண்களால் கண்டான்.

உயர்ந்த மலைச் சிகரத்தை நிலத்தின் கொழுந்து என்றது தற்குறிப்பேற்றம். கழுந்து என்ற சொல் பொதுவாக வலிமையைக் குறிக்கும் என்றாலும், அடிக்கடி கை படுவதால் தேய்ந்து போய் வழுவழுப்பாய் இருக்கிற கைப்பிடியைக் குறிக்கும். இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. படை வருவதால் விலங்குகளும் பறவைகளும் அஞ்சி எழுப்பும்கூக்குரலாலும், படையில்உள்ளயானை, தேர்குதிரைஆகியவை எழுப்பிய புழுதியின்தொகுதியாலும், பேரிரைச்சலாலும், ஏதோஓர்படை வருகிறது என்று ஊகித்து அறிந்த இராமபிரானேஇலக்குவனைஅழைத்து, மலையில் ஏறி என்ன வென்று கண்டு வருக என்று பணித்ததாகவும் வான்மீகம் கூறும். கம்பன், இலக்குவனே கண்டதாகக் கூறுகிறான்.

28. இலக்குவனின் சீற்றம்

"பரதன் இப்படைகொடு பார்கொண்டான், மறம்
கருதி, உள்கிடந்தது ஓர் கறுவு காதலால்,
விரதம் உற்று இருந்தவன் மேல் வந்தான்; இது
சரதம், மற்று இலது" எனத் தழங்கு சீற்றத்தான். (2500)

(பார்-நாடு / அரசு / அரசுரிமை; கறுவு-வயிரம் வாய்ந்த / மனஉறுதி; சரதம்-நிச்சயம் / உண்மை; தழங்கு-மிகுகின்ற; மறம்-போர் / வீரம்; கறுவுகாதல்-வஞ்சனையுடன் கூடிய பேராசை; கறுவுதல்-பழி தீர்த்துக் கொள்ளக்கூடிய கோபம்) குளகப்பாடல்.

அவ்வாறு மலை மீது ஏறிப் பார்த்த இலக்குவன், பரதன்தான் இந்தப் படையைக் கொண்டு வருகின்றான்; அவன்தான் அரசுரிமை முழுவதையும் கொண்டுள்ளானே; இப்பொழுது தரும நெறியினின்றும் நீங்கிப் போர் செய்வது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தன்

Koviloor Digital Library

மனத்தில் நீண்ட நாட்களாகவே கொண்டுள்ள வஞ்சனை கலந்த பேராசையினால், தந்தை கட்டளைப்படி நோன்பு மேற்கொண்டிருக்கின்ற இராமபிரானை அவனோடு போர் செய்து கொல்லும் நோக்கத்துடன் வந்திருக்கிறான். இது தான் உண்மை; இது நிச்சயம்; இதைத் தவிர வேறு நோக்கம் அவனுக்கு இல்லை என்று தணிக்க முடியாத மிக்க சீற்றம் கொண்டான்.

நாட்டைப் பெற்றுக் கொண்ட பரதன், பதினான்கு ஆண்டுகள் கழித்து, இராமன், மீண்டும் நாட்டிற்கு வந்து தனது அரசுரிமையைக் கவர்ந்து கொண்டு விடுவானோ என்ற அச்சத்தால் அவனைக் கொன்று விட்டால் தானே என்றும் ஆளலாம் என்னும் வஞ்சனை கலந்த பேராசையுடனும், கொடிய எண்ணத்துடனும், தவம் செய்கின்ற இராமன் மேல் படையெடுத்து வருகிறான் என்று இலக்குவன் தவறாகக் கருதிக் கடும் சினம் கொண்டான் என்க. பரதன் ஒரு பேராசைக்காரன் என்று இலக்குவன் தவறாகக் கருத முற்படுகிறான்.

29. இலக்குவன் இது பற்றி இராமனிடம் கூறுதல்

குதித்தனன் பாரிடை; குவடு நீறுஎழ
மிதித்தனன்; இராமனை விரைவின் எய்தினான்;
''மதித்திலன் பரதன்; நின்மேல் வந்தான்; மதில்
பதிப்பெரும் சேனையின் பரப்பினான்''எனா. (2501)

(குவடு-சிகரம்; நீறு-தூள்; பதி-நகரம் / அயோத்தி) (குளகப்பாடல்)

இலக்குவன் தான் ஏறி நின்றிருந்த மலையின் சிகரம் பொடிபடும்படி மிதித்தான்; அதனின்றும் நிலத்தில் குதித்தான், குதித்து ஓடி இராமனை விரைவில் அடைந்தான்; அவனைப் பார்த்து, ''பரதன் உன்னை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை; உன் பெருமையை நினைத்துப் பார்க்கவுமில்லை; மதில்களை உடைய அயோத்தி மாநகரத்துப் பெரிய சேனைகளை எல்லாம் உடன் அழைத்துக் கொண்டு, உன் மேல் போர் தொடுக்கும் கொடிய எண்ணத்துடன் வந்துள்ளான்;'' என்று கூறினான்.

சேனை உடன் வந்ததுதான், இலக்குவனது ஐயத்தை உறுதிப்படுத்தியது என்க. இலக்குவனுடைய ஆற்றலும், அவன் கோபத்தின் பேரளவும் குறிக்கப்பெற்றன.

30. இலக்குவன் போர்க் கோலம் கொள்ளுதல்

கட்டினன் சுரிகையும் கழலும்; பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன்; கவசம் பூட்டு அமைத்து
இட்டனன்; எடுத்தனன் வரிவில்; ஏந்தலைத்
தொட்டு அடிவணங்கி நின்று, இனைய சொல்லினான். (2502)

Koviloor Digital Library

(சுரிகை-உடைவாள்; புட்டில்-அம்பறாத்தூணி; ஏந்தல்-பெருமையில் சிறந்தவன்; கணை-அம்பு)

பின்னர் இலக்குவன் விரைந்து இடையில் உடைவாளையும், கால்களில் வீரக்கழலையும் அணிந்து கொண்டான். பல வகையான அம்புகளை உடைய அம்பறாத் தூணியை முதுகில் தாங்கிக் கொண்டான்; போர்க் கவசத்தைப் பூட்டு அமைத்து மார்பில் கட்டிக் கொண்டான். கைகளில் கட்டமைந்த வில்லை ஏந்திக் கொண்டான்; பெருமையில் உயர்ந்தோனாகிய இராமபிரானின் திருவடிகளைத் தொட்டு வணங்கி எழுந்து நின்று, பின்வருமாறு கூறலானான்.

இலக்குவன் விரைந்து போர்க் கோலம் பூண்டு, போருக்குத் தயார் ஆனான் என்பதாம். திருவடி தொட்டு வணங்குதல் என்பது ஒரு மரபு.

31. இலக்குவன் வீர உரை [12 பாடல்கள்]

''இருமையும் இழந்த அப்பரதன் ஏந்து தோள்
பருமையும், அன்னவன் படைத்த சேனையின்
பெருமையும், நின்ஒரு பின்பு வந்தஎன்
ஒருமையும் கண்டு, இனி உவத்தி உள்ளம் நீ''. (2503)

(படைத்த-பெற்றிருக்கிற / உடன் வந்திருக்கிற; ஒருமை-தனிமை / ஒப்பற்ற தன்மை / தனித்தன்மை; ஏந்து-உயர்ந்த; ஒரு-ஒப்பற்ற)

இலக்குவன் இராமனைப் பார்த்து ''இம்மை மறுமை ஆகிய இரண்டு பிறவிகளில் விளையும் நற்பயன்களையும் ஒருங்கே இழந்து விட்ட அந்தப் பரதனின் உயர்ந்த தோளின் ஆற்றலையும், அவன் திரட்டி வந்திருக்கின்ற இந்தச் சேனையின் பெருமையையும், ஒப்பற்ற உனக்குப் பின் பிறந்தவனாகிய என்னுடைய தனித்தன்மை வாய்ந்த போராற்றலையும் இப்பொழுது நீ கண்டு உள்ளம் மகிழ்ச்சியடைவாயாக!'' என்றான்.

இப்பிறவியில் தனக்குக் கிடைத்த அரசுரிமையையும் இப்பொழுது இராமபிரானுக்குத் தீங்கு கருதிப் போரிட வந்த தீவினையால் விளையும் மறுமைப் பயனையும் பரதன் இழக்கப்போகிறான் என்பதைக் குறித்தே ''இருமையும் இழந்த பரதன்'' என்கிறான் இலக்குவன். அவனுடைய எல்லாப்படைகளையும் தான் ஒருவனே தனியனாக நின்று வெல்லப் போவதைக் காண்பாயாக என்பது கருத்து. அண்ணன் மேலேயே போர் தொடுத்து வருதல் அறத்துக்கு மாறுபட்டது. எனவே அவன் இம்மை மறுமைப் பயன்களை இழந்தவனாகிறான் என்பதும் ஒன்று.

32. ''படரெலாம் படப்படும் பரும யானையின்
திடரெலாம் உருட்டின, தேரும் ஈர்த்தன,
குடரெலாம் நிரைத்தன, குருதி ஆறுகள்
கடரெலாம் மடுப்பன பலவும் காண்டியால்''. (2504)

Koviloor Digital Library

(படர்-படை வீரர்; பட-மடிந்து போக; திடர்-மேடு; திரைத்தல்-அலைத்துக் கொள்ளுதல்; படுதல்-அழிதல்; மடுத்தல்-பாய்ந்து கலத்தல்)

''படைவீரர்களாகிய குத்துக் கோல்காரர், பாகர், பரிக்கோல் காரர் ஆகியவர்கள் எல்லாம் மடிந்து போகவும், மடிந்து போன பருத்த யானைகளின் மேடுகளை யெல்லாம் உருட்டிக் கொண்டும், தேர்களை எல்லாம் இழுத்துக் கொண்டும், படைவீரர்களின், யானை குதிரைகளின் குடல்களை எல்லாம் அலைத்துக் கொண்டும் இரத்த வெள்ளம் நிறைந்த ஆறுகள் பலவும், இப்போது கடலில் சென்று பாய்ந்து கலக்கப் போகின்றதை எல்லாம் நீ காண்பாயாக!''

இலக்குவன் இராமனிடம் தான் ஒருவனே தனித்து நின்று யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய படைகளையெல்லாம் அழிப்பதையும், அவற்றின் இரத்த ஆறுகள் கடலில் சென்று கலக்கப் போவதையும் இப்போது இராமன் காணப்போகின்றான் என்று தனது போராற்றலைத் தெளிவுபடுத்தி வீரவுரை கூறுகிறான் என்பதாம்.

33. ''கருவியும், கைகளும், கவச மார்பமும்
உருவின உயிரினோடு; உதிரம் தோய்வுஇல்
திரிவன, சுடர்கணை; திசைக்கை யானைகள்
வெருவரச் செய்வன, காண்டி, வீர! நீ''. (2505)

(சுடர்-ஒளி; கருவி-படைக்கலங்கன்; தோய்தல்-படிதல்; வெருவர-அஞ்சும்படி; உதிரம்-இரத்தம்)

''வீரனே! என்னுடைய ஒளி மிகுந்த அம்புகள், பரதனுடைய வீரர்களின் படைக்கலன்களையும், அவர்களது கைகளையும், அவர்கள் மார்பில் அணிந்திருக்கின்ற கவசங்களையும் ஊடுருவிச் சென்று அவர்கள் உயிரைப் பற்றும், என்றாலும் கணைகளில் இரத்தம் படியாது. ஓடித்திரியும், துதிக்கைகளையுடைய எட்டுத்திக்குகளிலுமுள்ள யானைகளே அஞ்சும்படி செய்யும் அத்திறத்தைக் காண்பாயாக!'' என்றான்.

34. ''கோடகத் தேர் படுகுதிரை தாவிய
ஆடகத் தட்டிடை, அலகை, அற்றுஉகு
கேடகத் தடக்கைகள் கவ்விக் கிந்தின,
நாடகம் நடிப்பன காண்டி, நாத! நீ''. (2506)

(கோடகம்-புதுமை; தாவிய-பரந்த; ஆடகம்-பொன்; அலகை-பேய்கள்; அற்று-அறுந்து; கிந்துதல்-நொண்டுதல் / பெருவிரலை ஊன்றிக் கொண்டு நடத்தல்; நாடகம்-கூத்து / பேய்க்குரவை; படுதல்-அழிதல்)

''தாவி வருகின்ற குதிரைகள் பூட்டிய புதுமையான தேர்கள் அழிந்தொழிய, அந்தத் தேரின் நடு இடமான பொன் மயமான தேர்த் தட்டில், பேய்கள், அறுந்து சிதறி விழுகின்ற, கேடகம் பற்றியுள்ள

Koviloor Digital Library

வீரர்களின் பெரிய கைகளைத் தம் வாயில் கவ்விக் கொண்டு, நொண்டி நொண்டிக் கூத்தாடுவதைப் பார்ப்பாயாக!'' என்றான்.

குதிரை பூட்டிய தேர்கள் தனது வில்லினால் நிலை தடுமாறி அழிந்து போகவும், அதன் நடுத்தட்டில் அமர்ந்து வந்த வீரர்கள், தங்கள் கைகளில் ஏந்தியிருந்த கேடயம் என்னும் தற்காப்புக் கருவியும் அழிந்துபட, அவர்களின் அறுந்து விழுந்த கைகளைப் பேய்கள் தம் வாயில் கவ்விக் கொண்டு இசையுடன் கூத்தாடும் நாடகத்தைக் காண்க! என இலக்குவன் தனது வில்லாற்றலை இராமனுக்குப் புலப்படுத்தினான் என்க.

கோடகம் என்ற சொல்லுக்குப் புதுமையான என்று நாம் பொருள் கொண்டுள்ளோம். குதிரை என்ற ஒரு பொருளும், தந்தம் போன்ற அமைப்பைத் தன்னிடம் கொண்டுள்ள என்ற ஒரு பொருளும் இந்தச் சொல்லுக்கு உண்டு. இவ்வாறு பேய்கள் ஆடும் கூத்திற்கு ''பேய்க்குரவை'' என்பது பெயர் என்று புறத்துறை கூறும். ஆடகம் என்பது நான்கு வகைப்பொன்களில் ஒன்று. மற்ற மூன்று. கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூ நதம் என்பனவாம்.

35. ''பண்முதிர் களிற்றோடு, பரந்த சேனையின்
எண்முதல் அறுத்து, நான்இமைப்பின் நீக்கலால்,
விண்முதுகு உளுக்கவும், வேலை ஆடையின்
மண்முதுகு ஆற்றவும் காண்டி, வள்ளல்! நீ''. (2507)

(பண்-அலங்காரம் / அழகு; முதிர்-முற்றுப்பெற்ற; முதல்-அடியோடு; உளுக்க-நெளிக்க; வேலை-கடல்; ஆற்ற-இளைப்பாற்றிக் கொள்ள; எண்-தொகுதி)

''வண்மை மிக்கவனே! முற்றிலும் அலங்கரிக்கப்பட்ட யானைப் படையினோடு, விரிந்து அகன்ற நால்வகைப் படையின் தொகுதிகள் அனைத்தையும் வேரோடு களைந்து, நான் ஒருநொடிப் பொழுதிற்குள் நீக்கி விடுவேன்; அவ்வாறு வீழ்ந்த படைவீரர்கள் வீரசுவர்க்கம் அடைவதால் பாரம் தாங்காது விண்ணுலகு தன் முதுகை நெளிப்பதையும், கடலை ஆடையாகப் போர்த்துள்ள இந்நிலவுலகம் பாரம் குறைந்ததால், தன் முதுகை இளைப்பாற்றிக் கொள்ளுவதையும் நீ காண்பாயாக'' என்றான்.

சேனையின் எண் என்பது அறுபதினாயிரம் அக்குரோணி என்று முன்பு கூறியதை நினைவிற்கொள்க. பொதுவாக நால்வகைப் படைகளையும் ''ரத, கஜ, துரக, பதாதி'' என்போம். அதனைக் ''கச, ரத, துரக, ஆட்கடல்'' என்பார் கம்பர். ''மண் முதுகு ஆற்றுதலையும், விண்முதுகு உளுக்கு தலையும்'' கம்பர் நிறைய இடங்களில் பயன்படுத்தியிருப்பதையும் உணர்க. ''இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை'' என்பார் நன்னூலார்.

Koviloor Digital Library

36. ''நிவந்த வான்குருதியின் நீத்தம் நீந்தி, மெய்
சிவந்த சாதகரோடு, சிறுகண் கூளியும்,
கவந்தமும், ''உலகம் நின்கையது ஆயது'' என்று
உவந்தன, குனிப்பன காண்டி, உம்பர் போல்''. (2508)

(நிவந்த-ஓங்கிய; வான்-பெரிய; நீத்தம்-வெள்ளம்; சாதகர்-பூதகணங்கள்; கூளி-பேய்கள் / குறும்பூதம்; கவந்தம்-தலையற்ற உடல்கள் / முண்டம்; குனித்தல்-குதித்துக் கூத்தாடுதல்; உலகு-ராஜ்யம் / நாடு)

''பொங்கி ஓங்கி யெழுந்த பெரிய இரத்த வெள்ளத்தில் நீந்தியதால் தம் உடல் முழுவதும் சிவப்பாகிப் போன பூதகணங்களும், சிறுகண்களைக் கொண்ட பேய்களும், தலையறுந்த உடல்களைக் கொண்ட முண்டங்களும், ''உலகமெல்லாம் உன் கையகத்தே அடங்கியது'' என்று கருதி மகிழும் தேவர்களைப் போல, மகிழ்ச்சியடைந்து குதித்துக் கூத்தாடுவதைக் காண்பாயாக!'' என்றான்.

பொதுவாகப் பேய்களுக்கு, அவற்றின் உடம்பின் அளவுக்குப் பொருந்தாத அவயவங்கள் தான் உண்டு என்பது கலிங்கத்துப்பரணி. எனவே ''சிறுகண் கூளி'' என்றார்.

37. ''சூழிவெம் கடகரி, துரக ராசிகள்
பாழி வன்புயத்து இகல்வயவர் பட்டுஅற,
ஆழி வெம்குருதியால் அழிந்த வேலைகள்
ஏழும், ஒன்றாகி நின்று இரைப்பக் காண்டியால்'' (2509)

(சூழி-முகபடாம் / நெற்றிப்பட்டம்; வெம்-கொடிய; கடம்-மதம்; துரகம்-குதிரை; ராசி-இனம்; பாழி-பெருமை; வயவர்-வீரர்; இகல்-போர்; ஆழி-கடல்; இரைப்ப-ஒலிக்க)

''நெற்றிப் பட்டம் அணிந்த, கொடிய மதம் கொண்ட யானைகள்; குதிரைகளின்கூட்டம், பெருமை மிகுந்த வலிய தோள்களையுடைய போர் வீரர்கள் ஆகிய அனைவரும் நான் தாக்குதலால் இறந்து விழ, அவர்கள் உடலினின்றும் வெளிப்படும் வெப்பமான இரத்த வெள்ளம் கடலிற் சென்று சேர்தலால், ஏழுவகைக் கடல்களும் ஒன்றாகிச் செந்நிறமாகி, நின்று பேரொலி எழுப்பக் காண்பாயாக!'' என்றான்.

ஏழுவகைக் கடல்கள்-உவர் நீர், நன்னீர், பால், தயிர், கருப்பஞ்சாறு, தேன், நெய் என்பன.

38. ''ஆள்அற, அலங்குதேர் அழிய, ஆடவர்
வாள்அற, வரிசிலை துணிய, மாக்கரி
தாள்அற, தலைஅறப் புரவி, தாளொடும்
தோள்அற, வடிக்கணை தொடுப்பக் காண்டியால்'' (2510)

(ஆள்-காலாட்படை; அலங்கு-அசைகின்ற; வடி-கூரிய; தொடுப்ப-செலுத்த; சிலை-வில்)

Koviloor Digital Library

''காலாட்படை வீரர்கள், இறந்து ஒழியவும், அசைகின்ற தேர்கள் அழிந்து போகவும், அவற்றிலுள்ள வீரர்களின் வாட்படை கீழே சிதறி விழவும், கட்டமைந்த விற்படைகள் துண்டு பட்டு அறுந்து விழவும், பெரிய யானைகளும், குதிரைகளும், தங்கள் கால்களும், தலைகளும் சிதறுபட்டுத் தரையில் விழவும், அவற்றிலிருந்த வீரர்களின் தாள்களும், தலைகளும் அறுந்து விழவும், நான் என்னுடைய கூர்மையான அம்புகளைச் செலுத்திப் போர் செய்வதைக் காண்பாயாக'' என்றான்.

39. ''தழைத்த வான்சிறையன, தசையும் கவ்வின,
அழைத்தவான் பறவைகள், அலங்கு பொன் வடிம்பு
இழைத்தவான் பகழிபுக்கு இருவர் மார்பிடைப்
புழைத்தவான் பெருவழி போகக் காண்டியால்'' (2511)

(வடிம்பு-விளிம்பு; வான்-வலிய / சிறந்த / பெரிய; பகழி-அம்புகள்; இருவர்-பரதசத்துருக்கனர்; தழைத்த-செழித்த; புழைத்த-துளைத்த; பொன்-கரும்பொன் / இரும்பு)

''செழித்த உயர்ந்த சிறகுகளும், அசைகின்ற கரும்பொன்னாலாகிய விளிம்பு கட்டப்பெற்றதுமான என்னுடைய சிறந்த அம்புகள் பரதன், சத்துருக்கனன் ஆகிய இருவரது மார்புகளிலும் நுழைந்து பெரிய தொளைகளை உண்டாக்கப் போகின்றன. இதனைக் காணும் பெரிய சிறகுகள் படைத்த கழுகு, பருந்து, காகம் முதலிய பறவைகள் தாம் தம் இனத்தையும் கூவி அழைத்துக் கொண்டு, அவர்களுடைய சதைகளையும் கவ்விக்கொண்டு, அந்தத் துளைகளின் வழியாகப் பெரிய வானவீதியில் போகப் போவதைக் காண்பாயாக!'' என்றான்.

''தழைத்த வான் சிறை'' என்ற சொற்றொடரை இலக்குவனது வில்லுக்கு அடையாகவும், காட்டிலே பறந்து திரியும் கழுகு, பருந்து, காகம் ஆகியவற்றுக்கு அடையாகவும் கொள்ளலாம். போர்க்களத்திற்குச் சென்று இரை தேடுவதில் சிறந்த பறவைகள் கழுகு, பருந்து முதலியன. அம்புகளின் முனையில் பளபளப்பான விளிம்புகள் இரும்பினால் அமைப்பதும், அம்புகளுக்குச் சிறகுகள் அமைப்பதும் அக்காலவழக்கம்.

40. ''ஒருமகள் காதலின் உலகை நோய் செய்த
பெருமகன் ஏவலின், பரதன் தான் பெறும்
இருநிலம் ஆள்கை விட்டு, இன்று, என்ஏவலால்
அருநரகு ஆள்வது காண்டி, ஆழியாய்!'' (2512)

(ஆழி-சக்கரப்படை; நோய்-வருத்தம் / துன்புறுதல்; ஏவல்-ஆணை / கட்டளை; ஆள்கை-ஆளுதல்; அரு-அரிய / மீளுதற்கு அரிய / கொடிய; ஆள்வது-அடைவது)

''சக்கரப் படையை உடைய திருமாலின் அம்சமானவனே! கைகேயி என்ற ஒரு பெண்ணின் மேல் கொண்ட மையலால், உலகத்திற்கே துன்பம்

Koviloor Digital Library

விளைவித்த தசரதச்சக்கரவர்த்தியின் கட்டளையினால், பரதன் தான் பெற்ற இப்பெரிய கோசல நாட்டின் அரசுரிமையைக் கைவிட்டு நீங்கி, இப்பொழுது, நான் செலுத்தப் போகின்ற இவ்வம்பின் கட்டளையினால், மீளுதற்கு அரிய கொடிய நரகத்தினை நிரந்தரமாகச் சென்று அடையப் போவதைக் காண்பாயாக!'' என்றான்.

பொதுவாகப் போர்க்களத்தில் இறக்கும் வீரர்கள் எல்லாம் வீரசுவர்க்கம் அடைவர் என்பது நியதி. ஆனால் இங்கே இலக்குவன் பரதன் போர்க்களத்தில் இறந்தாலும் அவன் மீளுதற்கரிய நரகமே செல்வான் என்று கூறுவதினின்று அவனுடைய உள்ளக் காழ்ப்பு புலனாகும். இவ்வளவு சீற்றத்திலும் தசரதனைப் பெருமகன் என்று இலக்குவனைக் கூற வைத்த கவிஞனின் கை வண்ணம் நினைத்து இன்புறுதற்குரியது.

41. ''வையகம் துறந்து வந்து அடவி வைகுதல்
எய்தியது உனக்கு'' என, நின்னை ஈன்றவள்
நைதல் கண்டு உவந்தவள், நவையின் ஓங்கிய
கைகயன் மகள், விழுந்து அரற்றக் காண்டியால்'' (2513)

(வையகம்-நாடு; அடவி-காடு; நைதல்-வருந்துதல்; நவை-பழி)

''நாட்டினையும், நாட்டு அரசாட்சியையும் நீக்கி விட்டு, இப்பொழுது காட்டில் வந்து தங்கும் படியான ஒரு நிலை உனக்கு வந்து விட்டதே'' என்று உன்னைப் பெற்றெடுத்தவளான கோசலை மனம் வருந்துவதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றவளும், பழியும், இகழ்ச்சியும் மிக்கப் பெற்றவளும் கேகய மன்னனின் மகளுமாகிய கைகேயி, இப்பொழுது, தன் புதல்வன் பரதன் என் கையால் உயிர் துறக்கப் போவதால், புத்திரசோகம் தாங்காமல் தரையில் விழுந்து புரண்டு அழுது புலம்பப் போவதைக் காண்பாயாக!'' என்றான்.

42. ''அரம்சுட அழல்நிமிர் அலங்கல் வேலினாய்!
விரஞ்சு ஒரு நொடியில், இவ்வனிக வேலையை
உரம்சுடு வடிக்கணை ஒன்றில் வென்று, முப்
புரம் சுடும் ஒருவனின், பொலிவென் யான்'' என்றான். (2514)

(அரம்-கூர்மையாக்கும் கருவி; சுடுதல்-வருத்துதல்; அழல்-ஒளி / நெருப்பு; நிமிர்தல்-எழுதல்; அலங்கல்-வெற்றிமாலை; விரஞ்சு-விரைந்து; உரம்-வலிமை; சுடுதல்-அழித்தல்; வடி-கூரிய; அனிகம்-சேனை / படை)

''அரம் என்ற கருவியினால் அராவப் படும்போது கொழுந்து விட்டு எரியும் நெருப்பினைப் போல ஒளி மிகுந்து விளங்குகின்ற வெற்றி மாலையைச்சூடிய வேற்படையை உடையவனே! இப்பொழுது விரைந்து ஒரு நொடிப் பொழுதில், இந்தச் சேனைக் கடலை, என்னுடைய பகைவர்களின் வலிமையை அழிக்கின்ற ஆற்றல் வாய்ந்த கூரிய ஒரே கணையால் அழித்து, வெற்றி பெற்று, அன்று முப்புரம் எரித்த

Koviloor Digital Library

சிவபெருமானைப் போலப் பொலிவுற்று விளங்கப் போவதையும் காண்பாயாக'' என்று கூறி முடித்தான்.

முப்புரம் எரித்தவன் சிவபெருமான் என்பதை நாம் அறிவோம். இதன் வரலாறு : தாருகன் என்பவன் ஓர் அசுரன். அவனுக்கு, தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்று மூன்று புதல்வர்கள். இவர்கள் மூவரும் கடும்தவம் இயற்றி மூன்று உலகங்களிலும் சஞ்சரிக்கும் படியான, பசும்பொன், வெண்பொன், கரும்பொன்-(தங்கம், வெள்ளி, இரும்பு) ஆகிய மூன்று உலோகங்களாலான கோட்டையை அமைத்துக் கொண்டு, மிகவும் கர்வம் கொண்டு மூன்று உலகங்களைச் சார்ந்தவர்களுக்கும் தொல்லை கொடுத்து வந்தனர். இதனைப் பொறுக்க ஒண்ணாமல் இந்திரன் முதலிய தேவர்கள் சிவபெருமானை அணுகி முறையிட்டனர். சிவபெருமானும் அதை ஏற்றுக் கொண்டு உடனே பூமியைத் தேராகவும், சந்திர சூரியர்களைத் தேர்ச் சக்கரங்களாகவும், நான்கு வேதங்களையும் குதிரைகளாகவும், பிரமனைத் தேர்ச்சாரதியாகவும், மேருமலையை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், வாயுவை சிறகுகளாகவும் அக்கினியை வில்லின் முனையாகவும் திருமாலையே அம்பாகவும், மற்ற தேவர்களைத் தகுந்த போர்க் கருவிகளாகவும் தேர் உறுப்புக்களாகவும் அமைத்துக் கொண்டு போர்புரியக் கிளம்பினார். இச்சமயத்தில் தேவர்கள், சிவபெருமான் தங்களால்தான் இப்போரில் வெற்றி பெறப் போகிறார் என்று செருக்கு மிகக் கொண்டனர். இதை உணர்ந்த முக்கண்ணனாகிய சிவபெருமான் அவர்கள் செருக்கையும் அடக்க எண்ணி, அவர்கள் உதவி இல்லாமலேயே இம்முப்புரக் கோட்டைகளையும், அம்மூவரையும் எரிக்க எண்ணி மிகச்சினந்து ஒரு புன்முறுவல் செய்தார். இதன்விளைவால் அம்மூவரும் தங்கள் கோட்டைகளுடன் எரிந்து சாம்பலாயினர். தேவர்களும் தங்கள் செருக்கு அடங்கினர் என்பது சிவபுராண வரலாறு. ஒரே நொடியில், ஒரே அம்பினால் மிக எளிதாகப் பரதன் சேனையை வெல்லுவேன் என்று சூளுரைத்ததால் சிவபெருமானுக்கு இலக்குவன் ஒப்பு.

43. இராமன், இலக்குவனுக்குப் பரதனுடைய இயல்பை விளக்குதல் [5 பாடல்கள்]

''இலக்குவ! உலகம் ஓர்ஏழும் ஏழும் நீ
கலக்குவன் என்பது கருதினால், அது
விலக்குவது அரிது; அது விளம்ப வேண்டுமோ?
புலக்கு உரித்து ஒரு பொருள் புகலக் கேட்டியால்'' (2515)

(கலக்குதல்-அழித்தல் / நிலை கலங்கச் செய்தல்; புலம்-அறிவு; உரித்து-ஏற்றது)

''இலக்குவனே! இப்பதினான்கு உலகங்களையும் நிலை கலங்கச் செய்து அழிக்க நீ கருதினாயானால் அதனைத் தடுத்து நிறுத்துவது

Koviloor Digital Library

எவர்க்கும் அரியதாகும். அது பற்றி நான் விளக்கிச் சொல்ல வேண்டுமோ? ஆனால் அறிவுக்கு ஏற்றதான ஒரு செய்தியை நான் சொல்லுகிறேன். நீ கேட்பாயாக'' என்று இராமன் கூறத் தொடங்கினான்.

சீற்றம் கொண்டிருக்கின்ற இலக்குவனிடம் நேராகத் தன் அறிவுரைகளைக் கூறமுயலாது, முதலில் அவனது போராற்றலைப் பாராட்டிப் பேசியது ஒரு உளநூல் தத்துவம் என்பதை உணர்க. இலக்குவன் உணர்வு பூர்வமாக வீர உரை ஆற்றி முடித்த பொழுது, இராமன் அவனை அறிவு பூர்வமாகச் சிந்திக்கத் தூண்டுகின்ற முதற்பாடல் இது. புலக்கு என்பது புலத்துக்கு-அறிவுக்கு என்று பொருள்படும்.

44. ''நம் குலத்து உதித்தவர், நவையின் நீங்கினார்,
எங்கு உலப்புறுவார்கள்? எண்ணின், யாவரே
தம்குலத்து ஒருவஅரும் தருமம் நீங்கினார்?
பொங்கு உலத் திரளொடும் பொருத தோளினாய்!'' (2516)

(பொங்கு-பருத்த; உலம்-கல்தூண்; உலப்புறுதல்-எண்ணி முடித்தல்; ஒருவ-நீங்க)

''பருத்த கல்தூணைப் போலத் திரண்ட தோள்களை உடையவனே! நம் சூரிய குலத்துத் தோன்றியவர்கள், எல்லோரும் குற்றங்களின்றும் நீங்கியவர்கள். அவர்களின் எண்ணிக்கையை எவ்வாறு அளவிட்டுச் சொல்ல முடியும்? இன்னும் நன்கு ஆலோசித்துப் பார்த்தால், தம் குலப்பெருமையை நீக்கி, தருமம் அல்லாத காரியங்களை யார் தான் செய்வார்கள்? ஒருவரும் செய்ய மாட்டார்கள் அல்லவா?'' என்றான்.

நம் குலத்து உதித்தவர்கள் யாரும் குற்றமுள்ள செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்று கூறியதன் மூலம் பரதனும் அத்தகைய காரியத்தைச் செய்யத் துணியமாட்டான் என்று இராமன் குறிப்பாக உணர்த்துவதை நோக்குக. இங்கே எண்ணிக்கையை அளவிட்டுச் சொல்லுதல் என்பது எண்ணிக்கையால் அன்று. அவர்களுடைய ஆண்மை, அறிவு, பெருமை முதலிய ஆற்றலை அளவிடுவதாம்.

45. ''எனைத்துஉள மறை அவை இயம்பற்பாலன,
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே;
அனைத்திறம் அல்லன அல்ல; அன்னது
நினைத்திலை, என்வயின் நேய நெஞ்சினால்''. (2517)

(எனைத்து-எத்தனை; செய்கை-ஒழுக்கம்; என்வயின்-என்மீது; நேயம்-அன்பு)

''வேதங்கள் எல்லாம் எதனைக் கூறுகின்றனவோ, அவற்றையே நல்லொழுக்கமாகக் கொண்டவன், பனை போன்ற திரண்ட துதிக்கைகளைப் பெற்ற யானைப் படையைக் கொண்ட பரதன்; அதைத் தவிர வேறு எதனையும் பரதன் இயற்றமாட்டான்; இதை நீ உணரத்

Koviloor Digital Library

தவறிவிட்டாய்; காரணம் நீ என் மீது கொண்டுள்ள அளவில்லா அன்பே'' என்றான் இராமன்.

வேதங்கள் கூறிய வழியில் சிறிதும் வழாது நடப்பவன் பரதன்; வேதங்களில் கூறாதனவற்றைப் பரதன் செய்ய மாட்டான் என்று பரதனையும், இதை நீ உணரத்தவறியது பரதன்பால் குறைகாணவேண்டும் என்ற நோக்கத்தால் அல்ல, என் மீது நீ கொண்ட அளவற்ற பற்றின் காரணமாக என்று இலக்குவனையும், ஒரே நேரத்தில் பாராட்டிப் பேசிய இராமனது வாக்குவன்மை நோக்குதற்குரியது.

46. ''பெருமகன் ஏவலின், பிறந்த காதலின்
வரும்என நினைகையும், மண்ணை என்வயின்
தரும்என நினைகையும், தவிரத் தானையால்
பொரும் என நினைகையும் புலமைப் பாலதோ?'' (2518)

(பெருமகன்-சக்கரவர்த்தி; நினைகை-எண்ணுதல்; தானை-படை; பொருதல்-போர் செய்தல்; புலமை-அறிவு)

''நமது தந்தையாகிய தசரதச் சக்கரவர்த்தியின் கட்டளையினாலும், அவன்உடன்பிறந்தவன்என்று என்மீது கொண்ட பாசத்தாலும், அவனுக்கு இயல்பிலேயே என் மீது உண்டாகிய அன்பினாலும், தான் பெற்ற அரசுரிமையை எனக்கு அளித்து என்னை அழைத்துப் போக வருகிறான் என்றும்தான் எண்ண வேண்டுமே அல்லாது, அவன் படை கொண்டு நம்முடன் போர் புரியவருகின்றான் என்று எண்ணுவது அறிவிற்குப் பொருத்தமானதோ? அறிவின் பாற்பட்டதன்று'' என்றான் இராமன்.

பரதன் வருவதற்கான காரணங்களை நன்கு புலப்படுத்துகிறான் இராமன். இலக்குவன் உணர்வு பூர்வமாகவே சிந்திக்கிறான். ''காதல் மிக்குழி அற்றவும் கைகொடா'' என்பது சீவகசிந்தாமணி. இது சீற்றத்திற்கும் பொருந்தும். அன்பு முதிர்ந்த வழி அறிவு தொழில்படாது.

47. ''பொன்னொடும் பொருகழல் பரதன் போந்தனன்;
நன்நெடும் பெரும்படை நல்கல் அன்றியே
என்னொடும் பொரும்என இயம்பற் பாலதோ?
மின்னொடும் பொருஉற விளங்கும் வேலினாய்!'' (2519)

(பொருவுறல்-ஒத்திருத்தல்; நல்கல்-கொடுத்தல்)

''மின்னலைப் போன்று ஒளிவீசும் வேற்படையை உடையவனே! பொன்னால் இயன்ற வீரக்கழல்களை அணிந்துள்ளவனான பரதன் இங்கு வருவது, நல்ல, நீண்ட, பெரிய படையினை என்னிடம் ஒப்புவிக்கவே அன்றி, என்னோடு போர்புரியத்தான் படைகளைக் கொண்டு வருகின்றான் என்று நீ கூறுவது உனக்குத் தகுதியாகுமோ?'' என்றான்.

முன் பாடலில் அவ்வாறு நினைத்தலே தகாது என்று கூறிய கவிஞன், இப்பாடலில் அவ்வாறு பேசுதலும் கூடாது என்று வற்புறுத்துகிறான்.

Koviloor Digital Library

நல்ல படை, நெடும்படை, பெரும் படை என்று படைக்கு மூன்று அடை கொடுத்தது நல்ல படை என்பது அதன் நேர்மைத் தன்மைக்கும் நெடும்படை என்பது அதன் ஆற்றலுக்கும், பெரும் படை என்பது அதன் அளவிற்கும் எனக் கொள்ள வேண்டும்.

48. ''சேண்உயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை, அன்னது நினைக்கல் ஆகுமோ?
பூண்இயல் மொய்ம்பினாய்! போந்தது ஈண்டு, எனைக்
காணிய; நீ இது பின்னும் காண்டியால்'' (2520)

(பூண்-அணிகலன்கள்; சேண்-மிக; தேவு-கடவுள்; காணிய-காண்பதற்காக; மொய்ம்பு-தோள்கள்; ஆணி-உரையாணி / அச்சாணி / உரைகல்)

''அணிகலன்களை அணிந்த வலிமையான தோள்களை உடையவனே! மிக உயர்ந்த தருமத்தின் கடவுளாக விளங்கும் பரதனை, நேர்மையான நடுவு நிலைமை தவறாத, நன்னெறிக்கு உரைகல் போன்ற பரதனை, நீ நினைத்தது போலத் தவறாகக் கருதலாகுமோ? அவன் இங்கு வந்திருப்பது என்னைக் காண்பதற்காகத்தான். இதனை நீ அவன் இங்கு வந்த பின்பு தெரிந்து கொள்ளத்தான் போகிறாய்'' என்றான் இராமன்.

பரதனை இந்தச் சொற்களை விட எப்படிப் பாராட்ட முடியும்? சேண் உயர் தருமத்தின் தேவு என்றும், ''செம்மையின் ஆணி'' என்றும் பரதனை இராமன் பாராட்டுவதினின்றும் இராமனுக்குப் பரதனிடத்திருக்கும் பேரன்பும், அசைக்க முடியாத நம்பிக்கையும் புலப்படுத்தப்படுகிறது. இலக்குவன் பரதனைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணங்கள் தவறானவை என்று மீண்டும் வலியுறுத்துகிறான் இராமன். செம்மை என்பது மனக்கோட்டம் இல்லாத நடுவு நிலைமையைக் குறிக்கும்.

49. பரதனும் சத்துருக்கனனும் மட்டும் முதலில் வருதல்

என்றனன், இளவலை நோக்கி, ஏந்தலும்
நின்றனன், பரதனும் நிமிர்ந்த சேனையைப்
''பின் தருக'' என்று, தன் பிரிவுஇல் காதலின்
தன்துணைத் தம்பியும், தானும் முந்தினான். (2521)

(ஏந்தல்-பெருமையிற் சிறந்தோன்; பின் தருக-பின் தங்கி இருக்க; முந்துதல்-முற்பட்டு வருதல்; நிமிர்ந்த-மிகப்பரந்த; இளவல்-இலக்குவன்)

என்று இவ்வாறு பெருமையிற் சிறந்தோனாகிய இராமன், தன் இளவலான இலக்குவனுக்குக் கூறிவிட்டுப் பரதன் வருகையை எதிர் நோக்கி நின்றிருந்தான்; அப்பொழுது பரதனும், தனது மிகப் பரந்த சேனை இப்பொழுது பின் தங்கி இருக்கட்டும், பின்னர் அழைத்து வருக எனச்

Koviloor Digital Library

சுமந்திரனுக்குக் கட்டளையிட்டு விட்டு, தன்னை எப்போதும் பிரிய இயலாத அன்புடையவனும், தனக்குத் துணை போன்றவனுமான தன் தம்பி சத்துருக்கனனையும் அழைத்துக்கொண்டு இராமபிரான்பால் செல்ல முற்பட்டான்.

50. பரதனது நிலையை இராமன் நோக்குதல்

தொழுது உயர்கையினன்; துவண்ட மேனியன்;
அழுது அழி கண்ணினன்; ''அவலம் ஈது'' என
எழுதிய படிவம் ஒத்து, எய்துவான் தனை,
முழுது உணர் சிந்தையான், முடிய நோக்கினான். (2522)

(துவண்ட-மெலிந்த; அழி-பொலிவிழந்த; அவலம்-துன்பம்; முடிய-முழுவதும் நன்றாகக் கூர்ந்து; படிவம்-உருவம்)

உச்சியின் மீது கூப்பிய கரங்களையும், வாடி வதங்கிய உடம்பை உடையவனும், இடைவிடாது அழுததால் பொலிவிழந்த கண்களை உடையவனும் ''துன்பத்தின் உருவம்'' இதுதான் என்று கண்டவர்கள் கூறுமாறு எழுதப்பட்ட ஓவியம்போன்று விளங்குகின்றவனுமானபரதன், இராமனை வந்து அடைந்தான். எல்லாவற்றையும் நன்கு முழுவதும் அறிந்து உணர்ந்த பெரு உள்ளம் கொண்ட இராமபிரான், பரதனைப் பாதாதிகேசம் முழுவதும் கூர்ந்து நன்றாக உற்று நோக்கினான்.

இராமபிரானையே எண்ணி எப்போதும் திசைநோக்கிக் காத்திருப்பவன் பரதன் எனவே தொழுது உயர்கையினன்; காய் கிழங்குகளையே உண்டு வந்தவன் எனவே துவண்ட மேனியன்; இராமபிரானின் பிரிவை நினைத்து இடைவிடாது அழுது கொண்டிருப்பவன் எனவே அழுது அழிகண்ணினன்; இவையெல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக இணைத்து ஒரு சித்திரம் தீட்டினால் எப்படி இருக்குமோ அப்படித் துன்பத்தின் உருவமாகவே விளங்கினான் என்று கூறியது ஒரு நயம். அவலம் என்பது எட்டுவகை மெய்ப்பாடுகளுள் ஒன்று; எட்டு மெய்ப்பாடுகளாவன ''நகையே, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'' என்பது தொல்காப்பியம். ''வீரம், அச்சம், இழிவொடு வியப்பே, காமம், அவலம், உருத்திரம், நகையே'' என்பது தண்டியலங்காரம். அழுகை என்பது நான்கு காரணங்களால் வரும் என்பதை உணர்க. ''இளிவே, இழவே, அசைவே, வறுமை என விளிவில் கொள்கை அழுகை நான்கே'' என்பதும் தொல்காப்பியம். முழுது உணர் சிந்தையான் என்பது இராமபிரானின் அவதார உண்மையைக் குறித்தது. முடிய நோக்கினான் என்பது இவையெல்லாவற்றையும், இலக்குவன் கூறிய கூற்றுக்களையும் மனத்துட் கொண்டு உற்று நோக்கினான் என்பதைக் குறிக்கும்.

Koviloor Digital Library

51. இராமன் இலக்குவனிடம் பரதன் கோலம் காணச் சொல்லுதல்

கார்ப் பொரு மேனி அக்கண்ணன் காட்டினான்
''ஆர்ப்பு உறு வரிசிலை இளைய! ஐய! நீ
தேர்ப்பெருந்தானை அப்பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு'' எனா. (2523)

(கார்-மேகம்; கண்ணன்-இராமன்; ஆர்ப்பு-நாண் ஒலி; பொருந்த-நன்றாக; கோலம்-வடிவம் / தோற்றம்)

மேகம் போன்ற கரிய மேனியை உடைய இராமபிரான், வில்லின் நாண் ஒலி ஒலிக்கக் கேட்டு, கட்டமைந்த வில்லினை ஏந்திய தன் தம்பி இலக்குவனை நோக்கி, ''தம்பி, பெரிய தேர்ப்படையுடனும் மற்ற படைகளுடனும் நம்மேல் போரிடுவதற்காகச் சீறி வந்த பரதனது பெரிய போர்க்கோலத்தை நன்றாகக் காண்பாயாக'' எனத் தவக்கோலத்தில் இருந்த பரதனைப் புன்முறுவலுடன் சுட்டிக் காட்டினான்.

பரதன்மேல் இலக்குவன் கொண்ட கணிப்புத் தவறு என்று இராமன் சுட்டிக் காட்டினான் என்க.

52. இலக்குவன் தவறை உணர்தல்

எல்ஒடுங்கிய முகத்து இளவல் நின்றனன்,
மல் ஒடுங்கிய புயத்தவனை வைது எழும்
சொல்லொடும் சினத்தொடும் உணர்வு சோர்தர
வில்லொடும் கண்ணின் நீர் நிலத்து வீழவே. (2524)

(மல்-வலிமை; வைது-பழித்து / ஏசி / நிந்தித்து; உணர்வு-அறிவு; சோர்தல்-தளர்தல்; எல்-பொலிவு / ஒளி; ஒடுங்கிய-மழுங்கிய /குன்றிய)

வலிமை குன்றிய தோள்களை உடைய பரதனைக் கண்டதும், இலக்குவன், பரதனைத் தான் முன்பு பழித்து உரைத்த சொற்களும், அதற்குக் காரணமான அவனது தீராக் கோபமும், அறிவும் தளர்ந்து அழியவும், தன் கையில் பிடித்திருந்த வில் தானாகவே கை நழுவிக் கீழே விழவும், கண்களிலிருந்து கண்ணீர் நிலத்தில் விழவும், ஒளி இழந்த முகத்தோடு நின்றான்.

தான் பரதனைப் பற்றிக் கொண்டிருந்த கணிப்புத் தவறாகிப் போனதே என்ற குற்ற உணர்ச்சியால் அவன் வாடிய முகத்துடன் பொலிவிழந்து செயலற்று நின்றான் என்பதாம். மனம் சோர்வுற்றது. சினம் நீங்கிற்று; காழ்ப்பு உணர்ச்சி அழிந்தது; வில் கை நழுவிற்று; கண்ணீர் வழிந்தது; அவன் வருத்தத்துடன் நிலைகுலைந்து நின்றான்.

Koviloor Digital Library

53. பரதன் தோன்றுதல்

கோது அறத்தவம் செய்து குறிப்பின் எய்திய
நாதனைப் பிரிந்தனள், நலத்து நீங்கினாள்
வேதனைத் திருமகள் மெலிகின்றாள் விடு
தூது எனப் பரதனும் தொழுது தோன்றினான். (2525)

(கோது-குற்றம்; குறிப்பு-கருத்து; நலம்-நன்மைகள்; மெலிதல்-வாடுதல்)

குற்றம் இல்லாதபடி நெடுங்காலம் தவம் செய்து, தனது கருத்தின்படி அடைய வேண்டிய நாயகனை அடைய முடியாது பிரிந்தவளும், அதனால் விளைந்திருக்க வேண்டிய நன்மைகள் அனைத்தையும் இழந்தவளும், துன்பத்தில் வாடுகின்றவளுமாகிய, கோசல நாட்டின் இலக்குமி, இராமனை மீண்டும் நாடாள அழைத்துவருமாறு விடுகின்ற தூதுவனைப் போலப் பரதனும் இராமனைத் தொழுது அவன் முன் தோன்றினான்.

இயல்பிலேயே கோசல நாட்டு அரசாட்சியை இராமன் ஏற்றிருக்க வேண்டும். அது நடக்காது போயிற்று. எனவே கோசலாதேவி தனக்குக் கிடைக்கப்பட வேண்டிய நன்மைகள் கிடைக்கப்பெறாது வருத்த முற்றிருந்தாள். அவ்வருத்தத்தைப் போக்கிக்கொள்ளும் பொருட்டுத் தானே பரதனை இராமனிடம் தூதாக அனுப்பி, அவனை மீண்டும் கோசல நாட்டிற்கு அழைத்து வரும்படி நிலமகள் வேண்டிக் கொண்டதனால் பரதன் அங்கு வந்து இராமன்முன் தோன்றி நின்றான் என்று கவிஞர் தனது கருத்தை ஏற்றிக் கூறுகிறார்.

54. பரதன் இராமன் திருவடி தொழுதல்

''அறம்தனை நினைந்திலை; அருளை நீத்தனை;
துறந்தனை முறைமையை; '' என்னும் சொல்லினான்,
மறந்தனன், மலரடி வந்து வீழ்ந்தனன்,
இறந்தனன் தாதையை எதிர்கண்டு என்னவே. (2526)

அவ்வாறு தோன்றிய பரதன், இறந்த தன் தந்தை தசரதனை நேரில் காண்பது போலவே இராமபிரானைக் கண்டு, ''அரசாள்வது அரசரின் கடமை என்ற அறம்தனை மறந்து விட்டாய்; அதனால் நாட்டு மக்கள்பால் கொள்ள வேண்டிய அருளுணர்ச்சியையும் நீத்துவிட்டாய்; மூத்தவர்க்கே உரித்து அரசு என்னும் நம் சூரியகுல முறைமையையும் அழித்துவிட்டாய்'' என்று கூறிக்கொண்டே, தன்னை மறந்த நிலையில், இராமபிரானது தாமரை மலர் போன்ற திருவடிகளில் வந்து வீழ்ந்தான்.

Koviloor Digital Library

55. இராமனும் உடன் அழுதல்

"உண்டுகொல் உயிர்?" என ஒடுங்கினான், உருக்
கண்டனன்; நின்றனன் கண்ணன்; கண்எனும்
புண்டரீகம் பொழி புனல், அவன் சடா
மண்டலம் நிறைந்து போய் வழிந்து சோரவே. (2527)

(ஒடுங்குதல்-மெலிந்திருத்தல்; உரு-வடிவம்; புண்டரீகம்-தாமரை மலர்; சோர்தல்-ஒழுகுதல்; சடாமண்டலம்-சடைமுடி; கொல்-ஐயம்; மண்டலம்-வட்டம்; வட்டமாகச் சடைமுடியைச் சுழித்துக் கட்டுதலால் சடைமுடிக்குச் சடாமண்டலம் காரணப்பெயர்)

"உயிர் இருக்கிறதோ இல்லையோ என்று கண்டார் கருதும்படி மெலிந்து தளர்ந்திருந்த பரதனின் தோற்றத்தினைக் கண்டு அசைவற்று நின்றான் அருட்கண்களையுடைய இராமபிரான்; அவனது தாமரையாகிய கண்களிலிருந்து பொழிந்த கண்ணீர்ப்பெருக்கு, அவன்பாதங்களில் விழுந்து கிடந்த பரதனின் சடாமுடியை நிறைத்து, அதனின்று வழிந்து ஓடியது.

திருமாலின் திருவடிகளில் தோன்றிய புனிதக் கங்கை நீர் சிவபெருமானின் சடைமுடியில் சேர்ந்து வழிந்ததல்லவா திருவிக்கிர அவதாரத்தில். அதனை இங்கு நினைவு கூர்க.

56. இராமன் பரதனைத் தழுவுதல்

அயா உயிர்த்து, அழு கண் நீர் அருவி, மார்பிடை
உயாஉற, திருஉளம் உருகப் புல்லினான்;
நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலையம் ஆயினான்
தயாமுதல் அறத்தினைத் தழீஇயது என்னவே. (2528)

(தயா-அருள் / கருணை; நியாயம்-நீதிகள்; நிலையம்-இருப்பிடம் / நிலைக்களம்; உயிர்த்தல்-பெருமூச்சு விடுதல்; உருக-கரைய; உயாஉறுதல்-பெருகி ஓடுதல்; முதல்-முதற் பொருள் / கடவுள் / மூலம்; புல்லுதல்-தழுவிக் கொள்ளுதல்)

நீதி நேர்மைகளுக்கெல்லாம் நிலைக்களனாக விளங்கும் இராமபிரான் நீண்ட பெருமூச்சு விட்டு, அழுகின்ற கண்ணீர் அருவிபோலத் தன் மார்பின்மீது பாய்ந்து பெருகி ஓடவும், தனது அழகிய உள்ளம் உருகிப் போகவும், கருணையாகிய மூலப்பரம்பொருள் அறமாகிய தருமதேவதையைத் தழுவிக் கொள்வது போல, பரதனை எடுத்து மார்பில் இறுகத் தழுவிக் கொண்டான்.

தயை என்பது கருணை அது முதல்; மூலம் / பயன். அறம் என்பது தருமம்; அது கிளை / செயல். இராமன் அருளுக்கு நிலைக்களம் என்றால்

Koviloor Digital Library

பரதன் அறத்திற்கு நிலைக்களன் என்பதாம். தருமத்திற்கு மூலம் கருணை தானே?

57. இராமன் தந்தை பற்றிக் கேட்டல்

புல்லினன் நின்று, அவன் புனைந்த வேடத்தைப்
பல்முறை நோக்கினான்; பலவும் உன்னினான்;
''அல்லலின் அழுங்கினை ஐய! ஆளுடை
மல்லுயர் தோளினான் வலியனோ?'' என்றான். (2529)

(புனைந்த-தரித்திருந்த; வேடம்-கோலம்; அழுங்குதல்-மூழ்குதல் / வருந்துதல்; மல்-வலிமை; வலி-திடம்; அல்லல்-துன்பம்)

அவ்வாறு தழுவி நின்ற இராமன், பரதன் தரித்திருந்த தவக்கோலத்தைப் பலமுறை உற்றுப் பார்த்துப் பலவாறாக எண்ணினான். பிறகு அதற்குக் காரணம் தெரிந்து கொள்ளவேண்டி, ''நீ மிகவும் துன்பத்தில் மூழ்கியிருக்கிறாய் என்று தெரிகிறது. உலகையாளும் தொழிலையுடைய வலிமைபெற்ற உயர்ந்த தோள்களை உடைய நம் தந்தை தசரதன் நலமாக திடமாக உள்ளானோ?'' என்று நலம் விசாரித்தான்.

இராமன் பரதனைப் பலமுறை உற்று நோக்கக் காரணம் அவனது தவக்கோலம். அவன் முகத்தில் தெரிந்த சோகம், உடலில் தெரிந்த சோர்வு, அவன் அங்கு வந்துள்ள நேரம் ஆகியவையே. தந்தை நலமாயிருந்தால் இவை ஏதும் நிகழ்ந்திருக்காது என்று கருதிய இராமன் எல்லாவற்றிற்கும் மூலமான அந்தக் கேள்வியைக் கேட்டான் என்க. ''வலியனோ'' என்பது நலமாக உள்ளானா என்ற பொதுவான விசாரிப்பு.

58. ''தந்தை இறந்தான்'' எனப் பரதன் கூறுதல்

அரியவன் உரைசெயப் பரதன், ''ஐய! நின்
பிரிவுஎனும் பிணியினால், என்னைப் பெற்ற அக்
கரியவள் வரம் எனும் காலனால், தனக்கு
உரிய மெய் நிறுவிப்போய் உம்பரான்'' என்றான். (2530)

(பிணி-நோய்; கரியவள்-கொடியவள் / மனம் இருண்டவள்; காலன்-கூற்றுவன் / இயமன்; மெய்-சத்தியம் / உண்மை; நிறுவி-நிலைநிறுத்தி; உம்பர்-மேல்உலகம் / சுவர்க்கம்; கரியவள் என்பது மூதேவிக்கு உரிய பெயர்; பல தீய பொருட்களை உள்ளடக்கிய சொல்)

யாவராலும் உணர்தற்கு அருமையானவனான இராமபிரான் இவ்வாறு கேட்டதும், பரதன், ''தலைவனே! உன்னுடைய பிரிவு என்னும் தீராத நோயினாலும், என்னைப் பெற்றெடுத்த என் தாய், அந்த மனம் களங்கமுற்ற கொடிய வஞ்சகி கைகேயியின் வரம் என்னும் இயமனாலும், தனக்கே உரிய சத்தியத்தை-வாய்மையை-உலகில் நிலைநிறுத்தி விட்டு,

Koviloor Digital Library

நம் தந்தை தசரதன் மேல் உலகம் சென்று விட்டான். இப்போது விண்ணுலகில் இருக்கிறான்'' என்றான்.

தசரதன் இறந்ததற்கு இரண்டு காரணங்கள். ஒன்று இராமனைப் பிரிந்ததனால் உண்டான நோய்; மற்றொன்று கொடியவளான கைகேயி கேட்ட இரண்டு வரங்கள் என்னும் கூற்றுவன் என்றான் பரதன்.

59. இராமன் மயக்கமுற்று நிலத்தில் விழுதல்

''விண்ணிடை அடைந்தனன்'' என்ற வெய்ய சொல்
புண்ணிடை அயில் எனச் செவி புகா முனம்
கண்ணொடு மனம் சுழல் கறங்குபோல் வல்
மண்ணிடை விழுந்தனன் வானின் உம்பரான். (2531)

(விண்-வானுலகு; வெய்ய-கொடிய; அயில்-வேல்; வானின் உம்பர்-விண்ணுலகத்திற்கும் மேலான பரமபதம்; கறங்கு-காற்றாடி; வல்-வலிய)

விண்ணுலகத்திலும் மேம்பட்ட பரமபதத்திற்கு உரியவனான இராமபிரான், பரதன் ''நம் தந்தை தசரதன் சுவர்க்கம் சென்று சேர்ந்தான்'' என்ற கூரிய கொடிய வார்த்தைகள், வெந்த புண்ணில் வேல் நுழைவதுபோலச் செவிகளில் சென்று சேர்வதற்கு முன்னமேயே, தன் கண்ணும் மனமும் காற்றாடி சுழல்வதுபோலச் சுழன்று, இவ்வலிய நிலத்தில் விழுந்தான்.

பரதனது தவக்கோலத்தையும் சோகத்தையும் கண்ணுற்ற இராமன் உள்ளத்தில் அதனால் ஒரு புண் உண்டாகியிருந்தது; இப்பொழுது தன் தந்தை தசரதன் இறந்துவிட்டான் என்ற கொடிய சொல் அந்த வெந்திருந்த புண்ணில் வேலைப் பாய்ச்சினாற் போன்று இருந்தது என்பதாம்; மண்ணிடை விழுந்தனன் வானின் உம்பரான் என்ற முரண்தொடை ஒரு நயம். இராமபிரான் வானின் உம்பரான்தான் என்றாலும், அவன் கொண்ட மானுட வடிவத்திற்கேற்ப அவனும் மனம் நொந்து நிலத்திடை விழுந்து அழுதனன் என்றது கருதத் தக்கது. புகாமுனம் என்பது விரைவு குறித்தது.

60. இராமன் புலம்புதல் [8 பாடல்கள்]

''இருநிலம் சேர்ந்தனன் இறை, உயிர்த்திலன்,
உரும் இனைஅரவு என உணர்வு நீங்கினான்;
அருமையின் உயிர்வர அயாஉயிர்த்து, அகம்
பொருமினன் பல்முறை, புலம்பினான் அரோ. (2532)

(இரு-பெரிய; இறை-தலைவன்; உரும்-இடி; இனை-வருந்துதல்; அரவு-பாம்பு; உணர்வு-அறிவு / நினைவு; அருமை-அரிய முயற்சி; அயாவுயிர்த்தல்-பெருமூச்சு விடுதல்)

Koviloor Digital Library

எல்லா உயிரினங்களுக்கும் தலைவனான இராமபிரான் பெரிய நிலத்தில் விழுந்தான்; சிறிதும் மூச்சற்றிருந்தான்; இடியேறுண்ட நாகம் போல அறிவும் நினைவும் கலங்கிப் போனான்; பல சைத்திய உபசாரங்களாலும் அரிய முயற்சியாலும் உயிர் மீண்டுவரப் பெற்றான். பெருமூச்சுவிட்டு உள்ளம் விம்மினான்; கீழ்க்கண்டவாறு கூறிப் புலம்பலுற்றான்.

அருமையின் உயிர்வர என்றது அருகிலிருந்தோர் தண்ணீர் தெளித்தல், சூடுவரப்பண்ணுதல் முதலிய சைத்திய உபசாரங்கள் செய்ததைக் குறிக்கும்.

61. ''நந்தா விளக்கு அனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனிஅறத்தின் தாயே! தயாநிலையே!
எந்தாய்! இகல் வேந்தர் ஏறே! இறந்தனையே?
அந்தோ!இனி,வாய்மைக்குஆர்உளரேமற்று'' என்றான். (2533)

(நந்தா-அணையாத; தனி-ஒப்பற்ற; தயா-தயை / அருள் / கருணை; நிலை-இருப்பிடம்; இகல்-பகை; ஏறு-ஆண்சிங்கம்)

''அணையாத விளக்குப் போன்ற தலைவனே! இவ்வுலகத்தோர்க்குத் தந்தை போன்றவனே! ஒப்பற்ற தருமத்தின் தாய் போன்றவனே! அருளுக்கு இருப்பிடமே! என் தந்தையே! பகை வேந்தர்களுக்கு ஆண்சிங்கம் போன்றவனே! எங்களை எல்லாம் விட்டுவிட்டு இறந்துபோய் விட்டாயே! ஐயோ! இனிமேல் இவ்வுலகில் வாய்மையையும் சத்தியத்தையும் பேணிப் பாதுகாப்பதற்கு வேறு யார் இருக்கின்றார்கள்?'' என்று அழுது புலம்பினான்.

நந்தா விளக்கு என்பது சுடரில் குறையாத ஒளி விளக்கு என்றும், தூண்டுதல் தேவையற்ற, தானே தன்னைத் தூண்டிக் கொண்டு ஒளியில் குறையாது எப்போதும், அணையாது ஒளிவிடும் விளக்கு என்றும் எல்லாப்பொருள்களையும் கொண்ட ஒரு சொல். நானிலம் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்குவகை நிலங்களையும் கொண்ட உலகத்தைக் குறிக்கும். தன் தந்தையின் குணநலன்களை எண்ணி எண்ணிப் புலம்புகிறான் என்பதாம்.

62. ''சொல்பெற்ற நோன்பின் துறையோன் அருள்வேண்டி
நல்பெற்ற வேள்வி, நவைநீங்க, நீஇயற்றி,
என்பெற்று நீ பெற்றது இன்னுயிர்போய் நீங்கலோ?
கொன்பெற்றவெற்றிக்கொலைபெற்ற கூர்வேலோய்!'' (2534)

(கொன்-கொல்லன் உலை; சொல்-புகழ்; நோன்பு-விரதம் / தவம்; நல்-நன்மை; வேள்வி-யாகம்; நவை-குற்றம்; கொன்-அச்சமுமாம்)

''பகைவர்களுக்கு அச்சத்தைத் தருவதும், எப்பொழுதும் வெற்றியையே ஈட்டித் தருவதும், கொல்லன் உலையில் கூர்மையாக்கப்

Koviloor Digital Library

பட்டதுமான வேற்படையை உடையவனே! மிக்க புகழ்பெற்ற விரதமாகிய தவத்திற் சிறந்த பெரியோனாகிய கலைக்கோட்டு முனிவனின் அருளை வேண்டிப் பெற்று. மக்களுக்கு நன்மை பயக்கின்ற பரிவேள்வியும், மகவு அருள் வேள்வியும் (அசுவமேத யாகம், புத்திர காமேஷ்டி யாகம்) குற்றம் அறச் செய்து முடித்து நீண்ட ஆண்டுகளுக்குப் பின் என்னைப் பெற்றெடுத்தது, உன்னுடைய இனிமையான உயிர் நீங்கி இறந்துபடுவதற்குத்தானா?'' என்று புலம்பினான்.

நவை நீங்க என்பதற்கு மகப்பேறு இல்லாத குறை நீங்கும்படி என்றும், செய்யும் வேள்வியில், மந்திரம், மற்ற யாகத்திற்கு வேண்டிய பொருள்கள் இவைபோன்றவற்றில் எந்தக் குறையும் இல்லாது என்றும் பொருள் கொள்ளலாம். என் பெற்று என்பது தசரதன் அறுபதினாயிரம் ஆண்டு காலம் ஆட்சியும் தவமும் புரிந்து என்னை அரிதினிற் பெற்று என்பதைக் குறிக்கும். தசரதன் உயிர் பிரிந்ததற்குத் தான் பிறந்ததுவும், தானும்தான் காரணம் என்ற குற்ற உணர்வு கொண்டு இராமன் புலம்புகிறான் என்க.

63. ''மன்உயிர்க்கு நல்குஉரிமை
மண்பாரம் நான் சுமக்கப்
பொன் உயிர்க்கும் தாரோய்?
பொறைஉயிர்த்த ஆறு இதுவோ?
உன் உயிர்க்கும் கூற்றாய்
உலகுஆள உற்றேனோ?
மின் உயிர்க்கும் தீ வாய்
வெயில் உயிர்க்கும் வெள்வேலோய்!'' (2535)

(பொன்-சிவந்த மகரந்தப் பொடி; உயிர்த்தல்-சிந்துதல்; தார்-மாலை; உயிர்த்தல்-பெரு மூச்செறிதல்; தீ-கொடிய; வாய்-முனை; வெயில்-ஒளி; மன்-நிலைபெற்ற; பொறை-பொறுத்தல் / இளைப்பாறுதல்; வெள்-வெள்ளிய /வெண்மையான)

''மின்னலுக்கு ஒப்பாகாமல் பெருமூச்சுவிடும் கொடிய முனையை உடைய ஒளி பொருந்திய வெண்மையான வேற்படையை உடையவனே! பொன்போன்று சிவந்த மகரந்தத் தூளைச் சிந்துகின்ற மாலையை அணிந்தவனே! நிலைபெற்ற உலகத்து உயிர்களுக்கெல்லாம் அருள் செய்கின்ற உரிமையையுடைய இவ்வரசுச் சுமையை நான் சுமக்க, நீ இளைப்பாறிய விதம் இதுதானோ? உன்னுடைய உயிருக்கே இயமனாய் மாறி, இவ்வுலக அரசாட்சி செய்ய வந்தேனோ?'' என்றான்.

இராமன் அரசுரிமையை எப்போதும் ஒரு; சுமையாகத்தான் கருதினான் என்பதைக் கம்பன் பல இடங்களிலும் கூறிவருதல் கண்கூடு. அதைப்போலவே இங்கும் மண்பாரம் என்றே அரசுரிமையைக் குறிப்படுவதும் காண்க. முன்பு தசரதன், தன் அரசபாரம் குறைய, இராமன் முடிசூட்டிச் கொள்ள வேண்டும் என்றும், தான் தன் மனைவியுடன் தவம்

Koviloor Digital Library

இயற்றக் கானகம் சென்று இளைப்பாற வேண்டும் என்றும் கூறியதை இங்கே இராமன் நீ இளைப்பாறிய விதம் இதுதானோ என்பதை ''பொறை உயிர்த்த ஆறு இதுவோ?'' எனக் கூறுகிறான். மேலும் தான் பிறந்ததனால் தான் தன் தந்தை மாண்டான் என்பதை உறுதிப்படுத்துவது போல ''உன் உயிர்க்குக் கூற்றாய், உலகாள உற்றேனோ?'' என்கிறான். தசரதன் இறப்புக்குத் தானே காரணம் என்று இராமன் புலம்புதலைப் போலவே, முன்பு இராமன்பிரிவுக்குத்தானேகாரணம் என்று பரதன் புலம்பியதையும் இங்கு ஒப்பு நோக்குக.

64. ''எம்பரத்தது ஆக்கி அரசுரிமை, இந்தியங்கள்
தம் பரத்தில் வீழாத் தவம் இழைத்த ஆறுஇதுவோ?
''சம்பரப் பேர்த் தானவனைத் தள்ளிச் சதமகற்கு, அன்று
அம்பரத்தின் நீங்கா அரசு அளித்த ஆழியாய்!'' (2536)

(தானவன்-அசுரன்; தள்ளி-வென்று நீக்கி / அழித்து; சதமகன்-இந்திரன்; அம்பரம்-வானுலகு; நீங்கா-நிலைத்த; ஆழி-ஆணைச் சக்கரம்; பரம்-வசம்; இந்தியங்கள்-ஐம்பொறிகள் / இந்திரியம்; இழைத்த-இயற்றிய / செய்த; நூறு அசுவமேத யாகங்களைச் செய்தவன் இந்திரன் எனவே சதமகன் இந்திரனுக்குக் காரணப்பெயர். காசிபருக்குத் தனுவின் வழியாகப் பிறந்தோர் தானவர்)

''சம்பரன்என்று பெயர்கொண்ட அசுரனைப் போரில் வென்று அழித்து, நூறு அசுவமேத யாகங்களைச் செய்து முடித்து இந்திர பதவியில் இருக்கும் இந்திரனுக்கு, முன்பு, வானுலகத்தின் என்றும் அழியாத அரசாட்சியை மீட்டுக் கொடுத்த ஆணைச் சக்கரத்தை உடையவனே! இந்நாட்டின் அரசுரிமையை எங்கள் வசம் தந்துவிட்டு, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் வசம் வீழ்ந்துவிடாமல் நீ தவம் இயற்றிய முறை இதுதானோ?'' என்றான்.

முன்பு தசரதன் இராமனுக்கு முடிசூட்டி, தான் ஐம்புலன்களையும் அடக்கித் தவ வாழ்வு மேற்கொள்ள வேண்டும் என்று விழைந்தானல்லவா? அதை இப்பொழுது நினைவு கூர்ந்து ஐம்புலன்களையும் அடக்கி வாழ நினைத்தாயே இன்று ஐம்புலன்களும் அடங்கிப் போகும்படியாக அவை உன்னை அடக்கும்படி ஆகிவிட்டதே? இதுதானோ நீ தவம் இயற்றிய முறை என்று இரக்கமுற்றான் என்க. சம்பராசுரனை அழித்து இந்திரனுக்குத் தேவருலக அரசாட்சியைத் தசரதன் மீட்டுக் கொடுத்த நிகழ்ச்சி பாலகாண்டத்தில் நாம் விரிவாக விளக்கியதே. இந்தியம் என்பது இந்திரியம் என்பதன் சிதைவு.

65. ''வேண்டும் திறத்தாரும் வேண்டா அரசாட்சி
பூண்டு, இவ்வுலகுக்கு இடர் கொடுத்த புல்லனேன்,
மாண்டு முடிவதல்லால், மாயாஉடம்பு இது கொண்டு,
ஆண்டு வருவது இனி, யார், முகத்தே நோக்கவோ?'' (2537)

Koviloor Digital Library

(வேண்டுதல்-விரும்புதல்; பூண்டு-மேற்கொண்டு; இடர்-துன்பம்; புல்லன்-புன்மையேன் / அற்பன்; மாயா-சாகாத; ஆண்டு-அங்கு / அயோத்திக்கு)

''எல்லாவற்றின் மேலும் ஆசைகொண்டு எல்லாப் பொருளையும் விரும்புகின்றவர் கூட வேண்டி விரும்பிப் பெறாத இந்த அரசாட்சியை, உன் சொல்லால் நான் ஏற்றுக் கொண்டேன். அதனால் இவ்வுலகத்தார்க்கு மிகுந்த துன்பத்தைத் தந்துவிட்ட அற்பன் ஆகிவிட்டேன்; இனிமேலும் நான் மாண்டு போகாமல், இன்னும் அழியாத இந்த உடம்பைத் தாங்கிக் கொண்டு அரசாட்சி செய்ய எண்ணுவது எவ்வாறு பொருந்தும்? நான் அயோத்திக்கு மீண்டும் சென்று யார் முகத்தில் விழிப்பேன்'' என்று மிகவும் இரக்கப்பட்டுப் புலம்புகிறான் இராமன்.

அரசாட்சி என்பது ஒரு சுமை. உலகிலுள்ள எல்லாவற்றையும் விரும்பிப் பெற ஏங்குபவர்கள்கூட அரசாட்சியை விரும்பி ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். காரணம் அது ''துன்பம் அல்லது தொழுதகவுஇல்'' என்பது சிலப்பதிகாரம். தான் அரசாட்சியை ஏற்றுக் கொள்ள இசைந்ததனால்தான் தந்தை தசரதன் மாண்டான். அதனால் உலகுக்கே துன்பம் விளைவித்தவன் ஆவேன் என்கிறான் இராமன். தான் அரசாட்சியை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்காது இருந்திருந்தால் தந்தை தசரதன் இறந்திருக்க மாட்டான்; உலகமும் துன்புற்றிருக்காது என்பது இராமனின் உட்கோள்.

66. ''தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தேன் என்னத் தரியாது, காவல! நீ
வானடைந்தாய்; இன்னம்இருந்தேன் நான்; வாழ்வு உகந்தே
ஊனடைந்த தெவ்வர் உயிரடைந்த ஒள் வேலோய்!'' (2538)

(தெவ்வர்-பகைவர்; ஊன்-தசை; அடைதல்-கவர்தல் / பொருந்துதல் / நிறைந்திருத்தல்; ஒள்-ஒளிபொருந்திய; கைவிட்டு-துறந்து; தரித்தல்-பொறுத்தல்; உகந்து-விரும்பி)

''பகைவர்களின் தசையையும் உயிரையும் கவர்ந்து கொள்ளும் ஒளி பொருந்திய வேற்படையை உடைய மன்னவனே! தேன்மிக்குச் சொரிகின்ற மலர்களை உடைய சோலைகளைக் கொண்ட செல்வச் செழிப்பு மிக்க அழகிய கோசல நாட்டைவிட்டு நான் கானகம் புகுந்தேன் என்று கண்ட அளவிலேயே அதைப் பொறுக்கலாற்றாது நீ இறந்து வானுலகம் சென்றுவிட்டாய். ஆனால் நீ இறந்து விட்டாய் என்று கேள்வியுற்ற பின்னரும் இன்னும் நான் வாழ்வதற்கு ஆசைப்பட்டு உயிரோடு இருக்கிறேனே! இது என்ன கொடுமை?'' என்று அழுது புலம்பினான் இராமன்.

இருவரது அன்பிற்கும் உள்ள வேறுபாட்டையும், ஏற்றத்தாழ்வுகளையும் கூறிப் புலம்புகிறான் என்க. அன்பிற் சிறந்த

Koviloor Digital Library

தசரதன், அன்பு சிறிதும் அற்ற இராமன் மேல் வைத்த அன்பை நினைந்து உருகினான் என்பதாம்.

67. ''வண்மையும், மானமும், வானவர்க்கும் பேர்க்கில்லாத்
திண்மையும், செங்கோல் நெறியும், திறம்பாத
உண்மையும், எல்லாம் உடனே கொண்டு ஏகினையே
தண்மை தகை மதிக்கும் ஈந்த தனிக்குடையோய்!'' (2539)

(தகை-அழகிய / பெருமை வாய்ந்த; தண்மை-குளிர்ச்சி; தனி-ஒப்பற்ற; வண்மை-ஈகைக்குணம்; பேர்த்தல்-நீக்குதல்; திண்மை-வலிமை; திறம்பாத-பிறழாத / மாறுபடாத)

''பெருமையும் அழகும் மிக்கச் சந்திரனுக்குக் கூட குளிர்ச்சியை அளிக்கின்ற ஒப்பற்ற வெண்கொற்றக் குடையை உடையவனே! ஈகைக் குணத்தையும், மானத்தையும், தேவர்களாலும் கூட நீக்கமுடியாத வலிமையையும், நேர்மை தவறாத அரசாட்சி முறையையும், என்றும் மாறுபடாத சத்தியத்தையும், இன்னும் மற்றும் உள்ள நல்ல பண்புகள் அனைத்தையும் நீ உன்னுடன் கூடவே எடுத்துக் கொண்டு சென்று விட்டாயே?'' என்றான் இராமன்.

இத்தகைய நற்குணங்கள் அனைத்தையும் நீ உன்னுடன் எடுத்துக் கொண்டு சென்று விட்டதனால் இனி மக்கள் எல்லோரும் நற்பண்புகளை மேற்கொள்ள முடியாதே? என்ற இரக்கத்தால் இராமன் இவ்வாறு கூறினான் என்க. இந்நற்பண்புகள் கொண்டவர்களை இனிக் காண முடியாது என்பது கருத்து. மானம் என்பது தன் நிலையில் தாழாமையும், ஊழ்வினையால் தாழ்வு வந்துழி, உயிர் வாழாமையுமாம்.

68. இராமனை எல்லோரும் தேற்றுதல்

என்று எடுத்துப் பற்பலவும் பன்னி, இடர் உழக்கும்
குன்று எடுத்த போலும் குவுவுத் தோள் கோள் அரியை,
வன்தடக்கைத் தம்பியரும், வந்தடைந்த மன்னவரும்,
சென்றெடுத்துத் தாங்கினார்; மா வதிட்டன் தேற்றினான். (2540)

(எடுத்து-உயர்த்தி; பன்னி-பன்முறை கூறி; உழத்தல்-வருந்துதல்; குவவு-திரண்ட; கோளரி-ஆண் சிங்கம்; மா-பெருமை; வதிட்டன்-வசிட்டன்; இந்திரியங்களை வசப்படுத்தியவன் என்பதால் வசிட்டன் அவனுக்குக் காரணப்பெயர்)

என்று இவ்வாறு உரத்த குரலில் பலவாறும் பலமுறை கூறி அரற்றித் துன்பத்தில் வருந்தும், குன்றுபோன்ற திரண்ட தோளை உடைய ஆண்சிங்கமான இராமபிரானை, வலிய பெரிய கைகளை உடைய அவன் தம்பியர் மூவரும், அப்போது அங்கு வந்து சேர்ந்த சிற்றரசர்களும், ஓடோடிச் சென்று, தூக்கி நிறுத்தி, அணைத்துக் கொண்டார்கள்; பெருமை

Koviloor Digital Library

பொருந்திய வசிட்ட முனிவனும் இராமனுக்கு ஆறுதல் கூறித் தேற்ற முற்பட்டான்.

வசிஷ்டன் என்ற சொல்லுக்கு இந்திரியங்களை வசப்படுத்தியவன் என்றும், ஞானத்தில் குடி கொண்டவன் என்றும், பிரம ஒளி மிக்கவன் என்பதும் பொருள்.

69. பின்னால் நின்றவர்களில் சிலர் வந்து கூடுதல்

பன்னரிய நோன்பின் பரத்துவனே ஆதியாம்
பின்னு சடையோரும், பேருலகம் ஓர் ஏழின்
மன்னவரும், மந்திரியர் எல்லோரும், வந்தடைந்தார்;
தன்னுரிமைச்சேனைத்தலைவோரும்தாம் அடைந்தார். (2541)

(பன்னரிய-சொல்லுதற்கரிய; நோன்பு-தவம்; பின்னுதல்-திரித்து விடுதல் / தரித்திருத்தல்; உரிமை-பற்று)

சொல்லுதற்கு அருமையான விரதமிருந்து தவமியற்றிய பரத்துவாசன் முதலான சடைமுடி தரித்த முனிவர்களும், பெரிய உலகத்தில் ஏழு தீவுகளின் மன்னர்களும், அவர்களின் அமைச்சர்களும், இராமன் இருக்குமிடம் வந்து சேர்ந்தனர். அவர்களுடன் இராமனிடம் பற்றுக் கொண்ட சேனைத் தலைவர்களும் அவனை வந்தடைந்தனர்.

ஏழு உலகம் என்பது ஏழு தீவுகளாகிய இவ்வுலகம் என்பதைக் குறிக்கும். ஏழு தீவுகள் நாவல், இறலி, குசை, கிரௌஞ்சம், புட்பகம், தெங்கு, கமுகு என்பனவாம். பரத்துவாச முனிவன் பரதனுடன் கூடவரவில்லை என்று வான்மீகம் கூறும். ஆனால் கம்பன் இங்கே பரத்துவாசன் வந்ததாகக் கூறுவது நோக்கத் தக்கது.

70. மற்ற எல்லோரும் வந்து சேருதல்

மற்றும் வரற்பாலர் எல்லாரும் வந்தடைந்து,
சுற்றும் இருந்த அமைதியினில், துன்பு உழக்கும்
கொற்றக் குரிசில் முகம் நோக்கிக் கோமலரோன்
பெற்ற பெருமைத் தவமுனிவன் பேசுவான். (2542)

(அமைதி-பொழுது; உழத்தல்-வருந்துதல்; கொற்றக் குரிசில் -வெற்றித் தலைவன்; கோ-சிறந்த; வரற்பாலர்-வரத்தக்கவர்கள் / வரவேண்டியவர்கள்)

இன்னும் வரவேண்டியவர்கள் அனைவரும் வந்து சேர்ந்து, இராமனைச் சுற்றியிருந்த சமயத்தில், தந்தை இறந்ததனால் துன்பமுற்று வருந்தியழும் வெற்றித் தலைவனாகிய இராமனது முகத்தைப்பார்த்து, மலர்களிலெல்லாம் மேன்மையானதும், முதன்மையானதுமான தாமரை மலரில்வீற்றிருப்பவனாகிய பிரமதேவன்பெற்றெடுத்த, பெருமை மிக்கத்

Koviloor Digital Library

தவத்தினை இயற்றியவனான வசிட்ட முனிவன் கீழ்வருமாறு கூறலானான்.

முகம் நோக்கிப் பேசுவது முனிவர் மரபு; ''பூவெனப்படுவது பொறி வாழ்பூவே'' என்றும், ''பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரையே'' என்றும் கூறுவர். எனவே, தாமரையைக் கோமலர் என்றான். பிரமனின் நகத்தில் தோன்றியவன் வசிட்டன் என்று பாகவதம் கூறும்.

71. வசிட்டன் தேறுதல் மொழி [8 பாடல்கள்]

''துறத்தலும் நல்லறத் துறையும் அல்லது
புறத்து ஒரு துணை இலை, பொருந்தும் மன் உயிர்க்கு
இறத்தலும் பிறத்தலும் இயற்கை'' என்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்ட நீ?'' (2543)

(மன்-நிலைபேறுடைய; இயற்கை-இயல்பு; துறைதல்-நிற்றல்; புறத்து-வேறு; துணை-பற்றுக்கோடு; வரம்பு-எல்லை)

''இவ்வுலகில் பிறந்த எல்லா உயிரினங்களுக்கும் இறந்துபோதலும், மீண்டும் பிறந்து வருதலும் இயல்புதான். எனவே உலக இன்பங்களைத் துறத்தலும், நல்ல தரும காரியங்களை இயற்றி இல்லற வழியில் நிற்றலுமாகிய இவ்விரண்டு வழிகளைத் தவிர வேறு ஒரு பற்றுக்கோடும் இல்லை என்று நூல்கள் கூறுவதை, வேதங்கள் எல்லாம் கற்றுணர்ந்து அவற்றை அளவிட்டு அறிந்த நீ மறந்துபோனாயோ?'' என்று வசிட்டன் தேறுதல் கூறத் தொடங்குகிறான்.

''உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'' என்பது குறள் 339. ''சாதலும், பிறத்தல் தானும் தம் வினைப் பயத்தின் ஆகும்; ஆதலும் அழிவும் எல்லாமும் அவை பொருட்கு இயல்பு கண்டாய்'' என்பது சீவகசிந்தாமணி. எனவே தந்தை இறந்ததற்காக நீ வருந்துதல் வேண்டா என்பது முனிவனின் தேறுதல் மொழி. தசரதன் இல்லறத்துறையில் ஈடுபட்டு அறநெறியில் நின்று அரசாட்சி செய்துதான் விண்ணுலகு எய்தியிருக்கிறான். எனவே, நீ வருந்துவது தவிர்க்க என்றான்.

72. ''உண்மைஇல் பிறவிகள் உலப்புஇல் கோடிகள்
தண்மையில் வெம்மையில் தழுவின'' எனும்
வண்மையை நோக்கிய, வலிய கூற்றின்பால்
கண்மையும் உளது எனக் கருதல் ஆகுமோ?'' (2544)

(உலப்பு-அளவு; உண்மை-நிலைபெறுதல்; தண்மை-இன்பம்; வெம்மை-துன்பம்; கண்மை-கண்ணோட்டம் / கண்ணின் தன்மை / இரக்கம்)

''உலகில் பிறக்கும் உயிரினங்கள் எல்லாம் கோடிக்கணக்கான அளவில்லாத பிறவிகள் எடுக்கின்றன. தாம் செய்த நல்வினை

Koviloor Digital Library

தீவினைகளுக்கு ஏற்ப இன்பமும் துன்பமும் அவ்வுயிர்களுக்கு வந்து பொருந்துகின்றன'' என்று நூல்கள் சொல்லுகின்ற உண்மையை அறிந்த பின்னும் அவ்வாறு அனுபவித்த காலம் முடிந்தவுடன் உயிரையும் உடலையும் பிரிக்க வல்ல ஆற்றல்பெற்ற கூற்றுவனிடத்தில் கண்ணோட்டமும் இரக்கமும் இருக்கும் என்று எண்ணுவது உனக்குத் தக்கது ஆகுமோ? அவ்வாறு நீ கருதலாமோ'' என்றார்.

உண்மை இல்பிறவி என்பது பொய்ம்மையான நிலையில்லாத பிறப்பு என்பதைக் குறிக்கும், அதுபோல உலப்பு இல்கோடிகள் என்பது அளவிடற்கரிய கோடிக்கணக்கான பிறவிகள் என்று விரியும். தண்மையும் வெம்மையும் இன்ப துன்பங்களையும், நல்வினை தீவினையால் ஆன புண்ணிய பாவங்களையும் குறிக்கும். வண்மை என்பது நூற்கருத்தாலாகிய உண்மையைக் குறிக்கும்.வலிய கூற்று என்பது, காலத்தைக் கணித்து, உடம்பிலிருந்து உயிரைப் பிரிக்கும் இயமனின் ஆற்றலைக் குறிக்கும். கண்மை என்பது கண்ணின் தன்மையைக் குறிக்கும். ''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்'' என்பது குறள் 535. கூற்றுவனைக் ''காலன் என்னும் கண்ணிலி'' என்று புறநானூறு கூறும். கூற்றுவனுக்கு நல்ல உயிர் தீய உயிர் என்று வேறுபாடு காட்டத் தெரியாது. காட்டிக் காலத்தை நீட்டிக்கவும் தெரியாது. எனவே அவர்கள் இன்ப துன்பங்களை நுகர்ந்து முடிந்தபின், குறிப்பிட்ட காலம் வந்தபோது இறத்தலே உலக இயற்கை என்பதாம். ''தவத்துறை மாக்கள், மிகப் பெரும் செல்வர், ஈற்று இளம் பெண்டிர், ஆற்றாப்பாலகர், முதியோர் என்னான், இளையோர் என்னான், கொடுந்தொழிலாளன் கொன்றனன் குவிப்ப'' என்பது மணிமேகலை. எனவே நீ உன் தந்தை இறந்தது குறித்து வருந்துதல் வேண்டா என்றார்.

73. ''பெறுவதன் முன் உயிர் பிரிதல் காண்டியால்;
மறுஅறு கற்பினில் வையம் யாவையும்
அறுபதினாயிரம் ஆண்டும் ஆண்டவன்
இறுவது கண்டு, அவற்கு இரங்கல் வேண்டுமோ?'' (2545)

(மறுஅறு-குற்றமில்லாத; இறுவது-இறந்தது; கற்பு-கல்வி)

''தாய் ஈன்றெடுக்கும் முன்பே உயிர் பிரிந்து போகின்ற குழந்தைகளை நாம் காண்பதில்லையா? அப்படி இருக்கும்போது, குற்றமற்ற கல்வியினால் இவ்வுலகம் முழுவதையும் அறுபதினாயிரம் ஆண்டும் முறைப்படி செங்கோலாட்சி செலுத்திய மன்னன் தசரதச் சக்கரவர்த்தி இறந்துபோனது குறித்து, அவனுக்காக நீ இவ்வளவு வருந்துதல் வேண்டுமோ? வேண்டுவதில்லை'' என்றார்.

பூமிக்குக் கற்பு என்பது பிற வேந்தர்க்கும் பூமி பொதுவாகாமல் தசரதன் ஒருவனுக்கே உரியதாக வைத்து ஆளுதலைக் குறிக்கும். ஏகபோகச் சக்கரவர்த்தி என்பதாம்.

Koviloor Digital Library

பிறக்கும்போதே இறந்துபோகும் தன்மையுடைய உயிர்களை யெல்லாம் பார்க்கும்போது, தந்தை அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்ததோடு மட்டுமல்ல, மறுஅறு கற்பினில் வையம் முழுதும் ஆண்டவன் இறந்துபோனதற்கு இராமன் மகிழ வேண்டுமேயன்றி வருந்துதல் கூடாது என்பது முனிவன் கருத்து. இன்றும் இது போன்று நன்குவாழ்ந்து இறக்கும் முதியோர் இறப்பைக் ''கல்யாணச் சாவு'' என்று கூறுவதை நோக்குக.

74. ''சீலமும், தருமமும் சிதைவுஇல் செய்கையாய்!
சூலமும், திகிரியும் சொல்லும் தாங்கிய
மூலம் வந்து உதவிய மூவர்க்கு ஆயினும்
காலம் என்று ஒரு வலை கடக்கல் ஆகுமோ?'' (2546)

(சீலம்-நல்லொழுக்கம்; மூலம்-முதற்பொருள் / பரம்பொருள்; சொல்-வேதநூல்கள்; கடக்கல்-தப்புதல்; மூவர்-சிவன், திருமால், பிரமன்)

''நல்லொழுக்கமும், அறமும், கெடுதல் இல்லாத நற்செய்கைகளும் உடையவனே! முத்தலைச் சூலத்தையும், சக்கராயுதத்தையும், வேதங்களையும் தன்னிடத்தே தங்கப் பெற்றுள்ள, உருத்திரன், திருமால், பிரமன் ஆகிய மூன்று பேர்களுக்கும் கூட இவர்களுக்கெல்லாம் மூலமுதற்பொருளாய் இருந்து உதவுகின்ற பரம்பொருளுக்கும், காலம் என்ற நன்கு பின்னப்பட்ட ஒரு வலையிலிருந்து தப்பிக்க முடியுமோ? முடியாது'' என்றார்.

முத்தலைச் சூலம் தாங்கிய உருத்திரனுக்கு நல்லொழுக்கம் அறிதுயில்; சக்கராயுதம் தாங்கிய திருமாலுக்கு அறம் காத்தல் தொழிலைச் செய்தல்; வேதங்களுக்குத் தலைவனாகிய பிரமனுக்கு உரிய செய்கை படைப்புத் தொழில் என்பதாம். இவ்வாறு உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் தொழிலையுடையவர்களும்; இவர்களுக்கெல்லாம் மேலான மூலப்பரம்பொருள் கூட காலம் என்னும் நன்கு பின்னப்பட்ட வலையிலிருந்து தப்பிக்க முடியாது என்றால், தசரதன் காலம் என்னும் வலையில் அகப்பட்டுக்கொண்டான் என்பதற்காக நீ வருந்தலாமோ?'' என்றார்.

75. ''கண்முதல் காட்சிய, கரைஇல் நீளத்த;
உள் முதல் பொருட்கு எல்லாம் ஊற்றம் ஆவன,
மண்முதல் பூதங்கள் மாயும் என்ற போது
எண்முதல் உயிர்க்கு நீ இரங்கல் வேண்டுமோ?'' (2547)

(கரை-எல்லை; ஊற்றம்-பற்றுக்கோடு / ஆதாரம்; மாயும்- அழிந்து போகும்; எண்-எண்ணி வரையறுக்கப்பட்ட ஆயுள்)

''கண் முதலிய ஐம்பொறிகளுக்குத் தோற்றுவனவும், அளவற்ற நீளத்தை உடையதும், உலகிலுள்ள பொருள்கள் எல்லாவற்றிற்கும்

Koviloor Digital Library

ஆதாரப் பற்றுக் கோடாகவும் விளங்குகின்ற மண்முதல் கூறப்படுகின்ற ஐந்து பூதங்களுமே அழிந்துபடும் என்கின்ற போது, பிறக்கும்போதே வரையறுக்கப்பட்ட வாழ்நாளையுடைய ஓர் உயிராகிய தசரதன் இறந்தமைக்கு நீ இவ்வாறு வருந்த வேண்டுமோ?'' என்றார்.

இவ்வுலகமே, மண், விண், நீர், தீ, காற்று என்னும் ஐந்து பூதங்களின் சேர்க்கை என்பது முதல் இரண்டு அடிகளின் கருத்து. எண் என்பது வரையறுக்கப்பட்ட வாழ்நாளைக் குறிக்கும். அத்தகைய ஆதாரமான பூதங்களுக்கே அழிவு உண்டு என்கின்றபோது, வரையறுக்கப்பட்ட ஆயுட்காலம் கொண்ட மக்கள் இறப்பது வியப்போ? என்பது முனிவர் கருத்து. நிலம்-உடம்பு; நீர்-வாய்; தீ -கண்; காற்று-மூக்கு; வானம்-செவி என்பது. ஐம்பூதங்களின் சேர்க்கைதான் மானிட உடம்பு என்பதைக் குறிக்க வடமொழியில் உடம்பைப் ''பஞ்சபூத பரிணாம சரீரம்'' என்பர். இவை ஐந்தும் ஞானேந்திரியம் எனப்படும். ''அறிவுப்பொறிகள்'' என்பது தமிழாக்கம்.

76. ''புண்ணிய நறுநெயில், பொருஇல் காலமாம்
திண்ணிய திரியினில், விதிஎன் தீயினில்,
எண்ணிய விளக்கு அவை இரண்டும் எஞ்சினால்,
அண்ணலே! அவிவதற்கு ஐயம் யாவதோ?'' (2548)

(புண்ணியம்-நல்வினைப் பயன்; பொருஇல்-ஒப்பில்லாத; திண்ணிய-வலிய; விதி-ஊழ்வினை; எஞ்சுதல்-நீங்குதல்; அவிதல்-அணைந்து போதல்)

''சான்றோனே! புண்ணியம் என்கின்ற மணம்மிக்க நெய்யில், ஒப்பில்லாதகாலம்என்னும்வலிமைவாய்ந்ததிரியைவைத்து, ஊழ்வினை என்கின்ற நெருப்புச்சுடரில், வாழ்க்கை என்று எண்ணப்படுகிற விளக்கை ஏற்றுகிறோம். முன் சொல்லிய நெய்யாகிய புண்ணியமும், திரியாகிய வரையறுக்கப்பட்ட காலமும் நீங்கிப் போனால்-முடிந்துபோனால், நெருப்பில் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைவதில் ஏதேனும் ஐயம் உண்டோ?'' என்றான்.

''நெய்யும் திரியும் இருக்கும் வரைதான் விளக்கு எரியும். அவை இரண்டும் தீர்ந்து போனால் விளக்கு தானாகவே அணைந்துபோகும். அதுபோல புண்ணியம் என்னும் நெய்யும், வாழ்நாள் என்ற காலமும் உன் தந்தை தசரதனுக்குத் தீர்ந்து போயிற்று. எனவே விளக்கு என்னும் அவன் வாழ்க்கை தீர்ந்து அழிந்து போயிற்று. இதனால் மனம் வருந்தி ஆகப்போவது என்ன? அது உலக இயற்கை'' என்றான் முனிவன். உயிர் வாழ்க்கை என்பது ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஒளிவீசும் ஒரு விளக்கு. அது எரிவதற்கு நெய்யாக நல்வினைப் பயனாகிய புண்ணியமும், திரியாக வாழ்நாளும், நெருப்பாக ஊழ்வினையும் அமைகின்றன என்பதாம்.

Koviloor Digital Library

77. ''இவ்வுலகத்தினும் இடர் உளே கிடந்து,
அவ்வுலகத்தினும் நரகில் ஆழ்ந்து, தம்
வெவ்வினை துய்ப்பன விரிந்த யோனிகள்,
எவ் அளவில் செல எண்ணல் ஆகுமோ?'' (2549)

(இவ்வுலகம்-இம்மை; அவ்வுலகம்-மறுமை; வெவ்-கொடிய; விரிந்த-மிகப் பலவான; யோனிகள்-பிறவிகள்; செல-அடங்க)

''இந்த உலகத்திலேயே இப்பிறப்பிலும் துன்பத்தில் கிடந்து உழன்று, பின்பு வேறு உலகத்திற்குச் சென்று அந்தப் பிறப்பிலும் நரகத்திலேயே மூழ்கித் துன்புற்று, தத்தமது இருவினைப் பயன்களையும் அனுபவிக்கும் இயல்பான மிகப்பலவான பிறவி வகைகள்; அவைகளை இவ்வளவென்று அளவிட்டுக் கூறமுடியுமோ? எனவே இதுபற்றி வருந்துதல் கூடாது'' என்றான் வசிட்டன்.

இம்மை, மறுமை ஆகிய இரு பேறுகளிலும் உலகத்தில் உள்ள உயிரினங்கள் எல்லாம் தீயவினையின் பாவத்தை அனுபவிப்பவர்களே மிக அதிகம். அவர்களுக்கு மீண்டும் மீண்டும் பிறவிகள் வந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றை அளவிட்டு எண்ணிக்கையில் அடக்கமுடியுமோ என்றான் என்க. யோனிகள் என்பது பிறப்பின் வகைகளைக்குறிக்கும். அவை மிகப்பலவாதலால்விரிந்த என்றார். ''உரை சேரும் எண்பத்து நான்கு நூறு ஆயிரமாம் யோனி பேதம்'' என்பார் திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில்.

78. ''தசரதன் பரமபதத்தை அடைந்தான்'' என்று வசிட்டன் கூறுதல்

''உண்டுகொல் இதுஅலது உதவி நீ செய்வது?
எண்தகு குணத்தினாய்! தாதை என்றலால்
புண்டரீகத் தனி முதற்கும் போக்குஅரு
விண்டுவின் உலகிடை விளங்கினான் அரோ!'' (2550)

(எண்தகு-மதிக்கத்தக்க; தாதை-தந்தை; புண்டரீகம்-தாமரைமலர்; போக்குஅரு-செல்லுதற்கரிய; விண்டு-விஷ்ணு / திருமால்; விண்டுவின் உலகு-பரமபதம்; விளங்குதல்-ஒளி உடல் பெறுதல்)

''பிறரால் மதிக்கத்தக்க திருக்கல்யாண குணங்களைப் பெற்றவனே! தசரதன் உன்னுடைய தந்தை என்ற ஒரே காரணத்தினால் தாமரை மலரில் வைகும் ஒப்பற்ற கடவுளான நான்முகனுக்கும் செல்லுதற்கரிய திருமாலின் திருஉலகமாம் பரமபதத்திடைச்சென்று ஒளி உடல் பெற்றுப் பொலிவுடன் விளங்குகிறான். இதைவிடவும் நீ அவனுக்குச் செய்கின்ற உதவி வேறு ஏதேனும் உண்டோ? எனவே நீ கலங்காதே'' என்றான் முனிவன்.

தசரதன் தன் நல்வினைப் பயனால் சுவர்க்கம் புகுவதைக் காட்டிலும், இராமனை மைந்தனாகப் பெற்ற ஒரே காரணத்தினால் மீண்டுவர

Koviloor Digital Library

முடியாததும், எவற்றிலும் மேலானதுமான பரமபதத்தை அடைந்து சிறப்புற்று விளங்குகிறான் என்று முனிவன் இராமனையே பாராட்டிக் கூறுவது நோக்கத்தக்கது.

தந்தையை நற்கதியடையச் செய்வதே ஒரு புதல்வனின் கடமை; தசரதன் இப்போது பரமபதத்தினை அடைந்ததால், இதனை விடச் சிறந்ததாக வேறு என்ன உதவியை நீ செய்துவிட முடியும். இதுவே பேருதவி. ''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல்'' என்பது குறள். எண்தகு என்பதற்குத் தகுதியான எட்டுக்குணங்கள் என்றும் பொருள் உரைப்பர். வள்ளுவரும் இறைவனை எண்குணத்தான் என்பார். ''கோள்இல் பொறியில் குணம் இலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை'' என்பது குறள் 9.

79. நீர்க்கடன்கள் செய்யச் சொல்லுதல்

''ஐய! நீ யாதொன்றும் அவலிப்பாய் அலை;
உய்திறம் அவற்கு இனி இதனின் ஊங்கு உண்டோ?
செய்வன வரன்முறை திருத்தி, சேந்த நின்
கையினால் ஒழுக்குதி கடனெலாம்'' என்றான். (2551)

(அவலித்தல்-கவலைப்படுதல்; வரன்முறை-ஒழுங்குமுறை; திருத்தி-செவ்வனே செய்து; சேந்த-சிவந்த; ஒழுக்குதல்-செலுத்துதல்; உய்திறம்-ஈடேறும் வகை; ஊங்கு-மேலாக; கடன்-நீர்க்கடன் / தர்ப்பணம்)

''இராமா! நீ இப்பொழுது ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை; பரமபதத்தை அடைவதை விடவும் மிகச் சிறந்த பேறு வேறு ஏதேனும் அவர்க்கு கிடைக்கற்பாலதோ? எனவே தந்தை இறந்தபிறகு ஆற்றவேண்டிய கடமைகளையெல்லாம் நூல்களிற் சொல்லியபடி குறைவறச் செய்வாயாக. உனது சிவந்த கைகளால் நீர்க்கடனைச் செலுத்துவாயாக'' என்று கூறி முடித்தான் வசிட்டன்.

சேந்த நின்கை என்பதற்கு எப்போதும் நற்காரியங்களையே ஆற்றி அதனால் எப்போதும் சிவந்திருக்கும் கைகள் என்றும், தாமரை மலர்போலச் சிவந்த கைகள் என்றும் பொருள் கொள்வது உண்டு. அந்திமக்கிரியைகள் இருவகைப்படும். நெருப்புக்கடன், நீர்க்கடன் என்பர். இங்கே குறிப்பிடுவது நீர்க்கடன். தர்ப்பணம் என்பது வடசொல். நெருப்புக்கடன் முன்பே சத்துருக்கனன் ஆற்றி முடித்திருப்பதை நினைவு கூர்க.

80. ''விண்ணு நீர் மொக்குளின் விளியும் யாக்கையை
எண்ணி நீ அழுங்குதல் இழுதைப் பாலதால்;
கண்ணின் நீர் உகுத்தலின் கண்டது இல்லை; போய்
மண்ணு நீர் உகுத்தி, நீ, மலர்க்கையால்'' என்றான். (2552)

Koviloor Digital Library

(விண்ணுநீர்-மழை; மொக்குள்-குமிழி; விளிதல்- அழிதல்; யாக்கை-உடம்பு; அழுங்குதல்-வருந்துதல்; இழுதை-அறியாமை; கண்டது-பயன்; மண்ணுநீர்-தூய்மைப் படுத்தும் தர்ப்பண நீர்; உகுத்தல்-செலுத்துதல்)

''ஆகாயத்தில் இருந்து பொழிகின்ற மழை நீரின் குமிழிபோலத் தோன்றி, உடனே அழிந்துபோகும் இவ்வுடம்பு அழிதலை எண்ணி நீ வருந்துதல் அறியாமையின் பாற்பட்டதாகும். நீ கண்ணீர் சொரிந்து ஆகும் பயன் ஒன்றும் இல்லை; விரைவில் எழுந்துபோய் இறந்தவர்களின் பாவங்களைப் போக்கித் தூய்மைப் படுத்தும் தருப்பண நீர்க்கடன்களை உன் தாமரை மலர் போன்ற கைகளால் செலுத்துவாயாக'' என்றான்.

யாக்கை நிலையாமையை மழைநீர்க்குமிழிக்கு ஒப்பிட்டார்; ''இருந்தழுது யாவர் உய்ந்தார்'' என்பது சீவகசிந்தாமணி; ''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர்'' என்பது நல்வழி 10. ''மழை மொக்குளில் தோன்றிக் கெடும் இது ஓர் யாக்கை'' என்பது நாலடியார் 27. ''மாரி மொக்குளில் மாய்ந்து'' என்பது சீவக சிந்தாமணி; இராமன் இருந்து அழுதுகொண்டே இருந்ததால், முனிவன் மீண்டும், போய் நீர்க்கடன் ஆற்றுக என்று கூற வேண்டியதாயிற்று என்க. ஏழுவகைத் தாதுக்களால் யாக்கப்படுவது இவ்வுடம்பு எனவே யாக்கை என்பது உடம்புக்குக் காரணப்பெயர். ஏழுவகைத் தாதுக்கள் உமிழ்நீர், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்பனவாம்.

81. இராமன் நீர்க்கடன் செலுத்துதல்

என்றபின், ஏந்தலை ஏந்தி வேந்தரும்
பொன் திணிந்து அன சடைப் புனிதனோடும் போய்ச்
சென்றனர் செறிதிரைப் புனலில்; ''செய்க'' என,
நின்றனர்; இராமனும் நெறியை நோக்கினான். (2553)

(ஏந்தல்-தலைவன்; ஏந்துதல்-தாங்குதல்; அன-போன்ற; புனிதன்-தூயவன்; செறி-நிறைந்த; புனல்-நீர்த்துறை; நெறி-செய்தற்குரிய முறை)

என்று முனிவன் கூறியபின், சுற்றி நின்ற சிற்றரசர்கள், தலைவன் இராமனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு, செம்பொன்னின் நிறத்தைக் கொண்ட செஞ்சடை உடைய தூய்மையானவனான வசிட்டனுடனும் போய், நெருங்கிய அலைகளையுடைய கங்கை நீர்த்துறையை அடைந்து நின்றனர். அப்பொழுது முனிவன் ''நீர்க்கடன் ஆற்றுக'' என்று கூறியபின், இராமனும் மனம் தெளிவடைந்து, நீர்க்கடன் ஆற்றும் நெறிமுறைகளைச் சிந்திக்கலானான்.

இது நிகழ்ந்த இடம் கங்கைக் கரை என்பர். கங்கைக்கு மந்தாகினி, பாகீரதி, அலெக் நந்தா என்ற வேறு பெயர்களும் உண்டு.

Koviloor Digital Library

82. புக்கனன் புனலினில், முழுகிப் போந்தனன்;
தக்கநல் மறையவன் சடங்கு காட்ட, தான்
முக்கையில் நீர் விதி முறையின் ஈந்தனன்,
ஒக்க நின்று உயிர் தொறும் உணர்வு நல்குவான். (2554)

(ஒக்க-ஒரே தன்மையான; உணர்வு-அறிவு; புகுதல்-இறங்கி; சடங்கு-கிரியை முறைகள்; முக்கை-மூன்றுமுறை)

நீர்த்துறையில் இறங்கி, நீரில் முழுகி வெளிவந்தான்; தகுதியுடைய நான்கு வேதங்களிலும் வல்லவனான வசிட்ட முனிவன் நீத்தார்க்கடன் பற்றி எடுத்துச் சொல்ல, அதன்படியும், நூல்களில் சொல்லப் பட்டிருக்கின்ற முறைப்படியும், தன் கைகளினால் மூன்று முறை நீர் வார்த்தான். யார்? ஒவ்வொரு உயிர்க்குள்ளும் ஒரே தன்மையனாய் அந்தராத்மாவாக உள்ளுறைந்து நின்று அவர்களுக்கு அறிவையும் உணர்வினையும் வழங்கும் திருமாலின் அம்சமான இராமபிரான்.

இறுதி அடியில் இராம அவதாரத்தின் உண்மை நிலையினைச் சொல்லியிருப்பினும், தான் கொண்ட மானுடக் கோலத்திற்கு ஏற்ப மறையவன் சடங்கு காட்டத் தான் முக்கையின் ஈந்தனன் என்றது ஒரு நயம். ஒவ்வொரு முறையும் மும்மூன்றாகச் செய்யப்படும் தருப்பணநீர் என்பதை முக்கையின் நீர் என்றான்.

83. இராமன் சீதை இருந்த பன்ன சாலைக்குத் திரும்புதல்

ஆனவன், பிறஉள யாவும் ஆற்றிப் பின்
மான மந்திரத்தவர், மன்னர், மாதவர்,
ஏனையர் பிறர்களும், சுற்ற ஏகினன்,
சானகி இருந்த அச்சாலை எய்தினான். (2555)

(மானம்-பெருமை; மந்திரத்தவர்-மந்திரிகள் / அமைச்சர்கள்; சுற்ற-சூழ; சாலை-குடில்)

அவ்வாறு செய்தவனான இராமன், மற்றும் உள்ளனவாகிய எல்லா ஈமக்கடன்களையும் செய்து முடித்துப் பின்னர், பெருமையுடைய அமைச்சர்கள், சிற்றரசர்கள், சிறந்த முனிவர்கள், மற்றும் உள்ள அனைவரும் தன்னைச் சூழ்ந்து வர சானகி இருந்த பன்ன சாலைக்குச் சென்று சேர்ந்தான்.

தருப்பணம் செய்த பின்னர்தான் இராமன் சீதை இருந்த பன்ன சாலைக்குச் சென்றான் என்பார் கம்பர்; ஆனால், இராமனுடன் கூடவே நீர்த்துறைக்கும் சென்றாள் சீதை என்பார் வான்மீகி. பிறஉள நீர்க்கடன் என்பது பிண்டம் கொடுத்தல் முதலான பதின்மூன்று நாள் சடங்குகளையும் குறிக்கும். சனகன் மகள் என்பதால் சானகி என்பது சீதைக்கு வேறு பெயர். இங்குலி என்ற கிழங்கைச் சுட்டுப் பிண்டம் கொடுத்தான் என ஒரு சுவடியில் காணப்படுகிறது.

Koviloor Digital Library

84. பரதன் சீதையினிடம் சென்று அழுதல்

எய்திய வேலையில், தமியள் எய்திய
தையலை நோக்கினன், சாலை நோக்கினான்;
கைகளின் கண்மலர் புடைத்துக் கால்மிசை
ஐயன், அப்பரதன், வீழ்ந்து அரற்றினான் அரோ! (2556)

(தமியள்-தன்னந்தனியாக; புடைத்தல்-அடித்துக் கொள்ளுதல் / பொத்திக் கொள்ளுதல்; அரற்றுதல்-கதறுதல் / புலம்புதல்)

எல்லோரும் அந்தப் பன்ன சாலையை அடைந்த பொழுது, தோழியர் துணையில்லாமல் தனியாக வெளியே வந்த சீதையை, சிறப்புற்றவனான பரதன்கண்டான். பின்னர்அவள்இருந்த எளிய பன்னசாலையையும் நன்கு பார்த்தான்; அவள்மேல் இரக்கம் கொண்டு, தன் கண்களாகிய மலர்களைத் தன் கைகளால் அடித்துக் கொண்டான். சீதையின் திருவடிகளில் விழுந்து அழுது புலம்பினான்.

எப்பொழுதும் தோழியர் பரிவாரங்கள் புடைசூழக் காணப்பட வேண்டியவள் சீதை. ஆனால் இப்போது தனியாக வருவதால் தமியள் என்றான்; அரண்மனையில் மாடமாளிகைகளில் அந்தப்புரத்தில் வசிக்க வேண்டியவள் இப்பொழுது ஒரு எளிய பன்ன சாலையில் இருக்கிறாளே என்பதால் அந்தப் பன்ன சாலையையும் ஏறிட்டு நோக்கி, இந்நிலைக்காக வருத்தமுற்றுத் தன் கைகளால் கண்களில் அடித்துக் கொண்டான் என்பதாம்.

85. வெந்துயர் தொடர்தர, விம்மிவிம்மி, நீர்
உந்திய நிரந்தரம், ஊற்று மாற்றில
சிந்திய, குரிசில் அச்செம்மல் சேந்த கண்,
இந்தியங்களில் எறி கடல் உண்டு என்னவே. (2557)

(இந்தியம்-இந்திரியம் / பொறி; எறிதல்-வீசுதல்; குரிசில்-சிறந்த ஆண்மகன்; செம்மல்-தலைமைக்குணம் கொண்டவன்; தொடர்தரல்-பற்றிக் கொள்ளுதல்; சேந்த-சிவந்த; நிரந்தரம்-இடைவிடாது / தொடர்ந்து; ஊற்று-சுரத்தல்)

கொடிய துயரம் இடைவிடாது பற்றி வருத்த, தேம்பித் தேம்பி அவன் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன; கண்ணீர் சொரிவது நிற்கவில்லை, மாறவும் இல்லை; ஆண்களிற் சிறந்தோனாகிய தலைமைக் குணம் படைத்த அந்தப் பரதனின் சிவந்த கண்கள் நீரைச் சொரிவதைப் பார்த்தால், நிலத்தில் உள்ள கடலைப் போல, இவன் கண்களிலும் ஒரு அலை வீசும் கடல் இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றும்படி அவன் கண்கள் கண்ணீரைச் சொரிந்து கொண்டே இருந்தன.

இந்திரியங்கள் என்று எல்லாப் பொறிகளையும் சொன்னாலும் இங்கே கண்ணை மட்டும் குறிப்பதாகக் கொள்க. இதனால் பரதனது துயர மிகுதி தெளிவாக்கப்பட்டது.

Koviloor Digital Library

86. தசரதன் இறந்த செய்தியை இராமன் சீதைக்குக்கூறுதல்

அந்நெடும் துயர் உறும் அரிய வீரனைத்
தன் நெடும் தடக்கையால் இராமன் தாங்கினான்;
நன் நெடும் கூந்தலை நோக்கி, ''நாயகன்
என் நெடும் பிரிவினால், துஞ்சினான்'' என்றான். (2558)

(நெடும்-பெரிய / நீண்ட; துஞ்சினான்-இறந்தான்)

அத்தகைய பெரிய துயரத்தை அடைந்து அரற்றும் வீரனாகிய பரதனை இராமன்தனது பெரிய அகன்ற கைகளினால்தாங்கி அணைத்துக் கொண்டு, நல்ல நீண்ட அழகிய கூந்தலையுடையவளான சீதையை நோக்கி, ''நம் தலைவன் தசரதன் என்னுடைய நீண்ட பிரிவினைத் தாங்கமாட்டாமல் உயிர் துறந்தான்'' என்றான்.

நெடுந்துயர், நெடுந்தடக்கை, நெடுங்கூந்தல், நெடும் பிரிவு என்று உரிய இடங்களில் உரிய சொற்களைப் பயன்படுத்தியிருக்கிற கவிஞனது கவிப்புலமை உணர்ந்து இன்புறுதற்குரியது. இராமன் பதினான்கு ஆண்டு காலப் பிரிவையும், தசரதன் இறக்கப்போவதையும் கருத்திற் கொண்டு நெடும் பிரிவு என்று கவிஞன் உரைத்ததை எண்ணி வியக்காமல் இருக்கக் கூடுமோ? துஞ்சுதல் என்பது இறத்தல் என்பதன் மங்கல வழக்கு. நெடுந்தடக்கை என்பது தாள்தோய் தடக்கையைக் குறிக்கும்.

87. சீதை வருந்திப் புலம்புதல்

துண் எனும், நெஞ்சினாள் துளங்கினாள்; துணைக்
கண் எனும் கடல் நெடும் கலுழி கான்றிட,
மண் எனும் செவிலிமேல் வைத்த கையினாள்,
பண் எனும் கிளவியால் பன்னி ஏங்கினாள். (2559)

(துண்-திடுக்கிடுதல்; துளங்குதல்-நடுங்குதல்; துணை-இரண்டு; கலுழி-கண்ணீர் வெள்ளம்; கான்றுதல்-சொரிதல்; மண்-பூமி; பண்-இசை; கிளவி-சொற்கள்; பன்னி-பலவாறு / பலமுறை; வைத்த-ஊன்றிய; ஏங்குதல்-அழுதல் / புலம்புதல்; செவிலி-வளர்ப்புத்தாய்)

இதனைக் கேட்டவுடன் சீதை திடுக்கிட்டு உள்ளம் நடுங்கினாள்; தனது இரண்டு கண்கள் என்னும் கடலிலிருந்து கண்ணீர் வெள்ளமாய்ச் சொரிய, பூமித்தாய் எனும் வளர்ப்புத்தாயின் மீது தன்கைகளை ஊன்றியபடி, இசைப் பாட்டுப் போல் இனிமையான சொற்களால் பலவாறு பலமுறை அழுது புலம்பினாள்.

இதுவரையிலும் துயரச் செய்திகளையே கேட்டறியாதவள் சீதை. இப்போது முதன்முதலாகத் துயரச் செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டாள். உள்ளம் நடுங்கினாள் என்க. கண்களைக் கடலாக உருவகம் செய்தமை இங்கு காண்க; சீதை யோனியில் பிறவாது மண்ணில்

Koviloor Digital Library

அயோனிஜையாய் தோன்றியவள். மண்மாதா அவளைப் பாதுகாத்துச் சனகனிடம் ஒப்படைத்தாள். எனவே பூமி செவிலித்தாய் என்றும் கூறப்பட்டாள். பெருந்துக்கம் உண்டாகும் பொழுது, நிலத்தில் கையை ஊன்றிக் கொண்டு அழுவது மகளிர் இயல்பு.

88. கல்நகு திரள் புயக் கணவன் பின்செல,
நல் நகர் ஒத்தது நடந்த கானமும்;
''மன்னவன் துஞ்சினன்'' என்ற மாற்றத்தால்,
அன்னமும் துயர்க்கடல் அடி வைத்தாள் அரோ! (2560)

(கல்-மலை; நகுதல்-இகழ்ச்சியால் சிரித்தல்; மாற்றம்-சொல்)

மலையையும் தன் திரட்சியால் இகழ்கின்ற தோள்களையுடைய தன் அன்புக் கணவன் இராமன் பின்னால் செல்லும் சீதைக்கு அந்தக் கொடிய காட்டில் நடந்து சென்றதுகூட நல்ல அயோத்தி நகரத்தில் நடந்து செல்வதைப் போலவே துயரம் தராது இருந்தது. ஆனால் இப்பொழுது ''தசரதன் இறந்தான்'' என்ற சொற்களைக் கேட்டவுடன்தான் துன்பம் என்பதே என்ன என்று அறிந்து கொண்ட பெண் அன்னம் போன்ற சீதையும் துயரமாகிய பெருங்கடலில் தனது முதல் அடிகளைப் பதிக்கத் தொடங்கினாள்.

இராமனின் தோளாற்றலைச் சிறப்பிக்க கல்நகு திரள்புயம் என்றார். காடு கூடச் சீதைக்குத் துன்பமாகத் தோற்றவில்லை, இருவரும் விளையாட்டாகவே காட்டில் நடந்து சென்றனர் என்பதைக் குறிக்க ''நல்நகர் ஒத்த நடந்த கானம்'' என்றார். சீதை இதுவரை துன்பம் என்பதை அறியாது வாழ்ந்தவள். தனது வாழ்க்கையிலேயே இன்றுதான் முதன் முதலாகத் துன்பம் என்றால் என்ன என்பதை அறியத் தொடங்குகிறாள். துன்பம் நுகரத் தொடங்கும் முதல் நிலை. எனவே, ''துயர்க் கடல் அடிவைத்தாள்'' என்றார். இதேபோல முன்பு முனிவன் வசிட்டனைப் பற்றிக் கூறும்போது ''கவ்வையின் பெருங்கடல் முனியும் கால் வைத்தான்'' என்றது நோக்கத்தக்கது. ''ஆறா வெள்ளத்துத் துன்புற அன்றே அடி இட்டான்'' என்பது வில்லிபாரதம். இனி அவளுக்கு வரவிருக்கும் துன்பங்கள் கடல்போன்று அளவிலாதது. ஆதலின் ''துயர்க்கடல்'' என்றார். அன்னம் நீரினுள்ளேயே வாழும் பறவை. இவளும் துன்பம் என்னும் நீர்க்கடலின் உள்ளேயே-இனி இருக்கப் போகிறாள் என்பதைக் குறிப்பது போல இங்கே அன்னத்திற்கு உவமித்தது உணர்ந்து சுவைக்கத் தக்கது.

89. சீதை நீராடித் திரும்பி வருதல்

ஆயவள் தன்னை நேர்ந்து, அங்கை ஏந்தினர்,
தாயரின், முனிவர்தம் தருமப் பன்னியர்;
தூயநீர் ஆட்டினர், துயரம் நீக்கினர்,
நாயகற் சேர்த்தினர்! நவையுள் நீங்கினார். (2561)

Koviloor Digital Library

(நவை-குற்றம்; பன்னியர்-பத்தினியர் / மனைவிமார்; தாயரின்-தாயாரைப் போல; நேர்ந்து-அருகிற்சென்று; அம்கை-அழகிய கைகள்)

குற்றமற்றவர்களான முனிவர்களின் கற்பிற் சிறந்த மனைவியர், பெற்ற தாயரைப் போலச் சீதையினிடம் அன்பு பாராட்டி, அவள் அருகில் சென்று, தமது அழகிய கைகளில் அவளைத் தாங்கிக் கொண்டு தூய கங்கையாற்றின் கரைக்குச் சென்று அவளை முழுகுவித்தனர்; அவளது துயரத்தை ஒருவாறு தேற்றித் தணித்தனர்; பின்னர் இராமன் இருந்த இடம் கொண்டு போய்ச் சேர்த்தனர்.

தீட்டு நீங்குதற் பொருட்டுச் சீதையையும் நீராட்டுவித்தனர் என்பதாம். தீட்டை ''வாலாமை'' என்றும் கூறுவர். துக்கச் செய்தியைக் கேட்டவுடன் தாயாதிகள் எல்லோரும் நீராடித் தலைமுழுக வேண்டும் என்பது வழக்கு. துக்கமும் அதனால் ஏற்படும் சஞ்சலமும், நீரில் மூழ்குவதால் மறையும் என்பது நம்பிக்கை.

90. பட்டத்தரசியர் மூவரும், சுமந்திரனும் வருதல்

தேன்தரும் தெரியல் அச்செம்மல் நால்வரை
ஈன்றவர் மூவரோடு, இருமை நோக்குறும்
சான்றவர் குழாத்தொடும், தருமம் நோக்கிய
தோன்றல்பால், சுமந்திரன் தொழுது தோன்றினான். (2562)

(தெரியல்-பூமாலை; செம்மல்-பெருமை உடையவர்கள்; இருமை-இம்மை / மறுமை; நோக்குறுதல்-ஆராய்ந்து அறிதல்; தரும்-துளிக்கும் / பிலிற்றும்)

தேன் துளிக்கும் மலர்மாலை யணிந்த அந்தப் பெருமைக் குணம் வாய்ந்த நான்கு புதல்வர்களான இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கனன் ஆகியவரை ஈன்றெடுத்த மூன்று தாயர்களான, கோசலை, சுமித்திரை, கைகேயி ஆகியவர்களோடும், இம்மை மறுமைப் பயன்களாகிய பிறப்பு, வீடுபேறு ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து உணர்ந்த சான்றோர்களின் கூட்டங்களோடும், தேர்ப்பாகனும் அமைச்சனுமான சுமந்திரன், இருகரம் கூப்பித் தொழுதவண்ணம் தருமம் ஒன்றையே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் இராமன் எதிரில் வந்தான்.

நால்வர், மூவர், இருமை என்று எண்ணுப் பெயர்களை முறையாக அமைத்துப்பாடிய நயம்சுவைக்கத்தக்கது. ''இருமைவகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று உலகு'' என்பது குறள் 23. சுமந்திரன் இராமனுக்கு மூத்தோன் என்றாலும் இராமன் அரசன் என்பதாலும் தவக்கோலத்தில் இருக்கிறான் என்பதாலும் தொழுது வணங்கினான் என்க.

Koviloor Digital Library

91. தந்தை பற்றித் தாயரிடம் விசாரித்தல்

''எந்தை யாண்டையான்? இயம்புவீர்'' எனா,
வந்த தாயர் தம் வயங்கு சேவடிச்
சிந்தி நின்றனன் சேந்த கண்ணநீர்,
முந்தை நான்முகத்தவற்கும் முந்தையான். (2563)

(முந்தை-முற்பட்ட; யாண்டை-எவ்விடம்; வயங்கு-விளங்குகின்ற; சேந்த-சிவந்த)

எல்லாப் படைப்புக்கும் முற்பட்ட பிரமனுக்கும் முற்பட்ட திருமாலின் அம்சமாகிய இராமபிரான், தன்னை நோக்கி வந்த தாயரின் விளங்குகின்ற சிவந்த பாதங்களில் விழுந்து வணங்கித் தனது சிவந்த கண்களிலிருந்து கண்ணீரைப் பெருக்கி, ''எனது தந்தையான அரசன் தசரதன் இப்பொழுது எங்கே இருக்கிறான்? சொல்லுங்கள்'' என்று அழுது புலம்பினான்.

இவ்வாறு விசாரித்தல் உலகவழக்கு என்பதாம். படைத்தற் கடவுளான நான்முகனையே தனது திருஉந்தித் தாமரையிலிருந்து தோற்றுவித்தவன் திருமால். அவனது அம்சம் இராமன் எனவே ''முந்தை நான்முகத்தவர்க்கும் முந்தையான்'' என்றார். இராமனின் அவதார உண்மை கூறப்பட்டது.

92. கூடியிருந்தவர் அனைவரும் வருந்துதல்

தாயரும் தலைப்பெய்து தாம் தழீஇ,
ஒய்வுஇல் துன்பினால் உரறல் ஓங்கினார்;
ஆயசேனையும், அணங்கு அனார்களும்
தீயின் வீழ்ந்து, தீமெழுகின் தேம்பினார். (2564)

(தலைப் பெய்தல்-ஒருங்கு கூடுதல்; உரறல்-உரக்கக் கதறுதல் / முழங்குதல்; அணங்கு-தேவமகளிர்; தேம்புதல்-விம்மி அழுதல்; ஓய்வுஇல்-தணிதல் இல்லாத / தீராத / நீங்காத)

அப்பொழுது இராமனின் தாய்மார்கள் மூவரும் ஒன்று கூடித் தனித்தனியாக இராமனைப் பேரன்போடு அணைத்துக் கொண்டு, தீர்க்க இயலாததுன்பத்தால் உரக்கக்கதறத் தொடங்கினார்கள். இதுகண்டு, அங்கு வந்திருந்த சேனைகளில் உள்ள ஆடவர்களும், தேவமகளிர் போன்ற பெண்டிரும், தீயில் விழுந்த மெழுகு உருகுவதைப் போல, மனம் உருகித் தேம்பித் தேம்பி அழுதனர்.

அங்கு கூடியிருந்த அனைவரும் ஒருங்கு கூடி அழுதனர் என்பதாம். தாயரும் என்பதால் கைகேயியும் இப்பொழுது அழுது அரற்றினாள் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

Koviloor Digital Library

93. மூவரும் சீதையைத் தழுவிக் கொள்ளுதல்

பின் அவ்வீரரைப் பெற்ற பெற்றி அப்
பொன் அனார்களும், சனகன் பூவையைத்
துன்னி, மார்பு உறத்தொடர்ந்து புல்லினார்,
இன்னல் வேலைபுக்கு இழிந்து அழுந்துவார். (2565)

(பெற்றி-பெருமை; பொன்-திருமகள்; பூவை-நாகணவாய்ப் பறவை / பெண்; துன்னி-நெருங்கி; இழிந்து-உள் இறங்கி)

பின்னர், அந்த நான்கு வீரம் மிக்கவர்களைப் பெற்றெடுத்த பெருமை மிக்க, திருமகள் போன்ற மூன்று தாயரும், சனகனின் மகளும், நாகணவாய்ப் பறவை போன்று இனிமையான சொற்களையும் உடைய சீதையை நெருங்கி, அவளைத் தத்தம் மார்பு பொருந்தும்படி ஒவ்வொருவராக வரிசையாகத் தழுவிக் கொண்டு, துன்பம் என்னும் கடலில் நுழைந்து உள் இறங்கி அழுந்துபவர்கள் ஆனார்கள்.

ஒரு தாய் தன் பெண்ணை அணைத்துக் கொள்வதைப் போல் அணைத்துக் கொண்டாள் கோசலை என்கிறார் வால்மீகி. துயரத்தில் தான் உறவின் நெருக்கம் மிகுதியாகும்.

94. எல்லாச் சேனைகளும், நகர மக்களும் வந்து சேர்தல்

சேனைவீரரும், திருநல் மாநகர்
மான மாந்தரும் மற்றுளோர்களும்,
ஏனை வேந்தரும், பிறரும், யாவரும்
கோனை எய்தினார், குறையும் சிந்தையார். (2566)

(குறையும்-வருந்தும்; கோன்-அரசன் / தலைவன்)

நால்வகைப் படையைச் சார்ந்த வீரர்களும், இராமன் மீதுகொண்ட பேரன்பால் நைந்து வருந்தும் செல்வச்செழிப்பு வாய்ந்த சிறந்த, பெரிய, அயோத்தி மாநகரத்தின் ஆடவர்களும், மற்றும் உள்ள அனைவரும், இவர்களல்லாத குறுநில மன்னர்களும், பிறரும் எல்லோரும் வருந்தி அழியும் மனத்தவராய்த் தங்கள் அரசனான இராமபிரானை அடைந்தார்கள்.

அயோத்தி நகரத்திலிருந்து, இராமன் பிரிவைத் தாங்கமுடியாது, அவனைப் பின் தொடர்ந்து வந்தவர்களை ஒருவர் விடாது கூறவேண்டும் எனபதற்காகவே கவிஞன் மீண்டும் மீண்டும் பிறரும், ஏனையரும், யாவரும், மற்றுளோர்களும் என்று அனைவரையும் உட்படுத்திக்கூறினான் என்க.

Koviloor Digital Library

95. சூரியன் மறைதல்

படம் செய் நாகணைப் பள்ளி நீங்கினான்
இடம் செய் தொல் குலத்து இறைவன் ஆதலால்
தடம் செய் தேரினான், தானும் நீரினால்
கடம் செய்வான் எனக் கடலில் மூழ்கினான். (2567)

(நாகஅணை / நாகணை-பாம்புப் படுக்கை; தடம்-பெரிய; கடம்-கடன் / கடமை)

ஆயிரம் படங்களை விரித்திருக்கும் ஆதிசேஷனாகிய பாம்பின் படுக்கையிலிருந்து நீங்கி வந்து, திருமால் இராமனாக அவதாரம் எடுப்பதற்குக் காரணமாயிருந்த தொன்மையான சூரிய குலத்துக்குத் தான்தான் தலைவன் ஆதலால், ஒற்றைச் சக்கரத்தைக் கொண்ட பெரிய தேரையுடைய சூரியனும், தசரதன் இறந்ததற்காகத் தானும் நீர்க்கடன் செய்ய வேண்டுவது தன் கடமை என்று கருதி, நீர்க்கடன் ஆற்றுவதற்காக மேற்குக் கடலில் மூழ்கினான்.

இயல்பாகச் சூரியன் மறைந்தது என்று கூறாமல் கவிஞன் தன்னுடைய குறிப்பை அதில் ஏற்றிக் கூறுகிறான். சூரிய குல முதல்வன் தான்தான். தனது குலத்தில் பிறந்த தசரதன் மறைவுக்குத் தானும் நீர்க்கடன் ஆற்றுதல் கடமையல்லவா? எனவே நீர்க்கடனையாற்றுவதற்காக அன்றைக்குச் சூரியன் மேற்குக் கடலில் முழுகினான் என்பதாம்.

96. அனைவரும் மறுநாள் இராமனைச் சூழ்ந்திருத்தல்

அன்று தீர்ந்த பின், அரச வேலையும்,
துன்று செஞ்சடைத் தவரும், சுற்றமும்,
தன்துணைத் திருத்தம்பி மார்களும்,
சென்று சூழ, ஆண்டு இருந்த செம்மல்தான். (2568)

(வேலை-கடல்; துன்று-நெருங்கிய / அடர்ந்த; திரு-சிறந்த; செம்மல்-தலைவன் / பெருமையிற் சிறந்தவன்; சென்று-வந்து) (குளகப் பாடல்)

அன்று இரவுப்பொழுது கழிந்தபின், மறுநாள் காலை, கடல் போன்று திரண்டிருந்த அரசர்களும், அடர்ந்த சிவந்த சடையினையுடைய தவமுனிவர்களும், சுற்றத்தினரும் தனக்கு இணையான துணைவர்களான அழகிய, மூன்று தம்பிமார்களும் வந்து, சூழ்ந்து கொண்டிருக்க, பெருமையிற் சிறந்தவனான தலைவன் இராமன் அங்கு வீற்றிருந்தான்.

அரசர்கள் மிகுதி குறித்து அரசர் கடல் என்றான். பரதன் வந்த நாள் முழுவதும் துக்கம் விசாரித்ததிலேயே கழிந்திருந்ததனால் அனைவரும் ஒன்று கூடிப் பேச இயலவில்லை. எனவே, மறுநாள் காலை ஒன்று கூடினர் என்பதாம்.

Koviloor Digital Library

97. இராமன் பரதனிடம் தவக்கோலம் குறித்து வினவுதல்

''வரதன் துஞ்சினான்; வையம் ஆணையால்
சரதம் நின்னதே; மகுடம் தாங்கலாய்
விரதவேடம் நீ என்கொல் வேண்டுவான்?
பரத! கூறு'' எனாப் பரிந்து கூறினான். (2569)

(வரதன்-வரம் அளிக்கும் வல்லவன் / தசரதன்; துஞ்சுதல்-இறத்தல்; வையம்-நாடு; சரதம்-உண்மையான; மகுடம்-முடி; விரதவேடம்-தவக்கோலம்; பரிந்து-அன்பு கொண்டு)

''பரதனே! வேண்டியார்க்கு வேண்டுவன வழங்கும் வள்ளல் தசரதன் இறந்து போனான்; அவனது கட்டளையால் இந்நிலவுலக ஆட்சி முழுவதும் உனக்கே உண்மையில் உரியதாகும். அங்ஙனம் இருக்க, நீ மணிமகுடம் பூண்டு கொள்ளாமல், இந்த மரவுரி தரித்துத் தவக்கோலம் புனைந்துள்ளாயே? இதற்கு என்ன காரணம்? எனக் கூறுவாயாக'' என்று அவன்பால் இராமன் அன்பு கொண்டு கேட்டான்.

வரதன் என்பது வரம் அளிப்பவன் என்றும், வள்ளல் என்றும் பொருள்படும். வையம் பொதுவாக உலகத்தைக் குறித்தாலும் இங்கே கோசல நாட்டைக் குறித்தது.

98. பரதன் வருந்தி தன் கருத்தைத் தெரிவித்தல்
[6 பாடல்கள்]

என்றலும், பதைத்து எழுந்து, கைதொழா
நின்று, தோன்றலை நெடிது நோக்கி, ''நீ
அன்றி யாவரே அறத்துளோர்? அதில்
பின்றுவாய் கொலாம்?'' என்னப் பேசுவான். (2570)

(பதைத்து-துடித்து; தொழா-தொழுது / வணங்கி; நெடிது-நீண்ட நேரம்; பின்றுதல்-பின் வாங்குதல்; தோன்றல்-இராமன்)

என்று இராமபிரான் அவ்வாறு கேட்டவுடன், பரதன் மனம் துடித்து எழுந்து, கைகூப்பி வணங்கி நின்று, இராமபிரானைநீண்டநேரம் முகத்தில் உற்று நோக்கி, சற்றுத் தெளிந்த பின்னர், ''உன்னைத் தவிர இவ்வுலகில் அறநெறியில் நிற்கின்றவர் யார் இருக்கிறார்கள்! அதனின்று நீயும் பின் வாங்கி விடுவாயோ?'' என்று கேட்டுப் பின்னும் தொடர்ந்து பேசுவானானான்.

முனிவர்கள், ஊர்மக்கள் எல்லோரும் கூறியது போலவே இராமனும் கூறியதால் பரதன் மனத்தில் பதைப்பும் நடுக்கமும் உண்டாகியது என்பதாம். இவ்வாறு கூறுவது அறநெறியில் நின்றும் பிறழ இயலாத இராமபிரான்தானா? என்று ஐயமுற்று நெடிது நோக்கினான் என்க.

Koviloor Digital Library

99. ''மனக்கு ஒன்றாதன வரத்தின், நின்னையும்
நினக்கு ஒன்றாநிலை நிறுவி, நேமியான்
தனைக்கொன்றாள் தரும் தனையன் ஆதலால்
எனக்கு ஒன்றா, தவம் அடுப்பது எண்ணினால்''. (2571)

(ஒன்றாதன-பொருந்தாதன; மனக்கு-மனத்துக்கு; நேமியான்-ஆழிச்சக்கரத்தை உடைய தசரதன்; தரும்-பெற்றெடுத்த; தனையன்-மகன்; அடுத்தல்-மேற்கொள்ளுதல்)

''சான்றோர்களின் மனத்திற்குப் பொருந்தாதனவான வரங்களால், உனக்குப் பொருந்தாத தவக்கோலத்தினை அடையச் செய்து, உன்னையும் ஆழிச்சக்கரத்தையுடைய தசரதச் சக்கரவர்த்தியையும் கொன்று விட்டவளான கைகேயி பெற்றெடுத்த புதல்வன் நான். எனவே, தவம் செய்யப் புகுதல் என்பதை நினைப்பதே என் போன்றோர்க்குத் தகாதது அல்லவா?''

தவம் என்பது நற்குடிப் பிறந்தோரும், அறிவில் முதிர்ந்தோரும் ஈடுபடும் செயல் ஆகும். இழிந்தவளான கைகேயி பெற்றெடுத்த மகனான நான் தவமியற்றுதல் பற்றி எண்ணுவது தகுமா? என்று தன்னைத் தானே தாழ்த்திக் கூறிக் கொள்ளுகிறான் என்க. ''நான் கெட்ட கேட்டுக்கு எனக்குத் தவம் ஒரு கேடா?'' என்று உலக வழக்கில் கூறியது போல் கொள்க. தன் தாய் கைகேயி சான்றோர்களாகிய முனிவர்களின் மனத்தை வருத்தினாள்; உனக்குப் பொருந்தாத தவக்கோலத்தை உனக்கு ஆக்கித் தந்தாள்; தந்தை தசரதனைக் கொன்று விட்டாள்; இத்தகைய கொடுமையான தாய்க்கு மகனாகப் பிறந்த பாவி நான். தவமியற்றும் தகுதி எனக்குண்டோ? என்றான்.

100. ''நோவதுஆக இவ்வுலகை நோய் செய்த
பாவ காரியின் பிறந்த பாவியேன்;
சாவது ஓர்கிலேன்; தவம் செய்வேன் அலேன்;
யாவன்ஆகி, இப்பழி நின்று ஏறுவேன்?'' (2572)

(நோய் செய்தல்-வருத்தப்படுத்துதல்; பாவகாரி-பாவி / பாவம் செய்தவள்; ஓர்தல்-முடிவு செய்தல் / துணிதல்; ஏறுதல்-பழி துடைத்தல் / ஈடேறுதல் / மீளுதல் / கடைத்தேறுதல்)

''சான்றோர்கள் வருந்தும்படி இவ்வுலகத்தைத் துன்புறச் செய்த பாவம் செய்தவளாகிய கைகேயினிடத்தில் பிறந்த நான் பெரும் பாவியாவேன். அப்பழியை நீக்குவதற்குச்சாகவும் என்னால் துணிய முடியவில்லை; தவம் மேற்கொள்ளவும் தகுதியில்லாதவனாக இருக்கிறேன். எனவே எதனைச் செய்து நான் இப்பழியைத் துடைத்துக் கடைத்தேறுவேன்? எனக்குப் புலப்பட வில்லையே?'' என்று புலம்புகிறான் பரதன்.

பாவம் செய்தவர்கள் அதனின்றும் நீங்குவதற்கு இரண்டு வழிகள் தான் உண்டு. ஒன்று இறந்துபட வேண்டும்; அல்லது எல்லாவற்றையும் துறந்து

Koviloor Digital Library

தவம் இயற்றித் தீரவேண்டும். இவ்விரண்டும் ஆற்ற இயலாதவனாய் இருக்கிறேனே? நான் எவ்வாறு கடைத்தேறுவேன்? என்று நொந்து கொள்ளுகிறான் பரதன். இவன் பழி என்று கூறுவது, தன் தாயின் செய்கைக்கு ஊரார் தன்னையும் உடந்தை என்று கூறிவிடுவார்களோ? என்ற அச்சமே ஆகும்.

101. ''நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்,
பொறையின் நீங்கிய தவமும், பொங்குஅருள்
துறையின் நீங்கிய அறமும், தொல்லையோர்
முறையின் நீங்கிய அரசின் முந்துமோ?'' (2573)

(நிறை-கற்பு நெறி; நீங்கிய-விலகிய / மாறுபட்ட; நீர்மை-குணம் / பண்பு; பொங்குதல்-கிளர்தல்; தொல்லையோர்-முன்னோர்கள்; அரசு-அரசாட்சி; முந்துதல்-முற்படுதல்)

கற்பு நெறியினின்றும் விலகிய மகளிரது குணமும், பொறுமையிலிருந்து மாறுபட்ட தவ ஒழுக்கமும், மேலே கிளர்ந்து எழுகின்ற அருள் பண்பிலிருந்து நீங்கிய தருமமும், முன்னோர்கள் நெறி முறையினின்றும் வழுவிய அரசாட்சியைக் காட்டிலும் கொடுமையில் முற்பட்டுவிடுமோ? ஆகாது. இவை எல்லாவற்றினும் கொடுமையானது முறைதவறிய அரசுரிமை என்பதாம்.

கற்பினின்றும் நீங்கிய மகளிர், பொறுமையைத் தவிர்த்த தவமுடைய முனிவர்கள், அருளினை நீக்கி அறமாற்றுகின்ற சான்றோர்கள். இவர்களைக் காட்டிலும் முறை தவறி அரசுரிமையைப் பெறுகின்ற நான்தான் மிகக் கொடுமையானவன் என்கிறான் பரதன். அரசுரிமை முறையாக மூத்தவர்க்கு உரியது. எனவே இராமனுக்கு உரிய அரசைத் தான் ஏற்பது எவ்வாறு என்று கேட்கிறான் பரதன். அவ்வாறு ஏற்றுக் கொண்டால், அது இம்மூன்று செயல்களைக் காட்டிலும் கொடுமையானதல்லவா? என்கிறான். தவத்துக்குப் பொறுமை இன்றியமையாதது. ''உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு'' என்பது குறள் 261. ''மாதவர் நோன்பும், மடவார் கற்பும், காவலன் காவல் இல்வழி இன்றாம்'' என்பது மணிமேகலை.

102. ''பிறந்து நீயுடைப் பிரிவுஇல் தொல்அறம்
துறந்து, மாதவம் தொடங்குவாய் என்றால்,
மறந்தும் நீதியில் திறம்பி, வாளின் கொன்று,
அறம்தின்றான் என, அரசு அது ஆள்வேனோ?'' (2574)

(பிரிவுஇல்-பிரிக்க முடியாத; அறம்-இங்கே காத்தல் தொழிலாகிய தருமம்; திறம்புதல்-தவறுதல்)

''தசரதனுக்கு மூத்த மகனாகப் பிறந்து, உனக்கு உரிமையுடைய, உன்னிலிருந்தும் பிரிக்க முடியாத, பழமையான தருமமாகிய

Koviloor Digital Library

அரசுரிமையைக் கைவிட்டுவிட்டு, நீ பெரிய தவம் இயற்றத் தொடங்கினாய் என்றால், நினைவு தப்பி, அறிவு கெட்டு, நியாயத்தினின்றும் மாறுபட்டு, அறத்தை வாளால் கொன்று அழித்து விட்டான் பரதன் என்று எல்லோரும் கூறும்படி, நான் மட்டும் இந்த அரசாட்சியை ஏற்று அரசு ஆள்வேனோ? மாட்டேன்'' என்றான் பரதன்.

''அரசுரிமை உனக்குப் பிறப்புரிமை; நீ அரசாள்வதே அறம்; அவ்வாறு எல்லா உரிமையுமுள்ள நீயே தவம் செய்யக் காட்டுக்குப் போகிறாய் என்றால், எவ்வித உரிமையும் இல்லாத நான் மட்டும்-இவ்வரசாட்சியை ஏற்றுக் கொண்டு அரசாள்வேனோ? அப்படிச் செய்தால் இவன் அறத்தைக் கொன்றவன், நீதி வழுவியவன் என்று என்னை ஏச மாட்டார்களோ?'' என்கிறான் பரதன். காத்தல் தொழிலையுடையவன் திருமால் அவனது அம்சம் இராமபிரான். எனவே உலகைக் காக்கும் தொழில் தொன்றுதொட்டே அவனுக்கு உரிய அறமாக விளங்குவது. அதனை அவனிடமிருந்து பிரிக்க இயலாது என்பதும் இப்போது அவன் தசரதனின் மூத்த மகன், எனவே பிறப்புரிமையாலும் அரசாள்வது என்பது அவனுக்குக் குலதருமமாயிற்று என்பதும் கருத்து.

103. ''தொகைஇல் அன்பினால் இறைவன் துஞ்ச, நீ
புகையும் வெஞ்சுரம் புகுத புந்தியால்
வகைஇல் வஞ்சனாய் அரசு வவ்வ, யான்
பகைவனே கொலாம் இறவு பார்க்கின்றேன்?'' (2575)

(தொகைஇல்-அளவு இறந்த; சுரம்-காடு; புந்தி-புத்தி / மனம்; வகைஇல்-வகுத்தற்கரிய; வவ்வ-கவர்ந்து கொள்ள; இறவு-சோர்கின்ற சமயம் / அற்றம் / நீக்கம்)

''உன்னிடம் கொண்டிருந்த அளவற்ற அன்பின் காரணமாகத் தந்தை தசரதன் உயிரிழந்தான்; நீயோ, புகைந்து எரியும் வெப்பம் மிகுந்த கானகத்தை அடைந்தாய்; நீயும், தந்தையும் இல்லாத சமயம் பார்த்து என் மனத்தால் நினைத்துப் பார்ப்பதற்கும் அரிய வஞ்சனையால் உனக்குரிய அரசைக் கைப்பற்றிக் கொள்ள நான் என்ன உன் பகைவனா?'' என்று கேட்கிறான் பரதன்.

இறவு என்பது இல்லாத சமயம் என்று பொருள்படும். அவ்வாறு நான் செய்தால் எனக்கும் தருணம் பார்த்து அரசை முற்றுகையிட்டுத் தாக்குகின்ற பகைவனுக்கும் என்ன வேறுபாடு? என்றான் என்க.

104. பரதன் இராமனிடம் நாடு திரும்ப வேண்டுதல்

''உந்தை தீமையும், உலகு உறாத நோய்
தந்த தீவினைத்தாய் செய் தீமையும்,
எந்தை! நீங்க, மீண்டு அரசு செய்க'' எனாச்
சிந்தை யாவதும் தெரியக் கூறினான். (2576)

Koviloor Digital Library

(உறாத-அடையாத / நேர்ந்திராத; நோய்-வருத்தம் / துன்பம்; சிந்தை-மனக்கருத்து; தெரிய-விளங்க)

''என்தந்தை போன்றவனே! உன்னுடைய தந்தையாகிய தசரதன் செய்த தீங்கினையும், இதுவரை உலகிற்கு நேர்ந்திராத துன்பத்தைச் செய்த கொடியவளாகிய என் தாய் கைகேசி செய்த தீங்கினையும் நீக்கும்வண்ணம், நீ திரும்பவும் அயோத்தி நகருக்கு வந்து அரசுரிமையை ஏற்றுக் கொள்வாயாக!'' என்று பரதன், தன் உள்ளக்கருத்து முழுவதையும் அங்கிருந்தோர் அனைவரும் நன்கு விளங்கிக் கொள்ளும்படி தெளிவாக எடுத்துக் கூறினான்.

இங்கே உந்தை, எந்தை என்ற இருசொல்லாட்சியும் மிகச் சுவைபட அமைக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. தசரதன் பரதனைத் தன் மகன் அல்லன் என்று முன்பு வசிட்டனிடம் கூறியதால், பரதன் அதனை ஏற்றுக் கொண்டு இருவருக்கும் ஏதும் தொடர்பு இல்லாதது போல, தசரதனைத் தன் தந்தை என்று கூறாது, இராமனின் தந்தை என்பதைக் குறிப்பிட்டு ''உந்தை'' என்று அழைக்கின்றான். ஆனால், இராமன்தான் தன் தந்தை என்று எல்லோருக்கும் தெரிவிக்க, அவனை ''எந்தை'' என்று அழைக்கின்றான். தசரதன் செய்த தீமை கைகேயியிக்கு இரு வரங்களைக் கொடுத்து இராமனைக் காட்டிற்கு அனுப்பியது. கொடியவளாகிய கைகேயி இதுவரை உலகுக்கு நேராத பெரிய துன்பத்தைக் கொடுத்த தீமை தசரதனிடமிருந்து இருவரங்களை வேண்டிப் பெற்று அவற்றில் ஒன்றினால் இராமனைக் கானகம் புகுவித்து, அதனால் உலகமெல்லாம் துன்புறச் செய்தது; இன்னொரு வரத்தினால் முறைதவறி அரசுரிமை பெற எண்ணியது என்கிறான் பரதன். இராமன் மீண்டும் வந்து அரசேற்றால் இவ்விரு தீமைகளும் நீங்கி இன்பம் விளையும் என்று பரதன் கருதுகிறான் என்க.

105. இராமன் கூறத் தொடங்குதல்

சொற்ற வாசகத் துணிவு உணர்ந்த பின்,
''இற்றதோ இவன் மனம்?'' என்று எண்ணுவான்;
''வெற்றி வீர! யான் விளம்பக்கேள்!'' எனா
முற்ற நோக்கினான், மொழிதல் மேயினான். (2577)

(சொற்ற-சொன்ன; வாசகம்-வார்த்தை; துணிவு-உறுதி; இற்றதோ-இத்தன்மையதோ; மனம்-கருத்து; முற்றநோக்குதல்-தீர ஆலோசித்தல்; மேயினான்-தொடங்கினான்)

இவ்வாறு பரதன் கூறிய வார்த்தைகளில் உள்ள உறுதியை நன்கு உணர்ந்தபின், இராமன் ''பரதனின் உள்ளக் கருத்து இத்தன்மையதோ?'' என்று எண்ணி, ''வெற்றியும் வீரமும் உடையவனே! நான் கூறப்போவதைக் கேட்பாயாக!'' என்று, நன்கு ஆலோசித்துச்சிலவற்றைக் கூறத் தொடங்கினான்.

Koviloor Digital Library

முற்ற நோக்கினான் என்பதை முற்றிய நோக்குடையவன் என்ற பொருளில் எல்லாவிதமான சாத்திரங்களையும் அறிந்தவனான இராமபிரான் என்றும் பொருள் கூறுவதுண்டு.

106. இராமன் மறுத்துக் கூறுதல் [7 பாடல்கள்]

''முறையும், வாய்மையும், முயலும் நீதியும்,
அறையும் மேன்மையோடு அறனும், ஆதியாம்
துறையுள் யாவையும், சுருதி நூல் விடா
இறைவர் ஏவலால், இயைவ; காண்டியால்!'' (2578)

(முறை-நல்லொழுக்கம்; அறையும்-சொல்லப்படுகின்ற; ஆதியாம்-முதலிய; சுருதிநூல்-வேத சாஸ்திரங்கள்; இறைவர்-அரசர்கள்; இயைதல்-பொருந்துதல்)

''நல்லொழுக்கங்களும், சத்தியமும், யாவராலும் பின்பற்றப் படவேண்டிய நீதியும், எல்லோராலும் புகழ்ந்து பேசப்படுகின்ற மேன்மையும், தருமமும் ஆகிய இவை எல்லாத் துறைகளும், வேதசாத்திரங்களில் கூறியவற்றைத் தவறாது பேணி ஒழுகும் அரசர்களின் கட்டளையால்தான் உண்டாவன என்பதை நீ உணர்வாயாக'' என்கிறான் இராமன்.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு இறையென்று வைக்கப்படும்'' என்பது குறள் *388*. எனவே, அரசர்களை இறைவர் என்றார் என்க. உலகில் நிகழும் எல்லா நன்மைகளும் வேதசாத்திரங்களின் வழி நிற்கும் அரசர்களின் கட்டளையால் தான் நிகழ்கின்றன என்று பீடிகை போடும் இராமன், தான் காடேகியதே, பரதன் நாடாள வேண்டு மென்பதால்தான் என்று கூற வருகிறான் என்பதை நோக்குக.

107. ''பரவு கேள்வியும், பழுதுஇல் ஞானமும்,
விரவு சீலமும், வினையின் மேன்மையும்,
உரவிலோய்! தொழற்கு உரிய தேவரும்,
குரவரே எனப் பெரிது கோடியால்'' (2579)

(உரம்-வலிமை; பரவுதல்-சிறப்பித்துச் சொல்லப்படுதல்; கேள்வி-நூற்கேள்வி; பழுது-குற்றம்; விரவுதல்-பொருந்துதல்; சீலம்-நல்லொழுக்கம்; குரவர்-பெரியோர்; கோடி-கொள்வாயாக; தேவர்-கடவுள்)

''வலிமை பொருந்திய வில்லை உடையவனே! புகழ்ந்து சொல்லப்படுகின்ற நூற்கேள்வியும், குற்றமில்லாத அறிவும். பொருந்துகின்ற நல்லொழுக்கமும், செய்கின்ற தொழிலின் உயர்வும், வணக்கத்திற்குரிய தெய்வங்களும், சான்றோர்களே என்று உன் மனத்தில் மிகவும் உறுதியாகக் கொள்வாயாக!'' என்றான் இராமன்.

Koviloor Digital Library

நூற்கேள்வி, அறிவு, நல்லொழுக்கம் தொழிலின் மேம்பாடு, இவைகள் அனைத்தும் சான்றோர்களால் உண்டாகுபவை. எனவே இவை எல்லாவற்றையும் குரவர் என்றார் என்க. ''அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தம்முன், நிகரில் குரவர் இவரைத் தேவரைப் போலத் தொழுது எழுக'' என்பது ஆசாரக் கோவை. பழுது இல் ஞானம் என்பது ஐயம் திரிபறக் கற்பது என்பதாம். ஐயம் என்பது ஒன்றோ, மற்றொன்றோ என்று சந்தேகப்படுவது; திரிபு என்பது ஒன்றை மற்றொன்றாக உரைத்தல். இவை இரண்டும் இல்லாத உண்மையான உணர்வே ஞானம் என்பதாம்.

108. ''அந்த நற்பெருங் குரவர் ஆர்எனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்,
தந்தை தாயர் என்று இவர்கள் தாம் அலால்,
எந்தை! கூற வேறு எவரும் இல்லையால்'' (2580)

(குரவர்-பெரியோர்; தேர்வுறல்-ஆராய்ந்து எண்ணுதல்)

''ஐயனே! முன்னர்க் கூறிய அந்த நல்ல பெருமைக்குரிய பெரியோர்கள் யார் என்று நன்றாக ஆராய்ந்து பார்த்தால், தந்தையும், தாயையும் தவிர வேறு எவரையும் கூறுவதற்கு இல்லை'' என்றான்.

ஐம்பெருங்குரவர்களிலும் தாயும் தந்தையுமே முதற்கண் பெரியோர் எனச் சிறப்பித்துப் போற்றப்பட வேண்டியவர்களாவார்கள். இராமன் தம்பி பரதனை எந்தை என அழைத்தது அவன்பால் கொண்ட மிகுந்த அன்பு பற்றி என்க.

109. ''தாய்வரம் கொள, தந்தை ஏவலால்
மேய நம்குலத் தருமம் மேவினேன்;
நீ வரம் கொளத் தவிர்தல் நீர்மையோ?
ஆய்வு அரும் புலத்து அறிவு மேவினாய்!'' (2581)

(அரும்புலம்-நூல்கள் / வேதங்கள்; மேய-பொருந்திய; தருமம்-ஒழுக்கம்; மேவுதல்-ஏற்றுக் கொள்ளுதல்; தவிர்தல்-நீக்குதல்; நீர்மை-தக்கது)

''ஆராய்ந்து அறிதற்கரிய வேதங்களில் தோய்ந்த அறிவு பெற்றவனே! நம் தாயாகிய கைகேயி நம் தந்தை தசரதனிடம் இருந்து இருவரங்களைப் பெற்றுக் கொள்ள, அதன்படி நம் தந்தையாகிய தசரதன் இட்ட கட்டளையினால் நம் குலத்துக்குப் பொருத்தமான அறஒழுக்கத்தை நான் மேற்கொண்டுள்ளேன். நீ வரம் கேட்பது போல, அதனை ஏற்றுக் கொள்ளாதே என்று கூறுவதனால், நான் அதனின்றும் நீங்குதல் முறையாகுமோ? நீயே கூறுவாயாக!'' என்றான் இராமன்.

''நீ வரம் கொளத் தவிர்தல் நீர்மையோ?'' என்ற மூன்றாவது அடிக்கு, அவ்வாறு தாய் பெற்ற வரமாகிய ''பரதனே நாடாள வேண்டும்'' என்ற வரத்தினை நீ மேற்கொள்ளாது தவிர்ப்பது நியாயமாகுமோ? என்று

Koviloor Digital Library

கேட்பதாகச் கொள்ளுவது இன்னும் பொருத்தமுடையதாகும். புலம் என்பது பொதுவாக அறிவினைக் குறிக்கும் என்றாலும் அரும்புலம் என்பது ஆராய்ந்தறிதற்கரிய வேதங்களைக் குறிக்கும் என்க. ''புலம்புரி அந்தணர்'' என்பது பரிபாடல்.

110. ''தனையர் ஆயினார் தந்தை தாயரை
வினையின் நல்லது ஓர் இசையை வேய்தலோ?
நினையல் ஓவிடா நெடிய வன்பழி
புனைதலோ, ஐய! புதல்வர் ஆதல்தான்?'' (2582)

(வினை-செயல்கள்; இசை-புகழ்; வேய்தல்-அடைவித்தல் / தரிக்கச் செய்தல்; ஓவிடா-நீங்காத; புனைதல்-சூட்டுதல்; தனையர்-புதல்வர்)

''தம்பி பரதா! புதல்வர்கள் என்று பிறந்துவிட்டால், தன் தாயருக்கும் தந்தைக்கும் தங்களது நல்வினையின் பயனாக விளையும் ஓர் நல்ல புகழை அடைவித்தலா? அல்லது ஒருவர் நினைவினின்றும் நீங்காத என்றும் நிலைத்து நிற்கின்ற நீண்ட பெரிய கொடிய பழிச்சொல்லைச் சூட்டுவதா? புதல்வர் என்பவர்க்கு உரிய செயல் இவ்விரண்டில் யாது என்பதை நீயே கூறவாயாக!'' என்றான்.

தனையர் என்பது பிறப்பால் வந்த பெயர்; புதல்வர் என்பது தத்தம் நல்வினையால் விளைந்த பயனால் வரும் பெயராகும் என்பதாம். புகழ் பற்றிச் சொல்லும்போது எந்த அடைமொழியும் தாராது வறிதாய் ''இசை'' என்று கூறிய கவிஞன், பழி பற்றிச் சொல்லும்போது மட்டும் எத்தனை அடைமொழிகள் கொடுக்கிறான் பாருங்கள், நினைவில்ஓவிடாதது, நெடியது, வன்மையானது என்கிறான். புகழ் எய்துவதைவிடப் பழியைத் தவிர்ப்பது இன்றியமையாதது என்பதாம்.

111. ''இம்மை பொய் உரைத்து இவறி, எந்தையார்
அம்மை வெம்மை சேர் நரகம் ஆள, யான்
கொம்மை வெம்முலைக் குவையின் வைகிவாழ்
செம்மை சேர் நிலத்து அரசு செய்வெனோ?'' (2583)

(அம்மை-மறுமை; வெம்மை-கொடுமை; இம்மை-இப்பிறவி; இவறி-பேராசை கொண்டு; கொம்மை-திரண்ட; வெம்-விரும்பத்தக்க; குவை-தொகுதி; செம்மை-இன்பம்; இவறுதல்-உலோபித்தல் / கடும்பற்றுள்ளம்)

''என்னுடைய தந்தையார் என்தாய் கைகேயிக்குக் கொடுத்த வரங்களை நான் அவ்வாறு கொடுக்கவில்லை என்று இப்பிறவியிலேயே பொய் உரைத்து, வாய்மை தவறியவரானால், மறுபிறவியில் அவர் கொடுமையான நரகத்திற்குச் செல்ல ஏதுவாகும். ஆனால் நான் மட்டும், திரண்ட விரும்பத்தக்க முலைத் தொகுதியில் தங்கி வாழ்ந்து செல்வச் செழிப்பு வாய்ந்த இந்நாட்டின் அரசாட்சியை ஏற்று நடத்துவேனோ? மாட்டேன்'' என்றான் இராமன்.

Koviloor Digital Library

தந்தை வருந்த நான் மட்டும் இன்பம் துய்ப்பேனோ? என்கிறான் இராமன். பொய் உரைத்து என்பதனை இராமனுக்கு ஏற்றிக் கூறினும் அமையும். ''நீ பதினான்கு ஆண்டுகள் காடாள வேண்டும் என்பது மன்னவன் கட்டளை'' என்று தாய் கைகேயி கூறியபோது மனம் உவந்து உடன்விடை கொண்டானே இராமன். இப்பொழுது அதைப் பொய் என்று கூறினாலும், புதல்வன் பொய் உரைத்தலால், தந்தை நரகத்தில் அல்லல் படுவான் என்று கூறுதலும் பொருந்தும். நான் அரசாட்சியை ஏற்றுக் கொண்டால் தந்தையார் வாய்மை குன்றியவர் ஆவார். அதற்கு நான் இடம் கொடுக்க மாட்டேன் அது புதல்வரின் கடமையும் அல்ல என்று உறுதிபட நிறுவுகின்றான் இராமன்.

112. ''வரன் நில் உந்தை சொல் மரபினால், உடைத்
தரணி நின்னது என்று இயைந்த தன்மையால்,
உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால்,
அரசு நின்னதே; ஆள்க!'' என்னவே, (2584)

(வரன்-வரம்; நில்-நிலைத்து நின்ற; மரபு-முறைமை; இயைந்த-பொருந்தின; உரன்-உரம் / வலிமை)

''உன்தந்தை, தாய் கைகேயிக்குக் கொடுத்த வரத்தில் உறுதியாக நிற்கும் முறையினாலும் அவனுக்கு உடையதான இவ்வுலக அரசாட்சி உனக்கு உரியதாகும் என்று பொருந்துகிற தன்மையாலும், இயற்கையிலேயே நீ அவனுக்கு மகனாகவும், எனக்குத் தம்பியாகவும் பிறந்த வலிமையின் காரணமாகவும், இந்த அரசின் ஆட்சி புரிவதற்கு உனக்கு எல்லா உரிமையும், தகுதியும் இருக்கின்றன. எனவே இவ்வரசுரிமை உன்னையே சாரும். எனவே, அரசினை ஏற்று அரசாள்வாயாக'' என்றான் இராமன்.

இங்கே இராமன், பரதனே நாடாளுவதற்குரிய உரிமையும், தகுதியும், ஆற்றலும் பெற்றிருக்கிறான் என்பதை இரண்டு காரணங்கள் கொண்டு நிறுவுகிறான். ஒன்று தந்தை தசரதன் தாய் கைகேயிக்குக் கொடுத்த வரத்தில் உறுதியாக நிற்றல். அதனால் வருகின்ற சிறப்புரிமையாகிய அரசாளும் தன்மை; இரண்டு, தசரதனுக்கு மகனாகப் பிறந்ததால் உண்டான பிறப்புரிமை. எனவே பரதன் அரசு மேற்கொள்வதே தகும் என்கிறான் இராமன். பிறப்புரிமை என்பதற்கு வான்மீகியில் கூறப்பட்டிருக்கும் ''கன்யா சுல்கம்'' என்று கொள்ளுதலும் பொருந்தும். எனினும் கம்பன் அதனைக் குறிக்கவில்லை என்பதை நன்கு மனத்தில் உள்வாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

113. பரதன் மீண்டும் வற்புறுத்துதல்

''முன்னர் வந்து உதித்து, உலகம் மூன்றினும்
நின்னை ஒப்பு இலா நீ பிறந்த பார்
என்னது ஆகில், யான் இன்று தந்தனென்;
மன்ன! போந்து நீ மகுடம் சூடு'' எனா. (2585)

Koviloor Digital Library

''எனக்கு மூத்தவனாக வந்து பிறந்து, இம்மூவுலகங்களிலும் உனக்கு நிகர் ஒருவரும் இல்லை என்று சொல்லும்படியான நீ பிறந்த இந்த உலகம், நீ சொன்னபடியே என்னுடையது என்றால், நான் இப்பொழுதே அதனை உனக்குத் தந்துவிட்டேன்; மன்னவனே! நீ உடனே அயோத்திக்கு வந்து மணிமகுடம் சூட்டிக் கொள்வாயாக!'' என்றான் பரதன்.

இராமன் எவ்வளவு மறுத்தும், பரதன் உண்மையாய் இவ்வரசுரிமை இராமனுக்கே வரத்தக்கது என்று கூறி அவனை ''மன்ன!'' என்றே அழைத்தல் காண்க. இப்பூமியில் முன்னர்ப் பிறந்தது நீ தானே! எனவே முதலில் உனக்குத்தான் அரசுரிமை. அதன்பின்னர்தான் எனக்கு உரியதாகும் என்ற குறிப்பும் தோன்றக் காண்க.

114. ''மலங்கி, வையகம் வருந்தி வைக, நீ
உலம் கொள் தோள் உனக்கு, உறுவ செய்தியோ?
கலங்குறா வணம் காத்தி போந்து'' எனாப்
பொலம் குலாவு தாள் பூண்டு, வேண்டினான். (2586)

(வையகம்-உலகம்; உலம்-கல்தூண் / திரண்டகல்; உறுவ-விருப்பமான; பொலம்-அழகு; பூண்டு-தாங்கி நின்று / பற்றிக் கொண்டு; மலங்குதல்-கலங்குதல்)

நின் பிரிவால் மனம் கலங்கி வருந்தி உலகமே தத்தளித்து நிற்க, திரண்ட கல்லைப் போன்ற தோள்களை உடைய நீ மனம் போனபடிதான் செய்வாயோ? நாட்டு மக்களின் நலனை எண்ணிப் பார்க்க மாட்டாயோ? அவர்கள் கலங்காதபடி அவர்களைக் காப்பாற்றுவதற்காக உடனே அயோத்திக்கு வருக!'' என்று இராமபிரானுடைய அழகிய திருவடிகளைப் பற்றிக் கொண்டு வேண்டினான் பரதன்.

''உனக்கு உறுவ செய்தியோ?'' என்பது நீ நினைத்தபடி-உன் மனம் போனபடி-என்ற பொருளைத் தந்தாலும், அது அவன்மேல் கொண்ட பாசத்தாலும், அவன் நாடு திரும்பிவந்து ஆட்சியை ஏற்கவேண்டும் என்ற ஆதங்கத்தாலும் அவ்வாறு கூறினான் என்க. நீ நினைப்பதைச் செய்வதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கூறுவதும் தெரிகிறது. ''நீ ஒழி காலை நின் நாடெல்லாம் தாய் ஒழி குழவி போலக் கூவும்'' என்பது மணிமேகலை.

115. பரதனுக்கு இராமன் இட்ட கட்டளை

''பசைந்த சிந்தை நீ, பரிவின், வையம் என்
வசம் செய்தால், அதுமுறைமையோ? வசைக்கு
அசைந்த எந்தையார் அருள, அன்று, நான்
இசைந்த ஆண்டு எலாம், இன்றோடு ஏறுமோ?'' (2587)

Koviloor Digital Library

(பசைந்த-அன்புகொண்ட; பரிவின்-விருப்பத்துடன்; வசை-பழி; அசைந்த-அஞ்சிய; ஏறுதல்-முடிவடைதல்; முறைமை-நியாயம் / ஒழுங்கு; இசைதல்-ஒப்புக் கொள்ளுதல்)

''என்மீது கொண்ட பேரன்பின் காரணமாக நீ விருப்பத்துடன், உனக்காகிய அரசரிமையை என்னிடம் தந்து விட்டால் அது நியாயத்தின்பாற்படுமா? பழிக்கு அஞ்சிய என் தந்தை தசரதன் கைகேயியிக்கு இருவரங்களை நல்கி, எனக்குக் கட்டளையிட அதன் காரணமாக, அன்று நான் ஒப்புக் கொண்ட பதினான்கு ஆண்டு வனவாச காலம் எல்லாம் இன்றோடு முடிந்துபோய் விட்டது என்று ஆகிவிடுமோ? ஆகாது'' என்றான் இராமன்.

பதினான்கு ஆண்டுகள் கானகத்தில் கழிக்காது நான் திரும்பமாட்டேன் என்று இராமன் நிறுவுகிறான்.

116. ''வாய்மை என்னும் ஈது அன்றி, வையகம்
தூய்மை என்றும் ஒன்று உண்மை சொல்லுமோ?
தீமைதான் அதில் தீர்தல்'' அன்றியே,
ஆய், மெய்யாக, வேறு அறையல் ஆவதோ? (2588)

(தீர்தல்-தவறுதல்; ஆய்-ஆராய்ந்து பார்; வையகம்-உயர்ந்தோர்)

''சத்தியம் காத்தல் என்னும் இந்த ஒரு பெருங்குணத்தை அன்றி, இவ்வுலகத்தில் உள்ள உயர்ந்தவர்கள் வேறு எதனையும் தூய்மையானது என்று சொல்லுவார்களோ? சொல்லமாட்டார்கள். எனவே அதனின்றும் தவறுதல் தீமையே பயப்பதாகும்; அவ்வாறு இன்றி வேறு ஏதேனும் நன்மை பயக்கும் என்று கூறுவது உண்டோ? இதனை நீ நன்றாக ஆராய்ந்து பார்'' என்றான் இராமன்.

''*புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்*'' என்பது குறள் *364*. ''*யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும், வாய்மையின் அல்ல பிற*'' என்பதும் குறள் *300*. இவ்விரு குறட்பாக்களின் கருத்து இப்பாடலில் பயின்று வருதலைக் காணலாம்.

117. ''எந்தை ஏவ, ஆண்டு ஏழொடு ஏழ்எனா
வந்த காலம் நான் வனத்துள் வைக, நீ
தந்த பாரகம் தன்னை, மெய்ம்மையால்
அந்த நாள்எலாம் ஆள், என் ஆணையால்'' (2589)

(ஏவ-கட்டளையிட; பாரகம்-நாடு)

''என்னுடைய தந்தை எனக்கு இட்ட கட்டளைப்படி நான் பதினான்கு ஆண்டு காலமும் இக்கானகத்தில்தான் வாழ்வேன்; அதுபோல அவர் கட்டளைப்படி அவர் உனக்குத் தந்த இந்த நாட்டினை நீயும் பதினான்கு ஆண்டுகாலம் வாய்மை தவறாது ஆட்சி செய்யத்தான் வேண்டும். அதற்கு

Koviloor Digital Library

நீ ஒப்பவில்லை என்றாலும், இப்போது நீ எனக்குத் தந்ததாகக் கூறினாயே இந்த அரசாட்சி, அதனை நான் வரும்வரைக்கும் இந்தப் பதினான்கு ஆண்டு காலமும் என் சார்பாக. நீயே அரசாண்டு வருவாயாக! இது என் கட்டளை'' என்று ஆணையிடுகிறான் இராமன்.

தசரதன் இருவருக்குமே கட்டளையிட்டான். ஒன்று இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்லவேண்டும். இரண்டு பரதன் இந்நாட்டினை ஆள வேண்டும் என்பவை அவை. இராமனுக்கு காலக்கெடு விதித்ததுபோல் பரதனுக்கு விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே தந்தை காப்பாற்றி வந்த வாய்மையில் இருந்து தவறாது இருவரும் அவரவர் கடமையைச் செய்ய வேண்டும் என்று இராமன் வற்புறுத்துகிறான். ஒரு வேளை பரதன் இதற்கு உடன்பட மறுக்கக் கூடும் என்று உணர்ந்த இராமன் இது என் கட்டளை என்று கூறிவிடுவதால் பரதனுக்கு வேறுவழி இல்லை. ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும் என்பதாம். இராமன்தான் இப்போது பரதன் அரசாள்வதற்குப் பதினான்கு ஆண்டுகள் என்று காலம் வரையறுக்கிறான் என்பதை நோக்க வேண்டும்.

118. ''மன்னவன் இருக்கவேயும் மணிஅணி மகுடம் சூடுக''
என்ன, யான் இயைந்தது அன்னான் ஏயது மறுக்க அஞ்சி;
அன்னது நினைந்து நீ என் ஆணையை மறுக்கலாமோ?
சொன்னது செய்தி ஐய! துயர் உழந்து அயரல்!'' என்றான். (2590)

(உழந்து-வருந்தி; அயர்தல்-தளர்தல்)

''தந்தை தசரதன் உயிருடன் இருக்கும்போதே மணிகள் பதிக்கப்பெற்ற அழகிய மகுடத்தைச் சூட்டிக் கொள்க என்று மன்னவன் பணித்தபோது, நான் அதற்கு உடன்பட்டது, இவ்வரசாட்சியின்மேல் உள்ள ஆசையால் அன்று. தந்தை இட்ட கட்டளையை மறுக்கக் கூடாதே என்ற அச்சத்தினால்தான்; எனவே அப்பொழுது நான் இசைந்ததை நினைத்து, இப்பொழுது நீ என்னுடைய கட்டளையை மறுக்கலாகுமோ? நான் சொன்னதைச் செய்; பரதா! துன்பத்தில் வருந்தி சோர்வுற்றுத் தளராதே'' என்றான்.

முறையாக ஆட்சி செய்யும் மன்னவன் உயிருடன் இருக்கும்பொழுது அவன் புதல்வன் மகுடம் சூடுவது பொருந்தாதது. எனினும் தந்தை தவம் செய்யப் போவதாகவும், நாடு அரசன் இல்லாமல் இருக்கக் கூடாது எனவும் கூறி என்னை வற்புறுத்தியதால், அவரது கட்டளைக்கு அஞ்சி நான் அன்று அரசுரிமை ஏற்க ஒப்புக் கொண்டேன். உண்மையில் எனக்கு அரசின் மீது விருப்பமில்லை. ''காதல் உற்றிலன்; இகழ்ந்திலன், கடன் இது என்ற உணர்ந்தும், யாது கொற்றவன் ஏவியது, அது செயலன்றே நீதி எற்கு என நினைந்தும் அப்பணி தலை நின்றான்'' என்பார் கவிஞர். அதை மறவாது இங்கு இராமன்கூற்றாகவே பரதனுக்குக் கூறுவது ஒரு நயம். முன்பாட்டில் எனது கட்டளை என்று கூறிய இராமன், இப்பாடலில் வேறு ஒன்றும்

Koviloor Digital Library

பேசாதே. நான் சொன்னதைச் செய் என்று ஒரு படி மேலே போவதைக் காண்க. அது அவன், அவனது கருத்தில் கொண்ட உறுதிப்பாட்டை உணர்த்துவதாம்.

119. வசிட்டன் கூறத் தொடங்குதல்

ஒள்ளியோன் இனைய எல்லாம்
உரைத்தலும், உரைக்கல் உற்ற
பள்ளம் நீர் வெள்ளம் அன்ன
பரதனை விலக்கி, பண்டு
தெள்ளிய குலத்தோர் செய்கை
சிக்கறச் சிந்தை நோக்கி,
''வள்ளியோய்! கேட்டி'' என்னா
வசிட்ட மாமுனிவன் சொன்னான். (2591)

(ஒண்மை-அறிவுடமை; ஒள்ளியோன்-அறிவுடையோன்; விலக்கி-தடுத்து; சிக்கற-கசடற; வள்ளியோன்-வள்ளல்)

பேரறிவுடையவனான இராமபிரான் இத்தகைய சொற்களை யெல்லாம் சொன்னவுடன், அதற்கு மறுமொழி கூறுவதற்காக, பள்ளத்தில் பாய்கின்ற வெள்ளம் போன்று விரைவாக வந்த பரதனைத் தடுத்து, வசிட்ட மாமுனிவன், முன்பு தெளிவான கொள்கையுடைய சூரியகுல மன்னர்களின் செய்கைகளையெல்லாம் தன் மனதில் ஐயம் திரிபு அற உணர்ந்து, பிறகு இராமனைநோக்கி, ''வள்ளல்குணம்உடையவனே! நான் கூறுவதைக் கேட்பாயாக?'' என்று கூறத் தொட்ங்கினான்.

பரதன் மாற்றம் கூற விரைந்ததும், முனிவன், ஒரு வேளை நாம் சொன்னால் இராமன் மறுக்காது கேட்பான் என்று கருதிப் பரதனைத் தடுத்தார் என்க. பரதன் மாற்றம் சொல்ல விரைந்த விரைவைப் ''பள்ள நீர் வெள்ளம் அன்ன'' என்று உவமித்தார். ஒள்ளியோன் என்பது வடிவு, அறிவு, குணம், புகழ் ஆகிய எல்லாவற்றிலும் ஒளிமிக்கு விளங்குபவன் எனப் பொருள் தந்து நிற்கும்; அறிவுடையோன் என்பதற்கு நுண்மாண் நுழைபுலம் மிக்கவன் என்பது விளக்கம்.

120. வசிட்டன் இராமனை வற்புறுத்துதல்

''கிளர்அகல் புனலுள் நின்று, அரி, ஓர் கேழல்ஆய்,
இளை எனும் திருவினை ஏந்தினான் அரோ
உளைவு அரும்பெருமை ஓர் எயிற்றின் உள் புரை
வளர் இளம்பிறைஇடை மறுவின் தோன்றவே'' (2592)

(அரி-திருமால்; ஓர்-ஒப்பற்ற; கேழல்-பன்றி / வராகம்; உளைவுஅரும்-அழிதலில்லாத; எயிறு-கோரப்பல்; உள்புரை-உள்துளை; மறு-களங்கம்;

Koviloor Digital Library

கிளர்தல்-பொங்குதல்; இளை-பூமாதேவி / பூமி; ஏந்துதல்-தூக்குதல் / தாங்கி நிற்றல்; திரு-பெண்)

வசிட்டன் இராமனை நோக்கி, ''முன்பொரு காலத்தில் காத்தல் கடவுளான திருமால், ஒரு பன்றி உருவம் எடுத்து, பொங்கியெழும் அகன்ற கடலுக்குள் நின்றுகொண்டு, அழிதலில்லாத பெருமை பெற்ற தனது ஒப்பற்ற வளைந்த கோரப்பல்லின் உள்ளுள்ள தொளையில் வளர்கின்ற, இளம்பிறைச் சந்திரனிடத்தில் தோன்றும் களங்கம் போல் தோன்றுகின்ற இளை என்னும் பெண்ணாகிய நிலமகளைத் தூக்கித் தாங்கி நின்றான்'' என்றார்.

திருமாலின் வராக அவதாரத்தின் சிறப்பினைப் பேசுகின்றான் வசிட்டன். முன்பு பிரளய காலத்தில் ஊழிக் கடலில் மூழ்கியிருந்த பூமாதேவியை மேலே எடுக்கத் திருமால் வராக அவதாரம் எடுத்துத் தன் கொம்பின் நுனியாலேயே பூமியை மேலே எடுத்து நிறுத்தி அருளினான் என்பது புராண வரலாறு.

121. ஆதிய அமைதியின் இறுதி, ஐம்பெரும்
பூதமும் வெளி ஒழித்து, எவையும் புக்கபின்
நாதன் அவ்அகன் புனல்நல்கி, நண்ணரும்
சோதியாம் தன்மையின் துயிறல் மேயினான். (2593)

(ஆதிய-முன்பான; அமைதியின் இறுதி-கல்ப காலத்தின் முடிவு)

ஊழிக்காலத்தின் இறுதியில் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களும் வெளிப்படுதல் இல்லாமல், எல்லாமும் ஒன்றினுள் ஒன்று அடங்கி உள் புகுந்தபின், தலைவனாகிய திருமால் அகன்ற கடலை உண்டாக்கி, எவராலும் எய்துதற்கு அரிய ஒளி வடிவமாகும் தன்மையில் ஆலிலையின்மீது அறிதுயில் கொள்வான் ஆயினான்.

பஞ்ச பூதங்கள் ஆகாயம், வாயு, அக்னி, அப்பு, பிருத்வி என வடநூலார் கூறுவர். இது தோன்றும் முறை, ஒடுங்கும் முறையினின்றும் மாறுபட்டது. பிருத்வி, அப்பு, அக்னி, வாயு, ஆகாயம் என்று ஒடுங்கும். இறுதியில் திருமால் சிறு குழந்தையாய்த் தான் படைத்த பிரளய வெள்ளத்தில் ஓர் ஆலிலையின்மேல் யோக நித்திரை கொள்வான் என்பது புராண வரலாறு.

122. ஏற்ற இத்தன்மையின், அமரர்க்கு இன்னமுது
ஊற்றுடைக் கடல்வணன், உந்தி உந்திய
நூற்று இதழ் கமலத்தின், நொய்தின் யாவையும்
தோற்றுவித்து உதவிட, முதல்வன் தோன்றினான். (2594)

(உந்தி-கொப்பூழ்; உந்திய-தோற்றுவித்த; நொய்தின்-எளிதாக)

இவ்வாறு ஆலிலையில் அறிதுயில் ஏற்றுக் கொண்டவனாகிய திருமால், தேவர்களுக்குத் தேவாமிர்தம் தந்த கடல்போலும் கரிய

Koviloor Digital Library

வண்ணனாகிய திருமாலின் கொப்பூழில் இருந்து தோன்றிய நூறு இதழ்களைக் கொண்ட தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், இவ்வுலகத்தில் எல்லாவற்றையும் மீண்டும் எளிதில் படைக்கும் பொருட்டு யாவர்க்கும் முதல்வனாகத் தோன்றினான்.

நூற்று இதழ்க் கமலம் என்பது எண்ணிக்கைப் பொருளில் கூறப்பட்டாலும் அது எண்ணிக்கையைக் குறிப்பதன்று. இதே சொற்றொடரைத் தமிழ் இலக்கியங்கள் பலவும் கையாண்டிருப்பது நோக்கத் தக்கது. ''நூற்றுஇதழ்த் தாமரைப்பூ'' என்பது ஐங்குறுநூறு; ''சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ் நூற்று இதழ் அலரின் நிரை கண்டன்ன'' என்பது புறநானூறு; ''தன்நிகர் பரிதியாலும், சத இதழாலும் செம்பொற் கன்னிகையாலும், சோதி கலந்த செங்கமலம் போன்றாள்'' என்பது வில்லிபாரதம். இவற்றால் நூறு இதழ்களைக் கொண்ட தாமரை மலரும் இருந்திருக்கிறது என்பது புலனாகின்றது. திருமாலின் நாபிக் கமலத்திலிருந்து பிரமன் வெளிப்பட்டுப் படைப்புத் தொழிலை நடத்தத் தொடங்கினான் என்பது புராணக்குறிப்பு.

123. ''அன்று, அவன் உலகினை அளிக்க, ஆகியது
உன்தனிக்குலம்; முதல் உள்ள வேந்தர்கள்
இன்று அளவினும் முறை இகந்துளார் இலை;
ஒன்று உளது உரை இனம்; உணரக் கேட்டியால்'' (2595)

(ஆகியது-உண்டாயிற்று; இகந்துளார்-தவறியவர்கள்; இனம்-இன்னம் / இன்னமும்; உணர -மனத்திற் பொருந்த)

''அக்காலத்தில், பிரமன் இவ்வுலகைப் படைக்க, முதன்முதலில் உண்டாகியது உன்னுடைய ஒப்பற்ற சூரியகுலம் தான்; அக்குலத்தில் வழிவழியாக வந்த அரசர்களுள் இன்றுவரை ஒருவரேனும் முறைபிறழ்ந்தவர்கள் அல்லர்; இன்னும் நான்கூற வேண்டுவது ஒன்று உள்ளது. அதனையும் கருத்தூன்றிக் கேட்பாயாக!'' என்றான் வசிட்டன்.

சூரியகுலம்தான் முதன்முதல் தோன்றிய அரசகுலம் என்பதை கலிங்கத்துப்பரணியினின்றும் அறிகிறோம். பாடல் இது. ''ஆதிமால் அமலன் நாபிக் கமலத்து அயன் உதித்து, அயன் மரீசி எனும் அண்ணலை அளித்தபரிசும், காதல் கூர்தரு மரீசி மகனாகி வளரும் காசிபன், கதிர் அருக்கனை அளித்த பரிசும்'' என்பது கலிங்கத்துப் பரணி. திருமால்-பிரமன்-மரீசி-காசிபன்-சூரியன் என்பது குலமுறை. முறை இகந்தது என்பது ''மூத்தவர்க்கே உரியது அரசு'' எனும் குலவழிமுறை. இதனை இதுவரையிலும் யாரும் பிழைத்ததில்லை. எனவே, நீயும் அவ்வாறே மூத்தவன் என்ற முறையால் அரசுரிமை ஏற்க வேண்டுவதே நியாயம் என்பது கருத்து.

124. ''இத இயல் இயற்றிய குரவர் யாரினும்
''மத இயல் களிற்றினாய்!'' மறுஇல் விஞ்சைகள்

Koviloor Digital Library

பதவிய இருமையும் பயக்கப் பண்பினால்
உதவிய ஒருவனே உயரும்'' என்பரால். (2596)

(களிறு-ஆண்யானை; இதஇயல்-நன்மையான செயல்கள்; இதம்-நன்மை; குரவர்-பெரியோர்கள்; மறுஇல்-குற்றமில்லாத; விஞ்சை-வித்தை / கல்வி; இருமை-இம்மை மறுமை; மதம்-வலிமை)

''வலிமையும் மதமும் பொருந்திய யானை போன்றவனே இராமா! எல்லோர்க்கும் நன்மை செய்கின்ற பெரியோர்களாகிய, அரசர், ஆசிரியர், தாய், தந்தை, அண்ணன் ஆகிய ஐம்பெருங்குரவர்களுள்ளும் குற்றமில்லாத கல்வியையும், இம்மை, மறுமை ஆகிய பதவிகள் பெறுவதற்கு உரிய பண்பு நலன்களையும் கற்பிக்கின்ற ஆசிரியனே மிகச் சிறந்தவன், உயர்ந்தவன் என்று சான்றோர்கள் கூறுவர்'', என்று வசிட்டன் கூறினான்.

முன்பு ஐம்பெருங் குரவரில் சிறந்தோர் தாய் தந்தையரே என்று கூறிய இராமனை மறுத்து வசிட்டன் இப்போது, அவ்வைவரிலும் ஆசிரியனே உயர்ந்தவன் என்று கூறி, தான் சொல்லுவதைத் தட்டாது கேட்பாயாக என்று கூற முனைகின்றான் என்பதாம். ''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'' என்ற வெற்றிவேற்கையும் இங்கு நினைவு கூரத்தகும். மதம் என்பது வலிமையையும் குறிக்கும். ''மதவே மடனும் வலியுமாகும்'' என்பது தொல்காப்பியம்.

125. ''என்றலால் யான்உனை எடுத்து, விஞ்சைகள்
ஒன்று அலாதன பல உதவிற்று உண்மையால்
''அன்று'' எனாது, இன்று எனது ஆணை ஐய! நீ
நன்று போந்து அளி, உனக்கு உரியநாடு'' என்றான். (2597)

(போந்து-வந்து; அளி-காப்பாயாக)

''இராமா! என்று சான்றோர்கள் கூறுவதால், நான் உன்னை இளமை முதலே எடுத்து வளர்த்து, உனக்குப் பலவகையான கல்விகளையும் கற்பித்தது உண்மையென்றால், நான் இப்போது கூறப்போவதைத் தக்கது அன்று என்று மறுக்காது, எனது கட்டளையாக ஏற்று, உனக்கு உரிமை உடைய அயோத்திக்குச் சென்று, நல்லவண்ணம் நாட்டைக் காப்பாயாக!'' என்றான் வசிட்டன்.

126. இராமன் வசிட்டனை மறுத்தல்

கூறிய முனிவனைக் குளிர்ந்த தாமரை
சீறிய கைகளால் தொழுது, செங்கணான்
''ஆறிய சிந்தனை அறிஞ! ஒன்று உரை
கூறுவது உளது'' எனக் கூறல் மேயினான். (2598)

(சீறிய-சினந்ததால் வென்ற; ஆறிய-அடங்கிய)

Koviloor Digital Library

இவ்வாறு கூறிய வசிட்டனைச் சிவந்த கண்களையுடைய இராமன், குளிர்ந்த தாமரை மலரும் தனக்குப் பகை என்று சீறிய சிறந்த கைகளினால் வணங்கி, ''ஐம்புலன்களையும் அடக்கி ஆன்றவிந்த சான்றோனே! நானும் உனக்குக் கூறுவது ஒன்று உள்ளது'' என்று கூறிக் கீழ்க் கண்டவாறு கூறத் தொடங்கினான்.

குவிந்த தாமரை எனக் கொண்டு தனது குவிந்த தாமரை மலர் போன்ற சிறிய கைகளால் என்று பொருள் கூறுவாரும் உளர். செவ்விய இரேகை ஓடும் கண்கள் ஆண்களுக்கு உத்தம இலக்கணம். ஆயினும் இங்கே இராமன் சீற்றம் கொண்டதனால் கண்கள் சிவந்தனவாயின என்பதே பொருந்தும் என்க. இராமன் தன் குருவான வசிட்டனையும் சீறியே பேசினான் என்பது பெறப்படும். வசிட்டன் இங்கே இடையிட்டுப் பேசுவதற்கு வான்மீகி ஒரு காரணம் கற்பிக்கிறார். ஜாபாலி என்ற ஒரு முனிவன் இராமனை அணுகி நாத்திகவாதம் பேசியதால் இராமன் சீற்றமுற்று அவனை முனிந்தபோது, அவன் சீற்றத்தைத் தணிவிக்க வசிட்டன்இடையிட்டு அவர்களின்சூரியகுலவரலாறு, உலகம்தோன்றிய முறை முதலியவற்றை இராமனுக்குக் கூறியதாகவும் கூறுகிறார்.

127. ''சான்றவர்ஆக; தன் குரவர் ஆக; தாய்
போன்றவர் ஆக; பொன்புதல்வர் ஆக; தான்
தேன்தரு மலர்உளான் சிறுவ! ''செய்வென்'' என்று
ஏன்றபின், அவ்வுரை மறுக்கும் ஈட்டதோ?'' (2599)

(தரு-தருதல் / சிந்துதல் / துளிர்த்தல்; சிறுவன்-மகன்; குரவர்-ஆசிரியர்; ஏன்ற-ஏற்றுக் கொண்ட; ஈடு-தன்மை)

''தேன் சிந்துகின்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனின் மகனே! ஆன்றவிந்த சான்றோர்களாக இருக்கட்டும்; தனது ஆசிரியனாக இருக்கட்டும்; தாய் போன்ற மற்ற அரசன், தந்தை, தம்முன் ஆகியவர்களாக இருக்கட்டும்; அழகிய பொன்போன்ற புதல்வர்களாகவே இருக்கட்டும் தான் நேர்மையான ஒன்றைச் செய்வதாக ஏற்றுக் கொண்டபின், அச்சொல்லிலிருந்து மாறுபட்டு, அதனை மறுத்துரைக்கும் தன்மை தகுதியுடையதாகுமோ? ஆகாதன்றோ?'' என்று இராமன் வசிட்டனிடம் கேட்கிறான்.

குரவர் என்பது இங்கே தனியாக ஆசிரியரை மட்டுமே குறித்து நின்றது என்க. மற்ற நால்வரையும் தாய் போன்றவர் என்ற சொல்லிற்குள் அடக்கி விட்டான்கவிஞன். சிறுவ என்பது மகன்என்பதைக்குறித்தாலும், கவிஞன் இந்தச் சொல்லை இங்கே பயன்படுத்தியிருப்பது இராமனின் சீற்றத்தை விளக்குவதற்காகவே என்று கொள்ளுதல் பொருந்தும். வசிட்டரும் அறத்திற்குப் புறம்பாகப் பேசியதால் இவ்வாறு அழைத்தான் என்க.

128. ''தாய் பணித்து உவந்தன, தந்தை ''செய்க'' என
ஏய, எப்பொருள்களும் இறைஞ்சி மேற்கொளாத்

Koviloor Digital Library

தீய அப் புலையனின், செய்கை தேர்கிலா
நாய் எனத் திரிவது நல்லது அல்லதோ?'' (2600)

(பணித்தல்-கட்டளையிடுதல்; தீய-கொடிய; தேர்கிலா-ஆராய்ந்து அறியாத; பொருள்கள்-செயல்கள்)

''தாய் மகிழ்ந்து கட்டளையிட்டதுவும், தந்தை ''செய்க'' என்று ஏவினதுவும் ஆன எல்லாச் செயல்களையும், புதல்வன் வணங்கித் தலைமேற்கொண்டு செய்ய வேண்டுமல்லவா? அவ்வாறு செய்யாத அந்தக் கொடிய அற்பப் புலையனைவிட, செய்யத்தக்கது இது செய்யத் தகாதது இது என்று பகுத்துணரத்தெரியாத ஐந்து அறிவுடைய நாய் போல அலைந்து திரிவதே நல்லது அல்லவா?'' என்று கேட்டான் இராமன்.

தாய் தந்தையர் ஏவிய செயல்கள் நன்மை பயப்பனவாயிருந்தாலும், அல்லாதவை ஆனாலும் உடனே அத்னைச் சிரமேற்கொண்டு ஏற்றுச் செய்ய வேண்டும். அதைச் செய்யாது விடுவானாயின் அவன் நாயினைவிடக் கீழ்ப்பட்ட தீய புலையனுக்கு ஒப்பாவான் என்கிறான் இராமன்.

129. ''முன் உறப் பணித்தவர் மொழியை யான் என்
சென்னியில் கொண்டு ''அது செய்வென்'' என்றதன்
பின், உறப் பணித்தனை, பெருமையோய்! எனக்கு
என் இனிச் செய்வகை? உரைசெய் ஈங்கு'' என்றான். (2601)

(சென்னி-தலை; முன்னுற-முன்னதாக)

''முன்னதாக எனக்கு ஆணையிட்ட என் தாய் தந்தையரின் கட்டளைகளை நான் எனது தலைமேற் கொண்டு நிறைவேற்றுவேன் என்று உறுதி செய்த பிறகு, குருவாகிய தாங்கள் அதற்கு மாறுபட்ட வேறு ஒரு கட்டளையை இடுகின்றீர்களே! பெருமை படைத்தவரே! நான் இப்போது செய்ய வேண்டுவது எது என்பதையும் தாங்களே கூறிவிடுங்கள்'' என்றான் இராமன்.

முன்னர் ஏற்ற பணியை முதன்மையாகச் செய்து முடிக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருக்கிறான் இராமன். வசிட்டன் குரு என்றாலும், தான் முன்னர் நிறைவேற்ற உறுதி செய்த செயலினின்றும் மாறுபடமுடியாது என்பதை மிகப் பக்குவமாக எடுத்து உணர்த்தி, வசிட்டன் மேல் ஏதும் கூற முடியாதவாறு செய்து விடுவதை நோக்குக. எனவேதான் இராமனை ''செல்லும் சொல் வல்லான்'' என்றான் கம்பன்.

130. பரதன் தானும் காட்டிலேயே இருக்கப் போவதாகக் கூறுதல்

முனிவனும் ''உரைப்பது ஓர் முறைமை கண்டிலம்
இனி'' என இருந்தனன்; இளைய மைந்தனும்
''அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடு; நான்
பனிபடர் காடு உடன் படர்தல் மெய்'' என்றான். (2602)

Koviloor Digital Library

(பனி-குளிர்ச்சி / அச்சம் / துன்பம்; படர்தல்-செல்லுதல் / நீங்குதல் / ஓடுதல்; பனித்தல்-நடுக்கம் செய்தல்)

வசிட்ட முனிவனும், ''இப்பொழுது மாற்றம் உரைப்பதற்கு வேறு ஒரு வழியும் காணவில்லையே'' என்று மதிமயங்கி வாளா இருந்தான்; அதனைக் கண்ட இளையவனான பரதன், ''சரி, அப்படியானால், நாட்டை யார் வேண்டுமானாலும் ஆண்டு கொள்ளட்டும், ஆனால் நான் குளிர்ச்சி நீங்கிய வெம்மையான அச்சம் தருகின்ற காட்டிற்குள் இராமன் உடன்சென்று தீர்வேன். இது உண்மை-நிச்சயம்'' என்று உறுதிபடக் கூறினான்.

முன்பு இராமனுக்கு முடிசூடமுடியாது என்ற பொழுது இலக்குவன் சீறினான். இராமன் அச்சீற்றத்தைத் தணிவித்தான். இலக்குவன் வாயடைத்து நின்றான். பிறகு சீதையும் உடன் காட்டுக்கு வருவேன் என்று உறுதியாய் நின்றபோது இராமன் வாயடைத்து நின்றான்; இப்பொழுது இராமன் பதினான்கு ஆண்டுகாலம் முடியாது நான் நாட்டிற்குள் வரமாட்டேன் என்று உறுதியாய்க் கூறியபோது வசிட்ட முனிவனும் வாயடைத்து நிற்கிறான். செயல் ஒற்றுமையை நோக்குக. எனவே, இராமன், பரதன் இருவரும் தத்தம் கொள்கையினின்றும் மாறாதவர்களாய் உறுதியுடன் நின்றனர் என்பதாம்.

131. தேவர்கள் அசரீரி

அவ்வழி இமையவர் அறிந்து கூடினார்
''இவ்வழி இராமனை இவன் கொண்டு ஏகுமேல்,
செவ்வழித்து அன்று நம் செயல்'' என்று எண்ணினார்,
கவ்வையர் விசும்பிடைக் கழறல் மேயினார். (2603)

(அவ்வழி-அவ்வேளை / அச்சமயம்; செவ்வழித்து-செம்மையான வழியில் / ஒழுங்குற; கவ்வை-கவலை / ஆரவாரம்; கழறல்-சொல்லுதல் / பொருள் புரியாத உரத்த கூச்சல்)

அப்பொழுது தேவர்கள் இங்கு நடப்பனவற்றை யெல்லாம் பார்த்து, இதன் விளைவுகளை ஆராய்ந்து, இப்பரதன் இவ்வாறு இராமனை அழைத்துக் கொண்டு அயோத்திக்குச் சென்றான் என்றால், நாம் விழைகின்ற காரியம் செம்மையாக நிறைவேறாது போய் விடுமே என்று எண்ணிக் கவலையுற்றவர்களாய் ஆகாயத்தில் ஒன்றுகூடி நின்று எல்லோருக்கும் கேட்கும் வண்ணம் கீழ்க்கண்டவாறு கூறலானார்கள்.

நம் செயல் என்பது, தேவர்கள் ஒன்று கூடி முறையிட்டதனால் திருமால் அயோத்தியில் தசரதனுக்கு மூத்த மகன் இராமனாக அவதரித்து, இராவணனை வதம் செய்வது என்பதைக் குறிக்கும். இவ்வாறு பரதன் இராமனை அழைத்துக் கொண்டு சென்று விட்டால் இந்தத் தேவகாரியம் நடைபெறாததுடன், அவதார நோக்கமும் நிறைவேறாது போய் விடுமே

Koviloor Digital Library

என்று கவலை கொண்டவர்களாய் அதனைத் தடுக்கும் வகையில் சில கூறினார்கள். அது அடுத்த பாடலில் வரும்.

132. ''ஏத்தஅரும் பெருங்குணத்து இராமன் இவ்வழி
போத்துஅரும் தாதை சொல் புரக்கும் பூட்சியான்
ஆத்த ஆண்டு ஏழினோடு ஏழும் அந்நிலம்
காத்தல் உன்கடன்; இவைகடமை'' என்றனர். (2604)

(ஏத்த-புகழ; போத்து-மனக்குற்றம்; புரத்தல்-பாதுகாத்தல்; பூட்சி-உரிமை / உறுதி; ஆத்த- யாத்த / நியமிக்கப்பட்ட)

''புகழ்தற்குரிய சிறந்த குணங்களையுடைய இராமன், இவ்வாறு மனக்குற்றம் இல்லாத அவன் தந்தை தசரதனின் வாய்மையைக் காப்பாற்றும் உரிமையுடையவன்; அதில் உறுதியாகவும் நிற்பவன்; எனவே இராமனால் பணிக்கப்பட்ட பதினான்கு ஆண்டு காலமும் அந்நாட்டைப் பாதுகாத்து அரசாள வேண்டுவது உனது கடமை; இவ்விரண்டு கடமைகளையும் நீங்கள் இருவரும் கடைப்பிடித்தாக வேண்டுவதே முறைமை'' என்று தேவர்கள் கூறினார்கள்.

அருமை என்ற சொல் ''இல்லாத'' என்ற பொருளைத்தரும் ''அருமை இன்மை மேற்று'' என்பதாம். போத்த அரும் என்ற சொல்லை பொத்து என்ற பகுதியின் அடியாகக் கொண்டு மனக்குற்றம் இல்லாத என்று, பொருள் கொண்டோம்; போற்ற அரும் என்று கொண்டு போற்றுதற்கரிய என்றும் பொருள் கொள்வதுண்டு.

133. இராமன் பரதனுக்குக் கட்டளை இடுதல்

வானவர் உரைத்தலும், ''மறுக்கற் பாலது அன்று;
யான்உனை இரந்தனென், இனிஎன் ஆணையால்
ஆனது ஓர்அமைதியின் அளித்தி பார்'' எனா
தான்அவன் துணை மலர்த் தடக்கை பற்றினான். (2605)

(இரத்தல்-வேண்டிக் கொள்ளுதல்; இனி-இப்போது; அமைதி-காலவரையறையளவு)

இவ்வாறு தேவர்கள் கூறியதும் இராமன் பரதனை நோக்கி, ''தேவர்கள் கூறிய இவை மறுத்தற்குரியதன்று; எனவே நான் உன்னைக் வேண்டிக் கொண்டேன். நீ உடன்படவில்லை. இப்பொழுது நான் உனக்கு ஆணையிடுகிறேன். நம் இருவருக்கும் நியமிக்கப்பட்ட கால வரையறையான பதினான்கு ஆண்டு காலமும் அமைதி தவழ நாட்டின் அரசுப் பொறுப்பை ஏற்று அரசோச்சி வருவாயாக!'' என்று, பரதனது இரண்டு மலர் போன்ற பெரிய கைகளையும் பற்றிக் கொண்டு வேண்டினான்.

Koviloor Digital Library

இராமன்பரதனைவிடவும்பெரியவன்எனவேகைகளைப்பற்றினான். சிறியோராயின் கால்களைப் பற்றி வேண்டுதல் முறை என்பது பெறப்படுகிறது. பொதுவாக நாம் சொல்லுவதைக் கேட்பவர் மறுக்கவே கூடாது, உடன்பட்டே ஆக வேண்டும் என்ற நிலைவரும் போது, அவர்களின் கைகளைப் பற்றிக் கொண்டு கேட்பதே இன்றும் வழக்கம் என்பதை உணர்க.

134. பரதன் நிபந்தனை விதித்தல்

''ஆம்எனில், ஏழ்இரண்டு ஆண்டில், ஐய! நீ
நாமநீர் நெடுநகர் நண்ணி, நானிலம்
கோமுறை புரிகிலை என்னின், கூர்எரிச்
சாம்; இது சரதம்; நின்ஆணை சாற்றினேன்!'' (2606)

(நாமம்-அச்சம்; நண்ணி-அடைந்து; கோமுறை-அரசாட்சி; கூர்-மிக்க; எரி-தீ; சாம்-சாகும் / சாவேன்; சரதம்-நிச்சயம் / உண்மை / உறுதி; சாற்றுதல்-உரைத்தல்; நானிலம்-பூமி)

''அப்படி யென்றால், தலைவனே! இந்தப் பதினான்கு ஆண்டுகள் கழிந்ததும் சிறிதும் தாமதிக்காமல், நீ அச்சம் தருகின்ற அகழிநீர் சூழ்ந்த நீண்ட மதில்களையுடைய அயோத்தி நகர் அடைந்து, பூமியின் அரசாட்சியை ஏற்று அரசு புரியவில்லை என்றால், நான், மிக்கக் கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பில் வீழ்ந்து இறந்துபடுவேன்; இது உறுதி; நிச்சயம்; உன் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்'' என்று பரதன் ஒரு பெரிய நிபந்தனையை விதித்தான்.

இது வெற்றுரையல்ல. நிச்சயம் அவ்வாறு செய்வேன் என்று கூறியதைப் போலவே, அவன் செய்ய முற்பட்டான் என்பதை இறுதியில் அவ்வாறே நடப்பது கொண்டு காணலாம்.

135. இராமன் அதற்கு உடன்படுதல்

என்பது சொல்லிய பரதன், யாதும்ஓர்
துன்பிலன் அவனது துணிவை நோக்கினான்;
அன்பினன்; உருகினன்; ''அன்னது ஆக'' என்றான்;
தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான். (2607)

(நோக்குதல்-எதிர்பார்த்தல்; துணிவு-முடிவான விடை)

என்று இவ்வாறு சொல்லிய பரதன், தன் கட்டளைக்கு இணங்கியதால் முன்பு இருந்த துன்பங்கள் ஒன்றும் இப்பொழுது இல்லாதவனாகிச் சமநிலையில் இருந்த இராமனது முடிவான சொற்களை எதிர் நோக்கிக் காத்திருந்தான்; தன் புகழைக் காட்டிலும் சிறந்த குணங்களையுடைய இராமபிரான், பரதன் மீது இப்பொழுது மிக்க அன்பு கொண்டு, மனம் உருகி, ''சரி; அவ்வாறே ஆகுக'' என்று கூறி உடன்பட்டான்.

Koviloor Digital Library

''அன்னது ஆக'' என்பது, பதினான்கு ஆண்டுகள் கழிந்ததும் சிறிதும் காலம் தாழ்த்தாது அயோத்தி வந்து அரசுரிமையை ஏற்பேன் என்ற உறுதிமொழி என்க. இராமபிரானது புகழை முற்றிலும் கூறித் தீர்த்துவிட முடியாது என்பதைக் குறிக்கவே ''தன் புகழ் தன்னினும் பெரிய தன்மையான்'' என்றார் என்க.

136. பரதன் இராமனது பாதுகையை வேண்டுதல்

விம்மினன் பரதனும், வேறுசெய்வது ஒன்று
இன்மையின், ''அரிது'' என எண்ணி ஏங்குவான்,
''செம்மையின் திருவடித்தலம் தந்துஈக'' என,
எம்மையும் தருவன இரண்டும் நல்கினான். (2608)

(விம்முதல்-கலங்குதல்; திருவடித்தலம்-திருவடிநிலை / பாதுகை; எம்மை-இம்மை மறுமை, எல்லாமும்; தந்து ஈக-தந்து அருள்க)

இதனைக் கேட்ட பரதன், இப்போது செய்யக் கடவது வேறு ஒன்றும் இல்லை என்று கருதி, இராமனைப் பிரிந்து தான் மட்டும் சென்று அரசாளுவது என்பது எளிதல்ல என்பதையும் எண்ணிப்பார்த்து, மனம் கலங்கி, இராமனை நோக்கி, ''அப்படியானால் செம்மையான உனது திருவடி நிலைகளை-பாதுகைகளை எனக்குத் தந்து அருள்வீராக'' என்று வேண்ட, இராமபிரானும், இம்மை, மறுமை ஆகிய எல்லாப் பிறவிகளிலும் நன்மையே அளிக்கக் கூடிய தனது இரண்டு பாதுகைகளையும் அன்புடன் கொடுத்தருளினான்.

இம்மை இப்பிறவி, மறுமை மறுபிறவி என்பதைப் போல, எம்மை என்பதற்கு எப்பிறவியிலும் என்று பொருள்கொள்ளப்பட்டது. இராமனின் பாதுகைகளின் சிறப்பினைப் பற்றி வேதாந்ததேசிகர் ஆயிரத்தெட்டு சுலோகங்கள் கொண்ட ''பாதுகாசகஸ்ரம்'' என்ற தோத்திர நூலை இயற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

137. பரதன் பாதுகைகளைத் தலைமேற் சூடிச் செல்லுதல்

அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினான்,
''முடித்தலம் இவை'' என முறையின் சூடினான்;
படித்தலத்து இறைஞ்சினன், பரதன் போயினான்,
பொடித்தலம் இலங்குறு பொலம் கொள் மேனியான். (2609)

(பொடி-புழுதி; பொலன்-அழகு; அடித்தலம்-திருவடி / பாதுகை; முடித்தலம்-மணிமகுடம் / கிரீடங்கள்; படித்தலம்-தரை / பூமி)

அழுத கண்களை உடையவனாய், பூமியின் புழுதியெல்லாம் தன் உடல் மீது பொருந்தியும் அழகான உடம்பினை உடையவனான பரதன், இராமனது திருவடிநிலைகள் இரண்டையும், தனக்குரிய மணி மகுடங்கள் கிரீடங்கள் இவை என்று கருதி, முறைப்படி தலையில் வைத்துக் கொண்டு,

Koviloor Digital Library

தரையில் விழுந்து இராமபிரானை வணங்கித் தொழுது மீண்டும் அயோத்திக்குத் திரும்பினான்.

முன்பு குகனுக்கு மாசடைந்த மெய்யானாகத் தோற்றமளித்த பரதன் இப்போது ''பொடித்தலம் இலங்குறு பொலம் கொள் மேனியான்'' எனத் தோற்றமளிக்கிறான் என்றது ஓர் நயம்.

138. பரதனுடன் எல்லோரும் திரும்பிச் செல்லுதல்

ஈன்றவர் முதலிய எண்இல் சுற்றமும்,
சான்றவர் குழுவொடு தவத்துளோர்களும்
வான்தரு சேனையும், மற்றும் சுற்றுற,
மூன்றுநூல் கிடந்ததோள் முனியும் போயினான். (2610)

(எண்இல்-அளவில்லாத; வான்-பெருமை; சுற்றுற-சூழ்ந்து செல்ல)

தன்னைப் பெற்றெடுத்த மூன்று தாய்மார்களும், எண்ணற்ற சுற்றத்தினரும், பெரியவர்கள் கூட்டமும், தவத்தையுடைய முனிவர்களும், பரந்த பெருமை பொருந்திய சேனைகளும், ஏனைய அரசர் முதலானோரும் தன்னைச் சூழ்ந்துவர, முப்புரிநூலைத் தன் தோள்களில் கொண்டுள்ள வசிட்டனும் உடன்வரப் பரதன் அயோத்தி நோக்கிச் சென்றான்.

மூன்று நூல் என்பது முப்புரி நூலைக் குறிக்கும். முப்புரி நூல் என்பது பூணூல் அது வடமும், வடத்தில் புரியும், புரியில் நூலும், மும்மூன்றாகவே அமையும் என்பதாம்; ''ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்'' என்பது திருமுருகாற்றுப்படை.

139. பண்டை நூல்தெரி பரத்துவனும் போயினான்;
மண்டுநீர் நெடுநகர் மாந்தர் போயினார்;
விண்டுஉறை தேவரும் விலகிப் போயினார்;
கொண்டல் தன் ஆணையால் குகனும் போயினான். (2611)

(பண்டை-பழமையான; நூல்-வேத சாஸ்திரங்கள்; மண்டு-மிக்க / நிறைந்த; விண்டு-ஆகாயம்; கொண்டல்-காளமேகம்)

தொன்மையான வேதசாத்திரங்களில் வல்லவனான பரத்துவாச முனிவனும் தன் ஆசிரமத்திற்குச் செல்லலுற்றான்; நிறைந்த நீர் சூழ்ந்த நீண்ட அகழிகளையும் மதிலையும் கொண்ட அயோத்தி நகர மக்கள் அயோத்திக்குத் திரும்பிச் சென்றனர்; ஆகாயத்தில் ஒன்று கூடி இருக்கும் தேவர்களும், அவ்விடம் விட்டு நீங்கிச் சென்றார்கள்; காளமேகம் போன்ற இராமபிரான்கட்டளையால் குகனும் தன்சிருங்கி பேரத்துக்குச்சென்றான்.

விண்டு என்ற சொல்லுக்கு வெளிப்பட்டு என்று பொருள் கொண்டு, வானில் மறைந்து கூடியிருந்த தேவர்கள் இப்போது வெளிப்பட்டு நீங்கிப் போயினர் என்றும் கூறுவதுண்டு; விண்டு என்பது விஷ்ணு என்பதன் திரிபு

Koviloor Digital Library

என்று கொண்டு, ''எங்கும் வியாபித்திருப்பது'' என்று பொருள் கொண்டு வானில், எல்லா இடங்களிலும் திரியும் தேவர்கள் என்றும் சிலர் பொருள் கூறுவர். குகன் மட்டும் இராமனைப் பிரிய இயலாது தயங்கி நின்றான். அவனையும் இராமன் போகச் சொல்லிக் கட்டளை இட்டதனால் பிரிதலாற்றாது பிரிந்தான் எனக் குகனைத் தனியாகச் சொல்லிச் சிறப்பித்தான் என்க.

140. பரதன் அயோத்திக்குப் போகாதது

பாதுகம் தலைக்கொடு பரதன், பைம்புனல்
மோது கங்கையின் கரைகடந்து முந்தினான்;
போதுஉகும் கடிபொழில் அயோத்தி புக்கிலன்;
ஓதுகங்குலில் நெடிது உறக்கம் நீங்கினான். (2612)

(பாதுகம்-பாதுகை / திருவடிநிலை; பைம்புனல்-பசிய நீர் / குளிர்ந்த நீர்; போது-மலர்; கடி-மணம்; பொழில்-சோலைகள்; ஓது-சொல்லப்பட்ட; கங்குல்-இரவு)

இராமபிரானது இரண்டு திருவடி நிலைகளையும் தன் தலையின் மீது தாங்கிக் கொண்டு பரதன், குளிர்ந்த பசுமையான நீரையுடைய அலைகள் வந்து மோதுகிற கங்கை ஆற்றின் தென்கரையைக் கடந்து முற்பட்டு, மலர்கள் சிந்துகின்ற நறுமணம் மிக்க சோலைகள் சூழ்ந்த அயோத்தி நகருக்குள் நுழையாமல், சொல்லப்படுகின்ற இரவில், நீண்ட உறக்கம் கொள்ளாது சிந்தித்த வண்ணம் இருந்தான்.

141. பரதன் நந்தியம்பதியில் தங்கியிருத்தல்

நந்தியம் பதியிடை, நாதன் பாதுகம்
செந்தனிக் கோல்முறை செலுத்த, சிந்தையான்
இந்தியங்களை அவித்து இருத்தல் மேயினான்,
அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணினான். (2613)

(அந்தி-இரவு; இந்தியங்கள்-ஐம்பொறிகள்; அவித்து-அடக்கி)

நந்தியம்பதி என்னும் ஒரு கிராமத்தில், தலைவன் இராமனது திருவடி நிலைகள் ஒப்பற்ற செங்கோல் முறையாக அரசாட்சி செலுத்த, இராமனையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கின்ற மனத்தை உடையவனான பரதன், இரவும் பகலும் நீர்ப் பெருக்கு வற்றாத கண்களையுடையவனாய், தனது ஐம்பொறிகளையும் அடக்கி, ஓர் தவசி போலத் தங்கி இருக்கலானான்.

நந்திக்கிராமம் என்பது அயோத்திக்கு அருகில் உள்ள ஒரு ஊர். அங்கே இராமனது பாதுகைகளை அரியணையில் செங்கோலாக நிறுவி, தான் அதற்குப் பிரதிநிதி போல இருந்து அரசோச்சி வந்தான் என்பதாம். பரதன் முதலில் அயோத்திக்குச் சென்று, தன் பரிவாரங்களையெல்லாம் அங்கே

Koviloor Digital Library

அமர்த்தி விட்டு, தன்னால் அங்கே இருக்க மனம் கொள்ளாமல் பின்னர் நந்தியம்பதி வந்து தங்கியதாக வான்மீகம் கூறும்.

142. இராமஇலக்குவர் சீதையுடன் தென்திசை செல்லுதல்

''குன்றினில் இருந்தனன் என்னும் கொள்கையால்,
நின்றவர் நலிவரால் நேயத்தால்'' எனாத்
தன்துணைத் தம்பியும், தானும், தையலும்
தென்திசை நெறியினைச் சேறல் மேயினான். (2614)

(குன்று-சித்திரகூட மலை; கொள்கை-எண்ணம்; நேயம்-அன்பு; நலிவர்-வருந்துவர்; தையல்-பெண் / சீதை)

அயோத்தி நகருக்கு அருகிலுள்ள சித்திரகூட மலையில் தங்கி இருக்கிறான் என்ற காரணத்தால் தன் மீது அன்புள்ளம் கொண்ட அயோத்தி மக்கள் அடிக்கடி வந்து தொந்தரவு கொடுத்து வருத்துவர் என்று எண்ணி, தன்னைவிட்டுப் பிரியாததுணைவனானதன்தம்பி இலக்குவனும், தானும் சீதாதேவியும் உடன் வர இராமன் தென்திசை நோக்கிச் செல்லும் வழியில் செல்லலானான்.

திருவடி சூட்டு படலம் நிறைவுற்றது

அயோத்தியா காண்டம் முற்றியது

Koviloor Digital Library

அயோத்தியா காண்டம்

செய்யுள் முதல் குறிப்பு அகராதி

அ

	பாடல் எண்
அகல் இடம் நெடிது	2118
அகில் இடு தூபம்	2458
அகில் புனை குழல்	2105
அங்கணன் அவனி	1672
அங்கி நீரினும் குளிர	2337
அங்கி மேல் வேள்வி	1959
அங்குள்ளகிளைகாவற்கு	2093
அச்சொல் கேளா ஆவி	1617
அசும்பு பாய்வரை	2177
அஞ்சலள் ஐயனது	1603
அஞ்சனக் குன்றம்	1890
அஞ்சனமேனி இவ்வழகற்கு	1883
அஞ்சன வண்ணன்	2414
அஞ்சிமந்தரைஅகன்றிலள்	1566
அஞ்சினர் வானவர்	2266
அஞ்சு அடுத்த அமளி	2484
அஞ்சு அம்பையும் ஐயன்	2024
அட்டிலும் இழந்தன புகை	1900
அடரும் செல்வம்	2193
அடிஇணை பொறைகல்லா	2110
அடித்தலம் இரண்டையும்	2609
அடித்தலம் கண்டிலென்	2288
அடிதொழுது உவகை	2067
அடிமிசைத் தூளி புக்கு	2403
அடியில் சுடர் பொன்	1814
அடுத்த பல்பகல்	2164
அடைந்து அவள் நோக்கி	1589
அடைவு அரும் கொடுமை	2356
அண்டம் முற்றும் திரிந்து	2227
அண்ணல் அன்ன சொல்	1923
அண்ணலும் அது கேளா	2080
அண்ணலும் விரும்பி	2061
அணங்கு வாள்விட	1543
அத்திசை உற்று ஐயன்	2085
அதிர்கடல் வையகம்	2376
அந்தணர் அருந்தவர்	1866
அந்தணர் உறையுளை	2301
அந்தணாளர் முனியவும்	1506
அந்த நல்பெரும் குரவர்	2580
அந்த வாய்மொழி ஐயன்	2194
அந்தியில் வெயில் ஒளி	1939
அந்நகர் அணிவுறும்	1537
அந்நான் மறையோன்	1774
அந்நெடும் துயர் உறும்	2558
அப்படை கங்கையை	2406
அம்முனி வரலோடும்	2117
அயாஉயிர்த்துஅழுகண்ணீர்	2858
அரக்கர் பாவமும்	1576
அரசர் இல் பிறந்து	1559
அரசவை விடுத்த பின்	1487
அரம் சுட அழல் நிமிர்	2514
அரிந்தான் முன் ஓர்	1629
அரியதாம் உவப்ப	2063
அரியவன் உரைசெய	2530
அருஞ்சிறப்பு அமைவரும்	1423
அருத்தியன் அகம் விம்மும்	2114
அருந்ததி அனையாளே	2102
அருந்தவம்என்துணைஆள	2418
அருந்தேரானைச்சம்பரனை	2002
அருப்பு ஏந்தியகலசத்துணை	2027
அல்அணைநெடுங்கண்நீர்	2399
அல்லலும் உள இன்பம்	2121
அல்லை ஆண்டு அமைந்த	2442
அலங்கல் மன்னனை	1450
அலம்பு வார்குழல்	2173
அலர்ந்த பைங்கூழ்	2220
அலை நெடும் புனல் அற	2385
அவ்விடைஅண்ணல்தானும்	2444
அவ்வுரை கேட்டலும்	2256
அவ்வயின்அரசவைநின்றும்	1856
அவ்வழிஅவனைநோக்கி	2438
அவ்வழிஇமையவர்	2603
அவனிகாவல்பரதனது	1724
அவித்தஐம்புலத்தவர்	2364
அழிவு அரும் அரசியல்	2305
அழுது தாயரோடு	1914

Koviloor Digital Library

அள்ளல் பள்ளப் புனல் 1758
அளம் கொள் அரக்கர் 2006
அளி அன்னது ஓர் அறல் 2023
அளிக்கும் நாயகன் மாயை 2152
அறம் எனக்கு இலையோ 1710
அறம்கெட முயன்றவன் 2295
அறம் தனை நினைந்திலை 2526
அறம் தனை வேரறுத்து 2245
அறம் தானே என்கின்ற 2467
அறம் நிரம்பிய அருள் 1568
அறிஞரும் சிறியரும் 2386
அறுத்தாய் கணையால் 1780
அறுபதினாயிரம்அக்குரோணி 2462
அறுபதினாயிரம்அரசன்தேவியர் 1874
அறுபதினாயிரர் எனினும் 1412
அறைகழல் சிறைக் குன்றவர் 2163
அன்பு இழைத்த மனத்து 1709
அன்று அவன் உலகினை 2595
அன்று எனின் அவனொடும் 2359
அன்று தீர்ந்த பின் 2568
அன்னகாதல்அருந்தவத்தவர் 2478
அன்ன தன்மை அகநகர் 2233
அன்ன தன்மையள் ஐயனும் 1920
அன்ன தாயர் அரிதின் 1934
அன்னது கண்ட அலங்கல் 1591
அன்னர் ஆயினும் 1434
அன்னவன் அருள் அமைந்து 1414
அன்னவர் முகத்தினோடு 1857
அன்னவள் அவ்வுரை உரைப்ப 1547
அன்னவள் கூறுவாள் 1974
அன்னவன் உரை கேளா 2090
அன்னவன் பணிதலைஏந்தி 1861
அன்னள் ஆயும் அரும்பெறல் 1493
அன்னான் அவர் தந்தன 1844
அன்னான் தனை ஐயனும் 1837
அன்னை ஏவினாள் அடி 2320
அன்னையர் அனைவரும் 1849
அனைய தன்மையள் 1577
அனையதாகியஉவகையன் 1444
அனையது ஆதலின் அரும் 1470
அனையசெய்கையால்அரசர் 2338
அனையர் அப்புனல் ஏறினர் 2132
அனையர் ஆதலின் ஐய 1507
அனையவேலைஅகன்மனை 1924
அனைய வேலையில் 2236

ஆ

ஆஆஅரசன்அருள்இலனே 1794
ஆகச் செய்தக்கது இல்லை 2195
ஆகாதது அன்றால் உனக்கு 1845
ஆகின் ஐய அரசன் தன் 1715
ஆ கொடியாய் எனும் 1607
ஆங்கு அவ்வாசகம் எனும் 1705
ஆங்குவந்தடைந்தஅண்ணலும் 1686
ஆடகம் தரு பூண்முயங்கிட 1643
ஆடல் மான் தேர்க்குழாம் 1532
ஆடவர் நகை உற 1548
ஆடினர் அழுதனர் 1907
ஆடுகின்ற மாமயிலினும் 2153
ஆடுகின்றனர் பண் அடைவு 1489
ஆடு கொடிப்படை சாடி 2422
ஆண்டு இனையராய் 1685
ஆண்டு தன் மருங்கு 1462
ஆண்டு நின்று ஆண்தகை 2400
ஆண்டு அவன் நிலையாக 1488
ஆண்தகை அம்மொழிபகர 1850
ஆண்தகைகோசலைஅருகா 2286
ஆதலால் இராமனுக்கு 1432
ஆதலால் முனியும் என்று 2397
ஆதி அரசன் அரும்கேகயன் 1802
ஆதிய அமைதியின் இறுதி 2593
ஆம் எனின் ஏழ் இரண்டு 2606
ஆய்தந்து அவன் அவ்வுரை 1830
ஆய காலையில் ஐயனை 2479
ஆயகாலையில் ஐயனைநாடி 2238
ஆயகாலையின் ஆயிரம் 2049
ஆயது அவ்வழி நிகழ்தர 1459
ஆயது ஓர் அமைதியின் கண் 1662
ஆயபேர் அன்பு எனும் 1550
ஆயவள் தன்னை நேர்ந்து 2561
ஆயன நிகழும் வேலை 1689
ஆர்கலி அகழ்ந்தோர் 1678
ஆர்த்தனர் களித்தனர் 1525
ஆரியன் இளவலை நோக்கி 1980
ஆரும் பின்னர் அழுது 1931
ஆலைபாய்வயல் அயோத்தியர் 2131

Koviloor Digital Library

ஆவதற்கும் அழிவதற்கும் 1508
ஆவது உள்ளதே ஐய 2127
ஆவும் அழுத அதன் 1797
ஆழ்ந்த பேரன்பினான் 1546
ஆழநெடுந்திரை ஆறுகடந்து 2415
ஆழி சூழ்உலகமெல்லாம் 1693
ஆழிப்பொன் தேர்மன்னவன் 1628
ஆழியான் முடிசூடும் நாள் 1641
ஆழியை உருட்டியும் 2361
ஆழிவேந்தன் பெருந்தேவி 2004
ஆள்அற அலங்கு தேர் 2510
ஆள் உலாம் கடலினும் 2389
ஆள்வினை ஆணையின் 1973
ஆளான் பரதன் அரசு 1801
ஆளும் நல்நெறிக்கு 1468
ஆற்றலன் இன்னன பன்னி 2254
ஆறினன் போல்சிறிது அவலம் 1976
ஆறு கண்டனர்அகம்மகிழ்ந்து 2129
ஆறு செல்லச் செல்ல 2018
ஆறு தன்னுடன் வரும் 2303
ஆறி நின்று அறம் ஆற்றலர் 2492
ஆறும்கானும் அகன் மலையும் 2215
ஆன்ற பேர் அரசனும் 2360
ஆன்றவன் அவ்வுரை கூற 1594
ஆன்றான் பகர்வான் 1833
ஆனவன் உரைசெய 2241
ஆனவன் பிற உளயாவும் 2555
ஆனனம் கமலத்து அன்ன 2459
ஆனனம் மகளிர்க்குஅளித்த 2181

இ

இக்கரை இரைத்த சேனை 2457
இடிக்கண் வாள் அரா 2331
இடிகொள் வேழத்தை 2176
இடிபடு முழுக்கம் பொங்க 2449
இத்திறத்த எனைப்பல 1723
இத்திறத்தின் இடர் உறுவான் 1711
இதஇயல் இயற்றிய 2596
இந்த நெடுஞ்சொல் 1606
இந்திரன் முதல்வராய 1995
இந்நிலை நின்றவள் தன்னை 1604
இப்பொழுது எம்மனோரால் 1694
இம்பர் நின்று ஏகினை 2250
இம்மா மொழி தந்து 1786
இம்மை பொய் உரைத்து 2583
இமிழ்திரைப் பரவைஞாலம் 1653
இயம்கெழு தானையர் 2251
இயல்வுறு செலவின் 2456
இயன்றது என் பொருட்டினால் 2440
இரதம் ஒன்று ஊர்ந்து 2290
இரதம் வந்து உற்றது 1992
இரந்தான் சொல்லும் 1620
இருகண்களும் இன்று 1775
இருகையின் கரி நிகர் 1872
இருத்தி நீ என்னலோடும் 2062
இருந்த அந்தணனோடு 1997
இருந்த மந்திரக் கிழவர் 1435
இருநிலம் சேர்ந்தனன் 2532
இருமையும் இழந்த 2503
இருவரத்தினில் ஒன்றினால் 1580
இருவரும் தொழுதனர் 1847
இருள் அற்றிட உற்று 1728
இரைத்தனர் இரைத்து 1881
இல்லை என்று உரைக்கல் 1993
இலக்குவ உலகம் ஓர்எழும் 2515
இலவும் இந்திரகோபமும் 2166
இவ்வுலகத்தினும் இடர் உளே 2549
இவ்வகை உரைசெய 1481
இவ்வாறு அழுவாள் 1731
இழிந்த தாயார் சிவிகையின் 2471
இழைத்த தீ வினையையும் 1426
இழைத்த நூல் இணை 2150
இழையும் ஆரமும் 2336
இளையான் இதுகூற 1824
இறந்தான் தந்தை 2275
இறந்தான் அல்லன் 1732
இறந்திலன் செருக்களத்து 1429
இறப்புஎனும்மெய்ம்மையை 1422
இறைவன் சொல் எனும் 1476
இன் துணையவர் முலை 2379
இன்னணம் இளையவன் 2189
இன்னணம் இனையன 2285
இன்னணம் நெடும்படை 2393
இன்னர் இன்னணம் 2490
இன்ன வேலையின் ஏழு 1649
இன்னே இன்னே பன்னி 1616

Koviloor Digital Library

இன்னே பலவும் பகர்வான் 1746
இனமலர்க் குலம் 1638
இனிய சொல்லினன் 1516
இனியது போலும் 1424
இனையராய் மகளிர் எல்லாம் 1673
இனைய யாவையும் 2178

ஈ

ஈசன் இவ்வுலகினை 2368
ஈட்டும் நன்புகழுக்கு 2228
ஈண்டு உரைத்த பணி 1704
ஈன்றவர் முதலிய எண்இல் 2610

உ

உண்டு இடுக்கண் ஒன்று 2431
உண்டு கொல் இது அலது 2550
உண்டு கொல் உயிர் என 2527
உண்நீர் வேட்கை மிகவே 1776
உண்மை இல் பிறவிகள் 2544
உணர்வான் அனையாள் 1751
உதிக்கும் உலையுள் உறுதீ 1829
உந்தாதுநெய்வார்த்துஉதவாது 1809
உந்து பொன்தடந்தேர் 2324
உந்தை தீமையும் உலகு 2576
உந்தையோ இறந்தனன் 2352
உம்மை யான் உடைமையின் 1425
உமைக்கு நாதற்கும் 1513
உய்ந்தது இவ்வுலகம் 1674
உய்யாநின்றேன்இன்னமும் 2278
உயங்கி அந்நகர் 1913
உயர் அருள் ஒண்கண் 1675
உயிர்ப்பிலன்துடிப்பும்இல்லான் 1996
உரிமை மைந்தரை 1464
உரிய மாதவன் 1475
உருகு காதலில் தழை 2151
உருளும் நேமியும் 1509
உரைசெய்து எம் 1977
உரை செய் பெருமை 1787
உரை செய் மன்னர் 2332
உரைத்த கூனியை 1581
உரைத்த பின் இராமன் 1855
உரைத்த வாசகம் கேட்டலும் 2477
உலர்ந்தது நா உயிர் 1599
உவரி வாய் அன்றி 2146
உற்றது கொண்டு 1408
உற்றுள பொருள் எல்லாம் 2119
உறத்தகும் அரசு 1447

ஊ

ஊடு உற நெருக்கி 2454
ஊண்அல உண்வழி 2308
ஊருணி நிறையவும் 1483
ஊற்று மொய் நறவொடு 2056
ஊறு கொண்ட முரசு 2214
ஊன் அளைந்த உடற்கு 2213

எ

எஃகு எறி செருமுகத்து 2304
எட்டுத்திசையும் ஓடுவார் 2015
எடுத்த மாமுடி சூடி 2474
எண்ண அரும் சுரும்பு 2402
எண் தரும் கடைசென்ற 1633
எதிர்கொடு ஏத்தினர் 2033
எந்தை எவ்வுலகுளான் 2287
எந்தை ஏவ ஆண்டு 2589
எந்தை நீ உவந்து 1445
எந்தை யாண்டையான் 2563
எந்தையும் ஆயும் 2255
எந்தையே ஏவ நீரே 1692
எம்பரத்தது ஆக்கி 2536
எய்தி அக்கேகயன் மடந்தை 1541
எய்தி நூலுளோர் மொழிந்த 2327
எய்திய வேலையில் 2556
எயினர் தங்கு இடம் 2139
எல் ஒடுங்கிய முகத்து 2524
எலி எலாம் இப்படை 2410
எழுக சேனை என்று 2205
எழுந்தது துகள் 2494
எழுந்தது பெரும்படை 2366
எழுந்த நங்கையை 1915
எழுந்தனன் இளையவன் 2499
எழுந்தனன் ஏங்கினன் 2244
எள்குலா மலர் ஏசிய 2219
எற்றே பகர்வேன் 1757
எறிந்தன கடிய சொல் 2242
எறிபகட்டு இனம் ஆடுகள் 2211
என்பத்தைக் கேட்ட மைந்தன் 2443
என்பது சொல்லிய பரதன் 2607

Koviloor Digital Library

என்பனசொல்லிஇரும்புஅன 2424
என் புகழ்கின்றது ஏழை 2436
என்பு தோல் உடையார்க்கும் 1514
என்வயிற்று அரு மைந்தற்கு 1495
என்ற அம்முனிவன் தன்னை 1737
என்ற நாட்டினை நோக்கி 2225
என்றபின் ஏந்தலை ஏந்தி 2553
என்ற பின் முனிவன் 1864
என்றலால்யான்உனைஎடுத்து 2597
என்றலும் பதைத்து எழுந்து 2570
என்றலுமே அடியின் மிசை 2465
என்ற வாசகம் சுமந்திரன் 1449
என்றனள் என்னக் கேட்டான் 1666
என்றனன் இளவலை நோக்கி 2521
என்று இறைஞ்சி அவ்விந்திரை 1496
என்று எடுத்து பற்பலவும் 2540
என்று எழுந்த தம்பியோடும் 2428
என்று என்று அயரும் தவரை 1782
என்று என்று அரசன் மெய்யும் 1767
என்று என்று உன்னும் 1627
என்று காதலின் ஏயினன் 2128
என்று கூறலும் ஏத்தி 2202
என்று கூறி நின்று 2335
என்று கொண்டு இனைய 1697
என்று கொண்டு மாதவன் 2330
என்று சிந்தித்து இளையவன் 2192
என்று நல் மடவாளொடு 2113
என்று பின்னரும் மன்னவன் 1702
என்று பின்னும் இராமனை 1504
என்னக் கேட்டு அவ்விரக்கம் 2470
என்னா உன்னா முனிவன் 1733
என்னும் வேலையில் எழுந்த 2328
என்னே நிருபன் இயற்கை 1807
என்னைக் கண்டும் 1747
என்னை நீங்கி இடர்க்கடல் 1716
எனஇவை அன்ன மாற்றம் 2437
எனக்கு நல்லையும் அல்லை 1563
எனைத்துள மறை அவை 2517
எனைப்பல சூள்உரைத்து 2315

ஏ

ஏங்கினன் விம்மலோடு 2258
ஏடு அறு கோதையர் 2391
ஏண்பால் ஓவா நாண்மடம் 1625
ஏத்த அரும் பெரும் குணத்து 2604
ஏத்தினார் தம் மகனை 1933
ஏந்து இள முலையாளே 2103
ஏந்துசெல்வத்துஇமையவராம் 2485
ஏய்ந்த காலம் இது 2218
ஏய்ந்து எழு செல்வமும் 1536
ஏயவரங்கள் இரண்டின் 1596
ஏர் துறந்தவயல் 2216
ஏவம் பாராய் இன்முறை 1624
ஏவிய குரிசில் பின் 1935
ஏவிய மொழி கேளா 2075
ஏவின வள்ளுவர் 1523
ஏழ்இரண்டு ஆண்டும் நீத்து 1971
ஏழ்உயர் மதக் களிற்று 2252
ஏழை தன் செயல் 1925
ஏற்ற இத்தன்மையின் 2594
ஏற்றவர்க்கு ஒரு பொருள் 2311
ஏற்றிட ஆண்தகை 1522
ஏன்று உன்பாவிக்கும்பி 2283
ஏன்றனன்எந்தைஇவ்வரங்கள் 1863
ஏனை நீதி இனையன 1520
ஏனையரும் இன்னணம் 1952

ஐ

ஐ இருபத்தோடுஐந்துஆயிரர் 2079
ஐந்தும் ஐந்தும் நாள் 2339
ஐய சாலவும் அலசினென் 1463
ஐய நீ யாதொன்றும் 2551
ஐயனும் அச்சொல் கேளா 1668
ஐயனைக் காண்டலும் 1867
ஐயா யான் ஓர் அரசன் 1778
ஐயுறும் சுடர் மேனியான் 1642
ஐவனக்குரல் ஏனலின் கதிர் 2175

ஒ

ஒட்டிய பகைஞர் 1421
ஒத்த சிந்தையர் 1477
ஒருத்தலைப் பரத்து 1467
ஒரு மகள் காதலின் 2512
ஒரு மாமுனிவன் மனையொடு 1771
ஒருவு இல் பெண்மை என்று 2155
ஒல்கல்இல் தவத்து 1503

Koviloor Digital Library

ஒலி ஆர்கலி சூழ் உலகத்து 1759
ஒள்ளியோன் இனைய எல்லாம் 2591
ஒளி துறந்தன முகம் 1901
ஒறுப்பினும் அந்தரம் 1610
ஒன்றா நின்ற ஆர் உயிரோடும் 1623
ஒன்றும் பொய்யா மன்னனை 2274
ஒன்றொடு ஒன்று ஒன்று 1763
ஒன்றோ நல்நாட்டு உய்க்குவர் 1999

ஓ

ஓடை நல்அணி முனிந்தன 1910
ஓதா நின்ற தொல்குலமன்னன் 2277
ஓதுகின்றில கிள்ளையும் 2221
ஓர்வின் நல்வினை 1518
ஓவுஇல் நல்உயிர் 1912

க

கங்கை இருகரை உடையான் 2425
கங்கை என்னும் கடவுள் 2031
கங்கையாளோடு கரியவள் 2125
கங்கையே முதல ஆய 1663
கச்சை அம் கடகரி 1427
கச்சுடன் ஆர்த்த கறை 2055
கட்டிய சுரிகையன் 2409
கட்டினன் கரிகையும் 2502
கடிகமழ் தாரினன் 1499
கடிகை ஓர் இரண்டுமூன்றில் 1989
கண்ட மாதரைக் காதலின் 1490
கண்டாள் மகனும் மகனும் 1838
கண்டு கைதொழுது ஐய 1452
கண்டேன் நெஞ்சம் 1744
கண்ணாலே என் செய்வினை 1282
கண்ணின் கடைத்தீ உக 1811
கண்ணும் நீராய் உயிரும் 1752
கண்ணுள்மணிபோலமகவை 1783
கண்ணே வேண்டும் எனினும் 1614
கண்ணோடாதே கணவன் 1741
கண்முதல் காட்சிய 2547
கணிதநூல்உணர்ந்தமாந்தர் 1664
கம்ப நெடுங்களி யானை 1602
கரிய மாலினும் 1505
கரும்பு அலர் செந்நெல் 2313
கரும்பு அன மொழியினர் 1870
கருவியும் கைகளும் 2505
கரைசெய் வேலை போல் 2323
கல் அளைக் கிடந்து 2136
கல்காணும் திண்மையான் 2426
கல்நகு திரள் புயம் கணவன் 2560
கல்லுவென் மலை மேலும் 2088
கல்வியும் இளமையும் 1560
கவ்வு அரவு இது என 2272
கவி அமை கீர்த்தி 1524
கள் அவிழ் கோதை 1593
கள்ளைமாக்கவர்கண்ணியன் 2229
கறுத்தாய் உருவம் மனமும் 1754
கன்று உயிர் ஒய்ந்து உக 2302
கன்னி நல் மயில்களும் 1875
கன்னிநீக்கஅரும்கங்கையும் 2038
கன்னியர் அணி கோலம் 2108
கன்னியர்க்கு அமைவரும் 1416
கன்னியை அழிசெய 2307
கனங்குழைக் கேகயன் 2392

கா

காணா ஐயா இனி நீ 1736
காதல்உன்பெரும்கணவனை 1572
காம்புஉயர்கானகம்செல்லும் 1985
காமரம் கனிந்து என 1897
காயும் கானில் கிழங்கும் 2036
கார் எனக் கடிது சென்றான் 2439
கார்குலாம் நிறத்தான் 2065
கார்ப்பொரு மேனி 2523
கார்மினோடு உலாயுது 1682
கார் வானம் ஒப்பான் தனை 1842
காரொடு தொடர் மதக்களிறு 1535
கால்பாய்வன முதுமேதிகள் 2029
காலம் இன்றியும் கனிந்தன 2138
காலமும் இடனும் 1409
காலை என்று எழுந்தது 2493
காலைக் கதிரோன் நடுஉற்றது 1818
காவல்மன்னவன்கான்முளை 2230
காழம் இட்ட குறங்கினன் 2052
கான்தலை நண்ணிய 2405
கான்புக்கிடினும் 1840
கான்புறம் சேறலில் 1965
கானகம் பற்றி நல்புதல்வன் 1978

Koviloor Digital Library

கி

கிள்ளையொடு பூவை அழுத 1795
கிளர் அகன் புனலும் 2592
கிளையினும் நரம்பிலும் 1876

கு

குகன் எனும் பெயரிய 2407
குங்கும மலைக் குளிர்பனி 1950
குஞ்சரம் அனையார் 1650
குடையினன் நிமிர்கோலன் 2115
குதித்தனன் பாரிடை 2501
குயின்றன குலமணி 1943
குரவரை மகளிரை 2296
குரிசில் சிந்தையை 1472
குரிசிலது ஏவலால் 2448
குரிசிலும் தம்பியைக் கூவி 2362
குருக்களை இகழ்தலின் 2260
குருதி வாள் என 2144
குருமணிப் பூண் அரசினம் 2235
குலம் முதல் தொன்மையும் 1407
குவளையின் எழிலும் 1656
குழுமி மேகங்கள் குமுறின 2135
குழுவு நுண்தொளை 2169
குழைக்கின்ற கவரி இன்றி 1698
குற்றம் ஒன்று இல்லையேல் 2261
குன்றினில் இருந்தனன் 2614
குன்றுஉறை வயமாவின் 2104

கூ

கூட்டினன் தேர்ப் பொறி 1981
கூடிய நறை வாயில் 2107
கூவா முன்னம் இளையோன் 2059
கூறா முன்னம் கூறுபடுக்கும் 1631
கூறிய முனிவனை 2598
கூனி போனபின் 1583

கெ

கெடுத்து ஒழிந்தனை 1574

கே

கேட்டனன் கிராதர் வேந்தன் 2434
கேட்டான் இளையோன் 1810
கேட்டே இருந்தேன் என்னும் 1760

கை

கைகள் நீர் பரந்து 1936
கைத்த சொல்லால் 2007
கையால் நிலம் தடவி 1803
கையும் கடனும் நெகிழ 1773
கையைக் கையின் நெரிக்கும் 1707
கையொடு கையை 1609

கொ

கொடி அடங்கின மனை 1899
கொடிஞ்சொடு தட்டும் 2452
கொடி நெருங்கின 2207
கொடியவர் யாவரும் 2289
கொடிய வெங்கோபத்தால் 2267
கொடியாள் இன்ன 1621
கொண்டாள் வரம் 1790
கொம்பின் நின்று 2483
கொம்பு துத்தரி கோடு 2051
கொழுநன் துஞ்சும் 1740
கொள்ளான் நின்சேய் 1612
கொற்றவர் முனிவர் 1667
கொற்றவன் அது கூறலும் 1928
கொன்றேன் நான் என் 2281

கோ

கோடகத்தேர் படுகுதிரை 2506
கோது அறத்தவம் செய்து 2525
கோதை வரிவில் குமரன் 1808
கோதைவில் குரிசில் 2066
கோமகன் பிரிதலின் 2383
கோல் மேற்கொண்டும் 1611
கோளும் ஐம் பொறியும் 1512

ச

சக்கரம் தானவன் உடலில் 2180
சங்கமும் மகர மீனும் 2450
சங்கு பேரியும் தழுவு 2325
சத்திரம் நிழற்ற நிமிர்தானை 1681
சந்தம் இவை தாஇல் மணி 1679
சந்திரர் கோடி என்ன 1658
சந்திரற்கு உவமை செய் 1405
சம்பக நறும் பொழில்களில் 1949
சரதம் இப்புவி எலாம் 1555

Koviloor Digital Library

சரிந்த பூ உள 1457
சலம்தலைக்கொண்டசீயத்தால் 2147

சா

சாந்து அணி புளினத்தின் 2084
சாய் அடங்க நலம் 1639
சான்றவர் ஆக 2599

சி

சிங்க ஏறு அனைய வீரன் 2064
சிங்கக் குருளைக்கு இடு 1812
சித்தம் நீ திகைக்கின்றது 1718
சிந்தனை உணர்கிறபான் 2081
சிந்தின அணி மணி 1873
சிந்தை செய்கையில் 1571
[illegible]தை தளர்வுற்று அயர்தல் 1785
சிரித்த பங்கயம் ஒத்த 1636
சிருங்கி பேரம் என 2057
சிவந்த வாய்ச் சீதையும் 1553
சிறக்கும் செல்வம் மகற்கு 1492
சிறந்த தம்பி திருஉற 1713
சிறந்தார் சொல்லும் நல்லுரை 2284
சிறுநிலைமருங்குல்கொங்கை 1987
சினக்குறும்பு எறிந்து 2246
சினக்கடுந்திறல் 2475

சீ

சீதப் பனி நீர் அளவி 1735
சீரை சுற்றித் திருமகள் 1930
சீலம் அல்லன நீக்கி 1517
சீலம்இன்னது என்று 2157
சீலமும் தருமமும் 2546
சீற்றம் துறந்தான் 1836

சு

சுடு மயானத்திடை 2468
சுண்ணமும் மலரும் 1671
சுழித்த செம்பொனின் 2162
சுழித்து நீர்வரு துறை 2463
சுழிபட்டு ஓங்கிய 2045
சுழியுடைத்தாயுடை 2271
சுற்றத்தார் தேவரொடும் 2464
சுற்றம் அப்புறம் நிற்க 2058
சுற்றிய சீரையன் 1865
சுற்றினர் இருந்துழி 2344
சுற்று ஆர்ந்த கச்சில் 1813

சூ

சூடிச் சந்தனம் தோய்த்து 2203
சூடின மலர்க்கரம் 2263
சூது முந்துறச் சொல்லிய 1510
சூழ் அமைந்த கரும்பும் 2231
சூழி வெங்கடகரி துரக 2509

செ

செஞ்செவே சேற்றில் 2073
செந்தழல் புரிசெல்வன் 2116
செம்பொனால் செய்து 2167
செம்மை நல் மனத்து 2317
செம்மையில் தருமத்தின் 1486
செய்துடைச் செல்வமோ 1854
செய்ம் மறந்தன புனல் 1906
செய்யக் கடவ செயற்கு 2010
செய்ய தாமரைத் தாள் 2046
செல்லிய செலவினால் 2377
செல்லும் சொல்வல்லான் 1834
செவ்வ்ழி உருட்டிய திகிரி 2248
செவ்விய குரிசில் கூற 1954

சே

சேண்உயர் தருமத்தின் 2520
சேண் உலாவிய நாள் 1632
சேதாம்பல்போது அனைய 1796
சேந்து ஒளிவிரி 2099
சேமம் என்பன பற்றி 1635
சேற்று இனமரை மலர் 2370
சேனை வீரரும் திருநல் 2566

சொ

சொல் பெற்ற நோன்பின் 2534
சொற்ற வாசகத் துணிவு 2577
சொற்றாள்சொல்லாமுன்னம் 1734

சோ

சோர்வாளை ஓடித் தொழுது 1839

ஞா

ஞானியும் உய்கலான் 1798

Koviloor Digital Library

த

தகவும் மிகுதவமும் 1947
தங்கு செஞ்சாந்து அகில் 2378
தஞ்சம் இவ்வுலகம் 2353
தஞ்சு என ஒதுங்கினர். 2306
தடக்கையால் எடுத்து 1961
தண்டலைக் கோசல 1879
தம் உயிர்க்கு உறுதி எண்ணார் 1410
தம்மையும் உணர்ந்திலர் 1868
தருமம் என்றொரு பொருள் 2347
தலைக்குவட்டு அயல் 1893
தழுவின புளிஞர் வேந்தன் 2433
தழை ஒலித்தன வண்டு 1644
தழைத்த தண் துளவினோன் 2297
தழைத்த வான் சிறையன 2511
தள்ளா நிலைசால் மெய்ம்மை 1749
தள்ளும் நீர்ப்பெரும் கங்கை 2040
தள்ளூறு வேறு இல்லை 1804
தன்முன்னேஅவன் தன்மை 2427
தனையர் ஆயினார் 2582

தா

தாஅரு நாள் முதல் 2375
தாஇல் மாமணிக் கலன் 1585
தாஇல் முனிவன் புகல 1743
தாதை அப்பரிசு உரையசெய 1471
தாதை வாயில் குறுகினன் 1932
தாய் ஆற்றுகிலாள் தனை 1841
தாய் உரை கொண்டு 2435
தாய் உரைத்த சொல் 1703
தாய்கையில் வளர்ந்திலன் 1683
தாய்பசி உழந்து உயிர் 2298
தாய் பணித்து உவந்தன 2600
தாய்வரம் கொள 2581
தாயர் தவ்வையர் 1926
தாயரும் அருந்தவத்தரும் 2394
தாயரும் கிளைஞரும் 1880
தாயரும் தலைப்பெய்து 2564
தார் ஒலி நீத்தன புரவி 1903
தார்கள் தாம்கோதைதாம் 2388
தாருடை மலரினும் ஒதுங்க 1956
தாரையும் சங்கமும் 2374
தாவாது ஒளிரும் குடையாய் 1784
தாள்உறு குரிசில் 2294
தாளினில் அடைந்தவர் 2299
தான்புனை சீரையை 1848
தானமும் தருமமும் 1482
தானேதானே தஞ்சம் 1998

தி

திக்கு நோக்கிய தீவினை 1911
திசைத்ததும் இல்லை 1605
திடருடைக் குங்குமச் சேறும் 1878
திணி சுடர் இரவியை 1526
திரண்ட தோளினன் இப்படி 1433
திருஅரை சுற்றிய சீரை 1887
திருஉலாம் எனின் மற்று 2089
திருநகர்க்கு ஓசனை 1941
திருநகர் தீர்த்த வண்ணம் 2068
திருமணி மகுடம் சூட 1669
திரை ஆர்கடல் சூழ் 1729

தீ

தீ அனக்கொடியவள் 2314
தீண்டலும் உணர்ந்த 1542
தீய மந்தரை இவ்வுரை 1575
தீயனஇராமனேசெய்யுமேல் 2259
தீயன அவை யாவும் 2087

து

துஞ்சினானைத் தம்உயிரின் 2005
துடி எறி நெறிகளும் 2413
துடித்தன கபோலங்கள் 2264
துடியன் நாயினன் 2050
துண்எனும் சொல்லாள் 1670
துண்எனும் நெஞ்சினள் 2559
துப்புஉறு துவர்வாயின் 2120
தும்பியின் குழாத்தின் 2071
தும்பியும் மாவும் மிடைந்த 2419
துளிபடத்துழாவு திண்கோல் 2460
துறக்கமே முதல ஆய 2072
துறத்தலும்நல்லறத்துறையும் 2543
துறந்த செல்வன் நினைய 2480
துறந்து போம் என 1919
துறந்து போயினான் 2329
துறைநறும் புனல் ஆடி 2047
துன்புஉளதுஎனின்அன்றோ 2091

Koviloor Digital Library

துன்னுதாள் வளம் சுமந்த 2334
துனிஅறு செம்மணி 1530

தூ

தூண்டும் இன்னலும் 1570
தூண்தர நிவந்த தோளான் 2441
தூதர் வந்தனர் 2199
தூபம் முற்றிய கார் இருள் 1647
தூமகேது புவிக்கு என 1519
தூய வாசகம் சொன்ன 2316
தூளியின் படலையும் 2498

தெ

தெரிவை மார்க்கு 2174
தெருளுடை மனத்து 1695
தெழித்தனள் உரப்பினள் 1551
தெள் ஒலிச் சிலம்புள 1905

தே

தேக்கு அடைப்படலையின் 2186
தேர் கொண்டு வள்ளல் 1991
தேர் மிசைச் சென்றது 2373
தேர்வலான் அவ்வுரை 1975
தேரின் சுவடு நோக்குவார் 2016
தேரும் மாவும் களிறும் 2232
தேவதேவன் செறிசடை 2042
தேவர்தம் உலகிலும் 2349
தேவிமாரை இவற்கு 2011
தேவியும் இளவலும் தொடர 1955
தேற்றித் தம்பியை 2197
தேறாது அறிவு அழிந்தார் 1799
தேன் அடைந்த சோலை 2538
தேன்உள தினை உண்டால் 2077
தேன் தரும் தெரியல் 2562

தை

தையல் தன் கற்பும் 1982

தொ

தொகைஇல் அன்பினால் 2575
தொட்டவார் சுனை 2149
தொடுத்த கல்லிடை 1951
தொண்டைவாய் 1539
தொழுது உயர் கையினன் 2522
தொளைகட்டிய கிளை 2026
தொளை முகத்தின் சுருதி 2209

தோ

தோய் கயத்தும் மரத்தும் 1634
தோல் உள துகில் போலும் 2078
தோன்றிய கூனியும் 1538
தோன்றிய புளிஞரை 2412

ந

நகை இழந்தன வாள்முகம் 2223
நங்கையர் நடையின் 2446
நடந்த கோசலை 1726
நடுங்கினன் நாத்தடுமாறி 2354
நண்ணி நாகணை வள்ளலை 1521
நதியின் பிழையன்று 1828
நந்தல்இல் அறம் 2481
நந்தாவிளக்கனையநாயகனே 2533
நந்தியம் பதியிடை 2613
நந்துஅம் நந்தவனங்களில் 2487
நம்குலக் குரவர்கள் 1418
நம் குலத்து உதித்தவர் 2516
நம்பியும் என் நாயகனை 2430
நரகதற்கு அறம் நல்கும் 2489
நல்இயல் மங்கல நாளும் 1501
நல்கி நாயகன் நாள்மலர் 1498
நல்தாதையும் நீ 1831
நல்நெடும் கண்களின் 1895
நல்நெடு நளிர்முடி சூட 1882
நல்நெறி என்னினும் 2358
நல்லவன் உரைசெய 2363
நல்லவும் தீயவும் நாடி 1411
நலம்கிளர் பூமி 1657
நலம்கொள் மைந்தனை 1461
நவ்வி வீழ்ந்து என்ன 1586
நறைஅறு கோதையர் 2380
நன்சொற்கள் தந்து 1835
நன்றுஎனப்புளிஞர்வேந்தன் 2445
நன்று சொல்லினை 1582
நன்று மன்னன் கருணை 1708

நா

நாகம் எனும் கொடியாள் 1597
நாடி உன்று உனக்கு 1579
நாமவிற்கை இராமனை 1637

Koviloor Digital Library

நாயகன் பின்னும் தன் 1994
நாயகன் வனம் நண்ண 1918
நாரியர் இல்லை 1608
நால் இரண்டு ஆயகோடி 2453
நால்திசை மாந்தரும் 1958
நாவின் நீத்த அரும் 2224
நாழிகை கங்குலின் 1587
நான்முகற்கு அமைந்த 2074
நாற்கடல் படுமணி 1540
நானம் நன்கு உரைத்தார் 2482
நானம் நாள் மலர் 2160

நி

நிருப நின்குல மன்னவர் 1436
நிவந்த அந்தணர் 1473
நிவந்த வான் குருதியின் 2508
நிவப்புறு நிலன் எனும் 1431
நிழல் பிரிந்தன குடை 1902
நிற்றி ஈண்டு என்று 2060
நிறப்பெரும் படைக்கலம் 1964
நிறைந்த மாந்தர் 2212
நிறைமக உடையவர் 1890
நிறையின் நீங்கிய மகளிர் 2573
நிறையும் நீர்மலர் 2124
நின்கண் பரிவு இல்லவர் 1826
நின்மகன் ஆள்வான் 1618
நின்ற கொடைக்கை 2421
நின்றவன் தன்னை நோக்கி 1691
நின்று உயர் பழியை 1990
நின்று தவம் இயற்றி 1805
நின்று தொடர்ந்த 1590
நினைத்த போதினும் 2165
நினையும் தேவர்க்கும் 2142

நீ

நீ இனும் இருந்தனை 2269
நீங்கல் ஆற்றலள் சனகி 2133
நீட்டில் களிறு கை 1908
நீண்ட மால்வரை மதி 2148
நீண்டான் அது உரைத்தலும் 1825
நீர்உள எனின் உள 1851
நீல மாமுகில் அனான் 1677
நீல வல்லிருள் நீங்கலும் 2491
நீள் எழுத்தொடர் 1455

நு

நுரைக் கொழுந்து எழுந்து 2043

நெ

நெக்கென உடல் உயிர் 1871
நெகுதற்கு ஒத்த நெஞ்சம் 1756
நெடுங்கழைக் குறுந்தறி 2185
நெய்நிரை நெடுவேலின் 2100
நெறிஇடு நெறிவல்லேன் 2086

நை

நைவீர் அலீர் மைந்தீர் 2466

நோ

நோக்கினால் சுமந்திரன் 2345
நோயீர் அல்லீர் 2273
நோயும் இன்றி நோன்கதிர் 2000
நோவது ஆக இவ்வுலகை 2572

ப

பகுத்த வான்மதி கொடு 1938
பசைந்த சிந்தை நீ 2587
பஞ்சி மென்தளிர் அடி 1420
படம்செய் நாகணை 2567
படர்உற உளன் 2092
படரெலாம் படப்படும் 2504
படரெலாம் படைத்தாளை 2469
படர்ந்து எழுந்த புல் 2137
படியொடு திருநகர் 2369
படுமுரசு அறைந்தனர் 2365
படைமாண் அரசை 1753
பண்டி எங்கும் பரந்தன 2208
பண்டை நூல் தெரி 2611
பண்ணின தேர் புரவி 2367
பண்ணுறு கடகரி 1556
பண்முதிர் களிற்றொடு 2507
பணிமொழி கடவாதான் 2094
பணை நிரந்தன பாட்டு 1454
பந்த ஞாட்புறு பாசறை 2140
பரத்தின் நீங்கும் 2472
பரதன் இப்படை கொடு 2500
பரந்து மீன் அரும்பிய 1940
பரவு கேள்வியும் 2579
பராவ அரும் புதல்வரை 1545

Koviloor Digital Library

பரிதி வானவனும் 1988
பரிவு இகந்த மனத்தொடு 1922
பருதி பற்றிய பல்கபல் 2030
பல் தொடுத்து அன்ன 2053
பல்நந்து உகுதரளம் 2028
பல்பகல் நிழற்றும் நின் 2249
பழதுஇல் மாதவன் 1446
பற்றி அவ்வயின் 2322
பற்றிய தவத்தினில் 2253
பன்ன அரிய நோன்பின் 2541
பனை அவாம் நெடும் 1484

பா

பாக்கியம் புரிந்திலா 1557
பாகு இயல் பவளச் செவ்வாய் 1654
பாங்கின் உத்தரீயம் 2451
பாடல் நீத்தன பண்தொடர் 2222
பாண்இள மிஞிறு ஆக 2098
பாதங்கள் பெயர் தொறும் 2265
பாதுகம் தலைக்கொடு 2612
பாந்தள் தேர்இவை 2172
பாரோர் கொள்ளார் 2280
பால்உடை மொழியாளும் 2083
பால்ஏய் நிறத்தொடு 2404
பாவமும் அருந்துயரமும் 1684
பாவமும்நின்றபெரும்பழியும் 2417

பி

பிணிக்கு உறு முடைஉடல் 2312
பிதிர்ந்து சாறு பெருந்துறை 2217
பிறத்தல் என்று உற்றபின் 1962
பிறந்து இறந்து போய் 1564
பிறந்து நீயுடைப் பிரிவுஇல் 2574
பிறிது ஓர் மாற்றம் 1929
பிறியார் பிரிவு ஏது 1727
பின்குற்றம் மன்னும் 1827
பின்னர் அவ்வீரரைப் பெற்ற 2565
பின்னும் தம்பியை நோக்கி 2196
பின்னும் பகர்வான் 1845

பு

புக்கபின் நிருபரும் 1404
புக்கவன் தன்னை நோக்கி 1688
புக்கனன் புனலினில் 2554
புக்கார் அரசன் 2019
புக்கு உறைவிடம் நல்கி 2122
புக்குப்பெரு நீர் 1772
புகலிடம் கொடுவனம் 1877
புண் உற்ற தீயின் 1792
புண்ணிய நறு நெயில் 2548
புண்ணியம் தொடர் 1437
புரியும் தன் மகன் அரசு 1569
புரைசை மாக்கரி 1448
புல்லினன் நின்று 2529
புலம்புறு குரிசில் தன் 2292
புவிப்பாவை பரம்கெட 1816
புறத்து நாம் ஒரு பொருள் 1438
புனைந்திலன் மௌலி 1699

பூ

பூ அகம் நிறைந்த புளினம் 1946
பூ அலர் குரவோடும் 2101
பூண் ஆர் அணியும் 1762
பூண்ட பேரன்பினாரை 1953
பூண்ட மாதவன் 2126
பூத்த நாள்மலர் அயன் 2351
பூதலம் உற்று அதனில் 1598
பூநனை சினை துன்றி 2112
பூமழை புனல் மழை 1534
பூரியர் புணர் மாதர் 2095
பூவரு பொலன் கழல் 1406
பூவிரி பொலன் கழல் 2401
பூவில் நான்முகன்புதல்வன் 2333

பெ

பெண் என உற்றபெரும்பழிக்கு 1601
பெண்ணின் இன்னமுது 1451
பெண்ணின் நோக்கும் 2032
பெண்ணை வன்செறும்பில் 2054
பெருகிய செல்வம் நீ பிடி 2496
பெருந்திரை நதிகளும் 2387
பெரும்பகல் வருந்தினர் 1945
பெருமகன் என்வயின் பிறக்க 1430
பெருமகன் ஏவலின் 2518
பெற்றுடைய மண் 1806
பெறுவதன்முன்உயிர்பிரிதல் 2545

பை

பைந்தொடி ஒருத்தி சொல் 1852

Koviloor Digital Library

பொ

பொங்கிய உவகை வெள்ளம்	1651
பொய்க்கரி கூறினோன்	2300
பொய்ம்முறை இலரால்	2076
பொய்வினைக்கு உதவும்	1983
பொரு இல் எம்பி புவி	1917
பொருவு இல் தூதுவர்	2189
பொருந்தும் நாள் நாளை	1500
பொலம் குழை மகளிர்	2455
பொழியும் கண்ணீர்	2035
பொற்புறுத்தன மெய்ம்மை	1712
பொன் அணி மணி	1889
பொன் ஆர் வயலத்தோளான்	1769
பொன் உயிர்த்த பூமடந்தையும்	1439
பொன்னின் முன்னம் ஒளிரும்	1755
பொன்னும் மாமணியும்	1497
பொன்னை உற்ற	1916
பொன்னொடும் பொருகழல்	2519

போ

போகின்றானைத் தொழுது	1725
போதி என் எதிர் நின்று	1565
போவது ஒழியான்	1750
போன படைத்தலை வீரர்	2420
போனார் அவரும்	2012

ம

மக்களை மறந்தனர் மாதர்	1896
மகர வேலை மண்தொட்ட	1721
மகன் வயின் அன்பினால்	1480
மங்கை அம்மொழி கூறலும்	1700
மங்கையர்க்கு விளக்கு	2037
மங்கையர் குறங்கு என	1528
மங்கை வார்குழல் கற்றை	2044
மஞ்சு அளாவிய	2161
மஞ்சு என அகில் புகை	1894
மடந்தை மார்களில்	2168
மண் ஆள்கின்றார்	1626
மண்கொடு வரும்என	1884
மண்செய்த பாவம்	1800
மண் தலம் தருமதி	1456
மண்ணின் மேல் விழுந்து	2321
மண்ணினும் நல்லள்	1441
மண்ணுறு முரசு இனம்	1403
மண்ணையும் வானையும்	2384
மணம் கிளர் மலர்வாரும்	2109
மத்தளம் முதலிய	2390
மந்தரைக் கூற்றமும்	2395
மந்தரை பின்னரும்	1558
மந்தியும் கடுவனும்	2182
மந்திரக் கிழவரும்	2343
மயிலுடைப் பீலியின்	2188
மருங்கு அடை தென்கரை	2411
மருமத்துத் தன்னை	1984
மங்கிய கேகயன் மடந்தை	2382
மலங்கி வையகம் வருந்தி	2586
மழைக்குலம் புரைகுழல்	1898
மற்று அவன்சொன்னவாசகம்	1443
மற்றும் சுற்றத்துளார்க்கும்	2201
மற்றும் நுந்தைக்கு	1573
மற்றும் வரற்பாலர்	2542
மறந்தான் நினைவும்	1765
மறந்திலள் கோசலை	1554
மறுஇல்தொல்குலங்களை	2309
மறுஇல் மைந்தனே	2319
மறையின் கேள்வற்கு	2476
மன் உயிர்க்கு நல்கு	2535
மன்நெடும் கழல் வந்து	1491
மன்றலின் மலி கோதை	2097
மன்னர் ஆனவர் அல்லர்	1469
மன்னர் இன்றியே வையம்	2341
மன்னவன் இருக்கவேயும்	2590
மன்னவன்பணிஅன்றுஆகில்	1696
மன்னற்கு அல்லர்	2020
மனக்கு ஒன்றாதன	2571
மனிதர் வானவர்	1442
மனையின் நீங்கிய மக்களை	2034

மா

மாஇயல் உதயமாம்	2179
மாகந்தமும் மகரந்தமும்	2025
மாகமணி வேதிகையில்	1948
மாண்டனன் எந்தை	2268
மாதர் அருங்கலமும்	1793
மாதர்கள் கற்பின் மிக்கார்	1652
மாதர் யாவரும் வானவர்	2486

Koviloor Digital Library

மாதரார்கள் அறுபதினாயிரரும் 2008
மாதவர்க்கு வழிபாடு 1720
மாதவன் தனைவரன் முறை 1460
மாந்தர்தம் மொய்ம்பினின் 1909
மாமுனிவர்க்கு உறவாகி 2423
மாயம் நீங்கிய சிந்தனை 2190
மாலை வந்து அகன்ற பின் 2184
மாலைவாய் நியமம் 2070
மாவும் யானையும் 2326
மாழை ஒண்கணி உரைசெய 1578
மாளவும் உளன் ஒரு 2270
மாளும் என்றே தந்தையை 2276
மாற்றம் அஃது உரைசெய 1549
மாற்றாள் செயலாம் 1748
மாற்று இனி என்னை 1853
மான்று அளிக்குலம் 2488
மான்மறிக் கரத்தான் 1722
மான் அரவின் வாய்த்தீய 2017

மி

மின் ஒத்த சீற்றக்கனல் 1821
மின் நின்று அனைய மேனி 1730
மின்பொருவு தேரின் மிசை 1680
மின்னுடன் பிறந்த 1979

மீ

மீண்டும் ஏகி அம்மெய் 2226
மீன் நீர் வேலை முரசு 2013
மீன் புகல் பெற 1937

மு

முடிவுற இன்னணம் 1960
முத்தினின் முழு நிலவு 1531
முதலவன் முதலிய 2247
முதிர் ஒளி உயிர்த்தன 1529
முந்தினை முனிவனை 1967
முல்லையும் கடல் முத்தும் 1927
முழவு எழும் ஒலிஇல 1904
முழுக்கலின் வலிய நம் 1888
முழுவதே பிறந்து உலகு 1885
முற்றும் முற்றுவித்து 2340
முற்றுறு முகை கிண்டி 2106
முறைதெரிந்து ஒருவகை 2350
முறைமை அன்று என்பது 1701
முறைமையால் எற்பயந்து 1972
முறைமையின் எய்தினர் 1413
முறையின் மொய்ம்முகில் 1453
முறையும் வாய்மையும் 2578
முன் உறப்பணித்தவர் 2601
முன் பயந்து எடுத்த 1659
முன்பு நின்று இசை நீறீஇ 1963
முன்னர் கோசிகன் 1719
முன்னவர் வந்து உதித்த 2585
முன்னவன் என்று 2416
முன்னை ஊழ்வினை 1466
முன்னை நும்குல முதல் 2318
முன்னையர் முறை கெட 2396
முனியும் முனியும் செய்கை 1738
முனிவன்சொல்லும்அளவில் 1764
முனிவனும் உரைப்பது 2602
முனிவனும் உவகையும் 1502
முனிவனை எம்பியை 1968

மூ

மூஎழுமுறைமைஎம்குலங்கள் 1478
மூண்டு எழு காதலால் 2240
மூத்தவர்க்கு உரித்து அரசு 1567
மூவராய் முதலாகி 1648
மூன்று உலகினுக்கு ஒரு 2355

மெ

மெய்ஆர் தவமே செய்து 1761
மெய்யின் மெய்யே 1766
மெய்யே என்தன் 1619
மெய்யைச் சிதைவித்து 1822

மே

மேவி நிலத்தில் இருக்கும் 1600
மேவி மென்மலராள் 1494
மேவு கானம் மிதிலையர் 2191

மை

மையறு மனத்து ஒரு 2293
மையறு விசும்பில் 2461
மையுறவு உயிரெல்லாம் 2408
மைந்த நம்குல மரபினில் 1465
மைந்தரை இன்மையின் 1428
மைந்தன் வரவே 1777

Koviloor Digital Library

மொ

மொய் அராகம் நிரம்ப 1640
மொய்உறு நறுமலர் 2183
மொய்பெரும் சேனையும் 2398
மொய்ம் மாண் வினை 1739
மொழிந்தது கேட்டலும் 1485

யா

யாரோடும் பகைகொள்ளலன் 1511
யானை சுற்றின தேர் 2206

வ

வங்கியம் பல தேன் 1646
வஞ்சமோ மகனே 1706
வஞ்சி நாணி வணங்க 2041
வட்டம் ஓர் ஓசனை 1942
வடங்கொள் பூண்முலை 2145
வடித்தாழ் கூந்தல் 2001
வடியுடை அயிற்படை 2495
வடுவின் மாவகிர் 2171
வண்டு உளர் தாரவன் 1592
வண்மையும் மானமும் 2539
வந்த மாதவத்தோனை 2447
வந்த முனியை முகம் நோக்கி 1788
வந்த முனியும்வரம்கொடுத்து 2009
வந்தவள் தன்னை 1690
வந்தன வரம்புஇல் நாவாய் 2427
வந்து எதிரே தொழுதானை 2432
வந்து தாயை அடியில் 2239
வரதன் துஞ்சினான் 2569
வரதன் பகர்வான் 1832
வரம் கொள இத்துனை 1595
வரன்நில் உந்தைசொல் 2584
வரன்முறை தெரிந்து 2342
வரிகொள் நோன் சிலை 2159
வரிவில் எம்பி 1717
வருந்தா வண்ணம் 2014
வருந்தித் தாந்தர 2048
வல் அரக்கரின் 1921
வலக்கார் முகம் 1823
வலங்கடிந்து ஏழையர் 1886
வலியன் என்று அவர்கூற 2200
வள்உறு வயிரவாள் 2348
வள்உறை கழித்து 1458
வளம்கெழு திருநகர் 1533
வளைகள் காந்தளில் 2170
வற்கலையின் உடையானை 2429
வறுத்து வித்திய 2134
வன்தெறு பாலையை 2497
வன்புலக்கல் மனமதி 1957
வன்மாயக் கைகேசி 1768
வனத்தினன் என்று 2257

வா

வாக்கினால் வரம் தர 2262
வாங்கிய மருங்குலை 1891
வாங்குவெம்கழை 2130
வாய்ஒளி மழுங்க 2243
வாய் கயப்புற மந்தரை 1561
வாய்தந்தேன் என்றேன் 1615
வாய்மை என்னும் ஈது 2588
வாயால் மன்னன் 1742
வாயிலில் மன்னர் வணங்கி 1588
வார் ஆர் முலையாரும் 1791
வாரணம் அரற்ற வந்து 1676
வாரம் என் இனிப்பகர்வது 1440
வாவி விரி தாமரையின் 1944
வாழ்வினை நுதலிய 1858
வாள்தொடு தானையான் 2291
வாள் நித்தில வெண்நகை 1843
வாள் புரை விழியாய் 2111
வாள்நிலா நகைதோன்ற 2204
வாளும் வேலும் விட்டு 2143
வான் நின்று இழிந்து 1402
வானமே அனையதோர் 1892
வானவர் உரைத்தலும் 2605
வானும் நிலனும் முதல் 1815
வானோர் கொள்ளார் 1613

வி

விடுநனி கடிது என்றான் 2082
விண்ணவர் விசும்பு 1660
விண்ணிடை அடைந்தனன் 2531
விண்ணுநீர் மொக்குளின் 2552
விண்ணும் மண்ணும் 1714
விண்தொட நிவந்த 1665

Koviloor Digital Library

விண்நாட்டவர் மண்ணவர் 1817
விம்மினன் பரதனும் 2608
விரி இருட்பகையை 2069
விரிமணி மேகலை 2381
விரும்பிய மூப்பு எனும் 1417
விருப்பின் எய்தினன் 2237
வில் ஆர்தோளான் 2279
வில்கொள்வாள் நுதல் 2158
வில் தடந்தாமரை 1860
வில்லை வாங்கிய சிலை என 2154
வில்லின் வேதியர் 2210
வில்லினும் வாளினும் 2310
விழிக்கும் கண்வேறு 1745
விழுந்தனர் சிலர் 1863
விளக்கு ஒளி மறைந்த 1661
விளையும் தன் புகழ் 1584
வினைக்குஅருமெய்ம்மையன் 1966

வீ

வீட்டுண்டு அலறும் 1779
வீந்தாளே இவ்வெய்யவள் 1630
வீழ்ந்தார் அயர்ந்தார் 1781
வீழ்ந்தான் வீழா 1622
வீறு ஆக்கிய பொன்கலன் 1820
வீறுபஞ்சின்றி அமிழ்தம் 2156

வெ

வெங்கண் நாகக் கரத்தினன் 2039
வெண்மதி மீச்செல 2372
வெந்துயர் தொடர்தர 2557
வெய்ய கானத்திடையே 1770
வெய்யவன் குலமுதல் 1415
வெய்யோன் ஒளி தன் 2022
வெயில்இள நிலவே போல் 2096
வெயில் முறைக்குல 1562
வெவ்வரம் பயில்சுரம் 1862
வெவ்விடம் அனையவள் 1544
வெவ்வியது அன்னையால் 1969
வெள்ளத்திடை வாழ் 2021
வெவ்வினை அவள்தர 1859
வெள்ள நீர் உலகினில் 1419
வெள்ளிய கரியன செய்ய 1527
வெளிறு நீங்கிய 2141
வென்றி வேந்தரை 1474

வே

வேண்டினேன் இவ்வரம் 1970
வேண்டும் திறத்தாரும் 2537
வேத்தவை இருந்த நீர் 2357
வேத்தவை முனிவரோடு 1687
வேதனைக் கூனி பின் 1552
வேதனை வெயிற்கதிர் 2371
வேதியர் அருந்தவர் 2346
வேந்தரே பெரிது 1655
வேந்தன் பணியினால் 1789
வேள்விச் செல்வம் 2003
வேற்று அடங்கலர் ஊர் 2234
வேற்றுக் கொடியாள் 1819
வேறு இடம் இயற்றினன் 2187
வேறுஇலா மன்னரும் 1479

வை

வைகினர் கதிர் நாறும் 2123
வையகம் துறந்து வந்து 2513
வையம் ஏழும் ஓர்ஏழும் 1645
வையம் மன்னுயிராக 1515

KOVILOOR ANDAVAR
A. No. 14559
LIBRARY. KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஆசிரியர் பழனியப்பன் சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரில் பாரம்பரியமிக்க ப.அ.ப. குடும்பத்தில் பிறந்தவர். உயர்நிலைக் கல்வியை மயிலாடுதுறை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் முடித்தவர். உயர்நிலைக் கல்வியின் போதே தமிழில் மிக்க ஆர்வம் கொண்டவர். தஞ்சை மாவட்டத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பேச்சுப் போட்டிகளில் முதன்மை நிலைவகித்துப் பரிசுகள் வாங்கியவர். மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியிலும் திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியிலும் B.Com பட்டப்படிப்பை முடித்தவர். இவர் பேராசிரியர் திரு. இரா. இராதாகிருஷ்ணன் அவர்களிடம் . தமிழ் பயின்றவர். இந்த ஒன்றே இவர் கம்பராமாயணத்திற்கு உரை எழுதத் தகுதியானவர் என்று சான்று பகரும். மயிலாடுதுறையிலும் திருச்சிராப்பள்ளியிலும் தங்கியிருந்து கல்லூரிப் படிப்பைத் தொடரும்போது புலவர் திரு. கீரன் அவர்களுடன் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அவருடைய தொடர் சொற்பொழிவுகளைக் குறிப்பு எடுத்துத் தன்னைத் தயார் செய்து கொண்டவர். கல்லூரி நாட்களிலும் மாவட்ட அளவில் நிகழ்ந்த தமிழ்க் கட்டுரை, கவிதை, சொற்பொழிவுப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றவர். நாட்டுடமையாக்கப்பட்ட பாங்க் ஆப் பரோடாவில் 1965 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை பல பதவிகளில் பணியாற்றியவர். இவர் இந்த வங்கியின் நாமக்கல் கிளையில் பணியாற்றும்போதுதான் அனுமன் அருளால் கம்பராமாயணத்திற்கு உரை எழுத எண்ணம் கொண்டார். நான்கு, ஐந்து ஆண்டுகளின் கடுமையான உழைப்பு தான் இன்று உங்கள் கைகளில் உரை நூலாகத் தவழ்கிறது.